த மி ழ ர சு

மலர் 6   இதழ் 13 - 24

ஜனவரி - ஜூன்   1976

சென்னை
1976

DOCUMENTATION COMPLETED.

தமிழரசு

மலர் - 6
இதழ் - 13
1-1-1976

78767
Verified

"வயது வந்தோர், தொடர் கல்வித்துறை" என்ற ஒரு புதிய துறையினைச் சென்னைப் பல்கலைக் கழகம் அமைக்கிறது.

தில்லி, மதுரை பல்கலைக் கழகங்கள் நடத்தும் அஞ்சல் கல்விப் படிப்பைப் பெறுவோர்க்கு உதவுவதற்காக இந்தப் பிரிவு அமைக்கப்படுகிறது. இத்துறையுடன் பல்கலைக் கழக மாணவர் தகவல் பணிப் பிரிவும் சேர்ந்து அஞ்சல் கல்வி பெறுவோர்க்கு உதவும்.

* இந்த இதழுடன் தமிழரசு'. 1976 ஆம் ஆண்டின் நாட்காட்டி இணைப்புண்டு.



துன்பம் வந்தபோது - தோழனாகித் துணைபுரிவது இசை

முதல்வர் கலைஞர்

சென்னை இசைக்கழகத்தின் தலைவர், நிர்வாகிகள், இன்றைய இனிய விழாவில் கூடியுள்ள இசைப் பெருமக்கள், தமிழ்க் குலத்தினர் அனைவர்க்கும் முதற்கண் என் வணக்கத்தைக் கூறி, இந்த ஆண்டு தொடக்க விழாவிற்கு என்னை அழைத்தமைக்கு நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன்.

'கர்நாடக இசை' என அழைக்கப்படுகின்ற 'மரபுவழி இசை' யின் வளத்தைப் பெருக்குவதற்கென்று தோற்றுவிக்கப்பட்ட இந்தச் சென்னை இசைக்கழகம் (Music Academy) கடந்த நாற்பத்தெட்டு ஆண்டுகளுக்கு மேலாக ஆற்றியுள்ள நற்பணிகள் பெரிதும் போற்றத் தகுந்தவையாகும்.

ஆற்றலாளர் பலரும் தொடர்ந்து இந்த இசைமன்றத்தின் விழாக்களில் தொடக்கவுரையும் தலைமையுரையும் ஆற்றியிருக்கிறார்கள். அவைகள் அனைத்தையும் தொகுத்து, அழியாமல் காத்திடுவது இசையுலகிற்குப் பெருந்துணை புரியும் அரிய செயலாகும் எனக் கூறிட நான் விழைகிறேன்.

'இசை என்றாலே 'புகழ்' என்னும் ஒரு பொருள் உண்டு.

''ஈதல் இசைபட வாழ்தல்
அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு''
என்றார் வள்ளுவர்.

அந்தப் புகழைக் கட்டிக் காக்கும் வகையில், கர்நாடக இசைக்கு மட்டுமன்றி, பரதநாட்டியம், கதா காலட்சேபம், ஏன்; வடநாட்டு இந்துஸ்தானி சங்கீதத்திற்கும்கூட ஏற்றம் அளித்திடத் தவறவில்லை இந்த இசை மன்றம்.

இசை—என்றால் 'இணங்குக' 'ஒத்துக் கொள்க' என்னும் பொருள்களும் உண்டு.

இந்த இசைமன்றமும் தன்னுடைய நாற்பத்தொன்பதாவது ஆண்டு விழாவினையும் அத்துடன் இணைந்துள்ள முத்துசாமிதீட்சிதர் இருநூறாவது ஆண்டு விழாவினையும் தொடங்கி வைக்கும் பணிக்கு என்னை 'இசை' எனப் பணித்துள்ளது.

இசைத்திறன் கொண்டவன் இல்லையாயினும், நானும் ஓர் இசைக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் உங்கள் அழைப்பினை ஆணையெனக் கொண்டு, கடமையாற்றிட வந்துள்ளேன்.

இசை—எல்லை வகுக்க முடியாத ஓர் இன்பக்கலை.

தென்றலின் அசைவிலும் நாம் இசையைக் கேட்கலாம்.

வண்டுகளின் ஊர்வலத்திலும் நாம் இசையைக் கேட்கலாம்.

அருவியின் ஓசையில் இசை,
ஆற்றின் பாய்ச்சலில் இசை,
கடலின் அலையில் இசை,
அலையிலாடும் படகில் இசை.
குயிலின் குரலில் இசை,
குழந்தையின் மழலையில் இசை,
படை முகத்திலும் இசை,
பந்தயத் திடலிலும் இசை,
வாழ்ந்தாலும் இசை,
மறைந்தாலும் இசை,
எங்கே இல்லை இசை?
எதிலே இல்லை இசை?

காங்க்ரீவ் என்னும் அறிஞன் இசைக்குள்ள அற்புத வலிமையை எப்படிப் பாராட்டுகிறான் தெரியுமா?

'கொடிய விலங்குகளை அமைதிப்படுத்தவும், கடினமான பாறைகளை நெகிழச் செய்யவும், நெடிய தேக்குமரத்தை வளைய வைக்கவும் சக்தி படைத்தது இசை'' என்கிறான் அவன்.

ஆம்! இசை முழக்கியவா... மனிதர்கள் எத்தனையோ கடினமான காரியங்களைக் களைப்பின்றிச் செய்து முடிப்பதை நம் கண் எதிரே காணமுடிகிறதல்லவா? வியர்வை வழிந்தோட ஏற்றம் பிடித்து இறைக்கும் பாட்டாளி, இசைப்பாட்டாளியாக மாறுவது ஏன்?. தன் வேலைப் பளுவை அந்த இசையின் வாயிலாகக் குறைத்துக் கொள்ளத்தானே! ''அயிலேசா! அயிலேசா!'' என்று பாடாவிட்டாலும் ஓடம்போகும். ஆனால் அதைப் பாடுவதன் மூலம் சிரமத்தைக் குறைத்துக்கொண்டு உழைப்பில் உற்சாகம் பெற முடிகிறது ஓடக்காரர்களுக்கு! நாற்று நடும் பெண்டிர், உரலில் இட்டு ஒரு பொருளை இடிக்கும் மகளிர், மெய்வலி மறக்கத்தான் இசையின் துணையை நாடுகின்றனர்.

தமிழர்களைப் பொறுத்தவரையில் முத்தமிழாம் இயல்-இசை-கூத்து என்பதில்-இசைத் தமிழை நடுநாயகமாக வைத்துப் போற்றி வாழ்த்தி வளர்த்து வந்துள்ளனர். வண்டு துளைத்த மூங்கிலின் துவாரத்தில் காற்று நுழையும்போது எழுந்த இசையொலியைக் கேட்டு குழலிசைக் கருவியைப் படைத்தவர்கள் நம் முன்னோர்கள். உலர வைத்திருந்த விலங்கின் தோல் மீது மரக்கிளை உராய்ந்து எழுந்த ஒலியினைக் கேட்டுத் தோல் கருவி தயாரித்து இசை முழக்கிய பெருமை நமது மூதாதையர்க்கு உண்டு!

திருக்குறள் தோன்றுவதற்கு முன்பே இந்த மண்ணில் குழல் இசையும், யாழ் இசையும் கொள்ளையின்பம் தந்திருக்கின்றன. அதனால்தான் மழலை மொழியின் இனிமையை உணர்த்தக் குறள் யாத்த வள்ளுவர், ''குழலினிது யாழ் இனிது என்ப'' என்ற வரியின் வாயிலாக நமது இசை வரலாற்றின் தொன்மையை வெளிப்படுத்துகிறார். சிலப்பதிகாரமோ, இசை நுணுக்கங்களின் பெட்டகமாகவே திகழ்கிறது. மாதவியும் கோவலனும் கடற்கரை மணற்பரப்பில் அமர்ந்து பாடிய கானல்வரிப் பாடல்களைக் காணும் பொழுது நம் உள்ளம் சிலிர்க்கின்றதல்லவா?

''மருங்கு வண்டு சிறந்து ஆர்ப்ப
மணிப்பூஆடை அதுபோர்த்துக்
கருங்கயற் கண் விழித்து ஒல்கி
நடந்தாய் வாழி காவேரி''

சொல்லுக்குச் சொல் எத்துணை குழைவு—எத்துணை நெளிவு—இந்தக் குழைவும் நெளிவும் தானே இசைக்கு உயிராக அமைகின்றன? வேட்டுவர், இறுகக் கட்டிய வில்லின் நாணின்று ...ஒலிகளைக் கேட்டு, எழும் இன... வில்லும் ஒரு இசைக் கருவியாகப பயன்படும் என்பதை அறிந்து, குமிழமரத்தின் உள்துளையுடைய கொம்பு ஒன்றை வெட்டிவளைத்து அதன் இரு நுனிகளிலும் மலர் நாரை உரித்துத் திரித்த கயிற்றை நாணாகக் கட்டி, விரலால் அந்த நாணைத் தெறித்துக் குறிஞ்சிப் பண்பாடி மகிழ்ந்தனர். அதினின்று வில்யாழ் பிறந்தது. பின்னர், அவ் வில்யாழ் நுண்ணிய உறுப்புக்கள் அமைந்த பலவகை யாழ்களாய் உருப்பெற்றது.

பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, கல்லாடம் ஆகிய நூல்களில் இருந்து பண்டைத் தமிழ்மக்கள், பேரியாழ், செங்கோட்டியாழ், சகோடயாழ், மகரயாழ் என்னும் யாழ்களைப் பயன்படுத்தினார்கள் என்பது விளங்கும். இந்த யாழ்களில் பாணர்கள் விலை உயர்ந்த மணிகளைப் பதித்து, பட்டுத் துணியால் போர்த்திப் பேழைக்குள் வைத்திருந்தனர் என்று பத்துப்பாட்டு கூறுகிறது. யாழ் மீட்டும் பாணர்-யாழ்ப்பாணர் - அவர்கள் வாழ்ந்த பகுதி யாழ்ப்பாணம் எனும் பெயர் கொண்டு இன்றைக்கும் இலங்கைத் தீவில் மிளிர்கின்ற வரலாற்று உண்மை மறைந்து விடுமா?

சங்க காலத்துக்குப் பின்னர் தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, திருப்புகழ், முதலானவை தீந்தமிழ் இசையைப் பரப்பியிருக்கின்றன. ஆகாயமளாவிடும் கோபுரங்கள்அமைந்த ஆலயமாயினும், அது ''பாடல் பெற்ற ஸ்தலம்'' என்றால்தான் அதற்கோர் மதிப்பைத் தமிழ் மக்கள் அளித்தனர். அவர்கள் வணங்கிய அந்த ஆலயத்து இறைவனைவிட, அவன் இசைபடப் போற்றப்பட்டவனா என்பதிலேதான் அதிக அக்கறை காட்டப்பட்டது என்றால் இசையின் பெருமையை இயம்பிட ஒல்லுமோ?

'வானரங்கள் கனிகொடுத்து
மந்தியொடு கொஞ்சும்
...
மந்திசிந்து கனிகளுக்கு
வான்கவிகள் கெஞ்சும்''

குற்றாலத்து அருவியின் குளிர்ச்சியைவிட இந்தக் குறவஞ்சிப் பாடல் குளிர்ச்சியைக் கொட்டுகிறதல்லவா ?

காவடிச் சிந்துதான் பாடினார் அண்ணாமலை ரெட்டியார்; அடடா! அதில் களிநடம் புரியும் இசைத் தமிழை எவ்வாறு புகழ்வது!

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவாய்-தரு நிழலாய்-நிழல் கனிந்த சுகமாய்-வடலூர் வள்ளலார் வழங்கிய பாடல்களும் இசை வளர்க்கப் பெரிதும் பயன்பட்டன.

முத்துத் தாண்டவர், மாயூரம் வேதநாயகம் பிள்ளை, கோபால கிருஷ்ண பாரதியார், கவிச் சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன், தேசிக விநாயகம்பிள்ளை ஆகியோர் இசையுடன் பாடுதற்கேற்ற கவிதை அமுதங்களைக் கணக்கின்றி வழங்கியுள்ளனர்.

மும்மூர்த்திகளென இசைத் துறையில் போற்றப்படும் தீட்சிதர், தியாகராஜர், சியாமா சாஸ்திரிகள் ஆகியோர் இசைச் சிகரத்தின் உச்சிவரை ஏறி நின்றவர்கள் என்பதையும், அவர்கள் இசைக்கு வழங்கியுள்ள ஞானக் கொடையையும் காலா காலத்திற்கும் போற்றுதற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த மும்மணிகளின் இசை முழக்கப் பேராறாகப் பெருக்கெடுத்த திருவாரூருக்கும் எனக்கும் எவ்வளவு நெருக்கமான உறவு உண்டு என்பதை நீங்கள் அறிவீர்கள்.

ஊற்றில் நீர் நிரம்பிய பிறகு ஊற்றுக்கண் அடைபட்டு விடக் கூடாது. அப்படி அடைபட்டு நீர் பெருகுவது நின்றுவிடுமாயின் முதலில் நிரம்பிய நீரோடு நாம் ஆறுதல் பெற வேண்டியிருக்கும். பட்டை தீட்டத் தீட்டத்தான் வைரம் ஒளி மிகும். அணியின் அழகைப் பொறுத்துத்தான் தங்கத்தின் பெருமை வெளிப்படுகிறது.

அதுபோலப் பெரியவர்கள், மூதாதையர்கள் தந்த இசைச் செல்வத்தைப் பெருக்கி வளர்த்து,

புதிய உணர்வுகளைப், புதிய சிந்தனைகளைப், புதிய படைப்புகளை உருவாக்கிட இன்றிருப்போரும் எதிர்காலத்துக்குரியோரும் முன்வர வேண்டும்.

கர்நாடக இசை என்பதைத் தமிழ் மொழிக்கு அப்பாற்பட்ட ஒன்ருகச் சிலர் கருதுகிருர்கள். தியாகர்ாஜர்; தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் காலத்தில் தமிழல்லாத மொழியில் இசைப் பாடல்கள் இலக்கணக் கட்டுக்கோப்புடன் இயற்றப்பட்டன என்பதற்காக, அந்த மும்மணிகளையும் தமிழ்ப்பாடல்களுக்கு மாருன எண்ணங்கொண்டவர்கள் எனக் கருதிடத் தேவையில்லை. தமிழ்மொழியின் ஆக்கம் குறைந்திருந்த இடைக்காலத்தின் குற்றமே தவிர, அவர்கள் யாரும் அதற்குப் பொறுப்பல்லர். தமிழ்மொழி ஆக்கம் பெற்று வளரும் இக்காலத்தில், கர்நாடக இசைப் புலவர்கள் வகுத்துள்ள வழியினின்றும் வழுவாமல் புதுமைகளைப் படைத்திடும் முனைப்பு மேலோங்கிட வேண்டும். புதுமை என்ற பெயரால் நமது அடித்தளத்தை இடித்து நொறுக்கி விடக்கூடாது. சென்ற ஆண்டு இங்கு உரையாற்றிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள்கூட, நமது இசை அரங்குகளைப் பற்றிப் பாரதியார் எழுதியுள்ள வாசகத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார். பாரதியின் மனவேதனையை நானும் நினைவுபடுத்துவதுஅவசியமென எண்ணுகிறேன்:—

பாரதியார் சொல்கிருர் :

''நானும் பிறந்தது முதலாக இன்று வரை பார்த்துக்கொண்டு வருகிறேன். கச்சேரி தொடங்குகிறது. வித்வான் 'வாதாபி கணபதிம்' என்று ஆரம்பஞ் செய்கிருர். 'ராம நீ ஸமான மெவ்ரு' 'மரியாத காதுரா' 'வரமு லொசதி' ஐயையோ ! ஒரே கதை! தமிழ் நாட்டு ஜனங்களுக்கு இரும்புக்காதாக இருப்பதால் திரும்பத் திரும்ப ஏழெட்டு பாட்டுக்களை வருஷக் கணக்காகக் கேட்டுக் கொண்டிருக்கிருர்கள். தோல் காதுள்ள தேசங்களில் இந்தத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.''

புதிய படைப்புகள் தேவையென்பதில் பாரதியார் எவ்வளவு ஆர்வங் கொண்டிருந்தார் என்பதைத்தான் அவரது இந்தக் கடுமையான விமர்சனம் சுட்டிக் காட்டுகிறது. புதுமைகள் பூத்திட வேண்டுமென்பதற்காகத் தற்காலத் 'தலை'களைப் போலக் கலையும், 'உடை' களைப் போல இசையும் மாறிட வேண்டுமென்று நான் கூற மாட்டேன்.''

அந்நாளில் திரைப்படங்களிலே கூடக் கர்நாடக இசைப் பாடல்கள்தான் இடம் பெற்றிருந்தன. படங்களிலும், நாடகங்களிலும் நடித்தவர்கள் நமது மரபு வழி இசைக்கே மதிப்பளித்து வந்தனர். ஆனல் இன்று திரைப்படம், நாடகம், இசை நிகழ்ச்சி போன்ற ஆயிரக்கணக்கான மக்களைக் கவர்கின்ற இடங்களில் மரபுவழி இசை மங்கிப்போய், பேய் இசை-தாய் இசைபோல் தலையில் தூக்கி வைக்கப் பெற்றுக் கொண்டாடப்படுகின்ற கொடுமையைத்தான் காண்முடிகிறது. மணமல்லியும், முல்லையும், மருக்கொழுந்தும், ரோஜாவும் சேர்த்துக் கட்டிய மாலை தேவையில்லையென ஒதுக்கி விட்டுக் கனகாம்பரப் பூவைக் காகிதத்திலே செய்து மாலையாக்கி அணிந்து கொள்கிற காலமன்ருே இன்று நடக்கிறது.

அந்தக் காகிதக் கனகாம்பரம், இன்னும் சில நாட்களில் மணமக்கள் மாற்றிக்கொள்கிற மாலையாகவும் வந்துவிடக் கூடுமோ என்றுதான் நான் அஞ்சுகிறேன்!

'கிளாசிகல் மியூசிக்' என்கிற மரபுவழி இசைக்கு நம் நாட்டில்தான் சோதனை ஏற்பட்டுள்ளது என்று சொல்லிட இயலாது. மேல் நாடுகளும் இந்தச் சோதனையைச் சந்தித்து வருகின்றன. ஜாஸ் மியூசிக், பாப்மியூசிக் முதலான புதிய முறைகளின் செல்வாக்குப் பெருகிப், பண்டைய இசைமுறையின் வலிவு அங்கேயும் குன்றி வருகிறது. ஏற்கெனவே வடக்கேயிருந்து வந்த மெல்லிசை நமது நல்லிசையைத் தாக்குவது போதாதென்று வெளிநாட்டிலிருந்தும் அத்தகைய தாக்குதல் நமது தொன்மைமிகு இசை அரண்மீது நடைபெறத் தொடங்கியுள்ளது. நமது முன்னோர் கட்டியுள்ள



இசை அரண், இந்தத் தாக்குதல்களால் தகர்ந்துவிடக்கூடிய அளவுக்கு அவ்வளவு வலிவு குறைந்தவை அல்ல எனினும், நாமும் மரபு கெடாத முறையில் காலத்திற்கேற்ற புதுமைகளை உருவாக்கித் தாக்குதல்களுக்கு ஈடுகொடுத்து நிலைபெற்று நிற்க முனைந்திட வேண்டும். அதற்குள்ள வழிகளில் தலையாய ஒன்றுதான் நமது மரபு வழி இசையை, புரியும் மொழியிலே வழங்கிட வேண்டும் என்பதாகும். கர்நாடக இசையின் ஆழமான - அகன்ற தன்மையில் ஈடுபட்டு ரசிகராவது ஒரு சிரமம். அத்துடன் என்ன பொருள் பற்றிப் பாடுகிருர்கள் என்பதைப் புரியாமல் தவிப்பது மற்ருெரு சிரமம்! இந்த இரண்டாவது சிரமத்தைக் குறைத்துவிட்டால் முதல் சிரமத்தைப் பொருட்படுத்தாமலே கர்நாடக இசை காலத்தால் வெல்ல முடியாத பேரரணுக உயர்ந்து நிற்கும்.

''கல்விக்கூடங்களில் தொடக்க வகுப்பிலிருந்து கல்லூரிக் கல்வி முடியும் வரையில் இசைப் பயிற்சியை எல்லா மாணவர்களுக்கும் கட்டாயப் பாடமாகவே ஆக்கலாம்'' எனும் ஒரு சிறந்த கருத்தை வெளியிட்டுள்ள இசைமேதை திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் 'இதனுல் எல்லோருமே மேடை ஏறிப் பாட வேண்டுமென்பதில்லை; இப்போது கணிதம் படிப்பவர் எல்லோருமே ராமாநுஜமாகவும், விஞ்ஞானம் படிக்கிற எல்லோருமே சி. வி. ராமனுகவும் ஆகிவிடுகிருர்களா என்ன ? அதேபோல ஒவ்வொரு துறைப் பயிற்சியால் அவரவருக்குமே அறிவு வளர்வதுபோல் இசைப்பயிற்சியும் அவரவருக்கும் உள்ளூற ஒரு 'ஆன்மீக' மலர்ச்சியை அளிக்கும்' என்றும் குறிப்பிட்டிருக்கிருர்கள். அம்மையார் அவர்களின் இந்தச் சீரிய யோசனை பொதுவாக வரவேற்கத் தக்கதாகும். அவர்கள் குறிப்பிடுகிற'ஆன்மீகமலர்ச்சி'யை நான் ''அமைதி உணர்ச்சி'' என்று எடுத்துக் கொள்கிறேன்.

ஆம்; இசை-துன்பம் வந்த போது தோழனுக நின்று கை கொடுக்கிறது. வேலைப்பளுவால் களைத்துப்போய் அமைதி பெற முடியாமல் தவிக்கும் மூளைக்கு, நல்லிசை, உற்சாகமான ஓய்வைத் தந்து அமைதி உலகிற்கு அழைத்துச் செல்கிறது. அத்தகைய அமைதி உணர்ச்சியைத் தரும் இசைக்கலையை இளமை முதலே பயிற்றுவிப்பது-அதுவும் கல்விக்கூடங்களில்ஒருபாடமாக்குவது சிறந்த செயலேயாகும். அத்துடன் ஒரு கருத்தையும் நான் இணைத்திட விரும்புகிறேன். இது என் சொந்தக் கருத்தல்ல; மூத்தோர்கள் கருத்துத்தான். கல்விக்கூடங்களில் நடைபெறும் இசைப் பயிற்சியால் அனைவருமே புகழ் பெற்ற சங்கீத மேதைகளாகிவிட முடியாது. இசை மட்டுமல்ல; எல்லாத் துறைகளிலுமே மேதைகள் அவ்வப்போது ஓரிருவர்தான் தோன்றுவர். அந்தத் தோற்றத்திற்கும், கல்விக்கூடங்களே மட்டுமன்றிப் பழைய காலக் குருகுல வாசமும் மிகவும் அவசியமான ஒன்ருகும். நமது தமிழகத்தின் புகழ் மணி விளக்குகளாகத் திகழ்ந்த இசை வல்லுநர்கள், இப்போதும் திகழ்பவர்கள், குருகுல வாசத்தினலன்ருே முன்னேறினர்கள்! இசைத்துறை மட்டுமல்ல; எந்தத் துறையிலுமே புகழ்பெற்ற குருவுக்கு அருகாமையிலேயே நெருங்கிப் பழகி அவர்களுடைய ஆற்றலையும், அனுபவத்தையும் புரிந்துகொள்கிற மாணவர்களால்தான் அந்தக் குறிப்பிட்ட துறையிலே கீர்த்தி பெற முடிந்திருக்கிறது என்பதற்குக் கண்கூடாக எத்தனையோ எடுத்துக்காட்டுக்கள் இருக்கின்றன. எனவே குருவுடன் அணுகியிருந்து பெறுகிற குருகுலப் பயிற்சி, 'பொன்மலர் நாற்றமுடைத்து'' என்னும் வகையில் சிறப்பினை நல்கிடும்.

பாட்டிசை மட்டுமன்றி, பரதக்கலை, நாயன இசை, யாழிசை மற்றும் துளைக்கருவி, தோல்கருவி நரம்புக் கருவிகளின் இசையனைத்தும் நமது முன்னேர்களால் கட்டிக்காக்கப் பெற்று, நிகழ்காலத்து மேதைகளால் வளர்க்கப் பெற்று, வருங்காலத்துச் செழிப்புக்காக நமது ஒத்துழைப்பை நாடி நிற்கின்றன.

தமிழக அரசைப் பொறுத்த வரையில், இந்த உயரிய கலைத் துறையை வளர்க்க இயன்றதெல்லாம் செய்து வருகிறது. இன்னும் அரிய யோசனைகளை வழங்குங்கள்; செய்யக் காத்திருக்கிறது.

'பரதநாட்டிய அரங்கேறி ஐம்பதாண்டு முடிந்த பொன்விழா ஆண்டில் ஒளிவிடும் பரதக்கலை மேதையான திருமதி பாலசரசுவதி அவர்களின் திறன், என்றென்றும் எதிர்காலக் கலை உலகிற்கு ஒரு நல்லாசானுக இருக்க வேண்டுமென்ற கருத்துடன்,



அவரது பரதக்கலையை சத்யஜித் ரேயைக் கொண்டு படமாக்குகிற பொறுப்பைத் தமிழக அரசு ஏற்று அதற்கென சுமார் 1¼ இலட்ச ருபாயை ஒதுக்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பிலும் தமிழக அரசு கலைத் தொண்டினைத் தொடர்ந்து ஆற்றி வருகின்றது.

இந்த நேரத்தில் 1967-ஆம் ஆண்டு முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற அண்ணு அவர்கள், தலைமைச் செயலக அலுவலர்கள் கூட்டத்தில் கூறிய ஒரு சுவையான கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்:—

''இதுவரை நாங்கள் கானம் பாடும் வானம்பாடிகளாக இருந்தோம். அந்த கானம் இனிமையாக இருந்ததால் மக்கள் மனத்தில் பல ஆசைகளைக் கிளறியது. அந்த ஆசைகள் அடையமுடியாத ஆசைகள் அல்ல, ஆகவே அந்த இசைக்கேற்ற ராகம், தாளம் ஆகியவற்றை அமைக்கும் பொறுப்பு, அலுவலர்களான உங்களுக்கு இருக்கிறது. பொதுவாக 'இல்லை' என்ற தாளத்தையும், 'மெதுவாகப் போ!' என்ற ராகத்தையுமே பாடுவது அரசாங்க அலுவலகப் பழக்கமாக இருக்குமென்பதை நானறிவேன். தாளம் புதிதாக இருக்க வேண்டுமென்று கூறுகிறேனேயல்லாமல் தப்புத் தாளம் போட வேண்டும் என்று கூறவில்லை. மாறவேண்டிய தாளம், மக்களின் இதயத் துடிப்புக்கு ஏற்றதாக அமையவேண்டும்.''

அறிஞர் அண்ணு வழங்கிய இந்தக் கருத்துரை, புதுமையை எந்த அடிப்படையில் நாடவேண்டும் என்பதற்கு ஏற்ற அறிவுரையாகும்.

இசைத் தீட்சண்ய மிக்க தீட்சிதர் அவர்களின் இருநூருவது ஆண்டுவிழாவில் உரையாற்றுவதும், அவர் புகழினைப் பேசுவதும், இந்த இசை மன்றத்துப் பெருமக்களிடையே இந்த நாளில் இருப்பதும் எனக்குக் கிடைத்த பெருவாய்ப்பெனக்கூறி, அனைவர்க்கும் நன்றி தெரிவித்து, என் தொடக்க உரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்.

(சென்னை இசைக் கழகத்தின் சங்கீத வித்வத் சபை 49-வது மாநாட்டைத் தொடங்கி வைத்து முதல்வர் கலைஞர் அவர்கள் 21.12.75 அன்று ஆற்றிய உரை)

கூட்டுறவின் பணிகள்

கூட்டுறவு இயக்கம் என்பது எல்லாருக்கும் தெரிந்த பெயர். ஆனால், அதனுடைய தத்துவம் என்ன, நடைமுறை என்ன என்பது விவரமாகப் பலருக்கு தெரியும் என்று சொல்ல முடியாது. இது முதலாளித்துவம், பொதுஉடைமை ஆகிய இரண்டு எதிரிடையான பொருளாதாரத் தத்துவங்களுக்கு இடைப்பட்ட தத்துவமாகும்! இரண்டிலும் உள்ள நல்ல தன்மைகளைக் கொண்டதாகும். இலாபம் ஒன்றே குறிக்கோளாக இல்லாமல் அனைவருடைய நலமே நோக்கமாகக் கொண்டது. முதலீட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், மனிதனுக்கு முக்கியத்துவம் கொடுப்பது! உழைப்பின் விளைவு முழுவதையும் உழைப்பவனே அனுபவிக்க வகைசெய்வதாகும் அது! குறிப்பிட்ட பொருளாதாரத் தேவை உள்ள பலர் ஒன்று சேர்ந்து, அதைச் சிறந்த முறையில் அடைய ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு அமைப்புதான் கூட்டுறவுச் சங்கம் எனப்படுவது.

உணவு, உடை, உறைவிடம் ஆகிய மிக முக்கிய வாழ்க்கைத் தேவைகளுக்காகவும், அவற்றைச் சார்ந்த தேவைகளுக்காகவும், பலவகைப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்கள், கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் சங்கங்கள், கூட்டுறவு நூற்பு ஆலைகள், கூட்டுறவு பண்டகசாலைகள், கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு அச்சகங்கள், தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை பலவகைக் கூட்டுறவுச் சங்கங்களில் குறிப்பிடத்தக்கவையாகும்.

உயிர்வாழத் தேவையானதும், எண்பது சதவிகித மக்கள் ஈடுபட்டுள்ளதுமான வேளாண்மைத் துறையில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆற்றும் பணி மிகப் பெரியதாகும். தமிழ்நாட்டில் இருக்கும் எல்லா கிராமங்களிலும் உள்ள விவசாயிகளுக்குச் சேவை செய்ய சுமார் 5,000 கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள், 15 மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகளின் ஆதரவுடன் இயங்கி வருகின்றன. இவை பயிர்ச் செலவுகளுக்காகக் குறுகிய காலக் கடன் வழங்குகின்றன.

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 1966-67-ல் சுமார் 30 கோடி ரூபாய் கடனாக இச்சங்கங்கள் வழங்கின. சென்ற ஆண்டு இவை 85 கோடி ரூபாய் கடனாக வழங்கின. இது தமிழ்நாட்டில் பயிர் செய்வதற்கு ஆகும் மொத்த செலவில் சுமார் 60 சதவிகிதம் ஆகும். இந்த அளவிற்கு வேறு எந்த மாநிலத்திலும் பயிர்ச் செலவிற்காகக்கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வழங்கியதாகத் தெரியவில்லை.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் மன்னை நாராயணசாமி

சென்ற ஆண்டு வழங்கிய கடன் 85 கோடி ரூபாயில், சுமார் 50 கோடி ரூபாய் ஐந்து ஏக்கருக்கும் உட்பட்டு பயிர் செய்யும் சிறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதாகும். பயிர்க்கடன்கள் வழங்கப்படும் முறை பற்றி, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்ருகத் தெரிய வேண்டும் என்ற நோக்கத்தோடு சிறிது விளக்கமாகக் கூற விரும்புகிறேன்.

ஒரு கிராமக் கூட்டுறவுச் சங்கத்தில் உள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் இண்டுக் கடன் அளவு மனு தயாரிக்கப்படுகிறது. இது, ஜனவரி முதல் மார்ச் முடிய தயாரிக்கப்படுகிறது. அடுத்த ஆண்டு, அதாவது ஜூலை முதல் ஜூன் முடிய ஒரு உறுப்பினர் பயிரிட உத்தேசிக்கும் பயிர்கள், நிலப் பரப்பு, தேவைப்படும் கடன், உரம் ஆகியவை இந்த மனுவில் குறிப்பிடப்படும். மே மாத முடிவுக்குள் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி எல்லா கூட்டுறவு சங்கங்களிலிருந்து வரும் மனுக்களுக்கும் அனுமதி வழங்கும். ஜூன் மாதம் முதல் ஒவ்வொரு பயிரும் செய்யும் பருவத்திற்கு, சுமார் ஒரு மாதம் முன்பாக மேற்சொன்ன ஆண்டுக்கடன் அளவு அனுமதியின்படி, அண்மையில் உள்ள மத்தியக் கூட்டுறவு வங்கியின் கிளையில் கடன் பெற்று, உறுப்பினர்களுக்கு வழங்கும்.

கடனில் ரொக்கப் பகுதியை ரொக்கமாகவும், உரப்பகுதியை உரமாகவும் வழங்கும். ஒவ்வொரு பயிருக்கும் கடன் வழங்கும் பருவமும், கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய தேதியும் தனித்தனியாக மத்திய கூட்டுறவு வங்கியால் நிர்ணயிக்கப்படுகின்றன. விவசாயம் செய்யும் எந்த நபரும், குத்தகையாளர் உட்பட, சங்கத்தில் உறுப்பினராகச் சேரவும், கடன் பெறவும் சட்டப்படி உரிமை பெற்றவர் ஆவார். கடன் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதைத் தடுக்கப் பல முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. உறுப்பினர்களின் ஒத்துழைப்பும் தேவை. உதாரணமாக, ஆண்டுக் கடன் அளவு மனு முதலில் தயாரிக்கப்படும் சமயத்தில் சில உறுப்பினர்கள் மனுவில் சேராமலிருக்கலாம். அவர்கள் பிறகு கடன் கோரினல், அவர்களுக்காக மற்ருெரு மனு தயார் செய்து அனுப்ப வேண்டியுள்ளது. இந்த வகை உறுப்பினர்களுக்குக் கடன் கிடைப்பதில் சிறிது கால தாமதம் ஏற்பட்டே தீரும். முன்பு பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்திவிடும் ஒவ்வொருவருக்கும் அடுத்த கடன் தடையின்றி, தாமதமின்றிக் கிடைக்கும். திருப்பிச் செலுத்தத் தாமதம் இருந்தால், மறு கடன் பெறுவதிலும் தாமதம் இருக்கும்.

நமது கிராமக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் பொதுவாக தவணை தவருமல் கடனைத் திருப்பிச் செலுத்தி வருகிருர்கள் என்ற நல்ல பெயர் உண்டு. ரிசர்வு வங்கியும் பாராட்டியுள்ளது! இந்தியத் துணைக்கண்டத்திலேயே கும்பகோணம் கூட்டுறவு மத்திய வங்கி கடன்களைத் தவணைப்படி வசூலிப்பதில் முதலிடம் பெற்றுள்ளது. பரிசும் பெற்றிருக்கிறது! சென்ற ஆண்டு வசூலாக வேண்டிய 1,105 இலட்சம் ரூபாயில் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் தான் வசூலாகாமல் நிலுவையாக நின்றது. கும்பகோணம் கூட்டுறவு மத்திய வங்கிக்கு அடுத்த இடத்தை தஞ்சாவூர் கூட்டுறவு மத்திய வங்கி பெற்றுள்ளது.

உணவு உற்பத்தி பெருக்கத்துக்கு அத்தியாவசியமான இரசாயன உரத்தை விநியோகம் செய்வதிலும் கூட்டுறவுச் சங்கங்கள் பாராட்டுகின்ற வகையில் ஈடுபட்டுள்ளன. தஞ்சை மாவட்டத்தில் தஞ்சை கூட்டுறவு விற்பனை இணையமும், இதர மாவட்டங்களில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உர விற்பனை செய்து வருகின்றன.

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 1966-67-ல் சுமார் 10 கோடி ரூபாய் பெறுமான உரம் கூட்டுறவுச் சங்கங்களால் விற்பனை செய்யப்பட்டது. கடந்த ஆண்டு சுமார் 54 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

பயிர்க்கடனில் ஒரு பகுதியாகக் கடன் பெறும் உறுப்பினர்களுக்கும், ரொக்கமாக இதர உறுப்பினர்களுக்கும், உறுப்பினர் அல்லாதவருக்கும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் உரம் வழங்குகின்றன. அண்மையில் உரத் தட்டுப்பாடு ஏற்பட்டபோது, அரசு உரப் பங்கீட்டு அட்டை முறையைக் கொண்டு வந்ததும், அந்த முறைப்படி கூட்டுறவுச் சங்கங்கள் உரவிநியோகம் செய்து தொண்டு புரிந்ததும் விவசாயிகள் அறிந்ததே.

தற்போது உரம் வேண்டிய அளவு கிடைப்பதால், உரப் பங்கீட்டு அட்டை முறை அரசால் நீக்கப்பட்டுவிட்டது. எல்லா விவசாயிகளும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களை அணுகி வேண்டிய அளவு உரம் பெற்றுக் கொள்ளலாம்.

உர விநியோகம் செய்வது மட்டுமின்றி, உர உற்பத்தியும் கூட்டுறவுத் துறையில் மேற்கொள்ளப்பட்டிருப்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். மன்னர்குடிக்கு அருகில் பாமணி கிராமத்தில் மணி உரம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று இயங்கி வருகிறது. பாமணி மணி உரம் மற்றமணி உரத்தைப்போல தரத்தில் மிகச் சிறந்ததாக விளங்குகிறது. இந்தத் தொழிற்சாலையை நிறுவிட நான் அமைச்சராவதற்கு முன்பு தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் தலைவர் என்ற முறையில் காரணமாக இருந்தேன் என்பதாலோ, அது என்னுடைய ஊருக்கு அருகில் அமைந்துள்ளது என்பதாலோ, அதைப் பற்றி உயர்வாகக் கூறுகிறேன் என்று எண்ண வேண்டாம். இது உர வல்லுநர்களின் கருத்து மட்டுமின்றி, விவசாயிகள் அனுபவத்தில் கண்ட உண்மையுமாகும். தஞ்சை மாவட்டத்திலும், இதர மாவட்டங்களிலும் பாமணி மணி உரத்தை மிகவும் விரும்பி வாங்குகிருர்கள்.

கோவைக்கு அருகில் உள்ள துடியலூர் கூட்டுறவுச் சங்கம் ஒரு தொழிற்சாலை நிறுவி பூச்சி மருந்து தயாரித்து விற்பனை செய்து வருவதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு நீர்ப்பாசனம் போன்ற வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்து கூட்டுறவு நிலவள வங்கிகள் இதற்கான நீண்டகாலக் கடன்கள் விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றன. கிணறு வெட்ட, கிணற்றை ஆழப்படுத்த, பம்புசெட்டுகள் அமைக்க நிலம் சீர்திருத்த, டிராக்டர்கள், டில்லர்கள் (Dillers) வாங்க பண்ணை வீடுகள் கட்ட, மாட்டுத் தொழுவம் கட்ட, காப்பி, டீ, தென்னை மற்றும் இதர பழத் தோட்டங்கள் அமைக்கக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன், 106 நிலவள வங்கிகள் ஆண்டு ஒன்றுக்கு மூன்று கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் கொடுத்து வந்த நிலை மாறி, தற்போதுள்ள 223 நிலவள வங்கிகள் சுமார் 20 கோடி ரூபாய் அளவிற்குக் கடன் கொடுத்து வருகின்றன.

மிகக் குறைந்த நிலமுள்ள, தனித்தனியாகக் கிணறுகள் அமைத்துக் கொள்ள முடியாத விவசாயிகள் பொதுக் கிணறுகள் மூலம் நீர்ப்பாசன வசதி பெறும் பொருட்டு நீரேற்றுக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சங்கங்களுக்கு இது வரை சுமார் நான்கு கோடி ரூபாய் அளவிற்கு நிலவள வங்கிகளால் கடன்கள் அனுமதிக்கப்பட்டு சிறுபாசனத் திட்ட வேலைகள் நடந்து வருகின்றன.

மின் இணைப்புத் தட்டுப்பாடு காரணமாக 'டீசல் இன்ஜின்கள்' அமைப்பதற்கு நிலவள வங்கிகள் இரண்டு ஆண்டுகளாக அதிக அளவில் கடன் வழங்கி வருகின்றன. 'டீசல் இன்ஜின்' ஒன்றுக்கு 1,000 ரூபாய் வீதம் அரசு மான்யம் வழங்குகிறது. சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் சேர்த்து இந்த மானியத் திட்டத்தின் கீழ் சுமார் 12,000 இன்ஜின்கள் வாங்கக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படும் பண்டங்களை மக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்கச் செய்வதிலும் தமிழ்நாட்டுக் கூட்டுறவு இயக்கம் முன்னணியில் இருக்கிறது. தற்பொழுது 29 கூட்டுறவு மொத்தப் பண்டகசாலைகளும், 1036 பிரதம கூட்டுறவு பண்டகசாலைகளும் இயங்கி வருகின்றன. மொத்தப் பண்டகசாலைகள் நடத்தும் 17 சிறப்பங்காடிகளும் சென்ற ஆண்டு மட்டும் 30கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்தன. 70 சிறிய சிறப்பங்காடிகள் 14 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்தன. கோவையிலும், திருச்சியிலும், சென்னையிலும் இயங்கி வருகின்ற சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பங்காடிகளின் சேவையைப் பற்றி மத்திய அரசே பாராட்டி, மற்ற மாநிலங்களுக்கு முன் மாதிரியாக எடுத்துச் சொல்லி வருகிறது. கும்பகோணத்தை அடுத்த சந்திரசேகரபுரம் கூட்டுறவுப் பண்டகசாலையும், மதுரை பாண்டியன் கூட்டுறவுச் சிறப்பங்காடியும் நல்ல சேவை செய்து வருவதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

1973-ஆம் ஆண்டிலிருந்து அரிசி, கோதுமை, சர்க்கரை,

மண்ணெண்ணெய் ஆகிய தட்டுப்பாடுள்ள பொருள்களை விநியோகம் செய்வதில் கூட்டுறவுச் சங்கங்கள் பெற்றுள்ள பங்கு பெருமிதம் அடையும் வகையில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள சுமார் 9,000 நியாய விலைக் கடைகளில் 7,000 கடைகள் கூட்டுறவுச் சங்கங்களால் நகர்ப்புறத்திலும் கிராமப்புறத்திலும் நடத்தப்படுகின்றன. கிராம மக்களுக்கு விவசாயக் கடனும், உரமும் வழங்கும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 3,000 சங்கங்கள் இதில் ஈடுபட்டுள்ளன. இது இப்பொழுது மத்திய அரசு வகுத்துள்ள 20 அம்ச திட்டத்தில்கூட சேர்க்கப்பட்டிருக்கிறது. விலைக் கட்டுப்பாட்டின்கீழ் வழங்கப்படும் மில் துணிகள் கூட்டுறவுப் பண்டகசாலைகள், கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நல்ல முறையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

கடன்பட்டுள்ள விவசாயிகளுக்கும், குறைந்த வருமானம் உடைய விவசாயிகள் அல்லாதவர்களுக்கும் தற்காலிகக் கடன் நிவாரணச் சட்டங்கள் தமிழக அரசால் அண்மையில் நிறைவேற்றப்பட்டது யாவரும் அறிந்ததே. இதன் விளைவாகத் தனிப்பட்ட வட்டிக்கடைக்காரர்கள் கடன் வழங்கத் தயங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு எளிதில் நகை ஈட்டின்பேரில் கடன் கிடைக்க, கூட்டுறவு நகர வங்கிகளும், கூட்டுறவு மத்திய வங்கிகளின் கிளைகளும் ஆவன செய்து வருகின்றன. தமிழ்நாட்டில் உள்ள 135 கூட்டுறவு நகர வங்கிகள் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 20 கோடி ரூபாயை நகை ஈட்டுக்கடன்களாக வழங்கி வருகின்றன. நபர் ஒன்றுக்கு 2,000 அல்லது 3,000 ரூபாய் உச்சக் கடன் அளவு என்று இருப்பதை 1,000 ரூபாய் என்று குறைத்தும் இதர காரியங்களுக்குக் கொடுக்கும் கடன்களைக் குறைத்தும், குறைந்த வருமானம் உள்ளவர்களில் மேலும் பலர் நகையீட்டுக் கடன் பெற வழி வகுத்துள்ளன. கூட்டுறவு மத்திய வங்கிகள் நடத்தும் 328 கிளைகளில் தற்போது சுமார் நான்கு கோடி ரூபாய் அளவிற்குத்தான் நகைக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. இது போதுமானதாக இல்லாததால் இந்த அளவை 15 கோடி ரூபாயாக உயர்த்துவதற்கு அரசு ரிசர்வு வங்கியின் அனுமதியைக் கோரியுள்ளது. அனுமதி விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்கள் பொருளாதாரத்தில் பிற்பட்ட நிலையில் இருப்பவர்களின் நல்வாழ்வுக்காகவும், சமதர்மத்தை நோக்கியும் இயங்கி வருவதால் தமிழக அரசு இவற்றிற்குப் பங்குத் தொகை, கடன், மானியம் என்ற வகையில் பெருத்த அளவில் நிதி உதவி கொடுத்து ஊக்கம்அளித்து வருகிறது. கூட்டுறவுச் சங்கங்களால் ஏற்படும் நன்மைகளைப் பொதுமக்கள் அறிந்து, அவற்றில் உறுப்பினராகச் சேர்ந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறேன். உறுப்பினர்கள் தங்களுடைய கடமைகளையும், உரிமைகளையும் அறிந்து, விழிப்புணர்ச்சியோடும், உண்மையோடும் நடந்து கொண்டால் கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் வளர்வதோடு சமதர்ம சமுதாயம் விரைவில் ஏற்பட ஏதுவாக அமையும்.

வாழ்க தமிழ்நாடு.

வளர்க கூட்டுறவு இயக்கம்.

(மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்கள் 7-12-1975 அன்று வானொலியில் ஆற்றிய உரை).

'விஜய்' காம்ப்ளேக்ஸ் உரங்களின் விலைகள் குறைக்கப்பட்டன!

'விஜய்' காம்ப்ளெக்ஸ் உரங்களைத் தயாரிக்கும் சென்னை உரத்தொழிற்சாலை நிறுவனம், 1.12.75 முதல் பின்கண்டவாறு விலைகளைக் குறைத்துள்ளது.

	ஒரு டன் உரத்தின் பழைய விலை (ரூபாய்)	ஒரு டன் உரத்தின் புதிய விலை (ரூபாய்)
விஜய் 17:17:17 காம்ப்ளெக்ஸ்	2,640	2,300
விஜய் 24:24:0 காம்ப்ளெக்ஸ்	2,875	2,700

மேற்கூறிய விலையில் விற்பனை வரியும், இதர உள்ளூர் வரிகளும் அடங்காது.

இரசாயன உரவிலை ஏறியுள்ள இந்த நேரத்தில், மேற்கூறிய விலைக் குறைப்பை உழவர்கள் வரவேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடுக்கரை ஊராட்சியில் மலைமீது கட்டப்பட்டுள்ள குடிநீர்த் தேக்கம்.

1973-1974-ஆம் ஆண்டிற்கான சிறந்த ஊராட்சி ஒன்றியப் பரிசுக் கேடயத்தை மாவட்ட ஆட்சியாளர் திரு. வி. டி. துரைராஜ் அவர்கள் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு. எஸ். நடேசன் அவர்களிடம் அளிக்கிறார்.

தோவாளை ஊராட்சி ஒன்றியம்....

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1973-74, 1974-75 ஆண்டுகளில் தொடர்ச்சியாக முதல் பரிசு பெற்றுள்ள தோவாளை ஊராட்சி ஒன்றியம், 141.82 சதுர மைல் பரப்பளவும், 12 வருவாய் கிராமங்களையும், 172 சிற்றூர்களையும், 78,252 மக்களையும் தன்னகத்தே கொண்டதாகும்.

ஏறத்தாழ இவ்வொன்றியத்தில் பாதியளவுப் பகுதி, மேற்கு மலைத் தொடர்ச்சி மலைப் பகுதியைச் சார்ந்திருப்பதால்,இயற்கை வளம் கொழிக்கிறது. மலைப் பகுதிகளில் ரப்பர், தேக்கு, தேயிலை, காப்பி, தென்னை, கமுகு மரச்சீனி முதலான பயிர்களும் விளைவிக்கப்படுகின்றன.

இங்கு 5,877 எக்டேர்களில் நெல் முப்போகம் விளைகிறது. நிலக்கடலை 1,630 எக்டேர்களில் இருபோகம் விளைகிறது. 1,800 எக்டேர்களில் ரப்பர் தோட்டங்கள் வானளாவி நிற்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

மூன்று போகங்களிலுமாக நெல் சாகுபடியாகும் 11,921 எக்டேர் பரப்பில், அநேகமாக முழு அளவில் அமோக விளைச்சல் தரும் பொறுக்கு விதை பயன்படுத்தப்பட்டு 30,525 மெட்ரிக் டன்னிலிருந்து 35,000 மெட்ரிக் டன்னுக நெல் உற்பத்தியைப் பெருக்கியுள்ள உழவர்களைப் பெற்றிருக்கும் பெருமை தோவாளை ஊராட்சி ஒன்றியத்துக்குக் கிடைத்து இருக்கிறது.

இந்த வட்டாரத்தில் இதுவரை 10,200 பழக்கன்றுகள் மானியத் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன.

சீமைப்பன்றிகள் வளர்க்கும் திட்டம் இங்கு தீவிரப்படுத்தப் பட்டுள்ளது. தோவாளை வட்டாரமெங்கிலும் கோழிப்பண்ணைகளும், உயர் இன பெருக்கம் செய்யப்பட்ட கால்நடைகளையும் காண முடிகிறது.

'விவசாயிகளின் பொழுது போக்கு, வானொலியில் வேளாண்மை செய்தி ஒலிபரப்பை ஆர்வத்துடன் கேட்பதே' என்கிறார் ஒன்றியப் பெருந்தலைவர். 1973-74 ஆம் ஆண்டில் கேசவன் புதூர் கிராம வானொலி மன்றம், மாவட்டத்தில் சிறந்ததென தேர்ந்தெடுக்கப்பட்டு, சுழற் கேடயம் வழங்கப்பட்டுள்ளது.

தாய்சேய் நலத் திட்டத்தின் கீழ் எல்லா ஊராட்சிகளும் பயன்படத் தக்க வகையில் 6 குடும்ப நல, தாய்சேய் நல நிலையங்கள் இயங்கி வருகின்றன. மகளிருக்கென்று தனியாக தையல் தொழிற் பயிற்சி நிலையம் இரண்டு நடத்தப்படுகிறது. ஒன்றியத்தின் நேரடிப் பார்வையில் தச்சுப் பட்டறையொன்று, நிகர இலாபத்தோடு செயல்படுகின்றது. கிராம சிறுதொழில் திட்டத்தின் பயனுக 250 கைவினைஞர்கள் பயன் பெற்றுள்ளனர்.

முக்கியமாக, ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சிகளில் எவ்வித வரிப் பாக்கியும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மக்கள் தலைவர்களும், மக்களும் ஒன்றுபட்டு ஆக்கப்பணிகளில் ஈடுபடும்போது, நிரந்தரமான நல்வாழ்வு பெற இயலும் என்பதற்கு தொடர்ந்து பரிசு பெறும் தோவாளை ஊராட்சி ஒன்றியம் தக்கதொரு சான்றாகும்.

தாழக்குடியில் பெருகியுள்ள வெள்ளைப் பன்றிகள் 1973-1974-ல் அபிசேகப்பட்டியிலிருந்து வாங்கிக் கொடுக்கப்பட்ட இரண்டு பெண், ஓர் ஆண் பன்றிகளின் வளர்ச்சிப் பெருக்கம்.

செந்தமிழ்ச் சூடி

—பேரியற்கைப்பேரின்பன்

மொழி முதன்மொழி தமிழ்ப் படைப்புலகில் வாழ்வியல் மணம் பரப்பிவரும் இலக்கியக் கருவூலங்களில் 'சூடி' எனும் ஒருவகை இலக்கியமும் ஒன்றாகும்.

ஔவையாரின் ஆத்திசூடித் தொடங்கி "பாரதியாரின் ஆத்திசூடி" பாரதிதாசனின் புதிய ஆத்திசூடி எனச் சில 'சூடி' இலக்கியங்கள் மலர்ந்துள்ளன.

அவ்வகையில், செந்தமிழ் மொழியின் மொழி முதல் எழுத்துக்களை முதலாகக் கொண்டு முதுமொழி எனும் படைப்புப் பாங்கில் செந்தமிழ்ச் சூடியைத் தொடுத்துள்ளார் திரு. பேரியற்கைப் பேரின்பன்'.

தொடுக்கப்பெற்ற இத்தொடையல்தான் செந்தமிழ் மொழிக்கே சூடி ஆகலின்—சூடியதாதலின் 'செந்தமிழ்ச் சூடி' என்னும் பெயர் பெற்றது.

இச் செந்தமிழ்ச் சூடி வளரும் தமிழுக்கும் வளங்கெழு தமிழுக்கும் எடுத்துக்காட்டாக இருப்பதாலும் புதிய சொல்லாக்கச் சொற்களும் அருகிய பண்டைச் சொற்களும் காணப்படுவதாலும் பொருள் விளங்கிடப் புறவுரையும் கொடுக்கப்பட்டுள்ளது.

1) **அறிவுணர்வமை**

அறிவுணர்வு— அறிதலாகிய சிந்தை; அமை—நிலைப்படுத்துக.

2) **ஆழகல்**

ஆழ—முழு நிறைவாக ; கல்—பயின்றிடுக.

3) **இயற்கை இறை**

இயற்கை—நிலையான — இயல் திறம் ; இறை—கடவுள்.

4) **ஈகம் அருளியம்**

ஈகம்—தனித்துவம் (தியாகம்); அருளியம்—கருணை நிறை.

5) **உண்மை ஒண்மை**

உண்மை—மெய்மை ஒண்மை—புகழ்மை.

6) **ஊழெனல் இயல்முறை**

ஊழெனல்—விதி எனப்படுவது; இயல் முறை—இயற்கையின் அகப்புற நடப்பே.

7) **எறும்பாயிரு**

எறும்பாய் — எறும்பினைப் போல்; இரு—இயங்கிடு.

8) **ஏமங்காண்**

ஏமங்—காப்புணர்வினை ; காண்—கண்டமை.

9) **ஐம்புலனாள்**

ஐயம்புலன்—சுவை—ஒளி — ஊறு—ஓசை—நாற்றம் என்னும் ஐந்து வகைப் புலன் உணர்வினை ; ஆள்—தன்னகப்படுத்திக் கொள்.

10) **ஒன்றுவ ஒன்று**

ஒன்றுவ—பொறுந்த வேண்டியவற்றுள் ; ஒன்று—முழு நிறைவாகத்தகை.

11) **ஓச்சுவ ஓச்சு**

ஓச்சுவ—ஆளுமை செலுத்திட வேண்டியவற்றில் ; ஓச்சு — முழுமையாக செலுத்திடு.

12) **ஔவி கொளேல்**

ஔவி—முழு நிறை பொறுமைதனை ; கொளேல் — மனத்தில் கொள்ளாதே.

13) **கடிவன கடி**

கடிவன—கண்டித்திட வேண்டியவற்றை; கடி—கண்டித்திடுக.

14) **காரமிழ்து**

கார்—மழை; அமிழ்து — உயிர் வளர்த்தி.

15) **கிடக்கை வலி விழப்பு**

கிடக்கை—உணர்வு, உடலிரண்டாலும் சோம்பிக் கிடத்தல்; வலிவிழப்பு — தெம்பழிவாகிடும்.

16) **கீழ்மை பழகேல்**

கீழ்மை—தாழ்வுறச் செய்பவை; பழகேல்—தோய்வுறுதே.

17) **குடிலம் மனங்கொளேல்**

குடிலம்—வஞ்சம் ; மனங்கொளேல்—மனத்தில் நிலைப்புறச் செய்யாதே.

18) **கூசுவ கூசு**

கூசுவ—நாண வேண்டிய ; கூசு—நாணிடு.

19) **கெந்துவம் நந்தேல்**

கெந்துவம்—கரவான வல்லாண்மை ; நந்தேல்—மேற்கொள்ளாதே.

20) **கேலிமை துன்பியம்**

கேலிமை — கீழ்மையான நகைச்சுவை; துன்பியம்—மனத்துயராகும்.

21) **கைவினைப்பழகு**

கைவினை—சிறு தொழில் ; பழகு—தேர்ச்சியடை.

22) **கொழிப்பன கொழி**

கொழிப்பன—ஆய்ந்தெடுக்க வேண்டிய; கொழி—ஆய்ந்தெடு.

23) **கோட்டிக் கொளேல்**

கோட்டி— போலிமையாகத் தன்னை வியத்தல்; கொளேல்—மனங்கொள்ளாதே.

24) **கௌவை உரையேல்**

கௌவை—முழு நிறைவான பழிதனை ; உரையேல் — சொல்லிவிடாதே.

25) **சலிப்பு அலுப்பு**

சலிப்பு—உணர்வுச்சோர்வு ; அலுப்பு—உடற்சோர்வு.

26) **சாப்பிடு அற**

சாப்பிடு—உண்ணுக ; அற—உணர்வு நிறைய.

27) **சிந்தனைப் பழகு**

சிந்தனை—அறிவுணர் வினை ; பழகு—மனப் பழக்கமாகிடு.

28) **சீர்மை இன்பியம்**

சீர்மை—முழு நிறைவான ஒழுங்கு ; இன்பியம் — பேரின்பம்.

29) **சுன்னம் தவிர்**

சுன்னம்—வெறுமை நிலை ; தவிர்—இல்லை என்றாக்கிடு.

30) **சூழ்ச்சியும் பழகு**

சூழ்ச்சியப்—நல்ல கரவினை; பழகு—தெளிந்தமை.

31) **செப்பங்காண்**

செப்பம்—முழு நிறைவான சீர்மைதனை; காண்—கண்டமை.

32) **சேர்வியம் பழகு**

சேர்வியம்—முழு நிறைவான பிணைப்பினை; பழகு—தெளித்தமை.

33) **சைவரல் பழகேல்**

சைவரல்—முழு நிறைவான இகழ்வினை; பழகேல் — தோய்வுறுதே.

34) **சொல்லுவ செய்**

சொல்லுவ — உரைப்பனவற்றை; செய்—செயலாக்கிடுக.

35) **சோடைமை தவிர்**

சோடைமை— உள்ளீடற்ற தன்மை; தவிர்—ஒதுக்கித் தள்ளிடுக.

36) **சௌண்டியாய் இரேல்**

சௌண்டியாய்—முழு நிறைவான சோம்பி; இரேல் — இருந்திடாதே.

37) **ஞஞ்ஞை நிலை தவிர்**

ஞஞ்ஞை நிலை—மயங்கிடு மன நிலை ; தவிர்—ஒதுக்கித் தள்ளிடுக.

38) **ஞாலம் உணர்**

ஞாலம்—உலகின் இயலினை; உணர்—தெளிந்திடுக.

39) **ஞிமிராய் உழை**

ஞமிராய்—தேனீயைப்போல உழை—பாடு படு.

40) **ஞெகிழுரை செய்**

ஞெகிழுரை—நெஞ்சு பிணைக்கும் சொல்; செய்—எடுத்துரைத்திடுக.

41) **ஞேயம் நேர்**

ஞேயம்—கேண்மை; நேர்—பொறுந்துக.

42) **ஞைவினை நடத்தேல்**

ஞைவினை—விளைவிலாத்தேய் செயல்; நடத்தேல்—மேற்கொளேல்.

43) **ஞொள்குவ ஞொள்கு**

ஞொள்குவ—அஞ்சிடவேண்டிய ; ஞொள்கு—அஞ்சு.

44) **தமிழும் அமிழ்தம்**

தமிழம்—முழு நிறைவான தமிழ்வாழ்வியல்; அமிழ்தம் —உயிருணர்வு வளர்த்தி.

45) **தாய்மொழி தகை**

தாய்மொழி—பிறந்த மண்ணுக்கும் — இனத்திற்கும் உரிய மொழி; தகை— பொறுந்திடுக.

46) **திசைப்பியம் கொளேல்**

திசைப்பியம் — முற்றமுதிர்வான ஐயம்; கொளேல்— மேற்கொள்ளாதே.

47) **தீஞ்சுவை மண்டு**

தீஞ்சுவை—நல் சுவை தனை; மண்டு—நிறைவுறத் துய்த்திடு.

48) **துய்யதுடுத்து**

துய்யது — தூய்மையானவற்றை; உடுத்து—அணிந்திடுக.

49) **தூய்மை நிகழ்வெழில்**

தூய்மை—துப்புரவு; நிகழ்வெழில்—நடப்பியல் அழகு ஆகும்.

50) **தென்றி நலமுடற்கு**

தென்றி—தென்றல்; நலமுடற்கு—உடல் நலமாம்.

51) **தேற்றம் ஏற்றம்**

தேற்றம்—முழுநிறைவானத் தெளிவு; ஏற்றம்—ஒப்பற்ற உயர்ச்சி.

52) **தைப்பன தை**

தைப்பன — ஊடுறுவலாந் தன்மை. தை—ஊடுறுவுக.

53) **தொண்டு மறவேல்**

தொண்டு—பழைமை—ஒல்லும் துணைமை; மறவேல்— நினைவு தவிர்ந்திடேல்.

54) **தோழமை தேவம்**

தோழமை—முற்ற முதிர்வான நட்பு; தேவம்—ஒப்பற்ற உயர்ச்சி.

55) **தௌவல் வினைதவிர்**

தௌவல்வினை—தன் நிலை தாழ்வான செயல்; தவிர்— ஒதுக்கித் தள்ளுக.

56) **நன்றல் ஓர்ந்துணர்**

நன்றல்—நல்லன—அல்லன ; ஓர்ந்துணர் — உன்னித்து மேற்கொள்க.

57) **நாட்டிற்குழை**

நாட்டிற்கு—பிறந்த மண்ணிற்காக; உழை—பாடுபடு.

58) **நிலவியம் நேர்**

நிலவியம்—திரிவற்ற நிறைபாடு; நேர்—பொறுந்திடுக.

59) **நீட்டேல் கரவு**

நீட்டேல்—நெட்டுறச் செலுத்திடாதே ; கரவு—வஞ்சப் போக்கு.

60) **நுணுகுவ நுணுகு**

நுணுகுவ—கூர்வுற ஆய்குவ; நுணுகு—ஆய்ந்திடுக.

61) **நூங்குற வாழ்**

நூங்குற—பெருமை விளையும்படி; வாழ்—இயங்கிடுக

62) **நெட்டங்கம் பழகேல்**

நெட்டங்கம்—முழு நிறைச் செருக்கு; பழகேல்— மனமேற்கொளாதே.

63) **நேரம் வாழ்க்கை**

நேரம்—ஓரை—சிறுபொழுதின் உட்கூறு; வாழ்க்கை—வாழ்வியலாகும்.

64) **நைச்சியம் தவிர்**

நைச்சியம்—கீழ்மையின் கூட்டு மொத்தம்; தவிர்—ஒதுக்கித் தள்ளுக.

65) **நொடி வழி நில்**

நொடி வழி—முதுமைமொழி நெறிதனில்; நில்—அமைவுறச் செல்.

66) **நோய் முதல் கொல்**

நோய்முதல்—உடல், உயிர், நலக்கேட்டின் மூலத்தை; கொல்—அழி.

67) **நௌவி வாழ்வுயர்**

நௌவி—கவரிமா; வாழ்வுயர்—மேம்பாடான வாழ்வியலாகும்.

68) **பகட்டியம் தவிர்**

பகட்டியம்—மேனுமினுக்கித்தனம்; தவிர்—ஒதுக்கித் தள்ளுக.

69) **பாடறிந்தொழுகு**

பாடறிந்து—இயல்புதெளிந்து ஒழுகு—நடையிடு.

70) **பிழைத்தல் பிழை**

பிழைத்தல் — நெஞ்சால் பொய்த்தல்; பிழை—குற்றமாகும்.

71) பீர்மை தவிர்
பீர்மை—முழு நிறைவான அச்சம்—தவிர் — ஒதுக்கித் தள்ளிடுக.

72) புரைசல் மனங் கொளேல்
புரைசல் மனம்—வலிவிழந்த மன உணர்வினை; கொளேல் —மேற்கொள்ளதே.

73) பூரிமை கான்றுமிழ்
பூரிமை–கயமை; கான்றுமிழ் — மனத்தால் வெறுத்திடு.

74) பெருமித மாயிரு
பெருமிதமாய்—செருக்கற்ற பெருமையாய்; இரு—நடந்திடு.

75) பேதையார் சொற்பொறு
பேதையார்—ஏதம்கொண்டு ஊதியம் போகவிடும் இயல்பார்; சொற்பொறு—சொல்லல்லாத சொல்தனை பொறுத்திடுக.

76) பையமைப் பதரேல்
பையமைப்— பொறுமையானவற்றில்; பதரேல்—விரைபடாதே.

77) பொதுமை வாழ்வமை
பொதுமை—தன்னல முதன்மையும்—தன்னல இழப்பும் அற்றதன்மை; வாழ்வமை—வாழ்வியலை உருவாக்கிடுக.

78) போலிமை தவிர்
போலிமை — மெய்போன்ற பொய்மை; தவிர்—ஒதுக்கித் தள்ளிடுக.

79) பௌவமாடு
பௌவம்—கடல்; ஆடு—மகிழ்வுற குளித்திடுக.

80) மழுப்பியம் பழகேல்
மழுப்பியம் — முழுநிறைவான வாய் வீச்சு; பழகேல் —மனங்கொள்ளாதே.

81) மாண்பட நட
மாண்பட- ஒப்பற்றபெருமை விளைய; நட—ஒழுகிடு.

82) மிதப்பியம் பழகேல்
மிதப்பியம்—அளவுமீறுகை; பழகேல் — மனங்கொள்ளாதே.

83) மீளிமைப் பழகு
மீளிமைப்—முழு நிறைவான வலிமை ; பழகு— மனங்கொண்டிடுக.

84) முல்லையந் தகை
முல்லையம்—நிலையில்மாறிடா உள்ள உரம் ; தகை — பொறுந்திடுக.

85) மூத்த சொற் கேள்
மூத்த சொல்—விளைவு முற்றிய உரையினை; கேள் — மனங்கொள்க.

86) மெச்சுவ மெச்சு
மெச்சுவ — பாராட்டிட வேண்டிய; மெச்சு—பாராட்டிடுக.

87) மேவன முடி
மேவன — ஒல்லும்படியாயின — செல்லுபடியாயின; முடி—நிறைவேற்றிடுக.

88) மையல் பழகேல்
மையல்—தன்னிலை மறப்பன ; பழகேல் — மனங்கொளாதே.

89) மொழி முதன் மொழி தமிழ்
மொழிமுதன்மொழி = உலக முதல் இலக்கிய செம்மொழி; தமிழ்—முத்தமிழேயாகும்.

90) மோடிமைப் பழகேல்
மோடிமைப்—புல்லிய அடம் பழகேல் — மனங்கொள்ளாதே.

91) மௌட்டியம் தவிர்
மௌட்டியம் — அறியாமை நிறை; தவிர்—ஒதுக்கித் தள்ளுக.

92) யாக்கைப் பேண்
யாக்கைப் — உயிர்த்தாங்கி; பேண்—நிறைவுறப் புரந்திடுக.

93) வழைமை வழி காண்
வழைமைவழி= நல்புதுநெறி காண்—கண்டமை.

94) வாய்வியம் பழகேல்
வாய்வியம் — விளைவிலா வெறும் பேச்சு ; பழகேல் —மனங்கொள்ளாதே.

95) விடியல் முன் விழி
விடியல் முன் — பொழுது புலருவதற்கு முன் ; விழி—எழுந்திடுக.

96) வீசுவ வீசு
வீசுவ–விரைந்தொதுக்கிடுவ வீசு — தூக்கி எறிந்திடுக.

97) வெஃகியம் பழகேல்
வெஃகியம் — தகைவற்ற நசை ; பழகேல்— மனங்கொளாதே.

98) வேள்வியம் தகை
வேள்வியம்—விளைவு நிறை முயற்சி; தகை—பொறுந்திடுக.

99) வைகார்ப்புப் பழகேல்
வைகார்ப்புப் — பேரார வாரம்; பழகேல் — மனங்கொளாதே.

100) வௌவு தவிர்
வௌவு— கொள்ளையாய்ப் பறித்திடல்; தவிர்—ஒதுக்கிடுக.





தக்காளி போன்று தள தளப்பாகவும், சிவப்பாகவும் இருக்கிருள் என்று ஒரு பெண்ணின் நிறத்தையும், உடலை அமைப்பைப் பற்றியும் கூறும் நாம் அதனுடைய முக்கியத்துவத்தைப் பற்றி ஒரு போதும் நினைத்துப் பார்ப்பது இல்லை. ‘தக்காளி தானே!’ என்று சொல்லும் போதே ஒரு தாழ்வு மனப்பான்மையுடன் சொல்கிரும். ஆனால் உண்மையில் பார்க்கப் போனுல் அதில் நிறைய உணவுச் சத்துக்கள் அடங்கியுள்ளன. அதன் நிறமும், வடிவமும் ஆப்பிள் போலவும் உள்ளது. உருவத்தில் மட்டும் அல்ல. அது கொடுக்கும் உணவுச் சத்து ஆப்பிளை விடவும் அதிகமாக உள்ளது. கீழே உணவுச்சத்தின் அளவு கொடுக்கப்பட்டுள்ளது.

100 கிராமுக்கு

		தக்காளி	ஆப்பிள்
கலோரி	...	20	63
புரதம் (கிராம்)	...	0.9	0.1
கொழுப்புச் சத்து (கிராம்)		0.2	0.8
மாவுச்சத்து (கிராம்)	...	3.6	13.8
சுண்ணும்புச்சத்து (மி.கிராம்)		48.0	10.0
பாஸ்பரஸ்	...	20.0	10.0
இரும்புச்சத்து	...	0.4	1.0
வைட்டமின் ஏ	...	585	130
வைட்டமின் பி-1 (மி.கிராம்)		0.12	—
வைட்டமின் பி-2 (மி.கிராம்)		0.06	—
வைட்டமின் சி (மி.கிராம்)		27.0	1.0

பொதுவாகப் பார்க்கும் போது ஆப்பிளில் நமக்குக் கிடைக்கும் உணவுச்சத்தை விடத் தக்காளியில் சற்று அதிகமாகவே கிடைக்கிறது. ஆப்பிள் ஒரு சில காலங்களில் மட்டும் கிடைக்கிறது. அது போலவே விலையும் அதிகமாக உள்ளது. தக்காளி எல்லாக் காலங்களிலும், குறைந்த விலையிலும் கிடைக்கிறது. எல்லாராலும் விரும்பி வாங்கி உணவுடன் கலந்து கொள்ள முடிகிறது. அதனுல் தான் இதை ‘‘ஏழையின் ஆப்பிள்’’ என்று அழைக்கிருர்களோ! அது உண்மையில் மிகவும் பொருத்தமே.

தக்காளிப் பழத்தை பச்சையாகவும் சாப்பிடலாம். அப்படி சாப்பிடுவதால் அதில் சத்துப் பொருட்கள் வீணுகாமல் கிடைக்கிறது. நமது அன்ருட உணவில் தக்காளியை 100 கிராம் அளவு வரை சேர்த்துக் கொள்ளலாம். தேவைக்கு வேண்டிய அளவில் கிடைக்கும் தக்காளியைக் கொண்டு விதவிதமான, சுவை மிகுந்த பண்டங்களைத் தயார் செய்ய முடியும். அவை எவ்வாறு தயார் செய்வது என்பதைச் சற்று கவனிப்போம்.

தக்காளியைக் கொண்டு பலவிதமான பண்டங்களைத் தயார் செய்கிரும். சர்க்கரையைச் சேர்த்து இனிப்புப் பண்டமும், உப்பு மிளகாய் போன்றவற்றைக் கொண்டு காரமான பண்டங்களையும் தயார் செய்கிரும்.

தக்காளியைக் கொண்டு தயார் செய்யப்படும் உணவுப் பண்டங்களை இரு வகையாகப் பிரிக்கலாம்.

அவையாவன:

(1) செய்த உடனே உபயோகப்படுத்தப்பட வேண்டிவைகள். எடுத்துக் காட்டாக குழம்பு,

சாம்பார், ரசம், துவையல் முதலியன.

(2) பல நாட்களுக்குச் சேமித்து வைத்துப்பயன் படுத்தப்படுபவை. எடுத்துக்காட்டாக தக்காளி ‘ஜாம்’, தக்காளி ‘கெட்சப்’ முதலியன.

தக்காளி ‘சூப்’

தக்காளி	...	250 கிராம்
வெங்காயம்	...	10
சீரகம்	...	1 தேக்கரண்டி
மிளகு	...	1 தேக்கரண்டி
உப்பு, மஞ்சள் பொடி,கொத்த மல்லி, கருவேப்பிலை இலை	...	தேவையான அளவு

தக்காளிப் பழங்களை ஒரு பாத்திரத்தில் போட்டு பிசைந்து விட்டு அதில் ½ படி தண்ணீர் ஊற்ற வேண்டும். அதனுடன் உரித்து மசித்த வெங்காயம், பொடி செய்த சீரகம், மிளகு, தேவையான உப்பு ,மஞ்சள் தூள், கொத்தமல்லி, கருவேப்பிலை இலைகள் முதலியவற்றைச் சேர்க்கவும். பின்னர் அடுப்பில் வைத்து ½ மணி நேரம் நன்கு குழைய வேக வைக்கவும். தக்காளி வெந்தபின் இத்துடன் 2 தேக்கரண்டி மைதா மாவை நீரில் கரைத்து ஊற்றி வேக வைக்கவும். வெந்த பின்னர் வடித்தெடுத்துக் கொண்டு ஒரு தேக்கரண்டி நெய்யில், அரை தேக்கரண்டி சீரகம் போட்டு தாளித்து அதில் ஊற்றி உபயோகிக்கலாம்.

தக்காளி ‘ஜூஸ்’

தக்காளி	...	500 கிராம்
தண்ணீர்	...	100-150 மி.லி.
சர்க்கரை	...	தேவையான அளவு

நல்ல பழுத்த தக்காளிப் பழங்களை எடுத்து கழுவிய பின் ஒரு பாத்திரத்தில் போட்டு நன்கு பிசைந்து அத்துடன் தேவையான தண்ணீர் (100-150 மில்லி லிட்டர்) கலந்து வடிகட்டி ஜூஸில் தேவையான அளவு சர்க்கரை ‘ஐஸ்’ சேர்த்துக் கொள்ள வேண்டும். இது ஒரு சத்து மிகுந்த குளிர் பானமாகும்.

தக்காளி சாம்பார்:—

துவரம் பருப்பு	...	250 கிராம்
தக்காளி	...	500 கிராம்
எலுமிச்சம் பழம்	...	½
வெங்காயம்	...	8
பச்சை மிளகாய்	...	4
எண்ணெய்	...	2 மேஜைக் கரண்டி
கடுகு	...	½தேக்கரண்டி
வெள்ளை உளுந்து	...	1 தேக்கரண்டி
பெருருங்காயம்	...	1 மிளகளவு
மஞ்சள் பொடி, சாம்பார்ப் பொடி, உப்பு, கருவேப்பிலை, கொத்தமல்லி	...	தேவையான அளவு
வெந்தயம்	...	1 தேக்கரண்டி

துவரம்பருப்பை நன்றாக வேக வைத்து மசித்து எடுத்துக் கொள்ளவும். தக்காளியைத் தண்ணீரில் கழுவி விட்டு சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். வெங்காயம், பச்சை மிளகாய் ஆகிய இவ்விரண்டையும் நறுக்கிக் கொள்ள வேண்டும். வாணலியில் எண்ணெய் ஊற்றி சற்றுக் காய்ந்ததும் தாளிப்பதற்காக வைத்துள்ள கடுகு, வெந்தயம், பெருங்காயம், வெள்ளை உளுத்தம் பருப்பு, வெங்காயம், மிளகாய், கருவேப்பிலை போன்றவற்றை

வாணலியில் போட்டு பின்பு தக்காளியையும் சேர்த்து நன்றாக வதக்கி, தயாரித்து வைத்திருக்கும் பருப்பை ஊற்றி தேவையான அளவு உப்பு, மஞ்சள் பொடி, சாம்பார்ப் பொடி போட்டு நன்றாகக் கொதிக்க விடவும். இறக்கியவுடன் ½ எலுமிச்சைப் பழ ரசத்தைப் பிழிந்து கொத்தமல்லி கொஞ்சம் போட்டு சிறிது நேரம் மூடி வைத்து விட்டு உபயோகிக்கவும்.

தக்காளிக் குழம்பு:—

தக்காளி	...	250 கிராம்
வரமிளகாய்	...	4
சீரகம்	...	3 தேக்கரண்டி
தேங்காய்	...	1 துண்டு
எண்ணெய்	...	4 மேஜைக்கரண்டி
கடுகு	...	1 தேக்கரண்டி
வெள்ளை உளுந்து	...	1 தேக்கரண்டி
வெந்தயம்	...	½ தேக்கரண்டி
வெங்காயம்	...	8
உப்பு, மஞ்சள் பொடி, கருவேப்பிலை	...	தேவையான அளவு
பச்சை மிளகாய்	...	2

நன்றாகப் பழுத்த தக்காளிப் பழங்களைக் கழுவி நான்காக நறுக்கிக் கொள்ள வேண்டும். மிளகாய் வற்றல், சீரகம், தேங்காய் ஆகியவற்றை நன்கு அம்மியில் வைத்து அரைத்துக் கொள்ள வேண்டும். ஒரு பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி அடுப்பில் காய வைத்துப் பின்பு கடுகு, உளுத்தம் பருப்பு, வெந்தயம் போட்டு சிவந்தவுடன் சிறிதாக நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், கருவேப்பிலை போட்டு நன்கு வதக்கி அரைத்த மசாலை சிறிது நீர் ஊற்றிக் கரைத்து அதில் ஊற்ற வேண்டும். தேவையான உப்பு, மஞ்சள் பொடி போட்டு குழம்பு நன்றாகக் கொதித்ததும் இறக்க வேண்டும். இதை இட்டிலியுடனும், சாதத்துடனும் கலந்து உண்ணலாம்.

தக்காளிக் கொச்சி:—

தக்காளி	...	250 கிராம்
தேங்காய்	...	1
முந்திரிப் பருப்பு	...	6—10
வெங்காயம்	...	8
பச்சைமிளகாய்	...	4
வெள்ளைப் பூண்டு பல்	...	5
இஞ்சி, கொத்தமல்லி, கருவேப்பிலை, உப்பு	...	தேவையான அளவு
எண்ணெய்	...	2 மேஜைக்கரண்டி
கடுகு, வெந்தயம், உளுத்தம் பருப்பு	...	தேவையான அளவு

நன்கு பழுத்த தக்காளிப் பழத்தை உரலில் போட்டு முந்திரிப் பருப்பும் சேர்த்து நீர் ஊற்றாமல் ஆட்டிக் கொள்ள வேண்டும். தேங்காயை உடைத்து அரைத்து பால் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும் கடுகு, உளுத்தம் பருப்பு போட்டு, கடுகு வெடித்ததும் நறுக்கி வைத்துள்ள வெங்காயம், பச்சைமிளகாய், பூண்டு, இஞ்சி, கருவேப்பிலை போட்டு வதக்கி, தக்காளிக் கலவையைப் போட்டு வதக்கி விடவும். (தக்காளி அரைத்தது + தேங்காய்ப் பால்). தேவையான உப்பும் போட்டு மூடி கொதிக்க விடவும். கொத்தமல்லி இலை போட்டு இறக்கி விட வேண்டும். இதை சாதத்துடன் கலந்து உண்டால் சுவையாக இருக்கும்.

தக்காளிப் பச்சடி:—

தக்காளி	...	2
பெரிய வெங்காயம்	...	1
தயிர்	...	250 மி. கிராம்
பச்சை மிளகாய்	...	2
மிளகாய் வற்றல்	...	2
எண்ணெய், கடுகு, உப்பு கருவேப்பிலை	...	தேவையான அளவு

நறுக்கிய தக்காளி, வெங்காயம், பச்சை மிளகாய் முதலியவற்றைத் தேவையான உப்பிட்ட தயிரில் போடவும். வாணலியில் எண்ணெய் விட்டு காய்ந்ததும் கடுகு, மிளகாய் வற்றல், கருவேப்பிலை போட்டு தாளித்து தயிரில் ஊற்றி நன்கு கலக்கிக் கொள்ள வேண்டும். இதனைக் காய்கறி பிரியாணியுடனும், மட்டன் பிரியாணியுடனும் கலந்து சாப்பிட்டால் சுவையாக இருக்கும்.

தக்காளி ரசம்:

தக்காளி	...	3
மிளகு	...	1 தேக்கரண்டி
சீரகம்	...	1 தேக்கரண்டி
வெள்ளைப் பூண்டு	...	3 பல்
மிளகாய் வற்றல்	...	1
எலுமிச்சம் பழம்	...	½
எண்ணெய், கடுகு, பெருங்காயம், உப்பு, கருவேப்பிலை, கொத்துமல்லி	...	தேவையான அளவு

சுமார் 250 மில்லி லிட்டர் தண்ணீரில் தக்காளிப் பழங்களைப் போட்டு பிசைந்து கொள்ளவும். சீரகம், மிளகு, வெள்ளைப் பூண்டு மூன்றையும் அரைத்து தக்காளிப் பழக் கலவையுடன் சேர்த்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், கடுகு, பெருங்காயம், மிளகாய்வற்றல் கருவேப்பிலை போட்டு தாளித்துக் கொண்ட பின்பு கூட்டி வைத்த ரசத்தை தேவையான உப்பு சேர்த்து ஊற்றவும். ஒரு கொதி வந்ததும் எலுமிச்சம் பழச் சாற்றை ஊற்றி, கொத்தமல்லி போட்டு இறக்கவும். இதனைச் சாப்பிட ருசியாகவும் வாசனையாகவும் இருக்கும்.

தக்காளிச் சாதம்:

தக்காளி	...	500 கிராம்
பட்டை	...	3
கிராம்பு	...	5
ஏலக்காய்	...	6
முந்திரிப் பருப்பு	...	10
பெரிய வெங்காயம்	...	2
பச்சை மிளகாய்	...	7
தேங்காய்	...	½
உப்பு, கருவேப்பிலை	...	தேவையான அளவு
டால்டா அல்லது நெய்		100 கிராம்
அரிசி	...	500 கிராம்

தக்காளியைத் துண்டுகளாக நறுக்கிக் கொள்ள வேண்டும். ஒரு பாத்திரத்தில் நெய் அல்லது டால்டா ஊற்றி காயவைத்து பட்டை, கிராம்பு, ஏலக்காய், முந்திரிப் பருப்பு ஆகியவற்றைப் போடவும். சிவந்ததும் நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், கருவேப்பிலை போட்டு வதக்கவும். பின்பு தக்காளியைப் போட்டு வதக்கி தேங்காயிலிருந்து எடுத்தப் பாலைச் சேக்கவும். தேவையான உப்பு சேர்த்துக் கொதித்ததும், கழுவிய பச்சரிசியைப் போட்டு மூடி லேசான நெருப்பில் வேக வைத்துக் கிளறிவிட்டு வெந்த பதம் பார்த்து இறக்கவும்.

தக்காளி ரவை உப்புமா:

தக்காளி	...	3
ரவை	...	250 கிராம்
எண்ணெய்	...	4 மேஜைக் கரண்டி.
பச்சை மிளகாய்	...	4
பெரிய வெங்காயம்	...	1
கடுகு, உளுத்தம் பருப்பு, உப்பு, கருவேப்பிலை	...	தேவையான அளவு

ரவையை லேசான வறுத்துக் கொள்ள வேண்டும். வாணலியில் எண்ணெய் ஊற்றி சிறிது காய்ந்ததும், கடுகு, உளுத்தம் பருப்பு, வெங்காயம், பச்சை மிளகாய், கருவேப்பிலை முதலியவற்றைப் போட்டு தாளித்தவுடன் நறுக்கிய தக்காளியைப் போட்டு வதக்கிக் கொள்ளவும். தேவையான தண்ணீரும் உப்பும் சேர்த்துக் கொதிக்க விடவும். கொதித்தவுடன் ரவையைக் கொட்டி கட்டி விடாமல் கிளறி வெந்தவுடன் சிறிது நெய்விட்டு கிளறி இறக்கவும்.

தக்காளி ஊறுகாய்:

தக்காளி	...	250 கிராம்
உப்பு	...	10 கிராம்
மிளகாய்ப் பொடி	...	2 மேஜைக்கரண்டி
எண்ணெய்	...	100 கிராம்
வினிகர்	...	2 மேஜைக்கரண்டி



கடுகு, பெருங்காயம்,
வெந்தயம், மஞ்சள்பொடி ... தேவையான அளவு

தக்காளியைக் கழுவி விட்டு நான்கு துண்டுகளாக அல்லது இரண்டு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். எண்ணெய்யை வாணலியில் ஊற்றி காய்ந்தவுடன் கடுகு, பெருங்காயம், வெந்தயம் ஆகியவற்றைப் போடவும். கடுகு வெடித்தவுடன் தக்காளிப் பழத் துண்டுகளைப் போட்டு மஞ்சள் பொடி, உப்பு, மிளகாய் பொடியையும் போட்டு எண்ணெயில் வதக்கவும். அப்படி செய்யும் போது தக்காளித் துண்டுகள் அதிகம் உடைந்து போகாமல் பார்த்துக் கொள்ளவும். அடுப்பில் இருந்து இறக்கியவுடன் 'வினிகர்' சேர்த்து சுத்தமான பாட்டில்களில் போட்டு வைக்கவும்.

தக்காளி 'ஜாம்'

தக்காளி	...	1,000 கிராம்
சர்க்கரை	...	750 கிராம்
சிட்ரிக் அமிலம்	...	3 கிராம்

தக்காளியைக் கழுவி விட்டு கொதிக்கும் நீரில் இரண்டு நிமிடங்கள் போட்டு எடுத்த பின்னர் குளிர்ந்த நீரில் போட்டு குளிர வைக்க வேண்டும். பின்னர் தோலையும், விதைகளையும் நீக்கிவிட்டு நன்ருகக் கடைந்து கொள்ளவும். கடைந்த பழச் சாறுடன் சர்க்கரை சேர்த்து அடுப்பில் வைத்துக் கிளறிக் கொண்டு இருக்கவும். நன்ருக நீர் வற்றி லேசான மிட்டாய் பதம் (ஸ்பூனில் அள்ளி எடுக்கும் போது அல்வா போன்ற பதமாக) வந்ததும் 'சிட்ரிக் அமிலம்' கலந்து சுத்தம் செய்த பாட்டில்களில் அடைத்து வைக்கவும். ரொட்டியுடன் கலந்து சாப்பிட சுவையாக இருக்கும்.

தக்காளி 'கெட்சப்' :

தக்காளிச் சாறு	...	500 கிராம்
நறுக்கிய வெங்காயம்	...	2 மேஜைக்கரண்டி
நறுக்கிய வெள்ளைப் பூண்டு	...	2 தேக்கரண்டி
கிராம்பு	...	3
ஏலக்காய், மிளகு, சீரகம், பொடி செய்த கலவை	...	2தேக் கரண்டி
பட்டை	...	1 துண்டு
மிளகாய், பொடி	...	1½ தேக்கரண்டி
உப்பு	...	ருசிக்குத் தேவையானது
சர்க்கரை	...	30 கிராம்
'வினிகர்'	...	30மில்லி லிட்டர்

மேலே சொன்னது போல பழச்சாறு தயார் செய்து கொள்ளவும். தயார் செய்து கொண்ட பழச்சாறுடன் பாதி உப்பும், சர்க்கரையும் கலந்து அடுப்பில் வைத்துக் கிளறிக் கொண்டு இருக்க வேண்டும். நறுக்கிய வெங்காயம், வெள்ளைப் பூண்டு, பொடி செய்த மிளகு, ஏலக்காய், பட்டை, சீரகம், கிராம்பு, மிளகாய்ப் பொடி ஆகியவற்றை ஒரு சுத்தமான வெள்ளைத் துணியில் கட்டி கொதித்துக் கொண்டு இருக்கும் பழச்சாற்றில் மூழ்கி இருக்கும்படி வைக்க வேண்டும். பழச்சாறு சுண்டி மிகவும் கெட்டியாகவும் இல்லாமல், தண்ணீர் போன்றும் இல்லாமல் உள்ள தன்மையை அடைந்தவுடன் மீதமுள்ள உப்பு, சர்க்கரையும், வினிகரையும் கலக்க வேண்டும். பின்னர் சுத்தம் செய்த பாட்டில்களில் ஊற்றி [illegible] வேண்டும்.

செல்வி ஜி. மணிமேகலை, திருமதி சுசிலா திருமாறன்,
உணவியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-641003.

இலக்கியங்களுக்கு
இறவாப் புகழ் தருவது...

காகிதம்

ஹோமர் முதல் ஹெமிங்வே வரை,
காளிதாசர் முதல் காஃப்காவரை,
ஆதிசங்கரர் தொட்டு அரிஸ்டாடில் வரை,
திருவள்ளுவர் தொட்டு தோரூவரை......

தரமான காகிதம், சிந்தனையாளர்களின் எண்ணங்களும், கருத்துக்களும் காலத்தால் அழிவுரு வண்ணம் காத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கி உதவுகிறது.

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்

பள்ளிப்பாளையம்,
சேலம் மாவட்டம்
தமிழ்நாடு

SPB

The Watermark of Quality

எழுத, அச்சிட, உறையிட
உன்னதமான காகிதங்கள்

நான் பெற்ற பரிசு!



—கே. இராமதாசு,
ஏரகுடி கிராமம்,
திருச்சி மாவட்டம்.

நான் நீண்ட காலமாகக் கரும்பு சாகுபடி செய்து வரும் விவசாயி. 1973—74-ஆம் ஆண்டு கரும்பிற்கான வேளாண்மைத் துறை அலுவலர்கள் என்னை மாநில கரும்புப் போட்டியில் பங்கெடுத்துக் கொள்ளத் தூண்டி, எனக்கும் போட்டியில் சேர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தை உண்டாக்கினர். அதன் பேரில் நான் மேற்படிபோட்டியில் சேர்ந்தேன்.

நான் கரும்பு சாகுபடி செய்த சுமார் 3 ஏக்கர் பரப்பளவில் ஒரு ஏக்கர் கோ. 419 ரகக் கரும்பைப் போட்டிக்காக ஒதுக்கியிருந்தேன். அந்த வயலில் நான் கரும்பிற்கான வேளாண்மைத் துறை அலுவலர்களின் அறிவுரைப்படி தகுந்த இடைவெளிகளுடன் பார் பிடித்து 156 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தை அடியுரமாக இட்டேன். கரையான் அரித்திடாமல் இருக்க 20 கிலோ 'பி.எச்.சி. 10' சதத் தூளையும் சாலில் தூவினேன். 8 மாத கால வயதுள்ள கரும்பு நாற்றங்காலிலிருந்து கோ—419 ரக இருபரு கரணைகள் 25,000 கொண்டு வந்து, 50 லிட்டர் நீரில் 250 கிராம் 'அகலால்' கலந்த மருந்து கலவையில் நனைத்த பின் நடவு செய்தேன். கரும்புக் கரணை நட்ட 25-வது நாள் முதல் முறையாகக் களை எடுத்தேன். இரண்டாவது தடவையாக 45-வது நாளில் களையெடுத்தேன்.

இப்படிக் களையெடுத்த கரும்பிற்குத் தேவையான 110 கிலோ தழைச் சத்து, 45 கிலோ சாம்பல் சத்து தரும் உரக் கலவையை இரு சமப் பாகங்களாகப் பிரித்து 45-ஆம் நாள் ஒரு முறையும், 90-வது நாள் மறுமுறையும் கரும்புப் பயிர்களின் அடியில் இட்டு மண் தள்ளி மூடினேன். கரும்பிற்கு 6-வது மாதம் காய்ந்தத் தோகைகளை அகற்றினேன். கரும்பு சாய்ந்து வீணுகாமல் இருக்க இரு வரிசைக் கரும்புகளை பின்னி கட்டினேன். பூச்சிகளைத் தடுக்க, வேளாண்மைத் துறை அலுவலர்கள் அறிவித்தபடி 'செவிடால்' மற்றும் 'என்டிரின்' குருணைகளை இருமுறை கரும்புக் குருத்தில் இட்டேன். நான் மேற்படி மகசூல் போட்டியில் சேர்ந்துவிட்டதாலும், மற்ற உழவர்களுக்கு மாதிரி வயலாக இருக்க வேண்டுமென்பதாலும், பயிரிட்ட நாள் முதல் ஒவ்வொரு சாகுபடி முறையிலும் கரும்பிற்கான வேளாண்மைத் துறை அலுவலர்களின் அறிவுரை பெற்று, அந்த அறிவுரைப்படி நானும் செயல்பட்டேன்.

வேளாண்மைத் துறை அலுவலர்கள் முன்னிலையில் 19—4—74 அன்று கரும்பு அறுவடை செய்யப்பட்டு, எடையும் போடப்பட்டது. எடை ஏக்கருக்கு 103.332 டன் காணப்பட்டது. நான் இந்த கரும்புப் பயிரில் சீரிய முறைப்படி—அதற்கென்றுள்ள உரம், பூச்சி மருந்து இவைகளைக் காலா காலத்தில்—வேளாண்மைத் துறை அலுவளர்களின் பரிந்துரைப்படி இட்டதால் அதிக மகசூல் கிடைக்கப் பெற்றேன். அதிக மகசூலைக் கண்டு எனக்கு பெருமை ஏற்பட்டது. மகசூல் போட்டிக்கென்று இல்லாமல் மற்ற வயல்களையும் இந்தச் சீரிய முறையில் பயிரிட எனக்கு ஒரு தனி ஆர்வம் பிறந்தது. இந்தப் பரிசுப் போட்டியில் எனக்கு முழு வெற்றி கிடைக்க வழி செய்த வேளாண்மைத் துறையில் இருக்கும் கரும்பிற்கான அலுவலர்களுக்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் என்னைப் போல் உள்ள சக உழவர்களும் இந்த முறைகளைப் பின்பற்றி அதிக மகசூல் பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நிழல்

பட்டுக்கோட்டை குமாரவேல்

இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி மரகதத்தம்மாளுக்குக் காலை வணக்கம் சொல்லிவிட்டுப் பேச ஆரம்பித்தார்.

''என்ன இன்ஸ்பெக்டர் சார். உங்க விசாரணையிலே ஏதாவது துப்புக் கிடைச்சுதா? விநாயகம் இறந்தது கொலையா? தற்கொலையா?'' என்று கேட்டாள் மரகதத்தம்மாள்.

''விசாரணையில் இதுவரை சரியான தகவல் கிடைக்கல்லே.... ஆனு''

''என்ன சொல்லுங்க......உங்களுக்கு என்னோட உதவி தேவைன்னு கட்டாயம் செய்றேன். தயங்காமல் சொல்லுங்க'' மரகதத்தம்மாள் உற்சாகத்தோடு கேட்டாள்.

''எனக்கு உங்களோட நல்ல நட்பு கிடைச்சதே பெரிய உதவி தான்'' இன்ஸ்பெக்டர் பதில் சொன்னார்.

அதை ஏற்றுக் கொள்வது போல் மரகதத்தம்மாள் மகிழ்ச்சியோடு 'கலகல' வென்று சிரித்தார்.

''நானும் உங்களை மறக்கமாட்டேன் இன்ஸ்பெக்டர் சார். நீங்க விரும்பும்போது என்னாலான உதவியைச் செய்யக் காத்துக்கிட்டிருக்கேன்.''

''மிக்க நன்றியம்மா. நான் இன்றைக்கி ஊருக்குப் புறப்படறேன்.''

''நன்றி. போய் வாங்க'' விடை கொடுத்தாள் மரகதத்தம்மாள்.



இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி போலீஸ் ஜீப்பில் ஏறினார். விநாயகம் கொலை வழக்கில் விசாரிக்கப்பட்ட குற்றவாளிகளில் மரகதத்தம்மாளின் கணவர் மேகநாதனைத் தவிர மற்றவர்கள் அவரைப் பின் தொடர்ந்த போலீஸ் வேனில் இருந்தார்கள்.

பொழுது விடிந்து விட்டதால் கோவையிலிருந்து ஊட்டிக்கு வழக்கம் போல வரும் மரகதத்தம்மாளின் கணவர் மேகநாதனும் இன்ஸ்பெக்டர் புண்ணியகோடியை வழி அனுப்பி வைத்தார்.

மாதங்கள் ஓடின.

விநாயகம் கொலை வழக்கில் கைது செய்து வந்த எல்லாரையும் விடுதலை செய்துவிட்டுப் போலீசார் புலன் விசாரணையை மீண்டும் துவக்கினர்கள்.

குற்றவாளியைக் கண்டு பிடித்துத் தருவதாகக் குற்ற இலாகாவிலுள்ள குழு ஒன்று சப்-இன்ஸ்பெக்டர் ரவி தலைமையில் இன்ஸ்பெக்டர் புண்ணியகோடியின் முன்னால் வந்து நின்றது.

இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி அவர் சேகரித்த அந்த வழக்கின் குறிப்புகளைக் கொடுத்தார்.

மேகநாதனின் மனைவி மரகதத்தம்மாளின் உயர்ந்த குணத்தையும் நேர்மையையும் பாராட்டினர். ஏதாவது உதவி தேவைப்பட்டால் மரகதத்தம்மாள் நிச்சயமாக செய்து கொடுப்பாள் என்று அவளைப்பற்றி புகழ்ந்து பேசினர்.

சப்-இன்ஸ்பெக்டர் ரவியும் அவரது குழுவினரும் மிகக் கவனமாகக் கேட்டுக் கொண்டனர்.

பல நாட்கள் ஓடின.

மேகநாதன் பங்களாவில் ஒரு வரவேற்பு மீண்டும் நடந்தது. வடநாட்டு வணிகர் ஒருவர் தன்னுடைய மகனின் தேனிலவிற்காக மேகநாதன் பங்களாவைக்கேட்டு வாங்கி அலங்காரம் செய்திருந்தார்.

வரவேற்பு முடிந்து விருந்து நடந்து கொண்டிருந்தது. மரகதத்தம்மாள் அவர்களுக்கு உதவியாக ஓடி ஓடி வேலை செய்து கொண்டிருந்தாள். இரவு ஏன் வந்தது என்று பயந்து கொண்டிருந்த மேகநாதனை, ஏதோ வேலை கொடுத்துக் கோவைக்கு அனுப்பி வைத்தாள் மரகதம்.

இரவு ஆட்சி செய்யத் தொடங்கியது. விருந்து உண்டவர்கள் விடை பெற்றுக் கொண்டிருந்தார்கள். மணமக்களோடு வந்திருந்தவர்களில் பலர் அந்த பங்களாவின் அவுட் ஹவுஸில் தங்கியிருந்தார்கள். மரகதத்தம்மாள் அவர்களோடு அளவளாவிப் பேசிக் கொண்டிருந்தாள். மணமக்களோடு வந்திருந்த கிழவர் ஒருவர் மட்டும் ஓயாமல் இருமிக் கொண்டேயிருந்தார். இருமலுக்கு மருந்து கொண்டு வருவதாக மரகதத்தம்மாள் தன் பங்களாவிற்குப் போனாள்.

சில விநாடிகளில் மருந்தோடு திரும்பி வந்த மரகதத்தம்மாள் ஆச்சர்யப்பட்டாள். திகைத்து நின்றாள். சற்றுமுன் அங்கே நின்று கொண்டிருந்த முதியவரைக் காணவில்லை. கிழவர் எங்கே என்று மரகதம் கேட்பதற்குள் அங்கிருந்தவர்களே பதில் சொன்னார்கள்.

''ஊட்டியில் பனி அதிகமில்லையா...அதனாலே அவருக்கு இருமல் அதிகமாகப் போச்சு. ஊசி போட்டால்தான் அது நிற்கும்னு கார்லே அவரைக் கோவைக்கு அனுப்பிவிட்டோம்.

''அவர் உங்களுக்கு உறவினரா? பெண்ணுக்கு உறவா? பையனுக்கு உறவா?'' மரகதத்தம்மாள் அங்கிருந்தவர்களிடம் கேட்டாள்.

''யாருக்கு உறவினர் என்று எங்களுக்குத் தெரியாது. வரவேற்பிற்கு வந்திருந்தவர் வியாதியால் அவதிப்படும்போது சும்மா இருக்க முடியுமா?'' என்றார்கள்.

மரகதத்தம்மாள் தான் கொண்டுவந்த மருந்தைக் கையில் வைத்துக் கொண்டே பேசிக் கொண்டிருந்தாள். உட்கார்ந்திருந்த திருமண கோஷ்டிக்கு உறக்கம் வந்துவிட்டதுபோல் கொட்டாவி விட்டார்கள். அவர்களை உறங்கச் சொல்லிவிட்டு மரகதத்தம்மாள் மீண்டும் பங்களாவுக்குள் போய் விட்டாள்.

இதயம் துடிப்பதுபோல் ஓடிக்கொண்டிருந்த கடிகாரம் பன்னிரண்டு முறை அடித்து ஓய்ந்ததும் திடீரென்று அந்த பங்களாவில் எரிந்து கொண்டிருந்த மின் விளக்குகள் அணைந்தன. எங்கும் இருள் சூழ்ந்து கொண்டது. இருளில் மூழ்கியிருந்த பங்களாவிற்குள் ஓர் உருவம் ஏறிக் குதித்து மணமக்கள் இருந்த அறைப் பக்கம் ஓடியது.

எதிர்பாராமல் இருளில் மூழ்கியிருந்த மணமகன் கதவைத் திறந்து வராண்டாவிற்கு வந்து காரணம் தெரிந்து கொள்ள வெளியில் எட்டிப் பார்த்தான். அப்போது அங்கு மறைந்திருந்த உருவம் அறைக்குள் மண்டியிட்டபடி புகுந்து கொண்டது. அந்த உருவம் யார்? எதற்காக நுழைந்தது? மின் விளக்கு அணைந்துவிட்ட காரணத்தைப் பார்க்க வராண்டாவிற்கு வந்த மணமகனோ, இருட்டுக்குப் பயந்து கண்ணை மூடிக் கட்டிலில் உட்கார்ந்திருந்த மணமகளோ அதைக் கவனிக்கவில்லை. வராண்டாவில் நின்ற மணமகன் அறைக்குள்ளே

வந்து கதவைத் தாழிட்டுக் கொண்டான்.

திடீரென்று மெல்லிய காற்று வீசியது. எங்கும் ஒருவித மயக்கும் மணம். அதைத் தொடர்ந்து மணமக்கள் இருக்கும் அறைப் பக்கம் யாரோ நடந்து வரும் ஓசை. ஓசை வரும் பக்கம் உற்றுக் கவனித்தால் முக்காடிட்ட உருவம். அக்கம் பக்கம் பார்த்துவிட்டு மணமக்கள் இருந்த அறைக் கதவில் கை வைத்தது. யந்திரக் கதவு திறந்து கொள்வது போல உள்தாழிட்டிருந்த கதவு திறந்து கொண்டது.

அறைக்குள் வந்துவிட்ட உருவம் நாகம் சீறுவது போலப் பெருமூச்சு விட்டது. கட்டிலில் படுத்திருந்த மணமகன் கண் விழித்துத் திரும்பினான். அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த மணமகளை அந்த உருவம் கட்டிப் பிடித்தது. மணமகள் மயங்கி விழுந்தாள். அந்த உருவத்திடமிருந்து மணமகளைக் காப்பாற்ற அதன்மீது மணமகன் பாய்ந்தான். போராடினான். இருட்டில் அசுர பலத்தோடு போராடும் அந்த உருவம் யார் என்று புரிந்து கொள்ள முடியவில்லை. அதனிடமிருந்து தப்பித்துக் கொள்ள உதவிக்கு ஆட்களை அழைக்க நினைத்தான். அவனால் பேச இயலவில்லை. மணமகனை இறுக்கப் பிடித்து அவன் கழுத்தை நெரிக்க முயற்சித்தது அந்த உருவம். மணமகன் மூச்சுத் திணறினான். மயங்கிய நிலையில் படுக்கையில் கிடந்த மணமகளை ஒருமுறை பார்த்துவிட்ட உருவம் மணமகனின் கழுத்தை நெரித்தது. மணமகன் உயிருக்கு மன்றாடும் நிலை.

கருப்பு முக்காடிட்ட அந்த உருவம் மணமக்கள் அறைக்குள் வருவதற்கு முன், மின் விளக்குகள் அணைந்ததும், மண்டியிட்டு அந்த அறைக்குள் ஒளிந்து நடப்பவைகளைப் பார்த்துக் கொண்டிருந்த உருவம் டார்ச் லைட்டை அடித்துக் கீழே வைத்துவிட்டுப் பாய்ந்தது. அந்த உருவம் வேறு யாருமல்ல. விநாயகம் கொலை வழக்கைக் கண்டுபிடிக்கத் தனிக் குழுவோடு வந்த சப் இன்ஸ்பெக்டர் ரவிதான். டார்ச்சின் வெளிச்சத்தில் முக்காடிட்டு மணமகனோடு போராடிக் கொண்டிருப்பது ஆண் அல்ல பெண் தான் என்று தெரிந்து திகைத்தார். அதிர்ச்சியடைந்தார். யார் இந்தப் பெண்? உருவ ஒற்றுமையில் மேகநாதனின் மனைவி மரகதமாக அவருக்குப்பட்டதால் அவர் நினைவுகள் அவருடைய பலத்தைக் குறைத்துவிட்டன.

உண்மையிலேயே அவள் மரகதம் தானா இல்லை அவள் உருக்கொண்ட வேறு பெண்ணா. தீர்மானமாகத் தெரிந்து கொள்ள அந்த உருவம். போட்டிருந்த முக்காட்டைப் பிடித்திழுத்தார். பலமிழந்திருந்த ரவியின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ள ரவியைப் பலமாகத் தாக்கியது அத்த உருவம். ரவி கீழே விழுந்தார். மரகதத்தைப் பற்றி இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி பெருமையாகச் சொன்னவைகள் மின்னலென அவர் நினைவுக்கு வந்து மறைந்தன. சந்தேக இருள் ரவியின் இதயத்தில் நிறைந்துவிட்டது. ரவி எழுந்து அந்தப் பெண்ணுருவத்தைப் பிடிப்பதற்குள் அந்தப் பெண்ணுருவம் அங்கிருந்து தப்பித்து ஓடிவிட

கடந்த ஆண்டு இதே பருவத்தில் கடும் வறட்சியைக்கண்ட செங்கற்பட்டு மாவட்டம் இப்போது வளங்கொழிக்கும் காட்சிகளுடன் காணப்படுகிறது. இவ்வாண்டு காஞ்சீபுரம் கோட்டத்தில் 1,95,065 ஏக்கர்களிலும், செங்கற்பட்டு கோட்டத்தில் 91,017 ஏக்கர்களிலும், திருவள்ளூர் கோட்டத்தில் 85,654 ஏக்கர்களிலும், சைதாப்பேட்டை கோட்டத்தில் 69,436 ஏக்கர்களிலும், சம்பா நெல் பயிரிடப்பட்டுள்ளது. மொத்தம் 4,41,172 ஏக்கர்களில் பயிரிடப்பட்டுள்ள சம்பா நெல்லில் மிகுவிளைச்சலை எதிர்பார்க்கலாம்.

இம்மாவட்டத்தில் உள்ள ஏரிகள் அத்தனையும் நிரம்பியுள்ளன. கடந்த 13 ஆண்டுகள் நிரம்பாததும், சுமார் 15,000 ஏக்கர்களுக்கு பாசனவசதியும் அளிக்கும் மிகப்பெரிய ஏரிகளில் ஒன்றான செம்பரம்பாக்கம் ஏரியும் நிரம்பி வழிகிறது. முன்னமேயே இந்த ஏரியை சுமார் 75 இலட்சம் ரூபாய் செலவில் அரசு தூர்வாரி ஆழப் படுத்தியுள்ளது.

புகழ்பெற்ற பறவைகள் புகலிடமான வேடந்தாங்கல் ஏரியில் பறவைகள் வரத் துவங்கிவிட்டன.

முயன்றது. கீழே விழுந்துவிட்ட ரவி அந்த உருவத்தின் கால்களைப் பிடித்துக் கொண்டார். அவர் பிடியிலிருந்து தன் கால்களை விடுவித்துக் கொள்ள அசுரபலத்தோடு போராடியது. ரவி பிடியை விடாமல் பிடித்துக் கொண்டார் என்றாலும் அவர் மீண்டும் அதிர்ச்சியடைந்தார். அவரிடமிருந்து தப்பிக்கப் போராட்டிக் கொண்டிருந்த அந்த உருவத்தின் கால்கள் ஆண்களின் கால்களாக உணர்ந்ததால் குழப்ப நிலையில் உதவிநாடி தன்னிடமுள்ள விசிலை ஒருகையில் எடுத்து ஊதினார் சப்-இன்ஸ்பெக்டர். ரவியின் சைகைக்காகக் காத்திருந்த காவலர்கள் ஓடி வந்தார்கள்.

திட்டமிட்டுப் போலீசார் வந்திருப்பதை உணர்ந்துவிட்ட அந்த உருவம் ரவியின் பிடியிலிருந்து தப்பி ஓடியது. ரவி எழுந்து பின் தொடர்ந்தார். அவர் உதவிக்காக இருட்டில் ஓடிவந்த காவலர்கள்திகைத்து நின்றார்கள். ரவி அவர்களிடமிருந்த டார்ச்சைப் பிடுங்கிப் பித்தானை அழுத்தித் தன்னிடமிருந்து அந்த உருவம் தப்பித்து ஓடுவதைக் காட்டிப் பிடிக்கச் சொன்னார். ரவியிடமிருந்து தப்பித்துக் கொண்ட அந்த உருவம் மரகதத்தம்மாளின் அந்த பங்களா அறைக்குள் ஓடித் தாழிட்டுக் கொண்டதும், திடீரென்று மின் விளக்குகள் எரிந்தன.

ரவியின் கூப்பிட்ட குரலுக்குத் துணையாக வந்திருந்த இரு காவலர்களிடம் அறையில் மயங்கிக் கிடந்த மணமக்களை மருத்துவமனைக்குக் காரில் உடனே எடுத்துப் போகச் சொல்லிவிட்டுத் தன்னிடமிருந்து தப்பித்து அறைக்குள் தாழிட்டுக் கொண்ட உருவத்தைக் கையோடு பிடிக்க முற்றுகையிட்டார் ரவி. அவர் உதவிக்கு வந்திருந்த மற்றக் காவலர்கள் பங்களாவைச் சுற்றித் துப்பாக்கியோடு நின்றார்கள்.

'குடும்பப் பெண்ணாக, குலக்கொடியாக, அன்புப் பேழையாக, உழைப்போரை ஆதரிக்கும் உத்தமப் பெண்ணாக இருந்த மரகதம் தானா அந்த உருவம்? மரகதம் ஏன் இந்தக் கொலையைச் செய்ய வேண்டும்? இதற்கு முன் இதே பங்களாவிற்கு முதல் இரவுக்காக வந்த இளம் தம்பதிகள் பிணமானார்கள் என்று இன்ஸ்பெக்டர் புண்ணியகோடியிடம் மாரிசாமி சொன்ன கொலைகளை இந்த மரகதம்தானா செய்திருக்கிறாள்! மணமக்களிடமுள்ள பொன்னை விரும்பாமல் பொருளை விரும்பாமல், இளமை பூரித்து இன்பம் அனுபவிக்கத் துடிக்கும் இளைஞர்களை ஏன் கொல்ல வேண்டும்? மரகதம் செய்யும் கொலைக்கும் மேகநாதனுக்கும் சம்பந்தமுண்டா? இல்லையா?

சப்-இன்ஸ்பெக்டர் ரவியின் சிந்தனையில் இந்த நினைவுகள் மின்னலெனத் தோன்றி மறைந்தன.

மரகதம் அலங்கோலமாக ஓடி ஒளிந்த அறைக் கதவை ரவி படபடவென்று தட்டினார்.

கையில் துப்பாக்கியோடு துணையாக வந்திருந்த காவலர்கள் பங்களாவைச் சுற்றிக் கொண்டிருந்தார்கள். மின் விளக்குகள் அந்த பங்களாவைச் சுற்றிப் பகலைப் போல எரிந்து கொண்டிருந்தன.

''மரகதம் வெளியே வந்துவிடு. வர மறுத்தால் கதவை உடைத்துக் கைது செய்வோம். தப்பிக்கப் பார்த்தால் என் கைத் துப்பாக்கி உன் உயிரைக் குடித்துவிடும். திற கதவை'' என்று கர்ஜித்தார், சப்-இன்ஸ்பெக்டர்ரவி.

படீரென்று அவர் எதிர்பாராத வேறொரு கதவு திறந்தது. ரவி துப்பாக்கியோடு வேகமாகத் திரும்பினார். அதிர்ச்சியடைந்தார். அவர் பின்னே திறந்த

தமிழ் வளரத் தொண்டாற்றும் "தமிழரசு"

எல்லா அரசுகளும் தங்கள் சாதனைகளை விளக்கும் பத்திரிகைகளை நடத்துகின்றன. எனினும், அவற்றுள் எதையும் பொதுமக்கள் விரும்பிப் படிப்பதில்லை. தமிழக அரசு நடத்தும் 'தமிழரசு' ஒன்று மட்டும் பொதுமக்களிடமும் விற்பனையாகும் பத்திரிகையாக உள்ளது. அது தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் தொண்டு செய்து வருகிறது.

தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளிலும் வெளியிடப்பெற்ற 'பாக்கியலட்சுமி', 'சௌபாக்கியம்' 'மேழிச்செல்வம்', 'இன்காம்', 'ஆரோக்கிய மார்க்கம்', 'மெட்ராஸ் ஹெல்த் எஜுகேஷன்', 'சீரணி' (கிராமநலம்) ஆகிய 7 பத்திரிகைகளையும் ஒருங்கிணைத்து 1-7-1970-ல் தமிழ்நாடு அரசு, 'தமிழரசு' என்னும் பெயரில் திங்கள் இருமுறை இதழ் ஒன்றை நிறுவியது. 'தமிழரசு' இதழில் 'வெண்பாப் போட்டி' துவக்கப்பெற்று, தமிழ்க் கவிஞர்களுக்கு ஊக்கமும் கவிதைத்துறை வளர நல்லதொரு சூழ்நிலையும் உருவாகியுள்ளது. இதுவரை 67 வெண்பாப் போட்டிகள் நடைபெற்றுள்ளன. முதலமைச்சர் கலைஞர், இவ்விதழில் எழுதிய 'இனியவை இருபது' என்ற பயணக்கட்டுரைத் தொடர், நூல் வடிவில் வெளிவந்துள்ளது.

—''தமிழ் இதழ்கள்''
ஆசிரியர்: சோமலெ.
சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு.
(பக்கம்: 81, 82)

மறவாதீர்கள்:

உங்கள் மகள் ஒருநாள்

மணமகளாக அமர வேண்டியவள்!

திருமணம் என்ருலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்ருல்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கிஞல் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்ருேம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

	மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது	10 ஆண்டு இறுதியில் கிடைப்பது
	ரூ.	ரூ.	ரூ.
ரெக்கரிங் டிபாசிட்	5/-	375/-	...
	10/-	750/-	...
வளரும் மாதச் சேமிப்பு	5/-	...	825/-
	10/-	...	1,650/-

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002

கதவின் முன்னே நின்றது மரகததம்தான். வரவேற்பின்போது பார்த்த அலங்காரத்தோடு மரகதம் வந்து நின்ருள். ஆச்சர்யமும் அதிர்ச்சியும் ரவியின் மூளையைக் குழப்பின. அவர் பிடியிலிருந்து தப்பி அவர் கண்ணெதிரிலே அறைக்குள் நுழைந்த உருவமா இந்த மரகதம்?

அந்த அறைக்குள் ஒளிந்த அடுத்த சில நொடிகளில் மேடை நடிகன்கூட இப்படி வேறு உடை உடுத்தியிருக்க முடியாதே! மேகநாதனின் மனேவி மரகதம் யார். இவள் அவள் சாயலா? இல்லே அவள் இவள் உருவமா? யார் உண்மையான மரகதம்? யார் மேகநாதனின் மனேவி? சப்-இன்ஸ்பெக்டர் ரவி நிலே தடுமாறி நின்ருர்.

தண்ணீரைக் கண்டு திகைத்துத் தாண்டி ஓடும் குதிரைபோல அவர் சிந்தனேக் குதிரை அவர் எதிரே களங்கமற்ற முகத்தோடு எதிர்பாராமல் வந்து நின்ற மரகதத்தைப் பார்த்ததும் திகைத்து மறுபடியும் ஓடியது.

''நீங்க யாரு எதற்காக என்னே அவ்வளவு அவசரமா அதிகாரத்தோட கூப்பிட்டிங்க. கையிலே துப்பாக்கி, கர்ஜனேக்குரல் இதெல்லாம் ஏன்?''

முகத்தில் ஏமாற்றமும் திகைப்பும் தேங்கியபடி நின்ருர் ரவி. அவரிடமிருந்து தப்பி அறைக்குள் ஓடித் தாழிட்டுக் கொண்ட உருவத்தைச் சுடத் தயாராக வைத்திருந்த துப்பாக்கி தாஞகவே அவர் இடுப்பில் தொங்கிக் கொண்டிருந்த தோல் பெல்ட்டுக்குள் நுழைந்து கொண்டது.

''திருமணத்திற்கு வந்தவர்களில் யாராவது குற்றம் செய்து இங்கு வந்து மறைந்து கொண்டார்களா என்ன?'' மரகதத்தம்மாள் சப்-இன்ஸ்பெக்டர் ரவியைக் கேட்டார்.

காவலர் கண்களில் அகப்பட்டுத் தவிக்கும் தப்பி ஓடிய கைதி போல மரகதத்தின் கண்களில் அகப்பட்டுத் தவித்தார் ரவி. வேங்கை துரத்தி வந்த மான் மாயமாஞக வேங்கை முன் வந்து நிற்பதைப் போல மரகதம் அவர் முன்னே வந்து நின்ருள். தன் பசி தீர்த்துக் கொள்ள மானேத் துரத்தி வந்த வேங்கையின் கோபம் ரவியின் கண்களிலிருந்தது. அவர் ஆதரவுக்காக அவர் ஆணேயிட்டு அழைத்த காவலர்கள் சப்இன்ஸ்பெக்டரிடமிருந்து தப்பி ஓடிய உருவத்தைக் காணுமல் வந்து நின்ருர்கள்.

இந்தியாவிலுள்ள ஆடு, மாடு முதலிய கால்நடைகளின் அளவு உலகில் உள்ள கால்நடைகளின் மொத்த எண்ணிக்கையில் ஒரு கணிசமான பகுதியாகும். எனினும் இறைச்சி, பால், கம்பளி மயிர் முதலானவைகளின் உற்பத்தியில் இந்தியா மிகவும் பின்தங்கி நிற்கிறது.

ஆடுகளே மட்டும் எடுத்துக் கொண்டால் உலகில் அவை மொத்தம் சுமார் 600 கோடி இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் 42 கோடி ஆடுகள் இந்தியாவில் உள்ளன.

''எதற்காகக் காவலர்கள் இத்தனேபேர் இங்கு வந்து நிற்கிருர்கள்? நீங்கள் யார்?''

''என் பெயர் ரவி. கோவை புலனாய்வுத் துறையில் சப்-இன்ஸ்பெக்டராகப் பணியாற்றுகிறேன். இன்று இங்கு வரவேற்பு நடந்து முதல் இரவுக்காக அறைக்குள் மகிழ்ந்திருக்க வேண்டிய மணமக்களேக் கொல்ல முயன்ற பெண் என்னிடமிருந்து தப்பி இந்த அறைக்குள் நுழைந்து தாழிட்டுக் கொண்டாள். தாழிட்டுக் கொண்ட அந்த உருவம் உங்கள் உருவத்தைப் போல இருந்ததால் தங்களேக் கண்டதும் திகைக்கிறேன். உண்மையைத் தெரிந்து கொள்ள முடியாமல் திணறுகிறேன். உடனடியாக அந்த உருவத்தைக் கைது செய்யவேண்டும்'' என்று உணர்ச்சி வயப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர் ரவியின் குரலில் அதிகாரமிருந்தது.

''உங்கள் மணமக்களேக்கொலே செய்ய முயன்ற உருவம் பெண்ணு அதுவும் எங்கள் பங்களாவில் மறைந்து கொண்ட அவள் என் உருவம் கொண்டவளா?'' என்று மரகதம் கேட்டுக் கொண்டிருந்தாள். அப்போது அசட்டுச் சிரிப்போடு வயதான ஒரு வேலேயாள் (மாரிசாமி) மரகதத்தின் பின்ஞல் நின்ருன்.

மரகதத்தம்மாளின் எதிரே நின்று கொண்டிருந்த ரவி இருவரையும் உற்றுப் பார்த்தார்.

''என்ன பார்க்கிறீர்கள்? டேய் இந்த அறையை அவர்களுக்குத் திறந்து விடு! கொலேக் குற்றவாளி யாரோ இந்த அறைக்குள் மறைந்து கொண்டாளாம்!'' என அதிகாரத்தோடு மாரிசாமிக்கு ஆணேயிட்டாள் மரகதம்.

மாரிசாமி அவன் இடுப்பிலிருந்து சாவிக்கொத்தில் ஒரு சாவியை எடுத்து சப்-இன்ஸ்பெக்டர் ரவியிடம் கொடுத்தான்.

'ரவி துரத்தி வந்த அந்த உருவம் உள் தாழிட்டுக் கொண்டிருக்கும் போது அந்தச் சாவியால் எப்படி வெளியிலிருந்து திறக்க முடியும்? வெளியிலிருந்து திறக்கவும் உள்ளேயிருந்துபூட்டிக் கொள்ளவும் தகுதியுடைய பூட்டாக இருந்தால் குற்றவாளி நிச்சயமாக இந்த வீட்டிற்குள்ளாகத்தான் இருக்க வேண்டும் என்று தன் மனத்திற்குள் தீர்மானித்தபடி தன் எக்ஸ்ரே கண்களால் மாரிசாமியை உற்றுக் கவனித்தார். அவனிடமிருந்து அவருடைய கை சாவியை வாங்கிக் கொண்டிருந்தது.

''உங்களிடம் சாவியைக் கொடுக்கும் இவன் யார் என்று தானே நினேக்கிறீர்கள்? இவன் எங்கள் குடும்ப வேலேயாள். என்னேத் தூக்கி வளர்த்தவன். பெயர் மாரிசாமி. நரைத்த முடியோடு வாலிபரைப் போலத் தோற்றமுள்ள இவனுக்கு வயது அறுபது. நெற்றிச் சுறுக்கங்களும், நரைத்த புருவமும், கூர்ந்து பார்க்கும் கழுகுக் கண்களும் இவன் வயதைக் காட்டிக் கொடுக்கவில்லேயா என்ன?''

மாரிசாமி என்ற பெயரைக் கேட்டதும் இன்ஸ்பெக்டர் புண்ணியகோடியிடம் அவன் சொன்ன தகவல்கள் ரவியின் நினேவுக்கு வந்தன. அந்த மாரிசாமிதாஞ இவன்? அந்த நினேவலேகளோடு மாரிசாமி கொடுத்த சாவியைத் தன்னுடன் வந்திருந்த காவலர் ஒருவரிடம் கொடுத்துக் கதவைத் திறக்கச் சொன்ஞர். இரண்டு காவலர்கள் அறைக்குள்ளே இருக்கும் குற்றவாளி அவர்களிடமிருந்து தப்பிக்க முயன்ருல் சுடத் தயாராக நின்று கொண்டிருந்தார்கள். சாவியை வைத்திருந்த காவலர் இடது கையில் கைத்துப்பாக்கியைப் பிடித்தபடி வலது கையிஞல் கதவைத் திறந்தார்.

அப்பொழுது—

அங்கே...

(தொடரும்)

இறைவன் தரும் பாராட்டு — ஏழை எளியோர் — ஊனமுற்றோர்கம் வாழ்த்தே!

சென்னை சிறுமலர் இல்லம் செவிடர்-அந்தகர் பள்ளி பொன் விழா ஆண்டு முகாம்களின் தொடக்க விழா ஒரு உணர்ச்சி மிகுந்த விழா; நம்முடைய உள்ளங்களையெல்லாம் உருக வைக்கும் விழா; இந்த விழாவில் கலந்து கொள்வதை நான் எனக்குக் கிடைத்த பெரும் பேறு என்று கருதினாலும்-கேட்கின்ற பேறும், பார்க்கின்ற பேறும் பெறாத குழந்தைகளைக் காணும் நேரத்தில் உள்ளபடியே தாங்கொணாத வேதனை நம்முடைய நெஞ்சத்தைக் கப்பிக் கொள்கிறது. எனினும் அவர்களை வாழவைக்கும் முயற்சியில் நாமெல்லாம் ஈடுபட்டிருக்கிறோம் என்பதை எண்ணி ஆறுதல் பெறவும் நம்மால் முடிகிறது.

இந்த நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இவர்களுக்கான முகாம்கள் நடத்தப் போவது கேட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். இன்று நமக்கு முன்னால் உள்ள ஒரு குறிப்பிட்ட தொகையினரோ அல்லது இதுபோன்ற அற உள்ளம் கொண்டவர்கள் நடத்துகின்ற நிறுவனங்களில் இருந்து புதுவாழ்வைப் பெற்றுக் கொண்டு இருக்கும் தொகையினரோ அல்லது தமிழ்நாட்டு அரசாங்கத்தின் சார்பில் நல்வாழ்வு பெறுவதற்காக ஆங்காங்கு பல்வேறு இடங்களில் ஈடுபடுத்தப்பட்டு உள்ள தொகையினரோ மாத்திரம் பாதிக்கப்பட்ட சூழலிலே இல்லை. இவர்களை எல்லாம் விட பெரும் பகுதியினர் இன்னும் கவனிக்கப்படாத சூழலில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கவனிக்கப்படாத சூழலில் பல்லாயிரக்கணக்கிலே இருக்கிறார்கள்; அவர்களுக்கெல்லாம் நம்மால் உதவி செய்ய முடியுமா என்று பெருமூச்சுவிட்டு நின்று விடுவோமேயானால், எதையும் செய்ய முடியாதவர்களாக ஆகி விடுவோம். ஆகவேதான் ஒவ்வொருவரும் தங்களால் முடிந்ததைச் செய்வோம் என்கிற முயற்சியில் ஈடுபட வேண்டும். இல்லாவிட்டால் இப்போது கவனிக்கப்படுகின்ற பகுதியினரும் கவனிக்கப்பட முடியாத இன்னலுக்கு ஆளாக நேரிடும். ஆகவேதான், சிறுக சிறுக ஆனால் எதிர்காலத்திலே முழுமையாக நிறைவேற்றி வைக்க முடியும் என்கிற நம்பிக்கையோடு சில திட்டங்களை இன்றைக்கு நாம் தொடங்கியிருக்கிறோம்.

1967-ஆம் ஆண்டு நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்ட காலத்திலிருந்து இதுவரையில் யார் யார் சமுதாயத்திலே அடித்தளத்திலே வீழ்ந்து கிடக்கிறார்களோ, யார் யார் சமுதாயத்திற்குப் பயன்பட மாட்டார்கள் என்று புறக்கணிக்கப்பட்டு இருக்கிறார்களோ, யார் யாருக்கு வாழ்வே கிடையாது என்று காலத்தினால் சபிக்கப்பட்டார்களோ அவர்களுக்கெல்லாம் புது வாழ்வு அளிப்பது என்று சபதம் எடுத்துக்கொண்டு அதனை முடிந்த வரையில் செய்து வருகிறோம்.

இந்த நிகழ்ச்சியின் தொடக்கத்தில் கண்ணற்ற பெண்கள் பாடவும், கேட்கின்ற ஆற்றலற்ற இரண்டு அரும்புகள் ஆடவும், அவர்கள் எனக்கு மாலை அணிவிக்கவுமான நிகழ்ச்சி ஒரு புறத்தில் மகிழ்ச்சியை அளித்ததென்றாலும் எவ்வளவு பெரிய துன்பச் சுமையை என்னுடைய உள்ளத்தில் அது ஏற்றி வைத்தது என்பதை நீங்கள் எல்லாம் நன்கு உணர்வீர்கள் என்றே நான் நம்புகின்றேன்.

புறக்கணிக்கப்பட்டவர்களுக்காக - தாழ்த்தப்பட்டவர்களுக்காக-சமுதாயத்திலே எங்கேயோ ஒரு மூலையில் அழுத்தப்பட்டவர்களுக்காக-பணி ஆற்றுவதுதான் மனிதனின் தலையாய கடமையாக இருந்திட வேண்டும். இல்லாவிட்டால், மற்றவர்கள் இழிவுபடுத்தப்படும் நேரத்தில் அவர்கள்தானே இழிவுபடுத்தப்படுகிறார்கள். நமக்கென்ன என்று எந்த மனிதன் நினைத்தாலும், உண்மையிலேயே அவனை அறியாமல் அவனும் இழிவுப்படுத்தப்படுகிறான்.

சமுதாயத்திலே எல்லோருமே அங்கம் தான்; சமுதாயத்திலே பிச்சைக்காரர்கள் - கண்ணற்றவர்கள் - தொழுநோயாளிகள் செவிப் புலனற்றவர்கள் - விதவைகள் - ஆதரவற்ற இளஞ்சிறார்கள்-என்றெல்லாம் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களை எல்லாம் தேடிப்பிடித்து அவர்களுக்கு நல்வாழ்வு அளிப்பது என்று ஒரு அரசு விரும்பினாலும் அல்லது யார் விரும்பினாலும் அவர்களுக்குப் பெரிய வரவேற்போ செல்வாக்கோ காத்துக் கொண்டிராது என்பதை நான் மிக நன்றாக உணர்வேன். ஒரு அரசோ அல்லது நல்ல உள்ளம் வாய்ந்த ஒரு நிறுவனத்தைச் சேர்ந்தவர்களோ செல்வாக்குப் பெற வேண்டுமேயானால், அவர்கள் நாட்டிலேயிருக்கிற செல்வச் சீமான்களோடு கூடிக் குலாவி அவர்களுக்குத் தேவையானவைகளைச் செய்து கொடுத்தால் அப்படிப்பட்ட செல்வச் சீமான்கள் சந்திக்கும் இடங்களில் அவர்கள்கூட களியாட்டங்களில், ஈடுபடுகின்ற இடங்களில், அவர்களுக்கு விருப்பமான விருந்துகளில், அவர்கள் உட்கார்ந்து உரையாடும் நேரத்தில் இந்த அரசாங்கத்தைப்போல உண்டா? அல்லது இந்த நிறுவனத்தைப் போல உண்டா? என்றெல்லாம் பேசிக் கொண்டிருப்பார்கள். ஆனால் அந்தப் பாராட்டு யாரிடமிருந்து கிடைக்கின்ற பாராட்டு என்றால், பணம் படைத்தவர்களிடமிருந்து கிடைக்கிறபாராட்டு— உல்லாசத்தை அனுபவிக்க வேண்டும் என்று கருதுகிற சமுதாயத்திலே மிகச்சிறிய பிரிவினரிடமிருந்து கிடைக்கிற பாராட்டு— இவைகள் எல்லாம் மனிதர்களிடமிருந்து கிடைக்கிற பாராட்டு என்று கூட கருத முடியாது. மனிதர்களில் தாழ்ந்தவர்களிடமிருந்து கிடைக்கின்ற பாராட்டு என்றுதான் அதனைக் கருதமுடியும்.

அதே நேரத்தில் ஏழையெளியவர்கள், ஊனமுற்றவர்கள், தெருவோரத்தில் இருக்கிற பிச்சைக்காரர்கள் இந்த அரசாங்கத்தை வாழ்த்துகிறார்கள் என்றால், அது உண்மையிலேயே ஆண்டவனிடமிருந்து கிடைக்கின்ற பாராட்டு என்று நாங்கள் எண்ணிக்கொள்வோம். அதைத்தான் நானும் சரி, என் தலைமையில் இயங்குகின்ற இந்த அரசும் சரி, இந்த அரசால் ஆதரிக்கப்படுகிற இப்படிப்பட்ட நிறுவனங்களும் சரி, விரும்பும்.

அரசாங்கத்தின் சார்பில் செய்யப்படுகின்ற இப்படிப்பட்ட காரியங்கள் கடந்த இரண்டு மூன்று ஆண்டுக் காலமாகத்தான் விரிவான வகையில் ஊனமுற்ற மக்களுக்காகச் செய்யப்படுகின்றது. அதற்கு முன்பு ஊனமுற்றவர்களைப் பற்றி யாரும் சிந்திக்கவில்லையா என்றால் நான் இல்லை என்று சொல்ல மாட்டேன். சிந்தித்தார்கள். ஆனால் பரந்த அளவில் அவர்களுக்குக் காரியங்களைச் செய்ய வேண்டும் என்கிற முயற்சி ஒரு அரசின் சார்பில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அரசின் சார்பில் செய்யப்பட்டதெல்லாம் இப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு ஓரளவு மானியத் தொகை வழங்குதல்; அல்லது இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு அழைத்தால் வந்து கலந்துகொள்ளுதல்; கோரிக்கை நிறைவேற்றுவதாக வாக்களித்தல், இவைகள் தான் பழைய காலத்தில் அரசாங்கத்தின் சார்பில் ஊனமுற்றவர்களுக்காகச் செய்யப்பட்ட காரியங்களாக இருந்தன. இன்றைக்கு இதுபோன்ற மானியத் தொகை அளித்தல், கோரிக்கைகளைக் கேட்டல் என்பதோடு மாத்திரமல்லாமல், இப்படிப்பட்ட நிறுவனங்களிலே இருக்கிற நல்லவர்கள் கொண்டிருக்கும் அதே உணர்ச்சியை அரசாங்கத்தில் இருக்கிற நாங்களும் பெற்று இவர்களுக்காகப் பாடுபடுவதில் பங்கேற்றிருக்கிறோம்.

ஐந்தாறு ஆண்டுக் காலமாக இந்த அரசு தொடங்கி நிறைவேற்றி வருகின்ற காரியங்களை எல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். முதல் திட்டமாக நாங்கள் தொடங்கிய திட்டமே கூட தொழுநோய்ப் பிச்சைக்

முதல்வர் கலைஞர்

காரர்களுடைய மறுவாழ்வு இல்லங்களைக் கட்டும் திட்டம்தான்; தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் முக்கிய பகுதிகளில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்காகக் கட்டப்பட்டிருக்கும் இல்லங்களைப் பார்த்தால், அது ஏதோ பட்டதாரி மாணவர்களுடைய விடுதிபோல் தோற்றமளிப்பதை அறிந்து கொள்ளலாம். அந்த இல்லங்களில் அவர்களை வாழ வைப்பதற்காக, அவர்களுக்குத் தொழில்களைக் கற்றுக்கொடுக்க, உடல் நோயை முடிந்தவரையில் குணப்படுத்த எல்லா முனைப்பான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு அந்த சாதனை இன்றைக்குத்தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஊனமுற்றவர்களுக்குள்ள சங்கடம், ஊனமுற்றது மாத்திரமல்லாமல் சில நேரங்களில் மானமற்றும் வாழ வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. கைகால்கள் நன்ருக இருந்தால்தான், ஊனமில்லாமல் இருந்தால்தான், கண்ணெளி இருந்தால்தான், மற்றவர்களுடைய ஏளனத்திற்கு ஆளாகாமல் இருக்க முடியும். இல்லாவிட்டால் மற்றவர்களுடைய ஏளனத்திற்கும் ஆளாக வேண்டியிருக்கிறது. எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமேயானுல் ஒரு கிராமத்தில் இருக்கிற ஒரு வயதான தாய்-தன்னுடைய வாலிப வயதில் ஓடி உழைத்தவள், வயதாகி கண்ணெளி மங்கியிருக்கிற நேரத்தில், மருமகளை அழைத்து கொஞ்சம் தண்ணீர் கொண்டுவா என்று கேட்கிற நேரத்தில் கொண்டு வருவதாகச் சொல்லிவர்த் தாமதமாக, இவ்வளவு நேரம் என்ன செய்தாய்? தொண்டை அடைக்கிறதே என்று கிழவி கேட்கிற நேரத்தில் கிழட்டுப் பிணத்திற்கு வேறு வேலை கிடையாது என்று மருமகள் சொல்கிற நேரத்தில் அந்தத் தாய் யாரையும் சபிப்பது இல்லை; ஆண்டவனைத்தான் 'பாவி ஆண்டவனே, இப்படி பார்வையில்லாமல் செய்துவிட்டாயே' என்று மனம் குமுறி ஆண்டவனைச் சபிப்பதைப் பார்த்திருக்கிரும். இன்னும் கண் பார்வையில்லாத காரணத்தால், கால் இல்லாத காரணத்தால் தடுமாறி தெருவில் நடக்கிற ஒருவன் இடறி விழுகின்ற நேரத்தில் 'ஐயோ, கடவுளே, நான் உனக்கு என்ன செய்தேன்? பாவி கடவுளே' என்று ஆண்டவனைத்தான் சபிக்கிருன். ஊனமுற்றிருக்கிற ஒவ்வொருவரும் தங்களால் ஒரு காரியம் செய்ய முடியாமல் கஷ்டப்படுகிற நேரத்தில் எல்லாம் ஆண்டவனைத்தான் சபிக்கிருர்கள். அவர்களுடைய சாபங்களிலிருந்து ஆண்டவனைக் காப்பாற்றத்தான் ஊனமுற்றவர்களுக்கெல்லாம் உதவி செய்யும் முயற்சியில் நாம் ஈடுபட்டு, பணியாற்றி வருகிறோம். ஆகவே உண்மையிலேயே ஆண்டவன் என்று ஒருவன் இருந்தால், நீங்கள் எல்லாம் சேர்ந்து என்னைக் காப்பாற்றுகிறீர்களே என்று நம்மை வாழ்த்திக் கொண்டிருப்பான் என்பதில் சந்தேகம் கிடையாது.

சிறுமலர் செவிடர் அந்தகர் பள்ளி பொன்விழா ஆண்டு முகாமை 17-12-'75 அன்று தொடங்கிவைத்து முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.

தமிழக அரசைப் பொறுத்த வரையில் இதுபோன்ற தனியார் நிறுவனங்களின் முயற்சிகளுக்கு உதவியளிக்க ஓரளவு தொகையை ஒதுக்கி தக்க வழிகளில் அதனைச் செலவழித்துக்கொண்டிருக்கிறது. அரசின் சார்பில் செய்யப்படுகின்ற இதுபோன்ற காரியங்களுக்கு இப்படிப்பட்ட நிறுவனங்களை நடத்துகின்றவர்களுடைய நல்ல ஆலோசனைகள் நிரம்பத் தேவை.

இந்த ஆண்டில்கூட 52-க்கு மேற்பட்ட இடங்களில் கருணை இல்லங்கள் என்ற பெயரால் தாய் தந்தையற்ற அனுதை சிறுவர்கள்-அனுதை என்று அழைக்கப்படக்கூடாது என்பதற்காக அவர்களுக்கெல்லாம் கல்வி வசதியும், உணவு வசதியும் இலவசமாக இன்று அளிக்கப்படுகிறது. அதற்கு அரசின் சார்பில் ஒரு தொகையும், ஆலயங்களின் நிதியிலிருந்து ஒரு தொகையும் ஒதுக்கப்படுகிறது. இப்படி பல்வேறு வகையிலும் இந்த நாட்டில் இருக்கிற இயலாதவர்களுக்கு உதவி புரிகிறோம். இந்த அருந்தொண்டை நான் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதின் மூலம் பெரும் சிறப்பாக ஆற்றுவதற்கான உற்சாகத்தை, உணர்ச்சியைப் பெறுகின்றேன்.

இங்கேயுள்ள சிறுர்கள் கண்ணற்றவர்களாக இருந்தாலும், யாரும் இதயமற்றவர்கள் அல்ல; இதயமற்றவர்கள் உயிரோடு வாழ முடியாது. ஆனுல் கண்ணற்றவர்கள், காலற்றவர்கள், ஊனமுற்றவர்கள் உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள். உயிரோடு வாழ்ந்து கொண்டு உதவி செய்யாமல் இருந்தால் அவர்களுக்கு இதயம் இருந்தாலும் இதயம் இல்லாதவர்களாகத் தான் கருதப்படுவார்கள். நமக்கெல்லாம் இதயம் இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டவாவது இப்படிப்பட்ட சிறுர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதற்கு இந்த அரசால் இயன்ற எல்லா விதமான உதவிகளையும் செய்யத் தயாராக இருக்கிறேன்.

(சென்ற இதழ் தொடர்ச்சி...)

இந்தத் தருணத்தில் உங்ளுக்கு இன்னெரு முக்கியமான செய்தியையும் கூற வேண்டும்.

அதாவது, நில அடி நீரைப் பயன்படுத்துவது என்று நாம் முடிவெடுக்கும் போதே, ஒரு கட்டுப்பாட்டுக்குள் அடங்கி அதனைச் செயல்படுத்தவேண்டும். ஏற்கனவே, நமது மூதாதையர்கள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு அதிகமான கிணறுகளை வெட்டி, வெறும் பெருமைக்காக நீரை வீணுக்கிஞர்கள். அதன் பலனை இன்று நாம் அனுபவிக்கிறோம். எனவே, நமது சந்ததியினர் நம்மை நினைத்துப் பெருமைப்படும் அளவுக்கு நாம் தற்சமயம் செயல்பட வேண்டும்.

அதற்கு,

1. குழாய்க் கிணறுகள் அமைக்கும் போதே போதிய இடைவெளிவிட்டு அமைத்திட வேண்டும்.

2. குறிப்பிட்ட நேரத்திற்குத் தேவைக்கு உரிய அளவு தண்ணீரை மட்டுமே பம்புகளைவைத்து இறைக்க வேண்டும்.

3. குழாய்க் கிணறுகளை அமைக்கும் போதே உரிய கவனத்துடன் பொறியியல் வல்லுநர்களின் ஆலோசனையுடன் அமைத்திட வேண்டும்.

4. கடற்கரையோரமாகக் குழாய்க் கிணறுகளை அமைத்து உப்பு நீர், குழாய்க் கிணற்றுக்குள் வருவதற்கு வாய்ப்பளிக்காமல் கடற்கரையிலிருந்து போதிய தூரம் தள்ளியே குழாய்க் கிணறு அமைத்தல் வேண்டும்.

மேற் கண்ட விதிமுறைகளைக் கடைப் பிடித்துக் குழாய்க் கிணறுகளை அமைத்து, நில அடிநீரை வெளிக்கொணர்ந்த பிறகு, நீரை மிகச் சிக்கனமாக, அதே நேரத்தில் விஞ்ஞான அடிப்படையில் பயன்படுத்திஞல், நமது விவசாய நிலங்களில் தற்போது கிடைப்பதை விட இருமடங்கு மகசூல் கிடைக்கும் என்பது நிச்சயம்.

பொதுவாகவே, அரசாங்க அலுவலர்கள் விவசாயிகளிடையே ஒரு புதிய திட்டத்தை, அல்லது ஒரு புதிய முறையை எடுத்துச் சொன்ஞல் அதை ஏனே உடனே ஏற்றுக் கொள்ள மறுக்கிருர்கள்! ஆனுல், இந்த நில அடிநீரைப் பயன்படுத்தும் திட்டத்தில் நீங்கள் ஒத்துழைத்தால், அது உங்களுக்குத்தான் நன்மை!

இனி தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் சிறுபாசனத் திட்டங்களைப் பற்றியும் கூறுகிறேன் கேளுங்கள்.

1. தனியார்க் குழாய்கிணறுத் திட்டம்.
2. கிணற்றினுள்ளே துளையிடும் திட்டம்.
3. கிணறுகளை ஆழப்படுத்தும் திட்டம்.
4. வடிமுனைக் குழாய்க் கிணறுகள் திட்டம்.

1. தனியார் குழாய்க் கிணறு திட்டம்:

இத்திட்டத்தின் கீழ்த் தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறையின் பொறியியல் பிரிவில் விவசாயிகளுக்குத் துளையிடும் கருவிகள் வாடகைக்கு விடப்படுகின்றன. கைத்துளைக்கருவிகளும், விசைத் துளைக்கருவிகளும் வாடகைக்கு அளிக்கப்படுகின்றன. குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு ஆகும் செலவினங்களுக்கு என்ன செய்வது என்று நீங்கள் கேட்கலாம். அதற்கும் நமது அரசு கருணையுடன் நிதி உதவிட கடன் அளிக்கிறது. ஆம், குழாய் கிணறு அமைக்கும் செலவினங்களுக்காகவும், இறைவை இயந்திரங்கள் வாங்குவதற்காகவும் நிலவள வங்கிகள் கடனுதவி செய்கின்றன.

இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து 1975-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய 23,411 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.— ஒரு குழாய்க் கிணறு வெற்றிகரமாக அமைக்கப்பட்டால், ஏறக்குறைய 20 ஏக்கர் நிலத்திற்குப் பாசன நீர் கிடைக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1974-75லிருந்து 1978-79-ம் ஆண்டுக்குள்) 1,200 குழாய்க்

கிணறுகள் அமைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

2. கிணற்றினுள்ளே துளையிடும் திட்டம் :

ஏற்கனவே உள்ள திறந்த கிணறுகளில் நீர் ஊற்றுக் குறைந்தாலோ அல்லது கிணறு வற்றிவிட்டாலோ, கிணற்றின் அடிமட்டத்தில் ஆழமான குழாய்க் கிணறுகளை இத்திட்டத்தின் கீழ் அமைக்கிறோம். வேளாண்மைத் துறயில் உள்ள ''லாங்ஹோல் எக்யுப்மென்ட்'' எனும் கருவி கொண்டு கிணற்றின் பக்கச் சுவர்களில் படுக்கை வசமாக சிறிய துளைகளையிட்டு ஊற்று வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும் முடியும். இந்தத் திட்டத்தில் பயன்பெற நினைக்கும் விவசாயிகளுக்கு நிலவள வங்கிகள் கடன் உதவி செய்கின்றன. 1966-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் துவக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ், மார்ச் 1975 வரை 7,851 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 4,000 குழாய்க் கிணறுகள் அமைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

3. கிணறுகளை ஆழப்படுத்தும் திட்டம்:

இந்தத் திட்டத்தின் கீழ், பாறைப் பாங்கான கிணறுகளை வெடி வைத்துத் தகர்த்து ஆழப் படுத்தப்படுகிறது. காற்றழுத்தக் கருவியின் உதவியால் இயங்கும் துளைக்கருவி ஒன்றினைப் பயன்படுத்தித் துளைகள் இட்டு அத்துளைகளில் வெடிமருந்து செலுத்தி வெடிக்கப்படுகிறது.

சேலம், தர்மபுரி, கோவை, மதுரை மாவட்டங்களில் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தவர்கள் ஏராளம். இத்திட்டத்தில் இருந்த ஒரு சிறு தடங்கலையும் இன்றைய அரசு நீக்கிவிட்டது. அதாவது, வெடிப்பதற்குப் பயன்படும் வெடிமருந்தை ஒவ்வொரு விவசாயியும் வாங்குவது சிரமமாக இருந்ததால், இந்தத் திட்டத்தின் முன்னேற்றம் தடைப்பட்டது. உடனே இன்றைய அரசு, வெடிமருந்துகளையும் வேளாண்மைத் துறை மூலமாகவே வழங்கிட ஆணைப் பிறப்பித்தது. இத்திட்டத்தில் 1973 மார்ச் வரை 10,636 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன.

4. வடிமுனைக் குழாய்க் கிணறுகள் திட்டம் :

மணற்பாங்கான, ஆற்றுப் படுகைகளில் 25 அடியிலிருந்து 40 அடி வரை ஆழமுள்ள குழாய்க் கிணறுகள் இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படுகின்றன. தஞ்சாவூர், தென்ஆற்காடு மாவட்டத்தின் ஒரு பகுதி, திருச்சி மாவட்டத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களில் இந்தத் திட்டத்திற்கு மிகச் சிறந்த வரவேற்புள்ளது. முதலாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்தே இந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது. ஆரம்ப காலத்திலிருந்து மார்ச் '75 வரை 29,299 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 10,000 வடிமுனைக்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட விருக்கின்றன.

நீங்கள் மேலேகண்ட இத்தனைத் திட்டங்களையும் செயல்படுத்த வேளாண்மைத் துறையினரிடம் எத்தனை கருவிகள் உள்ளன என்ற பட்டியலைப் பாருங்கள்! அந்தக் கருவிகளுக்குரிய வாடகை விபரமும் தரப்பட்டுள்ளன.

மாவட்ட வாரியாக ஒதுக்கப்பட்டுள்ள வேளாண்மைத் துறையின் கருவிகள்

மாவட்டம்	விசைத் துளைக் கருவி	ரோட்டரி விசைத் துளைக் கருவி	''ஹாமர்'' டிரில்	''வேகன்'' டிரில்	காலிக்ஸ் டிரில்	பாறை வெடிக் கருவி	லாங் ஹோல் எக்யுப் மெண்ட்	காற்ற முத்தக் கருவி	கைத்துளைக் கருவி
1. செங்கற்பட்டு ...	5	7	1	...	...	5	1	1	53
2. வட ஆற்காடு ...	5	...	...	...	...	13	2	...	14
3. தென் ஆற்காடு	8	7	...	...	2	14	...	4	122
4. தஞ்சை ...	...	17	1	...	2	7	...	3	155
5. திருச்சி ...	8	3	4	...	1	13	2	...	30
6. சேலம் ...	1	...	...	...	2	29	7	...	...
7. தர்மபுரி ...	...	...	1	1	...	13	3	...	3
8. கோயம்புத்தூர் ...	10	...	3	2	2	27	6	...	2
9. மதுரை ...	7	...	...	...	2	18	5	...	15
10. ராமனுதபுரம் ...	2	5	...	...	1	10	3	...	20
11. திருநெல்வேலி ...	6	...	1	...	5	11	2	...	40
12. புதுக்கோட்டை ...	...	13	...	...	...	2.	...	...	42
மொத்தம் ...	52	52	11	3	17	162	31	8	460

கருவிகளுக்கான வாடகை விவரம்

கருவியின் பெயர்	வேளாண்மைக்கு	இதர பணிகளுக்கு
1. விசைத் துளைக்கருவி: 107 மீட்டர் வரை	...ரூ. 118/- நாளொன்றுக்கு	ரூ. 70/- மித சக்தியுடையவைக்கு.
107 மீட்டரிலிருந்து 152 மீட்டர் வரை	ரூ. 20/- நாளொன்றுக்கு	ரூ. 80/- அதி சக்தி யுடையவைக்கு.
152 மீட்டருக்கு மேல்	...ரூ. 25/- ,,	
2. ரோட்டரி டிரில் 107 மீட்டர் வரை	...ரூ. 33/- ,,	ரூ. 243/- நாளொன்றுக்கு எல்லா ஆழங்களுக்கும்.
107 மீட்டரிலிருந்து 152 மீட்டர் வரை	...ரூ. 48/- ,,	
152 மீட்டருக்கு மேல்	...ரூ. 63/- ,,	
3. காலிக்ஸ் டிரில் 107 மீட்டர் வரை	...ரூ. 15/- ,,	ரூ. 37/- நாளொன்றுக்கு எல்லா ஆழங்களுக்கும்
107 மீட்டரிலிருந்து 152 மீட்டர் வரை	ரூ. 17/- ,,	
152 மீட்டருக்கு மேல்	...ரூ. 22/- ,,	
4. பாறை வெடிக்கும் கருவி	...ரூ. 40/- ஒரு முறை வெடிக்க	ரூ. 85/- ஒருமுறை வெடிக்க.
5. காற்றழுத்தக் கருவி	...ரூ. 22/- நாளொன்றுக்கு	ரூ. 32/- நாளொன்றுக்கு.
6. வேகன் டிரில்	...ரூ. 12/- அடி ஒன்றுக்கு	ரூ. 17/- அடி ஒன்றுக்கு
7. ஹேமர் டிரில்	...ரூ. 28/- அடி ஒன்றுக்கு	ரூ. 33/- ,,
8. 'லாங்ஹோல் எக்யுப்மெண்ட்'	...ரூ. 45/- நாளொன்றுக்கு	ரூ. 72/- நாளொன்றுக்கு.
9. கைத்துளைக்கருவி	...ரூ. 5/- நாளொன்றுக்கு 150 அடி வரை. ரூ. 7.50/- நாளொன்றுக்கு 150 லிருந்து 250 அடி வரை ரூ. 9/- நாளொன்றுக்கு 250 அடிக்கு மேல்.	ரூ. 20/- ,,

தற்சமயம் மிக மிக முன்னேற்றமடைந்துள்ள கருவிகள் வேளாண்மைத் துறையினரிடம் உள்ளன. ஒவ்வொன்றும் 14 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கருவிகளெல்லாம் வரப்பெற்றுள்ளன. பாறைப்பாங்கான இடங்களில் நாள் ஒன்றுக்கு 30-லிருந்து 50 அடிவரை துளைக்கும் சக்தி படைத்த ''ஹாமர் டிரில்கள் ஒரு புதிய கருவியாகும். இத்தனை வசதிகளை அரசு உங்களுக்குக் கொடுக்கக் காத்திருக்கும்போது, நீங்கள் வானம் பார்த்து வாழத்தான் வேண்டுமா? 'வானம் பார்த்து வாழ்ந்தது போதும்!'' என்று கூறி விட்டு, நிலநீர் எடுத்து, வேளாண்மை உற்பத்தி பெருக்கிட விரைந்து எழமாட்டீர்களா?

—அ. சொக்கலிங்கம்,

உதவி வேளாண்மைப் பொறியாளர்

(நிலமேம்பாடு)

வேளாண்மைத்துறை, சென்னை.

கண்ணும் காதும்!

புள்ளியியல் துறை இயக்குநர் செல்வி ர.பத்மவல்லி அவர்களின் ~பேட்டி~

கே: புள்ளியியல் துறையின் தோற்றம் பற்றிக் கூற இயலுமா?

ப: தமிழ்நாடு புள்ளியல் துறை தனித் துறையாகத் தமிழ்நாடு அரசால் 1953-ஆம் ஆண்டு அதாவது ஆந்திரம் தனியாகப் பிரிக்கப்பட்டவுடன் அமைக்கப்பட்டு, அவ்வாறே இன்று வரை இயங்கி வருகிறது. இவ்வாறு தனித் துறையாக அமைக்கப்படுவதற்கு முன்னர், சில புள்ளி விவரப் பிரிவுகளை உட்கொண்டு அரசுப் பொருளியல் ஆலோசகர் அலுவலகமாக 1948-லிருந்து இயங்கி வந்தது. அரசுப்புள்ளியியல் பணி முதலில் அடிப்படை வேளாண்மைப் புள்ளி விவரம், சில முக்கிய பண்டங்களின் சில்லரைவிலை விவரங்கள் மற்றும் வாராந்திர காலமுறை அறிக்கைகள் தயாரித்தல் ஆகிய பணியுடன் சிறிய பிரிவாக வருவாய் வாரியத்தில் 50 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் வருவாய் வாரியத்திலிருந்து வேளாண்மைத் துறைக்கு மாற்றப்பட்டது.

1931-ல் அரசினுல் நியமிக்கப்பட்ட புள்ளி விவர ஆய்வுக் குழுவின் பரிந்துரையின்மேல், 1932-ல் ஒரு புள்ளியியல் அலுவலரின் கண்காணிப்பின்கீழ், புள்ளி விவரச் சேகரிப்பின் பணி, வருவாய் வாரியத்தில் செயல்பட அரசு ஆணையிட்டது. 1943-ல் விலைவாசி மற்றும் குறியீட்டு எண்கள், வேளாண்மை, வாணிபம் மற்றும் நிறுவனம் ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்ட அமைப்பாகப் பெருகியது. நாடு விடுதலை பெற்றதும், இந்தியப் பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்கள் உருவாக்குவது சம்பந்தமாகப் புள்ளி விவரத்தின் அவசியம் பல்வேறு மாநிலங்களிலும் உணரப்பட்டது. அதற்கிணங்க முன்னர் கூறியவாறு புள்ளி விவரப் பிரிவுகள் அரசுப் பொருளியல் ஆலோசகர் அலுவலகத்துடன் 1948-ல் இணைந்தது.

> ஒரு துறையின் சாதனைகளை அறிந்து கொள்ளப் புள்ளி விவரங்கள் நமக்குப் பெரிதும் உதவுகின்றன.
>
> தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகள் பற்றிய புள்ளி விவரங்களைத் தொகுத்து வழங்குகிறது 'புள்ளியியல் துறை'. இத்துறை ஆற்றும் அரும்பணிகள் குறித்து இங்கே விளக்கம் தருகிறுர், அதன் இயக்குநர் செல்வி ர. பத்மவல்லி அவர்கள்.

கே: இத்துறையின் நோக்கங்கள் என்னென்ன?

ப: 1. அரசுக்குத்தேவைப்படும் எல்லா வகையான புள்ளி விவரங்களையும் இத்துறையின் பணியாளர்கள் மூலமாகவும், மற்ற துறையிலிருந்து பெறும் அறிக்கைகளின் மூலமாகவும் சேகரித்து வழங்குதல்.

2. சேகரிக்கப்பட்ட விவரங்கள் மாநில அரசு, மத்திய அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவை அவர்களின் தேவைக்குப் பயன்படுத்தும் வகையில் 'வெளியீடுகளாக' வெளியிடுதல் போன்றவை இத்துறையின் நோக்கங்களாகும்.

கே: புள்ளியியல் துறை ஆற்றிவரும் பணிகள் குறித்து விளக்க வேண்டுகிறேன்.

ப: இத்துறையில் மேற்கொள்ளப்படும் சில முக்கியமானப் பணிகள் பின்வருமாறு:

(1) விவசாயப் புள்ளியல் விவரங்களைத் தெரிவிக்கும் பருவமும் பயிரும் பற்றிய அறிக்கைக்குரிய விவரங்களைச் சேகரித்தல். (2) முக்கிய 26 உணவு மற்றும் வணிகப் பயிர்களின் பயிர் முன்-மதிப்பீட்டாய்வுகளை வெளியிடுதல். (3) மழையளவு விவரங்களைச் சேகரித்து ஆய்ந்து வெளியிடுதல். (4) விவசாயக் கூலிப் புள்ளி விவரங்கள் சேகரித்தல். (5) கால்நடைக் கணக்கெடுப்பும் கால்நடைப் பொருள்களும் பற்றிய விவரங்கள் சேகரித்தல். (6) விவசாயப் புள்ளியல் மேம்பாட்டிற்கு வட்ட அளவில் கூட்டம் நடத்துதல். (7) அங்காடிப் புலனுய்வுத் திட்டத்தின் கீழ் முக்கிய விவசாயப் பொருள்களின் மொத்த சில்லரை விலைகள் சேகரித்தல், இருப்பு விற்பனை வெளியூரிலிருந்து வரத்து அனுப்புகை முதலிய விவரங்கள் சேகரித்தல். (8) வெளிநாடு உள்நாடு இறக்குமதி ஏற்றுமதி விவரங்கள் தொகுத்தல் (9) மாநில மாவட்ட வருவாய் மதிப்பீடு. (10) தொழிற் புள்ளி விவரங்கள் சேகரித்தல். (11) கிராம அடிப்படைப் புள்ளியியல் விவரங்கள் சேகரித்தல். (12) நீர்ப்பாசனப் புள்ளியியல் விவரங்கள் சேகரித்தல் (13) புள்ளியியல் கையேடு தயாரித்தல் (14) நகராட்சிப் புள்ளியியல் விவரக் கையேடு (15) வீட்டு வசதிப் புள்ளி விவரங்கள் சேகரித்தல். (16) உணவு மற்றும் உணவல்லாதப் பயிர் விளைவு மதிப்பீடு அறுவடைச் சோதனை. (17) சிறு பயிர்கள் அறுவடைச் சோதனை (18) இந்திய அரசின் தேசீய மாதிரி ஆய்வு நிறுவனத்துடன் இணைந்து செயல்படும் சமூகப் பொருளில் சம்பந்தமாக மாநில மாதிரி ஆய்வுகள். (19) தீவிர வேளாண்மை மாவட்ட திட்டம் பற்றி அடிப்படைப் புள்ளி விவர ஆய்வும் மதிப்பீடு ஆய்வும். (20) அங்காடிக்குக் கொண்டு வரப்படும் உபரிப் பொருட்களைப்பற்றி மதிப்பிடும் ஆய்வு. (21) வேலை வாய்ப்புகள் பற்றிய முன்னேடி ஆய்வுகள். (22) அரசுப் பொது நிதி பற்றிய பகுப்பாய்வுகள். (23) பொருட்களின் நுகர்வு சம்பந்தமான பகுப்பாய்வுகள். (24) ஆள்திறன் ஆய்வுகள். (25) மக்களாய்வு (26) தென்னை, கமுகு பரப்பு மற்றும் மகசூல் பற்றி மதிப்பீட்டாய்வு (27) கடல் மீன் பிடிப்பு மற்றும் நுகர்வு பற்றிய ஆய்வு (28) கைத்தறித் துணிகள் உற்பத்தி விற்பனை பற்றிய ஆய்வு போன்ற பணிகளை புள்ளியியல் துறை செவ்வனே ஆற்றி வருகின்றது.

குறிப்பாக, நாட்டில் உணவுப் பற்றுக்குறை ஏற்படும் சமயமும், விலைவாசி ஏற்றம் அல்லது சரிவு ஏற்படும் சமயமும், நாட்டில் உள்ள உண்மையான நிலைமைகளை ஆய்ந்து உரிய புள்ளிவிவரங்களைச் சேகரித்து, அரசுக்கு வழங்கப்படுகிறது. மேலும் அரசின் அவசர நிலைமைகளில், தேவையான விவரங்கள் சேகரித்து உடனுக்குடன் வழங்கப்படுகிறது. சமீபத்தில் குறிப்பாக கிருஸ்துவ மதத்தினரின் சமூகப் பொருளாதாரம் குறித்து ஆய்வு நடத்தி, உரிய விவரங்களை அரசுக்கு வழங்கப்பட்டது. விலைவாசி விவரங்களைச் சேகரித்துத் தொழிலாளர்களுக்கான ''விலைவாசி குறியீட்டு எண்'' உரிய காலத்தில் தயாரித்து வழங்கப்படுகிறது.

கே: இத்துறையில் எத்தனைப் பணியாளர்கள் பணிபுரிகின்றனர்?

ப: மாநிலம் முழுவதும் இத்துறையில் 1211 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். அவர்களில் அரசிதழ் பதிவுற்ற அலுவலர்கள் 46 பேர். அரசிதழ் பதிவுரு அலுவலர்கள் 1165 பேர் உள்ளனர்.

பொதுவாக எல்லா வட்டங்களிலும் (Taluk) புள்ளி விவரப் பணியாளர்கள் உள்ளனர். இப்படி எல்லா வட்டங்களிலும் பணியாளர்கள் இருப்பதற்குக் காரணம், கிராம அடிப்படையில் புள்ளி விவரங்களைச் சேகரிக்க வேண்டும் என்பதேயாகும்.

கே: இத்துறை வெளியிட்டுள்ள வெளியீடுகள் என்னென்ன?

ப: இத்துறை பல வெளியீடுகளை வெளியிட்டுள்ளது. அவற்றுள் முக்கியமானவை: (1) பருவங்களும் பயிர்களும் பற்றிய அறிக்கை (ஆண்டு வெளியீடு). (2) காலாண்டு புள்ளி விவரச் சுருக்கம் (3) ஆண்டு புள்ளி விவரச் சுருக்கம் (4) தமிழ்நாடு. புள்ளியியல் கையேடு (ஆண்டு வெளியீடு (5) தொழில் புள்ளி விவரங்கள் குறித்த அறிக்கை (ஆண்டு வெளியீடு) (6) விவசாயப் அடிப்படைப் புள்ளி விவரங்கள் (7) தமிழக அரசு வரவு செலவுத் திட்டத்தின் பொருளாதார வகைப்பாடு. (8) தமிழகத்தில் அங்காடிச் செய்திகள் பற்றிய திங்கள் வெளியீடு (9) ஆள் திறன் பற்றிய விவரப் புத்தகம் (10) நெல் மற்றும் புன் செய்ப் பயிர்கள் மதிப்பீட்டாய்வு அறிக்கை (11) நிலக்கடலைப் பயிர் மதிப்பீட்டாய்வு அறிக்கை (12) கரும்புப் பயிர் மதிப்பீட்டாய்வு அறிக்கை (13) பருத்திப் பயிர் மதிப்பீட்டாய்வு அறிக்கை (14) தமிழ்நாட்டில் உழுவை (Tractor) நிறுவனம் பற்றிய அறிக்கை.

ஆய்வின்போது இயக்குநர்

கே: பலதுறைகள் இருக்கத் தங்களுக்கு இத்துறையில் எப்படி ஆர்வம் வந்தது?

ப: அந்நியர் ஆட்சியின் பிடியில் இருந்து இந்தியாவின் சீர்கேடான பொருளாதார நிலை பற்றி கற்று அறிய ஆர்வம் கொண்டு, பொருளாதாரத்தில் ''எம். ஏ.'' பட்டம் பெற்றேன். பிறகு பொருளாதாரம் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபடுத்திக் கொள்ள விரும்பிச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தேன். அப்போது முதன் முதலாக மாநில அரசுக்கென அரசுப் பொருளாதார ஆய்வாளர் நியமிக்கப்பட்ட நேரம். என்னுடைய விருப்பம் நிறைவேறும் வகையில் அவ்வலுவலகத்தில் பொருளாதார ஆய்வாளராகப் பணியில் சேர்ந்தேன். பிறகு அரசுப் பொருளாதார ஆலோசகர் அலுவலகம் ''புள்ளியியல் துறை''யாக மாறியது. இத்துறையில் தொடர்ந்து பல்வேறு பதவிகளில் பணி புரிந்து தற்போது புள்ளியியல் இயக்குநராகப் பணிபுரியும் வாய்ப்பை எனக்குத் தமிழ்நாடு அரசு அளித்துள்ளது.

கே: தாங்கள் மேலைநாடுகள் சென்று வந்துள்ளீர்கள். அங்குப் புள்ளியியல் துறை பற்றிக் கண்டறிந்தீர்களா?

ப: அண்மையில் நான் கிழக்காசிய நாடுகள் புள்ளியியல் துறைக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் வாய்ப்புப் பெற்றேன். இக்கருத்தரங்கில் மொத்தம் 18 பிரதிநிதிதிகள் கலந்து கொண்டனர். இந்தியாவின் சார்பில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் இருவரில் நானும் ஒருத்தி. இந்தக் கருத்தரங்கு ஜப்பான் நாட்டுத் தலைநகரான டோக்கியோவில் 6 வாரம் நடந்தது. கருத்தரங்கில் புள்ளியியலின் முக்கியத்துவம் பற்றியும் கிழக்கிந்திய நாட்டில் புள்ளி விவரச் சேகரிப்பு முறை, நிறுவன அமைப்பு போன்றவையும் ஆய்வு செய்யப்பட்டன.

பொதுவாக அங்கே வேளாண்மை, தொழில், வேலை வாய்ப்பு, மீன்வளம் சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள் சேகரிப்பு முறை மிக முற்போக்கான முறையில் உள்ளது.

குறிப்பாக, இந்தோனேசியாவில் வேலை வாய்ப்பிலும், பொருளாதாரத்திலும் நம்மைவிட முன்னேறி இருக்கிறுர்கள்.

ஒரு துறை பற்றிய புள்ளி விவரம் தேவை என்றுல், அங்கு உடனே அதற்கான புள்ளி விவரங்களைச் சேகரித்துத் தருகிறுர்கள். இதற்குக் காரணம் மக்களுடைய ஒத்துழைப்பேயாகும்.

கிழக்கிந்திய நாடுகளில், ஆண்டுதோறும் அக்டோபர் முதல்நாள் 'புள்ளி விவர நாள்' ஒன்று கொண்டாடப்படுவதை இங்கே மிக முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். அன்றைய தினம் பத்திரிகை, வானெலி, தொலைக் காட்சி முதலானவற்றில் மக்கள் உணரத்தக்க வகையில் பிரச்சாரம் செய்கிறுர்கள். மக்கள் அங்கெல்லாம் நல்ல கல்வி அறிவு பெற்றிருக்கிறுர்கள். அம்மக்கள் குறிப்புகள் எழுதி வைக்கும் நல்ல பழக்கத்தைக் கொண்டவர்களாக இருக்கிறுர்கள். இந்தப் பழக்கம் நம் நாட்டு மக்களுக்கும் வரவேண்டும் என்று விரும்புகிறேன்.

எனவே, தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகள் பற்றியபுள்ளி விவரங்களை இத்துறை தொகுத்து வழங்கி, அரசின் கண்ணும் காதுமாக இருந்து வருவதை நான் பெருமிதத்தோடு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

—பேட்டி: பி.வி.ஜி.

வெற்றியை நோக்கி....!

நாளுக்குநாள்
நம்முடைய வாழ்க்கைக்கு
அரசு அளிக்கும்
பாதுகாப்புகள் ஏராளம்

அரசு அலுவலர்களுக்கு
குடும்பப் பாதுகாப்புத் திட்டம்
அதனைத் தொடர்ந்து
சமுதாயத்திலுள்ள அனைவரும்
பயனடையும் வகையில்
சமூகப் பாதுகாப்புத் திட்டம் !

இப்படி அளிக்கப்படும்
பாதுகாப்புகளைப் போன்று
நமக்கு நாமே
உருவாக்கிக் கொள்ளும்
பாதுகாப்புத் திட்டம்
குடும்பநலத் திட்டம் !

எல்லாரும்
இன்புற்றிருக்கச்
செயல்படுத்தும்
திட்டங்கள்
வெற்றி பெற்றிட
வலுமிக்க
அடித்தளம் அமைய

உதவுவதே
அளவான குடும்பம்.



அடுத்த குழந்தை இப்போது வேண்டாம் !
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம் !!

— குடும்பநலத்துறை,
தமிழ்நாடு அரசு.

எலிகள்— உழவர்களின் விரோதிகள்!

உழவர்களால் விளைவிக்கப் படும் உணவுப் பொருள்களுக்கும், பணப் பயிர்களுக்கும் பூச்சிகள், மற்றும் பிராணிகளினால் நிறைய சேதம் ஏற்படுகின்றன! அதில் எலிகளினால் மட்டும் 5 சதவீதம் சேதம் ஏற்படுகிறது என்று கணக் கெடுக்கப்பட்டுள்ளது. ஒரு எலி யானது ஒரு ஆண்டில் சுமார் 7 லிட்டர் தானியத்தை உணவாக மட்டும் உண்ணுகிறது என்றும் கணிக்கப்பட்டுள்ளது. உண்ணு வதுடன் நின்றிடாமல் ஒரு வளைக்கு சுமார் 2 கிலோ வீதம் தானியம் சேகரித்து வைத்தும் சேதம் விளைவிக்கக் கூடியது. தோட்டக்கால் பகுதிகளில் கரும்பு, தென்னை, மிளகாய், நிலக்கடலைபோன்றபயிர்களுக்கும் பெரும் சேதம் விளைவிக்கின்றன. தானியம், காய், பழம் போன்ற வைகளை சேதப்படுத்துவதுடன் பயிரின் பல வளர்ச்சிப் பருவங் களிலும் சேதம் விளைவிக்கின்றன. எனவே, நாம் விளைவிக்கின்ற பயிரின் முழு பயனையும் நாமே அடைய வேண்டுமாயின் அவை களுக்கு ஏற்படும் நோய்கள், பூச்சித் தாக்குதல் ஆகியவைகளி லுமிருந்தும் பயிர்களைப் பாது காக்க வேண்டியது மிகவும் அவ சியம். அதே சமயத்தில் தீங்கு விளைவிக்கும் பூச்சிகள், எலிகள் ஆகியவற்றினைக் கட்டுப்படுத்துவ தும், முக்கியம்.

எலிகளின் நடமாட்டம்

எலிகளின் நடமாட்டம் பெரும் பாலும் இரவில்தான் இருக்கும். அவைகள் அடர்ந்த புல்பூண்டுகள், செடிகள் உள்ள இடங்களில் வளைகள் தோண்டி அதிகமாக இருக்கும். வயல்களில் வரப்பு களின் ஓரங்களில்தான் அதிகமாக நடமாட்டம் இருக்கும். விரோதி களின் தாக்குதல் தெரிந்தால் பாதையை மாற்றிக் கொண்டு நடு வயலுக்குள் சென்று விடும். தென்னை மரங்களில் ஓலைகளுக்கு இடையிலும், வீடுகளில் வீட்டுக் கூரைகளிலும், முகட்டுகளிலும்— பெரும்பாலும் நாட்டு ஓடு போர்த்தப்பட்ட வீடுகளிலும்— இதனுடைய நடமாட்டம் அதிக மாக இருக்கும். மானாவாரி நில மாக இருந்தால் சிறு குன்றுகள் அல்லது கற்களின் அருகாமை யிலும், புதர்களின் உள்ளும், வரப்புகளிலும் இதனுடைய வளை களை அமைத்துக்கொண்டு நட மாட்டம் செய்துக் கொண்டிருக் கும். வயல் எலிகள் இரவில் 100 அடி தூரம் வரை சாதாரணமாக இரைதேடும் தன்மையுடையன. எலிகள், சராசரியாக 40 நிமிடம் வரை ஒரே முறையில் வளைக்கு வெளியில் இருந்து இரைதேடுவ தாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கோடைகாலமாக இருந்து இரைக்குத் தட்டுப்பாடு ஏற்படு பாயின் எலிகள் தன்னுடைய இரை தேடும் தூரத்தை இரட் டிப்பு (அதாவது) 200 அடி வட் டத்திற்கு சென்று இரைதேடும் தன்மையுடையன. இவைகளின் நடமாட்டத்தை தேய்ந்த பாட் டைகள் மூலமும், பயிர் சேதத் தின் மூலமும், புழுக்கைகள் மூலம் எளிதில் அறியலாம்.

எலி வளைகளின் அமைப்பு :

வயல்களில் உள்ள எலிகள் முக் கியமாக 10 முதல் 15 அடி நீளம் வரை வளைகளை வெட்டும். இதில் படுக்கை அறை, குறுக்கு வழி, சேமிப்பு அறை, நுழைவாயில், ஆபத்துக் காலத்தில் அவசரமாகத் தப்பிச் செல்வதற்கென 4 அல்லது 5 பாதைகள் ஆகியவைகளைக் கொண்டதாக இருக்கும். ஒரு ஏக்கர் நிலத்தில் சுமார் 10-15 வளைகள் இப்படி அமைக்கப்பட்டி ருக்கும்.

தோட்டத்து எலிகள் தென்னை யின் உச்சியில் உள்ள அடர்த்தி யான மட்டைகளுக்கிடையில் குரும்பைகளின் அடிப்பாகத்தில் கூடுகளைக் கட்டி வசிக்கும்.

வீடுகளில் உள்ள எலிகள் சாக்குத் துண்டுகள் போன்ற மற்றப் பல பொருள்களினால் வீட்டு முகட்டுகளில் கூடுகட்டி இருக்கும்.

உணவுப் பழக்கம் :

எலிகள் பெரும்பாலும் எல்லா தானியங்களையும், உண்ணக்கூடி யது. அதோடு மட்டுமின்றி நிலக் கடலை, பருத்தி, கரும்பு, மிளகாய், கிழங்கு வகைகள். தென்னை போன்றவற்றையும் உணவாகப் பயன்படுத்திக் கொள்ளும். வயல் களில் உள்ள எலிகள் வயல்களில் பயிர் இல்லாத சமயங்களில் அரு காமையில் உள்ள வைக்கோல் போர்களுக்கு சென்று சேதம் உண்டாக்கும். மேலும் பயிர் களின் பல பருவங்களையும் அதன் தண்டின் இனிமைக்காக கடிப்ப தும் உண்டு. சுற்றுப்புறச் சூழ் நிலையில் உணவே கிடைக்காத நிலையில் நண்டு, நத்தை, சிறிய பூச்சிகள் ஆகியவற்றையும் உண வாக சாப்பிடும் தன்மையுடை யன.



எந்த உணவுப் பொருளும் கிடைக்காத மிகவும் நெருக்கடியான நிலையில் ஒரு எலி சுமார் 22 நாட்கள்வரைக்கும் உணவில்லாமலேயே உயிர் பிழைக்கும் தன்மையுடையது என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இனப் பெருக்கம்

எலிகள் ஒரு ஆண்டில் 2 அல்லது 3 முறை குட்டி போடும். செப்டம்பர்—அக்டோபர் ஆகிய மாதங்களில் அதிகமாக இனவிருத்தி செய்யப்படுவதாகவும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக ஒரு பெண் எலி, ஒரு ஈற்றில் 10 குட்டிகள் வரை போடும் திறன் படைத்தது. பிறந்த குட்டிகள் முழு வளர்ச்சியடைய மூன்று மாதங்கள் ஆகும். மூன்று மாதங்களுக்குப் பின்னர் அவைகள் இனவிருத்திக்கு தயாராகிவிடுகின்றன.

ஒரு ஆண் எலியும் ஒரு பெண் எலியும் ஒரு ஆண்டில் சுமார் 200—240 எலிகளை இனப்பெருக்கும் செய்து விடுகின்றன.

எலிகளின் வகைகளும் அவைகளின் சேதமும்

எலிகளை அவைகளின் இருப்பிடத்திற்கும், விளைவிக்கும் சேதத்தைப் பொருத்தும் விவசாயத்துடன் இணைக்கும்பொழுது வயல், தோட்டம், வீடு. ஆகியவைகளுக்கு ஏற்ப மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

வயல்

வயல்களில் மூன்று வகை எலிகள் பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கின்றன. அவையாவன:

(அ) புல்லெலி
(ஆ) வரப்பெலி
(இ) சுண்டெலி

ஆகியவைகள் முறையே நெல் நாற்று, வளர்ச்சிப் பருவம், கதிர் ஆகியவைகளுக்கு சேதம் விளைவிக்கின்றன.

(அ) புல்லெலி :

உருவத்தில் சிறியதாகவும், சாம்பல் நிறமாகவும், வயிற்றின் அடிப்பாகத்தில் வெண்மையாகவும் இருக்கும்.

இவைகள், நெல் நாற்றங்காலில் விதைக்கப் பெற்ற நெல்மணிகளுக்கும், வளர்ந்த நாற்றுக்களுக்கும் கும்பலாக வந்து பெரும் அளவிற்குச் சேதம் விளைவிக்கும்.

விஷப் புகையூட்டத்திற்காக, அடையாளக் கொடி வைக்கப் பட்டுள்ள, நடமாட்டமுள்ள எலி வளைகள்.

நாற்றை வெட்டி எடுத்து வளைகளில் கொண்டு சேர்க்கும் தன்மையும் உடையன.

(ஆ) வரப்பெலி :

இவ்வெலிகள் நல்ல உடலமைப்புடன், சாம்பல் நிற உரோமமும் கொண்டவை. உடலைக் காட்டிலும் குட்டையான வாலும் கொண்டது. இவ்வெலிகள் நெல் வயல்களில் நீரில்லாத நேரத்தில் பயிர்களை வெட்டிவிடும். பழக்கப்பட்ட பாத்திக்கே மீண்டும் வந்து சேதத்தை அதிகரிக்கும் தன்மையுடையது. தொண்டைக்கதிர் சமயத்தில் பயிர்களின் தண்டுப் பகுதி இனிமையாக இருப்பதினால் இச்சமயத்தில் சேதம் அதிகமாகிறது. கதிர் முற்றிய வயல்களில் கதிர்களை வெட்டி வீணாக்குவதுடன் ஒரு வளைக்கு சுமார் 2 2 கிலோ வீதம் சேமித்து வைத்தும் சேதம் விளைவிக்கின்றன.

(இ) சுண்டெலி :

இது பெயருக்கேற்ப உருவத்தில் சிறியது. பழுப்பு நிறம் கொண்டது. இது நெல்மணிகள் முற்றிய வயல்களில் கதிர்களில் உள்ள நெல் மணிகளைச் சாப்பிடுவதன் மூலம் சேதம் உண்டாக்கும்:

மேற்குறிப்பிட்டுள்ள மூன்று வகை எலிகளும் தஞ்சை மாவட்ட நெல்வயல்களில் காணப்பட்டு பெரும் அளவில் சேதத்தினை விளைவிக்கின்றன.

தோட்டம் :

சில எலி வகைகள் தோட்டக்கால் நிலங்களில் தங்களின் இருப்பிடங்களை அமைத்துக்கொண்டு, பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கின்றன. அவைகளில் (1) தோட்டத்தெலியும் (2) வெள்ளெலியும் முக்கியமானவைகளாகும்.

(அ) தோட்டத்தெலி :

இது தன்னுடைய உடல் பகுதியில் பழுப்பு அல்லது மஞ்சள் கலந்த சாம்பல் நிறத்தையும், வயிற்றுப் பகுதியில் சுத்தவெள்ளை நிறத்தையும் கொண்டது. இவைகள், பெரும்பாலும் தென்னை மரங்களின் நுனிப் பகுதியில் குரும்பைகளுக்கும், தென்னை மட்டைகளுக்கும் மத்தியில் கூடு கட்டி வசிக்கும் தன்மையுடையது.

தென்னங்குரும்பைகளில் (குலைகளில்) உண்டாகும் இளங்காய்களை தொட்டுப் பகுதிகளில் கடிப்பதின் மூலம் சேதம் விளைவிக்கக் கூடியது. எலிகளின் தொல்லைகள் அதிகம் உள்ள தோட்டங்களில், காலை நேரங்களில் மரத்தடியில் பல புருடைகள் இருப்பதை மிகவும் சுலபமாக பார்க்கலாம்.

(ஆ) வெள்ளெலி:—

இந்த எலிகளின் உடல் மஞ்சள் நிறமும், வயிற்றின் அடிப்பாகம் வெண்மையான நிறமும் கொண்டது. (புஞ்சை நிலங்களில் உள்ள சில எலிகள் முழுமையும் மங்கிய வெண்மை நிறம் கொண்டவையாகவும் இருக்கும்.)

இவை ராகி, நிலக்கடலை, கம்பு, பருத்தி, எள், சோளம் போன்ற பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும். புஞ்சை நிலங்களில் சில சமயங்களில் இவைகள் கல்லின் அடிப்பகுதியில் வளைகளை அமைத்தும் இருக்கும். செடிகள் அடர்ந்த வரப்புப் பகுதிகளிலும் வளைகளை அமைத்துக் காணப்படும். இதை மனிதர்கள் மாமிசத்திற்கு பயன்படுத்துகின்றனர்.



வீடு :

வீடுகளிலும் மற்றும் சேமிப்புக் கிடங்குகளிலும் ஒருவகை எலி சேமித்து வைத்துள்ள தானியங்களுக்கும், மற்ற உணவுப் பொருள்களுக்கும் சேதம் விளைவிக்கின்றன. இதைதான் வீட்டெலி என்கின்றோம்.

(அ) வீட்டெலி:—

இது பார்வைக்கு மங்கிய சாம்பல்நிற உடல் பகுதியும், சிறிது கருமையான வயிற்றுப் பகுதியும் கொண்டதாக இருக்கும்.

இது எல்லாவிதமான உணவுப் பொருள்களையும் சாப்பிடும் தன்மையும், வீட்டு வளர்ப்பு பிராணிகளுக்கென சேமித்து வைத்துள்ள தீவனத்திற்கும் சேதம் விளைவிக்கும்.

எலிகளைக் கட்டுப்படுத்தும் முறைகள் :

1. வீட்டு எலிகளை கட்டுப்படுத்த இரும்பினால் அல்லது மரத்தினாலான எலிபொறிகளை வைத்து எலிகளைப் பிடித்து கொல்லலாம்.

2. எலிகள் உட்புகாதபடி கட்டிடங்களைக் கட்டுவதன் மூலம் எலிகளை வீடுகளில் கட்டுப்படுத்தலாம்.

3. எலிகளைக் கொல்லும் மருந்து வைத்தும் கொல்லலாம்.

4. வயல் வரப்புகளில் உள்ள புல் பூண்டுகளையும், முட்புதர்களையும், அழித்து, அவைகளின் நடமாட்டத்தை ஓரளவுக் கட்டுப் படுத்தலாம்.

5. வளைகளை வெட்டியும் எலிகளைக் கொல்லலாம்.

இம்முறையில் வயல்களில் உள்ள பயிர்கள் அறுவடை ஆன உடனே வளைகளை வெட்டி தாய் எலியுடன் குட்டிகளையும் அழித்து விடலாம். வளைகளில் சேமித்து வைத்துள்ள தானியங்களையும் மீட்டுவிடலாம்.

6. கீரி, பாம்பு, காட்டுப்பூனை போன்ற இயற்கை விரோதிகளை கொல்லாமல் காப்பதும் ஒரு வகையில் எலிகளை கட்டுப் படுத்த வழி.

7. வரப்புகளின் அளவை குறைப்பதன் மூலம், எலிகள் அதிகம் அந்த வயலில் வளைகளைத்

உங்களுக்குத் தெரியுமா ?

1. ஒன்றிலிருந்து இரண்டு வயதுக்குட்பட்ட சிறிய குழந்தைகள் எலிகளினால் கடிக்கப்பட்டு கடும் வியாதிக்கு உள்ளாகியும், இறந்தும் போயிருக்கின்றன என்ற தகவல் கிடைத்திருக்கிறது.
2. எலிகளின் எண்ணிக்கை பெருமளவில் பெருகியிருப்பதாக உலகெங்கிலும் கூறப்படுகிறது. ஐந்நூறுக்கும் மேற்பட்ட எலி வகைகள் இருக்கின்றன. ஆனால், இவற்றில் பெரும்பாலானவை மனிதன் வாழும் இடங்களுக்கு அப்பால், வயல் வெளிகளிலும், காடுகளிலும், பாலைவனங்களிலும் வாழ்கின்றன.
3. நல்ல சூழ்நிலையிலிருக்கும் ஒரு ஜோடி எலிகள் மூன்று ஆண்டுகளில் 35 கோடியாகப் பெருகிவிடக்கூடும்.
4. பொதுவாக எலிகள் ஒரு தடவையில் 5 லிருந்து 10 குஞ்சுகள் போடுவது உண்டு; 17 குஞ்சுகள் போட்டதாகவும் தகவல் உண்டு.
5. பிறந்தவுடன் 10 நாட்களுக்குப் பிறகு உளி போன்ற கூரிய பற்கள் தோன்றுகின்றன. ஆண்டுக்கு 12.5 செண்டி மீட்டர் வீதம் பற்கள் வளருகின்றன. அதாவது மாதா மாதம் கிட்டத்தட்ட 1 செண்டி மீட்டர் வளர்ச்சி. வளரும் இப் பற்களை தொடர்ந்து தேய்த்துக் குறைக்க வேண்டியிருக்கிறது. இதன் விளைவாக துணி, ப்ளாஸ்டிக், ரப்பர், மரம்... எதுவானாலும் எலி பல்லால் கடித்துக் கொதறுகிறது. இதனால் பெரும் சேதமும், நஷ்டமும் ஏற்படுகிறது.
6. ஒரு செண்டி மீட்டர் இடைவெளி இருந்தால் போதும்; எலிகள் உள்ளே புகுந்துவிடும்.
7. ஓடும் சாக்கடையில் எலிகள் எளிதாக ஒரு கிலோ மீட்டர் வரை நீந்திச் செல்ல முடியும்.
8. எலிகள் உணவின்றி 22 நாட்களும், நீரின்றி இரண்டு நாட்களும் சமாளிக்க முடியும்.

சிறு துளி பெரு வெள்ளம்

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் முதலீடு செய்யுங்கள்

TNSC BANK

டெபாஸிட்டுகளுக்கு எங்கள் வட்டி விகிதங்கள் :

1. சீசன் டெபாஸிட்டுகள்- ரூ 1000/-மும் அதற்கு மேலும் — வருடத்திற்கு
   15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை 3.25%
   46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை 3.75%
2. தவணை டெபாஸிட்டுகள்- ரூ 100/-ம் அதற்கு மேலும்

காலம்	வருடத்திற்கு
91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக	5.75%
6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக	6.25%
9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக	7.25%
1 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்கு குறைவாக	8.25%
3 வருடங்களும் அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்கள் வரை	9.25%
5 வருடங்களுக்கு மேல்	10.25%

3. சேவிங்ஸ் கணக்கு 5.75%
4. நடப்பு (current) கணக்கு வட்டி கிடையாது

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்,

379, நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் ரோடு, சென்னை-600 001
தந்தி : 'URBANK' போன் : 20367 (3 லைன்கள்)
டெலக்ஸ் :MS 7225

கிளைகள் : அண்ணா நகர், அண்ணா சாலை (காமதேனு). அண்ணா சாலை (அண்ணா சிலை). அசோக் நகர், பெஸண்ட் நகர், எழும்பூர், காந்தி நகர். கிரீன்வேஸ் ரோடு, ஜவஹர் நகர், கெல்லீஸ், தங்கசாலை, மைலாப்பூர், மைலாப்பூர் குளம், நுங்கம்பாக்கம், புரசைவாக்கம். ராயப்பேட்டை, ராஜா அண்ணாமலைபுரம், சாந்தோம், சாஸ்திரி நகர், ஷெனாய் நகர், தியாகராய நகர் & திருவல்லிக்கேணி.

TNSCB : 122/75

தோண்டி குடியிருப்பதை ஒருவு.த் தடுக்கலாம்.

8. அறுவடை ஆன உடனேயே வயல்களில் நிறைய நீர் பாய்ச்சுவதன் மூலம் சிறிய குட்டிகளை எளிதில் கொல்லலாம்.

9. நடுவயல்களில் ஏற்படும் சேதத்தைத் தடுக்க தஞ்சாவூர் கிட்டிகள் வைக்கலாம். இதை ஏக்கருக்கு சுமார் 25 வரை வைக்க வேண்டும்.

10. இரவில் விளக்கு வெளிச்சத்தில் அதாவது ஒளிமிக்க 'பெட்ரோமாக்ஸ்' போன்றவைகொண்டு புல்எலி போன்ற எலிவகைகளை எளிதில் கொல்லலாம்.

11. மின்சார வேலி அமைத்தல் மூலம் எலிகளின் பாதிப்பை குறைக்கலாமென ஆடுதுறையில் உள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் கண்டுபிடித்துள்ளது.

12. நச்சு மருந்து வைத்தும் கொல்லலாம். 'சிங்க் பாஸ்பைடு' என்ற எலி மருந்தில் 1 பங்கு எடுத்து 49 பங்கு நெல் பொரியுடன் கலந்து உடன் சிறிது நல்லெண்ணெய்யும் சேர்த்து வயல்களில் வைத்தால் எலிகளை எளிதில் கொல்லலாம்.

எலிகளால் நாம் அழிவதற்கு முன் நாம் அவைகளை ஒழிக்க வேண்டும் !

இனப்பெருக்கக் காலத்தில் குழி வெட்டி எலிகளைப் பிடித்தல்:

குறுவை, சம்பா, தாளடி நெல் அறுவடைக்கு பின் தான் அவைகளின் இனம்பெருக்கம் துவங்குகிறது. அதாவது அக்டோபர், பிப்ரவரி, மார்ச் மாதங்கள் எலிகளின் இனப்பெருக்க காலம். இந்த காலத்தில் எலிகளைக் குட்டிகளோடு பிடித்து அழித்து விடலாம். செலவும் குறைவு. ஒரு எலி பிடிக்க 10 காசு தான்! வரப்பிலும் போதிய ஈரம் இருப்பதால் தோண்டுவதும் சுலபம். எலி வளைகளைக் காட்ட பழக்கப்பட்ட நாய் ஒன்று இருந்தால் சுலபமாக எலி வளைகளைக் கண்டுபிடிக்க உதவும். ஆண்டு தோறும் இருபோக நெல் சாகுபடி நிலங்களில் குறுவை அறுப்பு முடிந்து அக்டோபர் மாதத்திலும், தாளடி அறுப்பிற்குப் பிறகு மார்ச் மாதத்திலும் குழிதோண்டி எலிகளை அழிக்கலாம்.



கிட்டி வைத்துப் பிடித்தல்:

தஞ்சாவூர் கிட்டி என்று தஞ்சாவூர் விவசாயிகள் கையாளும் எலிப்பொறியாலும் பிடிக்கலாம். இந்தக் கிட்டிகளை நெற்பயிர் கண்ணாடி இலைவிடும் வரை வயல்களில் வைத்து எலிகளை பிடிக்கலாம். வயல்களின் ஓரங்களில் கிட்டிகளை வைத்துப் பிடிப்பது நிறைய எலிகளைப் பிடிக்க வழி செய்யும். குறுவைப் பட்டத்தில் ஆகஸ்ட்-செப்டம்பர் மாதங்களிலும், சம்பா தாளடி பருவத்தில் நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களிலும் கிட்டி வைத்து எலிகளைப் பிடிக்கலாம்.

எலிமருந்து வைத்து எலிபிடித்தல்:

நச்சுத் தன்மை வாய்ந்த மருந்துகளைக் கொண்டு சுலபமாக எலிகளை ஒழிக்கலாம். இதற்குச் சில அடிப்படை உண்மைகளை மனத்தில் பதித்துக் கொள்ள வேண்டும்.

மருந்தோடு கலக்கும் தீனி:

எலி நம்மை விடத் தூய்மையானது; நாகரிகமானது; பூச்சி புழு அரித்த தானியங்களைத் தின்னாது; கொரிக்காது, ஊசிப்போன பலகாரங்களை. முகர்ந்தும் கூடப் பார்க்காது; சந்தேகம் வந்தால் அந்தப் பக்கம் தலைவைத்துப் படுக்காது!

இதற்காக சோளம், மக்காச் சோளம் ஆகியவற்றை இரவையாகவோ, அல்லது பொரியாகவோ பொரித்துக் கொள்ளவேண்டும். இரவையாக இருந்தால் சிறிது வறுத்துக் கொள்ள வேண்டும். வாசனை வேண்டுமல்லவா?

பிறகு இத்தீனியில் மருந்து ஒட்டிக் கொள்ள வேண்டுமல்லவா? அதற்குப் போதுமான ஆனால் சிறிது பசையாக இருக்கத் தேவையான தேங்காய் எண்ணெய் விட்டுக் கொள்ள வேண்டும். கூடுமானால் சிறிது சர்க்கரையும் சேர்த்துக் கொள்ளலாம்.

இப்பொழுது தீனி தயார்.

மருந்து கலக்குதல்:

(அ) ஜிங்ஃபாஸ்பைடு:— இது கருப்பாக இருக்கும். மிக நச்சுத் தன்மை வாய்ந்தது. கவனமாகக் கையாள வேண்டும். கூடுமான வரை வீடுகளில் உபயோகிக்கக் கூடாது. வயல் வெளிகளில் வைக்க வேண்டும். மருந்தை நம்பிக்கையான இடங்களில் வாங்க வேண்டும்.

ஒரு மடங்கு ஜிங்ஃபாஸ்பைடும் 49 மடங்கு எலிக்காகத் தயார் செய்த தீனியையும் கலக்கவேண்டும். கையால் கலக்கக்கூடாது. மனிதனின் வேர்வைநாற்றம்

எலி வளைக்குள் அலுமினியம் பாஸ்பைட் மாத்திரைகளை விவசாயி ஒருவர் வைக்கிறார்.



சேர்ந்துவிட்டால் எலி மருந்து பக்கமே வராது;

இம்மருந்துக் கலவையை எலி நடமாடும் இடங்களிலும், குறிப்பாக அது வரும் பழக்கப்பட்ட வழியிலும் வைக்க வேண்டும். மருந்துக் கலவையைச் சின்னத் தட்டில் வைத்து அதனை யாரும் பார்க்காதவாறு பலகையை வைத்துச்சார்த்தி மறைவிடமாக்க வேண்டும். திருட்டு எலிகள் இருட்டில்தான் சாப்பிடும்! வெளிச்சம் உள்ள இடங்களில் தின்னாது. மறைவான இடங்களில் தான் வைக்க வேண்டும். வீட்டுப் பிராணிகளான நாய், பூனை, கோழி முதலியவை காணாத வகையில் வைக்கவும்.

'ஜிங்ஃபாஸ்பைடை' முதல் நாளே மருந்துடன் கலக்கி வைக்கக்கூடாது. எலிகளுக்கு எவ்வித சந்தேகமும், பயமும் வராமல் இருக்க, முதல் 2-3 நாட்களுக்கு மருந்து கலக்காமல் தீனியை வைத்துத் தடம் பழக்க வேண்டும் அதன்பின் தான் 'ஜிங்ஃபாஸ்பைடு' கலந்து முறைப்படி வைக்க வேண்டும்.

இக்கலவையைத் தின்னும் எலிகள் சாக்கு, சந்து, எலி வளைகள், வீட்டின் முகடு ஆகியவற்றில் அப்படியே இறந்து விடுகின்றன. வீடும் நாறி விடுகிறது.

இம்மருந்துக் கலவையைத் தின்று ஓர் எலி திடீரென்று இறந்தால், மற்ற எலிகள் வந்து தின்னாது.

(ஆ) 'வார்ஃபிரைன்': இது 'ரோடாஃபிரைன்' என்னும் வணிகப் பெயரில் கிடைக்கிறது.

ஒருபங்கு 'வார்ஃபிரைன்' மருந்தையும், 19 பங்கு மணமான சுவையான எலித் தீனியையும் கலந்து வைக்க வேண்டும்.



இதனை முதல் நாளே தீனியுடன் கலந்து வைக்கலாம்.

இம்மருந்துக் கலவையை வீடுகளில் தாராளமாக வைக்கலாம். ஆனால் மறைவாக எலி வரும் இடங்களில் வைக்க வேண்டும்.

இம்மருந்துக் கலவையை சாப்பிட்ட முதல் நாளே எலிகள் சாகாது. சுமார் 4-5 நாட்களுக்கு சாப்பிட வேண்டும்.

ஒரு எலி எவ்வளவு எடை இருக்குமோ, அந்த அளவு எடையுள்ள மருந்துக் கலவையைத் தின்றால் தான் எலி சாகும்.

இம்மருந்தை உட்கொண்ட எலிகள் கொஞ்சம் கொஞ்சமாக சாகும்! கால்கள் இழுத்துக் கொள்ளும்! மூச்சுத் திணறி காற்று வாங்க வெளியே வரும்; பின் இறந்துவிடும்!

இம்மருந்தினால் மற்ற வீட்டுப் பிராணிகளுக்கு அவ்வளவு கெடுதல் இல்லை. தவறித் தின்று விட்டாலும் 'வைட்டமின் கே. இன்ஜெக்ஷன்' செய்து கொள்ளலாம்.

இருந்த போதிலும் மற்ற நச்சு மருந்துகளைக் கையாள்வது போலவே, இதனையும் கையாள வேண்டும்.

'வார்ஃபிரைன்' மருந்து ஒரு இரத்த நீர்த்த மருந்தாகும். இரத்தத்தை உறையச் செய்யாது. அதனால் இம்மருந்து தின்ற எலிகளுக்கு மூக்கு, வாய் மற்ற மெல்லிய தோல் பகுதியில் இரத்தம் பீறிட்டுக் கொண்டே இருக்கும்.

இத்தகைய இரத்தக் கசிவால் எலிகள் சாகின்றன.

(இ) அலுமினியம் ஃபாஸ்பைட: இதை வணிகப் பெயரில் 'செல்ஃபாஸ்' என்றும் கூறுவர்.

இம்மருந்து வில்லைகளாக— மாத்திரைகளாக காற்றுப் புகாடின்களில் அடைக்கப்பட்டு இருக்கும்.

இம்மருந்து வில்லைகளை வயல் வெளிகளில் உபயோகிக்கலாம். வீடுகளில் கூடாது.

இம் மாத்திரைகளை எலி வளைகளில் போட்டு எலிகளை-அதன் குட்டி குடும்பத்தோடு சாகடிக்கலாம்.

உபயோகிக்கும் முறை:

மாலை வேளைகளில் வயல்வெளிகளில் இருக்கும் எலி வளைகளைக் கண்டு பிடியுங்கள்.

எலிவளையின் தலைவாயிலை சிறிது மண்கொண்டு அடையுங்கள்.

இரவில் வரும்போது, எலியானது அந்த மண்ணை நீக்கி, சிறிது புது மண்ணையும் தள்ளிக் கொண்டு வரும்.

மறுநாள் காலையில் எந்தெந்த வளைகளில் எலிகள் குடித்தனம் செய்கின்றன என்று அறிந்து கொள்ளலாம். அந்த வளைகளில் மட்டும் மருந்து போட்டால் போதும்.

பகல் வேளையில் எலிகள் வளைக்குள் உறங்கும். அதன் கொல்லைப்புற வழிகளை ஒருவாறு கண்டறிந்து நன்றாக மூடிவிடவும்.

காலை வேளையில் 'செல்ஃபாஸ்' மாத்திரைகள் 2-3ஐ எடுத்து எலி வளையின் தலை வாயிலின் மூலமாக சடுதியாக உள்ளே தள்ளிச் சிறிது நீரையும் இறைத்து விட்டு, பிறகு ஈரமண் வைத்து தலைவாயிலை நன்றாக மூடி, காலால் மிதித்து விடவும். இம் மாத்திரைகள் நம்முடைய மூக்குப் பக்கம் வரக் கூடாது.

வளைக்குள் எறியப்பட்ட ஈர மாத்திரைகளில் இருந்து விஷக் காற்று வெளிவரும். அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கின்ற எலிக் கூட்டங்கள் அடியோடு செத்துவிடும்.

இம்முறை இன்னும் அதிகப் பழக்கத்தில் வரவில்லை. மாத்திரைகளை வீடுகள், மாட்டுத் தொழுவம் ஆகிய இடங்களுக்குப் பக்கத்தில் வரவே கூடாது.

எல்லா மருந்துகளையும் மிகவும் எச்சரிக்கையாக கையாளுங்கள்.

மேற்குறிப்பிட்ட முறைகளை அவ்வப்பொழுது இடத்திற்கும் பயிருக்கும் தக்கவாறு பயன்படுத்தி பயிருக்குத் தீங்கு விளைவிக்கும் விவசாயியின் விரோதியாகிய எலியை கொல்வோமாக!

—

தொகுப்பு:

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்
பல்கலைக் கழகம்,
கோவை-3.

குடும்ப நலத்திட்டத்தால் பயன் என்ன? 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கை வைத்துப் பார்த்தால் ஏற்பட்டுள்ள மக்கள் தொகைப் பெருக்கம் என்ன என்பதும் பிறப்பு விகிதம் எந்த அளவு குடும்ப நலத்திட்டத்தால் குறைக்கப்பட்டுள்ளது என்பதும் தெளிவாகும். 1901-ல் 24 கோடியாக இருந்த இந்திய மக்கள் தொகை 1971-ல் 55 கோடியாக உயர்ந்துள்ளது. அதேபோல் 1901-ஆம் ஆண்டு 193 லட்சமாக இருந்த தமிழ் நாட்டின் மக்கள்தொகை 1971-ம் ஆண்டில் 412 லட்சமாக உயர்ந்திருக்கிறது. அண்மைக் காலத்தில் இந்த அளவு குடும்ப நலத்திட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட பின்பும் இத்தகையதோர் மக்கள் தொகை வளர்ச்சி ஏற்பட்டுள்ளதைக் கருதிப்பார்க்க வேண்டும்.

அதேபோல் இந்நாட்டினுடைய பிறப்பு விகிதத்தைப் பார்த்தால், அது எந்த அளவு முயற்சிக்குப் பின் குறைக்கப்பட்டிருக்கிறது என்பது புலப்படும். 1901 ஆம் ஆண்டில் இந்தியாவினுடைய பிறப்பு விகிதம், ஆயிரத்துக்கு 48·1. 1971-ஆம் ஆண்டிலிருந்த பிறப்பு விகிதம் 37·6. தமிழகத்தின் நிலை என்ன? 1901-ஆம் ஆண்டில் தமிழகத்தின் பிறப்பு விகிதம் 49·2. 1971-ம் ஆண்டிலிருந்த பிறப்பு விகிதம் 30·7. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் (1978—79) 1000-க்கு 30 என்ற அளவுக்கு பிறப்பு விகிதத்தைக் குறைக்க வேண்டுமென்பது இந்திய அரசின் நோக்கமாகும். தமிழகம் 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படியே 1000-க்கு 30·7 என்ற அளவுக்கு பிறப்பு விகிதத்தைக் குறைத்திருக்கிறது. இப்போது தமிழ்நாட்டில் பிறப்பு விகிதம் 1000-க்கு 28·5 ஆகும். 1975-ம் ஆண்டுக் கணிப்பின்படி, முன்னே குறிப்பிட்டிருப்பது போல உலகின் பிறப்பு விகிதம் 1000-க்கு 31·5. இந்தியாவில் பிறப்பு விகிதம் 1000-க்கு 39·9 வாஷிங்டன் அமைப்பு தந்துள்ள விவரப்படி. தமிழகத்தில் பிறப்பு விகிதம் 1000-க்கு 28·5 என்பது, நமது சாதனை குறித்து பெருமைப்படத்தக்கதாகும்; இது ஒன்றே தமிழ்நாட்டில் குடும்ப நலத்திட்டம் எவ்வளவு சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும், குடும்ப நலத்திட்டச் செயலாக்கம், உலகச் சராசரி பிறப்பு விகிதத்தை விட—இந்தியச் சராசரி பிறப்பு விகிதத்தை விட தமிழ்நாட்டில் பிறப்பு விகிதத்தை எந்த அளவுக்குக் குறைத்திருக்கிறது என்பதையும் விளக்கும்.

பேராசிரியர்
க. அன்பழகன்

சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு அந்நிய செலாவணிக் கடன்கள்

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசம் ஆகியவற்றில் உள்ள சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்குத் தேவையான இயந்திரங்களையும், அதற்கான உறுப்புகள், மற்றும் பாகங்கள் ஆகியவற்றையும் இறக்குமதி செய்வதற்கும், தொழில் நுட்பத் தகவல்களுக்கும் தேவைப்படும் அந்நிய செலாவணிகளை நாங்கள் சமீப காலமாக வழங்கி வருகின்றோம்.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மூலம் அனைத்து உலக வளர்ச்சி குழுவினரால் (IDA) அளிக்கப்பட்டுள்ள கடன் ஏற்பாட்டின்படி இன்னும் ஏராளமான தொகை இந்த இனத்தில் எம்மிடம் உள்ளது.

அந்நிய செலாவணி வேண்டும் திட்டங்களுக்கு (அந்நிய செலாவணியாகவோ அல்லது உள்நாட்டு செலாவணியாகவோ) கடன் மற்றும் இதர வகைகளில் தொழிலகம் ஒன்றுக்கு ரூ. 30 லட்சத்திற்கு மேற்படாமல் கடனுதவி கிடைக்கும்.

விவரங்களுக்கு தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்:

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்
'அருள்மனை'
26, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

கிளைகள்:
தஞ்சாவூர்
மதுரை
கோயமுத்தூர்
சேலம்
வேலூர் &
திருநெல்வேலி

டி ஐ ஐ ஸி
இதயபூர்வமான நிதியுதவி

நிர்வாக இயக்குநர்: S.N. பை.



சினை மீனை ஹாப்பாவில் விடுதல்.

மீன் வள ஆராய்ச்சி

இரா. சீனிவாசன்
இணை இயக்குநர்
மீன்வளத்துறை
(ஆராய்ச்சி - விரிவாக்கம்)

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவலகால வகையினானே"

என்பதற்கொப்ப முன்னேற்றத்திற்கு அடிப்படை ஆராய்ச்சி என்பதைக் கருத்தில் கொண்டு மீன்வளத்தைப் பெருக்குவதற்கான ஆராய்ச்சிகள் இந்த நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து அதாவது தமிழகத்தில் மீன்துறை தோன்றியதிலிருந்தேமேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழ்நாடுதான் மீன் வளத்தைப் பெருக்குவதற்கு பெரு முயற்சிகள் எடுத்து வழிகாட்டியாக இருந்து வந்திருக்கிறது.

கடல் மீன் வளம், உள் நாட்டு மீன்வளம், மற்றும் மீனைப்பக்குவப் படுத்திக் கெடாமல் பாதுகாத்தல் முதலிய எல்லா வகைகளிலும் தமிழகத்தில் சிறப்பான ஆராய்ச்சிகள் பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. செங்கை மாவட்டத்திலுள்ள எண்ணூர் கடல் மீன் ஆராய்ச்சி நிலையம், முகவை மாவட்டத்தில் குருசடைத் தீவிலுள்ள கடல் மீன் ஆராய்ச்சி நிலையம், நீலகிரி மாவட்டத்திலுள்ள குளிர் மீன் ஆராய்ச்சி நிலையம் ஆகியவை தமிழ்நாட்டின் மிகப் பழைய ஆராய்ச்சி நிலையங்கள் மட்டுமல்ல, தமிழகம் ஏன் இந்தியா முழுமைக்கும் மீன் வள மேம்பாட்டிற்கு உதவும் வகையில் பல அரிய பெரிய ஆராய்ச்சி சாதனைகள் புரிந்து வரும் நிலையங்களாகவும் விளங்குகின்றன.

இந்தியாவின் நீர்த் தேக்கங்களில் மீன் வளர்ப்பில் பெரும் அளவில் வெற்றி பெற்று மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டியாக விளங்குவது தமிழகமாகும்.

வெளிநாடுகளிலிருந்து 'கண்ணாடிக் கெண்டை', 'திலாபியா', 'குராமி', 'ட்ரௌட்', 'டென்ச்' போன்ற மீனினங்களை நம் நாட்டிற்குக் கொண்டு வந்து, அவைகளின் தன்மை, உணவுப் பழக்க வழக்கங்கள், வளர்ச்சி, மற்றைய மீன்களுடன் கூடி வாழும் இயல்பு ஆகியவற்றை ஆராய்ந்தறிந்து நம் நாட்டின் மற்றைய இடங்களுக்கும் அனுப்பிய பெருமை தமிழகத்தையே சாரும்! கழிமுகப் பகுதிகளில் வாழும் மீனினங்களில் 'பால் கெண்டை', 'செத்தக் கெண்டை', 'மடவை' போன்றவற்றை உள் நாட்டு நீர்நிலைகளில் விட்டு வளர்த்துப் பயனடையலாமென்பதை கண்டு பிடித்துப் பலரும் பயனடையச் செய்தது தமிழகமே என்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.

நம் மாநிலத்தில் நடக்கும் ஆராய்ச்சிகளை பலவாறுகப் பிரிக்கலாம் :

அ. உள்நாட்டு மீன்வளத்தைப் பெருக்குவதற்கான ஆராய்ச்சி.

ஆ. கடல் மீன் வளத்தைப் பாதுகாத்துப் பயனடைவதற்கான ஆராய்ச்சி.

இ. கடலில் கிடைக்கும் மீனினங்களைக் கெடாது பாதுகாத்துப் பயன்படுத்துதல்.

உள்நாட்டு மீன்வளத்தைப் பெருக்க மேற்கொள்ளும் ஆராய்ச்சி, உள்நாட்டு நீர்நிலைகளில் வளர்ப்பதற்கான மீன்களை வகைப்படுத்தி, நீரின் தன்மைக்கேற்ப எந்த அளவில், எந்த இனத்தை விட்டு வளர்த்து, எந்த அளவில் பயனடையலாம் என்பதை மக்களுக்கு எடுத்துச்

கூண்டுகளில் வளர்க்கப்பட்ட இறல்கள். கோவளம் (செங்கை மாவட்டம்)

சொல்ல உதவுகிறது. இந்த ஆராய்ச்சிகளின் பலனாக மேட்டூர் பவானி சாகர், சாத்தனூர், அமராவதி, ஆழியாறு, திருமூர்த்தி, வைகை, மணிமுத்தாறு, பூண்டி இன்னும் இதுபோன்ற 28 நீர்த் தேக்கங்களில் மீன் பண்ணைகள் அமைக்கப்பட்டு 'கட்லா', 'ரோகு', 'மிர்கால்' போன்ற தரமான மீன் குஞ்சுகள் பெருமளவில் ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்பட்டு நீர்த் தேக்கங்களில் இருப்பு செய்து, மீன் உற்பத்தி பெருமளவில் பெருக்கப்பட்டுள்ளது. இந்த நீர்த் தேக்கங்களில் பிடிக்கப்படும் மீன்கள் தமிழகம் மட்டுமல்லாமல் கல்கத்தா வரை தினமும் அனுப்பப்படுகின்றன. குளம் குட்டைகளில் இனப்பெருக்கம் செய்யாத 'கட்லா', 'ரோகு', 'மிர்கால்' போன்ற சினை மீன்களை ஊசியிட்டு இனப்பெருக்கம் செய்து எல்லா நீர் நிலைகளிலும் வளர்ப்பதற்கு வேண்டி அனுப்ப ஆவனச் செய்யப்பட்டு வருகிறது.



தூண்டுதல் முறையில் மீன் குஞ்சு உற்பத்தி

விரைவாகவும், வெகுவாகவும் பல்கிப் பெருகக் கூடிய 'திலேபியா' மீனைத் தவிர, விரைவாக வளரக்கூடிய வெள்ளிக்கெண்டை (சில்வர் கார்ப்), 'புல்கெண்டை' (கிராஸ் கார்ப்) போன்ற சீனக் கெண்டைகளும் தமிழ் நாட்டில் ஆராய்ச்சிகள் மூலமாக பெருக்கப்பட்டுள்ளன.

சுருங்கச் சொன்னால் ஓர் ஏக்கர் நீர் நிலையில் நல்ல முறையில் மீனை வளர்த்தால், ஒரு ஏக்கர் நிலத்திலிருந்து கிடைப்பதை விட அதிக அளவில் எப்படி இலாபம் பெறலாம் என்பது கண்டறிப்பட்டுள்ளது. நீர் நிலைகளுக்கு உரமிடுதல், நான்கு அல்லது ஐந்து வகை மீன்களை ஒன்றாக விட்டு வளர்த்தல் (காம்போசிட் ஃபிஷ் கல்சர்), மீன்களுக்கு செயற்கை உணவளித்தல் ஆகியவற்றை முறையாகச் செய்தால் குறைந்தது ஓர் ஏக்கரிலிருந்து சராசரி 2,000 கிலோ கிராமுக்கு அதிகமான எடையுள்ள மீன்களைப் பிடித்துப் பயனடையலாம் என்பது ஆராய்ச்சியின் முடிவாகும்.

கடல் மீன் வளம் பற்றிய ஆராய்ச்சியின் மூலம் கடலின் தன்மை, அங்குக் கிடைக்கும் மீனினங்கள், அவற்றை எந்த அளவிற்குப் பிடித்தால் தொடர்ந்து மீனவர் பயனடைவர் என்பதை ஆராய்ந்தறியப்படுகிறது. முகவை திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்ட கடலோரப் பகுதிகளில் வளரும் கடற்பாசிகளின் வகைகளும் அளவும் ஆய்வு செய்யப்பட்டு 'அகர்—அகர்', 'ஆல்ஜினேட்' போன்ற உணவு மற்றும் துணி (டெக்ஸ்டைல்ஸ்) உற்பத்தித் தொழில்களுக்குத் தேவையான இரசாயனப் பொருள்களின் உற்பத்திக்குத்தேவையான 'கிரேசில்லேரியா', 'ஜெபிடியல்லா', 'சர்காசம்' போன்ற கடற்பாசிகளை வளர்க்கும் முறைகளும் ஆராயப்படுகின்றன. கடலில் கிடைக்கும் சங்கு, முத்து பற்றியும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இயற்கை முத்தை எல்லா வகைகளிலும் ஒத்துள்ள செயற்கை முத்தை உற்பத்தி செய்வதற்கான வழி வகைகளும் காணப்பட்டு ஒரு முன்னோடித் திட்டம் வகுத்து, தூத்துக்குடியில் பெருமளவில் முத்து உற்பத்தி செய்யப்பட உள்ளது.



மீன் குஞ்சு போக்குவரத்துக்குப் பிராணவாயு செலுத்துதல்.

சினை மீனுக்கு இனவிருத்திக்கான ஊசி போடுதல்.



நம் நாட்டிலுள்ள கழிமுகப் பகுதிகள் நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டால், மீன் உற்பத்தி பெருமளவில் பெருக வாய்ப்புள்ளது. தமிழகத்தில் மட்டும்சுமார் 40,000 எக்டேர் பரப்புள்ள கழிமுகங்கள் தரிசாக உள்ளன. இக்கழிமுகப் பகுதிகளில் என்னென்ன மீன் வகைகள் உள்ளன. எந்தெந்த மீன் வகைகள் நல்ல பயன் தரும், இறால்களை எந்த அளவில் விட்டு வளர்த்துப் பயனடையலாம், இப்பகுதிகள் எந்த அளவில் மீன் வளர்ப்பதற்கு ஏற்றவையாயுள்ளன. இப்பகுதிகளில் எந்த அளவில் மீன் குஞ்சுகளை விட்டு வளர்க்கலாம்என்பனவெல்லாம் ஆராயப்படுகின்றன.

சென்னை அடையாறிலுள்ள கழிமுக மீன் பண்ணையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலம், நல்ல முறையில் இறால்களை வளர்த்துப் பயனடைய வழி காணப்பட்டுள்ளது. மேலும், செங்கை மாவட்டத்தில் கோவளம், பழவேற்காடு ஆகிய இடங்களிலும், மற்றும் தென்னார்க்காடு மாவட்டத்தில் மரக்காணம், கழுவேலி, பரங்கிப்பேட்டை முதலிய இடங்களிலும் கழிமுக மீன் டண்ணைகள் அமைக்கப்பட்டு, 'இறால்', 'பால்கெண்டை', 'மடவை' முதலிய மீன்களைத் தனியாகவும், பிற மீன்களுடன் கூட்டாகவும் வளர்ந்து மீன் உற்பத்தியை அதிகரிக்க வழி வகைகள் ஆராயப்படுகின்றன.

கடலோரப் பகுதிகளில் கூடுகளில் மீன் வளர்ப்பது(Cage culture) வெளிநாடுகளில் பெருமளவில் செய்யப்படுகிறது. நம் நாட்டிலும் இவ்வகையில் மீன் வளர்ப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய செங்கை மாவட்டத்தில் உள்ள கோவளத்தில் ஒரு முன்னோடித் திட்டம் செயல்பட்டு வருகிறது. மற்றும் உண்ணும் ஆளிகள் (எடிபிள் ஆயிஸ்டர்ஸ்), கிளிஞ்சல்கள் (மஸ்ஸல்ஸ்), நண்டுகள் முதலியவற்றை பெருமளவில் உற்பத்தி செய்வதும் இத்தகைய ஆராய்ச்சியின் நோக்கமாகும். இந்த ஆராய்ச்சிகளின் விளைவாக தற்போது தரிசாக உள்ள கழிமுகங்களிலிருந்து தமிழ் நாட்டில் மட்டும் ஆண்டிற்கு ஏறக்குறைய 25,000 டன் மீன் அதிகமாக உற்பத்தி செய்யலாம்.

கழிமுகப் பகுதிகள் மற்றும் கடலோரம், உள் நாட்டு நீர்நிலைகள் ஆகியவற்றினை மீன் வளர்க்கப் பயன்படுத்த நினைக்கையில் இப்பகுதிகளின் பாதுகாப்பையும் மனதில் கொள்ள வேண்டும். இல்லையெனில் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் நச்சுத் தன்மை வாய்ந்த கழிவு நீர் (Industrial effluents) கழிமுகத்திலோ, கடலிலோ, உள்நாட்டு நீர்நிலையிலோ கலக்கும்போது அங்குள்ள நுண்ணுயிர்களும், பாசிகளும், மீன்களும் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன. எனவே, தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரின் நச்சுத் தன்மையை எப்படி மாற்றி, பின்னர் நீர் நிலைகளில் விட்டால் மீனின் வளர்ச்சி பாதிக்கப்படாது என்பதும் ஆராய்ச்சியாளர்களால் ஆராயப்படுகிறது. உலகின் பல பகுதிகளிலும் இதுபற்றி பெருமளவில் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. எனவே, நாமும் இது தொடர்பாக கவனம் செலுத்தாவிடில், நம் நாட்டில் தொழில் வளம் பெருகப் பெருக மீன் வளம் பெரிதளவில் பாதிக்கப்பட ஏதுவாகும்.

மீன் விரைவில் கெட்டுவிடும் தன்மையுடையது. சத்துள்ள மீன் வகைகளை நல்ல முறையில் பாதுகாத்து உண்பவர்க்கு அளிப்பது மீன் தொழிலியல் ஆராய்ச்சி நிலையத்தின் நோக்கமாகும். உப்பிடுதல், பனிக்கட்டியில்வைத்துப் பாதுகாத்தல், உறைய வைத்தல், மீன் துணைப் பொருட்கள் தயாரித்தல் போன்றவை பற்றி ஆராய்ச்சிகள் தொழிலியல் நிலையத்தினரால் நடத்தப்படுகின்றன மீன்களிலுள்ள சத்துக்கள் யாவை அவற்றைக் கெடாது பாதுகாப்பது எப்படி, கலனில் மீன்களை அடைக்கும் வழி வகைகள், மீன் தூள் மற்றும் மீன் மாவு தயாரிப்பு, மீன் எண்ணெய் உற்பத்தி, உற்பத்தி செய்யப்பட்ட துணைப் பொருட்களைக் கெடாமல் பாதுகாப்பது எப்படி என்பவைகளைப் பற்றி ஆராய வேண்டிய தன் அவசியம் கூறாமலேயே விளங்கும். தவிரவும், தொழிலியல் நிலையம், அண்மைக் கடல் தூரக்கடல் இவற்றிலுள்ள மீன்களைப் பாதிக்கும் நுண்ணுயிர்கள் பற்றியும், மற்றும் கடற் பாசிகளை உபயோகிப்பது பற்றியும் அவைகளிலிருந்து இரசாயனப் பொருள்கள் தயாரிப்பது பற்றியும் ஆராய்ச்சிகள் மேற்கொண்டுள்ளது. சங்குச் சதை, கிளிஞ்சல் சதை ஆகியவற்றை உணவாகப் பயன்படுத்துநல் பற்றியும் ஆராய்ச்சிகள் தொழிலியல் நுட்ப நிலையத்தில் செய்யப்படுகிறது.

இவை யன்றி இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக நிதி உதவியுடன் கழிவு மீன்களைப் (டிராஷ் ஃபிஷ்) பயன்படுத்த வழி வகை காணும் திட்டமொன்றும் செயல்பட்டு வருகிறது. 'காரல்' போன்று பெருமளவில் கிடைக்கும் மீன்களிலிருந்து பதனம் தயாரித்து அதனை பல வகைகளிலும் பயன்படுத்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு நல்ல பயனுள்ள முடிவுகள் கிடைத்துள்ளன. இந் நிலையத்தில் 'நெத்திலி' மீனை பாயில் உலர வைப்பதால் அதன் தரத்தை வெகுவாக உயர்த்தலாமெனக் கண்டறியப்பட்டுள்ளது. 'சுறு' மீனிலுள்ள 'யூரியா'வை நீக்கி இம்மீனை மற்ற உயர் தர மீன்களுக்கு சமமான உணவாக்க இந்நிலைய ஆராய்ச்சி பயன்படுவதாக உள்ளது. ஸ்ரீலங்கா மற்றும் கிழக்கிந்திய நாடுகளுக்குப் பெருமளவில் ஏற்றுமதியாகும் உப்பு இட்ட மீன்களின் தரத்தை உயர்த்தையும் பற்றியும், அவற்றை முறையாக 'கட்டி' அனுப்புவது, மற்றும் கெடாமல் பாதுகாப்பது பற்றியும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

மீன் துறையில் நடக்கும் ஆராய்ச்சிகளின் விளைவாகவும், ஆராய்ச்சிகளின் அடிப்படையில் துவங்கவிருக்கும் மீன் வள வளர்ச்சித் திட்டங்கள் மூலமாகவும் மீன் உற்பத்தி தமிழகத்தில் விரைவில் மும்மடங்காகப் பெருக வாய்ப்புள்ளது!



அட்டை சொல்லும் கட்டுரை

இளஞ்சிறார் வரைந்த எழிலோவியம்!

அழகிய கையெழுத்துக்கு அடிப்படை சித்திரம்தானே! 'சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்' என்று நாம் சொல்கிறோம். அதனால் தான் சின்னஞ்சிறு வயதிலேயே பள்ளிகளில் சித்திரத்தைக் கற்றுக் கொடுக்கிறோம். 'இளமையில் கல்' அல்லவா?

அழகான கையெழுத்துக்குச் சித்திரம் வரையக்கற்றுக் கொள்வதுதான் சிறந்த வழி என்று காந்தியடிகளே கூறுகிறார். அவர் தம் 'சத்தியசோதனை'யில் குறிப்பிடுகிறார்:

''குழந்தைகளுக்கு எழுதக் கற்றுக் கொடுப்பதற்கு முன்னால் சித்திரம் வரையக் கற்பிக்க வேண்டுமென்று நான் தற்போது அபிப்பிராயப்படுகிறேன். பறவைகள், பூக்கள் முதலியவைகளைப் பார்த்துத் தெரிந்து கொள்வது போல் குழந்தைகள் முதலில் எழுத்தைப் பார்த்துக் கற்றுக் கொள்ள வேண்டும். பொருள்களைப் போல் சித்திரம் வரையக் கற்றுக் கொண்ட பிறகுதான் எழுத்து எழுதக் கற்றுக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால் அழகிய கையெழுத்துப் படியும்.''

இப்படி அழகிய கையெழுத்துக்கு வழிகோலும் வகையிலும், சிறுவர்களின் மனத்தில் கற்பனை வளத்துக்கு வித்திடும் வகையிலும் கடந்த நவம்பர் திங்கள் 14-ஆம் நாள் சிறுவர் சிறுமிகளுக்கான சித்திரப்போட்டி ஒன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடந்தது. இப்போட்டியை, தமிழக அரசு பள்ளிக் கல்வித்துறை நடத்தியது.

நகரத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த சிறுவர் சிறுமியர் இப்போட்டியில் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

வீட்டில் சுவற்றிலே கிறுக்குவதைப் பார்த்து நாம் குழந்தைகளைக் கண்டிக்கிறோம். ஆனால், அந்தக் கிறுக்கலிலே அன்றோ சித்திரம் பிறக்கின்றது!

சித்திரப் போட்டியைப் பார்க்கிறோம். குழந்தை மனத்தில்தான் எத்தனைக் கற்பனை! வண்ணத்தைக் குழைத்து தன் எண்ணத்தை ஓவியமாக்கும் கைவண்ணத்தைக் கண்டு நாம் வியக்கிறோம்.

பறவைகள், மலர்கள், வீடுகள், மரஞ்செடி கொடிகள், இயற்கைக் காட்சிகள்-இப்படி ஒவ்வொருவரும் வண்ணப் பென்சிலாலும், வண்ணக் குழம்பாலும் வரைந்து கொண்டிருப்பதைப் பார்க்கும் போது 'வருங்கால ஓவிய மன்னர்கள் இங்கே உருவாகிறார்கள்'







என்று சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தது.

பள்ளிக் கல்வித்துறை நடத்திய இப்போட்டியில் தென் சென்னை, வடசென்னை ஆகிய இடங்களிலிருந்து வந்த துவக்கப் பள்ளிகள், ஆரம்ப உயர்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவை கலந்து கொண்டு சிறப்பித்தன. இவற்றுள் மாநகராட்சி மன்றப் பள்ளிகளும் அடங்கும்.

ஆண்டுதோறும் நடைபெற்று வரும் இந்த ஓவியப் போட்டி, 6-11, 11-14, 14-17 வயதுத் தொகுதி சிறுவர்களுக்காக நடத்தப்படுகின்றது.

கடந்த நவம்பர்த் திங்களில் நடந்த இப்போட்டியில் ஆறு முதற் பரிசுகளுக்குரிய ஓவியங்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப் பெற்றன. புலி, ஓடம், யானைகள், வெண்ணிலா, மாட்டு வண்டி, குடும்பநலம், வெண்ணிலவில் காட்சியளிக்கும் பனைமரங்கள், ஏரிக்கரையிலுள்ள வீடுகள் ஆகிய ஓவியங்களெல்லாம் நம் மனத்தை வெகுவாகக் கவர்ந்தன.

முதல் பரிசு பெற்ற ஆறு பேர்கள் வருமாறு:

சி. சிநேகலதா

1. பி. ஜமுனா (வயது 15) பத்தாம் வகுப்பு, ஏ. ஆர். சி. மகளிர் உயர்நிலைப் பள்ளி, சென்னை-1.

2. டி. வி. சுவாமிநாதன் (வயது 8) நான்காம் வகுப்பு, எஸ். எஸ். ராகவேந்திரராவ் துவக்கப்பள்ளி, சென்னை-5.

3. பி. எஸ். சுந்தர் (வயது 12) ஏழாம் வகுப்பு, தனக்கோடி நடுநிலைப்பள்ளி, எழும்பூர்.

4. ஆர். ஜெயசீலன் (வயது 9) ஐந்தாம் வகுப்பு, மாநகராட்சித் துவக்கப்பள்ளி, நம்மாள்வார்ப் பேட்டை.

5. ஏ. கலாவதி (வயது 14) பத்தாம் வகுப்பு, மாநகராட்சி மகளிர் உயர்நிலைப் பள்ளி, நுங்கம்பாக்கம்.

6. ஜி. சந்திரசேகர் (வயது 15) ஒன்பதாம் வகுப்பு, மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி, பெரம்பூர், சென்னை-11.

இவை தவிர, சாந்தோம் தூய ரபேல்ஸ் மகளிர் உயர்நிலைப் பள்ளியில், எட்டாவது வகுப்பு பயிலும் சி. சிநேகலதா வரைந்த ஓவியம் ஒன்றும் சிறப்பாக இருந்தது. இந்தப் படம்தான் தமிழரசு' முகப்பில் இடம், பெற்றிருக்கிறது.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு, அறிவுக்கு விருந்தூட்டும் நூல்களும், சான்றிதழ்களும் பரிசாக வழங்கப்பட்டன. மாண்புமிகு கல்விமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் வெற்றி பெற்ற இளஞ்சிறார்க்குப் பரிசுகள் வழங்கி வாழ்த்துக்கள் கூறினார்.





சித்திர எழுத்து!

சித்திர எழுத்து என்பது பண்டைய எகிப்தியர் தங்கள் கோயில்களிலும் வெற்றித் தூண்களிலும் பிறநினைவுச் சின்னங்களிலும் வெட்டியதும், தங்கள் ஓவியங்களில் வரைந்ததுமான எழுத்தாகும்.

எகிப்தியர் முதலில் சூரியன், மலர், கண் போன்ற பொருள்களைக் குறிப்பதற்கு அவற்றின் உருவங்களையே சித்திரங்களாக எழுதிவந்தனர். இந்த முறை மிகுந்த கடினமானதாகவும் மிகுந்த காலம் பிடிப்பதாகவும் இருந்தது. அதனுடன் கருத்துக்களைக் கூறுவதற்கு ஏற்றதாகவுமில்லை. ஏராளமான உருவங்களைப் பயன்படுத்த வேண்டியதாகவுமிருந்தது அதனால் 'உருவ எழுத்தை' (Pictograph) விட்டுக் 'கருத்தெழுத்தைப்' (Ideograph) பயன்படுத்தத் தொடங்கினர். அம்புகள் பாய்ந்து செல்லுமாறு வரைந்து போர் என்பதைக் குறித்தனர். கண் எழுதி அதனடியில் செங்கோல் எழுதினால் அது அரசன் என்பதைக் குறிக்கும்.

இதன்பின்னர் சொற்களையும் சொல்லின் பகுதிகளையும் குறிப்பதற்கான படங்களைப் பயன்படுத்தினர். கல் என்று படிப்பதைக் குறிக்கும் சொல்லை எழுதுவதற்கு அதே ஒலியையுடைய கல் (பாறையில் ஒரு பகுதி) என்ற பொருளின் உருவத்தை எழுதுவது போன்றதாகும். இந்த முறை, இந்த உருவங்கள் 'சொல் அடையாளங்கள்' (Word-Signs) எனப்படும்.

ஆதியில் எகிப்தியர் தங்கள் சித்திர எழுத்துக்களைக் கல்லாலான நினைவுச் சின்னங்களில் வெட்டுவதற்கே பயன்படுத்தி வந்தனர். உளியும் சுத்தியும் கொண்டு வெட்டும் இச் சித்திர எழுத்துக்கள் சின்னங்களை அழகுபடுத்தவும் உதவின.



நாளையத் தலைமுறைகளான இன்றைய மாணவர்கள் கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்து விளங்கிட இன்றே அவர்களை நாம் நல்லவர்களாக-வல்லவர்களாகத் தயார்ப்படுத்த வேண்டாமா?

இந்த வகையில் சேலம் மாவட்டத்திலுள்ள ஓவியர்கள் எல்லாம் ஒன்றுகூடி நல்ல செயலைச் செய்திருக்கிறார்கள். அண்மையில் இவர்கள் 'மாவட்ட மறுமலர்ச்சி ஓவியர்கள் மன்றம்' என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி அதன் சார்பாகக் குழந்தைகள் ஓவியப் போட்டியும், கண்காட்சியும் ஒன்றையும் நடத்தினார்கள்.

இந்த நல்ல நிகழ்ச்சியில் 250 பள்ளிக் குழந்தைகள் பரவசமுடன் கலந்து கொண்டு, தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர். அவர்களின் இளங்கற்பனை நெஞ்சங்களில் எழுந்து, வண்ண ஓவியமாக மாறி, பார்ப்போரின் நெஞ்சங்களைக் கொள்ளைகொண்ட ஓவியங்கள் ஏராளம்! இந்த மன்றம் சேலத்திலும், மேட்டூரிலும் தமிழக ஓவியர்களின் ஓவியக் கண்காட்சி ஒன்றையும் நடத்தியது.

இம்மாதிரியான போட்டிகள், கண்காட்சிகள் எல்லாம் மாணவர்க்கு ஊக்கமும், உற்சாகமும் ஊட்டி அவர்கள் வாழ்க்கையில் ஏணி போன்று ஏற்றம்பெற்றிடப் பெரிதும் உதவும் என்பதில் எள்ளவும் ஐயமில்லை!

—பி.வி.ஜி.

இரைப்பு நோய்

— டாக்டர் ஆ. நடராசன்

'சித்தன்' என்ற சொல் உலகில் வேறு எந்த மொழியிலும் காணக் கிடைக்காததால், அத்தகு சிறப்பான சொல்லை நம் தமிழ் மருத்துவத்திற்குச் சூட்டிச் "சித்த மருத்துவம்" என்று அழைத்து வருகிறோம். சித்தன் என்றால் அறிஞன் என்று பொருள் விளங்கும். அத்தகு நம் முன்னோர்களான தமிழறிஞர்கள் (சித்தர்கள்) ஆதிகாலத்திலேயே நோயையும் வரையறுத்து அதற்குண்டான மருந்துகளையும் சிகிச்சை முறைகளையும் கண்டுபிடித்து வைத்து விட்டனர். இனி உலகில் எவராலும் புதுவிதமான நோய்களையோ, அதற்குண்டான மருந்துகளையோ புதுவிதமான நோய்களையோ, அதற்குண்டான மருந்துகளையோ கண்டுபிடிக்க முடியாதென்று திண்ணமாகக் கூறலாம்.

நோய்கள் உற்பத்தி ஆவதற்கு முக்கிய காரணங்கள் தட்ப, வெப்ப நிலை மாறுதலும் உணவு மற்றும் பழக்க வழக்கங்களுமேயாகும். அவ்வகையில் நம் நாட்டில் முன்பனி, பின்பனிக் காலங்களுக்கிடையே உள்ள (கார்த்திகை-மார்கழி) மாதங்களில் சில நோய்கள் தோன்றுகின்றன. அவைகளில் முக்கியமானவை வாதநோய்களும், காசநோய்களும் ஆகும். காசநோய்கள் இருபது வகைப்படும் அவை யாவன: 1. சுவாசகாசம் 2. மந்தாரகாசம் 3. இரத்தகாசம். 4. நீலகாசம் 5. சிலேட்டுமகாசம் 6. பித்த காசம், 7. வாதகாசம், 8. பாலகாசம், 9. வீரணகாசம் 10. கர்ப்பகாசம், 11. கோழை அல்லது ஈளை காசம். 12. தொந்த காசம், 13. பக்ககாசம், 14. பக்கமந்தார காசம், 15. சுடர் காசம், 16. பீநீரகாசம், 17. நாதகாசம், 18. வலிகாசம், 19. அடைப்புக்காசம், 20. சூன்ம காசம் என்பன.

இந்த இருபது வகைகளில் சுவாசகாசத்தைப் பற்றிச் சற்றுச் சுருக்கமாக ஆராய்வோம். இந்நோய்க்கு இரைப்பே முதன்மையான குறியாக இருப்பதால் 'இரைப்பு நோய்' என்று கூறுவர். ஆங்கில மருத்துவத்தில் இந்நோயை ஆஸ்துமா என்று அழைக்கின்றனர்.

இந்நோய் சித்தமருத்துவ ஆராய்ச்சிப்படிப் பிராணவாயுக் கோளாறு அடைந்து வாத, பித்த சிலேத்துமத்தில் கலப்பதால் கோபம் அல்லது அச்சம், மலச் சிக்கல், மிகு உணவு, வாயு, சூன்மம், சூலைப் பிடிப்பு, நெஞ்சின் தளர்ச்சி முதலிய குற்றங்களால் உண்டாகிறது. மேலும் தொண்டையில் உண்டாகும் சுர சுரப்பாலும் நரம்பிற்குக் காணும் அதிர்ச்சியாலும் அந்த அதிர்ச்சியினால் ஏற்படும் நீர்க்கட்டியாலும் இந்நோய் ஏற்படுகிறது. இந்நோய் பெரும்பகுதி சுவாசத்தைப் பற்றிய நோயாக இருப்பதால் இதற்குச் சுவாசகாசம் என்று பெயர் வந்தது.

சுவாசக் குழலில் அடைப்புகள் ஏற்படுவதால்-சுவாசிக்கும் காற்று தடைபடுவதால் மூச்சுத் திணறலும் இளைப்பும், இருமலும் ஏற்படுகின்றன. இந்நோய் பெரும்பாலும் வயது முதிர்ந்த ஆண்களுக்குத்தான் அதிகம வருகிறது. பெண்களுக்குக் குறைவாகவும் குழந்தைகளுக்கு மிக மிகக் குறைவாகவும் காண்கிறது. இந்நோய் பரம்பரை • முறையினாலும் சுற்றுப்புறச் சூழ்நிலையினாலும், (தொழில், சாம்பிராணிப்புகை, கந்தகவாடை, நெல் ஆவி, பஞ்சின் தூசு, சணல் தூசு மற்றும் நுண்ணிய தூசுகள் முதலியன) தட்பவெப்ப நிலைமாறுவதாலும் இந்நோய் உண்டாகிறது. இந்நோயைத் தற்காலிகமாகவும் நீடித்து வருவனவாகவும் என இரண்டாகப் பிரிக்கலாம். நீடித்து வரும் இந்நோய்க்கு ஆங்கில மருத்துவத்தில் பூரண குணமாக்க மருந்துகள் இல்லையென்றே கூறுகின்றனர். ஓமியோபதியில் இந்நோய்க்கு, இருபது மருத்துகளுக்கு மேல் உள்ளதாக விவரிக்கின்றனர். ஒவ்வொரு மருந்தும் ஒவ்வொரு முக்கியக் குறிகளுக்கேற்றவாறு கொடுத்து வருகின்றனர். இம்முறை நஞ்சே நஞ்சைப் போக்கும் என சித்த மருத்துவ மொழிக்கேற்ப உள்ளது.

இந்நோயைப் போக்கச் சித்தர்கள் மருந்தில்லாமலேயே யோக முறையில் (மூச்சையடக்குதல்) தீர்த்துக் கொள்ளவும் வழி வகுத்துள்ளனர். இம்முறையைப் "பிராணாயாமம்" என்றும் கூறுகின்றனர். மற்றும் உடற்பயிற்சி மூலமாகவும் குணப்படுத்தலாம். மற்றும் மூலிகைகளாலும், உலோகங்களாலும், கனிகளாலும் (நஞ்சுகள் முதலியன), சூரணம், செந்தூரம் பஸ்பம், சுண்ணம், கட்டு, லேகியம், எண்ணெய், குடிநீர் என்றும் இறைவழிபாடு, இசைகள் மூலமும் நோயை குணப்படுத்தியுள்ளனர். மார்கழி மாதத்தில் மிகவும் அதிகாலையில் எழுந்து குளிர்ந்த நீரில் நீராடிவிட்டு, சிறிது தூரம் நடந்து சென்று பனியில் நனைந்து இளம் வெயிலில் காய்ந்து நீர்கலந்த துளசி இலை, நீர் கலந்த வில்வ இலைகளைச் சாப்பிடலாம். இலையை விட இலைமேல் படும் நீருக்கு வீரியம் அதிகம் (அணுக்களாகப் படுவதால்) உண்டு. இயற்கைக் கோளாறான மாற்றங்களைப் போக்க இவற்றை மருந்தாகப் பயன்படுத்தி, இம்முறையைக் கையாண்டு வந்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நோய் வராமல் தடுப்பதற்கு மலச்சிக்கல், அதிக உணவு, மிதமான போகம், கடுமையான உழைப்பு, அதிகக் கொழுப்புணவு, இரவு அதிகமாகக் கண் விழித்தல், சீதன உணவு வகைகள் (பூசணிக்காய், வெண்டைக்காய், வெள்ளரிக்காய், தக்காளி முதலியன) இவைகளை நீக்க வேண்டும். மண் புழுதி படும் இடங்கள், பஞ்சாலைகள், கந்தகத் தொழிற்சாலை, நெற்சுனைகள் உள்ள இடங்கள், புகையுள்ள இடங்கள் இவைகளில் புழங்குகிறவர்கள் தக்க பாதுகாப்பான ஆடைகள் அணிந்து கொள்வதன் மூலம் இந்நோய் வருவதைத் தடுத்துக் கொள்ளலாம்.

புகையிலையினால் ஆன பீடி, பொடி, சுருட்டு, சிகரெட் முதலியவைகளை உபயோகிக்காமல் தொண்டைக்கு அழற்சி ஏற்படாவண்ணம் ஒலி எழுப்பாமல் இந்நோய் வராமல் தடுக்கலாம்.

வந்தபின்....இரைப்பு நோயுள்ளவர்கள் துளசியை அதிகாலையில் உணவிற்கு முன்பு கைப்பிடி அளவு தொடர்ந்து உண்டு வந்தாலும் வில்வ இலையைக் கைப்பிடி அளவு தினம் காலையில்

தொடர்ந்து உண்டு வந்தாலும், ஆடாதோடை இலையை வெந்நீரில் போட்டுச் சுண்டக் காய்ச்சித் தொடர்ந்து (50 மி. லிட்டர் அளவு) குடித்து வந்தாலும், தூதுவளையின் சிறு காய், பூ, இலை, வேர், இவற்றைத் துண்டாக வெட்டி நிழலில் உலர வைத்து நன்ருகப் பொடி செய்து தினம் காலையில் ஒரு தேக்கரண்டியளவு பாலில் கலந்து குடித்து வந்தாலும், சுண்டங்கத்திரிகைச் சூரணம் பால் அல்லது வெந்நீரில் கலந்து குடித்து வந்தாலும், கரு ஊமத்தம் பூவைச் சுருட்டுப் பிடிப்பது போல் உபயோகித்தாலும், தொடர்ந்து வெள்ளெருக்கன் பூவின் உள்ளிருக்கும் நரம்பு ஒன்று, கிராம்பு ஒன்று வெற்றிலையில் வைத்து நோயுள்ள போது சாப்பிட்டாலும் குணம் காணலாம்.

கடைச்சரக்குகள்

சுக்கு, மிளகு, திப்பிலி, சிறு தேக்கு, சிறு நாகப்பூ, தாளிசப் பத்திரி, சீரகம், சித்தரத்தை, கிராம்பு, வெட்டிவேர், விளாமிச்சை வேர், சந்தனத்தூள், லவங்கப்பட்டை, ஓமம், கருஞ்சீரகம் திப்பிலி, தான்றிக்காய், பெருநாகப்பூ, கடுக்காய், ஏலக்காய், ஜாதிக்காய், வெங்கபத்திரி, கிச்சலிக்கிழங்கு, தக்கோலம் இவைகளைத் தனித்தனியாகவோ ஒன்ருகச் சேர்த்தோ நன்ருகச் சூரணித்துச் சம அளவு சர்க்கரை சேர்த்து நாள்தோறும் மூன்றுவேளை அரைத் தேக்கரண்டி அளவு தேனில் குழைத்து நோய் நீங்கும் மட்டும் சாப்பிட்டு வரலாம். கடைச்சரக்குகளையும் மேலே குறிப்பிட்ட மூலிகைகளையும் இரசாயன முறையாகவும், லேகிய முறையாகவும் செய்முறை அறிந்தோரைக் கொண்டு செய்தும் சாப்பிட்டு வரலாம். மற்றும் சித்த மருத்துவ முறைப்படி தயாரித்த, தாளகக் கருப்பு, தாளகப் பற்பம், தாமிரபற்பம், தாமிர செந்தூரம், சுண்ணம், லிங்கக்கட்டு இவைகளைத் தகுந்த அநுபானங்களில் உடல்நிலைக்கேற்றவாறும் உண்டு வந்தால் இரைப்புநோய் முழுக்க குணமாகும் என்பது திண்ணம்.

நோயை வரையறுத்து அதற்குரிய மருத்துகளையும் வரையறுத்து உள்ளவர்கள். இந்நோய்க்குச் சித்த மருத்துவத்தில் மருந்தில்லை. என்ருல் வியப்பாக இருக்கிறதல்லவா ஆகையால் சித்த மருத்துவத்தில் இரைப்பு நோயாளர்கள் முழுநலம் பெற அருமையான மருந்துகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"தமிழரசு" பொங்கல் மலர் தயாராகிறது!

"தமிழரசு" வாசகர்களுக்குப் பொங்கல் பரிசாக

பொங்கல் மலர் வெளியிடப்படவிருக்கிறது!

ஏழை எளியவர்களின் வாழ்வை வளப்படுத்தி,
ஏற்றத்தாழ்வற்ற சமதர்மச் சமுதாயம் அமைத்திடத்
தமிழ்நாடு அரசு மேற்கொண்டுவரும்
ஈடு இணையற்ற திட்டங்கள்!

இந்தியாவில் எந்தெந்தத் துறைகளில்
தமிழகம் எடுத்துக்காட்டாக விளங்குகிறது
என்பதற்கான ஆதாரங்கள்!

எல்லாத் துறைகளிலும் கடந்த எட்டாண்டுகளில்
ஏற்பட்டுள்ள ஏற்றமிகு சாதனைகள்!
சிந்திக்கத் தூண்டும் கட்டுரைகள்!
சிந்தையை மகிழ்விக்கும் கவிதைகள்!
பக்கத்துக்குப் பக்கம் புகைப்படங்கள்!

இத்தனையும் தாங்கி
192 பக்கங்களுடன்
வண்ணமலர்க் குவியலாக
16-1-1976 தேதிய
'தமிழரசு' இதழ் வெளிவருகிறது!

ஆயினும் விலையோ 50 காசு தான்!

ஆகவே,
"தமிழரசு" பொங்கல் மலர்
வாங்கிட முந்துங்கள்!!



தமிழின் புகழ்மிஞ்ச, தமிழகத்தில் வளம்கொஞ்ச இமைப்போதும் அயராமல் பாடுபடும் தமிழ்நாடு அரசின் ஆக்கப் பணிகள் அளவற்றவை! அவற்றை முறைப்படத் தொகுத்துக் காட்டும் சிறு முயற்சியே — உங்கள் கரங்களை அலங்கரித்து மணம்சிந்தும் இம் மலர்! பொழுது போக்கு அம்சங்கள் இதில் குறைவு. ஆனுல், பொழுதைப் பயன்மிக்கதாக்கிடும் திட்டங்கள்-விவரங்கள் இதில் நிறைவு! ஆம்; இஃதொரு காலக் கண்ணுடி! அரசு ஆற்றியுள்ள அத்தனைத் திட்டங்களின் மொத்தப் பட்டியல் அல்ல இது; ஆனுல்- இன்று தொடுத்ததை விரைந்து முடித்திடத் தொடர்ந்திடும் எங்கள் பணி! மலரின் மணத்தினை நுகரலாம் நீவிர் இனி!

இன்பப்பொங்கலில்,
எல்லார்க்கும் எங்கள்
பொங்கல் வாழ்த்துக்கள்!

தமிழரசு
மலர்: 6 இதழ்: 13
16-1-1976

கண்ணொளி தரும் தமிழகம்

இந்த விழா மண்டபத்துக்குள் நான் நுழையும்போது 36 நாடுகளின் கொடிகள் காற்றில் அசைந்தாடிப் பறப்பதைப் பார்த்தேன். 1958-ல் கெய்ரோவில் கூடிய கண் மருத்துவ நிபுணர்கள் மாநாட்டுக்குப் பிறகு அடைந்துள்ள வளர்ச்சி உத்வேக மூட்டுவதாக உள்ளது. இந்த அமைப்பும் விரிவடைந்துள்ளது. ஆசிய - ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த கண் மருத்துவ நிபுணர்களின் இந்த 6-வது மாநாட்டில் இங்கே கூடியிருக்கும் இவ்வேளையில் உங்களோடிருப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். ஆசிய ஆப்பிரிக்க மக்களின் நன்மைக்காக ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் உள்ள கண் மருத்துவ நிபுணர்களை ஒன்று திரட்டி அவர்களது பணிகளில் ஒருங்கிணைப்பை உருவாக்கும் பணியில் நீங்கள் ஈடுபட்டிருக்கிறீர்கள்.

ஐந்தாவது மாநாட்டை நீங்கள் டோக்கியோவில் நடத்திய நேரத்தில் 6-வது மாநாட்டை இந்தியாவில் கூட்ட வேண்டுமென்று விடுக்கப்பட்ட அழைப்பை நீங்கள் மனமுவந்து ஏற்றுக் கொண்டது எனக்கு மன நிறைவை அளிக்கின்றது. இந்தியக் கண் மருத்துவ நிபுணர் கழகம் மாநாட்டைச் சென்னையில் நடத்துவதென்று தீர்மானித்தது.

தமிழகத்தின் தலைநகர் சென்னையில் கூடியுள்ள இம்மாநாட்டைத் திறந்து வைப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். சென்னையில் மாநாடு நடைபெறுவது மிகவும் பொருத்தமுடையதாகும். ஏனெனில் தமிழ் நாட்டில்தான் பார்வையில்லாத் துன்பத்தைப் போக்கிடப் பெருமளவில் அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

இந்தியாவில் பார்வை இழந்தவர்கள் இருபது இலட்சம் பேர்- அதாவது உலக முழுவதும் இருக்கும் பார்வை அற்றவர்களில் நான்கில் ஒரு பகுதியினர் இங்கே இருக்கிறார்கள். கண் பார்வையற்றுப் போவதற்கான காரணங்களை ஆராய்ந்தால் அவற்றில் பெரும் பகுதி தடுத்திடக் கூடியதே என்பது விளங்கும். கிராமப்புறத்து ஏழை எளிய மக்களிடையேதான் பார்வையில்லாமை அதிகமாக நிலவுவதும் தெளிவாகின்றது. ஆக இந்த நோய் தீர்க்கும் பணிக்கு இந்நாட்டில் அதிகத் தேவையிருக்கிறது.

சமுதாய அளவில் கண் நோய் மருத்துவம் பற்றி நீங்கள் இம்மாநாட்டில் ஆராய இருப்பது அறிந்து மகிழ்ந்தேன். மக்கள் நலனுக்காக உலக நிறுவனமும் இவ்வாண்டு கண் நோய் பற்றிக் கவனம் செலுத்தத் தீர்மானித்து உள்ளது. பார்வை இழப்பைத் தடுப்பதற்கான பல வகை முறைகள் பற்றியும் இதற்கென உள்ள அமைப்புகள் பற்றியும் ஆராயப்பட வேண்டும்.

ஏற்கனவே இந்தத் துறையில் முன்னணியில் இருக்கும் சென்னை கண் மருத்துவ விஞ்ஞானிகளுக்கு இம்மாநாட்டில் நடைபெறும் விவாதங்களால் மேலும் பயன் கிட்டும்.

மரா-...



முதல்வர் கலைஞர்

மூப்படைந்தாலும், பார்வையிருந்தால் ஒருவர் தன் சொந்த வேலைகளைக் கவனித்துக் கொள்ளலாம். மூப்பும் அடைந்து பார்வையும் அற்றவர்களாக இருந்தால் அத்தகையவர்களை வீட்டில் இருப்பவர்கள் ஒரு சுமையாகக் கருதுவதும் உண்டு. உதாரணத்துக்குச் சொல்வதானால், வயதான மாமியார் பார்வையற்றவராக இருந்தால், மருமகள் வீட்டு வேலைகளில் மூழ்கி இருக்கும் போது, ஒரு குவளைத் தண்ணீர் கொண்டு வரும்படி மாமியார் கூறுவார். மருமகள் தண்ணீர் கொண்டு வர நேரமாவதைச் சகியாமல் ஏசுவார். இதைக் கேட்ட மருமகளோ அடிக்கடி இப்படி என்னைத் தொந்தரவு செய்வதைத் தவிர இந்தக் கிழடுக்கு வேறு வேலை இல்லை என்று கூறுவாள். இதைக் கேட்ட மாமியார் கடவுளை நிந்திப்பார். இந்தக் கடவுள் எதற்காக என்னைப் படைத்தார். படைத்து விட்டுப் பார்வையைப் பிடுங்கிக் கொண்டார் என்று கடவுளை நிந்திப்பார். தனது இயலாமைக்கு அவர் கடவுளை நோகிறார் என்பதோடு வீட்டில் இருக்க வேண்டிய சூழ்நிலையும் அதனால் கெடுகிறது. கடவுள், சமயம் ஆகிய விஷயங்களில் எனது கருத்து என்ன என்பதை நீங்கள் அறிவீர்கள். கடவுளை இம்மாதிரி நிந்தனைகளிலிருந்துகாப்பாற்றவே நானும் எங்கள் அரசும் கண்ணொளி வழங்கும் இந்தத் திட்டத்தில் இறங்கியிருக்கிறோம்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றார் கவி ரவீந்திர நாத் தாகூர். எங்கள் அன்பான தலைவர் அண்ணா அதை அடிக்கடிமேற்கோள் காட்டுவார். கடவுள் எங்கே? காட்டு பார்ப்போம் என்று கூறுபவர்கள் இருக்கிறார்கள். வறுமையில் உழலும் ஏழை, எளியோர் சிரிப்பில் இறைவனைக் காணவே இந்தக் கண்ணொளித் திட்டத்தை அமுலாக்கி வருகிறோம். சமுதாயத்தில் பார்வை அற்றோர் முகத்தில் சிரிப்பைக் காண-புறக்கணிப்புக்கு ஆளானோர் முகத்தில் சிரிப்பைக் காண எங்களை நாங்கள் அர்ப்பணித்துக் கொள்கிறோம்.

பார்வை அற்றோரைப் பயனற்றவர்கள் என்று ஒதுக்கிவிட இயலாது. அவர்களாலும் செய்யப்படக் கூடிய சில தொழில்கள் இருக்கின்றன. அவர்களது ஆற்றலுக்கேற்ற வேலைகளில் அவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களிடையே நிலவும் தாழ்வு மனோபாவத்தை அகற்றலாம் என்பதோடு அவர்கள் தாங்கள் ஏனைய மக்களுக்குச் சமமானவர்கள் என்ற உணர்வையும் பெறச் செய்யலாம்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவாரூர் என் சொந்த ஊர். அங்கே 1972-ஆம் ஆண்டு, முதல் கண்ணொளி முகாம் நடந்தது. அந்த முகாமில் ஆயிரக் கணக்கானோர் சிகிச்சை செய்துகொண்டனர்.

பன்னிரண்டு வயதுச் சிறுவன் ஒருவனும் அங்கு சிகிச்சை பெற்றான். அவனது கண்களில் போடப்பட்டிருந்த கட்டு அகற்றப்பட்டதும் தனக்குப் பார்வை திரும்பி விட்டதை உணர்ந்த அச்சிறுவன், ''நான் பார்க்கிறேன்—என்னால் பார்க்க முடிகிறது'' என்று மேடையிலே துள்ளிக் குதித்தான். மேடையிலே அப்படித் துள்ளிக் குதித்தான் என்பதோடு கூடியிருந்த மக்களிடையே கலந்து ''என்னால் பார்க்க முடிகிறது— என்னால் பார்க்க முடிகிறது'' என்று மீண்டும் மீண்டும் கத்தினான். பலருக்கு அச்சிறுவன் அவ்வாறு கத்தியது வீண் கூச்சலாகப் பட்டிருக்கலாம். ஆனால் நண்பர்களே, அச்சிறுவனது அந்தக் கூச்சல் பொருள் பொதிந்த சங்கீதமாக எனக்குப் பட்டது. அந்த இனிய இசை இன்றளவும் என் காதுகளில் ரீங்காரம் இடுகிறது. எனது வாழ்நாளில் அந்தக் காட்சியை என்னால் மறக்கவே முடியாது.

[சென்னையில் கடந்த 4-1-1976 அன்று நடைபெற்ற ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த கண் மருத்துவ நிபுணர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்து முதல்வர் கலைஞர் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.]





மக்களாட்சியின் வலிமை, மக்களுக்கும் அரசுக்கும் உள்ள தொடர்பை அடித்தளமாகக் கொண்டு அமையும். அவ்வகையில் தமிழ்நாடு அரசின் செய்தி-மக்கள் தொடர்புத் துறை ஆற்றிவரும் அரும்பணிகளை நாட்டினர் நன்கு அறிவர்.

நமது செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், தான் இந்தியாவிலேயே முதன்முதலாக மாநில அளவில் திரைப்படச் செய்திப் பிரிவு அமைக்கப்பட்டுப் படங்கள் தயாரிக்கப்பட்டு அனைவருடைய பாராட்டுதல்களையும் பெற்று வருகின்றோம்.

தமிழ்நாடு அரசின் செய்தி–மக்கள் தொடர்புத்துறை கடந்த ஏழெட்டு ஆண்டுகளில் இதழ்த் துறையாளர்களுக்குச் செய்துள்ள பணிகளும் உதவிகளும் குறிப்பிடத்தக்கனவாகும்.

எல்லா மாநிலங்களுக்கும் வழிகாட்டும் வகையில் பல்வேறு துறைகளில் தமிழ்நாடு அரசு முன்னணியில் திகழ்வது போன்று செய்தி-மக்கள் தொடர்புத் துறை தன் பணிகளிலும் சிறந்து விளங்கி வருகிறது.

அதற்கு உரிய ஓர் எடுத்துக்காட்டு— 'தமிழரசு' இதழ்!

'தமிழரசு' இதழ் தமிழ்நாடு அரசின் ஆக்கப்பூர்வப் பணிகளை மக்களுக்கு எடுத்து விளக்கும் பட்டயமாகப் பவனி வருகிறது.

அரசு இதழ் என்றாலே பார்க்கவும் படிக்கவும் முடியாத அளவில் பெயரளவுக்கே ஏடாகத் திகழ்ந்த நிலைகளை மாற்றி, காண்போரைக் கவரத்தக்க வகையில் அரசு இதழும் வெளிவர முடியும் என்பதை எல்லாருக்கும் எடுத்துக்காட்டி வெளிவந்து கொண்டிருப்பது 'தமிழரசு'.

அரசின் பத்திரிகை பொழுதுபோக்குக்குரிய இதழாக இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. அந்த வகையில் பொருள் பொதிந்த செய்திக் குவியலாக வந்து கொண்டிருக்கும் 'தமிழரசி'ன் இந்த இதழ் பொங்கல் மலராக வந்துள்ளது.

மணம் நுகருங்கள்! மலரைப் பற்றிய கருத்தையும் எழுதுங்கள்! இனிய நன்னாளில் எல்லாருக்கும் என் இதயவாழ்த்துக்கள்!

அறநிலைய அமைச்சர் **மு. கண்ணப்பன்**

எங்கள் பணி தொடருகிறது!

குடிசைகளை அகற்றி மாடி குடியிருப்புகள்
கட்டுவது மட்டுமல்ல எமது பணி.
குடிசைவாழ் மக்களின் மனமாற்றம்,
சுகாதார வாழ்க்கை, பலனுள்ள வகையில் குடிசைத்
தொழில் வளர்ச்சி — இவைகளும் பெற்றிட
தொண்டு புரிவோம்!

இராம. அரங்கண்ணல், எம்.எல்.ஏ.,
தலைவர், குடிசைப் பகுதி மாற்று வாரியம்.



இணையற்ற எட்டாண்டுகள்!

கடந்த எட்டு ஆண்டுகளிலே தான் தமிழக வேளாண்மையில் எத்தனை முன்னேற்றம்! புதிய புதிய உயர் விளைச்சல் ரகங்கள், அடுத்தடுத்துக் கண்டுபிடிக்கப் பட்டு தமிழக வேளாண் பெரு மக்களுக்கு காணிக்கையாக்கப் பட்டன! அவைகளுக்கான சாகு படி முறைகளும் சீராக்கப்பட்டு இந்த ரகங்களின் முழுப்பயனை யும் பெற வழிமுறைகள் வகுத் துத் தரப்பட்டன! தேவையான இடுபொருள்கள் காலத்தே, தட்டில்லாமல் கிடைக்க எடுக்கப் பட்ட நடவடிக்கைகள் பலப்பல! தரிசு நிலங்கள், தானியம் கொழிக் கும் கழனிகளாக மாற்றப்பட் டன! வானை நோக்கி இருந்த வறண்ட பகுதிகளிலே இன்று வடிமுனைக் குழாய் கிணறுகளும், ஆழ்குழாய்க் கிணறுகளும் வற் றாத நீர்ப்பாசனம் அளிக்கின்றன! வேளாண் பெருமக்களிடையே ஒரு புதிய விழிப்பு, புதிய முறைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற ஒரு துடிப்பு காணப்படுகிறது! இதன் பயனாக, உணவு உற்பத்தியில் விரைவான முன்னேற்றம் — பற்றாக்குறை மாறி, தன்னிறைவு பெற்ற நிலை — மேன்மேலும் முன்னேற்றத்திற் கான சூழ்நிலை உருவாக்கப்பட்டு விட்டது.

அ. வேங்கடராமன்,
பி.எஸ்.சி.(வே)., எம்.எஸ்.,
இயக்குநர்,
வேளாண்மைத் துறை.

விளைநிலங்கள்

எட்டு ஆண்டுகளுக்கு முன், தமிழ்நாட்டில் 152.12 இலட்சம் ஏக்கர் விளைநிலங்கள் சாகு படியிலிருந்தன. இவைகளில் 30.50 இலட்சம் ஏக்கர்கள் மறு பயிர் செய்யப்பட்டு மொத்தம் 182.62 இலட்சம் ஏக்கரில் விளை பொருள்கள் உற்பத்தி செய்யப் பட்டன. தரிசு நிலங்கள் சீர் திருத்தப்பட்டதன் பயனாய் 1973-74 முடிவில் 154.38 இலட் சம் ஏக்கர்கள் நிகர சாகுபடி யிலும், 36.85 இலட்சம் ஏக்கர்கள் மறுபயிர் செய்யப்பட்டு நாலும் மொத்தம் 191.23 இலட்சம் ஏக்கர்களில் விளை பொருள்கள் உற்பத்தி செய்யும் நிலைமையை எய்தியுள்ளோம்!

நீர்ப்பாசனம்

தமிழ்நாட்டிலுள்ள ஆறுகள் அனைத்திலும் இனி மேற்கொண்டு பெரிய நீர்த்தேக்கங்கள் அமைக்க முடியாத நிலையில், சிறுசிறு திட் டங்களும், நிலத்தடி நீரை வெளிக் கொணர்ந்து, பாசனத்திற்கு உப யோகிக்கவும் உடனடியாக பயனளிக்கக்கூடிய பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு அகில உலக மேம்பாட்டுக் குழு வும் உறுதுணையாக இருந்தது. இத்திட்டங்கள் மூலம், அன்று 62.78 இலட்சம் ஏக்கருக்கு மட் டுமே கிடைத்து வந்த நீர்பாசன வசதி இன்று 70.49 இலட்சம் ஏக்கர் அளவிற்கு உயர்ந்துள்ளது.



களம் கொழிக்க உதவும் புதிய நெல் ரகங்களை மாண்புமிகு முதல்வர் கலைஞர் வெளியிடுகிறார்!

சுருங்கச் சொல்லின், சாகுபடி நிலங்களில் 44.15 சதம் தற் சமயம் நீர்பாசன வசதி பெற் றுள்ளன. நீர்பாசன வசதியின் முன்னேற்றத்தை கீழ்க்கண்டுள்ள புள்ளி விவரங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

பாசன வசதிகள்		எட்டு ஆண்டு களுக்கு முன் பாசன வசதி பெற்ற நிலப்பரப்பு (இலட்சம் ஏக்கர்)	தற்சமயம் பாசன வசதி பெறும் நிலப் பரப்பு (இலட்சம் ஏக்கர்)
1. அரசினர்க் கால்வாய்கள்	...	21.48	23.10
2. கிணறுகள்	...	16.00	23.28

மேற்கூறிய புள்ளி விவரங்களி லிருந்து கடந்த எட்டாண்டுகளில் 8.90 இலட்சம் ஏக்கர்கள் புதிதாகப் பாசன வசதி பெற்றுள்ளன என்பது தெளிவாகிறது.

புதிய கிணறுகள் அமைத்தல், நூதன கருவிகள் மூலம் ஆழ் குழாய்க் கிணறுகள். வடிமுனைக் குழாய் கிணறுகள் அமைத்தல் ஆகியவற்றில் தனிக்கவனம் செலுத்தப்பட்டது. இக்கிணறு களுக்குத் தேவையான நீரேற்று இயந்திரங்களும், மின் விசையும் தாராளமாகக் கிடைக்க வழி செய்யப்பட்டது. 1966-67 முடிவில் தமிழ்நாட்டில் 0.43 இலட்சம் எண்ணை இயந்திரங்கள் மூலம் இயங்கும் நீரேற்று சாத னங்களும், 2.08 இலட்சம் மின் விசையால் இயங்கும் சாதனங் களும் இருந்தன. இன்று 2.34 இலட்சம் எண்ணை இயந்திரங் களும், 6.81 இலட்சம் மின் விசை இயந்திரங்களும், பாசன வசதி யளித்துக் கொண்டிருக்கின்றன.

விளைபொருள் உற்பத்தி

1966-67-ல் தமிழ்நாட்டில் உணவு உறபத்தி 54.28 இலட்சம் டன்கள். 1973-74 முடிவில் இது 73.24 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது. இதில் அரிசி உற்பத்தி குறிப்பிடத்தக்கது. அன்று 37.91 இலட்சம் டன்னாக இருந்த அரிசி உற்பத்தி இன்று 55.89 இலட்சம் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. சிறுதானியங்கள் உற்பத்தி ஒரே சீராக இருந்துள் ளது. பயறு வகைகள் உற்பத்தி யிலும் கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளோம். 1.02 இலட்சம் டன்னாக இருந்த பயறு உற்பத்தி, இருமடங்கு உயர்ந்துள்ளது!

இதர பயிர்கள் உற்பத்தியும் கணிசமாக உயர்ந்திருப்பதை கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து கண்டுகொள்ளலாம்.

பயிர் வகை	1966-67-ல் உற்பத்தி (இலட்சம் டன்)	1973-74-ல் உற்பத்தி (இலட்சம் டன்)
1. எண்ணெ வித்துக்கள் ...	8.92	12.07
2. கரும்பு (வெல்லம்) ...	8.31	13.73
3. பருத்தி (இலட்சம் பேல்கள்)	3.30	3.41

உயர் விளைச்சல் ரகங்கள், தேவையான இடுபொருள்கள், நுணுக்கமான சாகுபடி முறை கைக் கையாளுதல், இவைகளின் மூலம், உற்பத்தித் திறனும் உயர்த்தப்பட்டுள்ளது.

பயிர்	ஒரு எக்டேரில் உற்பத்தி (கிலோ) 1966-67	1973-74
1. நெல் ...	1,410	2,067
2. சிறுதானியங்கள் ...	1,540	1,567
3. பயறு வகைகள் ...	259	309
4. எண்ணெ வித்துகள் ...	780	983
5. கரும்பு (வெல்லம்) ...	9,225	10,579



நெல் உற்பத்தித் திறனில் இந்தியாவிலேயே பஞ்சாப் மாநிலத்திற்கு அடுத்து இரண்டாவதாக உள்ள நிலையில் உள்ளோம். அங்கு சுமார் 5 இலட்சம் எக்டரில்தான் நெல் உற்பத்தி. ஆனால் இங்கோ சுமார் 27 இலட்சம் எக்டர். இந்த அளவில் ஒப்பிடும்பொழுது நமது உற்பத்தித் திறனை நாடு முழுவதற்கும் முதலாவதாகக் கொள்ளலாம்.

சோதனைக்காலம்

சீராக முன்னேற்றம் கண்டுவந்த உற்பத்திக்கு 1974 - 75 - ஆம் ஆண்டு ஒரு சோதனை காலமாக அமைந்தது! வானம் பொய்த்து, நீர் நிலைகள் வற்றி, ஆறுகளிலும் போதிய தண்ணீர் இல்லாத நிலையில், வரலாறு கண்டிராத வறட்சி நமக்கு ஒரு சோதனையாக இருந்தது. இதனைக் கண்டு மனம் தளராமல், சவாலாக ஏற்று, சோதனையைச் சாதனையாக்கியுள்ளோம்! எல்லாப் பயிர்களிலும் பொதுவாக உற்பத்தி குறைந்தாலும், நெருக்கடி நிலை ஏற்படாமல் சமாளித்துள்ளோம்.

நடப்பு ஆண்டிலே நிலைமை மாறிவிட்டது. காலத்தே பெய்துள்ள மழையாலும், பருவநிலை மிகச் சாதகமாக இருப்பதாலும், இவ்வாண்டு முடிவிலே தமிழ் நாட்டின் உணவு உற்பத்தி பின்கண்டவாறு சுமார் 80.60 இலட்சம் டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

		இலட்சங்கள்
அரிசி	...	61.00
சிறுதானியங்கள்	...	17.00
பயறு வகைகள்	...	2.60
மொத்தம்	...	80.60

பருத்தி நீங்கலாக இதரப் பயிர்களின் உற்பத்தியும் மிகத் திருப்திகரமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இடுபொருள்கள் விநியோகம்

வேளாண்மைக்குத் தேவையான விதை, உரம், பூச்சி மருந்துகள் ஆகியவை விநியோகத்தில் தனிக்கவனம் செலுத்தப்பட்டது. உயர் விளைச்சல் ரகங்களின் சாகுபடி மேற்கொள்ளப்பட்ட பின் இவைகளின் தேவை மிக முக்கியமானதாக ஆகியுள்ளது.

பொருள்	விநியோகம் (டன்னில்) 1966-67-ல்	1974-75-ல்
1. விதை நெல் ...	3,826	9,384
2. சிறுதானியங்கள் ...	354	876
3. உரங்கள் ...	1,61,000	2,45,000
4. பூச்சிமருந்துகள்:— (1) தூள்கள் ...	9,000	13,000
(2) திரவ வகை (லிட்டரில்) ...	1,63,000	1,02,000

1972-73, 1973-74 ஆண்டுகளில், உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் கிடைப்பதில் தட்டுப்பாடுகள் ஏற்பட்டாலும், தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, தேவையான அளவுக்கு விவசாயிகளுக்குக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

புதிய உயர்விளைச்சல் ரகங்கள்

ஏக்கருக்கு 10 மூட்டை அல்லது 15 மூட்டை நெல் என்ற அளவிலேயே நமது வேளாண்மை இருந்து வந்தது. குறைந்த வயதில், இதுவரை கண்டிராத அளவு மகசூல் அளிக்கவல்ல 'ஐ. ஆர். 8,' என்ற புதிய நெல் ரகத்தைப் பிலிபைன்ஸ் நாட்டிலிருந்து பெற்று 1967-68-ஆம் ஆண்டு முதன் முதலாகத் தமிழ்நாட்டில் புகுத்தப்பட்டது. அடுத்து 'ஐ. ஆர். 20' என்ற மற்றும் ஒரு வகை காணிக்கையாக்கப்பட்டது. இந்த இரு ரகங்களின் மூலம் தமிழ்நாட்டில் நெல் உற்பத்தியில் ஒரு பெரும் புரட்சியே ஏற்பட்டு விட்டது! இவைகளுடன் ஒட்டுச் சேர்க்கப்பட்ட பல புதிய ரகங்கள் அடுத்தடுத்து வெளியிடப்பட்டன. மிகக் குறுகிய வயதுடைய 'கருணா', 'கரிகாலன்', 'கண்ணகி'. 'காஞ்சி', 'ரத்னா', 'காவேரி', 'பெண்ணை', 'அன்னபூர்ணா', 'திருவேணி' போன்ற ரகங்களும், சம்பாவிற்கு ஏற்ற 'பொன்னி', 'பவானி', 'கோ. 36' ரகங்களும் முக்கியமானவை. ஐ. ஆர். 8-ம் ஐ. ஆர். 20-ம் தொடர்ந்து சம்பாவிற்கு ஏற்ற மிக முக்கிய ரகங்களாக உள்ளன. சமீபத்திய கண்டு பிடிப்புகளான 'ஆடுதுறை-31-ம்', 'ஐ.இ.டி. 1722'-ம் குறுவை சாகுபடியில் மற்றும் ஒரு பெரும் மாறுதலை நிகழ்த்தியுள்ளன. மிகக் குறைந்த வயதில், அதிக மகசூல் கொடுக்கவல்ல மணமுள்ள 'பூசா-33' மற்றும் ஒரு புதிய கண்டுபிடிப்பு! இந்த ரகங்கள் எல்லாம் ஏக்கருக்கு குறைந்தது 40மூட்டை நெல் அளிக்க வல்லவை என்பது குறிப்பிடத்தகுந்தது.

சோளம், கம்பு சாகுபடியிலும் ஒரு புதிய திருப்பம்! மானாவாரியிலும் மிக அதிகமான மகசூல் கொடுக்கக் கூடிய விரிய ஒட்டு ரகங்கள் வெளியிடப்பட்டன. கேழ்வரகிற்கு ஏற்ற 'கோ. 10', 'சாரதா', 'பி.ஆர்.202' ஆகியவை புதிய கண்டுபிடிப்புகள். மிக அதிக மகசூல் கொடுக்கக் கூடிய 'டெக்கான்', 'கங்கா-5' போன்ற மக்காச் சோள வகைகளும், இக்காலத்தே தான் விரிவாகச் சாகுபடிக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டன.

மகசூலில் மிஞ்சமுடியாத 'அஞ்சுகம்' பச்சைப்பயறும், 'கோ.2,' 'டி. 9', 'ஆலங்குடி 1' போன்ற உளுந்து வகைகளும், குறுகிய வயதுடைய 'கோ. 2' துவரையும், பயறு வகைச் சாகுபடியில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளன!

'எம்.சி.யு.5'—ம், 'எம்.சி.யு. 8'—ம் புதிய பருத்தி ரகங்கள். 'எம்.சி.யு. 7' குறுகிய வயதுடைய நஞ்சைத் தரிசிற்கு ஏற்ற ஒரு புதிய ரகம். 'வரலட்சுமி'. 'சுவின்', 'சி.பி.எஸ்.156' ஆகியவை பருத்தி விவசாயிகளுக்கு ஒரு வரப் பிரசாதம்!

எண்ணெய் வித்து உற்பத்தியை அதிகரிக்க, சூரியகாந்தி சாகுபடி புதிதாக மேற்கொள்ளப்பட்டது. 'கே.1சூரியகாந்தி' ரகமும் வெளியிடப்பட்டுள்ளது. கரிசல் பூமிக்கேற்ற இந்த பயிர் இன்று மாநிலத்தின் தென் மாவட்டங்களில் பரவலாக சாகுபடியிலுள்ளது.

புதிய நிலையங்கள்

வேளாண்மைக்கு முதலிடம் கொடுத்து, ஆராய்ச்சிகளையும்



தீவிரமாக்கும் நோக்குடன், கோவையிலிருந்த வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், 1971-ஆம் ஆண்டு முதல் வேளாண்மைப் பல்கலைக் கழகமாக மாற்றப்பட்டது. இன்று நாட்டில் உள்ள வேளாண்மை பல்கலைக் கழகங்களில் இது முக்கியமானதாக உள்ளது. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் உதவியுடன் இங்கு அடிப்படை ஆராய்ச்சிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

காடுமேடாக இருந்த குடுமியான்மலைப் பகுதியிலே இன்று, பரந்து, விரிந்து, பசுமையாகக் காணும் 'அண்ணா பண்ணை' புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள இப்பண்ணை, தமிழ்நாடு அரசு நடத்தும் மிகப் பெரிய பண்ணையாகும். சிறுதானியங்கள், பயறு வகைகள் ஆகிய விதை உற்பத்தி பெருமளவில் இங்கு மேற்கொள்ளப் பட்டுள்ளது. புதுக்கோட்டை போன்ற வானம் பார்த்த பகுதிகளுக்கு உகந்ததாக இப்பண்ணை அமைந்துள்ளது.

அடுத்து இப்பண்ணையை மையமாகக் கொண்டு **டாக்டர் கலைஞர் கருணாநிதி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்** இன்று முழு அளவுடன் உருவாகியுள்ளது. இங்கு நடக்கும் ஆராய்ச்சியின் முடிவுகள், மாநிலம் முழுவதும் உள்ள குறைந்த நீர்பாசன வசதியுடையப் பகுதிகளுக்கு மிக்க ஏற்றதாக உள்ளன. . உழவியல், வேளாண் வேதியல், பூச்சி இயல், பூசண இயல், நீர் பராமரிப்பு, பயறு வகை ஆராய்ச்சி போன்ற எல்லாப் பிரிவுகளுடன் இந்நிலையம் இயங்கி வருகிறது.

வெப்ப மண்டல பகுதிகளுக்கான பழவகை ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் அண்மையில் இங்கு துவக்கப்பட்டுள்ளது. மா, பலா, ஆரஞ்சு, சப்போட்டா போன்ற பலவகையான பழவகைகளுக்கான ஆராய்ச்சிகளும் இங்கு மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

திரூர்குப்பம் மற்றும் அம்பா சமுத்திரம் ஆகிய இடங்களில் உள்ள துணை நெல் ஆராய்ச்சி நிலையங்கள் இன்று மண்டல விவசாய ஆராய்ச்சி நிலையங்களாக உயர்த்தப்பட்டுள்ளன. அனைத்துப் பிரிவுகளுடன் இவை இன்று முழு அளவில் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளன.

ராமநாதபுரம், கன்னியாகுமரி, செங்கை ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக மற்ற மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும்

அண்ணா பண்ணையில்
எச்.பி.1, கம்புக் கதிர்களை
முதல்வர் பார்வையிடுகிறார்!

வேளாண்மையில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள், மகளிர் ஆகியவர்களுக்கான உழவர் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வேளாண்மை சம்பந்தப்பட்ட அனைத்திற்கும் இங்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது. உழவர் விவாதக்குழுக்கள் அமைக்கப்பட்டு விவசாயிகளிடையே நேரடித் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

வேளாண்மை விளம்பரங்கள் :

ஊருக்கு ஒரு சில விவசாயிகள் முன்னேறினால் போதும் என்ற நிலை மாறி, இன்று பட்டி, தொட்டிகளிலெல்லாம் உள்ள எளிய விவசாயியும் பயனடையும் வகையில் வேளாண்மைப் பிரச்சாரங்கள் தீவிரமாக்கப்பட்டது. இந்த எட்டு ஆண்டுகளிலே தான், சுற்றிப் பார்க்கும் இடங்களிலெல்லாம் வேளாண்மைச் சுவரொட்டிகள், பெரிய வண்ண விளம்பரப் பலகைகள், சுவர் சித்திரங்கள், அனுசரணை ஆராய்ச்சிப் பாத்திகள், மற்றும் நிரூபணப் பண்ணைகள் யாவும் எவருடைய கவனத்தையும் கவராமல் இருக்க முடியாது! இவை தவிர, ஒவ்வொரு விவசாயியும் அறிந்து கொள்ளும் பொருட்டு துண்டுப்பிரசுரங்கள், சாகுபடிக் குறிப்புகள், கையேடுகள் என்று பலப்பல விநியோகிக்கப்படுகின்றன.

சாகுபடி கருத்துக் காட்சிகள், செய்முறை, விளக்கங்கள், ஸ்லைட் படக்காட்சிகள், சினிமா படக் காட்சிகள், நாடகங்கள் என்று அனைத்து சாதனங்களும் ஒவ்வொரு ஊரிலும் விவசாயிகள் பயனடையும் பொருட்டு உபயோகிக்கப்படுகின்றன இன்று! வேளாண்மைத் துறையை அறியாத விவசாயி எவரும் இலர் என்ற நிலை இன்று உருவாகியுள்ளது!



வேளாண்மைப் பொருளாதாரம் !

இந்த முன்னேற்றம் சுட்டிக் காட்டுவது என்ன? பொருளாதார அளவில் விவசாயிகளின் வருமானம் வளர்ந்துள்ளது. வாழ்க்கை நிலை உயருவதற்கான மாற்றம் ஏற்பட்டுள்ளது. விளைநிலங்களிலே செலவிடப்பட்ட தொகைக்கு வட்டியும் முதலுமாக வருமானம் பெருகியுள்ளது.

இதனால் மாநில வருமானமும் உயர்ந்துள்ளது. அன்று வேளாண்மைப் பொருள்கள் மூலம் 661 கோடி ரூபாயாக இருந்த வருமானம், இன்று சுமார் 1,645 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது! 1960-61-ஆம் ஆண்டிலிருந்த அடிப்படை விலைவாசிகள் அளவில் பார்த்தாலும், 1965-66-ல் 437 கோடி ரூபாயாக இருந்த வருமானம் இன்று 571 கோடி ரூபாயாக பெருகியுள்ளது.

இவை அனைத்தையும் நோக்கும் பொழுது கடந்த எட்டு ஆண்டுகளும், தமிழ்நாட்டின் வேளாண்மை வளர்ச்சியிலே ஈடு இணையற்றப் பொற்காலமாகத் திகழ்கிறது. இம்முன்னேற்றம் தங்கு, தடையின்றி தொடர்ந்திடவும் வரும் ஆண்டுகளும் வளமானவைகளாக இருக்கும் என்ற நம்பிக்கையுடனும் உழைப்போம், உயர்வோம்!

நில நீர் எடுத்து நிலவளம் பெருக்கிட சிறுபாசனத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு வேளாண்மைத் துறை செய்துள்ள சாதனைகள்!

ஆண்டு	தனியார்க் குழாய்க் கிணறுத் திட்டத்தின் கீழ் தோண்டப் பெற்ற குழாய்க் கிணறுகள்	கிணற்றின் உள்ளே குழாய்க் கிணறு அமைக்கும் திட்டத்தின் கீழ் அமைத்த குழாய்க் கிணறுகள்	வடிமுனைக் குழாய் கிணறு திட்டத்தின் கீழ் அமைத்த வடிமுனைக் குழாய்க் கிணறுகள்	கிணறுகளை ஆழப்படுத்தும் திட்டத்தின்கீழ் ஆழப்படுத்திய கிணறுகள்
முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951—52 முதல் 1955-56)	—	—	2,649	—
இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் (1956-57 முதல் 1960-61)	272 (1960-61-ல் மட்டும்)	—	2,766	—
1961-62 லிருந்து 1965-66 வரை	4,369	—	2,248	100
1966—67	865	565	2,038	195
1967—68	1,286	680	2,588	493
1968—69	2,077	640	2,698	854
1969—70	2,205	568	2,055	1,207
1970—71	2,237	700	1,560	1,220
1971—72	2,452	771	2,061	1,387
1972—73	2,454	705	2,163	1,394
1973—74	2,120	973	2,144	1,726
1974—75	3,014	1,269	2,609	2,060
1975—76 (அக்டோபர் முடிய)	1,939	1,087	1,532	1,719

வேளாண்மைப் பொறியியல் பணிக்கூட்டுறவு இணையத்தின் சாதனைகள்



தமிழ்நாடு, கூட்டுறவுத் துறை மூலம், வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு நிலையங்களை நிறுவுவதிலும், செயல்படுத்துவதிலும் இன்று முன்னணியில் நிற்கின்றது. இந்த வேளாண்மைப் பொறியியல் பணி நிலையங்கள் வேலையில்லா இளம் பொறியியல் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பளிப்பதை முக்கிய நோக்கமாய் கொண்டு மூன்று பிரிவுகளாக செயலாற்றுகின்றன. இதன் கட்டுகோப்பு கீழ்க்கண்டவாறு உள்ளது.

1. மாநில வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம்.

2. மாவட்ட வேளாண்மைக் கூட்டுறவுப் பணிச் சங்கங்கள்.

3. வட்டார வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவுப் பணி நிலையங்கள் (கூடம்).

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் 3-2-1972 அன்று பதிவு செய்யப்பட்டு, 23-2-1972-ல் செயல்படத் துவங்கியது. அங்கீகரிக்கப்பட்ட ஒரு கோடி ரூபாய் பங்கு மூலதனத்தில் இதுவரை செலுத்தப்பட்ட பங்குத்தொகையாகிய 9.58 இலட்சம் ரூபாயில் தமிழக அரசின் பங்கு மூலதனம் ஒரு இலட்சமாகும். இணையத்தின் அங்கத்தினர் மற்றும் செலுத்தப்பட்ட பங்குத் தொகை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

மாவட்ட, வட்ட வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு நிலையங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சியைக், கருதி மாநில வேளாண்மைப் பொறியியல் பணி கூட்டுறவு இணையம் நிறுவப்பட்டுள்ளது. மாவட்ட, வட்ட வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவுப் பணி நிலையங்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையத்தைத் தனது வழிகாட்டியாகக் கொண்டு கூட்டு முயற்சியால் திறம்படவும், பொருளாதார ரீதியில் தனித்தியங்கும் நிலையிலும் தம்மை இணைத்துக் கொண்டு விவசாயிகளுக்குப் பல்வேறுபட்ட வேளாண்மைப் பொறியியல் பணியினை வழங்கும் முறையில் அமைந்துள்ளன.

ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்டம்

ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ், தமிழக அரசு, மத்திய அரசின் உதவியுடன் 300 வட்ட (மைய) வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவுப் பணி நிலையங்களை நிறுவ ஒப்பளித்துள்ளது. அதன்படி ஒவ்வொரு வட்ட நிலையமும் அரசுப் பங்குத் தொகை மூலதனமாக தலா ரூ. 50,000/- பெறத் தகுதி பெற்றுள்ளது. அரசாணை எண். 2163 வேளாண்மைத் துறை நாள் 17-10-1973-ல் அரசு 37.50 இலட்சம் ரூபாய் தொகையை முதல் கட்டமாக வட்ட (மைய) வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவுப் பணி நிலையங்களுக்கு வழங்க ஒப்பளித்துள்ளது. நிலையங்களின் வளர்ச்சி திறனையும், தனித்தியங்கக்கூடிய நிலையினையும் பரிசீலித்து அரசு பங்குத் தொகை மூலதனமாக ஒரு நிலையத்திற்கு ரூபாய் 50,000/- வீதம் வழங்கும்பொறுப்பைத் தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையத்திடம் அரசு ஒப்படைத்துள்ளது. இணையமும் அவ்வாறே பரிசீலித்து 75 வட்ட (மைய) வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு நிலையங்களுக்கு அந்தத் தொகையை வழங்கியுள்ளது. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவும் அந்த வட்ட விவசாய பொறியியல் பணிக் கூட்டுறவு நிலையங்களுக்கு கடனுதவி செய்துள்ளது.



அரசாணை எண்.568, வேளாண்மைத்துறை நாள் 30-3-1974-ல் மீதமுள்ள 225 வட்ட வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவுப் பணி நிலையங்களுக்கு அரசுப்பங்குத் தொகையாக 112.50 இலட்சம் ரூபாயையும் வழங்க ஒப்பளித்துள்ளது. நிலையங்களுக்கு உதவி வழங்கு முன்பு இணையம் அந்நிலைய வளர்ச்சிக்கான முறைகளை ஆராய்ந்து, அரசிடம் ஒப்புதல் பெற்ற பின்னரே, அத்தொகையை அந்நிலையங்களுக்கு வழங்க வேண்டுமென்று மேற்கண்ட அரசு ஆணையில் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. 225 வட்ட வேளாண்மைப் பொறியியல் நிலையங்களில் இரண்டாம் கட்டமாக 57 வட்ட வேளாண்மைப் பொறியியல் நிலையங்களுக்கான தேவைக்

தமிழ்நாடு மின்சார வாரியம்

தமிழ்நாட்டில் உள்ள பாசனக் கிணறுகள் .... 12 இலட்சம்
மின்தொடர்பு அளிக்கப்பட்ட பம்பு செட்டுகள் 7,26,581
இதனுல் பெறப்பட்ட கூடுதல் உணவு உற்பத்தி .... 21 இலட்சம் டன்கள்

பம்பு செட்டுகளுக்கு மின்தொடர்பு அளிப்பதில்

அனைத்து இந்தியாவில் தமிழ்நாட்டுக்குத்தான் முதல் இடம்!

தமிழ்நாட்டில் உள்ள நகரங்கள்-கிராமங்கள்-சிற்றூர்கள் 62,487
மின்வசதி அளிக்கப்பட்டவை 61,307

அதிகமான கிராமங்களுக்கு மின் வசதி அளிக்கப்பட்டதில்

இந்தியாவிலேயே தமிழ்நாட்டுக்குத்தான் முதல் இடம்!

தமிழ்நாட்டில் உள்ள அரிசனக் குடியிருப்புகள் 24,799
மின்வசதி அளிக்கப்பட்டவை 24,046

அதிகமான அரிசனக் குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிக்கப்பட்டதில்

இந்தியாவிலேயே தமிழ்நாட்டுக்குத்தான் முதல் இடம்!

தமிழ்நாட்டின் மொத்த நிறுவனத் திறன் .... 2,364 } மெகா வாட்டுகள்
செயல்படுத்தப்பட்டுவரும் மின் திட்டங்கள் நிறுவனத்திறன் .... 1,115 }

நிறுவனத் திறனில்

தேன் மாநிலங்களில் தமிழ்நாட்டுக்குத்தான் முதல் இடம்!

தமிழ்நாட்டில் உள்ள மின்-அனுப்பு
விநியோகக் கம்பிகளின் நீளம் .... 2,72,420 கிலோ மீட்டர்கள்.

அதிக அளவில் கம்பிகள் அமைக்கப்பட்டதில்

அனைத்து இந்தியாவிலும் தமிழ்நாட்டுக்குத்தான் முதல் இடம்!

கோரிக்கைகளை இணையம் அரசிற்குச் சமர்பித்து, அவற்றுக்கான தொகையை வழங்க அரசு ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது.

தமிழக அரசு, தற்போதைக்குத் துவக்கப்படும் நிலையங்களின் எண்ணிக்கையை 220 ஆக நிர்ணயித்துள்ளதால், இணையமும் அதற்கேற்ப நிலையங்களின் எண்ணிக்கையை மூன்ருவது கட்டத்தில் 88 ஆக வரையறுத்துள்ளது. ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டத்தின் கீழ், ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள மிகுதி நிலையங்களுக்கு அரசின் அனுமதி பெறுவது நாளடைவில் கவனிக்கப்படும்.

ஒவ்வொரு வட்ட வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு நிலையத்திற்கும் அதிகபட்சம் இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் (மொத்தம் 6 கோடி) கடன் வழங்க ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவிற்கு தமிழக அரசு உத்திரவாதம் கொடுத்துள்ளது. இதுவரை 259 வட்ட வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு நிலையங்களுக்கான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் ஒப்பளிப்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவைகளிகளில் 189 நிலையங்களுக்கு மொத்தம் ரூ. 187.23 இலட்சம் அளவுக்குக் கடன் வழங்க ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இந்த பாங்க் கடனுதவியைக்கொண்டு பொறியியல் பணி நிலையங்களுக்கு 189 டிராக்டர்களும், சம்பந்தப்பட்ட இணைப்புச் சாதனங்களும் வழங்கப்பட்டன.

இந்த வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு சங்கங்கள் இத்தேதிவரை கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரப்படி தொழில்நுட்பப் பட்டதாரிகளுக்கு வேலை வழங்கியுள்ளன.

1.	பொறியியல் பட்டதாரிகள்	...	56
2.	டிப்ளமோ பெற்றவர்கள்	...	135
3.	தொழில்கல்வி பயின்றவர்கள்	...	61
4.	மற்றவர்கள் (படித்தவர்கள் மற்றும் படிக்காதவர்கள், பயிற்சிபெற்ற வேலையாட்கள் மற்றும் பயிற்சி பெருத வேலையாட்கள்)	...	479
	மொத்தம்	...	731



மாவட்ட கூட்டுறவு வேளாண்மை பணிச் சங்கங்கள்

தமிழ்நாட்டில் 12 மாவட்ட கூட்டுறவு வேளாண்மைப் பணிச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இந்த மாவட்ட சங்கங்களுக்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் பண உதவி செய்து வருகின்றது. அக் கழகம் இச்சங்கங்களுக்கு கீழ்க்கண்டவாறு உதவி செய்துள்ளது.

		இலட்சம் ரூபாய்
பங்குத் தொகை	...	17.28
கடன்கள்	...	4.70
மார்ஜின் கடன்	...	2.70
உதவி மான்யம்	...	8.20

இந்த 12 மாவட்ட வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களுக்கு தொழிற் பட்டறை அமைக்கவும், தொழிற்கூடம் கட்டுவதற்கும் வேண்டிய மனைகள் பெறப்பட்டுள்ளன. நான்கு மாவட்ட சங்கங்களில் வாடகைக்கு விடும் பணியும், பழுது பார்க்கும் வேலையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 8 மாவட்ட சங்கங்களின் தொழிற்பட்டறை, தொழிற்கூடம் ஆகியவற்றிற்கான கட்டட நிர்மாண வேலை முடியும் தறுவாயில் இருக்கின்றன. மீதமுள்ள 4 சங்கங்களுக்கு தொழிற்பட்டறை, தொழிற்கூடம் கட்டுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. மொத்தமுள்ள 12 சங்கங்களுக்கான திட்ட அறிக்கைகளைத் தயார் செய்து, அவைகளை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவுக்கு அனுப்பியதில் 10 சங்கங்களுக்கு மொத்தமாக 13.46 இலட்சம் ரூபாய் கடன் தொகையாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் தரும் நிதியுதவி மாநில இணையத்தின் மூலமாக விநியோகமாகிறது. இவ்வாறு மான்யம், கடன் போன்றவைகளை மாவட்ட சங்கங்களுக்கு வழங்குவதற்கு முன்பு, இணையமும், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகமும், அரசும் விதித்துள்ள நிபந்தனைகளை மாவட்ட சங்கங்கள் சரிவர நிறைவேற்றியுள்ளனவா என்று பார்த்து திருப்தியடைந்த பின்னரே வழங்குகின்றது.

1. வணிக சம்பந்தப்பட்ட பணிகள் :

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் SIPCOT



பாலையையும்...



...ஆலையாக்குகிறது

தனியார் துறையில் நடுத்தர, பெரிய தொழில்களை வளர்ப்பதும், பின்தங்கிய பகுதிகளைத் துரிதமாக தொழில்மயமாக்குவதும் 'சிப்காட்'டின் குறிக்கோள்கள். இந்நிறுவனம் ரூ. 81 கோடி மொத்த முதலீட்டை ஊக்குவித்து 13,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பை நல்கியுள்ளது. விவரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக :

SIPCOT

சிப்காட்
11 A/1, அண்ணா சாலை,
சென்னை-600 002.

இணையம், தன்னுடன் இணைக்கப்பட்டுள்ள வட்டார, மாவட்ட கூட்டுறவுப் பொறியியல் பணிமையங்களின் தேவைகளுக்கான இயந்திரங்களையும், மற்ற உபகரணங்களையும் மொத்தமாக வாங்கும் பொறுப்புடையதாயிருக்கின்றபடியால் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டுள்ளது.

(1) டிராக்டர்கள், அவைகளுடன் சம்பந்தப்பட்ட உபகரணங்கள், டயர்கள், பைப்கள் (குழாய்கள்), மற்றும் உள்ள இயந்திரங்கள், கருவிகள் இவைகளை விநியோகிப்பதற்காக அவைகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களிடமிருந்து மொத்தமாகப் பெற்று விநியோகம் செய்ய ஏஜென்சி/டீலர்ஷிப்புக்கான ஏற்பாடுகள் செய்தல்.

(2) தன்னுடன் இணைக்கப்பட்டுள்ள மையங்களின் தேவைகளுக்கான தரமான இயந்திரங்களையும், கருவிகளையும் அந்த மையங்களுக்கு அனுகூலமான விலைகளில் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்தல்.

(3) தெளிப்பான்கள் (ஸ்பிரேயர்கள்) போன்ற விவசாயக் கருவிகளை அவற்றின் பாகங்களைத் தனித்தனியாக வாங்கி அவைகளை முழுக்கருவியாகப் பொருத்தும் பணிகளில் ஈடுபட்டு, முடிவில் அவைகளைத் தாங்களே முழுமையாக தயாரிக்கும் பணிகளில் ஈடுபடுதல்.

(4) அரசுத் துறைகளுக்கும், மற்றைய கூட்டுறவு சங்கங்களுக்கும் தேவையான டிராக்டர்கள், பைப்புகள், தெளிப்பான்கள், மற்றும் உள்ள கருவிகளையும் வழங்குதல்.

(5) தமிழக அரசால் இணையத்திடம் ஒப்படைக்கப்பட்ட, மானியத்துடன் 'டீசல் என்ஜின்கள்' விநியோகிக்கும் திட்டம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தல்.

(6) தன்னுடன் இணைக்கப்பட்ட மையங்களின் வளர்ச்சிக்குத் தேவையான மற்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

இந்த இணையமானது வட்டார மற்றும் மாவட்ட மையங்களுக்கு 177 டிராக்டர்கள் மற்றும் 156 டிரெய்லர்கள் விநியோகித்துள்ளது. அத்துடன் டிராக்டர்கள் சம்பந்தப்பட்ட கருவிகளையும், பாறை துளைக்கும் கருவிகளையும், பணிப் பட்டறைகளுக்குத் தேவைப்பட்ட இயந்திர கருவிகளையும், டீசல் இன்ஜின், பம்புசெட் முதலியனவற்றையும் விநியோகித்துள்ளன. டன்லப் இந்தியா நிறுவனத்திடமிருந்து டிராக்டர் டிரெய்லர்களுக்குத் தேவையான டயர்கள், ட்யூப்கள் பெற்று அவைகளை மையங்களுக்கு விநியோகிக்க நடவடிக்கைகளையும் இணையம் எடுத்துள்ளது.

இந்த இணையத்தின் மூலம் இதுவரை விநியோகிக்கப்பட்ட டிராக்டர்கள் மற்றும் டிரெய்லர்கள், இயந்திரக் கருவிகள் ஆகியவற்றின் மொத்த மதிப்பு சுமார் ரூ. 1,26,51,000

'கிர்லோஸ்கள் கிஸான் எக்யூப்மெண்ட்' நிறுவனத்தினரிடமிருந்து 250 தெளிப்பான் (ஸ்பிரேயர்கள்) என்ஜின்கள் பெறப்பட்டன, அவற்றுடன் 1973-74-ஆம் ஆண்டில் வாங்கப் பெற்ற 250 ஸ்பிரேயர் இன்ஜின்களையும் சேர்த்து மணப்பாறை வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவுப் பணி மையம் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு வேளாண்மைப் பணிச் சங்கம் மூலம் முழுக் கருவியாகப் பொருத்தி மொத்தம் 500 தெளிப்பான்களை (ஸ்பிரேயர்கள்) இணையம் உற்பத்தி செய்துள்ளது. அவைகளில் 100 தெளிப்பான்கள் வேளாண்மைத் துறைக்கும், இணையத்துடன் இணைக்கப்பட்டுள்ள மையங்களுக்கும், விவசாயிகளுக்கும் சேர்த்து 237, ஆக மொத்தம் 337 தெளிப்பான்கள் விற்பனை செய்துள்ளது.

2. ஏஜன்சி பணிகள் :

அ) டிராக்டர்கள் :-

இவ்விணையம் 'கிர்லோஸ்கர்' டிராக்டர்களுக்கு செங்கற்பட்டு வட ஆற்காடு, தென்னாற்காடு மற்றும் சென்னை மாவட்டங்களில் விற்பனை செய்யும் உரிமையைக் 'கிர்லோஸ்கர் பிரதர்ஸ்' இடமிருந்து பெற்றுள்ளது. அதேபோன்று 'வில்லியம் ஜேக்ஸ் பிரைவேட் லிமிடெட்' மூலம், 'எய்ச்சர்' டிராக்டர்களுக்கு மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் விற்பனை செய்யும் உரிமையையும் பெற்றுள்ளது. இதுவரை 26 கிர்லோஸ்கர் டிராக்டர்களை மையங்களுக்கும், விவசாயிகளுக்கும் விநியோகித்துள்ளது.

ஆ). நீர் தெளிப்பான்கள் (ஸ்பிரிங்கிளர்) கருவிகள் :-

இவ்விணையம் தமிழ்நாடு முழுவதும் நீர்த் தெளிப்பான்கள் விற்பனை செய்யும் உரிமையைப் பெற்றுள்ளது. புகளூர் நதி நீரேற்று பாசனக் கூட்டுறவு சங்கம், இணையத்திடமிருந்து நீர்த் தெளிப்பான் கருவிகள் வாங்குவதற்கு ஒப்புக்கொண்டுள்ளது. அதன் மூலமாகக் கிடைக்கும் 10 சதம் கமிஷனில் 9 சதவிகிதத்தை அந்த சங்கத்திற்கு கொடுக்கவும் இவ்விணையம் ஒப்புக் கொண்டுள்ளது. **இவ்விணையம் சம்பாதித்த மொத்த கமிஷன் (அதாவது 10 சதவிகித அளவில்) ருபாய் 1,86,400 ஆகும்.**

இ) பைப்புகள் குழாய்கள் :

வேளாண்மைச் சமுதாயத்தினருக்கு தேவைப்படும் பலதரப்பட்ட குழாய்கள் வழங்க இவ்விணையம் 'டீலர்ஷிப்' ஏற்பாடு செய்துள்ளது. வேளாண்மைத் துறை மற்றும் பஞ்சாயத்து யூனியன்களுக்கு 4'' மற்றும் 6'' 'பி' மற்றும் 'சி' வகுப்பு (தரம்) குழாய்கள் (பைப்புகள்) வழங்க கணிசமான ஆர்டர்கள் இணையத்திற்குக் கிடைத்துள்ளன. இவ்வாறு மொத்தம் விநியோகம் செய்த பைப்புகளின் மதிப்பு ரூ. 9,20,000 ஆகும். இவ்வகையில் இணையத்திற்கு இந்த தொகையில் 1 சதம் கமிஷன் கிடைக்கும்.



சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சி—1976

கலை நிகழ்ச்சிகள்

கலை அரங்கு, கூவம் பூங்கா,

போர் நினைவுச் சின்னத்திற்கு எதிரில்

சென்னை - 600009

தேதி	குழுவின் பெயர்		நிகழ்ச்சி	
15—1—76	ஏ. வி. ரமணன் குழுவினர்	...	மெல்லிசை	
16—1—76	திரைப்படப்புகழ் மனோரமா அண்ட் குழுவினர்		கிள்ளியூர் கனகம்	(நாடகம்)
17—1—76	இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவினர்	...	இரட்டை மனிதன்	,,
18—1—76	,, ,,	...	மாமன்னன் காதலி	,,
19—1—76	மைசூர் கிருஷ்ணமூர்த்தி குழுவினர்	...	பாண்டு இசை	
20—1—76	மதுரை உடையப்பா, சொக்கலிங்கம் குழுவினர்		அரிச்சந்திரா	(நாடகம்)
21—1—76	,, ,,	...	பவளக்கொடி	,,
22—1—76	,, ,,	...	வள்ளித்திருமணம்	,,
23—1—76	திரைப்படப் புகழ் டி. கே. ராமச்சந்திரன், கள்ளபார்ட் நடராஜன் குழுவினர்	...	ரங்கூன் ரவுடி	,,
24—1—76	கங்காராம் குழுவினர்	...	நந்தனர் (தமிழ் இசை)	
25—1—76	திரைப்படப்புகழ் கே. ஏ. தங்கவேலு குழுவினர்		சப்தஸ்வரங்கள்	(நாடகம்)
26—1—76	திரைப்படப் புகழ் டி. எம். சௌந்தரராஜன் குழுவினர்	...	மெல்லிசை	
27—1—76	மதுரை உடையப்பா, சொக்கலிங்கம் குழுவினர்		கண்ணகி	(நாடகம்)
28—1—76	,, ,,	...	அரிச்சந்திரா	,,
29—1—76	செல்வி நித்யகல்யாணி	...	பரதநாட்டியம்	
30—1—76	திரைப்படப் புகழ் ஆர். எஸ். மனோகர் குழுவினர்	...	விசுவாமித்திரர்	(நாடகம்)
31—1—76	,, ,,	...	சுக்கிராச்சாரியார்	,,
1—2—76	,, ,,	...	,, ,,	,,
2—2—76	மைசூர் கிருஷ்ணமூர்த்தி குழுவினர்	...	பாண்டு இசை	
3—2—76	செல்விகள் லலிதா அண்ட் கீதா	...	பரதநாட்டியம்	
4—2—76	நாவல் கிரியேஷன்ஸ், நீலகிரி	...	கருஞ்சிலந்தி	(நாடகம்)
5—2—76	நீலகிரி கலாசாரக் கழகம்	...	மனோரஞ்சிதம்	,,
6—2—76	,, ,,	...	சுழல்கள்	,,
7—2—76	திரைப்படப் புகழ் ஜெய்கணேஷ், வலம்புரி நடராஜன் குழுவினர்	...	நவரசம்	,,
8—2—76	திரைப்படப் புகழ் மேஜர் சுந்தரராஜன், சிவகுமார் குழுவினர்	...		,,
9—2—76	செல்வி சந்திரிகா	...	பரதநாட்டியம்	
10—2—76	செல்வி ராதிகா	...	பரதநாட்டியம்	
11—2—76	தாம்பரம் லலிதா குழுவினர்	..	புகழ்மாலை	(நாடகம்)
12—2—76	பக்கிரிசாமி அண்ட் குழுவினர்	...		
13—2—76	திரைப்படப் புகழ் குட்டி பத்மினி குழுவினர்	...	அவர்களுக்கும் வயதுவந்துவிட்டது	,,
14—2—76	திரைப்படப் புகழ் சுருளிராஜன் குழுவினர்	...	கபாலி விஜயம்	,,
15—2—76	,, ,,	...	சக்கை போடு போடு ராஜா	,,

ஈ) வணிக வகையில் சம்பாதிப்பு:

டீசல் இன்ஜின் விநியோகிக்கும் திட்டம் நீங்கலாக மற்ற வகையில் இணையம் இது காறும் சம்பாதித்த கமிஷன் தொகை ரூ. 2,35,580-54 ஆகும்.

3. டீசல் என்ஜின் விநியோகிக்கும் திட்டம்:

தமிழ்நாடு அரசு ஆணை 638, கூட்டுறவுத் துறை, நாள் 18-12-1974-ன் படி தமிழக அரசு, நிலவள வங்கிகளின் மூலம் டீசல் என்ஜின் வாங்குவதற்கான கடன் பெற்ற ஒவ்வொரு டீசல் என்ஜினுக்கும் ரூ. 1000 மான்யம் கொடுக்கும் திட்டத்தை மறுமுறையும் செயல்படுத்தும்படி ஆணையிட்டுள்ளது. இவ்விணையம் முன்னணியில் இருக்கும் டீசல் என்ஜின் உற்பத்தியாளர்களுடன் தேவையான ஒப்பந்தம் செய்துக் கொண்டு, டீசல் என்ஜின்களை நிலவள வங்கிகளின் மூலம் கடன் பெற்றுள்ள விவசாயிகளின் கிணறுகளில் பொறுத்துவதற்கு ஏற்பாடு செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், அந்த விவசாயிகளுக்கு இரண்டு ஆண்டுகளுக்குள் மின்சாரம் கிடைத்தால், விநியோகிக்கப்பட்ட டீசல் என்ஜின்களை திரும்பப் பெற்றுக் கொண்டு அவைகளுக்குப் பதிலாக மின்சார மோட்டர்களை—டீசல் என்ஜின் விநியோகம் செய்துள்ள கம்பெனியின் மூலம்—மிகக் குறைந்த செலவில் மாற்றிக் கொடுக்கும் வகையில் ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

அதன்படி இணையமானது 25 வகை டீசல் என்ஜின்களை நிலவள வங்கிகளின் மூலம் கடன் பெறும் விவசாயிகளுக்கு வழங்க டீசல் என்ஜின் தயாரிப்பாளர்களுடன், முழு அதிகாரம் பெற்ற விநியோகஸ்தர்களுடன் ஒப்பந்தம் செய்துக் கொண்டுள்ளது.

மேலே கூறப்பட்டுள்ள என்ஜின்கள் எல்லாம் ஐ. எஸ். ஐ. சான்றிதழ் பெற்றவை. மேலும் தமிழ்நாடு அரசு எண். 45345/, சி. ஜே/2/74 தேதி கூட்டுறவுத் துறை 21.1.1975 கடிதத்தின்படி ஆயில் என்ஜின்களை மின்சார இணைப்பு பெற்றவுடன் மின்சார மோட்டாராக மாற்றிக்கொடுக்கும் நிபந்தனையைத் திட்டத்திலிருந்து நீக்கிவிடும்படி பின்னர் அரசு ஆணையிட்டுள்ளது.

இதுவரை 12,124 டீசல் என்ஜின் பம்புசெட்டுகள் விநியோகிக்கும்படி, இணையம் உத்தரவு வழங்கியுள்ளது. டீசல் என்ஜின் *தயாரிப்பாளர்களிடமிருந்தும், முழு அதிகாரம் பெற்ற விநியோக நிறுவனங்களிடமிருந்தும் இணையமானது ஒவ்வொரு டீசல் என்ஜினுக்கும் ரூ. 300-லிருந்து ரூ. 450 வரை சர்வீஸ் சார்ஜ் ஆக (பணி ஊதியம்) பெறுகிறது. அவ்வாறு பெறும் பணி ஊதியத்தில் 50 சதவிகிதத்தை நிலவள வங்கிகளுக்கு அளித்து, சம்பந்தப்பட்ட விவசாயிகள் கடன் கணக்கில் வரவு வைக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. டிசம்பர் 74 முதல் செயலாற்றப்படும் இத்திட்டத்தின் கீழ், சர்வீஸ் சார்ஜ் ஆக (பணி ஊதியம்) ரூ. 15.85 இலட்சம் இவ்விணையத்தால் பெறப்பட்டுள்ளது. இஃதன்றி ரூ. 15.75 இலட்சம் பிரதம நிலவள வங்கிகளுக்கு அளித்து சம்பந்தப்பட்ட விவசாயிகளின் கடன் கணக்கில் வரவு வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் மாவட்ட வாரியாக வழங்கியுள்ள டீசல் என்ஜின் பம்புசெட்டுகளின் பட்டியல் பாரீர்!

மாவட்டத்தின் பெயர்		வழங்கப்பட்ட டீசல் என்ஜின் பம்புசெட்டுகள்
செங்கற்பட்டு	...	796
வட ஆர்க்காடு	...	1,215
தென் ஆர்க்காடு	...	1,265
தஞ்சாவூர்	...	3,402
திருச்சிராப்பள்ளி	...	1,446
புதுக்கோட்டை	...	674
சேலம்	...	141
தருமபுரி	...	673
கோயம்புத்தூர்	...	32
நீலகிரி	...	7
மதுரை	...	592
இராமநாதபுரம்	...	406
திருநெல்வேலி	...	1,233
கன்னியாகுமரி	...	242
மொத்தம்	...	12,124

இணையத்தின் பங்குத் தொகை விவரங்கள்

	அங்கத்தினர்கள்	பங்குத்தொகை (இலட்சம் ரூபாய்)
1-4-1974-ஆம் தேதிய நிலவரம்	*160*	*2.97*
இவ்வாண்டில் சேர்ந்தவர்கள்	*90*	*6.6*
1974-75-ஆம் ஆண்டில் விலக்கப் பட்டவர்கள்	*இல்லை*	*இல்லை*
31-10-1975 தேதிய நிலவரம்	*250*	*9.58*

இலாப நட்டம்

1975-76-ஆம் ஆண்டில் (31-10-1975 வரை) தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் கூட்டுறவு இணையம், நிகரலாபமாக ரூ.4,76,642-29 சம்பாதித்துள்ளது.

மேற்கண்ட ஆய்வுரையிலிருந்து இணையத்தின் செயல் முறைகளை கவனிக்கும்போது, இவ்வாண்டு இந்திய ஸ்டேட் வங்கியாரின் கடன் அனுமதியைப் பெற்ற வட்ட நிலையங்களின் அலுவல்கள் புதிய வேகம் பெற்றிருப்பதும், விவசாயிகளுக்குத் தேவையான பல்வேறு பொறியியல் சேவைகள் துரிதமாகச் செய்து தரப்பட்டுள்ளன என்பதும்புலனுகும். அதோடு வேலைவாய்ப்பற்ற பொறியாளர்களுக்கு, வேலைவாய்ப்பையும் அளித்துள்ளது. விவசாயிகளுக்குத் தேவையான டிராக்டர்களை வாடகைக்கு வழங்கும் வட்ட நிலையங்கள், விவசாயிகளுடைய தேவைகளைப் பெரிதும் உணர்ந்து நிறைவு செய்து கொண்டு வருகின்றன. இவ்வாறு தமிழ்நாடு முழுவதிலும் இவ்வாண்டில் 88 டிராக்டர்கள் செயல்பட்டு வருகின்றன. விவசாய இயந்திரங்கள் பலதரப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய பொறியியல் தொழிற்கூட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

காதி கிராப்ட்



உடல் மணக்க 'குறிஞ்சி' சோப். உடை வெளுக்க 'கோபுரம்' சலவை சோப். தித்திக்கும் தூய தேன். 'அக்மார்க்' செக் கெண்ணெய். தோல் காலணிகள், கைப்பைகள். வீட்டை அலங்கரிக்க கலைப் பொருட்கள். தினசரி உபயோகத்திற்கு பிரம்பு, மூங்கில், மற்றும் பனைப் பொருட்கள். வேலைப்பாடு மிக்க மட்பாண்டங்கள்.

அழைப்பு விடுக்க கைக் காகிதங்கள். மலிவு தீப்பெட்டிகள். கதர் பருத்தி, கதர் சில்க் துணிவகைகள். இவற்றை வாங்கி மகிழ்வீர்.

கிராமக் கைவினைஞர்கள் நல்வாழ்வு பெற அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை வாங்குவீர்.

தரமானது ... மலிவானது ... இவை வாங்கிட தமிழகமெங்கும் 180 காதி கிராப்ட்கள்.

காதி கிராப்ட்

தமிழ்நாடு கதர், கிராமத் தொழில் வாரியம், 'குறளகம்', எஸ்ப்ளனேடு, சென்னை-600 001.

KK/381

ஆட்சியில் தமிழ்!



நம் தமிழ் மொழி எல்லாத் துறைகளிலும் மறுமலர்ச்சி பெற்று எந்த ஒரு மொழிக்கும் இளைத்துப் பின் நின்று விடாமல் முனைந்து முன்னேற வேண்டியுள்ளது!

அந்த நோக்கத்தை நிறைவு செய்யவே தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சித் துறை உருவாகிச் செயல்பட்டு வருகிறது!

''தமிழ் நாட்டில் எல்லாக் கல்லூரிகளிலும், தமிழ் பயிற்சி மொழியாகவும், பாட மொழியாகவும், நிருவாக மொழியாகப் பல் வேறு துறைகளிலும், ஐந்தாண்டு காலத்திற்குள் நடைமுறைக்கு வருவதற்கான நடவடிக்கையை விரைந்து மேற்கொள்வது என்று இம் மன்றம் தீர்மானிக்கிறது'' என 1968-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 23-ஆம் நாள் தமிழ்நாடு சட்டப் பேரவையில் ஒரு வரலாற்றுப் புகழ்மிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது!

27—9—1969 முதல் துறைத் தலைமை அலுவலகங்கள் அனைத்தும் தமக்குள் தமிழிலேயே கடிதப் போக்குவரத்து நடத்த வேண்டும் என்று அரசாணை பிறப்பிக்கப் பட்டது!

இதனை யடுத்துச் சட்டம், நீதி, சட்ட மன்றம் ஆகிய துறைகள் நீங்கப் பிற துறைகள் அனைத்தும் 27—12—1969 முதல் தமிழ்நாடு அரசின் ஆணைப்படி. ஆட்சி மொழிச் சட்டத்தை நிறை வேற்றத் தொடங்கின!

1970-ஆம் ஆண்டு வரை பொது (தமிழ்வளர்ச்சி)த்துறை யாகவும் ஆட்சிமொழிக் குழு அலுவலகமாகவும் இயங்கி வந்த தமிழ் வளர்ச்சித் துறை, 1971-ஆம் ஆண்டு முதல் தமிழ் வளர்ச்சி இயக்ககம் எனத் தனித் துறைத் தலைமை அலுவலகமாக அமைக்கப் பெற்றது.

தமிழ் மொழியின் தொன்மை, சிறப்பு, தூய்மை ஆகியவற்றைக் காத்தலும், அதே நேரத்தில் அரசு நிர்வாகம் மற்றும் கல்வி, அறிவியல் துறைகளில் தமிழ் மொழிப் பயன்பாட்டை மிகுதிப் படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும் இத்துறையின் தலையாய பணிகள் ஆகும்.

மேற்கூறிய செயற்பாடுகளுக்குத் துணை புரியும் வகையில் ஆட்சிச் சொல் அகராதிகள் அமைத்தல், மொழிபெயர்ப்புகளுக்கு ஏற்பாடு செய்தல், தட்டச்சுப் பொறி களுக்கு ஏற்ற வகையில் தமிழ் எழுத்து வடிவங்களைத் திருத்தி அமைத்தல், ''எண்ணுக தமிழில்'' என்னும் அடிப்படையில் அரசு அலுவலகங்களில் தமிழில் வரைவுகள் குறிப்புகளை எழுத வகை செய்தல், பல துறை அறிஞர்களையும் தமிழில் நூல்களை எழுத ஊக்குவித்தல் போன்ற பணிகளைச் சிறப்பாக இத்துறை மேற் கொண்டு வருகிறது.

மொழி பெயர்ப்பு

அரசு அலுவலங்களில் வரைவுகள், குறிப்புகளை ஆங்கிலத்திலேயே எழுதிப் பழகி வந்த பணியாளர்கள், வரைவுகள் அனைத்தையும் தமிழில் வரைய எல்லா அலு

வலங்களிலும் பயன்படுத்தப் பெறும் பொதுவான ஆங்கிலச் சொற்களுக்கும், அவ்வத் துறைகளில் பயன்படுத்தப்பெறும் சிறப்புச் சொற்களுக்கும், உரிய தமிழ்ச் சொற்களை மொழி பெயர்த்துத் தொகுத்து முறையே 'ஆட்சிச் சொல் அகராதி', 'சிறப்புச் சொற்கள் துணை அகராதி' என்னும் பெயரில் நூல்களை இத்துறை வெளியிட்டு வருகின்றது. முன்பு வெளியிடப்பட்டு உள்ள ஆட்சிச் சொல்லகராதியைத் திருத்தி யமைத்து, அதன் நான்காம் பதிப்பு வெளியிடப் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இத்துறையிலுள்ள மொழி பெயர்ப்புப் பிரிவினால் எல்லாத் துறைத் தலைவர்களாலும் அனுப்பப்படும் சட்டங்கள், விதிகள், விதித் தொகுப்புகள், படிவங்கள் போன்றவற்றின் மொழிபெயர்ப்புப் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. பல்வேறு துறைகளின் சட்டங்கள், விதிகள், விதித்தொகுப்புகள் படிவங்கள் போன்றவற்றில் 33 மொழி பெயர்ப்பிலும், 22 ஆய்விலுமுள்ளன. 28 அச்சிடப்பட்டுள்ளன. சிறப்புச் சொற்கள் துணையகராதிகளின் மறுபதிப்பு 25 துறைகளுக்கு அச்சிடப்பட்டு உள்ளன. 3 அச்சிலும், 26 ஆய்விலும் உள்ளன.

உடல் ஊனமுற்றோர்க்கு உதவிட ஓர் தனி வாரியம்!

உடல் ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு அளிக்கும் பணியை விரைவுபடுத்தவும், அவர்களைப் பணி அல்லது பயிற்சியில் சேர்க்கும் முயற்சியைக் கூட்டவும் உடல் ஊனமுற்றோரின் நலனுக்காக இயங்கும் பல்வேறு நிறுவனங்களின் செயல்களையும், பணிகளையும் ஒருமுகப்படுத்தும் நோக்குடனும் ஓர் தனி வாரியம் அரசினரால் 1971ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதுதான் "உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு மாநில வாரியம்" ஆகும்.

இவ்வாரியம் உடல் ஊனமுற்றோரின் மறுவாழ்வுப் பணியில் விரைந்து செயல்பட்டு வருகிறது. இத்தகைய வாரியம் தமிழகத்தைத் தவிர வேறு எங்கும் நிறுவப்பட்டதாகத் தெரியவில்லை. இது உடல் ஊனமுற்றோரின் மறுவாழ்வில் தமிழக அரசு காட்டும் அக்கறையையும், ஆர்வத்தையும் ஐயந்திரிபுற எடுத்துக் காட்டுகிறது.

ஆய்வுப் பணி

ஆட்சி மொழித் திட்டம் அலுவலகங்களில் எந்த அளவு செயற்படுத்தப்படுகின்றது என்பதை நேரில் காணத் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர், துறைத்தலைமை அலுவலகங்கள், மாவட்டத் தலைமை அலுவலகங்கள் ஆகியவற்றில் ஆய்வு நிகழ்த்துகின்றார். பிற அலுவலகங்களில் ஆய்வு நிகழ்த்த ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஒரு தனி அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். இப்பணியை மேற்கொண்டுள்ள தமிழ் வளர்ச்சி இயக்குநரும், ஆய்வுத் தனி அலுவலர்களும் தமிழ்மொழியை அரசு அலுவலகங்களில் விரைந்து செயற்படுத்த வேண்டுமென்ற அரசின் தூய நோக்கம் எந்த அளவு செயற்படுத்தப்படுகின்றது என்பதை ஆய்வதுடன் அவ்வாறு செயற்படுங்கால் ஏற்படும் இடையூறுகளை அவ்வப்பொழுது களைந்து அரசு ஊழியர்களைத் தமிழின்கண் ஆற்றுப் படுத்தும் பணியையும் மேற்கொள்ளுகின்றனர். நம் தமிழ் நாட்டில் ஆட்சி மொழி சீரிய முறையில் விரைந்து செயற்படுத்தப் பெற்று வருகின்றதென்பதை, அண்மையில் ஆந்திர மாநிலத்திலிருந்து வருகை தந்த ஆட்சி மொழிக் குழு பாராட்டி உள்ளது என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

தமிழ் நூல் விவர அட்டவணை

1867 முதல் 1957-ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட நூல்கள், பொருட் பாகுபாடு செய்யப்பட்டு அந்நூல்களைப் பற்றிய குறிப்புகளுடனும், நூல் அகராதி வரிசை, ஆசிரியர் அகர வரிசை முதலியவற்றுடனும், தமிழ் நூல் விவர அட்டவணை என்ற பெயரில் வெளியிடப்பெற்று வருகிறது. 1867 முதல் 1900 வரை பதிவு செய்யப்பட்ட நூல்கள் பற்றிய குறிப்புகள் 'முதல் தொகுதி' வாயிலாகவும், 1901 முதல் 1910 வரை பதிவு செய்யப்பட்டவை 'இரண்டாம் தொகுதி' வாயிலாகவும் வெளியிடப் பெற்றுள்ளன. மூன்று, நான்கு, ஐந்து தொகுதிகள் அச்சிடப்பெற்று வருகின்றன. 1867-ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியான தமிழ் நூல்கள் பற்றிய குறிப்புகள் அடங்கிய 'மரீடாக்' நூல்கள் அட்டவணையுடன் 'டெய்லர்' நூல் அட்டவணை, பிரிட்டன் தொல்பொருள் காட்சிச் சாலையிலுள்ள தமிழ் நூல்களின் அட்டவணை ஆகியவற்றையும் இணைத்து இத்துறை வெளியிட்டுள்ளது.

வெளி மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கையை நிறுவுவதற்கும், தமிழ்ப் பேராசிரியர் பதவியை ஏற்படுத்தவும் தமிழ்ப் பட்டப் படிப்பை ஊக்குவிக்கவும், தமிழ் மொழியில் ஆய்வுக் கூடங்கள் நடத்தவும், இவ்வரசு நிதியுதவி செய்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை தமிழக அரசு திருப்பதியிலுள்ள திருவேங்கடேசுவராப் பல்கலைக் கழகம், ஆக்ராப் பல்கலைக் கழகம், கல்கத்தாப் பல்கலைக் கழகம், கேரளப் பல்கலைக் கழகம், திருவனந்தபுரத்திலுள்ள கேரளப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த திராவிட மொழிகள் சங்கம், உஸ்மானியப் பல்கலைக் கழகம் போன்றவைகளுக்கு இத்துறை வாயிலாக 1971 முதல் 1975-ஆம் ஆண்டு வரை தமிழ் நாடு அரசு வழங்கியுள்ள நிதி உதவித் தொகை ரூ. 2,13,000 ஆகும்.

உடல் ஊனமுற்றோருக்கான பயிற்சி நிலையம்

கண் பார்வை இழந்தோரும், கை, கால், உறுப்பு ஊனமுற்றோரும், செவி கேளாதவர்களும், புத்தகம் கட்டும் பணியைத் திறம்படச் செய்யலாம். அப்பணியில் அவர்களுக்கு முறையான பயிற்சி அளிக்க வேண்டியது அவசியமாகிறது. இத்தேவையை உணர்ந்து தமிழக அரசு உடல் ஊனமுற்றோருக்கான அரசினர் புத்தகம் கட்டும் தனிப் பயிற்சி நிலையம் ஒன்றை 1972-ஆம் ஆண்டில் ஆரம்பித்துள்ளது.

கிண்டியில் இயங்கிவரும் இப்பயிற்சி நிலையத்தில் உடல் ஊனமுற்ற இளைஞர்களுக்குப் புத்தகம் கட்டும் பணியில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சியின் கால அளவு 6 மாதம். பயிற்சிக் காலத்தில் ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ. 50 உதவிப் பணம் தமிழக அரசால் வழங்கப்படுகிறது. இதுவரை 4 பயிற்சிகள் முடிந்துள்ளன. ஐந்தாவது பயிற்சி நடந்து கொண்டிருக்கிறது. இதுவரை மொத்தம் பயிற்சியில் சேர்ந்த 58 பேர்களில், 48 பேர் பயிற்சியை வெற்றிகரமாக முடித்திருக்கிறார்கள். இவர்களில் கணிசமான அளவினர் பணியிலும் அமர்த்தப்பட்டுள்ளனர்.

பயிற்சி வகுப்பு

அலுவலகக் குறிப்புகள், வரைவுகளைத் தமிழில் எழுதப் பயிற்சி கொடுப்பதற்காக மின் வாரியம், தலைமைச் செயலகம், சம்பளக் கணக்கு அலுவலகம், கருவூலக் கணக்குத் துறை போன்றவற்றில் உள்ள அரசு ஊழியர்களுக்குத் தமிழ் அறிஞர்களைக் கொண்டு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெற்றன. இவ்வகுப்புகளில் வரைவுகளைத் தமிழில் எழுதும் முறைகளும், தமிழில் எழுதும்போது ஏற்படும் சிக்கல்களை நீக்கும் வழி வகைகளும் விளக்கப்படுகின்றன. தலைமைச் செயலகத்திலுள்ள நிதித் துறைப் பணியாளர்களுக்கு அண்மையில் தமிழ் பயிற்சி வகுப்புகள் நடத்தப் பெற்றன. தமிழ் நாடு அரசுப் பணியாளர்த் தேர்வாணைக் குழு வாயிலாகப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தற்போது இளநிலை உதவியாளராக, உதவியாளராகப் பணி புரிபவர்களுக்கு அவர்களின் அடிப்படைப் பயிற்சியோடு, தமிழ்ப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றது.

நூலாசிரியர்களுக்கு நிதிஉதவி அளிக்கும் திட்டம்

தமிழக அரசு, தமிழ்மொழியில் சிறந்த நூல்களை வெளியிட விரும்புகின்றவர்களுக்கு இத்துறையின் வாயிலாகப் பொருளுதவி செய்து வருகின்றது. அச்சிடத் தகுந்தென வல்லுநர் குழு தேர்ந்து எடுத்த நூல்களை அச்சிடுவதற்கு ஆகும் செலவில் பாதி (ரூ. 5,000-க்கு மிகாமல்) வழங்கி தமிழ் மொழிகளில் புதுப் புது நூல் வெளிவர வழி வகுக்கின்றது. இத்திட்டத்தின் கீழ் ஓதாளர் குறவஞ்சி, நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு, கெடிலக்கரை நாகரிகம், தொல்காப்பியக் களஞ்சியம், இலக்கிய சாசன வழக்காறுகள் ஆகிய நூல்கள் வெளி வந்துள்ளன. திருக்குறள் இசை மலர், யாழ் நூல், நாடகத் தமிழ் போன்ற நூல்களின் வெளியீட்டிற்கும் தமிழ் நாடு அரசு நிதி உதவி செய்கிறது. இது வரை சிறந்த தமிழ் நூல்களை வெளியிடுவதற்கு ஐந்து நூலாசிரியர்களுக்கு சுமார் 6,700 ரூபாயை நிதியுதவியாக அரசு வழங்கியுள்ளது. மேலும், இரண்டு நூலாசிரியர்களுக்கு ரூ. 2,300 வழங்க இருக்கிறது.

சிறு தொழில் ஆரம்பிக்க சிறந்த வழி

உடல் ஊனமுற்றோரில் பலர் சிறு தொழில்கள் ஆரம்பிக்க விரும்புகிறார்கள். குறிப்பாகக் கறவை மாடு வளர்த்தல், சைக்கிள் கடை நடத்துதல், வெற்றிலை பாக்குக் கடை வைத்தல், செங்கல் வியாபாரம் போன்ற தொழில்களை மேற்கொள்ள விரும்புகிறார்கள்.

அவர்களுக்கு அத்தொழில் ஆரம்பிக்க ஆலோசனை வழங்கி, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் உதவியும் பெற வழி காட்டி உதவுகிறது, சென்னையிலுள்ள சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகம். இத்தகைய உதவிக்காக இதுவரை மனுச் செய்துள்ள 120 பேர்களில் 17 பேர்களுக்கு நிதி உதவி கிடைக்க வழி செய்துள்ளது. அதனால் அவர்கள் தொழில் நடத்தி வளமாக வாழ்ந்து வருகிறார்கள்.

இத்தகைய உதவி பெற்றவர்களில் ஒருவர் கண் பார்வை அற்றவர். அவர் பெற்ற நிதி உதவியைக் கொண்டு வீணை வாங்கி அதன் மூலம் பிற இளைஞர்களுக்கு வீணை கற்றுக் கொடுத்து வருமானம் ஈட்டி வாழ்ந்து வருகிறார். இத்தகைய முயற்சியால் பயனடைந்தோரின் எண்ணிக்கை குறைவானாலும், அதன் தன்மையையும், பயனையும், பயன் அடைந்தோரின் வாழ்வையும் எண்ணும்போது, இது மிகப் பெரும் சாதனை என்றே சொல்லலாம் அல்லவா?

சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்குவது

21 தலைப்புகளில் நூல்கள் வகைப்படுத்தப்பட்டு, தேர்ந்து எடுக்கப்பெறும் நூல்களுக்கு முதற் பரிசாக ரூ. 2,000-மும், இரண்டாம் பரிசாக ரூ. 1,000-மும் வழங்கப்படுகிறது. சிறந்த நூல்களுக்கு 1971, 1973, 1975-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் 83 நூலாசிரியர்களுக்குப் பரிசுத் தொகை ரூ. 98,000 வழங்கப்பட்டுள்ளது.

புதிதாக அமர்த்தப் பெறும் ஐ.பி.எஸ்., அலுவலர்களுக்கும் தமிழ்த் திட்டப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

தமிழில் சிறந்த குறிப்புகள் — வரைவுகள் எழுதுவோர்க்குப் பரிசு

அலுவலகக் குறிப்புகள் வரைவுகளைத் தெளிவாகவும், சீரிய முறையிலும் தமிழில் எழுத அரசு ஊழியர்களை ஊக்குவிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும், அரசுப் பணியாளர்களில் ஒருவர்க்கும், ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் பணியாளர்களில் ஒருவர்க்கும், நகராட்சிப் பணியாளர்களில் ஒருவர்க்கும், 1970 முதல் ரூ. 500 பரிசு வழங்கப்பட்டு வந்தது. சென்னை நகரத்திலுள்ள அரசுப் பணியாளர்களில் இருவர்க்கு இப்பரிசுகள் வழங்கப்பட்டு வந்தன. இதன்படி 1970 முதல் இன்று வரை 60 அரசு ஊழியர்களுக்கும், மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் 40 பேருக்குமாக மொத்தம் ரூ. 50,000 பரிசாக வழங்கப்பட்டுள்ளன.

1974 முதல் தற்பொழுது அளிக்கப்பட்டு வரும் பரிசுகளின் எண்ணிக்கையை மூன்றாக உயர்த்தி முதற் பரிசு ரூ.500-ம் இரண்டாம் பரிசு ரூ. 400-ம் மூன்றாம் பரிசு ரூ. 200-ம் ஆக வழங்க அரசு அனுமதித்துள்ளது.

தமிழ்நாடு கைத்தறி நிதி உதவி-வணிகக் கழகம்

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவுத் துறையின்கீழ் வருகின்ற நெசவாளர்களுக்கு உதவி செய்கையில், தமிழ்நாடு கைத்தறி நிதி-உதவி வணிகக் கழகம் கூட்டுறவுத் துறையின்கீழ் வராதவர்களுக்காக பணியாற்ற விழைகிறது. இக் கழகம், இந்த நெசவாளர்களுக்கு நிதி உதவி அளிப்பதோடல்லாமல், அவர்கள் தங்களது துணியை விற்பனை செய்வதிலும் உதவுகிறது.

இக் கழகத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாகிய ரூ. 62.35 லட்சத்தில் ரூ. 25 லட்சத்தை மாநில அரசு நல்கியுள்ளது. 31-12-1974 ஆம் நாளன்றின்படி இக் கழகத்தின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை தமிழ்நாடு அரசு உட்பட 5232 ஆகும்.

இக் கழகம், தனது உறுப்பினர்களாயுள்ள நெசவாளர்கள், நூற்பாளர்கள், கைத்தறிச் சொந்தக்காரர்கள் முதலியோருக்கு, செய்முறைப் படுத்துதல், விற்பனை முதலிய பணிகளை மேற்கொள்வதற்காக மூலப் பொருள்கள் வாங்க கடன்கள் வழங்குகிறது.

இக் கழகம், 1973 ஆம் ஆண்டில் தனது உறுப்பினர்களுக்கு ரூ. 130 லட்சம் கடனுக வழங்கியிருக்க, 1974 ஆம் ஆண்டிலோ ரூ. 115.07 லட்சம் கடன் வழங்கியுள்ளது

இக் கழகம், 14½ சதவீத வட்டி வீதத்தில் கடன் பெற்று தனது உறுப்பினர்களுக்கு 16 சதவீத வட்டி வீதத்தில் வழங்குகிறது.

சிறு நெசவாளர்களுக்கு உதவும் நோக்கத்தோடு, இக் கழகம், 1974 ஆம் ஆண்டில், 'வேறுபடுகின்ற வட்டி வீதத் திட்டம்' என்னும் பெயரில் சிறப்புத் திட்டம் ஒன்று கொண்டு வந்தது.

1973 ஆம் ஆண்டில், இக் கழகத்தின் மொத்த வியாபாரத் தொகை ரூ. 1.55 கோடியாக இருக்க, 1974 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 2.07 கோடிக்கு வியாபாரம் நடைபெற்றுள்ளது.

தமிழ்நாட்டு வரலாறு எழுதும் பணி

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆய்வுக் கூடத்திற்கு அடிக்கல் நாட்டிய போது, தென்னகத்திற்கென்று தனி வரலாறு எழுதப்பட வேண்டும் என்று விருப்பம் தெரிவித்ததைத் தொடர்ந்து 1971-ஆம் ஆண்டு டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தலைமையில் ஒரு குழு தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டது. தமிழ்நாட்டு வரலாற்றினை இக்குழு கீழ்க் கண்டவாறு வெளியிட முடிவு செய்து செயலாற்றி வருகிறது. தொல் பழங்காலம், சங்க காலத் தமிழகம், பல்லவ, பாண்டிய காலத் தமிழகம், சோழப் பெரு வேந்தர் காலத் தமிழகம், பிற்காலம், இக்காலம் என்று ஆறு தொகுதிகளில் நூல்கள் வெளியிடும் பணியினைக் குழு மேற்டுள்ளது.

தமிழ்நாட்டு வரலாற்றுப் பிரிவின்கீழ் செயற்படும் இக்குழு, தொல் பழங்கால வரலாறு என்னும் தலைப்பின் கீழ் நில அமைப்பின் வரலாறு, பழைய கற்காலம், பெருங் கற்காலமும் உலோகக் காலமும், இளமரபு வரலாறு, ஆகிய பொருள்களில் கட்டுரைகளைக் கொண்ட முதல் தொகுதியைத் தயாரித்துத் தந்தது. இந்நூல் அச்சிடப்பட்டு 21-11-75 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் இராசாசி மண்டபத்தில் நடைபெற்ற சிறந்த நூல்களுக்கான பரிசளிப்பு வழங்கும் விழாவின் போது வெளியிடப்பட்டது.

தமிழ் நாட்டு வரலாற்றின் இரண்டாவது தொகுதியான சங்ககாலத் தமிழகம் எழுதி முடிக்கப்பட்டு அச்சிடும் நிலையில் உள்ளது. மூன்ருவது, நான்காவது தலைப்புகளான பல்லவர், பாண்டியர் காலத் தமிழகம், சோழப் பெரு வேந்தர் காலத் தமிழகம் ஆகியவற்றைக் குழு உறுப்பினர்களும், பதிப்பாசிரியர்களும், வரலாற்று அறிஞர் பெருமக்களும், தற்பொழுது எழுதி வருகின்றனர்.

பிற பணிகள்

1. தமிழகத்தில் எழுத்து வடிவம் பெருத நாட்டுப் புறப் பாடல்களைத் தேடித் திரட்டி நூல் வடிவத்தில் கொண்டு வரத் திட்டமிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2. தமிழகத்தில் ஆங்கில ஆட்சிக் காலத்தில் பொருட் குழப்பம் ஏற்படும் வகையில் ஒலி மாறி உருத்திரிந்து போன திருவையார் (திருவையாறு), வடவார் (வடவாறு), கல்லார் (கல்லாறு), செங்கிள்புட் (செங்கல்பட்டு), கோல்டன் ராக் (பொன்மலை), ட்ராங்குபார் (தரங்கம்பாடி) போன்ற ஊர்ப் பெயர்களை யெல்லாம் தமிழில் திருத்தம் செய்து புதிய பட்டியல் வெளியிட இந்திய மைய நில அளவைத் துறைக்கும் அரசுக்கும் (அஞ்சல் தந்தி, ரயில்வே துறை உள்பட) இதுவரை 420 ஊர்களுக்குத் தமிழ் எழுத்துக் கூட்டல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

3. தொன்மையும், இலக்கியச் சிறப்பும் மிக்க ஏட்டுச் சுவடி நூல்களைச் சேகரித்துப் பதிப்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

4. இனி வரும் ஆண்டுகளில் தகுந்த தமிழ் நூல்களுக்காக இலங்கைக்கு இரு பரிசுகளும், மலேயாவுக்கு இரு பரிசுகளும், சிங்கப்பூருக்கு ஒரு பரிசும் வழங்கலாம் என்னும் கருத்து அரசின் ஆய்வில் உள்ளது.

5. தமிழில் 'சிறுவர் கலைக் களஞ்சியம்' என்னும் நூலினை, 10 தொகுதிகளாக வெளியிடுவதற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு இதுவரை சுமார் ரூ. 1,85,000 தமிழ்நாடு அரசு நிதியுதவியாக வழங்கியுள்ளது.

6. தமிழில் யுனெஸ்கோ கூரியரை வெளியிடுவதற்காகத் தமிழ்நாடு அரசு தென்மொழிகளின் புத்தக நிறுவனத்திற்கு 1967—68 முதல் ஆண்டொன்றுக்கு ரூ. 24,500 வீதம் நிதியுதவி அளித்து வருகிறது.

இவ்வாறு தமிழ் மொழி வளர்ச்சிக்கும், வளத்துக்கும், தமிழ் வளர்ச்சித் துறை எல்லா வகையிலும் அயராது பணி புரிந்து அருந் தொண்டாற்றி வருகிறது.

தங்ககாலம் கல்வி உலகின் பொற்காலம்!

இரா. பெருமாள்
(பள்ளிக் கல்வி இயக்குநர்)

வள்ளுவர் வழியில் செயல்படும் தமிழக அரசு தனது வளர்ச்சித் திட்டங்கள் அனைத்திலும் முதலிடம் அளித்து வருகிறது. அறிவொளியைப் பரப்புவதில் அற்புதமான முன்னேற்றம் கண்டு வருகிறது இன்றையத் தமிழகம். வரவு செலவுத் திட்டத்தில் மற்றெல்லாத் துறைகளைக் காட்டிலும் கல்விக்கெனப் பெருமளவில் அதாவது 118 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து கல்வி வளர்ச்சியில் அதிக ஆர்வமும் அக்கறையும் அரசு காட்டி வருகிறது. இத்தொகை, குறிப்பிட்ட நிதி ஆண்டின் வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவில் 22 விழுக்காடு ஆகும். 15 வயதுவரை சிறுவரனைவருக்கும் தொடக்க நிலைக் கல்வியை இலவசமாக அளிக்க வேண்டுமென்ற அரசியல் சட்ட நெறிமுறைக் கோட்பாட்டினை நிறைவேற்றுவதிலும் வேறு பல மாநிலங்களைக் காட்டிலும் தமிழகம் முன்னணியில் உள்ளது.

மாணவர் சேர்க்கை

பள்ளிகளில் சென்ற பத்தாண்டுகளில் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை வளர்ந்துள்ளதைக் கீழே தரப்பட்டுள்ள புள்ளி விவரம் காட்டும்.

வயதுத் தொகுதி	1965—66	1974—75
6 முதல் 11 வரை	45.11 இலட்சம்	55.60 இலட்சம்.
11 முதல் 14 வரை	10.66 இலட்சம்	14.56 இலட்சம்.
14 முதல் 17 வரை	5.51 இலட்சம்	7.52 இலட்சம்.

தொடக்கக் கல்வி

1968-69-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 31,712. 1974-75-ஆம் ஆண்டில் இவ்வெண்ணிக்கை 32,565 ஆக வளர்ந்துள்ளது. இப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் 1,54,140-லிருந்து 1,78,766 ஆக வளர்ச்சியடைந்துள்ளது.

உயர்நிலைக் கல்வி

1968-69-ஆம் ஆண்டில் 2,513 உயர்நிலைப் பள்ளிகளும் அவற்றில் 54,857 ஆசிரியர்களும் பணியாற்றி வந்தனர். 1974-75-ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 2,882 ஆகவும் அவற்றில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 69,454 ஆகவும் உயர்ந்துள்ளது.

கல்வித்தர உயர்வு

பள்ளிகளின் போதனையின் தரத்தை உயர்த்துவதற்கான உயர் தொடக்கநிலை ஆசிரியர்கள் நியமனம், படிப்படியாகக் குறைக்கப்பட்டு, இதுவரை 37,700 உயர்தொடக்கநிலை ஆசிரியர் பதவிகள் இடைநிலை ஆசிரியர் பதவிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. தொடக்கப் பள்ளிகளில் அறிவியல் போதனையின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. தொடக்கப்பள்ளிகட்கு இன்றியமையாத நூலகப் புத்தகங்களை வாங்கி வழங்கிட 1974-75-ல் ரூ. 1 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. 1975-76-ஆம் ஆண்டிலும் ரூ. 1 இலட்சம் இதற்காகச் செலவிடப்படும்.

புதிய பாடத்திட்டம்

அறிவுத்துறையின் வளர்ச்சிக்கேற்ப மாணவர்களின் அறிவு வளம், ஆராயுந்திறன், சிந்தனைத் தெளிவு, செயலாற்றும் திறமை இவற்றை வளர்க்க வாய்ப்பளிக்கும் வகையில் கல்வித் திட்டம் அமைய வேண்டும் என்ற கருத்துடன் புதிய பாடத்திட்டத்தில் அறிவியல், கணித பாடங்கள் திருத்தி அமைத்துத் தரமுயர்த்

தப்பட்டுள்ளன. இப் புதிய பாடத்திட்டம் பள்ளிகளில் படிப்படியாக பல்வேறு வகுப்புகளில் அமலாக்கப்பட்டு 1975-76-ஆம் ஆண்டிலிருந்து 7, 8, 9 வகுப்புகளுக்கு விரிவாக்கப்பட்டது. 10-ஆம் வகுப்பிற்கான புதிய பாடத்திட்டம் 1976-77-ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும்.

ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளுக்கான பாடத்திட்டம்

இந்திய உயர்நிலைப் பள்ளிகளைப் போன்றே ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளின் கல்வி முறையிலும் தக்க உருமாற்றத்தை உண்டாக்கும் வகையில் அறிவியல், கணிதப்பாடங்கள் தரமுயர்த்தப்பட்டுப் புதிய பாடத்திட்டம் உருவாக்கித் தரபட்டுள்ளது.

இத் தலைமுறையைச் சேர்ந்த மாணவர்கள் அறிவியல் வளர்ச்சியில் நிகழ்ந்துள்ள அற்புத சாதனைகளை நன்கு அறிந்து உணர்ந்தவர்களாக விளங்கவும், 'அறிவியலின் அன்னை' எனக் கருதப்படும்கணித இயலை நன்கு கற்றுணரவும் வாய்ப்பளிக்கும் வகையில் புதிய பாடத்திட்டத்தில் அறிவியல் கணித பாடங்கள் திருத்தி அமைத்து தரமுயர்த்தப்பட்டுள்ளன.

திருத்தியமைக்கப்பட்ட புதிய பாடத்திட்டம் 1974-ஆம் ஆண்டிலிருந்து 1 முதல் 7 வகுப்புகளிலும், 1975-ஆம் ஆண்டில், 8, 9 வகுப்புகளிலும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அடுத்த கல்வியாண்டிலிருந்து 10-ஆம் வகுப்பிற்கான புதிய பாடத்திட்டம் நடைமுறைக்கு வரும்.

உடற்கல்விப் பாடத்திட்டம்

தமிழகக் கல்வி வரலாற்றில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை உருவாக்கியுள்ள சாதனை 1975-76 கல்வி ஆண்டிலிருந்து பள்ளிகளில் உடற்கல்வி . கட்டாயப் பாடமாக்கப்பட் டுள்ளதாகும். கல்வி வளர்ச்சியில் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் தமிழ்நாடு முன்னேடியாக விளங்குகின்றது என்பதற்கு இது மற்றோர் எடுத்துக் காட்டாகும். 1975-76- கல்வி ஆண்டிலிருந்து உடற்பயிற்சி ஆசிரியர்கள் உள்ள எல்லா உயர் தொடக்கப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் 6 முதல் 11 வரையிலுள்ள வகுப்புகளுக்குத் தேர்விற்கும், உயர் வகுப்பு மாற்றத்திற்கும் உடற்கல்வி கட்டாயமான ஒரு பாடமாகுமென அரசு ஆணை பிறப்பித்தது.

மாணவர்களின் உடல்திறம், போட்டி,விளையாட்டுகளில் செயல் திறன், ஒருமைப்பாட்டுணர்வு, சமூகப் பண்புகள், பண்பாட்டுயர்வு, மரபுரிமையில் விழிப்பு உணர்ச்சி ஆகிய குண நலன்களை வளர்க்கும் நோக்கத்துடன் உடற்கல்விப் பாடத் திட்டமானது திருத்தி அமைக்கப்பட்டது.

அறிவியல் கல்வி

அறிவியல் கல்வியின் முக்கியத்துவத்தை உயர்த்த அரசு பல சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அறிவியல் சாதனங்கள் வாங்குதற் பொருட்டு ஒவ்வொரு தொடக்கப் பள்ளிக்கும் ரூ. 300/- ஒவ்வொரு உயர் தொடக்கப் பள்ளிக்கும் ரூ. 1000- உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன. இதுவரை இத்திட்டத்தால், 12,720 தொடக்கப்பள்ளிகளும், 3,334 உயர்தொடக்கப் பள்ளிகளும் பயனடைந்துள்ளன. 1975-76-இல் மேலும் 500 தொடக்கப் பள்ளிகளும் 200 உயர் தொடக்கப் பள்ளிகளிலும் பயனடையும்.

இயங்கும் அறிவியல் ஆய்வுக்கூடங்கள்

இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழகத்தில்தான் இயங்கும் ஆய்வுக்கூடத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்தகைய இயங்கும் ஆய்வுக்கூடங்கள் கிராமப் புறங்களில் புதிதாகத் தொடங்கப்பட்டு போதிய அறிவியல் உபகரணங்கள் இல்லாத உயர்நிலைப் பள்ளிகளின் தேவையைக் கருத்தில்கொண்டு இயங்குகின்றன. தற்போது 48 கல்வி மாவட்டங்களுள் 30 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓர் ஆய்வுக்கூட வண்டி பணிபுரிகின்றது.

அறிவியல் கல்வியும், 'யுனிசிப்' உதவியும்

பள்ளிகளில் அறிவியல் பாடத்தைக் கற்பிப்பதற்காக 'யுனிசிப்' உதவியுடன் ஒரு முன்னேடித் திட்டம் 1971-72 கல்வியாண்டு முதல் 1973-74 கல்வியாண்டு முடிய சென்னை, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் 50 தொடக்கப் பள்ளிகளிலும், 30 நடுநிலைப் பள்ளிகளிலும் தொடங்கப்பட்டது. 'யுனிசிப்' இந்தப் பள்ளிகளுக்கான உயிரியல், இயல்பியல், வேதியல் கற்பிப்பதற்கான அறிவியல் ஆய்வுக் கருவிகள் அடங்கிய பெட்டிகளை இலவசமாக வழங்கியுள்ளது. 1974-75 முதல் 'யுனிசிப்' உதவியுடன் இத்திட்டம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள 1,550 தொடக்கப் பள்ளிகளுக்கும், 1,800 நடுநிலைப் பள்ளிகளுக்கும் பயனளிக்குமாறு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அறிவியல் ஆய்வுக் கூடங்கள்

அறிவியல் உபகரணங்களுக்காக உதவி பெறும் திட்டத்தின் கீழ் இதுவரை 867 உயர்நிலைப் பள்ளிகள் பயனடைந்துள்ளன. 1975-76-ஆம் ஆண்டில் மேலும் 11 உயர்நிலைப் பள்ளிகளுக்கு இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 5.46 இலட்சத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

பணியிடைப் பயிற்சி

கணிதத்திலும், அறிவியலிலும் தரமுயர்த்தப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்தைச் சிறப்புடன் செயலாற்ற ஆசிரியர்களுக்கு புதிய கணிதம், அறிவியல் ஆகிய பாடங்களில் பணியிடைப் பயிற்சியளிக்கப்பட்டது. கணிதம், அறிவியல் போதிக்கும் 58,500 துவக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும், 50,000 இடைநிலை ஆசிரியர்களுக்கும், 14,000 பட்டதாரி ஆசிரியர்களுக்கும் இதுவரை அரசின் செலவில் பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர அரசுக்கு எவ்விதச் செலவுமின்றி ஆசிரியர்கள் தாமே முன்வந்து 1,092 மையங்களில் கணிதம், அறிவியல் பாடங்களில் 73,418 ஆசிரியர்கள் மறுபயிற்சி வகுப்புகளில் கலந்து பயன்பெற்றுள்ளனர் என்பது மகிழ்ச்சியுடன் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆசிரியர் கல்வி

ஒரு சிறந்த கல்வித் திட்டம் என்பது தக்க கல்வித் தகுதியும், அறிவாற்றலும், திறமையும்



மிக்க ஆசிரியர்களைக் கொண்ட அமைப்பை அடித்தளமாகக் கொண்டது என்ற மரபின் அடிப்படையில் ஆசிரியர் கல்விக்கான பாடத்திட்டம் திருத்தியமைக்கப்பட்டது. குழந்தைகளின் வருங்காலத் தேவைகளை உணர்ந்து ஆசிரியர்கள் மேற்கொள்ளவேண்டிய புதிய கற்பிக்கும் முறைகள், அகமதிப்பீடு, மனே தத்துவம், குழு விவாதம் போன்ற புதிய தொழில் நுணுக்கங்கள் கொண்ட ஒருங்கிணைந்த கல்வி முறையை அளிப்பது இப்புதிய பாடத் திட்டத்தின் குறிக்கோளாகும். இவ்வாசிரியர் பயிற்சிப் பாடத் திட்டம் 1975-76-ஆம் கல்வியாண்டு முதல் அமலாக்கப்பட்டுள்ளது..

தற்பொழுது இம்மாநிலத்தில் ஆங்கில மொழிப் பயிற்சி மையங்கள் ஆறு செயல்பட்டு வருகின்றன. 1974-75 முடிய மொத்தம் 11,773 ஆசிரியர்கள் இம்மையங்களில் பயிற்சி பெற்றனர். இத்திட்டம் 1975-76-ம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

அரசினர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஆசிரியர்களின் தொழில் தகுதிகளை மேம்படுத்திக்கொள்ள உதவும் வகையில் ஆண்டுதோறும் 10 பட்டதாரி ஆசிரியர்கள் எம். எட். பயிற்சிக்கு அனுப்பப்படுகிருர்கள். இவ்வாறு இதுகாறும் 70 ஆசிரியர்கள் அனுப்பப்பட்டுள்ளனர்.

ஆசிரியர் நலன்கள்

'ஆசிரியர்களே நாட்டின் சமுதாயச் சிற்பிகள்' என்பது பேரறிஞர் அண்ணு அவர்களின் பேருரை. நாட்டின் நல்வாழ்வை உருவாக்கும் நற்பணியில் ஈடுபட்டுள்ள இவ்வாசிரியர்களின் நலன்களைப் பேணிக்காப்பதில் தமிழக அரசு அதிக அக்கறை காட்டி வருகின்றது.

ஆசிரியர் நலனுக்கான தேசிய நிறுவனத்தின் நிதியிலிருந்து 1974-75-ல் உதவி பெறுவதற்குத் தகுதிவாய்ந்த ஏறத்தாழ 500 ஆசிரியர்களுக்குச் சுமார் ரூ. 2 இலட்சம் நிதியுதவியாக வழங்கப்பட்டது. கண்பார்வையிழந்தோர், காசநோய், புற்றுநோய், பக்கவாதம் போன்ற நோய்களிஞல் பாதிக்கப்பட்டு பணியாற்ற இயலாதோர், தள்ளாத வயதில் உதவி செய்ய யாருமற்ற ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும், திக்கற்ற நிலையிலுள்ள காலஞ்சென்ற ஆசிரியர்களின் கைம்பெண்களுக்கும் இந்நிதியிலிருந்து உதவி வழங்கப்படுகிறது.

ஆசிரியர்களுக்கான ஊதியம்

வேறு பல மாநிலங்களைப்போல அல்லாமல் தமிழ்நாட்டில் தனியார் பள்ளி ஆசிரியர்களின் ஊதியச் செலவு முழுவதையும் மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது. இம்மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளி ஆசிரியர்கட்கும் வழங்கும் ஊதியத்தால் ஏற்படும் செலவு 1975-76-ல் சுமார் ரூ. 85/- கோடியாகும்.

1974-ஆம் ஆண்டு டிசம்பர் முதல் நாள் முதல்நடைமுறைக்கு வந்துள்ள 'தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குபடுத்தும்) சட்டமும்' அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளும் தனியார் பள்ளி ஆசிரியர் பணி நிலைமைகளுக்குச் சட்டப்படி பாதுகாப்பு அளிப்பதோடு, நிருவாகத்தினர் பள்ளிகளைச் செவ்விய முறையில் நடத்திட ஊக்கமும் அளிக்கும்.

தேர்வுநிலைப் பதவிகள்

உயர்நிலைப் பள்ளிகளில் பத்து ஆண்டுப் பணியினை முடித்த பட்டதாரி ஆசிரியர்கட்கும், முதல்நிலைத்தமிழாசிரியர்கட்கும், பிற சிறப்பு ஆசிரியர்கட்கும் தேர்வுநிலைப் பதவிகளைத் தரும் ஆணை 1-4-73 முதல் செயலாக்கப்பட்டது. இக்கொள்கை மேலும் விரிவாக்கப்பட்டு எல்லா வகை நிருவாகங்களின் கீழும் பணியாற்றும் உயர்தொடக்கநிலை—இடைநிலை ஆசிரியர்களும் பத்து ஆண்டுகள் பணியினை முடித்தான் தேர்வுநிலை தர வேண்டும் என்ற ஆணை 1-4-74 முதல் செயலாக்கப்பட்டது.

தமிழாசிரியர்கள்

1974 சனவரி 1-ஆம் தேதிக்குப் பின் செய்யப்படும் தமிழாசிரியர் நியமனங்கள் அனைத்தும் முதனிலைத் தமிழாசிரியர் பதவிகளாக மட்டுமே செய்ய வேண்டுமென ஆணை வெளியிடப்பட்டுள்ளது. முதனிலைத் தமிழாசிரியராக நியமிக்கப்படுவதற்குத் தேவையான தகுதிகள் இருந்தும் இரண்டாம் நிலைப் பதவிகளில் இருந்த தமிழாசிரியர்கள் அனைவரும் 1-1-74 முதல் முதனிலைத் தமிழாசிரியர்களாக நியமிக்கப்பட்டனர்.

ஊதிய உயர்வு வழங்கும் திட்டம்

ஆசிரியர்கள் தங்கள் தகுதிகளை அதிகரித்துக்கொள்ள ஊக்கமளிக்கும் வகையில் அவர்களுக்கு இரு ஊதிய உயர்வுகளை வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

ஆசிரியர்களுக்கு ஒய்வூதியம்

மாநில அரசு ஊழியர்களுக்குப் பொருந்தும் தாராள ஓய்வு ஊதிய விதிகள் அனைத்தும் தனியார் பள்ளிகளிலும் உள்ளாட்சி நிறுவனப் பள்ளிகளிலும் பணியாற்றி 1-6-70 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கும், தனியார் பள்ளிகளிலிருந்து 1-4-72 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வுபெறும் ஆசிரியரல்லாத பிற ஊழியர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

விடுப்பு உரிமைகள்

ஈட்டிய விடுப்பைப் பணமாகப் பெறுவதற்குரிய உரிமை உட்பட, மாநில அரசு ஊழியர்கட்கான விடுப்பு உரிமைகள் அனைத்தும் தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கட்கும் அளிக்கப்பட்டுள்ளன. மாநில அரசு ஊழியர்கட்கான குடும்ப நலத் திட்டம், தனியார் பள்ளி, உள்ளாட்சி நிறுவனப் பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் இல்லம்

வேலூரிலும், உதகமண்டலத்

திலும் ஆசிரியர் இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வில்லங்கள் ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சி மையமாகவும், விடுமுறை நாட்களில் ஆசிரியர்கள் தங்குமிடமாகவும் பயன்படுத்தப்படுகின்றன. ஏனைய மாவட்டங்களின் தலைநகர்களிலும் 'ஆசிரியர் இல்லம்' அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆசிரியர் விருதுகள்

அண்மையில் 14-12-75-ல் திருச்சியில் நடைபெற்ற ஆசிரியர்க்கான விருது விழாவில் ஏறத்தாழ 372 ஆசிரியப் பெருமக்கள் விருது பெற்றனர். அவ்விழாவில் கலந்துகொண்ட மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விருதுகளை ஆசிரியர்களுக்கு வழங்கிச் சிறப்பித்தார்.

பள்ளியின் வளர்ச்சிக்காக, பொதுமக்களால், பள்ளிக்கான

தளவாடங்கள் ரூ. 30,31,392 மதிப்புள்ளவை நன்கொடையாக வழங்கப்பட்டன. இது தவிர மேடையில் ரொக்க நன்கொடையாக ரூ. 2,12,000-ஐ, பள்ளிகளுக்குப் பொதுமக்கள் வழங்கினர். அதுபோது நடைபெற்ற அறிவியல் கண்காட்சியும், நூலகக் காட்சியும் மிகச் சிறப்புற நடைபெற்றது. அவ்விழாவில் கலந்து கொண்ட மேற்கு வங்கக் கல்வி அமைச்சர் திரு. பானர்ஜி தமிழகப் பள்ளியினர் ஒன்றுகூடி நடத்தும் அறிவியல் கண்காட்சியினைப் பார்வையிட்டபோது வானளாவ புகழ்ந்துரைத்தார்.

'தமிழகப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் ஆர்வத்தையும் அளவிலா அறிவியல் திறனையும், வெகு அற்புதமாக வெளிப்படுத்தும் தன்மையில் அமைந்திருக்கிறது' என்று குறிப்பிட்டார்.

நூலகக் கண்காட்சியினைப் பற்றி அவர் குறிப்பிட்டபோது,

'தனிச் சிறப்புடன் விளங்கும் நூலகக் கண்காட்சியினைக் காண மிக்க மகிழ்கிறேன். பள்ளிகளுக்கு நன்கொடைகள் மூலம் பெற்றுள்ள நூல்கள், நூலகங்களுக்கு எழில் ஊட்டுவதாக அமைந்திருக்கின்றன. சமுதாயத்தின் விழிப்புக்கும் ஆர்வத்திற்கும் இத்தகுக் கண்காட்சிகளை நடத்தி, தமிழகம் முன்னணியில் நிற்பதோடு, தனித்தன்மையோடு விளங்குகிறது' என்று குறிப்பிட்டார்!

பள்ளிக் கல்வி இயக்குநரிடம் குவிந்துள்ள அதிகாரங்கள் பலவற்றைப் பரவலாக்கும் நோக்கத்துடன் முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், மகளிர் பள்ளி ஆய்வாளர்கள் ஆகியோருக்குச் சில அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க இயக்குநரால் பணிந்தனுப்பப்பட்ட பரிந்துரைகள் அரசினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கல்வித்துறைப் பணிகளை உடனுக்குடன் விரைந்து செயலாற்றுவதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் இந்த அதிகார மாற்றங்கள் பேருதவியாக இருக்கின்றன. இதனால் உதவிபெறும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் பயிற்சிப் பள்ளிகளுக்கும், சிறப்புப் பள்ளிகளுக்கும் பராமரிப்புக் கொடைகளை வழங்கும் பணிகளும், தணிக்கை மறுப்புகளை நேர்செய்யும் பணிகளும் விரைவாக முடிக்கப்பட்டுள்ளன.

பல்வகைப் பயிற்சிப் பள்ளிகள்

கோத்தாரிக் கல்விக் குழுவின் பரிந்துரையின்படி உயர்நிலைப் பள்ளிக் கல்வியைத் தொழில் சார்புடையதாக ஆக்கவும், உயர்நிலைப் பள்ளிகளில் கல்வி போதனையுடன் தொழிற்பயிற்சியையும் இணைத்துக் கற்பிக்கவும், வேலை அனுபவங்களுக்கு வாய்ப்பளிக்கவும், 1974-75-ஆம் ஆண்டில் 19 உயர்நிலைப் பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தொழில் சார்புடைய பல்வகைப் பயிற்சிப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டன. 1975-76-ல் இத்திட்டம் விரிவாக்கப்பட்டு மேலும் 47 பல்வகைப் பயிற்சிப் பள்ளிகளில் தொழில் நுட்ப பயிற்சிகளைத் தொடங்க அரசு அனுமதித்துள்ளது.

இப்பள்ளிகளில் வானொலிப் பெட்டி பழுதுபார்த்தல், மின் இயக்கிகள் பின்னுதல், உந்து வண்டி பழுதுபார்த்தல், வேளாண்மைப் பொறியியல், விசைத்தறி, மீன்வளம், தட்டெழுத்துப் பொறி பழுதுபார்த்தல், சத்துணவும் சுகாதாரமும், விற்பனையாளர் பயிற்சி, ஆடைகளுக்கு வண்ணமிடுதல் ஆகிய தொழில்களில் பயிற்சியளிக்கப்படுகின்றன. உயர்நிலைப்பள்ளி நிலையில் வகுப்பறைக் கல்வி போதனையுடன் தொழிற் பயிற்சியளிக்கும் திட்டம் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன் முதலாகச் செயலாகப்படுகிறது. இத்தகைய பயிற்சியின் விளைவாகப் பள்ளியிறுதி வகுப்பினை முடித்ததும் மாணவர்கள் தாமே சொந்தத் தொழில் நடத்தவும், தொழிற்சாலைகளில் வேலை செய்யவும் வாய்ப்புகளைப் பெறுகின்றனர். 'பயிற்றிப் பலகல்வி தந்து-இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்' என்னும் பாரதியாரின் ஆர்வம் இத்தகைய திட்டங்களில் நிறைவேற்றப்படுவதை எண்ணி எண்ணி இன்புறுதவர் இல்லை.

ஒலி-ஒளிக்கல்வி

கல்வித்துறையின் ஒரு பிரிவாக 1949-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட மாநிலப் படநூலகம், ஒவ்வோர் ஆண்டும் அரசின் உதவியுடன் கணிசமான அளவு திரைப்படங்களையும், திரைப்படத் துண்டுகளையும் பெற்று வளர்ச்சியடைந்து தற்போது 1,004 திரைப்படங்களையும், 1,474 திரைப்படத் துண்டுகளையும் பெற்றுள்ளதோடு ஒலி, ஒளிக் கல்வியின் ஏனைய நவீன கருவிகளில் பதினைந்துக்கு மேற்பட்டவற்றையும், தன்னகத்தே கொண்டுள்ளது.

தற்போது வானொலிப் பெட்டிகள் உள்ள 1,590 பள்ளிகளில் அனைத்திந்திய வானொலியின் சென்னை, திருச்சி நிலையங்களில் ஒலிபரப்பப்படும் கல்வி நிகழ்ச்சிகளை மாணவர்கள் கேட்டு பயனடைய வாய்ப்பளிக்கப்படுகிறது. கற்றலை கவர்ச்சி மிக்கதாயும், எளிதாகவும் ஆக்கி பயிலும் முறையை நவீன மயமாக்க ஒலி, ஒளிக் கல்வித்திட்டம் பெரிதும் பயன்படுகிறது.

தொலைப்படக்காட்சி

தமிழ்நாட்டில் தொலைப்படக் காட்சியமைப்பு முதன் முதலாக அனைத்திந்திய வானொலி நிலையத்தாரால் 1975 ஆகஸ்டு 15-ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது. தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்கான தொலைப்படக்காட்சி நிகழ்ச்சிகள் 19-8-75 அன்று தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. ஆரம்பத்தில் தொலைப்படக்காட்சி நிகழ்ச்சிகள் 4 முதல் 6 வகுப்புக் குழந்தைகளுக்கு மட்டுமே தயாரிக்கப்பட வசதி செய்யப்பட்டுள்ளது. நாளடைவில் இவை படிப்படியாக மற்ற வகுப்புக் குழந்தைகளுக்கும் விரிவுபடுத்தப்படும். இந் நிகழ்ச்சிகள் உயிர்நூல், பௌதிகம், வேதியல், புதிய கணிதம் ஆகிய பாடங்களில் 20 நிமிட நேரங்கள் நடைபெறக்கூடிய அளவில் காட்டப்படும்.

தொலைப்படக்காட்சி மூலம் பாடங்களைக் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுவதற்கேற்ற முறையில் அமைப்பதற்கென அரசு பாடக்குழுக்களை நியமித்துள்ளது. தொலைப்படக்காட்சி தொடர்பான பணிகளின் பொறுப்பை மேற்கொள்ள 'தொழில் நுட்பக் கல்வி மையம்' என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டு நிகழ்ச்சித் தயாரிப்பு — அமைப்பாளர்கள் இருவர் இதற்கென நியமிக்கப் பட்டுள்ளனர்.

ஊனமுற்றோர் கல்வி

உடல் ஊனமுற்ற குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் தமிழக அரசு அதிக அக்கறை காட்டி வருகின்றது. தமிழ்நாட்டில் இன்று உடல் ஊனமுற்ற சிறுவர்களுக்காக 27 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. பார்வையிழந்த சிறுவர்களுக்காக 12 பள்ளிகளும், காது கேளாத ஊமைச் சிறுவர்களுக்காக 14 பள்ளிகளும், தொழுநோயால் வருந்தும் குழந்தைகளுக்காக 2 பள்ளிகளும், முடமாக உள்ள சிறுவர்களுக்காக 1 பள்ளியும் நடைபெற்று வருகின்றன. இப்பள்ளிகளில் ஏறத்தாழ 3,000 பிள்ளைகள் கல்வி பயிலுகின்றனர். இப்பள்ளிகளில் கல்வியுடன், உணவும், உறையுளும் இலவசமாக அளிக்கப்படுகிறது. பொதுக் கல்வி பாடங்களுடன் தச்சுவேலை, பாய்முடைதல், நூல் நூற்றல், நெய்தல் போன்ற கைப்பணிகளும், பின்னல்வேலை, உடை தயாரித்தல் போன்ற மற்ற தொழில்களும் கற்பிக்கப்படுகின்றன.



உடல் ஊனமுற்றவர்களுக்குப் புது வாழ்வு தருவதற்காக 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம் முதல்வர் டாக்டர் கலைஞரின் 51-வது பிறந்த நாளன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் சுமார் 25 ஆயிரம் ஊனமுற்றோர் புதுவாழ்வு பெறுவர்.

முன்மாதிரிப் பள்ளிகள்

பள்ளிகளில் கல்வித் தரத்திலும் நிருவாகத்திலும் மற்ற பள்ளிகளுக்கு எடுத்துக்காட்டாகவும், முன்மாதிரியாக விளங்கும் வகையில் புதுக்கோட்டையில் ஆண்களுக்கென்று ஒரு முன்மாதிரிப் பள்ளியும், சென்னை திருவல்லிக்கேணியில் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அரசினர் பெண்கள் முன்மாதிரிப் பள்ளி ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளன. தேசிய மாணவர் படைப் பயிற்சி, உடற்பயிற்சி, விளையாட்டுக்கள், மற்றும் பொறுப்புணர்ச்சி, பொது நல நோக்கில் வேலை செய்தல், கூட்டுணர்வு, நற்பண்பு போன்ற நல்லியல்புகளை மாணவ, மாணவிகளிடையே உருவாக்குகின்ற வகையில் பயிற்றுவிப்பதே முன்மாதிரிப் பள்ளிகளின் நோக்கங்களாகும்.

வயது வந்தோருக்கான கல்வி

வயது வந்தோர்களின் எழுத்தறிவின்மையைப் போக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1968-69 ஆண்டு முதல், உழவர் செயல்முறைக் கல்வித் திட்டம் செயல்படத் தொடங்கியது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 25,000-க்கும் மேற்பட்ட உழவர்கள் பயனடைந்துள்ளனர்.

சேலம் மாவட்டத்தில் எழுத்தறிவில் மிகவும் தாழ்ந்த நிலையிலுள்ள 1,000 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொன்றிலும் ஓர் எழுத்தறிவு மையம் இயங்குமாறு புதிய திட்டமொன்று அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முடிவில் 90,000 முதியோர் எழுத்தறிவுப் பயிற்சியை அடைந்திருப்பார்கள். மேலும் மாற்று முறைக் கல்வித் திட்டத்தின் கீழ் திருச்சியில் 100 மையங்களும், கோவையில் 100 மையங்களும் திறக்கப்பட்டு 6,000 பேருக்குக் கல்வியளிக்கும் திட்டமும் விரைவில் செயல்படுத்தப்படும்.

சாரணர் இயக்கம்

தமிழ்நாட்டுச் சாரணர் கழகம் மொத்தம் 73,504 சாரணர்களையும், சாரணியர்களையும் கொண்டுள்ளது. 1975-76-ஆம் ஆண்டில் ரூ. 60,000 செலவில் மேலும் 7,000 மாணவர்கள் சாரணர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

கல்லாதவர் நாட்டில் இல்லாதவராக வேண்டும் என்பதே நம் தமிழக அரசின் குறிக்கோளாகும்.

''என்னருந் தமிழ்நாட்டின் கண் எல்லாரும் கல்வி கற்றுப் பன்னருங்கலைஞானத்தால் பராக்கிரமத்தால் அன்பால் உன்னத இமமலை போல் ஓங்கிடும் கீர்த்தி எய்தி இன்புற்றார் என்னும் சேதி இயம்பக் கேட்டிடல் எந்நாளோ' என்னும்" பாவேந்தரின் ஏக்கத்தை விரைந்து போக்கும் பணியில் தமிழ்நாட்டு அரசு வீறுநடை போட்டுச் செல்கின்றது. கல்விச் சுடர் நாடெங்கும் கொழுந்து விட்டு எரியத் தொடங்கி விட்டது. தற்காலம் கல்வி உலகின் பொற்காலம்எனப் போற்றும் வகையில் தமிழக அரசு அளிக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு மாணவச் செல்வங்கள் முழுக்கல்வி பெற்று நாடு போற்றும் நன்மணிகளாக வீடுபோற்றும் கண்மணிகளாக விளங்கப் பாடுபடுவார்களாக

மறவாதீர்கள்:

உங்கள் மகள் ஒருநாள்

மணமகளாக அமர வேண்டியவள்!

திருமணம் என்ருலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்ருல்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கிஞல் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்ருேம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

	மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது	10 ஆண்டு இறுதியில் கிடைப்பது
	ரூ.	ரூ.	ரூ.
ரெக்கரிங் டிபாசிட்	5/-	375/-	...
	10/-	750/-	...
வளரும் மாதச் சேமிப்பு	5/-	...	825/-
	10/-	...	1,650/-

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002

வேலை வாய்ப்பளித்தோம்! வேண்டிய பயிற்சியும் தருகின்ருேம்!

தமிழக அரசின் வேலைவாய்ப்புத் துறை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக ஆண்டுதோறும் சுமார் 35,000 பேர்களை வேலையில் அமர்த்தி வருகிறது. 1973-ஆம் ஆண்டில் வேலைவாய்ப்புத் துறையால் வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 35,975 ஆகும். 1974-ஆம் ஆண்டில் வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 35,344 ஆகும். 1968 முதல் 1974 வரை வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,76,931 ஆகும்.

கீழ்க்காணும் பட்டியல் 1968 முதல் 1974 வரையில் மொத்தமாகவும், 1974-ல் மட்டும் தனியாகவும், அக்காலங்களில் ஒவ்வொரு தனிப்பிரிவினரில் (தாழ்த்தப்பட்டவர்கள், உடல் ஊனமுற்றவர் போன்றவர்) வேலையில் அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.

		1968 முதல் 1974 வரை	1974-ல் மட்டும்
1. மொத்தம் வேலையில் அமர்த்தப்பட்டவர்கள்	...	2,76,931	35,344
2. அவர்களில் தாழ்த்தப்பட்டோரும், மலை சாதியினரும்	...	40,738	4,594
3. முன்னுள் இராணுவத்தினர்	...	8,858	1,256
4. பெண்கள்	...	52,051	6,514
5. உடல் ஊனமுற்ருேர்	...	2,005	327
6. ஸ்ரீலங்கா, பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள்	...	3,622	810
7. தங்கக் கட்டுப்பாடு சட்டத்தால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள்		962	198

வேலைவாய்ப்புத் துறையின் பணி :

மக்கள் தொகை நாளும் பெருகுகிறது! அதன் பயனுக வேலை வாய்ப்புப் பிரிவின் மூலம் வேலை தேடுவோரின் எண்ணிக்கையும் கூடுகிறது. ஆகவே, வேலை வாய்ப்புப் பிரிவின் வேலைப் பளுவும் கூடுகிறது. கூடிவரும் வேலைப் பளுவால், இத்துறை மக்களுக்கு ஆற்றும் பணியின் தன்மை குறைந்து விடக் கூடாது என்பதற்காகத் தமிழ்நாடு அரசு அத்துறையை விரிவு படுத்தியிருக்கிறது. அதன் பயனுக அத்துறையின் பணி கூடிச்சிறப்படைவது மட்டுமல்லாமல் அது பரவலாக்கப்பட்டுமிருக்கிறது. தமிழக அரசின் அத்தகைய நடவடிக்கையால் 1968 முதல் சில மாவட்டங்களில் சில பகுதிகளில் துணை வேலை வாய்ப்பு அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டு, அப்பகுதிக்கு இத்துறையின் பணி சிறக்க வழி வகுக்கப்பட்டுள்ளது. இத்தகைய துணை வேலைவாய்ப்பு அலுவலகங்கள், திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், மண்டபம், கஞ்சமலை, அம்பத்தூர், தூத்துக்குடி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உடல் ஊனமுற்ருேரை வேலையில் அமர்த்துவதில் சிறப்பு நடவடிக்கைகள் எடுத்து, அவர்களை வேலையில் அமர்த்தும் பொருட்டு கோவையிலும், மதுரையிலும் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இதன் செலவு, முதல் அமைச்சரின் உடல் ஊனமுற்ருேர் நிதியிலிருந்து ஏற்கப்படுகிறது. தமிழ் நாட்டிலேயே சென்னையில் தான் தொழில் கல்வி பயின்ருேர் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. அவர்களது வேலைப் பிரச்சினையில் தனிக் கவனம் செலுத்தும் பொருட்டு தொழில் பயின்ருேருக்காகத் தனியாக ஓர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் நிறுவப்பட்டுள்ளது. எல்லாவற்றிற்கும்

மேலாக இத்துறை ஆற்றும் பணியையும், பொது மக்கள் நன்றாகப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காகவும், பொது மக்களின் குறைகள் விரைவில் களையப்பட வேண்டும் என்பதற்காகவும் வேலை வாய்ப்புத் துறையின் தலைமை அலுவலகத்தில் ஓர் 'விளம்பரப் பிரிவு' நிறுவப்பட்டு அது செயலாற்றி வருகிறது.

தொழில் முறை வழி காட்டும் பணி:

இன்றைய இளைஞர்கள் தங்கள் வேலை தேடும் பிரச்சினையை இலகுவாகத் தீர்க்க வேண்டுமென்றால் அவர்களுக்குச் சரியான முறையில் வழி காட்ட வேண்டும். அதற்கு இன்றையப் பொருளாதாரச் சூழ்நிலை, வேலை நிலவரம், தேவையுள்ள வேலைகள், பணி பயிற்சி பற்றிய தகவல்கள்—அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். வழி காட்டுவதற்காகவும். மேற்காணும் விபரங்களை வழங்குவதற்காகவும் ஒவ்வொருமாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் (தொழில் முறை வழி காட்டுதல்) நியமிக்கப்பட்டு, பணி புரிகிறார். இந்த அலுவலர் வேலை தேடுவோரைக் கூட்டமாகச் சந்தித்து 'அறிவுரை வழங்குகிறார். தனித் தனியாகச் சந்தித்து பணி, பயிற்சி பற்றிய விவரங்கள் தருகிறார். ஒருவருடைய விருப்பு, வெறுப்பு, ஈடுபாடு, திறமை, பொருளாதாரச் சூழ்நிலை ஆகியவற்றை ஆராய்ந்து அவருக்குப் பொருத்தமான துறை, பணி, பயிற்சி ஆகியவற்றைத் தேர்ந்தெடுக்க ஆலோசனை வழங்குகிறார். பள்ளி, கல்லூரிகளுக்குச் சென்று மாணவர்கள் தொழிலைத் தேர்ந்தெடுக்க வேண்டிய பிரச்சினையை அணுகும் முறையையும், வழியையும் விளக்குகிறார். கருத்தரங்கு, பொருட்காட்சி, மாணவர்-வேலையளிப்போர் சந்திப்பு, பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டங்கள் ஆகியவற்றின் மூலம் மாணவர்களுக்கு பலவிதப் பணிகள் பற்றிய விவரங்கள் தந்து விளக்குகிறார். அதன் மூலம் தங்கள் வருங்கால வேலைப் பிரச்சினையை சுலபமாகத் தீர்க்க உதவுகிறார். இப்பணியை இன்றைய மாணவர்கள் சரியாகப் பயன்படுத்த ஆரம்பித்திருப்பது ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழி வகுக்கும் என நம்பலாம்.

வேலை நிலவரத் தகவல் பணி:

வேலை நிலவரத் தகவல் திட்டத்தின் கீழ் தமிழகத்திலுள்ள பொதுத்துறையைச் சேர்ந்த எல்லா நிறுவனங்களும், குறைந்த

தமிழகம் பெற்ற வெற்றி

அனைத்திந்திய தொழில் திறன் போட்டியில் ஒவ்வொரு மாநிலத்திலும் முதன்மையாகத் தேறுபவர்கள், அனைத்திந்தியப் போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். இந்த அனைத்திந்தியப் போட்டியில் தமிழகத்தின் மாணவர்கள் ஆண்டுதோறும் சில தொழில்களில் முதலிடம் பெற்றுப் பரிசு பெறுகின்றனர்; தமிழகத்திற்கும் பெருமை தேடித் தருகின்றனர். இந்த வெற்றிகள், தமிழக மாணவர்களின் அறிவாற்றலுக்கும், தொழில் தேர்ச்சிக்கும் தமிழக அரசின் சாதனைகளுக்கும் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது என்பது நமக்குப் பெருமை அளிப்பதாகும்!

1973, 1974 ஆகிய இரண்டு ஆண்டுகளில் நடைபெற்ற அனைத்திந்தியத் தொழில் திறன் போட்டியில் பங்கு பெற்று, இந்தியாவிலேயே சிறந்த பயிற்சியாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விருது பெற்ற மாணவர்களின் விவரங்கள் வருமாறு :

ஆண்டு	விருது பெற்றவர்களின் பெயர்.	பயிற்சி பெற்ற தொழிற் பயிற்சி நிலையம்.	தொழிலின் பெயர்.
1973	1. திரு. கணேச பிள்ளை	அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், நாகர்கோவில்.	பிட்டர்
	2. திரு. பக்தவத்சலம்	அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், அம்பத்தூர்.	மெக்கானிக் (இன்ஸ்ட்ருமெண்ட்)
1974	1. திரு. எம். செல்வ ராசன்	அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், தூத்துக்குடி.	டர்னர்
	2. திரு. ஜி. பால்ராஜ்	அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், நாகப்பட்டினம்.	மெஷினிஸ்ட் (காம்போசிட்)

இத்தொழில் திறன் போட்டியில் வெற்றி பெற்று முதன்மையாக வரும் மாணவர் ஒவ்வொருவரும், மத்திய அரசால் வழங்கப்படுகின்ற கீழ்க்காணும் பரிசுகளைப் பெறுகின்றனர் :

1. வெள்ளிப் பதக்கம் 2. ரூ. 5000 ரொக்கப் பரிசு, 3. திறமைச் சான்றிதழ் 4. ரூ. 1000 மதிப்புள்ள தொழிற் கருவிகள் அடங்கிய கருவிப் பெட்டி. 5. நாட்டின் முக்கியமான பெரிய தொழிற்சாலைகளை அரசின் செலவில் பார்வையிட வகைசெய்யும் சுற்றுலா.

அளவு 10 பேர்களையாவது வேலைக்கு அமர்த்தியுள்ள தனியார் நிறுவனங்களும், கொண்டு வரப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்படி தமிழகத்திலுள்ள வேலை அளிப்போரிடமிருந்து மூன்று மாதத்திற்கு ஒரு முறை வேலை நிலவரத் தகவல்கள் சேகரிக்கப் படுகின்றன. இத்தகவல்கள், மொத்த வேலை அளவையும், எழுந்த காலி இடங்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட்ட காலி வேலைகள், நிரப்பப்படாமல் வைக்கப்பட்டுள்ளவை மற்றும், மனிதச் சக்தி பற்றுக்குறை போன்ற விவரங்கள் பற்றியவை ஆகும். சேகரிக்கப்பட்ட தகவல்கள் பகுக்கப்பட்டு, ஆராயப்பட்டு பல பயனுள்ள முடிவுகள் எடுக்கப் பயன்படுகின்றன. நாட்டில் கல்வி வளர்ச்சித் திட்டங்கள் தொழிற் பயிற்சி தொடங்கல், வேலைகளையும் ஆட்களையும் இணைத்தல், தொழில் முறை வழி காட்டல் போன்ற பலவகைப்பட்ட பணிகள் குறித்த நடவடிக்கைகளில் இவை பயன் படுகின்றன.

1967-68-ஆம் ஆண்டு முதல் *1974-75*-ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் மொத்த வேலை அளவு எப்படி, எவ்வளவு, வளர்ந்துள்ளது என்பதைக் கீழ்க்காணும் பட்டியலில் காணலாம். இவ்வெண்ணிக்கை வேலை நிலவரத் தகவல் திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்டதாகும். இத்திட்டத்தின் கீழ் வேளாண்மைத் தொழிலாளர்கள், சுய வேலைகள், பகுதி நேர வேலைகள் மற்றும் வீட்டு வேலைகள் ஆகியவற்றில் உள்ள பணி புரிபவர்கள் சேர்க்கப்படவில்லை.

காலம்	மொத்த வேலை அளவு
31—3—1968	1449700
31—3—1969	1470000
31—3—1970	1512000
31—3—1971	1541200
31—3—1972	1573500
31—3—1973	1630100
31—3—1974	1629200
31—3—1975	1654750

வேலை வாய்ப்புத் துறை:

இயற்கையின் உற்பாதங்களான வறட்சி போன்ற பொருளாதாரச் சிரமங்கள் இடையிடையே ஏற்பட்ட போதிலும், தமிழகத்தில் வேலை அளவு முறையாக வளர்ந்துள்ளது என்பதை மேற்காணும் புள்ளி விவரம் காட்டுகிறது. இவ்வளர்ச்சிக்கு அரசின் தொழில் வளர்ச்சித் திட்டங்களும், பொருளாதார வளர்ச்சியை உவந்து ஊக்குவிக்கும் செயல்களும் காரணமாகும். ஆகவே, இவ்வளர்ச்சியை அரசின் சாதனையின் ஓர் அளவுகோல் என்று நாம் கருதவேண்டும்.

வாழ்க்கை 'தொழில் பற்றிய ஆராய்ச்சியும் பகுத்து ஆய்தலும்:

பலவிதமான தொழில்கள் மற்றும் பணிகள் பற்றிய விவரங்கள் இத்துறையின் ஓர் பிரிவால் சேகரிக்கப்பட்டு, பகுத்து ஆராயப்படுகிறது. அவ்விவரங்கள் படிப்போருக்கும், வேலை தேடுவோருக்கும் பயன் அளிக்கும் வகையில் சிறு கையேடுகளாகத் தயாரிக்கப்பட்டு இலவசமாக வழங்கப்படுகின்றன. இதனால் மாணவர்களும், வேலை தேடுவோரும், இன்றைய இளைஞர்களும் பயனடைகின்றனர். இப்பிரிவால் வெளியிடப்படும் நூல்களும், கையேடுகளும் வேலை தேடுவோருக்கு வேலை தேடும் முயற்சியில் ஓர் வழிகாட்டியாக அமைகின்றது. இப்பிரிவின் பணியால் இன்றைய இளைஞர்கள் அடையும் பயனை எண்ணிக்கையில் கணக்கிட இயலாது என்றாலும், அதன் பயன் கணிசமானது ஆகும். இவ்வாறு இளைஞர்கள் அடையும் பயனை, அரசு எடுக்கும் முயற்சியின் முகிழ்ச்சி அல்லது சாதனை என்று கூடச் சொல்லலாம்.

உடல் ஊனமுற்றோருக்கு வேலை அல்லது பயிற்சி அளிக்கும் பணி:

உடல் ஊனமுற்றோருக்கு மறு வாழ்வு அளிப்பதைத் தமிழ்நாடு அரசு தன் கடமைகளில் ஒன்றாகக் கருதுகிறது. அக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு வேலை வாய்ப்புத் துறை பணி புரிந்து வருகிறது. மாவட்டங்களில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களும், சென்னையில் உள்ள உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகமும், உடல் ஊனமுற்றோரை வேலையில் அமர்த்தப் பெரும் முயற்சிகள் எடுத்து வெற்றி கண்டுள்ளன. 1968 முதல் 1974 வரை இத்துறையின் முயற்சியால் வேலையில் அமர்த்தப்பட்டுள்ள உடல் ஊனமுற்றோரின் எண்ணிக்கை 2,005 ஆகும். 1972 லிருந்து ஒவ்வொரு ஆண்டும் இத்துறையினால் வேலையில் அமர்த்தப் பட்டோரின் எண்ணிக்கையை ஆராய்ந்தால், இத்துறை இப்பணியில் காட்டும் ஆர்வமும், அரசின் சாதனையும் நன்கு விளங்கும். அது விவரம் வருமாறு:

ஆண்டு		வேலையில் அமர்த்தப்பட்டவர்கள்
1972	...	198
1973	...	276
1974	...	327
1975 (செப்டம்பர் வரை)	...	400

தாயகம் திரும்பியோருக்கு மறு வாழ்வு:

ஸ்ரீலங்காவிலிருந்தும், பர்மாவிலிருந்தும் தாயகம் திரும்பியோருக்கு மறுவாழ்வு அளிக்கும் பணியைத் தமிழக அரசின் மறுவாழ்வுத் துறையோடு சேர்ந்து இத்துறை வெற்றிகரமாகச் சமாளித்து வருகிறது. அவர்களின் மறுவாழ்வுக்காகப் பல திட்டங்கள் தீட்டி அவர்கள் நேரடியாகப் பணியில் சேர்த்தல் பயிற்சி அளித்து அதன் பின் வேலையில் அமர்த்தல் ஆகிய பணியினை இத்துறை ஆற்றி வருகிறது.

1968 முதல் 1975 வரை இத்துறையினால் பணியில் அமர்த்தப் பட்டுள்ள அகதிகளின் எண்ணிக்கை 3,622 ஆகும். ஆண்டு வாரியாக வேலையில் அமர்த்தப் பட்டோரின் எண்ணிக்கை வருமாறு:—

ஆண்டு		வேலையில் அமர்த்தப்பட்டோர்
1968	...	448
1969	...	381
1970	...	436
1971	...	476
1972		468
1973	...	603
1974		810
1975 செப்டம்பர் வரை)	...	586

அகதி மாணவர்களின் வேலை வாய்ப்பைப் பெருக்குவதற்காக, அவர்களுக்குப் பலவகைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு மாதம் ரூ. 97-50 வரை உதவிப் பணம் வழங்கப்படுகிறது. பயிற்சி முடிந்தவுடன் வேலையில் அமர்த்தவும் முயற்சி எடுக்கப்படுகிறது. பல வகையான பயிற்சிகளில் அவர்கள் சேர்க்கப்பட்டு பயிற்சியளிக்கப்படுகின்றனர். அப்பயிற்சிகளில் சில:

1. தமிழக அரசு தொழில் பயிற்சி நிலையங்களில் பயிற்சி.

2. மத்தியப்பிரதேசத்தில் மானு என்ற இடத்தில் உள்ள தொழில் பயிற்சி நிலையத்தில் பல தொழில்களில் பயிற்சி, கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி.

3. மாணவிகளுக்குத் தையற்கலை செவிலியர் மற்றும் மருத்துவச்சி போன்றவற்றில் பயிற்சி,.

4. நவீன படகு கட்டும் முறையில் பயிற்சி.

5. நவீன முறையில் காங்கிரீட் தயாரிப்பதில் பயிற்சி.

6. உணவியல் துறைப் பணிகளில் பயிற்சி.

7. மோட்டார் வாகனம் ஓட்டுநர் பயிற்சி.

8. இயந்திரப் படகுகள் மூலம் நவீன முறையில் மீன் பிடிப்பதில் பயிற்சி.

9. அச்சுத் துறையில் பயிற்சி.

10. டிராக்டர் ஓட்டுதல் மற்றும் பழுதுபார்ப்பதில் பயிற்சி.

11. உடைகள், படுக்கைகள், தயாரிப்பதில் பயிற்சி.

12. நூற்பாலைகளில் பயிற்சி அளித்து அங்கேயே வேலையில் அமர்த்துதல்.

இப்பயிற்சிகள் சிலவற்றில் அகதி மாணவர்களுக்கென இட ஒதுக்கீடு அரசினரால் செய்யப்பட்டுள்ளது. மற்ற பயிற்சிகளில் சேர அகதி மாணவர்களுக்குமற்றவர்களைக் காட்டிலும்முன்னுரிமை வழங்கப்படுகிறது. இத்தகைய பயிற்சித் திட்டங்களின் மூலம் ஸ்ரீ லங்கா மற்றும்பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு வேலை அளிப்பதிலும் மறுவாழ்வு அளிப்பதிலும் இத்துறை வெற்றிகரமாகச் செயல் பட்டு வருகிறது.

தமிழ்நாடு சிறப்பு வேலைப் பழகுநர் பயிற்சித் திட்டம் :

தொழிற் கல்வி பயின்ற பட்டதாரிகள், டிப்ளமோ பெற்றவர்கள், கை வினைஞர்கள் ஆகியோருக்குப் பணியில் முன் அனுபவம் இல்லாததால் வேலை கிடைப்பது கடினமாகிறது. அவர்களுக்குத் தகுந்த வேலைப் பயிற்சி அளிப்பதன் மூலம், அனுபவத்தைப் பெறுகிறார்கள். அந்த அனுபவம் அவர்களுக்கு வேலை கிடைக்க உதவுகிறது. இத்தகைய பயிற்சி அளித்து, அதன் மூலம் பொறியியல் கல்வி பயின்றவர்களின் வேலை வாய்ப்பைப் பெருக்கும் நோக்கத்துடன், தமிழக அரசு சிறப்பு வேலை பழகுநர் பயிற்சித் திட்டத்தைச் (Tamil Nadu Special Apprenticeship training Scheme) செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி தமிழக அரசின் பல தொழில் மற்றும் பொறியியல் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள், தொழில் கல்வி பயின்றவர்களைப் பயிற்சிக்கு எடுத்த பின் வேலையிலும் அமர்த்திக் கொள்கின்றன.

இத்திட்டத்தின்படி 30-9-1974 வரை இரண்டு ஆண்டு பயிற்சி முடித்தவர்களும், பயிற்சிக் காலத்திலேயே வேலையில் அமர்த்தப்பட்டவர்களும் மொத்தம் 2,135 பேர் ஆவார்கள். இவர்களில் பொறியியல் பட்டதாரிகள்—705; பொறியியல் டிப்ளமா படித்தவர்கள்—688; கைவினைஞர்கள்—742.

இப்பயிற்சி பெறும் காலத்தில் பொறியியல் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ. 250/- உதவிப் பணமும், டிப்ளமா படித்தவர்களுக்கு மாதம் ரூ. 150/- உதவிப் பணமும், கைவினைஞர்களுக்கு 1961-ஆம் ஆண்டு தொழில் பழகுநர் சட்டப்படி உதவிப் பணம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தால் பொறியியல் கல்வி பயின்றவர்கள் மத்தியில் உள்ள வேலையில்லாப் பிரச்சினையை அரசு கணிசமான அளவு குறைக்க முடிந்தது ஓர் சாதனையேயாகும்.

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் :

எழுத்தர் வேலையையே விரும்பும் பெரும்பாலான இன்றைய இளைஞர்களுக்கு வேலை கிடைப்பது கடினமாகிறது; காலதாமதமும் ஆகிறது. மாறுகத் தொழில் கல்வி பயின்றால், கை வினைஞர்களுக்கான பயிற்சியைப் பெற்றால் அவர்களுக்கு வேலை கிடைப்பது சிறிது இலகுவாகும். மேலும், தமிழகம் தொழில் துறையில் நாளும் தழைத்தோங்கி வளர்ந்து வருகிறது. இப்படிப் புதிதாக உருவாகும் தொழிற் சாலைகளில் பணியாற்ற தொழில் பயின்றவர்களும், கைவினைஞர்களும் தேவை. இந்த இரண்டு தேவைகளையும் அடிப்படையாகக் கொண்டுதான் தமிழ் நாட்டில் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கீழ் 31 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்கப் பெற்று இயங்கி வருகின்றன.

இத் தொழிற் பயிற்சி நிலையங்களில் 31 பொறியியல் தொழில்களுக்கும், 6 பொறியியல் அல்லாத தொழில்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகின்றன. பயிற்சிக் காலம் தொழில்களின் தன்மைக்கேற்ப ஓராண்டு அல்லது ஈராண்டாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தொழிலின் தன்மைக்கேற்ப அத்தொழில் பயிற்சியில் சேர்வதற்குரிய கல்வித் தகுதி 9-ஆம் வகுப்பு அல்லது பள்ளி இறுதி வகுப்புத் தேர்ச்சி என வரையறுக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நிலையங்கள்மூலம் ஆண்டுதோறும் சுமார் 8,000 பேர் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு 'தேசீய தொழிற் சான்றிதழ்' வழங்கப்படுகின்றது.

மாணவர்களை ஊக்குவிக்கும் தொழில் திறன் போட்டி :

பயிற்சி பெறும் மாணவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் பொருட்டு, பயிற்சி பெறும் மாணவர்களுக்கிடையே 'தொழிற் திறன் போட்டிகள்' நடத்தப்படுகின்றன. இத்தொழில் திறன் போட்டிகள் கீழ்க்காணும் 9 தொழில் பிரிவுகளில் நடத்தப்படுகின்றன.

1. பொறிப்பகுதிபொருத்துபவர் (பிட்டர்)

2. கடைசல் பிடிப்பவர் (டர்னர்)

3. இயந்திர வேலையாள் (மேசினிஸ்ட்-காம்போஸிட்)

4. கம்மியர் (கருவிகள்) (மெக்கானிக்-இன்ஸ்ருமெண்ட்)

5. கம்மியர் (மோட்டார் வண்டி) (மெக்கானிக்-மோட்டார் வண்டிகள்)

6. மின்சாரப் பணியாளர் (எலக்ட்ரீஷியன்)

7. அச்சுவார்ப்பவர்(மோல்டர்)

8. பற்றவைப்பவர் (காற்றைச் செலுத்திப் பற்றவைத்தல், மின் சக்தியால் பற்ற வைத்தல், (வெல்டர் கேஸ் எலக்டிரிக்).

9. துணி வெட்டுதல், தையல் வேலை செய்தல் (மகளிர்)

1961-ஆம் ஆண்டு தொழில் பழகுநர் சட்டத்தின் கீழ் பயிற்சித் திட்டம் :

நாடு முழுவதும் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்கள் மாணவர்களுக்குப் 'பாடமுறையில்' தொழில் பயிற்சி அளிக்கின்றன. அவர்களுக்கு 'அனுபவமுறையில்' பயிற்சி வேண்டுமல்லவா? இத்தகைய அனுபவப் பயிற்சியை அரசின் தொழில் நிறுவனங்களும் தனியார் தொழில் நிறுவனங்களும் அளிக்க வேண்டுமென்பதை 1961-ஆம் ஆண்டுதொழில் பழகுநர் சட்டம் கட்டாயம் ஆக்குகிறது. இச்சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட நிறுவனங்களின் அதிபர்கள், வரையறுக்கப்பட்ட தொழில்களில் பயிற்சியாளர்களைத் தேர்ந்தெடுத்து, முறைப்படி பயிற்சி அளிக்க வேண்டும். இதுவரை 103 தொழில்களில் தொழில் பயிற்சி பெற வரையறுக்கப்பட்டுள்ளன. தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றோர் அல்லது தேவையான பொதுக் கல்வி பெற்று தொழில் அனுபவம் இல்லாதோரும் கூட இத்திட்டத்தின் கீழ் தொழில் பழகுபவர்களாகச் சேரலாம்.

ஒவ்வொரு தொழிலுக்கான பயிற்சியைப் பொறுத்து, பயிற்சியின் கால அளவு 6 மாதங்கள் முதல் 4 ஆண்டுகள் வரை வேறுபடுகின்றன. இப்பயிற்சியில் சேரக் குறைந்த அளவு வயது 14. உச்ச வயது வரம்பு வரையறுக்கப்படவில்லை. பயிற்சிக் காலத்தில் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. பயிற்சி அளிக்கும் நிறுவனம் சென்னை மாநகரத்தில் இருந்தால் பயிற்சியாளருக்கும் அளிக்கப்படும் உதவிப் பணம் மாதம் ரூ. 100 முதல் ரூ. 160 வரை வேறுபடுகிறது. பயிற்சி அளிக்கும் நிறுவனம் சென்னை மாநகரத்திற்கு வெளியில் இருந்தால் பயிற்சியாளருக்கு அளிக்கப்படும் உதவிப் பணம் மாதம் ரூ. 90 முதல் ரூ. 144 வரை வேறுபடுகிறது.

தொழில் பழகுநர் சட்டத்தை அமுல்படுத்துவதில் தமிழகத்தின் சாதனை !

ஒவ்வொரு ஆண்டும் தொழில் பழகுநர் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு நிறுவனமும் பயிற்சி அளிக்கப்பட வேண்டிய நபர்கள் எத்தனை பேர் என்று கணிக்கிறது. அப்படிக் கணிக்கப் பட்ட இடங்களில் பயிற்சியாளர்களைச் சேர்த்துப் பயிற்சி அளிப்பது அந்நிறுவனங்களின் கடமை. அதைச் செயல்படுத்திக் கண்காணிப்பது அரசின் கடமையாகும்! 1968-ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் பயிற்சிக்காகக் கணிக்கப்பட்ட இடங்கள், பயிற்சியில் அமர்த்தப்பட்ட நபர்கள் சாதனையின் அளவு ஆகியவற்றைக் கணக்கிட்டுப் பார்த்தால், இப்பணியில் தமிழகம் எப்படி மெதுவாகவும், முறையாகவும், முன்னேறி வெற்றி கண்டிருக்கிறது என்பது தெரியவரும். இச்சாதனை சம்பந்தமான புள்ளி விவரங்கள் வருமாறு:—

காலம்		கணிக்கப் பட்ட இடங்கள்	நிரப்பப்பட்ட இடங்கள்	சாதனையின் அளவு (சதவீதத்தில்)
மார்ச்சு	1968	4,062	1,648	40.5
மார்ச்சு	1969	4,451	2,073	46.6
மார்ச்சு	1970	4,251	2,123	50.0
மார்ச்சு	1971	4,233	2,540	60.0
மார்ச்சு	1972	4,975	2,883	58.8
மார்ச்சு	1973	5,500	3,672	66.8
மார்ச்சு	1974	6,140	4,512	73.5
மார்ச்சு	1975	6,387	4,982	78.0
செப்டம்பர்	1975	6,504	7,212	110.73

இடம் பெயர்ந்த நெசவாளர், பொற்கொல்லர், மற்றும் மாதிரி உருவமைப்புச் செய்பவர் ஆகியோருக்கான பயிற்சித் திட்டம்:

மேற்கூறிய தொழில்களில் ஈடுபட்டுள்ளவர் பெரும்பாலும் அதனை வாழையடி வாழையாகக் கடைப்பிடித்து வருபவர்களாவர். ஆனால் அவர்களுக்கு இத்தொழிலில் போதிய வருவாய் கிட்டுவதில்லை! அரசு இத்தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களது வருவாயைப் பெருக்கும் பொருட்டு அவர்களுக்கு நல்ல பயனளிக்கும் தொழிலைக் கற்றுத் தர முன்வந்திருக்கிறது. இதன் விளைவாக 1969-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் தமிழகத்தில் சேலம், திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய நான்கு தொழிற்பயிற்சி நிலையங்களில் இம்மாதிரியான 160 தொழிலாளர்களுக்குத் தொழிற்கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ் எழுதப்படிக்க, பேசத் தெரிந்த தொழிலாளர் இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெறத் தகுதியுடையவர்களாவர். இவர்களுக்கு வயது வரம்பு இல்லை. பயிற்சி இலவசம். இத்துடன் மாதம் ஒன்றுக்கு ரூ. 10- உதவிப் பணம் வழங்கப்படும்.

இதற்கான பயிற்சிக் காலம் இரண்டு ஆண்டுகள். எல்லா வேலை நாட்களிலும் மாலை 6 மணி முதல் 9 மணி வரை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. 1969-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் வெற்றிகரமாக நடந்து வருகின்றது.

தொழிலாளர்களுக்கான மாலை வகுப்புக்கள் திட்டம்:

தொழிற் சாலைகளில் வேலை செய்யும் பெரும்பாலோருக்கு அவர்கள் செய்யும் தொழிலைப் பற்றிய நூலறிவு போதிய அளவு இருப்பதில்லை. இக்குறையை நிறைவு செய்வதே தொழிலாளர்களுக்கான மாலை வகுப்புக்கள் நடத்தும் திட்டம். அதன்படி, எல்லா பொறியியல் தொழில்களுக்கும் பொதுவான தொழிற்சாலை கணிதஇயல், வரைபடங்களை அறிதல், குறித்த அடிப்படை போதனை, தொழில் கருவிகளைப் பயன்படுத்தும் முறை முதலியவற்றில் அவர்களுக்குள்ள அறிவாற்றலை மேம்பாடு செய்தற் பொருட்டு இவ்வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. தமிழகத்தில் தொழிற்சாலைகளையும், தொழிலாளர்களையும் அதிகமாகக் கொண்ட இடங்களாகிய 1. கிண்டி, 2. வடசென்னை, 3. அம்பத்தூர், 4. மதுரை, 5. கோயம்பத்தூர் ஆகிய 5 தொழிற் பயிற்சி நிலையங்களில் மேற்கூறிய மாலை நேர வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தொழில் புரியும் நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட, தொழில் குறித்த போதனைகளைப் புரிந்து கொள்ளும் திறமையுடைய எல்

லாத் தொழிலாளர்களும் இம் மாலைநேர வகுப்புக்களில் சேரத் தகுதியுடையவராவர். இதற்கென அமைக்கப்படும் குழு ஒன்றினால் மனுச் செய்தவர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். தொழிற்கல்வி பயின்றவர்கள் தாங்களாகவே சுய தொழில்கள் நிறுவும் நிலை பெருமளவில் உருவாகி வளர வேண்டும். அந்நிலை வந்தால் தொழில் பயின்றோரின் வேலைப் பிரச்சினையும் தீரும்; தொழில்களும் பெருகும்; உற்பத்தியும் கூடும்; நாடும் நலம் பெறும்! இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டுதான் 'வீட்டுப் பொருள்களைப் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு செய்யும் நிலையங்கள்' ஆரம்பிக்கும் திட்டத்தை தமிழக அரசு 1973-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்படி 1973-74-ஆம் ஆண்டில் ஆறு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவை சென்னையில் மூன்றும், கோவை, மதுரை, திருநெல்வேலி ஆகிய மூன்று இடங்களில் ஒவ்வொன்று வீதமும் உள்ளன. 1974-75-ஆம் ஆண்டில் 7 நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிலையமும் அதன் சுற்றுப்புறத்தில் உள்ள வீடுகளில் மின்சாரத் தடங்களைப் பழுதுபார்த்தல், தண்ணீர்க் குழாய்களைப் பழுது பார்த்தல், மோட்டார் அல்லது டிராக்டர் வண்டிகளைப் பழுது பார்த்தல் போன்ற அன்றாடப் பணிகளைச் செய்து பொதுமக்களுக்கு உதவியாக இருப்பார்கள். ஒவ்வொரு நிலையத்திலும்தொழில் கல்வி பயின்றவர்கள் பணிபுரிவார்கள். இத்தகைய நிலையம் ஆரம்பிப்பதற்கு அரசும், நாட்டுடைமை ஆக்கப்பட்ட வங்கிகளும் நிதி உதவி அளிக்கின்றன. அரசு 10 சத நிதி உதவியும், நாட்டுடைமை ஆக்கப்பட்ட வங்கி 85 சத நிதி உதவியும் கடனாக அளிக்கின்றனர்.

இத்திட்டத்தால் தொழில் பயின்றவர்களுக்கு வேலை கிடைக்கிறது. பொதுமக்களும் தங்களின் அன்றாடப் பிரச்சினைகளையும் (மின்சாரத் தடங்கல், தண்ணீர்க் குழாய் பழுதுபடல்) எளிதில் தீர்த்துக்கொள்ள உதவுகிறது. வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும். இத்திட்டம் வெற்றிபெற தொழில் பயின்றவர்களும், பொது மக்களும் கை கொடுப்பார்களானால் இதுபோன்ற பல திட்டங்கள் உருவாக்கலாம். அது நாடு நலம் பெற வழிவகுக்கும்.

1967-முதல் 1975 வரை தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகளும் சாதனைகளும்

— சுருக்கமான கண்ணோட்டம் —

தமிழகத்திற்குச் சட்டங்களை வகுத்து, அவைகளை நிறைவேற்றும் பணிகளை மேற்கொண்டிருப்பது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையாகும். 1967-ஆம் ஆண்டு நடைபெற்ற 4-ஆம் பொதுத் தேர்தலுக்குப் பின்னர், 4-ஆம் சட்டமன்றப் பேரவை 1967-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள், 1-ஆம் தேதி அமைக்கப்பெற்று, அதே மாதம் 15-ஆம் தேதி முதன் முதலாகக் கூடியது. இந்தப் பேரவை 1971-ஆம் ஆண்டு சனவரி 5-ஆம் தேதி கலைக்கப்பட்டது.

1971-ல் பொதுத் தேர்தல் நடந்து முடிந்த பின், தமிழ் நாடு 5-ஆம் சட்ட மன்றப் பேரவை அதே ஆண்டு மார்ச்சுத் திங்கள் 22-ஆம் நாள் கூடியது.

பேரவை மேற்குறிப்பிட்ட கால அளவில், அதாவது ஒன்பது ஆண்டுகளில், 524 நாட்கள் கூடிற்று.

வினாக்களும், நிதிநிலை மதிப்பீடுகளும், துணை நிதிநிலை மதிப்பீடுகளும் சட்டங்களும்

1967 முதல் 1975-ஆம் ஆண்டு வரை 9,916 வினாக்களும், 9 நிதிநிலை மதிப்பீடுகளும், 21 துணை நிதிநிலை மதிப்பீடுகளும் அவையில் அளிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் 358 சட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவ்வாறு நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களில் முக்கியமான சில :

1. சுயமரியாதை அல்லது சீர்திருத்தத் திருமணங்களை ஏற்பது பற்றிய சட்டம்.

The Hindu Marriages (Madras Amendment) Bill, 1967 (L.A. Bill No. 19 of 1967)

2. நிலத்திற்கான உச்சவரம்பை 30 ஸ்டாண்டர்டு ஏக்கராவிலிருந்து 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவாகக் குறைப்பது பற்றிய சட்டம்.

The Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill 1967 (L. A. Bill No. 24/67)

3. தமிழ் நாடு குடிசைப் பகுதிகளை மாற்றி அபிவிருத்தி செய்வது குறித்த சட்டம்.

The Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Bill, 1971 (L. A. Bill No. 3 of 1971)

4. தமிழகத்தில் ஓடும் பஸ் தடங்களை கையகப்படுத்துதல் குறித்த சட்டம்.

The Tamil Nadu Fleet Operators Stage Carriages (Acquisition) Bill, 1971 (L. A. Bill No. 35 of 1971)

5. கடன் நிவாரணச் சட்டம்.

The Tamil Nadu Debt Relief Bill, 1972 (L.A. Bill No. 21 of 1972)

6. தமிழ் நாட்டில் கடன்பட்ட விவசாயிகளுக்குத் தற்காலிக நிவாரணம் அளிப்பது குறித்த சட்டம்.

The Tamil Nadu Agriculturists Relief (Amendment Bill, 1972, (L. A. Bill No. 22 of 1972)

7. ஏற்பளிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களை முறைப்படுத்துதல் குறித்த சட்டம்.

The Tamil Nadu Recognised Private Schools Regulation Bill, 1972, (L. A. Bill No. 24 of 1972).

8. தமிழ் நாட்டில் பொதுப் பணியாற்றுவோர் குற்ற நடத்தை குறித்த சட்டம்.

The Tamil Nadu Public Men (Criminal Misconduct) Bill, 1973 (L. A. Bill No. 3 of 1973)

9. மதுவிலக்கை அமல்படுத்துவது குறித்த சட்டம்.

The Tamil Nadu Prohibition (Revival of Operation and Amendment) Bill, 1974 (L. A. Bill No. 38 of 1974)

10. கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது பற்றிய சட்டம்.

The Tamil Nadu Handloom Textiles (Protection, Production, Distribution and Sale) Bill, 1974 (L. A. Bill No. 19 of 1974)

11. குதிரைப் பந்தயத்தை ஒழிப்பது பற்றிய சட்டம்.

The Tamil Nadu Horse Races (Abolition of Wagering or Betting) Bill, 1974 (L. A. Bill No. 44 of 1974)

12. குடியிருப்பு அனுபோகதாரர்களுக்கு உரிமை வழங்குதல் பற்றிய சட்டம்.

The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Re-enacting Bill, 1975 (L. A. Bill No. 14 of 1975)

13. தமிழ்நாட்டில் கடன்பட்ட ஏனைய மக்களுக்கான தற்காலிக நிவாரணச் சட்டம்.

The Tamil Nadu Indebted Persons (Temporary Relief) Bill, 1975 (L. A. Bill No. 28 of 1975)

14. தமிழகத்தில் தனியார் மின் நிறுவனங்களைக் கையப்படுத்துதல் குறித்த சட்டம்.

The Tamil Nadu Private Electricity Supply Undertakings (Acquisition) Bill, 1975 (L. A. Bill No. 42 of 1975)

இவை தவிர 10 தனியார் சட்ட முன் வடிவுகளும் பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.



தீர்மானங்கள்

மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டு பொது மக்கள் நலனுக்கு உகந்த காரியங்கள் சம்பந்தமான தீர்மானங்களை அவையில் அமைச்சர்களோ உறுப்பினர்களோ முன்மொழியலாம். இதுவரை அரசுச்சார்பாக 54 தீர்மானங்கள் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. அவற்றில் சில முக்கியமான தீர்மானங்களாவன :

1) "சென்னை மாநிலம்" என்ற பெயரை "தமிழ்நாடு" என்று பெயர் மாற்றம் செய்வது குறித்த தீர்மானம்.

2) 1968-ஆம் ஆண்டு வான்பொய்த்ததின் விளைவாக தமிழ்நாடு முழுவதும் வறட்சி நிலைமை ஏற்பட்டது பற்றியும், அதற்கு மத்திய அரசை உதவக் கோருவது பற்றியுமான தீர்மானம்.

3) மும்மொழிக் கொள்கையைத் தவிர்த்து, தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளும் பாடமொழியாக்கப்பட வேண்டுமென்பது குறித்த தீர்மானம்.

4) வங்க தேச மக்களின் உரிமை முழக்கம் வெற்றிபெறத் தமிழ் பெருங்குடி மக்களின் நல்லெண்ணத்தைத் தெரிவித்துக்கொள்ளும் தீர்மானம்.

5) காவிரி நீர்ப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விட மத்திய அரசைக் கோரும் தீர்மானம்.

6) இந்தியா மீது பாகிஸ்தான் படையெடுத்துள்ளதை கண்டிக்கும் தீர்மானம்.

7) கருப்புப் பணத்தை வெளிக்கொண்டுவருவதற்கு "வாஞ்சு குழு"வினர் கூறியிருக்கும் பரிந்துரைகளை மத்திய அரசு செயல்படுத்தக் கோரும் தீர்மானம்.

8) நெய்வேலி இரண்டாவது சுரங்கத் திட்டத்தையும், 1,000 மெ.வா. அனல் மின் உற்பத்தித் திட்டத்தையும் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கக்கோரும் தீர்மானம்.

9) அர்ச்சகர்களைப் பரம்பரை முறையில் நியமிப்பதை மாற்றித் தகுதி அடிப்படையில் நியமிக்க அரசியல் சட்டத்தைத் திருத்தக் கோரும் தீர்மானம்.



10) நொடித்த தனியார் துறைப் பஞ்சாலைகளை மாநில அரசு நாட்டுடைமையாக்கி, அவைகளைத் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் தொடர்ந்து நிர்வகிக்க வேண்டும் என்பது பற்றிய தீர்மானம்.

11) மாநில சுயாட்சி குறித்து இராசமன்னார் குழுவின் பரிந்துரைகள் பற்றியும், அவை மீதான அரசின் கருத்துரைகள் பற்றியுமான தீர்மானம்.

12) கச்சத் தீவு பற்றி மத்திய அரசு எடுத்துள்ள முடிவை மறுபரிசீலனை செய்து கச்சத் தீவின் மீது இந்தியாவிற்கு அரசு உரிமை இருக்கும் வகையில் ஒப்பந்தத்தை மாற்றக் கோரும் தீர்மானம்.

இதுவரை 15 தனியார் தீர்மானங்களும் அவையில் முன்மொழியப்பட்டு விவாதிக்கப்பட்டுள்ளன.

கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்

அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த ஒரு காரியத்தை சம்பந்தப்பட்ட அமைச்சரின் கவனத்திற்கு உறுப்பினர்கள் கொண்டு வரலாம். அதன் மீது அவ்வமைச்சர் அறிக்கை ஒன்றினைப் பேரவைக்கு அளிப்பார். 1967-ஆம் ஆண்டிலிருந்து 1975-ஆம் ஆண்டு வரை 430 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் அவையில் கொண்டு வரப்பட்டு அதற்கான அறிக்கைகள் அளிக்கப்பட்டுள்ளன.

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானங்கள்

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும், அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும் உறுப்பினர்களால் கொண்டுவரப்படலாம். இத்தகைய தீர்மானங்கள் மேற்கூறிய கால அளவில் 12 கொண்டுவரப்பட்டு, விவாதிக்கப்பட்டு தோல்வியுற்றன.

இதைத் தவிர அமைச்சரவையின் மீது நம்பிக்கையைத் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றும் பேரவையில் விவாதிக்கப்பட்டு நிறைவேறியுள்ளது.

பேரவைக் குழுக்கள்

பேரவையில் மொத்தம் 9 குழுக்கள் உள்ளன. மேற்கண்ட கால அளவில் குழுக்கள் அவையின் முன் வைத்துள்ள அறிக்கைகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

1.	மதிப்பீட்டுக் குழு ...	51
2.	பொதுக் கணக்காய்வுக் குழு	26
3.	பொதுத் தொழில் நிறுவனங்கள் குழு (1973-ஆம் ஆண்டி விருந்து) ...	7
4.	அரசினர் உறுதிமொழிக் குழு	15
5.	சட்ட விதிகள் ஆய்வுக் குழு	16
6.	அவையுரிமைக் குழு ...	11

ஓய்வூதியம்

பதவியிலிருக்கும்போது ஓர் உறுப்பினர் இறந்துவிட்டால் அவர் வாரிசுக்கு அந்தப் பதவிக் காலம் முடியும் வரை குடும்பப்படியாக மாதந் தோறும் ரூ. 100, 1—1—1967-லிருந்து வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இந்தியா முழுவதும் இரயிலில் 10,000 கிலோ மீட்டர் இலவசமாகப் பயணம் மேற்கொள்வதற்காக உறுப்பினர்களுக்கு வசதியளிக்கப்பட்டுள்ளது. 1952-ஆம் ஆண்டிற்குப் பிறகு சட்ட மன்றந்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 10 ஆண்டுகள் சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவோ, 12 ஆண்டுகள் சட்டமன்ற மேலவை உறுப்பினராகவோ அல்லது இரு அவையிலும் சேர்ந்து 10 ஆண்டுக் காலங்கள் பதவியிலிருந்தவராகவோ இருந்தவர்களுக்கு ஓய்வூதியமாக ரூ. 250 மாதந்தோறும் வழங்க சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

வெளிநாட்டு விருந்தினர்கள்

இந்திய அரசினாலும், இந்தியப் பாராளுமன்றத்தாலும் விருந்தினர்களாக அழைக்கப் பெற்று, இந்தியாவிலுள்ள முக்கியமான மாநிலங்களுக்குச் செல்லுகையில் தமிழ் நாட்டிற்கும் வெளிநாட்டு விருந்தினர்கள் பலர் வருகை தந்துள்ளனர். இவ்வாறு மேற்படி கால அளவில் தமிழ் நாட்டிற்கு வருகை தந்த அயல் நாட்டு பாராளுமன்றக் குழுக்களின் எண்ணிக்கை 33 ஆகும்.

பிற்பட்டோர் நலத் துறையின் பெருமைக்குரிய பணிகள்!

ஒரு நாட்டின் பொருளாதார நிலை சீர்பெற்றிடவும், சமூக வாழ்க்கை மேம்பாடு அடைந்திடவும் முதலில் அந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் வளம் மிகுந்ததாக அமைந்திட வேண்டும். அத்தகு நிலையினை மக்கள் பெற்றிட ஆளுகின்ற அரசுகள் பல வழிமுறைகளையும், திட்டங்களையும் வகுத்துத் தந்திட வேண்டும். இவைகளையெல்லாம் கருத்திற்கொண்டுதான் இன்றையத் தமிழ்நாடு அரசு பல அரிய திட்டங்களையெல்லாம் உருவாக்கி அவைகளைச் சீரிய முறையில் செயல்படுத்தி வருகின்றது. மக்கள் நலனில் அக்கறைகொண்டு ஏழை எளியோர் ஏற்றம் பெற்றிடவும், தாழ்த்தப்பட்டவர்கள் தரமான வாழ்வினை அடைந்திடவும், பிற்படுத்தப்பட்டவர்கள் ஏற்றதொரு வாழ்வினை எய்திடவும் நம்முடைய அரசு அயராது பாடுபட்டு வருவதை அனைவரும் அறிவர்.

இத்தகைய வகையிலே பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்வை வளங்கொழிக்கச் செய்கின்ற முறையிலே அவர்களுக்கென தனியானதொரு துறையினை-'பிற்பட்டோர் நலத் துறை'யினை-அதற்கென ஒரு தனி அமைச்சரை முதன்முதலில் உருவாக்கி நாட்டிற்கே வழிகாட்டுகின்ற விதத்தில் செயலாற்றி வருகின்றது. இத்துறை தமிழக மக்களில் சரிபாதிக்கு மேலுள்ள, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கென துவக்கப்பட்டதாகும்.

சமூகத்தில் காணப்படும் மதிப்பில் பிற்படுத்தப்பட்டவர்களும், இதன் காரணமாகக் கல்வி நிலைகளில் பின்தங்கியவர்களும் 'பிற்பட்டோ'ரெனக் கருதப்பட்டனர். இவ்விரு காரணங்களால் அவர்களின் பொருளாதார முன்னேற்றம் பாதிக்கப்பட்டதுடன், வாழ்க்கையில் பிடிப்பு ஏதுமின்றி ஏழை எளியோர் நடத்தும் வாழ்க்கை நிலையினை அடைய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இத்தகையோர் கல்விப் பயிற்சியினைப் பெற்று அவைகளில் முன்னேற்றம் அடைந்துவிட்டால், பொருளாதார முன்னேற்றத்தையும் எளிதில் பெறுகின்ற வாய்ப்பினையும் பெற்று விடுவர்.

இதன் காரணமாகவே அன்றையச் சென்னை மாகாணத்தில், அதாவது மொழிவழி மாநிலங்கள் ஏற்படுவதற்கு முன்னால், அயலார் ஆண்ட காலத்தில், இவ்வகுப்பினருக்குப் பள்ளி, கல்லூரிக் கட்டணச் சலுகைகள் வழங்கப்பட்டன. அதாவது ஆண்டு வருமானம் ரூ. 600-க்குட்பட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு அரைச் சம்பள கட்டணச் சலுகையை அளித்தனர். இது தவிர்த்து 1947-48 முடிய வேறு சலுகைகள் ஏதும் கிடையாது.

1948-49-ல் ரூ. 1 இலட்சத்தில், கல்வி கற்க, படிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம் முதன் முதலில் ஏற்பட்டது. இது நம் நாடு அயலவரிடமிருந்து விடுதலை பெற்ற மறு ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. பின்னர், இவ்வுதவி ரூ. 5 இலட்சமாக உயர்த்தப்பட்டு, 1948-49-ஆம் ஆண்டில் 609 பேர் பயனடைந்ததாக இருந்த எண்ணிக்கையை 1949-50-ல் 2,908 ஆக உயர்த்தியது. இவை படிப்படியாக உயர்ந்து 1960-61-ல், 19,856 பேர் பயனடைய ரூ. 40.89 இலட்சம் செலவழிக்கப்பட்டது. 1960-61 முதல், இச்சலுகையினைப் பெற்றிட மாணவர்கள் பிற்பட்டோராயின் 50 சதவிகிதமும், மிகப் பிற்பட்டோராயின் 45 சதவிகித மதிப்பெண்களும் முந்திய ஆண்டு இறுதித் தேர்வில் பெற்றிருக்க வேண்டும். அதுவுமின்றி அவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 1,500/-க்குள் இருக்க வேண்டும். 1960-61-ல் இந்த இப்புதிய அடிப்படையின்கீழ் எல்லா மாணவர்களுக்கும் படிப்பு உதவியளிக்கப்பட்டது. ஆயினும் அதன் பின்னர், மாநில அரசின் நிதி நிலை காரணமாக எல்லாருக்கும் வழங்குவது என்பது இயலாமல் போய்விட்டது. எனினும், ஆண்டுதோறும் இவ்வினத்துக்கான ஒதுக்கீடு அதிகரித்துக் கொண்டே வந்தது. அதனால் பயனடைந்தோரின் எண்ணிக்கையும் பெருகியது. இருப்பினும் சமுதாயத்தில் தாழ்ந்த, கல்வி இல்லா பெற்றோரின் பிள்ளைகள், வறுமையின் காரணமாக, குறிப்பிட்ட மதிப்பெண்களைப் பெற்று உதவிகளை அடைய முடியவில்லை.

இத் திட்டம் 1949 முதல் அரிசன நல இயக்குநரின் கீழ் செயல்பட்டு வந்தது. அரிசன முன்னேற்றத்தை விரிவுபடுத்த, பலதிட்டங்கள் தீட்டப்பெற்றன. அவர்களது முன்னேற்றத்தில் தனிக் கவனம் செலுத்த வேண்டியிருந்ததால் பிற்பட்டோரின் முன்னேற்றத்தைப் பேணத்தனித் துறை 2-5-1969-ல், தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. இத்துறை தோன்றியவுடன், இம் மக்களுக்கென உள்ள நல்ல ஒரே திட்டமான படிப்பு உதவி வழங்குவதை விரிவுபடுத்தியது. அதாவது, படிப்பு உதவி பெற்றிட உள்ள தகுதியை, பிற்பட்ட, மிகப் பிற்பட்ட மக்களுக்கும் சேர்த்து 40 சதம், 50 சதமாக இருந்த மதிப்பெண்களை 40 சதம் குறைத்தது. வருமான வரம்பிற்கு உட்பட்ட அனைவருக்கும் படிப்பு உதவித் தொகை என்ற உறுதியையும் அளித்தது.

மேலும், குறிப்பிட்டசில பாடமுறைகளுக்கு, உதாரணமாக பட்ட மேற்படிப்பு, எம். வி. எஸ்ஸி. கம்பவுண்டர், தமிழ்ப் புலவர், சட்டம், பாலிடெக்னிக், டிப்ளமா போன்ற சுமார் 57 பாடமுறைகளுக்கு, வழங்குவதற்கு இருந்த வரம்பு எண்ணிக்கையை நீக்கியது. இது, இத்துறை துவக்கப்பட்ட ஆண்டான 1969-70-ல் மேற்கொள்ளப்பட்டது. இதன் பயனாக மேலும் பல மாணவர்கள் பயன்பெற்றனர். ஆண்டு வருமானமும் ரூ.

உங்கள் அன்பின் பிரதிபலிப்பு

உங்கள் காமிரா எந்தத் தயாரிப்பாக இருந்தாலும், நீங்கள் எடுக்கப் போவது எவ்வித புகைப்படமாக இருந்தாலும், இந்து ரோல் பிலிமையும், புரோமைட் பேப்பரையுமே பயன்படுத்துங்கள்.

காரணம், ஒரு நல்ல ரோல் பிலிமும், புரோமைட் பேப்பரும் அளிக்க வேண்டிய எல்லாப் பயன்களையும் இந்து அளிக்கிறது. தெளிவான மாறுபாடு, சிறப்பான ஒளிப் பதிவு, ஒரே சீரான தரம், துல்லியமான கிரெயின்கள் இவற்றை அளிப்பது இந்து. அதுமட்டுமல்ல, இந்து மிக எளிதில் கிடைக்கிறது. எனவே உங்கள் அன்பின் பிரதிபலிப்பைக்காண இந்துவை நாடுங்கள்.

இத்துறையில் தன்னிறைவு பெற, தன்னிகரற்ற சேவையில் இந்து அளிப்பவை:

இந்து ரோல் பிலிம். இந்து போட்டோ கிராபிக் பேப்பர்கள். இந்து சினி பாஸிடிவ். இந்து சினி சவுண்ட் நெகடிவ். இந்து எக்ஸ்ரே பிலிம். இந்து மீடியம் கான்ட்ராஸ்ட் கிராபிக் ஆர்ட்ஸ் பிலிம். இந்து டயாபாஸிடிவ். இந்து டாகுமெண்ட் காபியிங் பேப்பர்.

INDU

இந்து ரோல் பிலிமில்

INDU®

இந்து என்றால் பிலிம்· போட்டோ· சினி· எக்ஸ்ரே.

இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ்
மான்யுபாக்சரிங் கோ. லிமிடெட்,
(இந்திய அரசின் ஒரு நிறுவனம்)
இந்துநகர், உதகமண்டலம் 643 005

SAA/HPF/2003

2,500/- ஆக 1974-75 முதல் உயர்த்தப்பட்டது. இதனால் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

ஆண்டு	பயனடைந்தோர் எண்ணிக்கை	செலவு ரூபாய் (இலட்சத்தில்)
1966—67	31,405	82.90
1967—68	35,335	91.78
1968—69	53,537	113.07
1969—70	90,565	160.89
1970—71	1,34,249	201.20
1971—72	1,68,975	290.50
1972—73	1,92,138	324.56
1973—74	1,74,057	318.86
1974—75	1,75,391	332.32

குறிப்பிட்ட சில பாடமுறைகளில் பயன் பெற்றோரின் எண்ணிக்கை

ஆண்டு	மருத்துவம்	பொறியியல்	பட்டமேற் படிப்பு	சட்டம்
1968—69	1,202	1,414	752	366
1969—70	1,279	1,529	803	372
1970—71	1,493	1,502	1,371	303
1971—72	1,299	1,421	1,411	410
1972—73	1,776	1,340	1,552	494
1973—74	2,168	1,634	2,215	574
1974—75	2,384	1,797	2,436	631

இது தவிர, ஏழை மாணவர்கள் தங்கிப் படிக்க மாணவரில்லங்களும் ஏற்படுத்தப்பட்டன. இத்துறை துவங்குமுன் 11 இல்லங்களே இருந்தன. அதனால் பயன் பெற்றோரின் எண்ணிக்கை 979 ஆகும். இவ்வெண்ணிக்கை இன்று 195 இல்லங்களாகி 12,170 மாணவ, மாணவியர் பயன் பெற்று வருகின்றனர். இவைகளில் 55 இல்லங்கள் கல்லூரி மாணவ மாணவியருக்கானவை. அவைகளில் 4,177 மாணவ மாணவியர் பயன் பெறுகின்றனர். இம் மாணவரில்லங்கள் எல்லாவற்றையும் நடத்துவதற்கு இவ்வாண்டு மட்டும் செலவாகும் தொகை சுமார் ரூ. 70 இலட்சமாகும்.

சலவைத் தொழிலாளர், மருத்துவத் தொழிலாளர்களுக்குக் கருவிகள் வாங்கி வழங்கிட, அவர்கள் தொழிலை நடத்திட, 1960-61-ல் கடன் அளிக்கப்பட்டு, 1965—66 வரை தொடர்ந்து இருந்தது. 1966-67 இல் கடனுக்குப் பதிலாக இலவசமாகக் கருவிகள் மாவட்டம் ஒன்றுக்கு 60 சலவையாளர், 60 மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டன. இதனால், 1,440 பேர் பயனடைந்தனர். இவ்வுதவி 1973-74-ல் 4,081 பேருக்கும், 1974-75-ல் 4,000 பேருக்கும் அளிக்கப்பட்டது. இவை தொடர்ந்து செயல்பட இவ்வாண்டும் ரூ. 6 இலட்சம் செலவழிக்கப்படுகிறது.

சலவைத் தொழிலை நடத்தும் மக்கள், சுகாதார முறையில் தங்கள் தொழிலை மேற்கொள்ள சலவைத் துறைகள் கட்டுவதற்கு முன்வரும் நகர ஊராட்சி, நகராட்சிகளுக்குப் பாதி கடன் பாதி மானியம் இத்துறையால் வழங்கப்படுகிறது. இத் திட்டத்தின்கீழ் இதுவரை 30 நகராட்சிகளிலும், 4 நகர ஊராட்சிகளிலும் சலவைத் துறைகள் கட்டப்பட்டுள்ளன. இத்திட்டம் 1971-72-ம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ளது.

பிற்படுத்தப்பட்ட மக்கள் தவிர, முன்னாள், 'குற்றப்பரம்பரையினர்' எனப்படும் வகுப்பாரின் நலனும், இத்துறையின் கீழ் கவனிக்கப்பட்டு வருகிறது. இவற்றில் 1911-ஆம் ஆண்டு 'இந்தியக் குற்றப்பரம்பரைச் சட்டத்தின் கீழ் அன்றைய அந்நிய அரசால் கொடுமைப்படுத்தப்பட்ட மலைவாசிகள், அரிசனங்கள், பிற்பட்டோர் இம் மூவரும் அடங்குவர். இவர்களில் பெரும்பாலோர் தென் மாவட்டங்களில் வசிக்கின்றனர். இவர்களுக்கென 277 பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவைகளில் 10 உயர் நிலைப் பள்ளிகளும், 32 உயர் தொடக்கப் பள்ளிகளும், ஏனையவை ஆரம்பப் பள்ளிகளுமாகும். இவைகளில் படிக்கும் மாணவ மாணவியரின் எண்ணிக்கை 37,000 ஆகும்.

இவர்களின் நலன் கருதி 10 மாணவியரில்லங்களும், 14 மாணவரில்லங்களும் நடத்தப்படுகின்றன. இதன் மூலம் 5,100 பேர் பயன்பெறுகின்றனர்.

இவ்வகுப்பு மாணவர்களுக்கு, பள்ளி ஆரம்ப வகுப்பு முதல், பட்ட மேற்படிப்புவரை கல்வி உதவி அளிக்கப்படுகிறது. இதனால் பயனடைந்தோரின் எண்ணிக்கை விவரம் வருமாறு.

ஆண்டு	பயனடைந்தோர் எண்ணிக்கை	செலவு ரூபாய் (இலட்சத்தில்)
1966—67	26,364	13.71
1967—68	29,908	14.50
1968—69	34,469	16.71
1969—70	44,189	21.16
1970—71	56,942	25.55
1971—72	64,419	30.85
1972—73	72,410	34.29
1973—74	70,214	34.38
1974—75	65,334	35.66

டிஐஐஸி பற்றி புள்ளி விவரங்கள் கூறிடும் உண்மையைக் காணீர்!

தொழில் முதலீட்டுத் துறையில் முன்னேற்றம் கண்டிடும் இயக்கமிது.

தற்போது...

தொழில் துவக்க முதலீடு மற்றும் அதன் பலவகை அம்சங்களைப் பற்றியும் ஆழ்ந்த அனுபவம் கொண்ட முன்னணி நிறுவனமாக டிஐஐஸி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

புள்ளி விவரங்கள் கூறும் உண்மை இதோ...

1974-75ல் டிஐஐஸி அளித்த மொத்த உதவித் தொகை ரூ. 17.75 கோடிக்கு உயர்ந்தது. இந்த பெரும் வளர்ச்சி கடந்த ஆண்டைவிட 207% அதிகமாகும். சிறுதொழில்களுக்கு அளிக்கப்பட்ட நிகர உதவித் தொகை சுமார் ரூ. 6.25 கோடியாகும். விண்ணப்பவாரியாக பார்த்தால்,80% இந்த துறைக்கே அளிக்கப் பட்டுள்ளது. பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் அமைப்புகளுக்கு சலுகை நிபந்தனைகளின் பேரில் டிஐஐஸி அளித்த நிகர உதவி ரூ. 9.03 கோடியாகும். இது கடந்த ஆண்டைவிட 201% அதிகமாகும்! சுறுசுறுப்பான தொழில் துறையில் டிஐஐஸிக்கு முக்கிய பங்குண்டு.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்
''அருள்மனை''
26, ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600 014
நிர்வாக இயக்குநர்: S. N. பை

கிளைகள்:
கோயமுத்தூர்
மதுரை
சேலம்
தஞ்சாவூர்
திருநெல்வேலி
& வேலூர்

டி ஐ ஐ ஸி
இதயபூர்வமான நிதியுதவி

இம் மக்களின் முன்னேற்றம் கருதி இவர்களுக்கு ரூ. 1,200 செலவில் வீடுகள் கட்டப்படுகின்றன. பாசனக் கிணறுகளை வெட்ட ரூ. 2,000 வரை இலவச மானியமும் வழங்கப்படுகின்றது.

இவைகள் தவிர பொதுப் பொறியியற் பட்டரைகள், மதுரை மாவட்டத்தில் செக்கானூரணியிலும், நெல்லை மாவட்டத்தில் வீரக்கேரளம் புதூரிலும், முகவை மாவட்டத்தில் முதுகுளத்தூரிலும் உள்ளன. இவைகளில் 60 பேர் பயிற்சி பெறுகின்றனர். பயிற்சி பெறும் காலம் 18 மாதங்கள். இப்பயிற்சிக் காலத்தில் இவர்களுக்குப் பண உதவியும் வழங்கப்படுகின்றன. இவர்கள் பயிற்சி முடிந்து வெளியேறியதும் சொந்தமாக வெல்டிங், கருமான் போன்ற தொழில்களை மேற்கொள்ள, ஏழை மாணவர்களுக்கு இலவசமாகக் கருவிகள் வாங்கித் தரப்படுகின்றன. 1972-73 முதல் இதற்கென ஆண்டொன்றிற்கு ரூபாய் 25,000 செலவழிக்கப்படுகிறது.

(இது தவிர இப்பிரிவில் பெண்களுக்கு, தையல், மூங்கில் சாமான் தயாரித்தல், பூ வேலை முதலியவற்றிற்கான பயிற்சி அளிக்கப்படுகின்றது. இதற்கென் பயிற்சி நிலையங்கள் தருமபுரி மாவட்டத்தில் சாமியாபுரத்திலும், மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டியிலும், நெல்லை மாவட்டத்தில் பெருங்குளத்திலும் இயங்குகின்றன. இவைகளில் ஆண்டொன்றுக்குப்பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை 85 ஆகும்.

இவைகள் தவிர சென்னையில் பிரிஸ்லி நகரில் 20 பேருக்கு, பிரம்புப் பொருள்கள் தயாரிக்கும் பயிற்சி நிலையம் ஒன்றும் இயங்குகிறது.)

பிற்படுத்தப்பட்ட, முன்னுள் குற்றப்பரம்பரையினர், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற மைய அரசு நடத்தும் தேர்வுகளில் கலந்து மேம்பாடடைய பயிற்சி அளிக்கச் சிறப்பு நிலையம் ஒன்று சென்னையில் இயங்குகிறது. இப்பயிற்சி நிலையம் 12-12-1971 முதல் நடைபெறுகிறது. இதில் 50 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறனர். இலவச உண்டி உறையுள் போன்ற வசதிகள் அளிக்கப்படுகின்றன.

இதன் மூலம் 1973-ல் நடைபெற்ற தேர்வில் ஒருவர் ஐ.ஏ.எஸ். பதவிக்கும், இருவர் மத்திய அரசின் பணிகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1974-ஆம் ஆண்டுத் தேர்வில் ஒருவர் ஐ.ஏ.எஸ். தேர்வுக்கும், மற்றொருவர் ஐ.பி.எஸ்ஸுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1975-ல் கலந்துகொண்டோரின் தேர்வின் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. (இவ்வாண்டு 60 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களது பயிற்சி 1975 நவம்பரில் துவங்கி உள்ளது).

மேலே கூறிய திட்டங்கள் மிகவும் முக்கியமானவைகளே. இலவசமாக மதிய உணவு, சீருடை, புத்தகங்கள் போன்றவைகளும் வழங்கப்படுகின்றன.

பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்க்கைநிலை, பொருளாதார-கல்வி நிலை எத்தகைய முறையில் உள்ளன. அவர்களது முன்னேற்றத்திற்கு இனி செய்ய வேண்டிய பணிகள் யாவை என்பதை ஆராயும் பொருட்டு 1969 நவம்பர் மாதத்தில் திரு. ஏ.என். சட்டநாதன் அவர்கள் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழு மாநிலம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, மக்களிடம் நேரில் கலந்து உரையாடி, தன்னுடைய அறிக்கையை 100-க்கும் மேற்பட்ட பரிந்துரைகளுடன் 1971 ஜனவரி மாதம் அரசுக்கு அனுப்பியது. இவைகளில் ஏராளமான பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

அப்பரிந்துரைகளின் மூலம், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, அரசுப் பணிகளிலும், கல்லூரிகளிலும் இருந்த ஒதுக்கீடான 25 சதவிகிதத்தை 31 சதவிகிதமாக அரசு 1971-லேயே உயர்த்தியது.

இம்மாற்றம் பின்தங்கியோர் விரைவில் முன்னேற வேண்டும் என்ற அடிப்படையில் செய்யப்பட்டதாகும்.

இது தவிர 25 சாதிகள் புதியதாகப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. அவை யாவன.:

1. கம்பர், 2. ஒவச்சர், 3. பணன், 4. வெள்ளன் செட்டியார், 5.அரசகரை வெள்ளாளர், 6. வேடன், 7. கன்னட சைனீகர் 8. சக்ரவர் கன்னியாகுமரி மற்றும் செங்கோட்டை தாலுகா (திருநெல்வேலி) 9. கன்னுர், 10. ஆஸ்தந்திர கொல்லா, 11. செட்டி (கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ளோர்), 12. குஞ்சிடிகர், 13. நல்வெளி கௌண்டர், 14. சவலக்காரன், 15. பன்னிரண்டாம் செட்டியார் (அல்லது) உத்தம செட்டியார்., 16. வெள்ளம்பர், 17. யவனு, 18. சாலிவாஹனு, 19. நாஞ்சில் முதலி, 20. உருது பேசும் லப்பை முஸ்லிம், 21. தெக்கனி முஸ்லிம், 22. கொங்கு வெள்ளாளர், 23. கருணீகர், 24. சோழிய வெள்ளாளர், 25. கத்திக்காரர்.

அரசு ஆற்றி வந்துள்ள இத்தகைய பணிகள் யாவும் 'பிற்பட்டோர்' என்றும் பிற்பட்டோராக இருக்கக் கூடாது. அவர்களும் ஏனைய முன்னேற்ற வகுப்பினரைப் போல், கல்வி, பொருளாதாரத் துறைகளிலும் முன்னேற வேண்டும் என்கின்ற குறிக்கோளுடன் செயல்படுத்தப் பட்டு வருபவைகளாகும்.

எனவே, நம்முடைய அரசு அளித்து வருகின்ற அளவிலாச் சலுகைகளையெல்லாம் பெற்று, அவைகளைச் சீரிய முறையில் பயன்படுத்தி, பிற்படுத்தப்பட்டவர்கள் அனைவரும் தங்களுடைய வாழ்க்கையை முன்னேற்றப் பாதையிலே செலுத்த முயல்வார்களாக!

வரலாற்றுச் சாதனைகள் வாழ்க என்போம்!



எல்லார்க்கும் நல்லின்பம்
எல்லார்க்கும் செல்வங்கள்
எட்டும் விளைந்த தென்று
கொட்டு முரசே-வாழ்வில்
கட்டுத் தொலைந்த தென்று
கொட்டு முரசே!

இல்லாமை என்னும் பிணி
இல்லாமல் கல்வி நலம்
எல்லார்க்கும் என்று சொல்லிக்
கொட்டு முரசே-வாழ்வில்
பொல்லாங்கு தீர்ந்ததென்று
கொட்டு முரசே!

சான்றாண்மை இவ்வுலகில்
தோன்றத் துளிர்த்த தமிழ்
மூன்றும் செழித்த தென்று
கொட்டு முரசே-வாழ்வில்
ஊன்றிய புகழ் சொல்லிக்
கொட்டு முரசே!

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்.



தலையெழுத்தையும் மாற்றிய கையெழுத்து!

— கவியரசு முடியரசன்

இந்நாட்டு வரலாற்றை நோக்குங் காலை
இருந்தவரும் புகுந்தவரும் ஆண்ட நாளில்
பொன்காட்டிப் பொருள்காட்டிப் புகழுங் காட்டிப்
பொருதவர்தம் புறங்காட்ட மறமுங் காட்டித்
தந்நாட்டை வளமுறுத்த வழிகள் காட்டித்
தனியாட்சி நடத்திவந்தார் மன்னர் என்று
பொன்னேட்டில் பொறித்துளதைக் கண்டோம் அன்று
புதியதொரு வரலாற்றைக் கண்டோம் இன்று.

அன்றிருந்த மன்னரெலாம் செங்கோல் ஏந்தி
ஆண்டிருந்த அந்நாளில் மன்ப தைக்கு
நன்றுணர்ந்து செய்தபெரும் நன்மையெல்லாம்
நாலைந்தும் ஆறேழும் என்ற எண்ணுள்
நின்றிருக்கும்; அதன்மேலும் ஒன்றி ரண்டு
நிகழ்ந்தாலும் நிகழ்ந்திருக்கும்; பகையும் போற்ற
இன்றிருக்கும் அரசுசெயும் நன்மை மட்டும்
எண்ணுக்குள் அடங்காமல் நீண்டி ருக்கும்.

பணிபுரியும் அலுவலர்கள் இயற்கை எய்தின்
படுதுயரில் அவர்குடும்பம் வீழா வண்ணம்
அணுகியதன் தலைவிதியை அழித்துக் காக்க
அரியதொரு விதியெழுதும் அரசு கண்டோம்;
மணிவிழியின் ஒளிமயங்கிக் கலங்கி நொந்து
மாற்றரிய வழியின்றித் தவித்து நிற்போர்
அணியணியாய் வந்துவிழி பெற்றுச் செல்ல
அவர்தமக்கு வழிகாட்டும் அரசு கண்டோம்.

தலையிலொரு முழத்துணியைச் சுற்றிக் கட்டித்
தனதிடையில் சிறுகந்தல் இறுகச் சுற்றி
உலையிலெழுங் காற்றெனவே மூச்சு வாங்க
உடல்பருத்த மாந்தரையும் ஏற்றி வைத்துத்
தலையிருந்து கால்வரையும் வியர்வை சிந்தி
தனிமனிதன் வண்டியினை இழுத்துச் செல்லும்
நிலையினியும் ஏனென்றால், படைப்போன் இந்த
நிலைஎழுதி விட்டானென் றுரைக்கக் கேட்டோம்.



விதியென்று சொல்வதெலாம் சோம்பி நிற்பார்
வீண்பேச்சு; படைத்தவற்குப் பழியும் ஆகும்;
மதிகொண்டு சிந்தித்துத் துயரம் தீர்க்க
மாற்றென்று காண்பதுதான் ஆள்வோர் செய்கை;
அதுவின்றேல் அரிய ணைஏன்? தாழ்வு பெற்ற
அவர்தமக்குங் கைகொடுப்போம் என்று ணர்ந்து
மிதிவண்டி நல்கிஅவர் துயர்கு றைத்து
மீட்சிதரத் துணைநிற்கும் அரசு கண்டோம்.

அங்கமெலாங் குறைந்தழுகி முகம்வ தங்கி
அழகழிந்து புறங்கூனி நடைத ளர்ந்து
தங்கஒரு நிலையின்றித் தண்டு மின்றிப்
தள்ளாடிச் சோற்றுக்கு வழியு மின்றிப்
பொங்கிவரும் வேதனையை அழுது தீர்த்துப்
புழுவினுங்கீழ் நிலையினராய் இரந்து வாழும்
தொங்குமுடற் றொழுநோயர் வாழ்வை எண்ணத்
தொடங்கியவர் எவருள்ளார் காந்தி யன்றி ?

புதுவாழ்வு தரவந்த காந்தி யண்ணல்
போற்றியநற் கொள்கைகளை நெஞ்சிற் கொண்டு,
விதிதானே தொழுநோயர் துயருக் கெல்லாம்
விதைஎன்ற சொல்மாற்றி வாழ்வு தந்து,
மதிவாழும் துணிவோடு கருணை வாழும்
மனங்கொண்ட அருட்செல்வர் ஆளும் ஆட்சி
இதுபோல வேறுண்டா? யாண்டும் இல்லை;
என்றென்றும் இவ்வரசு வாழ்க என்போம்.

பூவின்றிப் பொட்டின்றிக் கழுத்தில் கையில்
பூணுகின்ற அணியின்றிச் சுவைகள் உண்ண
நாவின்றி எதிரில்வரத் தகுதி யின்றி
நலமெல்லாம் பெறலின்றி நெஞ்சுள் நாளும்
கோவென்று கூவிஎழிற் கோதை மார்கள்
கொழுநர்தமை இழந்தமையால் வாழ்வு கெட்டுச்
சாவென்று வருமென்று நொந்து நொந்து
சலித்திருந்து நடைப்பிணமாய்க் கிடந்து ழன்றார்

உற்றாரும் பெற்றாரும் கைம்மை யுற்ற
உயிர்ச்சிலையைக்கண்டுமனம் உருகி நிற்பர்;
'மற்றாரும் விலக்கரிய தலையெ ழுத்து
மாதிவட்கு வாய்த்தவிதம் கொடுமை' என்பர்;
கற்றாரும் மற்றாரும் விதியை நம்பிக்
காலத்தைக் கடத்தினரே யன்றி யந்தப்
பொற்பாவை வாழ்வுக்கு வழியைக் காணப்
புரியாமல் மதிமயங்கி வாழ்ந்து வந்தார்.

வேரடியிற் பழுத்தபலா கேட்பா ரற்று
வீணுதல் கண்டெழுந்து, மூடக் கொள்கை
வேரடியைப் பெயர்த்துவிட்டார் பெரியார்; அந்த
வீரத்தின் அடிச்சுவட்டில் நடந்து செல்லும்
சீருடைய நமதரசு துணிந்து, கண்ணீர்ச்
சிற்பங்கள் சிரித்திருக்க, வயது சென்றோர்
யாருடைய துணையுமின்றி வாழ்ந்தி ருக்க
ஈடில்லா மறுமலர்ச்சி வழங்கக் கண்டோம்.

'வறியவர்தம் புன்னகையில் இறைவன் உள்ளான்
வாழவழி ஏழையர்க்குக் காண்போம்' என்ற
அறிஞரவர் அண்ணாவின் இதயப் பாங்கை
அப்படியே நமதரசு பெற்ற தாலே
சிறியஇளங் குஞ்சுகளைப் பெற்றோ ரின்றிச்
சீரிழந்த குழந்தைகளைப் பேணிக் காக்கச்
செறிவுடைய நெறியமைத்து வாழ்நாள். எல்லாம்
சிரித்திருக்க அமைந்ததுகாண் கருணை இல்லம்.

இலைநமக்கு வழிஏதும் என்று வாடி,
எல்லாமே தலையெழுத்தென் றுரைத்து, வாழ்வின்
நிலையிழந்து கீழ்த்தளத்தில் உழல்வோர் எல்லாம்
நிமிர்ந்தெழுந்து நடந்துலகை விழித்து நோக்கும்
கலையிதனைக் கலைஞரலால் எவரே செய்வர்?
கடுகளவும் நன்றியுளார் ஒப்புக் கொள்வர்;
தலையெழுத்தை அழித்தெழுதுங் கையெ ழுத்தைத்
தமிழரசைப் பல்லாண்டு வாழ்க என்போம்.

ஒப்பற்ற பணிகள் ஒன்றா இரண்டா?

கவிஞர் கா. வேழவேந்தன்

1. ‘அன்புள்ள எழில்! நீயும் கடல்க டந்தே
ஆர்வமுடன் எழுதியுள்ள மடலைக் கண்டேன்!
‘ஒன்பதா ண்டுக் காலத்தில் இந்த ஆட்சி
உயர்த்தியதா, தமிழ்நாட்டை? என்று கேட்டே
என்பதிலை உடன்எழுத வேண்டு மென்றாய்!
இருக்கின்ற ‘மதராசை’ மாற்றிக் காட்டி
இன்பச்சீர்த் தாயகத்தைத் ‘தமிழ்நா’ டென்றே
எழில்கொஞ்ச அழைத்தோமே, வரலா றன்றோ?

2. உழவர்களின் புன்செய்நில வரியை இங்கே
ஒழித்திட்டோம் அடியோடு! குந்து தற்கும்
நிழலற்றே உழன்றிருந்த முனியன், முத்தன்
நிம்மதியாய்க் குடியிருக்க மனைகள் தந்தோம்!
பழஞ்சட்ட உச்சவரம்பினையும் மாற்றி,
‘பதினைந்தே ஏக்கர்’ இங்கே போதும் என்றோம்!
எழிலான இருபோகம், முப்போ கத்தால்
இல்லாமை ஓட்டித் ‘தன் னிறை’வைக் கண்டோம்!

3. தீண்டுவதே தீட்டென்ற கொடுமைச் சாதிச்
செந்தேளின் கொடுக்கெல்லாம் சேதம் செய்தோம்!
வேண்டியிங்கே கலப்புமணம் செய்வோருக்கு
விரும்பிப்பொற் பதக்கங்கள் பரிச ளித்தோம்
ஆண்டவனின் கோயில்களை நிறுவ கிக்க
அரிசனங்கள் அறங்காவல் குழுவில் சேர்ந்தார்!
நீண்டநாள் பிற்பட்டோர் அல்லல் பட்டு
நின்றிருந்த நிலையுயர்ந்த வழிகள் கண்டோம்!

4. நாட்டுடைமைத் திட்டத்தை விரிவு செய்து
நாடெங்கும் பேருந்தைப் பொதுவாய்ச் செய்தோம்!
பாட்டாளித் தோழனவன் நிருவா கத்தில்
பங்கேற்கும் பெரும்புரட்சித் திட்டம் கண்டோம்!
ஓட்டும்ஏர் உழவனுக்கே நிலங்கள் சொந்த
உரிமைசொலும் சட்டத்தை இயற்றி வைத்தோம்!
வாட்டுகின்ற மதுவரக்கன் மீண்டு மிங்கே
வராவண்ணம் ஓடோடத் துரத்தி விட்டோம்!

5. மின்சார மயமாக்கிச் சிற்றூ ரெல்லாம்
மேன்மைமிகு ஒளியினிலே மிதக்க விட்டோம்!
அன்றாடக் குடிநீரை அளித்துக் காட்டி
அமைந்ததொரு வாரியத்தால் தாகம் தீர்த்தோம்!
சென்றுவரும் பாதையெல்லாம் சீர்ப டுத்திச்
செப்பனிட்டோம்; ஊர்மக்கள் மகிழ வைத்தோம்!
ஒன்றிரண்டா? கூட்டுறவுத் துறையி லிங்கே
ஒப்பற்ற பலவெற்றி ஈட்டித் தந்தோம்!

6. சீர்திருத்தத் தன்மானத் திருமண த்தைச்
செல்லுபடி ஆக்குதற்குச் சட்டம் கண்டோம்!
ஊர்தோறும் ஊர்தோறும் அலுவலாளர்
உவந்து வந்து ‘மனுநீதி’ வழங்க லானார்!
ஏர்க்கல்வி மேம்பாட்டை ஏழை காண
இலவசமாய்ப் புகுமுகத்து வகுப்பை வைத்தோம்!
ஊர்கெடுக்கும் குதிரைப் பந்தயத்தை யெல்லாம்
ஒழிப்பதற்கும் விதிச்சட்டம் கொண்டு வந்தோம்!

7. தொழுநோயால் உழன்றிடுவோர் வாழ்வு காண
துயர்துடைக்கும் விடுதிகளைக் கட்டி வைத்தோம்!
இழுக்கின்ற கைரிக்ஷா ஒழித்துக் கட்டி,
இனாமாக சைக்கிள்ரிக்ஷா வாங்கித் தந்தோம்!
விழிகாணாக் குருடரெலாம் உவகை காண
மேன்மைமிகு கண்ணொளியின் திட்டம் கண்டோம்!
வழியற்ற அனாதைகளைக் காப்ப தற்கு
வளக்கருணை இல்லங்கள் பலவும் கண்டோம்!

8. பனைஏறும் தொழிலாளி விழுந்தி றந்தால்,
படகேறும் மீனவனும் கடலில் மாய்ந்தால்.
வினைஉழவன் மருந்தங்கே தெளிக்கும்போது
வேதனையால் மாண்டுவிட்டால் நிதிகள் தந்தோம்!
மனமொடிந்த ஊனமுற்றோர் மறும லர்ச்சி
வாழ்வுபெறப் புதுத்திட்டம் பலவும் கண்டோம்!
இனத்தொழி லாளர் ‘மே’நாள் தினங்கொண் டாட
ஏற்றமுடன் விடுமுறைக்குச் சட்டம் செய்தோம்!

9. கோடியிலே, குடிசையிலே குமுறி நின்ற
குப்பனையும் சுப்பனையும் மாடி சேர்த்தோம்!
வாடுகின்ற மீனவர்க்கும் தாழ்த்தப் பட்டு
வதைபவர்க்கும் வாரியத்தால் வீடமைத்தோம்!
ஓடியிங்கே உழைக்கின்ற தொழிலாளர்க்கே
ஊதியங்கள் நிர்ணயிக்கக் குழுக்கள் வைத்தோம்!
நாடெங்கும் கைத்தறியின் நெசவா ளர்க்கே
நலச்சட்டம் தீட்டியிங்கே உதவி நின்றோம்!

0. சேலத்து மண்ணுக்குள் உறங்கும் நல்ல
சீர் இரும்பை வெளிக்கொணரப் பாடுபட்டோம்!
கோலத்து நெய்வேலிச் சுரங்கம் வெட்ட
குரல்கொடுத்தோம்; தில்லியினை எழுப்பி விட்டோம்!
பாலங்கள், பல அணைகள், மின்திட் டங்கள்
பலதொழில்கள் உருவாகப் பாடுபட்டோம்!
ஞாலச்சீர்ப் ‘பூம்புகார்’ப் பெயரால் இங்கே
நற்கப்பல் கழகத்தை நடத்து கின்றோம்!

11. ‘கோரிக்கையற்ற பலா’ என்றே இங்கே
குமுறிநின்ற விதவைகட்கு வாழ்வ ளித்தோம்!
சீரான நாட்டுக்கும் மொழிக்குமிங்கே
சிறைசென்றோர் தமைப்போற்றி விருது தந்தோம்!
நேரில்லா மின்இணைப்பை உழவர்க் கீந்து
நெடிய‘பசும் புரட்சி’யினைத் தோற்று வித்தோம்!
யார்வேறு மாநிலத்தார் பசிஎன் றாலும்
அவர்க்கெல்லாம் நாம் அரிசி அள்ளித் தந்தோம்!

12. அன்றிருந்த பூம்புகார்க் காட்சி யெல்லாம்
அப்படியே மீண்டுமிங்கே படைத்தோம்!
குன்றனைய நெடுந்தோளின் கட்டபொம்மன்
கோட்டையினைப் புதுப்பித்தோம்' உலகத்திற்கே
என்றென்றும் இறவாத குறளைத் தந்த
ஏற்றமிகு வள்ளுவர்க்குக் கோட்டம் கண்டோம்!
ஒன்றிரண்டா கலைஞர் பணி? தம்பி, நீயும்
உலகோர்க்கே உணர்த்திடுக! ‘இங்ஙண், ‘வேந்தன்’.

வண்ணப்பா வாழ்த்துப்பா தினம் படைப்போம்!

புலவர் பொன்னிவளவன்





பனிதன்னை மழையென்று சொல்வோம்? காற்றில்
படர்ந்துயரும் தூசியையா மேகம் என்போம்?
கனியென்று வெம்பலினைச் சொல்வோம்? ஏழைக்
கண்ணீரைத் துடைக்காத வெறுங்கை யோரை
மனிதரென்று நாம்மதிப்போம்? பெரியார், அண்ணா
'மனிதர்களை நினை!' என்று சொன்ன தெண்ணிப்
புனிதமுடன் மனிதர்களை வாழ வைக்கும்
புகழாட்சி செய்கின்றார் கலைஞர் இன்று!

கார்காலம் முல்லைமலர்க் காலம்! கோடைக்
காலம்தான் பலாப்பழங்கள் கொடுக்கும் காலம்!
தேர்க்காலம் பழங்காலம்! இணைந்து வைக்கும்
திருக்காலம் தேனிலவுக் காலம்! மக்கள்
போர்க்காலம் நெருக்கடியில் தவிப்பர்! மக்கள்
பொற்காலம் தற்காலம்! குடிசை வாழ்ந்தோர்
யார்காலம் பெற்றார்கள் மாடி வீட்டை?
அஞ்சுகத்தாய் மகன்காலம் தன்னில் என்போம்!

வீம்புக்கே வீண்புகார் கூறி வந்தோர்
விழிகளிலும் வியப்பேறித் திகைக்கும் வண்ணம்
பூம்புகார் இவர்படைத்தார்! இளங்கோ வுக்கே
புகழ்மாலை சூட்டு கின்றார் ஆண்டுதோறும்!
பாம்புக்கே வார்க்கும்பால் போல வெள்ளைப்
பரங்கியர்க்கு வரிமறுத்தார் கொடுத்தார்; வீரம்
கூம்பாத தமிழ்க்கட்ட பொம்மனே, போர்க்
குரல்கொடுத்தான்; கடுகடுத்தான்; படையெ
டுத்தான்!

வீரங்கொள் பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டை
வீணுகிப் போயிற்று! வெள்ளைக் காரன்
பீரங்கி யால்தகர்த்து நொறுக்கி விட்டான்!
பெருமைமிக்க மாவீரன் கட்ட பொம்மன்
'சீரெங்கே? சிறப்பெங்கே? கோட்டை எங்கே?'
சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தை நொந்தோம்!
''பார்! இங்கே பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டை
பார்!'' என்றே இவர்மீண்டும் படைத்து விட்டார்!

செக்கிழுத்த சிதம்பரனார் கப்ப லோட்டிச்
சிரமமுற்ற கதையறிவீர்! அவர்க்கு நாட்டு
மக்களிடை மரியாதை தினம்நி லைக்க
மகத்தான சிலைஎழுப்பி விட்டார்! இன்றோ
திக்கெட்டும் திரைகடலில் சென்று லாவித்
திரிகிறது நம்பெரியார் அண்ணா கப்பல்!
தக்கபடி ஊனமுற்றோர் வாழ்வு பெற்றார்!
தமிழன்னை பலநூறு கவிதை பெற்றாள்!

'ஒதுங்குங்கள் தீண்டாமல்!' என்றே முன்னாள்
உரைத்தார்கள் பலர்சேரி மக்கள் தம்மை!
'எதற்குங்கள் மனக்கவலை நானி ருக்க?'
என்றெழுந்த வரிப்புலியாம் கலைஞர் தங்கப்
பதக்கங்கள் கலப்புமணம் செய்வோ ருக்குப்
பதமாகத் தருகின்றார்! கற்றோர், மற்றோர்
மதிக்கும்வகை அவ்வினத்தில் பெண்ணெ டுத்தார்;
மாகத்மாவுக் கிச்செயலில் துணையாய் நின்றார்.

விவசாயி பழம்நாளில் கண்ட தெல்லாம்
வேதனைதான்! கேட்டதுவாய்ப் பட்டா' தானே?
விவசாயி இப்போது கண்டான்; பெற்றான்
வீட்டுமனைப் பட்டாவை — நிலப்பட் டாவை!
'கவனிப்பார் இல்லை' என ரோஜாக் கன்னம்
கண்ணீரால் கழுவிவந்த விதவை இன்றோ
'கவலையில்லை!' என்கின்றாள்; சிரித்து வாழக்
காண்கின்றாள் மறுவாழ்வுத் திட்டம் தன்னை!

''விரலிழந்து, நுங்கைப்போல் எங்கள் கைகள்;
வீதிகளே தாய்வீடு எங்க ளுக்கு!
பரதேசி யாகிவிட்டோர்; எனினும் மற்றோர்
பார்வைதரும் அருவருப்பே பரிசெ மக்கு!
வரவில்லை யேசாவு!'' எனத்த வித்து
வதைபட்ட தொழுநோயர் இந்த நாளில்
தரமாய்நாம் தொழும்நேயர் ஆகி விட்டார்;
தலைநிமிர்ந்து மறுவாழ்வு காணு கின்றார்!

'செந்தமிழ்மூ வேந்தர்களின் போர்க்க ளம்போல்
சிவந்திருக்கும் செவ்வானம், நிலவு வட்டம்,
அந்திவரை காய்கதிரோன், அழகுப் பூக்கள்,
அண்டையயல் இருப்போரின் திருமு கங்கள்
எந்தவிதம் பார்ப்பதுநாம்? நடக்கும் போது
இடறிவிழா திருக்கவழி என்ன?' என்றே
குந்தியிருந் தார்பலபேர் பார்வை யின்றி!
குருடர்களும் கண்ணொளியைப் பெற்றுக்
கொண்டார்!

அண்ணாவின் வழிவந்த கலைஞர் ஆட்சி
அமைந்ததனால் தமிழர்நாம் அடைந்தோம் மாட்சி!
கண்ணாரச் சாதனைநாம் காணும் காட்சி!
காலமெல்லாம் நமக்கிங்கே இல்லை வீழ்ச்சி!
மண்ணாகும் நம்நாட்டில் பகைமைத் தீமை!
மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் பற்றி
வண்ணப்பா — வாழ்த்துப்பா தினம்ப டைப்போம்!
வரலாற்றுச் சாதனைகள் வாழ்க! என்போம்!

இன்பம் வான்மழையாய்ப் பொங்கி ஓடும்!



உரலால்தான் உலக்கைக்குப் பெருமை யுண்டாம்;
ஒருபயனும் தருவதில்லை வெறும்உ லக்கை!
விரலால்தான் கரங்களுக்குப் புகழே சேரும்;
விரலில்லாக் கைகளையும் உலக்கை என்போம்!
குரலால்தான் மனிதனுக்கே சிறப்புண் டாகும்,
குரங்கினின்று வேறுபடல் இதனால் தானே?
வரலாற்றுச் சாதனைகள் புரிந்த தால்தான்
வாழ்கின்றோம், ஊன்றியகால் அகன்றி டாமல்!

மாள்வதுதான் பிறந்தவர்க்கு முடிவு! தானே
மடியாமல், சூழ்நிலையால் மறைந்தி டாமல்
ஆள்வதுதான் நல்லாட்சிக் கழகு! செத்தால்—
அழிவிடாமல் குடும்பத்தைப் பாது காத்து
மீள்வகையைக் காட்டுவதும் கடமை யாகும்!
வெந்துயரை விரைந்தோடித் தணிக்கும் எண்ணம்
மூள்வதுதான் மனிதாபி மானம்! இந்த
முறைதவறாச் செங்கோல்தான் நிலவும் இன்று!

அடித்தளந்தான் கட்டடத்தைத் தாங்க வல்ல
ஆணிவேராம்! இதையுணர்ந்த கார ணத்தால்,
வெடித்திடாமல் நீர்வார்த்தும், உரத்தை யிட்டும்
மேன்மையுடன்காப்பாற்றும்பொறுப்பை ஏற்றோம்!
முடித்திருக்கும் அருஞ்செயலின் பட்டி யல்கள்
முடிவில்லா வானவெளி போல நீளும்!
துடித்தெழுந்து மறுக்கவல்லார் இலரே யாகத்—
துணிவோடு துரோகத்தைத் தூண்டு கின்றார்!

நன்றிதனை மறவாத நாக ரீகம்
நம்தமிழர் அனைவர்க்கும் உடன்பி றப்பாம்!
கொன்றன்ன இன்னாசெய் தாரைக் கூடக்
குணமென்னும் குன்றேறி மன்னிப் போம்,யாம்!
இன்றல்ல; ஏழேழு நூற்றாண் டுக்கும்
இணையான பணிபுரிவார் எவர்தாம் உண்டு?
சென்றகாலச் சரித்திரத்தின் ஏடு சொல்லும்;
எதிர்காலம் நிகழ்காலம் எழில்பொற் காலம்!









இழந்தபழம் புகழையெலாம் மீட்ப தைத்தான்
எந்நாடும் பெருமையாகக் கொள்ளக் கூடும்!
அழுந்தியதால் அடிமைநிலை, மிடிமை, தாயை
அறியாத அவமானம் அனைத்தும் சூழ
உழந்தோர்நாம்; உயர்வுபெற உய்வை நாடி
ஓங்கிநிற்க வேண்டாமோ? எதனைப் பற்றிக்
குழந்தைதான் நடைபோடும்? தாயை அன்றோ?
குறிப்புணர்ந்தோம் ; எழுப்புகின்றோம் உணர்வை
இன்று!

வடகோடிச் சென்னைமா நகரின் மையம்
வானோங்கி வள்ளுவர்க்கோர் கோட்டம் நிற்கப்
படகோடும் குமரிமுனைப் பாறை மீதில்
பாருக்கே நெறிவகுத்தோன் எழப்போ கின்றான்
குடகிருந்து கடல்சேரும் பொன்னி ஓரம்
குவலயமே வியக்கின்ற பூம்பு காராம்
திடகாத்ரன் வெள்ளையாட்சி அகற்ற வந்தோன்
சீர்கட்ட பொம்மனுக்கோர் கோட்டை கண்டோம்.

தாழ்ந்திருந்த இனத்தையின்று தூக்கி வந்து
தலைநிமிர்த்திச் சரிசமான நிலையைத் தந்தோம்
ஆழ்ந்தகன்ற பேருலகில் சமத்து வத்தை
அனுசரிக்கும் உண்மையாளர் ஒருவர் நாமே
சூழ்ந்திருந்த சாதிமத இருளை ஓட்டிச்
சுடரொளியைச் சட்டத்தால் பரப்பி விட்டோம்
வாழ்ந்திருக்கும் சமுதாயம் தமிழ கத்தின்
வரலாற்றுச் சாதனைகள் வாழ்க என்னும்!

யார்வரினும் எவர்செலினும் எதற்கும் அஞ்சோம்;
எங்கடமை பணிசெய்து கிடத்தல் என்றே
ஊர்வளர, உலகுவாழ, உணர்ந்தோர் போற்ற
ஒப்பரிய செய்கின்றோம்! ஏய்ப்போர்க் கின்னல்
தூர்வளர்ந்தால் என்செய்வோம்? நம்பால் வந்தால்
துயர்களைவோம்; அயர்வகற்றி வாழ்வும் ஈவோம்!
சீர்வளரும் செந்தமிழே செழிக்கும்; இன்பம்
தெருவெல்லாம் வான்மழையாய்ப் பொங்கி ஓடும்!

கவிஞர் கருணாநிதி

கருணை இல்லங்கள்

சரித்திரத்தில் வாழு கின்ற
சாதனை பெரிய தல்ல!
சரித்திரத்தை வாழ வைக்கும்
சாதனை பெரிய தென்போம்!

எந்தமிழ் நாட்டின் ஆட்சி
இயற்றிடும் செயல்கள்—ஏட்டில்
சந்தன வடுக்கள் ஆகிச்
சரித்திரத்தை மணக்கச் செய்யும்!

நாட்டிலே அரசு தீட்டும்
திட்டங்கள் நலிந்தோர் நெஞ்சக்
கூட்டுக்கு விளக்குப் போடும்
கொள்கையின் உந்து தல்கள்!

சொந்தங்கள் இழந்து போன
சோகப்பன் அனாதை கட்குத்
தந்தந்தித் தெருவில் வாழ்க்கை
தந்ததிவ் வரசு வீணை!

சந்ததிச் சரட்டில் பெற்றோர்
கோத்திடத் தவறி வீழ்ந்து
சிந்தியமுத் துக்கள்—இன்றோ
சேர்ந்தன அரசா ரத்தில்!

வானத்தை விட்டு தீர்ந்த
விடியல்கள்—வரை, வாழத்
தானொரு வான மாகித்
தாங்கிற்றுக் கருணை யாட்சி

தெருவோரம் சிதறி வீழ்ந்த
எழுத்துக்கள் ஞானத் தீண்டல்
உருவாக்கும் வாக்கி யங்கள்
ஒதுக்கிய அகதிக் கூட்டம்.

புகழ்மடல் எழுதி ஆட்சி
போற்றுவோர் அஞ்சல் கூட்டில்
முகவரி யாகி இன்று
முன்னாலே நிற்கக் கண்டோம்!

அந்தக இருளில் வாழ்க்கை
நம்பிக்கை அழிந்த வர்க்குச்
சந்திரக் கல்லால் வீடு
கட்டிற்றுத் தமிழராட்சி

கவலைகள் முகத்தில் தோண்டிக்
காட்டிய கண்ணில் ஏக்கத்
திவலைகள், பிஞ்சு தட்டுத்
திடலிலோ பசிச்சி ராய்ப்பு!

திக்குகள் இடிக்கத் தங்கள்
சிறகுகள் முறிந்த இந்த
மக்களை ஏற்று வாழ்க்கை
மலர்ச்சியை ஊட்டிற்றாட்சி!

சீந்துவா ரற்று மண்ணில்
சிதறிய மகரந் தங்கள்,
ஏந்துவா ரற்ற மாந்தர்
எச்சில்கள்—எனக்கி டந்தோர்

கருணையில் லங்கள் தோறும்
காண்கின்ற சன்ன லோரம்
சிரிப்பொலி சிந்தும், சீவ
ஓவியக் காட்சி செய்வார்

சாதனை நதிவி ரல்கள்
தம்மையும் தீண்ட நீண்ட
வேதனை வெப்பம் நீங்கி
விழித்தன பிறைவி தைகள்.

எவர்போட்ட விடுக தைக்கோ
இவர்விடைகள், மோக ராளில்
எவர்புரிந்த யாகத் திற்கோ
இவர்வரங்கள்—என்ற போதும்...

அனாதைகள், அன்பு காட்ட
ஆளுண்டா என்ற ஏக்கக்
கனாக்களின் புறப்பிம் பங்கள்!
கண்ணீரில் மிதந்த வர்கள்.

நாயோடும் பன்றி யோடும்
நாளெல்லாம் போட்டி போட்ட
சேயிவர்—கருணை இல்லச்
செல்வங்கள் ஆனார் இன்று!

கதவுகள் இல்லா இந்தக்
கருணையில்லங்கள் தோறும்
புதியதோர் புலரி கண்டு
பூரிக்கும் பூபா ளங்கள்!

சூரிய வெளிச்சத் தையே
சுடச்சுட விமர்சிக் கின்ற
வீரிய விழிகள் மொய்மை
விதிகளைச் சாம்ப லாக்கும்!

வாய்ப்பில்லை என்ப வர்க்கும்
வாழ்வில்லை என்ப வர்க்கும்
தாய்ப்பாலை மையாய்த் தொட்டுச்
சட்டங்கள்—தீட்டும் ஆட்சி!

கோமுகிப் பார்வைக் கோட்டில்
குறுக்கிடும் எவர்க்கும் இந்தப்
பூமியைச் சுரபி யாக்கப்
புறப்படும் அரசின் ஆணை!

திறந்துள்ள கருணை யில்லத்
திசைகளில் சேர்ந்த சிட்டுப்
பறவைகள் இன்பப் பாட்டுப்
பாயட்டும் நமது காதில்!

கவிஞர்
ஈரோடு தமிழன்பன்

தமிழ்நாட்டில் 67 லிருந்து 75 வரை எட்டாண்டுக் காலத்தில் கிராம மின் வசதியில் எண்ணரிய சாதனைகள்!

புள்ளி விவரங்கள் பேசுகின்றன!

தமிழகத்தில்

1. மொத்தம் உள்ள கிராமங்கள், சிற்றூர்கள்:	62,487
31-3-1967 வரை மின் வசதி அளிக்கப்பட்ட கிராமங்கள், சிற்றூர்கள் ...	20,250
1-12-75 வரை 67லிருந்து 75வரை எட்டாண்டுகளில் மட்டும் மின் வசதி அளிக்கப்பட்டவை: ...	41,087
31-12-75-ல் மொத்தம் மின்வசதி அளிக்கப்பட்டவை ...	61,367

இன்னும் 1,180 கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் மட்டுமே மின்வசதி அளிக்கப்படவேண்டியுள்ளது!

1—12—75 வரை தமிழத்தில் 98.5 சதவிகித கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும், 97 சதவிகித அரிசனக் குடியிருப்புகளுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டுவிட்டது.

60.6 சதவிகித விசையேற்றங்களுக்கு மின் தொடர்பு அளிக்கப்பட்டுள்ளது. தெருவிளக்கு வசதி அளிக்கப்பட்டால்தான், கிராமம் மின் வசதி பெற்றதாகக் கொள்ளப்படுகிறது தமிழகத்தில்!

மற்ற மாநிலங்களில் அப்படி கிடையாது!

விசையேற்றங்களுக்கு மின் தொடர்பு அளித்தலில் வியத்தகு வளர்ச்சி!

விசையேற்றங்களுக்கு மின் தொடர்பு அளிப்பதில் அனைத்து இந்தியாவிலேயே தமிழ் நாட்டுக்குத்தான் முதலிடம்!

1975-ல் (30-9-75 வரை) அனைத்து இந்தியாவிலும் மின்தொடர்பு அளிக்கப்பட்ட விசையேற்றங்கள்	26,79,727
தமிழகத்தில் மட்டும் (31-12-75வரை)	7,29,323

அதாவது, அனைத்து இந்தியாவிலும் மின்தொடர்பு அளிக்கப்பட்ட விசையேற்றங்களில் சுமார் மூன்றில் ஒரு பங்கு தமிழகத்தில் மட்டும் உள்ளது.

மற்ற பெரிய மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்போம்.

மாநிலம்	மின்தொடர்பு அளிக்கப்பட்ட விசையேற்றங்களின் எண்ணிக்கை (30-9-75 வரை)
தமிழ்நாடு ...	7,26,581
மகாராட்டிரம் ...	3,92,834
ஆந்திரப் பிரதேசம் ...	2,81,387
உத்திரப் பிரதேசம் ...	2,51,137
கருநாடகம் ...	2,15,513
மத்தியப் பிரதேசம் ...	1,69,402
பீகார் ...	1,08,633

விசையேற்றங்களுக்கு (PUMP–SETS) மின் இணைப்பு அளிப்பதில் எந்த மாநிலமும் தமிழ் நாட்டை மிஞ்ச முடியாது என்பதைப் புள்ளி விவரங்கள் பறை சாற்றுகின்றன.

தமிழகத்தில் மின்சாரம் அறிமுகமான 1933-ம் ஆண்டிலிருந்து 1967 வரை—34 ஆண்டுகளில் மின் தொடர்பு அளிக்கப்பட்ட விசையேற்றங்கள் 2,80,903. ஆனால் 1967லிருந்து 1975வரை எட்டாண்டுக் காலத்தில் மட்டும் மின் தொடர்பு அளிக்கப்பட்டவை: 31-12-75 வரை) ... 4,39,420

அரிசனக் குடியிருப்புகளுக்கு மின் வசதி—அடித்தளத்து மக்களுக்கு அடிப்படை வசதி

தமிழகத்தில் உள்ள அரிசனக் குடியிருப்புகள் மொத்தம் ...	24,799
1933-லிருந்து 31-3-1967 வரை 34 ஆண்டுகளில் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டவை ...	4,354 மட்டுமே.







இந்தியாவில் எல்லா கிராமங்களுக்கும் மின் விளக்குகள் போட்ட ஒரே மாநிலம் அரியானா. அதனுடைய பரப்பளவைப் பார்த்தால் செங்கல்பட்டு மாவட்டம் அளவிற்கே இருக்கும். நெல்லை மாவட்டத்தைவிடவும் சற்று குறைவாகவே இருக்கும். ஆனால், பல செங்கல்பட்டு மாவட்டங்களை, பல நெல்லை மாவட்டங்களை இணைத்திருக்கிற– இன்னும் சொல்லப்போனால் பல அரியானாக்களைக் கொண்ட ஒரு மாநிலம் தமிழ்நாடு! அப்படிப்பட்ட தமிழகத்தில் ஆயிரம் கிராமங்களுக்கே மின் விளக்குகள் போட வேண்டியிருக்கிறது. அதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. அந்த அளவிற்கு தமிழகத்தில் மின் விளக்குகள் போடப்பட்டு விட்டன. நம் நாட்டில் மின்சாரத்தை அறிமுகம் செய்த காலம் 1933. அப்போதுதான் மின் கம்பிகளையே போட்டார்கள். மக்கள் கம்பிகளைப் பார்த்துப் பயந்த காலம் அது!

1933-லிருந்தே 67 வரை-ஏறத்தாழ 34 ஆண்டு காலத்தில் 24,799 அரிசனக் காலனிகளில் 4354 காலனிகளுக்குத்தான் மின்சாரம் வழங்கப்பட்டது. 67-லிருந்து 75 வரை எட்டாண்டுக் காலத்தில் 19,692 அரிசனக் காலனிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

முதல்வர் கலைஞர்

மேலப்பாளையம் தொகுதி திருவை கிராமத்தில் நடைபெற்ற அரிசனக் குடியிருப்பு விழாவில் ஆற்றிய உரை.

ஆனால் 1967-75 வரை எட்டு ஆண்டுக் காலத்தில் மட்டும் (31-12-75 வரை) மின் வசதி அளிக்கப்பட்ட அரிசனக் குடியிருப்புகள்	...	19,734
1975 வரை மொத்தம் (31-12-75 வரை)	...	24,088

பெரும்பாலான அரிசனக் குடியிருப்புகள், கிராமத்திற்குத் தள்ளி தொலைவில்தான் உள்ளன. இதனால் இந்த அரிசனக் குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்குவது ஆதாயம் தரத்தக்கதல்ல. என்றாலும் சமுதாயத்தின் அடித்தளத்தில் கிடந்து உழலும் ஏழை எளிய அரிசன மக்கள் வாழ்விலே ஒளியேற்ற வேண்டும் என்ற சீரிய சமுதாய நோக்கத்தோடு ஆதாயத்தைப் பார்க்காமல், பெருமளவில் பணத்தைச் செலவழித்து அரிசனக் குடியிருப்புகளுக்கு மின் வசதி அளிக்கும் இத் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

1-12-75-வரை 97 சதவிகித அரிசனக் குடியிருப்புகளுக்கு மின் வசதி அளிக்கப்பட்டு விட்டது!

நினைவில் நிறுத்துங்கள் :

மின்வசதி பெற்ற அரிசனக் குடியிருப்புகள் 31-3-1967 வரை...4,354தான்.

67-75 எட்டாண்டுக் காலத்தில் மட்டும் ..19,735.

1967 மார்ச் வரை மின்வசதி அளிக்கப்பட்டதை விட 67-லிருந்து 75 வரை எட்டாண்டுக் காலத்தில் மட்டும் 5 மடங்கு அதிகமாக அரிசனக் குடியிருப்புகளுக்கு மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

மின் உற்பத்தியில் தமிழகத்தில் சாதனை பாரீர்!

மின் நிலையங்களின் நிறுவனத் திறனில் (Installed Capacity) ஆந்திரம், கருநாடகம், கேரளம், தமிழகம் ஆகிய நான்கு மாநிலங்கள் அடங்கிய தென்னகப் பகுதிகளில் தமிழ்நாடுதான் முதலிடம் வகிக்கிறது.

மாநிலம்		நிறுவனத்திறன் (1-10-75-ல்) மெகாவாட்
தமிழ்நாடு	...	2,254
ஆந்திரப் பிரதேசம்	...	939
கருநாடகம்	...	952
கேரளம்	...	622

அகில இந்தியாவில் நிறுவனத் திறனளவில் தமிழ்நாடு இரண்டாவதாக உள்ளது.

முதலில் இருப்பது மகாராட்டிரம்

நிறுவனத்திறன் (அகில இந்தியாவுக்கும்)		மெகாவாட்
1—10—1975-ல்	...	18,505
1. மகாராட்டிரம்	...	2,258
2. தமிழ்நாடு	...	2,254

தமிழ்நாட்டை விட மகாராட்டிரத்தில் 4 மெகாவாட்டுகள் தான் அதிகம்!

அனைத்து இந்தியாவின் அளவில் தமிழ்நாட்டில் நிறுவனத் திறன் அளவு 12 சதவிகிதமாகும்.

		மெகாவாட்
31—3—1967-ல்	...	1,470
1—12—1975-ல்	...	2,254

1967-லிருந்து 1975 வரையான எட்டாண்டுகளில் மட்டும் 784 மெகாவாட்டுகள் நிறுவனத் திறன் கூடுதலாக உயர்த்தப்பட்டுள்ளது!

மின் உற்பத்தி (Generation) யிலும் தென்னகப் பகுதியில் முதலிடத்தையும், அனைத்து இந்தியாவிலும் இரண்டாவது இடத்தையும் தமிழகம் பெற்றுள்ளது.

அனைத்து இந்தியாவின் மின் உற்பத்தியில் தமிழகத்தில் மின் உற்பத்தி 10 சதவிகிதமாகும்!

மின் அனுப்புக் கம்பிகள், விநியோகக் கம்பிகள் (Transmission and Distribution Lines) தென்னகப் பகுதியில் மட்டுமல்ல; அனைத்து இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிகம்!

		கி. மீட்டர்கள்
அனைத்து இந்தியாவுக்கும் மின் அனுப்புக் கம்பிகளின் நீளம் (1972-73)	...	14,22,244
தமிழகத்தில் மட்டும் உள்ளன (1972-73)	...	2,44,126

தென்னகப் பகுதியில் (1972-1973):—

தமிழ் நாட்டில்	...	2,44,126
ஆந்திரப் பிரதேசம்	...	1,19,318
கருநாடகம்	...	1,54,689
கேரளம்	...	37,936

மின் அனுப்புக் கம்பிகளின் நீளத்திலும் தமிழ்நாடுதான் அனைத்து இந்தியாவிலும் முதலிடம் வகிக்கிறது.

தமிழ் நாட்டில்

31-3-1967-ல் மின் அனுப்புக் கம்பிகளின் நீளம்
கூடுதல் உயர் அழுத்தம், உயர் அழுத்தக் கம்பிகள்

		கி. மீட்டர்கள்
கம்பிகளின் நீளம்	...	42,482
குறைவு அழுத்தக் கம்பிகளின் நீளம்:		79,792

31-3-1975-ல்

		கி. மீட்டர்கள்
கூடுதல் உயர் அழுத்தம் உயர் அழுத்தக் கம்பிகளின் நீளம்	...	69,775
குறைவு அழுத்தக் கம்பிகளின் நீளம்		2,02,645





1967 லிருந்து 75 வரையான எட்டாண்டுகளில் மட்டும் சேர்க்கப்பட்டன

		கி. மீட்டர்கள்
கூடுதல் உயர் அழுத்தம் உயர் அழுத்தக் கம்பிகள்	...	27,293
குறைவு அழுத்தக் கம்பிகள்	...	1,29,888

தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்ட மின்சாரம்

தொழிலுக்காக :

		மில்லியன் யூனிட்டுகள்
1966—67-ல்	...	1,603
1973—74-ல்	...	2,244

வேளாண்மைக்காக

1966—67-ல்	...	732
1973—74-ல்	...	1,530

தமிழ்நாட்டில்

மொத்தம் பயன்படுத்தப்படும் மின்சாரத்தில் 25 சதவிகிதத்துக்கு மேல் வேளாண்மைக்காகப் பயன் படுத்தப்படுகிறது. மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாட்டில் தான் வேளாண்மைக்காக மின்சாரத்தைப் பயன்படுத்தும் அளவு அதிகம்!

மின்சாரம் பயன்படுத்துவோர் :

(CONSUMERS)

		இலட்சம்
1966—67-ல் மின்சாரம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை	...	14.83

31-3-1975-ல் ... 28.35

பயனீட்டாளர்களின் எண்ணிக்கை கடந்த எட்டாண்டுக் காலத்தில் இரு மடங்காகப் பெருகியுள்ளது!

தனி நபர் பயன்படுத்தும் மின்சாரம் :

(PER CAPITA CONSUMPTION)

		யூனிட்டுகள்
1966—67-ல் தனிநபர் பயன்படுத்திய மின்சாரம்	...	98
31—3—75 நிலவரப்படி	...	125

1971-72-ல இந்த அளவு 133 யூனிட்டுகளுக்கு உயர்ந்தது. மின்வெட்டின் காரணமாக குறைந்துவிட்டது.

மின் உற்பத்தி செய்யப்பட்டதும் வாங்கப்பட்டதும்

		மில்லியன் யூனிட்டுகள்
1966—67	...	4,055
31—3—75-ல்		
31—3—75-ல்	...	7,380

தமிழ் நாட்டில்

1967-க்குப் பிறகு செயல்படத் தொடங்கிய

மின் நிலையங்கள்		நிறுவனத்திறன் மெகாவாட்டுகள்
1. ஆழியாறு நீர் மின் நிலையம்	...	60
2. சோலையாறு நீர் மின் நிலையம்-1	...	60
3. சோலையாறு நீர் மின் நிலையம்-2	...	25
4. கோதையாறு நீர் மின் நிலையம்-1.		60
5. கோதையாறு நீர் மின் நிலையம்-2.		40
6. பேசின் பிரிட்ஜில் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட நிறுவனத்திறன் அனல் மின் சக்தி)	...	30
7. எண்ணூர் அனல் மின் திட்டம்	...	450
மொத்தம்	...	725

தமிழகத்தில் உள்ள மின் நிலையங்கள் :

நீர்மின் நிலையங்கள்		நிறுவனத்திறன் மெகாவாட்டுகள்
1. பைக்காரா	...	70
2. மோயாறு	...	36
3. குந்தா 1	...	60
4. குந்தா 2	...	175
5. குந்தா 3	...	120
6. குந்தா 4	...	50
7. குந்தா 5	...	20



8. சர்க்கார் பதி	...	30
9. ஆழியாறு	...	60
10. சோலையாறு 1	...	70
11. சோலையாறு 2	...	25
12. பாபநாசம்	...	28
13. கோதையாறு 1	...	60
14. கோதையாறு	...	40
15. மேட்டூர் அணை	...	40
16. மேட்டூர் குடவரை	...	200
17. பெரியாறு	...	140
அனல் மின் நிலையங்கள் :		
18. எண்ணூர்	...	450
19. பேசின் பிரிட்ஜ்	...	90
20. நெய்வேலி (மத்திய அரசினுடையது)	...	600

தமிழ்நாட்டில் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கீழ் செயல்படுத்த திட்டமிடப் பட்டுள்ள மின் திட்டங்கள்

		மெகாவாட்டுகள்
1. எண்ணூர் விரிவாக்கம் (அனல் மின் நிலையம்)	...	110
2. குந்தா 4-வது நிலை (நீர் மின் நிலையம்)	...	110
3. சுருளியாறு (நீர் மின் நிலையம்)	...	35
4. தூத்துக்குடி (அனல் மின் நிலையம்) இறுதியில் 400 மெகாவாட்டுகள்.		200
5. கல்பாக்கம் (சென்னை அணுமின் திட்டம்) (மத்திய அரசினுடையது).		470

109

25,000 நபர்களுள் நீங்கள் ஒருவரா?
சமூகப் பாதுகாப்பு
உங்களது எதிர்கால நல்வாழ்வு!



சிறப்பான தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் 25,000க்கு மேற்பட்டவர்கள் சேர்ந்து பயன் பெறுகின்றனர். அவர்களது சீரிய உதாரணத்தை நீங்களும் பின்பற்றலாமே!

"உங்களது எதிர்காலப் பாதுகாப்புக்கும் வளமைக்கும் உத்திரவாதம்" என்ற அடிப்படைக் குறிக்கோளைக் கொண்ட திட்டமிது. இந்தப் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள 7 திட்டங்களுள் உங்களுக்கு உகந்த ஒன்றைத் தேர்ந்தெடுப்பீர்!

திட்டம்	A	B	C	D	E	F
மாதச்சந்தாத் தொகை (ரூபாய்)	10	10	10	10	20	30
சந்தாக் கால அளவு (ஆண்டுகள்)	10	15	20	25	20	15
மாத ஒய்வூதியம் 30 ஆண்டுகளுக்கு (ரூபாய்)	20	35	60	100	100	100
இறுதியில் மொத்த ரொக்கத் தொகை (ரூபாய்)	1500	2500	4000	5500	8000	8000

சந்தாத் தொகையை அரசின் துணைக் கருவூலங்கள் மற்றும் இத்திட்டத்தில் பங்குபெறும் வங்கிகளில் செலுத்திடலாம்.

இயக்குநர்,
சமூகப் பாதுகாப்புத் திட்டம்,
தமிழ்நாடு அரசு,
4வது மாடி, குறளகம்,

வனம் வளர்த்தோம்! வளம் பெருக்கினோம்!

கே.எ.போஜா ஷெட்டி
ஐ.எப்.எஸ்

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அந்நாட்டு இயற்கை வளங்களே அடித்தளமகுமா. அவற்றுள் அந்நாட்டின் வன வளம் மிக முதன்மை வாய்ந்ததாகும். நாட்டு மக்களின் அன்ருடத் தேவையான விறகு, மரங்கள், மூங்கில் ஆகியவற்றையும், வனச் சார்புடை தொழில்கட்கான மூலப்பொருள்களையும், வேளாண்மைக்குத் தேவையான பசுந்தழை உரம், கால்நடைக்கு வேண்டிய புல், தழை போன்றவற்றையும் காடுகள் அளிக்கின்றன. நாட்டின் பருவ நிலையை ஒரே சீராக அமைப்பதிலும், சுற்றுப்புறக் காற்றின் தூய்மையைக் காத்தலிலும் காடு இன்றியமையாத இடம் பெறுகின்றது.

மண் வளத்தைப் பாதுகாத்தல், அணைகள், ஏரிகள், கால்வாய்கள் ஆகியவற்றில் மண் அரிப்பைத் தடுத்து அவற்றின் பயன் காலத்தை நீட்டித்தல் போன்றவற்றின் வாயிலாகக் காடுகளும் பசுமைப் புரட்சியில் பெரும் பங்கேற்கின்றன. இவையன்றி இயங்குயிர்களான வனவிலங்குகளுக்கு ஒரு புகலிடமாக அமைந்து, அதன் மூலமாகச் சுற்றுலா வளர்ச்சிக்கு வழி வகுத்து, அதன் வழி அந்நியச் செலாவணியை ஈட்டுவதிலும் காடு சிறப்பிடம் பெறுகிறது.

இயற்கைத் தந்த இச்செல்வத்தைப் பேணிக் காப்பதுடன், காடுகளை வளப்படுத்த பல நல்லத் திட்டங்களை தமிழக அரசு உருவாக்கி செயல்படுத்தி வருகின்றது.

1967 முதல் 1974—75 வரை திட்டங்கள் எவ்வாறு செயல்பட்டு விரிவு அடைந்தன என்பதைக் காண்போம்.

1956-ல் ஏற்பட்ட மாநில சீரமைப்புக்குப் பின், தமிழ் நாட்டின் இயற்கை காடுகளின் பரப்பு மிகவும் குன்றியது. தற்போது அரசு காடுகளின் பரப்பளவு 20,922 சதுர கிலோ மீட்டர் ஆகும். தமிழ் நாட்டின். மொத்த பரப்பளவில் இது 16 விழுக்காடு ஆகும். நபருக்கு 0.05 எக்டேர் என்ற விழுக்காட்டளவில் இது உள்ளது. ஆனுல், நாட்டின் வனக் கொள்கையின்படி வனங்கள் நிலப்பரப்பில் 33 விழுக்காடாக இருத்தல் வேண்டும். மேலும், தற்போது தமிழ் நாட்டில் உள்ள காடுகள் பெரும்பாலும் வளம் குறைந்தவையாகவும், வறட்சி மிகுந்து உற்பத்தித் திறன் குன்றிய பகுதியிலும் உள்ளன.

இருப்பினும், அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற 'சந்தன மரக் காடுகள், கர்நாடக மாநிலத்திற்கு அடுத்ததாக தமிழ் நாட்டிலேயே அதிகமாக உள்ளது. மேலும், காண்போரை கவரும் இயற்கை எழில் மிகுந்த காடுகளும், சுற்றுலா இடங்களும் ஏனைய மாநிலங்களைப் போன்றே தமிழ் நாட்டிலும் உள்ளன. ஆகவே, இப்பரப்பளவு குறையாது காத்தலுக்காக தமிழக முதல்வரின் தலைமையில் 1970—71-ல் நிறுவப்பட்ட உயர்மட்ட குழு வனங்களை வளர்த்தல் நீங்கலாக ஏனைய காரணங்கட்கு வனங்களை ஒதுக்குவதில்லையென முடிவு எடுத்து குறிப்பிடத் தக்கதாகும். இது தவிர, பயன்படுத்தாமல் உள்ள நிலங்களில், குறிப்பாக ஏரிக் கரைகளிலும், ஆறு, கால்வாய்க் கரைகளிலும் மரங்களை வளர்த்தலின் வாயிலாக வனங்களை வளர்ப்பதோடு மண் அரிப்பினைத் தடுக்கத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



வனத் திட்டங்கள்

தமிழ் நாட்டில் ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ், வனத் திட்டங்களுக்காக ஆண்டுதோறும் செலவிட்டுள்ள நிலையைக் கீழ்க்கண்ட பட்டியல் தெளிவுபடுத்தும் :

ஆண்டு		செலவு (ரூபாய் இலட்சங்களில்)
1967—68	...	97.98
1968—69	...	90.54
1969—70	...	75,92
1970—71	...	83.26
1971—72	...	104.26
1972—73	...	134.69
1973—74	...	174.92
1974—75	...	156.72

1974—75-ன் செலவு 1967—68-ன் செலவைவிட ஏறக்குறைய இரு மடங்காக மிகுந்துள்ளது. தமிழ்நாட்டில் வன மேம்பாட்டிற்கு அரசு எவ்வளவு முதன்மை அளித்துள்ளது என்பதை இப்பட்டியல் நன்கு புலப்படுத்தும்.



இத்திட்டங்கள் தொழில்கட்கு தேவையான தேக்கு, மென்மரம், முந்திரி, ரப்பர், தேயிலை போன்றவற்றை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. குறிப்பாக காகித ஆலை, ரேயான் போன்றவற்றிற்குத் தேவையான தைல மரங்கள், மிலாறு, மூங்கில் போன்ற விரைவில் வளரும் மர வகைகளுக்கு முதன்மை அளிக்கப்கின்றது. மேலும், வன விரிவாக்கத்திட்டம், வனப்பண்ணைத் திட்டங்களின் கீழ் ஏரிக் கரைகள், கால்வாய், ஆறு ஆகியவற்றின் ஓரப் பகுதிகளில் வனங்கள் வளர்க்கப்படுகின்றன. நடைமுறையில் உள்ள சில வனத் திட்டங்களின் தகவல் வருமாறு :

திட்டம்	ஆண்டுத் திட்டங்கள்				நான்காவது திட்டம்		ஐந்தாவது திட்டம்		மொத்தம்	
	1967—68		1968—69		1969—74		1974—75			
	அ	ஆ	அ	ஆ	அ	ஆ	அ	ஆ	அ	ஆ
1. கிராமநலக்காடுகள்	1,990	5.14	1,963	5.56	14,997	41.42	4,929	19.77	23,879	71.89
2. விறகு	1,205	8.81	1,112	10.71	3,219	31.46	1,841	26.07	7,377	77.05
3. தேக்கு	425	1.31	448	1.37	2,275	8.39	301	3.00	3,449	14.07
4. மிலாறு	818	5.50	491	5.36	5,074	14.94	1,227	3.52	7,610	29.32
5. ஆற்றங்கரை காடுகள்	450	1.57	437	2.05	3,178	12.65	1,431	7.91	5,496	24.18
6. மரக்கூழ் மரங்கள்	2,494	17.16	3,208	20.20	14,922	87.51	2,800	22.33	23,424	147.20
7. ரப்பர்	199	11.65	220	17.48	660	60.01	108	13.68	1,187	102.82
8. முந்திரி	1,117	3.39	895	5.04	6,619	53.20	286	3.39	8,917	65.02
9. வனவிலங்கு காப்பகங்கள்	...	1.80	...	2.97	...	12.93	...	3.11	...	20.81

அ. பரப்பு : எக்டேரில்

ஆ. செலவு : இலட்சம் ரூபாய்களில்

இவை தவிர வனத் துறையால் நிறைவேற்றப்படும் வேறு பல திட்டங்கள் உள்ளன.



கிராம நலக் காடுகள்

இத்திட்டத்தின் கீழ், கிராம மக்களுக்குத் தேவையான காடுபடு பொருள்களை உற்பத்தி செய்வதற்கென கிராமத்தில் பயன்படாதுள்ள நிலங்களிலும், ஏரிக்கரைகளிலும் கருவேலம் போன்ற மரங்கள் வளர்க்கப்படுகின்றன. இதன் மூலம் ஈட்டும் வருவாயை வனத் துறையும் ஊராட்சி ஒன்றியங்களும் 50 : 50 என்ற விழுக்காட்டில் பங்கிட்டுக் கொள்கின்றன. இத்திட்டத்தின் கீழ் எழுப்பப்பட்ட தோட்டங்களின் பரப்பளவு 1966—67-ல் 21,954 எக்டேராக இருந்தது 1974—75-ல் 45,932 எக்டேராக உயர்ந்துள்ளது. ஆண்டுதோறும் எழுப்பப்படும் பரப்பளவும் 718 எக்டேரிலிருந்து 4,929 எக்டேராகியுள்ளது. இதனை முன்னிட்டு ஒரு ஆண்டிற்கான செலவுத் தொகையும் ரூ. 7.18 இலட்சத்திலிருந்து ரூ. 19.77 இலட்சமாக உயர்ந்துள்ளது. இத்திட்டம் கிராமச் சுற்றுப் புறசூழ்நிலையின் தூய்மையைக் காக்கவும் உதவுகின்றது. தற்போது இத்திட்டத்தின் வாயிலாக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 24.75 இலட்சம் வருவாயாக கிடைக்கின்றது. நம் நாட்டிலேயே இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு தலைமையிடம் பெறுகின்றது என்பது குறிப்பிடத் தக்கது. மேலும், அண்மையில் நடந்த ஆய்வுகளின் பயனாக இத்திட்டத்தின் கீழ் வளர்க்கப்படும் முக்கிய மர வகையான கருவேல மரம், மரக் கூழ் மற்றும் தோல் பதனிடும் திரவம் ஆகியவற்றைத் தயாரிக்கப் பயன்படும் எனத் தெரிவதால் இந்தத் திட்டத்தின் கீழ் வளர்க்கப்படும் இம்மரங்களுக்கு மிகுதியான தேவையுள்ளது.

வன விரிவாக்கத் திட்டம்

இப்புதிய திட்டத்தின் கீழ், 1973—74-ஆம் ஆண்டு முதல் 3 தனி வன விரிவாக்கக் கோட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆண்டு ஒன்றிற்கு 2,000 எக்டேர் நிலப்பரப்பில் வனத் தோட்டங்களையும், 110 கி.மீ. நீளத்திற்கு சாலையோர மரங்களையும் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் மக்களுக்குத் தேவையான செடிகளின் நாற்றுகளையும் இக்கோட்டங்கள் வளர்த்து வழங்கி வருகின்றன.

தமிழ் நாட்டின் பல மாவட்டங்களின் வேளாண்மைத் தொழிலாளரின் முன்னேற்றத்திற்காக ஏற்படுத்தப் பட்டிருக்கும் அமைப்பு இக்கோட்டங்களின் உதவியுடன் காடுகளை ஏற்படுத்த ஒரு முன்னோடித் திட்டத்தை 1974-ல் ஆரம்பித்தது. இதன் வாயிலாக வனங்களைப் பேணுவதில் பொது மக்களின் பங்கு மேலும் உயர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

விறகு மரக் காடுகள்

பொது மக்களுக்கு அன்றாடத் தேவைக்கான எரி பொருள்களை அதிலும் குறிப்பாக கிராம மக்கள் பெரும் அளவில் பயன்படுத்தும் விறகு உற்பத்தி செய்வதில் வனங்கள் பெரிதும் உதவுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1966 1967-ல் ரூ. 9.18 இலட்சம் செலவில் 1,626 எக்டேர் பரப்பளவில் விறகு மரக்காடுகள் வளர்க்கப்பட்டன. ஆனால் தற்போது ரூ. 31.60 இலட்சம் செலவில் ஏறக்குறைய 4,000 எக்டேர் பரப்பளவில் இத்திட்டம் செயலாக்கப்படுகின்றது. விறகு மரக் காடுகளின் மொத்த பரப்பளவு 17,272 எக்டேரிலிருந்து 25,000 எக்டேர்களாக உயர்ந்துள்ளது. விறகின் நுகர்வு 90 இலட்சம் டன்களாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் வனங்களிலிருந்து தற்போதைய உற்பத்தி 30 இலட்சம் டன்களாக உள்ளது. எனவே, வருங்கால மக்களின் நல்வாழ்வுக்கென வனங்களைத் தோற்றுவிக்கும் அளவும் கூட்டப்பட்டுள்ளது.





தேக்கு

தேக்கு போன்ற கடின மரங்களை வளர்ப்பது ஒரு தொலை நோக்கு திட்டமாகும். ஏற்கனவே நடப்பட்டு ஆண்டுதோறும் வெட்டப்படும் தோட்டங்களைச் செயற்கை முறையில் வளரச் செய்வதும், புதிய தோட்டங்களை ஏற்படுத்துதலும் இத்திட்டத்தின் வாயிலாக செயலாக்கப்படுகின்றன. 1967 முதல் 1974—74 வரை 3,200 எக்டேர் பரப்பளவில் இத்தோட்டங்கள் ரூ. 14 இலட்சம் செலவில் வளர்க்கப்பட்டுள்ளன.

மரக்கூழ் மரங்கள்

மரக்கூழ் தயாரிப்பதற்கென்றும் அதன் வாயிலாக வனச் சார்புடைத் தொழில்கள் வளர்ச்சியடைவதற்கென்றும் தைல மரங்கள், மூங்கில் போன்ற விரைவில் வளரும் மரங்கள், வளர்க்கப்பட்டு வருகின்றன. காகிதம், ரேயான் ஆகிய தொழிற்சாலைகளுக்கான மூலப் பொருள்களின் நுகர்வு, வளர்ந்து வரும் மக்கள் தொகைக் காரணமாக மட்டுமின்றி படித்தோரின் எண்ணிக்கை, வாழ்க்கை தர உயர்வு ஆகியவை காரணமாக மேலும் விரிவுபெற வாய்ப்புள்ளது. எனவே, 1966—67-ல் 2,010 எக்டேர் பரப்பளவில் இத்தோட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டன. தற்போது ஏறக்குறைய 5,000 எக்டேர் பரப்பளவில் தோற்றுவிக்கப்படுகின்றன. 1967 முதல் 1975 முடிய 23,424 எக்டேர் பரப்பளவில் புதிதாக மரக்கூழ் மர வனத் தோட்டங்கள் உண்டாக்கப்பட்டன. 1967 வரை 8,585 எக்டேர் பரப்பளவில் இத்தோட்டங்கள் உண்டாக்கப்பட்டிருந்தன. இதன் வாயிலாக வன நிலங்களின் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டு ஒரு காலத்தில் தரம் குன்றிக் காணப்பட்ட காடுகள், மரங்கள் அடர்ந்து கண்ணுக்கினிய வனங்களாக மாற்றப்படுகின்றன.

தமிழ்நாட்டில் தோல் பதனிடுதல் ஒரு முக்கியத் தொழிலாகும். இதற்குத் தேவையான மிலாறு பட்டையின் சாறு தயாரிப்பதற்கெனவும், எஞ்சிய மரத்தை ரேயான் தயாரிப்பதற்கென மரக்கூழாக்கவும் மிலாறு மரங்கள் வளர்க்கப்படுகின்றன. 1966—67-ல் மட்டும் 800 எக்டேர் பரப்பளவில் இத்தோட்டங்கள் மறு உற்பத்தி செய்யப்பட்டன. தற்போது ஒரு ஆண்டில் 1,227 எக்டேர்பரப்பளவில் இவ்வலுவல் நடைபெறுகின்றது. ஏறக்குறைய 22 ஆயிரம் எக்டேர் மிலாறு தோட்டங்கள் வனத்துறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

காவிரி ஆற்றுப் பாசன பகுதிகளில் ஆற்றங்கரைகளின் கால்வாய்களில் மண் அரிப்பைத் தடுப்பதற்காகவும் தமிழ் நாட்டில் தேக்கு மர வளத்தைப் பெருக்குவதற்காகவும் ஆற்றங்கரைகளில் தேக்கு மரங்களை வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. ஆற்றங்கரைகள் உடைப்பு எடுப்பதன் மூலம் வெள்ளப் பெருக்கால் பயிர்கள் சேதமாகாதவாறு செய்வதற்கு இத்திட்டத்தின் கீழ் வளர்க்கப்படும் மரங்கள் பேருதவி புரிகின்றன. 1966—67-ல் 3,652 எக்டேர் பரப்பில் தொடங்கப்பட்டு தற்போது 8,931 எக்டேர் பரப்பில் உள்ளன. ஆண்டுதோறும் இத்திட்டத்திற்கு ஆகும் செலவும் ரூ. 1.67 இலட்சத்திலிருந்து ரூ. 7.91 இலட்சமாக உயர்ந்துள்ளது குறிப்பிடத் தக்கது. இத்திட்டம் மக்கள் நல்வாழ்வுக்கென அரசு மேற்கொள்ளும் பல சிறந்த திட்டங்களில் ஒன்றாக அமைகின்றது.

தற்போது உற்பத்தித் திறனை உயர்த்த ரப்பர், தேயிலை ஆகிய தோட்டப் பயிர்களை வளர்க்கவும் வனத் துறை முனைந்துள்ளது.



1967-ல் வனத்துறையால் வளர்க்கப்பட்ட ரப்பர் தோட்டங்களின் பரப்பளவு 1,485 எக்டேர். அதிலிருந்து 3,097 எக்டேராக இப்பொழுது உயர்ந்துள்ளது. ரப்பர்த் தோட்டங்களிலிருந்து அரசு ஈட்டும் வருவாயும் தற்போது ரூ., 53.98 இலட்சங்களாக உயர்ந்து 731 டன்களாக உற்பத்தி பெருகியுள்ளது.

முந்திரி

வனங்களை வளப்படுத்துவதற்காகத் தரம் குன்றிய வனப் பகுதிகளில் முந்திரி தோட்டங்களை ஏற்படுத்தும் திட்டம் செயலாக்கப்பட்டது. இதன் வாயிலாக 1967—68-ல் 26,420 எக்டேர் பரப்பளவில் தொடங்கிய தோட்டங்கள் தற்போது 38 ஆயிரமாக விரிவடைந்துள்ளன. பெரும்பாலான தோட்டங்கள் புதிதாக நிறுவப்பட்டுள்ள தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் பொறுப்பில் உள்ளன. ஆண்டுதோறும் 1,000 டன் முந்திரிக் கொட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பயிர்ப் பாதுகாப்பு முறைகள் குறிப்பாக விமானம் மூலம் மருந்துதெளித்தல் போன்ற நவீன முறைகளும் பின்பற்றப்படுகின்றன.



வனவிலங்குகளைக் காப்பதற்கும் இயற்கைவனங்களை அழியாது காப்பதற்கும், சுற்றுலா வளர்ச்சிக்கும் வனவிலங்கு காப்பகங்கள் உதவி புரிகின்றன. 1966-ஆம் ஆண்டிற்குப் பின் தமிழ் நாட்டில் கோடிக்கரை, ஆனைமலை என்ற காப்பகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை யானை, மான், பல வகை பறவை இனங்கள் ஆகியவற்றிற்குப் புகலிடமாக அமைந்துள்ளன. இவை தவிர, ஏற்கனவே தமிழ் நாட்டில் உள்ள முதுமலை வனவிலங்கு காப்பகம், கிண்டி பூங்கா ஆகியவற்றிலும் பல முன்னேற்றங்கள் செய்யப்பட்டு வருவோரைக் கவரும் வண்ணம் அமைக்கப் பெற்றுள்ளன. தமிழ் நாட்டிற்கு வரும் வெளிநாட்டுப் பயணிகள் இக்காப்பகங்களைக் கண்டு பெருமகிழ்வு பெறுகின்றனர். இயற்கை ஈந்த வனச் செல்வத்தைப் பேணிக் காப்பதில் வனவிலங்கு காப்பகங்கள் சிறப்புக் கொண்டவையாகத் திகழ்கின்றன.

சந்தன மரக்காடுகள்

தமிழ்நாடு சந்தன மர வனங்கள் உலகப் புகழ் பெற்றவையாகும். இவற்றைப் பேணிக் காப்பதிலும் இதிலிருந்து அதிக வருவாயைப் பெற்று நாட்டுப் பணிக்குப் பயன்படுத்துவதும் வனத்துறையின் தலையாய கடமைகளாக உள்ளன. 1966—67-ல் சந்தனத்திலிருந்து கிடைத்த வருவாய் ரூ. 1.18 கோடி. அது ரூ. 3.73 கோடிக்கு உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இயற்கையிலேயே உள்ள சந்தன மரக் காடுகளை பேணிக் காப்பதிலும், செயற்கை முறையில் சந்தன மரத் தோட்டங்கள் வளர்ப்பதிலும் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

சமுதாய நலத்திட்டங்கள்

காடுகள் வாயிலாக சமுதாய நலத்திற்குப் பல்வேறு வகைகளில் சிறப்பானத்தொண்டு ஆற்றப்படுகின்றது. இவற்றுள் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கென்று வளர்க்கப்படும் ரப்பர், தேயிலைதோட்டங்கள் குறிப்பிடத்தக்கவை. இத்திட்டங்களின்படி 804 எக்டேர் ரப்பர் தோட்டங்களும், 932 எக்டேர் தேயிலைத் தோட்டங்களும் இதுவரை வளர்க்கப்பட்டுள்ளன. ரப்பர் தோட்டங்களில் 404 குடும்பங்களும், தேயிலைத் தோட்டங்களில் 510 குடும்பங்களும் குடியமர்த்தப்பட்டுள்ளனர். மலைவாழ் மக்களின் நலனுக்கென்று தனித்திட்டம் ஒன்றும் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. வனங்களில் பணி புரிய மலை வாழ்மக்கள், குறிப்பாக பழங்குடியினர் முன்வந்து அதற்கென காடுபடு சிறு பொருட்களைத் தமது ஊதியமாகப் பெறுகின்றனர். இம்மக்களின் நலனுக்கென்று பள்ளிகளும், மருத்துவ மனைகளும் வனத் துறையால் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாடு வனத்துறை செயல்படுத்தும்திட்டங்கள் எத்தனையோ பல வாகும். தமிழ்நாடு அரசிற்கு ஏறக்குறைய ரூ. 10 கோடி வருவாய் அளிக்கும் துறையாக இது உள்ளது. இதன் மூலம் அரசின் பல திட்டங்கள் நிறைவேற இத்துறை கருவியாக உள்ளது. இது வருவாயை அளிக்கும் துறை மட்டுமின்றி, மக்களுக்கு நேரடியாக புலப்படாத வகைகளில் பயன் அளிக்கின்ற துறையாகவும் உள்ளது. இத்துறையினை மேலும் வணிக அடிப்படையில் செயல்படுத்த தமிழ்நாடு வனத்தோட்ட கழகம் 1974—75-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதற்கு அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 2 கோடி ஆகும். இது தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை,இராமநாதபுரம்ஆகிய மாவட்டங்களில் 65,000 எக்டேர் பரப்பளவில் முந்திரி, தைல மரம், சவுக்கு ஆகிய தோட்டங்களை வளர்த்தல், பராமரித்தல், மரங்களை வெட்டி விற்பனை செய்தல் ஆகிய அலுவல்களை மேற்கொள்ளுகின்றது. இன்னும் வருங்காலங்களில் மேலும் மக்களுக்கு தொண்டுகளைச் சிறப்புடன் ஆற்றிட இத்துறை வழிவகைகளை வகுத்து வருகின்றது. காடு வளர்ந்திட, நாடு வளர்ந்திடும்; நாடு வளர்ந்திட நாம் வளர்ந்திடுவோம்!

பீங்கான் சாதனங்களில் டாசெல் முத்திரை தனிச்சிறப்பு பெற்றதாகும்!

குறுகிய காலத்துக்குள்ளாகவே பீங்கான் தயாரிப்புகள் துறையில் டாசெல் தனிச்சிறப்பு பெற்றுள்ளது. பண்டைய கால பண்பாடு திகழும் சாமான்கள் முதல் அழகு மிளிரும் நவீன வடிவமைப்புகளில் பீங்கான் சாதனங்கள் வரையில் டாசெல் உங்களுக்கு அளிக்கிறது. கலை அழகு மிக்க பீங்கான் பொருட்கள், வீட்டு உபயோக சாதனங்கள், ஆலய மற்றும் கிராமிய பண்பாடு திகழும் பீங்கான் சாமான்கள் மற்றும் எழில் மிக்க ஜோடனைப் பொருட்கள் ஆகியவைகளை அளிக்கிறது டாசெல். மற்றும் உப்பு மெருகிட்ட கற்குழாய்கள், இயந்திர தயாரிப்பு செங்கற்கள் மற்றும் பளபளக்கும் சுகாதார சாதனங்கள் ஆகியவற்றையும் நாங்கள் தயாரிக்கின்றோம்.

தமிழ்நாட்டில் பீங்கான் சாதன உற்பத்தி தொழிற்சாலைகளை அமைக்கும்படி டாசெல் தொழிலதிபர்களை வேண்டுகின்றது. கீழ்க்கண்ட வகையில் டாசெல் அவர்களுக்கு உதவி புரியும்—தொழில் நுட்ப ஆலோசனை, கச்சாப் பொருட்களை பரிசோதிப்பது மற்றும் தயாரிப்பு பொருட்களின் அபிவிருத்தி. பயிற்சி வசதிகள். தொழிற்பேட்டை வசதி. தயாரிப்பு பொருட்களை உலையில் இட்டு சுடுவதற்கு வசதி. சேவை வசதிகள். ஸ்டுடியோ பாண்ட வகைகளில் பயிற்சி. எலக்ட்ரானிக் ஸிராமிக்ஸ் துறையில் பயிற்சி.

அண்ணா நகர், 'சிந்தாமணி'யிலும் சென்னை, மவுண்ட் ரோடு பூம்புகாரிலும் உள்ள எமது பீங்கான் சாதன காட்சி சாலைக்கு வருகை தாருங்கள்.



தமிழ்நாடு சோமிக்ஸ் லிட்.
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
20, செனடாஃப் ரோடு,
சென்னை-600018.
தொலைபேசி: 445321

பத்தாண்டு பருவமுள்ள டான்சிக்கு
ஊக்கமுடனும், உற்சாகத்துடனும்
சேவை புரிவதொன்றே குறிக்கோள்!

பண்டங்களை நுகர்வோருக்குச் சேவை புரிவதில் பத்து ஆண்டுகளாக நாங்கள் ஆற்றிடும் அரும்பணி அனைவரும் அறிந்ததே. புதிய பொருட்களைப் படைப்பது, தொழில்துறை மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களை விற்பனை செய்வது மற்றும் நுகர்வோர் தேவையை ஆராய்ந்து பற்பல அரிய படைப்புக்களை வழங்குவது ஆகியவற்றில் நாங்கள் ஒரு பெரும் சக்தியாகத் திகழ்கின்றோம்.
நமது வாடிக்கையாளரின் மன நிறைவையே நாங்கள் என்றும் போற்றி வருவதால் எப்பணியிலும் நாங்கள் இன்முகத்துடன் ஈடுபடுகின்றோம்.
எமது தயாரிப்புகளில், எஃகு மற்றும் மர பர்னிச்சர், விவசாய உபகரணங்கள், மருத்துவ மனைக்கான சாதனங்கள், விஞ்ஞான கண்ணாடிச் சாதனங்கள், பூட்டுகள், கட்டுமானங்கள், எனாமல் பூசப் பட்ட செப்புக்கம்பிகள், அடித்து தயாரிக்கப்பட்ட மற்றும் வார்ப்பட உறுப்புகள் மற்றும் தோல் அணிகள் ஆகியவை உள்ளன.

டான்சி
தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்,
26, ஒயிட்ஸ் ரோடு,
சென்னை-600 014





கால்நடை வளர்த்தோம்!

பொங்கல் திருநாளாம் இந் நன்னாளில் களத்தில் உழைத்து களைப்புடன் வரும் வேளாண்மைக் குடிமகன், தன்னை வாழ வைக்கும் காளைகளைக் கரங்களில் பிடித்துக் கொண்டு மகிழ்வுடன் காணப்படுகிறான்! ஆண்டு முழுவதும் பால் கொடுத்து, தன் குடும்பத்தை ஓரளவு நிம்மதியுடன் வாழ வைத்தப் பசுவை அலங்கரித்துக் கொண்டிருக்கிறாள் அவனது அருமை மனைவி! வாழ்வில் நலங் கண்ட திருப்தி அவர்கள் முகத்திலே பிரதிபலிக்கிறது. தமிழர்த் திருநாளில் உவகை அவர்கள் முகத்திலே தாண்டவமாடுகிறது. இதற்காகத் தானே தமிழக அரசு, கால்நடைப் பராமரிப்புத் துறை மூலம் பல்வேறு திட்டங்களைத் தீட்டி அயராது பணி புரிந்து வருகிறது!

சாதனைகள் பல கண்ட இத் துறைக்கு, சோதனைகளுக்கும் குறைவில்லை! நாட்டின் பொருளாதார நிதிப் பற்றாக் குறை வேறு. இத்தனைக்கும் மத்தியில் இடர்பாடுகளைத் தகர்த்து, இலட்சியத்தை நிறைவேற்ற, சீரிய பணிபுரிந்து வருகிறது இத்துறை.

1973-ஆம் ஆண்டு இத்துறை புதிய திருப்பத்தைக் கண்டது! செயலற்று நின்ற கால்நடை வளர்ச்சிப் பணிகள் புத்துயிர் பெற்றன! அதன் பயனாகத் தோன்றியது, மதுரை மாநகரில், தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம். அதனைப்பின் தொடர்ந்து திருநெல்வேலி, தஞ்சாவூர் மாவட்டங்களில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இத்திட்டம் செயல்படும் பகுதிகளில் 'ஜெர்ஸி', 'பிரெஸியன்' முதலிய அயலின உயர்ரகக் காளைகளும், 'சிந்தி', 'முர்ரா' போன்ற இந்திய பாலினவர்கத்தைச் சேர்ந்த காளைகளும் பராமரிக்கப் பட்டு அவைகளின் விந்து மூலம், சுற்றிலுமுள்ள நகர்ப் பகுதிகளில் கால்நடைகளின் தரம் உயர்த்தப் பட்டு வருகிறது. இதன் மூலம் கூடிய விரைவில் பால் உற்பத்தியில் கணிசமான உயர்வை காணலாம். மதுரை, திருச்சி, புதுக்கோட்டை, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கேந்திர கிராம நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் கிராமப் பகுதிகளில் உள்ள கால்நடைகளின் தரம் உயர்த்துவதில், தீவிர நடவடிக்கையெடுக்கப்படுகிறது.

1974-ஆம் ஆண்டில் இணைப்புப் பண்ணையாக இயங்கி வந்த தஞ்சை மாவட்டத்திலுள்ள கொருக்கை பண்ணை, கால்நடைப் பண்ணையாக உயர்த்தப்பட்டுள்ளது. தற்சமயம் இதுபோன்ற 7 பண்ணைகள் தமிழகத்திலுள்ளன. இப்பண்ணையில் பிறக்கும் காளைகள், பொலிவுக் காளைகளாக பொது மக்களுக்கு விற்கப்படுவதுடன், இத்துறையைச் சார்ந்த நிலையங்களிலும் பராமரிக்கப் பட்டு, செயற்கை இனக் கருவூட்டல் மூலம் கால்நடைகளின் தரம் உயர்த்தப்படுகிறது.

உயரினக் காளைகளிலிருந்து சேகரிக்கப்படும் விந்து வீணாகாமல், நல்ல நிலையில் பதப்படுத்தி, தேவையான சமயங்களின் உபயோகிப்பதுடன், அவசியமான இடங்களுக்கும் விநியோகிக்கும் நோக்குடன் தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஒசூர் பண்ணையிலும், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள





1974-ஆம் ஆண்டில் புது டெல்லியில் நடைபெற்ற பத்தொன்பதாவது 'அகில இந்திய கால்நடைக் கண்காட்சியில்' தமிழகம் 21 பரிசுகளையும், 4 சுழற்கோப்புகளையும் பெற்றது



ஒரத்தநாடு பண்ணையிலும் 'உறைவிந்து சேகரிப்பு நிலையம்' ஆரம்பிக்க தமிழக அரசு ஒப்புவித்து உள்ளது. ஒரத்த நாடு உறைவிந்து நிலையத்திற்கு டென்மார்க் அரசு உதவி செய்ய முன்வந்து உள்ளது. இவ்விரண்டு நிலையங்களுக்கும் தேவையான உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. 1976-ஆம் ஆண்டில் இப்பணிகள் ஆரம்பம் ஆகும்.

அது மட்டுமின்றி, தஞ்சை மாவட்டத்திலுள்ள ஈச்சங்கோட்டை பண்ணையில், 'அயலின உயர் ரக கால்நடை பண்ணை' அமைக்க அரசு ஒப்புதலளித்துள்ளது. இப்பண்ணை அமைக்கவும் டென்மார்க் அரசு உதவி செய்ய முன்வந்துள்ளது. 10 இளம் ஜெர்ஸி காளைகளும், 240 ஜெர்ஸி இனக் கிடாரிகளும் வழங்க இசைவளித்துள்ளது. இத்திட்டம் செயல்பட ஆரம்பித்தால், தமிழ்நாட்டில் பால் உற்பத்தியில் நல்லதோர் முன்னேற்றத்தைக் காணலாம் என்பது திண்ணம்.

ஆடுகளின் வளர்ச்சிக்கென்று, மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் பொலி கிடாக்கள் பொது மக்களுக்கும் விநியோகிக்கப்படுகிறது. பரம்பரையாக ஆடு வளர்க்கும் தொழில் செய்பவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு மறுநிதிக் கழக உதவியுடன் 1973-ஆம் ஆண்டில் ரூபாய் 50.95 இலட்சம் செலவில் ஆடு வளர்ப்புத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

பன்றிகளின் வளர்ச்சிக்கென்று 1974-ஆம் ஆண்டில் உதகமண்டலம் மாவட்ட கால்நடைப் பண்ணையில் பன்றி வளர்ப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது இதுபோன்று 9 பன்றி வளர்ப்பு நிலையங்கள் இத்துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன. பன்றி அபிவிருத்திக்காக, இந்நிலையங்களிலிருந்து பன்றிகள், சகாய விலையில் விற்கப்படுகின்றன.

கோழி வளர்ப்புக்காக கோழி வளர்ப்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டு, தனியாக நடைபெற்று வருகிறது. அது மட்டுமின்றி, இத்துறையின் கீழ் இயங்கும் 28 கோழி வளர்ப்பு நிலையங்களின் மூலம் கோழி வளர்ப்புக்கென்று கோழிகளும், முட்டைகளும் விற்கப்படுகின்றன.

கால்நடைகளின் வளர்ச்சியில் தமிழ்நாடு அரசு அக்கறை செலுத்துவது மட்டுமின்றி, அவைகளை நோய் நொடியிலிருந்து காக்கும் பொருட்டு 1970-ஆம் ஆண்டில் கிராமங்கள் தோறும் 1956-ல் கிளை நிலையங்களைத் திறந்துள்ளது. 1974-ஆம் ஆண்டில் 2 கால்நடை மருந்தகங்கள் மருத்துவ மனைகளாக உயர்த்தப்பட்டு உள்ளன. மேலும் ஆண்டுதோறும் 25 கால்நடை மருந்தகங்களைத் திறந்து வருகிறது.

கால்நடைகளை நோய் வந்த பின் காப்பது மட்டுமின்றி, நோய் வருமுன் காப்பதும் கடமையென்று கருதி இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு நிலையத்தில் ரூபாய் 20.80 இலட்சம் செலவில் 1974-ஆம் ஆண்டில் பல புதிய மருந்துகளைத் தயாரிக்கும் திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. இதன் மூலம் தற்போது இந்நிலையத்தில் 24 விதமான மருந்துகள் தயாரிக்கப்பட்டு, நம் மாநிலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வது மட்டுமின்றி, அண்டை மாநிலங்களின் தேவையையும் பூர்த்தி செய்து வருகிறதென்பது, தமிழ் நாட்டின் பெருமைகளும் ஒன்றாகும்!

இந்நிலையத்தின் மூலம் 1974-75-ஆம் ஆண்டில் ரூபாய் 5,80,000 இலட்சத்திற்கு மருந்துகள் விற்கப்பட்டது என்பதும் குறிப்பிடத் தகுந்ததாகும்!

கால்நடைகளுக்கும் வரும் நோய்களில் வெக்கை நோய் என்பது மிகக் கொடியதாகும். இது பெரும்பாலும் அண்டை மாநிலங்களிலிருந்து வரும், கால்நடைகள் மூலம் பரவக் கூடியது. எனவே, இதனை வரும்முன் காப்பதற்காக மாநில எல்லையோரப் பகுதிகளில் இரவும், பகலும் கால்நடைகளைக் கண்காணிக்கும் குழு செயல்படுகிறது. எல்லையைத் தாண்டும் கால்நடைகளுக்குத் தடுப்பூசி போடும் பணியில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கால்நடைகளின் தரமுயர்த்தி, பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளுவது மட்டுமின்றி தீவனப் பயிர் உற்பத்தியிலும் இத்துறை அக்கறை கொண்டுள்ளது. கால்நடைகளின் வளர்ச்சிக்கு, முக்கியமாகப் பால் தரும் கால்நடைகளின் வளர்ச்சிக்கு அத்யாவசியத் தேவை பசும் புல்லாகும். நரம் நாட்டுப் புல் வகைகள் வளம் பொருந்தியதல்ல ; மேலும் மேய்ச்சல் நிலங்கள் வீடுகளாகவும், தொழிற் கூடங்களாகவும் மாற்றப்படுகிறது. எனவே, பசும் புல் உற்பத்தியில் தனிக் கவனம் செலுத்துவது இன்றைய அவசரத் தேவைகளில் ஒன்றாகும். ஆகவே, ஒவ்வொரு கால்நடைப் பண்ணைகளிலும் 'என்.பி. 21', 'கினியா', 'நேப்பியர்', 'எருமைப் புல்' 'லூசர்ன்', 'அகத்தி', 'சோளம்', 'கம்பு', 'ராகி' ஆகியவைப் பயிரிடப்பட்டு பண்ணைகளிலுள்ள கால்நடைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வது மட்டுமின்றி, புல் முதலியன பொது மக்களுக்குச் சகாய விலையில் விற்கப்படுகிறது.

தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டப் பகுதிகளிலும் புற்கள் பயிரிடப்பட்டு, பொதுமக்களுக்கு விற்கப்படுவதுடன், புல் நாற்றுகளும் விற்கப்படுகின்றன. புல் வளர்ப்பதில் ஊக்கமளிப்பதற்காக உதவிப் பணம் வழங்கப்படுகிறது.

1973—74, 1974—75-ஆம் ஆண்டுகளில் முறையே படப்பை, சின்னசேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் 'புல் விதை உற்பத்தி நிலையங்கள்' ஆரம்பிக்கப்பட்டு தீவனப்பயிர் உற்பத்தியில் தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

1968-ஆம் ஆண்டு முதல் இதுவரை, கால்நடைத் துறையில் திறக்கப்பட்டுள்ள நிலையங்கள் :

1. முழுநேர கால்நடைப் பண்ணையாக உயர்த்தப்பட்டது— 1

2. கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட்டவை— 60

3. கால்நடை மருத்துவ மனையாக உயர்த்தப்பட்டவை— 2

4. கால்நடை மருந்தகமும் — கேந்திர கிராம நிலையமுமாக மாற்றப்பட்டது— 1

5. பிரதம மருத்துவ மனையாக உயர்த்தப்பட்டது— 2

6. புதுப்பிக்கப்பட்ட தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள்— 3

7. புதுப்பிக்கப்பட்ட கேந்திர கிராம நிலையங்கள்— 19

8. பன்றி வளர்ப்பு நிலையம்—1

9. தீவனப் பயிர் உற்பத்தி நிலையம்— 3

தமிழ் நாட்டில் கால்நடைத் துறையில் சமீப கால வளர்ச்சியை படம் பிடித்துக் காட்டுவது, 1974-ஆம் ஆண்டில் புது டெல்லியில் நடைபெற்ற பத்தொன்பதாவது 'அகில இந்திய கால்நடைக் கண்காட்சியில்' தமிழகம் சூடிய வெற்றி வாகையே ஆகும்! இந்தியாவின் மாநிலங்கள் அனைத்திலுமிருந்து, மாடுகள் ஆடுகள், பன்றிகள், கோழிகள்



ஆக மொத்தம் 1,888 கால்நடை பங்கேற்றன. தமிழகம் 21 பரிசுகளையும், 4 சுழற்கோப்புகளையும் பெற்றதுடன் ஓசூர் கால்நடைப் பண்ணையிலுள்ள சிந்தி இனக்காளை '**வாகை வீரன்**' என்ற பட்டத்தையும் பெற்றுவந்தது.

இவ்விதமாகக் கால்நடைகளின் வளர்ச்சியிலும், பொது நலத்திலும் பெரு முயற்சி எடுத்துவரும் இத்துறை நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திலும் பங்கு வகுக்கிறது. 1973—74-ஆம் ஆண்டில் தமிழகத்தில் வேளாண்மை வருமானத்தில், 10.4 சதம் இத்துறை மூலம் கிடைக்கிறதெனக் கணக்கிடப்பட்டுள்ளது. கால்நடை வளர்ச்சியில் இந்தியாவில் தனி இடம் வகிக்கும் தமிழகக் கால்நடை பராமரிப்புத் துறை, தமிழகத்தின் பொருளாதார முன்னேற்றத்திலும் பாராட்டத் தக்கதோர் இடத்தை வருங்காலங்களில் வகிக்கும் என்பதில் ஐயம் இல்லை.

இத்துறையின் வளர்ச்சியில் பெரும் பங்கு வேளாண் பெருமக்களையே சாரும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். எனவே, கால்நடை வளர்ச்சியில் ஒத்துழைப்பு நல்கிய வேளாண் குடிப் பெருமக்களுக்கு நன்றி நவில்வதுடன், கால்நடைச் செல்வங்கள் பலப் பலவு பெற்று, வாழ்வில் நலங் காண்பதுடன், தமிழகத்தின் சிறப்புக்கும் தனி வழி வகுத்திட, தமிழர்த் திருநாளாம் இப்பொன்னாளில் வாழ்த்துகிறோம்.

தமிழ்நாட்டில் முன்னாள் இராணுவத்தினர் நலம்

இந்தியாவில், இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து ஒவ்வொரு ஆண்டும், 30-40 வயதுக்குட்பட்ட சுமார் 60 ஆயிரம் வீரர்கள் கட்டாய ஒய்வு பெறுகிறார்கள்; அல்லது, ரிசர்வ் துறைக்கு மாற்றப்படுகிறார்கள். இத்தகையோர் 10 ஆண்டுகள் முதல் 18 ஆண்டுகள் வரை நாட்டுக்காகப் பாடுபடுகின்றனர். 'லெப்டினன்ட் கர்னல்' அல்லது அதற்குச் சமமான தகுதியோ அல்லது அதற்குக் கீழான தகுதியோ கொண்ட, பல அலுவலர்கள் 48 வயதிலிருந்து 52 வயதுக்குள், தங்கள் பதவிகளிலிருந்து விலகுகின்றனர். இத்தகைய முன்னாள் இராணுவத்தினரில், 600 அலுவலர்கள் உட்பட 45 ஆயிரம் பேருக்குச் சிவில் வாழ்க்கை நடத்த உதவி தேவைப்படுகிறது.

தமிழ்நாட்டில் சுமார் 2 இலட்சம் இராணுவத்தினர் வசித்து வருகின்றனர். முக்கியமாக, வட ஆர்க்காடு, இராமநாதபுரம், நெல்லை ஆகிய மாவட்டங்களில் தான் இத்தகையோர் அதிகமாக உள்ளனர்.

ஐந்தாவது திட்ட காலத்தில், நாட்டின் முப்படைகளிலுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த சுமார் 25 ஆயிரம் வீரர்கள், கட்டாய ஒய்வு பெறுவார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதாவது ஆண்டிற்கு 5000 பேர் வீதம் ஒய்வு பெறலாம்.

தமிழ்நாட்டில் 1973-ஆம் ஆண்டில், வேலைவாய்ப்பு அலுவலகங்கள் 1264 முன்னாள் இராணுவத்தினருக்கு வேலை தேடிக் கொடுத்துள்ளது.

5 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின்படி, தமிழ்நாட்டிலுள்ள முன்னாள் இராணுவத்தினருக்கு, வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய பல்வேறு பிரிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. வேளாண்மைப் பொறியியல் பணி நிலையங்கள்.
2. வேலையற்ற பட்டதாரிகள் நடத்தும் கோழிப்பண்ணைத் திட்டம்.
3. பொறியாளர்களின் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.
4. சிவில் பொறியியல் ஆலோசனையும், கட்டுமானப் பணிக்கான கூட்டுறவுச் சங்கங்களும்.
5. மோட்டார் வாகன உதிரி உறுப்புகள் உற்பத்தியில் கூட்டுறவுச் சங்கங்கள்.
6. மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் நிலையங்கள்.
7. கூட்டுறவு முறையில் இயங்கிய கிராமப்புறமருத்துவமனைகள்.
8. உள்ளூர் வாகன பழுது பார்க்கும் நிலையங்கள்.

போரில் காயமடைந்தவர்கள், போரில் உயிரிழந்த வீரர்களின் மனைவிமார்கள், போரினால் உடல் ஊனமுற்றவர்கள் ஆகியோர்க்குப் பெட்ரோல் விற்பனை, சமையல் எரிவாயு சிலிண்டர் விற்பனை, மண்ணெண்ணெய் விற்பனை ஆகியவற்றிற்காக இந்திய எண்ணெய்க் கார்ப்பொரேஷன் அனுமதி வழங்கி வருகிறது. தமிழ்நாட்டில், இத்தகையோர் 14 பெட்ரோல் விற்பனை நிலையங்களையும், 20 சமையல் எரிவாயு சிலிண்டர் விற்பனை நிலையங்களையும், 46 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்களையும் அமைத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை, 10 பெட்ரோல் விற்பனை நிலையங்களும், 5 சமையல் எரிவாயு சிலிண்டர் விற்பனை நிலையங்களும், 13 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்களும் திறக்கப்பட்டுள்ளன.

வர்த்தகம் மற்றும் தொழில் நிர்வாகத் துறையில் பட்ட மேற்படிப்பு டிப்ளமோ பெறுவதற்கான பயிற்சி வகுப்பு ஒன்று, முன்னாள் இராணுவ அலுவலர்களுக்காகச் சென்னையில் துவக்கப்பட்டுள்ளது. 'டேடாமாடிக்ஸ் கார்ப்பொரேஷன்' எனும் தனியார் நிறுவனம் இந்தப் பயிற்சி வகுப்பை நடத்தியது. புதிய பாலிசிதாரர்களைச் சேர்க்கும் விஷயத்தில், 25 முன்னாள் இராணுவத்தினருக்குப் பயிற்சி அளிக்கக் கூடிய விதத்தில் அமைந்த வகுப்பு ஒன்று, சென்னை ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பொரேஷன் அலுவலகத்தில் நடத்தப்பட்டது. கிண்டியிலுள்ள தொழிற்பயிற்சிக் கழகத்தில், 25 முன்னாள் இராணுவத்தினர் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

தமிழ்நாடு அரசு, முன்னாள் இராணுவத்தினருக்காகவே, கோவில் புதூரில், ஒவ்வொன்றிலும் 2 அறைகள் கொண்ட 70 வீடுகளை உடைய குடியிருப்புப் பகுதியொன்றை அமைத்துள்ளது. இதைப்போன்ற வீட்டுவசதித் திட்டங்களைத் தெரிந்தெடுத்த மாவட்டங்களில் செயல்படுத்துவது சம்பந்தமாக, அரசு பரிசிலனை செய்து வருகிறது.

தொழில் திறன் போட்டியில் தமிழகத்திற்கே முதலிடம்!

ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும் தொழிற் திறன் போட்டியின் அடிப்படையில், தொழில் பயிற்சி அளிப்பதில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலம் எது என்று கணிக்கப்படுகிறது. இப்படி முதன்மை இடம் பெறுகின்ற மாநிலத்திற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் ''சுழற்கேடயம்'' வழங்கிச் சிறப்பிக்கிறார். இதுவரை நடந்திருக்கும் இத்தகைய 11 போட்டிகளில் தமிழகம் 5 முறை சிறந்த மாநிலமாக அறிவிக்கப்பட்டு, இந்தியக் குடியரசுத் தலைவரின் சுழற்கேடயத்தைப் பெற்றிருக்கிறது.

1969, 1973 மற்றும் 1974 ஆகிய மூன்றாண்டுகள் தமிழகமே இச் சிறப்புக் கேடயத்தைத் தொடர்ந்து பெற்றது, தமிழகத்திற்குக் கிடைத்த பெருமையாகும்.

1973, 1974 ஆகிய இரண்டு ஆண்டுகளில் தொடர்ச்சியாக நாம் பெற்ற சுழற் கேடயம், மூன்றாவது ஆண்டாகிய 1975-லும் தமிழகம் பெறுமானால், அது தமிழகத்திற்கே நிரந்தரமானதாக ஆகிவிடும்! அச்சிறப்பு நமக்கே வந்து சேரும் என்று நாம் எதிர்பார்க்கலாம். இது தமிழக மாணவர்களின் திறனுக்கும் அறிவாற்றலுக்கும், தமிழக அரசின் சாதனைக்கும் நிரந்தர எடுத்துக்காட்டாகவும் அமையும்!

குடும்பநலத் திட்டத்தில் குன்றென நிமிர்ந்து நிற்கின்றோம்

எத்திட்டத்தையும் திறம்படச் செயல்படுத்தும் தமிழ்நாடு, குடும்ப நலத் திட்டத்தை 1956-ஆம் ஆண்டிலேயே ஏற்றுக் கொண்டது. 1967—68 முதல் சீரமைக்கப் பெற்ற குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்தத் துவங்கி, செவ்வனே—திறம்பட—வேறு பல மாநிலங்கள் கண்டு வியக்கும் வகையில் பெருமளவுக்கு திட்டத்திற்கு ஆக்கம் தேடி, இந்திய அரசின் பாராட்டுக்களைப் பெற்று வரும் பெருமை தமிழகத்திற்கு உண்டு.

முறையாக நடந்து வரும் குடும்ப நலத்திட்டப் பணியில் தீவிரமும், விறுவிறுப்பும் ஊட்டி, குறுகிய காலத்தில், தொல்லைகள் நேராத வகையில், மக்களின் மனப் போக்கில் நல்ல மாற்றங்களை உருவாக்கி, முழு மனதான விருப்போடு அவர்களைக் குடும்ப நலத்திட்டத்தை ஏற்கச் செய்ய வேண்டுமென்பதற்காக 'குடும்ப நலத்திட்ட முனைப்பு இயக்கம்' தமிழகத்தில் 1971-ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

மாவட்டந்தோறும் ஒவ்வோர் ஆண்டும் நடந்தேறி வரும் முனைப்பு இயக்கம் தொடங்கியதும் குடும்ப நலத்திட்ட விளம்பரப் பணிகள் ஆற்றப்படும்! மாவட்டம் முழுமையிலும் உள்ள பேரூர், சிற்றூர், பட்டி தொட்டிகள் ஆகிய அனைத்தும் விழாக் கோலம் காட்டும்! துண்டு வெளியீடுகள், சுவரொட்டிகள், ஆகியவை எங்கும் இடம் பெறும்! இவற்றைத் தயாரிப்பதில், 'குடும்ப நலச். செய்திக்கதிர்' என்ற திங்கள் இதழை வெளியிடும் மாநில குடும்ப நலத்திட்ட அச்சகம் பெரும் பணியாற்றும்! கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள், வில்லுப்பாட்டு, கதாக்காலட்சேபம், படக்காட்சிகள் நடந்தேறும். அங்கங்கே குழுக் கூட்டங்கள், குழு விவாதங்கள், கவியரங்குகள், கருத்தரங்குகள் நடக்கும்.

மக்களிடையே செல்வாக்கு உடைய ஊர்ப் பெரியவர்கள், அலுவல் சார்பற்றத் தலைவர்கள், பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியம் நகராட்சி, மாநகராட்சி ஆகியவற்றின் தலைவர்கள், உறுப்பினர்கள், சட்டப் பேரவை, மேலவை உறுப்பினர்கள், நாடாளு மன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு அமைச்சர்கள் ஆகிய அனைவரும் ஆங்காங்கே 'சிறு குடும்ப நெறியின் அவயசிம்' பற்றி வற்புறுத்துவர்.

வேறு எந்த மாநிலத்துக்கும் இல்லாத பெருந் தனிச் சிறப்பு தமிழகத்திற்கு உண்டு. மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தலைமையிலான முழு அமைச்சரவையும், மற்றும் நாடாளு மன்ற, சட்டப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் இத்திட்டத்தினை ஒரு 'அரசியல் பொறுப்பாகவே' (Political Commitment) மேற்கொண்டு, திருமண 'விழாக்கள் உட்பட பொது மேடைகளில் வாய்ப்பு நேரும் சமயங்களிலெல்லாம் விளக்கப் பிரச்சாரம் செய்து வருவதும், அதன் மூலம் 'குடும்ப நலத்திட்ட இயக்கத்தை' மக்கள் இயக்கமாக (Mass Movement) மாற்றியதும், கட்சிச் சார்பற்ற முறையிலும், சாதி—சமய வேறுபாடின்றியும் அனைத்துத் தலைவர்களும் உளமொன்றியஒத்துழைப்பு தந்து வருவதும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இத்திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தி கவிதைகள் இயற்றியளித்திருப்பதும் குறிப்பிடத் தக்கவையாகும்!

இப்படிப்பட்ட சிறந்த விளம்பரப்பணிகள் இங்கு ஆற்றப்படுவதால்தான், தனியார் எடுக்கும் திரைப்படங்களிலும், கவிஞர்கள், கட்டுரை ஆசிரியர்கள், சிறுகதை எழுத்தாளர்கள், பெருங்கதை (நாவல்கள்) எழுத்தாளர்கள், கேலிச் சித்திரம் வரையும் ஓவியக்



கலைஞர்கள் ஆகிய அனைவரும் தன்னிச்சையாகக் குடும்பத்தை அளவோடு அமைத்துக் கொள்ள வேண்டியதின் அவசியத்தைத் தங்கள் தங்கள் படைப்புக்களில் வலியுறுத்தும் நல்ல சூழ்நிலை நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. ஏன்? குடும்ப நலத் திட்ட விளம்பரப் பணிகளை இந்தியாவிலேயே தமிழ் நாடு சிறந்த முறையில் ஆற்றி வருகிறது என்ற பாராட்டையும் பெற்றுள்ளது.

குடும்ப நலத் திட்ட முனைப்பு இயக்கங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் சிறப்பாக உள்ளாட்சித் துறையினர், வருவாய்த் துறையினர், நல்வாழ்வு—குடும்பநலத்திட்டத் துறையினர், ஆர்வமுள்ள மற்ற மற்ற துறையினர் ஒருங்கிணைந்து பணியாற்றி வெற்றி ஈட்டி வருகின்றனர்.

1971—72-ஆம் ஆண்டு, தமிழ் நாடு குடும்ப நலத் திட்ட வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது எனலாம். முனைப்பு இயக்கக் காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட 'நல்வாழ்வு நிலைய முறை' (Health Resort) இந்திய அரசின் கவனத்தை ஈர்த்தது. **இந்திய அரசே 'தஞ்சாவூர் பாணி, நல்வாழ்வு நிலைய முறையை பிற மாநிலங்களும் பின்பற்ற வேண்டுமெனப் பரிந்துரைத்தது. இம்முறையினை அறிமுகப்படுத்திய தமிழ்நாட்டைப் பாராட்டும் வகையில், 1972ஆம் ஆண்டு புதுடில்லியில் நடந்த அனைத்திந்திய குடும்ப நல மாநாட்டில் தேசீய விருதொன்றைத் தமிழகத்திற்கு அளித்துச் சிறப்பித்தது.**

குடும்ப நலத்திட்டத்தின் பல கூறுகளாக உள்ள, பேறு காலத்திற்குப் பின் குடும்ப நலம் பேணும் திட்டம் (Post Partum Programme), உட்கொள்ளும் கருத்தடை மாத்திரைகளை (Oral Pills), வழங்கும் திட்டம் வழக்கிலிருக்கும் குடும்ப நலச் சாதனங்களை வழங்கும் திட்டம் (Conventional Contraceptives), கருத்தடை வளையம் பொருத்தும் திட்டம் (I.V.D.) ஆகியவை முறையாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறப்பாக குடும்ப நலத்திட்ட அறுவைச் சிகிச்சைத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழகம் சிறந்து விளங்குகிறது. இந்திய அரசு ஆண்டுக்காண்டு தகுதியுள்ள இவ்வளவு பேர்களை அறுவைச் சிகிச்சையின் மூலம் நிரந்தரக் கருத்தடை முறையை ஏற்கச் செய்ய வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கிறது. இலக்கினை விஞ்சிய சாதனையைத் தமிழ்நாடு ஏற்படுத்தி வருகிறது.

1971-72, 72-73, 73-74, 74-75 ஆகிய ஆண்டுகளில் முறையே 146.5 சதவிகிதம், 113.8 சதவிகிதம், 110.1 சதவிகிதம், 104.4 சதவிகிதம் என்ற அளவில் இலக்கினையும் மீறிய அளவில் சாதனையை ஏற்படுத்திக் காட்டியிருக்கிறது தமிழகம் ! நடப்பு 75—76-ஆம் ஆண்டுக்கு இந்திய அரசு தமிழ் நாட்டிற்கு அளித்த இலக்கில் 85 சதவிகிதத்திற்கும் சற்று அதிகமான இலக்கு இதுவரை (நம்பர் .75 வரை) நிறைவேற்றப்பட்டு விட்டது. இந்த நிதி ஆண்டு முடிவதற்குள் இவ்வாண்டிற்குரிய இலக்கினையும் விஞ்சிய சாதனையைத் தமிழ்நாடு ஏற்படுத்திக் காட்டும்.

1967—68-ஆம் ஆண்டு முதல், 1975—76-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் வரை தாய்மார்களும், தந்தைமார்களுமாக மொத்தம் 14,58,109 பேர்கள் அறுவைச் சிகிச்சை செய்துக் கொண்டு நிரந்தரக் கருத்தடை ஏற்றுள்ளனர் !

குடும்பநலத் திட்டம் பட்டிமன்றம்

குடும்ப நல முறைகளை, மக்கள் ஏற்கும்படி செய்வதற்காக இந்திய அரசு அளித்துவரும் உதவித் தொகையோடு கூட, திட்டத்தின் இன்றியமையாமைக் கருதி, தமிழ் நாடு அரசும் தன் நிதி ஆதாரங்களிலிருந்து கூடுதலான நிதியை ஒதுக்கிச் செலவிட்டு வருகிறது.

ஆண் அறுவைச் சிகிச்சை ஒவ்வொன்றும், இந்திய அரசு தரும் ரூ. 35-ம், தமிழ் நாடு அரசு தரும் ரூ. 45-ம் ஆக மொத்தம் ரூ. 80 செலவிடப்பட்டு நிறைவேற்றப்படுகிறது. பெண் அறுவைச் சிகிச்சை ஒவ்வொன்றும் இந்திய அரசு தரும் ரூ. 70-ம், தமிழ் நாடு அரசுதரும் ரூ. 40-ம் ஆக மொத்தம் ரூ. 110 செலவிடப்பட்டு நிறைவேற்றப்படுகிறது. இந்திய அரசு ரூ. 8-ம், தமிழ்நாடு அரசு ரூ.7-ம் ஆக மொத்தம் ரூ. 15 செலவில், விரும்பும் ஒவ்வொரு தாய்க்கும் கருத்தடை வளையம் பொருத்தப்படுகிறது.

நூற்றுக்கு நூறு இந்திய அரசின் நிதி உதவியோடு நடைபெறும் குடும்பநலத் திட்டச் செயலாக்கத்திற்கு மேலும் வலிவும் வனப்பும் சேர்க்க, தமிழ் நாடு அரசும் தன் நிதி ஆதாரங்களிலிருந்தும் பெருந் தொகை ஒதுக்கிச் செலவிட்டு வருகிறது. மற்ற மற்ற மாநிலங்கள் இந்திய அரசு தந்துதவும் தொகையிலேயே இத்திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்க, திட்டத்தின் இன்றியமையாமையைக் கருதி தமிழ்நாடு அரசு இப்படிச் செலவிட்டு வருகிறது

1967—68-ஆம் ஆண்டு முதல் 1974—75-ஆம் ஆண்டு வரை குடும்ப நலத்திட்டத்திற்கென தமிழ் நாட்டில் ரூ. 3518.77 இலட்சங்கள் செலவழிக்கப்பட்டுள்ளன. இதில் மத்திய அரசு வழங்கியது 3312.66 இலட்சங்களாகும்! தமிழ்நாடு அரசு தன் நிதியிலிருந்து செலவிட்டது ரூ. 206.11 இலட்சங்களாகும்!

1972-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாள் அன்று, கருச்சிதைவு செய்து கொள்வது சட்டபூர்வமாக்கப்பட்டது. தமிழகத்தில் 80 மருத்துவ மனைகள் கருச்சிதைவு செய்ய அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளன. கருச்சிதைவு செய்யும் முறையில் 112 மருத்துவர்களுக்குத் தனிப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. 1972—73-ஆம் ஆண்டு முதல் 1975—76-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை ஏறக்குறைய 34,000 தாய்மார்கள் சட்டப்பூர்வமான கருச்சிதைவு செய்து கொண்டுள்ளனர். தாய்மார்கள் நலங்காக்கும் இத்திட்டத்துக்குத் தமிழகத்தில் நல்ல வரவேற்பும் அதற்கேற்ற சாதனையும் இருந்து வருகிறது.

இதர மாநிலங்களைக் காட்டிலும் இத்திட்டத்தில் மகாராஷ்டிரத்துக்கு ஒப்பத் தமிழ் நாடும் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. இத்திட்ட நிறைவேற்றத்துக்கானச் செலவு முழுவதையும் தமிழக அரசு ஏற்று நடத்துகிறது.

''சிறு குடும்ப நெறி'', எற்கச் சொல்லும் குடும்ப நலத்திட்டத்தின் கீழ், தாய்—சேய் நலங்காக்கும் பணிகளும் அக்கறையோடு ஆற்றப்படுகின்றன. கக்குவான், தொண்டை அடைப்பான், இசிவு நோய் போன்றவை குழந்தைகளுக்கு வராத வண்ணம் இத்திட்டத்தின் கீழ் முத்தடுப்பு ஊசிகள் இலவசமாகப் போடப்படுகின்றன. கருவுற்றிருக்கும் தாய்மார்களுக்கும் இசிவு நோய் வராமல் தடுப்பு ஊசி போடப்படுகிறது. ஊட்டச் சத்துப் பற்றுக்குறை காரணமாக ஏற்படும் இரத்த சோகை நோயைத் தவிர்க்க இரும்பு சத்து மாத்திரைகள் முதலியன தாய்மார்களுக்கும் — குழந்தைகளுக்கும் வழங்கப்படுகின்றன. கண் பார்வை இழப்பினின்றும் சிறுவர்களைப் பாதுகாக்க வைட்டமின் 'ஏ' சத்து மருந்து கொடுக்கப்படுகிறது.

மாணவ மாணவிகளுக்கான மக்கள் தொகையியல் கல்வி அளிப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. பள்ளித் தலைமை ஆசிரியர்கள், பயிற்சிப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் ஆகியோருக்கான மக்கள் தொகையியல் கல்விக் கருத்தரங்குகள், மாவட்டந்தோறும்நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர்களுக்கிடையே இத்திட்டத்திற்கு ஆக்கந் தேட வேண்டும் என்பதற்காக, தொழில் நிருவாகங்கள் தங்கள் தங்கள் தொழிலாளர்களின் நன்மையைக் கருதி, அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் ஆண் தொழிலாளிக்கு ரூ. 200-ஐயும், பெண் தொழிலாளிக்கு ரூ. 400-ஐயும், அரசு வழங்கும் ஈட்டுத் தொகை ரூ. 60 உடன் கூட ஊக்கத் தொகையாக வழங்கி ஊக்குவிக்கலாம் என தமிழகத்தில் உள்ள தொழிற்சாலை நிருவாகத்தினருக்கு தமிழ்நாடு அரசு வேண்டுகோள் விடுத்தது. இன்று பல தொழிற்சாலைகள் அப்படிப்பட்ட ஊக்கத்தொகை அளித்து வருகின்றன.

குடும்ப நலத்திட்டத்தின் பல்வேறு கூறுகளிலும் சரியான — விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் தமிழ் நாட்டில் பிறப்பு விகிதம் வெகு

கோவை சேரன் போக்குவரத்துக் கழகம் நடத்திய உலக மக்கள் தொகை ஆண்டு விழா நிகழ்ச்சியில் ஒரு காட்சி.

வாகக் குறைந்திருக்கிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் (1978—79) 1,000-க்கு 30 என்ற அளவுக்கு இந்தியாவில் பிறப்பு விகிதத்தைக் குறைக்க வேண்டுமென்பது இந்திய அரசின் நோக்கமாகும். ஆனால் 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படியே தமிழகத்தின் பிறப்பு விகிதம் 1,000-க்கு 30.7 தான்! அதே ஆண்டுக் கணக்குப்படி இந்தியாவின் பிறப்பு விகிதம் 1,000-க்கு 37.6 ஆகும். அனைத்திந்திய சராசரி பிறப்பு விகிதத்தைவிட தமிழ் நாடு எந்த அளவு குறைவான பிறப்பு விகிதத்தைப் பெற்றிருந்தது என்பது இதனால் விளங்கும்.

இன்றைய நிலையில் (1975-ல்) தமிழ் நாட்டின் பிறப்பு விகிதம் 1,000-க்கு 26.5 என்று மதிப்பிடப் பட்டுள்ளது. இதர மாநிலங்களில் பிறப்பு விகிதம் இன்று 1,000-க்கு 32 முதல் 35 வரை இருக்க, தமிழகம் பிறப்பு விகிதத்தை 28.5 எனக் குறைத்திருப்பது மாபெரும் சாதனையாகும்.

அறுவைச் சிகிச்சை எண்ணிக்கையில் தமிழகம் இந்தியாவில் மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது என்பது ஒருபுறமிருக்க, மிக முக்கியமான அம்சமாகிய பிறப்பு விகிதக் குறிப்பில், இந்தியாவில் தமிழகம் தலையாய இடத்தைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். சீரான மக்கள் தொகையை நிலை நிறுத்தும் பாதையை நோக்கி வெற்றி நடைபோடுகிறது தமிழ்நாடு என்பதற்கு இது நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.

அண்மைக் காலங்களில் மகாராட்டிரம், அரியானா போன்ற மாநிலங்கள் அறுவைச் சிகிச்சை எண்ணிக்கையில் மிஞ்சியவையாக கூறப்பட்டாலும், தமிழகம் போல் பிறப்பு விகிதத்தைக் கணிசமான அளவு குறைக்காத காரணத்தால், அம்மாநிலங்களுக்கான நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை (பெருகி வந்துள்ள மக்கள் தொகை அடிப்படையில்) கூடுதலாக்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருப்பது கூர்ந்து நோக்கத் தக்கது. மகாராட்டிரத்திலும், அரியானாவிலும் 1967-ஆம் ஆண்டுத் தேர்தலின் போது இருந்த சட்ட மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை முறையே 270, 81 ஆகும். அவை வரும் தேர்தலில் முறையே 288 ஆகவும், 90 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளன. அதேபோல், 1967-ல் அம்மாநிலங்களுக்கென இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை முறையே 45, 9 என்பனவாகும். வரும் தேர்தலில் அம்மாநிலங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை முறையே 48,10 என உயர்த்தப் பட்டிருக்கின்றன.

ஆனால் 1967-ஆம் ஆண்டுத் தேர்தலின்போது தமிழகத்தில் இருந்த சட்ட மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையான 234-ம், நாடாளு மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையான 39-ம், கூடுதலாகாது, குறையாது வரும் தேர்தலிலும் அப்படியே இருக்கின்றன! இது ஒன்றே தமிழகம், குடும்ப நலத்திட்டச் செயலாக்கத்தில் இந்தியாவிலேயே மிகச் சிறப்பாகப் பணியாற்றி 'சீரான மக்கள் தொகையைப்' (Stationary Population) பெற்று இலங்குகிறது என்பதற்கு மிகச் சிறந்த சான்றாகும்!

எனவே குடும்ப நலத்திட்டம் பிற மாநிலங்களைக் காட்டிலும் பல மடங்குச் சிறப்பாகவும், செம்மையாகவும், முனைப்போடும், திட்டத்தின் அடிப்படைத் தத்துவத்தை நிறைவேற்றும் வகையிலும் தமிழகத்தில் செயல்பட்டு வருகிறது என்பது வெள்ளிடைமலை!

போக்குவரத்துக் கழகங்கள் ஆற்றும் பொன்னான பணிகள்

ஒரு செயலை விரைந்து சென்று முடிப்பதற்கும், சுற்றுலா சென்று சுவையான அனுபவங்களைப் பெறுவதற்கும், ஏன் பண்டமாற்று, கடிதத் தொடர்பு முதலானவற்றுக்கும் பேருந்துகள் நமக்குப் பெரிதும் பயன்படுகின்றன. அன்றாட வாழ்க்கையில் பேருந்துகள் மிக மிக இன்றியமையாத சாதனமாக இருந்து வருவதை நாமறிவோம்.



தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டின் எல்லா வழித் தடங்களிலும் பேருந்துகள் போக்குவரத்துக்கு நிறைய வசதிகளைச் செய்து அதன் மூலம் பயணிகள் இனிய பயணம் மேற்கொள்வதற்கு வழி வகுத்திருக்கின்றது.

மக்கள் நலனைக் கருத்திற் கொண்டு, பேருந்துகளை நாட்டுடைமையாக்கும் திட்டத்தின் கீழ் இன்று தமிழ்நாட்டில் மற்ற மாவட்டங்களில் போக்குவரத்துக் கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இக்கழகங்கள் ஆற்றிவரும் பொன்னான பணிகள் பற்றிய தகவல்கள் இங்கே இடம் பெறுகின்றன.

பல்லவன் போக்குவரத்துக் கழகம்

உணவு, உடை போன்று இன்றியமையாததாக போக்குவரத்தும் இன்றைய வாழ்க்கையில் முக்கிய தேவையாக உள்ளது. பெரும்பான்மையான மக்கள் பேருந்துகளில்தான் தங்கள் இல்லத்திலிருந்து அலுவலகம், கல்லூரி, பள்ளி, மற்றும் பொழுது போக்கு இடங்கள் இவைகளுக்குச் செல்கின்றனர். அவர்கள் குறைந்த செலவில் விரைவாகவும், பத்திரமாகவும் செல்ல திறமையான போக்குவரத்தைச் செயல்படுத்த தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களை 1972-ல் ஏற்படுத்தியது. அதன்படி சென்னை நகரிலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் பேருந்துகளை இயக்கி மக்களின் தேவையைத் திருப்திகரமாக நிறைவேற்றும் பொறுப்பு பல்லவன் போக்குவரத்துக்கழகத்திற்கு தரப்பட்டது.

1,298 பேருந்துகளுடன் துவங்கிய இக்கழகம் 1,772 பேருந்துகளை இன்று கொண்டுள்ளது.

	பேருந்துகள்
சனவரி 1972 ...	1,298
சனவரி 1973 ...	1,365
சனவரி 1974 ...	1,397
சனவரி 1975 ...	1,618
செப்டம்பர் 1975	1,772

செப்டம்பர் 15-ஆம் தேதியிலிருந்து பல்லவன் போக்குவரத்துக் கழகத்துடன் மாவட்டங்களுக்குச் செல்லும் *துரித வண்டிகள் இயங்கும் பொறுப்பும் தரப்பட்டு, மூன்று பிரிவுகளாக இக்கழகம் பிரிக்கப்பட்டுள்ளது. அதன்படி அவை (1) பெருநகர்ப் போக்குவரத்துப் பிரிவு, (2) மாவட்டப் போக்குவரத்துப் பிரிவு, (3) துரிதப் பிரிவு. இவை தனித்தனி நிர்வாக இயக்குநரின்கீழ் இயங்குகின்றன.

சனவரி 1972-இல் 295 வழித் தடங்களில் பேருந்துகள் இயங்கியது. பல புதிய குடியிருப்புகள் பெரு நகரில் தோன்றுவதாலும்,

வெற்றியை நோக்கி....!

நாளுக்குநாள்
நம்முடைய வாழ்க்கைக்கு
அரசு அளிக்கும்
பாதுகாப்புகள் ஏராளம்

அரசு அலுவலர்களுக்கு
குடும்பப் பாதுகாப்புத் திட்டம்
அதனைத் தொடர்ந்து
சமுதாயத்திலுள்ள அனைவரும்
பயனடையும் வகையில்
சமூகப் பாதுகாப்புத் திட்டம்!

இப்படி அளிக்கப்படும்
பாதுகாப்புகளைப் போன்று
நமக்கு நாமே
உருவாக்கிக் கொள்ளும்
பாதுகாப்புத் திட்டம்
குடும்பநலத் திட்டம்!

எல்லாரும்
இன்புற்றிருக்கச்
செயல்படுத்தும்
திட்டங்கள்
வெற்றி பெற்றிட
வலுமிக்க
அடித்தளம் அமைய

உதவுவதே
அளவான குடும்பம்.

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!

— குடும்பநலத்துறை,
தமிழ்நாடு அரசு.

கிராமங்களுக்குப் போக்குவரத்து வசதியினைப் பெருக்குவதற்காகவும் வழித் தடங்களும் அவ்வப்போது அதிகப்படுத்தப்படுகின்றது. நகர்ப் புறங்களில் 4 ஆண்டுகளில் 37 புதிய தடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் 295 வழித் தடங்கள் 366 ஆகப் பெருகியுள்ளது. பேருந்துகளின் ஓட்டங்களும் 18,701-லிருந்து 22,869 ஆகப் பெருகியுள்ளது.

இவ்வாறு எண்ணிக்கைகள் உயர்ந்தது மட்டுமல்ல, இவை இயங்குவதின் திறமையும் உயர்ந்துள்ளது. 1972 சனவரியில் சராசரியாக 3,775 ஓட்டங்கள் தினம் பழுதடைதல், ஓட்டத்தின் நடுவில் இயந்திரக் கோளாறினால் நின்று விடுதல் (Break down), ஓட்டுநர், நடத்துநர் வராததால் ஓடாதது என்ற பல காரணங்களினால் சரியாகாமல் இருந்த நிலை மாறி சனவரி '75-இல் 1,327 ஆகக் குறைந்துவிட்டது. அதேபோல் ஓட்டத்தின் நடுவில் நிற்கும் பேருந்துகளின் எண்ணிக்கை ஆரம்பத்தில் நாள் ஒன்றுக்கு 373 ஆக இருந்து சனவரி 75-ல் 157 ஆகக் குறைந்துவிட்டது.

பேருந்துகளின் எண்ணிக்கையும், ஓட்டங்களின் எண்ணிக்கையும் நிறைவு செய்யப்படும் ஓட்டங்களின் எண்ணிக்கையும் அதிகரித்ததாலும், பெருநகரில் மட்டும் தினம் 10.8 இலட்சம் மக்கள் சென்று கொண்டிருந்ததும் 16.7 இலட்சமாகப் பெருகி உள்ளது.

இவைகள் அனைத்தின் மூலம் சனவரி, 72-இல் தினம் 2.57 இலட்சம் இருந்த வருமானம் 5.64 இலட்சமாக சனவரி 75-இல் அதிகரித்துள்ளது.

இத்தகைய முன்னேற்றங்கள் அனைத்திற்கும் முக்கியமான காரணம் வசூல் போனஸ் என்ற திட்டம். இத்திட்டம் பரிசோதனையாக 15—4—73-லிருந்து 1 பெருநகர்ப் பணிமனையிலும், 1 மாவட்டப்பணிமனையிலும் அமல்படுத்தப்பட்டு அதன் பெரும் பலனைக் கண்டு அனைத்துப் பணிமனைகளிலும் 1—6—73லிருந்து அமல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி பேருந்துகளில் கிடைக்கும் தின வருமானத்தில் 5 சதம் பெருநகரிலும், 3 சதம் மாவட்டத்திலும் ஓட்டுனருக்கும், நடத்துனருக்கும் தரப்படுகின்றது. பணிமனையில் பணி புரியும் தொழில் நுட்பத் தொழிலாளிகளும் அவர்கள் பணிமனைக்கு வேலைக்கு வரும் நாட்களுக்கு ஏற்ப வசூலின் ஓர் அளவு தரப்படுகின்றது. இது வசூல் போனஸ் திட்டத்தின் மூலம் ஓட்டுனர், நடத்துனருக்கு நாட்படி கொடுக்கப்பட வேண்டிய படிக்கு மேல் வரும் வருமானத்தில் ஓட்டுகின்ற பேருந்துகளின் சதவீதத்திற்கு ஏற்ப பங்கிடப்பட்டு தரப்படுகின்றது.

இந்த வசூல் போனஸ் ஊக்குவிக்கும் திட்டம் வசூலை அதிகரித்தும், பயணிகள் துரிதமாகச்செல்ல உதவியது மட்டுமல்ல தொழிலாளர்கள் அனைவருக்கும் ஒற்றுமை உணர்ச்சியையும், ஆக்க உணர்வையும், பயணிகளின் தேவைக்கேற்ப வழித்தடங்களை இயக்க ஆலோசனைகளை அளிக்கும் ஆர்வத்தையும் அளித்தது. இதனால் பயணிகளின் குறைபாடுகளும் குறைந்தன.

பல்லவன் போக்குவரத்துக் கழகம் (மாவட்டங்களுக்கிடையில்) மூன்று புதிய வழித்தடங்களில் பேருந்துகளை விட ஏற்பாடு செய்துள்ளது. செங்கற்பட்டு, காஞ்சீபுரம், அரக்கோணம், திருத்தணி, நகரி, புத்தூர் வழியாக மாமல்லபுரத்துக்கும், திருப்பதிக்கும் 212எச். என்ற பேருந்து செல்லும்.

பறங்கிமலை, திருவள்ளூர், திருத்தணி வழியாகச் சென்னைக்கும் நகரிக்கும் 97என். என்ற பேருந்து செல்லும்.

புழல், ஊத்துக்கோட்டை நாகலாபுரம் வழியாகச் சென்னைக்கும், நகரிக்கும் 123—ஏ என்ற பேருந்து செல்லும்.

விமானங்களின் மூலம் வரும் பயணிகள் நகருக்கு வந்து சேர வசதியுள்ள தனிப் பேருந்துகள் விடப்படுகின்றன. இவை முக்கியமான ஓட்டல்களில் பயணிகளை இறக்கியும், ஏற்றியும் செல்கின்றன. இதேபோல் கப்பல்களில் வரும் பயணிகளின் வசதிக்காகத் துறைமுகங்களிலிருந்து புகைவண்டி நிலையங்களுக்கும், பாரிமுனை, அண்ணாசாலை போன்ற இடங்களுக்குத் தனிப் பேருந்துகள் விடப்படுகின்றன.

தொடர்கதை அடுத்த இதழில் இடம்பெறும்.

எழும்பூர் புகைவண்டி நிலையத்திற்கும், சென்ட்ரல் புகை வண்டி நிலையத்திற்கும் தனிப் பேருந்துகள் விடப்படுகின்றன. விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் திருவேற்காட்டிற்குத் தனிப் பேருந்துகள் விடப்படுகின்றன. மகளிர்க்காக மட்டும் நெரிசல் நேரங்களில் பல வழித் தடங்களிலும் பேருந்துகள் இயக்கப்படுகின்றது. மாணவர்களுக்கு அவர்தம் இல்லத்திலிருந்து கல்லூரி, பள்ளி செல்ல பாதிக் கட்டணச் சலுகை தரப்படுகிறது.

பயணிகளின் தேவைகளை அறிந்து கொள்வதற்காகவும், சாலைகளிலும், பேருந்துகளிலும் உள்ள நெரிசல்களை அறிந்து அதற்கேற்ப பேருந்துகள் அதிகரிக்க ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகின்றன. இயந்திரக் கோளாறினால் தடைபட்டு நிற்கும் பேருந்துகளை விரைவில் இயக்க முக்கிய இடங்களில் மெக்கானிக்குகள் கருவிகளுடன் தொலைபேசி உள்ள வாகனத்துடன் வைக்கப்பட்டுள்ளனர். பேருந்துகளைப் பராமரிக்கவும், வீண் ஓட்டத்தைக் குறைக்கவும் ஆங்காங்கு பணிமனைகள் அமைக்கப்படுகின்றன. பெருநகரில் 12 இடங்களில் பணிமனைகள் உள்ளன. போக்குவரத்து இயங்கும் முறையையும், மேலும் வளரச் செய்யவும் புள்ளி விவரங்கள் அன்றுடம் சேகரிக்கப்பட்டு வருகிறது. விபத்துக்களைத் தடுப்பதற்காக ஓட்டுனர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் கவனிக்க பொது மக்கள் நல்லுறவுப் பிரிவு செயல்படுகிறது.

தொழிலாளர்களின் நலனிலும், முன்னேற்றத்திலும் இக்கழகம் முன்னோடியாக உள்ளது. தொழிலாளர்கள் மேலாண்மையில் பங்குபெறும் திட்டம் போக்குவரத்துத் துறையில்தான் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையாக 1974—75-இல் முதலீட்டில் தொழிலாளர்கள் பங்கு எடுத்துள்ளனர். 1974-லிருந்து தொழிலாளர்கள் குடும்ப நலத்திட்டமும் அமல்படுத்தப்பட்டுள்ளது. இறந்த தொழிலாளர்கள் குடும்பத்திற்கு 5,000 ரூபாய் கொடுக்கப்படுகின்றது. 3.6 இலட்சம் ரூபாய் 74—75 ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்டு உள்ளது.

தொழிலாளர் நலனில் முக்கியமான மற்றொரு மகத்தான சாதனை இக்கழகத்தில் பாட்டாளிகளின் நாளான மே 1-லிருந்து அமல்படுத்தப்பட்ட நீண்ட

காலத் தொடர் சம்பள உயர்வுத் திட்டம். இத்திட்டத்தின்கீழ் பதவி உயர்விற்காகக் காத்திராமலேயே அனுபவத்தையும் ஆற்றலையும் கொண்டு சம்பள உயர்வு பெற முடியும்.

பொதுமக்களின் போற்றுதலை இம் முன்னேற்றங்களினால் இப் போக்குவரத்துக் கழகம் பெற்று உள்ளமை, இக் கழகத்தில் பணி புரியும் அனைவருக்கும் மன நிறைவைத் தந்துள்ளது. மேலும் நிறம்பட பொதுமக்கள் முழுமையாக, மன நிறைவு அடையப்பணியாற்றுவதே இக்கழகத்தின் குறிக்கோளாகும்.

சோழன் போக்குவரத்துக் கழகம்:

1971-ஆம் ஆண்டு தமிழக அரசின் 37-ம் சட்டப்படி 19—6—1971 அன்று 50-க்கும் மேற்பட்ட பேருந்து பர்மிட்டுகள் வைத்திருந்த தனியார் நிறுவனங்கள் தேசிய உடைமையாக்கப்பட்டன. அதன்படி ஸ்ரீ ராம விலாஸ் சர்வீஸ் லிமிடெட், ராமன் அண்ட் ராமன் பிரைவேட் லிமிடெட் ஆகிய தனியார் பேருந்து உடைமைகள் தேசிய உடைமையாக்கப்பட்டுச் சோழன் போக்குவரத்துக் கழகத்திற்கு மாற்றப்பட்டன.

இக்கழகம் 19—2—1972 அன்று நிறுவப்பட்டு 1—3—72 முதல் இயங்கத் தொடங்கிற்று. ஸ்ரீ ராம விலாஸ் சர்வீஸ் லிட்., நிறுவனத்திலிருந்து 65 பேருந்துகளும் இக்கழகத்திற்குக் கிடைத்தன. இப்பேருந்துகளுக்காக மேற்படி நிறுவனங்களுக்கு முறையே ரூபாய் 14,04,946-ம், ரூபாய் 12,80,000-ம் தமிழக அரசு ஈட்டுத் தொகையாக அளித்தது.

இக்கழகம் ரூ. 2,100 மூலதனத்துடன் கீழ்க்காணும் குறிக்கோளுடன் துவக்கப்பட்டது:

1. தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் போதுமான, தரமான, பொருளாதார ரீதியில் நன்கு இயங்கக்கூடிய சாலைப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துதல்.

2. இப்போதுத் தொழில் நிறுவனத்தினை தீர்க்கமான வியாபார ரீதியில் பொது உபயோகத்திற்கு இடையூறின்றி நடத்துதல்.

3. எல்லா விதச் செலவுகள், வட்டி, தேய்மானம், வரி இவை போக முதலீட்டின் மேல் 6 சதம் வருமானம் ஈட்டுதல்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு 38 பேருந்துகள் மேற்படி கழகத்திற்கு மாற்றப்பட்டன. அவ்வாறே அண்ணா போக்குவரத்துக் கழகத்திற்கு 3 பேருந்துகளும், சேரன் போக்குவரத்துக் கழகத்திற்கு 3 பேருந்துகளும் மாற்றப்பட்டன. 17 பேருந்துகள் உதவி வண்டிகளாக மாற்றப்பட்டன. 51 வண்டிகள் ஒதுக்கப்பட்டன.

இக்கழகத்தில் உள்ள வண்டிகளில் 27 சதம் 10 ஆண்டுகளுக்கு மேல் பழையன; 2 சதம் 20 ஆண்டுகளாக உள்ளவை.

1971-ஆம் ஆண்டு தேசியமயமாக்கப்பட்ட பேருந்து நிறுவனங்களிலிருந்து அதில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களையும் கழகம் ஏற்றுக் கொள்ள வேண்டியதிருந்தது. அதன்படி எஸ்.ஆர்.வி.எஸ். நிறுவனத்திலிருந்து 997 பேரும், ராமன் அண்ட் ராமன் நிறுவனத்திலிருந்து 497 பேரும், எஸ்.வி.பி.எஸ். நிறுவனத்திலிருந்து சுமார் 500 பேரும் இக்கழகத்தில் உறுதியாக எடுத்துக் கொள்ளப்பட்டனர்.

சோழன் போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இம் மாவட்டத்திற்கு இரண்டு பெரிய பேருந்து நிறுவனங்களாகிய ஸ்ரீ சத்தி விலாஸ் பஸ் சர்வீஸ், சுவாமி மோட்டார் டிரான்ஸ் போர்ட் மூடப்பட்ட நிலையில் இருந்ததனால், அவர்கள் ஏற்று நடத்தி வந்த வழித் தடங்களில் பேருந்துகளை ஓட்டும் பொறுப்பு இக்கழகத்தைச் சேர்ந்தது. மேலும் தொடர்ந்து இந்நிறுவனங்களில் பணி புரிந்து வந்த தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் திடீரென்று வேலையின்றி தவித்ததனால் அவர்களது குடும்பத் துயர் தணிப்புப் பணியில் இக்கழகத்தை ஈடுபடுமாறு மாவட்ட ஆட்சியாளர் வேண்டிக் கொண்டதற்கு இணங்க சுமார் 300 எஸ்.எம்.டி. தொழிலாளர்கள் இக்கழகத்தில் வேலை வாய்ப்புப் பெற்றனர். கழகத்தில் வேலை வாய்ப்புப்பெறுவோர் வேலைத் தேடித் தரும் நிலையம் மூலம் நேர்முகத் தேர்வுக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

வேலை வாய்ப்புப் பெற்றவர்களின் எண்ணிக்கை

1971—72	...	1,654
1972—73	...	2,120
1973—74	...	2,988
1974—75	...	3,830

இக்கழகம் நூதனமான தொடர் ஊதியத் திட்டத்தை அமல்படுத்தியுள்ளது. இத்திட்டம் ஒவ்வொரு தொழிலாளிக்கும் தொடர்ந்து ஊதிய உயர்வை அவர்கள் ஓய்வு பெறும் நாள் வரை அளிப்பதோடு, ஒருவரின் ஊதிய முன்னேற்றத்திற்கு மற்ற தகுதிகள் முட்டுக்கட்டையாகாமல் பாதுகாக்கிறது. இத்திட்டத்தின்கீழ் குறைந்த ஊதிய அளவு அடிப்படைச் சம்பளம் ரூபாய் 160ம், பஞ்சப்படி ரூ. 75ம், வீட்டு வாடகைப்படி அடிப்படைச் சம்பளத்தில் 10 அல்லது 15 சத விதமாகவும், உடல்நலப்படி அடிப்படைச் சம்பளத்தில் 4 சத விதமாகவும் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்தினால் கழகத்திற்கு 24 இலட்ச ரூபாய் அதிகமாகச் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக அரசின் மற்றுமொரு நவீன திட்டமான ''மூலதனத்தில் தொழிலாளருக்குப் பங்கின்'' கீழ் இக்கழகம் அங்கீகரிக்கப்பட்ட தொழிற் சங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டு 1—4—1974 முதல் மேற்படி திட்டத்தை அமலாக்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மாத வருவாய் ரூபாய் 500க்-கருள் உள்ளவர்கள் பிரதி மாதமும் ரூபாய் 10 செலுத்தி ரூபாய் 500-க்கான மாற்றத் தக்க கடன் ஈட்டுப் பங்கைப் பெறுகின்றார்கள். அவ்வாறே ரூபாய் 500க்கு-மேல் மாத ஊதியம் பெறுபவர்கள் மாதம் ரூபாய் 20-ஐச் செலுத்தி ரூபாய் 1,000க்கான மாற்றத் தக்க கடன் ஈட்டுப் பங்கைப் பெறுகிறார்கள்.

கழகத்தில் ஓட்டுநர்கள், நடத்துநர்கள் வசூலில் 3 சதம் போனசாக தினமும் தங்களின் வசூலைக் கழகத்தில் சேர்க்கும்போது தங்கள் நாட்படியுடன் சேர்த்துப் பெறுகிறார்கள். அவ்வாறே செலவினங்களைக் குறைத்துச் சேமிக்கப்படும் சேமிப்பைக் கழகமும், தொழிலாளர்களும் பங்கு ஏற்பதும் பற்றிய மற்றுமொரு ஊக்க போனஸ் திட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

இக்கழகம் கும்பகோணம், மாயூரம், பொறையாறு, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருச்சி ஆகிய இடங்களில் சிற்றுண்டிச் சாலைகளை நடத்தி வருகிறது. உணவுப் பொருட்கள் 50 சத விகித விலையில் தொழிலாளருக்கு வழங்கப்பட்டு மீதி 50 சதவிகித விலையைக் கழகமே ஏற்கிறது.

சோழன் போக்குவரத்துக் கழகம் குடும்ப நலத் திட்டத்தைப் பெருமளவில் ஊக்குவித்து கடந்த ஜூன் '74 முதல் டிசம்பர் '74 வரை அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட 522 தொழிலாளர்களுக்குத் தலா ரூபாய் 500 வழங்கியுள்ளது.

கழகத்தில் பணிபுரியும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் முறையாகக் கூட்டு இன்ஷூரன்ஸ் செய்யப்பட்டுள்ளனர். இதற்கான இன்ஷூரன்ஸ் பிரிமியம் தொகையில் 67 சதத்தைக் கழகமே ஏற்றுக் கொள்கிறது. இத்திட்டத்தின் கீழ் வேலையில் இருக்கும்போது இறக்கும் தொழிலாளியின் குடும்பத்திற்கு ரூ. 10,000 அளிக்கப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 22 குடும்பங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு தொழிலாளியும் ஆண்டிற்கு இரு சீருடைகளும், ஒரு இணை காலணியும் இலவசமாகப் பெறுகிறார்கள். மூக்குக் கண்ணாடி அணிவதற்கான செலவை முன் பணமாகவும், பண்டிகை முன் பணமும் தொழிலாளிகளுக்கு அளிக்கப்பட்டு சுலபத் தவணைகளில் இப் பணம் மாதச் சம்பளத்தில் பிடிக்கப்படுகிறது. இக் கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள 5 மருத்துவமனைகளில் பட்டதாரி மருத்துவர்கள் மூலம் தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தினர்களுக்கும் இலவச மருத்துவ உதவி மருந்துகளுடன் அளிக்கப்படுகிறது.

தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்துடன் உல்லாசப் பயணம் செல்வதற்காக ஆண்டிற்கொரு முறை கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது.

தொழிலாளர்கள் தொழிற்சாலைக்குச் சென்று வீடு திரும்ப 10 கிலோ மீட்டர் வரை இலவசமாகப் பேருந்துகளில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சோழன் போக்குவரத்துக் கழகம், அரசு சாலைப் போக்குவரத்துக் கழகச் சங்கத்தில் ஓர் உறுப்பினராக உள்ளது. இச் சங்கம் அகில இந்திய ரீதியில் பேருந்துகளுக்காக உதிரிச் சாமான்களுக்கும் மற்ற பொருட்களுக்கும் நேரடியாக ஒப்பந்தப் புள்ளி அறிவித்து மேற்படி போக்குவரத்துக் கழகங்களுக்காக விலை நிர்ணயம் செய்கிறது.

கழகம் இம்மாதிரி நிர்ணயிக்கப்பட்ட 'ரேட் காண்ட்ராக்டர்' களிடமிருந்தும் தயாரிப்பாளர்களிடமிருந்தும் உதிரிச் சாமான்களை வாங்குகிறது. சாமான்கள் வாங்கும்போது கீழ்க்கண்ட முறைகள் கையாளப்படுகின்றது:

1. ஒவ்வொரு சாமானுக்கான ஆண்டுத் தேவையும், நேரமும் நிர்ணயிக்கப்படுகிறது.

2. ஒவ்வொரு சாமானும் அதன் விலைக்கேற்பவும், உபயோகத்திற்கேற்பவும் தரம் பிரிக்கப்படுகிறது.

3. ஒவ்வொரு சாமானுக்காகக் குறைந்த அளவு இருப்பு நிர்ணயிக்கப்படுகிறது.

4. ஏ பி சி ஈ ஒ க்யூ ஆகிய முறைகளின்படி தேவையான அளவும் நேரமும் நிர்ணயிக்கப்படுகின்றன. இவை நிதி நிலைமைக்கேற்பப் பிரித்து அளவிடப்படுகின்றன.

5. ஆண்டிற்கான உதிரிச் சாமான்கள் தயாரிப்பாளர்களிடமிருந்தும் 'ரேட் காண்டிராக்டர்' களிடமிருந்தும் மேற்படி முறையில் வாங்கப்படுகின்றன.

6. டி.வி.எஸ்., சிம்சன், ஏ.ஆர்.ஏ.எஸ்., ராமன் அண்ட் ராமன், வி.எஸ்.டி., அப்பர் இந்தியா முதலிய டீலர்கள் — நிறுவனங்களிலிருந்தும் சாமான்கள் வாங்கப்படுகின்றன. இவர்கள் சில கடன் வசதிகளைத் தருகிறார்கள். சுமார் 40 சதம் ரேட் காண்டிராக்டர்களிடமிருந்தும், 40 சதம் தொழிற்சாலைகளிலிருந்தும், 18 சதம் டீலர்கள்—விநியோகஸ்தர்களிடமிருந்தும் மீதி 2 சதம் உள்ளூர்க் கடைகளிலிருந்தும் வாங்கப்படுகின்றது.

இன்றைய நிலையில் கழகத்தில் சுமார் ரூ. 45 இலட்சம் உதிரிச் சாமான்கள் இருக்கின்றன. இது ஒரு வண்டிக்குச் சுமார் ரூ. 9,000 அளவில் இருக்கிறது. இத்தொகை அகில இந்திய ரீதியில் நமக்குச் சாதகமாகவே உள்ளது.

மோட்டார் வாகனச் சட்டப்படி ஆண்டிற்கு இரு முறை பேருந்துகள் செப்பனிடப்பட்டுத் தகுதிச் சான்றிதழ் பெறப்பட வேண்டும். முக்கிய பெரிய உறுப்புகள் அல்லாது நடைபெறும் செப்பனிடும் பணிகளுக்கு ஒரு வண்டிகளுக்கு அரையாண்டிற்குச் சுமார் ரூ. 4,000 செலவாகிறது.

கழகத்தின் மத்திய பணிமனையில் மிகவும் நூதன, திறமையும் சக்தியும் மிகுந்த, ஹெச்.எம்.டி. கிராங்க்சாப்ட் கிரைண்டர், ஹெச். எம். டி. சர்பேஸ் கிரைண்டர், கடைசல் கருவிகள் முதலிய இயந்திரங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. இங்கு திறமை மிகுந்த தொழிலாளர்களால் இஞ்சின்கள், கியர்பாக்ஸ், ஸ்டியரிங் பாக்ஸ், ஃப்ரண்ட் ஆக்சில், ரியர் ஆக்சில் முதலியனபழுது பார்க்கப்படுகின்றன. அதேபோல் மின்சாரக் கருவிகளும் மத்தியத் தொழிற்சாலையில் செப்பனிடப்படுகின்றன.

அரையாண்டு செப்பனிடும் பணிகள் பல்வேறு கிளை அலுவலகங்களிலேயே நடைபெறுவதால் வேலைகள் துரிதமாகின்றது. 'பஸ் பாடி' வேலைகள் கும்பகோணத்திலும், பொறையாறிலும் நடைபெறுகின்றன.

தினசரி, வாராந்திர, மாதாந்திர முறை பழுதுபார்க்கும் பணிகள் கிளைகளிலேயே பட்டம் பெற்ற பொறியாளர்கள், தகுதி வாய்ந்த மேற்பார்வையாளர்கள், திறமை மிக்க தொழிலாளர்கள் மூலம் நடைபெறுகின்றது.

இக் கழகம் இம்மாதிரி சாதனங்களைப் பொருத்துவதற்காகவும் புதிய கட்டடங்களுக்காகவும் இதுவரை சுமார் ரூபாய் 70 இலட்சம் செலவிட்டிருக்கின்றது

இக்கழகத்தில் ஏழு விதமான வண்டிகள் இருப்பதும் சுமார் 27 சதம் வண்டிகள் 10 ஆண்டிற்கு மேற்பட்டதுமாக இருப்பதாலும் செப்பனிடும் பணிகளும், பராமரிப்புச் செலவுகளும் உதிரிகளின் இருப்பும் அதிகமாகின்றன. போக்குவரத்து வளர்ச்சிக்கு இப் பழைய பேருந்துகள் ஈடுகொடுப்பதில் சிரமம் ஏற்படுகின்றது.



தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட்,

நெ எக்ஸ். 406.

14, ரித்தர்டன் சாலே, வேப்பேரி, சென்னை600 007

தொலேபேசி : 30877, 30878 — தந்தி : ''ஹவுஸ்பாங்க்''

செயலாளர் : 33000 — தபால் பெட்டி : 486

தலேவர் : **திரு. பழனிவேல்ராஜன், பி.எஸ்.ஸி., பி.எல்., எம்.எல்.ஏ.,**

உப-தலேவர் : **திரு. பி. கஸ்தூரி பிள்ளை**

பொருளாளர் : **திரு. எஸ். பழனிசாமி, எம். ஏ.,**

அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம்	..	ரூ. 5 கோடி
செலுத்தப்பட்ட பங்கு மூலதனம்	..	ரூ. 2,87,07,425/-
பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை	..	ரூ. 22,06,17,581/-

இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்குப் புதிய வீடு கட்ட 15 வருட நீண்ட காலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன.

அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்சக் கடன் அளவு

புதிய வீடுகள் கட்டுவதற்கு	..	ரூ. 30,000/-
புதிய வீடுகள் கட்டுவதற்கு (கிராமிய கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம்)	..	ரூ. 10,000/-

பூ. க. பத்மநாபன், பி.ஏ., எச்.டி.சி.,
இணைப்பதிவாளர்—செயலாளர்.

சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை) எண் 151.
சேலம்-1.

தபால் பை எண். 171 — தொலேபேசி எண் : 2402

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி சேந்தமங்கலம், கொங்கணாபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளி பாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, பெத்தநாயக்கம் பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலேவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

சொந்த நிதி ரூ. 327 லட்சம். — நடைமுறை மூலதனம் 1711 லட்சம்

வட்டிவிகித அட்டவணை

கால் டெபாசிட்டுகள் :	ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்)	$3\frac{1}{4}$%
	ரூ. 10,000/-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்)	$3\frac{1}{2}$%
சீசன் டெபாசிட்டுகள் :	ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும்	
	15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும்	3%
	46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும்	$3\frac{1}{2}$%

பிக்செட் டெபாசிட்டுகள் : ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு :

1. 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் 6%
2. 6 மாதத்திற்கும் அதற்குமேல் 9 மாதத்திற்குள் $6\frac{1}{2}$%
3. 9 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் $7\frac{1}{2}$%
4. 12 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் $8\frac{1}{2}$%
5. 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் $9\frac{1}{2}$%
6. 61 மாதத்திற்கும் அதற்குமேலும் $10\frac{1}{2}$%

நடப்புக் கணக்கு $\frac{1}{2}$% — **சேமிப்புக் கணக்கு 6%**

ரூ. 5000/-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க.

தி. பாலசுந்தரம், பி.ஏ., துணைப் பதிவாளர், நிர்வாக அதிகாரி. — **பி. காசி, பி.எஸ்.சி., எச்.டி.சி.,** காரியதரிசி. — **எஸ். ஆறுமுகம்,** தலேவர்.



தமிழகத்திலேயே தஞ்சை மாவட்டத்தில்தான் அதிகமான கிராமங்கள் உள்ளன. இக் கிராமங்களை இணைக்கும் சாலேகள் மிகவும் குறுகலாகவும் ஆறுகளை ஒட்டிச் செல்வதாலும் வளைவுகள் அதிகமாக உள்ளன. இதனுல் அதிகமான பயணிகளை ஏற்றிச் செல்வதும், குறிப்பிட்ட வேகத்தில் செல்வதும் சிரமமாகின்றது. இதனுல் எரி பொருள் செலவும், டயர் செலவும் அதிகமாகின்றன.

கிராமங்களேயே முக்கியமாகக் கொண்ட தஞ்சை மாவட்டத்தில் போக்குவரத்தும் சமமாக இருப்பதில்லே. பருவ காலங்களில் போக்குவரத்து கிட்டத்தட்ட நின்றுவிடுகின்றது. ஆனுலும் பண்டிகைகளும், விழாக்களும் அதிகமாக உள்ளதால் ஓரளவுக்கு நிலேமை சமாளிக்கப்படுகின்றது. மேலும் நகரங்களில் உள்ள பயணிகள் போன்று கிராமப் பயணிகள் நேரத்தை மதித்துப் பயண முறையைக் கட்டாயப்படுத்திக் கொள்வதில்லே. அவர்கள் இது விஷயத்தில் தனிச் சுதந்தரத்தை அனுபவிக்கிருர்கள்.

இக்கழகம் ஆரம்பித்த காலம் முதல்படிப் படியாகத் தன்னுடை பணியினை மக்களுக்கு அதிகப்படுத்தியுள்ளது. கிட்டத்தட்ட 12,00 கிராமங்களுக்கு இக்கழகத்தின் பேருந்துகள் பயன்பட்டு வருவது கீழ்க்கண்ட அட்டவணை நன்கு விளக்கும் :

	1972	1975
மொத்த பேருந்துகள்	176	462
மொத்த பணி வண்டிகள்	150	403
நகர்ப்புறப் பேருந்துகள்	60	135
கிராமப்புறப் பேருந்துகள்	90	268
தினசரி நடை	1500	4500
தினசரி பயணிகள்	1.25 இலட்சம்	3.81 இலட்சம்

இக்கழகம் தன்னைச் சார்ந்து உள்ள சமூகத்திற்கான கடமையை நன்கு உணர்ந்துள்ளது. குடந்தையில் ''கண் மருத்துவ மனை'' கட்டுவதற்காக 1.5 இலட்ச ரூபாய் நன்கொடையாக அளித்துள்ளது.

தஞ்சையில் ''போக்குவரத்துப் பராமரிப்புக்கான திடல்கள்'' அமைப்பதற்காக 1 இலட்ச ரூபாய் அளித்துள்ளது.

''அங்கஹீனமுற்ருேரின் மறு வாழ்வு நலனுக்காக'' 1 இலட்ச ரூபாய் நன்கொடையாக அளித்துள்ளது.

தமிழக முதல்வரின் ''தமிழக வறட்சி நிவாரண நிதிக்காக'' 4,30,000 ரூபாய் வழங்கியுள்ளது.

''குடும்ப நல''த் திட்டத்திற்காக 2.66 இலட்ச ரூபாய் செலவழித்துள்ளது.

இக்கழகத் தொழிலாளர்களும் தமிழக முதல்வரின் 'கை ரிக்ஷா இழுப்போரின் மறுவாழ்வு நிதிக்காகவும், தமிழக வறட்சி நிவாரண நிதிக்காகவும்' ஒவ்வொரு நாள் சம்பளத்தை நிதியாக வழங்கியுள்ளதை இங்கே நாம் குறிப்பிட வேண்டும்.

மாணவர்களுக்கு 33 சத பயணச் சலுகை அளிக்கிறது இக் கழகம். மற்றப் போக்குவரத்து வசதி இல்லாத கிராமங்களை இணைப்பதற்காகச் சுமார் 100 பேருந்துகளை இயக்குகிறது. இதனுல் ஆண்டுக்குச் சுமார் 60 இலட்ச ரூபாய் செலவாகிறது.

இக்கழகம் ஆண்டுக்கு 50 புதிய பேருந்துகளை—25 பேருந்துகள் பழைய வண்டிகளை மாற்றுவதற்காகவும், 25 பேருந்துகள் புதிய தடங்களில் ஓட்டுவதற்காகவும் வாங்கத் தீர்மானித்துள்ளது. 50 சதவிகித வழித் தட நீளம் தேசிய நெடுஞ்சாலேயில் இருந்தால், அத் தடங்களை பர்மிட்டுகள் பரிசீலிக்கும்போது கழகமே ஏற்றுக் கொள்ளும். நகர்ப்புறப் பேருந்துகளை மேலும் வளரச் செய்யும் எண்ணம் தற்போது இல்லே. ஆனுலும், மோட்டார் வாகனச் சட்டம் 63 (சி) பிரிவின் கீழ் தேசிய மயமாக்கும் திட்டம் இக் கழகத்தின் தீவிர எண்ணத்தில் உள்ளது.

தரமான துணிகளைத் தயாரித்தளிக்கும்

நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பொரேஷன்
(தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி) லிட்

அளிக்கும்

என்டைஸ்

* சேலைகள்
* சட்டைத் துணிகள்
* குழந்தைகளுக்கான உடைகள்
* வேஷ்டிகள்
* லுங்கிகள்
* அலங்காரத் துணி வகைகள் மற்றும்
* ரெடிமேட் உடைகள்.

நாகரிகமானவை ▪ நீடித்துஉழைப்பவை ▪ சகாயமான விலைகளில் கிடைப்பவை.

தயாரிப்பவர்கள் : கோயமுத்தூர் ஸ்பின்னிங் & வீவிங் கம்பெனி
காளீஸ்வரர் மில்ஸ், கோயமுத்தூர் முருகன் மில்ஸ்
ஸ்ரீ சாரதா மில்ஸ், சோமசுந்தரம் மில்ஸ்

தந்தி : "கூப்ஸ்மில்" கரூர். தொலைபேசி : 370, 531, 351

திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட்

ஆலை : மலைக்கோவிலூர்—639109
கரூர் : : திருச்சி மாவட்டம்
அஞ்சல் பெட்டி எண் : 13

தலைவர்
திரு. எம். வைத்தியலிங்கம், I. A. S.,
மாவட்ட ஆட்சியாளர்.

நிர்வாக இயக்குநர்.
எம். ஏகாம்பரம்

அனுமதிக்கப்பட்ட கதிர்கள்	...	25020
நிறுவப்பட்ட கதிர்கள்	...	12840
இரட்டை நூல் கதிர்கள்	...	2400

தரமான, உயர்ந்த ரக 20 26 40 பாவு நூல்களும் 34 கோன் நூல்களும்,
2/17 என். எப். முறுக்கு நூல்களும் தயாரிக்கப்படுகின்றன.

*ஆலையை விரிவுபடுத்தவும், நவீனப்படுத்தவும் வேலை வாய்ப்பளிக்கவும்
பொதுமக்களிடமிருந்தும் கூட்டுறவு நிறுவனங்களிலிருந்தும்
பங்குகள் வரவேற்கப்படுகின்றன :*

◆— நூல்களுக்கும், பங்குகளுக்கும் விண்ணப்பிக்கவும் —◆

பாண்டியன் போக்குவரத்துக் கழகம் :

பெரிய போக்குவரத்து நிறுவனங்களிடமுள்ள பேருந்துகளையெல்லாம் தமிழ்நாடு அரசு நாட்டுடைமை ஆக்கியது. சிறந்த நிருவாகம் நடைபெற வேண்டும் என்பதற்காகப் பல்வேறு போக்குவரத்துக் கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளில் மதுரையில் அமைந்திருப்பது பாண்டியன் போக்குவரத்துக் கழகமாகும்.

பேருந்துகளை நாட்டுடைமை ஆக்கியதால் சாதாரண—நடுத்தர மக்களிடமிருந்து அரசு பாராட்டைப் பெறுகிறது. இத்திட்டம் அரசுக்கு வெற்றிகளைக் குவித்து வருகிறது. போக்குவரத்துக் கழகங்களில் சிறந்த நிர்வாகம் நடைபெறுகிறது. ஏராளமான வேலை வாய்ப்பும் கிடைக்கிறது. தனி மனிதனுக்குச் சென்று கொண்டிருந்த இலாபம் இன்று மக்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

நாட்டுடைமைத் திட்டம் தனி மனிதனிடத்தில் செல்வம் குவிவதைத் தடுக்கிறது. சமுதாயத்தில் பின்தங்கிய மக்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் பயன்படுகிறது. தொழிலாளியின் வேலைக்குப் பாதுகாப்பு—உழைப்புக்கேற்ற ஊதியம்—மருத்துவ உதவி இவை யாவும் கிடைக்கிறது. எனவே, நிருவாகம்—தொழிலாளியின் ஒத்துழைப்பு ஓங்கி நிற்கிறது; பணி சிறப்பாக நடைபெறுகிறது.

மதுரையிலுள்ள பாண்டியன் போக்குவரத்துக் கழகம் 10—12—1971-ல் தொடங்கப்பட்டுச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. 17—1—1972-ல் தென்போக்குவரத்து நிறுவனத்தினிடமிருந்து (Southern Roadways Ltd.) 346 பேருந்துகள் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டுப் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டன. இப்பேருந்துகளுக்கு ஈட்டுத் தொகையாக ரூ. 124.49 இலட்சம் கொடுக்கப்பட்டது. தொழிலாளர்கள் அலுவலர்களின் சீரிய ஒத்துழைப்புடன் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் திறமையாகவும் சிக்கனமாகவும் நடைபெற்று வருகிறது.

தென்போக்குவரத்து நிறுவனத்தில் வேலை செய்த 2,802 தொழிலாளர்களும் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர். முதல் ஆண்டிலேயே தொழிலாளர்களுக்கு மொத்தச் சம்பளத்தில் 15 சதவிகித போனஸ் அல்லது அடிப்படைச் சம்பளத்தில் 27.5 சதவிகித போனஸ் இவற்றில் எது அதிகமான தொகையோ அது வழங்கப்பட்டது.

1,500 மக்கள் தொகையுள்ள கிராமங்கள் எல்லாம், பேருந்து செல்ல வசதியுள்ள ஊரெல்லாம் பேருந்துகள் விட வேண்டுமென்ற தமிழ்நாடு அரசின் கருத்தை ஏற்று இந்நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இதுவரை பேருந்து செல்லாதிருந்த 23 கிராமங்களுக்குப் பேருந்து விடப்பட்டுள்ளது. ஊரெங்கும் போக்குவரத்து வசதி வேண்டுமென்ற தமிழ்நாடு அரசின் கருத்தைப் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் நிச்சயம் நிறைவேற்றிடும்.

இலாபம் ஒன்றையே நோக்கமாகக் கொண்டு இந்நிறுவனம் செயல்படவில்லை. மக்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பதையும் இலட்சியமாகக் கொண்டுள்ளது. கிராமங்களுக்குச் செல்கின்ற 47 வழித் தடங்களில் ஆண்டுக்கு ரூ. 30 இலட்சம் இழப்பு ஏற்படுகிறது. இந்த இழப்பை மற்ற வழித்தடங்களில் கிடைக்கும் இலாபம் சரிக்கட்டுகிறது. ஆரம்பத்தில் இழப்பாக இருந்தாலும் ஒவ்வொரு கிராமத்திற்கும் போக்குவரத்து வசதி செய்து தரும் கடமையைத் தவறுமல் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் நிறைவேற்றி வருகிறது.

மதுரையில் பாண்டியன் போக்குவரத்துக் கழக அலுவலகத்திற்கான புதிய கட்டடம் ரூ. 45.5 இலட்சம் செலவில் கட்டப்பட்டு 22—4—1975 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்கு 106 பேருந்துகளும் சோழன் போக்குவரத்துக் கழகத்திற்கு 65 பேருந்துகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

1—4—75 முதல் தமிழ்நாடு மாநிலப் போக்குவரத்துக் கழகத்திடமிருந்து மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் நடத்தி வந்த 77 பேருந்துகள் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தற்போது இக் கழகத்தில் 619 பேருந்துகள் உள்ளன. தொழிலாளர்களின் எண்ணிக்கை 4,336 பேர்களாகும். ஆண்டுதோறும் பேருந்துகளில் நிகர இலாபம் கீழ்க்கண்டவாறு உள்ளது:

ஆண்டுகள்		நிகர இலாபம் ரூபாய் (இலட்சத்தில்)
10-12-71 முதல் 31-3-72 முடிய	...	1.29
1-4-72 முதல் 31-3-73 முடிய	...	11.78
1-4-73 முதல் 31-3-74 முடிய	...	4.21
1-4-74 முதல் 31-3-75 முடிய	...	3.99

அங்கஹீனமுற்றவர்களுக்கு மதுரை நகரில் பயணம் செய்ய இலவச அனுமதிச் சீட்டு (Pass) வழங்கப்படுகிறது. சிறந்த ஓட்டுநருக்குப் பரிசு வழங்கப்படுகிறது. நகரில் இரவு நேரப் பேருந்து வசதியும் உண்டு.

பிப்ரவரி 1975-ல் குடும்பநலத்திற்காக ஆயுள் காப்பீட்டுத் திட்டம் (Insurance Scheme) அறிமுகப்படுத்தப்பட்டது. வேலையிலிருக்கும் காலத்தில் ஒரு தொழிலாளி மரணமடைந்துவிட்டால் அவர் குடும்பத்திற்கு

ரூ. 10,000 வழங்கப்படுகிறது. இதற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் உறுதியளிக்கிறது. தொழிலாளி மாதம் 1 ரூபாயும் நிருவாகம் மாதம் ரூ. 1.70 காசுகளும் செலுத்த வேண்டும்.

குடும்ப நலத் திட்டத்தை ஊக்குவிக்க அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 50 லிருந்து ரூ. 200 ஆக உயர்த்தித் தரப்படுகிறது. சம்பளத்துடன் கூடிய ஒரு வார விடுமுறையும் அளிக்கப்படுகிறது.

இதுவரை இறந்துபோன 13 தொழிலாளர்களின் குடும்பத்திற்கு ரூ. 10,000 வீதம் வழங்கப்பட்டுள்ளது. 10 ஆண்டுப் பணி முடித்துள்ள 52 தொழிலாளர்களுக்குக் கைக்கெடியாரமும், 25 ஆண்டுப் பணி முடித்துள்ள 27 தொழிலாளர்களுக்குக் கைக்கெடியாரமும் ரூ. 500-ம் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

1—9—74 முதல் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி (Out-Patient Hospital) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர்களின் சீரிய ஒத்துழைப்புத்தான் வருவாயை அதிகரிக்குமாகையால் ஊக்கத் தொகை (Incentive Bata Scheme) கொடுக்கப்படுகிறது.

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில், மதுரை பாண்டியன் பொறியியல் கழகம் (Madurai Pandian Engineering Corporation) என்ற அமைப்பும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பொறியியல் பட்டப் படிப்பு மற்றும் டிப்ளமா படித்துள்ள 330 பேர்களை ஓராண்டுப் பயிற்சிக்குப் பின்னர் பொறியியல் கழகத்தில் பங்குதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் இப்பொறியியல் கழகப் பணிக்கூடத்தில் (Workshop) பேருந்து கட்டுகிறார்கள்.

மேலும் டயர் புதுப்பித்தல், எஞ்சின் மாற்றி அமைத்தல் ஆகிய வேலைகளும் செய்யப்படுகின்றன. இப்பொறியியல் கழகத்திற்காகப் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தினர் 4.09 ஏக்கர் நிலம் வாங்கி ரூ. 4.5 இலட்சம் செலவில் பணிக்கூடம் கட்டி மெஷின்கள் பொருத்தப்பட்டு வேலைகள் இந்த ஆண்டில் முடியும் தறுவாயில் உள்ளன. பாண்டியன் பொறியியல் கழகத்தின் திட்டப்படி பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் முழு தேவைகளும் இதன் மூலம் நிறைவேற்றப்படும்.



சேரன் போக்குவரத்துக் கழகம் :

சேரன் போக்குவரத்துக் கழகம் ரூ. 1 கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் 1972-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து செயல்படத் தொடங்கியது. இதில் ரூ. 35 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாகும். இக்கழகத்தில் 1.09 பேருந்துகள் இருந்தன. 1972-ல் 109 பேருந்துகளாக இருந்தவை, 1975-ஆம் ஆண்டு பிப்ரவரி 1-ஆம் நாளில் 453 பேருந்துகளாக வளர்ச்சி அடைந்துள்ளன.

கோயம்புத்தூர் மகளிரின் நீண்ட காலத் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு 1973-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15-ஆம் நாளிலிருந்து இக்கழகம் மகளிருக்கென்று தனிப்பட்ட பேருந்துகளை ஒட்டத் தொடங்கியது. ஏனைய அரசுப் போக்குவரத்துக் கழகங்களைப் போலவே, இக்கழகமும் கிராமப் பகுதிகளில் ஆதாயம் தராத சில வழித்தடங்களில் சமுதாயத் தொண்டு என்ற வகையில் சில பேருந்துகளை விடுகிறது. பொதுமக்களின் வசதிக்காக கோயம்புத்தூர் நகரத்தில் தானியங்கிச் சாலைப் போக்குவரத்து அடையாள விளக்கை அமைத்து உள்ளது. கோயம்புத்தூர், உதகமண்டலம் நகரங்களில் பேருந்து நிறுத்தங்களில் பயணிகள் நிற்பதற்கான நிழற் குடைகளை நிறுவியுள்ளது.

போக்குவரத்து ஏற்பாட்டை மேம்படுத்த, இந்தப் போக்குவரத்துக் கழகம் 'ஆலோசனைப் பிரிவு' ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. மேகாலய அரசும், சென்னை மாநகராட்சியும் தங்கள் பணிக்காக இப்பிரிவை ஏற்கெனவே அணுகியுள்ளன. இக்கழகத்தின் உடனுழைப்புடன் அரசு புதியதொரு திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது; அதாவது பயணிப் பேருந்தில் டீசல் எண்ணெய் மிச்சமாகும் வகையிலும் சிக்கனமாக எரிபொருளைப் பயன்படுத்தும் வகையிலும் லேசான எடையுள்ள பேருந்து கட்டுவதற்கான வடிவமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கும் ஆக்கபூர்வமான கருத்துக்களை அளிக்கின்ற நபருக்கு அல்லது நிறுவனத்திற்கு முறையே ரூபாய் ஒரு இலட்சம், ரூ. 50,000 பரிசு கொடுக்கும் புதிய திட்டம் ஒன்றை அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்திற்கு வரும் விண்ணப்பங்களை ஆய்வு செய்து ''சிறந்த கருத்துரையை'' தெரிந்தெடுக்க டாக்டர் நாயுடம்மாவின் தலைமையில் உயர் நிலைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மேற்சொன்ன இரு போட்டிகள் குறித்தும் விண்ணப்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன. விண்ணப்பங்களைப் பெறுவதற்கு இறுதி நாளான 1976-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாளுக்குப் பின்னர் அவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இக்கழகம் 1974—75-ஆம் ஆண்டிலும் தனது திறமையைத் தொடர்ந்து நிலைநாட்டி வந்து உள்ளது. 1974—75-ல் ரூ. 17 இலட்சம் ஆதாயம் ஈட்டும் எனவும், 1975—76-ல் ரூ. 20 இலட்சம் ஆதாயம் ஈட்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. எரிபொருள் பற்றுக்குறை காரணமாக மீண்டும் தூய்மைப்படுத்தும் இயந்திரம் (Re-Cycling Plant) ஒன்றை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து இக்கழகம் ஆய்வு செய்து வருகின்றது. இக்கழகத்தின் ஊழியர்களுக்கு ஊதியத்தில் 32.5 சதவீதம் ஊதியக் கொடையாக வழங்கப்பட்டது.

அண்ணா போக்குவரத்துக் கழகம் :

சேலம், தருமபுரி மாவட்ட மக்களுக்கு இணைப்பான, வலுவான மற்றும் சிறப்பான சிக்கனமான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்த அரசு அண்ணா போக்குவரத்துக் கழகத்தினை சேலம் நகரை தலைமை நிலையமாகக் கொண்டு 23—1—73-ல் நிறுவியது.

அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் கிளைகள் தருமபுரி, கிருஷ்ணகிரி, மேட்டூர், ஒசூர், திருப்பத்தூர் ஆகிய இடங்களில் இயங்குகின்றன. இக்கழகம் 15-2-73-ல் 45 பேருந்துகளை இயங்கத் துவங்கியது. படிப்படியாகப் பேருந்துகளை பல வழித் தடங்களில் மக்களின் தேவைக்கேற்ப விட்டு தற்போது 228 பேருந்துகளை இயக்கி வருகின்றது. பஸ் போக்குவரத்தே இல்லாமல் இருந்த பல உட்பகுதி கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் பஸ் விட்ட பெருமை அண்ணா போக்குவரத்துக் கழகத்தினைச் சாரும்.

மதுரை, கோவை, வேலூர் (வட ஆர்க்காடு), சிதம்பரம், திருவண்ணாமலை, தஞ்சாவூர், திருச்சி, கடலூர் போன்ற அண்டை மாவட்ட நகரங்களை இணைக்கும் வகையில் இக்கழகம் நீண்ட தூரப் பேருந்துகளை இயக்கி வருகின்றது. அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகத்திலுள்ள முறையே குப்பம், சித்தூர், பெங்களூர், மைசூர் ஆகிய ஊர்களுக்குப் பேருந்துகள் விடப்பட்டுள்ளன.

அண்ணா போக்குவரத்துக் கழகம் சேலம், தருமபுரி மாவட்டங்களில் பலருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தந்துள்ளது. பஸ் தொழிலில் இக்கழகத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து ஊழியர்களும் அரசு அளித்துள்ள பல சலுகைகளையும் பெற்று மகிழ்வுடன் பணியாற்றுகின்றனர். அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் நாள்தோறும் சராசரி 75,000 பயணிகளை ஏற்றிச் செல்கின்றது. 45,411 கி.மீ. தூரம் ஓடுகின்றன. இப்போக்குவரத்துக் கழகத்தில் 1,600 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் :

போக்குவரத்துக் கழகம் ஒன்றின் நிருவாகத் திறனைக் கருத்திற் கொண்டு, தமிழ்நாடு அரசுப் போக்குவர்த்துத் துறை, பல்லவன் போக்குவரத்துக் கழகம், அண்ணா போக்குவரத்துக் கழகம், சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம் ஆகியவை இம்மாவட்டத்தில் இயக்கிய 172 பேருந்துகளை மேற்கொண்டதன் மூலம் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களிலுள்ள பேருந்துப் போக்குவரத்து முறைக்குப் புதிய கழகம் ஒன்று 1975-ஆம் ஆண்டு சனவரி 16-ஆம் நாள் முதல் அமைக்கப்பட்டது. இந்தப் புதிய கழகத்திற்கு விழுப்புரம் தலைமையிடமாகும்.

வழித்தடத்தையும், எரிபொருளையும் சிக்கனமான முறையில் பயன்படுத்திப் பொதுமக்களுக்குச் சிறந்த முறையில் பேருந்துப் பணியை அளிப்பதே இந்தப் புதிய கழகத்தின் பரந்த நோக்கமாகும்.

ஆதாயம் தரத் தக்க வணிகக் கொள்கையின் அடிப்படையில் இப்புதிய கழகம் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இக்கழகத்தின் அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 1 கோடியாகும். பங்குத் தொகை மூலதனம் ரூ.35 இலட்சமாகும். இதில் பெரும் பகுதி இக்கழகத்திற்கு மாற்றப்பட்டு சொத்துக்களின் மூலமாகப் பெற்றதாகும்.

இந்த ஏழாவது புதிய கழகத்தில் 172 பேருந்துகள் உள்ளன. 1975—76-ல் நல்ல ஆதாயத்தை ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்



பண்டைத் தமிழகம் கடல் வாணிகம் செய்து வந்ததை இலக்கியங்கள் பறைசாற்றி வருகின்றன. அது மீண்டும் ஒரு வரலாற்றினை உருவாக்கிடும் வகையில் இன்று பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தினைத் தமிழ்நாடு அரசு தோற்றுவித்து உள்ளது.

1974—75-ல் இக்கழகம் ரூ. 5 கோடி அதிகாரமளிக்கப்பட்ட மூலதனத்துடனும், ரூ. 1 கோடி மூலதனத்துடனும் ஆரம்பிக்கப்பட்டது. 1975—76-ல் அரசு ரூ. 50 இலட்சத்தை முதலீடு செய்யும். இக்கழகம் 1974-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 11-ஆம் நாள் அன்று நிறுவப்பட்டது. இன்று இது வெகு விரைவான முன்னேற்றம் அடைந்து வருகிறது.

கப்பல் போக்குவரத்துப் பணியை மேற்கொள்ளுமாறு இந்திய அரசால் பல மாநிலங்

தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம்

தாட்கோ

அரிசன முன்னேற்றத்திற்காகத் தமிழக அரசின் ஆக்கப்பணிகள்

மாணபுமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் விருப்பத்திற்கிணங்க, சமுதாயத்தின் அடித்தளத்தில் அல்லலுறும் அரிசன மக்கள் வீட்டு வசதி பெறுவதை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு, 1974ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1 ஆம் நாள், தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் தொடங்கப்பட்டது.

தமிழ் நாட்டிலுள்ள சுமார் 75 லட்சம் வீடில்லா ஏழை அரிசனங்களுக்கெனக் குறைந்தது 10 லட்சம் வீடுகள் உடனடியாகத் தேவைப்படுகின்றன. இதனை மனதில் வைத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1974-76 ஆம் ஆண்டுகளுக்குள் ஒரு லட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தினைச் செயல்படுத்த ஆணை பிறப்பித்தார்கள்.

இத்திட்டத்தின் கீழ் 31-12-1975 வரை 30,389 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இதைத்தவிரக் கீழ்க் காணும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களும் அரிசனங்களுக்கெனச் செயல்படுத்தப்படுகின்றன.

- 1976 ஆம் ஆண்டு இறுதிக்குள் ஏழை அரிசனங்களுக்கு ஒரு லட்சம் வீடுகள் இலவசமாகக் கட்டிக் கொடுத்தல்
- 1975-76 ஆம் ஆண்டுக்குள் அரிசன, பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவியர்களுக்கென 150 விடுதிகள் அமைக்கும் திட்டம்
- 1975 ஆம் ஆண்டுக்குள் குழந்தைகளுக்கென 50 காப்பகங்கள் கட்டும் திட்டம்.
- அரிசன கிராமங்கள் அனைத்திற்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளித்தல். இணைப்புச் சாலைகள் அமைத்தல் மற்றும் மின்சார இணைப்புத் தருதல்
- கறவை மாடுகள் வாங்க உதவுதல்
- ஆட்டோ ரிக்ஷாக்கள் வாங்கப் பண உதவி அளித்தல்
- செங்கல் சூளை, சுண்ணாம்புச் சூளை அமைத்தல்
  பாய் முடைதல், தோல் பொருட்கள் உற்பத்தி, ஆட்டு ரோம ஏற்றுமதி போன்ற கைத்தொழில்களுக்கெனக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்
- தோடர் பெண்மணிகளுக்குத் தையல் பூ வேலை நுண்கலைப் பயிற்சிக் கூடம் அமைத்தல்
- நரிக்குறவர்களுக்கு மணிமாலை உற்பத்தி நிலையம் அமைத்தல்
- ஏழை அரிசன குழந்தைகள் பராமரிப்புக்கென நல வேலைகள் செய்தல்

ஆர்.ஏ. சீதாராமதாஸ் I.A.S.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம்
சென்னை-600 006.

களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு உள்ளபோதிலும், இந்தக் கப்பல் போக்குவரத்துப் பணியை முதலில் மேற்கொண்ட பெருமை தமிழ்நாட்டுக்கே உரியதாகும்.

இது உருவாக்கப்பட்ட 8 திங்கள் கால அளவுக்குள் முறையே ரூபாய் 75 இலட்சம், 108 இலட்சம் மதிப்பில் ''தமிழ்ப் பெரியார் ஈ.வெ.ரா'', ''தமிழ் அண்ணா'' என்ற இரு கப்பல்களை 1974-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19, 1974-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 9-ஆம் நாட்களில் வாங்கியுள்ளது.

எம்.வி. தமிழ்ப் பெரியார் ஈ. வெ. ரா. கப்பல் பற்றிய சில விவரங்கள் வருமாறு:

''எம்.வி. தமிழ்ப் பெரியார் ஈ.வெ.ரா. என்ற பெயர் பூண்டிருக்கும் இந்தக் கப்பல் யுனைடெட் கிங்டம்மைச் சேர்ந்த சுண்டர் லாண்டில், மெசர்ஸ். பிக்கர்ஸ்கில் அண்ட் சன் லிமிடெட் நிறுவனத்தால் 1957-ஆம் ஆண்டில் ''எம்.வி. எரிங்டன் கோர்ட்'' என்ற பெயரில் கட்டப்பட்டது ஆகும். இதன் பிரதான இஞ்சின் ஸ்காட்லாந்தைச் சேர்ந்த மெசர்ஸ் கின்கெய்ட் அண்ட் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்டதாகும்; பர்மீஸ்ட்டர் அண்ட் வெய்ன்ஸ் இஞ்சின் ரகத்தைச் சேர்ந்த இப்பிரதான இஞ்சின் இது. 3,300 பிரேக் ஹார்ஸ் பவர் (குதிரைத் திறன்) உண்டாக்கக் கூடிய சக்தி படைத்த இந்தக் கப்பலின் பிரதான இஞ்சின்கள் திருப்தியளிக்கும் வகையில் வேலை செய்திடச் செய்யும் பொருட்டுத் துணை இயந்திரங்களுக்கும் போதிய அளவு நீராவி கிடைத்திடச் செய்வதற்காக, இதில் இரண்டு பாய்லர்கள் (கொதிகலன்கள்) பொருத்தப்பட்டுள்ளன.

கப்பலில் பணி புரிபவர்களுக்கும் இந்த பாய்லர்கள் போதிய அளவு பயன் அளிக்கின்றன. அலுவலர், தொழிலாளர்களுமாக ஐம்பத்து நான்கு பேர்கள் இருப்பதற்கு ஏற்ற வகையில் சிறப்புற உருவாக்கப்பட்டுள்ள கேபின்கள் இந்தக் கப்பலில் அமைந்து உள்ளன. அலுவலர்களும் சிற்றலுவலர்களும் ஒற்றைக் கேபின்களில் இருக்கிறார்கள். மற்ற ஊழியர்கள் இரண்டடுக்குக் கேபின்களில் இருக்கிறார்கள்.

நாளொன்றுக்குச் சுமார் 13 டன் இடைநிலை எரி எண்ணெய்யும், துணைப் பொறிகளுக்காக ஒரு நாளுக்கு ஒரு டன் டீசல் எண்ணெய்யும் பயன்படுத்திக் கொண்டு இந்தக் கப்பல் மணி ஒன்றுக்குச் சுமார் 13 மைல்கள் தூரம் ஓடிடும் திறனுள்ளதாகும். இதன் மொத்த நீளம் 458 அடி 3 அங்குலம் இதன் உச்ச நிலை அகலம் 59 அடி, 9 அங்குலம். இக்கப்பலின் அதிக பட்ச சம்மர் டிராஃப்ட் 27 அடி 9 அங்குலம். திசை காட்டி, எதிரொலிக் கருவி, ராடார், சைரோ கம்பாஸ், ஆட்டோ பைலட் முதலியவை போன்ற நவீன கடற் பயணச் சாதனங்கள் இக்கப்பலில் பொருத்தப்பட்டுள்ளன. ரேடியோ தந்திச் சாதனமும் இக்கப்பலில் இடம் பெற்றிருக்கிறது. நல்ல முறையில் அமைந்த உட்புறத் தொலைபேசி அமைப்பும் இதில் உள்ளது. கப்பல் கட்டுமான லாய்ட்ஸ் பதிவாளர்களின் மிக உயர்ந்த தர நிர்ணயங்களின்படி கப்பல் கட்டும்போது அவர்களாலேயே மேற்பார்வையிடப்பட்டு இந்தக் கப்பல் கட்டப்பட்டது.

இந்தக் கப்பலில் நான்கு சரக்குகள் சேமிப்புப் பள்ளங்களும், ஐந்து கப்பல் தளப் புழைவாயில்களும் உள்ளன. இதில் தானியங்களைக் கொட்டுவதற்காக 61,730 கன அடி கொள்திறன் அல்லது சரக்கு மூட்டைகளையோ கட்டுகளையோ வைப்பதற்கான 5,70,000 கன அடி கொள் திறன் உள்ளது. இந்தக் கப்பல் தளப் புழைவாயில்களுக்குப் பயன்படுவதற்காக இந்தக் கப்பலில் பத்து பாரந் தூக்கிப் பொறிகள் (டெர்ரிக்) உள்ளன.

இக் கப்பலின் எடையளவு 11,253 டன். இதில் இரண்டு உயிர் காப்புப் படகுகள் இருக்கின்றன. இவற்றில் ஒன்று, சுயமான உந்து விசையைப் பெறுவதற்காக ஒரு டீசல் இஞ்சின் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. கப்பல் சிப்பந்திகளுக்கு வேண்டிய இறைச்சி, மீன் மற்றும் காய்கறிகள் போன்ற அவசியப் பொருள்களைச் சேமித்து வைப்பதற்காகப் போதிய அளவு குளிர் பதனத் திறன் அமைப்பும் இதில் உண்டு. கடலோரப் பயணங்களுக்கும் அண்மை அந்நிய நாட்டுப் பயணங்களுக்கும் ஏற்ற அருமையான கப்பல் இது.

இந்தக் கழகம் விரைவிலேயே அனைத்து நாட்டு வர்த்தகத்தில் ஈடுபடவிருக்கிறது என்பதையும் இங்குக் குறிப்பிட வேண்டும். இந்தியாவிலிருந்துமேற்கு ஐரோப்பாவுக்கு உலோகக்கனிப் பொருட்களை ஏற்றிச் சென்றிறக்கி, திரும்புகையில் உரங்களும் மற்ற வகைச் சரக்குகளும் ஏற்றி வரும் வகையில் பயன்படக் கூடிய 20,000 டன் முதல் 25,000 டன் வரையிலான பெருந்திரள் சரக்குகளைச் சுமந்து செல்லவல்ல நான்கு நவீன சரக்கேற்றிக் கப்பல்களை விலக்கு வாங்கிடும் திட்டமும் இக்கழகத்திடம் உள்ளது.

இரு கப்பல்களும் செயல்படத் தொடங்கியுள்ளன. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், 1974—75-ல் விரயம் ஏதுமின்றி தனது கணக்குகளை முடிக்கும் என்றும், 1975—76-ல் கணிசமான ஆதாயத்தை ஈட்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆரம்பித்த 100 நாட்களில் அதாவது மார்ச் 75 வரை கப்பல்கள் செயல்பட்டதில் ரூ. 8 இலட்சம் இலாபம் கிட்டியுள்ளது.



தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம்:

தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம் கடந்த சூன் திங்கள் மூன்றும் நாள் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில், மாண்புமிகு டாக்டர் நாவலர், மாண்புமிகு முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் ச. இராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் அதிவிமரிசையாகத் துவக்கி வைக்கப்பட்டது. ஏற்கெனவே தமிழகத்திலுள்ள ஏழு போக்குவரத்துக் கழகங்களுடன் இது எட்டாவதாக ஆரம்பிக்கப்பட்டது.

குறிப்பாகப் பொருள் போக்குவரத்துக் கழகம் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் உணவுப் பொருள்களை விரைவாகவும், பாதுகாப்பாகவும் எடுத்துச் சென்று வேறு மாவட்டங்களுக்குக்

குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிரின் வளர்ச்சிக்கு தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றும் அளித்தால்தான் முழுப்பலனைத் தரும்.

தற்போது உரங்களின் விலை அதிகமாக இருப்பதால் தழைச் சத்தைத் தரும் யூரியாவை மட்டும் இட்டால் போதும் என்று நீங்கள் கருதலாம்.

ஆனால் யூரியாவை மட்டும் இட்டால் பயிர்கள் பூச்சி நோய்களினால் அதிகமாக பாதிக்கப்படும். வறட்சியைத் தாங்காது. மேலும் நாளடைவில் மண்ணின் தன்மை கெடும். அதனால் விளைச்சலும் குறையும். அன்றியும் மணி, சாம்பல் சத்துக்கள் இல்லையென்றால் யூரியாவின் உற்பத்தித் திறனும் குறையும்.

தழைச்சத்துடன் மணி சாம்பல் சத்துக்களை இடும்போது விளைச்சல் கூடுதலாகி லாபம் அதிகரிக்கிறது. இதனை ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன.

ஏக்கருக்கு இட்ட உரம்	ஏக்கருக்கு சாகுபடி செலவு	ஏக்கருக்கு விளைச்சல் (75 கிலோ மூட்டை)	வருவாய் (மூட்டை ரூ. 82.50 வீதம்)
	ரூ.		ரூ. பை.
50 கிலோ தழைச்சத்து மட்டும்	1080	20	1650.00
50 கிலோ தழைச்சத்துடன் 25 கிலோ மணிச்சத்து	1255	25	2062.50
50 கிலோ தழைச்சத்துடன் 25 கிலோ மணி, 25 கிலோ சாம்பல் சத்துக்கள்	1305	32	2640.00

MFL-1044A

அதாவது தழைச்சத்துடன் மணி, சாம்பல் சத்துக்களையும் சேர்த்து இடுவதற்கான கூடுதல் செலவு ரூ. 225தான். ஆனால் இதன்மூலம் கிடைத்த கூடுதல் வருவாயோ ரூ. 990.

இப்படி கூடுதல் வருவாயை தருவதற்கான தழை, மணி, சாம்பல் ஆகிய மூன்று சத்துக்களையும் கொண்டது விஜய் 17-17-17. ஆகவே உங்கள் பயிருக்கு விஜய் 17-17-17யும், விஜய் யூரியாவையும் சேர்த்து இடுங்கள்.

VIJAY
MADRAS FERTILIZERS

விஜய் உரங்களைப்பற்றி மேலும் அறிய கீழ்கண்ட முகவரியிலிருந்து இலவசமாக வெளியீடு ஒன்றைப் பெறலாம்.

ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமசந்திரபுரம், திருச்சி 620 017

குறித்த நேரத்தில் விநியோகம் செய்யப் பயன்படுத்தப்படுகின்றது. முன்னாள் இராணுவத்தினருக்கு வேலை வாய்ப்பு அளித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

பொருள் போக்குவரத்துக் கழகம் இலாபத்தினை மட்டும் மனத்திலே கொள்ளாமல் மக்களுக்கு இன்றியமையாத உணவுப் பொருள்களை விரைவாகக் குறித்த நேரத்தில் விநியோகம் செய்யவும், தகுதியும், திறமையும் வாய்ந்த முன்னாள் இராணுவத்தினருக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளித்திடவும் ஆரம்பிக்கப்பட்டது.

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் —ரூ. *40* இலட்சம்.

செலுத்தப்பட்ட மூலதனம் — ரூ. *31.40* இலட்சம்.

முன்னாள் இராணுவத்தினர் மூலமாகப் பெற வேண்டிய பங்கு மூலதனம்—ரூ. *8.60* இலட்சம்.

தற்போதுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை—*61*.

மேற்குறிப்பிட்ட சரக்குப் பேருந்துகள் அனைத்தும் சிறந்த முறையில் நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் இன்றியமையா உணவுப் பொருள்களை விநியோகம் செய்வதில் செயல்பட்டு வருகின்றன. முதன் முதலில் பத்து சரக்குப் பேருந்துகளோடு துவங்கிய தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகத்திடம் தற்போது அறுபத்தொன்பது சரக்குப் பேருந்துகள் இருக்கின்றன.

விரைவில் பார்சல் சர்வீஸ் நடத்தத் தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம் உத்தேசித்துள்ளது. அதற்காக எல்லா மாவட்டத் தலைநகர்களிலேயும் பணிமனைகளை அமைத்துச் சேவை செய்ய திட்டமிடப்பட்டு வருகிறது.

கழகம் ஆரம்பித்த உடனேயே அதிக இலாபத்தை எதிர்பார்ப்பது சற்றே சிரமமாக உள்ளது. ஏனென்றால் செலுத்தப்பட்ட மூலதனத்தைக் கொண்டும் மற்ற வகைகளின் மூலமாகவும் புதிதாகச் சரக்குப் பேருந்துகள் வாங்கப்பட்டுள்ளன.

இன்றியமையாப் பொருள்கள் சேதமடையாமலும், மழை, வெயில் ஆகியவற்றினால் பாதிக்கப்படாமல் இருக்கவும் தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகச் சரக்குப் பேருந்துகளில் சிறந்த முறையில் பொருள்கள் மூடப்பட்டு எடுத்துச் செல்லப்படுகின்றன. இவ்வாறு செய்வதால் பொருட்கள் பாதுகாப்பாகச் செல்ல மிகவும் வசதியாக இருக்கின்றது.

தற்போது தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள ஓட்டுநர்கள் அனைவருமே தகுதியும் திறமையும் வாய்ந்த முன்னாள் இராணுவத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாகத் தஞ்சை குறுவை அறுவடைக்காகத் தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகச் சரக்குப் பேருந்துகள் அனைத்தும் செயல்பட்டு வந்தன. முதன் முதலில் இதனை ஏற்றுச் செய்வதால் சில சிரமங்கள் இருக்கத்தான் செய்கின்றன. இருந்தபோதிலும் மக்களின் நன்மையைக் கருதி சிரமங்களையும், நட்டத்தையும் பொருட்படுத்தாமல்—தொழிலாளர்களின் ஒத்துழைப்பினால் தயக்கமில்லாமல் — இதைச் செய்ய முடிகிறது.



கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்

நிருவாக மேம்பாட்டையும், பயணிகள் வசதியையும், நாட்டின் உயர்வையும், ஊழியர் உயர்வையும் கருதி தமிழ்நாடு அரசு போக்குவரத்துப் பிரிவின்கீழ் குமரி மாவட்டத்தில் இயங்கி வந்த விரைவுத் தடங்களை, நீக்கி உள்ள பகுதியையும், பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின்கீழ் இயங்கிய ஒரு பகுதியையும் ஒன்றாக இணைத்து முதல் சுதந்தரப் போராட்ட வீரனின் பெயர் ஏந்தி கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் *1-1-74*-ல் ஆரம்பமானது.

நிருவாக வசதிக்காகவும், சிறப்பான இயக்குதலுக்காகவும், பல புதிய கிளைகளும் துணைக் கிளைகளும் அமைக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக முன்பு இராணித்தோட்டம், குழித்துறை, திருநெல்வேலி முதலிய இடங்களில் கிளைகளும், கன்னியாகுமரி, தூத்துக்குடி, செங்கோட்டை முதலிய இடங்களில் துணைக் கிளைகளும் (Sub-depot) இயங்கி வந்தன. தற்போது தூத்துக்குடியும், செங்கோட்டையும் விரிவுபடுத்தப்பட்டு கிளைகளாக மாற்றப்பட்டதோடு, திங்கள் சந்தையில் ஒரு கிளையும், திருவட்டார், பாபநாசம், கோயில்பட்டி, புளியங்குடி, பாளையங்கோட்டை முதலிய இடங்களில் துணைக் கிளைகளும் நிறுவப்பட்டு அவ்வப் பகுதி மக்கள், தொழிலாளர்களின் குறைகள் அங்கேயே கவனித்து ஆவன செய்யப்படுகின்றன. இதன் மூலம் அவசியமற்ற பேருந்து ஓட்டம் தவிர்க்கப்படுகிறது.

வண்ணார்பேட்டை, பாபநாசம் முதலிய இடங்களில் அதிக வேக வாகன எண்ணெய் சேமிப்புக் கிடங்குகள் (H. S. D. Bunks) நிறுவப்பட்டுள்ளன.

தனது இரண்டாவது வயதை எட்ட ஏறு நடைபோடும் இக்கழகம், ஆரம்பிக்குங்கால் *477* பேருந்துகளும், *399* வரையறுக்கப்பட்ட பணிகளும் (Sheduled Services) *253* தடங்களையும் (Routes) கொண்டிருந்தது. தற்போது

532 பேருந்துகளும், 459 வரையறுக்கப்பட்ட பணிகளும், 321 தடங்களும் உள்ளன. குமரி மாவட்டத்தில் கழகப் பேருந்துகள் செல்லாத ஊர்களே இல்லை எனலாம். தற்போது நாகர் கோயில், பாபநாசம், செங்கோட்டை ஆகிய இடங்களில் இருந்து நெல்லையின் எல்லையையும் தாண்டி மதுரை மாநகர் வரையிலும் கழகப் பேருந்துகள் செல்கின்றன. நெல்லை மாவட்டத்தில் முக்கிய பகுதிகள் வழியாகப் புதிதாக 24 தடங்களில் கழகப் பேருந்துகள் இயங்குகின்றன. கட்டபொம்மனின் நினைவாலயமாக விளங்கும் பாஞ்சாலங்குறிச்சி வரையும்—வழியாகவும் மூன்று பேருந்துகள் இயங்குகின்றன.

இயக்கத் திறன் (Operation efficiency) அதிகப் படுத்தும் பொருட்டும், பயணிகள் காலத்தை மிச்சப்படுத்துதல், பயணங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துதல் பொருட்டு 10 துரிதப் பயணத் தடங்கள் (Fast passenger route) துவக்கப்பட்டு, அது வெற்றியையும் ஈட்டி உள்ளது. எடுத்துக்காட்டாக 1—1—74-ல் தமிழ்நாட்டையும் குறிப்பாக குமரி மாவட்டத்தையும் கேரள மாநிலத்தின் தலைநகரான திருவனந்தபுரத்தையும் இணைக்கும் தடம் எண் (Route number) 51, 52, 53, 54 இவற்றில் 14 பேருந்துகளுக்கு '4' பயணத் தடவை வீதம் தினம் 56 தடவைகள் ஓடின. இப்போது அதே பேருந்துகள் (14) ஓடும் பயணத் தடவை $14 \times 6 = 84$.

துவக்க நாளில் கழகப் பேருந்து ஒரு நாளைக்கு 1,24,357 கி.மீ. ஓடியது. தற்போது 1,48,548.8 கி.மீ. ஓடுகிறது. அன்று கி.மீட்டருக்கு 1.19 ரூபாயாக இருந்த வருமானம் தொழிலாளர் முயற்சியாலும், நிருவாகத் திறனாலும் ரூ. 1·65 ஆக உயர்ந்துள்ளது. அன்று ஒரு நாளைய சராசரி வருமானம் 1,22,310 ரூபாய். ஆனால் இன்று 2,21,709 ரூபாய் 70 காசுகள். இயக்கத் திறன் 70.3-ல் இருந்து 90 ஆக உயர்த்தப்பட்டு முடங்கல்கள் (Break downs) குறைக்கப்பட்டுள்ளன.

இராணித்தோட்டம் தொழிற்கூடத்தில் நடப்பு ஆண்டில் 43 புதிய பேருந்து கூடுகளும் (New Body) நடப்பு ஆண்டில் 32 புதிய கூடுகளும், 32 கூண்டு மாற்றுதலும் செய்யப்பட்டு உள்ளது.

மறுபட்டை தீட்டுதலிலும் (Tyre Re-treading) மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. சென்ற ஆண்டு 7,499 பட்டைகளும், நடப்பு ஆண்டில் 8,760 பட்டைகளும் மறு பட்டை தீட்டப்பட்டுள்ளன. இதை ஊக்குவிக்க ஊக்க போனசும் கொடுக்கப்பட்டுள்ளது.

ஊக்க போனஸ் விவரம்

கூண்டு கட்டுதல் பிரிவு :

9—75	...	...ரூ. 5,516,70
10—75	...	... ரூ. 1,361.25

மறு கூடு கட்டுதல் பிரிவு (Body re-conditioning)

9—75	...	... ரூ. 4,185.75
10—75	...	... ரூ. 2,921.50

தடை சான்றுப் பிரிவு (Brake Certificate)

9—75	...	... ரூ. 4,881.00
10—75	...	... ரூ. 2,921.50

மறுபட்டை தீட்டுதல் பிரிவு (Tyre re-treading)

1—75	...	... ரூ. 930.75
5—75	...	... ரூ. 660.50
7—75	...	... ரூ. 850.50
8—75	...	... ரூ. 532.50
9—75	...	... ரூ. 918.80
10—75	...	... ரூ. 506.50
11—75	...	... ரூ. 1,828.50

போக்குவரத்துப் பிரிவு, தொழில் நுட்பப் பிரிவு, நிருவாகப் பிரிவு இவற்றில் அதிகப் பணியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

	11—74	12—75
ஓட்டுநர் :		
நிரந்தரம்	891	1,045
நிரந்தரமாகாதவர்	248	126
மொத்தம்	1,139	1,171
நடத்துநர் :		
நிரந்தரம்	934	1,038
நிரந்தரமாகாதவர்	248	252
மொத்தம்	1,182	1,290
தொழில் நுட்பம் :		
நிரந்தரம்	1,278	1,395
நிருவாகப் பிரிவு :		
நிரந்தரம்	253	424

நீண்ட கால ஊதியத் திட்டம் மூலம் 6 ஆண்டு பணி முடித்த ஓட்டுநர்—நடத்துநர்—தொழில் நுட்பப் பிரிவுத் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் (150-ல் இருந்து) 210 ஆகவும் 14 ஆண்டு முடித்தவருக்கு 275 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

> இக்கழகம் 477 பேருந்துகளுடன் தன் பணியைத் தொடங்கியது. தற்போது 532 பேருந்துகளைக் கொண்டுள்ளது. 1974—75 நடப்பாண்டில் விரயம் ஏதுமின்றித் தனது கணக்குகளை முடிக்க இருக்கிறது. 1975—76-ல் ரூ. 22 இலட்சம் ஆதாயத்தை ஈட்டும்.

1—1—74-ல் ஒரு மருத்துவர் மட்டுமே தொழிலாளர்களைக் கவனிக்க இருந்தார். இப்போது 1 பெண் மருத்துவரும் 2 ஆண் மருத்துவரும் அதிகமாக நியமிக்கப்பட்டு தொழிலாளர்—குடும்பத்தினர் உடல் நலத்தில் அக்கறை காட்டப்படுகிறது. நோயாளிகள் தங்கி மருத்துவம் செய்ய வசதியாக ஆங்காங்குள்ள சில மருத்துவ நிலையங்களில் ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கான செலவை இக்கழகம் ஏற்றுக் கொள்கிறது. மேலும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் அவர்களுடைய ஊதியத்தில் 4 சதம் உடல்நலப் படியாகக் கொடுக்கப்படுகிறது.



சிந்தனையாம் சிறகடித்துச் செல்லென்றேன்; உடன்எழுந்த
அந்தமனப் பறவையிங்கே அலையோசைக் கடல்நெய்தல்,
ஓங்குமலை தூங்கருவி, ஒய்யாரப் பசுங்காடு,
தேங்குபுனல் தடாகங்கள், திருமுகத்துத் தாமரைகள்,
தென்றலுக்கு நாணுகின்ற தேன்பொழில்கள் இங்கெல்லாம்
சென்றுவிட்டுத் திரும்புகையில், செந்தமிழன், என்ஆசான்
போர்முகத்துக் கவிதந்த புகழாளன், பாவேந்தன்
நேர்முகத்தைக் கண்டவுடன் நின்றுவிட்ட தப்படியே!
நான்கேட்கு முன்னரவன் ''நலந்தானா?'' எனக்கேட்டான்.
வான்பார்த்த மயிலைப்போல் மகிழ்ச்சியுடன் தலையசைத்தேன்,
பாகானம் படைத்தஅவன் பரிவுடன் ''இன் னுஞ்சென்னை
மாகாணத் தான்தானா மணித்தமிழன்?'' எனக்கேட்டான்.
''தமிழ்நாட்டில் வாழ்கின்றோம்; தம்பியரின் படைகண்ட
அமிழ்தூற்றும் அண்ணாவின் ஆட்சியிதைச் செய்ததெ''ன்றேன்.
''இலக்கியத்துத் தமிழ்நாட்டில் இருக்கின்ற பேறுபெற்றீர்;
நலக்குறையும் இனியேது நந்தமிழர்க் கெ''னமகிழ்ந்தான்.
''தமிழ்மொழியின் நிலையென்ன தமிழ்நாட்டில்'' எனக்கேட்டான்.
கமழ்வூட்டும் இருமொழியாம் கவின்கொள்கை தனைஏற்றுச்
'சலசல'வென் றெழில்ஓடைச் சங்கீதப் புனல்போலக்
'கலகல'வென் றெவ்விடத்துங் கனித்தமிழே பாயவிட்டார்—
ஆதிக்கம் இனிமேலே அங்குவர அஞ்சுமெனச்
சாதிக்கும் ஆட்சியங்கே சாதனைகள் படைக்கு''தென்றேன்
''விளக்கெ''ன்றான் ;''ஆம்தமிழர் விளக்''கென்றேன் இவ்வரசை!
''சிலிர்க்கவைக்கும் இவ்வரசோர் சீர்த்திருத்தத்
தொடர்கதையாம்!
'என்னருமைத் தமிழ்நாட்டில் எல்லோருங் கல்விகற்றே
உன்னதமாம் இமமலைபோல் ஓங்குதல்எந் நாள்?'என்றீர்.
முக்கோணப் பாரதத்தில் முதன்முதலாய்த் தமிழகத்தில்
கற்பார்க்குப் புதுமுகமாம் கல்லூரிக் கல்விவரை
இலவசமாய்ச் செய்துவைத்தே இவ்வரசும் உம்கவியால்
இலகும்'எந்நாள்' 'எகர'த்தை 'இகர'மதாய்ச்செய்ததென்றேன்
''கொழுந்துகட்குக் கல்விக்கண் கொடுப்பதுடன், பழுப்புகட்கும்
இழந்துவிட்ட கண்ணொளியை ஈந்திடுமிக் கண்ணரசின்
ஆக்கமெலாம் உன்பாட்டின் அடிப்படைதான்! சாதனையாம்
பூக்கமழும் சோலையிலே பூத்தமலர் எத்தனையோ?
வகைவகையாய் வண்ணமுள வாசமலர் அத்தனையும்
தொகைதொகையாய்க் காட்டாமல் தொட்டுசில காட்டுகின்றேன்.
'காதலுக்கு வழிவகுத்துக் கருப்பாதை சாத்துதற்குத்
தீதில்லாக் கதவுண் டிதிலென்ன குற்றம்' எனுமுங்கள்
விருப்பமதைப் பாரதத்தில் முன்னணியில் நின்றபடி
பரப்பிவரும் இவ்வர(சு)உம் பாடலுக்கோர் இலக்கியமாம்!
'எனைமணந்தார்; பின் இறந்தார்; என்குற்ற மல்ல,உடன்
புனைமலர்,குங் குமம்,அணிகள் போனதுண்டு மங்கலநாண்
பொன்னுடலும், இன்னுயிரும் போனதுண்டா? உலவாத
தென்றலுண்டோ? பாடாத தேனீயுண் டோ'என்று
பெருமூச்சில் விளைந்தவினா, பெண்குலத்தின் ஒருபகுதி
தருமூச்சில் கலந்திருக்கும். தவிப்பிதனைக் கவிவடிவில்
கோரிக்கை அற்றிருந்த குலத்தவரின் சார்பாகக்



கோரிக்கைக் குரல்கொடுத்தாய். குரல்கேளாக் காலம்போய்
புதியதொரு சமுதாயம் பூமியினைக் காண்பதற்கு
நிதமுழைக்கும் இந்நாளை நிலையரசாம் தமிழரசார்
பெண்ணுக்குச் சீர்கொடுக்கும் பெற்றோர்போல், விதவைமணம்
பண்ணுவார்க்குப் பொருள்தந்தார்; பணத்தாசைக் குற்றங்கள்
தலைநீட்டா படிஅமைந்த தகுந்தபுதுச் சட்டமிட்டார்!
குளிர்மலரும், அணிகலனும் குங்குமமும், மங்கலமும்
இன்னவெலாம் விதவைக்கே இந்நாளில் ஈந்(து)அவரின்
பொன்னுடலும், இன்னுயிரும் புதுவாழ்வு பெறவைத்தார்!
எரிப்பதினுங் கொடுவாழ்வை இங்ககற்றி, உம்பாடல்
வரிக்குவரி செயலாக மலரவைத்துப் புகழ்கொண்டார்;
'பெண்டுபிள்ளை கவலைகள்தான் பெருங்கவலை;' அதுவின்றேல்
உண்டுவருஞ் சாவதுவும் உவப்பாகும்,' என்றிட்டாய்.
அரசுடைய ஊழியர்கள் அலுவல்செய் காலத்தில்
இறந்துவிடின் அவர்குடும்பம் இசையில்லாப் பாடலன்றோ?
சுற்றத்தார் கைவிடினும், சூழ்ந்துள்ள இவ்வரசோ
மற்(று)அவர்க்கு நிதியளித்து, மாள்வோர்க்கும் மனஅமைதி
உண்டாக்கி வருவதனால், உயர்வான தமிழரசில்
உன்பாட்டு வடிவந்தான் ஓங்கிநிற்கப் பார்க்கின்றேன்!
'சுயமரியா தைகொள்'ளென்றாய்; சூடான இவ்வரிதான்
சுயமரியா தைமணத்தைச் சுடர்ச்சட்ட மாக்கியதாம்.
'சாதிவகுப் பதுசரியா?' சாடினாய்நீ; இன்றைக்கோ
சாதியறக் கலப்புமணச் சந்திப்புப் பெற்றவர்க்குப்
பொற்பதக்கம்; உற்சாகப் புகழ்ச்சலுகை தான்தந்து
தெற்குமலைத் தென்றலைப்போல் திளைக்கவைக்கும் பூரிப்பில்
'ஆண்டவனின் பிள்ளைகள்தான் அனைவருமே' எனும்பக்தர்
ஆண்டவனின் பிள்ளைபல அனாதைகளாய் வாழ்வதனைக்
கண்ணிருந்தும் காணார்போல், கடவுளிடம் இதைச்சொல்லும்
எண்ணமதும் இல்லாமல், என்றைக்கும் தன்னலத்தின்
வரங்களையே கேட்பதுதான் வாடிக்கை; கோயில்கள்
அறம்புரியும் நிலையங்கள் ஆகிவிட வேண்டுமென்று
திருக்கோவில் ஒருபங்கு திக்கற்ற பிள்ளைகட்குத்
தரக்கோரி, அதனோடு, தமிழரசும் நிதியுதவி
'நற்கருணை இல்லங்கள்' நாடெங்கும் தோற்றுவித்தார்!
கற்களையும் கரைவித்துக் கருணைபுரி இவ்வரசை
'எல்லாங்க டவுள்செயலே' என்றுதொடை நடுங்குகின்ற
பொல்லாங்கு தீர்த்துநிதம் புதுமைசெய வந்தவளே!
எனும்உங்கள் பாட்டிற்கே இலக்கியமாய்ப் பார்க்கின்றேன்.
தினமுயர வாழ்த்துவீர்உம் திருவாயால் இதனை"யென்றேன்:
பாவேந்தன் அப்படியே பக்கத்தில் வந்தென்னைப்
பூவேந்தல் போலெடுத்துப் பூரித்தான்; பூரித்து,
"காவியத்தில் கேட்கின்ற கதையெல்லாம் இந்நாளில்
காரியத்தில் ஆக்குகின்ற 'கருணை'யர சதைக்கான
வாய்ப்பில்லை எனினுமுன்றன் வாய்மொழியால் களிப்புற்றேன்.
மாப்பெரிய காவியமே மண்ணுலகில் இருந்திட்டால்
தீட்டிவைத்துப் பாடவைப்பேன் திருவிடத்தை! எதிர்ப்பினிலும்
வாட்டமிலாத் தமிழரசின் வரலாற்றுச் சாதனைகள்
என்றென்றும் வாழ்க வென்போம்" என்றெழுச்சிக் குரல்
கொடுத்தான்.
சிந்தனையும் எழுந்திடப்பின் செழித்ததமிழ் நாடுகண்டேன்!



143

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!"

நிலமற்றவர்க்கு நிலப்பட்டா!

இந்திய விடுதலைக்குப் பிறகு 20 ஆண்டுக் காலத்தில்
அதாவது 1947-48 முதல் 1966-67 வரை-
தமிழ்நாட்டில் நிலப்பட்டா பெற்றவர்கள் ... 1.15 இலட்சம் பேர்

மேற்கூறிய 20 ஆண்டுக்காலத்தில் தமிழ்நாட்டில்
ஒப்படை செய்யப்பட்ட நிலங்களின் பரப்பு ... 2.88 இலட்சம் ஏக்கர்.

இன்றையத் தமிழ்நாடு அரசு நிலப்பட்டா வழங்கும்
திட்டத்தைத் தீவிரப்படுத்தியதன் காரணமாக 8 ஆண்டுக்
காலத்தில் நிலப்பட்டா பெற்றவர்கள் ... 3.69 இலட்சம் பேர்

மேற்கூறிய 8 ஆண்டுக் காலத்தில் தமிழ்நாட்டில்
ஒப்படை செய்யப்பட்ட நிலங்களின் பரப்பு ... 7.19 இலட்சம் ஏக்கர்.

வீடற்றவர்க்கு வீட்டுமனைப்பட்டா!

இந்திய விடுதலைக்குப் பிறகு 20 ஆண்டுக்காலத்தில்
தமிழ்நாட்டில் வீட்டுமனைப்பட்டா பெற்றவர்கள் ... 63,770 பேர்

இன்றையத் தமிழ்நாடு அரசு, வீட்டு மனைப்பட்டா வழங்கும்
திட்டத்தைத் தீவிரப்படுத்தியதன் பயனாய் 8 ஆண்டுக்
காலத்தில் வீட்டு மனைப்பட்டா பெற்றவர்கள் ... 5 03 697 பேர்

உழுபவனுக்கே நிலம் சொந்தம்!

1961-ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தச் (நில உச்ச வரம்பு கட்டுதல்) சட்டத்தின்படி 31—3—67 வரையான காலத்தில் உபரி நிலமென்று அறிவிக்கப்பட்ட பரப்பு	24,194 ஏக்கர்
அறிவிக்கப்பட்ட பரப்பில் உடைமையாக எடுத்துக்கொண்ட பரப்பு	16,330 ஏக்கர்
எடுத்துக் கொண்ட பரப்பில்—ஒப்படை செய்து வழங்கிய பரப்பு	ஒன்றும் இல்லை.

''உழுபவனுக்கே நிலம் சொந்தம்!'' என்ற இலட்சியத்துடன் இன்றைய தமிழ்நாடு அரசு, 1961-ஆம் ஆண்டின் நிலச்சீர்திருத்தச் சட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தியதன் காரணமாகவும், அச்சட்டத்தில் இருந்த குறைபாடுகளை நீக்கி 1970, 1971, 1972-ஆம் ஆண்டுகளில் கொண்டுவந்த திருத்தப்பட்ட சட்டங்களின் காரணமாகவும், 1—4—1967 முதல் 30—10—75 வரையான காலத்தில் பின்கண்ட முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது!

உபரி நிலமென்று அறிவிக்கப்பட்ட நிலப்பரப்பு...	1,08,068 ஏக்கர்
உடைமையாக எடுத்துக் கொள்ளப்பட்ட நிலப் பரப்பு	88,146 ஏக்கர்
ஒப்படை செய்யப்பட்ட நிலப்பரப்பு ...	62,682 ஏக்கர்
நில ஒப்படை பெற்றோரின் எண்ணிக்கை ...	38,504 பேர்

பதிவு எண். M. 867

பூம்புகார் கலைக்கூடம் காண வாரீர்!

- கல்லெல்லாம் கதை சொல்லும் சிலப்பதிகாரக் காட்சிகள் !
- புதையுண்ட பூம்புகார் புது வடிவம் பூண்டுள்ளது !
- சிந்தைக்கும் கண்ணுக்கும் தெவிட்டாத தமிழ் விருந்து !
- மனதைக் கவரும் மாதவியின் அழகுச் சிலை.

இவற்றைக் காண பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்திற்கு வருகை தாரீர்!

பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை-600009



நெடுங்கல் மன்றம்



எழுநிலை மாடம்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
...சினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அ...



இவ்வி... சகார முயற்சி
...ருமதி இந்திரா
...ன் 26, 1975
...ளுக்கு ஆற்றிய
...ததிகளின் தமி

அரசு - மிகவுயர்ந்த தரமான

போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலையால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

ARASU CEMENT TIDCO

தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

அரசு -வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16



தமிழரசு
16-2-'76
மலர் 6. இதழ் 15-16

நெருக்கடி நிலை ஏன்?

குடியரசுத் தலைவர் நெருக்கடி நிலையை அறிவித்து இருக்கிறார். இது பற்றிப் பீதி அடைய வேண்டிய அவசியமில்லை.

பொது மக்கள், மகளிர் நன்மையைக் கருத்திற் கொண்டு நான் பயன் தரும் சில முற்போக்கான திட்டங்களை நிறைவேற்றத் துவங்கிய நாள் முதற்கொண்டே, பயங்கர சதித் திட்டங்கள் உருவாகி வருவது உங்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கும் எனத் திடமாக நினைக்கிறேன். ஜனநாயகம் என்ற பெயரில், ஜனநாயகம் செயல்படுவதையே தடுத்து நிறுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிளர்ச்சிகள், சூழ்நிலையில் குழப்பம் ஏற்படுத்தி வன்முறைச் செயல்களுக்கு வழி வகுத்துள்ளன. எனது மந்திரி சபையின் சக ஊழியர் திரு. எல். என். மிஸ்ராவின் படுகொலையைக் கேள்விப் பட்டு நாடே அதிர்ச்சிக்குள்ளாகியது. பிரதம நீதிபதியை கோழைத்தனமாகத் தாக்கியதை அறிந்து நாமெல்லாம் மிக வருந்துகிறோம்.

சிலர் ராணுவத்தையும், போலீசாரையும் கூட, கிளர்ச்சியில் கலந்து கொள்ளுமாறு தூண்டியிருக்கிறார்கள். நமது இராணுவத்தினரும், போலீஸாரும் மிகவும் ஒழுக்கமானவர்கள். ஆழ்ந்த நாட்டுப் பற்றுடையவர்கள். அவர்கள் அந்த அழைப்புக்குச் செவிசாய்க்க மாட்டார்கள். இருப்பினும் அவர்களைக் கலவரம் செய்ய அழைத்திருக்கும் குற்றம் குறைவானதல்ல.

எல்லா விதமான பொய்க் குற்றச்சாட்டுகளும் என் மீது சுமத்தப்பட்டுள்ளன. இந்திய மக்கள், என்னைக் குழந்தைப் பருவம் முதற்கொண்டே அறிவார்கள். என் வாழ்நாள் முழுவதுமே மக்களின் சேவைக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இது எனது சொந்த விஷயமல்ல. நான் பிரதமராக இருக்கிறேனா இல்லையா என்பது முக்கியமல்ல! ஆனால் பிரதமர் என்னும் ஸ்தானம் மிக முக்கியம், அதன் முக்கியத்துவத்தைக் குலைக்கும் முயற்சிகள் ஜனநாயகத்துக்கோ, நாட்டிற்கோ நல்லதல்ல!

இவ்விதமான நாசகார முயற்சிகளை நாங்கள் வெகு நாட்களாக மிகப் பொறுமையுடன் கவனித்து வந்திருக்கிறோம். நாடு முழுவதும் சட்ட ஒழுங்கைச் சீர்குலைத்து ஒழுங்கான நடைமுறையைக் குலைக்க புதிய திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருவதை நாங்கள் இப்போது அறிகிறோம். எந்த அரசுதான் நாட்டின் உறுதியைக் குலைக்கும் நடவடிக்கைகளை அனுமதிக்கும்? ஒரு சிலரின் நடவடிக்கைகள், பெரும்பான்மையினரின் உரிமைகளை அபாயகரமான நிலைக்கு உட்படுத்தியுள்ளன. ஒரு நாட்டின் அரசாங்கம் உறுதியான நடவடிக்கை எடுக்க இயலாத அளவுக்கு நிலைமை போகுமானால், அந்நாட்டிற்கு வெளியிலிருந்தும் அபாயம் ஏற்படும். நாட்டின் உறுதியையும் ஒருமைப்பாட்டையும் காப்பது நமது மிக முக்கிய கடமையாகும். தேசிய ஒருமைப்பாட்டுக்கு உறுதியான நடவடிக்கை அவசியம்.

உள்நாட்டின் அமைதிக்கு அபாயம் ஏற்பட்டால், அது நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் பாதிக்கிறது. கடந்த சில மாதங்களில் நாங்கள் எடுத்த உறுதியான நடவடிக்கைகள் விலைவாசி உயர்வைப் பெருமளவு கட்டுப்படுத்துவதில் பயனளித்துள்ளன. பொருளாதாரத்தை நிலைப்படுத்தவும், பல்வேறு பிரிவினரின் துயரைப் போக்கும் நோக்குடனும்—குறிப்பாக ஏழை எளியவர்களையும் நிலையான வருமானமுடையோர்களையும் காக்கும் நோக்குடனும்—பல்வேறு வழி முறைகளை ஆழ்ந்த சிந்தனையுடன் சிந்தித்து வருகிறோம்.

கலவரப்பட ஒன்றுமில்லை!

புதிதாகப் பிரகடனப்படுத்தியுள்ள நெருக்கடிநிலை எந்த வகையிலும் சட்டத்தை மதித்து நடக்கும் குடிமக்களைப் பாதிக்காது என்பதை உறுதி செய்ய விரும்புகிறேன். உள் நாட்டு நிலை, கூடிய விரைவில் முன்னேறி, நெருக்கடி நிலையை மிக விரைவில் நீக்க உதவுமென நான் உறுதியாக நம்புகிறேன்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், பிரிவினரிடமிருந்தும் வரும் நற்செய்திகள் எனக்கு உற்சாக மூட்டுகின்றன.

இனிவரும் நாட்களில், உங்கள் தொடர்ந்த ஒத்துழைப்பையும் நம்பிக்கையையும் எனக்குத் தருமாறு வேண்டுகிறேன்.

(இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஜூன் 26, 1975 அன்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் சில பகுதிகளின் தமிழாக்கம்)



தமிழக மக்களுக்குப் பிரதமர் அளித்த உறுதி!

இந்தியைத் திணிக்கமாட்டோம்!

"இந்தி மொழியைக் கற்கும்படி மக்களைக் கட்டாயப்படுத்த, வட இந்தியாவில் உள்ள சில கட்சியினர் முயற்சி செய்து வந்தது உண்மை. ஆனால் அவ்வாறு செய்தது எங்கள் கட்சியல்ல...... தேசிய இணைப்பு மொழியாக ஒன்றைக் கொள்வது நல்லது என்று நாங்கள் ஆரம்பகாலம் முதலே சொல்லி வந்த போதிலும், இங்குள்ள எவரையும் எந்த மொழியையும்—அந்த மொழியைக் கற்க விரும்பாத எந்த ஒரு ஆணையோ அல்லது பெண்ணையோ—கற்றுக் கொள்ளும்படி திணிக்கவில்லை அல்லது கட்டாயப்படுத்தவில்லை.

"உண்மையிலேயே, மும்மொழிக் கொள்கைத் திட்டத்தை நாங்கள் ஏற்றுக் கொண்ட பிறகு, வடக்கே உள்ள ஏராளமான பள்ளிகள் தமிழ், தெலுங்கு, மலையாளம், வங்காளம் போன்ற மொழிகளைக் கற்பித்து வருகின்றன. இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு மொழிப் பிரச்சனையில் என்ன கொள்கையைக் கொண்டிருந்தோமோ அதே கொள்கையைத்தான் இப்பொழுதும் கொண்டிருக்கிறோம் என்பதை நமது மக்கள் அனைவருக்கும் தெளிவுபடுத்தியுள்ளோம். அதாவது இந்தியாவில் உள்ள எல்லா மொழிகளுக்கும் நாங்கள் சம அந்தஸ்து அளிக்கின்றோம்; நிதி உதவி செய்கின்றோம்; எல்லா மொழிகளும், அவைகளின் இலக்கியங்களும் வளர உதவுகின்றோம்.

தமிழ் மொழியை வளர்த்திடுவோம்!

"தமிழ், இந்தியாவின் மிகத் தொன்மை வாய்ந்த மொழிகளில் ஒன்றாகும். தமிழ் ஒரு அழகான மொழி; வல்லமை மிக்க ஒரு மொழி (பலத்த மகிழ்ச்சி ஒலி). தமிழ் மொழிக்கு நாங்கள் எல்லா வகையிலும் சிறந்த பணி செய்கின்றோம். 'சாகித்ய அக்காடமி' தமிழில் உள்ள தொன்மையான நூல்களையும், புதிய நூல்களையும் பிற மொழிகளில் மொழி பெயர்த்து வருகிறது. இதனால் தமிழ் தெரியாதவர்களும் தமிழ் நூல்களில் உள்ள அரிய கருத்துக்களை அறிந்து மகிழ முடியும்.

"இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மண்டலமும்—அது சிறிய மண்டலமாக இருந்தாலும் அல்லது பெரிய மண்டலமாக இருந்தாலும்— தங்களுடைய கலாச்சாரத்தையும், தனித்தன்மையையும் மேம்படுத்தி கொள்ள எவ்வித தடையும் கிடையாது. ஆனால், அவ்வாறு செய்வது, இந்திய தேசிய ஒருமைப்பாட்டையோ அல்லது ஒரு இந்தியனுக்கும் மற்றொரு இந்தியனுக்கும் இடையேயுள்ள ஒற்றுமை உணர்ச்சியையோ அழிப்பதாக இருக்கக் கூடாது."

தமிழகத்தை முன்னேற்றிடுவோம்!

"தற்பொழுது தமிழகத்தைப் பொறுத்தவரையில் நமது முதல் வேலை, தமிழகத்தினை மேம்படுத்துவதற்குரிய விரைவான, உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதுவேயாகும். நீங்கள் திறமை வாய்ந்தவர்கள். உங்கள் திறமையைத்தமிழகத்தின் எல்லைக்குள் நிரூபித்துக் காட்டியதோடல்லாமல், இப்பெரிய நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பரப்பியுள்ளீர்கள். இந்த திறமையும், இந்த ஆற்றலும் மிகமிகச் சிறந்த முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். இதனால், வீணாகக் கழிந்த காலத்தை ஈடுசெய்து, நீங்கள் மீண்டும் பொருளாதார முன்னேற்றத்தில் முன்னோடியாக விளங்க முடியும்."

நிருவாகத்தை மேம்படுத்துவோம்!

"தமிழகத்தின் நிருவாகம் நியாயமானதாகவும், தூய்மையானதாகவும், திறமையானதாகவும், உடனுக்குடன் செயல்படுவதாகவும் அமைந்திட நாங்கள் ஆவன செய்வோம். இதற்கு உங்கள் ஒத்துழைப்பை வேண்டுகிறேன்." —

—இந்திரா காந்தி

[சென்னை மெரினா கடற்கரையில் 15-2-1976 அன்று மாலை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஆற்றிய உரையில் ஒரு சில பகுதிகளின் தமிழாக்கம்.]

பிரதமரின் 20 அம்ச பொருளாதாரத் திட்டம்

(1) அவசியப் பொருட்களின் விலைவாசியைக் குறைக்கத் தொடர்ந்து நடவடிக்கை; உற்பத்தி, கொள்முதல், விநியோகச் சீரமைப்புத் திட்டம்; அரசின் செலவில் சிக்கனம்.

(2) நில உச்சவரம்புச் சட்டம் தீவிரமாக அமல் படுத்தப்படும். உபரி நிலங்கள் ஏழைகளுக்கு விரைவாக வழங்கப்படும். நில உடைமை பற்றிய சான்றுகள் தயாரிக்கப்படும்.

(3) நிலமற்ற ஏழை மக்களுக்கு வீட்டு மனைகள் விரைவாக வழங்கப்படும்.

(4) தொழிலாளர்களை அடிமை போல் நடத்துவது, பிணைப்புமுறை சட்டவிரோதமாக அறிவிக்கப்படும்

(5) கிராமப்புற மக்களின் கடன்சுமை, நீக்கப்படும். நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், கைவினைஞர்களிடமிருந்து கடன் வசூலிப்பதை நிறுத்திவைக்கச் சட்டம் கொண்டு வரப்படும்.

(6) விவசாயத் தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதியம் பற்றி மறு ஆய்வு செய்யப்படும்.

(7) புதிதாக 50 இலட்சம் எக்டேர் நிலத்திற்குப் பாசன வசதி செய்து தரப்படும். நிலத்தடி நீரைப்பயன்படுத்த நாடு தழுவிய திட்டம் வகுக்கப்படும்.

(8) மின்சாரத் திட்டங்கள் முடுக்கி விடப்படும். பெரிய அளவிலான அனல் மின் நிலையங்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் அமைக்கப்படும்.

(9) கைத்தறித் தொழில் வளர்ச்சிக்குப் புதிய திட்டம் வகுக்கப்படும்.

(10) சாதாரண மக்கள் அணியும் துணிகளின் தரம் அதிகரிக்கப்பட்டுத் தாராளமாகக் கிடைக்க வழி செய்யப்படும்.

(11) நகர்ப்புற மற்றும் நகர்ப்புறமாக்கக் கூடிய பகுதி நிலங்கள் சமூக உடைமையாக்கப்படும். காலி நில உடைமைக்கு உச்சவரம்பு கொண்டு வரப்படும்.

(12) அரசுக்குத் தெரியாமல் பெரும் செலவில் வீடுகள் கட்டுவது, வரி ஏய்ப்பு ஆகியவற்றைக் கண்டுபிடிக்கத் தனிப் படைகள் அமைக்கப்படும், வரி ஏய்ப்பு, பதுக்கல், கடத்தல் போன்ற பொருளாதாரக் குற்றங்கள் செய்வோருக்குக் கடும் தண்டனை விதிக்கப்படும்.

(13) கடத்தல்காரர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய தனிச் சட்டம் வரும்.

(14) தொழில் முதலீடுகளுக்கான வரைமுறைகள் தளர்த்தப்படும். லைசென்சுகளைத் தவருகப் பயன்படுத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

(15) தொழில்கள், தொழிற்சாலைகளில் தொழிலாளர்களும் நிர்வாகத்தில் பங்கு பெறப் புதிய திட்டங்கள் வகுக்கப்படும்.

(16) சாலைப் போக்குவரத்து, தேசிய மட்டத்தில் அனுமதி வழங்கும் திட்டம் வரும்.

(17) மத்தியதர, மாத வருவாய் உள்ளவர்களுக்கு நிவாரணம் தர வருமான வரி வரம்பு ரூபாய் 8,000 ஆக உயர்த்தப்படும்.

(18) விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு அவசியமான பொருள்கள் கட்டுப்படுத்தப்பட்ட விலையில் வழங்கப்படும்.

(19) மாணவர்களுக்கு நோட்டு, புத்தகங்கள் மற்றும் இதர பொருள்கள் கட்டுப்படுத்தப்பட்ட விலைக்கு வழங்கப்படும்.

(20) எல்லா மக்களுக்கும், குறிப்பாக எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பு, பயிற்சி வாய்ப்பை அதிகரிக்க உதவித் தொகையுடன் கூடிய பயிற்சித் திட்டம் வகுக்கப்படும்.

ஆளுநர் கருத்துரைகள்

கிராம அபிவிருத்திக்கு

''கிராமப்புறத்தில் ஒருங்கிணைந்த வளர்ச்சி ஏற்படுவதற்கு, திட்ட நிபுணர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள் எஞ்ஜினீயர்கள் ஆகியோர் சேர்ந்து ஓர் ஒருங்கிணைந்த திட்டத்தை வகுக்க வேண்டும்.

''தமிழ்நாட்டில் பத்து கிராமங்களில், கிராம வளர்ச்சி நடவடிக்கையை மேற்கொள்வதற்கு விரிவான திட்டங்கள் தற்போது வகுக்கப்பட்டு வருகின்றன.

''திட்டமிடுவது என்பது கிராம மட்டத்திலிருந்தே துவக்கப்பட வேண்டும். இல்லையேல் வளர்ச்சியடையாத கிராமப் புறத்துக்கும் வளர்ச்சியடைந்த நகர்ப்புறத்துக்கும் இடையே பெரும்வேறுபாட்டு இடைவெளி தோன்றிவிடும்.

''கிராம மட்டத்தில் திட்டமிடுவதன் மூலம் வேலைவாய்ப்பு ஆகியவற்றுக்கு வகை செய்ய முடியும். அத்துடன் பரம்பரைக் கைவினைத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் போன்றவை புத்துணர்ச்சி பெறும். உள்ளூரில் வீணுக விரயமாகும் வளங்களை, சிறுதொழில் பிரிவினர் பயன்படுத்தி, அத்தியாவசியப் பண்டங்களைத் தயாரித்து விற்கக்கூடிய நிலை உருவாகும்.

''கிராம மக்களின் வாழ்க்கை நிலை, அவர்களின் தேவை, கிடைக்கும் வளங்கள் ஆகியவை பற்றிய புள்ளி விவரங்களைத் தொகுத்து கிராம வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறை ஒன்றை வகுப்பதில் இத்துறையில் பயிற்சி பெற்றவர்களின் ஆலோசனை பெறப்படுகிறது. மாநில அரசு, மத்திய அரசு ஆகியவை மேற்கொள்ளும் திட்டங்களோடு துணைத் திட்டங்களை காந்தி கிராமத்தில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.''

—8-2-76-ல் காந்தி கிராமத்தில், கிராம வளர்ச்சிக்கான விஞ்ஞானம் தொழில்நுட்பம் பற்றிய கருத்தரங்கைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை...]

சென்னை நகரை அழகுபடுத்த

''சென்னை மாநகரைச் சுத்தமாகவும் சுகாதாரமான முறையில் அழகாகவும் வைத்துக் கொள்ளத் தீவிரக் கண்காணிப்பும் துரித நடவடிக்கையும் மேற்கொள்ளத் தக்க அமைப்பு முனைப்புடன் செயல்பட வேண்டும்.

''வெறும் நிர்வாக உத்தரவுகளினுல் மட்டும் இந்த இலட்சியத்தை அடைந்துவிட முடியாது.

''லைசென்ஸ் இல்லாத மாட்டுத் தொழுவங்கள் வைத்திருப்பது நகரை அசுத்தப்படுத்துவது, ஆக்கிரமிப்புகள், கலப்படம் ஆகிய குற்றங்களுக்காக ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ மூவாயிரம் வழக்குகளை மாநகராட்சி தொடருகிறது. நீதிமன்றத்தில் இவற்றிற்குத் தீர்வு காணப் பல மாதங்கள் ஆகின்றன. மேலும் அவர்களுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகை சொற்பமானதாக இருப்பதால், எதிர்பார்க்கும் பலன் ஏற்படவில்லை. எனவே நடமாடும் நீதிமன்றம், சுகாதாரப் பாதுகாப்புப் படை ஆகியவை ஏற்படுத்தலாம் என்ற மாநகராட்சியின் யோசனை பாராட்டுக்கும் ஆதரவுக்கும் உரியதாகும்.

''சென்னை நகரிலிருந்து தொலைவில் வெளி இடத்திற்குக் கறவை மாடுகளையும், மாட்டுத் தொழுவங்களையும் அப்புறப்படுத்த வேண்டுமெனும் யோசனை வரவேற்கத்தக்கது. சுற்றித் திரியும் கால்நடைகளால் ஏற்படும் சாலை விபத்துக்கள் தவிர்ப்பு, சுகாதார மேம்பாடு ஆகியவை கருதி இந்த ஏற்பாடு அவசியமாகும்.

—சென்னை மயிலை ஸ்ரீனிவாச சாஸ்திரி மண்டபத்தில் 6-2-76-ல் நகரை அழகுபடுத்தும் இயக்கத்தைத் துவக்கி வைத்துப் பேசியது.

பல்கலைக் கழகங்களில் பொதுப் பரிட்சை!

கல்லூரிகளில் சேர்வதற்கான நுழைவுத் தேர்வுகளை, நாட்டில் உள்ள எல்லா பல்கலைக்கழகங்களுக்கும் பொதுவான தேர்வாக நடத்த வேண்டும்.

இந்தப் பொதுப் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களுடைய மதிப்பெண்களின் அடிப்படையில் அவர்களைக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளலாம். ஒவ்வொரு கல்லூரியிலும் சேரும் மாணவர்கள் பட்டியலையும், அவர்களது மதிப்பெண்களின் பட்டியலையும் பகிரங்கமாக வெளியிடும் படி வற்புறுத்தலாம்.

தமிழ்நாடு கல்வி டிரஸ்ட் அமைக்கும் விடுதிகளில் தகுதி அடிப்படையிலேயே மாணவ, மாணவியர் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். மற்றபடி, மதம், ஜாதி, இனப்பாகுபாடுகள் ஏதும் பார்க்கப்படாது. இந்த விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு அவர்கள் படிப்பு முடிந்ததும் வேலைவாய்ப்பு தருவதற்கு தொழில் அதிபர்கள் முன்வர வேண்டும்.

தமிழ்நாட்டின் பல இடங்களில் மாணவிகளுக்காக 4 விடுதிகளையும், மாணவர்களுக்காக 10 விடுதிகளையும், தமிழ்நாடு கல்வி டிரஸ்ட் கட்டியுள்ளது. மாணவிகளுக்காக மேலும் 10 விடுதிகளையும், மாணவர்களுக்காக மேலும் 4 விடுதிகளையும் இந்த டிரஸ்ட் கட்டும்.

விடுதிகளில் இடம் கிடைக்காத மாணவிகளுக்கு உபகாரத் தொகைகள் வழங்கவும், இந்த டிரஸ்ட் திட்டமிட்டுள்ளது. மாணவியர் விடுதிகளை அமைப்பதற்காக எம். ஏ. முத்தையா செட்டியார் ரூ. 13 இலட்சம் நன்கொடை அளித்துள்ளார்.

[2-2-76-ல் தமிழ்நாடு கல்வி டிரஸ்ட், சென்னை கமாண்டர் இன்சிப் சாலையில் கட்டியுள்ள ராணி மெய்யம்மை மாணவியர் விடுதித் திறப்பு விழாவில் மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் ஆற்றிய தலைமையுரை].



ஊரகச் சீரமைப்புத் திட்டம் வெற்றி பெற உதவிடுக!

இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் 70 சதவிகிதத்தினர் கிராமங்களில்தான் வாழ்கின்றனர். அந்தக் கிராமங்களின் வாழ்வே நகரங்களின் நல்வாழ்வாகும். இதனை நன்குணர்ந்தே, 'இந்தியாவின் உயிர் நாடி கிராமங்களே' என்றார் காந்திஜி.

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, கிராம வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்துள்ளது. இப்போது, பிரதமர் இந்திரா அவர்களின் இருபது அம்சப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களிலும் கிராம வளர்ச்சிக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் இந்திரா அவர்களின் இந்தப் பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின்கீழ், கிராமப்புனரமைப்பிற்காக - சென்னையிலிருந்து 32 கிலோ மீட்டர் தூரத்தில்- செங்கற்பட்டு மாவட்டம் குன்றத்தூர் வளர்ச்சி வட்டாரத்தில் ஸ்ரீபெரும்புதூருக்கும் குன்றத்தூருக்கும் இடையேயுள்ள சோமங்கலம் பகுதியில் 10 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இத்திட்டப்பகுதியின் மொத்தப் பரப்பு 2,500 எக்டேர். இப்பரப்பில் வாழும் மொத்த மக்கள் தொகை 11 ஆயிரம் ஆகும்.

கிராமப்புறப் புனரமைப்பு முன்னோடித் திட்டமான இத்திட்டத்திற்கு ஊரகச் சீரமைப்புத் திட்டம் என்று பெயர். பிரதமர் இந்திராவின் 20 அம்சத் திட்டத்தின் அடிப்படையில் இங்கு 6 ஆயிரம் ஏக்கர் நிலம் பயிரிடப்படவும், அப்பகுதியில் உள்ள நீர்ப்பாசனத் திட்டங்களை முழுமையாகப் பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அந்தப் பகுதி மக்கள் விவசாயம் தவிர, கூட்டுறவுப் பால் பண்ணைகள், கோழி, மாடு வளர்ப்புத் திட்டங்கள் ஆகியவற்றைச் செயல்படுத்தவும் வகை செய்யப்படும். குழந்தைகள் காப்பகம், சுகாதாரத் திட்டங்கள் ஆகியவைகளும் அமல் நடத்தப்படும்.

சோமங்கலம் ஊரகச் சீரமைப்புத் திட்டத்தின் தொடக்க விழாவையொட்டி, 15-2-76-ல் அந்தப் பகுதி முழுவதும் விழாக் கோலம் கொண்டு விளங்கியது.

பிரதமர் இந்திரா அவர்கள், இத்திட்டத்தைத் தொடங்கி வைப்பதற்காக 15-2-76 காலை 9-45-க்கு 'ஹெலிகாப்டர்' மூலம் சோமங்கலம் வந்து சேர்ந்தார். அவருடன் தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்களும் வந்தார்.

பிரதமர் அவர்கள் ஹெலிகாப்டரிலிருந்து இறங்கியதும், செங்கற்பட்டு மாவட்ட கலெக்டர் திவான் முகம்மது அவர்கள் மாலையணிவித்து வரவேற்றார். முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களும், திருமதி கே. கே. ஷா அவர்களும் பாராளுமன்ற உறுப்பினர் ஓ. வி. அளகேசன் அவர்களும் வரவேற்றார்கள். விழாவிற்குச் சிறப்பு அழைப்பாளர்களும், சென்னையில் உள்ள வெளிநாடுகளின் பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். இந்த விழாவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சியை பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

விழாவிற்கு தமிழக ஆளுநர் கே. கே. ஷா. அவர்கள் தலைமை தாங்கினார். அவர் தமது தலைமையுரையில், ''வறுமையை ஒழிக்க பிரதமர் அவர்கள் வகுத்த திட்டத்தின் அடிப்படையில்தான் சோமங்கலம் கிராமப் புனரமைப்புத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது'' என்றும், ''இத்திட்டம் அமலாக இருக்கும் பகுதியில், ஒவ்வொரு குடும்பத்தின் வருமானமும் 400 ஆக உயர வேண்டும் என்பது நோக்கம்'' என்றும் குறிப்பிட்டார்.

ஆளுநர் அவர்களின் ஆலோசகர் ஆர். வி. சுப்பிரமணியம் அவர்கள் தமது வரவேற்புரையில், 'இப்பகுதியில் உள்ள இயற்கை, மனித வளங்களை வீடு தோறும் கணக்கெடுத்தபின் இத்திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது'' என்றார்.

பிரதமர் இந்திரா காந்தி அவர்கள்' தமிழில் ''சகோதரிகளே! சகோதரர்களே!'' என்று தமது பேச்சை ஆரம்பித்தபோதும், 'வணக்கம்' என்று பேச்சை முடித்தபோதும் அவையினரிடையே எழுந்த பலத்த கையொலி விண்ணையே அதிரச் செய்யும்படியாக இருந்தது.

தொடர்ந்து பிரதமர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''எனக்கு மிகவும் பிடித்தமான இந்தக் கிராமச் சீரமைப்பு விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.



''ஒரு காலத்தில் தமிழ்நாடு வளர்ச்சி வேகத்திலும் மற்ற அம்சங்களிலும் இந்தியாவிலேயே முதன்மையாகத் திகழ்ந்தது. ஆனால், துரதிருஷ்டவசமாகக் கடந்த சில ஆண்டுகளில் அது மிகவும் பின்னடைந்து விட்டது. மிகவும் கீழே இருந்த மற்ற பல மாநிலங்கள் தமிழ்நாட்டை முந்திக் கொண்டு மேலே வந்து விட்டன. ஆகவே இந்த இழப்பைத் தமிழ்நாடு ஈடு கட்ட வேண்டும்.

''ஒரு காலத்தில் ஹரியானா மிகவும் பின்னடைந்த பகுதியாக இருந்தது. ஆனால் அம்மாநில முதல்வரும் அரசாங்கமும் எடுத்துக் கொண்ட பெருமுயற்சிகளின் காரணமாக, இப்போது அது மிகவும் முன்னேறி வந்துவிட்டது. இன்று இந்தியாவிலேயே மிகவும் முன்னடைந்த மாநிலங்களில் ஹரியானா மாநிலம் ஒன்றாக விளங்குகிறது.

''விஞ்ஞானத்தையும் தொழில் நுணுக்கத்தையும் விவசாயிகள் மத்தியில் கொண்டு வருவதற்கான கட்டுக்கோப்பான திட்டம் ஒன்று வேண்டும். அவ்வாறு கட்டுக்கோப்பாக அணுகினால்

தான் விவசாயிகள் முன்னேறுவார்கள். இந்தியாவின் சில பகுதிகளில்-குறிப்பாக ஆந்திராவில் கரீம் நகர்ப் பகுதியில்-இவ்வாறு கட்டுக்கோப்பான அணுகு முறை செயல்படுகிறது.

''ஆங்காங்கு கிடைக்கும் வளங்களைக் கொண்டு கிராமப் பகுதிகளை அபிவிருத்தி செய்யவும், நிருமாணிக்கவும், உருவாக்கவும் விஞ்ஞானிகளும் தொழில்நுணுக்க நிபுணர்களும் முயல வேண்டும். தாம் விரும்பும் அபிவிருத்தி அணுகுமுறை இதுவே. கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு ஆங்காங்கு கிடைக்கும் பொருள்களை அதிகப் பயனுள்ளதாக, வலுவுள்ளதாக ஆக்க விஞ்ஞானத் திறன் பயன்பட வேண்டும்.

''தொழில் மயமாக்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது என்றும், அதனால் கிராம அபிவிருத்தி வேகமாக நடைபெறவில்லை என்றும் சில வட்டாரங்களில் ஒரு கருத்து இருக்கிறது. இதில் உண்மையில்லை. கனரக, நடுத்தர, சிறுதொழில்களைப் பெருக்காமல் எந்த நாடும் தனது சுதந்திரத்தைப் பாதுகாக்க முடியாது. ஒரு நிலையான பொருளாதார அடிப்படையை அமைக்க முடியாது.

''அதிக உரம் போட்டால் அதிகம் தண்ணீர் வசதி இருந்தால் விளைச்சலும் அதிகமாக இருக்கும் என்ற ஒரு கருத்து விவசாயிகளிடையே - குறிப்பாக பஞ்சாப், மகாராஷ்டிர விவசாயிகளிடையே-இருக்கிறது. இரசாயன உரத்தைப் பயன்படுத்த விவசாயிகள் ஊக்குவிக்கப்பட வேண்டியதுதான். ஆனால் அதை இயற்கை கம்போஸ்ட் உரத்துடன் எவ்வாறு சேர்த்து உபயோகிப்பது என்பதையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். விவசாயத்துக்குப் பூச்சி மருந்து அவசியமே ஆனாலும் அவைகளை அளவுக்கு மீறி உபயோகப்படுத்துவது தீங்கு விளைவிக்கும். இதில் ஒரு சமநிலை காணவேண்டும்.

''கிராமப்புற மக்கள் குறிப்பாக மாதர்களும் இளைஞர்களும் சுத்தத்தையும் சுகாதாரத்தையும் பேண வேண்டும். குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் நோய் வராமல் தடுப்பது எப்படி என்பதில் கவனம் செலுத்த வேண்டும். இதற்கு, கிராமப்புறங்களில் உள்ள பொருள்களை எவ்வாறு சிறந்த முறையில் பயன்படுத்தலாம் என்பதையும் கிராம மக்கள் அறிந்திருக்க வேண்டும்.

''இப்போது நாட்டில் உள்ள மக்களுக்குப் போதுமான உணவு உற்பத்தியாகிறது என்பது உண்மைதான். ஆனால் இன்னும் 20 அல்லது 30 ஆண்டுகளில் இது ஒரு பெரிய பிரச்னையாகிவிடும். தமக்குப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் போதிய உணவு, உடை, கல்வி, சுகாதார வசதிகள் பெற உரிமை இருக்கிறது என்பதை ஒவ்வொரு இளம் தம்பதியும் உணர வேண்டும். குடும்பக் கட்டுப்பாடு திட்ட விஷயத்தில் தமிழ்நாடு நல்ல பணி செய்திருக்கிறது என்றாலும் இன்னும் நிறையச் செய்ய வேண்டியிருக்கிறது. குடும்பக் கட்டுப்பாடு விஷயத்தில் பெண்களைவிட ஆண்கள் அதிக அக்கறை காட்ட வேண்டும்.

''நாட்டு மக்களுக்கு நன்மை கிடைக்க 20 அம்சத் திட்டத்தினை அமல்படுத்தியிருக்கிறோம். இந்த 20 அம்சத் திட்டத்தில் எல்லாத் தேவைகளையும் நிறைவு செய்துவிட முடியும் என்று நான் கூற விரும்பவில்லை. மற்ற முக்கியத் தேவைகளை நிறைவேற்ற, நாம் ஏற்கெனவே திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறோம். இந்தத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட கிராம மக்களும் அதிகாரிகளும் மற்றவர்களும் உதவிட வேண்டும்.''

157

தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவரின் ஆட்சி செயலுக்குக் கொண்டுவரப்பட்டதால், தமிழக ஆளுநர் அவர்களின் ஆலோசகர்கள் திரு. பி.கே.தவே அவர்களும், திரு. ஆர். வி. சுப்ரமணியம் அவர்களும் தலைமைச் செயலாளர் திரு. சபாநாயகம் அவர்களுடனும் மற்றைய உயர் அலுவலர்களுடனும் 1.2.1976 அன்று ஆலோசனை நடத்தினார்கள்.

படமும் செய்தியும்



தேசிய மாணவர்படை இயக்ககங்களுக்கு இடையில் நடைபெற்ற போட்டிகளில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி மாநிலங்களைச் சார்ந்த தேசீய மாணவர் படைத் தொகுதியினர் பல பரிசுகளைப் பெற்றமைக்காக அவர்களை மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் 3-2-'76 அன்று உட்லண்ட்ஸில் நடைபெற்ற விழாவில் பாராட்டினார்.



முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி அவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள சென்னை நகரைத் தூய்மைப் படுத்தும் இயக்கத்தை, 6.2.'76 அன்று சாஸ்திரி மண்டபத்தில் மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு. கே.கே. ஷா அவர்கள் துவக்கி வைத்தார்.



நேரு நினைவுச் சின்னத்தை மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், திரு. எம்.ஏ.எம். ராமசாமி அவர்களிடம் 7.2.'76 அன்று அளித்தார்.

"கணித அறிவியலில் வாழ்க்கை" என்ற கருத்தரங்கில் தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் ஆலோசகரான திரு. ஆர். வி. சுப்பிரமணியம் அவர்கள் 7.2.'76 அன்று உரையாற்றினார்.

தமிழ்நாடு காவல் துறையின் குற்றஞ்சார் அறிவியல் பரிசோதனைக் கூடத்திற்கு 9.2.'76ல் வருகை தந்த ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்கள், குற்றவாளிகளைக் கண்டறிய உதவும் நவீன எலக்ட்ரானிக் கருவியைப் பார்வையிட்டார்.

முதியோர் ஓய்வு ஊதியத் திட்டத்தின் கீழ், திருவில்லிபுத்தூரில் 9.2.'76 அன்று, மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் வயது சென்ற மூதாட்டி ஒருவருக்கு ஓய்வு ஊதியப் பணம் வழங்கினார்.

காந்தி கிராமத்தில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு 8.2.'76 அன்று மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் துணைவியார் திருமதி. மதுபென்ஷா அவர்கள் பரிசு வழங்கினார்.



இந்திய புவியியல் ஆய்வு நிறுவனத்தால், சென்னை அரசினர் அரும்பொருட் காட்சியகத்தில் "காலங் காலமாக வாழ்க்கை" என்ற கருத்தில் ஓவியங்களையும், காட்சிப் பொருள்களையும் கொண்டு அமைக்கப் பட்டிருந்த பொருட்காட்சியை 10.2.1976 அன்று மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் பார்வையிட்டார்.

தமிழ்நாடு மின்சார வாரியம்

பொது அறிக்கை

திருவண்ணுமலை மின்திட்டம் திருவண்ணுமலையினைத் தலைமையகமாகக் கொண்டு 1—10—75 முதல் துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த செங்கம், திருவண்ணுமலை, போளூர், ஆரணி, செய்யார், வந்தவாசி முதலிய ஆறு வட்டங்களைத் தன்னகத்தே கொண்டதாம். ஒவ்வொரு வ்ட்டத் தலைமையகங்களிலும் மின் கட்டணப் பட்டியல்களை வழங்க ஒவ்வொரு வருவாய்த்துறை அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திருவண்ணுமலை மின்திட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் திருவண்ணுமலை (தபால் குறியீட்டெண் 606602) யில் காந்திநகர் ஐந்தாம் தெருவில் 14 கதவிலக்கமிட்ட இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தொலைபேசி எண் 757. திருவண்ணுமலை மேற்பார்வைப் பொறியாளரின் இல்லம் காந்திநகர் நான்காவது தெருவில் 20 கதவிலக்கமிட்ட இடத்தில் அமைந்துள்ளது. தொலைபேசி எண் 753.

இத்திட்டத்தில், திருவண்ணுமலை, போளூர், ஆரணி, செய்யார் இவைகளைத் தலைமையகமாகக் கொண்ட நான்கு பராமரிப்புத்துறைக்கோட்டங்களும், திருவண்ணுமலையைத் தலைமையகமாகக் கொண்ட ஒரு கட்டுமானம், வாணிபம் கோட்டமும் அமைந்துள்ளன. பொதுமக்கள் தங்கள் கோரிக்கைகளையும், குறைகளையும் தொடர்பான அலுவலர்களை அணுகி முறையிட வேண்டிக் கொள்ளப்படுகிருர்கள்.

மாதவராவ் பாலிகா
மேற்பார்வைப் பொறியாளர்

இடம் : திருவண்ணுமலை
நாள் : 8—12—75

திருச்சி மாவட்டக் கூட்டுறவு வினியோக விற்பனைச்சங்கம் லிட்.,

(Regd: 683)

"வாழ்க கூட்டுறவு" "வளர்க வணிகம்"

எங்கள் உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்

உங்கள் கண்ணேட்டத்திற்கு:

மொத்த உறுப்பினர்கள்	...	17,140
பங்கு மூலதனம்	...	7.85 இலட்சம்
மொத்தக் கிளைகள்	...	10
1 நாள் சராசரி விற்பனை	...	0·85 இலட்சம்
1 மாத சராசரி விற்பனை	...	0.27 கோடி
1974–75-ம் வருட விற்பனை	...	3 கோடி
ஊழியர்களின் எண்ணிக்கை	..	175

சங்கத்தின் சிறப்பு அங்கங்கள்

"அமராவதி" சிறப்பு அங்காடி

கரூர் : மணப்பாறை

சங்கம் நிர்வகிக்கும் தொழிற்கூடம்: "ராக்கோ—பிரஸ்"

விரைவில் எதிர்பாருங்கள்!

எங்கள் 'அமராவதி" யை பெரம்பலூரில்

ச. சுந்தரம்
செயலாளர்.

பி. பி. கே. ராஜாசிதம்பரம்
தலைவர்.

மக்கள் நலம் காத்தோம்! மகிழ்ச்சிக்கு வித்திட்டோம்!



தமிழ்நாட்டில் மக்களின் நல்வாழ்வைக் காக்க-நோய் நொடியின்றி அவர்களை வாழச் செய்ய வலுவான உடல்பெறச் செய்ய, என்னென்ன சத்துணவு உட்கொள்ள வேண்டுமென அவர்களுக்கு எடுத்துக் கூற-அளவான குடும்பம் அமைத்துக் கொள்ளச் சொல்ல-காலாரா, பிளேக், போன்ற கொள்ளை நோய்களை அகற்ற-காசநோய், தொழுநோய் போன்றவற்றை வேரறுக்கச் செய்ய-தொழிலாள நண்பர்களுக்கு மருத்துவ வசதிகளைப் பெருக்கித் தர-மற்றும் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ வசதி செய்ய-கிராமப் புறங்களில் அமைந்துள்ள சிற்றூர், பேரூர்களில் எல்லாம் வாழும் மக்களுக்கு அனைத்து மருத்துவ - சுகாதார வசதிகளும் கிடைத்திட, என்னென்ன செய்யப்பட்டுள்ளன? ஒவ்வொரு முனையிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் எவையெவை? இவற்றை 'அறிந்திட்டால்தானே' ஆற்றியுள்ள பணிகளின் அளவும், சிறப்பும் தெரியும்.

தமிழ்நாட்டில் மருத்துவ-நலப் பணிகள், மருந்தகங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்ட மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகள், மருத்துவக் கல்வித்துறையின் கீழ் இயங்கும் மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த மருத்துவமனைகள் ஆகியவற்றின் வாயிலாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டின் மக்கள்தொகை 4 கோடியே 21 இலட்சம்! இதில் 2 கோடியே 90 இலட்சம் மக்கள் 13,000 ஊராட்சிகளில்-நாட்டுப் புறங்களில் உள்ள சிற்றூர்கள், குக்கிராமங்கள் ஆகியவற்றிலேயே வாழுகின்ருர்கள்!

அரசினர் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் :

மேற்குறிப்பிட்ட ஊராட்சிகளெல்லாம் அடங்கிய 374 ஊராட்சி ஒன்றியங்கள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. நோய் வருமுன் காப்பதற்கான நலத்துறைப் பணிகள்-நோய்-வாய்ப்பட்டவர் உடலுக்குப் பொருந்தும்படியான தக்க மருத்துவப் பணிகள், மற்றும் வேறு பல நல்வாழ்வுப் பணிகள் ஆகியவை சிற்றூர்களுக்கு அரசினர் ஆரம்ப சுகாதார நிலையங்களின் வாயிலாகவே கிடைக்கின்றன. பல மைல்கள் கடந்து சென்று, வட்ட மருத்துவமனையை அடைந்தாலன்றி மருத்துவ வசதிகளைக் கிராம மக்கள் பெற இயலாத காலமொன்று இருந்தது! ஆனல் இன்று ஊராட்சி ஒன்றியப் பகுதி ஒவ்வொன்றிலும் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி, ஏழை எளிய மக்களுக்கு மருத்துவ-நலப் பணிகளாற்றி வருகின்றன!

தமிழகத்தில் இப்போது 381 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதியிலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் விதம் 367 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும், ஒவ்வொன்றிலும் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் விதம், 7 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும், ஆக 381 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன!

இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் தவிர, கிராமப் புற மக்களுக்காக 137 அரசு மருந்தகங்களும், 200 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களும் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன.

தாய்-சேய் நலப் பணிகள் :

தமிழகத்திலுள்ள 381 ஆரம்ப சுகாதார நிலையங்களின் பொறுப்பில் தாய்-சேய் நல நிலையங்கள் (2974) கிராம மகப்பேறு நிலையங்களாக (Rural Maternity Centres) இயங்குகின்றன. ஒவ்வொரு நிலையத்திற்கும் ஆண்டு தோறும் ரூ. 200 பெறுமான



டாக்டர் பி.ஆர்.பாலகிருஷ்ணன், இயக்குநர், மக்கள் நல்வாழ்வு குடும்பநலத்துறை.



அளவு மருந்துகளை அரசு வழங்கு கிறது. இத்துடன் உள்ளாட்சித் துறையும், நிலையம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 600 பெறுமான மருந்துகளை வழங்குகின்றது.

தாய்-சேய் நலத்திட்டத்தின் கீழ், பேறுகாலத்திற்கு முன்பும், பேறு காலத்தின் போதும், பேறு காலத்திற்குப் பின்பும் தாய்மார்களுக்கு உரிய மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன. குழந்தைகளுக்கு உரிய வயதில் தடுப்பு மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. சத்துணவு கல்வி அளிக்கப்படுகிறது. தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் தேவைக்குத் தக்க சத்துணவும் வழங்கப்படுகிறது.

நகர்ப்பகுதிகளில் வாழும் மக்களுக்கான தாய்-சேய் நலப் பணிகளை நகராட்சிகளின் கீழ் இயங்கும் 370 மகப்பேறு நிலையங்கள் ஆற்றிவருகின்றன.

சில நகராட்சிகள் பேறு காலம் பார்க்கும் மகப்பேறு விடுதிகளை நடத்துகின்றன. தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட மகப் பேறு விடுதிகள் 125 செயல்பட்டு வருகின்றன.

பள்ளிச் சிறுர்களின் நலம் பேண வேண்டி, பள்ளி நல்வாழ்வுப் பணிகள், (School Health Services) ஆசிரியர்கள், பெற்ேறர்கள் ஆகியோரை ஈடுபடுத்தி ஆற்றப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ், பள்ளிச் சிறுர்கள் பரிசோதிக்கப்பட்டு, அவசியமானல் சிகிச்சையும் பெறுகிறுர்கள். 1965-ல் துவக்கப்பட்ட இத்திட்டச் செயலாக்கத்திற்கென 12 பள்ளிச் சுகாதாரப் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டனர். பின் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்களும், 74-75, 75-76 ஆகிய இரண்டு ஆண்டுகளில் அடுத்த 25 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்பட்டதுடன், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் இத்திட்டத்தை விரிவுப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ், 677 பள்ளிகளுக்குச் சுகாதாரக் கழிவறைகள் கட்டித் தரப்பட்டுள்ளன. ஐந்து நகர்ப்புறப் பகுதிகளிலும் இப்பணி ஆற்றப்பட்டு வருகிறது.

நல்வாழ்வுக் கல்வியில் (Health Education) 1971-ஆம் ஆண்டு முதல் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது வரை 363 ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள்.

சத்துணவுத் திட்டமும், கலப்படத் தடுப்புத் திட்டமும்:

சத்துணவுத் திட்டத்தின் அவசியத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்வது மிக முக்கியப் பணியாகும். தாய்-சேய் நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றிற்கு வரும் தாய்மார்களிடையேயும், பள்ளிகளிலும், தொழிலாளர்களிடையேயும் சத்துணவு பற்றி விளக்கம் அளிக்கப்படுகிறது. மாநில சத்துணவு ஆராய்ச்சிக் கூடம், மிகக்குறைந்த செலவில் அடங்கும் சத்துணவுகளைத் தயாரித்து, மக்களிடையே அறிமுகப்படுத்துகிறது.

தமிழ்நாட்டில் எந்தப் பகுதி மக்களுக்கு என்ன சத்துணவுக் குறைபாடு என்பதை ஆய்வு நடத்தி அறிந்து சொல்வதோடு, அக்குறைகளைப் போக்க நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது. இவ்வாண்டு கிராமப்புறங்களில் உள்ள இரத்த சோகையைப்பற்றி ஆய்வு நடத்தப்பட்டது.

உணவுக் கலப்படத்தால் சமுதாயம் பாதிக்கப்படக்கூடாது என்பதில் அரசு மிகுந்த அக்கறைகாட்டி வருகிறது. உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம் தமிழ்நாட்டில் முனைப்போடு செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டு தோறும் சற்றேறப்ப 25,000 உணவு மாதிரிகள் சோதனை செய்யப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. அரசு இதில் மிகுந்த அக்கறை காட்டுகிறது. மதுரை, தஞ்சை, சேலம், பாளையங்கோட்டை ஆகிய நான்கு இடங்களில் புதிய ஆய்வுக் கூடங்களை அரசு அமைத்துள்ளது என்பதும், விரைவில் அவை இயங்க இருக்கின்றன என்பதும், குறிப்பிடத்தக்கது, 1975 ஜூன் திங்கள் இறுதி வரை 2,04,901 உணவு மாதிரிகள் சோதிக்கப்பட்டு, 44,530 கலப்படம் செய்யப்பட்டவை எனக் கண்டுபிடிக்கப்பட்டு, அபராதம் விதிக்கப்பட்டது. அவ்வகையில் அபராதமாக 40.14 இலட்சம் ரூபாய் வசூலானது.

பெரியம்மை நோய் ஒழிக்கப்பட்டது:

பெரியம்மை நோய் வராமல் தடுக்க அரசு தீவிரப் பணிகளை மேற்கொண்டது. அம்மைப்பால் வைப்பதில் முனைப்புப்பணிமேற்கொள்ளப்பட்டது. இதற்காக அம்மைப்பால் வைக்கும் பணியாளர்கள் (Vaccinators) 450 பேர்களும், 132 சுகாதார ஆய்வாளர்களும் நியமிக்கப்பட்டனர். 1969-லேயே பெரியம்மை நோய் தமிழ்நாட்டில் அறவே ஒழிக்கப்பட்டு விட்டது. இந்நோய் ஏற்படாமல் தடுக்க மேலும் 55 சுகாதார ஆய்வாளர்களும் அம்மைப்பால் வைக்கும் பணியாளர் 199 பேர்களும் 1972 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டனர். இவற்றையும் மீறி பெரிய அம்மை நோய் ஏற்படுமானல், அதனல் பாதிக்கப்பட்டோரை முதன்

முதலாகக் கண்டறிந்து சொல்வோருக்கு ரூ. 1000/- அன்பளிப்பு அளிப்பதாக அரசு அறிவித்துள்ளது. இது மக்களுக்கு அம்மை நோய் ஏற்படாமல் தடுக்க அரசு எத்தனை அக்கறையோடு செயல்படுகிறது என்பதை விளக்கும்.

கொள்ளை நோய்கள் தடுப்புத் திட்டம்:

காலரா, மலேரியா பிளேக் போன்ற கொள்ளை நோய்களை ஒழித்திடத் திட்டமிட்ட முனைப்பான பணிகள் இங்கு ஆற்றப்பட்டு வருவதின் காரணமாக இந்நோய்கள் கட்டுக்கடங்கி இருக்கின்றன, என்று கூறலாம். சுற்றுப்புறச் சுகாதாரத்தைப் பேணிப் பாதுகாத்தால், காலரா நோய் ஏற்படாமல் தடுக்கலாம். இதன் அடிப்படையில் கிராமப் புறங்களில் கழிவறை அமைக்கும் திட்டம் (Rural Latrine Construction) 22 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பரிசோதனை அடிப்படையில் செயல்படுத்தபடுகிறது. நல்வாழ்வுக் கல்வியின் மூலம் இது பற்றி விரிவாக எடுத்து விளக்கப்பட்டு வருகிறது. இதற்காக 1973-74, 74-75 ஆகிய ஆண்டுகளில் 6.4 இலட்ச ரூபாய் செலவிடப்பட்டது. 1975 76-ல் 5 இலட்ச ரூபாய் செலவில் இப்பணி ஆற்றப்பட்டு வருகிறது.

மலேரியா நோய் ஒழிப்புத் திட்டமும் செம்மையாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிளேக் நோய் தமிழ்நாட்டில் இல்லை என்று சொல்லத்தக்க அளவுக்குப் பணிகளாற்றப்பட்டு வருகின்றன

இவையன்றி யானைக்கால் நோய் பரவாமல் தடுக்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் எங்கெங்கு யானைக்கால் நோய் நிலவியிருக்கிறது என்பது பற்றி ஆய்வு நடத்த வேண்டும். இதனைக் கட்டுப்படுத்த மருத்துவப் பணியாளர்கள் அடங்கிய குழுக்கள் (Fibria Control Unit) பணியாற்றி வருகின்றன. 1966-க்கு முன்பு அப்படிப்பட்ட குழுக்கள் 4 செயல்பட்டன. இப்போது 12 குழுக்கள் செயல்படுகின்றன. இந்நோய் தொடர்பான 'இரவு நேர சிகிச்சை நிலையங்கள்' (Night Clinics) 27 திறக்க அரசு உத்தேசித்துள்ளது.

நரம்புச் சிலந்தி என்ற நோய் விழுப்புரம், திருக்கோவிலூர், போளூர், பவானி, நத்தம், மதுரை, செந்துரை ஆகிய ஊர்களைச் சுற்றியுள்ள கிராமங்களில் பரவலாக இருந்து வருகிறது. இந்நோயைத் தடுப்பதற்காக ஆறு மருத்துவக் குழுக்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன.

மேற்குறிப்பிட்ட அனைத்து நலத் துறைப் பணிகளுக்கும் 1974-75 வரை, ஐந்தாண்டுத் திட்டத்தின் பாற்படாத செலவாக ரூ. 5,47,10,000 செலவிடப்பட்டிருக்கிறது. இந்திய அரசிடமிருந்து ரூ. 12,33,93,000 உதவித் தொகையாகக் கிடைத்து செலவிடப்பட்டுள்ளது. மொத்தத்தில் ரூ. 37,98,65,000 செலவாகி இருக்கிறது.

காச நோய்த் தடுப்புத் திட்டம்

கிராமங்களில் வாழும் மக்களுக்கு அவர்களது இல்லங்களுக்கு அருகிலேயே சிகிச்சை அளிக்க வாய்ப்பு அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அதன்படி மாவட்டம் தோறும் மாவட்டக் காச நோய் நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் அந்தந்த மாவட்டத்திலுள்ள எல்லா இதர மருத்துவமனைகளிலும் புதிய நோயாளிகளைக் கண்டு பிடிக்கவும் சிகிச்சை அளிக்கவும் மருந்துகள் வழங்கவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. காசநாய்த் தடுப்பு மருந்தான 'பி.சி.ஜி.'யை 20 வயதுக்குட்பட்டோருக்கு அளிக்க சுகாதார ஆய்வாளர்கள் அடங்கிய குழு ஒன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட நிலையம் தவிர சில முக்கிய தாலுகா நகரங்களிலும் காச் நோய்க்கெனத் தனி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் காசநோய்ச்சிகிச்சை கிராமங்கள் வரை சென்றடைய ஏதுவாகிறது.

தமிழ்நாட்டில் காச நோய்க்குள்ளானவர்கள் எனக் கண்டறியப் பெற்ேறர் 4,94,752 பேர்கள். இதுவரையில், நோய் நீங்கி குணம் பெற்றவர்கள் 99,699 பேர்கள்- காச நோய் தடுப்பு ஊசியான பி.சி.ஜி. ஊசி போட்டுக் கொண்ட 20 வயதுக் குட்பட்டோர் 72,57,762 பேர்கள். அவர்களில் குழந்தைகள் 4,78,586 பேர்களாவர்!

பொதுமக்களிடையே ஆண்டு தோறும் செய்யப்படும் காச நோய் முத்திரை விற்பனையில் தமிழ்நாடு

இந்தியாவிலேயே மிகப் பெரிய சாதனையை ஏற்படுத்தியுள்ளது. காசநோய் முத்திரை விற்பனைப் பணியில், இந்தியாவிலேயே முதலிடம் பெற்று, ஆண்டுதோறும் தொடர்ந்து முதல் பரிசைப் பெற்று வருகிறது தமிழ்நாடு என்பது அனைவரும் பெருமை படத் தக்கதாகும்.

புற்று நோய்த் தடுப்பு

துவக்கத்திலேயே புற்றுநோய் இருப்பதைக் கண்டுபிடிக்கும் முறைகள், சீரிய சிகிச்சை அளிப்பது ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட, புற்றுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தை உரு

வாக்க, 23-3-69-ல் திறக்கப் பெற்ற 'அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் நிலையம்', காஞ்சியில் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையத்தில் பெண்களுடைய கருப்பையில் நேரிடும் புற்று நோயை அதன் ஆரம்ப நிலையில் கண்டு பிடிக்கவும், அறுபது வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலருக்கும் ஏற்படும் வாய்ப் புற்று நோயைத் துவக்கத்திலேயே கண்டு பிடிக்கவும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிலையத்திற்கு உலக சுகாதார நிலையமும், நார்வே நாட்டு உதவி நிறுவனமும் நிதி உதவி அளிப்பதோடு இந்நிலையப் பணியாளர்கள் வெளிநாட்டுப் பயிற்சி பெற உதவுகிறது. அவ்வப்போது நிபுணத்துவம் பெற்ற வெளிநாட்டு ஆலோசகர்களையும் அனுப்பி உதவுகிறது.

நுண் உயிரியல் பள்ளி, சமூக விஞ்ஞானம், சுகாதாரக் கல்வி, புள்ளி விவரம் முதலிய பிரிவுகளைக் கொண்ட இப்புற்றுநோய் நிலையத்திற்குத் தமிழ்நாடு அரசு ஏற்கனவே 10.04 இலட்சம் ரூபாய் செலவிட்டுள்ளது. நடைமுறைச் செலவினங்களுக்கு ஆண்டுதோறும் 3 இலட்சம் ரூபாயையும் செலவிட்டு வருகிறது. இந்நிலையத்துடன் இணைந்த 350 படுக்கைகள் கொண்ட புற்றுநோய் மருத்துவமனையை, காஞ்சிக்கருகேயுள்ள காரைப் பேட்டையில் கட்ட அரசு ஆவன செய்து வருகிறது. இதுவரை 250 படுக்கைகள் கொண்ட புற்று நோய் மருத்துவமனை கட்ட தமிழ்நாடு அரசு 42.02 இலட்ச ரூபாயை அனுமதித்துள்ளது. இறுதியில் இம் மருத்துவமனை 350 படுக்கைகளை உடையதாக்கப்படும்.

மத்திய அரசு, புற்றுநோய் மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைக்கேற்ப அமைக்கவிருக்கும் 11 மண்டலங்களுள்ஒன்றாகத் தன் நிலையை உயர்த்தி இந்நிலையமும் இடம் பெறும்! காலப் போக்கில் தென் கிழக்கு ஆசியாவில் ஒரு மாதிரி மண்டலப் புற்று நோய் மையமாக ஆகும் வாய்ப்பும் இந் நிலையத்திற்கு இருக்கிறது.

தொழுநோய்த் தடுப்புத் திட்டம்

தொழு நோய் நீண்ட நெடுங் காலமாகத் தமிழகத்தில் நிலவி வரும் நோயாகும். இந்நோயுள்ள கிராம மக்களுக்கு நடமாடும் மருந்தகம் மூலம் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. இப்படிச் சிகிச்சை பெறத் தொழுநோய்ப் பணியாளர்கள் கிராமப்புறங்களில் இருந்து பணியாற்றி அம் மக்களுக்கு உதவுகிறார்கள்.

மருந்துகளின் தரம் பேணிப் பாதுகாக்கும் பணி

1940-ஆம் ஆண்டில் நிறைவேறிய மருந்துக் கட்டுப்பாடுச் சட்டம் (The drugs and Cost-metics act—1940) தமிழ்நாட்டில் 1947-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இப்பணியின் மூலம் மருந்துகளின் தரம் குறையாமல் இத்துறை கண்காணிப்பு நடத்தி வருகிறது. மருத்துவமனைகள், மருந்துக் கடைகள் ஆகியவற்றிலிருந்து பொதுமக்களுக்குக் கிடைக்கும் மருந்துகள் கோளாறு எதுவும் இல்லாதவையாய்-தரத்தில் சிறந்தவையாய் இருக்கின்றனவா என்பதை இத்துறை கண்கணித்து உதவி வருகிறது.

இப் பணியைத் திறம்பட நடத்துவதற்காகப் பணியாளர்களைத் தமிழ்நாடு அரசு அதிகரித்தது. 1967-ல் தமிழ்நாட்டில் 5 முதுநிலை மருந்து ஆய்வாளர்களும், 14 மருந்து ஆய்வாளர்களும் பணியாற்றினர். நல்வாழ்வு குடும்ப நலத்துறை இயக்குநரின் கீழ் உதவி இயக்குநர் ஒருவர் பணியாற்றினார்.

1970-ஆம் ஆண்டில்45 மருந்து ஆய்வாளர்களும், 5 முதுநிலை மருந்து ஆய்வாளர்களும் கூடுதலாக நியமிக்கப்பட்டனர். மாநில மட்டத்தில் 1972-ஆம் ஆண்டில் துணை இயக்குநர் ஒருவரும், உதவி இயக்குநர் ஒருவரும் கூடுதலாக நியமிக்கப்பட்டனர்.

1972-ஆம் ஆண்டில், மருந்து தயாரிப்பதில் ஒருபெரும் மோசடி கண்டு பிடிக்கப்பட்டு குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. உரிய விலைக்கு மேல் அதிக விலைக்கு மருந்துகளை விற்றோர் கண்டு பிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் மருந்துகளின் தரம் இத்துறையின் பணியால் உயர்ந்திருக்கிறது என்றே சொல்லலாம். மருந்துகளை ஆய்வு செய்வதற்கான இப்போதைய ஆய்வுக் கூட வசதிகள் போதாததால் 20 இலட்ச ரூபாய் செலவில் எல்லா வசதிகளும் கொண்ட முழுமையான ஆய்வுக் கூடம் ஒன்றைக் கட்டி முடிக்க அரசு அனுமதித்துள்ளது. முதல் மாடி வரையிலான கட்டட வேலைகள் இப்போது முடியும் தறுவாயிலிருக்கின்றன.

இத்துறைக்கான 1968-69 ஆண்டுச் செலவு 2.32 இலட்ச ரூபாய்! நடப்பு 1975-76 ஆண் ஆண்டுக்கான நிதி நிலை ஒதுக்கீடு ரூ. 12,86,000- இதிலிருந்து இத்துறையின் செயல் திறத்தை—செயல்வேகத்தை அரசு உயர்த்தியிருக்கிறது என்பதும், அதனால் பொதுமக்களுக்குப் பெரும் நன்மை ஏற்பட்டுள்ளது என்பதும் தெளிவு!

தொழிலாளர் காப்புறுதித் திட்டம்

தொழிலாளர்களின் நலனில் அக்கறையும் ஆர்வமும் காட்டி வரும் தமிழ்நாடு அரசு—நிருவாகத்தில் அரசு தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் தரத்தில் உயர்வான மருத்துவ வசதியைத் தொழிலாளர்களுக்கு நல்கி வருகிறது. இருபதும் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களும் பணியாற்றும் தொழிற்சாலைகளுக்கு இத்திட்டம் பொருந்தும். இதுவரை ரூ. 500- வரை சம்பளம் பெறும் பதிவு செய்து கொண்ட தொழிலாளர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் வசதி வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டு வந்தன. 1-12-1975 முதல் ரூ. 1000- வரை சம்பளம் பெறும் தொழிலாளர்களுக்கும் இத்திட்டத்தை அரசு விரிவாக்கியுள்ளது. பதிவு செய்து கொண்ட தொழிலாளர்கள் மட்டுமல்லாது அவர்களது குடும்பத்தினரும் இத்திட்டத்தால் பயன்பெறும் திட்டம் சென்னை, மதுரை, கோவை, கோவில்பட்டி ஆகி பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது.

1968-ஆம் ஆண்டு முதல் 1974-75-ஆம் ஆண்டு வரை இத்திட்டத்திற்கென செலவிடப்பட்ட தொகை ரூ. 2,231.27 இலட்சங்கள்! இதில் தொழிலாளர் காப்புறுதித் திட்டக் கழகம் கொடுத்துதவிய நிதி ரூ. 1635.52 இலட்சங்கள். தொழிலாளர் நலன் கருதி தமிழ்நாடு அரசு தன் நிதி ஆதாரங்களிலிருந்து செலவிட்டது ரூ. 595.75 இலட்சங்களாகும்.

பொது மருத்துவ வசதிகள்

மருத்துவ வசதிகளைப் பெருக்குவதற்காக ஆண்டு தோறும் அரசு பல்வேறு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தந்துள்ளது. மாவட்ட மருத்துவ மனைகளில், நோயாளிகள் தங்குவதற்கான படுக்கைகளின் எண்ணிக்கை வெகுவாகஉயர்த்தப்பட்டுள்ளது.

1967-68-ல் அதிகப்படியாக 80 படுக்கைகளை அமைத்துக்கொள்ளவும், 1968-69-ல் 102 படுக்கைகளைக் கூடுதலாக்கிக் கொள்ளவும் 1969-70-ல் 40 படுக்கைகளை அதிகமாக்கிக் கொள்ளவும் 1971-72ல் 330 படுக்கைகளையும், 1972-73-ல் 500 படுக்கைகளையும், 1973-74-ல் 544 படுக்கைகளையும், 1974-75-ல் 346 படுக்கைகளையும் அதிகப்படியாக அமைத்துக் கொள்ளவும் அரசு ஆணைகள் பிறப்பித்தது.

தாம்பரம், பரமக்குடி, சிதம்பரம், கலவை, திருத்தணி, திருப்பூர், பாலடா (நீலகிரி), கொப்பறைப்பட்டி, துறையூர், பவானி திருப்பத்தூர் (முகவை மாவட்டம்), செங்கம், கம்பம், ஒசூர், புதுமம், தாணிப்பாடி, திருமயம், ராசபாளையம், அன்பில், குளித்தலை ஆகிய இடங்களில் புதிய மருத்துவமனைகள்நிறுவப்பட்டன. ஏற்கனவே உள்ள மருத்துவ மனைகளில் புதிய மேல் நிலைத் தொட்டிகள், பிரசவவிடுதிகள், அறுவைச் சிகிச்சைக் கூடங்கள், ஆகியவை பற்பல இடங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

53 மருத்துவமனைகளுக்கு 100 (M.A.) வலுவுள்ள ஊடுகதிர் (X-ray) கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றின் மதிப்பும் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் ஆகும். இதயத் துடிப்பினைக் கணக்கிடும் கருவிகள் இருபது மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

1971-ஆம் ஆண்டுக்குப் பின்னர் 12 இடங்களில் குருதி சேமிப்பு நிலையங்களும், 71 பல் சிகிச்சை நிலையங்களும், 7 முடநீக்குப் பிரிவுகளும், 5 கண்சிகிச்சைப் பிரிவுகளும், காது மூக்குத் தொண்டை சிகிச்சைப் பிரிவுகள் நான்கும், பால்வினை சிகிச்சைப் பிரிவுகள் (V. D.) ஆறும், குழந்தைகள் நலப்பிரிவுகள் இரண்டும் மனநோயியல் பிரிவுகள் நான்கும் நிறுவப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி சிகிச்சைகளுக்கு இன்றியமையாத பரிசோதனைக் கூடங்கள் (District Public Health Laboratory), மாவட்ட அளவில் தூத்துக்குடி, ஊட்டி, தர்மபுரி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டன. கோவையில் மிகப் பெரிய சோதனைக் கூடம் (Principal Laboratory) நிறுவப்பட்டது. இக்கூடத்தில் சிகிச்சைக்குரிய பரிசோதனைகள் மட்டுமின்றி கலப்பட உணவு, குடிநீர் ஆகியன வற்றை ஆராயும் வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.



இதயக் கோளாறுகளுக்கு இங்கே சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மாவட்ட மருத்துவமனைகளில் இருதயக் கோளாறுகளுக்காக தீவிர சிகிச்சை அளிக்கும் (Intensive Caronory Care Unit) முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு அத்தகைய சிகிச்சைப்பிரிவு ஒன்று 1975-ல் நிறுவப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் மருத்துவம், மகப்பேறு, அறுவைச் சிகிச்சை ஒவ்வொரு பிரிவிலும் பட்டமேற்படிப்புத் தகுதியை உடைய சிறப்பு மருத்துவர்களை நியமிக்கும் திட்டம் 1974-ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டது.

கிராமப்புற மக்களின் மருத்துவ வசதிகளை அதிகரிக்கும் வகையில் பஞ்சாயத்து ஒன்றியங்களால் நடத்தப்பட்டு வரும் மருந்தகங்களைப் படிப்படியாக அரசு மேற்கொள்ளவிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் 1969-ஆம் ஆண்டு முதல் 102 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மேற்கொண்டுள்ளது.

மருத்துவத் துறைப்பணிகளால் மக்கள் விழுமிய பயனை எய்த வேண்டுமென்ற பெரு நோக்கில் இத்துறை வளர்ச்சிக்கென அரசு ஏராளமான நிதி ஒதுக்கி ஆவன செய்து வருகிறது. 1974-75ம் ஆண்டு இதற்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ. 11.79 கோடியாகும்! அரசு இத்துறைக்கான செலவினத்தை ஆண்டுதோறும் பெருக்கி மக்களது நல்வாழ்வு சிறக்க ஆவன செய்துள்ளது.

தமிழ்நாடு அரசு அமைத்த மாநிலத் திட்டக்குழு, ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவமனையும் குறைந்தது 400 முதல் 650 படுக்கைகள் கொண்டதாக இருக்க வேண்டுமென்று பரிந்துரைத்துள்ளது. இப்பரிந்துரைக்கிணங்க தர்மபுரி, நாகப்பட்டினம், நாகர்கோவில் ஆகியமாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் கூடுதலான படுக்கைகள் அமைக்கும் வகையில் புதிய கட்டிடங்கள் கட்டும் பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தமிழகத்தில் மக்கள் நல்வாழ்வு - குடும்பநலத்துறை மட்டிலா ஆர்வத்துடனும், குன்றா நிறைவுடனும், சீராகவும் செப்பமாகவும் செயல்பட்டு வருகிறது.

மறவாதீர்கள்:

உங்கள் மகள் ஒருநாள்

மணமகளாக அமர வேண்டியவள்!

திருமணம் என்றாலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்றால்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கினால் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்றோம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

	மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது	10 ஆண்டு இறுதியில் கிடைப்பது
	ரூ.	ரூ.	ரூ.
ரெக்கரிங் டிபாசிட்	5/-	375/-	...
	10/-	750/-	...
வளரும் மாதச் சேமிப்பு	5/-	...	825/-
	10/-	...	1,650/-

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002

சிறு தொழில் வளர்ச்சிக்கு உதவும் 'சிட்கோ'

"சிட்கோ'' என்று சுருக்கமாக அழைக்கப்படும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக்கழகம் 1970-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ஆம் நாள் தொடங்கப்பெற்று பின்னர் 1971-ஆம் ஆண்டு சனவரி 20-ஆம் நாள் பொறுப்புகள் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக மாற்றியமைக்கப்பட்டது.

தமிழகத்தில் சிறு தொழில்களைப் பேணிக் காக்கவும், புதுப் புதுத் தொழில்களைத் தோற்றுவிக்கவும், வேலை வாய்ப்புகளை அதிகரிக்கவும் கீழ்க்காணும் சீரிய நோக்கங்களைக் கொண்டு 'சிட்கோ' பெரும் பணியாற்றி வருகின்றது:

1. சிறு தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருள்களைச் செவ்வனே கொள்முதல் செய்து பின்னர் சிறு தொழில்களிடையே சீரான வினியோகத்தை மேற்கொள்ளுதல்.

2. சிறு தொழில்களுக்குத் தேவையான இயந்திரங்களை எளிய தவணை முறைக்கடன் திட்டத்தில் வழங்குதல்.

3. சிறு தொழில்கள் தொடங்கத் தொழில் நுணுக்க அறிவுரை வழங்குதல், புதிய தொழில்கள் தொடங்கத் தொழில் நுட்பத் திட்ட அறிக்கை தயாரித்து வழங்குதல் ஆகியவை.

4. தவணைமுறைக்கடன் திட்டத்தில் சிறு தொழில்களுக்குத் தொழிற்கூடங்கள் கட்டிக்கொள்ளவும், கட்டித்தரவும் வகை செய்தல்.

5. சிறு தொழில்களின் உற்பத்திப் பொருள்களுக்கு விற்பனை வாய்ப்பு ஏற்படுத்தித் தருதல்.

6. சிறு தொழில்களுடைய இறக்குமதி உரிமங்களை ஒன்று திரட்டி, 'சிட்கோ' வழியாக மூலப் பொருள்களை மொத்தமாக இறக்குமதி செய்து தொழிலகங்களுக்கு வழங்குதல், ஏற்றுமதி வளர்ச்சி ஆகியவை.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் 1970-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் இயங்கத் தொடங்கியது. இந்த நிறுவனம் சிறு தொழில்களுக்கு வேண்டிய பல பணிகளைச் செய்து கொண்டு வருகின்றது. 1973-74-ஆம் ஆண்டில் மட்டும் ஐந்து கோடியே எழுபத்தாறு இலட்சத்துப் பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள இரும்பு மற்றும் இதர மூலப் பொருட்களை விநியோகம் செய்துள்ளது. கடந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதத்திலேயே ஆறு கோடியே இரண்டு இலட்சத்து நாற்பத்து மூன்றாயிரம் ரூபாய் மதிப்புள்ள இரும்பு மற்றும் இதர மூலப் பொருட்களை விநியோகம் செய்து கடந்த ஆண்டின் விநியோகத்தையும் விஞ்சிவிட்டது.

இந்த ஆண்டில் சுமார் 225 மெட்ரிக் டன் பொட்டாசியம் குளோரேட்டை இறக்குமதி செய்து சிறுதொழில் தீப்பெட்டித் தொழில்களுக்கு விநியோகம் செய்ய அரசு வர்த்தகக் கழகத்துடன். (State Trading Corporation) ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது. இதே போன்று 'என்றைன்' (Endrine) மட்டன்டாலோ, பாம் ஆயில் (Palm Oil) போன்ற கிடைத்தற்கரிய மூலப்பொருட்களை விநியோகம் செய்ய அரசு வர்த்தகக் கழகத்துடன் ஒப்பந்தம் செய்ய முனைந்து வருகிறது.

சிறுதொழில் முனைவர்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு உதவியாக இர்மாக் (Industrial Raw Material Assistance Centre) என்ற திட்டத்தைத் தொடங்கி இருக்கிறது. சுமார் பத்து இலட்ச ரூபாய்க்குப் பொது நாணயப் பகுதிகளிலிருந்தும் மற்றும் இருபத்தைந்து இலட்ச ரூபாய்க்குப் பணமாகச் செலுத்தக் கூடிய பகுதிகளிலிருந்தும் இத்திட்டத்தைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இறக்குமதி அனுமதிச் சான்றிதழ்களைப் பெறுகிறது. இந்த அடிப்படையில் ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்யும் சிறு

டான்சியின் எழில் படைப்புகள்!

காலத்தை வெல்லும் டான்சியின் தயாரிப்புகள் மர மற்றும் எ∴கு சாதனங்கள் டான்சியின் மேன்மையான படைபபுகள். நாளைய வடிவமைப்புகளில்

இன்றே வழங்கப்படும் இச்சாதனங்கள் நீடித்து உழைப்பவை, நாற்காலிகள், மேசைகள், பீரோக்கள், கட்டில்கள் முதலிய பற்பல எழில்மிகு தயாரிப்புகளை வழங்குவது டான்சி.



டான்சி

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்,
26, ஒயிட்ஸ் ரோடு,
சென்னை-600 014



தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருட்கள் தங்கு தடையின்றிக் கிடைக்கும்படி செய்ய முடியும். இதனால் சிறு தொழில்கள் தங்களுக்கு வேண்டிய மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதில் ஏற்படக் கூடிய காலதாமதம் தவிர்க்கப்படுகிறது.

சிட்கோவினால் சிறு தொழில்களுக்கு விற்பனை செய்யப்பட்ட மூலப்பொருட்களின் மதிப்பு	
ஆண்டு	மதிப்பு ரூ. லட்சம்
1970 அக்டோபர் முதல் 1971 மார்ச் வரை	106.58
1971—72	379.19
1972—73	417.89
1973—74	576.10
1974—75	726.25

தமிழ்நாடு முதலீட்டு நிறுவனத்திடம் கொண்டுள்ள கூட்டுத் திட்டம் இந்த நிறுவனத்தின் குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றாகும். இந்த நிறுவனம் ஆரம்ப காலத்திலிருந்து சிறு தொழில்களுக்குத் தவணை முறைத் திட்டத்தின் கீழ் இயந்திரம் வாங்கவும், தொழிற்கூடங்கள் அமைக்கவும் நிதி உதவி அளித்து வந்தது. இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த முடியாமல் கடுமையான நிதித் தட்டுப்பாடு ஏற்பட்டது. எனவே, ஏப்ரல் திங்கள் 1974-ஆம் ஆண்டிலிருந்து சிறுதொழில் முனைவர்களுக்கு இயந்திரங்கள் வாங்கவும் தொழிற்கூடங்கள் அமைக்கவும் நன்மை தரும் கூட்டுமுறையை ஏற்படுத்தியது. இத்திட்டத்தின் எல்லாத் தொழில் முனைவர்களுக்கும் இயந்திரங்கள் வாங்கவும் தொழிற்கூடங்கள் அமைக்கவும் 90 சதவிகித நிதி உதவியும், தொழில் வல்லுநர்களுக்கு 100 சதவிகித நிதி உதவியும் வழங்கப்படுகிறது.

இதே திட்டத்தில் முன்பு இந்த நிறுவனம் பதினொன்கரை வட்டி சதவீதமும், மூன்று சதவீத பணிக் கட்டணமும் வசூலித்து வந்தது. கடன் தொகையையும் ஆறு ஆண்டுகளில் ஓராண்டு இடைவெளிக்குப் பின் திருப்பிச் செலுத்த வேண்டியிருந்தது. ஆனால் இந்தப்புதிய கூட்டுத்திட்டத்தில் வட்டியோ பின்தங்கிய பகுதிகளுக்கு ஒன்பதை சதவிகிதமும் இதர பகுதிகளுக்குப்பத்தரை சதவீதமுமேயாகும். கடன் தொகையை இரண்டு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு பத்து ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தலாம்.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், மத்திய அரசால் ஒரு ஏற்றுமதி நிறுவனமாகப் பதிவும் பெற்றுள்ளது. மேலும், அது தனது ஏற்றுமதிப் பிரிவைப் வலுப்படுத்தவும் நாட்டிலுள்ள சிறுதொழில்களின் உற்பத்தியைப் பொருள்களின் ஏற்றுமதியைப் பெருக்க மேலைநாடுகளின் தொடர்பை வளப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறது.

1. உள் நாட்டு மூலப் பொருள்

பலதரப்பட்ட இரும்பு மற்றும் எஃகுப் பொருள்கள், துத்தநாகம், கால்சியம், காஸ்டிக் சோடா, சுட்ட நிலக்கரி போன்ற கட்டுப்படுத்தப்பட்ட, கிடைத்தற்கரிய உள்நாட்டு மூலப் பொருள்களை 'சிட்கோ' நிறுவனம் கொள்முதல் செய்து விநியோகித்து வருகிறது. சிறு தொழிலகங்களுக்கான பலதரப்பட்ட இரும்பு மற்றும் எஃகுப் பொருள்களின் மாநிலத் தேவையை இணைதொழில் குழுவின் (Joint Plant Committee) ஒதுக்கீட்டின் மூலமும் இந்துஸ்தான் லிமிடெட், டாடா இரும்பு எஃகு லிமிடெட் போன்ற உற்பத்தியாளர்களின் மூலப் பொருள் கிடங்குகளிலிருந்து கொள்முதல் செய்தும் இரும்பு மற்றும் எஃகுப்பொருள்கள் 'சிட்கோவில்' பதிவு செய்துள்ள சிறு தொழில் நிறுவனங்களுக்கு 'சுழற்சி முறை' மூலம் விநியோகிக்கப்படுகின்றன. துத்தநாகம் கால்சியம், காஸ்டிக் சோடா, நிலக்கரி, சுட்ட நிலக்கரி ஆகிய இதர மூலப்பொருள்கள் தொழில் வணிகத்துறை இயக்குநரின் ஒதுக்கீட்டின்படி சிறு தொழில் நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

•

சோடாகாரம்: 31-3-74 வரை 9.53 இலட்சம் மதிப்புள்ள 636 மெட்ரிக் டன் சோடாகாரம் விநியோகிக்கப்பட்டது. 1-4-74 முதல் 31-12-74 வரை ரூ. 6.91 இலட்சம் மதிப்புள்ள 333.309 மெட்ரிக் டன் விநியோகம் செய்துள்ளது.

உள்நாட்டுத் துத்தநாகம்: 31·3.74 வரை 13.32 இலட்சம் மதிப்புள்ள 191 மெட்ரிக் டன் சுதேச த்துத்தநாகம் விநியோகிக்கப்பட்டுள்ளது. 1-4-74 முதல் 31-12-74 வரை ரூ. 15.00 இலட்சம் மதிப்புள்ள 92,486 மெட்ரிக்

கடன் தவணைமுறையில் சிறு தொழில்களுக்கு இயந்திரங்கள் வழங்குவதில் சிட்கோவின் சாதனை

	1-10-70 முதல் 31-3-71	71-72	72-73	73-74	74-75
பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை	11	154	401	569	268*
மதிப்பு ரூ. லட்சம்	7.62	75.91	173.11	232.76	334.09

இதில் 206 யூனிட்டுகள் (ரூ. 304.14 இலட்சம்) சிட்கோ-டி.ஐ.ஐ.சி கூட்டுமுறையின்கீழ் உதவிபெற்றவை.

சிறு தொழில் துறையில்
தமிழ்நாடு முக்கிய இடம் பெற்றுள்ளது.

குறைந்த காலத்திற்குள்ளாகவே தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் பல்வேறு சிறு தொழில் துவங்குபவருக்கும், சிறப்பாகவும், விரைவாகவும் வேண்டிய உதவிகளைப்புரிந்துவரும் சக்தியாகச்செயல்படுகிறது என்பது அறியக்கிடப்பதாகும்.

'சிட்கோ'வின் வளர்ச்சிப் பட்டியல் சிறப்பினைக் காணீர்:

வழங்கப்பட்ட மூலப்பொருட்களின் மதிப்பு 1970-71-ல் ரூ. 105.38 லட்சமாக இருந்தது, 1974-75-ல் ரூ. 602.43 லட்சமாக உயர்ந்தது. 1970-75-ல் மொத்த மதிப்பு ரூ. 2081.21 லட்சம். வாடகைக் கொள்முதல் திட்டத்தின்படி, 1974-75 வரை பயன்பெற்ற தொழில் துவக்குபவர்கள் 1262. அளிக்கப்பட்ட உதவியின் மதிப்புத் தொகை ரூ. 676.63 லட்சம். தொழில் துவக்கும் தனியாரது நிலத்தில், ரூ. 89 லட்சம் செலவில் 127 வாடகைக் கொள்முதல் தொழிற்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன.

'சிட்கோ'வின் சொந்த நிலத்தில், ரூ. 112.64 லட்சம் மதிப்புள்ள தொழிற்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன—அம்பத்தூரில் 89, திருச்சியில் 12, குருச்சியில் 26 மற்றும் ராணிப்பேட்டையில் 12. ரூ. 229 லட்சம் உத்தேசச் செலவில் 254 தொழிற்கூடங்கள் கட்டப்படவிருக்கின்றன.

1642 தொழில் துவக்குபவர்களுக்கு இதுவரை சிட்கோ வேலை வாய்ப்பளித்துள்ளது. அவர்கள் 15,000 நபர்களுக்கு மேலாகவே வேலைவாய்ப்பை அளித்துள்ளனர். சிறு தொழில்கள் தங்களது தயாரிப்புகளை வெளிநாடுகளில் விற்பனை செய்யவும் மற்றும் அவர்களது வளர்ச்சிப் பணிகளிலும் சிட்கோ உதவி அளிக்கிறது.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்,

நிர்வாகப் பகுதி, தொழிற்பேட்டை,

கிண்டி, சென்னை - 600032.

தொழிற்கூடங்கள் அமைப்பதில் "சிட்கோவின் சாதனை"

தொழிற்பேட்டையின் பெயர்	கட்டப்பட்ட தொழிற் கூடங்களின் எண்ணிக்கை	மதிப்பீடு ரூ லட்சம்	பயன்பெற்ற தொழில் அதிபர்கள்
அம்பத்தூர்	130	100.00	130
திருவரம்பூர்	24	40.0	24
குறிச்சி (கோவை)	51	30.00	51
இராணிப்பேட்டை	31	25 00	31
தொழிலதிபர்களின் நிலங்களில் அமைக்கப்பட்டது	127	98.31	127
	363	293	363

"சிட்கோ" வினல் திட்டமிடப்பட்டுள்ள தொழிற்பேட்டைகள்

இடம்	தொழிற் கூடங்களின் எண்ணிக்கை	மதிப்பீடு ரூ. லட்சம்
திருப்பூர் (கோவை மாவட்டம்)	100	75
மாத்தூர் (புதுக்கோட்டை மாவட்டம்)	7	10
அம்பத்தூர்	25	20
கோயம்புத்தூர்	12	10
பூம்புகார்	12	10
கிருஷ்ணகிரி	25	20
	181	145





டன்கள் விநியோகம் செய்துள்ளது.

ஈச்ச மர எண்ணெய்: 31-3-74 வரை ரூ. 45.74 இலட்சம் மதிப்புள்ள 847 மெட்ரிக் டன் ஈச்ச மர எண்ணெய் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. 1-4-74 முதல் 31-12-74 வரை 0.02 இலட்சம் மதிபபுள்ள 0.377 மெட்ரிக் டன்கள் விநியோகம் செய்துள்ளது.

காட்மியம்: (Cadmium) 31-12-74 முடிய 0.31 இலட்ச ரூபாய் மதிப்புள்ள 0.267 டன்களை விநியோகம் செய்துள்ளது.

நிலக்கரி: தமிழக அரசு சிட்கோவே நிலக்கரியை வாங்கி சிறு தொழில்களுக்கு விநியோகம் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டது. அதன்படி 23.16 இலட்ச ரூபாய் மதிப்புள்ள 5442.915 மெட்ரிக் டன் நிலக்கரியை விநியோகம் செய்துள்ளது.

தேன் இரும்பு; (Pig Iron) 1974-ஆம் ஆண்டில் ஜூலை-ஆகஸ்ட் மாதங்களில் பெருமளவில் தேன் இரும்பு பற்றாக்குறை ஏற்பட்டது. ஆகையால் மெஸர்ன் சக்தி நிறுவனத்தாரிடமிருந்து 8.13 இலட்ச ரூபாய் மதிப்புள்ள .955 டன்களை விநியோகம் செய்தது. இதைத் தவிர இணை உற்பத்திக் குழுவிடமிருந்து (Joint Plant Committee) பெற்ற 27.12 இலட்ச ரூபாய் மதிப்புள்ள 2906.535 டன்களை விநியோகம் செய்துள்ளது.

தமிழகத்தில் பெருந்தொழில் வளர்ச்சி

டிட்கோ

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான "டிட்கோ" எனப்படும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் பொதுத்துறையிலும், கூட்டுத்துறையிலும், பெரிய, மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தும் நோக்கத்துடன் 1965 - ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இதன் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 15 கோடியாகும்.

"டிட்கோ"வின் ஆதரவில் தொடங்கப்பெற்ற திட்டங்களில் இதுவரை மொத்தம் ரூ. 346 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பொதுத்துறையில் முதலீடு ரூ. 68 கோடியும், கூட்டுத்துறையில் முதலீடு ரூ. 278 கோடியும் ஆகும். இந்நிறுவனத்தால், இராமநாதபுரம் மாவட்டம், ஆலங்குளத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள "தமிழ்நாடு சிமெண்ட்" தொழிற்சாலை முதன் முதலாக 1970-ஆம் ஆண்டு உற்பத்தியைத் தொடங்கியது. இத்தொழிற்சாலை ஆண்டுக்கு 4 இலட்சம் டன் உற்பத்தித் திறன் கொண்டதாகும்.

அடுத்து, வட ஆற்காடு மாவட்டம், அரக்கோணத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு உருக்காலை (Tamilnadu Steels) ஊது உலையையும், தொடர் வார்ப்பட வசதிகளையும் கொண்டது. ஆண்டுக்கு 1 இலட்சம் எஃகு உருக்குப் பாளங்கள் தயாரிக்க வல்ல இத்தொழிற்சாலை 1972-ஆம் ஆண்டு உற்பத்தியைத் தொடங்கியது.

ஆலங்குளத்திலுள்ள அரசு சிமெண்ட் தொழிற்சாலையில் தற்போது சிமெண்ட் உற்பத்தி செய்யும் ஈர (Wet) முறையை உலர் (Dry) முறைக்கு மாற்றவும், திருச்சி மாவட்டம், அரியலூரில் ஆண்டுக்கு 2·5 இலட்சம் டன் சிமெண்ட் உற்பத்தி செய்யும் சிமெண்ட் ஆலையொன்றை நிறுவவும் திட்டமிடப்பட்டு வேலை துவங்கப்பட்டுள்ளது. ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையில் உற்பத்தி முறையை மாற்றி அமைப்பதன் காரணமாக மொத்த உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 5 இலட்சம் டன்னாக உயரும். இப்புதிய உற்பத்தி முறை 1977-ஆம் ஆண்டு மத்தியில் செயல்படத் தொடங்கும். அரியலூரில் நிறுவப்பட இருக்கும் புதிய சிமெண்ட் ஆலை 1978-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் உற்பத்தியைத் தொடங்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

இது தவிர மேலும் நான்கு புதிய திட்டங்களைப் பொதுத்துறையில் தொடங்குவதற்கு 'டிட்கோ' சிந்தித்து வருகிறது. ஆண்டுக்கு 31,000 ஸ்கூட்டர்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையை லக்னோவிலுள்ள 'ஸ்கூட்டர்ஸ் இந்தியா லிமிடெட்' என்ற நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் ஆரம்பித்தல், செயற்கை இழை (Synthetics Fibres) தயாரிக்கும் நிறுவனம் அமைத்தல், தேனிரும்பு (Sponge Iron) உற்பத்தி செய்யும் நிறுவனம் அமைத்தல், மற்றும் அரக்கோணம் தமிழ்நாடு எஃகுத் தொழிற்சாலையில் உருட்டுக் கம்பி ஆலை (Re-Rolling facilities) வசதியை ஏற்படுத்துதல் ஆகியவை ஆகும்.

தனியார் ஆர்வத்தையும், செயலாற்றும் திறனையும் நாட்டின் தொழில் வளர்ச்சிக்காகப் பயன்படுத்த வேண்டும் என்பதே கூட்டுத்துறையின் நோக்கமாகும். பொதுவாக இத்துறையில் 'டிட்கோ' 26 சதவிகிதம் பங்குத் தொகையை முதலீடு செய்யும், தனியார் துறையினர் 25 சதவிகிதம் முதலீடு செய்வர். இயக்குநர் குழுவில் 'டிட்கோ' மற்றும் தனியார் ஆகிய இருதுறையைச் சார்ந்தவர்களும் அங்கம் வகிப்பார்கள். நிறுவனத்தின் தலைவரை டிட்கோ நியமிக்கும், நிர்வாக இயக்குநரைத் தனியார் துறையினர் நியமிப்பார்கள். இதுவரையில் கூட்டுத்துறையில் 19 கம்பெனிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில், 6 தொழிற்சாலைகள் ஏற்கனவே உற்பத்தியைத் தொடங்கி விட்டன. அவையாவன :-

நிறுவனத்தின் பெயர்	தயாரிப்பு
1. சதர்ன் பெட்ரோ கெமிக்கல்ஸ்.	யூரியா மற்றும் பிற உரங்கள்.
2. தமிழ்நாடு குரோமேட்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ்.	பி.சி.டி. மற்றும் தோல் தொழிலுக்கு வேண்டிய பிற இரசாயனப் பொருட்கள்.
3 பாண்டியன் கெமிக்கல்ஸ்.	பொட்டாசியம் குளோரேட்.
4. ஆசியா டுபாக்கோ நிறுவனம்.	சிகரெட்டுகள்.
5. டைனவிஷன்	டெலிவிஷன்.
6. சதர்ன் போராக்ஸ்	போராக்ஸ் மற்றும் போரிக் அமிலம்

இவை தவிர 1971-ஆம் ஆண்டு கூட்டுத்துறையில் சேர்க்கப்படும் பொழுதே உற்பத்தியைத் தொடங்கிவிட்ட 'தமிழ்நாடு தாதா பார்மசூடிகல்ஸ்' (Tamil Nadu Dadha Pharmacuticals) (மருந்து வகைகளைத் தயாரிக்கும் நிறுவனம்) தற்போது உற்பத்தியை நான்கு மடங்காகப் பெருக்கியுள்ளது. அதன் உற்பத்தியை மேலும் விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நிக்கல் காட்மியம் செல்ஸ் தயாரிக்கும் தமிழ்நாடு ஆல்கலின்ஸ் பாட்டரீஸ் (Tamil Nadu Alkalines Batteries) என்ற நிறுவனமும், தொழில்களுக்கான உப்புத் தயாரிக்கும் நிறுவனமான மார்தி கிரிஸ்டால்ஸ் (Marthi Crystal Salt Co.) என்ற நிறுவனமும் ஏற்கனவே மாதிரி உற்பத்தியைத் தொடங்கிவிட்டன. அடுத்த சில மாதங்களில் அவை வர்த்தக முறையில் உற்பத்தி (Commercial Prodn.) செய்யத் தொடங்கிவிடும். மேலும், மண்டபத்தில் அமைந்துள்ள கிரேட் சீ டிராலர்ஸ் பில்டிங் யார்டு மண்டபம் லிமிடெட் (Great Sea Trawlers Building Yard Mandapam Ltd.) (மீன்பிடி இயந்திரப் படகு கட்டும் நிலையம்) மீன்பிடி இயந்திரப் படகுகளைப் பழுதுபார்க்கும் பணியினை 1976-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், அரக்கோணம் காஸ்டிங்ஸ் அண்ட் போர்ஜிங்ஸ் நிறுவனமும் (Arkonam Castings & Forgings) தமிழ்நாடு கெமிக்கல் புராடக்ட்ஸ் (Tamilnadu Chemical Products) நிறுவனமும் 1976-ஆம் ஆண்டு இறுதியில் வர்த்தக முறை உற்பத்தியைத் தொடங்கும்.



கூட்டுத்துறையில் நிறுவப்பட்டுள்ள கீழ்க்கண்ட தொழில் நிறுவனங்கள் அடுத்த இரண்டு ஆண்டுக்குள் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அவையாவன :-

நிறுவனத்தின் பெயர்	தயாரிப்பு
1. பைன் மெஷர் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் லிட்.	நுட்பமான அளவைக் கருவிகள்.
2. ஆசியன் பேரிங்ஸ் லிமிடெட்.	பேரிங்குகள்.
3. தமிழ்நாடு இன்டர்நேஷனல் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட்	மெட்டல்கேஸ்ட் சாலிட்டாண்டலம் கப்பாசிட்டர்ஸ்.
4 இன்டர்காண்டினெண்டல் லெதர்ஸ் லிமிடெட்	பதனிடப்பட்ட தோல்கள்.
5 ஸ்டைரோ பிலிம்ஸ் லிமிடெட்	பாலிஸ்டிரின் படச்சுருள்
6 தூத்துக்குடி ஆல்கலின்ஸ் கெமிக்கல்ஸ் லிமிடெட்.	சோடா ஆஷ் மற்றும் அம்மோனியம் குளோரைடு.
7. தமிழ்நாடு புளோரின் & அலைட் கெமிக்கல்ஸ் லிட்.	அலுமினியம் புளோரைடு.

மூலதனம்



இவை தவிர மேலும் 11 புதிய திட்டங்களுக்கான அனுமதிக் கடிதங்களை 'டிட்கோ' பெற்றுள்ளது.

'டிட்கோ', கூட்டுத்துறையிலும், பொதுத்துறையிலும் நேரடியாகச் செய்துள்ள முதலீடுகள் இந்த ஆண்டு ரூ. 5 கோடி ஆகும். 1976 - 77 - ல் ரூ. 10 கோடியைத் தாண்டிவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. முந்திய ஆண்டுகளில் மூலதனத்திற்கான தொகையினைப் பெரும்பாலும் மாநில அரசிடமிருந்து உதவித் தொகையாகவும், கடனாகவும் 'டிட்கோ' பெற்று வந்தது. இது தவிர, 1976-77-ல் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வசதியையும், பொது மக்களிடமிருந்து டெபாசிட்டுகளையும் பெற்றுக்கொள்ளும். அப்படிப் பெறும் டெபாசிட்டுகளுக்கு 3 ஆண்டும் அதற்கு மேலும் உள்ளவற்றிற்கு 12 சதவீத வட்டியும், 2 முதல் 3 ஆண்டு வரை உள்ளவற்றிற்கு 11½ சதவீத வட்டியும், 1 லிருந்து 2 ஆண்டு வரை உள்ளவற்றிற்கு 11 சதவீதம் வட்டியும் வழங்கப்படும்.



ஒவ்வொரு மாட்டிலிருந்தும் வருடத்திற்கு ரூ.500/-க்கு மேல் அதிகப்படி சம்பாதியுங்கள்...
பூன்-ஓ-மில்க்®கிற்கு நாளொன்றுக்கு 20 பைசா செலவிடுங்கள்

கொழுப்பு மிக்க மிருதியான பாலுக்கும், கூடுதலான லாபத்திற்கும் பூன்-ஓ-மில்க்

- பூன்-ஓ-மில்க்கில், ஃபேட்டி மாறுபாட்டு விகிதத்தை அதிகமாக்கி, ஹார்மோனற்ற கெலெக்டோகோக்காகச் செயலாற்றி இதன் பயனாக பால் கறவையை 10% அதிகமாக்கும் அயோடினேடெட் கேஸினின் அடங்கியுள்ளது.
- பூன்-ஓ-மில்க்கில், விரைவில் ஆவியாகும் ஆஸிட்ஸ்களும்—அஸிடேட்டுகளும், புட்ரிக் ஆஸிடும் அடங்கியுள்ளன; இவை வெண்ணெய்ச்சத்தை 15% அதிகமாக்குகின்றன என்பது ரேடியோ ஐஸோடோபிக் சோதனைகள் மூலம் நிருபணமாகியுள்ளது.
- பூன்-ஓ-மில்க்கில், மாடுகளை ஆரோக்கியமாக வைத்திருந்து, பால் ஜுரத்தைக் கட்டுப்படுத்தும் கால்ஷியம், ஃபாஸ்ஃபரஸ் மற்றும் வைட்டமின் 'டி'யின் பூஸ்டர் டோஸும் அடங்கியுள்ளன.
- பூன்-ஓ-மில்க்கில், சிறு அளவுகளில் தேவைப் படும், இன்றியமையாத தாதுப் பொருள்கள் எல்லாம் சிறந்த விகிதங்களில் அடங்கியுள்ளன. இவை மாடுகளின் சினைத் திறனை மேம்படுத்துகின்றன.

பூன்-ஓ-மில்க் மூலம் உங்களுக்கு ஒவ்வொரு மாட்டிலிருந்தும் வருடத்திற்கு ரூ. 500/-க்கு மேல் அதிகப்படி லாபம் கிடைக்கிறது.

- தினமும் ஒருவேளை தீவனத்துடன் 15 கிராம் பூன்-ஓ-மில்க் கலந்து கொடுங்கள்
- ஒவ்வொரு மாட்டிற்கும் தினமும் 1 கிலோ கிராம் அதிகப்படி தீவனம் கொடுங்கள்



பூன்-ஓ-மில்க் கெடுதலற்றது பயன்மிக்கது

கறவைமாடுகளுக்கு பூன்-ஓ-மில்க் ஒரு விதமான கெடுதலுமற்றது என்பதைப் பிரபலமான மிருக வைத்தியர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

1 கிலோ மற்றும் 450 கிராம் பாக்கட்டுகளில் கிடைக்கிறது.

பூன்-ஓ-மில்க் உங்கள் மாடுகளுக்கு ஒரு வரப் பிரசாதம் உங்கள் லாபத்திற்கு ஒரு ஊந்துகோல்

பூன்-ஓ-மில்க்—கால் நடைத் தீவனத் துணை உணவு.
ஆராய்ச்சியின் அடிப்படையில் தயாரிப்பவர்கள்:
ஏரீஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் ப்ரை. லிட்., த.பெ. எண். 9417, பம்பாய் 400 093

விநியோகஸ்தர்கள் :— தண்ணீர்மலை ஏஜென்சி, 41-ஏ, கிரிரோடு, தி. நகர், சென்னை-600017.
இன்டோமேக் கார்ப்பரேஷன், 3, கொல்லன்பட்டறை தெரு, கீழவெளி வீதி, மதுரை-1.
ஸ்ரீ அன்னபூரணா எண்டர்பிரைசஸ், 651/1, ஜவகர் பஜார், கரூர், திருச்சி மாவட்டம்.
விவேகானந்தா எண்டர்பிரைசஸ், 101, மருத்துவமனை சாலை, சீர்காழி அஞ்சல், தஞ்சை மாவட்டம்.
நடராஜ் ஏஜென்ஸீஸ், கோபிசெட்டிபாளையம், கோவை மாவட்டம்.

விற்பனையாளர்கள் இல்லாத பகுதிகளில் ஸ்டாக்கிஸ்ட்டுகள் தேவை.

அரிசன மக்களுக்கு ஆயிரம் நன்மைகள்!

'பிறப்பொக்கும் எல்லா
உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்'.

என்ற பொய்யாமொழிப் புலவரின் வாக்குப்படி பிறப்பால் எவரும் சரிநிகராக இருந்தும், இடையில் எப்படியோ, எப்போதோ, மக்களில் உயர்வு தாழ்வு என்ற பாகுபாடு நுழைக்கப்பட்டு, தீண்டாமை எனும் கொடிய பழக்கம் நமது நாட்டில் நெடுங் காலம் நிலவி வந்ததால் அம் மக்களுக்கு மட்டுமின்றி, நாட்டிற்கும் ஏற்பட்ட இன்னல் பலப் பல!

இந்தியத் துணைக்கண்டத்தில் வாழும் மக்கட் தொகையில் ஏறத்தாழ ஐந்தில் ஒரு பகுதி மக்களைக்கொண்ட ஒரு மாபெரும் சமுதாயத்தையே 'தீண்டத்தகாதவர்' என்று ஒதுக்கி, ஒடுக்கி, நசுக்கி அவர்களைக் கல்லாமையிலும் வறுமையிலும் அறியாமையிலும் ஆழ்த்தி சொல்லொணாக் கொடுமைகளுக்கு உள்ளாக்கினர். நமது நாடு சுதந்திரம் அடைந்ததும் அரசியல் சட்டத்தின் மூலம் இக்கொடிய தீமையை அறவே ஒழிக்க வழி வகுக்கப்பட்டது.

சட்டத்தின் துணைக்கொண்டு தீண்டாமையின் பிடியிலிருந்து விடுபட்டு சமுதாய உரிமையை அடைவதால் மட்டும் பல நூற்றாண்டுகளாக வாடிய, வதங்கிய, தாழ்த்தப்பட்ட இம்மக்கள் மேம்பாடடைய இயலாது என்பதை அரசு உணர்ந்து அவர்களது முன்னேற்றத்தில் கவனம் செலுத்தி பல்வகைத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகின்றது.

தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களின் நிலை உயர்வதற்கும், அவர்களின் வாழ்க்கையில் விரைவில் மறுமலர்ச்சி ஏற்படவும் முனைப்பான செயலாக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாகக் கல்வி, பொருளாதாரம், மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஆகிய இவ்வினங்களில் பல புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும் பல புதிய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

1971-ஆம் ஆண்டு எடுத்த மக்கள் தொகைக் கணிப்புப்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை 412 இலட்சம். இதில் அரிசன மக்கள் 73 இலட்சம். மலைவாசி மக்கள் 3.12 இலட்சம். அரிசன மற்றும் மலைவாசி 'மக்கள் கல்வி, சமூக, பொருளாதாரத் துறையில் மற்ற சமுதாயத்தினரைவிட மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதால், அவர்களின் நிலையினை மேம்பாடடையச் செய்யத் தமிழ்நாடு அரசு தேவையான நிதி ஒதுக்கீட்டினைச் செய்து பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தியும், சலுகைகளை வழங்கியும் வருகிறது.

தற்போது, மாநில அரசால் இந்து அரிசனங்களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் சலுகைகள் (வேலை வாய்ப்பு ஒதுக்கீடு தவிர) அனைத்தும் கிருத்தவ அரிசனங்களுக்கும் வழங்கப்படுகிறது. குறிப்பாக, சிறுதொழில் அமைக்க வட்டியில்லாக் கடன் வழங்குதல், உழவு மாடுகள் வாங்க, விவசாயக் கிணறுகள் வெட்ட மானியம் வழங்குதல், கைத்தொழில் கருவிகள் இலவசமாக அளித்தல், தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இலவச வீடுகள் வழங்குதல் போன்ற சலுகைகளுக்குக் கிருத்தவ அரிசனங்கள் தகுதியுடையவர்களாவார்கள்.

ஏற்றமிகு திட்டங்கள்

1. கல்வி

2. பொருளாதாரம்

3. வீட்டுமனை, வீட்டுவசதி, நல்வாழ்வு மற்றும் இதரத் திட்டங்கள்.

கல்வி

'எண்ணென்ப ஏனை
எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு'

என்பது வானுயர் வள்ளுவன் வாக்கு.

''அன்ன சத்திரம் ஆயிரம்
நாட்டல்

ஐஓபியின் கடன் உதவியால் மீண்டும் விவசாயத்தில் ஈடுபட முடிந்தது

"இரண்டாண்டு வறட்சியினால் கைப்பணமும் செலவாகி உழவு மாடுகளைக்கூட விற்றுவிட்டது. நல்ல மழை பெய்த பிறகும் கூட விவசாயம் செய்ய முடியவில்லை."

"ஐஓபி விவசாயிகளுக்கு உதவுகிறது என அறிந்து அதன் கிளை மானேஜரை சந்தித்தேன். இன்முகத்துடன் வரவேற்ற அவர் என் நிலத்தைப் பார்வையிட்டார். அவர் ஆலோசனைப்படியும் பாங்கிலிருந்து கிடைத்த கடனுதவியாலும் பம்ப் செட் அமைத்து மேடு பள்ளமான நிலத்தைச் சமப்படுத்தி ஐ.ஆர். 20 நெல் பயிரிட்டேன். அமோகமாக விளைந்து என் வருமானம் பெருகியது. தவணைப்படி கடனையும் அடைத்து ஐஓபியில் ஒரு சேமிப்பு கணக்கும் ஆரம்பித்துவிட்டேன்."

"மறு சாகுபடிச் செலவுக்கும், துணைத் தொழிலாக இரு உயர் ஜாதி பால் மாடு வாங்கவும் கடனுதவி செய்துதர ஐஓபி கிளை மானேஜர் இசைந்துள்ளார்"

"மேலும் ஐஓபியின் கிராம ஏற்புத் திட்டத்தின் கீழ் எங்கள் கிராமத்தை எடுத்துக் கொண்டுள்ளார்கள் அதனால் கிராம விவசாயிகள் அனைவரும் பயன் பெறும் வகையில் புதிய கிணறுகள் வெட்டவும், இருப்பவற்றை ஆழப்படுத்தவும், பம்ப் செட், டிராக்டர், பவர் டில்லர், ஸ்பிரேயராகியவை வாங்கவும் ஆடு, கோழி, பால் பண்ணைகள் வைக்கவும், உரம், பூச்சி மருந்து, விதை விற்பனைக்கு உதவவும், விஞ்ஞான ரீதியில் பயிர்ச் சாகுபடிக்கும் நல்ல ஆலோசனைகள் கூறுவதோடு கடனுதவிக்கும் ஏற்பாடு செய்து தருகிறார்கள்"

இதே போன்று நீங்களும் ஐஓபியிடம் உதவி பெறலாம். "ஐஓபியின் கடனுதவி உழவர்க்குப் பல வசதி" பற்றி அறிந்து கொள்ள கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புங்கள் அல்லது அருகில் உள்ள ஐஓபி கிளை மானேஜரிடம் விவரம் கேளுங்கள்.

'ஐஓபியின் கடனுதவி உழவர்க்கு பல வசதி' பற்றிய சிற்றிதழ் அனுப்புக

பெயர்:

முகவரி:

இந்தக் கூப்பனை பூர்த்தி செய்து இந்தியன் ஓவர்சீஸ் பாங்க், 151, மவுண்ட் ரோடு, சென்னை-600 002 என்னும் முகவரிக்கு அனுப்பவும். அல்லது அருகில் உள்ள ஐஓபி கிளை மானேஜரை அணுகவும்.

ஆம்

இந்தியன் ஓவர்சீஸ் பாங்க்

உங்கள் வளர்ச்சிக்கோர் உத்தம நண்பன்

108-1011a

அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்'

எனப் போந்தான் பைந்தமிழ் கவிஞன் பாரதி.

இவை கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. மேலும், கல்வியில் ஏற்றம் கண்டால், சமுதாயத்தில் சம உரிமையையும், பொருளாதார முன்னேற்றத்தையும் மற்ற வசதிகளையும் விரைவில் பெற இயலும் என்பதாலும், கல்விக்கு முதலிடம் தரப்பட்டுள்ளது. ஆகவே ஒவ்வொரு ஆண்டும் அரிசன நலத்துறைக்கென ஒதுக்கப்படும் நிதியில் பெரும்பங்கு கல்விக்காகச் செலவிடப்படுவது உள்ளங்கை நெல்லிக்கனி!

படிப்பு உதவித் தொகை

அரிசன-பழங்குடி இனத்தைச் சார்ந்த மாணவ மாணவியர்களுக்கு தொடக்க வகுப்பிலிருந்து பட்ட மேற்படிப்பு வரையிலுமான பல்வகைப் படிப்புகளுக்கு உதவித் தொகை வழங்கப்படுகின்றது. 1966-67-ஆம் ஆண்டு இதற்காக வழங்கப்பட்ட தொகை ரூ. 88.20 இலட்சங்களாகவும், பயனடைந்தோர் எண்ணிக்கை 2,42,845 ஆகவும் இருந்தது விரிவடைந்து 1974-75 இல் அவை முறையே ரூ. 228.36 இலட்சங்களாகவும், 4,89,009 ஆகவும் உயர்ந்துள்ளன. நடப்பு நிதியாண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை 246.71 இலட்சங்களாகும்.

மேலும் பல புதிய சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் சில.

காந்தி நினைவு படிப்புதவித் தொகை

தேசத்தந்தை மகாத்மா காந்தி அடிகளின் நினைவைப் போற்றும் முகத்தான், ஒவ்வொரு மாவட்டத்திலும் புகுமுக வகுப்பில் முதலாவதாகத் தேர்வு பெறும் ஒரு அரிசன மாணவருக்கும் ஒரு அரிசன மாணவிக்கும் சிறப்புத் தொகையாக ஒவ்வொருவருக்கும் முதலாண்டு ரூ. 1,500, இரண்டாம் ஆண்டு ரூ. 1000 என்ற அடிப்படையில் தொடர்ந்து ஆறு ஆண்டுகளுக்கு வழங்கப்படுகின்றது. இத்துடன் அவர்கள் தங்களுக்குரிய மற்ற சாதாரண உதவித் தொகைகளையும் பெற்றுக் கொள்ளலாம். இதற்கு வருமான வரம்பும் கிடையாது.

உயர்நிலைப்பள்ளிப் பொது இறுதித்தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் இரண்டு இடங்களைப் பெறும் மாணவர்களுக்குச் சிறப்பு உதவித்தொகை வழங்கப்படுகின்றது.

உயர் படிப்பிற்குக் கடன் உதவித் தொகை

புகுமுக வகுப்பிற்கு மேலான பட்ட வகுப்புகளிலும், மருத்துவம், பொறி இயல் போன்ற தொழில் படிப்பு பயில்பவர்களுக்காக இத்திட்டம் 1971-72-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து படிப்படியாக உயர்ந்து இது தற்போது ரூ. 9.26 இலட்சங்களாக உயர்ந்துள்ளது. ஆயிரக்கணக்கான மாணவ மாணவியர் பயன் பெறுகின்றார்கள். இது வட்டியில்லாக் கடன். படித்த பிறகு வேலை கிடைத்த ஓராண்டில் சுலபத் தவணையில் திருப்பிக்கட்ட வேண்டும்.

தகுதி அட்டைகள் (Entitlement Cards) வழங்குவதன் மூலம் கல்லூரிகளில் புதிதாகச் சேரும்போது, கல்விக்கட்டணம், உண்டுறை முன்பணம் முதலியன செலுத்தாமல் சேர வசதி செய்யப்பட்டுள்ளது. தேவைப்படுபவர்களுக்கு சென்னை நகரில் ரூ. 200-ம், வெளியூர்களில் ரூ. 150-ம் முன்பணமாக (Adhoc Grant)வும் வழங்கப்படுகின்றது.

இட ஒதுக்கீடு :

கல்லூரிகள், தொழிற்கல்வி நிலையங்கள் முதலியவற்றில் 18 விழுக்காடு இடங்கள் அரிசன மற்றும் மலைவாழ் மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த ஒதுக்கீடு எல்லா வகையான படிப்புகளிலும் உள்ள ஒவ்வொரு பிரிவிற்கும் பொருந்தும். பௌதீகம், இரசாயனம், தாவர இயல், உயிரியல், கணிதம் முதலிய அறிவியல் படிப்புப் பயிலும் திறமையான மாணவ மாணவியர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

இதேபோல் மற்ற கலைப்படிப்பு (Arts Courses) பயில்பவர்களுக்கும் தற்போது சென்னையில் மட்டும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. கோவை, மதுரை, திருச்சி நகர்களுக்கும் இத்திட்டம் விரைவில் நீட்டிக்கப்படும்.

கல்வித்துறை, தனியார் கல்வி நிறுவனங்கள் தவிர, அரிசன நலத் துறையினால் நடத்தப்படும் பள்ளிகளின் விவரம் பின்வருமாறு:

அரிசன நலப் பள்ளிகளிலும் மலைவாசி மக்களுக்கான உறைவிடப் பள்ளிகளிலும் கல்வி பயிலும் மாணவ மாணவியருக்கு இலவசமாகப் புத்தகங்களும் கரும்பலகைகளும் மற்றும் சீருடைகளும் வழங்கப்படுகின்றன. மேலும், அரிசன நலப்பள்ளிகளில் மாணவ மாணவிகளுக்கும் மலைவாசிகளுக்கான உறைவிடப் பள்ளிகளிலும் உண்டி உறையுள் வசதி அளிக்கப்படாதவர்களுக்கும் இலவசமாக மதிய உணவு வழங்கப்படுகிறது. பள்ளிகளுக்குத் தவறாது ஒழுங்காக வருவதையும், தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவதை

> கிராமங்களுக்குத் தொண்டு செய்வது சுயராஜ்யத்தை நிலை நிறுத்துவதாகும்.
>
> வயது வந்த மாணவர்கள், அதாவது கல்லூரி மாணவர்கள் அனைவரும் படித்துக் கொண்டிருக்கும் போதே கிராமத் தொண்டினைத் தொடங்கவேண்டும்.
>
> தொண்டு செய்ய விரும்புகிறவன் கிராமங்களை நாடிச் சென்று, அங்கே தோட்டியாகவும், நூல் நூற்பவனாகவும், காவற்காரனாகவும், ஆசிரியராகவும், ஏககாலத்தில் தன்னை உருவாக்கிக் கொள்ளவேண்டும்.
>
> — காந்தியடிகள்

விவரம்	அரிசன நலப் பள்ளிகள்	மலைவாசி மக்களுக்காக உறைவிடப் பள்ளிகள்
தொடக்கப்பள்ளிகள்	742	66
நடுநிலைப்பள்ளிகள்	81	7
உயர்நிலைப்பள்ளிகள்	19	3
இரவுப்பள்ளிகள்	17	—
திண்ணைப்பள்ளி	1	—
மொத்தம்	860	76
1975-76-ஆம் ஆண்டு புதியதாகத் திறக்கப்பட்ட ஓராசிரியர் பள்ளிகள்	100	—
மொத்த பள்ளிகள்	960	76
மேற்கூறிய பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை	1,35,674	5,659

ஒரு பள்ளி மட்டும் உறைவிடமில்லாத பள்ளி

யும், வெற்றி பெறுவதையும் ஊக்குவிக்கும் வகையில் பல்வகை பரிசுத்திட்டங்களும் சுற்றுலாத் திட்டமும் புதியதாகச் செயல்படுத்தப்படுகின்றன.

விடுதிகள்

தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு உண்டி உறையுள் வசதிகள் அளிப்பதற்காக அரிசன நலத் துறையினால் விடுதிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவைகளில் விவரங்கள் பின்வருமாறு:

களுக்காக 49-ம், மலைச்சாதியினருக்காகப் பள்ளியுடன் கூடியவை உள்பட 5-ம் உள்ளன. பயன் பெறும் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை முறையே 3,299-ம், 418-ம் ஆகும்.

தீண்டாமை நீங்கி ஒரு ஒருங்கிணைப்பு ஏற்படுவதற்காக இவ்விடுதிகளில் பிற்பட்ட இனத்தவரும், முற்பட்ட இனத்தவரும் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டில் அனுமதிக்கப்படுகின்றனர். விடுதிகளில் உள்ள மாணவ, மாணவியரின் கல்வித் தரத்தை உயர்த்தப் பகுதி நேர ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

விவரம்	அரிசனங்களுக்காக	மலைவாசிகளுக்காக
உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கானவை	374	10
உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கானவை	156	5
கல்லூரி மாணவர்களுக்கானவை	30	—
கல்லூரி மாணவிகளுக்கானவை	6	—
தொழிற்கல்வி பயில்வோர்களுக்கானவை	7	—
	573	15
பயன் பெறும் மாணவர்கள்	26,694	480
பயன் பெறும் மாணவிகள்	9,377	180
மொத்தம்	36,071	660

அரிசன நலத்துறையிலிருந்து மானியம் பெற்று நடத்தப்படும் தனியார் விடுதிகள் அரிசனங்

பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

சிறுதொழில் துவங்க வட்டியில்லாக்கடன்: சிறுதொழில் அமைக்க வட்டியில்லாக்கடன் 1968-69-அம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. சென்ற ஆண்டு முடிவு வரை 8,689 நபர்களுக்கு ரூ. 54.20 இலட்சம் கடன் வழங்கப்பட்டது. ஆண்டொன்றிற்கு ரூ. 10 இலட்சம் வழங்கப்படுகின்றது. காய் கறிக் கடை, தேநீர் விடுதி, விறகுக்கடை, மளிகைக்கடை, மருந்தகம், அச்சகம், ஈருளிக் கடை போன்ற தொழில்களுக்குத் தகுதியைப் பொறுத்து ரூ. 250 முதல் ரூ. 15,000 வரை கடன் தரப்படுகின்றது. இது 100 மாதத்தவணைகளில் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

கருமார், தச்சு, தையல், தோல்பதனிடுதல், சலவைத் தொழில் இன்ன பிற தொழில்களில் ஈடுபட்டுள்ளோருக்கு அவரவர் தொழிலுக்குத் தேவைப்படும் கருவிகளும், சாதனங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் இரண்டு இலட்சம் ரூபாய் இதற்காகச் செலவிடப்படுகின்றது.

கிராமக் கைத்தொழில் வாரியம், தொழில் வணிகத்துறை, இவை மூலம் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும், பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களும் இயங்கி வருகின்றன.

பாசனக்கிணறுகள் அமைக்க ஒவ்வொரு கிணறுக்கும் ரூ. 2,500-ம் உழவு மாடு, விதைகள், உழவுச் சாதனங்கள் ஆகிய இவற்றை வாங்க ரூ. 600 மானியமாக வழங்கப்படுகின்றது. 55 கூட்டுறவு நிலக் குடியேற்றப் பண்ணைகளும் நடத்தப்படுகின்றன.

369 பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கறவை மாடுகள் வாங்க ரூ. 1,500 அரசால் வழங்கப்படுகின்றது. இதில் 250, மானியமாகவும், மீதமுள்ளது கடனாகவும் தரப்படுகின்றது.

நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவும் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்க வகை செய்யப்படுகின்றது.

இந்திய எரிபொருள் எண்ணெக் கழகத்தாரிடம் மண்ணெண்ணெய் எரிபொருள் (Gas) பெற்று வாணிபம் செய்வதற்குரிய நிதி உதவியை அரசும், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும் வழங்குகின்றன.

வேலைவாய்ப்பு

இந்திய நிருவாகப்பணி (I.A.S.) இந்திய வெளிநாட்டுப்பணி

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட்,

ரெ. எக்ஸ். 406.

14, சித்தர்டன் சாலை, வேப்பேரி, சென்னை 600 007

தொலைபேசி : 30877, 30878 — தந்தி : ''ஹவுஸ்பாங்க்''

செயலாளர் : 33000 — தபால் பெட்டி : 486

தலைவர் : **திரு. பழனிவேல்ராஜன், பி.எஸ்.ஸி., பி.எல்.,**

உப–தலைவர் : **திரு. பி. கஸ்தூரி பிள்ளை**

பொருளாளர் : **திரு. எஸ். பழனிசாமி, எம். ஏ.,**

அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம்	..	ரூ. 5 கோடி
செலுத்தப்பட்ட பங்கு மூலதனம்	..	ரூ. 3,09,02,125/-
பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை	..	ரூ. 25,66,31,157/-

இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்குப் புதிய வீடு கட்ட 15 வருட நீண்ட காலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன.

அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்சக் கடன் அளவு

புதிய வீடுகள் கட்டுவதற்கு	..	ரூ. 30,000/-
புதிய வீடுகள் கட்டுவதற்கு (கிராமிய கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம்)	..	ரூ. 10,000/-

பூ. க. பத்மநாபன், பி.ஏ., எச்.டி.சி.,
இணைப்பதிவாளர்—செயலாளர்.

சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை) எண் 151.
சேலம்-1.

தபால் பை எண். 171 — தொலைபேசி எண் : 2402

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி சேந்தமங்கலம், கொங்கணாபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. வேலூர், சேலம் நம்பாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, பெத்தநாயக்கன் பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

சொந்த நிதி ரூ. 327 லட்சம். — நடைமுறை மூலதனம் 1711 லட்சம்

வட்டிவிகித அட்டவணை

கால் டெபாசிட்டுகள் :	ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்)	3¼%
	ரூ. 10,000/-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்)	3½%
சேவிங்ஸ் டெபாசிட்டுகள் :	ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும்	
	15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும்	3%
	46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும்	3½%

பிக்செட் டெபாசிட்டுகள் : ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு :

1.	91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள்	6%
2.	6 மாதத்திற்கும் அதற்குமேல் 9 மாதத்திற்குள்	6½%
3.	9 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள்	7½%
4.	12 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள்	8½%
5.	36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள்	9½%
6.	61 மாதத்திற்கும் அதற்குமேலும்	10½%

நடப்புக் கணக்கு ½% — **சேமிப்புக் கணக்கு 6%**

ரூ. 5000/-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க.

கி. பாலசுந்தரம், பி.ஏ., துணைப் பதிவாளர், நிர்வாக அதிகாரி. — **பி. காசி, பி.எஸ்.சி., எச்.டி.வி.,** காரியதரிசி. — **எஸ். ஆறுமுகம்,** தலைவர்.

அறிவிப்பு

16-2-76 முதல் 'தமிழரசு' இதழ் தொடர்ந்து புதிய பொலிவுடன் வெளிவருகிறது. சென்ற இதழ் (1-2-76) வெளியிடப்பட முடியாமைக்கு வருந்துகிறோம். அனைவரும் வழக்கம்போல் தொடர்ந்து ஒத்துழைப்புத் தரும்படியும், ''தமிழரசு'' இதழினைப் படித்துப் பயனுறும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம். சந்தாதாரர்களுக்கு 1–2–76 தேதிய இதழுக்குப் பதிலாக, சந்தா முடியும்போது மேலும் ஒரு இதழ் அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிருவாகி

தமிழரசு

(I.F.S.) இந்தியக் காவல்துறைப் பணி (I.P.S.) போன்ற அனைத்திந்தியப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக மத்திய அரசுப்பணியாளர்கள் தேர்வுக் கழகம் நடத்தும் தேர்வுகளில் எழுதித் தேர்வடைவதற்காகப் பயிற்சி அளிக்கும் நிலையம் ஒன்று சென்னையில் மத்திய அரசின் நிதி உதவியுடன் நடத்தப்பட்டு வருகிறது. இதில் 60 நபர்கள் தங்கிப் பயிற்சி பெறலாம். பயிற்சி பெறுபவர்களுக்கு இலவச உண்டுறை வசதியுடன் சிறப்புப் பயிற்சி தரப்படுகின்றது.

இராணுவத்தில் அலுவலர்களாக (Commissioned Officers) சேர விரும்புவர்களுக்கும் பயிற்சி அளிக்கும் நிலையம் ஒன்றும் பிற்பட்டோர்-தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்களுக்காக நடத்தப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு அலுவலர் தேர்வுக் கழகம் நான்காவது பிரிவு அலுவலர்களை (இளநிலை உதவியாளர்-தட்டச்சர்) தேர்ந்தெடுக்க நடத்தும் தேர்வுகளில் வெற்றி வாய்ப்புகளை அதிகப்படுத்த அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நிலையங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்படுகின்றன. இந்நிலையங்களில் தேர்விற்கு முன்பாக 5 திங்களுக்கு இலவசமாகப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. பயிற்சிக் காலத்தில் திங்கள் ஒன்றிற்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 45/- நிதி உதவி வழங்கப்படுகின்றது.

இதுபோல உயர்தர அலுவலர் தேர்விற்கும் பயிற்சி அளிக்க நிலையம் திறப்பது அரசின் கவனத்தில் உள்ளது.

தட்டச்சு, சுருக்கெழுத்து முதலிய பயிற்சி பெறுவதற்காக நிதியுதவி வழங்கப்படுகின்றது. முதல் முறையிலேயே தேர்வு பெறுபவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

பட்டயக் கணக்காயர் பதவிகளில் அரிசன வகுப்பைச் சார்ந்த எவரும் இல்லை என்பதால் ஆண்டுதோறும் சிலரைப் பொறுக்கி எடுத்து இப்பணிக்கான பயிற்சி அளிக்கவும் அதற்காக நிதியுதவி வழங்கவும் அரசு வகை செய்துள்ளது. வணிக வரித்துறைகளிலும் உயர்நீதி மன்றத்திலும் பணிபுரியும் அரிசன மலைவாசிப் பணியாளர் தங்கள் துறையினர் நடத்தும் அலுவலகத் தேர்வுகள் எழுதி வெற்றி பெறத் தனிப் பயிற்சி அளிக்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

அரசுப் பணிகளுக்கு அரிசன மலைவாழ் மக்களுக்கென நிர்ணயிக்கப்பட்டிருந்த 16 விழுக்காடு இட ஒதுக்கீட்டை 18 விழுக்காடாக அரசு உயர்த்தியுள்ளது. பொதுத்துறை (அரசு) நிறுவனங்களுக்கும் இவ்விதி பொருந்தும். இந்த இட ஒதுக்கீடு முறை பதவி உயர்வுகளுக்கும் பொருந்துமாறு நீடிப்பது அரசின் கவனத்தில் உள்ளது.

இட ஒதுக்கீடுமுறை தற்காலிக நியமனங்களுக்கும் கடைப்பிடிக்கப்படவேண்டும் என அரசு ஆணை இட்டுள்ளது. இட ஒதுக்கீடு முறை எல்லாத் துறைகளிலும் (ஊராட்சி ஒன்றியங்கள் உட்பட) சரிவர கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றதா என்று கண்காணிக்க உயர்நிலைக்குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. தமிழக முதலமைச்சர் இதன் தலைவராகவும், அரிசன நல அமைச்சர் துணைத் தலைவராகவும் உள்ளனர்.

வீட்டுமனை, வீட்டுவசதி மற்றும் இதரத் திட்டங்கள்

அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களிலிருந்தும், அவை இல்லாத இடங்களில் தனியாக நிலங்களை விலை கொடுத்துக் கையகப்படுத்தியும், மூன்று செண்டு பரப்பளவிற்குக் குறையாமல் வீட்டுமனைகள் முதற்கட்டமாக வழங்கப்படுகின்றன. 2,35,949 மனைகள் தனியார் நிலங்களைக் கையகப்படுத்தியதன் மூலம் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக இதுவரை ரூ. 4.42 கோடி செலவிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் மட்டும் நிலம் கையகப்படுத்த ரூ. 48 இலட்சம் செலவழிக்கப்பட்டது. இதல்லாமல் குடியிருப்புச் சட்டத்தின்படி வழங்கப்பட்ட 1,66,158 மனைகளில் அரிசனங்களுக்கு மட்டும் 1,03,470 மனைகள் வழங்கப்பட்டுள்ளன.

மனைகள் வழங்கப்பட்ட பின்னர் தாங்களாகவே வீடுகள் கட்டிக்கொள்ள வசதி அற்றவர்களுக்கு மானியமாகவும் கடனாகவும் நிதி உதவி வழங்கி அரிசனங்களுக்கு 21,655 வீடுகளும், மலைவாழ் மக்களுக்கு 4,720 வீடுகளும் அரிசன நலத்துறையால் கட்டித் தரப்பட்டன. கடனாக வழங்கப்பட்டு திரும்பச் செலுத்தப்படாமல் இருந்த ரூ. 35 இலட்சங்களுக்கு மேற்பட்ட தொகையை அரசு தற்போது தள்ளுபடி செய்து விட்டது.

வீட்டுவசதி அனைவருக்கும் விரைந்து செய்து தரப்பட வேண்டுமென்று அரசு விரும்பி

யது. இதற்கென 'அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தை' அரசு துவக்கி அதன் மூலம் நல்ல தரமான வீடுகளைக் கட்டி அரிசனங்களுக்கு இலவசமாக வழங்குகின்றது. ஒரு வீட்டின் மதிப்பு ரூ. 4,000 ஆகும். மலைப்பகுதியில் அமைக்கப்படும் வீட்டின் மதிப்பு ரூ. 6,000 ஆகும். இக்கழகத்திற்கு நடப்பு நிதியாண்டில் ரூ. 8.27 கோடி நிதியுதவியை அரசு வழங்கும். ஏழை அரிசனங்களுக்கு இலவசமாக ஒரு இலட்சம் வீடுகள் கட்டும் திட்டம் செயற்பட்டு வருகிறது.

துப்புரவுத் தொழில் செய்பவர்களுக்கென வீடுகட்டும் திட்டம் ஒன்று செயல்பட்டு வந்தது. இத்திட்டமும் இனி அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தால் செயல்படுத்தப்பட்டு. சுதந்திர வெள்ளி விழாவினை ஒட்டி 100 கிராமங்களில் ரூ. 46 இலட்சம் செலவில் இவர்களுக்கென 2,300 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதற்கு மத்திய அரசு நிதி உதவி வழங்கியது. துப்புரவுப் பணியாளர்களுக்குத் தள்ளுவண்டிகளும், கரண்டிகளும் சுரண்டிகளும், கையுறைகளும், காலுறைகளும் வழங்கப்படுகின்றன. இவர்களது பணியில் உள்ள அவல நிலையைப் போக்கும் வகையில் எல்லா இடங்களிலும் நச்சுத் தொட்டிகளுடன் கூடிய கழிப்பிடங்கள் அமைக்கும் திட்டம் சென்ற ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படுகின்றது.

குடிநீர் வசதி

25,000 குடியிருப்புகளில் இதுவரை 23,311 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மீதியுள்ள 1,689 குடியிருப்புகளுக்கும் விரைவில் குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்கின்றது. 1971-ம் ஆண்டில் உள்ளூர் முன்னேற்றப்பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட ஒரு கோடி ரூபாயில் 25இலட்சங்கள் அரிசனக் குடியிருப்புப் பகுதிகளுக்கென ஒதுக்கி செலவிடப்பட்டது. மேல்நிலை நீர்த்தொட்டிகளும், நிலநிலை நீர்த்தொட்டிகளும், குடிநீர்க்குழாய்களும் தேவையை ஒட்டி அமைக்கப்பட்டு வருகின்றன. குடிநீர் வசதிக்காக மட்டும் ஆண்டுதோறும் ரூ. 17 இலட்சங்கள் செலவிடப்படுகின்றன.

இணைப்புப் பாதைகள், இடுகாட்டிற்கு வழி முதலியவற்றிற்காக அரிசன நலத்துறை செலவிடும் தொகை அன்னியில்நெடுஞ்சாலை கிராமப்புறப்பணித்துறை மூலம் ரூ. 30 இலட்சம் இவ்வாண்டு செலவிடப்படுகின்றது.

மின் இணைப்பு

எல்லாக் குடியிருப்புகளுக்கும் மின்வசதி விரைந்து செய்து தரப்பட வேண்டி அரசு தீவிர நடவடிக்கை எடுத்து இதுவரை 23,562 குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள 1,438 குடியிருப்புகளுக்கும் நடப்பு ஆண்டிலேயே இவ்வசதி அளிக்க தீவிர நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. மின் விளக்கு எரிகட்டணச் செலவைக்கூட அரசே ஏற்றுக் கொண்டுள்ளது. மின் இணைப்பிற்காக ரூ. 55 இலட்சமும், மின் விளக்கு எரிகட்டணத்திற்காக ரூ. 27 இலட்சமும் நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

தீண்டாமை ஒழிப்பு

தீண்டாமையைத் தடுக்கவும், அறவே அதனை ஒழிக்கவும் சட்டரீதியாக முனைப்புடன் செயல்படுவதுடன் மக்களிடையே மன மாற்றத்தை ஏற்படுத்தவும் அரசு அக்கறையுடனும், ஆர்வத்துடனும் பாடுபட்டு வருகின்றது.

தீண்டாமைக் குற்றம் செய்பவர்களுக்குக் கடும் தண்டனை அளிப்பதற்கு தீண்டாமைச் சட்ட விதிகளைத் திருத்தி அமைக்க இந்திய அரசுக்குத் தமிழக அரசு பரிந்துரை செய்துள்ளது. தீண்டாமைக்குற்றங்களைப் புலனாய்வுச் செய்து நடவடிக்கை எடுக்க 'தீண்டாமைத் தடுப்பு பறக்கும் காவல் படை' களை இவ்வரசு அமைத்துள்ளது. இதுவரை 6,987 வழக்குகள் காவல்துறையால் தொடரப்பட்டு அவற்றில் 4,692 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இதன்னியில் வட்ட மாவட்ட அரிசன நல வாரியங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சனவரித் திங்களில் கடைசி வாரம் 'அரிசன வாரமாகவும்' அம்மாதம் 30-ஆம் தேதி அரிசன தினமாகவும் அனுசரிக்கப்பட்டு வருகின்றது. இந்திய அரசியல் சிற்பி மாமேதை டாக்டர் அம்பேத்கார் அவர்கள் பிறந்த ஏப்ரல் 14-ஆம் நாளை தீண்டாமை ஒழிப்பு நாளாக அனுசரிக்கப்படுகின்றது. நடப்பு ஆண்டு ஏழாம் வகுப்புப் பாடநூலில் டாக்டர் அம்பேக்காரின் வாழ்க்கை வரலாறு சேர்க்கப்பட்டுள்ளது.

தீண்டாமை நீங்கி, சாதியில்லாச் சமுதாயம் ஏற்பட வகை செய்கிறது கலப்புத் திருமணம். ஆகவே இதற்கு ஆக்கமும், ஊக்கமும் தர 1½ சவரனில் பொற்பதக்கமும், சிறப்புச் சான்றிதழும் வழங்கி கலப்பு மணம் புரிபவர்களைப் பாராட்டும் திட்ட ஒன்றினை 1968-69 இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழ்நாடு அரசு துவக்கிற்று. இவர்களுக்குப் பாத்திரங்கள் வாங்க ரூ. 200 ரொக்கப் பரிசும் வழங்கப்படுகின்றது. இதுவரை 317 கலப்புத் திருமணத் தம்பதிகள் தங்கப் பதக்கம் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

பழங்குடி (மலைவாழ்) மக்களுக்கென சிறப்புத் திட்டம்

முந்திய பகுதிகளில் சொல்லப்பட்டவைகள் அல்லாமல் இவர்களின் மேம்பாட்டில் தனிக் கவனம் செலுத்தி ஒருங்கிணைந்த முன்னேற்றம் காண்பதற்காக சேலம் மாவட்டத்தில் ஏர்க்காட்டிலும், கொல்லி மலையிலும் இரண்டு வளர்ச்சி வட்டாரங்கள் செயல்பட்டு வருகின்றன. கல்ராயன், ஜவ்வாது மலைப்பகுதிகளுக்கும் பயன்படும் வகையில் துணைத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படவுள்ளது.

இவர்கள் தோட்ட வேலைக் கலையை அறிவுபூர்வமாக உணர்ந்து பயன்பெறத் திட்டமொன்று செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மலைப் பகுதிகளில் எவ்வெவ் வகைப் பயிர்களை எங்கெங்கு, எப்படி, எப்போது, எவ்விதம் விஞ்ஞான முறைப்படி பயிரிட்டு பயன் பெறலாம் என்று இவர்களுக்குத் தோட்டக்கலை வல்லுநரால் ஆலோசனைகளும் உதவிகளும் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் இஞ்சி, மஞ்சள், ஏலம், காபி, பழவகைகள், வாசனைப் பொருட்கள், உருளைக் கிழங்கு முதலியன பயிரிட கன்றுகள், விதைகள் போன்றவைகள் இவர்களுக்கு இலவசமாகக் கிடைக்கின்றன. இவர்களின் முன்னேற்றத் திட்டங்கள் பற்றியும், கடன் நிவாரணச் சட்டங்கள் இயற்றுவது பற்றியும் ஆராய்ந்து ஆலோசனை வழங்க வருவாய் வாரிய உறுப்பினர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஏற்றத் தாழ்வு அகற்றி, சாதியில்லாச் சமுதாயத்தை நிறுவிட தமிழ்நாடு அரசு பாடுபட்டு வருகிறது. எனவே, ஏழை அரிசனங்களும், பழங்குடி மக்களும் இன்னலின்றி வாழ, அரிசன நலத்துறை அயராது பணியாற்றி வருகின்றது என்பதைப் பெருமையோடு கூறிக் கொள்ளலாம்.

கோழி வளர்ப்பு நிறுவனத்தின் முன்னேற்றம்!

தமிழகத்தில் நவீன ரகக் கோழிப் பண்ணைகள் ஏற்படுத்தி கோழி முட்டைகள் மற்றும் கோழி இறைச்சி உற்பத்தியைப் பெருக்கவும், பல்வேறு திட்டங்களின் மூலம் நிறைந்த அளவு கோழிப்பண்ணைகளை ஏற்படுத்தி, மக்களின் வருவாயை மேம்படுத்தவும், தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

முக்கிய நோக்கங்கள்

1. கோழி முட்டைகள் மற்றும் கோழி இறைச்சி முதலியவற்றை உற்பத்தி செய்து மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், அவர்களுக்குத் தேவையான ஊட்டச் சத்துக்களைக் குறைந்த செலவில் கிடைக்கச் செய்தல்.

2. நவீன ரகக் கோழிகளை வளர்த்து, கோழி உற்பத்திப் பொருள்களைப் பன்மடங்காகப் பெருக்குதல்.

3. நவீன முறைக் கோழி வளர்ப்பில் பொது மக்களுக்கு ஆர்வம் ஏற்படுத்தத்தக்க திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்துதல்.

4. கோழிகளுக்குத் தேவையான தரமான கோழித் தீவனம் கிடைக்க வழி வகைகளை மேற்கொள்ளுதல்.

5. நவீன முறை கோழி வளர்ப்புத் தொழில் உபயோகமானதென்பதுடன், மக்களுக்கு இதன் மூலம் நல்ல வருவாய் கிடைக்கும் என்ற உண்மையை எடுத்துக் காட்டுதல்.

6. ஆர்வமுள்ள உழவர்கள் மற்றும் வேலையற்ற பட்டதாரிகளை நவீன முறை கோழி வளர்ப்பில் ஈடுபடுத்தி, அவர்களுக்குத் தக்க உதவி அளித்தல்.

7. நேரிடையாகவோ அல்லது மற்ற நிறுவனங்களைச் சார்ந்தோ கோழி வளர்ப்பில், உற்பத்தியைப் பெருக்குவதற்கும், உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும், உற்பத்தியான பொருட்களை விற்பதற்கும் வழி வகைகள் செய்து கொடுத்தல்.

8. கோழிப் பண்ணைகள் ஏற்படுத்த மூலதனக் கடனுதவி, தொழில் நுட்ப உதவி முதலியன கிடைக்க ஏற்பாடு செய்தல்.

9. கோழி முட்டைகள் மற்றும் கோழி இறைச்சி மக்களுக்கு எளிதில் கிடைக்கும் வண்ணம் அதிக விற்பனை நிலையங்களை ஏற்படுத்துதல். மக்களின் தேவைகளைக் கவனித்து நேரிடையாக அவர்களது இருப்பிடத்திற்கு முட்டைகள் மற்றும் இறைச்சிகளை எடுத்துச் சென்று விற்பனை செய்தல்.

—டாக்டர் எ. பாலகுரு, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம்,

தோற்றம்

தமிழ்நாடு கோழிவளர்ப்பு நிறுவனம் 12—7—73-ஆம் நாள் தமிழக அரசினரால் ஏற்படுத்தப்பட்டது. இது தமிழ்நாடு அரசு உடைமைக்கு உட்பட்டது. தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையின் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வந்த அனைத்துக்கோழி வளர்ப்பு மற்றும் விரிவாக்க நிலையங்களும், அத்துடன் இணைந்திருந்த பல்வேறு கோழி வளர்ப்புத் திட்டப் பணிகளும் இந்த நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

செயல் முறை

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் முதன் முதலில் தனது பணிகளை 1. கோழி இனப் பெருக்கத் தொழில் முறை, 2. கோழியின உற்பத்திப்பொருட்கள் விற்பனை முறை என இரு பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு பணிகளைச் செயலாற்றத் தொடங்கியது.

கோழி இனப் பெருக்கப் பணி

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் தரமான கோழிக் குஞ்சுகளை உற்பத்திசெய்து அவைகளை முறையாகப் பல திட்டங்களுக்கு வழங்கி, தனியார் மற்றும் கூட்டுறவுக் கோழிப் பண்ணைகளை ஏற்படுத்துவதுடன் கோழிப் பண்ணைகள் வளர்ச்சிக்காக, தொழில் நுட்ப உதவிகள், மூலதனக் கடனுதவி வழங்குதல் போன்ற நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. இந்த வகையில், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், உலக உணவுத் திட்டம், ஊட்ட உணவுத் திட்டம், வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம் போன்ற திட்டங்களில் தமிழ்நாடு கோழிவளர்ப்பு நிறுவனம், கோழியின வளர்ச்சிப் பணிகளைச்செயல்படுத்தி, திட்டப் பணிகளுக்கு ஆக்கபூர்வமாக உறுதுணை புரிந்து வருகிறது.

இத்திட்டத்தின் ஓர் பகுதியாக, தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம், தனது நேரிடையான பொறுப்பின்கீழ் கோழிகள் வளர்ப்புப் பணிகளைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி இந்த நிறுவனத்தின் கீழ் 10 கோழி வளர்ப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

கோழி வளர்ப்பு நிலையங்களில், தரமான கோழிக் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு தேவையான காலங்களில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் கோழி இன வளர்ச்சித் திட்டத்திற்குக் கோழிக் குஞ்சுகளும், உற்பத்தியான முட்டைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் நில்லாது கோழிப் பண்ணைகள் ஏற்படுத்துவதில் ஆர்வமுள்ள அனைவருக்கும் இந்நிலையங்களில் தக்க ஆலோசனைகள் வழங்குவதுடன், அவர்களுக்குத் தேவையான தொழில் நுட்ப உதவிகளும் அளிக்கப்படுகின்றன. கோழி முட்டைகள், கோழி இறைச்சி ஆகியவற்றின் வருங்காலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, இந்நிறுவனத்தின் கீழ் இயங்கிவரும் ஒவ்வொரு கோழி வளர்ப்பு நிலையத்திலும் 15,000 கோழிக் குஞ்சுகளுக்குக் குறைவில்லாமல் வளர்க்க வேண்டும் என்ற திட்டத்தின்படி, கோழி வளர்ப்பு நிலையங்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தக் குறியீடு பூர்த்தியானதும், இந்த நிறுவனத்தின் செயல் முறைகளில் விரைவான முன்னேற்றம் ஏற்படும்.

கோழித் தீவன உற்பத்தி

இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட நாளில் சென்னை நந்தனத்தில் ஓர் கோழித் தீவன உற்பத்தி நிலையமும், கோவை மாவட்டம் அரசூரில் ஓர் கோழித் தீவன உற்பத்தி நிலையமும் செயல்பட்டு வந்தன. தரமான கோழித் தீவனத்தின் தேவை அதிகமானதால் மேற்கொண்டு, மதுரை மாவட்டத்தில் தே. கல்லுப்பட்டியிலும், கோவை மாவட்டத்தில் திருப்பூரிலும், திருச்சி மாவட்டத்தில் கொட்டப்பட்டு என்ற ஊரிலும் முறையே மூன்று தீவன உற்பத்தி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இந்நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் தீனிகள் பின்கண்டவாறு விற்கப்படுகின்றன :

1 கிலோ பெரிய கோழித் தீனி விலை—ரூ. 1.00

1 கிலோ கோழிக் குஞ்சுத் தீனி விலை—ரூ. 1.00

கோழித் தீவன உற்பத்தி நிலையங்களில் தரமான தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு, கோழி இன விருத்தி நிலையங்களுக்கு வழங்கப்படுவதுடன், கூட்டுறவு மற்றும் தனியார் பண்ணைகளுக்கும் விற்பனை செய்யப்படுகிறது. மேற்கொண்டு, கோழித் தீவனங்களைப் பரிசோதனை செய்து, அதன் தரத்தை மதிப்பிட ஆய்வுக் கூடம் அமைக்கும் திட்டமும் தீட்டப்பட்டுள்ளது. தற்பொழுது கோழித் தீவன உற்பத்தி போதுமான அளவில் இல்லாததால், அதன் தேவையை இந்த நிறுவனம் ஈடுசெய்ய முடியவில்லை. இதனைக் கருத்தில் கொண்டு தீவன உற்பத்தியை மேம்படுத்தவும், குறைந்த விலையில் மக்களுக்குக் கோழித் தீவனம் கிடைக்கச் செய்வதற்குமான வழி வகைகளைத் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் ஆய்வு செய்து வருகிறது.

கடந்த 3 ஆண்டுகளில், கோழி வளர்ப்பு நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்ட கோழித் தீனியின் அளவு பின்கண்டவாறு உள்ளது :

ஆண்டு	உற்பத்தியளவு (மெட்ரிக் டன்னில்)
1973—74 (12—7—73 முதல்)	2,644.561
1974—75	4,260.488
1975—76 (நவம்பர் வரை)	3,587.900

விற்பனை

இந்த நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் கோழியின வளர்ச்சி மற்றும் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தியாகும் முட்டைகள் மற்றும் கோழி இறைச்சி முதலியவைகளைத் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம், சென்னை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கோவை, சேலம் ஆகிய இடங்களில் உள்ள தனது விற்பனைப் பிரிவின் மூலம், பொது மக்களுக்கும் அரசுச் சார்பு நிலையங்களுக்கும் விற்பனை செய்து வருகிறது. மேலும், தனியார் கோழிப் பண்ணைகள் மற்றும் கோழிப் பண்ணைகளிலிருந்து கோழி முட்டைகளை விலை கொடுத்து வாங்கி மக்களுக்கு விற்பனை செய்து வருகிறது. இந்த நிறுவனம் தனது ஆரம்பக் கட்டப் பணிகளைப் பூர்த்தி செய்து வருவதால், மக்களின் தேவைகளை எளிதில் பூர்த்தி செய்யும் பல சிரமங்களை எதிர் நோக்கியுள்ளது. இதனை மனதில் கொண்டு, முதல் கட்டமாக மாதந்தோறும் 6,000 கிலோ கோழி இறைச்சியையும், நாள் தோறும் சுமார் 1 இலட்சம் முட்டைகளையும் விற்பனைப் பிரிவில் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டது. இத்தேவைகளை நிறைவு செய்ய இந்த நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் கோழி வளர்ப்பு நிலையங்களில் 50,000 கோழிக் குஞ்சுகளுக்குக்குறைவில்லாமல் விநியோகிக்கவும், 2,25,000 கோழிகளை ஆண்டு தோறும் இறைச்சிக்காக ஒதுக்கவும் வழி வகை செய்யப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் மூலம் விற்பனை செய்யப்பட்ட கோழி முட்டைகளின் விவரம் வருமாறு:

ஆண்டு	விற்பனை செய்யப்பட்ட முட்டைகள்: சென்னை நகரில்	தமிழ்நாட்டில்
1973—74 (12-7-73 முதல்)	35,94,483	65,91,924
1974—75	71,27,190	1,23,02,028
1975—76 (நவம்பர் முடிய)	68,91,656	1,29,96,826

கோழிக்குஞ்சு பொரிப்பு நிலையங்கள்

தற்பொழுது காட்டுப்பாக்கம் (செங்கற்பட்டு மாவட்டம்), கப்பலூர் (மதுரை மாவட்டம்), ஒசூர் (தருமபுரி மாவட்டம்) ஆகிய 3 இடங்களில் கோழிக் குஞ்சு பொரிப்பு நிலையங்கள் செயல்படுகின்றன. இவைகளின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட கோழிக்குஞ்சுகளின் எண்ணிக்கை பின்வருமாறு உள்ளது :

உற்பத்தி செய்யப்பட்டக் கோழிக் குஞ்சுகள்

ஆண்டு	எண்ணிக்கை
1973—74 (12-7-73 முதல்)	2,95,771
1974—75	4,35,711
1975—76 (நவம்பர் முடிய)	2,62,779

எதிர்காலத் திட்டங்கள்

வீரிய இனக் கோழிகளின் உற்பத்தித் திறனை மக்கள் நன்முறையில் பரவலாகப்பெறும் பொருட்டு, இந்நிறுவனம் அதிகப்படியாக வீரிய இனக் கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்யத் திட்டம் தீட்டியுள்ளது. தனியார் துறையில் வழங்கப்படும் வீரிய இனக் கோழிக் குஞ்சுகள் ஏழைக்கு எட்டாத விலையில் உள்ளன! காரணம், அந்தக்கோழிக் குஞ்சு உற்பத்தி நிலையங்கள் அனைத்தும் தமிழ்நாட்டில் இல்லை. அந்த நிலையை மாற்ற, இந்நிறுவனம் வீரிய இனக் கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்யும் குஞ்சு பொரிக்கும் நிலையங்களை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது. தற்பொழுது செயல்பட்டு வரும் 3 கோழிக் குஞ்சு உற்பத்தி நிலையங்களிலும் உற்பத்தியை மும்மடங்காக மும்முரப்படுத்துவது திட்டமாகும்.

கோழித் தீவனத்திற்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையை மாற்றி தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, மேற்கொண்டு 3 தீவன உற்பத்தி நிலையங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

செயல்பட்டு வரும் கோழித் தீவன உற்பத்தி நிலையங்களில் 1,450 மெட்ரிக் டன்

அளவிற்குத் தீவன உற்பத்தி செய்ய, செயல் முறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

விற்பனைப் பிரிவின் கீழ், நாளொன்றுக்கு ஒரு இலட்சம் முட்டைகள் விற்பனை செய்ய வழி வகுக்கப்பட்டுள்ளது. முட்டை விலையைக் குறைக்க ஆந்திர மாநிலத்திலிருந்து முட்டைகளை வாங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பொது மக்களின் தேவைக்கேற்ப மாதந்தோறும் 6,000 கோழிகளை இறைச்சிக்காக விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

செயல்பட்டு வரும் கோழி வளர்ப்பு விரிவாக்க நிலையங்கள் ஒவ்வொன்றும் 50,000 கோழிக் குஞ்சுகளுக்குக்குறைவில்லாமல் விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

புறக்கடைக் கோழிப்பண்ணைத்திட்டத்தை தீவிரப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்கும் திட்டம்

படித்து முடித்து வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்கொடுக்கும் திட்டத்தின் கீழ், கோழி அபிவிருத்தி நிறுவனத்தின் மூலம் கோழிப்பண்ணைகளை அமைத்துக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது, இந்தத் திட்டத்தின் கீழ், தேர்வு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்குத்தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகக் கடனுதவி அளிக்கப்படும். இந்தத் திட்டத்தில் சேரும் பட்டதாரிகளைத் தமிழ்நாடு கோழி அபிவிருத்தி நிறுவனமும் சம்பந்தப்பட்ட வங்கியும் தேர்வு செய்து, அவர்களுக்குக்கோழி வளர்ப்புப்பற்றி 1 மாத பயிற்சிக்குப் பின் 500 பட்டதாரிகளுக்குக் கோழிப் பண்ணைகள் ஏற்படுத்தி அதன் மூலம் குறைந்தது 5,00,000 முட்டைகள் உற்பத்தி செய்ய வேண்டும் என்பது இந்தத் திட்டத்தின் அடிப்படைநோக்கமாகும். மேற்கொண்டு 2,25,000 கோழிகள் இறைச்சிக்காக உற்பத்தி செய்ய வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் கூட்டுறவு முறையில் 20 பிரிவுகளாக, ஒவ்வொரு பிரிவும் 10,000 கோழிகளைக் கொண்டதாக ஏற்படுத்தப்படும். இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு மூலதனச் செலவுக்காக ஒவ்வொருவருக்கும் ரூபாய் 15,000 கடன் வழங்கப்படும்.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் மேற்கூறிய பணிகளால், தமிழக மக்களுக்கு ஊட்டச்சத்து மிகுந்த முட்டையும், இறைச்சியும் குறைந்த செலவில் கிடைத்திடும் என்பது திண்ணம்.

தந்தி: "கோஆப்பாங்கு" தபால் பெட்டி எண்: 324 தொலைபேசி எண்: 4189

திருச்சிராப்பள்ளி மாவட்டக் கூட்டுறவு மத்திய பாங்கு
(வரையறுக்கப்பட்டது) எண். 178 : : திருச்சிராப்பள்ளி - 2.

துணைப் பெருந்தலைவர் : என். பாலன், பி.ஏ., பி. எல்.,

கிளைகள் : 1. கரூர், 2. அரியலூர், 3. துறையூர், 4. மணப்பாறை, 5. லால்குடி, 6. பெரம்பலூர், 7. தில்லைநகர் (திருச்சி), 8. ஜெயங்கொண்டம், 9. குளித்தலை, 10. வேலாயுதம்பாளையம், 11. முசிறி, 12. சின்னதாராபுரம், 13 மண்ணச்சநல்லூர், 14. தொட்டியம், 15. ஸ்ரீரங்கம், 16. திருவரம்பூர், 17. சுப்ரமணியபுரம் (திருச்சி), 18. கரூர் (கிழக்கு) 19. துவரங்குரிச்சி, 20. வையம்பட்டி, 21. ஆண்டிமடம், 22. அரவாக்குரிச்சி, 23. செந்துரை, 24. திருமானூர், 25. அரும்பாவூர்.

அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம்	100.25	இலட்சங்கள்
செலுத்தப்பட்ட பங்கு மூலதனம்	85.56	
அலுவல் நிதிகள்	1,035.65	
டிபாசிட்டுகள்	565.43	

61 மாதங்களும் அதற்கு மேலும் ..	ரூ. 10.50 %	தவணை வைப்புகளின் வட்டி விகிதங்கள்
36 மாதங்கள் முதல் 61 மாதங்களுக்குள்	9.50 %	
12 ,, ,, 36 ,,	8.50 %	
9 ,, ,, 12 ,,	7.50 %	
6 ,, ,, 9 ,,	6.50 %	
91 நாட்கள் முதல் 6 மாதங்களுக்குள்	6.00 %	

வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப மாதாந்திர வட்டியும் வழங்கப்படும்.

கால இட்டு வைப்புகள்	46 நாட்கள் முதல் 91 நாட்களுக்குள்	4.00 %	
	15 நாட்கள் முதல் 46 நாட்களுக்குள்	3.50 %	
	சேமிப்புக் கணக்கு	6.00 %	
	பாதுகாப்பு வைப்பு	10.00 %	(கூட்டு வட்டி)
	மாதாந்திர வைப்பு	8% முதல் 10.25 %	வரை

எங்கள் வங்கியிலும் அருகாமையிலுள்ள எங்கள் வங்கிக்கிளைகளிலும், முதலீடு செய்து உச்ச அளவு பயன் அடையுங்கள்.

அ. ஞானப்பிரகாசம், பி. ஏ.,
இணைப்பதிவாளர், தலைமை நிர்வாக அதிகாரி.

ஆர். சோமசுந்தரம், பி. ஏ.,
செயலாளர் (பொறுப்பு)

தமிழகத்தில் கதர்கிராமக் கைத்தொழில் வளர்ச்சி

தமிழ்நாட்டில் கதர் கிராமக் கைத்தொழில் வளர்ச்சியில் புதிய மறுமலர்ச்சியே உருவாகியுள்ளது. கிராமங்களிலுள்ள வேலையற்றோருக்கும், குறைந்த வேலை வாய்ப்புள்ளோர்க்கும் பெருமளவில் வேலை வாய்ப்பளிக்கவும், விவசாயிகளின் வருவாயை அவர்களது ஓய்வு நேரத்தில் நூல் நூற்பதன் மூலம் அதிகரித்துக் கொள்ளவும், கிராமக் கைத்தொழில்களை ஊக்குவிக்கவும், அதன் மூலம் கிராமப்புறங்களில் தன்னிறைவுச் சமுதாயத்தை அமைக்கவும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 1960-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் இயங்கி வருகிறது.

கதர் கிராமத் தொழில் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு என கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு இவ்வாரியத்திற்கு மானியங்களும், கடன் உதவிகளும் வழங்கி வருகிறது. வணிகத் துறையல்லாத பணிகளில் ஏற்படும் இழப்பினை ஈடுபடுத்தும் வகையிலான அடக்கச் செலவு மானியத்தையும் இவ்வாரியத்திற்குத் தமிழ்நாடு அரசு அளித்து வருகிறது.

வாரியத்திற்குட்பட்ட நிலையங்கள் மூலமும், கூட்டுறவு நிறுவனங்கள் மூலமும் திட்டங்களை இவ்வாரியம் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு முழுவதும் கதர் கிராமத் தொழில் பொருள்களை உற்பத்தி செய்வதற்கென 594 வாரிய நிலையங்களும், 2,435 கூட்டுறவு நிறுவனங்களும் இயங்கி வருகின்றன.

பாரம்பரியத் தொழில் வினைஞர்களின் வருவாயை அதிகரிக்கவும், வேலை வாய்ப்பைப் பெருக்கவும், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பல்வேறு புதுத் திட்டங்களை உருவாக்கியுள்ளது. இவ்வாரியம் மின் விசைச் சக்தியினைக் கொண்டு இயங்கும் இயந்திரங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கிறது என்று மக்களிடையே பரவியிருக்கும் தவறான எண்ணத்தினை நீக்கி வருகிறது.

எங்கெங்கு மின் விசைச் சக்தியினைப் பயன்படுத்துவதன் மூலம் தொழில் வினைஞர்களின் ஊதியத்தைப் பெருக்க முடியுமோ, அங்கெல்லாம் மின் விசைச் சக்தியினைப் பயன்படுத்தி வருகிறது. மேலும், இதனால் எவரும் வேலை வாய்ப்பினை இழக்க நேரிடாமலும் பார்த்துக் கொள்கின்றது. நூற்புத் தொழிலில் பஞ்சடித்தல், பட்டை போடுதல் போன்ற நிலைகளிலும், எண்ணெய் பிழிதல், மட்பாண்டச் சக்கரம் போன்றவற்றிலும் மின்சக்தி பயன்படுத்தப்படுகின்றது. இதன் பலனாகக் கிராமத் தொழில்கள், நிதியுதவி அளிக்கும் நிறுவனங்களின் உதவியுடன், பெருமளவு படித்த வேலை

யற்றோரை ஈர்க்கக் கூடும். கதர் கிராமத் தொழில்களைப் பெரும்பாலான மக்கள் தங்களது தொழிலாக ஏற்றுக் கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கையும் பிறந்துள்ளது.

கதர் உற்பத்தி

193 உற்பத்தி நிலையங்கள் மூலமும், 5 கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் பரவலாகக் கதர் உற்பத்தி நடைபெற்று வருகிறது. நூற்போர்களிடமிருந்து வாங்கிய நூலினை நெசவாளர்களுக்குத் துணி நெசவு செய்ய இந்நிலையங்கள் மூலம் கொடுக்கப்படுகிறது. நெய்த துணியினை ; வாரத்துக்கு ஒரு முறை பெற்று அதற்கான ஊதியம் அவர்களுக்குக்கொடுக்கப்படுகிறது.

தற்போது ஆறு கதிர் புது மாதிரி ராட்டை பெருமளவு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதைப் போன்ற 25 ராட்டைகளும், பஞ்சுடைத்துப் பட்டை போடுதல் போன்றவையும் கூடிய ஓர் அமைப்பு கிராமிய நூற்பு நிலையமாகும். இத்தகைய முதல் நிலையம் 1966-ஆம் ஆண்டு துவக்கப்பெற்றது. தற்பொழுதுள்ள நிலையங்களில் 7,528 தொழில் வினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இப்பணியில் ஈடுபடும் தொழில் வினைஞர், நாள் ஒன்றுக்கு ரூ. 2.50 முதல் ரூ. 3 வரை ஊதியம் பெறமுடியும்.

1973—74-ல் 2,311 நெசவாளர்கள் துணி உற்பத்தியில் ஈடுபட்டிருந்தனர். தற்பொழுது ஏறத்தாழ 3,000 பேர் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். கடந்த ஆண்டு அவர்கள் உற்பத்தி செய்த துணியின் மதிப்பு ரூ. 160 இலட்சங்களாகும். இதற்கு முந்திய ஆண்டு 103 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள துணி உற்பத்தி செய்யப்பட்டது. தேவையான பருத்தி வாங்குவதற்கான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு உள்ளன. உற்பத்தியாகும் எல்லா நூல்களையும் பயன்படுத்தும்வகையில் தறிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.



கிராமத் துணி உற்பத்தி நிலையங்கள்

வளர்ந்து வரும் ஆராய்ச்சிகளையும், தொழில் நுட்ப மேம்பாடுகளையும் மின் சக்தியுடன் பயன்படுத்தி இந்நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன. இவை தற்பொழுது கோவை மாவட்டத்தில் சூலூர், பெருமாநல்லூர் ஆகிய இடங்களில் முன்னோடித் திட்டங்களாகச் செயல்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு கிராமத் துணி உற்பத்தி நிலையமும் 68 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும். நாளொன்றுக்கு இவர்களுக்கு 2.50 ரூபாயிலிருந்து 8.00 ரூபாய் வரை ஊதியம் கிடைக்கும். இதனால் குறைந்த முதலீட்டுடன் பெருமளவு மக்கள் வேலைவாய்ப்பினைப் பெறவும் வழி ஏற்படுகிறது. மேலும் ஏற்கெனவே மக்கள் பெருக்கத்தால் அவதியுறும் நகர்ப்புறங்களில் கிராம மக்கள் சென்று குடியேறுவதையும் தவிர்க்கிறது. இவ்வாரியம் கதர் பட்டுத் துணிகளையும் உற்பத்தி செய்கிறது.

இவ்வாரியத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் தமிழ்நாடு முழுவதும் அமைக்கப்பட்டு உள்ள 188 கதர் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுகின்றன. சென்னையில் இரண்டும், திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் ஒவ்வொன்றுமாக மொத்தம் நான்கு முதல் நிலைக் கதர் கிராஃப்டுகள் இயங்கி வருகின்றன. மொத்தம் 243 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கதர் இவ்வாண்டில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. நூற்பவர்கள், நெசவாளர்கள், நூல் சுற்றுபவர்கள், சாயம் ஏற்றுபவர்கள், சலவை செய்பவர்கள், தையற்காரர்கள் போன்ற சுமார் 1 இலட்சம் பேருக்கு கதர்த் திட்டம் வேலை வாய்ப்பளித்து வருகிறது. இவர்கள் ஒரு ஆண்டில் 72.09 இலட்சம் ரூபாய் அளவிலான ஊதியத்தைப் பெற்று வருகிறார்கள். இம்மாநிலத்திலுள்ள விற்பனை நிலையங்களில் உடனடியாக விற்கப்படுவதற்கேற்ற சரக்குகளை உற்பத்தி செய்வதே இவ்வாரியத்தின் கொள்கையாகும். இவ்வாரியம் இம்மாநிலத்திற்கு வெளியிலும் மற்ற நிறுவனங்களிடமிருந்தும் வாங்குவதை

முடிந்த அளவில் குறைத்து வருகிறது.

கிராமப் புறங்களில் நிலவும் ஏழ்மையை ஒழிக்கவும், ஆங்காங்கு இருக்கும் மனித சக்தி மற்றும் பொருள் வளங்களைப் பயன்படுத்தவும், கிராமப் புறங்களிலுள்ள மக்களது தேவைகளைப் பூர்த்தி செய்யவும், கிராமத் தொழில் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கீழ்க்காணும் கிராமத் தொழில் திட்டங்களை வாரியத்திற்குட்பட்ட நிலையங்கள் மூலமாகவும், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் செயல்படுத்துமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

1. கதர்
2. பனை வெல்லம்.
3. எண்ணெய்.
4. தோல்.
5. உணவுக்குப் பயன்படாத எண்ணெய் மற்றும் சோப்பு
6. வெல்லம் மற்றும் கந்தசாரி சர்க்கரை
7. மட்பாண்டம்.
8. கைக்குத்தலரிசி மற்றும் பருப்பு வகைகள்.
9. தேனீ வளர்ப்பு.
10. கையால் செய்யப்படும் காகிதம்.
11. செங்கல் மற்றும் ஓடுகள்.
12. சுண்ணம்பு.
13. கற்றாழை நார்.
14. மரவேலை மற்றும் கருமார் தொழில்.
15. கிராமப்புறத்தீப்பெட்டித் தொழில்.
16. சாண எரிவாயு.
17. பழங்கள் பதப்படுத்தல்.
18. அரக்கு உற்பத்தி.
19. பிரம்பு மற்றும் மூங்கில் உற்பத்தி.
20. அலுமினியப் பாத்திரங்கள் உற்பத்தி.
21. மருந்துகள் செய்யக் காட்டிலுள்ள மூலிகைகள்மற்றும் கனி வகைகளைச்சேகரித்தல்.
22. பற்பொடி தயாரித்தல்.
23. வாசனை ஊதுபத்தி.
24. சிகைக்காய்த் தூள்.

கதர் கிராமத்தொழில் ஆணைக் குழு அளிக்கும் நிதியுதவியின் அளவைக் கருத்திற் கொண்டு மாநில அளவில் கிராமத் தொழில் திட்டங்கள் முடிவு செய்யப்படுகின்றன. மாநில அரசு, மானியமும், சிறப்புத் திட்டங்களுக்காக குறுகிய காலக் கடன் உதவியும், நிதி உதவியாக அளித்து வருகிறது.

பனை வெல்லம்

தமிழ்நாட்டில் ஏறக்குறைய 4 கோடி பனை மரங்கள் உள்ளன. கன்னியாகுமரி, இராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், கோவை மாவட்டங்களில் இயல்பாக நிலவி வரும் இத்தொழிலில் சுமார் இரண்டு இலட்சம் பேர் ஈடுபட்டு உள்ளனர். இவர்கள் பதநீர் இறக்குதல், வெல்லம் காய்ச்சுதல், பனை ஓலைப் பொருட்கள் உற்பத்தி செய்தல், பனந்தும்பு தயாரித்தல், பிரஷ் செய்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டு உள்ளனர். தமிழ்நாடு முழுவதும் பரவலாக பல ஆரம்ப நிலைக் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவ்வாரம்ப நிலைக் கூட்டுறவு நிலையங்கள் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் சம்மேளனங்களாக இணைந்துள்ளன. பதநீர் இறக்குவதற்கென மரமேறும் தொழிலாளர்களுக்கு விபத்துக்கள் ஏற்பட்டால் அவர்களுக்குப் பொருளுதவிகொடுக்கப்படுகிறது. இதன்படி சிறு விபத்துக்குள்ளானோருக்கு ரூ. 100-ம், பெரும் விபத்துக்குள்ளானோருக்கு ரூ. 500-ம், உயிரிழப்போர் குடும்பத்துக்கு ரூ. 1,000-ம்கொடுக்கப்படுகிறது.

பதநீர் இறக்கும் தொழில் அபாயகரமானதும், தொல்லைகள் நிறைந்ததுமாகும். இந்த அபாயத்தைத் தவிர்க்கும் முறையில் சாதனமொன்றை உருவாக்குவதும்மிகவும் அவசியமானதொன்று அபாயமின்றியும், சுலபமாகவும் மரமேறவும், அதிகப்படியான பதநீரைப் பெற்று வருவாயை உயர்த்திக் கொள்ளவும், சிறந்ததோர் சாதனத்தைக் கண்டுபிடித்துக் கொடுப்போருக்கு கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு ஒரு இலட்சம் ரூபாய் பரிசு அளிக்க முன்வந்துள்ளது.

பதநீரை வெல்லமாகக் காய்ச்சும் போது பெருமளவில் எரிபொருள் செலவிடப்படுகிறது. 'மெராடோ' நிறுவனத்தின் கூட்டு முயற்சியுடன் இவ்வாரியம் குறைந்த அளவு எரிபொருளைப் பயன்படுத்தி வெல்லம் காய்ச்ச ஓர் உலையினை உருவாக்க ஏற்பாடுகள் செய்து வருகிறது. இவ்வாரியத்தின் ஓர் உறுப்பான மாநிலப் பனைவெல்லச் சம்மேளனம் இங்கிலாந்து, ஜப்பான், மேற்கு ஜெர்மனி முதலிய நாடுகளுக்கு 20.00 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பனந்தும்புகளை ஆண்டுதோறும் ஏற்றுமதி செய்து வருகிறது. இந்நாடுகள் இத்தும்புகளைப் பயன்படுத்தி பிரஷ்கள் உற்பத்திசெய்கின்றன. கச்சாப் பனந்தும்புக்குப் பதில் பிரஷ்களாகவே ஏற்றுமதி செய்வதற்கெனப் பிரஷ்கள் செய்யும் சில நிலையங்களை உருவாக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

எண்ணெய்த் தொழில்

எண்ணெய் பிழியும் தொழிலில் எக்ஸ்பெல்லர்கள், ரோட்டரிகள் ஆகிய புதுவகை இயந்திரங்கள் நுழைந்ததன் காரணமாக கிராம எண்ணெய்ச் செக்குகள் அழியும் தறுவாயிலிருந்தன. கதர் வாரியம் இத்தொழிலாளர்களுக்கு மீண்டும் நல்வாழ்வு அளிக்கும் பொருட்டு 191 எண்ணெய்க் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவியுள்ளது. இதில் 3,500 எண்ணெய் பிழிவோர் ஈடுபட்டுள்ளனர். இச்சங்

கங்கள் இவ்வாரியம் அளிக்கும் நிதியுதவியைக் கொண்டு எண்ணெய் வித்துக்களை ஏற்ற காலத்தில் விலைக்கு வாங்கி அதன் உறுப்பினர்களுக்கு எண்ணெய் பிழியக் கொடுக்கிறது. பதிலுக்கு, பிழிந்த எண்ணெயைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுகிறது. சில சங்கங்களில் எண்ணெய் பிழிவதற்கென ஊதியம் அளிக்கும் முறை பின்பற்றப்படுகிறது. இச்சங்கங்களில் 1973—74-ஆம் ஆண்டில் 260 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள எண்ணெய்யும், பிண்ணாக்கும் உற்பத்தி செய்யப்பட்டன. கிராமத்திலுள்ள எண்ணெய் பிழிவோர், எருதுகளால் இயக்கப்படும் செக்குகளைப் பராமரிக்க அதிகம் செலவாவதைத் தற்போது உணர்ந்து வருகின்றனர். பராமரிப்புச் செலவு அதிகமாக இருப்பதால் இத்தொழிலை விட்டுவிடும் நிலைக்கும் சிலர் ஆளாகியுள்ளனர். ஆகவே, கதர் ஆணைக் குழு, எண்ணெய், பிழிவதற்கென மின்சாரத்தில் இயங்கும் புது முறைச் செக்கினை உருவாக்கியுள்ளது. இச்செக்கில் எண்ணெய், மின்சாரம் மூலம் பிழியப்பட்டாலும் உணவுச் சத்து பாதிக்கப்படாமல் காப்பாற்றப்படுகிறது. எருதுகளால் சுற்றப்படும் அதே வேகத்தில் மின்சார மோட்டார், செக்குகளை இயக்குகிறது. முன்பு 130 மின்விசை எண்ணெய்ச் செக்குகளுக்குமேல் நிறுவப்பட்டுள்ளன. 1974—75-ஆம் ஆண்டு மேலும் இத்தகைய 100 செக்குகள் நிறுவப்பட்டுள்ளன. கதர் வாரியம் மின் விசை எண்ணெய்ச் செக்குகளைத் தனது கிளைகளின் மூலமே பெருமளவு உற்பத்திச் செய்யத் திட்டமிட்டு உள்ளது.

தேனீ வளர்ப்பு

விவசாயிகளுக்குத் தேன் பெட்டிகள் பாதி விலையில் கொடுக்கப்படுகிறது. இப்பெட்டிகளில் சேகரிக்கப்படும் தேன் அதற்கெனப் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விலைக்கு வாங்கப்படுகிறது. தேன் கூடுகள் அதிகப்படியாக உள்ள இடங்களில் இது போன்ற 32 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச்சங்கங்கள் தேன் வளர்ப்போரிடம் தேனை வாங்கி, பக்குவப்படுத்தி, புட்டிகளில் அடைத்து மக்களுக்கு விற்கிறது. இவ்வாண்டு 60 இலட்சம் ரூபாய் மதிப்புக்கும் அதிகப்படியான தேன் உற்பத்தியாகியுள்ளது.

சோப்புத் தொழில்

உணவிற்குப் பயன்படாத எண்ணெயைப் பயன்படுத்தி, சோப்புத் தயாரிக்கும் திட்டத்தினை இவ்வாரியம் ஏற்றுள்ளது. தற்போது உணவுக்குப் பயன்படாத எண்ணெய் வித்துக்கள் பெரும்பாலும் வீணாக்கப்படுகின்றன. உணவுக்குப் பயன்படாத எண்ணெய் வித்துக்கள் சேகரிப்பதற்கெனக் கூட்டுறவுச் சங்கங்களுக்குச்சில உதவிகளை வாரியம் அளிக்கிறது. தற்பொழுது 29 வாரியச் சார்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. 1973—74-ஆம் ஆண்டு இவற்றின் மூலம் 41.30 இலட்ச ரூபாய் மதிப்புள்ள சோப்பு உற்பத்தி செய்யப்பட்டது. 1974—75-ஆம் ஆண்டு 50 இலட்சம் ரூபாய் மதிப்புக்கும் அதிகமான சோப்பு

உற்பத்தி செய்யப்பட்டது. இவ்வாரியத்தின் 'கோபுரம்' சோப்புக்கு நல்ல வரவேற்பு இருந்து வருகிறது. வளர்ந்து வரும் இத்தேவையினை மனத்திற் கொண்டு இவ்வாரியம் வாசனைக் குளியல் சோப்புஒன்றினைத் திருக்கழுக்குன்றத்தில் நிறுவியுள்ளது. அண்மையில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் இந்தச் சோப்புக்கு மக்களிடையே நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளது.

மண்பாண்டத் தொழில்

மட்பாண்டத் தொழிலிலும் 280 தொழில் கூட்டுறவுகளும், 3 வாரியச் சார்பு நிலையங்களும் ஈடுபட்டுள்ளன. இத்தொழிலில் பதினோராயிரம் பேர் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் ஓர் ஆண்டில் மொத்தம் 13.76 இலட்சம் ரூபாய்கள் ஊதியமாகப் பெறுகிறார்கள். இவர்களின் ஊதிய அளவு தற்போது அதிகரித்து வருகிறது.

கையால் செய்யப்படும் காகிதம்

வாரியச் சார்பு நிலையங்கள் ஏழும், கூட்டுறவு முறையில் நடத்தப்படும்எட்டுச்சங்கங்களும் இக்காகிதத் தொழிலில் ஈடுபட்டுள்ளன. தற்போது இக்காகிதங்களுக்கும், காகித அட்டைகளுக்கும் மக்களிடையே நல்ல வரவேற்பு இருந்து வருகிறது.

இவ்வலகுகளில் உற்பத்தியாகும் காகிதம், எழுதுவதற்கும் அட்டைப் பெட்டிகள் செய்வதற்கும்உபயோகப்படுத்தப்படுகிறது. இதுவரை உபயோகித்து வந்த மூலப் பொருள்களாகிய அச்சகக் கழிவுத் தாள்கள், தையல் கழிவுத் துணிகள், பனியன் துண்டுகள் விலையேறிவிட்டதால் அவைகளுக்குப் பதிலாக விவசாயக் கழிவுப் பொருள்களாகிய கரும்புச் சக்கை, வைக்கோல், உமிபோன்ற பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவைகள் தனியாகவோ அல்லது முன்னால் உபயோகித்து வந்த மூலப் பொருள்களுடன் கலந்தோ உபயோகிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் ஏறத்தாழ இரண்டரை இலட்சம் மக்களுக்கு வேலை வாய்ப்பளித்து சுமார் 1,032.61 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருள்களை உற்பத்தி செய்வதற்கென இவ்வாரியத்தின் கீழ் 256 வாரியச் சார்புள்ள நிலையங்களும், 2,430 தொழில் கூட்டுறவுகளும் இயங்கி வருகின்றன.

வேலைவாய்ப்பு அதிகரிக்கும் திட்டம்

படித்து வேலையற்றிருப்போருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதைக் கருத்திற் கொண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கீழ்க்காணும் ஐந்து திட்டங்களை உருவாக்கியுள்ளது.

1. 100 கிராம நூற்பு நிலையங்கள் அமைத்தல்.
2. 200 மின்விசை எண்ணெய்ச் செக்குகள் அமைத்தல்.
3. 50 பனந்தும்பு பிரஷ் நிலையங்கள் அமைத்தல்.
4. 20 சோப்பு உற்பத்தி நிலையங்கள் அமைத்தல்.
5. கையால் செய்யப்படும் 20 காகித உற்பத்தி நிலையங்கள் அமைத்தல்.

பர்மா மற்றும் இலங்கை அகதிகள் மறுவாழ்வுத் திட்டம்

இந்திய நாட்டிலிருந்து சென்று பர்மா மற்றும் இலங்கை நாடுகளிலிருந்து திரும்பி வரும் அகதிகள் மறுவாழ்வுக்கென அகதிகள் கூட்டுறவு நிதி மற்றும் வளர்ச்சி வங்கியிடம் சில திட்டங்களை இவ்வாரியம் அளித்துள்ளது. இவ்வங்கி 5 கிராம நூற்பு நிலையங்கள், 5 தீப்பெட்டித் தொழிற்சாலைகள், 5 மின் விசைச் செக்குகள் முதலியவை துவக்குவதற்காக 5 இலட்சம் ரூபாய் அளிக்க ஒப்புக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர்களுக்கு இலாகாக்கள் பங்கீடு விவரம்

தமிழ்நாட்டில் ராஷ்டிரபதி ஆட்சியை அமல் நடத்தும் பிரகடனம் 31-1-76 இரவு வெளியிடப்பட்டதையொட்டி மத்திய பெட்ரோலியம் இலாகா செயலாளர் திரு. பி. கே. தவேயும், மின்சார இலாகா செயலாளர் திரு. ஆர். வி. சுப்பிரமணியமும், தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆலோசகர்கள் இருவருக்கும் கீழ்க்கண்டவாறு இலாகாக்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

திரு. பி. கே. தவே

பொது நிர்வாகம்,
ஐ. ஸி. எஸ்., ஐ. ஏ. எஸ்., அதிகாரிகள்,
மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள் பற்றிய விஷயங்கள்
போலீஸ்,
தேர்தல்கள்,
மது விலக்கு,
எக்சைஸ்,
ஆட்சிமொழி,
சட்டசபை,
ரெவின்யூ போர்டு,
மாவட்ட வருவாய்த் துறை அலுவலகங்கள்
டெபுடி கலெக்டர்கள்,
பூதான்,
கிராமதான்,
கைத்தறிகள்
சட்டம்,
கோர்ட்டுகள்,
சிறைகள்,
ரிஜிஸ்ட்ரேஷன்,
நிலச் சீர்திருத்தம்,
இடவசதிக் கட்டுப்பாடு
மோட்டார் வாகனங்கள் வரி,
வணிக வரி,
கடன் கொடுப்பது பற்றிய சட்டம்,
கிராமப்புற கடன்கள்,
சீட்டு கம்பெனிகள் சட்டம்,
சினிமா சட்டம்,
நகர சபைகள் நிர்வாகம்,
சமுதாய அபிவிருத்தி,
பஞ்சாயத்துக்கள்,
பஞ்சாயத்து யூனியன்கள்,
எழுதுபொருள்கள்,
அரசினர் அச்சகம்
மக்கள் தொடர்பு
செய்தித்துறை,
பிவிம் நுட்பம்,
இளைஞர் சேவை,
சிரணிகள்,
வெளிநாடுகளிலுள்ள இந்தியர்கள்,
அகதிகள்,
பத்திரிகை காகிதகண்ட்ரோல்,
பாஸ்போர்ட்டுகள்.
நிதி,
திட்டமிடுதல்,
பின்தங்கிய வகுப்பினர்,
நுட்பக்கல்வி உள்ளிட்டகல்வி,
சுற்றுலா வாரியம்,
சுகாதாரம்,
வைத்தியம்,
நகர்ப்புற திட்டங்கள்,
குடிநீர் வாரியம்,
பொதுப்பணித்துறை,
சிறிய நீர்ப்பாசனங்கள்,
நெடுஞ்சாலைகள்,
துறைமுகங்கள்,
உணவு,
துணி,
நூல்,
தொழிற்சாலைகள்,
இரும்பு,
உருக்கு,
உலோகக் கனிகள் கட்டுப்பாடு
கம்பெனிகள்,
மின்சாரம்,
கூட்டுறவு,
வீட்டுவசதி

திரு. ஆர். வி. சுப்பிரமணியன்

குடிசைமாற்று வாரியம்,
தொழிலாளர் நலம்,
போக்குவரத்து,
புள்ளிவிவரங்கள்,
வேலைவாய்ப்பு,
சமூகநலம்,
மீன்வளம்,
பிச்சைக்காரர் விடுதிகள்,
வனங்கள்,
கால்நடை,
அறக்கட்டளைகள்,
கதர்,
கிராமத் தொழில்கள்,
கிராமப்புற கைத்தொழில் திட்டங்கள்,
பால்வளம்,
வெள்ளக் கட்டுப்பாடு,
ஹரிஜன முன்னேற்றம்,
வக்ப் போர்டு,
விவசாயம்,
உணவு உற்பத்தி,
விவசாய என்ஜினிரிங் பிரிவு,
விவசாய என்ஜினிரிங் மற்றும் சேவைக் கூட்டுறவு சங்கங்கள்.

ஜெய்—

தியாகத் தலைவருக்கு நினைவகம்

தியாகச் சுடர் காமராஜரின் நினைவினை நாட்டிற்கு எடுத்துக் காட்டும் விதத்தில் கிண்டியில் அமைக்கப்பட்டுள்ள நினைவகத்தினை இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் திறந்து வைத்தது நினைவகத்திற்கு மேலும் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

காமராஜர் நினைவகத் திறப்பு விழா 14-2-1976-ஆம் நாளன்று மிகவும் சீரும் சிறப்புமாக நடந்தேறியது. விழாவில் தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் தலைமை வகித்தார். அப்பொழுது அவர் பேசுகையில், ''கட்டுப்பாடு, ஒழுங்கு ஆகிய பண்புகளை பிரதமர் போற்றி வருவது போலவே, காமராஜும் மேற்படி பண்புகளைப் போற்றி, அதற்கு முக்கியத்துவம் அளித்து வந்தார். காரணம், கட்டுப்பாடு, ஒழுங்கு இல்லாமல் ஜனநாயகம் இல்லை.

''மக்களின் கண்மணி'' காமராஜர் மறைவினால் தமிழ்நாட்டிற்கு மட்டும் இழப்பல்ல; ஒரு மக்களின் தலைவனை நாடே இழந்திருக்கிறது; ஒரு சிறந்த நிருவாகியை நாடு இழந்துள்ளது. சிறந்த அறிவாளியும், 'இரும்பு உள்ளம்' படைத்த மக்கள் தலைவனும், சிறந்த ராஜதந்திரியுமான ஒருவரை நாடு இழந்திருக்கிறது.

பெருந்தலைவர் காமராஜரைப் போலவே நாட்டு மக்கள் தொண்டிற்காக, தம்மைத்தாமே அர்ப்பணித்துக் கொண்டு உழைப்பதே அவருக்கு நாம் செய்யக்கூடிய சிறந்த அஞ்சலியாகும்'' என்று குறிப்பிட்டார்.

காமராஜரின் நினைவகத்தைத் திறந்து வைத்து இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். அவர்கள் தம்முடைய உரையில்,

உண்மையான நினைவுச்சின்னம்

''நம்முடைய பெருந்தலைவர் காமராஜ் நினைவாலயத்தைத் திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பெருந்தலைவர் காமராஜின் கொள்கை, குறிக்கோளைப் பின்பற்றி நடப்பதே அவருக்கு எழுப்பப்படும் உண்மையான நினைவுச் சின்னம் ஆகும்.

''அயராத உழைப்பு, மக்கள் பிரச்சினையைப் பற்றியே ஓயாத சிந்தனை, சமுதாயத்தில் பலவீனமானவர்களை உயர்த்த அவர் மேற்கொண்ட கடின உழைப்பு ஆகியவற்றின் மூலம் உயர்ந்த மக்கள் தலைவராக காமராஜ் போற்றப்பட்டார். அவர் எந்த உயர் பதவியை வகித்த போதிலும் பாமர மக்களிடம் நெருங்கியத் தொடர்பு கொண்டு அவர்களுடைய பிரச்சினைகள் குறித்தே ஓயாமல் சிந்தித்து வந்தார். இதன் காரணமாகவே அவர் மீது மக்கள் நீங்காத பற்றுக் கொண்டிருந்தார்கள். அனைத்திந்தியத் தலைவராக அவர் உயர்ந்த போதிலும் அவருடைய சிந்தனை மக்களைப் பற்றியதாக-அவர்களது வாழ்க்கை மேம்பாட்டைப் பற்றியதாக இருந்தது. அவருக்கு அகில இந்தியப் புகழை ஈட்டிக் கொடுத்தது. அவருடன் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதனைப் பெரும் பேறுகவே நான் கருதுகிறேன். முக்கியமான பிரச்சினைகளில் அவருடைய வழிகாட்டும் தன்மை, ஆலோசனை எனக்குக் கிடைத்திருக்கிறது.

''பிற்காலத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, நாங்கள் வேறு பாதையில் மாற நேரிட்ட போதிலும், சமுதாயத்தில் பலவீனமான மக்களை உயர்த்தும் பிரச்சினையில் ஒன்றுபட்டிருந்தோம். இந்த விஷயத்தில் எனக்கு ஒரு மித்த ஆலோசனை கூறிய தலைவராக காமராஜ் விளங்கினார். பல முக்கியமான தேசியப் பிரச்சினைகள் குறித்து காமராஜுடன் அவர் டெல்லி வந்த போதெல்லாம் விவாதிக்கும் வாய்ப்பு எனக்குத் தொடர்ந்து கிட்டி வந்தது. அப்போதெல்லாம்கூட அவர் முழுமையான ஆரோக்கியத்துடன் விளங்கவில்லை.

''என்னுடைய உடல்நிலை நன்கு தேறட்டும், பொதுக்குறிக்கோள் இலட்சியம் நிறைவேற நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுபட இறுதி முடிவு எடுப்போம்'' என்று என்னிடம் கூறினார்.

''ஆனல் காமராஜர் அகால மரணமடைந்து விட்டார். இதன் காரணமாகவும் அவரது மறைவுச் செய்தி என்னைப் பொறுத்தவரையில் பேரதிர்ச்சியாக இருந்தது. அவருடைய மறைவு தமிழ்நாட்டுக்கு மட்டுமின்றி, இந்தியாவுக்கும் பேரிழப்பு. தனிப்பட்ட முறையில் எனக்கும் பேரிழப்பு.

''இந்தியாவை எதிர்நோக்கியுள்ள உள்நாட்டு, வெளிநாட்டு அபாயங்களை அவர் நன்கு உணர்ந்திருந்தார். அவைகளைச் சமாளிக்க அனைவரும் கட்டுப்பாடு, ஒழுங்குடன் ஒருசேர ஒன்றுகூட வேண்டும் என்று அவர் விரும்பினார்.

''நினைவுச் சின்னத்தோடு நாம் திருப்தி அடைந்துவிடக் கூடாது. அது எத்தகைய பெரிய சின்னமாக இருந்தாலும் சரி, நாம் இளைஞர்களின் இதயங்களில் அவருக்கு நீங்காத நினைவுச் சின்னத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் காமராஜ் எந்த இலட்சியத்திற்காக நாட்டிற்கு உழைத்தாரோ, எந்த சேவைக்காக இறுதியில் தன் உயிரையும் அர்ப்பணித்தாரோ அந்த இலட்சியத்தை நோக்கி பாடுபட ஆக்கம் பெறுவதாக அமைய வேண்டும்.'' என்று குறிப்பிட்டார்.

தமிழக அரசினல் 7.5 இலட்ச ரூபாய் செலவில் உருவாக்கப் பெற்றுள்ள இந்த நினைவகம், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் அயராத தொண்டு, உழைப்பு, தியாகம், திறமை, அரசியல் வாழ்வு ஆகிய பல்வேறு பண்புகளை, நாட்டிற்கு-நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டுகின்ற ஒரு நினைவுச் சின்னமாக என்றென்றும் விளங்கும் என்பது உறுதி.

நோய் தடுக்கும் அறிவைப் பரப்புவோம்!

''நமது பரந்த நாட்டில் எவ்வளவு மருத்துவமனைகள் இருந்தாலும் சரி, மருத்துவ உதவி தேவைப்படுகின்ற ஒவ்வொருவருக்கும் சிகிச்சையளிக்க இயலுமா என்பது தெரியவில்லை. எனவேதான், நாம் இரு முனைகளிலிருந்தும் செயல்பட வேண்டும். ஒரு புறத்தில் நோய்கள் பற்றி நிபுணர்கள் ஆராய, மறு புறத்தில் சாதாரண நோய்களைத் தீர்க்கவும், அத்துடன் மக்களுக்கு நோய்த் தடுப்பு பற்றி அறிவூட்டவும் செயல்பட வேண்டும்.

''நோய்களைத் தடுப்பது குறித்து பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும், மற்றவர்களுக்கும் சிறிதளவு விஷயஞானம் இருந்தாலும் போதும், நோய்களில் பல்வற்றைத் தடுக்க முடியும்.''

''போதுமான மருத்துவ வசதியற்ற இந்நாட்டில் பாலைவனத்தின் நடுவே அமைந்த சோலைகள் போல மதிப்புமிக்க மருத்துவக் கல்லூரிகளும், மருத்துவ மனைகளும் உள்ளன.

''இந்த மருத்துவக் கல்லூரிகளில் படித்துப் பட்டம் பெற்று செல்வோருக்கு, மற்றவர்களுக்கு அறிவூட்ட வேண்டிய பெரும் பொறுப்பு உள்ளது.

''பலநோய்கள் ஒழிக்கப்பட்டு விட்டன. ஆனல் அவற்றின் இடத்தை வேறு நோய்கள் பிடித்துக் கொண்டுள்ளன. இப்படிப் புதிதாக நோய்கள் தோன்றும் போது அவற்றை எதிர்த்து நிற்கும் பலம் பெறுவதற்கு நாம் மக்களுக்கு உதவியாக வேண்டும்.

''மருத்துவம் செய்வது சமூக சேவையாக இருக்க வேண்டும். அது தொழில் நுட்பமாகச் செயல்படக்கூடாது. மருத்துவமனைகளை 'தொழில்' என்று கருதக் கூடாது.''

இவ்வாறு வேலூர் 'கிறிஸ்துவ மிஷன்' கல்லூரி (சி. எம். சி.) மருத்துவமனை இருதய சிகிச்சைப் பிரிவின் வெள்ளி விழாவைப் பிரதமர் இந்திரா காந்தி துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் பேசுகையில் மருத்துவம், கல்வி ஆகிய துறைகளில் கிறிஸ்துவ சமூகத்தினர் செய்து வரும் சேவையைப் பிரதமர் பாராட்டினர்.

நோய்கள் வராமல் தடுப்பதில் மக்களுக்கு அறிவூட்ட இடையரூத முயற்சி தேவை என்றும். மருத்துவத் துறை ஆராய்ச்சியின் பலன்கள் மக்களுக்குக் கிட்ட வேண்டும் என்றும் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி வலி அவர்கள் வலியுறுத்தினர்.

நமது கிராமங்களில் பணி புரிவதற்குரிய டாக்டர்களைப் பயிற்றுவிப்பதில் தனிக் கவனம் செலுத்துவதற்காக வேலூர் மருத்துவ மனைக்குப் பிரதமர் பாராட்டும் தெரிவித்தார்.

ஒரே வாரத்தில் 10 தொழில் தகராறுகள் தீர்க்கப்பட்டன!

''தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் அவர்களின் ஆட்சி செயல்படுவதற்கு முன்பாக 25,000 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட 21 தொழில் தகராறுகள் நிலவின. குடியரசுத் தலைவர் அவர்களின் ஆட்சி ஏற்பட்ட ஒரே வாரத்தில் 20,000 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட 10 தொழில் தகராறுகள் தீர்க்கப்பட்டன. சமீபத்தில் தீர்க்கப்பட்ட தொழில் தகராறுகளில் மிகப் பெரியது 'மதுரை கோட்ஸ் லிமிடெட்' நிறுவனம் பற்றியதாகும். இதனல் 18,000 தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்கள். மீதியுள்ள தொழில் தகராறுகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன''.

—ஆர். வி. சுப்ரமணியன்—

[தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் ஆலோசகரான திரு. ஆர். வி. சுப்ரமணியன் அவர்கள் 9-2-76 அன்று பத்திரிகைச் செய்தியாளர்களிடையே கூறிய செய்தி].

இளைஞர்களுக்கு பிரதமர் கூறிய அறிவுரை

"கல்வி பயிலுவது வேலை வாய்ப்புக்களைப் பெறுவதற்காக என்ற வரையறுக்கப்பட்ட நோக்கத்திற்காக மட்டும் இல்லாமல், மாறுதலின் சவால்களை சமாளிப்பதற்காகவும் அமையவேண்டும். அத்தகையப் பயனுள்ள கல்வி,, மதம், இடம் முதலிய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட வகையில் எல்லாருக்கும் கிட்டுமாறு செய்ய வேண்டும்.''

''மாறுதலைக் கணக்கில் எடுத்துக் கொள்ளுவதாகவும், அதற்கு தயாரானதாகவும் கல்வி அமைய வேண்டும். மாறுதல் தேவைப்படுகின்றபோது வேலைகளுக்கான சிறு தொழில் பயிற்சிக்கு மாறுவது என்று மட்டும் அது கருதப்படுகிறது. வேலை வாய்ப்புகளும், வாழ்க்கையில் பாதுகாப்பும் இளைஞர்களுக்கு அவசியமே. ஆனால் வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்காக மட்டும் படிப்பது கல்வியை, தவருகப் பயன்படுத்துவது ஆகும். உலகம் மாறுதல் அடைகின்றபோது புதுவேலைகளும், பொறுப்புகளும் உருவாகும். இளைஞர்களுக்கு குறிப்பிட்ட வேலைகளில் மட்டும் பயிற்சி அளிக்கப்பட்டால், உலக மாறுதலை யொட்டி உருவாகக் கூடிய வாய்ப்புகளின் பயனை அவர்களால் அடைய இயலாது. இந்தத் துறையில் சரிப்படுத்த வேண்டியது அவசியம் ஆகும்.

''இளைஞர்கள் வாய்ப்புகளை எதிர் நோக்க வேண்டும். வாய்ப்புகளைத் தேட வேண்டும்.' வாய்ப்புகள் நிறைய உள்ளன. வாய்ப்புகள் போதிய அளவில் இல்லையென்ருலும், நான் கல்லூரியில் படித்தபோது இருந்ததைவிட, இப்போது அதிக வாய்ப்புகள் உள்ளன. ஆனுல் நாம் விரும்பக் கூடிய அளவில் இல்லை. வேலை வாய்ப்பின்மை நிறைய இருக்கிறது. நாட்டின் பொருளாதார பிரச்சனைகளைக் கருத்தில்கொண்டு பார்க்கின்றபோது, வேலையில்லாத் திண்டாட்டத்தை பெருமளவுக்குக் குறைக்க நம்மால் முடிந்திருக்கிறது.'

''உங்கள் பாதையில் வரக் கூடிய எதற்கும் உங்களுடைய மனத்தைத் திறந்து வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் நிகழ்ச்சிகளை முன்கூட்டியே கணித்து, அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள பயிற்சி பெற்று தயாராகிட வேண்டும்.''

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் 14-2-76 அன்று மாலை சென்னை ராயப்பேட்டையில் உள்ள புதுக் கல்லூரியின் நிருவாகக் கட்டடத்தைத் திறந்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஒழுக்கம் தேவை!

"ஒழுக்கம் என்பது உள்ளுணர்வாகவே ஏற்பட வேண்டும் என்று நம்புகின்றேன்.. ஒழுக்கம் என்பது மேலேயிருந்து உள்ளத்தில் புகுத்திவிடக் கூடியதல்ல. ஆனுல் அண்மைக் காலத்தில் நமது நாட்டில், ஒழுங்கினமாக நடந்து கொள்வது ஒரு 'பேஷனுக' ஆகி விட்டது. யாராவது ஒருவர் ஒழுங்கீனமின்றி நடந்து கொண்டால், அவர் ஏற இறங்கப் பார்க்கப்படுகிருர்; கேலிக்கு உள்ளாகிருர்; அரசைப் பின்பற்றுகிறவர் என்று அழைக்கப்படுகிருர். யாரேனும் ஒருவர், வேறு யாரேனும் ஒருவரை முழுக்க முழுக்கப் பின்பற்றினுல், அவர் முறையாக நடந்துகொள்பவராகவும், தானே சிந்திக்கக் கூடியவராகவும் கருதப்படுகிருர். ஆனுல் அரசுக்காக யாரேனும் செயல்பட்டால், உடனே அவர் சிந்திக்கத் திறனற்றவராகக் கருதப்படுகிருர். எனவேதான், எல்லா வகையான தனித்த-முறையற்ற - எண்ணங்களும், அணுகுதல்களும் தோன்றின. அது தனிப்பட்டவர்களின் விவகாரம் அல்ல; தனிப்பட்ட ஒருவருக்கு எதிரானதல்ல; தனிப்பட்ட கட்சிக்கு எதிரானதல்ல; ஆனுல் அதன் இறுதி முடிவு நாட்டின் வளர்க்கும், மேம்பாட்டிற்கும் . தடையானதாக இருக்கிறது என்பதை நாங்கள் அறிந்து கொள்ளும் வரை அவைகளைப் பற்றி முதலில் நான் கவலைப்படவில்லை. அது சிறுபான்மையினரின் நலனுக்கு எதிராகவும் செயல்பட்டது. அது ஏழை எளிய மக்களின் நலனுக்கு ஊறுவிளைவிப்பதாகவும் செயல்பட்டது; ஏனெனில் எந்த ஒரு கஷ்டத்தையும் எப்பொழுதும், தாங்கிக் கொள்கிறவர்களாகவே அவர்கள் உள்ளனர். பணக்காரர்களாகவும், சக்தி வாய்ந்தவர்களாகவும் உள்ளவர்கள் தங்கள் கஷ்டங்களைத் தவிர்த்துக் கொள்ள வழி காண்கிருர்கள்; நிலைமைக்கு ஏற்ப சரி செய்து கொள்ளவும் வழி காண்கிருர்கள். எளியவர்களே கஷ்டத்தைச் சுமக்க வேண்டியவர்களாக இருக்கின்ருர்கள்; எனவே தான் நாம் ஒழுங்கின்மைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க நேரிட்டது.''

—இந்திரா காந்தி

(புதுக்கல்லூரி நிருவாகக் கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டது.)

மக்கள்
விரும்பும் வகைகள்!
நியாயமான விலைகள்!



படுக்கை விரிப்புகள்,
மலர்ப் படுக்கைகள்!

நேர்த்தியான நெசவு கைத்தறிப் படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணை உறைகள். உங்களுக்கு சொகுசு அளிப்...

அழகு மிளிரும் ஆரணங்குகள்!

ஆரணி, கும்பகோணம், காஞ்சிபுரம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம், மதுரை பருத்தி கைத்தறிச் சேலைகள், அச்சிட்ட சுங்கடி சேலைகள் மற்றும் சின்னளப்பட்டி சேலைகள்.





துவாலைகள்,
தூய்மையான
துவாலைகள்!

சாதா, டர்கிஷ் வகைகள், மென்மையான மற்றும் ஈரத்தை உறிஞ்சும் வகைகள். உங்களது சுகாதாரத்துக்கு இன்றியமையாதவை!

லுங்கிகள்,
வசதியானவை
நீடித்துழைப்பவை!

உங்கள் விருப்பத்துக்குகந்த சாதா, கோடிட்ட அல்லது கட்டமிட்ட பல வகைகளில்.

மற்றும் கைத்தறிப் பருத்தி வகைகள், வேட்டிகள், உடுப்புகளுக்கான துணிகள், அலங்காரத் துணிவகைகள்—குடும்பத்தினர் அனைவருக்குமே உகந்த முழுதும் புதிய வகைகள்.

கைத்தறியே வண்ணத்துப்பூச்சி

பதிவு எண். M. 8676

24-9-76/c

சாதனை மிகு பத்தாண்டு



நாடு பீடுநடை போடுகிறது

சுய சார்பை நோக்கி

கட்டுப்பாடுடன் கூடிய சமூக

வாழ்வை நோக்கி

ஒருமைப்பாட்டை நோக்கி.

தமிழரசு
1.3.76
50 காசு



சிறு தொழிலுக்கோர் உறுதுணை...... எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்

அரிசிமில், மாவுமில், ஆயில் மில், மர அறுவைத் தொழில் போன்ற சிறு தொழில் நிறுவனங்களில் இயங்கும் மோட்டார்களைச் சீராகச் செலுத்த, சிறந்த ஒரு சாதனம் எல் & டி ஸ்டார்ட்டர். எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

உங்கள் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

• பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று, வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்துகொடுக்கின்றனர்.

• சிறிய ஊர்களில் கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH L&T Switchgear

ஸ்விட்ச்கியர் டிவிஷன்,
லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்
P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.

LT. 3856



நமது இலட்சியம்-

ஏழை எளியோர் நல் வாழ்வே!

சுதந்திரப் போராட்டத்தில் தமிழ்நாடு பெருமைக்குரிய இடம் பெற்றிருந்தது. சுதந்திரமடைந்த பிறகும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பலர் திட்டமிடுதல், கொள்கை வகுத்தல், அவற்றைச் செம்மையாகச் செயல்படுத்தல் ஆகியவற்றில் முன்னேடியாக விளங்கினர். தமிழ்நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானிகள், தொழிலதிபர்கள் ஒருபுறமும், திறமையும் அனுபவமும் மிகுந்த தொழிலாளர்கள் மறுபுறமுமாக நாடெங்கும் பரவி, பல்வேறு துறைகளிலும் தங்கள் தனித் திறமையை நிரூபித்துள்ளனர். மூலப் பொருள்கள், உலோகங்கள், கனிமங்கள் ஆகியவற்றில் பற்றாக்குறை இருந்த போதிலும், முன்பிருந்த புகழ்பெற்ற அமைச்சரவைகளின் பரந்த கொள்கை—திறமை மிகுந்த நிருவாக அமைப்பு—தொழில் முனைவோரின் ஆர்வம் மிக்க திறமையும், சுதந்திர இந்தியாவில் வளமாக வாழ வேண்டும் என்ற மக்களின் ஆர்வமும் அளித்த பின்பலம்—ஆகியவற்றின் காரணமாக தமிழ்நாடு மிகுந்த முன்னேற்றம் அடைந்திருந்தது. முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார வளர்ச்சி வியப்பிற்குரியதாகவும், அனைத்து இந்திய அளவில் பெருமைக்குரியதாகவும் விளங்கியது.

ஆயினும் நாட்டின் தொழில் வளர்ச்சியில் கடந்த ஆறு ஆண்டுகளாகத் தனக்கிருந்த சிறப்பு மிக்க இடத்தினைப் பறிகொடுத்து விட்டது தமிழகம் ; செல்ல வேண்டிய பாதையை விட்டும் அது வழுவிச் சென்றது; தேசீயச் சித்தாந்தங்கள், செந்நெறிகள், சீரிய இயல்புகள் ஆகியவற்றை விட்டும் அது விலகிப் போயிற்று; அதனால் பின்தங்கும் பிணியினால் பீடிக்கப்படவும் நேர்ந்தது. நம் மாநிலத்தில் தனிநபர் திட்ட முதலீடு மிகவும் அடிமட்டமான ஒரு நிலைக்குத் தலைக்குப்புறக் கவிழ்ந்தது. பொது வாழ்க்கையில் கண்ணியமும், திறமையும், இலஞ்சத்திற்கும் ஒழுங்கீனங்களுக்கும் வெஞ்சாமரம் வீசும் நிலை ஏற்பட்டது. ஜனநாயக வாழ்வின் கோட்பாடுகளைத் தவர விட்டு விட்டோம். தமிழ் நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற அதிகார வர்க்கத்தினரிடையே ஆக்டன் பிரபு (Lord Acton) கூறிய வாக்கே பிரதிபலித்தது! ''செயல்முறைகளே நாம் செல்கின்ற இலக்கைத் தீர்மானிக்க வேண்டும்''! என்னும் காந்தியடிகளின் கனிவுரையே தவருனதாகக் கருதப்பட்டது. நல்ல ஆலோசனைகள் பலவீனத்தின் அடையாளங்களாகத் தள்ளப்பட்டன.

மகிழ்ச்சி பொங்கிய மீட்சிநாள் !

''தமிழ்நாடு முழுமையுமே பிப்ரவரி முதல் நாளை 'மீட்சி தினமாகக்' கொண்டாடியது; குடியரசுத் தலைவரின் ஆட்சியினை வரவேற்றது. அந்த நாள், நேரிய - நீதியுள்ள - திறமை மிக்க - ஒரு சார்பற்ற - தூய்மையான நிருவாகம் பற்றித் தூதுசொல்ல வந்த நாளாக - உற்சாகம் பொங்கும் நாளாக விழா எடுக்கப்பட்டது.

அண்மையில், மதுரை, இராமநாதபுரம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் என்னுடைய சுற்றுப்பயணத்தின்போது நான் கண்டவையும் கேட்டவையுமே நான் இப்போது கூறியவற்றுக்கு எல்லாம் ஆணித்தரமான சாட்சியங்கள் ஆகும். இதற்கு மேலும் எடுத்துக் காட்டுத் தேவையென்ருல், அதனையும் மெரினு கடற்கரையோரத்திலே நமது பிரதமரின் சொற்பொழிவை அசையாமல் அமர்ந்து கேட்ட பரந்த மக்கள் கடலின் வடிவத்திலே நாம் பார்த்தோம் ; தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியினைக் கொள்ளை மகிழ்ச்சியுடன் மக்கள் வரவேற்பதற்கு—இந்தியப் பிரதமர் எங்கே சென்ருலும் அவருக்கு நல்வரவு கூற முண்டியடித்து வந்த மக்கள் வெள்ளமே அழுத்தமான சாட்சியமாக அமைந்ததையும் கண்டோம்.

ஆளுநர் உரை

புதுயுகம் படைக்கும் அரிய சாசனம்

''அவசரநிலைப் பிரகடனத்தை அடுத்து, ஒரு வரலாற்று யுகத்தின் திறப்பு விழாவாக பிரதமரின் இருபது அம்சத் திட்டம் வந்தது. அதனை அவருடைய வார்த்தைகளிலேயே நினைவுறுத்துகிறேன்:

''அவற்றில் சில திட்டங்கள் புதியவை; மற்றவை முன்பே செயற்படுத்தப்பட்டு வருபவை; ஆனுல், அவை வீரியத்துடனும் உறுதிப்பாட்டுடனும் நிறைவேற்றப்பட வேண்டியவை. மந்திரக்கோல் பரிகாரங்களையோ திகைப்பூட்டும் திடீர் விளைவுகளையோ அருள்கூர்ந்து எதிர்பார்க்காதீர்கள். ஏழ்மையை ஒழித்துக் கட்ட ஒரே ஒரு மந்திரம்தான் இருக்கிறது. கடின உழைப்பு, தெளிவான கண்ணேட்டம், இரும்புபோன்ற நெஞ்சுரம் மிகக் கடுமையான கட்டுப்பாடு—ஆகியவையே அந்த மந்திரம். நம்மில் ஒவ்வொருவரும் நமக்கு மட்டுமின்றி, நாம் இருக்கின்ற இடத்தில் அண்டையில் உள்ள சகோதரக் குடிமக்களுக்கும் அதிகமாக உதவிட வேண்டும் என்கிற உறுதிபூண வேண்டும்''

இந்தியப் பிரதமர் அவர்களின் இந்தப் புதிய கோட்பாட்டின் கூறுகளாக் உள்ள பல்வேறு அம்சங்களையும் நான் விளக்கிக் காட்ட வேண்டிய தேவையில்லை. ஆனுல் இருபது அம்சத் திட்டத்தின் மீது உங்கள் கருத்தினை நீங்கள் பதித்திட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஏனெனில், அது ஒன்றே வறுமையோடு போராடக் கூடிய வலிமை வாய்ந்த கருவியாகும்—கிராமப்புற மறுமலர்ச்சியை முன் கூட்டியே முழக்கும் முரசமும் ஆகும். மிக உச்சமான நன்மைகளைப் பெறக் கூடிய வகையில் நிருவாக இயந்திரத்தை முடுக்கி விட்டோமானுல்—மனிதர்களிடமும் மற்றப் பொருள்களிடமும் பொதிந்து கிடக்கும் மூலபலத்தைப் பொங்கியெழுமாறு நம்மால் இயன்ற வரைக்கும் செய்தோமானுல்—இந்தத் திட்டத்தைப் பயன் கொழிக்கும் வகையில் நிறைவேற்றிவிட முடியும்.

இன்றைக்கு நமது இந்திய நாட்டின் அரிய உரிமைச் சாசனமாகவே இருபது அம்சத் திட்டம் எழுந்து வந்துள்ளது. இதனை உடனடியாகவும், உறுதியான முறையிலும் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு மாவட்ட ஆட்சித் தலைவர்களைச் சார்ந்ததாகும். நமது பிரதமர் அவர்கள் கடந்த பத்தாண்டுக் காலமாகக் கிராமப்புற மறுமலர்ச்சிக்குரிய உள்ளமைப்பினை உருவாக்கி வந்திருக்கிருர்கள். வங்கிகள் நாட்டுடைமை அதன் தொடக்கமாக அமைந்தது. அதுமுதல் மின்சாரம் இந்திய கிராமங்களை எட்டியது; — டிராக்டர்கள் பெரும் அளவுக்குப் பயன்படுத்தப் படுகின்றன; இலட்சக் கணக்கில் குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டு வருகின்றன ; இன்று ஒவ்வொரு இல்லத்திலுமே வானெலிப் பெட்டிகள் காணப் படுகின்றன; இன்னும் எத்தனையோ அன்ருட வாழ்க்கைக்கு உரிய மற்ற நவீனமான சாதனங்கள் எல்லாம் கிராமப் புறப் பகுதிகளில் ஊடுருவிய வண்ணம் உள்ளன; எண்ணில் அடங்காத வேலை வாய்ப்புகளும் உருவாக்கப் பெற்று வருகின்றன.

விலைவாசி வீழ்ச்சியடைய....

''இத்தகைய வாய்ப்புக்களை நமக்கு நற்பயன் உள்ளவைகளாக ஆக்கிக் கொள்வது நம்மையே சார்ந்திருக்கிறது; மகிழ்ச்சி மிகுந்த எதிர்காலத்திற்கு அடித்தளமாக இருபது அம்சத் திட்டத்தை அமைத்துக் கொள்வதும் நம்முடைய கையிலேயே இருக்கிறது. உணவு உற்பத்தியில், நம்முடைய நல்வாய்ப்பாக மிகுதியான மகசூலை நாம் அடைந்திருக்கிருேம். ஆயினும், அதிகமான உற்பத்தி, தெளிவான கொள்முதல் கொள்கை, சீரான விநியோகக் கொள்கை ஆகியவற்றைத் திட்டமிடுவதிலும் உற்பத்தியாளருக்கு வருவாயை வளர்க்கக் கூடிய விலைகளையும், வாங்குவோருக்கு நியாயமான விலையையும் உத்தரவாதம் செய்வதிலும் நாம் புத்திக்கூர்மையோடு நடக்க வேண்டும். கையிருப்பில் இப்பொழுது போதுமான உணவு இருப்பை நாம் வைத்திருக்கிருேம். கொள்முதல் முடிந்தவுடன், உணவுப் பங்கீட்டுக் கழகத்திடம் வெளிச் சந்தையில் விற்பனை செய்யத் தக்க அளவுக்கு அதிகமான உணவுப் பொருள்கள் இருக்கும். இதுவே, மெத்தனமான போக்கிற்கு இடம் அளித்துவிடக் கூடாது. பொது விநியோக முறை சீரமைப்புச் செய்யப்பட்டு போதுமான சரக்குகள் விநியோகிக்குமாறு பார்த்துக் கொள்ளப்பட வேண்டும். நம்மிடம் உணவுப் பொருள்கள் விற்பனைக்காக மட்டுமின்றி, சர்க்கரை, கோதுமை போன்ற இன்றியமையாத பண்டங்களின் விற்பனைக்காகவும் 9,926 சில்லறை அங்காடிகள் உள்ளன. மாநிலத்தின் எல்லையோரங்களில் கட்டுக்காவல் யந்திரத்தை இறுக்கமாக முடுக்கி விடுவதும், உணவுப் புலனய்வுத் துறையின் (Food Cell) கடுமையான கண்காணிப்பும் விலைவாசி ஏருமல் சீராக வைத்திருக்கத் துணை செய்யும். சில சில்லறைக் கடைக்காரர்கள் விலைவாசிப் பட்டியலை வெளியே எழுதி வைப்பதில்லை; சிலர் பதுக்கல் செய்து செயற்கைப் பஞ்சத்தைத் தோற்றுவிப்பதில் ஈடுபடுகின்றனர். அவர்களைப் பற்றியெல்லாம் நமக்குப் புகார்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. அத்தகைய கறுப்புச் சந்தைக் காரர்கள் மீது 'மிசா' (MISA) சட்டத்தை ஏவிவிடுவதற்கும் அரசாங்கம் தயங்காது என்று முன்பே அவர்களை நான் எச்சரித்திருக்கிறேன். திடீர்ச் சோதனைகள், இடைவிடாத கண்காணிப்பு ஆகியவற்றின் மூலமே சாதாரண மனிதன் அதிகமான விளைச்சலின் பலன்களை அடைவதற்கு நாம் உத்தரவாதம் அளிக்க முடியும். சாதாரண மனிதனே நம்முடைய எஜமானன்; அவனுடைய நலனை அலட்சியப்படுத்துவதற்கு எவரையுமே நாம் அனுமதிக்க முடியாது; அத்தகைய நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும் என்றுதான் நான் எதிர்பார்க்கிறேன்.

"வறுமையை ஒழிப்பதற்கான ஒரே மந்திரம்!

* கடின உழைப்பு
* நெடிய நோக்கு
* திட சிந்தனை
* கட்டுப்பாடு"

—இந்திரா காந்தி

கொத்தடிமையை ஒழிப்போம் !

கொத்தடிமைச் சிக்கலையும் நாம் உடனே எடுத்துக் கொண்டு தீர்வு காண வேண்டும். நீலகிரி மாவட்டத்தில் உள்ள 5,000 பிணைக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மட்டுமின்றி எஞ்சிய தமிழகப் பகுதியில் உள்ளவர்களுக்கும் சேர்த்தே இந்தச் சிக்கலுக்கு நாம் தீர்வு காண வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இது குறித்து விரிவான முறையில் புலனய்வு செய்து, பரிகார நடவடிக்கைகளுக்குரிய பட்டியலைத் தயாரிக்க வேண்டும்.

ஒளி வீசும் தொழில் வளர்ச்சி !

''என்னுடைய ஆலோசகர்கள் திரு. பி.கே. தவே, திரு. ஆர்.வி. சுப்பிரமணியன் ஆகிய இருவரும் மத்திய அரசு உயர் அதிகாரிகளு

அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

டனும்; திட்டக் குழுவுடனும் கருத்துக்களைப் பரிமாறியபின் உறுதியான நம்பிக்கைகளோடும் உருவான திட்டங்களோடும் வந்திருக்கிறார்கள்: பொருளாதாரம் ஒரு புதிய எழுச்சியினை எய்திடும் வகையில்; ஐந்தாவது திட்டக் காலத்தில் திட்ட முதலீடு உயர்த்தப்பட்டிருக்கிறது: 1976—77-க்கான ஆண்டுத் திட்டத்தில் ஒரு குறிப்பிடத் தக்க முன்னேற்றப்போக்கைக் காண்பதற்காக மத்திய அரசு காட்டுகின்ற அக்கறைக்கு நாம் நன்றி செலுத்துவோமாக!

''சேலம் இரும்பாலை நிதி ஒதுக்கீட்டின் அளவை உயர்த்துவதற்கும் மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது; இன்னும் சில தொழில் திட்டங்கள் பற்றியும் தீவிரமாக அது சிந்தித்து வருகிறது. 53 கோடி ரூபாய் முதலீட்டில், 'பெல்' (BHEL) அமைப்பின் கீழ் திருச்சியில் 'தி சீம்லெஸ் ட்யூப் பிராஜக்ட்' (THE SEAMLESS TUBE PROJECT) என்னும் நிறுவனம் தொடங்கப் பெறவிருப்பது பற்றியும் அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய முதலீடுகளிலும், வளர்ச்சித் திட்டங்களிலும் தனக்குரிய பங்கினைத் தமிழ் நாடு தொடர்ந்து பெற்று வரும் என்பதை நீங்கள் உறுதியாக நம்பி நிம்மதியோடு இருக்கலாம்.

கிராம மறுமலர்ச்சி

''கிராம மறுமலர்ச்சித் திட்டம் புதியதொரு கிளர்ச்சியும், மிகுந்த விறுவிறுப்பும் மேவியதாக— எல்லாரையும் ஈர்க்கத் தக்கதாக-இருந்திட வேண்டும். கடன் தொல்லைகளாலும், கடுமையான வட்டிச்சுமையாலும் கிராமப் புறங்கள் அவதியுறுகின்றன. இந்தக் கிராமப் புறக் கடன் சுமையை தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன; அதே சமயம், கடன்வசதிகளுக்கான மாற்று ஏற்பாடுகளையும் செய்திட வேண்டும். குறைந்த பட்சக் கூலியை நிர்ணயம் செய்வதற்கு மட்டுமின்றி, அவை சரியாகக் கொடுக்கப்படுகின்றனவா என்று கண்காணிப்பதற்கும் இதுவே தருந்த நேரம்; கொடும் வறட்சிக் குள்ளாகும் மாவட்டங்கள் உடனடியான தனிக் கவனத்திற்கு உரியனவாகும். கண்கூடான, நிரந்தரமான வருவாய் இனங்களுக்கு வழிவகைகளை உருவாக்காமல், முந்தைய நாட்களில் ஏராளமான தொகை செலவழிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதிகளில் நீடித்த முறையில் பலன்தரும் நிலைமையை ஏற்படுத்தவும், நிரந்தரமான வரிசைக்கிரமமான அடிப்படையில் வறட்சிக் கொடுமையைச் சமாளிக்கவும் பொருத்தமான செயல் திட்டங்களையே நாம் வகுத்துக் கொள்ள வேண்டும்: இன்றைக்கும் குடிநீர் இல்லாமல்; ஏறத்தாழ 5,000 கிராமங்கள் இருக்கின்றன: தொடர்ந்த வறட்சியினால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு உடனடியாகவும்; ஏனைய ஊர்களுக்கு எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவாகவும் குடிநீர் கிடைப்பதற்கு உடனே நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும். தமிழ்நாட்டின் பெரும்பகுதிகளில் மிகுதியான விளைச்சல் கண்டுள்ள போதிலும், கடுமையான வறட்சி நிலவுகின்ற சில பகுதிகளும் இருக்கின்றன. நம்மால் முடிந்த வழியில் எல்லாம் அங்குள்ள மக்களுக்கு உதவி புரிவதற்கு உருப்படியான முயற்சிகள் அனைத்தையும் நாம் எடுத்துக் கொண்டாக வேண்டும். தொடர்ந்து சில பகுதிகளைப் பற்றிக் கொண்டேயிருக்கிறது வறட்சி; அந்த வறட்சிக் கொடுமையை விரட்டியடிக்கக் கூடிய பாசனத் திட்டங்கள் சில அரைகுறையாக-முழு வடிவம் பெறுமல் அப்படியே நிற்கின்றன. அவற்றுக்கு இப்போது முதலிடம் தரப்பட வேண்டும்.

சென்னைக்குக் கிருஷ்ணா நீர் !

கிருஷ்ணா நதியிலிருந்து சென்னை மாநகருக்கு 15 டெக்கா மில்லியன் கன அடி தண்ணீர் தருவதற்கு ஆந்திரம், கருநாடகம், மராட்டியம் ஆகிய மாநிலங்கள் இசைந்துள்ளதாக நமது பிரதமர் அறிவித்திருக்கிறார். தருந்த சமயத்தில் வருகின்ற பெருந்தன்மையான நன்கொடையாகும், இது. பெருகிக்கொண்டே இருக்கும் நம்முடைய குடிநீர்த் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய ஒரு நம்பத்தக்க ஆதாரமாகும் கிருஷ்ணா நீர். அது நம் சென்னை மாநகருக்கு வந்து சேர வழிகண்ட பெருமதிப்பிற்குரிய நம்முடைய பிரதமர் அவர்களுக்கு நம் உளம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஆந்திரம், மராட்டியம், கருநாடகம் ஆகிய மாநில அரசுகளுக்கும் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துள்ளேன். பிரதமரின் அந்த அறிவிப்பைத் தொடர்ந்து இந்தக் கிருஷ்ணா நீரை நாம் பயன்படுத்திக் கொள்வதற்கான வழிதுறைகளைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கு, முன்பே நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுவிட்டன. விரைவிலேயே இந்தத் திட்டம் பற்றிய, விரிவான கணிப்புக்கும் ஆராய்ச்சிக்கும் ஏற்பாடுகள் தொடங்கவிருக்கின்றன. குடிநீர் — கிராமப் புறச் சுகாதாரம்—மருத்துவம் பின்தங்கிய மக்களுக்கு வீட்டு வசதி — நிலமற்றவர்களுக்கு வீட்டுமனையும் நிலப்பட்டாவும் வழங்குதல் முதலானவற்றுக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும்:

''இவையெல்லாம் நாம் சந்திக்க வேண்டிய சிக்கல்களில் சிலவேயாகும்: —இவை குறித்து உங்களுடைய கருத்துரைகளை நாங்கள் வரவேற்கிறோம்; அவைகள்மீது அக்கறையோடு நாங்கள் சிந்தனை செலுத்துவோம்.

முதிர்ந்த அனுபவமும் —நிருவாகத்திறனும்—ஆற்றல் மிகுந்த அறிவுக் கூர்மையும் கொண்ட என்னுடைய ஆலோசகர்களும், தலைமைச் செயலாளரும் அருந்தொண்டு ஆற்றுவார்கள் என்பதில் எனக்கு ஐயப்பாடே இல்லை. சாதாரண மனிதனுக்கு நாம் ஒரு வாக்குறுதியை வழங்குவோம். எதுவாக இருப்பினும் அதனதன் தகுதியின் அடிப்படையிலேயே அணுகப்படும்; நடுநிலையில் நின்று—திறமையாக—விரைவாக அவனுக்குப் பணியாற்றுவதற்கு ஒவ்வொரு முயற்சியும் மேற்கொள்ளப்படும்; இதுவே அந்த வாக்குறுதி மட்டுமல்லாமல், கிராமப்புற மறுமலர்ச்சியிலும், வறுமையை வெல்வதிலும் ஓர் எடுத்துக் காட்டாக இருபது அம்சத் திட்டத்தை திறமையாக நிறைவேற்றுவதில் தமிழகம் விளங்கும் என்பதில் எனக்கு ஐயம் இல்லை. பத்துக் கிராமங்கள் இணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஒரு கூறுகச் சோமங்கலம் திட்டத்தைப் பிரதமர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அது, நாட்டின் ஏனைய பகுதிகள் எல்லாம் பின்பற்றத்தக்க ஒரு கலைக் காட்சியாக ஆக்கப்பட வேண்டியது மட்டுமல்ல; மாநிலம் முழுமைக்குமான கிராமப்புற மறுமலர்ச்சிக்கே அது ஒரு தொடக்க முயற்சியாகவும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். உங்களுடைய திறமையிலும், நேர்மையிலும், ஒத்துழைப்பிலும் எனது நம்பிக்கைகளையெல்லாம் நான் பதிய வைத்திருக்கிறேன். அவை மிகுந்த விருப்பத்தோடு நிறைந்த அளவில் நிறைவேறும் என்பதிலும் எனக்குச் சந்தேகமே இல்லை. இப்போது இந்த மாநாட்டினைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்''.

[27-2-76 அன்று சென்னை ராஜாஜி அரங்கில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் காவல்துறை அலுவலர்கள் மாநாட்டின் துவக்க விழாவில் மேதகு தமிழ்நாடு ஆளுநர் ஆற்றிய உரையின் தொகுப்பு.]

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள்

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்கள் மாநாடு கடந்த 27-2-76, 28-2-76 ஆகிய இரு நாட்களில் சென்னை, ராஜாஜி அரங்கில் நடைபெற்றது. அம்மாநாட்டில் விவாதிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டவைகளைப் பற்றி மேதகு தமிழ் நாடு ஆளுநர் அவர்கள் 28-2-76 அன்று மாலை பத்திரிகைச் செய்தியாளர்களிடையே பின் கண்டவாறு அறிவித்தார்.

அமைதி நிலவுகிறது !

குடியரசுத் தலைவர் அவர்களின் ஆட்சி நடைமுறைக்கு வந்தபின், தமிழ்நாட்டில் உள்ள சட்டம் ஒழுங்கு நிலைமை பற்றி ஆய்வு செய்யப்பட்டது. தமிழகத்தில் உள்ள மக்களில் எல்லாத் தரப்பினரும் ஆட்சி மாற்றத்தை வரவேற்று உள்ளனர் என்று தெரிய வருகிறது. தமிழகத்தில் தற்போது நிலைமை அமைதியாகவும், ஒழுங்காகவும் உள்ளது.

தொழில் தகராறுகள் தீர்ந்தன !

ஒவ்வொரு தொழிற்சாலையிலும் போதிய அளவுக்கு உற்பத்தியைப் பெருக்கவும், வேலை நிறுத்தத்தைத் தடுக்கவும் உதவும் வகையில் கண்காணிப்புக் குழு அமைக்கப்படும். குடியரசுத் தலைவரின் ஆட்சி வருவதற்கு முன் தமிழகத்தில் 25 தொழில் தகராறுகளும் கதவடைப்புகளும் நிலவின. அவைகளில் 23 தொழில் தகராறுகள் சுமுகமான முறையில் தீர்க்கப்பட்டு விட்டன. மீதி 2 தகராறுகளும் ஒரு சில நாட்களில் தீர்க்கப்பட்டுவிடும்.

கல்லூரி மாணவர்கள் சங்கத் தேர்தல்

கல்லூரி மாணவர்கள் சங்கங்களுக்கானத் தேர்தல்கள் பற்றி முடிவு செய்ய துணை வேந்தர்கள் அடங்கிய உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அதில் விவாதிக்கப்படும். மாணவர்கள் சங்கத் தேர்தல்கள் காரணமாக மாணவர்களிடையே மனக்கசப்பு, அரசியல்—பூசல்கள்—ஆகியனவை ஏற்படாமல் இருப்பதற்குத் தகுந்த விதிமுறை வகுக்கப்படும்.

அரசுப் பணிகளின் மேற்பார்வை

வருவாய்த்துறை வாரிய உறுப்பினர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் நடைபெறும் வறட்சி நிவாரணப் பணி உட்பட, எல்லா அரசுப்பணிகளையும் தொடர்ந்து மேற்பார்வையிடுவார்கள்.

மனுநீதித் திட்டத்தின் தரம் உயர்த்தப்படும் !

மனுநீதித் திட்டம் எனப்படும் பொது மக்கள் தொடர்புத் திட்டம் மேலும் தீவிரப் படுத்தப்படும். குறைகளைத் தீர்ப்பதில், வெறும் எண்ணிக்கையில் மட்டும் கவனம் செலுத்தாமல், குறைகளின் தரத்தைப் பொறுத்தே தீவிர கவனம் செலுத்தப்படும்.

பொதுமக்களின் குறைதீர்க்கத் தனிப்பிரிவு !

பொது மக்களின் குறைகளைத் தரத்தின் அடிப்படையில் துரிதமாகத் தீர்த்து வைப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்களில் தனிப்பிரிவு அமைக்கப்படும்.

குடிநீர்த் திட்டத்திற்கு முதலிடம் !

வறட்சி நிவாரணப் பணிகளைப் பொறுத்த வரையில், நீண்ட காலத்திற்குத் தொடர்ந்து பயன்தரத்தக்கப் பணிகளுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படும். குடிநீர் கிணறுகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படும். கிணறுகளை ஆழப்படுத்துவதற்குப் பதிலாகக் கூடுமான வரை ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும்.

''புதிய சிந்தனையோ, புதிய செயல்திறனோ இல்லாத அதிகாரிகளுக்கு நமது நிர்வாக அமைப்பில் இடம் கிடையாது. நிர்வாகத்தின் எல்லாக் கட்டங்களிலும் மிகச் சிறப்பான சேவையிருக்க வேண்டும். நன்கு பணியாற்றுவோருக்கு உற்சாகம் அளிக்க வேண்டும் ''

— இந்திரா காந்தி

சமுதாயக் கிணறுகள் !

உண்மையிலேயே வறட்சியால் பாதிக்கப்பட்டதும், வழக்கமான மகசூலில் 25 சதமோ அல்லது அதற்குக் குறைவான மகசூலோ கொடுத்ததுமான வயல்களுக்கு மட்டுமே நிலவரி தள்ளுபடி செய்யப்படும். வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் மட்டுமே நிலவரி தள்ளுபடி செய்யப்படும். தொடர்ந்து வறட்சியால் பாதிக்கப்படும் பகுதிகளில் 5 அல்லது 6 விவசாயிகளின் வயல்களுக்குப் பயன்படும் வகையில் சமுதாயக் கிணறுகள் அமைக்கப்படும்.

கடன் நிவாரணம் !

பாரதப் பிரதமர் அறிவித்த 20 அம்சத் திட்டத்தையொட்டி ஒருங்கிணைந்த கடன் நிவாரணத் திட்டம் வகுக்கப்படும். இதற்கிடையில், கூட்டுறவு நிறுவனங்கள், நகைக் கடனுக ரூபாய் 1,000 வரைதான் பெற முடியும் என்ற உச்சவரம்பு நிர்ணயித்து ஏராளமான பேர்களுக்கு நுகர்வோர் கடன் கிடைக்கச் செய்யும். இதற்காகப் பெருமளவில் கடன் உதவி செய்யும்படி இந்திய ரிசர்வ் வங்கியையும் கேட்டுள்ளோம். கிராமப்புற மக்கள் அனைவரையும் கூட்டுறவின்கீழ் கொண்டுவரும்படியும், கூட்டுறவுக் கடன் அனுமதிப்பதில், இதுவரைக் கடன் கொடுக்கப்படாதவர்களுக்கு முன்னுரிமை அளித்து கடன் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நகை அடகு பிடிப்பவர்களைத் தீவிர கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும் என்றும், குறிப்பாக நகை அடகுபிடிப்பவர்கள், அடகு வைத்தவர்கள் நகையை ஏலம் விடுவதையும் அல்லது சட்டத்தை மீறுவதற்காக புதிய பத்திரங்கள் தயாரிப்பதையும் தடுக்க முயற்சிக்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று ஆண்டில் 2.5 இலட்சம் பேர்களுக்கு வீட்டு மனை !

அரிசனங்களுக்கு, கிராமங்களுக்கு அருகிலேயே வீட்டுமனைகள் வாங்குவதற்கு அதிக அளவு நிதி ஒதுக்கப்படும். ஏறத்தாழ மூன்று ஆண்டு காலத்திற்குள் வீட்டுமனையில்லாத 2.5 இலட்சம் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்பட்ட வகுப்பு மக்களுக்கும் வீட்டுமனைகள் வழங்கப்படும். இதற்காக் 17,000 முதல் 19,000 ஏக்கர் நிலம் தேவைப்படும்.

கைத்தறிக்கு என தனி ஒதுக்கீடு !

கைத்தறிகளுக்கே, சில குறிப்பிட்ட ரகத் துணிகள் உற்பத்தியை ஒதுக்க வேண்டும் என்றுள்ள தற்போதைய உத்தரவை, கடுமையாகச் செயல்படுத்தப்படும். சேலைகள், வேட்டிகள் ஆகியவற்றின் உற்பத்தி கைத்தறிக்கே ஒதுக்கப்பட்டிருந்தாலும், துண்டுகள், படுக்கை விரிப்புகள் ஆகியவற்றின் உற்பத்தியில் தற்போதுள்ள உத்திரவு முழுமையாகச் செயல்படுத்தப்படவில்லை. இந்தக் குறை விரைவில் நீக்கப்படும்.

கைத்தறி நெசவாளர்களுக்கு அதிக உதவி !

இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கைத்தறி துணிகளில் ஏறத்தாழ பாதி தமிழ்நாட்டிலிருந்தே ஏற்றுமதி செய்யப்படுவதால், தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான நூல்களை வினியோகம் செய்வதிலும், அவர்கள் உற்பத்தி செய்த துணிகளை விற்பனை செய்வதிலும் மிகவும் திறமையாகவும், தீவிரமாகவும் உதவி செய்யப்படும். விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்த 27 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்கப்பட்டுவிட்டதால், தற்போது தமிழ்நாட்டில் கைத்தறி துணி தேக்கம் இல்லை.

புதிய கைத்தறித் திட்டங்கள் !

ஏற்றுமதி அடிப்படையான கைத்தறித் துணிகள் உற்பத்தி மற்றும் விற்பனைத் திட்டம் ஒன்றை ரூபாய் 40 இலட்சம் மதிப்பில் கரூரில் அமைப்பதற்கு இந்திய அரசு கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளது. இத்திட்டம்பற்றி ஒருசில நாளில் முடிவு ஏடுக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் 1,000 கைத்தறிகள் பயனடையும்.

10,000 கைத்தறிகளையும், ஈரோடைத் துணை நிலையமாகவும் கொண்ட **தீவிர மேம்பாட்டுத் திட்டம்** ஒன்றை ரூபாய் 180 இலட்சம் செலவில் துவக்கிடவும் இந்திய அரசு கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளது. இத்திட்டம் பற்றியும் வெகுவிரைவில் முடிவு எடுக்கப்படும்

அரிசி போக்குவரத்துக் கட்டுப்பாடு நீடிக்கும் !

தற்பொழுது மாவட்டங்களுக்கிடையே உள்ள நெல், அரிசி போக்குரத்துக் கட்டுப்பாட்டை அறவே நீக்கும் எண்ணம் அரசுக்குக் கிடையாது. உபரியிலிருந்து பற்றுக்குறை பகுதிக்கு நெல், மற்றும் அரிசியை அனுப்புவது பற்றி ஆராய்ந்து வருகிறோம். அவ்வாறு அனுமதிப்பதும் அரசாங்கத்தின் மூலம் அல்லது கூட்டுறவுத் துறையின் மூலம் இருக்குமே தவிர, தனிப்பட்ட வியாபாரிகள் மூலமாக இருக்காது.

பாசனத் திட்டங்கள் விரைபடுத்தப்படும் !

நீர்ப்பாசனத் திட்டங்களை விரைவாகச் செயல்படுத்தப்படும். ஆய்வு முடிந்துள்ள 17 நீர்ப்பாசனத் திட்டங்களை உடனடியாகச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்படும்.

இருபது அம்சத்திட்டம் !

இருபது அம்சத் திட்டத்தை மாவட்டமெங்கும் முழுஅளவில் நிறைவேற்றப்படும். இதற்கென மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, 20 அம்சத்திட்டப்பணிகள் விரைவாக நிறைவேற்றப்படும்.

தொழில் அமைதியைத் தோற்றுவித்தோம்! தொழிலாளர் துயர் துடைத்தோம்!



தமிழகத்தில் குடியரசுத் தலைவரது ஆட்சி ஏற்பட்டபின் பல்வேறு ஆக்கப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மக்கள் மத்தியிலே அமைதி! உற்சாகம், நம்பிக்கை! அரசு ஊழியர்கள், தொழிலாளர்களிடையே புதிய வேகம்! சுறுசுறுப்பு! எதிலும் விரைந்து செயல்படும் தன்மை! ஆகியவற்றைக் காணமுடிகிறது.

குறிப்பாக தொழில்துறையில் ஏற்பட்டுவந்த வேலைநிறுத்தங்கள், கதவடைப்புகள் முழுவதுமாக நீக்கப்பட்டு வருகின்றன.

குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுமுன். தமிழ்நாட்டில், வழக்கமாக சுமார் 20 வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகள் இருந்துவந்தன. இதனால் சுமார் 15,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு வந்தனர்.

1-2-76 அன்றுள்ள நிலவரப்படி தமிழ்நாடு முழுமைக்கும் 17 தொழிற்கூடங்கள் மூடிய நிலையிலிருந்தன. அதில் 3 தொழிற்கூடங்களில் கதவடைப்பினாலும், எஞ்சிய 14 தொழிற்கூடங்கள் தொழிலாளர் வேலை நிறுத்தங்களினாலும் பாதிக்கப்பட்டிருந்தன. சென்ற ஆண்டு (1975) அக்டோபர், நவம்பர் திங்கள் முதல் மூடப்பட்டுள்ள தொழிற்கூடங்களும் அவற்றிலுண்டு. தகராறுகள் தீர்க்கப்படாமல் வேலை நிறுத்தங்கள் அல்லது கதவடைப்புகள் நீடிக்கப்பட்டு வந்தன.

அவ்வாறு பாதிக்கப்பட்டிருந்த தொழிற்கூடங்களின் விவரம் பின்வருமாறு: எந்தத் திங்களிலிருந்து என்பதும், பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் எவ்வளவு பேர் என்ற விவரங்களும் அடைப்பிற்குள் தரப்பட்டுள்ளன.

(1) சக்தி டெக்ஸ்டைல்ஸ்
(அக்டோபர் '75—800 பேர்)

(2) பெஸ்கோயெல் ஜீ.
கோயம்புத்தூர் (டிச. 75—62)

(3) மெட்ராஸ் ரப்பர் பேக்டரி, சென்னை
(அக்டோபர் '75—1,800 பேர்)

(4) இந்துஸ்தான் எகியூப்மெண்ட் தயாரிப்பாளர்கள்
(அக்டோபர் '75—75 பேர்)

(5) கல்யாணி புராசெஸ், கோவை
(நவம்பர் '75—88 பேர்)

(6) பவானி மில்ஸ், கோவை
(டிசம்பர் '75—65 பேர்)

(7) பயோனியர் ஸ்பின்னிங் மில்ஸ், கமுதக்குடி
(டிசம்பர் '75—132 பேர்)

(8) மைக்ரோ டூல்ஸ் லிமிடெட், செங்கற்பட்டு
(டிசம்பர் '75—140 பேர்)

"நமது நாட்டுக்கும், அதன் முன்னேற்றத்துக்கும் உழைப்பதாக விதி செய்து கொள்வதுதான் நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் மிக முக்கியமான அம்சமாயிருக்க வேண்டும்."

—இந்திரா காந்தி

(9) சதர்ன் டெக்ஸ்டைல்ஸ், கோவை
(டிசம்பர் '75—253 பேர்)

(10) புலிக்கார் மில்ஸ், திருச்செங்கோடு
(டிசம்பர் '75—200 பேர்)

(11) இந்தியன் டுபாக்கோ கம்பெனி, சென்னை
(ஜனவரி 76—600 பேர்)

(12) குமரன் மில்ஸ், கோவை
(ஜனவரி '76—473 பேர்)

(13) மதுரா கோட்ஸ், மதுரை
(ஜனவரி '76—8,400 பேர்)

(14) மதுரா கோட்ஸ், தூத்துக்குடி
(ஜனவரி '76—3,000 பேர்)

(15) மதுரா கோட்ஸ், அம்பாசமுத்திரம்
(ஜனவரி '76—6,000 பேர்)

(16) எஸ்.ஆர்.சி. மில்ஸ், திருப்பூர்
(ஜனவரி '76—1100 பேர்)

(17) பாண்டியன் மில்ஸ், மதுரை
(ஜனவரி '76—926 பேர்)

மேற்கண்ட 17 தொழிற்சாலைகளிலும் 24000 தொழிலாளர்களும், அவர்தம் குடும்பங்களும் பாதிக்கப்பட்டிருந்தன.

1-2-76-ல் குடியரசுத் தலைவரின் ஆட்சி ஏற்பட்டபின், இத்தகாராறுகளைத் தீர்ப்பதற்கு தமிழ்நாடு அரசு தனி முயற்சிகள் எடுத்துக்கொண்டது. அதன் விளைவு 17 தொழிற்கூடங்களும் திறக்கப்பட்டுள்ளன. வேலை நிறுத்தங்களும் - கதவடைப்புகளும் திரும்பப் பெறப்பட்டுள்ளன. தொழிலாளர் முகம் மலர்ந்துள்ளது. தொழில் உற்பத்தி பெருக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

படித்துப் பாருங்கள்

மத்திய அரசின் மாதமிருமுறை ஏடான **"திட்டம்"**, நாட்டின் முன்னேற்றச் செய்திகளைத் தெளிவான தமிழில் தருகிறது. இப்போது நாட்டில் நிகழ்ந்துகொண்டிருக்கும் மாபெரும் சமுதாய மாறுதலை ஆதாரபூர்வமான தகவல்களுடன் விளக்கும் தமிழ் ஏடு "திட்டம்". சமூகத்தின் எல்லாப் பிரிவினருக்கும் பயன் தரும் இந்த ஏட்டுக்கான சந்தா விவரம் : ஓர் ஆண்டு—ரூ. 6; இரண்டு ஆண்டு—ரூ. 10; மூன்று ஆண்டு—ரூ. 14. (மாணவருக்கும், ஆசிரியருக்கும், நூல் நிலையங்களுக்கும் 25 சதவிகிதம் தள்ளுபடி). தனிப்பிரதி 30 காசு.

''திட்டம்'' ஏட்டில் சிறு கதை, நகைச்சுவை, திரைப்பட மதிப்பீடு போன்ற சுவையான பல புதிய பகுதிகள் இடம் பெறவிருக்கின்றன. 1976 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தனிப் பிரதி விலையும், சந்தா விகிதங்களும் கூடுதலாக்கப்படும். ஆனால் 1976 மார்ச் 31 வரை சந்தா கட்டுபவர்களுக்கு சந்தா முடியும் வரை பழைய விகிதப்படியே இதழ்கள் கிடைத்து வரும். இது ஒரு சலுகை.

''திட்டம்'' சந்தாதாரராகச் சேர்ந்து பயனடையுங்கள்.

முகவரி: ஆசிரியர், "திட்டம்",
266, பைக்ராஃப்ட்ஸ் சாலை,
சென்னை-600 014.

மதுரை மாவட்டத்திற்குப் பரிசு !

மதுரை மாவட்டம், 1974-ஆம் ஆண்டில் கொடிநாள் வசூலில் முதலிடம் பெற்றுக் கேடயம் பரிசு பெற்றுள்ளது. 1974-ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் ரூபாய் 60,000 வசூல் செய்ய வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்திருந்ததற்கு மாறாக, ரூபாய் 86,071.90 வசூல் செய்து, தமிழகத்திலேயே கொடிநாள் வசூலில் முன்னோடியாக விளங்கியது. சென்னை ராஜாஜி அரங்கில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை அலுவலர்கள் மாநாட்டில் மதுரை மாவட்டத்தின் இம்முயற்சியைப் பாராட்டி, கொடிநாள் வசூலில் முதலிடம் பெற்றதற்கான கேடயத்தை மேதகு தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. யு. எஸ். நடராஜன் ஐ. ஏ. எஸ்., அவர்களிடம் வழங்கினார்.

-சாம்-

பொருளாதார முன்னேற்றத்திற்குப் புதிய திட்டம்

நான் இன்று உங்களிடையே அரசு மேற்கொள்ளவிருக்கும் சில பொருளாதாரத் திட்டங்களைப் பற்றிப் பேசவிருக்கின்றேன். அவைகளில் சில புதியவை. மற்றவை முன்பே துவக்கப்பட்டவை ; ஆனால் மிகுந்த ஆற்றலோடும், உறுதியோடும் செயல்படுத்தப்பட வேண்டியவை. தயவுசெய்து மந்திர குணப்படுத்தலையும், நாடக முடிவுகளையும் எதிர்பார்க்காதீர்கள்!

வறுமையை ஒழிக்க ஒரே ஒரு மந்திரம்தான் உள்ளது! அது, தெளிவான நோக்கு, திடமான சிந்தனை, மிகுந்த கட்டுப்பாடு ஆகியவற்றுடன் கூடிய கடின உழைப்புதான்! நம்மிடத்தில் உள்ள ஒவ்வொருவரும்—நமக்காக மட்டுமல்லாமல், நம் சகோதர மக்களுக்காகவும், அதிகமாக உழைக்க உறுதிகொள்ள வேண்டும். அரசுக்குச் சொந்தமானவைகளை அதிகம் மதிக்க வேண்டும். அவைகளை அழிப்பது நமக்கு நாமே அழிவைத் தேடிக் கொள்வதாகும். எல்லா வகையிலும் சிக்கனத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற கண்டிப்பான விதிமுறை நமக்குத் தேவை. எதிலும் படாடோபமாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் கடமை அரசுக்கு உண்டு; ஆனால் குடிமக்களுக்கும் அதிலே பொறுப்பு உண்டு. அதுவே, நாட்டின் வாழ்வைச் செழிக்கச் செய்யும் ஒரே வழியாகும்.

சட்டத்தை மீறும் இயக்கம், தேசிய நற்பணிகள் நடைபெற முடியாமல் முடக்கு



தல், நம்முடைய பாதுகாப்புப் படைகளை ஒழுங்கீனமாகவும், கீழ்ப்படியாமல் நடந்து கொள்ளவும் தூண்டுதல் ஆகியவை பொருளாதாரக் குழப்பத்திற்கும், சீர்குலைவுக்கும் வழி வகுத்ததுடன், பிரிந்து போகும் எண்ணத்திற்கும், வெளிநாட்டு ஆபத்திற்கும் எளிதில் இலக்காகும் தன்மையை நமது நாட்டிற்கு ஏற்படுத்தியுள்ளன. வெறுப்புணர்ச்சி என்னும் புகை ஓரளவுக்கு விலக்கப்பட்டதால், நம்முடையப் பொருளாதார இலக்கினை மிகத் தெளிவாகவும், விரைவாகவும் நோக்க முடிகிறது.

நமது பொருளாதார வளர்ச்சிக்கான பணிகளில் முன்னேறுவதற்கான புதிய வாய்ப்பை, நெருக்கடி நிலை நமக்கு அளித்துள்ளது.

விலைவாசியைக் குறைப்போம் !

முதலாவதாகவும், முக்கியமானதாகவும் உள்ள சவால் விலைவாசியைப் பொறுத்தது ஆகும். கடந்த 5 நாட்களில் பல்வேறு பொருள்களின் விலைவாசி இறங்குமுகமாக உள்ளது. உற்பத்தியை ஊக்குவிக்கவும், கொள்முதலை விரைவுபடுத்தவும், இன்றியமையாப் பொருள்களின் வினியோகத்தை முறைப்படுத்தவும் அரசு பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

அந்நியச் செலாவணி ஆதாரங்களில் நாம் கொண்டுள்ள கொள்கை மனநிறைவு அளிப்பதாக உள்ளது. எனவே, விநியோகம் போதுமானதாக இருக்கத் தேவையான இடத்தில் இறக்குமதி செய்யப்படும். விலைவாசிப் பட்டியலையும், இருப்பு அட்டவணையையும் அறிவிக்க வேண்டும் என்று வியாபாரிகளுக்கு ஆலோசனை கூறும்படி மாநில அரசுகளை முன்பே கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. பதுக்கலில் ஈடுபட்டுள்ளோரும், சட்டத்தை மீறுவோரும் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்.

பணவீக்கத்தைத் தடுப்பதற்கான இத்தகைய யுக்திகள் தொடர்ந்து நடைபெற வேண்டும். தேர்ந்தெடுத்த அடிப்படையில், கடன் உதவிகளை மிகுந்த கவனத்துடன் முறைப்படுத்த வேண்டும். அரசுத் துறைகளிலும், பொதுத் துறைகளிலும் அனாவசியச் செலவுகளைத் தவிர்க்கும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

''வளர்ந்து வரும் நமது பொருளாதாரத்திற்குத் தேவையான பொருள்களில் பெரும்பாலானவற்றை இந்நாட்டிலேயே தயாரிப்போம். நமது நிபுணர்களையும், நமது பண்டங்களையும் உரிய மதிப்புடன் நடத்துவோம். எங்கும் வியாபிக்கும் சுதேசி உணர்வு இனிமேல் பெருகிக் கொண்டே போக வேண்டும். இதுதான் நாலாவது, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் நோக்கம்.''

—இந்திரா காந்தி

''நான் அதிருஷ்டத்தில் நம்பிக்கை வைப்பதில்லை. பலன் வேண்டுமானால், கடின உழைப்பு வேண்டும். நெடிய நோக்கு இருந்தால்தான் நெடுந்தூரம் செல்ல முடியும். இலட்சியம் பற்றிக் கனவு காணும் திறமையும், சிந்தனைத் திறமையும் பெரிதாக இல்லாவிட்டால், நம்மால் பெரிதாக எதையும் சாதிக்க முடியாது.''

—இந்திரா காந்தி

நிலமற்றவர்களுக்கு நிலமளிப்போம் !

நமது மக்களில் பெரும்பாலோர் கிராமப் புறங்களில் வாழ்கின்றார்கள். நாம், உச்ச வரம்புச் சட்டத்தைச் செயல்படுத்தி, புதிய இரட்டிப்பு ஆர்வத்துடன் உபரி நிலத்தை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்க வேண்டும். நில நிலவிவரக் குறிப்பேடுகளைத் தயாரித்து முடிப்பதற்கு ஆங்காங்கேயுள்ள உள்ளூர் மக்களின் உதவியை வேண்டுகின்றோம். பழங்குடி மக்களிடமிருந்து நிலங்கள் பறிக்கப்படாதிருக்க வேண்டும் என்பதில் தனிக் கவனம் செலுத்தப்படும்.

வீடற்றவர்களுக்கு வீட்டுமனைகள் அளிப்போம் !

கிராமப்புறங்களில் வீட்டுமனைகள் அளிக்கும் திட்டத்தைப் பெருமளவில் விரிவுபடுத்தப்படும். நிலமற்ற தொழிலாளர்கள் தங்களுடைய பண்ணையார்களுக்குச் சொந்தமான வீட்டுமனைகளில் குறிப்பிட்டுள்ள காலத்திற்கு மேல் வாழ்ந்திருப்பார்களேயானால், அவ்வீட்டுமனைகளின் உரிமையை நிலமற்ற தொழிலாளர்களுக்கே அளிப்பதற்கான சட்டம் புகுத்தப்படும். அத்தகைய வீட்டுமனைகளில் இருந்து நிலமற்ற தொழிலாளர்களை வெளியேற்றிட முயன்றால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அடிமை ஊழியம் அகற்றிடுவோம் !

அடிமை ஊழிய முறை காட்டுமிராண்டித்தனமானது! அது ஒழிக்கப்படும். அத்தகைய அடிமை ஊழியர்களின் பணிகளைப் பயன்படுத்துவதற்குத் தற்பொழுது பாதுகாப்பு அளித்து வரும் எல்லா ஒப்பந்தங்களும் அல்லது இதர ஏற்பாடுகளும் சட்டத்திற்குப் புறம்பானதாக அறிவிக்கப்படும்.

கிராமப்புற கடன் சுமையை இறக்கிடுவோம் !

கிராமப்புற மக்களின் கடன் சுமையை அறவே அகற்றிடுவதற்குப் படிப்படியான நடவடிக்கைகளை எடுத்திடத் திட்டமிட்டுள்ளோம். நிலமற்ற ,தொழிலாளர்களுக்கும், கிராமத் தொழிலாளர்களுக்கும், இரண்டு எக்டேருக்கும் குறைவான நிலம் வைத்துள்ள சிறிய, மிகச் சிறிய உழவர்களுக்கும் நிறுவனக்கடன் உதவி அளிப்பதற்குரிய மாற்று நிறுவனங்கள் தோற்றுவிப்பதற்கான புதிய திட்டங்கள் வகுக்கப்படும். அதே நேரத்தில், மேற்கூறிய தொகுதியினரிடமிருந்து கடனை வசூல் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் வழக்குகளையும், ஜப்திகளையும் நிறுத்தி வைக்கும் சட்டம் கொண்டுவரப்படும். கூட்டுறவுகள், வணிக வங்கிகள், அரசுகள் ஆகியவற்றிலிருந்து பெற்றுள்ள கடன்கள் இத்திட்டத்தில் அடங்காது.

வேளாண்மைத் தொழிலாளர்களில் குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்திடுவோம் !

நமது சமுதாயத்தில் வேளாண்மைத் தொழிலாளர்களே மிகவும் மோசமாகச் சுரண்டப்படும் பிரிவினர்களாக உள்ளனர். தற்பொழுது செயலில் உள்ள குறைந்த பட்சக் கூலிச் சட்டங்களை மறுஆய்வு செய்யப்படும். எங்கெங்கு அவசியமோ, அங்கெல்லாம் குறைந்தபட்சக் கூலியில் தகுந்த உயர்வு அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நிலநீர் எடுத்து நீர்வளம் பெருக்குவோம் !

உற்பத்தியைப் பெருக்குவதற்கு நாம் எல்லாரும் முற்பட வேண்டும். வேளாண்மை மற்றும் தொழில் உற்பத்தி உயர்வுக்கு நீரும், மின்சக்தியுமே திறவுகோலாக விளங்குகின்றன. குறைந்தது 50 இலட்சம் எக்டேர் நிலத்திற்குப் புதிதாகப் பாசன வசதி அளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மெய்ப்பிக்கப்பட்டுள்ள நில நீர் ஆதாரங்கள் உடனடியாகப் பயனுக்குக் கொண்டு வரப்படும். பாசனத்திற்காகவும், சிறப்பாக வறட்சிப் பகுதிகளில் குடிநீருக்காகவும் நிலநீர் ஆதாரங்களைக் கண்டறிவதற்கான ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மின்சார உற்பத்தியை உயர்த்திடுவோம் !

மின்சக்தி நிலைமை ஓரளவுக்கு முன்னேறியுள்ளது. மேலும் புதிதாக 2,600 மெகா வாட் மின்சக்தி உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மின்சக்தி உற்பத்தி திட்டங்களைச் செயல்படுத்துவதற்குப் போதிய நிதி அளிக்கப்பட்டுள்ளது. நீண்ட காலத் தேவையை முன்னிட்டு, மத்திய அரசுத் திட்டத்தின்கீழ், **சிறப்பு அனல் மின்நிலையங்கள்** ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மாநில மின்வாரியங்கள் ஒருமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.

கைத்தறி நெசவாளர் துயர் துடைப்போம் !

வேலைவாய்ப்பு அளிப்பதில், வேளாண்மைக்கு அடுத்தபடியாக கைத்தறித் தொழிலே விளங்குகிறது. நெசவாளர்களுக்குத் தேவையான உள்ளீடு பொருள்கள், நியாயமான விலையில் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும். கைத்தறிக்குத் தனியாக ஒரு மேம்பாட்டு ஆணையாளர் நியமிக்கப்படுகிறார். நெசவாளர்களுக்கு மிகுந்த பாதுகாப்பு அளிப்பதற்காக, கைத்தறிகளுக்கான ஒதுக்கீடு பற்றிய கொள்கை வகுக்கப்பட்டு வருகிறது.

தரமான துணிகளை மலிவு விலையில் வழங்கிடுவோம் !

ஆலைத் துறையில், கட்டுப்படுத்தப்பட்ட விலையில் துணி உற்பத்தி செய்யும் திட்டம் முன்னேறி வருகிறது. அதனால், சாதாரண மக்கள் அணியும் வேட்டிகள், புடவைகள், துணிகள் ஆகியவை, சிறந்த தரத்தில் உள்ளன. அவைகள் ஏராளமான விற்பனை நிலையங்கள் வாயிலாகக் கிராமப் புறங்களிலும், நகர்ப் புறங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

நகர்ப்புற சொத்துக்கு உச்சவரம்பு அமைத்திடுவோம் !

நாட்டின் செலவில், நகர்ப்புற நிலங்களிலிருந்து பலருக்கு அதிர்ஷ்டம் ஏற்பட்டுள்ளது. நகர்ப்புற நில விலையேற்றமும், நகர்ப்புற சொத்துக்களின் அடர்த்தியும் மிகுந்த ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தியுள்ளதுடன், ஒழுங்கற்ற முறையில் நகர்ப்புற வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குடியிருப்பு அல்லாத காலிமனை, தேவைக்கு மேல் அதிக அளவில் நிலம் வாங்குதல் ஆகியவற்றிற்கு உச்சவரம்பு அமைப்பதற்கும், புதிய குடியிருப்புகளின் அடித்தளப் பரப்பைக் கட்டுப்படுத்துவதற்கும், நகர்ப்புற மற்றும் நகர்ப்புறமாகக் கூடிய பகுதி நிலங்களை சமூக உடைமையாக்குவதற்கும் சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன.

வரி ஏய்ப்பவரை வன்மையாகத் தண்டிப்போம் !

வரி ஏய்ப்பு செய்வது குற்றமாகும். இவ்வாறு ஏய்க்கப்பட்ட கறுப்புப் பணத்தில் பெரும்பகுதி ஆடம்பர வீடுகளைக் கட்டுவதற்கே செலவிடப்படுகிறது. நகர்ப்புறச் சொத்து மதிப்பு குறைத்துக் காட்டப்படுகிறது. இத்தகையச் சொத்துக்களை மதிப்பிடுவதற்காகத் தனி சோதனைப் படைகள் அமைக்கப்படும். தண்டனை கடுமையாக இருக்கும். சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும் எண்ணி வருகிறோம்.



கள்ளக் கடத்தல்காரர்களைத் கடுமையாகத் தண்டிப்போம் !

கடத்தல்காரர்களை ஒழிப்பதில் நமது இயக்கம் தீவிரப்படுத்தப்படும். சட்ட நுட்ப அடிப்படையில் அவர்கள் வெளிவந்துள்ளது

நமது முயற்சியை முறியடித்துள்ளது. சில குற்றங்களில் அவர்கள் முன்கூட்டியே ஜாமீன் பெற்றுள்ளனர். கடத்தல்காரர்களின் சொத்து—அவர்களின் சொந்த பெயரில் இருந்தாலும் அல்லது பினமியாகஇருந்தாலும்—பறிமுதல் செய்யப்படும்.

தொழில்வளம் பெருக்கத் துணை புரிவோம் !

உரிமம் வழங்கும் முறைகள், புதிய முதலீட்டை தாமதப்படுத்துவதாக அமைந்துள்ளன. இவை எளிதாக்கப்படும். இறக்குமதியோ அல்லது அரசு உதவியோ தேவைப்படாத தொழிற்சாலைகளில் முதலீடு செய்யும் அளவு உயர்த்தப்படும்.

அதே நேரத்தில், உரிமங்கள் தவறான முறைகளில் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் நான் குறிப்பிட்டாக வேண்டும். இறக்குமதி—ஏற்றுமதி விதி முறைகள் திருத்தப்பட்டு வருகின்றன. சட்டத்தை மீறினால், விரைவாகப் பரிசோதனை நடத்தி, தண்டிப்பதுடன், உற்பத்திப் பொருள்களைப் பறிமுதல் செய்யப்படும்.

தொழிலாளர்கள் நிர்வாகத்தில் பங்குபெற துணை நிற்போம் !

தொழிற்சாலைகளில் அதுவும் குறிப்பாக பணிக்கூட மட்டத்திலும், உற்பத்தித் திட்டங்களிலும் தொழிலாளர்களை ஈடுபடுத்தி பங்கு கொள்ள வைக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

போக்குவரத்துக்கு தேசிய அனுமதி அளித்திடுவோம் !

ரயில் மூலம் நடைபெறும் உணவு தானியங்கள், நிலக்கரி, எஃகு, சிமெண்ட் ஆகியவற்றின் போக்குவரத்து கடந்த சில மாதங்களில் முன்னேறியுள்ளது. லாரிகள் மூலமாக பொருள்களை அனுப்புவதில் உள்ள தடைகள் அகற்றப்படும். இதற்காக நாடு முழுவதும் செல்வதற்குரிய அனுமதி வழங்கும் முறை புகுத்தப்படும்.



நிலையான வருவாய் பெறுவோர்களுக்கு நிம்மதி அளிப்போம் !

நிலையான வருவாய் பெற்று வரும் மக்கள் கடந்த சில ஆண்டுகளில் கடுமையான கஷ்டங்களுக்கு உள்ளாயினர். அவர்களுக்கு உடனடி நிவாரணம் தேவை. வருமான வரிக்குள்ள குறைந்த பட்ச விதிவிலக்கு அளவு, ரூபாய் 6,000-லிருந்து ரூபாய் 8,000-க்கு உயர்த்தப்படும்.

மாணவர்கள் குறையைத் தீர்ப்போம் !

ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த மாணவர்கள் தங்கள் வீட்டிலிருந்து தொலைதூரத்தில் தங்கி உயர் கல்வி கற்க முயன்றால், மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாகின்றார்கள். அவர்களுக்கு உதவி செய்வதற்காக, எல்லா மாணவர் விடுதிகளுக்கும், அனுமதிக்கப்பட்ட தங்கும் விடுதிகளுக்கும் இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்படுத்தப்பட்ட விலையில் வழங்கப்படும்.

மலிவு விலையில் புத்தகம், எழுதுபொருள் அளிப்போம் !

கல்வித் துறையில் மேற்கொள்ள வேண்டிய மற்றொரு முக்கிய நடவடிக்கை, எல்லா பள்ளிக்கூட, கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தேவையான பாட புத்தகங்களும், எழுதுபொருள்களும் நியாயமான விலையில் கிடைத்திடச் செய்வதாகும். விலைகள் கண்டிப்பாகக் கட்டுப்படுத்தப்படும். புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்படும்.

படித்த இளைஞர்களுக்குப் பாங்கான வேலை அளிப்போம் !

கல்வி கற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெருக்கித் தரும் முறைகளில் ஒன்றாக, வேலைப் பழகுநர் சட்டத்தைத் தகுந்த முறையில் திருத்தி அமைக்கப்படும். இதன் மூலம் நமது பொருளாதாரத்தில் முறையாக அமைக்கப்பட்ட துறையைச் சார்ந்த நிருவாகத்தினர் குறிப்பிட்ட காலத்திற்கு ஏராளமான வேலைப் பழகுநர்களை அமர்த்திக் கொள்ள முடியும். இவ்வாறு வேலை பழகுவதற்குத் தேர்ந்தெடுப்பதில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், பழங்குடியினருக்கும், ஊனமுற்றவர்களுக்கும் உரிய பங்கு கிடைக்கச் செய்வதில் சிறப்பாகக் கவனம் செலுத்தப்படும்.

அடுத்து வரும் வாரங்களில் மேற்கொள்ளவிருக்கும் புதிய திட்டங்களின் பல்வேறு பகுதிகளைச் சுருக்கமாகத்தான் நான் விவரித்துள்ளேன். இதர விவகாரங்கள் கவனிக்கப்பட்டு வருகின்றன. மேற்கொண்டு செய்யப்படவிருப்பவை அவ்வப்போது அறிவிக்கப்படும். அவைகள் அனைத்தும் சேர்ந்து நாட்டின் பொருளாதாரத் தோற்றத்தில் ஒரு புதிய பொலிவை ஏற்படுத்தும் என்பதில் எனக்கு ஐயமில்லை. மிக மிக அவசரமானது என்னவென்றால், நாம் அனைவரும் ஒருங்கிணைந்து, உதவி செய்ய இயலவில்லை என்ற உணர்வை உதறியெறிய வேண்டும். கடந்த சில மாதங்களில் உருவாகியுள்ள கலவரத்தின் மோசமான அம்சம் வெறுப்புணர்ச்சியைத் தூண்டியுள்ளதும், தேசிய தன்னம்பிக்கையைச் சீர்குலைத்துள்ளதுமேயாகும்.

நாட்டின் நலத்திற்காக தீரப் பயணம் தொடர வேண்டும் என்ற உணர்வு பெற தற்பொழுது ஒரு புதிய வாய்ப்பு பிறந்துள்ளது. நம் பணியைத் தொடர்ந்து செய்து வெற்றி நடை போடுவோம்!

(இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஜுலை 1, 1975 அன்று வானொலியில் ஆற்றிய உரையின் தமிழாக்கம்).

பத்தாண்டுகளில் பாரதம் குவித்திட்ட வெற்றி!

நாட்டு மக்களுக்கு முன்னேற்றம் சுபிட்சம் ஆகியவற்றை கொண்டுவந்து அபிவிருத்தி முயற்சிக்கு வழிவகுக்கும் எந்த ஒரு தேசிய வாழ்க்கையிலும் பல முக்கியமான சம்பவங்கள் காரணமாக இருப்பது உண்டு. எல்லா சம்பவங்களையும் பட்டியல் இட்டுக் கூற முடியாது. ஆகையால் இங்கு சில சம்பவங்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் முன்னேற்றப் பாதையில் ஒவ்வொருபடியாக இருக்கக் கூடிய நினைவில் நீங்காத நாட்கள் உள்ளன.

1975-ஆம் ஆண்டோடு முடிவடைந்த 10 ஆண்டுகளில் இச்சம்பவங்கள் யாவும் நிகழ்ந்துள்ளன:

பிப்ரவரி 5, 1966 :

சோன் நதிக்கு குறுக்கே ஜவகர் சேது என அழைக்கப்படும் ஆசியாவிலேயே மிக நீளமான பாலத்தைப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி திறந்து வைத்தார்.

பிப்ரவரி 25, 1966 :

தாஷ்கண்டு ஒப்பந்த அமலின்படி இந்தியாவும் பாகிஸ்தானும் பரஸ்பரம் மற்ற நாட்டு எல்லைப் பகுதியிலிருந்து தங்கள் துருப்புக்களை வாபஸ் பெற்றுக் கொண்டன.

ஜுன் 5, 1966 :

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் ரூபாய் மதிப்பு குறைக்கப்பட்டது. வெளிச்சந்தையில் அதன் மதிப்பு 36.5 சதவிகிதமாகக் குறைந்தது.

செப்டம்பர் 2, 1966:

14 காரட்டுக்கும் அதிகமான சுத்தம் கொண்ட தங்க நகைகளைத் தயாரிப்பதில் விதிக்கப்பட்டிருந்த தடைகளை பிரதமர் நீக்கினார்.

ஜனவரி 23, 1967:

துர்க்காப்பூரில் இந்தியாவின் முதல் கிராஃபைட் தொழிற்சாலை துவக்கி வைக்கப்பட்டது.

செப்டம்பர் 30,1967:

இந்தியாவின் கடல் எல்லைப்பகுதி வரம்பு 6 கடல் மைலிலிருந்து 12 கடல் மைல் வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 20, 1967:

திருவனந்தபுரத்துக்கு அருகேயுள்ள தும்பா ஏவுகணை நிலையத்திலிருந்து இந்தியாவின் முதல் ஏவுகணை 'ரோஹிணி' (ஆர். எச்-75) விண்ணில் ஏவி விடப்பட்டது.





பிப்ரவரி 2, 1968:

விண்வெளி ஆய்வுக்கான சர்வதேச ஒத்துழைப்புக்காக திருவனந்தபுரத்துக்கு அருகேயுள்ள தும்பா ஏவு கணை நிலையத்தை ஐ. நா. சபைக்கு பிரதமர் அர்ப்பணித்துள்ளார்.

பிப்ரவரி 16, 1968:

ராஜஸ்தானில் உதாய்ப்பூருக்கு அருகே நாட்டின் முதல் துத்தநாக உருக்குஆலை இயங்கத் தொடங்கியது.

ஜூன் 8, 1968:

பம்பாய் கடற்படைக்கான துறைமுகத்தில் 'ஐ. என். எஸ். பர்த்கால்' கண்ணி வெடி அகற்றும் கப்பல் வெள்ளோட்டம் விடப்பட்டது. இக்கப்பல் இந்தியாவிலேயே கட்டப்பட்ட முதல் கப்பலாகும்.

ஜூலை 5, 1968:

சோவியத் யூனியனிலிருந்து இந்தியாவுக்கான முதல் நீர் மூழ்கிக் கப்பல் வந்து சேர்ந்தது. இதன்மூலம் இந்திய கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல் பிரிவு ஏற்பட்டது.

அக்டோபர் 23, 1968:

இந்தியாவில் முதல் பிரிகேட் ரக போர்க் கப்பல் 'நீலகிரி' பம்பாய் மஸகாவ்ன் துறைமுகத்தில் பிரதம மந்திரியால் வெள்ளோட்டம் விடப்பட்டது.

நவம்பர் 10, 1968:

ஆசியாவிலேயே மிகப் பெரிய யந்திர மூலம் இயங்கக் கூடிய இரும்புக் கனிஜ சுரங்கமான மத்தியப் பிரதேசத்திலுள்ள பெய்லாடிலா இரும்புக் கனிஜ சுரங்கம் துவக்கி வைக்கப்பட்டது.

ஜூலை 19, 1969:

நாட்டில் மிகப் பெரிய 14 இந்திய பாங்குகளை அரசுடைமையாக்குவதற்கான அமைச்சரவை தீர்மானத்தை பிரதமர் அறிவித்தார்.

ஆகஸ்டு 27, 1969 :

அணுசக்தி கமிஷன் பத்தாண்டு சாதனையை அறிவித்தது. 1980, 1990-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் 400 முதல் 500 மெகாவாட் திறன் கொண்ட விரைவில் அணுப் பெருக்கம் செய்யக் கூடிய அணு உலையைத் தயாரிக்க திட்டமிட்டுள்ளது.

நவம்பர் 14, 1969 :

'அலகாபாத்திலுள்ள 'ஆனந்த பவன்' மாளிகையைப் பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.



சாகர் சாம்ராட்' பம்பாய்
'ஹை' பகுதியில்
எண்ணெய்க் கிணறு
தோண்டுதல்!





ஜனவரி 10, 1970:

பம்பாயில் தாராப்பூரில் நாட்டில் முதல் அணுசக்தி நிலையத்தை பிரதமர் முறையாகத் துவக்கி வைத்தார்.

ஜனவரி 23, 1970:

நாடாளுமன்றத்திலும் மாநில சட்ட மேல்சபைகளிலும் ஷெட்யூல்டு வகுப்பினர், பழங்குடியினர்க்கான இட ஒதுக்கீடு முறையை மேலும் பத்தாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

பிப்ரவரி 8, 1970:

ராஜஸ்தானில் 140 அடி உயரம் கொண்ட ராணா பிரதாப் சாகர் அணைக்கட்டைப் பிரதமர் துவக்கி வைத்தார்.

பிப்ரவரி 9, 1970:

ராஜஸ்தானில் கோட்டாவில் ரூ. 30 கோடி செலவில் அமைந்த யூரியா உரத் தொழிற்சாலையைப் பிரதமர் துவக்கி வைத்தார்.

மார்ச் 19, 1970:

காம்பே வளைகுடாவில் நாட்டில் முதல் கடலோர எண்ணெய்க் கிணறில் துரப்பண வேலையை பிரதமர் துவக்கி வைத்தார்.

மே 18, 1970:

மருந்துகள் (விலைக் கட்டுப்பாடு) உத்தரவின்படி அரசு 17 அத்தியாவசிய மருந்துகள் விஷயத்தில் அதிகபட்ச விற்பனை விலையை நிர்ணயித்துள்ளது.

அக்டோபர் 19, 1970 :

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் மிக் ரக விமானம், விமானப் படைக்குக் கொடுக்கப்பட்டது.

பிப்ரவரி 18, 1971:

ஆர்வி தரை நிலையத்தின் மூலம் இந்தியா முதன் முறையாக செயற்கை கோள் மூலம் தொலைத் தொடர்பு இணைப்பு ஏற்படுத்திக் கொண்டது.

மே 13, 1971:

ஜெனரல் இன்ஷூரன்ஸ் (அவரசரக்கால நெறி முறைகள்) அவசரச் சட்டத்தின் படி 42 வெளி நாட்டு கம்பெனிகள் உட்பட 106 ஜெனரல் இன்ஷூரன்ஸ் கன்பெனிகள் அரசுடைமையாக்கப் பட்டன.

ஆகஸ்டு 2, 1971 :

கருச்சிதைவு சட்டத்தைச் சுலபமாக்கும் வகை செய்யும் விதத்தில் அமைந்த மருத்துவ முறை கருச் சிதைவு மசோதாவுக்கு நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கியது.

ஆகஸ்டு 9, 1971:

அமைதி, நட்புறவு ஒத்துழைப்புக்கான 20 ஆண்டு ஒப்பந்தம் ஒன்றில் இந்தியாவும் சோவியத் யூனியனும் கையெழுத்திட்டன.

செயற்கைக் கோள்
ஆர்யப் பட்டா'
விண்வெளியில்
ஏவி விடப்பட்டது



செப்டம்பர் 16, 1971:

அவசரச் சட்டம் பிரகடனம் ஒன்றின் மூலம் பீஹார் மேற்கு வங்காளத்திலுள்ள 814 கோக் கரிச் சுரங்கங்கள் அரசுடைமையாக்கப்பட்டன.

மே 22, 1972:

டிராம்பேயில் பாபா அணு ஆராய்ச்சி நிலையத்தில் இந்தியாவிலேயே முதல் ரக விரைவில் அணுப் பெருக்கச் செய்யக் கூடிய அணு உலை ஒன்று செயல்பட ஆரம்பித்தது.

அக்டோபர் 3, 1972:

பொகாரோவில் முதல் ஊது உலை தொழில் தொகுதியை பிரதமர் துவக்கி வைத்தார்.

ஜனவரி 30, 1973:

அரசு 464 நிலக்கரிச் சுரங்க நிர்வாகத்தை மேற் கொண்டது.

ஜனவரி 28, 1974:

1964-ஆம் ஆண்டு சாஸ்திரி-ஸ்ரீமாவோ ஒப்பந்தத்தின் கட்டுக்குள் வராத குடி உரிமை அற்ற இந்திய குடிமகன்களாக இருந்த ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேரின் எதிர்காலம் பற்றிய இந்தியா ஸ்ரீலங்கா ஒப்பந்தம் தீர்மானிக்கப்பட்டது. 75 ஆயிரம் பேருக்கு இந்தியாவும் பாக்கியுள்ளவர்களுக்கு ஸ்ரீலங்காவும் குடி உரிமை வழங்க வேண்டும் என்று இந்த ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

பிப்ரவரி 2, 1974:

இந்தியாவில் முதல் நகரும் துரப்பண மேடை 'சாகர் சாம்ரோட்' பம்பாய் 'ஹை' பகுதியில் முதல் எண்ணெய்க் கிணறு தோண்ட ஆரம்பித்தது.

ஏப்ரல் 1, 1974

ஏழைமையைப் போக்கி சுயசார்பு அடைவதற்கான குறிக்கோளைக் கொண்ட ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் செயல்படுத்த ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் மக்கள்தொகை 60 கோடியே 40 இலட்சம்

இந்தியாவின் மக்கள் தொகை 60 கோடியே 40 இலட்சமாக உயர்ந்துள்ளது.

1975-ஆம் ஆண்டின் இறுதியில் மக்கள் தொகை இந்த அளவை எட்டியுள்ளது. இது 1971-ல் நடந்த மக்கள் தொகை கணக்கெடுப்பின் நிலவரத்தைவிட, 10.4 சதவீதம் உயர்வாகும்; அப்போதைய மக்கள் தொகை 54 கோடியே 70 இலட்சம்தான்.

அதாவது ஏறத்தாழ 5 ஆண்டுகளில், நம் நாட்டின் மக்கள் தொகை 5 கோடியே 70 இலட்சம் அதிகமாகி உள்ளது என்று பொருளாகிறது; அதாவது ஆண்டுக்கு 1 கோடியே 10 இலட்சம் குழந்தைகள் பிறந்துள்ளதாகப் பொருள். இந்தத் தொகை மட்டும் ஆஸ்திரேலியாவின் மக்கள் தொகைக்குச் சமமாகும்.

1973-ல் 2.1 சதவீதமாக இருந்த மக்கள் தொகைப் பெருக்க விகிதம், 1975-76-ல் 2 சதவீதமாகக் குறையக் கூடும் என்று, மக்கள் தொகை மதிப்பீடு பற்றிய நிபுணர் குழு கருத்து தெரிவித்து இருந்தது. உண்மையிலேயே இவ்வாறு இந்த விகிதம் குறைந்ததா என்பது வரும் மார்ச் 31-ந் தேதியன்று நிலவரப்படி கிடைக்கக்கூடிய மக்கள் தொகை புள்ளிவிவரத்தைப் பார்த்தால்தான் தெரியவரும்.

இந்தியாவின் மக்கள் தொகை 1980-ல், 68 கோடியாக இருக்கும் என்று, இந்திய மக்கள் தொகை பற்றிய ஐக்கியநாடுகள் சங்க மதிப்பீடு கூறுகிறது. 1978-79-ல் இந்திய மக்கள் தொகை 64 கோடியே 20 இலட்சமாக இருக்கும் என்று நம் நாட்டு அதிகாரப் பூர்வ மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

1961 முதல் 1970 வரையிலான பத்தாண்டுக் காலத்திலேதான், இந்தியாவின் மக்கள்தொகைப் பெருக்கம் அதிகமாக இருந்தது.

1961-ல் 43 கோடியே 90 இலட்சமாக இருந்த மக்கள் தொகை 1971-ல் 54 கோடியே 70 இலட்சமாக உயர்ந்தது. இந்த உயர்வு விகிதம் 24.6 சதவீதமாகும்; 1951 முதல் 1960 வரையிலான பத்தாண்டுக் காலத்தில் மக்கள் தொகை உயர்வு விகிதம் 21.6 சதவீதம்தான்.

இந்தியாவில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் மிகவும் குறைவாக இருந்த காலம் 1911 முதல் 1921 வரையிலான பத்தாண்டுக் காலமாகும். இந்தப் பத்தாண்டுகளில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 9 சதவீதம்தான்.

நமது நாட்டில் தேசிய பிறப்பு விகிதம் 1961ல் ஆயிரத்துக்கு 41.7 என்ற கணக்கில் இருந்தது. 1972-ல் 36.6 ஆகக் குறைந்தது. நான்காம் ஐந்தாண்டு திட்ட இறுதியில், இந்த விகிதம் ஆயிரத்துக்கு 35 ஆகக் குறைந்து விட்டது.



அமைதிப் பணிகளுக்காக அணுப் பரிசோதனை!

மே 18, 1974:

ராஜஸ்தானில் போகாரானில் அமைதிப் பணிகளுக்காக அணுப் பரிசோதனை நடத்தப்பட்டது.

ஜூன் 25, 1974:

நாக்பூருக்கு அருகே கொரடியிலுள்ள இந்தியாவின் மிகப் பெரிய அனல் மின் நிலையம் மின்சக்தி உற்பத்தியைத் துவக்கியது.

செப்டம்பர் 21, 1974:

103 நலிவடைந்த நெசவாலைகளை அரசு ஏற்றுக் கொள்வதற்கான அவசரச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது.

பிப்ரவரி 5, 1975:

கேத்ரி செப்புச் சுரங்கத் திட்டப் பகுதியில் 31 ஆயிரம் டன் செப்பு உருக்குத் திறன் கொண்ட உலை ஒன்றைப் பிரதம மந்திரி ஸ்ரீமதி காந்தி துவக்கி வைத்தார்.

ஏப்ரல் 10, 1975:

அரபிக் கடலில் பம்பாய் ஹை பகுதியில் 4-வது எண்ணெய்க் கிணற்றில் துரப்பண நடவடிக்கைகளை பிரதம மந்திரி முறையாகத் துவக்கி வைத்தார்.

ஏப்ரல் 19, 1975 :

செயற்கைக்கோள் ஆர்யப்பட்டாவை விண்வெளியில் ஏவி விட்டதன் மூலம் இந்தியா விண்வெளி யுகத்தில் நுழைந்துள்ளது.

ஜூன் 25, 1975:

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் அமைந்த உள்நாட்டு கலவரங்களின் காரணமாக நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டது.

ஜூன் 26, 1975:

நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் நிகழ்த்திய உரையில் ஸ்ரீமதி காந்தி கூறியதாவது : 'ஜனநாயகம் என்ற பெயரில் ஜனநாயக முறை அலுவல்களையே மறுக்க முயற்சிக்கப்பட்டுள்ளது. முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் செயல்பட அனுமதிக்கப்படவில்லை. சில மாநிலங்களில் சட்ட ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மேல் சபைகளைக் கலைப்பதற்காக ராஜினாமா செய்யும்படி சட்டமன்ற உறுப்பினர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

ஜூலை 1, 1975:

பொருளாதாரத்தைப் புதுப்பிப்பதற்காக பிரதம மந்திரி 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தை அறிவித்தார்.

ஆகஸ்டு 1, 1975:

ஆய்வு அடிப்படையிலான, செயற்கைக் கோள் மூலமான டெலிவிஷன் போதனைத் திட்டத்தைப் பிரதம மந்திரி துவக்கி வைத்தார்.

செப்டம்பர் 26, 1975 :

ஒரே அலுவல் விஷயத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்குமான ஊதியத்தில் இருந்த ஏற்றத்தாழ்வுக்கு அவசரச் சட்டம் ஒன்றின் மூலம் தடை கொண்டு வரப்பட்டது.

அக்டோபர் 24, 1975:

கொத்தடிமைத் தொழிலை ஒழிப்பதற்கான ராஷ்டிரபதியின் அவசரச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது.

நவம்பர் 11, 1975:

தலைமறைவாகியிருந்த நாகா கலகக்காரர்களின் பிரதிநிதிகளுடன் அடிப்படை விஷயங்களில் ஒப்பந்தம் செய்து கொண்டதன் மூலம் 20 ஆண்டு கால நாகா பிரச்னைக்கு முடிவு காணப்பட்டது.

நவம்பர் 29, 1975 :

தாமாக முன்வந்து சொத்து, வருமானம் பற்றிக் கணக்குத் தெரிவிக்கும் திட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த வருமானத்தை தெரிவிப்பவர்களுக்கு சுங்கச் சட்டம் தங்கக் கட்டுப்பாடு சட்டம், ஆகியவற்றைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுப்பதிலிருந்து விலக்கு அளிக்க வகை செய்யும் அவசரச் சட்டம் ஒன்று பிரகடனம் செய்யப்பட்டது.

டிசம்பர் 19, 1975:

கோதாவரி நதி நீரைப் பயன்படுத்தும் விஷயத்தில் ஆந்திரப் பிரதேஷ், கர்நாடகம், மத்தியப் பிரதேஷ், மஹாராஷ்டிரம், ஒரிஸ்ஸா ஆகிய ஐந்து மாநில முதலமைச்சர்களிடையே புதுதில்லியில் ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாயிற்று.

தமிழ்நாட்டில் மத்திய அரசு ஆதரவில் அமைந்த தொழில் திட்டங்கள்

இந்தியாவில் மகாராஷ்டிரம், மேற்கு வங்காளத்திற்கு அடுத்தபடியாக தமிழ் நாட்டில் தான் மிக அதிக அளவுக்குத் தொழிற்சாலைகள் உள்ளன. இம் மாநிலத்தில் இயற்கை வளங்கள் அதிகமாக இல்லாவிட்டாலும், தொழில் அபிவிருத்தியில் நல்ல முன்னேற்றம் காணப்படுவதற்குக் காரணம் மத்திய அரசு பெருமளவுக்கு மூலதனம் இட்டுள்ளது தான். ஐந்தாண்டுத் திட்டங்களின்படி மத்திய அரசு, தமிழ் நாட்டில் அரசுத்துறையில் பல தொழிற்சாலைகளை நிறுவியுள்ளது. தற்போது மத்திய அரசு ஆதரவில் அமைந்த 11 அரசு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. அவையாவன:

1. பாரத கனரக மின்சாதனங்கள் நிறுவனம்,
2. இந்துஸ்தான் போட்டோ பிலிம் உற்பத்தி நிறுவனம்,
3. இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனம்,
4. 'இண்டியன் டிரக்ஸ் அண்டு பார்மசூட்டிகல்ஸ்' நிறுவனம்,
5. 'இண்டியன் ரேர் எர்த்ஸ்' நிறுவனம்,
6. சென்னை உரத் தொழிற்சாலைகள் நிறுவனம்,
7. சென்னை எண்ணெய் சுத்தி நிறுவனம்,
8. 'மாடர்ன் பேக்கரிஸ்' நிறுவனம்,
9. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பொரேஷன்,
10. எண்ணெய் நிலவாயுக் கமிஷன்,
11. 'ரிச்சார்டுசன் அண்டு குருடார்ஸ்' நிறுவனம்.

1973 மார்ச் 31-ஆம் தேதி வரை மத்திய அரசு தமிழ்நாட்டில் அரசுத் துறை நிறுவனங்களில் மொத்தம் 352.6 கோடி ரூபாய் மூலதனம் இட்டுள்ளது.

அரசுத் துறைக்காக மத்திய அரசின் மூலதனம் பெறும் 5 மாபெரும் மாநிலங்களில் தமிழ் நாடும் ஒன்றாகும். மற்ற மாநிலங்களாவன: பிகார், மத்தியப் பிரதேசம், மேற்கு வங்காளம், ஒரிசா.

கார்ப்பொரேஷன்களாகச் செயல்பட்டு வரும் இத்தகைய அரசுத்துறை நிறுவனங்களைத் தவிர, மத்திய அரசு துறைகளும் தனியாக பல தொழிற்சாலைகளை தமிழ்நாட்டில் நடத்தி வருகின்றன. ரயில்வே அமைச்சகத்தின் கீழ் பெரம்பூரில் உள்ள இணைப்பு பெட்டித் தொழிற்சாலை, மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் ஆவடியில் உள்ள கனரக வாகனங்கள் தொழிற்சாலை, அணு சக்தி இலாகாவின் கீழ் உள்ள சென்னை அணு ஆராய்ச்சி நிலையம் ஆகியவை அவற்றில் முக்கியமானவையாகும்.

படைச்சாதன உற்பத்தி தொழிற்சாலைகள்

நாட்டில் மொத்தம் 25 படைச் சாதன உற்பத்தித் தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில் மூன்று மிகப்பெரிய தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் தான் இருக்கின்றன. அவையாவன: 1. திருச்சியில் உள்ள சிறு படைச் சாதனத் தொழிற்சாலை, 2. அரவங்காட்டில் உள்ள கார்டைட்டுத் தொழிற்சாலை, 3. ஆவடியில் உள்ள ராணுவத்தினருக்கான சீருடைத் தயாரிப்புத் தொழிற்சாலை.

தேசிய ஆய்வுக் கூடங்கள்

நாட்டில் உள்ள முக்கிய தேசிய ஆய்வுக் கூடங்களில் இரண்டு தமிழ்நாட்டில் தான் இருக்கின்றன. அவையாவன: 1. காரைக்குடியில் உள்ள மின் இரசாயன ஆராய்ச்சிக் கழகம், 2. சென்னையில் உள்ள தோல் ஆராய்ச்சிக் கழகம். இந்த ஆய்வுக் கூடங்களைத் தவிர, பல்வேறு தேசிய ஆராய்ச்சிக் கழகங்களின் மண்டல நிலையங்கள் பல தமிழ்நாட்டில் உள்ளன.

தூத்துக்குடியின் வளர்ச்சி

சென்னைத் துறைமுகம் விரிவாக்கப்பட்டுள்ளதோடு மட்டுமல்லாமல், தூத்துக்குடியில் பல தொழிற்சாலைகள் - குறிப்பாக இரசாயனத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வருவதால், உள்நாட்டுத் தேவையைப்பூர்த்தி செய்யும் பொருட்டு, 30 கோடி ரூபாய் செலவில் அமைந்த துறைமுகம் ஒன்று அங்கு கட்டப்பட்டுள்ளது. தூத்துக்குடியில் மத்திய அரசே கனநீர்த் தொழிற்சாலை ஒன்றை அமைத்து வருகிறது.

சேலம் எஃகு ஆலை

துருப்பிடிக்காத 70 ஆயிரம் டன் எஃகு, மின் சாதனத் தயாரிப்புக்கான 75 ஆயிரம் டன் எஃகு, மற்ற 50 ஆயிரம் எஃகு ரகங்கள் ஆகியவற்றை உற்பத்திச் செய்வதற்காக, 518 கோடி ரூபாய் செலவில் அமைந்த எஃகாலை ஒன்று சேலத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் நலிந்து போன நெசவுத் தொழிலுக்கு உதவுவதற்காக மத்திய அரசு நலிவடைந்த நெசவாலைகளின் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டது. 1974 மார்ச் வரை தேசிய நெசவாலைக் கார்ப்பொரேஷனின் கட்டுப்பாட்டின் கீழ், 14 நலிவடைந்த நெசவாலைகள் செயல்பட்டு வந்தன. அரசு நிர்வாகத்தின் கீழ் இருந்த எல்லா நலிவடைந்த நெசவாலைகளும் தற்போது அரசுடைமையாக்கப்பட்டு விட்டன.

தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசுக்குச் சொந்தமான தொழில் பிரிவுகள், மாநில பொருளாதாரம் சிறக்க, சிறந்த பங்காற்றி வருகின்றன. பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதோடு, துணைத் தொழில்களைத் துவக்க உதவுவதன் மூலமாகவும், வேலைவாய்ப்புக்கு வகை செய்துள்ளன.

மின்சக்தி பற்றாக்குறைகொண்ட இம்மாநிலத்துக்கு மின்சாரம் வழங்கி, பொருளாதாரத்தைச் சிறக்கச் செய்வதில் மத்திய அரசுக்குச் சொந்தமான அரசு நிறுவனங்கள் ஆற்றிய தொண்டு மிகக் குறிப்பிடத்தக்கதாகும். நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பொரேஷனின் மின் உற்பத்தி நிலையம் மட்டும் மாநிலத்தின் மொத்த மின் உற்பத்தியில் 40 சதவிகிதத்தை வழங்குகிறது.

அணுமின் நிலையம்

மின்சக்தித் தேவை அதிகரித்து வருவதை சமாளிப்பதற்காக 470 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட அணு மின் உற்பத்தி நிலையம் ஒன்று கல்பாக்கத்தில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையம் உற்பத்தியைத் துவக்கியவுடன் மாநில மின்சாரத் தேவை முழுவதும் சரிகட்டப்பட்டு விடும் என்று சொல்லலாம்.

இம்மாநிலத்தில் உள்ள மத்திய அரசு நிறுவனங்களின் அலுவல்களும், மாநில பொருளாதாரத்தை சிறக்கச் செய்வதில் அவற்றின் பங்கும் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன.



நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பொரேஷன்

நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பொரேஷனின் கீழ் உள்ள தொழில் தொகுதியில் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கப்பட்டு அதைக்கொண்டு மின்சக்தி, இரசாயன உரம், பல உபப்பொருட்கள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. இத்தொழில் தொகுதி விரிவாக்கப்பட்டவுடன் அதன் மதிப்பு ரூ. 178 கோடியாக இருக்கும். இக்கார்ப்பொரேஷன் தொழிற்சாலைகளில் சுமார் 18 ஆயிரம் நிரந்தரத் தொழிலாளர்கள் பணி புரிகின்றனர்.

சேலம் எஃகாலை உருவாகி வருவதால் இக்கார்ப்பொரேஷனின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. சேலம் எஃகு ஆலையில் நெய்வேலியில் இருந்து கிடைக்கும் பழுப்பு நிலக்கரி பயன்படுத்தப்படும். 1973-74-ல் 33.29 இலட்சம் டன் பழுப்பு நிலக்கரி உற்பத்தி செய்யப்பட்டது. பழுப்பு நிலக்கரி உற்பத்தியை 40 இலட்சம் டன்னுக்கு உயர்த்துவதற்காக, 1973 மே மாதத்தில் கூடுதலாக ரூ. 11.62 கோடி மூலதனம் இடப்பட்டது. 65 இலட்சம் டன் பழுப்பு நிலக்கரி உற்பத்தியை உயர்த்துவதற்காக மீண்டும் ரூ. 87 கோடி மூலதனம் இட அண்மையில் அனுமதி அளிக்கப்பட்டது.

நாட்டில் பழுப்பு நிலக்கரி அடிப்படையில் அமைந்த இரண்டாவது மிகப் பெரிய அனல் மின் நிலையம், நெய்வேலியில் உள்ள அனல் மின் நிலையமாகும். இந்நிலையத்தின் நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறன் 600 மெகாவாட். நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பொரேஷனுக்கும் அதைச் சுற்றியுள்ள நகர்ப்புறத்துக்கும் தேவைப்படும், சிறிதளவு மின்சக்தியைப் பயன்படுத்திக் கொண்டு, பாக்கியை இந் நிலையம் தமிழ்நாடு மின் இணைப்பு அமைப்புக்கு வழங்கிவிடுகிறது. **1974 மார்ச் வரை இந்நிலையம் 1,895 கோடியே 60 இலட்சம் யூனிட் மின்சக்தி உற்பத்தி செய்தது. இதில் சுமார் 1,650 கோடி யூனிட் மின்சக்தியைத் தமிழ் நாட்டுக்கு வழங்கியது.** தமிழ் நாட்டில் மிக மோசமான மின் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்த போது, இக்கார்ப்பொரேஷனின் மின் உற்பத்தி நிலையம், இராசயன தொழிற்சாலைக்கும், 'லீகோ' கரி உற்பத்திக்கும் தேவைப்படும்

பழுப்பு நிலக்கரி அளவை குறைத்துக் கொண்டு, மாநில அரசுக்கு கைகொடுத்து உதவியது.

பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட இக்கார்ப்பொரேஷனின் உரத் தொழிற்சாலை யூரியா உற்பத்தியை 1966 மார்ச் மாதத்தில் துவக்கியது. 1972-73-ல் இத்தொழிற்சாலை 45,782 டன் யூரியா உற்பத்தி செய்தது. 1974 மார்ச் இறுதி வரை இத்தொழிற்சாலை மொத்தம் 47.05 இலட்சம் டன் யூரியாவை உற்பத்தி செய்தது. 1973 மார்ச் இறுதிவரை 5.94 இலட்சம் டன் 'லீகோ' கரி உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ் நாட்டிலும் மற்ற அண்டை மாநிலங்களிலும் சமையல் செய்வதற்கு 'லீகோ' கரி எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. பீங்கான் சாமான்கள், கம்பிக் காப்பீடு பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் ஒருவித களி மண்ணையும் இக்கார்ப்பொரேரேஷன் தயாரிக்கிறது.



இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை

தமிழ்நாட்டில் மிகப் பழைமையான அரசுத் தொழிற்சாலைகளில் ஒன்றான இணைப்புப் பெட்டித் தொழிற்சாலையில் சுமார் 11 ஆயிரம் தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள். ரயில் பெட்டிகளுக்கான மேற்கூடுகளை தயாரிப்பதற்காக முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 1955-ஆம் ஆண்டில் பெரம்பூரில் ரூ. 7.35 கோடி செலவில் இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டது. பின்னர் 1962-ல் ரூ. 3.69 கோடி செலவில் இத்தொழிற்சாலை விரிவாக்கப்பட்டது. தற்போது இத்தொழிற்சாலை ஆண்டுக்கு 750 ரயில் பெட்டிகளைத் தயாரிக்கும் திறன் கொண்டதாக விளங்குகிறது. 1974 மார்ச் வரை இத்தொழிற்சாலை, ரயில் பெட்டிகளுக்கான 10,202 மேற்கூடுகளையும், சுமார் 36 ரகங்கள் கொண்ட 8,252 ரயில் பெட்டிகளையும் தயாரித்துள்ளது.

இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகத்திலேயே மிகச் சிறந்த ரயில் பெட்டி தயாரிப்புத் தொழிற்சாலைகளில் இதுவும் ஒன்றாகும். இத்தொழிற்சாலை தயாரிக்கும் பல்வேறு ரயில் பெட்டிகள், ஆசிய, ஆப்ரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. மேலும் அதிக அளவுக்கு ஏற்றுமதி செய்ய வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன.

இந்துஸ்தான் போட்டோ பிலிம் உற்பத்தி நிறுவனம்

இந்நிறுவனத்தின் தொழிற்சாலை 1967 ஜனவரி மாதத்தில் ரூ. 11.67 கோடி செலவில் உதகமண்டலத்தில் அமைக்கப்பட்டது. திரைப்பட பிலிம்சுருள்கள் புகைபடம் தயாரிப்பதற்கான புரோமைடு காகிதம், 'எக்ஸ்-ரே' பிலிம்கள் போன்றவற்றை இத்தொழிற்சாலை தயாரிக்கிறது. 1973-74-ல் இத்தொழிற்சாலை மொத்தம் 35 இலட்சத்து 35 ஆயிரம் சதுர மீட்டர் பிலிம் சுருளை உற்பத்திச் செய்தது. இதற்கு முந்தைய ஆண்டின் உற்பத்தியை விட இது 20 சதவிகிதம் கூடுதலாகும். கச்சாப் பொருட்களை வழங்குவதற்காக இந்நிறுவனம் ஏற்படுத்திய துணை தொழிற்சாலைகள் சிறந்த பணியாற்றி வருகின்றன.

> "அரசியல் சாசனம் நமது மக்களின் தேவைகளையும், குறிக்கோள்களையும் ஈடேற்றிக் கொடுப்பதாய் இருக்குமாறு நாம் அமைக்க வேண்டும்."
>
> —இந்திரா காந்தி



பாரத கனரக மின்சாதனங்கள் நிறுவனம்

பாரத கனரக மின்சாதனங்கள் நிறுவனத்தின் உயர் அழுத்த கொதிகலன் தொழிற்சாலை திருச்சியில் உள்ளது. அனல் மின் நிலையங்களுக்குத் தேவைப்படும் உயர் அழுத்த கொதிகலன்களையும், தொழிற்சாலைகளுக்கான ஒட்டு மொத்தமான கொதிகலன்களையும், உயர் அழுத்த வால்வுகளையும் உற்பத்தி செய்வதற்காக இத்தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டது. இத்தொழிற்சாலையின் மொத்த மூலதனத் தொகை ரூ. 25.70 கோடி. பாரத கனரக மின்சாதனங்கள் நிறுவனத்தின் 1973-74-ஆம் ஆண்டு மொத்த உற்பத்தி மதிப்பில் கால் பாகம் இத்தொழிற்சாலையைச் சேர்ந்ததாகும். அந்த ஆண்டின் மொத்த உற்பத்தி மதிப்பு ரூ. 67.6 கோடி. முந்தைய ஆண்டின் உற்பத்தி மதிப்பைவிட இது 60 சதவிகிதம் கூடுதலாகும். இந்நிறுவனத்தை ரூ. 12.12 கோடி செலவில் விரிவாக்குவதற்கானத் திட்டத்துக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டு விட்டது. இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் நவீன நுட்ப சாதனங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதன் மூலமாக, நாட்டிற்கு அந்நியச் செலாவணி கிடைப்பதோடு, இந்திய தொழில் நுட்பத்தின் மதிப்பும் உயருகிறது.

சென்னை உரத் தொழிற்சாலை நிறுவனம்

நாட்டில் உள்ள மிகப் பெரிய ஒரு சில உரத் தொழிற்சாலைகளில் ஒன்று சென்னைக்கு அருகே மணலியில் உள்ள இரசாயன உரத்தொழிற்சாலையாகும். 2.47 இலட்சம் டன் அமோனியாவையும், 2.92 இலட்சம் டன் யூரியாவையும், 3.63 இலட்சம் டன் 'என். பி. கே.' இரசாயன உரத்தையும் உற்பத்தி செய்யக் கூடிய திறன் கொண்டதாகும் இது. 1971 நவம்பரில் இத்தொழிற்சாலை வர்த்தக ரீதியிலான உற்பத்தியைத் துவக்கியது. 1973-74-ல் இத்தொழிற்சாலை 1.69 இலட்சம் டன் அமோனியாவையும், 2.38 இலட்சம் டன் யூரியாவையும், 2.86 இலட்சம் டன் 'என். பி. கே.' ரசாயன உரத்தையும் உற்பத்தி செய்தது. விரிவாக்கத் திட்டம் ஒன்றின்படி 1974 மே மாதத்தில் இத்தொழில் தொகுதியில் மூன்றாவது தொழிற்சாலைக்கான கட்டுமானப் பணி துவங்கியது. இத்தொழிற்சாலையை அமைக்க சுமார் ரூ. 8.5 கோடி செலவாகும்.

இந்நிறுவனத்தில், மிகச்சிறந்த மண் ஆராய்ச்சிக் கூடம் ஒன்று உள்ளது. நாளொன்றுக்கு 200 மாதிரிகளை ஆய்வு செய்யக் கூடியதாகும் இது. மண் மாதிரி ஆய்வுகளின் விளைவுகள் அடிப்படையிலும், கிடைக்கும் நீர், சாகுபடிக்கான பயிர் ஆகியவற்றின் அடிப்படையிலும் இவ்வுர நிறுவனம் விவசாயிகளுக்கு, அதிக உற்பத்திக்கான உரங்களைப் பற்றிய ஆலோசனை அளிக்கிறது.

மேலும் இந்நிறுவனம் விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்கு உதவக் கூடிய இரசாயன உரங்களை பிரபலப்படுத்துவதற்காக 1974-75-ல் சில கிராமங்களை தெரிந்தெடுத்தது. இந்நிறுவனம் தமிழ்நாட்டில் 21 கிராமங்களை ஏற்றுக் கொண்டு விவசாய உற்பத்திக்கான தனது திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இக்கிராமங்களில் உள்ள விவசாயிகளின் பயிர் உற்பத்திக்கானத் திட்டங்களை வகுப்பதில் அவர்களுக்கு இந்நிறுவனம் உதவுவதோடு, கள விளக்கப் பயிற்சி மூலம் நவீனப் பயிர்த் தொழில்நுட்பத்திலும் பயிற்சி அளிக்கிறது. மேலும் இத்திட்டத்தின்படி விவசாயிகளுக்கு விதைகள், பூச்சி மருந்துகள், கடன் வசதி ஆகியவையும் அளிக்கப்படுகின்றன.

இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனம்

1960-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட இந்த அரசு நிறுவனம், ஒரு 'ஷிப்ட்' அடிப்படையில் 5,400 டெலிபிரிண்டர்களையும், இரண்டு 'ஷிப்ட்' அடிப்படையில் 8,500 டெலிபிரிண்டர்களையும்

தயாரிக்கக் கூடிய திறன் கொண்டதாகும். இந்நிறுவனம் இதுவரை 50 ஆயிரத்துக்கும் அதிகமான டெலிபிரிண்டர்களைத் தயாரித்து பல்வேறு உபயோகிப்பாளர்களுக்கு வழங்கி உள்ளது. 1976-77-ல் இந்நிறுவனம் 7,000 டெலிபிரிண்டர்களைத் தயாரிக்க திட்டமிட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் சுமார் 6,000 டெலிபிரிண்டர்கள் தயாரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிறுவனத்தின் தொழிற்சாலை மின் அணு டெலிபிரிண்டர், டேப் டெலிபிரிண்டர், மின்சார ஹிந்தி டைப்ரைட்டர், இருமொழி டெலிபிரிண்டர் ஆகியவற்றையும் வடிவமைத்து வருகிறது. கம்ப்யூட்டர் சாதனங்களுக்குத் தேவைப்படும் உதிரி உறுப்புக்களையும் தயாரிக்க நிறுவனம் உத்தேசித்துள்ளது.



சென்னை எண்ணெய் சுத்தி நிறுவனம்

தென் இந்தியாவின் பெட்ரோலியப் பொருள்கள் தேவையைச் சமாளிப்பதற்காக 43 கோடி ரூபாய் செலவில் அமைந்த எண்ணெய் சுத்தி ஆலையொன்று சென்னையில் ஏற்படுத்தப்பட்டது இந்த ஆலை வர்த்தக ரீதியிலான உற்பத்தியை 1969 ஜூன் மாதத்தில் துவக்கியது. 1973-74-இல் இந்த ஆலையில் 28 இலட்சம் டன் கச்சா எண்ணெய் சுத்தி செய்யப்பட்டது. இந்த ஆலையின் எண்ணெய் சுத்தி திறன் 25 இலட்சம் டன்தான். ஆண்டுக்கு 35 இலட்சம் டன் கச்சா எண்ணெய் சுத்தி செய்யும் விதத்திலும், ரூ. 25 கோடி செலவில் மெழுகு உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை அமைக்கும் விதத்திலும் இந்த எண்ணெய் சுத்தி ஆலை விரிவாக்கப்படவிருக்கிறது.

> ''நான் அதிருஷ்டத்தில் நம்பிக்கை வைப்பதில்லை. பலன் வேண்டுமானால், கடின உழைப்பு வேண்டும். நெடிய நோக்கு இருந்தால்தான் நெடுந்தூரம் செல்ல முடியும். இலட்சியம் பற்றிக் கனவு காணும் திறமையும், சிந்தனைத் திறமையும் பெரிதாக இலலாவிட்டால், நம்மால் பெரிதாக எதையும் சாதிக்க முடியாது.''
>
> —இந்திரா காந்தி

'இந்தியன் டிரக்ஸ் அண்டு ஃபார்மச் சூட்டிகல்ஸ் நிறுவனம்

'இந்தியன் டிரக்ஸ் அண்டு ஃபார்மச் சூட்டிகல்ஸ்' நிறுவனத்தின் மருத்துவக் கருவிகள் தொழிற்சாலை சென்னைக்கு அருகே ரூ. 4.65 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டது. 25 இலட்டம் மருத்துவக் கருவிகளை தயாரிக்கும் திறன் கொண்டதாக அமைந்த இத்தொழிற்சாலை 1965 செப்டம்பரில் தன் உற்பத்தியைப் பெருக்கியது. 1972-73-இல் இத்தொழிற்சாலை ரூ. 59.26 இலட்சம் மதிப்புள்ள 6.69 இலட்சம் மருத்துவக் கருவிகளை உற்பத்தி செய்தது.



கனரக வாகனங்கள் தொழிற்சாலை

மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் ஆவடியில் அமைந்துள்ள இத்தொழிற்சாலை கனரக வாகனங்களுக்குத் தேவைப்படும் 'எஞ்சின்கள்', 'கியர்பாக்ஸுகள்,' போரில் உபயோகிக்கும் வாகனங்களுக்குத் தேவைப்படும் உதிரி உறுப்புக்கள் ஆகியவற்றை தயாரிக்கிறது. பிரபல 'விஜயந்தா' டாங்குகளை உற்பத்தி செய்துவரும் இத்தொழிற்சாலை ராணுவ மீட்பு வாகனங்களையும் தயாரிக்கிறது.

இத்தொழிற்சாலையில் 5,700-க்கும் அதிகமான தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இத்தொழிற்சாலை, தொழிலாளர் நல்வாழ்வுக்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. உணவு விடுதி வசதி, மருத்துவ வசதி போன்றவை தொழிலாளர்களுக்கு அளிக்கப்படுகின்றன. தொழிலாளர்களுக்கான தற்போதைய மருத்துவ வசதி விரிவாக்கப்பட்டு வருகிறது.

எனவே, தமிழ்நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்குவதில், இந்திய அரசு பராபட்சமின்றி நடந்து வருகிறது என்பது தெளிவாகிறது.

சென்னையில் அறிவியல் நுட்பக் கருவி நிலையம்

நாட்டில் அறிவியல் நுட்பக் கருவிகளுக்காக நான்கு வட்டார நிலையங்களை, மத்திய விஞ்ஞானத் தொழில்நுட்பத் துறை நிறுவியுள்ளது. அந்நிலையங்கள்: 1. சென்னை-இந்தியத் தொழில் நுட்பக் கழகம், 2. லக்னோ—மத்திய மருந்து ஆராய்ச்சித் தொழில்நுட்பக் கழகம், 3. பம்பாய்—இந்திய தொழில் நுட்பக் கழகம், 4. கல்கத்தா-போஸ் இன்ஸ்டிடியூட் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

பல்வேறு நாடுகளில் வளர்ந்து வரும் நவீன அறிவியல் நுட்பக் கருவிகளை முழுவதும் பயன்படுத்த தனிப்பட்ட நிலையங்களுக்கு இயலாத காரணத்தாலும், அவற்றைப் பராமரிக்க அவை கஷ்டப்பட்டதாலும் இந்நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நவீன அறிவியல் நுட்பக் கருவிகள் தயாரிப்புத் துறையில் உள்ள வளத்தைத் திரட்டவும், விஞ்ஞானிகள், கல்விக் கழகங்கள், தொழிற்சாலை ஆகியவற்றுக்குத் தேவையான ஆராய்ச்சி, அனுபவம் முதலிய வசதிகளை அளிக்கவும் இந்நிலையங்கள் உதவும்.

படமும் செய்தியும்

மைலாப்பூர் அகாடமியின் புதிய கட்டடத்திறப்பு விழாவில் (16.2.76) தமிழக ஆளுநர் திரு. கே.கே. ஷா உரையாற்றினார்.

தலைமைச் செயலகத்தில் 18.2.76 அன்று நடைபெற்ற பத்திரிகைச் செய்தியாளர் கூட்டத்தில் பத்திரிகைச் செய்தியாளர் களிடையே ஆளுநர் அவர்கள்.

சோவியத் நாட்டின் திரைப்படக் குழுவினர் 20.2.76 அன்று சென்னை வந்தனர்.

முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹெரால்டு மாக்மில்லன் அவர்கள் 20.2.76 அன்று சென்னை வந்த போது, அவரைத் தமிழ்நாடு அரசின் சார்பில், பொதுத்துறைத் துணைச் செயலாளர் திரு. கே. ஏ. சுந்தரம் ஐ.ஏ.எஸ்., அவர்கள் வரவேற்றார்.

மத்திய அரசின் மாநிலங்களின் உணவுப் பொருள் வழங்குதல் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. ஏ. சி. ஜார்ஜ் அவர்கள் 23.2.76 அன்று சென்னைக்கு வருகை தந்தார்.



தமிழக ஆளுநர் அவர்களிடம், 23.2.76 அன்று மனு கொடுக்கக் கூடியிருந்த மக்கள் கூட்டம்.



இராயபுரத்தில் நடைபெற்ற குடும்ப நலத் திட்ட முகாமில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர் களுக்கு, ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் 23 2.76 அன்று உணவு வழங்கினார்.

சென்னைக்கு 26-2-76-ல் வருகை தந்த தோங்கா நாட்டுத் தொழிலாளர் துறை அமைச்சர் திரு. பாரோன் வாகா அவர்களைத் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் வரவேற்றார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 25.2.76 அன்று நடைபெற்ற "கல்லூரி நாள்" விழாவில் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் மாணவர்களுக்குப் பரிசு வழங்கினார்.

சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள காந்தி இல்லத்தில் அன்னை கஸ்தூரிபாய் நினைவுநாள் அஞ்சலி நடை பெற்றது.

கொடிநாள் வசூலில், 1974-ஆம் ஆண்டில் மதுரை மாவட்டம் முதலிடம் பெற்றமைக்காகத் தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்குக் கேடயம் வழங்கினார்.

அன்றாடம் உபயோகிக்கும் பொருள்கள் அளவு தரம் உள்ளதாக இருக்கிறதா? சரியாக இருக்கிறதா? என்பதைக் கண்டறிவதற்காகத் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 1—3—76 அன்று பல கடைகளில் திடீர் சோதனை நடத்தினார்.



முன்னாள் படைவீரர்கள் நிதியைப் பெருக்குவதில் சிறப்பாகப் பணியாற்றியமைக்காக தலைமைச் செயலாளர் திரு. பி. சபாநாயகம் ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கு தமிழக ஆளுநர் தங்கப்பதக்கம் வழங்கினார்.

வளம் தரு வீதியிலெ...

ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் அமைப்போம்

இன்று வருமான வரி விலக்குக்கான உச்சவரம்பு ரூ. 8000-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. (இதுவரை இருந்த வரம்பு ரூ. 6000 ஆகும்). இதனல் 7 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர். கடந்த ஆண்டு புதிதாக 1.33 லட்சம் பேர் வருமான வரி செலுத்தும் எல்லேக்குள் கொண்டுவரப்பட்டு நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளனர்.

சேமிப்புக்கு பல வகையிலும் ஊக்கம் கொடுக்கப்படுகிறது. (ரூ. 4000 வரை சேமிப்புக்கு வரி எதுமில்லே) வரி ஏய்ப்போருக்கும் கடுந் தண்டனே காத்திருக்கிறது.

நெஞ்சில் உரமும் செயலில் திறனும் உறுதுணே நிற்கும்

davp 75/494

மத்திய அரசு, மாநிலங்களுக்கு முக்கியமாக இரு வழிகள் மூலம் நிதி உதவி அளிக்கிறது.

(1) நிதிக் குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப திட்டத்தில் சேராத நிதித் தேவைகளே அளிப்பது.

(2) மாநில அரசுத் திட்டத்தின்படி, தேசிய அபிவிருத்தி சபை மூலம் நிதி உதவி அளிப்பது.

ஆருவது நிதிக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் நடப்புத் திட்ட காலத்தில் மாநிலங்களுக்கு நிதி தாராளமாகவே ஒதுக்கப்பட்டுள்ளது. பொறுப்புக்கள் மாற்றும் நடவடிக்கை கணிசமான அளவுக்கு அதிகரித்துவிட்ட போதிலும், இக்குழு வகுத்த கடன் நிவாரணத் திட்டம். மத்திய அரசுக் கடன்களைத் திருப்பிக் கொடுப்பதைப் பொறுத்த வரையில் மாநில அரசுகளுக்குப் பெரிதும் உதவியுள்ளது.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரை நிதிக் குழு செய்த பரிந்துரையின் அடிப்படையில் அமைந்த பொறுப்புக்கள் மாற்றும் திட்டத்தின் மூலமாக, நடப்பு ஆண்டில், மத்திய வரிகள் பங்கு 105 கோடியாக இருக்கும். அது மட்டுமல்லாமல், ஐந்தாவது திட்ட காலத்தில் இம் மாநில அரசு 87:05 கோடி ரூபாயை கடன் நிவாரணமாக மத்திய அரசிடமிருந்து பெறும். இக் கடனே, இம்மாநில அரசு திருப்பிக் கொடுத்தாக வேண்டும். நடப்பு ஆண்டின் கடன் நிவாரணத் தொகை 17 கோடி ரூபாய் ஆகும்.

திட்டத் துறையைப் பொறுத்த வரை, 1974—75-இல் மாநில அரசின் அங்கீகரிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு 112 கோடி ரூபாயாக இருந்தது. **கடன் நிவாரணத்திற்கான வேலே வாய்ப்பு நிதிக்கான முக்கிய துறைகளின் நிதி தேவைகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு நடப்பு ஆண்டில் திட்ட ஒதுக்கீடு ரூ. 142.59 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.** திட்டத்திற்கான மத்திய அரசின் நிதி உதவி விநியோக 'முறையின்படி, சாதாரணமாக ரூ. 41.15 கோடி மாநில அரசுக்கு அளிக்கப்படுகிறது. மாநிலஅரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியதிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டுத்தொகையாகிய ரூ. 142.59 கோடியை மாநில அரசு ஏற்க வேண்டுமென்ருல். ரூ. 15 கோடிக்கு நிதி வளத்தில் பற்ருக்குறை ஏற்படும். இந்தப் பற்ருக்குறையைச் சரிக்கட்ட மத்திய அரசு ரூ. 15 கோடியை முன் திட்ட உதவியாக அளிக்க ஒப்புக் கொண்டுள்ளது.

மாநில அரசுத் திட்டத்தில் தூத்துக்குடி அனல் மின் திட்டத்திற்காக ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டது. இத்திட்டப் பணி முன்னேற்ற அடிப்படையில், நடப்பு ஆண்டில் மேலும் ஒரு கோடி ரூபாயை பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த ஒரு கோடி ரூபாயையும் கூடுதல் முன் நிதி உதவியாக அளிக்க மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

நடப்பு ஆண்டில் மாநிலத் திட்டத்திற்காக இம்மாநில அரசு, மொத்தம் ரூ. 57.15 கோடியை மத்திய அரசு உதவியாகப் பெறும்.

வறட்சி நிவாரணப் பணிக்கான நிதித் தேவையையும் மத்திய அரசு உணர்ந்து அவ்வப்போது பூர்த்தி செய்து வருகிறது. **மத்திய அரசு நிபுணர்க் குழு மதிப்பீடு செய்த பிறகு, 1975 ஜனவரி — மார்ச் வரையிலான காலத்தில் வறட்சி நிவாரணப் பணிகளுக்கான செலவுகளுக்காக, மத்திய அரசு 1974—75-இல் ரூ. 7.5 கோடியை முன் உதவித் தொகையாக அளித்துள்ளது.** நடப்பு ஆண்டுச் செலவினங்களேப் பொறுத்த மட்டில் மாநில அரசின் ஆண்டுத் திட்டங்களே வகுக்கும்போதே, வறட்சி நிவாரணத் தேவைப் பற்றி கருத்தில் கொள்ளப்பட்டது. இதன் விளேவாக மாநில அரசின் திட்ட ஒதுக்கீடு ரூபாய் 142.59 கோடியாக நிர்ணயிக்கப்பட்டது. பாசன வசதி, சாலே அபிவிருத்தி, மண் வளப் பாதுகாப்பு, குடிநீர் வழங்குதல் போன்ற வேலே வாய்ப்பை உருவாக்கக் கூடிய துறைகளுக்குப் போதுமான அளவு நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது. இந்தத் திட்ட ஒதுக்கீட்டுக்கான நிதியை மாநில அரசு பெறுவதற்காக, சாதாரண திட்ட உதவித் தொகையாக ரூ. 41.15 கோடியுடன் கூடுதலாக ரூ. 15 கோடியை முன் திட்ட நிதி உதவியாக அளிக்க மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

வறட்சிப் பணிக்காக தேவைப்படும் நபர்கள் பற்றி மதிப்பீடு செய்ய மத்திய அரசுக் குழுவொன்றும் தமிழ் நாட்டில் சுற்றுப் பயணம் செய்தது. திட்டத்தின் மூலம் 3.5 கோடி ஆள் நாட்களே மாநில அரசு திரட்ட முடியும் என்பதை அக்குழு கண்டுபிடித்துள்ளது. குஜராத், ராஜஸ்தான், ஒரிஸ்ஸா, மத்தியப் பிரதேஷ் போன்ற வறட்சியினல் பாதிக்கப்பட்ட மாநிலங்களேப் பொறுத்த வரையில் எந்தக்கொள்கையை மத்திய அரசு கடைப்பிடிக்கிறதோ அதே கொள்கையைத்தான், தமிழ்நாடு அரசைப் பொறுத்த வரையிலும் கடைப்பிடிக்கிறது. மேலும் வறட்சி நிவாரணத்திற்காக கடந்த ஆண்டில் மத்திய அரசு திட்ட உதவியாக அளிக்கப்பட்ட ரூ. 7.5 கோடியைச் சரிக்கட்டுவதற்கான அலுவல் இந்த ஆண்டு துவங்கிய போதிலும், மாநில அரசின் நிதி நிலேமையைக் கருத்தில்கொண்டு, அந்த ஏற்பாடு நடப்பு ஆண்டில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.



விலைகள் குறைந்தன

இன்றியமையாப் பொருள்களின் விலைவாசியைக் குறைப்போம்''! என்பது இருபது அம்சத் திட்டத்தின் முதல் அம்சத்தில் ஒரு அங்கமாகும். இந்த இலட்சியம் தற்பொழுதுதமிழ் நாட்டில் நிறைவேறி வருகிறது. ஆம்! தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியின் முதல் மூன்று வார காலத்தில், உணவுத் தானியங்கள் மற்றும் சில இன்றியமையாப் பண்டங்களின் விலைகள் கணிசமான அளவு குறைந்துள்ளன!

நடுத்தர ரக அரிசியைப் பொறுத்த வரையில் விலை குறைந்துள்ளது. 1976 ஜனவரி 31-ஆம் தேதி, திருச்சிராப்பள்ளியில் ஒரு கிலோ ரூ. 1.80 ஆக விற்பனை செய்யப்பட்ட நடுத்தர ரக அரிசி பிப்ரவரி 21-ஆம் தேதியன்று ஒரு கிலோ ரூ. 1.50ஆகக் குறைந்துவிட்டது. அதே காலத்தில், மதுரையில் அந்த அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.2.00—லிருந்து ரூ. 1.70 ஆகக் குறைந்துள்ளது. நாகர்கோவிலில் கிலோ ஒன்றுக்கு ரூ. 2.10-லிருந்து ரூ. 1.80 ஆகச் சரிந்துள்ளது. பிப்ரவரி 21-ஆம் தேதி தஞ்சாவூரில் அந்த அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 1.50.

கடலை எண்ணெய் விலையும் மிக அதிகமாக குறைந்துள்ளது. 15 சதவிகிதம் வரையில் விலைக் குறைவு உள்ளது. சேலத்தில் கடலை எண்ணெயின் விலை ரூ. 5.20லிருந்து ரூ. 4.40 ஆகவும், திருச்சியில் ரூ. 5.50 லிருந்து ரூ. 4.90 ஆகவும் குறைந்துள்ளது. ஜனவரி 31-ஆம் தேதி சென்னையில் கிலோ ஒன்று ரூ. 5.30க்கு விற்பனை செய்யப்பட்ட கடலை எண்ணெயின் விலை ரூ. 4.90 ஆகக் குறைந்துவிட்டது. மதுரையில் ரூ. 5.50 லிருந்து ரூ. 5.00-ஆக அதன் விலை குறைந்துள்ளது.

நல்லெண்ணெய் விலை சேலத்தில் கிலோ ஒன்றுக்கு ரூ. 7.69 லிருந்து ரூ. 6.80 ஆகக் குறைந்துள்ளது. நல்லெண்ணெயின்விலை தஞ்சாவூரில் ரூ. 7.10-லிருந்து ரூ. 6.80 ஆகவும், புதுக்கோட்டையில் ரூ.7.36-லிருந்து ரூ.7.14 ஆகவும், காஞ்சீபுரத்தில் ரூ.8.25 -லிருந்து ரூ. 8.00 ஆகவும் குறைந்துவிட்டது.

காஞ்சீபுரம், சேலம், தருமபுரி, மதுரை, நாகர்கோவில் ஆகிய இடங்களில் தேங்காய் எண்ணெயும் குறைந்த விலையில் விற்கப்படுகிறது. சேலத்தில் அதன் விலை அதிகமாகக் குறைந்துள்ளது. கிலோ ஒன்றின் விலை ரூ. 9.79 -லிருந்து ரூ. 9.00 ஆகக் குறைந்துவிட்டது. மிகக் குறைந்த விலை நாகர்கோவிலில் பதிவாகியுள்ளது.

தானியங்களில், துவரம்பருப்பின் விலை அதிகமாகக் குறைந்துள்ளது. நாகர்கோவிலில் அதன் விலை 20 சதவிகிதம் குறைந்து கிலோ ஒன்று ரூ. 2.40-க்கு விற்கப்படுகிறது. கடலூர், சென்னை, தர்மபுரி ஆகிய ஊர்களில் பிப்ரவரி 21-ஆம் தேதி அது ரூ. 2.30 -க்கு விற்கப்பட்டது. ஆனால் ஜனவரி 31-ஆம் தேதி அதன் விலை ரூ. 2.60 ஆக இருந்தது. விருதுநகரில் அதன் விலை ரூ. 2.00.

விருதுநகரில் உளுத்தம் பருப்பின் விலையும் தனிப்பட்ட சரிவுப் போக்கைக் காட்டுகிறது. அதன் விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 2.55 -லிருந்து ரூ. 2.15 ஆகத் தாழ்ந்துவிட்டது.

மிளகாய் விலையும் குறைக்கப்பட்டுள்ளது. சென்னையில் அதன் விலை 33.3 சதவிகிதம் குறைந்துள்ளது. மிளகாய் கிலோ ஒன்று ரூ. 8.00க்கு விற்கப்படுகிறது. ஆனால் ஜனவரி 31-ஆம் தேதி அதன் விலை ரூ. 12.00 ஆக இருந்தது. நாகர்கோவிலில், மிளகாயின் விலை 30 சதவிகிதம் குறைந்துவிட்டது. அங்கு அதன் விலை ரூ. 10—லிருந்து ரூ. 7 ஆகத் தாழ்ந்துவிட்டது. மற்ற இடங்களில் மிளகாயின் விலையில் 15 முதல் 20 சதவிகிதம் வரையில் சரிவு ஏற்பட்டுள்ளது.

இதைப் போலவே புளியின் விலை கடலூரில் 30 சதவிகிதமும், சென்னையில் சுமார் 11 சதவிகிதமும் குறைந்துள்ளது. அதன்விலை கடலூரில் கிலோ ஒன்றுக்கு ரூ. 3.25—லிருந்து ரூ. 2.25 ஆகவும், சென்னையில் கிலோ ஒன்றுக்கு ரூ. 2.60—லிருந்து ரூ. 2.30 ஆகவும் குறைந்துவிட்டது.

வெங்காயத்தின் விலைகள், திருச்சியில் 40 சதவிகிதமும், கோயமுத்தூரில் 35 சதவிகிதமும் தஞ்சாவூர், சென்னை, மதுரை ஆகிய இடங்களில் 33 சதவிகிதமும் குறைந்துள்ளது. சென்னையிலும்; திருச்சிராப்பள்ளியிலும் வெங்காயம் இப்பொழுது கிலோ ஒன்று 60 காசுக்கு விற்கப்படுகிறது. முன்பு, அதன் விலை 90 காசாக இருந்தது. தஞ்சாவூரில் மூன்று வாரங்களுக்கு முன்பு ஒரு கிலோ ரூ. 1.20-க்கு விற்பனை செய்யப்பட்ட வெங்காயம், இப்பொழுது 80 காசுக்கு விற்கப்படுகிறது.

வெல்லத்தின் விலையும் குறிப்பிடத்தக்க வகையில் குறைந்துள்ளது. திருநெல்வேலியில், கிலோ ஒன்றுக்கு ரூ. 2.60—லிருந்து ரூ. 2.20 ஆக அதன் விலை சரிந்துள்ளது. திருச்சிராப்பள்ளியில் வெல்லத்தின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 2.90-லிருந்து ரூ. 2.20 -க்கு இறங்கிவிட்டது.

பிப்ரவரி முதல் வாரத்தில், சில பொய்க் காரணங்களால் மதுரையில் சில பண்டங்களின் விலைகள் உயர்வைக் காட்டின. ஆனால் மதுரை மாவட்டத்தில் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, வியாபாரிகளைக் கடுமையாக எச்சரிக்கை செய்த பிறகு, அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் பாராட்டத் தக்க வகையில் குறைந்துள்ளன.

இதே சமயத்தில், மற்ற இன்றியமையாப் பண்டங்களின் விலையில் எந்த உயர்வும் இல்லை.

எப்போதோ நெடுங்காலம் கழித்துத் தான் பயன்தருவதா ஆயுள் இன்ஷ்யூரென்ஸ்? அதுதானில்லை. விரைவில் வருவாய் பெற வழி உள்ளது உங்களுக்கும் உங்கள் மனைவி மக்களுக்கும்; எப்படி என்று பாருங்கள் இதோ:

எல்ஐஸீயின் "மணி பேக்" (பண மீட்டு) திட்டம் பற்றிப் படித்தறியுங்கள்.

நல் வாழ்வுடன் பாதுகாப்பு

முப்பது வயதிலே நீங்கள் ஓர் 20-ஆண்டு "பணமீட்பு" பாலிஸி எடுப்பதாக வைத்துக்கொள்வோம். மாதம் ரூ. 75.30தான் நீங்கள் கட்டவேண்டும். நீங்கள் பெறும் தொகைகள் பின்வருமாறு:

10 ஆண்டுகள் கழித்து ரூ. 3,000.
அதோடுகூட, 5 ஆண்டுகள் கழித்து ரூ. 3,000.
அதோடுகூட,மேலும் 5 ஆண்டுகள் கழித்து ரூ.14,280*
ஆக மொத்தம் ரூ. 20,000.

இந்த 20 ஆண்டுகளுக்குள் பாலிஸிதாரர் இறக்க நேரிட்டால், அவருடைய குடும்பம், ஏற்கனவே பெற்



றுக்கொண்ட தவணைத் தொகைகளுக்கும் மேலாக முழு இன்ஷ்யூரென்ஸ் தொகையான 15,000 ரூபாயை யும் பெறும்.**

* தற்போதுள்ள விகிதங்களில் போனசும் இதில் அடங்குகிறது.

** இது ஒரு உதாரணமே தவிர, உங்களுக்குக் கட்டுப் படியாகும் சக்திக்கேற்ப, பெரிய தொகைக்கோ, சிறிய தொகைக்கோ பாலிஸி எடுத்துக்கொள்ளலாம்

நீங்கள் பணிபுரியுமிடத்திலேயே சம்பளச்சேமிப்புத் திட்டத்தின்மூலம் ஏதேனும் ஒரு வித எல்ஐஸி பாலிஸியை எடுத்துக் கொள்ளுங்களேன். உங்கள் சார்பிலே பிரீமியங்களைச் செலுத்திவரும் பொறுப்பு உங்கள் எசமானருக்கு உண்டு; இந்தப் பிரீமியங்களோ சாதாரண மாதாந்தரப் பிரீமியங்களைவிடக் குறைவானவையே.

dCA/LIC/8a Tam.



தேவைப்படும் போது பணம்.

கல்வி, மருத்துவம், விடுமுறை, திருமணம்.. எதற்காயினும் சரி, அவ்வப்போதையத் தேவைகளுக்கு வேண்டிய பணம் கிடைத்துவிடும் உங்களுக்கு. அதையும் தவிர, பிரீமியங்கள்மீது வருமானவரித் தள்ளுபடியும் கிடைக்கும்.

லைப் இன்ஷ்யூரென்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

ஆயுள் இன்ஷ்யூரென்ஸ் போல் ஆதரவு தருவது எதுவுமில்லை.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக புதிய கண்டுபிடிப்புகள்!

1. களர் நிலங்களைச் சீர் திருத்தும் சீரிய வழி!

களர் நிலங்களைச் சீர்திருத்தும் முறைகளை உழவர்களுக்கு விளக்க, தேசீய நிருபணத் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டத்தில் 1972-ஆம் ஆண்டு செயல் விளக்கப் பாத்தி அமைக்கப்பட்டது.

விளக்கப் பாத்தி அமைத்த போது (1972) மண்ணின் கார-அமிலத் தன்மை 9.8 (pH) என்று இருந்தது. சாகுபடிக்கு ஏற்ற மண்ணின் கார-அமிலத்தன்மை 6.5 முதல் 7.5-க்குள் இருக்க வேண்டும். ஆகவே, 'பி.எச்' 9.8 என்பது அமிலத்தன்மையைக் காட்டுகிறது. இதைப் போக்க முதல் ஆண்டில் 'ஜிப்சம்' உப்பை எக்டேருக்கு 12.5 டன் என்ற அளவில் போடப்பட்டது. மண்ணின் சரிவிற்கு ஏற்ப போதிய வடிகால் வசதிகள் அமைக்கப் பட்டன. 'கெட்டு' (Gettu) என்ற உவர் நிலத்தில் வளரக் கூடிய நெல்லை இந்நிலத்தில் சாகுபடி செய்ததில் எக்டேருக்கு 1,267 கிலோ மகசூல் கிடைத்தது.

இரண்டாம் ஆண்டில் மண்ணின் கார-அமிலத் தன்மையின் அளவு காண பரிசோதனை செய்ததில், 'பி.எச்' 9.3 எனக் குறைந்தது. தக்கைப்பூண்டு (Daincha) என்ற பசுந்தாள் உரப்பயிரைக் கோடையில் பயிர் செய்து மடக்கி உழப்பட்டது. பயிர் செய்யும் பருவத்தில் மண்ணைப் பரிசோதித்தபோது, 'பி.எச்' 8.1 எனக் காணப்பட்டது. 'ஜிப்சம்' உப்பை எக்டேருக்கு 7.5 டன் என்ற அளவில் போட்டுச் சாகுபடி செய்யப்பட்டது. 'பி.வி. ஆர். 1', 'ஐ. ஆர். 20' என்ற நெல் இரகங்கள் சாகுபடி செய்யப்பட்டன. 'பி.வி. ஆர். 1' நெல் எக்டேருக்கு 1,400 கிலோ என்ற அளவிலும், 'ஐ.ஆர். 20' நெல் எக்டேருக்கு 3,285 கிலோ என்ற அளவிலும் மகசூல் கொடுத்தது. நெல்லை அடுத்து ராகிப் பயிர் செய்ததில் எக்டேருக்கு 1,284 கிலோ மகசூல் கிடைத்தது. இரண்டாம் ஆண்டு முடிவில் மண்ணைப் பரிசோதித்த போது, மண்ணின் 'பி.எச்' 7.8 என்ற அளவில் இருந்தது. அதாவது மண் சாகுபடிக்கு ஏற்ற நிலமாக மாறிக் கொண்டே வருகிறது எனத் தெரிகிறது.

ஆதலால் தங்கள் நிலங்களில் மகசூல் குறைவாகப் பெறும் உழவர்கள் மண்ணைப் பரிசோதித்து மண்ணின் தன்மையைத் திருத்தி அதிக இலாபம் பெறும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. நெல்லில் தண்டு துளைப் பானைத் தடுக்க குருணை மருந்துகள்!

நெல்லில் தண்டுத் துளைப்பானைத் தடுக்கக் குருணை மருந்துகள் ஏற்றவை எனக் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. இதனை உழவர்களுக்குக் கண்கூடாகக் காண்பிக்க மதுரை மாவட்டத்தில் உள்ள நாச்சிக்குளம், வீரபாண்டி என்ற இரு கிராமங்களில் தேசீய நிருபண பாத்திகளில் விளக்கம் செய்யப்பட்டது. 'டயாஸினன்' குருணைகள் 'ஐ. ஆர். 20' நெற்பயிரில் போடப்பட்டது. இதனால் தண்டுத் துளைப்பான் தாக்குதல் வெகுவாகக் குறைந்துவிட்டது. தண்டுத் துளைப்பானின் நாசம் 1 முதல் 4 சதவீதத்திற்குள் கட்டுப் படுத்தப்பட்டது.

குருணை மருந்துகள் இடாத நெல்லில் தண்டுத் துளைப்பானின் தாக்குதல் அதிகமாகி மகசூல் வெகுவாகக் குறைந்து காணப் பட்டது. ஆனால் குருணைகள் போட்ட நெல்லில் இரு கிராமங்களிலும் மகசூல் எக்டேருக்கு 7,933 கிலோ, 7,808 கிலோ என்று கிடைத்துள்ளது. இதிலிருந்து 'டயாஸினன்' குருணைகள் தண்டுத் துளைப்பானைக் கட்டுப் படுத்தியதோடு மகசூலையும் அதிகரித்தது என்பது தெளிவாகியுள்ளது.

எனவே, தண்டுத் துளைப்பானைத் தடுக்க 'டயாஸினன்' போன்ற குருணை மருந்துகளை உபயோகிக்கவும்.

3. கம்பிற்கு ஏற்ற களைக் கொல்லி!

களைகள் பயிரையே அழித்து விடும். களை எடுக்காப் பயிர் நாசம் ஆகிவிடும். இதை விவசாயிகள் அனுபவ ரீதியாகக் கண்டு, கைகளாலோ, அல்லது களைக்கொத்து கொண்டோ களைகளைப் பயிரிலிருந்து அகற்றுவதுண்டு. இதற்கு அதிக ஆட் செலவும், பணச் செலவும் ஏற்படும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் செய்த ஆராய்ச்சியில் இராசாயனக் களைக் கொல்லிகளை உபயோகித்துக் களைகளை ஒழிப்பது, களைகளை அறவே ஒழிக்க வழி செய்வதுடன், செலவும் கணிசமாகக் குறைகிறது என்பது தெரிய வருகிறது.

கை விதைப்பு செய்த 'எச்.பி. 3' வீரிய ஒட்டுக் கம்பில் களை கொல்லி கொண்டு களை ஒழிப்பது பற்றி ஆராய்ச்சி நடத்தப்பட்டது. முளைக்கும் முன் தெளிப்பு முறையில் 'அட்ரசீன்' (Atrazin) 0-375 கிலோ வீரியக் கலவையைத்

நெல் தண்டுத் துளைப்பான்



தெளித்ததில் களைகள் அறவே ஒழிக்கப்பட்டன. ஒரு எக்டேருக்கு 104 ரூபாய் செலவும் மீதமாகியது. இது எப்படி என்று கேட்கிறீர்களா? களைகொத்து மூலம் களை எடுப்பதற்கு எக்டேருக்கு ரூ. 160 செலவு ஆகியது. ஆனால் களை கொல்லி தெளிப்பதற்கு ஆன செலவு மருந்து உட்பட ரூ. 56 மட்டுமே. ஆகவே, ரூ. 104 செலவு மிச்சம்தானே. ஆகவே, விவசாயிகள் கம்பிற்கு களை எடுக்க இரசாயனக் களைக் கொல்லியை உபயோகப்படுத்தி செலவைக் குறைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. விதைகளைக் கெடாமல் பாதுகாக்க ஒரு புதிய முறை!

பயிர் அறுவடைக்குப்பிறகு உழவர்கள் விதைக்கெனச் சேமித்து வைப்பது வழக்கம். அவ்வாறு சேமித்து வைக்கும்போது பூச்சிகள் தாக்கி கெட்டுப்போவதுண்டு. அவ்வாறு கெடாவண்ணம் பாதுகாப்பது எப்படி எனத் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின்கீழ் உள்ள மதுரை வேளாண் கல்லூரி பூச்சியியல் துறையில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. நெய்வேலியில் கிடைக்கும் வெண் களிமண் பரிசோதனைக்கென எடுத்துக் கொள்ளப்பட்டது. முதலில் இவ்வெண் களிமண்ணை அமிலம் வெப்பம் கொண்டு ஊக்குவிக்கப்பட்டது. இவ்வாறு ஊக்குவிக்கப்பட்ட களி மண்ணை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் எனத் தட்டைப் பயறு (காராமணி) விதையுடன் கலக்கப்பட்டது. இதனால் தட்டைப் பயறு விதையைத் துளைக்கும் வண்டிலிருந்து 225 நாட்களுக்குப் பாதுகாக்க முடிந்துள்ளது. 'பாரத்தியான்', 'டி. டி. டீ' தூள் போட்டுப் பாதுகாத்தால் இவ்வண்டிலிருந்து 125-165 நாட்கள்தான் பாதுகாக்கமுடியும். மக்காச்சோளம் விதையுடன் இக் களிமண்ணை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் கலந்து வைத்ததில் 150 நாட்களுக்கு வண்டுகள் தாக்கா வண்ணம் பாதுகாக்கப்பட்டது.

இந்த மண்புழுக்கள் சிவப்பு நிறமாக 5 செ. மீ.-7 செ. மீ. (2 அங்குலம் முதல் 3 அங்குலம்) நீளமாயும், நூல் போல் சன்னமாயும் இருக்கும். நெல் நாற்றை நட்டவுடன், நாற்றைச் சுற்றி 4 செ. மீ. உயரத்திற்கு மண்ணைத் தள்ளிவிடும். இவ்வாறு நாற்றைச் சுற்றி 4 செ. மீ. உயரத்திற்கு மண் அணைத்து நாற்றுக்களை இறுக்கித் தூர் விடாமல் செய்து விடுகின்றன. இந்த மண் புழுக்கள் நெற் பயிரின் வேர் பாகத்தில் அதிகமாகக் காணப்படுகின்றன. இவ்வாறு தூர் கட்டாமல் போவதனால், பயிர் வளர்ச்சி அடையாமல் மகசூல் குறைந்துவிடுகின்றது.

இதனைத் தடுக்கச் செய்த ஆராய்ச்சியில், 'என்டோசல்பான்' 4 சதக் குருணைகளை எக்டேருக்கு 25 கிலோ வீதம் போட்டதால் நல்ல பலன் கிடைத்தது. மண் புழுத் தொல்லையைக் கட்டுப்படுத்தியது மட்டுமல்லாமல், நெற் பயிர் முழுவளர்ச்சி அடைவதற்கும் இம்முறை உதவி செய்தது.

6. சூரியகாந்தியில் அதிக மகசூல் பெற வழிகள்!

சூரியகாந்தியில் பல இரகங்கள் உள்ளன. அவற்றை கோவை மாவட்டத்திற்கு ஏற்றதா எனப் பரிசோதனைச் செய்ததில் 'சன் ரைஸ்' (Sun Rise) என்ற இரகம் ஏற்றது எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மாத இடைவெளியில் ஆண்டு முழுவதும் விதைத்து மகசூலைப் பார்த்ததில், ஆகஸ்ட், ஜனவரி மாத விதைப்புகள் அதிக மகசூலைக் கொடுத்தன. வரிசைக்கு வரிசை 45 செ. மீ. இடைவெளியிட்டு நடுதல் நல்லது எனவும் கண்டு பிடித்துள்ளார்கள். மண்ணின் ஈரத்தன்மை 60 சதவீத அளவு இருக்கும்படியாக நீர்ப்பாய்ச்சுதல் வேண்டும் எனவும் கண்டு பிடித்துள்ளார்கள்.



7. நெல்லுக்கு யூரியா தெளிப்பதால் அதிக இலாபம்!

'ஐ. ஆர். 20' நெல்லில் யூரியா உரத்தைத் தெளித்தால் மகசூல் அதிகரிக்கிறதா எனப் பரிசோதித்து பார்த்ததில், 10.5 சதவீதம் அதிக மகசூல் கண்டுள்ளது எனக் கண்டுபிடித்துள்ளார்கள். எக்டேருக்கு 125 கிலோ தழைச் சத்து (625 கிலோ அம்மோனியம் சல்பேட்) அடியுரமாகவும், 75 கிலோ தழைச்சத்து (375 கிலோ அம்மோனியம் சல்பேட்) மேலுரமாகவும் போட்ட நெல்லின் மகசூலை, யூரியா தெளித்த நெல்லுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது. எக்டேருக்கு 625 கிலோ அம்மோனியம் சல்பேட் அடியுரம் போட்டு அத்தோடு தூர்கட்டும் பருவத்திலும், கதிர் வெடிக்கும் பருவத்திலும் 1 சத யூரியா தெளிக்கப்பட்டது. இவ்விரண்டு முறைகளையும் ஒப்பிட்டுப் பார்த்ததில் யூரியா தெளித்த வயலில் 10.5 சதவீதம் அதிக மகசூல் கிடைத்துள்ளதுடன், உரச் செலவும் குறைகிறது என்பது தெளிவாகியுள்ளது.

8. சிறந்த தீவனப் புல்!

தீவனப் புல்லில் கம்பு×நேப்பியர் வீரிய ஒட்டு என்ற புல்லினத்தில் ஏழு இரகங்கள் உள்ளன. அவற்றில் எது நல்ல மகசூல் தரும் என கோவையில் ஆராய்ச்சி செய்தார்கள். அவற்றில் ஹாதியானாவில் இருந்து கொண்டு வந்த 'என். பி. 21' (N. P. 21) என்ற வீரிய இரகமும், தார்வாரிலிருந்து கொண்டு வந்த 'காமதேனு' என்ற இரகமும் அதிக மகசூல் கொடுத்தன. எக்டேருக்கு 'என். பி. 21' இரகம் 27.80 டன் பச்சைப் புல்லையும், 'காமதேனு' இரகம் 26.95 டன் பச்சைப் புல்லையும் ஒரு அறுப்பில் தந்தன.



சிறந்த தீவனப் புல் - என்.பி.21

9. ராகியில் குறைந்த செலவில் களைகளை ஒழிக்கும் முறை!

ராகி சிறு தானியங்களில் ஒன்று. ராகிப் பயிரில் கோ. 1, கோ. 7, கோ. 10 போன்ற பல ரகங்கள் விவசாயிகள் மத்தியில் பிரபலமடைந்துள்ளன. அவற்றில் கோ. 10 ரகம் கடைசியாக வெளியிட்ட உயர் விளைச்சல் இரகமாகும். இது ஒரு குறுகிய காலப் பயிர். இப்பயிரில் களை எடுக்காவிட்டால் மகசூல் வெகுவாகப் பாதிக்கப்படும். ஆதலால் ராகிப் பயிருக்கு களை எடுப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

களைகளை களைக்கொத்தியோ அல்லது கைகொண்டு பிடுங்கி எறிதலோ வழக்கமாகத் தொன்று தொட்டுக்கையாளும் முறை. களை கொல்லி என்னும் இரசாயனப் பொருள் கொண்டு அழிக்கும் முறை தற்கால நவீனமுறை. கூலி ஆட்கள் கொண்டு களை எடுத்தால், இலாபமா அல்லது களைகொல்லி உபயோகித்தால் இலாபமா என தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கி வரும் பாண்டிச்சேரியில் உள்ள 'கிரிஷி விக்யான் கேந்தரா' என்ற பயிற்சி நிலையத்தில் ஆராய்ச்சி செய்தார்கள். களைகள் முளைக்கும் முன்னே அடிக்கப்படும் மருந்தான வீடோன் 1.5 லி/எக்டேர்+டோக் ஈ25 சதம் 3.5 லிட்/எக்டேர் என்ற மருந்துக் கலவைகளை ஒரு பாத்தியிலும், கிரமோக்ஸோன் 1.5 லி/எக்டேர்+பெர்னுக்ஸோன் 0.75 கிலோ/எக்டேர் மறு பாத்தியிலும் தெளித்துப் பரிசோதித்துப் பார்த்தார்கள். களைகள் 80-82 சதவீத அளவு மேற்கூடிய மருந்துகளால் கட்டுப்படுத்தப்பட்டன. களை எடுக்காத பாத்தியில் எக்டேருக்கு 1,663 கிலோ என்ற அளவில்தான் மகசூல் கிடைத்தன. களைக்கொல்லி அடித்தப் பயிரில் மகசூல் எக்டேருக்கு முறையே, 1,899கிலோ 2,066 கிலோ என்ற அளவில் கிடைத்தது. களை கொத்தி கொண்டு களை எடுத்த பயிர் எக்டேருக்கு 1,827 கிலோ கொடுத்தது.

களைகொல்லி அடித்ததற்கானச் செலவு :

முதல் கலவை:—

	ரூபாய்
1.5 லிட்டர் வீடோன் விலை	30.00
3.5 லிட்டர் டோக் ஈ 25ன் விலை	70.00
மொத்தம்	100.00

இரண்டாவது கலவை:—

1.5 லிட்டர் கிரமோக்ஸோன்	60.00
0.75 கிலோ பெர்னுக்ஸோன்	15.00
மொத்தம்	75.00

களைக் கொத்தி கொண்டு களை எடுத்ததற்கு ஆன செலவு ரூபாய்	240.00

களை கொல்லி உபயோகித்ததால் களை எடுக்க ஆகும் செலவில் ரூ. 145 முதல் 165 வரை மிச்சம். மகசூலும் 73 கிலோ முதல் 243 கிலோ வரை அதிகம் கிடைக்கிறது. ஆதலால் ராகிப் பயிரில் கையால் களை எடுப்பதைவிட களை கொல்லி கொண்டு களைகளை ஒழிப்பதே சிக்கனம்; இலாபத்தைத் தருவதும்கூட!

ஆகவே, ராகிப் பயிரில் களைகளை ஒழிக்க களைகொல்லிகளையே உபயோகியுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்.

நிழல் 7

பட்டுக்கோட்டை குமாரவேல்

திறந்த அறை இருண்டு கிடந்தது. இரண்டு மூன்று முறை குற்றவாளிக்கு எச்சரிக்கை கொடுத்தும் வெளியே வரவில்லை. கதவு மறைவில் குற்றவாளி துப்பாக்கியோடு மறைந்து நிற்பான் என்று துப்பாக்கி ஏந்திய காவலர்கள் விளக்கொளியோடு, அறைக்குள் பாய்ந்தார்கள். அறைக்குள் யாருமில்லை. அறைக்குள் சென்று குற்றவாளியைக் காணாத காவலர்கள் அங்கு இன்னொரு கதவு பூட்டியிருக்கிறது என்று காவலர் வந்து சொல்ல ரவி திகைத்தார். அவருடைய சந்தேகக்கண் மேகநாதன் மனைவி மரகதத்தையும் அவள் பின்னால் நின்ற வேலையாள் மாரிசாமியையும் உற்றுப் பார்த்தது.

''மாரிசாமி, அந்தச் சாவிக் கொத்தை சப் இன்ஸ்பெக்டரிடம் கொடு. இந்த பங்களாவையே அவர்கள் சோதனை செய்யட்டும்'' என்று மாரிசாமிக்கு உத்தரவிட்ட மரகதம் உள்ளே சென்றுவிட்டாள். மாரிசாமி தன்னிடமிருந்த சாவிக்கொத்தை சப்-இன்ஸ்பெக்டர் ரவியிடம் சிரித்துக் கொண்டு கொடுத்தான். ரவி சாவிக்கொத்தை மாரிசாமியிடமிருந்து வாங்கினார். மாரிசாமியும் உள்ளே சென்று விட்டான். ரவி வாங்கிய சாவிக் கொத்தை, தன்னுடன் வந்த காவலர்களிடம் கொடுத்து. பங்களாவைச் சோதனையிடச் சொன்னார்.

மயங்கிக் கிடந்த மணமக்களை மருத்துவ மனையில் பார்க்கக் காரில் பறந்து சென்றார் ரவி. மணமக்களைப் பரிசோதித்த டாக்டர்களைப் பார்த்தார். அவர்கள் கொடுத்த குறிப்புப்படி மணமகளுக்குப் பலமான நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. மூளை நரம்புகளும் முறுக்கேறியிருக்கின்றன என்று தெரிய வந்தது. மணமக்களை அதற்கான சிறப்பு மருத்துவரிடம் அனுப்பச் சொல்லிவிட்டு, கோவையிலுள்ள மேகநாதனைச் சந்திக்கக் காரில் புறப்பட்டார். மேகநாதனும் காரில் வந்து கொண்டிருந்தார். மேகநாதனின் காரை நிறுத்தி அவரைக் கோவைக்கே திரும்ப அழைத்துப் போனார். ரவியின் காரை மேகநாதனின் கார் பின் தொடர்ந்து சென்றது. மேகநாதன் வீட்டில் ரவியின் கார் நின்றது. மேகநாதனும் அவர் காரிலிருந்து இறங்கினார். அவரைப் பின்தொடர்ந்து அவர் தாய் மங்களமும் இறங்கினாள்.

மேகநாதனின் பார்வையாளர் அறையில் ரவியும் மேகநாதனும் உட்கார்ந்தார்கள்.

''என்ன மிஸ்டர் மேகநாதன்?'' சப்-இன்ஸ்பெக்டர் ரவியின் அதிகாரமான அந்தக் கேள்வியில் பல அர்த்தங்கள் இருந்தன. அந்த பங்களாவில் நடந்து வரும் கொலைகளுக்கு நீதான் உடந்தை என்று மீண்டும் மேகநாதனைக் குற்றம் சாட்டுவது போன்று இருந்தது.

''உங்கள் மனைவி''......என்று பேச்சைத் தொடர்ந்தார் ரவி.

மேகநாதன் அதைக் கேட்டுத் திகைத்தார்.

''நேற்று உங்கள் பங்களாவிற்கு வந்திருந்த மணமக்களைக் கொலை செய்ய முயன்றது உங்கள் மனைவி மரகதம்தான் என நான் முடிவு செய்கிறேன். ஆனால் கையும் களவுமாக உங்கள் மனைவி மரகதத்தைக் கைது செய்ய முடியவில்லை.''

''குற்றவாளி யார் என்று தெரிந்து கொள்ளாமல், என்னையும் என் மரகதத்தையும் குற்றவாளி என்று முடிவு செய்வது சட்டப்படி சரியல்ல. அதிலும் ஊட்டியில் இருக்கும் என் பங்களாவில் நான் இரவில் தங்குவது கூடக் கிடையாது. ஆகையால் எந்த வகையிலும் நான் குற்றவாளி அல்ல இன்ஸ்பெக்டர்; நான் குற்றவாளி அல்ல.'' உணர்ச்சி வயப்பட்டு மேகநாதன் பதில் சொன்னார்.

''கொலை நடந்த பங்களா உங்களுடையது.''

''உண்மை, மறுக்கவில்லை.''

''கொலை செய்ய முயன்ற பெண் உங்கள் மனைவி.''

''என் மனைவியா! என்னால் நம்ப முடியவில்லை. குற்றம் செய்ய முயன்றவர் யாராக இருந்தாலும் நீங்கள் உடனே கைது செய்திருக்கலாமே.?

''மாயமானைப்போல உங்கள் மனைவி என் முன்னால் வேறொரு பெண்ணாக வந்து நின்றார்கள். அதனால் கைது செய்ய முடியவில்லை. ஆனால் உங்கள் பங்களாவில் இருந்து எங்கும் போக முடியாதபடி காவல் வைத்திருக்கிறேன். ஹவுஸ் அரஸ்ட் செய்திருக்கிறேன்.''

''மாயமான் என்றால்?''

''நான் கைது செய்ய முயன்ற பெண்ணும் உங்கள் மனைவியும் ஒரே உருவம். அவள் என்னிடம் இருந்து தப்பி மாயமாய்மறைந்து கொண்டாலும் அதே பங்களாவில்தான் இருக்கிறாள்.''

என் மனைவி மரகதத்தைப் போல சாயல் உள்ள பெண் என் பங்களாவில் மறைந்து கொண்டாளா! இதைக்கேட்டு ஆச்சரியப் படுகிறேன். அதிர்ச்சி அடைகிறேன் இன்ஸ்பெக்டர். நீங்கள் சொன்ன கொலை முயற்சிக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. மிஸ்டர் ரவி. என்னை நம்புங்கள்.'' மேகநாதன் உடல் நடுங்க உள்ளம் துடிக்கச் சொன்னார்.

''இந்தக் கொலைக்கும் உங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் இதே பங்களாவில் இதற்கு முன் நடந்த கொலைகள் அத்தனையும் உங்கள் திட்டப்படி நடந்தது தானே?''

''நான் எதற்காகக் கொலை செய்ய முயற்சிக்க வேண்டும்? என்னிடம் செல்வமில்லையா? செல்வாக்கில்லையா?''

''இரண்டும் இருப்பதால்தான் கொலை செய்வதை நீங்கள் ஒரு கலையாகக் கொண்டிருக்கிறீர்கள் என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.''

''இல்லை, இன்ஸ்பெக்டர் இல்லை. நான் கொலைகாரனில்லை. கொலை செய்யும் கலை எனக்கோ என் குடும்பத்திற்கோ எந்த நாளிலும் இருந்ததில்லை.''

''குற்றம் புரிந்தவர்களின் மனம் அவர்களைக் குற்றவாளி என்று சுட்டிக் காட்டினாலும் அவர்கள் தாங்கள் செய்தது குற்றம் தான் என்று ஒப்புக் கொள்வதில்லை. அதிலும் நீங்கள் பணக்காரர், செல்வாக்கு மிகுந்தவர்.''...

''பணத்தையும் செல்வாக்கையும் பணம் சம்பாதிப்பதில் நான் பயன்படுத்தி இருக்கிறேனே தவிர குற்றம் செய்யவோ செய்த குற்றத்தை மறைக்கவோ முயன்றதில்லை.''

''நடந்த கொலைகளை நீங்கள் மறைத்திருந்தாலும் இப்போது நடந்த கொலை முயற்சி உங்கள் திட்டப்படி நடந்தது என்று நான்

குற்றம் சாட்டுகிறேன். மணமகன் விநாயகம் குளியலறையில் பிணமானது போல உங்கள் பங்களாவில் பல கொலைகள் இதற்கு முன் நடந்திருக்கிறது என்று விசாரணையிலே தெரிய வந்திருக்கிறது. தொடர்ந்து பல கொலைகளை ஒரே இடத்தில் செய்த குற்றவாளியைக் கண்டு பிடிக்க நானே திட்டமிட்டேன்.''

எனக்குத் துணையாகத் துப்பறியும் காவல் அதிகாரிகளைக் கொண்டு வடநாட்டு மார்வாடி திருமணக் கோஷ்டி ஒன்றைத் தயார் செய்தேன். மணமக்களாக அங்கு வந்து மரகதத்தின் கொலை முயற்சியிலிருந்து தப்பித்தவர்கள், குற்ற இலக்காவிற்காக நடிக்க வந்த நடிகர்கள். அவர்களின் முதல் இரவுக்காகத்தான் உங்கள் பங்களாவையே எடுத்து மாறுவேஷத்திலே காத்திருந்தேன்.''

''உங்கள் வேலையாள் மாரிசாமி இன்ஸ்பெக்டர் புண்ணியகோடியிடம் சொன்னபடி முதலில் நள்ளிரவில் மின் விளக்கு அணைந்தது. திடீரென்று அங்கு பேய்க் காற்று வீசியது. அதைத் தொடர்ந்து மயக்கும் மணம் பரவியது. மூச்சுத் திணறியது. என்னை மறக்கும் மயக்க நிலை. எந்த மயக்கத்தையும் சமாளிக்கும் தற்காப்பு முறைகள் எனக்குத் தெரிந்திருந்ததால் சமாளித்து அந்த இருட்டில் மறைந்திருந்தேன்.''

''வழக்கம்போல மணமகளைக் கொலை செய்ய வந்த உங்கள் மனைவி மரகதத்தைக் கையும் களவுமாகப் பிடித்துப் போராடிக் கைது செய்திருக்கிறேன்.''

''மாயமாகை மரகதம் பட்டதால் அவளை ஹவுஸ் அரஸ்ட் செய்திருப்பதாகச் சொன்னீர்களே?''

உங்கள் மன நிலை அறிய நான் திட்டமிட்டுச் சொன்ன பொய். இப்பொழுது சொல்லுங்கள். உங்கள் பங்களாவில் நடந்திருக்கும் கொலைகளுக்கும் உங்களுக்கும் சம்பந்தமில்லையென்றால், உங்கள் மனைவி இந்தக் கொலைகளை ஏன் செய்ய வேண்டும்?''

''ஒரு பெண்ணை வாழ வைக்க வேண்டிய பெண் எதற்காக இந்தக் கொலை முயற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும்? தங்கள் மனைவி இதுவரை செய்ததாகச் சொல்லும் கொலைகளுக்கும் நேற்று நடந்த கொலை முயற்சிக்கும் யார் காரணம்? யார் போட்ட திட்டம்? உண்மையை மறைக்காமல் சொல்லுங்கள்.'' சப்-இன்ஸ்பெக்டர் ரவி கண்டிப்பான குரலில் கேட்டார்.

''சொல்கிறேன் இன்ஸ்பெக்டர். என் மனைவிதான் இங்கு நடந்திருகக்கும் கொலைகளுக்கெல்லாம் காரணம் என்று எனக்கு உண்மையாகவே தெரியாது..... கொலை செய்யும் முயற்சியில் அவள் ஈடுபட்டிருந்தபோது கைது செய்திருக்கிறீர்கள். அவள் கொலைக் குற்றவாளியாகக் கைது செய்யப்பட்டதைப் பார்த்து நானே அதிர்ச்சி யடைகிறேன். நான் சொல்லும் வாக்குமூலத்தைக் கொண்டு என் பங்களாவில் நடக்கும் சம்பவங்கள் கொலையா தற்கொலையா? நடக்கும் கொலைகளுக்கு யார் காரணம் என்று நீங்களே முடிவு செய்யுங்கள்.'' மேகநாதன் மனம் நொந்துபோய் சொன்னார்.

''அப்படியென்றால், விநாயகத்தைக் கொலை செய்தவன் சந்திராவைக் காதலித்த சேகர்தான் என்று நீங்கள் முன்பு வாக்குமூலம் கொடுத்தது?''

''சேகர் சந்திராவைக் காதலித்தது உண்மை. காதலில் தோல்வி கண்ட சேகர் அவன் அடைய முடியாத சந்திராவை விநாயகம் அடையக் கூடாது என்று கொலை செய்திருக்கலாம் என்ற சந்தேகம்தான்.''

''ஆதாரமில்லாமல் ஒருவர் மீது கொலைக் குற்றம் சாட்டுவது பெரிய குற்றம். இது உங்களுக்குத் தெரியாதா?''

''ஒருவர் மீது மற்றொருவர் ஆதாரமில்லாமல் குற்றம் சாட்டுவது தவறுதான். ஒப்புக் கொள்கிறேன்.''

''ஆனால் உங்கள் மனைவியை மட்டும் கொலைகாரி என்று குற்றம் சாட்ட உங்கள் மனம் இடம் தரவில்லை. அப்படித்தானே?''

''நடந்த நிகழ்ச்சிகளை என் கண்ணால் பார்க்காததால் என் மனம் என் மனைவி மீது குற்றம் சொல்ல மறுத்து விட்டது. அவள் கொலைகாரிதான் என்று கையும் களவுமாக நீங்கள் கைது செய்த பிறகு அவள் குற்றவாளி அல்ல என்று நான் எப்படிச் சொல்ல முடியும்?''

''உங்கள் மனைவியைக் குற்றவாளி என்று நீங்கள் ஒப்புக் கொண்டாலும் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் உங்கள் மனைவி செய்த கொலைகளுக்கும், செய்யும் கொலை முயற்சிகளுக்கும் நீங்கள் உடந்தையாக இருக்கிறீர்கள் என்று நான் குற்றம்



சாட்டுகிறேன். உங்களையும் கைது செய்கிறேன். ஹெட் கான்ஸ்டேபிள்! மிஸ்டர் மேகநாதனைக் கைது செய்யுங்கள்.''

மேகநாதன் சிலையாக நின்றார். ''மேகநாதனைக் கைது செய்யாதீர்கள். மேகநாதனைக் கைது செய்யாதீர்கள். அவன் மரகதத்தை மனைவியாக ஏற்றுக் கொண்டதைத் தவிர வேறு எந்தக் குற்றமும் செய்யவில்லை. அவன் குற்றவாளியல்ல. மரகதம் தான் குற்றவாளி. அவள்தான் இத்தனை கொலைகளுக்குக் காரணமாக இருக்கும் சூன்யக்காரி.'' மேகநாதன் காரிலிருந்து இறங்கிய வயதான மூதாட்டி பதறித் துடித்துச் சொன்னாள்.

''யார் நீங்கள்?'' சப்-இன்ஸ்பெக்டர் ரவி கேட்டார்.

நான் மரகதத்தின் மாமியார்-மேகநாதனின் தாய். மரகதம் என் அண்ணன் மகள். அவள் அழகில் மயங்கி அவள் அந்தஸ்திற்கு ஆசைப்பட்டு, அவளை ஏணிப்படியாக்கி வாழ்க்கையில் உயரலாமென்று திருமணம் செய்து கொண்டான் என் மகன் மேகநாதன்.''

''அப்படியானால் மரகதம்தான் கொலைகாரி. அவள்தான் பல கொலைகளுக்கும் காரணமாக இருந்த சூன்யக்காரி என்று நீங்கள் எப்படி நிரூபிக்க முடியும்?''

''மரகதத்தைக் கொலைகாரி என்று என்னால் நிரூபிக்க முடியாவிட்டாலும், அவள் சூன்யக்காரியாகத்தானிருக்க முடியுமென்று என்னால் நிரூபிக்க முடியும்.''

உடல் நடுக்கத்தோடு நின்ற அந்த மூதாட்டியைப் பக்கத்திலிருந்த நாற்காலியில் உட்காரச் சொன்னார் சப்-இன்ஸ்பெக்டர்.

மூதாட்டி பேசத் தொடங்கினாள். ''மரகதம் ஹைஸ்கூல்லே படிக்கிற போது, எங்க ஆதரவிலே எங்க வீட்டிலேயே முத்துங்கற பையனும் இருந்து படிச்சுக்கிட்டிருந்தான். அவன்எங்களுக்கு எட்டத்து உறவு. ஆனா ஏழைப் பையன். விடுமுறை நாள்லே, ஓய்வு நேரங்கள்ளே ரெண்டு பேரும் கேரம் விளையாடுவாங்க. சின்னப் பிள்ளைங்க விளையாடுதுன்னு நாங்களும் அதை விகல்பமா எடுத்துக்கலே. பொழுது போக்கா விளையாடத் தொடங்கின கேரம் விளையாட்டு காலப் போக்கிலே காதல் விளையாட்டாயிட்டுது. இவங்க ரகசியக் காதலை ஒரு நாள் என் கண்ணாலே பார்த்துட்டேன்..

விளையாட்டு வினையாயிட்டுதேன்னு நடந்ததை வெளியிலே சொல்லாம உடனே மரகதத்துக்குத் திருமணம் செய்துடணும்னு என் சகோதரர்கிட்டே சொன்னேன். மரகதத்தை என் மகன் மேக நாதனுக்கே திருமணம் செய்து வைக்க முடிவு செய்தோம். எங்க முடிவு தெரிஞ்ச மரகதமும் முத்துவும் எங்களுக்குத் தெரியாம ஊரை விட்டு ஓடிவிடத் திட்டம் போட்டாங்க. ஆமா, ஆமா அந்த முத்து மரகதத்துக்கு எழுதிய காதல் கடிதம் எங்கிட்டே கிடைச்சுட்டுது.''

''ஓ கோ!....அதைத் தடுத்து நிறுத்திட்டிங்க!'' சப்-இன்ஸ்பெக்டர் ரவி குறுக்கிட்டுப் பேசினார்.

''ஆமா. அந்த முத்து வீட்டுக்கு வந்ததும் கதவைச் சாத்திட்டு மரகதத்தை மறந்திடுன்னு சொல்லி அவனை அடிச்சுக் கண்டிச்சோம். உன்னை ஆதரிச்ச குடும்பத்துக்குத் துரோகம் செய்யலாமான்னு திட்டினேன். திருட்டுக் குற்றம் சுமத்தி போலீஸ்லே பிடிச்சுக் கொடுத்திடுவோம்னு பயமுறுத்தினோம். பேசிக் கொண்டிருந்த மூதாட்டிக்கு இருமல் வந்து விட்டது. களைப்பைப் போக்கிக் கொண்டு மறுபடியும் பேச ஆரம்பித்தாள்.

''ஒரு அறையிலே அவனைப் போட்டுப் பூட்டி ஆகாரம் கொடுக்காமக் கொடுமைப்படுத்தினோம்.''

''முத்து மரகதத்தை மறந்துட்டானா! இல்லே'' சன்-இன்ஸ்பெக்டர் மூதாட்டியின் பேச்சை மறித்துக் கேட்டார்.

''மரகதத்தை அவனாலே மறக்க முடியாதுன்னு சொல்லிட்டான். அவளைத்தான் கல்யாணம் செய்துப்பேன்னு பிடிவாதம் பிடிச்சான்.''

''மரகதம் என்ன சொன்னா? முத்துவை நீங்க கொடுமைப் படுத்தியது அவளுக்குத் தெரியுமா?''

''ஒரே வீட்டுக்குள்ளே இருக்கும் போது தெரியாமலா போகும்? அவளும் அவனை மறக்க முடியாதுன்னு பிடிவாதம் பிடிச்சா. ஆகாரம் தண்ணி குடிக்காமப் பட்டினி கிடந்தா.''

''அப்புறம் என்னநடந்தது?'' இன்ஸ்பெக்டர் பேச்சைத் தொடர்ந்தார்.

''இனிமேல் மரகதத்தை இந்த வீட்டிலே வைச்சிருக்கக் கூடாதுன்னு என் அண்ணன் ஊருக்கு அவளை அனுப்பி வைச்சுட்டேன். அவர் என் மகன் மேகநாதன் இருந்த கிராமத்துக்கு அனுப்பி வைச்சாரு.''

''பிரிவு மறதியை உண்டாக்கும்னு நினைச்சிங்க. அப்படித்தானே?''

''ஆமா, ஆனா அது திடீருன்னு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்துட்டுது. அன்று பொழுது விடிஞ்சு அந்த அறையைத் திறந்தோம்.''

''என்ன நடந்தது?' ஆவலோடு சன்-இன்ஸ்பெக்டர் கேட்டார்.

''அந்தப்பையன் முத்து நாங்க பூட்டி வைச்சிருந்த அறையிலேயே தூக்குப் போட்டுத் தொங்கிட்டான்.''

''இந்த விபரம் ஊருக்குத் தெரியாதா?''

''தெரியாது. விஷக்காய்ச்சலுக்கு பையன் பலியாயிட்டான்னு உண்மையை மறச்சு அடக்கம் செய்துட்டோம்.''

''அந்த முத்துவோட உற்றார் உறவினர் யாருமே இல்லையா?''

''அவன்தான் அனாதையாச்சே'

''இந்த விபரம் மரகதத்துக்கு மறுபடி தெரிஞ்சுதா? இல்லையா?''

''ஒரு வருஷத்துக்குப் பிறகு மரகதம் நடந்ததையெல்லாம் மறந்திருப்பான்னு வீட்டுக்கு அழைச்சுட்டு வந்து மறுபடியும் படிக்க அனுப்பினேன். பிரம்மை பிடிச்சது போல அங்குமிங்குமா திகைச்சுத் திகைச்சு நின்னா. நடந்தா. நடந்தவைகளை நினைவு படுத்திப் பாக்கறதுபோலப் புருவங்களை நெறிச்சுக் கண்களைச் சுருக்கிப் பார்த்தா. எனக்கு உள்ளூர பயம். இனிமே படிப்பு ஓடாதுன்னு முடிவு செய்து திருமணத்தை முடித்துவிட என் அண்ணன் மீண்டும், நல்ல வரன்களைத் தேடினார்.''

''என் அண்ணன் லட்சாதிபதி. அவன் சொத்துக்கெல்லாம் வாரிசு மரகதம்தான்னு தெரிஞ்சு வந்த எத்தனையோ நல்ல வரன்களையெல்லாம் வேண்டாம்னு மறுத்திட்டா. நானும் என் அண்ணனும் பொறுமை இழந்திட்டோம்.''

''எனக்குத் திருமணமே வேண்டாம். நான் முத்துவைத்தான் திருமணம் செய்துப்பேன்னு பித்துப் பிடிச்சவ போலப் பிடிவாதம் பிடிச்சா. செத்துப் போனவனை நினைச்சுச் சீரழிஞ்சு போகாதேன்னு கெஞ்சினேன். கொஞ்சினேன். கண்டிச்சேன்.''

''மரகதம் கேட்கவே இல்லே. எனக்கு ஆத்திரம் வந்திட்டுது. எனக்கு வந்த கோபத்திலே என்னையே மறந்து, அவளை வளர்த்த பாசத்தை மறந்து அடிச்சேன். உதைச்சேன். அவள் பிடிவாதத்தை மாத்திக்கவே இல்லே. நான் செத்தாலும் அந்த முத்துவைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு பல பேருக்கு முன்னாலே என்னை எதிர்த்தும் பேச ஆரம்பிச்சுட்டா.

(தொடரும்)

மறவாதீர்கள்:

உங்கள் மகள் ஒருநாள்

மணமகளாக அமர வேண்டியவள்!

திருமணம் என்ருலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்ருல்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கிஞல் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்ருேம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

	மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது	10 ஆண்டு இறுதியில் கிடைப்பது
	ரூ.	ரூ.	ரூ.
ரெக்கரிங் டிபாசிட்	5/-	375/-	...
	10/-	750/-	...
வளரும் மாதச் சேமிப்பு	5/-	...	825/-
	10/-	...	1,650/-

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002

241

அடிமையின் விடுதலை!

தர்மத்துக்கும், நியாயத்துக்கும் கட்டுப்பட்ட அந்த விவசாயிக்கு இப்போது வயது எழுபத்தைந்து! நான் இன்று அவரைப் பார்த்த போது அவர் முகத்தில் ஒரு புது ஒளி பிரதிபலிப்பதைக் கண்டேன். நேற்று, முந்தா நாள், போன மாதம், போன வருடம், பத்து வருடங்கள் முன்பு நான் கண்டிராத ஒளி அவர் முகத்தில் எப்படி இப்படித் திடீரென்று வந்துவிட்டது? வெளியே சிரிக்கிறவன் எல்லாம் உள்ளூற சந்தோஷமாகவே இருக்கிருன் என்று சொல்ல முடியுமா? ஆஞல் உண்மை உவகையில் உள்ளமே நிறைந்து பூரிக்கும்போது, கண்களில் அந்த நிறைவு ஒரு ஒளிப் பிழம்பாகப் பிரகாசிக்கிறதே ஏன்?

என்னுடைய ஆர்வம் என்னை மீறிப் போகவே நான் அவர் அருகே போய் உட்கார்ந்தேன். கிழவர் வெற்றிலை பாக்குத் தட்டை என் முன் தள்ளி வைத்தார்.

''என்னப்பா சௌக்கியமெல்லாம் எப்படி?''

''என் உடம்பு என்னிக்குமே வாடினதில்லை ஐயா. ஒன்று கேட்டா அதை என் யசமான் தம்முடைய நன்மைக்காகவும், சௌகரியத்துக்காகவும்பார்த்துக் கொண்டிருந்தார். ஆஞல் என் மனசுதான் இத்தனை வருஷமா நெருப்புலே தவிக்கிற புழு மாதிரி தவிச்சுட்டே இருந்தது. இன்னிக்குத்தான் அடுப்பிலேந்து விடுதலை கிடைச்சுது''.

''நீ என்னப்பா சொல்றே. எனக்கு ஒண்ணுமே புரியலே.... அடுப்புங்கறே, புழுங்கறே, விடுதலைங்கறே....கொஞ்சம் விவரமாகச் சொல்லேன்....''

''உங்களுக்குப் பொறுமை இருக்கா ஐயா... என் கதை பூரா சொல்லியாகணும்... நான் எப்படி அடுப்பிலே விழுந்தேன் என்பதைச் சொன்ஞத்தான் உங்களாலே புரிஞ்சுக்க முடியும்.''

''சொல்லு, கேட்கிறேன்.''

கிழவர் சொன்ஞர் :

''இப்போ எனக்கு வயசு சரியா எழுபத்தஞ்சு, அம்பது வருசம் முன்னே என் தகப்பஞரோடே நான் விவசாயத்திலே இருந்தேன். நான்தான் மூத்த பிள்ளை. கலியாணம் செய்ஞ்சு கொடுக்க மூஞு தங்கச்சிங்க. அம்மாவுக்கு க்ஷயம். ஒரு வருஷம் பூமி ஏமாத்திஞ, மூஞு வருஷம் பட்டினி கிடக்கிற நிலை.

'' நிலத்தை அடமானமா வைச்சு அப்பா வாங்கியிருந்த கடனைத் திருப்பிக் கொடுக்க முடியலை. வட்டி நாளுக்கு நாள் விஷமா ஏறி ஏறி, நிலத்தையே முழுங்கப் பார்த்துட்டிருந்தது. அந்த நிலம் போஞ எங்க வாழ்வே போயிடும் என்கிற நிலை. என்ன செய்யறுதுன்னு புரியாத குழப்பம்.

''அதைத் தீர்த்து வைக்க கிராமத்துப் பணக்காரர் ஒருவர் முன் வந்தார். எங்க கடனையெல்லாம் தீர்த்து வைக்கிறதாகச் சொன்ஞர். என் அப்பாவுக்கு ஒரே குஷி. பத்திரத்திலே அவர் காட்டின இடத்திலே கையெழுத் போடச் சொன்ஞர். அப்பாவும் நானும் போட்டோம். என்ன எழுதியிருக்குண்ணு புரிஞ்சுக்க எங்களுக்குப் படிக்கத் தெரிஞ்சாத்தானே? நான் முட்டாள், படிக்கத் தெரிஞ்சவங்களைக் கூட்டிட்டுப் போயிருக்கணும்.''

''என்ன எழுதியிருந்தது பத்திரத்திலே?'' என்று கேட்டேன்.

''சொல்றேன்... அதற்கு முன்ஞடி மத்ததையும் சொல்ல வேண்டாம்?''

கிழவர் தொடர்ந்தார் .....

''அம்மா க்ஷயத்திலே செத்துப் போஞள். அவளை எரிக்கப் பணம் தேவையாக இருந்தது. அந்தப் பணக்காரர் மேலும் கடன் கொடுத்தார். மறுபடியும் கையெழுத்து வாங்கிக் கொண்டார்.

''அப்புறம் ஆறு மாசத்திலே கிராமத்திலே ஒரு பையன் கிடைச்சான். என்னுடைய முதல் தங்கையைக் கல்யாணம் செய்து கொடுக்க நினைச்சுகேட்ட உடனே கடன் கொடுக்கிற புண்ணியவானைப் போய்ப் பார்த்தேன். அவர் சொன்னது என் தலையில் சம்மட்டியால் அடிக்கிற மாதிரி இருந்தது.''

''உங்க நிலத்தோடே மதிப்பு இன்னித் தேதியிலே மூவாயிரம் ரூபாய்... போன வருசம் ரெண்டாயிரத்து ஐநூறு ரூபாய் கொடுத்தேன். உன் அம்மா செத்தப்போ, நீ நானூறு ரூபா வாங்கினே. வட்டியைச் சேர்த்தா, நீ கொடுக்க வேண்டியது மூவாயிரத்து முன்ஞூத்து அறுபது ரூபா...இப்போ எவ்வளவு வேணும்?' என்ருர் எசமான்.

''கலியாணச் செலவுக்கு ஆயிரம் ரூபாய்....''

வெற்றியை நோக்கி....!



எல்லாரும்
இன்புற்றிருக்கச்
செயல்படுத்தும்
திட்டங்கள்
வெற்றி பெற்றிட
வலுமிக்க
அடித்தளம் அமைய

உதவுவதே
அளவான குடும்பம்.

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!

— குடும்பநலத்துறை,
தமிழ்நாடு அரசு.

தமிழரசு

''அப்போ கணக்கு நாலாயிரத்து முன்னூத்து அறுபது ரூபா ஆகும்... அதாவது நிலத்துக்கு மேலே ஆயிரத்து முன்னூத்து அறுபது ரூபா...''

''அப்படியா?''

''ஆமாம், நீயே கணக்கைப் பார்த்துக்கோ...''

''நீங்க சொன்னு சரித்தான்.''

''கவலைப் படாதே... இதை எப்படித் திருப்பித் தர்றதுன்னு தானே பார்க்கிறே? உன் நிலத்திலேயே நீ வேலை செய்... மாசா மாசம் பதினைஞ்சு ரூபாய் சம்பளம் தரேன். அதிலேந்து கடனை அடைச்சுடு... உன் அப்பாவும் வேலை செய்யலாம் என்றார்.''

''நான் யோசிக்கவில்லை. கடன் வாங்கினல் அதைத் திருப்பிக் கொடுக்கணும். அதுதான் தர்மம். வியர்வையைச் சிந்தித்தான் அதைச் செய்ய முடியும். இந்த மாதிரி இன்னொருவர் எங்க கிராமத்திலேயே செய்வதும் எனக்குத் தெரியும்.''

''பத்திரத்திலே கையெழுத்துப் போட்டு ஆயிரம் ரூபாயுடன் வீட்டுக்கு ஓடினேன். அப்பாகிட்டே, தங்கையின் கலியாணமான பிறகு விஷயத்தைச் சொன்னேன். அவ்வளவுதான்... அவர் அடிபட்ட மரமாகச் சாய்ந்து விட்டார்.''

''டேய் இனிமே இந்தக் குடும்பமே அவருக்கு அடிமைடா'' என்றார் என் அப்பா.

''நமக்கு அவர் சம்பளம் கொடுக்கிறார் அப்பா!'' என்றேன்.

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி யின்
ரொக்க சர்ட்டிபிகேட்டுகளின் (CASH CERTIFICATES)
மூலம் உங்களுடைய
முதலீடுகளுக்கு 17.75% வரை
வட்டி பெறுங்கள்

முதலில் செலுத்த வேண்டிய தொகை	ரு 100/-	ரு 250/-	ரு 500/-	ரு 1000/-
உரிய காலத்திற்குப் பிறகு பெறப் போகும் தொகை	ரு	ரு	ரு	ரு
36 மாதங்களுக்குப் பிறகு	131.80	329.50	659.00	1318.00
48 ,, ,,	144.60	361.50	723.00	1446.00
60 ,, ,,	158.50	396.25	792.50	1585.00
61 ,, ,,	168.00	420.00	840.00	1680.00
72 ,, ,,	184.50	461.25	922.50	1845.00
84 ,, ,,	204.30	510.75	1021.50	2043.00
96 ,, ,,	226.30	565.75	1131.50	2263.00
108 ,, ,,	250 60	626.50	1253.00	2506.00
120 ,, ,,	277.50	693.75	1387.50	2775.00

சிறு முதலீடு செய்வோர் தேவைக்கேற்ற எமது திட்டங்கள்:

உரிய காலத்திற்குப் பிறகு பெறப் போகும் தொகை	ரு 25/-	ரு 50/-	ரு 100/-	ரு 500/-	ரு 1000/-
முதலில் செலுத்த வேண்டிய தொகை	ரு	ரு	ரு	ரு	ரு
36 மாதங்களில் முடியும் டெபாசிட்டுகள்	18.97	37.94	75.88	379.40	758.80
48 ,, ,,	17.29	34.58	69.16	345.80	691.60
60 ,, ,,	15.77	31.54	63.08	315.40	630.80

முழு விவரங்களுக்கு எங்களை அல்லது உங்கள் அருகாமையிலுள்ள எங்கள் கிளைகளை அணுகவும்

TNSC BANK

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்
379, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு, சென்னை-600001
தந்தி: "URBANK" போன்: 20367 (3 லைன்கள்) டெலக்ஸ்: MS 7225

TNSC-124/76

"டேய் முட்டாள்; அதிலேயிருந்து என்னத்தடா திருப்பிக் கொடுக்க முடியும்? வட்டியைக் கூட ஈடு செய்ய முடியாதே!"

"பின் என்ன செய்யறது; தங்கச்சி புருசன் வீடு போக வேண்டாம்?" என்றேன்.

"அப்பா அன்றிலிருந்து சரியாச் சாப்பிடலே; சரியாத் தூங்கலே. ஆறு மாசத்திலே அவர் அம்மாவைத் தேடிப் போய்விட்டார்.

"இப்போது இரண்டு தங்கைகளை நான் காப்பாத்தியாக வேண்டும். சம்பளம் பதினைஞ்சிலிருந்து இருபதாக ஏறித்து. எசமானன் எங்களுக்குப் போட்ட சோத்துச் சிலவையும் கணக்கிலே எழுதிக் கொண்டார்.

"அப்புறம் நடந்ததெல்லாம் தொடர்கதைதான்."

"ரெண்டாம் தங்கைக்குக் கலியாணம். மூணாம் தங்கைக்குக் கலியாணம். மேலும் ரெண்டாயிரம் கடன். வாழ்நாள் பூராவும் அவருக்கு, அவர் சொன்ன வேலையெல்லாம் செஞ்சாத்தான் கடன் ஒழியும்னு தெரிஞ்சுது. இது தெய்வத்தின் கட்டளைன்னு செஞ்சேன்.

"எனக்குக் கலியாணமாச்சு. பெண்டாட்டியும் என் கூட வேலை செய்ஞ்சா. ரெண்டு பேருமா சம்பாதிச்சா சீக்கிரம் கடன் தீர்ந்துவிடுமேன்னு நான் நினைச்சேன்.

"ஆனா நான் நினைச்சது வெறும் சொப்பனம்தான்னு தெரிஞ்சது. எங்க சம்பளம் வட்டியைக் கூடத் தொடவில்லை. சாப்பாட்டுச் சிலவு வேறு. மேலே மேலே ஏறிட்டே போச்சு.

"எட்டு வருஷத்துக்கு அப்புறமும் இதே கதைதான். என்னுடைய ஏழு வயசுப் பையன் ரெண்டாம் கிளாஸ் படிச்சுட்டிருந்தான். ஒரு நாள் அவனை அழைச்சு வரச் சொன்னார் எசமானர்."

"கடனைத் தீர்க்க உன் பையனையும் அனுப்பு" என்றார்.

"அவன் படிக்கணுமே"ன்னு சொன்னேன்.

"உன் குடும்பமே என்கிட்டே வேலை செய்தாகணும்" என்றார்.

"நான் முடியாதுன்னேன். உடனே அவர் பத்திரத்தைக் காட்டினார்: அவருடைய குமாஸ்தா படிச்சுக் காட்டினார். கடன் இருக்கிற வரையில் என் குடும்பம் அவருக்காக உழைக்க வேண்டும் என்று இருந்தது: அந்தப் பத்திரத்தில் தான் நான் கையெழுத்துப்போட்டிருந்தேன். என் கழுத்தில் விழுந்த சுருக்கும் அதுவேதான்.

"1947-ஆம் ஆண்டு வெள்ளைக்காரன் வெளியே போனான். மகாத்மா காந்தியும், நேருவும் தேசத்துக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தாங்க. ஆனா எனக்கு?

"தேசத்தின் அடிமைத் தளை போயிட்டுது. ஆனா என் அடிமைத் தளை? எனக்கு யார் விடுதலை வாங்கித் தருவாங்க?

"உழைச்சு உழைச்சு, ரத்தத்தைச் சிந்திச் சிந்தி, ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் யசமானருடைய பிடியிலிருந்து விடுவிச்சுக்கலாம்னு நினைச்சேன். ஆனா முடியலே. பிடி, மேலே மேலே இரும்பா இறுகிக்கிட்டே வந்தது. என் குடும்பம் பெரிசாச்சு. எனக்குப் பெண் பிள்ளைகன்னு பிறந்தாங்க. கலியாணம், திருநாள்னு வந்தது. இதையெல்லாம் நிறுத்த முடியுமா, இல்லே விட முடியுமா?

"என் அப்பனைப் போல, என்னைப் போல, என் பிள்ளையைப் போல, அவனுடைய பிள்ளையும் எட்டு வயசில் வேலைக்குப் போனான். ஊர்ப் பிள்ளைங்களெல்லாம், நல்ல துணி கட்டி, நெத்திக்கு இட்டுக்கிட்டு, சிரிச்ச முகத்தோடே பள்ளிக்கூடம் போற போது, என் பேரன் நிலத்திலே களை பிடுங்கிக்கிட்டிருந்தான். என் வயித்தைப் பிடுங்கித் தின்னுச்சு.

"ஆனா என்ன செய்ய முடியும்? யசமானர் கடன் கொடுத்திருக்கிறாரே? அதைத் திருப்பிக் கொடுக்கணுமே. அதுதானே நியாயம், தர்மம். நான் தலை மறைவா ஓடலாம். ஆனா எங்கே எத்தனை நாளுக்குப் பெண்டாட்டி குழந்தைகளை விட்டிட்டு ஒளிஞ்சுப்பேன். அப்படியே ஒளிஞ்சுட்டிருந்தாலும் என் பிள்ளையைச் சும்மா விடுவாங்களா?

"இப்படித் தவிச்சுக் கொண்டிருக்கையில் திடீரென்று கிராம முன்சீப் ஓடி வந்தார். ரேடியோவிலே பிரதமர் இந்திரா காந்தியின் லட்சியங்களிலே ஒரு லட்சியமாக கொத்தடிமை முறையை ஒழிச்சுட்டதாகச் சொன்னார். நான் எசமானரைப் பார்க்க ஓடினேன்: அவர் இளைஞர்; இந்தக் காலத்து இலட்சிய புவன்; என்னை பார்த்ததும்; 'வாப்பா, சர்க்காரே சொல்லிட்டாங்க, நான் உன்னை உனக்கே கொடுத்துடணும்னு; நிலத்தையும் கொடுத்துடணுமாம். கடனும் தீர்ந்து போச்சாம்'' என்றார். என்னால் நம்ப முடியவில்லை. அவர் தொடர்ந்து, "இனி நம்ம தேசத்திலே கொத்தடிமை இல்லை. இந்திரா காந்தியின் லட்சியத்தைப் பூர்த்தி செய்யறது நம்முடைய கடமை. நான் இன்னிக்கே நிலத்தை உன் பெயருக்கு மாத்திட்டேன்" என்றார்.

"எனக்கு நிலம் கிடைச்சது. நான், என் பிள்ளை, பேரன், எல்லோரும் சந்தோஷத்திலே மூணு நாள் தூங்கலை!

"அப்புறம் ஒரு அதிகாரி எங்கள் வீட்டுக்கு வந்தார். எங்க விவசாயத்துக்கு வேண்டிய நிதி உதவி, பையன்களுக்கு வேண்டிய பள்ளி வசதி, கடைசியாக தெரியுங்களா, வீடு கட்டிக் கொள்ள இடத்தை ஒதுக்கி, அதைக் கட்டிக் கொள்ளக் கடனும் வேறு! என் பேரப் பிள்ளைங்க விவசாயத்திலே உழைச்சா, குறைந்த பட்சக் கூலி வேறு தராங்க. இதெல்லாம் இப்போ எங்களுக்குக் கிடைச்சிருக்குன்னு அந்த அதிகாரி சொல்லிவிட்டு, எங்களுடைய விவரங்களையெல்லாம் எழுதி எடுத்துக்கிட்டு போனார்.

"இப்போ தெரியுதுங்களா 'ஏன் என் கண்ணிலே ஒளி இருக்கு? முகத்திலே சந்தோஷம் இருக்குன்னு?" என்று அந்தக் கிழவர் கேட்டார்.

"இதுக்கு யார் காரணம்?" என்று நான் கேட்டேன்.

"நம்ம தெய்வம் மாதிரி வந்திருக்காங்களே, அம்மா... நம்ம இந்திரா காந்தி... அவங்களோட லட்சியம் ஜெயிச்சிட்டுது... பாரத தேசத்திலே என்னைப் போல லட்சக் கணக்கான பேர் இந்தக் கொத்தடிமை முறையிலே தவிச்சுட்டிருந்தாங்க... அவங்களுக்கெல்லாம் விடுதலை 'கிடைச்சுட்டது''.

"ஆம். கிழவர் சொல்வது சரித்தான். கொத்தடிமை எனும் அரக்கன் தீயில் கருகிவிட்டான். இருபது அம்சத் திட்டம் வெற்றிக்கும், சுபிட்சத்திற்கும் வழி காட்டுகிறது."

[நன்றி: பத்திரிகைத் தகவல் அலுவலகம், சென்னை.]



அடிமை விலங்கொடிப்போம்!

பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் அறிவித்த இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தில் ஒன்ருன கொத்தடிமை முறையை ஒழிப்பதில் தமிழ்நாட்டிலேயே சிறிய மாவட்டமாகிய நீலகிரி மாவட்டம் அரும்பெரும் சாதனைகள் நிறைவேற்றவிருக்கிறது.

மத்திய அரசால் நியமிக்கப்பட்ட 'பழங்குடி மக்கள் தாழ்த்தப்பட்டோர் நலக்குழு' நீலகிரியில் பழங்குடி மக்களாகிய பணியர்களிடம் அடிமை ஊழியம் நிலவுவதாகத் தெரிவித்தன் பேரில், பணியர்களின் அடிமை ஊழியத்தை ஒழிப்பதற்கென்று இப்பொழுது தமிழ்நாடு அரசு தக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

முக்கியமாக நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்தில் பணியர் என்ற பழங்குடி மக்கள் சுமார் 5,000 பேர் வாழ்ந்து வருகின்றனர். மிகவும் பின்தங்கிய மக்களாகிய இவர்களை அங்கு விவசாயம் செய்யும் சிலர், அடிமை ஊழியர்களாகத் தொன்றுதொட்டுப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர் என்று தற்பொழுது தெரிகிறது. இந்த இக்கட்டான நிலையில் உள்ள பரம ஏழைகளாகிய பணியர்களை அடிமை ஊழியத்திலிருந்து விடுவிப்பதற்கும், அடிமை ஊழியத்தை அறவே ஒழிப்பதற்கும், அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கும் தற்போது தமிழ்நாடு அரசு பெரும் முயற்சி எடுத்து வருகிறது.

பணியர்களுக்கு என்று சுமார் 100 ஏக்கர் நிலம் ஒதுக்கப்படுமென்றும், அவர்களுக்குத் தேவையான கல்வி, மருத்துவம் இன்னும் வீட்டு வசதிகள், விவசாயம் செய்வதற்கு வேண்டிய உதவிகள் அனைத்தும் அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு கொத்தடிமைத் தொழிலிலிருந்து விடுதலை பெற்றவர்களுக்கு மறுவாழ்விப்பு அளிப்பது சம்பந்தமான திட்டங்களை ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்துவதற்காக அதிகாரிகள் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

மத்திய தொழிலாளர் நல அமைச்சகச் செயலாளர் இக்குழுவின் தலைவராக இருப்பார். வேளாண்மைத்துறை, கிராம வளர்ச்சித் துறை, சமூகநலத் துறை, மத்திய உள்துறை அமைச்சகம், இத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட மற்ற துறைகள் ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் இக்குழுவில் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

திட்ட அமல் முன்னேற்றம் குறித்து மதிப்பீடு செய்வதற்காகச் சம்பந்தப்பட்ட கழகங்கள் துறைகளின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும், தலைமைச் செயலாளரைத் தலைவராகவும் கொண்ட மாநில மட்டக் குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என மாநிலங்களுக்கு யோசனை கூறப்பட்டது.

கொத்தடிமைத் தொழிலிலிருந்து விடுதலை பெற்றவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க, சம்பந்தப்பட்ட ஒவ்வொரு தொகுதியிலும் அதிகாரிகள் கொண்ட பிரிவு ஒன்றை ஏற்படுத்தும்படி மாநில அரசுகளிடம் யோசனை கூறப்பட்டுள்ளது.

கூட்டுறவுச்சங்கங்கள், வங்கிகள் காதி—கிராமத் தொழில்துறைகள், கால்நடை பராமரிப்புத் துறை, வேளாண்மைத்துறை ஆகியவற்றின் அலுவல்களை ஒருங்கிணைக்கும் பணியில் இச்செயல் பிரிவுகள் ஈடுபடும்.

விடுவிக்கப்பட்ட அடிமை ஊழியர்களுக்கு விரைவாக மறுவாழ்வு அளிப்பது, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஆகியவை பற்றிய விவரங்களை உடனடியாக அளிக்குமாறு மத்திய அரசு மாநிலங்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

விடுவிக்கப்பட்ட அடிமை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட அல்லது வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தின் மொத்தப் பரப்பு, விநியோகிக்கப்பட்ட மூலப் பொருட்களின் அளவு ஆகியவை பற்றியும், குழந்தைகளுக்கு இலவச கல்வி, இலவச மருத்துவம் போன்ற சமூகப் பணிகளை அளிப்பதற்கான நிருவாக ஏற்பாடுகளைப் பற்றியும் விவரங்கள் அளிக்குமாறு மாநில அரசுகளைக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

வீட்டு மனைகள், விவசாயத்திற்கான நிலங்கள் ஆகியவற்றை ஒதுக்குவது பற்றியும், விவசாயத்துக்குத் தேவையான மூலப் பொருட்களைப்பற்றியும் கவனிக்குமாறு மாநிலங்கள் முதலில் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தன. நிலம் கிடைக்காத பகுதிகளில் கால்நடை வளர்ப்பு, கோழிப் பண்ணை, கிராமத் தொழில், மீன் வளர்ப்பு அல்லது பட்டுப்பூச்சி வளர்ப்பு போன்ற விவசாயமல்லாத சில தொழில்களில் இந்த ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இத்திட்டங்களுக்கு ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்றும், அடிமை ஊழிய முறை இருக்கும் பகுதிகளைக் கண்டுபிடிப்பதற்கு மாநிலங்கள் விரிவான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்னும் சட்ட முறைகளின் வெளித் தோற்றத்திஞல் மறைக்கப்பட்டிருக்கும் எல்லா வகைக் கடன் அடிமை ஊழிய முறைகளையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வரவேண்டும் என்றும் மத்திய அரசு அறிவித்துள்ளது.

இருபது அம்சத்தின் நான்காவது அம்சமான அடிமை விலங்கை ஒடிப்போம் என்று சூளுரைத்து, இன்று தமிழ்நாடு மிக வேகமாகச் செயலாற்றி வருகின்றது. அதன் விளைவாக நாடு நல்வாழ்வை நோக்கிப் பீடு நடை போட்டு வருகின்றது.!

ஆளுநர் சுற்றுப் பயணம் அளித்துள்ள நன்மைகள்

மேதகு தமிழ்நாடு ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் கோவை மாவட்டத்தில் பிப்ரவரி 24, 25 ஆகிய இரண்டு நாட்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார். மக்கள் அவர் சென்ற வழியெங்கும் இருமருங்கிலும் கூடியிருந்து உற்சாகமான வரவேற்பளித்தனர். வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமப் பகுதிகளிலுள்ள மக்கள் தங்களுடைய குறைகளைப் பற்றிய மனுக்களை ஆளுநரிடம் சமர்ப்பித்தனர். ஆளுநர் அவர்கள் மக்களுடைய குறைகளைப் போக்கும் வகையில் அரசாங்க அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆணை பிறப்பித்துள்ளார்.

பாண்டியார் புன்னப் புழா திட்டத்தை அமுல்படுத்தி உடனடியாக பாசன வசதிகள் செய்து தரும்படி சில மனுதாரர்கள் கேட்டிருந்தனர். அதற்கான திட்டங்கள் பரிசீலனையில் இருந்து வருவதாகவும், நீர்ப்பாசன வசதி செய்து தருவதற்கான நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என்றும் ஆளுநர் கூறினர்.

கிணறுகள் வெட்ட கடன் வாங்கியிருந்தவர்களில் சிலர் 80 அடியிலிருந்து 100 அடி ஆழம் வரைத் தோண்டியும், தண்ணீர் கிடைக்காமல் மிகவும் சங்கடத்திற்குள்ளாயிருப்பதாக நிறைய மனுதாரர்கள் விண்ணப்பம் செய்திருந்தனர். அவர்களுடைய துயரம் தீரும் வகையில் ஆளுநர் இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுடைய கடன்கள் ரத்து செய்யப்படுமென்று அறிவித்தார்.

கூலிவேலை செய்யும் விவசாயிகளது கூலி உயர்த்தப்படுமென்றும், இதற்கான திட்டங்களை விரைவில் செயல்படுத்தப் போவதாகவும், நில உரிமையாளர்கள் எக்காரணந்தொட்டும் ஏழைமக்களை ஏமாற்றும் பிழைப்பு இனி நடக்காதென்றும் அறிவித்தார்.

நிறைய மனுதாரர்கள் போக்குவரத்துக்கான நல்ல சாலைகள் அமைத்துத் தரும்படி விண்ணப்பித்திருந்தனர். அவர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப மதகு அமைப்பதும், ஜல்லி ரோடு போடுவதும், பின்னர் எல்லாப் பருவகாலத்திற்கும் ஏற்றதுமான சாலைகள் அமைப்பதும் படிப்படியாக நிறைவேற்றப்படுமென்றும் அறிவித்தார்.

பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தின்கீழ் கோவை மாவட்டத்திலுள்ள இன்னும் சில பகுதிகளும் பயன்படும் வகையில் பாசனவசதி செய்துதரப்பட வேண்டுமென்று சிலர் விண்ணப்பம் செய்திருந்தனர்.

அதற்கு பதிலளிக்கும் வகையில் ஆளுநர் அந்தத்திட்டம் பரிசிலனை செய்யப்படுவதோடு மட்டுமல்லாது, அது ஏற்றுக் கொள்ளப்படும் நிலையிலும் இருக்கின்றது என்று அறிவித்தார். மற்றும் மலையடிவாரங்களிலுள்ள வறட்சியான பகுதிகளில் தண்ணீர் கிடைக்காமல் அவதிப்படும் மக்களுக்கு குளம் வெட்டி தண்ணீர் பெறும் திட்டத்தைக் கைவிட்டு, ஆழமானக் குழாய்க் கிணறு அமைத்து வேண்டிய அளவு தண்ணீர் கிடைப்பதற்கு உதவும் திட்டங்களே நிரந்தர திட்டங்களாக அமையுமென்றும், மேலும் அந்தமாதிரித் திட்டங்கள் குடிநீர்ப் பஞ்சத்தை நிரந்தரமாக போக்குவதோடல்லாமல், எதிர்காலத்தில் மக்களுக்கு நிலையான சொத்துக்களாக அமைந்திடுமென்றும், மக்களுக்கும் அரசு அலுவலர்களுக்கும் அறிவுரை தந்துள்ளார்கள். அதன்படி குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கானத் திட்டங்கள் உடனடியாக மேற்கொள்வதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. பாசன வசதிகளுக்குக்கூட ஆழமான குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டங்கள் உபயோகமானதாயிருக்குமென்றும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அரசாங்க அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பித்துள்ளார்.

விவசாயிகள் அரசாங்கத்திடமிருந்தோ அல்லது வேறு கூட்டுறவுத் துறைகள் மூலம் கடன் வாங்கியிருந்தாலோ அவர்கள் திருப்பித்தர வேண்டிய கால அளவு நீடிக்கப்படும். இருபோக தனியாரிடம் வாங்கிய கடன்களையும் ஒத்தி வைக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

தனியார் துறையில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் ஆளுநர் அவர்களை அணுகி தங்களை வேலைநீக்கம் செய்துவிட்டதாகவும், ஆதலால் தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் சட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனர். அதற்

கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்வதற்கான வழி வகைகள் செய்யப்படுமென்று ஆளுநர் அறிவித்தார்.

தமிழாசிரியர் பயிற்சி பெற்று வேலை கிடைக்காமலிருப்பவர்கள் சிலர், ஆளுநரிடம் வேலை தரும்படி மனுச் செய்திருந்தனர். இம்மாதிரியான நிலை எதிர்காலத்தில் உருவாகாத வகையில் கல்வித் துறை அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து, வேலைவாய்ப்பு அளிக்கும் சக்தியை அனுசரித்தே தமிழ்க் கல்லூரிகளில் இடம் ஒதுக்கப்படுமென்றும், படித்துப் பட்டம் பெற்றவர்கள் நிச்சயமாக வேலைவாய்ப்பு பெறுவதற்கான திட்டங்கள் உருவாக்கப்படுமென்றும் அறிவித்தார்.

சிறுதொழில் நிறுவனங்கள் அமைப்பதற்கான வழிமுறைகளை அரசாங்கமே ஆராயுமென்றும், அம்மாதிரி திட்டங்கள் நிறைவேற்றப்படுமானால் தொழில் நுட்பக் கல்வியில் தேர்ச்சி பெற்று வேலையில்லாத மாணவர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பு அளிக்க வழி ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

கண்பார்வையற்ற சிறுவர்கள் சிலர் ஆளுநரை அணுகி ஏதாவது தொழிற்கல்வி கற்றுத்தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். அவர்களுக்கு உதவித் தொகை கொடுத்து உடனடியாக கண் பார்வையற்றவர்கள் பள்ளியில் சேர்த்துக்கொள்வதற்கான ஆணையையும் பிறப்பித்தார். பள்ளியிலேயே அந்தச் சிறுவர்களுக்கு உணவு, உடை உறைவிடம் அளித்து தொழிற்கல்வி ஒன்றையும் அவர்களுக்குப் புகட்ட வேண்டுமென்று கட்டளை பிறப்பித்துள்ளார்.

மற்றும் சில முதியோர்கள் ஆளுநரை அணுகி, ஆதரவற்ற தங்களுக்கு பண உதவி அளிக்கும்படி கேட்டுக் கொண்டனர். அவர்களுக்குத் தலா ரூ. 25 வீதம் ஆளுநர் கொடுத்தார். அதோடு நில்லாமல், இனி மாதாமாதம் அவர்களுக்கு முதியோர் ஊதியம் தரப்படுமென்றும் அறிவித்தார்.

வெள்ளகோயில் கிராமத்தில் ஆளுநருக்கு மாலை அணுவதற்குப் பதிலாக மாலைகளுக்கு ஆகும் செலவை நிதியாகத் திரட்டி ஆளுநரிடம் அளித்தனர். அந்தப் பணத்தை கண் பார்வையற்ற சிறுவர்களுக்குக் கொடுத்தார். அங்குள்ள மக்கள் ரூ. 450 வசூல் செய்து ஆளுநரிடம் அளித்தனர். அந்தப் பணத்தை உடல் ஊனமுற்ற இரண்டு சிறுவர்களுக்குக் கொடுத்து, அவர்கள் தொழிற்கல்வி பயிலுவதற்கான ஏற்பாடுகளையும் ஆளுநர் செய்துள்ளார்.

நிர்வாகத்தில் லஞ்ச ஊழல்கள் பூண்டோடு கிள்ளியெறியப்படுமென்றும், இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு விட்டதென்றும் ஆளுநர் அறிவித்தார்.

அரசு ஊழியர்கள் பணியாற்றுவதில் இனி எந்தவிதமான குறுக்கீடும் இருக்காதென்றும், ஆகவே அவர்கள் பணியாற்றுவதில் இனி கால தாமதமாகாதென்றும் ஆளுநர் அறிவித்தார். பத்து ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் நிலவியிருந்த மலர்ச்சி, இனி திரும்பவும் கொண்டு வரப்படுமென்றும், மக்களுடைய துயர் துடைப்புப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்படுவதற்கு ஆவன செய்யப்படுமென்றும் ஆளுநர் உறுதியளித்தார்.

மக்கள் முகத்தில் இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற மகிழ்ச்சியும், அவர்களுடைய குதூகலமும் இதற்கு முன்பு அவர்கள் முகத்தில் இருந்ததில்லையென்றும், குடியரசுத் தலைவர் ஆட்சியே இந்த மகிழ்ச்சிக்குக் காரணம் என்றும், இதற்குப் பொது மக்கள் தனக்கு அளிக்கின்ற உற்சாக வரவேற்பொன்றே சாட்சியாகும் என்றும் ஆளுநர் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த சிறப்புப் பேட்டி யொன்றில் கூறிப்பிட்டார்.

வறட்சி நிவாரணத்திற்காக இதுவரையில் முந்திய அரசு செலவிட்டதையும், மத்திய அரசு கொடுத்த வறட்சி நிவாரண நிதி முறையாக செலவிடப்பட்டதா என்பதையும் இனி ஆராயப்பட்டு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் ஆளுநர் அறிவித்தார்.

அத்தியாவசியப் பண்டங்களின் விலைகுறைப்பு, நிலமற்றோர்க்கு வீட்டுமனை வழங்கிடும் திட்டம், கிராமப்புறங்களில் கடன் அடைப்பு மற்றும் கடன் ஒத்தி வைப்புத் திட்டங்கள், விவசாயிகளுக்கு கூலி உயர்த்தித் தரும் திட்டங்கள், குடிநீர் மற்றும் பாசன வசதி செய்துதரும் திட்டங்கள், அதிக வேலைவாய்ப்பினை அளித்திடும் திட்டங்கள்-அனைத்துமே பிரதமருடைய 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் சில அம்சங்களாகுமென்று ஆளுநர் அறிவித்தார்.



கோ-ஆப்டெக்ஸ் மக்கள் விரும்பும் வகைகள்! நியாயமான விலைகள்!

கோ-ஆப்டெக்ஸ் சேலைகள்,
அழகு மிளிரும் ஆரணங்குகள்!

ஆரணி, கும்பகோணம், காஞ்சிபுரம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம், மதுரை பருத்தி கைத்தறிச் சேலைகள், அச்சிட்ட சுங்கடி சேலைகள் மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்.



கோ-ஆப்டெக்ஸ்
படுக்கை விரிப்புகள்,
மலர்ப் படுக்கைகள்!

நேர்த்தியான நெசவு கைத்தறிப் படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணை உறைகள். உங்களுக்கு சொகுசு அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
துவாலைகள்,
தூய்மையான
துவாலைகள்!

சாதா, டர்கிஷ் வகைகள், மென்மையான மற்றும் ஈரத்தை உறிஞ்சும் வகைகள். உங்களது சுகாதாரத்துக்கு இன்றியமையாதவை!



கோ-ஆப்டெக்ஸ்
லுங்கிகள்,
வசதியானவை
நீடித்துழைப்பவை!

உங்கள் விருப்பத்துக்குகந்த சாதா, கோடிட்ட அல்லது கட்டமிட்ட பல வகைகளில்.

மற்றும் கைத்தறிப் பருத்தி வகைகள், வேட்டிகள், உடுப்புகளுக்கான துணிகள், அலங்காரத் துணிவகைகள்—குடும்பத்தினர் அனைவருக்குமே உகந்த முழுதும் புதிய வகைகள்.

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறியே வண்ணத்துப்பூச்சி

 பதிவு எண். M. 8676

சாதனை மிகு பத்தாண்டு



நாடு மீறுநடை போடுகிறது

சுய சார்பை நோக்கி
கட்டுப்பாடுடன் கூடிய சமூக
வாழ்வை நோக்கி
ஒருமைப்பாட்டை நோக்கி.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

அரசு - மிகவுயர்ந்த தரமான

போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது: தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை

யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ்
(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

அரசு -வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

857

தமிழக மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ரூபாய் 200 கோடி!

"தமிழ்நாட்டிற்கு, 1976–77-ஆம் ஆண்டின் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ரூபாய் 200 கோடி அளிக்க மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது."

"தமிழ்நாட்டின் வளர்ச்சித் திட்டம் விரைவுபடுத்தப்பட வேண்டும் என்று பிரதமர் விருப்பம் தெரிவித்திருக்கிறார். எனவேதான், திட்ட ஒதுக்கீடு அதிகரிக்கப் படுகிறது. தமிழ்நாட்டில் சராசரி நபர் முதலீடு அதிகரிக்கப்பட வகைசெய்யப் படவேண்டும் என்பது மத்திய அரசின் மனப்பூர்வமான விருப்பம் ஆகும்."

"தமிழ்நாட்டு மக்களுக்குத் தூய்மையான, திறமையான நிருவாகத்தை அளிப்பதே நமது முயற்சியாக உள்ளது."

—கே. பிரம்மானந்த ரெட்டி,
உள்துறை அமைச்சர்.

(மக்களவையில் 10-3-'76 அன்று கூறியது.)

தமிழரசு

மலர் 6. இதழ் 18.
16·3·1976

நல்ல முடிவுகளையே நாம் எடுப்போம்!

செய்திப் பத்திரிகைகள் மீதும். தனியார் மீதும் முன்பிருந்த தி.மு.க. அரசு தொடர்ந்திருந்த அவதூறு போன்ற வழக்குகளைத் திரும்பப் பெறுவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

கூட்டுறவுச் சங்கங்களில் கையாடல், மோசடி ஆகியவை தொடர்பான குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டு, பின்னர் முன்பிருந்த அரசினால் திரும்பப் பெறும்படி உத்திரவிடப்பட்ட வழக்குகள் யாவும் மீண்டும் விசாரிக்கப்படும். தவறுகள் நிரூபிக்கப்பட்டால் தவறுசெய்தோர்க்கு தண்டனை பெற்றுத் தரவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதாவது—காவல் துறையின் புலன் விசாரணை நடைபெற்று, பிறகு கடந்த ஜனவரி 31-ஆம் தேதியோ, அல்லது அதற்கு முன்போ திரும்பப் பெற உத்தரவிடப்பட்ட வழக்குகள் மறுபடி ஆராயப்படும்.

கூட்டுறவுச் சங்க மோசடி வழக்குகள் பல முந்தைய அரசினால் திரும்பப் பெற உத்தரவிடப்பட்டன. மிகப் பெருந் தொகைகள் மோசடி தொடர்புடையவை அந்த வழக்குகள்.

திருநெல்வேலி மாவட்டத்தில் இறவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள், சேலம் மாவட்ட இறவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள், தர்மபுரி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியில் பொய்யான பெயர்களில் கடன் தொகை வழங்கப்பட்டது ஆகியவை குறிப்பிடத்தக்க கூட்டுறவு முறை கேடு, ஊழல்களாகும்.

லஞ்ச ஊழல் நிர்வாகச் சீர்கேடு அல்லது முறைகேடு ஆகிய குறிப்பிட்ட குற்றச் சாட்டுகளுக்கு உள்ளான ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், கூட்டுறவுச் சங்க நிர்வாக அங்கங்கள் ஆகியவை கலைக்கப்பட்டு சிறப்பு அதிகாரியின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்படும்.

தி.மு.க. அரசினால் ரத்து செய்யப்பட்ட பரிசுச் சீட்டு திட்டத்தை மீண்டும் கொண்டு வரப்படுமா என்று கேட்கப்படுகிறது. இது பற்றி ஆராயப்படும்.

சிலை வைப்பது, நினைவாலயம் எழுப்புவது போன்றவற்றிற்குப் பொதுப் பணத்தைச் செலவிடுவது தேவையற்றது; விரும்பத்தகாதது என்று பிரதமர் அவர்களே கருத்துத் தெரிவித்திருப்பதால் புதிதாக அது போன்ற எதற்கும்செலவிடவோ, அனுமதி வழங்கவோ இயலாது. ஆனால், சமுதாயத்தின் பொது நலனுக்குப் பயன்தரக் கூடிய நினைவாலயங்கள் அமைக்க முன்வருவார்களேயானால் அவற்றின் தன்மை, பலன் ஆகியவற்றின் அடிப்படையில் அவை அமையலாம். நன்றாகவும் திறமையாகவும் நடைபெறும் கூட்டுறவு அமைப்புகள், உள்ளாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றைக் கலைத்துவிடும் எண்ணம் அரசுக்கு இல்லை; ஆனால், முறை கேடானவை பற்றி அரசு பரிசீலிக்கும்.

சென்னை நகரில், தங்களுக்கு வழங்கப்பட்ட 'ஸ்பிரிட்' லைசென்சை முறைகேடாகவும், தவறாகவும் பயன்படுத்தி வந்த ஆறு வியாபாரிகளின் உரிமம் (லைசென்ஸ்) ரத்து செய்யப்பட்டது. இது போல, வழங்கப்பட்ட உரிமத்தை முறை தவறிப் பயன்படுத்துவோர் தொடர்பாக அரசுக்கு வரும் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து தவறுகள் களையப்படுகின்றன.

மதுவிலக்கு பற்றி மறுபரிசீலனை உண்டா என்று கேட்பவர்கள் "தேசம் முழுவதும் மதுவிலக்கு அமல்படுத்தப்பட வேண்டும்" என்று பிரதமர் அவர்கள் கூறியதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

வெளியே விற்கப்படுகிற விலையைவிட அரசு நுகர் பொருள் வாணிபக் கடைகளில் (சிவில் சப்ளைஸ்) விலைகள் மிகவும் குறைவாகவே இருக்கிறது. ராகி வெளியில் கிலோ ரூ. 1.30 அரசாங்கக் கடைகளில் கிலோ ஒரு ரூபாய்தான். மிளகாய் வெளியே கிலோ ரூ. 8. ஆனால், இங்கோ ரூ. 5தான். எல்லாப் பொருள்களுமே அரசு நுகர் பொருள் வாணிபக் கடைகளில் குறைவாக இருப்பதால் அங்கே வாங்குவதுதான் பொதுமக்களுக்கு நல்லது.

வீட்டுவசதி வாரிய வீடுகள் கட்ட, அந்த வீட்டு நிலங்களுக்கு கொடுக்கப்பட்ட நஷ்ட ஈட்டுத் தொகை நீதிமன்ற உத்தரவின் காரணமாக அதிகமாகியதால் வீட்டின் விலையையும் அதிகரிக்க வேண்டியிருக்கிறது. நஷ்டமில்லாமலும், லாபமில்லாமலும் இவற்றை நடத்த வேண்டியிருப்பதால் வாடகையை உயர்த்தும்படி நிபுணர் குழு தெரிவித்ததால் வாடகையும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

ஐந்தாவது திட்டக் காலத்தில் சென்னை நகரிலும், புறநகர்ப் பகுதிகளிலும் வீட்டு வசதித் திட்டங்களுக்காக ஒரு கோடியே பத்து இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்காகக் கட்டப்படவிருக்கும் இந்த வீட்டு வசதித் திட்டத்திற்காகத் தொழிலதிபர்களுக்கு மொத்தச் செலவில் 50 சதவிகிதம் கடனும், 25 சதவிகிதம் உதவித் தொகையும் வழங்கப்படும். இந்த வீடுகள் அனைத்தையும் அரசே கட்டித் தரும். 'அருணா சுகர்ஸ்', 'கெமிக்கல்ஸ் அண்டு பிளாஸ்டிக்ஸ்', தமிழ் நாடு சிமெண்ட் தொழிற்சாலை, அரக்கோணம் ஸ்டீல் தொழிற்சாலை, சில மாவட்டக்கூட்டுறவுச் சர்க்கரைத் தொழிற்சாலைகள் ஆகியவற்றின் தொழிலாளர்களுக்காக வீடு கட்டித் தரும் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

ஈ. எஸ். ஐ. சந்தாத் தொகைகளை உரிய காலத்தில் செலுத்தாத தொழிலதிபர்கள் மீது முறைப்படி தொடர்புடைய துறைகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

—தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் 3—3—76-ல் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அறிவித்த கருத்துரையின் தொகுப்பு.

அரிசி விலையைக் குறைத்தோம்! அனைவருக்கும் மகிழ்ச்சி அளித்தோம்!!

நமது பிரதமர் அறிவித்த 20 அம்சத் திட்டத்தின் கீழ், அன்றாட வாழ்வுக்குத் தேவைப்படும் இன்றியமையாப் பொருள்களின் விலையைக் குறைத்திடுவதற்காகத் தமிழ்நாடு அரசு பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. தமிழக மக்கள் அனைவருக்கும் அன்றாடம் தேவைப்படுவது அரிசியாகும். எனவே, அரிசி விலையைக் குறைக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்தது. அதுபோலவே, மாவட்டங்களுக்குள்ளே ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நெல், அரிசி ஆகியவைகளைக் கொண்டு போவதற்கு இதுவரை இருந்து வந்த கட்டுப்பாட்டையும் தமிழ்நாடு அரசு நீக்கிவிட்டது. கொள்முதல் நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு நிறுத்தி விட்டது. தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள இம்முடிவுகளைப் பற்றி **மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு கே. கே. ஷா அவர்கள்** 10-3-76 அன்று பத்திரிகைச் செய்தியாளர்களிடையே பின் கண்டவாறு அறிவித்தார்.

அரிசி விலையைக் குறைத்தோம்!

மோட்டா ரகம், மற்றும் நடுத்தர ரக அரிசியின் சில்லறை விலை குறைக்கப்பட்டு ஒரே சீரான விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மோட்டா ரக அரிசி கிலோ ரூபாய் 1-80-க்கும் நடுத்தர ரக அரிசி கிலோ ரூபாய் 1-90-க்கும் இதுவரை விற்கப்பட்டு வந்தது. இவ்விரு ரகங்களின் விலை குறைக்கப்பட்டு கிலோ ரூபாய் 1-60 என்று விற்கப்படும்.

மாத வருவாய் 500 ரூபாய்க்கு மேற்பட்டவர்கள், இதுவரை எந்த ரக அரிசியை வாங்கினாலும் கிலோ ரூபாய் 2-50 வீதம் வாங்க வேண்டியிருந்தது. இனிமேல் அவர்களுக்கும் மோட்டா ரக, நடுத்தர ரக அரிசிகளை கிலோ ரூபாய் 1-60 வீதம் விற்கப்படும்.

சன்னரக அரிசியின் விலையும் குறைந்தது!

சன்னரக அரிசி இதுவரை கிலோ ரூபாய் 2-10 வீதம் விற்கப்பட்டு வந்தது. இனிமேல் சன்னரக அரிசியை கிலோ ரூபாய் 2-00 வீதம் விற்கப்படும்.

மிகச் சன்னரக அரிசியைப் பொறுத்தவரையில் விலையில் மாற்றம் இல்லை: கிலோ ரூபாய் 2-25 வீதம் விற்கப்படும்.

தற்பொழுது கையிருப்பில் உள்ள குறுவை அரிசி இருப்பு முழுவதும் தீரும் வரையில் இப்புதிய விலைகளே நீடிக்கும். அதன் பிறகு சம்பா அரிசிக்கு விலை நிர்ணயிக்கப்படும். இப்புதிய விலையில், நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் எல்லா சில்லறை விற்பனைக் கடைகளிலும் அரிசி விற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொள்முதல் நிறுத்தப்பட்டது!

தமிழ்நாட்டில் உடனடியாக நெல் மற்றும் அரிசி கொள்முதல் நிறுத்தப்படும். குறுவைப்பட்டத்தில் 3.5 இலட்சம் டன்னும் (அரிசி), சம்பாபட்டத்தில் 3.7 இலட்சம் டன்னும் (அரிசி) கொள்முதல் செய்யப்பட்டு, இலக்கையும் தாண்டிவிட்டதால், உடனடியாகக் கொள்முதல் செய்வதை நிறுத்திவிட முடிவு செய்யப்பட்டது.

ஆதரவு விலை அளிக்கப்படும்!

எந்த விவசாயியாவது தன்னிடம் உள்ள உபரி நெல்லை அரசுக்கு விற்க விரும்பினால், அதைத் தமிழ்நாடு அரசு, மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலைக்கு வாங்கும். எந்த விவசாயியும் பண நெருக்கடி காரணமாக விலை குறைத்து விற்க வேண்டிய நிலை ஏற்படாமல் இருக்கத் தமிழ்நாடு அரசு ஆவன செய்யும். விவசாயிகளுக்கு ஆதரவு விலை கொடுத்து அவர்களிடமுள்ள நெல்லை வாங்கப்படும்.

கட்டுப்பாடு நீக்கப்பட்டது!

ஒரு மாவட்டத்தின் ஒரு பகுதியில்இருந்து அதே மாவட்டத்தின் மற்றொரு பகுதிக்கு நெல், அரிசி கொண்டு செல்வதற்கு இதுவரை இருந்து வந்த நடமாட்டக் கட்டுப்பாடு, கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக மற்ற எல்லா மாவட்டங்களிலும் நீக்கப்படுகிறது. ஆனால் கேரள மாநில எல்லையை ஒட்டியுள்ள மதுரை, நெல்லை, கோவை ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த சில வட்டங்கள் 'அறிவிக்கப்பட்ட பகுதிகள்' ஆகக் கருதப்பட்டு அந்த வட்டங்களின் எல்லைப் பகுதிகளில் மட்டும் நடமாட்டக் கட்டுப்பாடு நீடிக்கும்.

சென்னை நகரின் தேவை

சென்னை மாநகர மக்களின் அரிசித் தேவையை ஈடு செய்ய செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களிலிருந்து அரசு சார்பிலோ அல்லது கூட்டுறவுத் துறை சார்பிலோ அரிசி வாங்கப்பட்டு நுகர்பொருள் வாணிபக் கழகச் சில்லறை அங்காடிகள் அல்லது கூட்டுறவு பண்டக சாலைகள் மூலமாக விநியோகிக்கப்படும்.

பர்மிட் முறை

குடும்பத் தேவை, சொந்த உபயோகம் ஆகியவற்றுக்காக ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு அரிசி கொண்டு வர தற்போது உள்ள பர்மிட் முறை, நிபந்தனை ஆகியவை தளர்த்தப்படும்.

ஓராண்டுக்குக் கவலை இல்லை!

தமிழக உணவு நிலைமை மிகவும் மன நிறைவு தருவதாக உள்ளது. அடுத்த ஓராண்டிற்கு உணவு முனையில் கவலை எதுமில்லை.

துடன் ஒரே முகமாகப் பூக்கும் குணமுடையவை. இந்த ரகம் நடுத்தர உயரமாய் இருப்பதால் அறுவடை செய்வதும், அடிப்பதும் எளிதாக இருக்கிறது. அறுவடையின்போது சிறிது மழையிருந்தாலும் விதைகள் முளைப்பதில்லை. அரிசி குட்டை பருமன் ரகத்தைச் சேர்ந்தது. சமையலுக்கு ஏற்றது. வயிற்று வெள்ளை இல்லாததால், அறைக்கும்போது அரிசி அதிகமாக இடிவதில்லை. ஏக்கருக்கு சராசரியாக 2,500 கிலோ (மாவுக்கு 30 கலம்) மகசூல் அளிக்கவல்லது. இந்த நெல் ரகம், குறுவை, கார் அல்லது சொர்ணவாரி, நவரை ஆகிய பட்டங்களுக்கு ஏற்றது.

ஐ. இ. டி. 1722

'ஐ. ஆர். 8' நெல் ரகத்துடன் 'தாடுகன்' என்ற நெல் ரகத்தை கரு ஒட்டுச் சேர்த்து புதுடெல்லியில் உள்ள இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தாரால் உருவாக்கப்பட்ட இந்த ரகமும் குறுகிய காலத்திலேயே (100-104 நாட்கள்) அதிக மகசூல்

கொடுக்கவல்லது. ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தில் குறுவையில் நடத்தப்பட்ட சோதனைகளில் இந்த ரகம் ஏக்கருக்கு 2,020 கிலோ மகசூல் அளித்தது. மற்றும் பாலூரில் உள்ள பல பயிர் ஆராய்ச்சி நிலையத்தில் நவரைப் பட்டத்தில் நடத்திய சோதனைகளில் இந்த ரகம் ஏக்கருக்கு 2,750 கிலோ மகசூல் அளித்தது. தஞ்சை மாவட்டத்தில், பல இடங்களில் நடத்தப்பட்ட அனுசரணை ஆராய்ச்சி சோதனைகளில் 'ஆடுதுறை-31' ரகத்திற்கு அடுத்தபடியாக, ஏக்கருக்கு 1,990 கிலோ (மாவுக்கு 24 கலம்) மகசூல் கொடுத்தது. இதன் தாள்கள் நடுத்தர உயரமாகவும், தூர்கள் சற்று விரிந்த நிலையிலும் இருக்கும். தூர்கள் யாவும் ஒரே முகமாகப் பூக்கும் குணமுடையது. சராசரியாக ஏக்கருக்கு 2,200 கிலோ (மாவுக்கு 26 கலம்) மகசூல் அளிக்கவல்லது. அரிசி நீண்ட சன்ன ரகத்தைச் சேர்ந்தது. சமையலுக்கு ஏற்றது இந்த நெல் ரகம் குறுவை கார் அல்லது சொர்ணவாரி, நவரை ஆகிய பட்டங்களுக்கு ஏற்றது.

பூசா-33

'மேம்படுத்தப்பட்ட சபர்மதி' என்ற மணமுடைய நெல் ரகத்துடன், 'ரத்னா' என்ற நெல் ரகத்தை கரு ஒட்டுச் சேர்த்து புதுடெல்லியில் உள்ள இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தாரால் உருவாக்கப்பட்ட இந்த நெல் ரகமும் குறுகிய காலத்தில் (100-105 நாட்கள்) அதிக மகசூல் அளிக்க வல்லது. தமிழ் நாட்டில் உள்ள நெல் ஆராய்ச்சி நிலையங்களாகிய ஆடுதுறை, திரூர்குப்பம், பாலூர் அம்பாசமுத்திரம், பட்டுக்கோட்டை ஆகியவற்றில் (குறுவை கார் அல்லது சொர்ணவாரி பட்டங்களில்) சோதனைப் பாத்திகளில் நடத்தப்பட்ட சோதனைகளில் இந்த ரகம் ஏக்கருக்கு முறையே 2,700, 2,960, 2,540, 2,330, 1,920 கிலோ மகசூல் அளித்தது. மேலும் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தில் (குறுவை 1974) 5.55 ஏக்கர் அளவில் பயிரிட்டபோது, இந்த ரகம் சராசரியாக ஏக்கருக்கு 2,250 கிலோ மகசூல் அளித்தது. இதன் தாள்கள் நடுத்தர உயரமாகவும் சாயாமாலும் இருக்கும். தூர்கள் அதிகமாக இருப்பதுடன், ஒரே முகமாகப் பூக்கும் குணமுடையது. அரிசி நீண்ட சன்ன ரகத்தைச் சேர்ந்தது. அரிசி மணமுடையது. ஏக்கருக்கு சராசரியாக 2,500 கிலோ (மாவுக்கு 30 கலம்) மகசூல் அளிக்க வல்லது. இந்த நெல் ரகம் குறுவை, கார் அல்லது சொர்ணவாரி நவரை ஆகிய பட்டங்களுக்கு ஏற்றது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள திரூர் குப்பத்தை உலகம் முழுவதும் புகழ் பெறச் செய்த 'டி. கே. எம். 6' நெல்லையும், 'டி.என். 1' என்ற நெல்லையும் ஒட்டுச்சேர்த்து அதன் பலனாக உண்டாகிய இரகம் டி. கே. எம். 8. பரிசோதனைக் காலத்தில் இதற்கு 'கல்சர் 1251' என்று பெயர் கொடுத்து பல முற்போக்கு விவசாயிகள் கழனிகளில் பயிர் செய்யப்பட்டது. சோதனைகளில் எல்லாம் பெரும்பாலும் ஏக்கருக்கு 2.5 டன்னுக்கு அதிகமான மகசூல் தந்துள்ளது இந்த இரகம். இதன் வயது சுமார் 120-125 நாட்கள். நாட்டு இரகங்களைப் போல் வளர்ந்து சாயாமல், 'ஐ. ஆர்.' இனத்தை போல குட்டையாகவும், செங்குத்தாகவும் வளரும் தன்மையுடை



யது இந்த இரகம். வளம் குறைந்த நிலங்களிலும் நல்ல மகசூல் தருகிறது. நெல்லைத் தாக்கும் பல பூச்சிகளில் குருத்துப் பூச்சி மிகவும் முக்கியமானது. குருத்துப் பூச்சியின் தாக்குதல் குறிப்பாக நவரைப் பட்டத்தில் மிகவும் அதிகம். 'டி. கே. எம்.8' ரகம் குருத்துப் பூச்சியின் தாக்குதலையும் ஓரளவுக்குத் தாங்கி நின்று, சேதம் அதிகம் இல்லாமல் வளருகிறது.

வடமாவட்டங்களில், அதிலும் குறிப்பாக செங்கை மாவட்டத்தில் சம்பா பட்டத்தில் பருவ மழையுடன் நெல்லை விதைத்து, பின்பு குளத்தில் தண்ணீர் வந்த பின் நீர் கட்டும் வழக்கம் பரவலாகப் பழக்கத்தில் உள்ளது. இவ்வாறு மானாவாரியாக நெல் விதைக்கப்படும் இடங்களிலும் 'டி. கே. எம். 8' ரகம்-தற்பொழுது பயிர் செய்யப்படும் 'பி. ஏ. எம். 3', 'கோ. 31' ஆகிய இரகங்களை விட-அதிக மகசூல் தருகிறது. எனவே, சம்பா பட்டத்தில் மானாவாரியாக நெல் பயிர் செய்யப்படும் பகுதிகளிலெல்லாம் 'டி. கே. எம் 8' ரக நெல்லைப் பயிரிடுவது சிறந்தது.

குடுமியான்மலை-1 கம்பு

'குடுமியான்மலை-1' அல்லது 'கே. எம். 1' ரகக் கம்பு 85 நாளில் பலன் தரக்கூடியது. 'எம். எஸ். 5141' என்ற பெண் இனத்தையும், 'ஜே. 104' என்ற ஆண் இனத்தையும் சேர்ந்த ஒட்டுக் கம்பு இது. வீரிய ஒட்டு இரகக் கம்பு என்ற உடன், 'பசுங்கதிர் நோய்' வந்து விடுமே என்று நம் உழவர்கள் அஞ்சுகிறார்கள். ஏனெனில், கடந்த நான்கைந்து ஆண்டுகளாக இந்த நோயினால் நம் உழவர்களுக்கு ஏற்பட்ட நட்டம் கொஞ்சமல்ல. இந்த நோயிலிருந்து விடுபட பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் விளைவாக பிறந்தவைதான் குடுமியான்மலை

கம்பு இரகங்கள். 'கே. எம். 1' ரகக் கம்பின் தாய், பசுங்கதிர் நோயை எதிர்க்கவல்ல நைஜீரியா தேசத்து கம்பின் பரம்பரையைச் சேர்ந்தது. 'கே.எம். 1' ரகக் கம்பின் தந்தையான 'ஜே. 104' வறட்சியைத் தாங்க வல்லது. எனவே 'கே. எம். 1' ரகக் கம்பு வறட்சியைத் தாங்கும் சக்தியையும், பசுங்கதிர் நோயை ஓரளவுக்கு எதிர்க்கும் சக்தியையும் கொண்டது. எல்லா பட்டங்களிலும் வளர்ந்து நல்ல மகசூல் தருகிறது. இந்த ரகத்தை இறவைப் பட்டத்திலும், மானாவாரிப் பட்டத்திலும் பயிர் செய்யலாம். பயிருக்கு இடும் உரத்தின் அளவை அதிகரித்தால் இது அதிக மகசூல் தருகிறது. நீளமாக உருண்டு திரண்டு கதிரும் நெருக்கமாக திரட்சியுள்ள மணி பிடிக்கும் திறனும் கொண்ட இந்த 'கே. எம். 1' இதுவரை பழக்கத்தில் இருந்த 'எச். பி.3 ரகத்தை விட அதிக மகசூல் தர வல்லது.

குடுமியான்மலை-2 கம்பு

'கே. எம். 2' அல்லது குடுமியான்மலை-2 ரகக் கம்பு 'எம்.எஸ் 5141-எ' என்ற பெண் இனத்தையும், 'கே. 560-டி. 30' என்ற ஆண் இனத்தையும் ஒட்டுச் சேர்த்து உண்டாக்கப் பட்ட இரகமாகும். இதன் வயது 85 நாட்கள். தாயும், தந்தையும் பசுங்கதிர் நோயை எதிர்க்க வல்லவை. எனவே, பசுங்கதிர் நோய் 'கே. எம். 2' கம்பில் அநேகமாகத் தாக்குவதில்லை. இந்த இரகமும் எல்லா பட்டங்களுக்கும் ஏற்றது. மானாவாரியாகவும், இறவையாகவும் பயிர் செய்யலாம். கதிரில் மணி நெருக்கமாகப் பிடிக்கிறது. மணியும் திரட்சியாக இருக்கிறது. பசுங்கதிர் நோயைத் தவிர கதிரைத் தாக்கும் 'குருத்து ஈ' போன்ற பூச்சிகளையும் எதிர்க்கும் சக்தி கொண்டது இந்த இரகம். இந்த இரகம் 'எச். பி. 4' ரகத்தைவிடச் சிறந்தது.

புதிய புடல்

சிறு தானியங்கள், பயறு வகைகள், காய்கறிகள் இவற்றின் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள குடுமியான்மலை ஆராய்ச்சி நிலையம் 'கே.எம்.1' அல்லது 'குடுமியான்மலை-1 புடலை' ரகத்தையும் தேர்ந்தெடுத்துள்ளது. இந்த இரகத்தின் காய்கள் மிகவும் நீளமாக இருக்கின்றன. சதைப் பற்றும் அதிகம். காய் உருண்டையாக இருக்கின்றது. ஒவ்வொரு கொடியிலும் 20 முதல் 35 காய்கள் வரை காய்க்கின்றன. ஆடிப்பட்டத்தில் பயிரிடலாம். இந்தப் புடலின் வயது 120 நாட்கள். நெல்லை மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இப்புடல் இரகம் இலைப்புள்ளி நோய்க்கும், காய்களைத் தாக்கும் ஈக்களுக்கும் இரையாவதில்லை. இவற்றை எதிர்க்கும் சக்தி இந்த இரகத்திற்கு உள்ளது. காய்கள் நீண்டு வளருவதால் இதற்கு பந்தல் 2 மீட்டர் உயரத்தில் அமைப்பது நல்லது.

புதிய கரும்பு ரகம்

கடலூரில் உள்ள கரும்பு ஆராய்ச்சி நிலையம் 'கோ. க. 67-1' என்ற ஒரு புதிய கரும்பு இரகத்தை கண்டு பிடித்துள்ளது. இப்புதிய ரகம் 330-லிருந்து 360 நாட்களில் மகசூல் தரும். இந்த இரகம் டிசம்பர்-ஜனவரி பட்டத்தில் சாகுபடி செய்வதற்கு ஏற்றது. தற்பொழுது சாகுபடியில் உள்ள 'கோ. 658' இரகத்தை விட இப்புதிய ரகம் சராசரியாக 8 டன் அதிக மகசூல் தரவல்லது. இதில் சர்க்கரைச் சத்தும் அதிகம் இருக்கிறது. எனவே, உழவர் பெருமக்களுக்கும், சர்க்கரை ஆலைகளுக்கும் இந்த இரகம், ஏற்றதாகும். எல்லா மாவட்டங்களிலும் நன்றாக வளர்ந்து மகசூல் தருகிறது. தற்பொழுது கடலூரைச் சுற்றி சில இடங்களில் காணப்படும் செவ்வழுகல் நோயை ஓரளவுக்கு எதிர்க்கும் சக்தி கொண்டது இந்த இரகம். உயரமாகவும், வீரியமாகவும் வளரும் தன்மையும், தோகை அதிகம் கட்டும் திறனும் உள்ள இந்த இரகம், பச்சை கலந்த செங்கருப்பு நிறமாக இருக்கும். 'கோ. 658' சாகுபடியில் உள்ள பகுதிகளுக்கும், அதிலும் குறிப்பாக தென் ஆற்காடு மாவட்டத்திற்கும் இந்த 'கோ. க. 67-1' என்ற புதிய இரகம் மிகவும் ஏற்றதாகும்.

வேண்டுகோள்

அதிக மகசூல் பெற்று அதன் மூலம் அதிக இலாபம் பெற விரும்பும் உழவர்கள் அனைவரையும், மேற்கூறிய ரகங்களைப் பயிரிடுமாறு பரிந்துரைக்கின்றோம்.

பெருகிவரும் புத்தக வங்கிகள்

மத்தியப் பிரதேச மாநிலத்தில் பள்ளிகளுக்காக அமைக்கப்பட்ட புத்தக வங்கிகளின் எண்ணிக்கை 51 ஆயிரத்தைத் தாண்டி விட்டது. அந்த மாநிலத்தில் ஏறக்குறைய 58 ஆயிரம் பள்ளிகள் உள்ளன. மத்தியப் பிரதேசத்தைப் போலவே, கேரள மாநிலத்திலும், சராசரி ஒரு பள்ளிக்கு ஒரு புத்தக வங்கி இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மொத்தம் 11 ஆயிரம் பள்ளிகள் உள்ள கேரள மாநிலத்தில் உள்ள புத்தக வங்கிகளின் எண்ணிக்கை 11,183 ஆகும்.

மற்ற மாநிலங்களும், தங்கள் பகுதிகளிலுள்ள பள்ளிகளில் இத்தகைய புத்தக வங்கிகளை நிறுவியுள்ளன. அரியானா மாநிலத்தில் 4,200 புத்தக வங்கிகளும், ராஜஸ்தான் மாநிலத்தில் 1,900 புத்தக வங்கிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

கல்லூரிகளில் இருந்த வங்கிகளின் எண்ணிக்கை சுமார் இரண்டு மடங்காகப் பெருகியிருக்கிறது. 1975 ஜூலை முதல் தேதியிலிருந்து 1976 மார்ச் தேதி வரை ஏறக்குறைய 900 புத்தக வங்கிகள் புதிதாகத் துவக்கப்பட்டுள்ளன. அதற்கு முன்னர் மொத்தம் 851 புத்தக வங்கிகளே இருந்தன.

நலிவடைந்த பிரிவைச்சேர்ந்த மாணவர்கள், கல்வி பயிலும் காலத்தில் அவர்களுக்குத் தேவையான புத்தகங்களைக் கடனாகக் கிடைக்கச் செய்யும் வகையில் புத்தக வங்கிகளை நிறுவுவதில், பல்கலைக் கழக மானியக் குழு கல்லூரிகளுக்கு உதவி வருகிறது.

பிரதமரின் இருபது அம்சத் திட்டம் அறிவிக்கப்பட்டதிலிருந்து ஒரு புத்தக வங்கி அமைக்கத் தேவையான மாணவர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கையில் உள்ள நிபந்தனையை, பல்கலைக் கழக மானியக் குழு தளர்த்தியுள்ளது. இதன் மூலம் அதிக அளவு மாணவர்கள், புத்தக வங்கியின் உதவியைப் பெறுகிறார்கள்.

மாணவர் அரங்கம்

தாய்நாடும் நீங்களும்



பொதுவாக நமது நாட்டு மாணவர்கள் வேற்றுநாடுகளில் உள்ள அதிசயங்களையும் இயற்கை வளங்களையும் தெரிந்து கொள்ளும் அளவுக்கு நமது தாய்நாட்டின் பெருமையையும் இங்கே உள்ள சிறப்பம்சங்களையும் தெரிந்து கொள்கிறார்களா என்றால் அது சந்தேகத்துக்குரியதுதான்.

நமது இந்திய நாட்டின் சிறப்புகள் குறித்து இங்கே 20 வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றிற்குரிய விடை உங்களுக்குத் தெரிகிறதா பாருங்கள். எல்லாவற்றிற்கும் சரியான விடையளித்து விட்டால் நீங்கள் தாய் நாட்டைக் கனவிலும் மறவாதவர் என்று பெருமைப்படலாம்.



வினாக்கள்?

இந்தியாவில்...

1. உயரமான மலை எது?
2. பெரிய நகரம் எது?
3. பெரிய சிலை எது?
4. பெரிய மிருகக்காட்சி சாலை எது?
5. நீளமான பிளாட்பாரம் எது?
6. நீளமான குகைப்பாதை எது?
7. நீளமான பிரகாரம் எது?
8. அதிக மக்கள் தொகையுள்ள மாநிலம் எது?
9. பரப்பளவில் பெரிய மாநிலம் எது?
10. கரும்பு அதிக அளவில் பயிரிடப்பெறும் மாநிலம் எது?
11. நீளமான டெல்டாப் பகுதி எது?
12. உயரமான அணை எது?
13. உயரமான கோபுரம் எது?
14. பெரிய ஏரி எது?
15. நீளமான சாலை எது?
16. பெரிய மசூதி எது?
17. மிக உயரமான அருவி எது?
18. பெரிய காடுகள் உள்ள மாநிலம் எது?
19. பெரிய குகைக் கோயில் எது?
20. அதிக அளவு மழை பெய்யும் பகுதி எது?

(விடைகள்: பக்கம் 48 பார்க்க)

—தொகுப்பு: எஸ். எஸ்.

கடன் சுமையைக் குறைக்க

மூன்று அவசரச் சட்டங்கள்!



தமிழ்நாட்டில் கடன்பட்ட விவசாயிகளுக்கும், விவசாயிகள் அல்லாத மற்றும் சிலருக்கும் தற்காலிகக் கடன் நிவாரணம் வழங்கும் காலத்தை மேலும் ஓராண்டுக் காலம் நீடித்து தமிழக ஆளுநர் கே.கே. ஷா அவர்கள் 4—3—76 அன்று பின்கண்ட மூன்று அவசரச் சட்டங்களைப் பிறப்பித்தார்.

1. தமிழ்நாடு கடன்பட்ட விவசாயிகள் (தற்காலிக நிவாரண) எண். 2 அவசரச் சட்டம், 1976:

விவசாயிகளிடமிருந்து கடன் வசூலிப்பதை மேலும் ஓராண்டு ஒத்தி வைக்க இந்த அவசரச் சட்டம் வகை செய்கிறது. இந்த அவசரச் சட்டம் 1976 ஜனவரி 15-ஆம் தேதியிலிருந்தே அமலுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படும். விவசாயிகளிடமிருந்து கடன் பாக்கி வசூலுக்காக எவரும் 'சிவில் கோர்ட்' அல்லது 'ரெவின்யூ கோர்ட்டில்' வழக்குத் தொடர்வதை இச்சட்டம் தடுக்கிறது.

இந்த அவசரச் சட்டத்தின்படி, விவசாய நிலத்தில் அக்கறையுடைய நபர், இத்தகைய அக்கறை காரணமாக இத்தகைய நிலத்தை வைத்திருப்பவர் அல்லது வாரம் பெற்றுக் கொண்டிருப்பவர்கள் ஆகியோர் 'விவசாயி' என்று கருதப்படுவர். குத்தகைதாரரும் இச்சொல்லில் அடக்கமாவார் என்றும் அச்சட்டம் கூறுகிறது.

1971—72, 1972—73, 1973—74, 1974—75-ஆம் ஆண்டுகளில் எந்த ஆண்டிலாவது வருமான வரிச் சட்டத்தின் கீழ், வருமான வரி விதிப்புக்குட்பட்டவர் அல்லது தமிழ்நாடு விவசாய வருமான வரிச் சட்டத்தின் கீழ் விவசாய வருமான வரி விதிப்புக்குட்பட்டவர் அல்லது விற்பனை வரி அல்லது விற்பனை வரிக்குட்பட்டவர்கள் இந்தச் சொல்லின் விளக்கத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

கூட்டு நிறுவனங்கள் (பார்ட்னர்ஷிப் நிறுவனங்கள்), கம்பெனிகள், பார்லிமெண்ட் இயற்றிய சட்டத்தின்படியோ, அல்லது வேறு தனிச் சட்டத்தின்படியோ அமைக்கப்பட்ட கார்போரேஷன்களும் இந்தச் சொல்லின் இலக்கணத்தில் சேர்க்கப்படவில்லை.

பிரிவினையாகாத இந்து குடும்பம் ஒன்று விவசாயத்தில் ஈடுபட்டிருந்தால் அந்தக் கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொரு அங்கத்தினரும் ஒரு விவசாயியாகக் கருதப்படுவர்.

'விவசாய நிலம்' என்பது விவசாயத்திற்காக அல்லது தோட்டங்களுக்காக உபயோகிக்கப்படும் நிலம் என்று பொருளாகும். குடியிருப்புக் கட்டடத்தை ஒட்டியுள்ள நிலம், விவசாய நிலமாகக் கருதப்பட மாட்டாது,

ஓராண்டுக் காலம் முடியும் வரை கடன் வசூல் தொடர்பாக நீதி மன்றங்களில் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்படும். அவசரச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற மாநில அரசு விதிகளை இயற்றலாம்.

மாநில அரசுகள் அல்லது உள்ளாட்சித் துறை கூட்டுறவு நிறுவனங்கள், வங்கிகள், சட்ட பூர்வ நிறுவனங்கள் போன்ற அமைப்பு

"கிராமங்களில் கடன் வசதியைப் பெருக்கவும், சிறு விவசாயிகளை ஊக்குவிக்கும் திட்டங்களை வகுக்கவும் பிரத்தியேக முயற்சி செய்திருக்கிறோம்."

—இந்திரா காந்தி

283

களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன்களுக்கு இச்சட்டம் பொருந்தாது.

2. தமிழ்நாடு கடன்பட்டோர் (தற்காலிக நிவாரண) எண். 2 அவசரச் சட்டம், 1976:

இந்தச் சட்டம் எந்த நபரிடமிருந்தும் கடனை வசூலிப்பதற்காக நீதிமன்றத்திற்கு சென்று வழக்குத் தொடர்வதை ஓராண்டு காலத்திற்குத் தடை செய்கிறது. இந்த அவசரச் சட்டமும் ஜனவரி 15-ஆம் தேதி முதல் ஓராண்டுக்கு அமலில் இருக்கும்.

1974 மார்ச் 31-ஆம் தேதி, 1975 மார்ச் 31-ஆம் தேதியுடன் முடிவடைந்த நிதியாண்டுகளில் வருமான வரி விதிப்புக்குட்பட்டவர்களுக்கும் இந்த ஆண்டுகளில் விற்பனை வரி அல்லது மத்திய விற்பனை வரிக்குட்பட்டவர்களுக்கும் இது பொருந்தாது. கட்டடங்கள் அல்லது விவசாய நிலமல்லாத நிலங்கள் தொடர்பாக சொத்து வரி அல்லது வீட்டு வரிக்குட்பட்டவர்களுக்கும் இது பொருந்தாது. ஆனல் கட்டடங்கள் அல்லது நிலங்கள் வாடகைக்கு விடப்பட்டிருந்தாலோ அல்லது சொந்தக்காரரின் வசம் இருந்தாலோ இதன் ஆண்டு வாடகை மதிப்பு ரூபாய் 2,400-க்கும் குறையாமல் இருந்தால்தான் இவர்களுக்கு இந்த நிவாரணம் பொருந்தாது.

3. தமிழ்நாடு கடன்பட்ட விவசாயிகள் மற்றும் கடன்பட்டோர் (சிறப்பு ஏற்பாடு) எண். 2 அவசரச் சட்டம், 1976:

இச்சட்டம் 1975 ஜூலை 22-ஆம் தேதி கொடுக்கப்பட வேண்டிய கடன் விஷயத்தில் 1975 ஜூன் 22-ஆம் தேதிக்கும் 1976 ஜனவரி 15-ஆம் தேதிக்குமிடையேயான காலத்திற்கு வட்டி எதுவும் கிடையாது என்று கூறுகிறது. ஆனல் 1975 ஜூலை 22-ஆம் தேதிக்குப் பின் வாங்கிய கடனுக்கு வட்டி வசூலிக்கலாம்.

தமிழ்நாடு அடகுக் கடைக்காரர்கள் சட்டத்தையும் இச்சட்டம் திருத்துகிறது. 1975 ஜூலை 22-ஆம் தேதியில் திருப்பித் தர வேண்டிய கடனுக்கு 1975 ஜூலை 22-ஆம் தேதியிலிருந்து 1976 ஜனவரி 15-ஆம் தேதி வரையிலான கடனுக்கு வட்டி ஏதும் இல்லை. 1975 ஜூன் 22-ஆம் தேதிக்குப் பிறகு வாங்கிய கடனுக்கு வட்டி உண்டு என்கிற வகையில் இச்சட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

அடகு வைக்கப்பட்ட எந்தப் பொருளையும் 1975 ஜூலை 22-ஆம் தேதியிலிருந்து 1977 ஜனவரி 15-ஆம் தேதி முடிவடையும் காலத்தில் அடகுக் கடைக்காரர்கள் எந்த வகையிலும் விற்கக்கூடாது என்றும் இச்சட்டம் கூறுகிறது.

இந்த மூன்று அவசரச் சட்டங்களும் பிறப்பிக்கப்பட்டதன் காரணமாக கடன்பட்ட விவசாயிகளுக்கும் விவசாயிகளல்லாத மற்றவர்களுக்கும் ஓராண்டு கால தற்காலிக கடன் நிவாரணம் கிடைத்துள்ளது. இக்காலத்தில் அவர்கள், பருவம் வாய்ப்பாக உள்ள நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு கடுமையாக உழைத்து, விளைவில் அதிக வருவாய் பெற்று, கடனைத் தீர்த்துக் கொள்வதற்கு வழி பிறந்துள்ளது. இவ்வழியைப் பயன்படுத்திக் கொண்டு முன்னேறுவது கடன்பட்டோர்களின் கடமையாகும்.



தமிழ்நாட்டில் குந்தா நீர் மின் திட்டத்தின் 4-வது கட்ட அமைப்புக்காக கனடா மேலும் 3.5 இலட்சம் கனடா டாலர்களை (31 இலட்சம் ரூபாய்) மானியமாக வழங்கியுள்ளது. ஏற்கெனவே, அந்நாடு 1973 ஆகஸ்டில் கடனாக 39 இலட்சத்து 72 ஆயிரம் கனடா டாலர்களையும் (ரூ. 2.78 கோடி) மானியமாக 12 இலட்சம் கனடா டாலர்களையும் (ரூ. 84 லட்சம்) வழங்கியுள்ளது.

இந்தியாவின் சார்பில் மத்திய நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்கள் துறை கூட்டுச் செயலாளர் திரு. ஜே. எஸ். பெய்ஜலும், கனடா நாட்டின் சார்பில் இந்தியாவுக்கான அந்நாட்டு ஹை கமிஷனர் திரு. ஜே. ஆர். மேபியும் இப்புதிய மானியம் தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

குந்தா நீர் மின் திட்டத்தின் 4-வது கட்ட அமைப்புக்கு கனடா நாட்டு பொறியாளர்கள் அளிக்கும் சேவை, சிறப்புக் கருவிகள் வழங்கல் ஆகியவற்றிற்காக இந்த மானியம் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

இத்திட்டத்திற்கான கருவிகளையும், உதிரி உறுப்புகளையும் வழங்கி அவற்றை நிறுவி, திட்டத்தைத் துவக்கி வைப்பதற்காக கனடா பொது மின்சாரக் கம்பெனி, தமிழ்நாடு மின் வாரியத்துடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டது. இந்த ஒப்பந்தத்தின்படி தற்போது கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் முடிவடைந்தவுடன், தமிழக மின் உற்பத்தி மேலும் பெருகும்.


குடியரசுத் தலைவர் ஆட்சியின் பயன்கள்
அரிசி
கி.ரூ. 1.60
மிளகாய்
கி.ரூ. 5.00
4.50
2.10
தமிழ்நாட்டில் விலைவாசிகள் விரைந்து குறைகின்றன!
1977 ஜனவரி 15-ந்தேதி வரை கடனை வசூலிக்க தடை!
"என்கடனைத் தீர்க்க நீ, ஆயுள் முழுவதும் அடிமை வேலை செய்ய வேண்டும்"
கொத்தடிமைக் கொடுமை இனி யில்லை!
தொழிலாளர்களுக்கு நிருவாகத்தில் பங்கு அளிப்பதற்காக, ஒவ்வொரு தொழிற்சாலையிலும் கூட்டுக் கவுன் சில் அமைக்கப்பட்டு வருகிறது.
17 தொழிற்சாலைகளில் நிலவிய தொழில் தகராறுகள் தீர்த்து வைக்கப்பட்டன. 24,000 தொழி லாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.
பேச்சைக் குறையுங்கள்! உற்பத்தியைப் பெருக்குங்கள்!!



தூய்மை காக்க வாரீர்!

''நரகம் என்பது பெரும்பாலும் இலண்டனைப் போல இருக்கும்''—(Hell is a city much like London) என்ருன் ஆங்கிலப் பெரும் புலவன் டென்னிசன். இந்தக் கூற்று, இலண்டன் மாநகரத்திற்கு மட்டுமல்ல—ஏறத்தாழ எல்லாப் பெருநகரங்களுக்குமே பொருந்துவதாகும்.

மேலே குறிப்பிட்ட இந்தப் பொது விதிக்குச் 'சிங்காரச் சென்னை' மட்டும் முழுக்க முழுக்க விதிவிலக்கா என்ன? பொதுவாகவே, நகரின் தூய்மையைப் பாதுகாக்க வேண்டும் என்று கருதிச் செயல்படுபவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்களாகவே இருப்பார்கள். நகரின் தூய்மை—நகரின் சுகாதாரம்— பேணிப் பாதுகாக்கப்படுமானுல் மக்களுக்கு நோயற்ற—ஆரோக்கிய வாழ்வை அளிக்க முடியும்.

இவ்வாறு, நகரை அழகுபடுத்தி, தூய்மைப்படுத்தும் நல்லதோர் இயக்கத்தை பெங்களூரில் ஆரம்பித்து மிக வெற்றிகரமாக நடத்தி முடித்து, இப்போது நிரந்தரமாகச் சென்னைக்கு வந்துள்ள முன்னுள் குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி அவர்கள், தொடர்ந்து சென்னை நகரில் அவ்வியக்கத்தை ஆரம்பித்து நடத்தத் திட்டமிட்டார். அதற்காக 8-அம்சத் திட்டமொன்றினை தயாரித்து பிப்ரவரி முதல் நாள் சென்னை கோகலே மண்டபத்தில் பத்திரிகையாளர்களைக் கூட்டி, அவர்கள் மத்தியில் தமது திட்டத்தை விளக்கினுர். அப்போது அவர் குறிப்பிட்டதாவது...

''கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பு சென்னை நகரம் இந்தியாவிலேயே சுத்தமான நகரமாகவும், அழகான நகரங்களில் ஒன்ருகவும் திகழ்ந்தது.

''துரதிருஷ்டவசமாக இப்போது சென்னை நகரின் தெருக்கள் அசுத்தம் அடைந்து நகரின் அழகு கெட்டுப் போய்க்கொண்டு இருக்கிறது.

''மீண்டும் சென்னை நகரை மிகவும் அழகு வாய்ந்த நகராக மாற்றுவதற்கு இங்கு வசிக்கின்ற எல்லா மக்களும் தம்மால் இயன்ற அளவு முன்வர வேண்டும். எனவே, ஒவ்வொருவரும் தங்களது வீட்டையும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்துக் கொண்டால், அதுவே நகருக்கு அழகு தரும் விதத்தில் அமையும்.

''கர்நாடக (மைசூர்) மாநில ஆளுநராக நான் இருந்தபோது அந்த நகரைச் சுத்தமாகவும், அழகாகவும் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக ''துப்புரவு இயக்கம்'' ஒன்றைத் தொடங்கி நடத்தினேன். அதற்கு அங்குள்ள மக்கள் எல்லாரும் மிகவும் ஒத்துழைப்புத் தந்தார்கள்.

''அதே போன்ற ''துப்புரவு இயக்கம்'' ஒன்றைச் சென்னையில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

''துப்புரவு இயக்கத்தில் சேர விரும்புபவர்கள், தாங்களாகவே முன்வந்து அந்தந்த வட்டங்களில் ஒரு குழுவை அமைத்து அவர்களது பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

''அப்படி அமைக்கப்படும் குழுவில் உள்ள உறுப்பினர் பட்டியல் ''துப்புரவு இயக்க'' அமைப்பாளருக்கு அனுப்பப்படும்.

''துப்புரவு இயக்கத்தைச் சேர்ந்த குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 8 மணி முதல் 10 மணி வரை அந்தந்த வட்டத்தில் உள்ள எல்லாத் தெருக்களையும், அங்காடிகளையும் சுற்றிப்பார்த்து, எங்கெங்கு அசுத்தம் காணப்படுகிறதோ அவற்றையெல்லாம் அகற்ற நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள்.

''அதே போல சினிமாக் கொட்டகைகளுக்கு உள்ளே உள்ள கழிப்பிடங்களையும் பார்வையிடுவார்கள்.

''ஓட்டல்களில் பரிமாறப்படும் உணவு வகைகளும், மற்ற பொருள்களும் சுத்தமாகவும் தரமானதாகவும் இருக்கின்றனவா? என்றும் அவர்கள் கண்காணிப்பார்கள்.

''ஒவ்வொரு வட்டமும் துப்புரவு இயக்கத்தைச் சேர்ந்தவர்களால் சுற்றிப் பார்க்கப்பட்ட பிறகு, குழு உறுப்பினர்கள் எல்லாம் ஒன்ருகக் கூடி, அறிக்கை தயாரிப்பார்கள்.

''பிறகு அந்த அறிக்கை, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன், அதிகாரிகள் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கவும் இந்த இயக்கம் தூண்டுகோலாக இருக்கும்; சிறிது காலம் கழித்து துப்புரவு இயக்கத்திற்கு ''மத்திய குழு'' அமைப்பதற்கான நடவடிக்கை பற்றி யோசிக்கப்படும். அந்த மத்திய குழு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் குறைந்த பட்சம் ஒரு வட்டத்தையாவது சென்று பார்வையிடும்.

''இந்த இயக்கத்தில் சேர்ந்து கொள்பவர்களுக்குத் தனி அடையாள வில்லைகள் கொடுக்கப்படும்.

''இந்த இயக்கத்துக்குத் தலைவர் கிடையாது. அமைப்பாளராக இருந்து நான் செயல்படுவேன்; இதில் எந்தவிதக் கட்சி வேறுபாடும் கிடையாது.

''சென்னை நகரை அழகுபடுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக இந்த இயக்கம் தொடங்கப்படுகிறது.

''கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கும் மேலாகச் சென்னையில் வசித்து வருபவன் என்பதாலும், சென்னையை அழகு மிக்க நகரங்களில் ஒன்ருக உருவாக்க வேண்டும் என்ற ஆவலின் காரணமாகவும், இந்திய ஜனதிபதி பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகும் நான் சமூகப் பணியில் ஈடுபட ஆர்வத்துடன் முன் வந்துள்ளேன்.

''இந்த முயற்சிக்குச் சென்னையில் வாழும் பொது மக்கள் எல்லாரும் ஒத்துழைப்புத் தரவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

அழகுபடுத்தும் இயக்கத்தை ஆளுநர் தொடங்கி வைத்தார்.

திரு. வி. வி. கிரி அவர்கள் ஆரம்பித்துள்ள சென்னை நகரைத் தூய்மைப்படுத்தி அழகுபடுத்தும் இயக்கத்தின் தொடக்க விழா, பிப்ரவரி 6-ஆம் நாள் மயிலை சீனிவாச சாஸ்திரி மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் இந்த இயக்கத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், ''சென்னை மாநகரைத் தூய்மையாகவும், சுகாதாரமாகவும், அழகாகவும் வைத்துக்கொள்ளத் தீவிரக் கண்காணிப்பும் துரித நடவடிக்கையும் மேற்கொள்ளத் தக்க முனைப்புடன் செயல்பட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

ஆளுநர் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், ''வெறும் நிர்வாக உத்தரவுகளினுல் மட்டும் நாம் இந்த இலட்சியத்தை நிறைவேற்றிட முடியாது; 'லைசென்ஸ்' இல்லாத மாட்டுத் தொழுவங்கள் வைத்திருப்பது, நகரை அசுத்தப்படுத்துவது, ஆக்கிரமிப்புகள் செய்வது, கலப்படம் ஆகிய குற்றங்களுக்காக ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ மூவாயிரம் வழக்குகளை மாநகராட்சி தொடர்கிறது; நீதிமன்றத்தில் இவற்றிற்குத் தீர்வு காணப் பல மாதங்கள் ஆகின்றன. மேலும், இத்தகைய குற்றவாளிகளுக்கு விதிக்கப்படும் தண்டனை மிகச் சொற்பமான அபராதத் தொகையாகவே உள்ளது; எனவே, எதிர்பார்க்கும் பலன் கிடைக்கவில்லை. ஆதலின், நடமாடும் நீதிமன்றம், சுகாதாரப் பாதுகாப்புப் படை ஆகியன ஏற்படுத்தலாம் என்கிற மாநகராட்சியின் யோசனை பாராட்டுக்குரியதாகும்.

''நகரின் தூய்மையைக் கெடுப்பவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்பட வேண்டும். மற்ற மாநகரங்களுடன் ஒப்பிடும் போது இப்போதும் சென்னை நகரம் சுத்தமாகவும் அழகாகவும் தான் உள்ளது. இருந்தாலும் எவ்வளவு தொகை செலவிட்டாலும் அதைத் தூய்மையாக வைத்துக் கொள்வோம் என்பது உறுதியில்லை. பெருந்தொகை செலவிடப்பட்டு, கூவம் சீரமைக்கப்பட்டு அழகுரக் கரைகள் அமைக்கப்பட்ட பிறகும், கூவம் இன்னமும் அசுத்தப்படுத்தப்படுகிறதே!, குடிசைகள் சுத்தமாக வைக்கப்பட்டிருந்த போதிலும் சுற்றுப்புறச் சூழல் சுகாதாரக் கேடாக உள்ளது.

''சென்னை நகரிலிருந்து தொலைவில் வெளி இடத்திற்குக் கறவை மாடுகளையும் மாட்டுத் தொழுவங்களையும் அப்புறப்படுத்த வேண்டும் என்ற யோசனையை நான் வரவேற்கிறேன். சுற்றித் திரியும் கால் நடைகளால் ஏற்படும் சாலைவிபத்துக்கள் தவிர்ப்பு, சுகாதார மேம்பாடு ஆகியன கருதி இந்த ஏற்பாடு மிகவும் அவசியமானதேயாகும்'' என்ருர்.

இந்தத் தொடக்க விழாவில் ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியம் அவர்களும் கலந்து கொண்டார்.

நகரை அழகுபடுத்தித் தூய்மைப்படுத்திச் சுகாதார நலன் பேணும்நோக்கத்தோடு, சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் திரு. டி. வி. அந்தோணி, ஆளுநர் அவர்களுக்குச் சில திட்டங்களையும் ஆலோசனைகளையும், வழிமுறைகளையும் விளக்கி ஒரு குறிப்பு அனுப்பியுள்ளார்.

ஞாயிற்றுக் கிழமை தோறும் துப்புரவு இயக்கத்தைச் சேர்ந்த குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் காலை 8 மணி முதல் 10 10 மணி வரை பல்வேறு பகுதிகளிலும் துப்புரவுப் பணிகளில் ஈடுபடுகின்றனர். அசுத்தமே நோய்களுக்கெல்லாம் காரணம் என்பதைக் கருத்தில் கொண்டு தொடங்கப்பட்டுள்ள இவ்வியக்கத்திற்கு நகர மக்கள் அனைவரும் தன்னுல் இயன்ற எல்லா உதவிகளையும் தந்து ஒத்துழைப்பு நல்கிச் சென்னை மாநகரின் தூய்மையையும், அழகையும் காத்திட முயற்சிப்பது நமக்கு நாமே செய்துகொள்ளும் நற்பணியாகும்!

வெற்றியை நோக்கி....!



அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!

— குடும்பநலத்துறை,
தமிழ்நாடு அரசு.



நெய்வேலி அனல் மின்நிலையம்

வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும், நிலை நிறுத்துவதற்கும், மின் உற்பத்தித் துறை மற்றும் போக்குவரத்துத் துறையிலும் கணிசமான அளவு முதலீடு செய்வது அவசியமாகிறது.

மின் உற்பத்தித் துறையின் வளர்ச்சி பொருளாதார வளர்ச்சியைவிட அதிகமாக இருத்தல் அவசியம் என்ற கருத்து தற்சமயம் பரவலாக ஒப்புக்கொண்ட ஒன்ருகும். இந்த அடிப்படையில்தான் இந்திய அரசு எப்பொழுதும் மின் உற்பத்திக்கும், அதன் விநியோகத் திட்டங்களுக்கும் முதலிடம் அளித்து வருகிறது.

நீண்டகாலமாகத் தமிழ்நாடு நீர் மின்சார நிலையங்களின் மூலமே மின் உற்பத்தி செய்து வந்தது. சுதந்தரத்திற்கு முன்னரே, பெரும்பான்மையான நீர் மின்சார உற்பத்தி பயன்படத் தொடங்கி விட்டது. மீதமுள்ளவை சுதந்தரத்திற்குப் பின்னர் பயன்படத் தொடங்கியது. சுதந்தரத்திற்குப் பின்னர் போடப்பட்ட திட்டங்கள் மூலம் விரிவுபடுத்தப்பட்ட வேளாண்மைத் துறையும், தொழில் துறையும் மின்சாரத் தேவையை அதிகப்படுத்தியுள்ளன. வேளாண்மைக்குப் பூமிக்கு அடியிலுள்ள நீரைப் பயன்படுத்துதல், சிறிய நடுத்தர தொழில்களின் வளர்ச்சி, நிறைய மின் சக்தி தேவைப்படும் அலுமினியம், உர, இரசாயனத் தொழிற்சாலைகள் முதலியவை, தமிழ் நாட்டில் நீர் மின் உற்பத்தியின் பற்ருக்குறையை வெளிப்படுத்தின.

அடிப்படைத் தேவைக்கு வேண்டிய மின் அளவு கூடுதலாகிக் கொண்டிருக்கிறது. மேலும் கோடைக் காலத்தில் மின்சாரத் தேவை மற்ற காலங்களைவிட அதிகமாகியிருக்கிறது. அச்சமயத்தில், நீர் மின்சார உற்பத்தியும் குறைகிறது. எனவே, கோடைக் காலத்தில் விவசாய, தொழில் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் தடைபடுகின்றன. எனவே, மத்திய அரசும், மாநில அரசும் தமிழ்நாட்டில் நீர்மின் உற்பத்தியைக் குறையாத வண்ணம் பாதுகாப்பதும், அனல் மின்சாரத்தைத் துணையாகக் கொள்வதும் அவசியமென உணர்ந்துள்ளன. இதற்குச் சிறந்த வழி, தமிழ்நாட்டில் கிடைக்கும் எரி பொருளாகிய பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்துவதுதான்.

நெய்வேலி நிலக்கரி நிறுவனம் ஒருங்கிணைந்த தொழில் நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது. அதில் அனல் மின் நிலையமும் ஒரு அங்கமாகும். நெய்வேலி அனல் மின் நிலையம், ஆசியாவிலேயே பழுப்பு நிலக்கரியை எரி பொருளாகப் பயன்படுத்தும் ஒரே அனல் மின் நிலையமாகும். அது சோவியத் நாட்டில்பொருளாதார, தொழில் நுணுக்க உதவியுடன் அமைக்கப்பட்டது. சோவியத் நிறுவனங்களின் மேதைத் தன்மை, முழு ஈடுபாடு ஆகியவை இந்த மின் நிலையம் அமையக் காரணமாக அமைந்தன.

நெய்வேலி அனல் மின் நிலையம் 1962-லிருந்து மூன்று கட்டங்களில்—முதலில் 250 மெகாவாட், பிறகு 400 மெகாவாட், கடைசியாக அதாவது 1970-ல் 600 மெகாவாட்டாக உருப்பெற்றது. இது இந்தியாவிலேயே மிகப் பெரிய அனல் மின் நிலையம்.

தமிழ்நாடு ஆண்டுதோறும் மின்சாரப் பற்ருக்குறையால் சிரமப்படும்போது முக்கியமாகத் தொழில், வேளாண்மைப் பணிகளுக்காகக் கோடைக் காலங்களில் அதிக மின்சாரம் தேவைப்படும்போது, நெய்வேலி அனல்

மின் நிலையம் மிகவும் உதவியுள்ளது. தமிழ்நாட்டின் மின்சாரத் தேவையை நிறைவேற்றுவதில் நெய்வேலியின் முக்கியத்துவம் தெளிவாகிறது.

தமிழகத்தில் உற்பத்தியாகும் மொத்த மின் சக்தியின் நெய்வேலி நிலையத்தின் பங்கு 25 சதவிகிதமாகும். இது, கோடைக் காலங்களில் 36 சதவிகிதம் அளவுக்கு உயருகிறது.

தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்ட மொத்த மின்சார அளவு 1973—74-ல் 6,960 மில்லியன் யூனிட்டுகள். அதில் நெய்வேலி தமிழ்நாட்டிற்கு அளித்த மின்சாரத்தின் அளவு 1,800 மில்லியன் யூனிட்டுகளாகும். தமிழ்நாட்டில் 1974—75-ல் பயன்படுத்தப்பட்ட மொத்த மின்சார அளவு 7,635 மில்லியன் யூனிட்டுகள். அதில் நெய்வேலி தமிழ்நாட்டிற்கு அளித்த மின்சாரத்தின் அளவு 1,788 மில்லியன் யூனிட்டுகளாகும்.

1975—76-ல் தமிழ்நாட்டில் உபயோகிக்கப்படும் என எதிர் பார்க்கப்படும் மொத்த மின்சார அளவு 7,725 மில்லியன் யூனிட்டுகள். அதில் நெய்வேலியின் பங்கு 1,980 மில்லியன் யூனிட்டுகளாக இருக்கும்.

கடந்த மூன்று ஆண்டுகளாக, கோடை மாதங்களான ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் நெய்வேலி வழங்கிய மின்சாரத்தின் அளவுகளாவன :

ஆண்டு		நெய்வேலி வழங்கிய மின்சார அளவு	தமிழ்நாட்டில் அதே காலத்தில் பயன் படுத்தப்பட்ட மின் சாரத்தில், நெய்வேலி வழங்கிய மின்சாரத் தின் அளவு
1973—74	...	629 மில்லியன் யூனிட்டுகள்	36.2 சதம்
1974—75	...	541 ,, ,,	30.5 சதம்
1975—76	...	526 ,, ,,	32.7 சதம்

போதுமான பழுப்பு நிலக்கரி கிடைக்காமையால், அனல் மின் நிலையத்தின் எல்லா யூனிட்டுகளையும் பயன்படுத்திக் கொள்ள இயலாத நிலை உள்ளது. நெய்வேலியில் இயங்கும் அனல் மின் நிலையம் உட்பட எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் தேவைப்படும் பழுப்பு நிலக்கரியைப் பெறும்பொருட்டு, இந்திய அரசு 87 கோடி ரூபாய் மதிப்பிற்குப் புதிய மூலதனம் வழங்கியுள்ளது. எதிர் பார்க்கின்றவாறு இப்புதிய திட்டம் வெற்றியடைந்துவிட்டால், 1979—80-லிருந்து தமிழ்நாட்டிற்கு ஆண்டொன்றிற்கு, 3,500 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் வழங்க முடியும். இது தமிழ்நாட்டின் மின்சார உற்பத்தி நிலைமையில் ஒரு நிலையான தன்மையை ஏற்படுத்தும்.

ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளது போல், சோவியத் நாட்டினரால் அமைக்கப்பட்டுள்ள இம் மின் நிலையம் மிகச் சிறந்த இயந்திரச் சாதனங்களைக் கொண்டுள்ளது. வெற்றிகரமாக இத் தொழிற்சாலை இயங்க சிறந்த சாதனங்கள் மட்டும் போதாது; இந்த அனல் மின் நிலையத்தை இயக்குபவர்களும், பராமரிப்பவர்களும் ஒருங்கிணைந்து செயல்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையத்தில் நுட்பமான அறிவு வாய்ந்த பொறியாளர்கள் உள்ளனர். ஹர்த்வார்கஞ்ச், ஒப்ரா, எண்ணூர் ஆகிய நிலையங்களுக்கு நெய்வேலி அனல் மின் நிலைய தொழிலாளர்கள் வெற்றிகரமாகச் சில முக்கிய பணிகளை முடித்துத் திரும்பியுள்ளனர். கல்பாக்கம் அணுசக்தி நிலையம், மத்திய மின்சார நிறுவனம் போன்ற பல்வேறு நிறுவனங்கள் தங்களுடைய ஊழியர்களைப் பயிற்சிக்காக இங்கு அனுப்புகின்றன.

அண்மையில் வருகை தந்த சோவியத் தூதர், ''நெய்வேலி அனல் மின் நிலையம் சிறப்பாகச் செயல்படுவதற்கு இயந்திரச் சாதனங்களின் தரம் மட்டும் காரணமல்ல; இங்குள்ள பொறியாளர்களின் தொழிற்நுணுக்க அறிவும், நிருவாகத் திறமையும் காரணமாகும்'' எனக் கூறியுள்ளார்.

நெய்வேலி அனல் மின் நிலையம் முழுமையான திறனுடன் இயங்கினாலும், தமிழ்நாட்டின் மின்சாரத் தேவைக்கும், மின் உற்பத்திக்கும் இடையே பெருத்த வேறுபாடு அடுத்த பத்தாண்டுகளுக்கு இருக்கவே செய்யும். ஏறத்தாழ நீர் மின்சாரம் உற்பத்தி செய்யவல்ல எல்லா நிலையங்களையும் பயன்படுத்திக் கொண்டாகிவிட்டது. தமிழ்நாட்டிற்கு நிலக்கரி கொண்டு வர வேண்டுமானால் போக்குவரத்துச் செலவு அதிகமாவதுடன், பெருத்த அளவுக்கு முதலீடும் செய்ய வேண்டும். ஆகவே, தமிழ்நாட்டில் கிடைக்கும் எரிபொருளான பழுப்பு நிலக்கரியை முழு அளவுக்குப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்ய வேண்டும்.

1961-ல் சோவியத் குடியரசுத் தலைவர் பிரஸ்னேவ் நெய்வேலிக்கு வருகை தந்தபோது, நெய்வேலி அனல் மின் நிலையம் பிற்காலத்தில் 2,000 மெகாவாட் திறனுள்ள நிலையமாக அமையுமென நம்பிக்கை தெரிவித்தார்.

நெய்வேலி திட்டமானது ஜவஹர்லால் நேரு, காமராஜ், டி.டி. கிருஷ்ணமாச்சாரி போன்ற சிறந்த மேதைகளின் தீர்க்கதரிசனத்தாலும், வாழ்த்துக்களாலும் உருப்பெற்றது என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

நெய்வேலியில் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தச் செயல்படும் அனல் மின் நிலையம், தற்போதைய அளவோடு நின்றுவிடாமல் மேலும் விரிவுபடுத்தப்படும் என்ற நம் நம்பிக்கைக்கு மேற்கூறிய பெரியோர்களின் தீர்க்க தரிசனமும், வளர்ந்து வரும் மின்சாரத் தேவையும், திறம்பட இயங்கும் நெய்வேலி மின் நிலையமும் முக்கியக் காரணங்களாகும் என்றால் அது மிகையல்ல.

> ''சட்டம் என்பது சமூக நீதிக்கான ஒரு கருவியாக விளங்க வேண்டும். நாட்டுக்குப் புது வடிவம் கொடுக்கும் முயற்சிகளில் சட்டத்தின் பணி உயிர்த்துடிப்புடன் இருக்க வேண்டும்.''
>
> —இந்திரா காந்தி

தமிழகத்தின் மிகப் பெரிய உப்பளம் உருவாகிறது!

தமிழகத்தில் இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின் தங்கியப் பகுதியாக உள்ளது. இதனால் இங்கு வாழும் மக்கள் நிரந்தர தொழில் ஏதும் இல்லாமல் மிகவும் பின் தங்கியவர்களாகவே இருக்கிறார்கள். தமிழக அரசு இக்குறையைத் தீர்த்திட தீவிர முயற்சி எடுத்துக் கொண்டது. அந்த முயற்சியின் காரணமாக இராமநாதபுரம் மாவட்டத்தை ஒரு தொழில் உலகமாக உருவாக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இராமநாதபுரத்திலிருந்து 44 கிலோ மீட்டர் தொலைவிலும், முதுகுளத்தூரிலிருந்து 38 கிலோ மீட்டர் தொலைவிலும் மாரியூருக்கும் வாலி நோக்கத்திற்கு அருகேயும் சுமார் 5,500 ஏக்கர் நிலம் கேட்பாரற்றுக் கிடந்தது.

இந்த இடத்தில் ''உமரிச் செடி'' என்ற ''உப்பம்பூண்டு'' மட்டும் ஆங்காங்கே முளைத்துக் கிடந்தன. இந்த நிலத்திற்கு 3 பர்லாங் தொலைவில் கடல் இருந்து வருகிறது. கடல் தண்ணீரின் உதவியினால்தான் உமரிச் செடிகள் உயிர் பிழைத்திருந்தன.

கடந்த 1974-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்த நிலம் சர்வே செய்யப்பட்டது. மொத்தம் 5,500 ஏக்கர் நிலம் இருந்ததென சர்வேயர்கள் கணக்கிட்டனர்.

சர்வே செய்கையில் அருகிலிருந்த சில 'உமரிச் செடிகள்' அவர்கள் கண்களில் தட்டுப்பட்டன. அந்தச் செடியைப் பிடுங்கி ஆராய்ச்சி செய்தபோது அங்கே உப்பு இருப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

உப்பளம் உருவானது !

அந்தச் சர்வே 1974-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை நீடித்தது. முடிவாக அங்கு மிகப் பெரிய உப்பளம் ஒன்று அமைக்கலாம் என்று தமிழக அரசுக்கு சிபாரிசு செய்யப்பட்டது.

எனவே 5,500 ஏக்கர் நிலப் பரப்புள்ள அந்த இடத்தில் ரூ. 4 கோடி செலவில் தமிழ்நாடு உப்புக் கழகத்தின் சார்பாக உப்பளம் அமைப்பதென முடிவெடுக்கப்பட்டு கடந்த மே மாதம் 15-ந் தேதியன்று வேலைகள் தொடங்கப்பட்டன.

இதன் முதல் கட்டமாக இதற்காக ரூ. 75 இலட்சம் ஒதுக்கப்பட்டு வேலைகளும் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இந்த உப்பளத்திற்கு '**மாரியூர் வாலி நோக்கம் உப்பளம்**' என்று பெயரிடப்பட்டுள்ளது.

உப்பளத்திற்கான பெரிய கரைபோடுதல், வாரிபாத்திகள் அமைத்தல் போன்ற பணிகளில் கிட்டத்தட்ட 600 பேரிலிருந்து 800 பேர்வரை வேலையில் ஈடுபட்டு உள்ளார்கள். வேலையும் சுறுசுறுப்பாக நடைபெற்று வருகிறது.

மொத்தம் 650 வாரிபாத்திகள் அமைக்கப்பட வேண்டும் என கணக்கிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாத்தியும் 330 அடி நீளமும், 105 அடி அகலமும் கொண்டதாகும். தற்போது 40 பாத்திகளின் வேலைகள் நடந்து கொண்டு வருகின்றன.

அதோடு மட்டுமல்லாமல், கடல் தண்ணீரை வாய்க்கால் மூலமாகக் கொண்டு வருகிறார்கள். அந்நீரை 'ரிசர்வாயர்' மூலமாக 'கண்டன்சர்' பகுதிக்கு எடுத்து வந்து தண்ணீரின் கனத்தைக் குறைக்கிறார்கள். பின்னர் 30 'வாட்ஸ்' சக்தி உள்ள 2 பைப்புகள் மூலமாக வாரி பாத்திக்கு நீர்பாய்ச்சி சோதனை செய்து வருகிறார்கள்.

முதல் கட்டமாக ஒதுக்கப்பட்ட 75 இலட்சம் ரூபாயில் இதுவரை ரூ. 10 இலட்சத்திற்கான பணிகள் பூர்த்தியாகி உள்ளது.

உற்பத்தி எப்போது ?

1976-ஆம் ஆண்டு மார்ச் மாதம், முதல் கட்ட வேலைகள் முடிந்து, உற்பத்தி தொடங்கிவிடும். ஆனால் முழுமையான பணிகள் 1978-ம் ஆண்டுதான் முடிவடையும் என்று கூறப்படுகிறது.

உற்பத்தி தொடங்கிய பின்னர் தமிழகத்திலேயே இது ஒரு மிகப் பெரிய உப்பளமாகும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. இங்கு ஆண்டு ஒன்றுக்கு 2.4 இலட்சம் டன் வரை உப்பு உற்பத்தி செய்ய முடியும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

மீன்பிடித் துறைமுகம்

கடலருகே உள்ள ஒரு சிறு குக்கிராமம் தான் வாலிநோக்கம். இங்கு உள்ளவர்கள் தற்போது மீன்பிடிக்கும் தொழில் ஈடுபட்டு உள்ளார்கள். விரைவில் வாலி நோக்கத்தில் மீன் பிடித்துறைமுகம் அமையும். அதற்கான வாய்ப்புக்களும், சூழ்நிலைகளும் தற்போது காணப்படுகின்றன.

மேலும் கப்பல்கள் வந்து தங்குவதற்கு ஏற்ப வாலி நோக்கத்திற்கு 2 மைல் தொலைவில் கடலில் ஆழமான பகுதி உள்ளது.

உப்பளத்தில் உற்பத்தி ஆகும், உப்பை ஏற்றுமதி செய்யவும் பெரிய கப்பல்களைப் பயன்படுத்தி கப்பல் போக்குவரத்து நடத்தவும் ஏதுவான சூழ்நிலையினை இங்கே இயற்கையே உருவாக்கித் தந்திருக்கிறது.

கடலருகே நல்ல தண்ணீர்

கடலில் இருந்து அரைமைல் தள்ளி இருக்கும் வாலி நோக்கம் காட்டில் ஆராய்ச்சி நடத்திய போது, நல்ல தண்ணீர் இருக்கும் அறிகுறிகள் தென்பட்டன. ஆகவே, தொடர்ந்து ஆராய்ச்சி செய்து அங்கு ஒரு உறைக் கிணற்றை அமைத்துள்ளனர்.

இந்தக் கிணற்றில் கிடைக்கும் தண்ணீர் இங்கு வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கும், மற்றவர்களுக்கும் போதுமானதாக உள்ளது. மேலும் இந்தக் காட்டில் 6 உறைக்கிணறுகள் தோண்ட திட்டமிடப்பட்டுள்ளது.

உப்பளத்தில் வேலை பார்க்கும் 100 குடும்பத்தினருக்குக் குடியிருப்பு வசதிகள் செய்யவும் மருத்துவமனை, காவல்நிலையம், பேருந்துப் போக்குவரத்து முதலிய வசதிகள் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளன.

போக்குவரத்துக்காக வாலி நோக்கத்திற்கும் கீழக்கடாரம் ரோட்டிற்கும் இடையே உள்ள 8 கிலோ மீட்டர் பாதையையும், வாலி நோக்கத்திற்கும் கடுக்சந்தை ரோட்டிற்கும் இடையே உள்ள 15 கிலோ மீட்டர் பாதையையும் ரூ. 50 இலட்சம் செலவில் சீரமைக்கத் திட்டமிடப்பட்டு உள்ளது.

எனவே, மாரியூர்-வாலி நோக்கம் உப்பளம், இராமநாதபுர மாவட்டத்தின் வளர்ச்சிக்கு உதவும் என்பதில் ஐயமில்லை.

[தகவல்: மக்கள் தொடர்பு அலுவலர்,
இராமநாதபுரம் மாவட்டம்.]

மறவாதீர்கள்;

உங்கள் மகள் ஒருநாள்

மணமகளாக அமர வேண்டியவள்!

திருமணம் என்றாலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்றால்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கினால் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்றோம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

	மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது	10 ஆண்டு இறுதியில் கிடைப்பது
	ரூ.	ரூ.	ரூ.
ரெக்கரிங் டிபாசிட்	5/-	375/-	...
	10/-	750/-	...
வளரும் மாதச் சேமிப்பு	5/-	...	825/-
	10/-	...	1,650/-

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002



ஊரகச் சீரமைப்புத் திட்டத்தால் உருவான பயிற்சி நிலையம்

வறுமையைப் போக்கி வளமையைப் பெருக்க பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் வகுத்தளித்த இருபதம்சத் திட்டத்தின் அடிப்படையில், சோமங்கலம் கிராமத்தில், பிரதமர் அவர்களே தொடங்கி வைத்த ஊரகச் சீரமைப்புத் திட்டத்தின் பணிகள் துவங்கிவிட்டன. இத்திட்டம் செயல்படும் பத்து கிராமங்களிலும் அபிவிருத்திப் பணிகளைத் துரிதமாகத் துவக்கி வருகின்றனர்.

கதர் கிராமத் தொழில்களில் பெரிதும் குறிப்பிடத்தக்க பனைத் தொழிலை வளர்க்கும் தமிழ்நாடு பனைவெல்லம் மற்றும் பனந்தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் அப்பகுதியில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க ஒரு முன்னோடித் திட்டத்தினை வகுத்துச் செயற்படுத்தத் தொடங்கிவிட்டது. இதற்காகச் சோமங்கலம் திட்டப் பகுதியில், பயன்படுத்தப்படாமல் இருக்கும் இளம் பனைகளின் மட்டைகளிலிருந்து பனந்தும்பு தயாரிக்க- ஏற்றுமதித் தரமுள்ள பனந்தும்பு தயாரிக்க இயலுமா என்பது பற்றிப் பரிசீலிக்கப்பட்டது. இந்தப் பரிசீலனையில் இங்குக் கிடைக்கும் தும்பு, நல்ல தரமுடையதாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

ஊனமுற்றோர்களுக்கும் பனந்தும்பு பயிற்சி நிலையம் வாழ்வளிக்கிறது

அமைதியுடன் ஆக்கப் பணி புரியும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் எப்போதும் போல் இத்திட்டத்தினை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில் முந்திக்கொண்டுவிட்டது.

இதைத் தொடர்ந்து, 1976 பிப்ரவரி 21-ல் சோமங்கலம் அரிசனக் குடியிருப்பில், விரிந்து பரந்து நிற்கும் ஓர் ஆலமரத்தின் அடியில், அனைத்திந்திய கதர் கிராமத் தொழில் குழுவின் பனைத் தொழில் இயக்குநர் திரு. என். கோபிநாதன் பனந்தும்புப் பயிற்சி நிலையத்தைத் தொடங்கி வைத்தார். அவர் தொழில் வினைஞர்களுக்கு இலவசமாகத் தொழிற் கருவிகள் கொடுக்க உறுதியளித்தார். தொடங்கப்பட்டுள்ள இந்த முன்னோடித் திட்டத்தில் தற்போது 15 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. உடல் ஊனமுற்ற இருவரும்கூட இப்பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

உடல் ஊனமுற்ற ஒருவரில் 14 வயதுடைய மல்லிகா என்ற சிறுமியை விசாரித்தபோது ''என் அப்பா இறந்து விட்டார். அம்மா வயல் வேலைக்குப் போகிறார். நான்தான் எங்கள் வீட்டில் மூத்த பெண். எனக்குப் பின் இரண்டு குழந்தைகள். என் அம்மாவுக்கு ஒரு நாளைக்கு 1.75 ரூபாய் கூலி. இதைத் தவிர எங்கள் குடும்பத்திற்கு வேறு வருமானம் இல்லை. இப்போது இந்தப் பயிற்சித் திட்டத்தில் எனக்கு நாள் ஒன்றுக்கு 3 ரூபாய் கிடைக்கிறது. இந்த வருமானம், எங்கள் குடும்பத்தில் பட்டினியே இல்லை என்று செய்துவிடும்'' என்று உள்ளமும், முகமும் மலரக் கூறுகிறாள். ஏழைகள் வாழ்வில் மறுமலர்ச்சி பூத்து மலர்வதைக் கண்டு நாமும் பெருமைப்படுகிறோம்.

''மூன்று மாதப் பயிற்சிக்குப் பிறகு, இந்தப் பயிற்சியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் கூலிக்குப் பதிலாக, தாங்கள் அடித்துத் தருகிற தும்புக்குரிய விலையைப் பெறுவார்கள்'' என்றும் அப்போது இவர்கள் நபர் ஒன்றுக்கு 5 ரூபாய் வரை சம்பாதிக்கலாம் என்றும், 'விரைவில் மரச்சுத்தியல் கொண்டு தும்பு அடிப்பதற்குப் பதிலாகத் தும்படிக்கும் இயந்திரத்தைப் பொருத்திக் கொடுக்க முயற்சிக்கிறோம்'' என்றும் இணையத்தின் நிருவாக இயக்குநர் திரு. கே. சம்பந்தம் அவர்கள் குறிப்பிட்டார்.

''இந்தத் தும்படிக்கும் பயிற்சித் திட்டம் முழுவெற்றி பெறுமானால் இது தும்பை சுத்திகரித்துத் தரம் பிரிக்கும் நிலையமாகவும் மாற்றப்படும்'' என்றும் ''தும்பைத் தூத்துக்குடிக்கு அனுப்பாமல் இங்கேயே சுத்தம் செய்து தரம் பிரிப்பதால் தும்புக்கு விலையும் அதிகமாகக் கிடைக்கும்'' என்றும் அதன் பிறகு இங்கேயே ஒரு 'பிரஷ்' தொழிற்சாலையையும் நிறுவ இணையத்தின் பெருந்தலைவர் ஆலோசனை தெரிவித்துள்ளதாகவும் கூறினார்.

காதி கிராப்ட்

உங்கள் நல்வாழ்விற்குத் தரமான பொருட்களைத் தருகிறோம்!



உடல் மணக்க 'குறிஞ்சி' சோப். உடை வெளுக்க 'கோபுரம்' சலவை சோப். தித்திக்கும் தூய தேன். 'அக்மார்க்' செக்கெண்ணெய். தோல் காலணிகள், கைப்பைகள். வீட்டை அலங்கரிக்க கலைப் பொருட்கள். தினசரி உபயோகத்திற்கு பிரம்பு, மூங்கில், மற்றும் பனைப் பொருட்கள். வேலைப்பாடு மிக்க மட்பாண்டங்கள்.

அழைப்பு விடுக்க கைக் காகிதங்கள். மலிவு தீப்பெட்டிகள். கதர் பருத்தி, கதர் சில்க் துணிவகைகள். இவற்றை வாங்கி மகிழ்வீர்.

கிராமக் கைவினைஞர்கள் நல்வாழ்வு பெற அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை வாங்குவீர்

தரமானது ... மலிவானது ... இவை வாங்கிட தமிழகமெங்கும் 180 காதி கிராப்ட்கள்.

காதி கிராப்ட்

தமிழ்நாடு கதர், கிராமத் தொழில் வாரியம், 'குறளகம்', எஸ்ப்ளனேடு, சென்னை-600 001.

KK/381



ஊதியம் தரப்படுகிறது.

பனந்தும்பு அடித்தல்

தற்போது சோமங்கலத்திலுள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளி எல்லைக்குள் உள்ள வடலிப்பனைகளிலிருந்து பத்தல்கள் சேகரிக்கப்படுகின்றன. பத்தல்களை அறுத்தெடுக்க, இந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஒருவருக்கு, மாதவரம் பனைப்பொருள் திட்டக் கண்காணிப்பாளர், பயிற்சியளிக்கிறார். உயர்நிலைப் பள்ளியின் எல்லைக்குள் உள்ள வடலிப் பனைகளிலிருந்து பத்தல் சேகரித்துக்கொள்ள சைதைக் கோட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அனுமதி கொடுத்திருக்கிறார்.

தொடக்கத்தில் நாள் ஒன்றுக்கு 5 பத்தல்வரை அடித்த பயிற்சியாளர் ஒவ்வொருவரும் இப்போது 15 பத்தல் வரை அடிக்கிறார்கள்.

பிரதமரின் 20 அம்சத்திட்ட அடிப்படையில் பனைத்தொழில் மூலம் வேலைவாய்ப்பு, குடும்ப வருவாய் உயர்வு ஆகியவற்றை மையமாகக்கொண்டு தொடங்கப் பட்டுள்ள இந்தப் பயிற்சி நிலையத்தைத் தொடர்ந்து திட்டப் பகுதியில் மேலும் பல நிலையங்களைத் தொடங்கி நடத்த மாநில கதர் கிராமத் தொழில் வாரியத்தின் உதவியுடனும் அனைத்திந்திய கதர் கிராமத் தொழில் குழுவின் பேராதரவுடனும் ஆவன செய்ய மாநில பனைவெல்லம் மற்றும் பனந்தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையத்தக்க முன்னேற்பாடுகளைச் செய்து வருகிறது.

இணையத்தின் பெருந் தலைவர் திரு வி. வி. இராமசாமி அவர்கள் பயிற்சியாளர்களுக்கு உதவித் தொகை வழங்கிவிட்டு, "அயல் வியாபாரிகள் இந்தத் திட்டப் பகுதியில் தும்பு சேகரிக்கும் நோக்கத்தோடு எத்தகைய இடையூறும் செய்யாமல் இருந்தால் 100 பேர்களுக்கு மாதம் ஒன்றுக்குத் தலா 150 ரூபாய் சம்பாதிப்பதற்கான வழிவகைகளைக் காணமுடியும்" என்றும், "இப்பகுதியில் உள்ள பனைகளை வாடகையின்றிப் பயன்படுத்திக் கொள்வதற்கு இணையத்திற்கு அனுமதி கொடுத்தால் இத் தொழிலை மிகச் சிறப்பான முறையில் வளர்க்க முடியும்" என்றும் கருத்துத் தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் பெருஞ்செல்வமான பனைமரத்தைக் கற்பகத்தரு என்று கூறுவார்கள். பிரதமரின் மாபெரும் திட்டத்திற்குத் தங்களை முதலாவதாக ஈடுபடுத்திக் கொண்ட பெருமையில் அம்மரங்கள் ஊரின் எல்லையில் அசைந்தாடிக் கொண்டிருந்தன. உழவர் வாழ்வு வளம் பெற இக் கிராமத் தொழில்கள் உறுதுணையாக இருக்குமென்பதை நிலைநாட்டும் வகையில் துவக்கப்பட்டிருக்கும் இந்தப் பயிற்சி நிலையம் சிறந்து வளரட்டும்.

—சாமி பழனியப்பன்.



மாணவ மணிகளுக்கு மலிவு விலையில் பாடநூல்கள்!

"பள்ளி-கல்லூரி மாணவர்களுக்கு நியாய விலையில் பாடநூல்கள், எழுதுபொருள்கள் வழங்குதல்; விலைகள் கண்டிப்பாகக் கட்டுப்படுத்தப்படுதல்"

என்பது இருபது அம்சப் பொருளாதாரத் திட்டங்களிலே ஒன்றாகும். இதனைச் செயல்படுத்தும் வகையிலே தமிழ்நாட்டில் பள்ளி கல்லூரிகளுக்கான பாடநூல்கள் மலிவு விலையிலே வழங்கப்பட்டு வருகின்றன.

ஒன்று, இரண்டு, மூன்று வகுப்புகளுக்கான பாடநூல்கள் இளஞ்சிறார்களின் மனத்தைக் கவரும் வகையில் பல வண்ணங்களில் அச்சடிக்கப்படுகின்றன. விலையும் குறைந்த அளவே நிர்ணயிக்கப்படுகின்றது.

மேற்கண்ட வகுப்புகளில் பயிலும் பதினெட்டு இலட்சம் ஏழை, எளிய மாணவர்களுக்காக ரூ. 85,89,579 மதிப்புள்ள பாடநூல்கள் இலவசமாக வழங்கப் பட்டுள்ளன.

பள்ளிப் பாடநூல்களுக்கான படிகள் (Copies) படிப்படியாக அதிகரித்து வந்துள்ளன.

1974-75-ல் இந்நிறுவனம் 200 இலட்சத்திற்கும் மேற்பட்ட படிகள் வெளியிட்டுள்ளது. ஓர் ஆண்டில் நிறுவனம் வெளியிடும் பாட நூல்களின் எண்ணிக்கை 32 மில்லியன் ஆகும்; இவை 176 தலைப்புகளில் வெளியிடப்படுகின்றன.

இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற வகையில், குறைந்த விலையில் தரமான நூல்களைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

படமும் செய்தியும்

மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் 1.3.'76 அன்று தலைமைச் செயலகத்தில் பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றார்.



நுகர்பொருள் வாணிபக் கழகச் சில்லறை அங்காடிகளில் வழங்கப்படும் பொருள்கள் தரமானவையாக உள்ளனவா என்று ஆளுநர் 1.3.'76 அன்று சோதனையிட்டார்.



சென்னைக்கு 2.3.'76 அன்று வருகை தந்த பல்கேரிய நாட்டு கலை, கலாச்சார அமைச்சர் திருமதி லிலிமிலா ஷிவ்கோவா அவர்கள் தமிழ்நாடு அரசின் சார்பில் வரவேற்கப் பட்டார்.

பல்கேரிய நாட்டுக் கலை, கலாச்சார அமைச்சருக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில், ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்ரமணியம் அவர்கள் 2.3.'76-ல் நினைவுப் பொருள் வழங்கினார்.

சென்னை தீவுத் திடலில் 2.3.'76 அன்று நடைபெற்ற சுற்றுலாப் பொருட்காட்சி நிறைவு விழாவில், சிறந்த அரங்குகளை அமைத்தவர்களுக்கு திரு. ஆர். வி. சுப்ரமணியம் பரிசு வழங்கினார்.

ஆளுநர் அவர்கள் 3.3.'76 அன்று ராஜபவனத்தில் தமிழக எழுத்தாளர்களைச் சந்தித்து உரையாடினார்.

சென்னைக்கு 3.3.'76-ல் வருகை தந்த யுகோஸ்லேவிய நாட்டுச் செய்தித் துறை அமைச்சர் திரு. மகமத் பெர்போராமிக் அவர்கள் வரவேற்கப்பட்டார்.



தமிழ்நாடு குற்றவாளிகள் சீர்திருத்தக் கழகத்தின் மாநில மாநாடு 5.3.'76 அன்று சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.



தமிழ்நாடு அரசின் முன்னுள் தலைமைச் செயலாளர் திரு. பி. சபாநாயகம் ஐ.ஏ.எஸ்., அவர்களுக்குக் காவல் துறையின் சார்பில் 9.3.'76 அன்று அணி வகுப்பு மரியாதை வழங்கப் பெற்றது.

வேளாண்மை உற்பத்தித் திட்டங்கள் குறித்து நடைபெற்ற தென்மண்டல மாநாடு 8 3.'76 அன்று ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.



தொழில் பழகுநர் பயிற்சித் திட்டம்

ஏழை எளியவர்கள் ஏற்றம் பெற்றிடவும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்கள் தகுந்த வாழ்வினை நடத்திடவும் அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி அவைகளைச் சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

குறிப்பாக, கற்றவர்கள், கல்லாதவர்கள், தொழில் பயிற்சி பெற்றவர்கள், பெருதவர்கள் ஆகியோர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திடுதல் இன்றியமையாததாகும். இவைகளுக்கெல்லாம் வழிகாட்டுகின்ற வகையில் அமைந்துள்ளது பிரதமர் அவர்களின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம். அது

''எல்லா மக்களுக்கும், குறிப்பாக எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பு, பயிற்சி வாய்ப்பை அதிகரிக்க உதவித் தொகையுடன்கூடிய பயிற்சித் திட்டம்''

இதை விரைந்து நிறைவேற்றுவதில் மைய, மாநில அரசுகளின் வேலைவாய்ப்பு, பயிற்சித்துறை இயக்குநரகங்களும், பல்வேறு தொழில் நிறுவனங்களும் பெரும் பங்கு கொண்டுள்ளன.

தொழில் பழகுநர் பயிற்சித் திட்டம்

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிடுவதில் ''தொழில் பழகுநர் பயிற்சித் திட்டம்'' முக்கிய இடத்தைப் பெற்று விளங்குகிறது.

நாட்டிலுள்ள அனைத்துத் தொழிற் பயிற்சி நிலையங்களும் மாணவர்களுக்குப் பாடமுறையில்தான் தொழிற் பயிற்சியளிக்கின்றன. ஆனல் செய்முறைப் ப்யிற்சி அளித்திடுதல் இன்றியமையாததாகும். இத்தகு பயிற்சியினை நடைமுறைக்கு அரசு தொழில் நிறுவனங்களும், தனியார் தொழில் நிறுவனங்களும் அளித்திட வேண்டுமென்பதற்காக தொழில் பழகுநர் பயிற்சிச் சட்டத்தினை அரசு 1961 ஆம் ஆண்டில் கொண்டு வந்தது.

இச்சட்டத்தின் கீழ் இதுவரை குறிப்பிட்ட 216 தொழில் நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப் பெற்று அவைகளில் 103 வகைத் தொழில்கள் பயிற்சியளிக்க வரையறுக்கப்பட்டுள்ளன. தொழில் பழகுநர்கள் புதியவர்களாகவும், தொழிற்பயிற்சி நிலையங்களிலிருந்து பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களாகவும் இருக்கலாம். தொழில் நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான தகுதிகள் படைத்த விண்ணப்பதாரர்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ளும் உரிமையினைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

பயிற்சியில் சேரத்தகுதி

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர் தொழிற்பயிற்சி நிலையங்களின் முதல்வர்களாலும், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரகங்களாலும் தொழில் நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். பயிற்சியில் சேர 14 வயதுக்கு மேற்பட்ட பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள், அதற்குக் குறைந்த கல்வி பயின்றவர்கள், தொழிற் பயிற்சி நிலையத்தில் பயின்றவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். மேலும் இவர்கள் உயரம்,



ஒவ்வொரு மாட்டிலிருந்தும் வருடத்திற்கு ரூ.500/-க்கு மேல் அதிகப்படி சம்பாதியுங்கள்...
பூன்-ஓ-மில்க்® கிற்கு நாளொன்றுக்கு 20 பைசா செலவிடுங்கள்

கொழுப்பு மிக்க மிருதுவான பாலுக்கும், கூடுதலான லாபத்திற்கும் பூன்-ஓ-மில்க்

பொருள்கள் எல்லாம் சிறந்த விகிதங்களில் அடங்கியுள்ளன. இவை மாடுகளின் சினைத் திறனை மேம்படுத்துகின்றன.

பூன்-ஓ-மில்க் மூலம் உங்களுக்கு ஒவ்வொரு மாட்டிலிருந்தும் வருடத்திற்கு ரூ. 500/-க்கு மேல் அதிகப்படி லாபம் கிடைக்கிறது.

- தினமும் ஒருவேளை தீவனத்துடன் 15 கிராம் பூன்-ஓ-மில்க் கலந்து கொடுங்கள்
- ஒவ்வொரு மாட்டிற்கும் தினமும் 1 கிலோ கிராம் அதிகப்படி தீவனம் கொடுங்கள்

- **பூன்-ஓ-மில்க்கில்**, ஃபேட்டி மாறுபாட்டு விகிதத்தை அதிகமாக்கி, ஹார்மோனற்ற கெலெக்டோகோக்காகச் செயலாற்றி இதன் பயனாக பால் கறவையை 10% அதிகமாக்கும் அயோடினேடெட் கேஸினின் அடங்கியுள்ளது.
- **பூன்-ஓ-மில்க்கில்**, விரைவில் ஆவியாகும் ஆஸிட்ஸ்களும்—அஸிடேட்டு-களும், புட்ரிக் ஆஸிடும் அடங்கியுள்ளன; இவை வெண்ணைச்சத்தை 15% அதிக-மாக்குகின்றன என்பது ரேடியோ ஐஸோடோபிக் சோதனைகள் மூலம் நிருபணமாகியுள்ளது.
- **பூன்-ஓ-மில்க்கில்**, மாடுகளை ஆரோக்கியமாக வைத்திருந்து, பால் ஜுரத்தைக் கட்டுப்படுத்தும் கால்ஷியம், ஃபாஸ்ஃபரஸ் மற்றும் வைட்டமின் 'டி'யின் பூஸ்டர் டோஸும் அடங்கியுள்ளன.
- **பூன்-ஓ-மில்க்கில்**, சிறு அளவுகளில் தேவைப் படும், இன்றியமையாத தாதுப்

பூன்-ஓ-மில்க் கெடுதலற்றது பயன்மிக்கது

கறவைமாடுகளுக்கு பூன்-ஓ-மில்க் ஒரு விதமான கெடுதலுமற்றது என்பதைப் பிரபலமான மிருக வைத்தியர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

1 கிலோ மற்றும் 450 கிராம் பாக்கட்டுகளில் கிடைக்கிறது.

பூன்-ஓ-மில்க் உங்கள் மாடுகளுக்கு ஒரு வரப் பிரசாதம் உங்கள் லாபத்திற்கு ஒரு ஊந்துகோல்

பூன்-ஓ-மில்க்—கால் நடைத் தீவனத் துணை உணவு.
ஆராய்ச்சியின் அடிப்படையில் தயாரிப்பவர்கள்:
ஏரீஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் ப்ரை. லிட்., த.பெ. எண். 9417, பம்பாய் 400 093

விநியோகஸ்தர்கள் :— தண்ணீர்மலை ஏஜென்சி, 41-ஏ, கிரிரோடு, தி. நகர், சென்னை-600017.
இன்டோமேக் கார்ப்பரேஷன், 3, கொல்லன்பட்டறை தெரு, கிழவெளி வீதி, மதுரை-1.
ஸ்ரீ அன்னபூரணா எண்டர்பிரைசஸ், 651/1, ஜவகர் பஜார், கரூர், திருச்சி மாவட்டம்.
விவேகானந்தா எண்டர்பிரைசஸ், 101, மருத்துவமனை சாலை, சீர்காழி அஞ்சல், தஞ்சை மாவட்டம்.
நடராஜ் ஏஜென்ஸீஸ், கோபிசெட்டிபாளையம், கோவை மாவட்டம்.

விற்பனையாளர்கள் இல்லாத பகுதிகளில் ஸ்டாக்கிஸ்ட்டுகள் தேவை.

"வளர்ந்து வரும் நமது பொருளாதாரத்திற்குத் தேவையான பொருள்களில் பெரும்பாலானவற்றை இந்நாட்டிலேயே தயாரிப்போம். நமது நிபுணர்களையும், நமது பண்டங்களையும் உரிய மதிப்புடன் நடத்துவோம். எங்கும் வியாபிக்கும் சுதேசி உணர்வு இனிமேல் பெருகிக் கொண்டே போக வேண்டும். இதுதான் நாலாவது, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் நோக்கம்."

—இந்திரா காந்தி

மார்பளவு, கண்பார்வை, போன்றவைகளில் வரையறுக்கப் பெற்ற தகுதிகள் பெற்றிரு வேண்டும்.

புதிதாகப் பயிற்சிக்குச் சேர்பவர்கள் தகுதி வாய்ந்த மருத்துவர்களிடமிருந்து உடல் நலச் சான்றிதழும் பெற்றுத் தர வேண்டும். அனுமதிக்கப்படத்தக்க வகையில் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்கள், அவர்கள் அந்நிலையங்களில் பெற்ற பயிற்சிக் காலத்திற்கேற்றவாறு, தொழில் பழகும் காலத்தின் பயிற்சிக் காலம் குறைக்கப்பட அவர்கள் தகுதியுள்ளவர்களாவர். ஆண்டில் பிப்ரவரி, ஆகஸ்டுத் திங்களில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

தொழில் பழகுபவர் ஒவ்வொருவரும், அவர் உரிய வயதடையாதவராய் இருந்தால் அவருடைய காப்பாளரும் வரையறுக்கப்பெற்ற படிவத்தில் தொழில் அதிபருடன் அவரின் தொழில் பழகும் நிலைகுறித்து ஓர் ஒப்பந்தம் எழுதிக் கொடுக்க வேண்டும். இருசாராரும் அந்த ஒப்பந்தத்தின் கீழ் தங்களின் கட்டுப்பாடுகளை நிறைவேற்றிட வேண்டும். அவர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு அல்லது தகராறு எழுந்தால் அதனை முடிவு செய்ய 'மாநில தொழில் பழகுவோர் ஆலோசகருக்கு'த் (State Apprenticeship Adviser) தெரிவிக்க வேண்டும்.

பயிற்சிக்கான காலம்

பயிற்சிக்காலம் தொழில்களின் வகைகளுக்கு ஏற்றவாறு 6 மாதங்கள் முதல் 4 ஆண்டுகள் வரை பிரிக்கப்பட்டுள்ளன. தொழிற் பயிற்சி பழகுநர்களுக்கு இப்பயிற்சித் திட்டத்தின்கீழ் அடிப்படை பயிற்சி (Basic Training), தொழிற்கூடப் பயிற்சி (Shop-floor Training), தொடர் போதனைப் பயிற்சி (Related Instructions) போன்ற மூன்றுவகைப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. புதிதாகச் சேர்கின்ற அனைவர்க்கும் குறிப்பிட்ட காலங்கள் வரை அடிப்படை பயிற்சியளிக்கப்படுகின்றது. தொழிற்கூடப் பயிற்சிக்குச் செல்லுகின்ற வரை இப்பயிற்சி அளிக்கப்படும்.

தொழிற் பயிற்சி நிலையங்களிலிருந்து பயிற்சிக்கு வருபவர்களுக்கு அடிப்படை பயிற்சி தேவையில்லை. இப்பயிற்சியாளர்கள் நேராக தொழிற்கூடப் பயிற்சிக்குச் செல்லலாம். தொழிற் பயிற்சிக் காலம் முழுவதிலும் இவர்களுக்குத் தொடர் போதனைப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

தொடர் போதனைப் பயிற்சி

தொடர் போதனைப் பயிற்சி தமிழ் நாட்டில் வடசென்னை, அம்பத்தூர், கிண்டி, கடலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், மேட்டூர் அணை, கோயம்புத்தூர், பேட்டை (திருநெல்வேலி), மதுரை ஆகிய 11 தொழிற்பயிற்சி நிலையங்களில் சீராக வழங்கப்பட்டு வருகின்றன. வேலூர் தொழிற்பயிற்சி நிலையத்தில் விரைவில் இப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளன. இப்பயிற்சி வகுப்புகளுக்குத் தங்களுடைய பயிற்சியாளர்களைத் தொழிற் நிறுவனத்தார் அனுப்பி வைக்க வேண்டும்.

உதவித் தொகை

பயிற்சிக் காலத்தில் பயிற்சி பெறுகின்றவர்களுக்கு உதவிடும் விதத்திலும், தங்கள் வாழ்வை அவர்கள் சிரமமின்றி ஓரளவு நடத்திச் செல்லுகின்ற வகையிலும் பயிற்சி உதவித் தொகையும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்திய அரசின் 23-1-1976-ஆம் நாளின் ஆணைக்கிணங்க முன்பு வழங்கப்பட்டு வந்த உதவித்



டான்சியின் எழில் படைப்புகள்!

காலத்தை வெல்லும் டான்சியின் தயாரிப்புகள் மர மற்றும் எ.கு சாதனங்கள் டான்சியின் மேன்மையான படைபுகள். நாளைய வடிவமைப்புகளில்

இன்றே வழங்கப்படும் இச்சாதனங்கள் நீடித்து உழைப்பவை, நாற்காலிகள், மேசைகள், பீரோக்கள், கட்டில்கள் முதலிய பற்பல எழில்மிகு தயாரிப்புகளை வழங்குவது டான்சி.



டான்சி

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்,

26, ஒயிட்ஸ் ரோடு,

சென்னை-600 014



தொகைகள் மாற்றப்பட்டு தற்பொழுது திங்கள் ஒன்றுக்கு முதலாம் ஆண்டில் ரூபாய் 130, இரண்டாம் ஆண்டில் ரூபாய் 140, மூன்றும் ஆண்டில் ரூ. 150, நான்காம் ஆண்டில் ரூ. 200 என்ற வகையில் வழங்கப்பட்டு வருகின்றன. தொழிற் பயிற்சி நிலையங்களில் பயின்று பின்னர் பயிற்சி பழகுநர்களாக வருபவர்கள், அவர்கள் சேர்க்கப்படுகின்ற பயிற்சி ஆண்டுகளுக்கு ஏற்றவாறு உதவித்தொகை பெறுவதற்கும் அனுமதிக்கப்படுகின்றனர்.

தற்பொழுது தமிழ் நாட்டில் 31-1-76-ன் படி ஒதுக்கப்பெற்ற இடங்கள் 7,442. ஆனால் தற்பொழுது தொழிற்பயிற்சி பெற்று வருபவர்கள் 7,578 பேர்கள். ஒதுக்கப்பட்ட இடங்களையும் கடந்து 101.8 சதவிகிதத்தை அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இவர்களில் தாழ்த்தப்பட்டவர்கள் 1,240 பேர்கள், மலைச்சாதியினர் 5 பேர்கள், பெண்கள் 34 பேர்கள், உடல் ஊனமுற்றவர்கள் 22 பேர்கள், சமுதாயத்தில் நலிந்த, பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்தவர்கள் 3,225 பேர்கள் ஆவர்.

தொழில் பழகுநர் பயிற்சி வாரியம்

1961-ஆம் ஆண்டு தொழில் பழகுநர் சட்டம் 1973-ஆம் ஆண்டில் திருத்தப் பெற்று மேலும் பல வகைத் தொழில்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. அவைகள் பொறியியல் கல்வியிலும், தொழில் நுட்பக் கல்வியிலும் தேர்ச்சி பெற்ற பட்டதாரிகள், டிப்ளமோ பெற்றவர்கள் போன்றவர்களுக்குப் பயிற்சியளிக்க வகை செய்கின்றன. இவைகளுக்கென மைய அரசால் நிருவகிக்கப்படும் 'தொழில் பழகுநர் பயிற்சி வாரியம் (Apprenticeship Training Board) செயல்பட்டு வருகின்றது. மத்திய அரசின் கல்வி மற்றும் சமூக நலத்துறை அமைச்சகத்தின் பொறுப்பில் உள்ள இவ்வாரியம் தொழிற் பயிற்சியினை ஊக்குவிப்பதில் முழுப் பொறுப்பினை பெற்றுக் கொண்டுள்ளது. தமிழ்நாடு, கேரளம், மைசூர், ஆந்திரப் பிரதேசம், பாண்டிச்சேரி போன்ற மாநிலங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் இப்பயிற்சிக்கு வரவேற்கப்படுகின்றனர்.

இச்சட்டத்தின்கீழ், தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ள ஒவ்வொரு தொழில் நிறுவனத்தாரும் குறிப்பிட்ட பொறியியல் பட்டதாரிகளையும், டிப்ளமோதாரர்களையும் பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ள வேண்டும். பயிற்சி பெறுபவர்களுக்குத் தொழில் நுட்பதாரர், (Technician) பட்டதாரிப் பயிற்சியாளர் ஆகிய தகுதிகளைத் தந்து வரையறுக்கப் பெற்றுள்ள நிகழ்ச்சிகளின்படி பயிற்சியளிக்க வேண்டும். இவர்களுக்குக் குறிப்பிட்ட விண்ணப்பதாரர்கள், மைய அரசின் தொழில் பழகுநர் பயிற்சி வாரியம் வாயிலாக அனுப்பப்படுகின்றனர்.

இப்பயிற்சியாளர்களின் பயிற்சிக்காலம் ஓராண்டு ஆகும். இப்பயிற்சிக் காலத்தில் தொழில் நுட்பக் கல்வி, பொறியியல் கல்வி பட்டதாரிகளுக்குத் திங்கள் ஒன்



றுக்கு ரூபாய் 280/-ம், டிப்ளமோதாரர்களுக்கு ரூ. 180/-ம் குறைந்த அளவு பயிற்சி உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன. தொழில் நிறுவனத்தார் முதலில் இத்தொகைகளை வழங்கி பின்னர் அதில் 50 சதவிகிதத்தை மைய அரசின் மண்டலப் பயிற்சியாளர் ஆலோசகரிடமிருந்து (Central Apprenticeship Adviser) பெற்றுக் கொள்ளலாம். காலண்டிற்கு ஒருமுறை என்ற அளவில் இத்தொகைகள் தரப்படும்.

இப்பயிற்சிகளுக்கும் தொழில் நிறுவனத்தார் தங்கள் விருப்பம் போல் விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். இந்நிறுவனங்களுக்கு விண்ணப்பதாரர்கள் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநராலும், தொழில் பழகுநர் பயிற்சி வாரிய இயக்குநராலும் அனுப்பப்படுகின்றனர். பயிற்சிகள் தனியார் துறை, பொதுத்துறை, கூட்டுத்துறை போன்ற தொழில் நிறுவனங்களில் அளிக்கப்பட்டு வருகின்றன.

அனைத்திந்தியத் தொழில் தேர்வு

திருத்தப்பெற்ற சட்டத்தின் கீழ் 1-2-1976-ன்படி, தென் மண்டலத்தில் தொழில் நுட்பக் கல்வி, பொறியியல் கல்வி பட்டதாரிகளுக்கென ஒதுக்கப்பட்டுடுள்ள இடங்களின் எண்ணிக்கை 1,981 ஆகும். டிப்ளமோதாரர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை 2,245 ஆகும். தமிழ்நாட்டில் இவைகளின் எண்ணிக்கை முறையே 793, 813 ஆகும். 21-2-76-ஆம் நாளன்றுள்ள கணக்கின்படி தற்பொழுது தமிழ் நாட்டில் சுமார் 897 பொறியியல், தொழில்நுட்பக் கல்வி பட்டதாரிகளும், டிப்ளமோதாரர்களும் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றனர்.

தொழில் பழகும் கால அளவை ...த்து, தேவைப்பட்டகுறைந்த ...த்திற்குத் தொழிற்சாலைக்கு ...து தொழில் பயின்றுள்ள ...ழில் பழகுநர் ஒவ்வொரு ...ம் ஆண்டிற்கு இருமுறை ...ய வாழ்க்கைத் தொழிற் ...ற்சி நிலையத்தின் சார்பில் ...தப்படும் அனைத்திந்தியத் ...ழில் தேர்வினை எழுத அனு...கப்படுகின்றனர். இத்தேர் ... தேர்ச்சி பெற்றவர்களுக்கு ...-மாநில அரசுகளாலும், ... முழுவதிலுமுள்ள தொழில் ...னத்தாராலும் ஒப்புதலளிக்கப்பட்ட தேசிய தொழில் பழகும் நிலைச்சான்றிதழ் வழங்கப்படும்.

பிரதமர் அவர்களால் அறிவிக்கப்பட்ட இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தில் ஒன்ருக விளங்குகின்ற இத்திட்டம் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வேலையின்மை நீங்குவதற்கு வழிகோலுகிறது. பயிற்சிக்குச் செய்கின்ற முதலீடு உற்பத்திக்குச் செய்கின்ற முதலீடு ஆகும்.

ஆகவே, வளமான வாழ்க்கைக்கு வழிகோலும் வகையில் 'தொழில் பழகுநர் பயிற்சித் திட்டம்' சிறப்பாகச் செயலாற்றி வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

—ஆயிரராமன்.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட்,
நெ. எக்ஸ். 406.

14, ரித்தர்டன் சாலை, வேப்பேரி, சென்னை 600 007

தொலைபேசி : 30877, 30878 — தந்தி : ''ஹவுஸ்பாங்க்''
செயலாளர் : 33000 — தபால் பெட்டி : 486

தலைவர் : திரு. பழனிவேல்ராஜன், பி.எஸ்.ஸி., பி.எல்.,
உப–தலைவர் : திரு. பி. கஸ்தூரி பிள்ளை
பொருளாளர் : திரு. எஸ். பழனிசாமி, எம். ஏ.,

அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம்	..	ரூ. 5 கோடி
செலுத்தப்பட்ட பங்கு மூலதனம்	..	ரூ. 3,09,02,125/-
பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை	..	ரூ. 25,66,31,157/-

இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்குப் புதிய வீடு கட்ட 15 வருட நீண்ட காலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன.

அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்சக் கடன் அளவு

புதிய வீடுகள் கட்டுவதற்கு	..	ரூ. 30,000/-
புதிய வீடுகள் கட்டுவதற்கு (கிராமிய கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம்)	..	ரூ. 10,000/-

பூ. க. பத்மநாபன், பி.ஏ., எச்.டி.சி.,
இணைப்பதிவாளர்—செயலாளர்.

சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை) எண் 151.
சேலம்-1.

தபால் பை எண். 171 — தொலைபேசி எண் : 2402

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி சேந்தமங்கலம், கொங்கணாபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளி பாளையம், தம்மம்பட்டி, நீலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, பெத்தநாயக்கன் பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

சொந்த நிதி ரூ. 327 லட்சம். — நடைமுறை மூலதனம் 1711 லட்சம்

வட்டிவிகித அட்டவணை

கால் டெபாசிட்டுகள் :	ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்)	$3\frac{1}{4}$%
	ரூ. 10,000/-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்)	$3\frac{1}{2}$%
சிசன் டெபாசிட்டுகள் :	ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும்	
	15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும்	3%
	46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும்	$3\frac{1}{2}$%

பிக்செட் டெபாசிட்டுகள் : ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு :

1. 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் 6%
2. 6 மாதத்திற்கும் அதற்குமேல் 9 மாதத்திற்குள் $6\frac{1}{2}$%
3. 9 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் $7\frac{1}{2}$%
4. 12 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் $8\frac{1}{2}$%
5. 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் $9\frac{1}{2}$%
6. 61 மாதத்திற்கும் அதற்குமேலும் $10\frac{1}{2}$%

நடப்புக் கணக்கு $\frac{1}{2}$% — சேமிப்புக் கணக்கு 6%

ரூ. 5000/-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க.

இ. பாலசுந்தரம், பி.ஏ., துணைப் பதிவாளர், நிர்வாக அதிகாரி. — பி. காசி, பி.எஸ்.சி., எச்.டி.வி., காரியதரிசி. — எஸ். ஆறுமுகம், தலைவர்.

தமிழ் ஞாயிறு நமச்சிவாயர்

நெ. து. சுந்தரவடிவேலு

'நமச்சிவாய நறுமலரை ஆடவர் அறிவர்; மகளிர் அறிவர் சிறுவரறிவர்; சிறுமியரும் அறிவர். அது 'கடலக'த்து மலர்ந்தது; தமிழக முடையது; கணக்கெலாம் நன்கு அறிந்தது; கோடாது; குவியாது; வாடாது என்றும் ஒரே தன்மையது.

"அம்மலர் முயற்சியால் ஈட்டும்; மலர்ந்து வழங்கும்; தானுந் துய்க்கும்.

''அதில் பழமையும் உண்டு; புதுமையும் உண்டு.''

இப்படிப் பாராட்டியவர் யார்? அன்று, சென்னை இலயோலாக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக விளங்கிய திரு. இ. கே. நடேச சர்மா. எப்போது பாராட்டினார்? நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர்.

தமிழ் ஞாயிறாக விளங்கிய கா. நமச்சிவாயர், வடார்க்காடு மாவட்டம் காவேரிப்பாக்கம் என்னும் ஊரில் பிறந்தார். தந்தை பெயர் இராமசாமி; எளிய தொடக்கப் பள்ளி ஆசிரியர். தாய் அகிலாண்டவல்லி. பிறந்தது, 1876-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் இருபதாம் நாள். தந்தையின் பள்ளியிலேயே படித்தார். நன்றாகவும் படித்தார்.

பதினைந்து வயதில் சென்னைக்கு வந்து சேர்ந்தார். தண்டையார் பேட்டையில் தொடக்கப்பள்ளி ஆசிரியரானார். தொடர் கல்வியில் கருத்தூன்றியது. தமிழின் மேல் நாட்டஞ் சென்றது.

அப்போது, தொண்டை மண்டல துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக விளங்கிய, திருமயிலை மகாவித்துவான் சண்முகம் பிள்ளை அவர்களை அணுகினார். அக்காலப் பண்டிதர்களுக்கு, தமிழ்ப் பாடஞ் சொல்லுதல் பிழைப்பல்ல, தொண்டு. பிள்ளையவர்கள் நமச்சிவாயரை ஏற்றுக் கொண்டார்.

எக்காலத்திலும் மத சம்பந்தமான சச்சரவுகளில் தலையிடக் கூடாதென்றும் சாதிச் சண்டைகளில் புகுதல் கூடாதென்றும் வாக்குறுதி பெற்றார். அரசியல் அடாவடிகளில் அகப்பட்டுக் கொள்ளக்கூடாது என்னும் உறுதி பெறத் தேவையில்லாத காலம் அது.

ஆசிரியத் தொழிலையும் இடையில் ஓராண்டு உயர்நீதிமன்ற அலுவலையும் பார்த்துக்கொண்டே. பகுதி நேரம் தமிழ் கற்று வந்தார். பதின்மூன்றாண்டுகள் பொறுமையாகக் கற்றார். உண்மையான பேராசிரியரிடம் அத்தனை ஆண்டுகள் பொறுமையாகப் படித்த நமச்சிவாயர் நல்ல புலமை பெற்றார். இலக்கண இலக்கியங்களை முறையாக அறிந்த அறிஞரானார்.

தொடக்கப் பள்ளியில் பணிபுரிந்து வந்த நமச்சிவாயர் புனித சேவியர் பள்ளியின் தமிழ் அய்யாவாகச் சென்றார்.

பிறகு திறமைமிக்க தமிழாசிரியராக விளங்கிய நமச்சிவாயரை நார்த்விக் பெண்கள் பள்ளி அழைத்துக் கொண்டது.

கற்றோரைக் கற்றோர் காமுறுதல் இயல்பு. நல்லாசிரியர் நமச்சிவாயரை வேப்பேரி புனித பால் உயர்நிலைப் பள்ளி விரும்பித் தேடிக்கொண்டது. அங்கு பன்னிரண்டு ஆண்டுகள் சீரிய பணிபுரிந்தார்.

அக்காலத்தில், தொடக்கப் பள்ளிகளுக்கான பாடநூல்களைக் கூட வெள்ளைக்காரர்களே எழுதினார்கள். அம்மரபை முறித்து, தமிழ்ப்பிள்ளைகளுக்கான பாட நூல்களை எழுதிய முதல் தமிழர் நமச்சிவாயர்! அவை வெளியாயின. எதிர்ப்பு எழுந்தது.

ஏற்கெனவே, பாட நூல்களை எழுதிப் பணம் சேர்த்துக்கொண்டிருந்த வெள்ளையர் வேடிக்கை பார்த்துக் கொண்டா இருப்பர்? நமச்சிவாயர் நூல்களைப் புறக்கணிக்கச் சூழ்ச்சி எழுந்தது. அதில் தோல்வி. அடுத்து? நமச்சிவாயரை வேலை நீக்கம் செய்ய முயன்றனர். மாணவர்களின் முயற்சியால் நிர்வாகிகளின் கவனம் ஈர்க்கப்பட்டது. நமச்சிவாயர் தொடர்ந்து வேலை செய்தார்.

'பால பாடம்' முதல் சிறுவர் சிறுமியருக்கான நூல்களை எழுதிய முதல் தமிழர் நமச்சிவாயர் என்பது மட்டுமல்ல அவருக்குள்ள சிறப்பு. முதல் தரமான நூல்களை எழுதியவர் அவர்.

சிறுவர்களுக்கான பாடநூல்களை எழுதிய நமச்சிவாயர், உயர்நிலை வகுப்புகளுக்கும் இளங்கலைப் படிப்பிற்கும் ஏற்ற நூல்களை எழுதி, முன்னோடியாக விளங்கி

ஞர். தொல்காப்பியம் இளம்பூரணர் உரையைப் பதிப்பித்தார். தணிகைப்புராணம், தஞ்சைவாணன் கோவை, இறையஞர் களவியல் ஆகிய நூல்களையும் பதிப்பித்தார். பிரிதிவிராஜன், கீசகன் என்னும் இரு நாடகங்களை எழுதி வெளியிட்டார்.

1914-ஆம் ஆண்டு சென்னையில் மேரி இராணியார் கல்லூரி தொடங்கப்பட்டது.

'பெண்கள், கல்லூரியில் சேர்வது வீண்; ஆண்கள் இடத்தைப் பறித்துக் கொள்வதாகும்' என்று பறையறைந்து கொண்டிருந்தவர்கள் அன்றும் இருந்தனர். அவர்கள், பெண்கள் கல்லூரி தொடங்குவதை எதிர்த்தனர். எதிர்ப்பிற்கிடையில் முளைத்தது அக்கல்லூரி. அங்கு தமிழ் கற்பிக்க நமச்சிவாயரைத் தேடி அழைத்தார்கள்.

இருக்குமா, இறக்குமா என்று தெரியாத அப்புதிய கல்லூரியின் தமிழ்ப் பண்டிதராக அமர்ந்தார். அக்கல்லூரி நிலைபெறவும் வளரவும் துணை புரிந்தார். பல்லாண்டு அங்கு பணிபுரிந்த பிறகு, சென்னை மாநிலக் கல்லூரிக்கு வந்தார். அக்காலத்தில் தமிழ், தெலுங்கு போன்ற மொழிகளுக்குப் பேராசிரியர்கள் இல்லை. எவ்வளவு ஆண்டுகள் பணிபுரிந்திருந்தாலும் வெறும் பண்டிதர்களே. ஊதியமும் கட்டை. எண்பதிலே தொடங்கும்; நூற்றைம்பதில் முடியும்.

குறைந்த சம்பளம் பெற்ற சில ஆசிரியர்களில் ஒருவராக இருந்த நமச்சிவாயர் குறை மனிதராகக் காட்சியளிக்கவில்லை. 1928-ஆம் ஆண்டு முதல் 1930-ஆம் ஆண்டு வரை மாநிலக் கல்லூரியில் இன்டர்மீடியட் படித்த நான், நமச்சிவாயரைக் கண்டிருக்கிறேன். கல்லூரி ஆசிரியர்கள் அனைவரிலும் மிக மிடுக்கான பொலிவோடு விளங்கியவர் நமச்சிவாயர். ஆடை இல்லா மனிதன் அரை மனிதன் என்பதை அறிவார். உடை மிடுக்கோடு ஊர்திச் சிறப்பும் இருந்தது. நல்ல சொந்தக் காரில்தான் வருவார்; போவார். எளிமையில் பிறந்து வளர்ந்த நமச்சிவாயருக்கு, வறுமைப் புத்தி இல்லை. செல்வம் துய்க்கவும் ஈயவுமே என்பதை உணர்ந்து, அப்படியே பயன்படுத்திஞர்.

தான் செம்மையோடு வாழ்ந்ததுபோல், அண்டியவர்க்கும் குறையாது வழங்கிஞர்.

கல்லூரிப் பண்டிதர் நமச்சிவாயர், சாந்தோம் நெடுஞ்சாலையில் 'கடலகம்' என்ற பங்களாவில் வாழ்ந்தார். அக்காலத் தமிழ்ப் பண்டிதர்கள் அவ்விடத்தை மொய்த்துக் கொண்டிருப்பார்கள். சாதி வேலியோ, சமய மதில்களோ மொழி வாய்க்கால்களோ சூழ வாழவில்லை. அவர், அண்டியவர் அனைவருக்கும் உதவிஞர்; எவ்விதப் பலனும் எதிர்பாராது உதவிஞர், பாகுபாடின்றிக் கொடுத்து வாழ வைத்தார்.

நமச்சிவாயருடைய மூத்த மகன் திருத்தணிகைவேல் என்னுடன் இண்டர்மீடியட் படித்தார். எனக்கு வேண்டியவரும் ஆவார். எனவே அவர் இல்லஞ் செல்லப் பல வாய்ப்புகள் கிட்டின. அங்கே கண்டதென்ன? வியத்தகு விருந்தோம்பல்.

அடையா நெடுங்கதவையுடைய அக்கடலகத்திற்குள் நுழைந்தாற் போதும்,

'காப்பியா, தேனீரா, பாலா, மோரா எது வேண்டும்?' என்று கேட்டு உபசரிக்கப்படுவோம். உண்ணவும் சிற்றுண்டி சேர்ந்து வரும்.

பற்பல வேண்டுகோள்களோடு பலர் நமச்சிவாயரை அணுகுவார்கள். யாரையும் காக்க வைக்கமாட்டார்; நடக்க வைக்க மாட்டார். பதவியில் இருந்த போதுகூட, தனது செல்வத்தை எண்ணிச் செருக்கடையாமல், புகழை எண்ணிப் பூரிப்பில் திளைத்துவிடாமல், உடனுக்குடன் ஆவன செய்வார். பண்டிதர் வீட்டுத் தொலைபேசி பலருக்கும் பரிந்துரைத்தது. அடுத்தடுத்துப் பரிந்துரைத்தது.

நான், பட்டம் பெற்ற பிறகு, பஞ்சாயத்து அலுவராக முயன்று கொண்டிருந்த காலம். திரு. தம்போ என்ற இலங்கைத் தமிழர் உள்ளாட்சி மன்றங்களின் தலைமை ஆய்வாளர். அவரே வேலையில் அமர்த்த வேண்டியவர் என்று கேள்விப்பட்டேன். அவர், இராயப்பேட்டை முனிவர் திரு. வி. க. விற்கு வேண்டியவர் என்று என் காதில் வீழ்ந்தது. இத்தகவல்களோடு, நமச்சிவாயரை நேரே அணுகினேன். திரு. வி. க. வின் வழி, எனக்குப் பரிந்துரைக்கக் கோரினேன்.

உள்ளே சென்ற நல்லவர் மூன்று மணித்துளிகளில் வெளியே வந்தார். காரும் வந்து நின்றது.

என்னை, தன் பக்கத்தில் அமரச் செய்தார். திரு. வி.க.வின் வீட்டிற்கு விடச் சொன்ஞர்.

தமிழ்த் தென்றலும் வீட்டில் இருந்தார். நமச்சிவாயர் என் சார்பில் சொன்னவற்றைக் கேட்டார்.

'தம்போ, தமிழ்ப் பற்ருளர். அதஞல் என்னைக் கண்டு பேச இரண்டொரு முறை வந்துள்ளார். அதைக் கொண்டு அவரிடம் உரிமை கொண்டாடுவது முறையா என்று தயங்குகிறேன்' என்ருர் திரு. வி. க.

நமச்சிவாயர் அவரைத் தேற்றிவிட்டு என்னை அழைத்துக் கொண்டு திரும்பிஞர். பிறகு வேறு நண்பர்கள் வழி முயன்ருர். பலிக்காதது அவர் குறையல்ல.

தனக்குக் கேடு செய்தவர்களுக்கும் தாராளமாக விரைந்து உதவிசெய்த பண்பாளர்களில் ஒருவர் நமச்சிவாயர்.

சிறந்த மனிதராக விளங்கிய நமச்சிவாயர், சிறந்த நூலாசிரியர், சிறந்த பதிப்பாசிரியர்.

அரசு அதிகாரிகளுக்கு எச்சரிக்கை !

கோவை மாவட்டத்திலுள்ள பெரியநாய்க்கன் பாளையத்தில் ஒரு மனுதாரர், தான் நீண்ட நாட்களுக்கு முன்பு டிராக்டர் வேண்டி மனுச் செய்திருந்ததாகவும் அது வாங்குவதற்கு அனுமதி வழங்குவதில் கால தாமதம் ஏற்பட்டதால் அதனுடைய விலை ஏறிவிட்டது; ஆதலால் தான் மனுச் செய்திருந்த நேரத்தில் என்ன விலை இருந்ததோ அதே விலையில் தனக்கு இப்பொழுது கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தார். அதற்கு ஆளுநர் இந்த மாதிரியான காலதாமதங்கள் இனி எதிர்காலத்தில் ஆகாது என்றும், காலதாமதம் செய்கின்ற அரசு அதிகாரிகளின் மேல் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அறிவித்தார்.

மனுச்செய்த 15 நாட்களில் தகுந்த பதில் அதிகாரிகளிடமிருந்து கிடைக்கவில்லையாயின் நேரடியாக ஆளுநருக்கே விண்ணப்பிக்கலாமென்றும் அறிவித்தார். எடுக்க வேண்டிய நடவடிக்கையில் காலதாமதம் செய்யும் அரசு அலுவலர்கள் மேல் கடும் நடவடிக்கையெடுக்க நேரிடுமென்று ஆளுநர் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாடஞ்சொல்லிக் கொடுப்பதில்? தனக்கு இணைதானே. பள்ளிக்கூடப் பையன்களைக் கவரும்படி கற்பித்த நல்லாசிரியர். நமச்சிவாயர் கல்லூரிப் பெண்களும் விரும்பிக் கற்கும்வண்ணம் தமிழ்ப் பாடஞ் சொன்ஞர். இயற்கைத் திறமையோடு, தொடர்ந்து கற்ற கல்வி அவருக்குத் துணை நின்றது.

தாய்மொழியாம் தமிழில் புலமை மிக்க நமச்சிவாயர் அதோடு நின்றுவிடவில்லை. கல்லாதது உலகளவு என்பதை உணர்ந்தார். உலகமொழியாம் ஆங்கிலத்தின் வழி பலதுறை அறிவினைப் பெற்ருர். வாழ்நாள் முழுவதும் பெற்ருர். கற்பதில் தீண்டாமை பாராட்டாதவர் அவர். அதஞல், மாநிலக் கல்லூரி மாணவர்களிடையிலும் புகழ்பெற்ற ஆசிரியராகத் திகழ்ந்தார். என்னைப் போன்ற பலரிடம் தமிழறிவும் தமிழ்ப் பற்றும் வளர்த்த சில ஆசிரியர்களில் சிறந்தவராக ஒளிவிட்டார் நமச்சிவாயர்.

அவர், தனிவழி நடந்தார். கடைசிப் பத்துமணித்துளிகள் வகுப்புப்பாடம் நடத்த மாட்டார், பொதுஅறிவு, உரையாடல் நடத்துவார். அரசியல் தவிர்த்த பிறதுறைக் கேள்விகளை எழுப்புவோம். பதில் கூறுவார்.

ஒருமுறை சென்னை ஷெரீப்பாகவும், மேயராகவும் விளங்கிய காலஞ்சென்ற எஸ். இராமசுவாமி நாயுடு என் வகுப்புத் தோழர்; சுறுசுறுப்பானவர். தமிழ்ப்பற்று மிகுந்தவர்.

ஒருநாள் அவர் நீண்ட கேள்வி கேட்டார். இரண்டு மணித்துளிகள் எதையோ ஒப்புவித்த பிறகு, அந்த வாதம் சரியல்லவா என்று கேட்டார்.

நமச்சிவாயர், இள்நகையோடு இராமசுவாமியை அமரச் செய்தார். மாணவர் ஒப்புவித்ததைத் தொடர்ந்து ஆசிரியரும் அதே போக்கில் ஒப்புவித்தார். பிறகு பதில் கொடுத்தார். அதில் எரிச்சல் இல்லை; வெகுளி இல்லை அமைதி இருந்தது. பதில் இதோ!

'அமெரிக்க நாத்திகப் பெரியாராகிய இங்கர்சாலின் நாத்திக வாதத்தின் நான்கு சொற்ருெடர்களை ஒப்புவித்தீர். அவர் ஆங்கிலத்தில் எழுதியதைத் தமிழாக்கி இவ்வாரக் 'குடியரசு' வெளியிட்டுள்ளது. அதைப் படித்தீர். சில சொற்ருெடர்களை மட்டும் நினைவில் வைத்துள்ளீர். அம்மூல நூல் கன்னிமரா நூலகத்தில் கிடைக்கும். அதையே முழுமையாகப் படித்துள்ளேன். நீரும் படியும். பலமுறை சிந்தியும். நாத்திகம் சரியென்று தோன்றிஞல் அப்போது ஏற்றுக்கொள்ளும்' என்ருர்.

பற்றுள்ள சைவராக விளங்கியவர் நமச்சிவாயர். நெற்றியில் சந்தனப் பொட்டில்லாமல் வெளியேபுறப்படாதவர் நமச்சிவாயர். கிருத்திகை தோறும் திருத்தணிகை சென்று வழிபட்டவர் அவர். ஆயினும் 'நம்மவர்'களை வெறுத்தவர் அல்லர். பிற சமயத்தவர் மேல்காழ்ப்போ வெறுப்போ அறியாது வாழ்ந்த சீலர் அவர். பல சமயத்தவரின்-ஏன் நாத்திகர்களாகிய தன்மான இயக்கத்தினரின் - நன்மதிப்பைப் பெற்று வாழ்ந்த அறவோர் அவர்.

நல்லாசிரியர் நமச்சிவாயர், நூல்கள் வாயிலாக ஆற்றிய தமிழ்த் தொண்டு பெரிது. அதை விடப் பெரியது, பல்கலைக்கழக மட்டத்தில் தமிழுக்கு இடந் தேடித் தந்தது.

நமச்சிவாயர், கல்லூரிப் பண்டிதரான காலம், தமிழுக்கு ஏற்றமில்லாத காலம். கல்லூரி மாணவ மாணவியர் பெயரளவில் தமிழ் கற்றனர். தமிழ் மட்டும் படித்து வித்துவான் சான்றிதழ் பெற முடியாது. தமிழோடு பிற மொழியொன்றையும் படித்துத் தேறிஞல் மட்டுமே வித்துவாஞகலாம்.

இவ்விழிவுகளைப்போக்கித் தமிழ் மட்டுமே படித்து 'வித்துவான்' சான்றிதழ் பெற வழிவகை செய்த முன்னவர், நமச்சிவாயர், சென்னைப் பல்கலைக்கழகப் பாடத் திட்டக் குழுவில் 1918 முதல் உறுப்பினராகவும், 1920 முதல் 1934 வரை தலைவராகவும் அவர் தொண்டாற்றிஞர். அன்றும் அது பலருடைய அழுக்காற்றைக் கிளறியது. நீண்டநெடுங் காலம் பொறுப்பு அவரிடம் இருந்ததால், தனித்தமிழ் வித்வான் (அண்மையில் புலவர்) பாடத்தை ஏற்றுக்கொள்ள வைத்தார். கல்லூரிகளிலும் தமிழுக்கு உரிய இடத்தைப் பெற்றுத் தந்தார். நல்ல தமிழன் நெடுநாள் பதவி வகிப்பது பெருமைக்காக அல்ல; தமிழை வளர்க்க என்பதைப் படாடோபமின்றி விளக்கியவர் நமச்சிவாயர்.

புலவர் சான்றிதழ் படிப்பை பட்டப் படிப்பு நிலைக்கு உயர்த்த சில ஆண்டுகளுக்கு முன் முயற்சி நடந்தது. அப்போது, தமிழ் அடிப்படையையே தகர்த்துவிடக்கூடிய தீங்கு முளைத்தது. எனக்கு நெருக்கமானவர்களே மிரண்டார்கள். 'வெகுளுவோர் வெகுளட்டும்; விரட்டுவோர் விரட்டட்டும், தமிழுக்கு உரிய முழு இடத்தை இழத்தல் ஆகாது' என்று அடம் பிடிக்கும் நெருக்கடிக்கு ஆளானேன். கடைசியில் தமிழ் முழு இடத்தோடு பட்டப் படிப்பாயிற்று, என் நல்லாசிரியர் ஆற்றிய அரும்பணியை அழியாது காக்கும் பேறுவது கிட்டிற்றே என்று மகிழ்கிறேன்.

பொங்கல் நாளைத் ''தமிழ்த் திருநாளாக''க் கொண்டாடும் மரபினைக் கொண்டு வந்தவர் நமச்சிவாயர். பொங்கல், சமயத் திருநாள் அல்ல. எல்லாச் சமயத்தவருக்கும் பொதுவான நாள் என்பதைச் செயலால் விளக்கிஞர். தமது சொந்தச் செலவில், பழைய பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் ''தமிழ்த் திருநாளை'' ஏற்பாடு செய்தார். அந்நாளில் இந்துக்கள் மட்டுமின்றி, சமணர், இஸ்லாமியர், கிறித்தவர் ஆகியோரையும் கொண்டு திருவள்ளுவரைப் பற்றி உரையாற்றச் செய்தார். நமச்சிவாயர் நடத்திய திருவள்ளுவர் நாள்-தமிழர் திருநாள்-கூட்டங்களில் முதலாண்டு அனைவருக்கும் ஆரஞ்சு கிடைத்தது. இரண்டாம் ஆண்டு ஆப்பிள் கிடைத்தது. இப்படியும் ஒரு கொடையாளித் தமிழர் வாழ்ந்தார்.

'கல்விச் செல்வம், பொருட் செல்வம்' ஆகிய இவையிரண்டினும் மேம்பட்டது நற்குணம்.

'முதலியாரவர்கள் நற்குணநிதி; தீமை செய்தவர்களுக்கும் நன்மை செய்யும் நல்லியல்பு வாய்ந்தவர்கள்; குணங்கண்ட இடத்து மகிழும் குணசீலர். வைதவர்களையும் வாழ்விக்கும் மனப்பான்மையுள்ளவர்கள்.''

நிலையான பொதுச் சொத்து

வறட்சி நிவாரணத்திற்காக அரசு மேற்கொள்ளுகின்ற செலவினங்கள் முழுவதும் மக்களுக்கு நிலையான சொத்துக்களாக அமைந்திடும். அதாவது செலவிடப்படுகின்ற தொகை அந்த ஆண்டுடன் வீணுகிப் போய் விடாமல் தொடர்ந்து வருகின்ற எல்லாக் காலங்களுக்கும் மக்களுக்கு உதவும் வகையில் திட்டங்கள் உருவாக்கப்பட்டு அதற்கேற்ப செலவிடப்படும் என்று ஆளுநர் அறிவித்தார்.

என்று அவரோடு பல்லாண்டு நெருங்கிப் பழகிய பண்டித எஸ். எஸ். அருணகிரிநாதர் பாராட்டியதில் மிகை இல்லை.

அவர் (நமச்சிவாயர்) செல்வச் செருக்குடனிருந்ததையோ கடுஞ் சொல் கூறியதையோ நான் கண்டதில்லை; கேட்டதுமில்லை. அவர், ஊருணியாகவும், பழந் தரும் மரமாகவும் இருந்தார் என்றால் மிகையாகாது' என்று நாரண துரைக்கண்ணன் அன்று பாராட்டியதும் உண்மை.

'அவர்தம் (நமச்சிவாயர்) கல்வி எத்திறத்தார்க்கும் பயன் பட்டு வருதல் கண்கூடு. குழந்தைக்குக் குழந்தை மொழியிலும் இளைஞர்க்கு இளமை மொழியிலும் பேசும்-எழுதும் வாய்ப்பு திரு முதலியார் மாட்டு அமைந்திருத்தல் ஈண்டுச் சிறப்பாகக் குறிக்கத் தக்கது. அவரது செல்வமும் அவரது கல்வியைப் போலவே, பயன்பட்டு வருகிறது.

திரு. முதலியாருக்குச் சீர் திருத்தத்தில் தணியாக் காதல் உண்டு. சாதி மதப்புன்மைகள் பொன்றியொழிய அவர் இளமை தொட்டே முயன்று வருதல் உலகம் அறிந்த தொன்று. பயன் கருதாது பிறர்க்குழைத்தல் திரு. முதலியாரது சமயம்'.

நாற்பது ஆண்டுகளுக்கு முன் இப்படிப் படம் பிடித்துக் காட்டினார், தமிழ்த்தென்றல், விடுதலைப் போர்வீரர், தொழிற்சங்க முன்னோடி, சமத்துவவாதி, திரு. வி. கல்யாண சுந்தரனார்.

எம்மொழியினரும் எச்சமயத்தவரும் எப்பகுதியினரும் பெருமைப் படத்தக்க கல்வியாளர், புலவர், புரவலர், நல்லோர், நமச்சிவாயர் உருவில் தோன்றினார். தமிழுக்கும் தமிழர்க்கும் சீர் திருத்தத்திற்கும் சொல்லாலும் செயலாலும் பாடுபட்ட அறவோர், போயும் போயும் தமிழராகப் பிறந்தாரே! அதன் விளைவு?

நல்லாசிரியர் நமச்சிவாயருடைய நூற்றாண்டு விழாவை மறந்துவிட்டோம். உலகப் புகழ் பெற்றுத் தந்த திருவள்ளுவருடைய ஈராயிரம் ஆண்டு, ஏழு ஆண்டுகளுக்கு முன்பு வந்ததே. அதையே கொண்டாட மனமில்லாத நமக்கு, நமச்சிவாயர் நூற்றாண்டு விழா எம் மாத்திரம்? ஆனாலும் சென்னை நக்கீரர் கழகம் திருவள்ளுவர் தமிழ்க்கல்லூரி பேராசிரியர் கா. நமச்சிவாயர் நூற்றாண்டு நினைவுச் சொற்பொழிவுகளாக சென்னை மாநிலக் கல்லூரியில் 7-3-76 முதல் 16-3-76 முடிய இலக்கிய ஆய்வுச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்து நிகழ்த்தினர்.

குப்பை மேட்டுக் குருக்கத்தியாக, சென்னை நக்கீரர் கழகம், அதை நிலைவுபடுத்தி விட்டதே! தலைமுறைக்குத் தலைமுறை யாரோ ஒரு 'குறுமுனிவர்' தொல்லை கொடுத்துக் கொண்டு தான் இருப்பார்கள் போலும்!

இலவச தையல் இயந்திரம்

கோவை மாவட்டத்திலுள்ள குரும்பம்பாளையம் கிராமத்தில் சில கைம்பெண்கள் ஆளுநர் அவர்களை அணுகி வேலைவாய்ப்பு அளித்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். அவர்களுக்குத் தையல் இயந்திரம் வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார். அதன்படி மூன்றில் ஒரு பங்கு விலையை தமிழ்நாடு அரசு இலவசமாகத் தருமென்றும் மீதியை அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமென்றும் அறிவித்தார்.

மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது!



1974-75-ல் கைக்குட்டைகள் ஏற்றுமதியின் மூலம், ஏறக் குறையப் பத்துக்கோடி ரூபாயை இந்தியா சம்பாதித்துள்ளது. முந்திய ஆண்டில், கைக்குட்டைகள் ஏற்றுமதியால் எட்டுக் கோடியே 40 இலட்ச ரூபாய் கிடைத்தது.

ஒரு புகழ்பெற்ற ரகமாகிய, பல வண்ணங்கள் கொண்ட சென்னைக் கைக்குட்டைகள், 1974-75-ல் 7 கோடியே 47 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் சம்பாதித்தன. 1973-74-ல் இக் கைக்குட்டைகள் மூலம் 6 கோடியே 80 இலட்ச ரூபாய் கிடைத்தது. தஹோமே குடியரசு நாடு 3 கோடியே 80 இலட்ச ரூபாய் மதிப்புள்ள கைக்குட்டைகளை வாங்கியது. அதனையடுத்து சையிரா லியோன், நைஜீரியா, லைபீரியா, இங்கிலாந்து, காம்பியா, ஆகிய நாடுகளும் சென்னைக்கைக்குட்டைகளை அதிகமாக வாங்கியுள்ளன.

சென்னை மற்றும் அரபு ரூமல்கள் நீங்கலாக, மற்ற கைக்குட்டைகளின் ஏற்றுமதி மதிப்பு 1974-75-ல் 2 கோடியே 23 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய்க்கு உயர்ந்துள்ளது. 1973 74-ல் அவற்றின் ஏற்றுமதி மதிப்பு ஒரு கோடியே 57 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாயாகத்தான் இருந்தது. ரஷியா, இங்கிலாந்து, பல்கேரியா, ஃபிரான்ஸ், ஸ்வீடன் முதலிய நாடுகள் இந்த ரகக் கைக்குட்டைகளை அதிகமாக வாங்கியுள்ளன.

இன்னொரு ரகமாகிய அரபு ரூமல் கைக்குட்டைகள் 1974-75-ல் பத்து இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான தொகையைத் தேடித் தந்துள்ளன. சௌதி அரேபியா, துபாய், ஏமன், அரபுக் குடியரசு, பெஹ்ரெய்ன் தீவுகள் முதலிய நாடுகள் கைக்குட்டைகளை அதிகமாக வாங்கியுள்ளன.

பாங்காய் வளரும் பத்துக் கிராமங்கள்

கிராமங்களில்தான் இந்தியா வாழ்கிறது. 70 சதவிகித மக்கள் அங்கேதான் விவசாயம் செய்து வாழ்கின்றனர். தேசிய வருமானத்தில் பாதிக்குமேல் விவசாயத்திலிருந்துதான் கிடைக்கிறது.

சுருங்கச் சொன்னால் இந்தியாவின் உயிர்நாடியே கிராமங்களில் தான் இருக்கின்றது.

நகர நல்வாழ்வுக்கு அடிப்படை கிராமங்கள் என்பதால் அதன் வளர்ச்சியிலும், வளத்திலும், நாம் கவனம் செலுத்தியாக வேண்டும்.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் பிரதமரின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம் இன்று புதிய சமுதாயத்தை உருவாக்குவதில், வெற்றி நடை போட்டு வருகின்றது.

அதன் விளைவாக செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள சோமங்கலம் முதலான பத்து கிராமங்கள் புதுமைக்கோலம் பெற்று புத்துணர்ச்சி பெற்று வருகின்றன.

செங்கற்பட்டு மாவட்டத்தில் குன்றத்தூருக்கு அருகில் உள்ளது சோமங்கலம் என்னும் கிராமம். இது, ஊரகச் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் புதிய வளர்ச்சி பெற்று வருவதைப் பார்க்கிறோம். இத்திட்டத்தைப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் பிப்ரவரித் திங்கள் 15-ஆம் நாள் தொடங்கி வைத்தார்கள்.

கிராமங்கள் செழிப்புக்கு, வகை செய்யும் இத்திட்டத்தின் கீழ் பின்கண்ட பத்து கிராமங்கள் பாங்காய் வளருகின்றன.

1. சோமங்கலம்
2. எருமையூர்
3. நடுவீரப்பட்டு
4. அமரம்பேடு
5. புதுச்சேரி
6. பூந்தண்டலம்
7. நல்லூர்
8. சிறுகளத்தூர்
9. நந்தம்பாக்கம்
10. வரதராசபுரம்.

மேற்கண்ட இந்தக் கிராமங்களில் மொத்தம் 11,026 மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 6 ஆயிரம் பேர் அரிசனங்கள். இந்தக் கிராமங்களிலுள்ள மொத்தம் 6,300 ஏக்கர் சாகுபடிப் பரப்பில் ஒருபோக சாகுபடியை இருபோகமாக்கவும், இருபோக நிலங்களில் பலபோக சாகுபடி மேற் கொள்ளவும் மற்றும் உயர்விளைச்சல் ரகங்கள் மூலம் உணவு உற்பத்தி அதிகரிக்கவும் பணிகள் தீவிரமடைந்துள்ளன.

இங்கு வாழ்கின்ற மக்கள் அனைவருக்கும் எல்லா அடிப்படை வசதிகளும் கிடைக்கச் செய்வதோடு, அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் இத் திட்டத்தின் நோக்கமாகும்.

மேதகு தமிழ்நாடு ஆளுநர் கே. கே. ஷா அவர்களால் திட்டப்பட்ட இந்த அருமையான திட்டம், இந்தியாவிலேயே முதலாவதாகும் என்பதை இங்கு நாம் பெருமையோடு குறிப்பிட வேண்டும்.

நல்வாழ்வுப் பாதையில் வீறு நடைபோடும் வகையில் பத்துக் கிராமங்களுக்கும் கூட்டுறவு வங்கி, நிலவள வங்கி, ஸ்டேட் பாங்க் ஆகியவை கடன் தந்து தக்க உதவிகள் செய்து வருகின்றன.

நாளும் வளர்ந்து வரும் இந்தக் கிராமங்களில் 100 புதிய கிணறுகள் தோண்டப்படும். அவற்றில் 50 கிணறுகளுக்கு உடனடியாக மின்சார இணைப்பு கொடுக்கப்படும். கிராம மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ள இப் பகுதியிலுள்ள 10 கிராமங்களில் இப்போது பாசன வசதிக்காக 211 கிணறுகள் உள்ளன. அவற்றில் 110 கிணறுகளுக்கு மின் சக்தி கொடுக்கப்பட்டிருக்கிறது.

சோமங்கலம் பகுதியிலுள்ள சுமார் 1,000 குடும்பத்தினர் புதிதாக அறிமுகப்படுத்தப்படவிருக்கும் புதிய விவசாய முறைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள். உடனடியான மதிப்பீடு இத்திட்டத்தின் ஓர் அம்சமாக விளங்கும்.

கால்நடைகளின் கலப்பு இன வளர்ச்சிக்குத் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இப்பகுதியில் சுமார் 5,500 கால்நடைகள் உள்ளன.

அண்மையில் இப்பகுதியில் கூட்டுறவுச் சங்கங்களின் உதவி 25 சதவிகிதத்திலிருந்து 75 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. இங்குக் கடன் வழங்கும் கூட்டுறவு வங்கிகள் இரண்டும், விவசாயத் துறைச் சங்கங்கள் இரண்டும் உள்ளன.

சொர்ணவாரி ரக நெல் சாகுபடிக்குத் தேவையான இரசாயன உரங்கள் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள 10 கிராமங்களில் 8 கிராமங்களில் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. மாடுகளுக்குப் போதுமான தீவனமும் வழங்கப்படும்.

இங்கு 98 சிறிய விவசாயிகளும், 202 மிகச் சிறிய விவசாயிகளும் உள்ளனர். இவர்கள் கோழிப்பண்ணைகள் ஆரம்பிப்பதற்காக ஒவ்வொரு விவசாயிக்கும் 10 கோழிகள் வழங்கப்படும்.

ஜெய்—...

இங்கு நடத்தப்பட்ட ஆய்வின்படி கொல்லேப்புற கோழிப் பண்ணைக்கு நல்ல வரவேற்பு உள்ளது.

இப்பகுதியில் இந்த ஆண்டு மே மாதத்தில் பால்வாடிகள் துவக்கப்பட்டு குழந்தைகளுக்கு இலவச உண வழங்கப்படும். ஆரம்பச் சுகாதார நிலையங்களின் ஒத்துழைப்புடன் இந்தப் பால்வாடிகள் செயல்படும். குழந்தைகளின் கல்வி வசதிக்கும் ஏற்பாடு செய்யப்படும்.

சோமங்கலத்துக்கும் தாம்பரத்துக்குமிடையே விரைவில் சாலை போடப்படும். கிராமப் போக்குவரத்து அளவு மதிப்பிடப்பட்டவுடன் சிறிய பஸ்களும் விடப்படும்.

இங்குக் கைத்தொழில் தெரிந்தவர்களுக்குப் பாய் பின்னுதல், தையல், தீப்பெட்டித் தொழிற்சாலை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கும் திட்டமும் இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

சோமங்கலம் கிராமத்தில் அண்மையில் தொடங்கி வைக்கப்பட்ட ஊரகச் சீரமைப்புத் திட்டத்தைத் தொடர்ந்து-அக்கிராமத்தின் முன்னாள் கைதிகளுக்குச் 'சுயவேலைவாய்ப்பு' ஏற்படுத்திக் கொடுப்பதற்காகக்குற்றவாளிகள் சீர்திருத்தத் துறையினர் விரைவில் ஒரு திட்டத்தை அமல்படுத்துவர்; இதற்கு வர்த்தக வங்கிகள் துணைபுரியும்.

இந்தச் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தில் இளங்குற்றவாளிகளும் சீர்திருத்தப்பள்ளியிலிருந்து விடுதலையாகி வருபவர்களும் பயன்படுத்தப்படலாம் என்று தெரிகிறது.

இந்த மறுமலர்ச்சித் திட்டத்தின்படி கிராமங்களிலும் சுகாதாரம், கல்வி, முதியோர் கல்வி, வேலைவாய்ப்பு, உற்பத்திப்பெருக்கம், புதிய தொழில்கள் ஆகியவை தொடங்குவதற்கான தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்படி இன்னும் மூன்றாண்டுகளில் இங்குள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதத்திற்கு 400 ரூபாய்க்குக் குறையாமல் வருமானம் கிடைக்கும்.

இனிய வாழ்வு மலர்ந்திட வந்த இருபது அம்சத் திட்டங்களில் ஒன்றான இந்தக் கிராமப்புற மறுமலர்ச்சித் திட்டம்—

பூத்துக்குலுங்கும் புதிய கிராமங்கள் உருவாகிட

புதுமைக்கோலம் எங்கணும் பூண்டிட

ஏற்றத் தாழ்வற்ற சமதர்மச் சமுதாயம் படைத்திட

வழிவகுக்கும், வளம் சேர்க்கும் என்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!

விரைந்து முன்னேறி வரும் நீலகிரி மாவட்டம்

நீலகிரி மாவட்டத்தில் விவசாயத்தைப் பெருக்குவதற்காகக் கூடலூரிலும், ஆனைக்கட்டியிலும், கல்லப்பாளையம், ஹள்ளிமாயாரிலும், தெங்குமரஹாடாவிலும் விதைப் பண்ணைகள் ஏற்படுத்தப்படும். இவைகளின் உதவியால் மேலும் பத்தாயிரம் ஏக்கரில் விவசாயம் செய்ய ஏதுவாகும். இன்னும் கூடலூரில் 27 தடுப்பு அணைகளும் கட்டப்படும். சிறு விவசாயிகளுக்கு 200 மருந்து தெளிக்கும் கருவிகள் வழங்கப்படும்.

மத்திய அரசின் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட இரண்டு இலட்சம் ரூபாயில் ஆரம்பக் கட்டமாக 80 தோத்தர்களுக்குச் சொந்தமான 100 ஏக்கர் நிலத்தில் வேலை துவங்கியுள்ளது.

சுமார் 35 இலட்சம் ரூபாய் செலவில் உதகையில் உள்ள அரசினர் மருத்துவமனையில் கூடுதலாக 80 படுக்கைகள் போடுவதற்குக் கட்டடங்கள் கட்டுவதல்லாமல் கூடலூரிலும், துனேரியிலும், நெல்லிக்கோட்டையிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கட்டப்படும். மாவட்ட சுகாதார அலுவலருக்கு இரண்டு நடமாடும் சுகாதார வண்டிகளும் வழங்கப்படும்.

இந்த மாவட்டத்தில் சுமார் 3,000 ஏக்கர் நிலம் உபரியாக உள்ளது. இது நிலமில்லாத ஏழை மக்களுக்கு வழங்கப்படும்.

இம்மாவட்டத்தில் உள்ள சுமார் 6 இலட்சத்து 65 ஆயிரம் மக்களுக்கு 353 கடைகளின் மூலம் உணவுப்பண்டங்கள் வழங்கப்படுகின்றன. முதல் முறையாகக் கூடலூர் வட்டத்திலிருந்து சுமார் 350 டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டு, பகிரங்க மார்க்கெட்டில் விற்கப்படுகிறது.

கோத்தகிரியிலும், மஞ்சூரியிலும், உதகையிலும், கூடலூரிலும் மொத்த வியாபாரக் கடைகள் திறப்பதற்கும் இன்னும் நான்கு கிடங்குகள் கட்டுவதற்கும் நுகர் பொருள் வாணிபக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த மாவட்டத்திலிருந்து வேறு மாநிலங்களுக்கு உணவுப் பொருள்கள் போகாதபடி உஷார் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுமார் பத்து இலட்சம் ரூபாய் செலவில் கூடலூரில் உள்ள எருமாடு என்னும் இடத்திலும், குன்னூரில் உள்ள பாரதி நகரத்திலும் அரிசனங்களுக்கென 19 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

உதகையில் உள்ள ஏரியை அழகுபடுத்துவதற்கென மலைப் பிரதேச வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 16 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

பிராணி நல சங்கத்தினரால் உதகை ஏரிக்கு அருகாமையில் உள்ள இடத்தில் பத்து இலட்சம் ரூபாய் செலவில் ஒரு சிறுவர் அரங்கமும், விலங்குகள் தங்குவதற்குச் சிறுசிறு குடிசைகளும் கட்டப்படும்.

சித்தி அம்மாள் என்ற ஒரு தோதவப் பெண்மணிக்கு, நேர்த்தியான பூ வேலை செய்ததற்காக மத்திய அரசால் தேசிய விருது வழங்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி தேசிய விருது ஒரு பழங்குடிப் பெண்மணிக்குக் கிடைப்பது இதுவே முதல் தடவை.

உடல் ஊனமுற்றவர்களுக்கு தேசிய விருதுகள்

உடல் ஊனமுற்ற ஊழியர்களைக் கொண்டிருக்கும் மிகச் சிறந்த ஆறு தொழில் நிறுவன நிருவாகிகளுக்கும், மிகத் திறமை வாய்ந்த உடல் ஊனமுற்றவர்கள் 20 பேருக்கும் தேசிய விருதுகளைக் குடியரசுத் தலைவர் மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளார்.

உடல் ஊனமுற்ற மக்களையும், அவர்கள் வேலைபார்க்கும் தொழில் நிறுவன நிருவாகிகளையும் ஊக்குவிப்பதற்கான முயற்சியாக, 1970 முதல் ஒவ்வொரு ஆண்டும் இந்த விருதுகள் இந்திய அரசு வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியிலுள்ள பாரத கனரக மின் நிறுவனமும், சென்னை ஆர்மீனியன் தெருவியிலுள்ள பின்னி நிறுவனமும் இந்த விருதுகளைப் பெற்றுள்ளன. தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. ஆர். கோபாலசுவாமி, திரு. சி. துரைசாமி, திரு டி.எஸ். வெங்கட்டராமன் ஆகிய உடல் ஊனமுற்ற ஊழியர் மூவருக்கும் இந்த ஆண்டு தேசிய விருது கிடைத்துள்ளது.

செவ்வாய்ப்பேட்டைச் சிறப்பு

சக்கரத்தின் உதவியால் ஜாடி உருப்பெறுகிறது.

நகை பெறுகிறது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள செவ்வாப்பேட்டைக்கு ஒரு தனிச் சிறப்பு இருக்கிறது. அந்தச் சிறப்பு என்ன தெரியுமா? நவீன மண்பாண்டப் பயிற்சி நிலையம் அங்கே அமைந்திருப்பது தான் அந்தச் சிறப்புக்குக் காரணம். இது தமிழ்நாட்டுக்கு மட்டும் அமைந்த நிலையமல்ல! தமிழ்நாடு, பாண்டிச்சேரி, ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய ஐந்து மாநிலங்களுக்கும் பயன்பட்டு வரும் வட்டாரப் பயிற்சி நிலையம் (Regional Training Centre) ஆகும் தமிழ்நாடு காதி வாரியத்தின் நிர்வாகத்தில் இயங்குவது இது.

எல்லா மாநிலங்களிலிருந்தும் இந்த நிலையத்தில் பயிற்சி பெறுவதற்கு மாணவர்கள் வருகின்றனர். 9-12-1963-ல் துவக்கப் பெற்ற இந்தப் பயிற்சி நிலையம் இதுவரை 600-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சி அளித்திருக்கிறது.

நாள்தோறும் ஒருமணி நேரம் பாட வகுப்பும் (Theory Class) ஐந்து மணி நேரம் பயிற்சி வகுப்பும் (Practical) நடைபெறுகின்றன. இங்குப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மாதத்திற்கு ரூ. 90 உதவித்தொகை (Stipend) வழங்கப்பட்டு வருகிறது. இங்கே பயிற்சி பெறும் மாணவர்கள், கட்டாயம் விடுதியில் தங்கவேண்டும் என்று விதி உள்ளது குறிப்பிடத்தக்கது.

பயிற்சியாளர் பயிற்சி பெறும் துறைகள்.

சக்கர வேலை (Wheel Work),

உருவாக்குதலும் தயாரித்தலும் (Costing & Processing),

தரை ஓடுகள், மங்களூர் ஓடுகள், குழாய்கள் தயாரிப்பு

அரக்குப் பூசுதல்

பளபளப்புத் தீட்டுதல் (Glazzing)

சூளையில் சூடேற்றுதல் (Firing Work)

பயிற்சிக்காலம் 5 மாதங்கள்; பயிற்சி முடிவுற்றதும் காதி கிராமத்தொழில்குழுவின்(Commission) மண்பாண்டத்துறை இயக்குநர். பயிற்சித்துறை இயக்குநர் ஆகியோரின் கையொப்பங்களுடன், காதி கிராமத் தொழில் குழுவின் (Commission) முத்திரையும் இடப்பெற்ற சான்றிதழ்கள், பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில், பண்ருட்டி, தேன்பொத்தை, செவ்வாப்பேட்டை ஆகிய மூன்று இடங்களில் பயிற்சி நிலையங்கள் உள்ளன. என்றாலும் செவ்வாப்பேட்டைப் பயிற்சி நிலையந்தான் மிகுந்த புகழுடனும், முன்னேற்றத்துடனும் விளங்குகிறது.

இங்கு பயிற்சி பெற்று, வெளியே சென்ற பல மாணவர்கள் பலவகை நிறுவனங்களிலும் பணிபுரிந்து வாழ்க்கைப் பாதையில் பீடுநடை போட்டு வருகின்றனர். சிலர் தனியார் நிறுவனங்களிலும், சிலர் வடலூர் பீங்கான் தொழில் நிறுவனத்திலும், சிலர் பாண்டிச்சேரி பீங்கான் நிறுவனத்திலும் பணிபுரிந்து வருகின்றனர். வேற்று மாநிலத்திலிருந்து பயிற்சி பெற்ற சிலர், அவர்களது மாநிலங்களில் உள்ள அரசுத்துறை நிறுவனங்களில் அலுவலில் உள்ளனர்.

மின் விசையால் இயக்கப்படும் ஷீலா சக்கரம் என்னும் கருவியின் உதவியால் மண்பாண்டம் செய்வோரின் உழைப்பு இலகுவாக்கப்படுகிறது. இந்தச் சக்கரத்தினால் உற்பத்தியும் பெருகுகிறது. இந்தச் சக்கரத்தை இயக்குவதற்கு இங்கு பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மண்பாண்டத்தொழிலாளர்கள் இந்தக் கருவியை வாங்குவதற்குக் கடனுதவியும் மானியமும் வழங்கப்படுகின்றன.

இந்தப் பயிற்சி நிலையத்துக்கு மற்ரெரு சிறப்பும் உண்டு. இது உற்பத்தி நிலையமாகவும் திகழ்கிறது. இங்கு பயிற்சி பெறும் மாணவர்கள் பயிலவும் செய்கின்றனர்; அதே நேரத்தில் பொருள்களை உருவாக்கவும் செய்கின்றனர்.

5 மாதப் பயிற்சியில், முதல் மூன்று மாதங்களில், பயிற்சியாளர்கள் உருவாக்குகின்ற மண்பாண்டப் பொருள்களை, உற்பத்திக் கணக்கில் சேர்த்துக் கொள்ளக்கூடாது. நான்காவது ஐந்தாவது மாதங்களில், பயிற்சியாளர்கள் உருவாக்குகின்ற பொருள்கள்தாம் பயனுள்ளவைகளாகவும், தரமானவையாகவும் அமைகின்றன. அவைதாம் விற்பனைச் சந்தைக்கு அனுப்புவதற்குரிய தகுதியைப் பெறுகின்றன.

ஆண்டொன்றுக்கு 50 ஆயிரம் ரூபாயிலிருந்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன.

பெரிய அளவுப் பூத்தொட்டிகள் சிறிய அளவுப் பூத்தொட்டிகள், தரையில் பதிக்கும் சதுர வடிவ ஓடுகள், கூஜாக்கள், குளிர் தண்ணீர்ப் பாண்டம் (Water Cooler), அடுக்கு ஜாடி ஆகியவை குறிப்பிடத்தக்கன. களிமண்ணிலும் இவை செய்யப்படுகின்றன. பீங்கானிலும் செய்யப்படுகின்றன. பீங்கானிலே செய்யப்படும்போது, அவை மெருகேற்றப்படுகின்றன.

அரை லிட்டர் கொள்ளளவிலிருந்து 16 லிட்டர் கொள்ளளவுள்ள பீங்கான் தொட்டிகள் இங்கே உருவாக்கப்படுகின்றன.

கூரைகளில் வேய்வதற்குப் பயன்படும் மங்களூர் ஓடுகளும் இங்கே தயாரிக்கப்படுகின்றன.

இயற்கை வெளிச்சம் தருவதற்குரிய சிறப்பு வகைக் கண்ணுடி ஓடு வகையும் இங்கே தயாரிக்கப்படுகிறது.

நாள் ஒன்றுக்கு 1500 ஓடுகள் தயாரிக்கப்படுகின்றன. இந்த ஓடுகள் பயிற்சியாளர்களால் தயாரிக்கப்படுவதால் இவற்றின் விலை மிகவும் மலிவாக உள்ளது. ஆயிரம் ஓடுகளின் விலை ரூ. 200. இந்த ஓடுகளில் சில, ஓரங்களில் சேதமடைவதுண்டு. இவ்வகை ஓடுகள் ஆயிரம், ரூபாய் 150-க்குக் கொடுக்கப்படுகின்றன.

களிமண் படிவங்கள் முதலில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவை அச்சு வடிவங்களுக்குள் (Dye) வைத்து அழுத்தப்படுகின்றன. பின்னர் ஒரு வாரம் தனியறையிலும், மற்ரெரு வாரம் வெளியிலும் வைக்கப்பட்டு உலர்த்தப்படுகின்றன. அதன் பின்னர் சூளைக்குள் வைக்கப்பட்டு, 8 மணி நேரத்திலிருந்து 10 மணி நேரம் வரை சூடேற்றப்படுகின்றன. மறுநாள் சூளையிலிருந்து எடுக்கப்பட்டு, வெளியே 3 அல்லது 4 மணி நேரம் உலர்த்தப்படுகின்றன.

இந்த நிலையத்தில் ஒரே ஒரு சூளைதான் இருக்கிறது என்ருலும் கூட இதன் பணி மகத்தானதாக விளங்குகிறது. மூர்த்தி சிறிதென்ருலும் கீர்த்தி பெரிது என்னும் மொழி இந்த நிலையத்திற்குப் பொருத்தமானது.

களிமண்ணிலும், பீங்கானிலும் தயாரிக்கப்படும் பொருள்கள் இந்தச் சூளைக்குள் வைக்கப்பெற்று 1160 டிகிரி செண்டிகிரேட்டிலிருந்து 1200 டிகிரி செண்டி கிரேட் வரை. பொருள்களுக்குத் (Objects) தக்கவாறு ஏறக்குறைய 24 மணி நேரத்திலிருந்து 30 மணி நேரம் வரை சூடேற்றப்படுகின்றன. சூடேற்றப்பட்ட பொருள்கள் குளிர்வதற்கு 48 மணி நேரம் தேவைப்படுகிறது. பொருள்கள் சரியானபடி சூடேற்றப்பட்டுள்ளனவா என்பதைச் சோதனைத் துண்டுகளின் (Test Pieces) உதவியால் தெரிந்து கொள்கிருர்கள். வண்ணம் தீட்டப்பெறும் பீங்கான் பொருள்களைச் சூடேற்றும்போது மிகுந்த எச்சரிக்கை வேண்டும். சூளைக்குள் உருவாகும் புகை, பொருள்களைத் தாக்கிஞல், அவற்றின் வண்ணம் சிதைந்துவிடும்; ஆதலால் பொருள்களைச் சூடேற்றும் போது மிகுந்த கவனம் வேண்டும்.

இந்தப் பயிற்சி நிலையம் நூற்றுக்கணக்கான மாணவர்களுக்குப் பயிற்சி தரும் சிறந்த நிலையமாக விளங்குவதுடன், மிகச் சிறந்த உற்பத்தி நிலையமாகத் திகழ்வது பெருமைக்குரியதாகும். அதிலும் இராட்சத இயந்திரங்களின் உதவியால் மாபெரும் தொழிற்சாலைகள் தயாரித்தனுப்பும் பொருள்களுக்கு இணையான பொருள்களை, இந்த நிலையம் சிறு வகை இயந்திரங்களைக் கொண்டு உற்பத்தி செய்வது, மிகப் பெரும் சாதனை என்றே கூறலாம்.

— எஸ். சண்முகசுந்தரம்.


மங்களூர் ஓடு வடிவம் பெறுகின்றது.


விற்பனைக்குத் தயாராக உள்ள ஜாடிகள்.

ஏழை எளிய மக்களுக்குக் குறைந்த விலையில் நிறைந்த பலன்களை விரைந்து அளிக்கக் கூடிய மருந்து வகைகளையும் மருத்துவக் கருவிகளையும் இந்தியாவிலேயே உற்பத்தி செய்து தந்தால் நல்லதாயிற்றே என்று நமது பாரத அரசு எண்ணியது.

அந்த உயரிய நோக்குடன் தான் பொதுத்துறையில் 'ஐ.டி.பி.எல்.' என்று சுருக்கமாக அழைக்கப்படும் 'இந்தியன் ட்ரக்ஸ் அண்ட் பார்மசியூட்டிகல் லிமிடெட்' என்னும் நிறுவனத்தை ஏற்படுத்தும்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்குத் தேவையான ஒத்துழைப்பைக் கொடுக்க சோவியத் ரஷ்ய நாடும் முன்வந்தது.

1961-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் 'இந்தியன் டிரக்ஸ் அண்ட் பார்மசியூட்டிகல் லிமிடெட்'-என்னும் நிறுவனம் தோன்றியது.

அதற்கு முன்பே, தடுப்பு மருந்துகள், கலவை மருந்துகள், அறுவை சிகிச்சைக் கருவிகள், தாவர இரசாயனப் பொருள்கள், சுரப்பிகள் சம்பந்தப்பட்ட பொருள்கள் முதலானவற்றை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகளை அமைக்கும் நோக்கத்துடன், சோவியத் ரஷிய அரசாங்கத்தோடு 1959-ஆம் ஆண்டு மே மாதம் 29-ஆம் நாள் நமது பாரத அரசு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன்படி தேவையான இயந்திரங்களை இறக்குமதி செய்து கொள்ளவும் அவற்றில் இந்தியர்களைப் பயிற்றுவிப்பதற்காக நிபுணர்களை ரஷ்ய நாட்டிலிருந்தே வரவழைத்துக் கொள்ளவும் செலவு செய்து கொள்வதற்காக 9.52 கோடி ரூபாய் கடனுதவி வழங்கவும் அந்த நாட்டு அரசாங்கம் ஒப்புக்கொண்டது.

முதலில் 'தேசியத் தொழில் வளர்ச்சிக் கழகம்' தான் (National Industrial Development Corporation) இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் ஈடுபட்டது. பிறகுதான் 'ஐ.டி.பி.எல்' அமைக்கப்பட்டு சோவியத் நாட்டோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்ட அத்தனை உரிமைகளையும் கடமைகளையும் 1961 நவம்பர் மாதத்தில் இந்த நிறுவனத்திடமே பாரத அரசு ஒப்படைத்தது.

அமைப்புமுறை

ஐ. டி. பி. எல். நிறுவனத்தின் தலைமை நிலையம் புதுடில்லியில் இருக்கிறது. இந்த நிறுவனத்தின் கீழ் மூன்று உற்பத்தி நிலையங்கள் நடைபெறுகின்றன.

1. நோய்த்தடுப்பு மருந்து (ஆண்டிபயடிக்ஸ்) உற்பத்தி நிலையம், ரிஷிகேஷ்.

2. சிந்தெடிக் மருந்துகள் உற்பத்தி நிலையம், ஐதராபாத்.

3. அறுவைச் சிகிச்சைக் கருவிகள் (சர்ஜிகல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ்) உற்பத்தி நிலையம் சென்னை.

இந்த மூன்று தொழிற்சாலைகளுக்கும் ஆரம்பத்தில் ரூபாய் 50.66 கோடி வரை முதலீடு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. இன்னும் புதிய பல வேலைகளைத் தொடங்க வேண்டும் என்னும் நோக்கத்தில் இந்த முதலீட்டுத் தொகை ரூ. 55.15 கோடியாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

நோய்த்தடுப்பு மருந்து உற்பத்தி நிலையம், ரிஷிகேஷ்

ஆண்டுதோறும் ஏறத்தாழ 290 டன்கள் நோய்த்தடுப்பு மருந்துகளை உற்பத்தி செய்யும் அளவுக்கு 'ஆண்டிபயடிக்ஸ் பிளாண்ட்' என்னும் பெயரில் ஒரு மருந்துத் தயாரிப்பு நிலையம், ரிஷிகேஷில் அமைக்கப்பட்டுள்ளது;

இதன் செலவுக்கான முதலீட்டுத்தொகை ரூ. 27.50 கோடியாகும்.

இந்தத் தயாரிப்பு நிலையத்தின் அமைப்பு வேலை 1962-இல் ஆரம்பிக்கப்பட்டு 1968-இல் முடிவடைந்தது.

இன்றியமையாத பல மருந்துப் பொருள்கள் எல்லாம் இங்கே

'தயாரிக்கப்படுகின்றன. அவற்றில் சில வருமாறு:

'ஸ்ட்ரெப்போமைசிடின் சல்பேட்',

'மெட்ராசைக்லின் கேப்சூல்ஸ்'

'குளோரோம்பெனிகல் இன்ஜெக்ஷன்',

'குளோரோம்பெனிகல் கேப்சூல்ஸ்'

'பென்சைல் பென்சிலியன் சோடியம்',

'ஆம்பிசில்லியன் கேப்சூல்ஸ்'

'ஆம்பிசில்லியன் இன்ஜெக்ஷன்',

'டெட்ராசைக்லின் கேப்சூல்ஸ்'

அட்சிம் (OTCIM)

—இன்னும் பல.

இந்த மருந்துகளின் உற்பத்தி வேகத்தை ஆண்டுதோறும் உயர்த்திக்கொண்டே வருகிறது ரிஷிகேஷ் மருந்துத் தயாரிப்பு நிலையம்.

'சிந்தெடிக் டிரக்ஸ் உற்பத்தி நிலையம்' ஐதராபாத்

1962-ஆம் ஆண்டு சிந்தெடிக் மருந்துகள் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு *1968*-ல் முடிவடைந்தன.

இந்தத் திட்டத்திற்கான முதலீட்டுத் தொகை ரூபாய் 22 கோடியாகும்.

ஏறத்தாழ 850 டன்கள் வரை மருந்துகளைத் தயாரிக்கும் வகையில் இந்த உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

விரைவாகக் குணம் அளிக்கக் கூடிய பல மருந்துகள் இங்கே தயாரிக்கப்படுகின்றன.

அவற்றில் ஒரு சில வருமாறு:

'அனல்ஜின்' மாத்திரைகள்

'செமிசால்' மாத்திரைகள்

'ஹெச்சாவிட்ஸ்' மாத்திரைகள்

'வைட்டமின் 'பி' காம்பளக்ஸ்' மாத்திரைகள்

'வைட்டமின் 'சி' சூவபிள்' மாத்திரைகள்

'சல்பாகுனிடின்' மாத்திரைகள்

'சல்பாடைமிடைன்' மாத்திரைகள்

சக்ரி

—இன்னும் பல.

ஆண்டுக்கு ஆண்டு இவற்றின் தயாரிப்புச் சக்தியும், விற்பனை வேகமும் அதிகமாகிக் கொண்டே வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

'அறுவை சிகிச்சைக் கருவிகள் தயாரிப்பு நிலையம், சென்னை

அலோபதி மருத்துவ முறையில் அறுவை சிகிச்சை தலையாய இடத்தினை வகிக்கிறது. அதற்கு உபயோகப்படத்தக்க பல கருவிகளை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன், சென்னையில் இந்தத் தயாரிப்பு நிலையம் ரூபாய் 4.65 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

1965 செப்டம்பர் மாதத்திலிருந்து இந்தத் தயாரிப்பு நிலையம் கருவிகளை உற்பத்தி செய்வதற்குத் தொடங்கியது.

ஏறத்தாழ இருபத்தைந்து இலட்சம் கருவிகளைத் தயாரிக்கும் அளவுக்கு இதனுடைய உற்பத்தித் திறன் அமைந்துள்ளது. இதிலே தயாரிக்கப்படும் கருவிகள், மருத்துவத் துறையில் பல பிரிவுகளுக்குப் பயன்படுவதாக உள்ளன.

கண் சிகிச்சை, காது சிகிச்சை, பல் சிகிச்சை, நரம்பு சிகிச்சை முதலான பல மாதிரியான சிகிச்சைகளுக்கும் அக்கருவிகள் சிறந்த முறையில் பயன்படுகின்றன.

ஒரே நாளில் *1,900* முதல் *2,000* கருவிகளை உற்பத்தி செய்யும் அளவுக்கு இந்தத் தயாரிப்பு நிலையத்தின் ஆற்றல் அமைந்திருக்கிறது.

தலை சிறந்த சாதனைகள்

நம்முடைய பாரத நாட்டில் தனியார் துறைகளோடு போட்டியிட்டு அதிக வருமானத்தை அடைகின்ற வகையில் பொதுத் துறை நிறுவனங்கள் தழைக்க முடியும் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது 'ஐ.டி.பி.எல்.' நிறுவனம்.

ஏற்படக்கூடிய இழப்புகளையெல்லாம் ஈடுகட்டி இலட்சக் கணக்கில் இலாபங்களை ஈட்டவும் முடியும் என்று நிரூபித்து வருவதே இந்த மத்திய அரசு நிறுவனம்.

இதுகாறும், தன்னுடைய நிருவாகத்தின் கீழேயுள்ள உற்பத்தி நிலையங்களில் தயாராகும் மருந்துகள்-சிகிச்சைக் கருவிகள் ஆகியவற்றின் விற்பனை மூலம் கடந்த *1974-75* ஆண்டில் மட்டும் ஏறத்தாழ இரண்டு கோடி ஐம்பது லட்சம் ரூபாய் வரை நிகர இலாபம் கிடைத்திருக்கிறது.

இதனுடைய விற்பனை வேகம் உண்மையிலேயே நம்மை மலைக்கும்படி செய்கிறது. அடியிற் காணும் விவரங்களின் மீது சிறிய கண்ணோட்டம் செலுத்தினாலே இதனைத் தெளிவாக நாம் தெரிந்து கொள்ளலாம்.

ஆண்டு	மொத்த விற்பனை (இலட்சம் ரூபாய்களில்)
1969—70	*481.11*
1970—71	*1,379.42*
1971—72	*2,335.79*
1972—73	*2,792.92*
1973—74	*2,766.63*
1974—75	*4,584.45*

கடந்த *1974-75*-ஆம் ஆண்டில் மட்டும் முந்தின ஆண்டைவிட 65.7 சதவீதம் அதிக விற்பனை ஆகியிருக்கிறது.

மருந்துகளைப் பொறுத்தமட்டில் அனல்ஜின், வைட்டமின் பி-2, போலிக் ஆசிட், நிகோடினமைட் ஆகியவை சென்ற ஆண்டில் மிக உச்சமான அளவில் விற்பனை ஆகியிருக்கின்றன.

'ஐ. டி. பி. எல்' நவீன மருந்து வகைகள் சிலவற்றையும் அறிமுகம் செய்து ஒரு சரித்திரச் சாதனையையும் உருவாக்கிக் கொண்டுள்ளது.

எம்டோபா' (Emdopa)

'கம்பேபா' (Compeba)

'செபக்சின்' மாத்திரைகள் (Cebexin Tablets)

'ஆம்பிசில்லின்' ஊசிமருந்துகள் (Ampicillin Injections)



'ஆம்பிசில்லின்' கேப்சூல்ஸ் (Ampicillin Capsules).

ஐதராபாத்தில் உள்ள 'சிந்தெட்டிக் மருந்துகள் தொழிற்சாலை' யின் தற்போதைய உற்பத்தித் திறன் *1,988* டன்கள் ஆகும்; அதனை *3,386* டன்களாக உயர்த்துவதற்கு ரூ.*21.2* கோடிக்கு மத்திய அரசு அண்மையில் அனுமதி வழங்கியுள்ளது.

தென் மண்டலத்தின் சிறப்பான பங்கு

'ஐ. டி. பி. எல்' நிறுவனத்தின் மாபெரும் சாதனைகளில் தமிழ் நாடு, கேரளம் ஆகிய இரு மாநிலங்களும் இணைந்த தென் மண்டலம் (Southern Region) தனக்கென்று தனி முத்திரை பொறித்துள்ளதையும் குறிப்பிடவே வேண்டும்.

இதனுடைய அலுவலகம் முதலில் ஒரு சிறிய கட்டடத்தில் தான் சென்னை-கீழ்ப்பாக்கத்தில் இருந்தது. ஆனால் மருந்துகளின் உற்பத்தி வேகமும்-விற்பனை வேகமும் வளர வளர அலுவலக வேலைகளும் அதிகமாகிவிட்டன. எனவே, சென்னையில் இருதயப் பகுதிபோன்ற அண்ணாசாலையில் ஒரு முக்கியமான இடத்திற்கு 'ஐ. டி. பி. எல்.' லின் தென் மண்டலக் கிளை மாற்றப்பட்டுச் சுறுசுறுப்போடு இன்று இயங்கி வருகிறது.

இதனுடைய சீரான பணிகளை அலுவலகத்தில் தொங்கவிடப் பட்டுள்ள 12 தகுதிச் சான்றிதழ்களே (Certificates of Merit) அழகாகப் பறைசாற்றுகின்றன.

அலுவலகம் அமைந்துள்ள முதல்மாடியில் அடி வைத்ததுமே

இந்தச் சான்றிதழ்களே நம் விழிகளைக் கவர்ந்து வரவேற்கின்றன.

'அபிடின்', 'ஹெச்சாவிட்' 'செமிசால்' முதலான மருந்துகளின் விற்பனையில் மட்டுமின்றி, புதிய மருந்துகள் விற்பனை, மொத்த விற்பனை போன்ற பல சாதனைகளுக்காகவும் அந்தச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் உள்ள மற்ற மண்டலங்களைவிட பொதுவாக மிகச் சிறந்த பணியாற்றியமைக்காகக் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து சுழற்கோப்பைப் பரிசை (Rolling Trophy) தட்டிக் கொண்டு வந்துள்ள பெருமையும் இந்தத் தென்மண்டலத்தையே சாரும்.

இந்தப் வட்டாரத்தில் மட்டும் *1970-71*-ல் ரூ. *75* இலட்சம் விற்பனையான நிலைமை மாறி *1974-75*-இல் ரூ *383* இலட்சத்திற்கு விற்பனை கூடியிருக்கிறது; இது ஒரு மகத்தான சாதனை என்பதில் சந்தேகமே இல்லை.

நாட்டின் தென்பகுதியில் 'ஐ. டி. பி. எல்' மிக விரைவாக ஆக்கப்பணிகளை ஆற்றிப் பரிசுகளையும், விருதுகளையும் தட்டிக் கொண்டு வருவதற்கு அந்த நிறுவனக் கிளை அலுவலகத்தில் பணியாற்றும் அத்தனை பேருடைய அயரா உழைப்பே காரணம் என்றால் மிகையாகாது.

அதிலும், அண்மைக் காலம் வரையில் சென்னையில் 'டிவிஷனல் மானேஜர்' ஆக்கப்பணியாற்றிய திரு. பி.வி. வெங்கடேசுவரன் அவர்கள் செயல்படுத்திய சில திட்டங்கள் குறிப்பிடத்தக்கனவாகும். அவர் இப்போது அகில இந்தியாவுக்குமே 'மார்க்கெட்டிங் ஆபரேஷன் மானேஜர்' ஆகப் பதவி உயர்வு பெற்றுப் புதுடில்லிக்குப் போயிருக்கிறார்.

தற்போது தற்செயலாகச் சென்னைக்கு வந்திருந்த அவரைச் சந்திக்கின்ற வாய்ப்புக் கிட்டி விசாரித்தபோது, அவர் வெளியிட்ட கருத்து வருமாறு: ''முதலில் விநியோக முறையை ஒழுங்குபடுத்தினோம்; மொத்த மருந்து விநியோகஸ்தர்களிடம் எங்கள் நிறுவனத்தின் தொடர்புகளை வலுப்படுத்தினோம்; பொது மார்க்கெட்டில் மக்களைக் கவரும் வகையில் மருந்து விற்பனையைப் பெருக்கி வருகிறோம்; அத்துடன் நில்லாமல் அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்துகளை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்திருக்கிறோம்; தனிப்பட்டவர்களுடைய மருத்துவ மனைகளுக்கும் எங்கள் மருந்துகளை வாங்குமாறு செய்திருக்கிறோம்.

''எங்களுடைய நிறுவனம் இருதய நோய், நரம்புத்



தளர்ச்சி முதலான நோய்களுக்கும் நவீன மருந்து வகைகளைத் (Sophisticated Drugs) தயாரிப்பதிலும் இப்போது நாட்டம் செலுத்தி வருகிறது. அரசு மருத்துவ மனைகளுக்கு மருந்துகள் வாங்கிக் கொள்வதற்குத் தமிழ் நாடு அரசாங்கம் அளித்து வரும் ஒத்துழைப்பை நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. எங்கள் நிறுவனம் சமுதாயப் பொது நன்மையையும் கருத்தில் கொண்டே நடந்து வருகிறது. அந்தப் பொதுநோக்கின் அடிப்படையில்தான் இந்த மாநிலத்தில் வறட்சிக் கொடுமை வந்த போது இரண்டு இலட்சம் அளவிற்கு 'மல்டி வைட்டமின்' மாத்திரைகளையும் 'பி. காம்ப்ளக்ஸ்' மாத்திரைகளையும் நன்கொடையாகவே வழங்கினோம்'' என்று அடக்கமாகவே கூறிக் கொள்கிறார் அவர்.

தற்போது சென்னையில் ஏரியா மானேஜராக உள்ள திரு. ஏ. வி. கண்ணன், திரு. ஜே. சீனிவாசன், திரு. ஏ. வி. பாலகுமார் முதலானவர்களும் தங்கள் கிளையின் வளர்ச்சி பற்றிய தகவல்களை ஆர்வத்துடன் நமக்குக் கூறுகின்றனர்.

உழைப்பால் உயரும் நிறுவனம்

''கடின உழைப்பு—கட்டுப்பாடு-தெளிந்த கண்ணோட்டம்—திடசிந்தனை—இவையே நம் நாட்டினை உயர்த்தும் ஒரே மந்திரம் என்றார் நம் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள்.

அவருடைய அந்த ஒரே மந்திரத்தைக் கடைப்பிடித்து டாக்டர் எல். கே. பெஹல் அவர்களின் நிருவாகத் தலைமையின் கீழ் நிமிர்ந்து நடைபோடுவதே 'ஐ. டி. பி. எல்.' நிறுவனம்.

''கோடிக்கோடி மக்களுக்கும் கொடுப்போம் மருந்துகள்'' (Medicines for the Millions) என்பதையே தாரக மந்திரமாகக்கொண்ட இந்த நிறுவனம் இன்னும் பல சாதனைகளைப் புரியும் என்று உறுதியாக நம்பலாம்.

—அ. வேதாசலம்



தமிழ்நாட்டில் நிலச் சீர்திருத்தம்

தமிழ் நாட்டில் நிலச்சீர்திருத்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் தேசிய வழிமுறைகளிலிருந்து சிறிது பிறழ்ந்த நிலை தற்போது உள்ளது. தமிழ் நாட்டின் நிலச்சீர்திருத்தச் சட்டத்தை தேசிய விதிமுறைகளுக்கு ஏற்ற வகையில் ஆக்குவதற்கான சட்ட நடவடிக்கைகளைப் பற்றித் தமிழ் நாடு அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

விசாரணைக்கு வரக்கூடிய புதிய பிரச்னைகளைச் சமாளிப்பதற்காகச் சிறப்பு தீர்ப்பு மன்றங்களை (Tribunals) அமைக்கவும் அரசு கருதியுள்ளது.

நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் உபரியாக இது வரையில் அறிவிக்கப்பட்டுள்ள பரப்பு 1,12,473 ஏக்கர். இதில் 92,511 ஏக்கர் நிலத்தை அரசு எடுத்துக் கொண்டுள்ளது. அதில் 68,970 ஏக்கர் நிலத்தை 41,444 பேர்களுக்கு ஒப்படை செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

1969-ஆம் ஆண்டின் குத்தகை உரிமை பற்றிய தமிழ் நாடு வேளாண்மை நிலப்பதிவேடுகள் சட்டத்தின் கீழ் 4,01,808 குத்தகைதாரர்கள் பதிவுசெய்யப்பட்டனர். பதிவு செய்யப்பட்ட பரப்பளவு 6,03,957 ஏக்கர்.

1972-ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட பட்டா 'பாஸ் புத்தகத்' திட்டத்தின் கீழ், சென்ற ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதி வரையில் 104 இலட்சம் பட்டா புத்தகங்கள் வழங்கப்பட்டன.

நில உச்ச வரம்புச் சட்ட அதிகார வரம்பின்கீழ், பழத்தோட்டங்கள், சீதனமாக உள்ள நிலங்கள் அல்லது வயது வராதவர்களுக்குக் (மைனர்) கொடுக்கப்பட்ட நிலங்கள் ஆகியவற்றைக் கொண்டு வருவதற்கான சட்ட நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு பரிசீலித்து வருகிறது.

மத்திய அரசு வழங்கியுள்ள தேசிய வழிமுறைகளுக்கு இசைவாக இருக்கும் நிலையை இது ஏற்படுத்தும்.

நிலச் சீர்திருத்தம் தொடர்பான 115 'ரிட்' மனுக்களும், 24 சிவில் 'ரிவிஷன்' மனுக்களும் சென்னை உயர் நீதிமன்றத்தில் இப்போது தீர்த்து வைக்கப்படாமல் இருக்கின்றன. ஏறத்தாழ எல்லா மனுக்களிலும் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் பற்றி எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசியல் சட்டத்தின் ஒன்பதாம் பிரிவில் அவற்றைச் சேர்ப்பது நல்லது.

நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் மூலம் கிடைத்த உபரி நிலத்தை ஒப்படையாகப் பெற்றவர்களுக்கு மத்திய அரசு நிதி உதவி அளித்திட வேண்டும்.

—தமிழக ஆளுநர் கே. கே. ஷா. அவர்கள், 6.3.76 அன்று புதுடில்லியில் நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் பேசியது.



நிழல்

④

''நான் பொறுமை இழந்திட்டேன். என் பலம் கொண்ட மட்டும் அடிச்சேன். ஆத்திரம் தீருமட்டும் அவளை அல்லல் படுத்தி அவ தலை முடியைப் பிடிச்சு இழுத்தேன். நீ செத்தாலும் முத்துவைத்தான் அடைவேன்னு சொல்ற முத்து இந்த அறைக்குள்ளேதான் இருக்கான், நீயும் அவன்கிட்டேயே போய்ச் சேருன்னு, முத்து தூக்குப் போட்டுச் செத்த அறைக்குள்ளே தள்ளிக் கதவைச் சாத்திட்டேன்.

''வீட்டுக்கு உபயோகப்படாத சாமான்களையெல்லாம் அந்த அறையிலே போட்டுப்பூட்டி வைச்சிருந்தோம். வெளிச்சமும் காற்றும் புகாத அந்த இருட்டறைக்குள்ளே மரகதத்தைத் தள்ளினதும் ''அத்தை, அத்தை'' என்னைக் காப்பாற்று. எனக்குப் பயமா இருக்கு. என்னைக் காப்பாற்று. தேளும் கரப்பானும் என்னைச் சுத்தி வருதுன்னு கத்தினா, கதறினா, கெஞ்சினா, தவிச்சா.

''நான் சொல்றதைக் கேட்கறேன்னு சொல்ற வரைக்கும் உனக்கு அதுதான் தண்டனை''. என் மனதைக் கல்லாக்கிட்டுக் கதவைத் திறக்கவே இல்லே.

பட்டுக்கோட்டை குமாரவேல்

''பகல் பொழுது முழுதும் முத்து முத்துன்னு புலம்பினா. செருமல் சப்தம் கேட்டுக்கிட்டே இருந்தது. அப்புறம் சப்தமே இல்லே. தூங்கிட்டான்னு நாங்களும் படுத்தவங்க தூங்கிட்டோம். நடுஇரவு நேரம் இருக்கும். மரகதம் வீல்னு கத்தினா. அத்தை அத்தைன்னு துடிச்சா. தேள் எதுவும் கொட்டியிருக்குமோன்னு பயந்து கதவை திறந்தேன். மரகதம் மயங்கிக் கிடந்தா. கை கால்கள் கோண இழுத்து விரைச்சுப் போச்சு. உடம்பைத் தொட்டுப் பார்க்கற போது அது மனித உடம்பாத் தெரியலே. ஏதோ இரும்பைத் தொடறதைப் போல உணர்வு எனக்குப்பட்டுது. கண்கள் மூடியிருந்தன. வாயிலிருந்து நுரை நுரையா எச்சில் வந்தது. அறையை விட்டு வெளியே கொண்டு வந்து முகத்திலே தண்ணி தெளிச்சேன். வாயிலே தண்ணீர் ஊற்றினேன். பற்கள் கிட்டிப் போயிருந்ததாலே வாயிலே ஊற்றின தண்ணீர் கீழே வழிஞ்சுட்டுது. எனக்குப் பயம் அதிகமா போச்சு. உயிருக்கு எதுவும் ஆபத்து வந்திடுமோன்னு நினைச்சுட்டேன்.

''பக்கத்திலே உள்ளவங்களை ஆதரவுக்குக் கூப்பிட்டு டாக்டரைக் கூட்டி வரச் சொன்னேன். எனக்கு நெஞ்சுத்துடிப்பு அதிகமாப் போயி, உடம்பெல்லாம் வேர்த்துப் போச்சு. என்ன செய்றதுன்னு புரியாம ஆடிப் போயிட்டேன். டாக்டர் வந்து மரகதத்தைப் பரிசோதனை செய்தார். உயிருக்கு ஆபத்தில்லே, அதிர்ச்சி, பயம், ஏக்கம், இதனாலே மூளை நரம்பு பாதிக்கப்பட்டிருக்கு. நல்லா ஓய்வெடுத்தா சரியாப் போயிடும். இனிமே இந்த மாதிரியான சந்தர்ப்பங்களை எற்படாமே பார்த்துக்கணும்னு சொல்லி ஒரு ஊசி போட்டாரு. மருந்துகளையும் எழுதிக் கொடுத்தாரு.

''நல்ல காத்தோட்டமான இடத்திலே படுக்க வைச்சு அவளைக் காப்பாத்தினேன். அதுவரைக்கும் கடவுள் என்னைக் காப்பாற்றினார்.''

''மரகதத்திற்கும், உங்கள் மகன் மேகநானுக்கும் திருமணம் எப்போ நடத்துச்சு?'' சப்-இன்ஸ்பெக்டர் ரவி கேட்டார்.

''சொல்றேன்'' பெருமூச்சு விட்டபடி அந்த மூதாட்டி மறுபடியும் பேசினார்.

''மரகதம் அந்த நிகழ்ச்சிக்கப்புறம் படிப்பை விரும்பிப் படிச்சா. பட்டம் பெற்றுக் கல்லூரிப் பேராசிரியராகக் கல்லூரியிலே பணியாற்றினாள். அவள் கல்லூரி மாணவிகளுக்குச் சொல்லிக் கொடுக்கும் பேராசிரியராளே தவிர, அந்தச் சம்பவத்திலிருந்து நான் அவளுக்குக் கொடுத்த சலுகையோ இல்லை பேராசிரியர் என்ற மமதையோ என்னவோ-யாரையுமே லட்சியம் செய்யாத கர்வியாகிட்டா.

''மரகதம் பேராசிரியரானதும், என் மகன் மேகனாதனும் மரகதமும் நெருங்கிப் பழக ஆரம்பிச்சாங்க. அவளையே திருமணம் செய்துக்குவேன்னு அவனும் பிடிவாதம் பிடித்தான்.

''என் மகன் மேகநாதன் நல்ல பையன். மரகதத்தின் குணம் தெரிந்த நான் எவ்வளவோ மறுத்தும் கேட்கலே. எல்லாம் விதிப்படி நடக்கும்னு நானும் சம்மதிச்சேன். திருமணம் நடந்தது. இருவரும் தம்பதிகளாகக் குடும்பம் நடத்தினாங்க.

''அதுதான் இல்லே சப்இன்ஸ்பெக்டர் சார். நான் இந்த மரகதத்தை விரும்பித் திருமணம் செய்துக்கிட்டது உண்மை. ஆனா நான் அவளோடு ஒருநாள் கூடக் குடும்ப வாழ்க்கை நடத்தினதில்லே. ஆமாம் சப்-இன்ஸ்பெக்டர் சார். எனக்குத் திருமணம் நடந்து இத்தனை ஆண்டுகளுக்கப்புறம் என் மனத்திலே குமுறிக் கொண்டிருந்த எண்ணங்களைக் கொட்டித் தீர்த்தாத்தான் என் மனம் ஆறுதலடையும்!''

''உண்மைதான்!'' என்றார் சப்-இன்ஸ்பெக்டர்.

''நான் திருமணம் செய்து கொண்ட மரகதம் இதுவரை எனக்கு வாழ்க்கைத் துணைவியாகத்தான் இருந்து கொண்டிருக்கிறாளே தவிர ஒருநாள் கூட என் மனைவியா இருந்ததில்லே.''

''உண்மையாகவா?'' சப்-இன்ஸ்பெக்டர் ஆச்சரியத்தோடு கேட்டார்.

''உண்மைதான் சப்இன்ஸ்பெக்டர்! வெட்கத்தைவிட்டுச் சொல்றேன். முதலிரவு அன்று சொர்க்கத்தைக் காணும் ஆவலில் விளக்கை அணைத்து அவளை அள்ளி அணைத்தேன். அவளும் என்னை ஆசையோடு அணைத்தாள். எங்கிருந்தோ காற்றில் மயக்கும் மணம் வந்தது. என் அருகில் படுத்திருந்த மரகதம் நாகம் சீறுவது போலப் பெருமூச்சு விட்டாள். துவண்ட மலரெனக் கட்டிலில் கிடந்த மாரகதத்தின் உடல் இரும்பாக மாறியது. விரல்கள் அத்தனையும் விரைத்து நீண்டன. என்னை மயக்கிய இமைகள் திறந்து என்னை விழுங்கும் கண்களாக மாறின. கொஞ்சும் மொழி பேசிய வாய் கோரமாகச் சிரித்தது. மலர்க் கொடியென என்னை அணைத்திருந்த கரங்கள் இரும்புக்கரங்களாக மாறி என்னை இறுகப் பிடித்து என் கழுத்தை நெறிக்கப் பார்த்தன. அந்தக் காட்சியை இப்பொழுது நினைத்தாலும் நெஞ்சக் குருதி உறைந்துவிடும் போலிருக்கிறது.

''நான் 'வீல்' என்று கத்தினேன். மரகதத்தின் இரும்புப் பிடியிலிருந்து தப்பினேன். அவள் என்னைப் பிடித்துக் கொலை செய்யத் தொடர்ந்தாள். உடல் வியர்க்க, நெஞ்சம் துடிக்க எப்படியோ கதவைத் திறந்தேன். வெளியே வந்து, கதவைத் தாளிட்டேன். அவ்வளவுதான் தெரியும். அப்படியே மயங்கி விழுந்து உறங்கிவிட்டேன். பொழுது விடிந்தது. ஊமை கண்ட கனப்போல, இரவு நடந்த இந்தச் சம்பவத்தை யாரிடமும் சொல்ல முடியாமல் தவித்தேன். இதுநாள் வரை நானும் மரகதமும் கணவனும் மனைவியுமாக வாழ்ந்து விட்டோம்.''

''மரகதத்துக்கு மனநோயா இல்லை நரம்புக் கோளாறு என்று மருத்துவரிடம் காட்டிச் சிகிச்சை செய்ய நீங்கள் ஏன் முயற்சிக்கவில்லை?''

''அது மன நோயோ, அல்லது



பரங்கிப் பேட்டையில் கலங்கரை விளக்கம்

தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள பரங்கிப்பேட்டையில் கலங்கரை விளக்கம் ஒன்றைக் கட்டுவதற்குத் தேவையான நிலத்தின் உரிமையை வழங்குமாறு தமிழ்நாடு அரசை மத்திய அரசு கேட்டுள்ளது. மொத்தச் செலவு 26 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கட்டுமான வேலைகள் விரைவில் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

நரம்புக் கோளாறோ இல்லை சப் இன்ஸ்பெக்டர் சார். அவளைக் காதலித்துத் தற்கொலை செய்து கொண்ட முத்துவின் ஆவி அவளைப் பற்றிக் கொண்டிருக்கிறது. அவனைத் தவிர மற்ற எவரும் அவளிடம் இன்பம் அனுபவிக்க விரும்பாத முத்துவின் ஆவி, மேகநாதன் அவளிடம் இன்பம் அனுபவிக்க முயற்சிக்கும் போது வந்து மேகநாதனையே கொல்ல முயற்சிக்கிறது'' என்று மேகநாதனின் தாய் மங்களத்தம்மாள் குறுக்கிட்டு விவரமாகச் சொன்னாள்.

''ஆமாம் சப்-இன்ஸ்பெக்டர். அவளைப் பற்றிக் கொண்டிருக்கும் முத்துவின் ஆவிதான் இவ்வாறு செய்கிறது. இப்பொழுது சொல்லுங்கள். மரகதம் கொலைகாரியா அல்லது சூன்யக்காரியா? மரகதத்தால் நடக்கும் கொலைகளுக்கு என் மகன் மேகநாதன் உடந்தையா? யார் கொலை செய்தது? யார் குற்றவாளி?.''

''மேகநாதன் நிச்சயமாகக் குற்றவாளியே இல்லே. அந்த சூன்யக்காரி மரகதம்தான் கொலைகாரி. இந்தப் பங்களாவிலே நடந்த கொலைகளுக்கு எல்லாம் காரணம் அவள்தான். அவளுக்குள்ள நெஞ்சழுத்தமும் நேர்மையில்லா மனமும் இந்த உலகத்திலே எந்தப் பெண்ணுக்கும் இருக்கவே இருக்காது. அதனாலேதான் இந்த பங்களாவை விட்டு எங்களோடு கோயம்புத்தூருக்கு வராம இங்கேயே குடியிருக்கா. அவள் மேலே இருக்கற ஆவிக்கு அடிமைப்பட்டு அவ என்னையும், என் மகன் மேகநாதனையும் எந்தச் சமயமும் கொன்னுடுவாளோன்னு பயந்துதான் நான் எப்பொழுதுமே எச்சரிக்கையா இருக்கேன். இரவு நேரங்களிலே என் பையன் மேகநாதன் அவ இருக்கிற பங்களாவிலே இருக்க முடிவதில்லை.''

''இவ்வளவு பயங்கரமான உண்மையை மறைச்சு வைச்சு நீங்க எதுக்காக வாழ வேண்டும்? நல்ல மனநோய் மருத்துவரை அழைத்து வந்து காட்ட வேண்டியதுதானே?''.

''மருத்துவரென்ன சப்-இன்ஸ்பெக்டர் சார்! பெரிய பெரிய மந்திரவாதிகளை எல்லாம் அழைத்து வந்து காட்டினேன். மறைவாக மந்திரங்கள் எல்லாம் செய்து பார்த்தேனே!''

''மந்திரத்தாலே அந்தப் பேயை ஓட்ட முடியவில்லையா?''

''முடியவில்லையே! பேயை ஒட்டுறேன்னு அறைக்குள்ளே போன அந்த மந்திரவாதி, நான் இந்த திசைப்பக்கம் இனிமே வரவே மாட்டேன். என்னை விட்டுடுங்க. என்னை விட்டுடுங்கன்னு கதவைத் திறந்துகிட்டு தலைவிரி கோலமா ஓடி விட்டான். அதனாலே நீங்கதான் சப்-இன்ஸ்பெக்டர் எப்படியாவது இந்த சூன்யக்காரியைக் கைது செய்து தூக்கிலே போடணும். அவ உயிரோட இருக்கற வரை எங்களுக்கு வாழ்வு கிடையாது. நிம்மதியான தூக்கம்கூட இல்லே. ஏன் இங்கு வந்து தங்கும் இளம் தம்பதிகள் அத்தனை பேரும் உயிரோட திரும்ப முடியாது.''

''மரகதம் தான் சூன்யக்காரி. அவள்தான் இந்த பங்களாவிலே நடந்த கொலைகளையெல்லாம் செய்தாள் என்று நீங்க சொல்றதை நானும் நம்புகிறேன். ஆனா''....

''ஆனா...என்ன சப்-இன்ஸ்பெக்டர் சார்?. உங்களுக்கு நம்பிக்கை வந்தவுடனே கைது செய்து தூக்கிலே போட வேண்டியது தானே!'' மரகதத்தின் கணவர் மேகநாதனும், அவர் தாய் மங்களமும் உணர்ச்சி வசப்பட்டு பரபரப்போடு சொன்னார்கள்.

கட்டிய மனைவியைக் கைது செய்யச் சொல்லி மேகநாதன் தூண்டிக் கொண்டிருக்கிறார். கட்டிக் காப்பாற்ற வேண்டிய மருமகளைக் கைது செய்து உடனே தூக்கிலிட வேண்டுமென்று மாமியார் மங்களத்தம்மாள் துடிக்கிறாள். நகமும் சதையுமாக வாழ வேண்டிய தம்பதிகளும், தாயும் மகனுமாக வாழ்ந்து வந்த மங்களமும் ஏன் மாறுபட்டார்கள்? ஏன் அவர்களுக்கு இந்த மனமாற்றம் ஏற்பட்டது? எது அவர்கள் மனத்தை மாற்றியது? மரகதத்தின் மீது கணவன் மேகநாதன் காட்டும் அன்பும், மருமகள் மீது மாமியார் மங்களத்தம்மாள் காட்டிய பாசமும் சப்-இன்ஸ்பெக்டர் ரவியின் சிந்தனையைத் திசை திருப்பி விட்டன.

மேகநாதனைக் கைது செய்யாமல் அவர் வீட்டிலேயே விட்டு விட்டு அலுவலகத்திற்கு வந்து கொண்டிருந்தார் சப்-இன்ஸ்பெக்டர் ரவி. அவர் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர் போல இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி., சப்-இன்ஸ்பெக்டர் ரவியை முகமலர்ச்சியோடு வரவேற்றார்.

''மிஸ்டர் ரவி! வாங்க, உட்காருங்க. பரவா இல்லே...நம்ம தொழில்லே வெற்றி அவ்வளவு சுலபமா கிடைச்சுடாது. சுலபமா வெற்றிக் கிடைச்சுடும்னு நினைக்கறதும் தவறு. நீங்க எடுத்த முயற்சியிலே வெற்றியோ! தோல்வியோ..... நான் அதைப் பற்றி கவலைப்படலே. ஆனா, உங்க முயற்சியையும், உழைப்பையும் கண்டு நான் பெருமைப்படுறேன். உங்க கடமையைச் செய்ய நீங்க எடுத்துக்கொண்ட முயற்சிகளை நான் அவ்வப்போது கேட்டு மகிழ்ந்து போனேன். ஆனா ''...இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி தன்னுடைய பேச்சை நிறுத்தினார்.

''சொல்லுங்க இன்ஸ்பெக்டர் சார்! சொல்லுங்க. நான் எடுத்த முயற்சிகளிலே தவறுகள் இருந்தால் திருத்திக் கொள்கிறேன். இல்லை அதற்காக எந்தத் தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளத் தயாராகவும் இருக்கிறேன்.

''மிஸ்டர் ரவி..நீங்க செய்யற கடமையிலே நான் குற்றமோ குறையோ காணவில்லை..ஆனா''?

''பிறகு? தயங்காமல் சொல்லுங்க. நான் அதை என் வாழ்க்கை உயர்வுக்காக நீங்க சொன்ன அறிவுரைகளாக எடுத்துக் கொள்கிறேன்.''

இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனத்தில் இருபது அம்சத் திட்டம்.

பிரதமரின் 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தின்படி இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனத்தில் உற்பத்தி மட்டத்தில், நிர்வாகத்தில் தொழிலாளர்களும் பங்கு கொள்ளும் முறை துவக்கப்பட்டுள்ளது. இம்முறையின் முதல் கட்ட நடவடிக்கையாக உற்பத்தி மட்டத்தில் தொழிலாளர்கள் - நிர்வாகத்தினர் கொண்ட 5 குழுக்களும், கூட்டு நிர்வாகக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன. உற்பத்தி மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 5 குழுக்களிலும் குழு ஒன்றிற்கு 12 உறுப்பினர்கள் இருப்பார்கள். அவர்களில் 6 பேர் தொழிலாளர் பிரதிநிதிகள். கூட்டு நிர்வாகக் குழுவிலும் 12 உறுப்பினர்கள் இருப்பார்கள். அவர்களில் பாதிப்பேர் தொழிலாளர் பிரதிநிதிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

''உங்களைப் போன்ற இளைஞர்கள் வாழ்க்கையிலே உயரணுங்கறத்துக்காகத்தான் நான் நினைக்கிறதை உங்களுக்குச் சொல்லணும்னு நினைக்கிறேன் மிஸ்டர் ரவி''.

''சொல்லுங்க இன்ஸ்பெக்டர் சார்!''

''குற்ற இலாகாவிலே பணியாற்ற முன் வந்த நம்மைப் போன்றவர்களுக்கு மனித வாழ்க்கையின் தத்துவங்களும் கொஞ்சமாவது கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். அப்போதுதான் நல்லவர்களாகவே வாழ நினைத்து வாழத் துவங்கும் மனிதர்கள் குற்றவாளிகளாக ஏன் மாறுகிறார்கள். எதற்காக மாறுகிறார்கள். எதற்காக அந்தக் குற்றங்களைச் செய்கிறார்கள் என்று தெரியும்.''

''உண்மைதான் இன்ஸ்பெக்டர்''.

''மனித வாழ்க்கைத் தத்துவத்தை நாம் நன்றாகத் தெரிந்து கொண்டோமென்றால், மனிதர்கள் வாழ்க்கையிலே உயரவும் தவறவும் எதைச் செய்கிறார்கள், ஏன் செய்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளலாம். உயர்ந்தவன் வாழ்க்கையிலே என்ன செய்கிறான். வாழ்க்கையிலே தவறினவன் எதைச் செய்கிறான் என்று புரிந்துகொள்ள முடியும்.''

''உயர்ந்தவன் உருவமும் மனநிலையும் மாறிப் போகிறதே''.

''மனநிலை மட்டுமில்லை, அவர்கள் முகமும் மாறிப்போகும்.''

''முகம் மட்டும் மாறும் என்று நினைக்காதீர்கள். அவர்கள் கண்களே அவர்களை இனம் காட்டிக் கொடுத்துவிடும்.''

''ஊட்டி பங்களாவில் வசிக்கும் மரகதமும், மாரிசாமியும் என் கண் பார்வையில் இருந்து மறைந்து கொண்டதற்கு ஏதாவது வேறு காரணங்கள் இருக்குமோ?''

''எப்படிப் பார்த்தீர்கள், ஏன் பார்த்தீர்கள், எதற்காகப் பார்த்தீர்கள் என்பதில்தான் அவர்கள் மறைந்த காரணம் தெரியும்.''

''ஒரு குற்றவாளியைக் கண்டு பிடிக்க, நாம் நடவடிக்கை எடுக்கும்போது எதை நம்பி எடுத்துக் கொள்ள வேண்டும்?

''பாமரர்கள் சொல்வதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. சான்றோர்களுடைய சொல்லையே நாம் கவனிக்க வேண்டும். அவர்கள்தான் உண்மையை அறிவார்கள்.''

''மனிதன் கொலைகாரனாக மாறக்காரணம்?''

''கோபத்தினால் மனிதன் குற்றவாளியாவதைவிட ஆசையினால்தான் அவன் கொலைகாரனாகவும் மாறிவிடுகிறான். கோபத்தினால் அறிவு கெடுகிறது. உள்ளம் கெடுகிறது. மண், பெண், பொன் ஆசைகளினால் மனிதன் உணர்ச்சிக்கு அடிமையாகி கொலைகாரனாகவும் மாறிவிடுகிறானே!''.



''சுந்தரபாண்டியன் மகன் விநாயகத்தை எதற்காகக் கொலை செய்திருப்பார்கள்?''

''மிஸ்டர் ரவி! அதைக் கண்டு பிடித்து வருவதாகத்தானே என் முன்னிலையில் சபதம் எடுத்துப் போனீர்கள்? இப்பொழுது என்னையே கொலைக்குக் காரணம் என்ன என்று கேட்கிறீர்கள்!''

''மன்னிக்கவேண்டும். தத்துவ ரீதியாகக் குற்றம் புரிபவர்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்ததால் தவறுதலாகக் கேட்டு விட்டேன்!''

சப்-இன்ஸ்பெக்டர் ரவி, இன்ஸ்பெக்டர் புண்ணியகோடியிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். அப்பொழுது இன்ஸ்பெக்டர் புண்ணியகோடியின் அருகில் இருந்த டெலிபோன் ஒலித்தது. உடனே இன்ஸ்பெக்டர் ரிசீவரை அவசரமாகக் கையில் எடுத்தார்.

(தொடரும்.)

விடைகள்

1. எவரெஸ்ட் (29198 அடி).
2. கல்கத்தா.
3. மைசூரில் உள்ள கோமதீஸ்வரர் (200 அடி).
4. அலிபூரில் உள்ளது.
5. பீகாரில் உள்ள சோனேபூர் (2,415 அடி).
6. காஷ்மீரில் உள்ள ஜவஹர் பனிஹல் (8,115 அடி).
7. இராமேஸ்வரம் கோயில் (4,000 அடி).
8. உத்தரப் பிரதேசம்.
9. மத்தியப் பிரதேசம்.
10. உத்தரப் பிரதேசம்.
11. மேற்கு வங்கத்திலுள்ள சுந்தர்வனம்.
12. பக்ரா (740 அடி).
13. டெல்லியிலுள்ள குதுப்மினார் (240 அடி).
14. காஷ்மீரிலுள்ள உலர் ஏரி.
15. கிராண்ட் டிரங் சாலை (1,500 மைல்).
16. டெல்லியில் உள்ள ஜும்மா மசூதி.
17. மைசூர் மாநிலத்திலுள்ள ஜெர்சொப்பா அருவி (260 அடி).
18. அஸ்ஸாம்.
19. மகாராஷ்டிரத்தில் உள்ள எல்லோரா.
20. அஸ்ஸாமில் உள்ள சிரபுஞ்சி (ஆண்டுக்கு 500 அங்குலம்).

301

பதிவு எண். M. 8676

இந்தியப் பிரதமரின்

20 அம்சத் திட்டம்



உழவர் வாழ்வு
உயர்ந்திட ...

மாணவர் வருங்காலம்
வளம்பெற ...

வழிகாட்டுகிறது!

துணை நின்று தோள் கொடுப்போம்!
வெற்றிபெற உழைத்திடுவோம்!!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

தமிழரசு

1-4-1976 50 க

வெற்றியை நோக்கி....!



அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!

— குடும்பநலத்துறை,
தமிழ்நாடு அரசு.

தமிழ்நாடு அரசின்

1976-77-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டச்

சிறப்பு அம்சங்கள்

✱ தமிழ் நாட்டின் திட்ட முதலீடு 200 கோடி ரூபாய் அளவைத் தாண்டி யுள்ளது.

✱ 1976—'77-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் திட்ட முதலீடாக 201 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது, 1975—'76-ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடாகிய 143 கோடி ரூபாயைவிட 40 சதவிகிதம் கூடுதலாகும்.

✱ இருபது அம்சத் திட்டத்துக்காக 111 கோடி ரூபாய், அதாவது திட்ட முதலீட்டில் 56 சதவிகிதம் செலவிடப்படும்.

✱ மின்சக்தித் துறைக்கான ஒதுக்கீடு 1976—77-ல் 70.18 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. 1975—76-ல் இத்துறைக்கு 41 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.

✱ தூத்துக்குடி அனல்மின் திட்டத்திற்கு (420 மெகாவாட்) மத்திய அரசின் உதவித் தொகையாக 27 கோடி ரூபாய் முன்பணம் கிடைக்கும்.

✱ பாண்டியாறு—புன்னம்புழா நீர் மின் திட்டத்துக்கு (100 மெகாவாட்) 5 கோடி ரூபாய் கூடுதல் உதவியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

✱ பழைய நீர்ப்பாசன முறைகளை மேம்படுத்துவதற்கான ஒதுக்கீடு 4 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

✱ வறட்சிப் பகுதிகளில் புன்செய் சாகுபடி ஆராய்ச்சிக்கும், நீர்ப்பாசன வசதிகளுக்கும் சிறப்பான முக்கியத்துவம் அளிக்கப்படும்.

✱ அரக்கோணம் எஃகாலை, திருச்சிராப்பள்ளியிலுள்ள மத்திய அரசுத் துறை நிறுவனமாகிய பற்றவைப்பில்லாத குழாய் (சீம்லெஸ் ட்யூப்) உற்பத்தித் திட்டத்தின் துணை அமைப்பாக மாற்றியமைக்கப்படும்.

✱ சென்னை நகரத்துக்குக் குடிநீர் வினியோகிப்பதற்கான கிருஷ்ணா— பெண்ணாறு திட்டத்தின் துவக்க வேலைக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

✱ சென்னை நகரின் சாலை, பாலங்கள் மேம்பாட்டிற்கான திட்டங்களுக்குக் கணிசமான தொகை ஒதுக்கப்படும்.

✱ தொழில் துறை ஊழியர்களுக்கான அரசாங்க இன்சூரன்ஸ் திட்டத்தின் பயன்கள் புதிய துறைகளுக்கும் விரிவாக்கப்படும்; அதன் மூலம், கூடுதலாக 3 இலட்சம் தொழிலாளர் குடும்பங்கள் பயனடையும்.

✱ பழங்குடிப் பிரிவு மக்களின் நல்வாழ்வையும், முன்னேற்றத்தையும் கவனிப்பதற்காகப் புதிதாகப் பழங்குடிப் பிரிவு மேம்பாட்டு நிர்வாகம் அமைக்கப்படும்.

✱ அரிசன மக்களுக்கு வீட்டுமனைகள் வழங்குதல், குடிசை மாற்றுத் திட்டம் ஆகியவற்றுக்கான ஒதுக்கீடுகள் உயர்த்தப்பட்டுள்ளன.

✱ பெரு வியாதியைக் கண்டுபிடித்துக் கட்டுப்படுத்துவதற்காக, பள்ளிக்கூடக் குழந்தைகளின் மருத்துவப் பரிசோதனைக்கான புதிய திட்டம் துவக்கப்படும்.

✱ இருபது அம்சத் திட்டத்தின் ஒரு பகுதியாக, பயிற்சிப் புத்தகங்களுக்கும், பென்சிலுக்கும் 4 சதவிகித பல முனை விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

✱ மாநிலத்துக்கு வெளியே விற்கப்படும் பருத்தி நூல் மீதான விற்பனை வரி, 3 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கப்படும்.

✱ உலர் பாட்டரி செல்கள் மீதான விற்பனைவரி 15 சதவிகிதத்திலிருந்து 9 சதவிகிதமாகக் குறைக்கப்படும்.

✱ பயணி மோட்டார் கார்கள் மீதான விற்பனை வரி 15 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாகக் குறைக்கப்படும். இந்த மாநிலத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பயணி மோட்டார் கார்கள், லேசு ரக டீஸல் வாகனங்கள் ஆகியவற்றுக்கு மத்திய விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

தமிழரசு 1-4-1976
மலர்-6 இதழ்-19

மார்-

நெருக்கடி நிலைமையால் நிறைந்தன நன்மைகள்

குடியரசுத்தலைவர் உரை

கட்டுப்பாடு கடமை உணர்வுடன் நமது குறிக்கோள்களை அடைவோம் என்ற உறுதியுடன் பணி புரிய வாய்ப்பு அளித்துள்ளது நெருக்கடி நிலைமை. அரசு அலுவலகங்களில் அதிக கட்டுப்பாட்டுடன் ஊழியர்கள் தங்கள் கடமை ஆற்றி வருகிறார்கள். அபிவிருத்தி திட்டங்களைச் செயல்படுத்தி முடிக்கும் அலுவல் விரைந்து நடைபெறுகிறது. இதனால் பண்ணைகளிலும், பயிர் நிலங்களிலும், தொழிற்சாலைகளிலும் உற்பத்தி அதிகரிக்கும் என்பதில் ஐயம் இல்லை. நாட்டின் பொருளாதாரம் சிறக்க இது வகை செய்யும்.

மாநிலங்களுக்கிடையேயான எல்லைத் தகராறுகள் போன்ற நீண்ட காலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில், நாட்டின் ஒற்றுமை, ஒருங்கிணைப்பு ஆகியவற்றை கருத்தில் கொள்ள வேண்டும். இதைப் பொது மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் ஆளுநர்கள் பணியாற்ற வேண்டும்.

தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட்ட காரணம்

புதிய சவால்களை சமாளிப்பதற்கான அறைகூவலை நாட்டிலுள்ள மாநில அரசுகள் ஏற்றுக் கொண்டபோதிலும், காலத்தின் தேவையை சில மாநிலங்கள் புரிந்து கொள்ளவில்லை. தமிழ் நாட்டில் ஏற்பட்ட அண்மைக் கால நிகழ்ச்சிகள் ஆளுநரின் பணியை வெளிப்படுத்தின. ஒரு மாநில மக்களின் நலனுக்காக பாடுபடுவதற்காக, கண்காணிப்புடன் ஆளுநர் செயல்படாமல்,நிகழும் சம்பவங்களைப்பார்த்து கொண்டு வெறுமனே இருந்தால், அவர் தமது கடமையை நிறைவேற்றத் தவறிவிட்டதாகக் கருதப்படுவார். ஆளுநர் பதவி வகிப்பவர், மாநில அமைச்சரவையில் தலையீடு செய்யும் முன், மிக அதிக அளவுக்குப் பொறுமையைக் கடைப்பிடிப்பார். தமிழ்நாடு ஆளுநர் தாம் அனுப்பிய அறிக்கையிலிருந்து நீண்ட காலமாக அவர் பெருமளவுக்குப் பொறுமையைக் கடைப்பிடித்தார் என்பதும், மாநில அரசு செயல்படும் விதத்தில் மக்களுக்குச் சாதகமான மாற்றம் ஏற்படலாம் என நம்பிக்கை கொண்டிருந்தார் என்பதும் தெரிய வருகின்றன. நிர்வாகத்தில் ஒழுங்கீனம், இலஞ்ச ஊழல் ஆகியவற்றிற்கு மாநில அரசு உணர்ந்தோ உணராமலோ ஆதரவு அளிப்பதாகத் தெரிந்து, அது பற்றி கவனம் செலுத்தி,தக்க நடவடிக்கையை ஆளுநர் மேற்கொள்ளாமல் இருந்தால், அவர் அரசியலமைப்புச் சட்டத்திற்கும், மக்களுக்கும் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்களிலிருந்து விலகி விட்டதாகக் கருதப்படுவார். நாட்டின் ஒருமைப்பாடு, ஒற்றுமை ஆகியவற்றிற்கு அச்சுறுத்தல்களை ஏற்படுத்தக்கூடிய எந்தச் செயல் குறித்தும் ஆளுநர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இத்தகைய சூழ்நிலைதான், தமிழ்நாட்டில் உருவாகி இருந்தது. ஓரளவுக்குப் பொறுமையைக்கடைப்பிடித்த பிறகே, தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சிக்குச் சிபாரிசு செய்து ஆளுநர் அறிக்கையொன்றை அனுப்பினார்.

நெருக்கடி நிலையால் விளைந்த பயன்கள்

நெருக்கடி நிலை அறிவிப்பின் விளைவுகளை நாட்டின் பொருளாதார வாழ்க்கையில் தெளிவாகக் காண்கிறோம். பொருளாதாரத் துறையில் இருந்து வந்த குழப்ப நிலை, பாதகமான சூழ்நிலையை உருவாக்குவதற்கான போக்கு ஆகியவற்றிலிருந்து ஒழுங்குக் கட்டுப்பாடு உணர்வைக் கொண்டு வர நெருக்கடி நிலை உதவியது.

20 அம்சத் திட்டம்

பிரதமர் அறிவித்த 20 அம்சப் பொருளாதாரத் திட்டம் நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றத்தைக் கொண்டு வரும் விதத்தில் அமைந்துள்ளது. ஏழைகளைப் பணக்காரர்கள் சுரண்டும் போக்குக்கு முற்றுப்புள்ளி வைத்து, நியாயமான பொருளாதார அமைப்புக்கான உறுதியான அடித்தளத்தை அத்திட்டம் அமைத்துக் கொடுத்துள்ளது.

20 அம்சத் திட்டத்தினால் ஏழைகளுக்கு ஏற்பட வேண்டிய பலன்கள் நேரடியாக அவர்களுக்குக் கிடைக்க வகை செய்ய வேண்டும். சில சிறிய அதிகாரிகள், ஏழைகளுக்குக் கிடைக்க வேண்டிய பலன்களைத் தட்டிப் பறித்துச் செல்லாமல் இருக்க ஆவன செய்ய வேண்டும்.

உணவு உற்பத்தி பெருகியது!

1975—76 விவசாய ஆண்டில் இரசாயன உரங்கள், பாசன வசதி, நீர், மின் சக்தி வழங்கல் போன்ற அடிப்படை வசதிகள் பொதுவாகத் திருப்திகரமாகத்தான் இருந்தன. 'கரீஃப்' பருவ காலத்தில் 7 கோடி டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. மொத்தத்தில் உணவு தானிய உற்பத்தி முன்னெப்போதும் இருந்திராத அளவுக்கு அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. போதுமான அளவுக்குச் சிறந்த பொது விநியோக முறையைப் பராமரிப்பதற்குத் தேவைப்படும் அதிக கையிருப்பு வசதியை ஏற்படுத்திக் கொள்வதற்காக உணவு தானிய கொள்முதல் நடவடிக்கைக்குத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நிலச்சீர்திருத்தம்

விவசாய உற்பத்தியை அதிகரிக்க மேற்கொள்ள வேண்டிய முக்கிய நடவடிக்கைகளில் ஒன்று நிலச் சீர்திருத்த அலுவலாகும். இந்த அலுவல் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

விவசாயிகளுக்குக் கடன் வசதி

நிறுவன ரீதியிலான கடன் வசதி விவசாயிகளுக்கு கிடைக்கவும் முயற்சிகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கூட்டுறவு முறையில் பண்ணை நடத்துவதை ஊக்குவிக்க வகை செய்ய வேண்டும். பல கிராம பாங்குகளை ஏற்படுத்தி நிறுவன ரீதியிலான பாங்கு வசதியை விரிவுபடுத்தும்போது, கூட்டு நடவடிக்கை மூலம் அதிக அளவுக்குப் பயன்பெற முடியும் என்ற கருத்தை,பொது மக்கள் மனதில் உணர்த்த வேண்டும்.

பற்றுக்குறை பறந்தது!

அத்தியாவசியப் பண்டங்களின் விலைவாசியில் நிலையான தன்மை ஏற்பட்டுள்ளது. முன்பிருந்த பற்றுக்குறை, தட்டுப்பாடு நிலைமை மாறி, இப்பொழுது, பண்டங்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் பண்டம் நுகர்வோர்—குறிப்பாக ஏழை மக்கள்— கூட்டுறவுகளை ஏற்படுத்தும் நடவடிக்கையை ஆளுநர்கள் ஊக்குவிக்க வேண்டும்.

வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கும் வழி

தொழில் துறைக்கு மறுமலர்ச்சியும், புத்துணர்ச்சியும் அளிக்கப்போதுமான அக்கறை காட்ட வேண்டும். இது பற்றி வகுக்கப்பட்டு உள்ள கொள்கைகள், உத்திகள் ஆகியவை தனிப்பட்ட தொழில் முனைவோர்களை ஊக்குவித்து இத்தகையோர்க்கு ஆலோசனை சேவை அளிக்கும் வகையில் அமைந்துள்ளன. சிறு தொழில் துறை, தொழிலாளர் முனைப்பானதாகும். இத்துறை வேலையில்லாப் பிரச்னையை—குறிப்பாக கிராமப் புறங்களிலும் பின்தங்கிய பகுதிகளிலும் வேலையில்லாப் பிரச்னையை—சமாளிக்க உதவும்.

மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைப்போம்!

வேலையில்லாப் பிரச்சினையைச் சமாளிக்கும் போது, மக்கள் தொகை அதிகரிப்பை கட்டுப்படுத்தத் தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஐந்தாவது திட்ட கால இறுதிக்குள் 1,000 பேருக்கு 35 என்ற பிறப்பு விகிதத்தை 1,000 பேருக்கு 30 என்ற பிறப்பு விகிதமாகக் குறைக்க வேண்டும் என்பது தான் நமது முயற்சியாக இருக்க வேண்டும். இதில் ஆளுநர்களும், அவர்களுடைய மனைவியரும் அக்கறை காட்டி, அரசு வகுக்கும் திட்டங்கள், முழு மனதுடன் செயல்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கவனிக்க வேண்டும்.

—புது டில்லியில் 19—3—76 அன்று நடைபெற்ற ஆளுநர்கள் மாநாட்டில் இந்தியக் குடியரசுத் தலைவர் ஆற்றிய உரை.

ஒழுங்கு முறை கட்டுப்பாடுள்ள ஜனநாயகம்!

பிரதமரின் பேருரை



நண்பர்களே!

இன்று அறிஞர்களாகிய உங்களுடன் பேசும் வாய்ப்புக் கிடைத்ததற்கு மகிழ்கின்றேன். ஆனால் நான் கல்விமானோ அன்றித் தத்துவ ஞானியோ அல்ல. சிரமப்பட்டே கடினமான பாதை வழியே வந்து சிரமங்களை அறிந்த ஒருத்திதான் நான். தற்காலத்தில் எந்த ஒரு நவீன சமுதாயத்திலும் கூடுமான வரையில் பெருந்தொகையினர் பங்குகொள்ளாமல் அரசியல் நடைமுறைகளை முடிவு செய்ய முடியாது. கடந்த கால நீண்ட வரலாறும் இதையே உறுதிப்படுத்துகிறது. அதனால்தான் ஒவ்வொரு நாடும், ஜனநாயகத்தில் வேட்கை கொண்டுள்ளது. ஆனால் ஜனநாயகம் என்பது ஒரே நிலையிலுள்ள ஒரு கருத்தல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஏதென்ஸ் நாட்டில் முழுமையுற்றதாகக் கண்ட ஜனநாயகத்தில் தாய்மார்களும் அடிமைகளும் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனர். அதனால் அது இன்றைய நிலையில் முழுமையுள்ளதாக ஆகாது. எனவே ஜனநாயகக் கொள்கை உலக முழுவதிலும் மாறி வர வேண்டிய சாத்தியக்கூறுகள் உள்ளன.

ஜனநாயகத்தின் அடிப்படைத் தன்மை என்னவென்றால் அதில் மக்களின் கருத்துக்கள் நன்கு பிரதிபலிக்க வேண்டும். மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அமைதியாக நிர்வகிக்கவும் முடிய வேண்டும். ஆளப்படுவோரின் இசைவு உள்ளதாகக் கருதிக் கொள்ளக்கூடாது. மாறாக அவர்களின் இசைவு இருந்தாக வேண்டும். அரசின் அன்றாட நடவடிக்கைகளின் ஆதாயங்கள் ஒரு சிலருக்கு அல்லாமல் பெருத்த பெரும்பான்மையான மக்களுக்கே கிடைக்க வேண்டும். ஜனநாயகம் என்றாலே அங்கே பலாத்காரங்களுக்கு இடமில்லை என்று பொருள். அகிம்சையை ஏற்காமல், வரம்பற்ற பேச்சு, கலவரங்கள் ஆகியவற்றை விலக்காமல் நடந்தால் அங்கே ஜனநாயகத்துக்கு இடமில்லை. ஜனநாயகம் நம் வாழ்வின் ஒவ்வொரு படியிலும் தேவைப்படுகிறது. ஜனநாயகம் என்பது என்ன, என்ற கேள்வி எழுகின்றது.

உண்மையில் அது சீருடை பூண்டதோ அன்றி இராணுவ உடை அணிவதோ அல்ல. நமது சொந்த விருப்புக்களை உயர்ந்த விருப்புக்களுக்கும் தனிப்பட்ட விருப்புக்களைச் சமுதாய விருப்புக்களுக்கும் விட்டுக் கொடுக்க வேண்டும் என்பதை உணர்வது ஜனநாயகம். அது உரிமைகளை விடக் கடமைகள் உயர்ந்தவை என்று உணர்வது, தன்னலத்தைப் பிறர் நலத்துக்கு விட்டுக் கொடுப்பது அது பிறருக்காகவும் பிறருடனும் உழைக்கும் திறன். தன் தனிப்பட்ட ஒருமித்த திறன்களை வளர்க்கத் தொடர்ந்து செய்யும் முயற்சி எல்லாவற்றிருக்கும் மேலாக கோபம், வெறுப்பு, பலாத்காரம் ஆகியவற்றிலிருந்து விடுபடுவதே அது. யாரும் தனது கற்பனையிலான உரிமைகளை அடைவதற்காகப் பலாத்காரத்தை நாடக்கூடாது.



அரசியல் துறையில் ஜனநாயகம் என்பது சிறு கும்பல்கள் பலாத்கார நடவடிக்கைகளில் ஈடுபட்டு தமது தேவைகளைச் சாதித்துக் கொள்வதும் சமுதாயத்தையே சீரழிக்கச் செய்வதும் அல்ல, தேசீய சொத்துக்களை மிகவும் மதிப்பதே ஆகும். சமயம் மற்றும் மொழியிலும் சிறுபான்மையோராக இருப்பவர்களையும் பாதுகாக்கப் பெரும்பான்மையானவர்கள் கருதுவதேயாகும். தேசிய ஒழுங்குக் கட்டுப்பாட்டில் மதச்சார்பின்மை தான் முதல்படி ஆகும். சட்டமன்றத்தின் பெரும்பான்மையினர் சரியான குற்றச் சாட்டுக்களுக்குச் செவி சாய்க்க வேண்டும். எதிர்க்கட்சியினர், குறைவானவர்களோ அன்றி அதிகமானவர்களோ, அவர்கள் குரல் கொடுக்கத் தடையிருக்கக்கூடாது. ஆனாலும் சட்டமன்ற நடவடிக்கைகளுக்கே குறுக்கீடு வருவதை அனுமதிக்க முடியுமா?

நிர்வாகத்தில் ஜனநாயகம் என்பது செயலில் மிகுந்த வேகமும், மனிதாபிமானமும் என்பதாகும். ஒருவர் தம் கடமையைச் செய்வதும் ஏதோ ஒரு சலுகை காட்டி விட்டதாகக் கருதுகிற ஏகாதிபத்திய முறையை அறவே ஒழிப்பதும் ஆகும்.

நீதித்துறையில் ஜனநாயகம் என்பது எளியோர்க்கு விரைவாக நீதி கிடைக்கச் செய்வதும், தனிப்பட்டவர்களின் சுதந்திரத்தைக் காப்பதுடன் சமுதாயத்தின் உரிமைகளை நிலை நிறுத்தவும் வழக்கறிஞர்களும், நீதிபதிகளும் உறுதி கொள்வதும் ஆகும்.



புராதன காலத்தில் ஜனநாயகம் என்பது அரசியல் ஜனநாயகந்தான். அதுவும் சுமாராகச் சொல்ல வேண்டுமானால் ஒவ்வொருவரும் ஒரு ஓட்டைப் பெறும் கருத்தாகத்தான் இருந்தது என்று என் தந்தை குறிப்பிடுவார். மிகத் தாழ்ந்த நிலையிலுள்ள ஒருவனுக்கு வாக்குரிமை என்பதானால் எந்தப் பயனும் இல்லை என்பது தெளிவு. அத்தகைய ஒருவன் வாக்களிப்பதை விட உணவு சாப்பிடவே மிகவும் விரும்புவான். ஆகவே அரசியல் ஜனநாயகம் என்பதாலேயே எந்தப் பயனும் இல்லை. ஆனால் அதனால் படிப்படியாக அதிகமான பொருளாதார ஜனநாயகத்தைஅடையலாம் என்பதால்தான் பயனுள்ளது. வாழ்வில் நல்லவைகள் மேலும் மேலும் அதிகப்படியான மக்களுக்குக் கிடைக்க வேண்டும். பெருத்த ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்பட வேண்டும்.

பொருளாதாரத் துறையில் சுதந்திரம் என்பது தயாரிப்பாளர்கள் பொருள் நுகர்வோரை ஏமாற்றாமலும், தொழிலதிபர்கள் தொழிலாளரைச் சித்திரவதை செய்யாமலும் தொழிலாளர்கள் உற்பத்தியைப் பாதிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமலும் இருப்பதேயாகும்.

கல்வித்துறையில் சுதந்திரம் என்பது மாணவர்கள் கல்வியில் ஈடுபடுவதும், ஆசிரியர்கள் தமது கல்வியறிவை ஆழப்படுத்திக் கொண்டு மாணவர்களின் நோக்கத்தை விரிவாக்குவதும் ஆகும். மாணவர்கள் ஒளிச் சுடரைத் தாங்குவோர் என்ற வகையில் இனி புரட்சிகரமான, அதிதீவிரவாதச் சக்திகட்கு ஆட்படாமல் இருக்க வேண்டும்.

இளைஞர்கள்____தமது நேரத்தில் ஒரு

பகுதியைப் பரந்த சமுதாயத்தின் ஆக்கபூர்வ பணிகளுக்காகவும், சமூக நலப்பணிகள் மூலம் ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கவும் தயாரிப்பை அதிகரிக்கவும் பயன்படுத்த வேண்டும்.

இவையாவும்தான் நமது ஜனநாயகத்தை இன்னும் அர்த்தமுள்ளதாகவும் குறிக்கோள் உயர்ந்ததாகவும் ஆக்கும். ஆனால் நாம் இதில் யாரையும் காப்பியடிக்கத் தேவையில்லை. ஜனநாயகம் என்பது வெளிநாட்டு அறிவாளிகள் கருதுவதல்ல. முன்னேற்றம் என்பதும் அவ்வாறு இல்லை. நமது சொந்த ஜனநாயகத்தையும் நமது சொந்த முன்னேற்ற வடிவத்தையும் உருவாக்க வேண்டும். ஜனநாயகத்தில் தனிவுரிமையுடன் தேசிய உருவாக்கமும் வேண்டும் என்றே என் தந்தையும் விரும்பினார். சுய நலமும் கட்டுப்பாடின்மையுமே வளர்ந்தன. சட்டமன்ற அமைப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துவிட்டோம். நாட்டை உருவாக்குவதில் போதிய கருத்தைச் செலுத்தவில்லை. அதைச் சரிப்படுத்த வேண்டிய காலம் வந்து விட்டது. கட்டவிழ்த்து விடப்பட்ட எல்லாப் பிரச்சாரத்துக்கும் மாறாக ஜனநாயகத்தை இந்தியா கைவிடவில்லை. அது கைவிடப்போவதும் இல்லை. ஏக கட்சி ஆட்சி முறையும் ஏற்படாது. நமது நாடு சக்தி வாய்ந்ததாக, மக்களை ஒன்றுபடுத்துவதாக அவர்கள் வேலை செய்யும் சூழலை உருவாக்குவதாக இருக்க வேண்டும். எந்த நெறிமுறை வந்தாலும் குறைபாடுகள் இருக்கும். முன்கூட்டியே யாவற்றையும் கணிக்க முடியாது. புதிய புதிய சிக்கல்கள் வந்தே தீரும்.



அப்படிக் கணிக்க முடிந்திருந்தால் நமது அரசியல் அமைப்பை உருவாக்கியவர்கள் அதற்கேற்பச் செய்திருப்பார்கள்.

நமது நெறிமுறை நடைமுறைக்கு உகந்ததுதான். செயல்பட முடியவில்லை என்றால் அது நமது தவறே ஆகும். உதாரணத்திற்கு விஞ்ஞானம் நல்லதுதான். ஆனால் அதையே அழிவுக்குப் பயன்படுத்துவோரும் உள்ளனர். நமது நட்புறவை நமது பலவீனம் என்று கருதுவோரும் இருக்கத்தான் செய்கிறார்கள். தேசீய நலத்தைப் பொறுத்தவரை நாம் பலவீனமானவர்களில்லை என்பதை நிரூபிக்கும் காலம் வந்துவிட்டது. நம்நாடு மிகப்பெரிய நாடாகையால் பல வேறுபட்ட மக்களாக இருக்கிறோம். இவர்கள் அனைவருக்கும் இடம் இருக்குமாறுதான் நம் அரசும் தேர்தல்களும் அமைய வேண்டும். மக்கள் ஆதரவற்ற எந்த அரசும் நெடுநாளைக்கு நீடித்திருக்க முடியாது என்பதை உணர வேண்டும்.

நாம் மக்களின் நன்மைக்காகவே முழு மனத்துடன்—அவர்களின் நன்மைக்காகவே பாடுபடுகிறோம் என்று மக்கள் உணரும் வரையில் தான் மக்களும் நம்முடன் இருப்பார்கள். ஜனநாயகமா அல்லவா என்பதற்கான அடிப்படையும் இது தான்.

[தலைமையமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் கடந்த 22-2-76 அன்று பம்பாயில் ஒழுங்குமுறை கட்டுப்பாடுள்ள ஜனநாயகம் என்ற தலைப்பில் ஆற்றிய உரையிலிருந்து].

சேலம் எஃகு தொழிற்சாலையின் வளர்ச்சி

சேலம் எஃகு ஆலைத் திட்டம் சம்பந்தமாக 'தஸ்தூர் அண்டு கம்பெனி'யிலிருந்துவந்த விரிவான திட்ட அறிக்கையை மத்திய அரசு தற்போது பரிசீலித்து வருகிறது.

இத்தொழில் திட்டத்திற்கு நிலம் ஆர்ஜிதம் செய்யும் அலுவல் கிட்டத்தட்ட முடிவடைந்து விட்டது. மொத்தம் 1,536 எக்டேர் நிலம் தேவைப்படுகிறது. இதில் 1,534 எக்டேர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. 1,532 எக்டேர் நிலத்தைச் சேலம் எஃகு நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

சேலம் நகரிலிருந்து இத்திட்டப் பகுதிக்குச் செல்வதற்கான சாலை,விரிவு படுத்தப்பட்டுள்ளது. ரயில்வே யார்டு ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. மின் விநியோக அமைப்புகள் ஏற்படுத்தும் அலுவல் கிட்டத்தட்ட முடிவடைந்துவிட்டன. நீர் வழங்குவதற்கான கட்டுமானப் பணி முன்னேறிவருகிறது. கடைக்கால் அமைக்கும் பணியில் 75 சதவிகிதம் முடிவடைந்துவிட்டது. சுற்றுப்புற எல்லைச்சுவர், திட்ட அலுவலகக் கட்டிடம், ரயில் பாதைக்குக் குறுக்கே மேம்பாலம், தொழிற்சாலைக்குச் செல்வதற்கான சாலை அமைப்பு, மின் சக்தி வழங்குவதற்கான அமைப்பு, நீர்வசதிக்கான அமைப்புப் போன்றவை முடியும் தறுவாயில் உள்ளன. இத்தொழிற்சாலைப் பகுதியில் ரயில் பாதை அமைப்புப் பணி முடிவடைந்து விட்டது.

சாதனச்சேமிப்புக்கிடங்குகள், குடிநீர்த் தொட்டி, குடிநீராக மாற்றுவதற்கான இயந்திரங்கள் கொண்ட பிரிவு, இயந்திரப் பொறியியல், மின்பொறியியல் சாதனங்களைப் பழுது பார்க்கும் பட்டறை, மத்திய கிடங்குப் பகுதி, கண்காணிப்புக் கூண்டுகள் ஆகியவற்றை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இத்தொழிற்சாலையின் முதல் கட்டத்திற்கான பெரிய மற்றும் துணை இயந்திரங்களுக்குத் தேவைப்படும் இயந்திரங்கள், மின் சாதனங்கள் ஆகியவை பொறியியல் ஆலோசனை நிறுவனங்களிடமிருந்து வந்து சேர்ந்துள்ளன.

இருமொழிக் கொள்கையில் மாறுதல் இல்லை!

"தமிழ் நாட்டில் தமிழே பயிற்றுமொழி என்கிற அடிப்படைக் கொள்கையிலோ, அல்லது முந்தைய அரசு வகுத்த (தமிழ் ஆங்கிலம் இரண்டும் தேவை) இரு மொழிக் கொள்கையிலோ எவ்வித மாற்றமும் கிடையாது; மாற்றம் செய்யும் உத்தேசமும் இல்லை.

"அதே நேரத்தில் இந்தி போன்ற வேறு மொழி படிக்க முன்வருபவர்களுக்குத் தேவையான வசதி செய்து கொடுக்கப்படும். ஆனால், அந்த மொழிப் படிப்பு பாடத் திட்டத்திற்கு அப்பாற்பட்டதாகத் தனியே கற்றுத் தரப்படும். விரும்பிப் படிக்க முன்வருபவர்கள் வசதிக்காகவே இந்த ஏற்பாடு" என்று மேதகு தமிழ் நாடு ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் 17—3—'76 அன்று பத்திரிகைச் செய்தியாளர்களிடம் கூறினார். மேலும் அவர் கூறியதாவது :

பாட நூல்களில் கட்சிச் சாயல் நீக்கப்படும்

தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தால் முன்பே வெளியிடப்பட்ட பாட நூல்களையும் இனி வெளியிடப்படவிருக்கும் பாடநூல்களையும் தணிக்கை செய்ய ஒரு குழு அமைக்கப்படும். இந்த நூல்களில் கட்சிச் சாயல் இருக்கிறதா என்பது பற்றியும் அவற்றை நீக்குவது குறித்தும் அக்குழு ஆராயும்.

பாட நூல்கள் கல்வி அறிவு வளர்ச்சியை முக்கியமாகக் கொண்டதாக இருக்க வேண்டுமே தவிர, எந்த ஒரு கட்சிச் சாயல் அல்லது சார்பு கொண்ட கருத்துக்களுக்குப் பாடப் புத்தகங்களில் இடமிருத்தலாகாது. அவ்வாறு இருக்குமேயானால் அது கல்வி நலனுக்கு உகந்தது ஆகாது. எனவே, அவ்வாறான பகுதிகள் அகற்றப்பட வேண்டியவையே. ஏற்கெனவே வெளிவந்துள்ள புத்தகங்களாயினும், இனி வெளிவர இருப்பவைகளாயினும், அப்புத்தகங்கள் இக்குழுவினரால் பரிசீலிக்கப்படும்.

இதன் காரணமாக, வருகிற கல்வியாண்டில் பாடப் புத்தகங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாமலிருப்பது முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்படும்.

அரசு ஊழியர்கள் கட்சிச் சார்பற்றவர்களாக இருக்க வேண்டும்!

குறிப்பிட்ட துறையில் எந்த அதிகாரி அல்லது அரசு அலுவலாளர் கட்சிச் சார்புடன் நடந்து கொண்டார் என்று குறிப்பான ஆதாரங்களுடன் தகவல் தந்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும்.

அதிகாரிகளும் அரசு அலுவலாளர்களும் அரசியல் கட்சிச் சார்புடையவர்களாக நடந்து கொள்வது குற்றமாகும். அரசியல் கட்சிச் சார்புடையவர்களுடன் அதிகாரிகள்தொடர்பு கொள்வது பொது நிர்வாக நலனுக்குக் குந்தகம் விளைவிப்பதாகும். அரசுப் பணியில் இருக்கும்போது அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகளுடன் தொடர்பு வைத்துக் கொள்வது குற்றம் என நான் கருதுகிறேன். அப்படி எவரேனும் வைத்திருப்பதாகக் குறிப்பிட்ட புகார் வருமானால் அதன்மீது உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

என். ஜி. ஓ. யூனியன்

தமிழ் நாடு என். ஜி. ஓ. யூனியனில் இரண்டு கோஷ்டிகள் செயல்படுவது பற்றி நான் அறிந்திருக்கிறேன். அது குறித்த விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

புதிய கல்வி முறை

பத்தாண்டுப் பள்ளிப் படிப்பு—இரண்டு ஆண்டு ஹையர் செகண்டரி கல்வி, மூன்று ஆண்டு பட்டப் படிப்பு என்ற புதிய கல்வி முறை 1978-ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் அமலுக்கு வரும்.

1978-ஆம் ஆண்டில் இரண்டாண்டு ஹையர் செகண்டரி படிப்பில் சேரும் மாணவ-மாணவியர் முதல் அணியினர் 1980-ஆம் ஆண்டில் தேர்வெழுதி மூன்றாண்டுப் பட்டப் படிப்பில் சேருவர்.

எந்தக் குடிமகனும் தான் விரும்பிப் படிக்க முன்வரும் மொழியைக் கற்றுத் தர தடை இருக்கக் கூடாது.

இலவசக் கல்வி!

இலவசக் கல்வி வசதி காரணமாகக் கல்வியின் தரம் எப்படியிருக்கிறது என்ற பிரச்னையின் முழுத் தன்மை குறித்தும் மறுஆய்வு தேவை என்பது என் கருத்து.

விலையேற்றத்தைத் தடுப்போம்!

கடலை எண்ணெய், மிளகாய் போன்ற அத்தியாவசியப் பண்டங்களின் விலை ஏறிவருவதாகக் கூறப்படுகிறது. அப்படி விலை ஏற முகாந்திரமில்லை. ஏறி வருமானால்அதுகுறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கஅதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் அடுத்த இரண்டு மாதங்களில் 600 ஆழ் குழாய்க்கிணறுகள் வெட்டத்திட்டமிடப்பட்டுள்ளது.

ஆங்கிலப் பயிற்று மொழிப் பள்ளிகள்

சென்னை மாநகரில் ஆங்கிலப் பயிற்று மொழி ஆரம்பப் பள்ளிகள் அங்கீகாரம் பெறுமல் அளவுக்கு மீறிப் பெருகி வருவது பற்றியும், இவற்றைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்தும் உத்தேசம் உண்டா என்றும் கேட்கப் படுகிறது.

ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு படிக்க விரும்புகிறவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய,முறையான பள்ளிகளில் கூடுதலான ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புகள் திறக்க ஏற்பாடு செய்வதன் மூலம் இப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். கூடுதல் வகுப்பு துவக்கத் தேவையான அளவுக்கு மாணவர்கள் முன்வரும் பள்ளிகளில் இருந்து கூடுதல் ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புகள் துவங்கக் கோரி அரசுக்குக் கோரிக்கை வருமானல், அது அனுதாபத்துடன் பரிசீலிக்கப் படும்.

வேளாண்மை வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு

வேளாண்மையையே முக்கிய தொழிலாகக் கொண்ட மக்கள் பெரும் பான்மையாக வாழும் இந்தியாவில் இன்று விவசாயத் தொழிலுக்கும், விவசாயப் பட்டதாரிகளுக்கும் அதிகமான மதிப்புத் தரப்படவில்லை. அந்த நிலை மாறி, இளைஞர்களெல்லாம் விவசாயத் தொழிலில் நாட்டங் கொண்டால்தான் நாம் பற்றுக் குறைகளை முறியடித்து வெல்ல முடியும்.

உலகப் பொருளாதார வளர்ச்சிக்கு விவசாயம்தான் முதல் முக்கிய ஆதாரமாக விளங்குகிறது. விவசாயமும் விவசாய உற்பத்திப் பொருள்களும் பெருகாவிடில் விவசாய உற்பத்திகளை நம்பி வாழும் உயிரினங்களும், தொழில் துறைகளுங்கூடப் பெரிதும் நசிந்து போகும். உலகப் பொருளாதாரம் வளர வேண்டுமென்றால் உலக விவசாய உற்பத்தி பெருக வேண்டும். இந்த உண்மையை அண்மைக்காலமாகத் திட்ட நிபுணர்கள் யாவரும் உணரத் தொடங்கியிருக்கிறார்கள்.

விவசாயம் வட்டச் சுழற்சி முறையை ஆதாரமாகக் கொண்டு உற்பத்தியளிக்கும் ஒன்றாக இருப்பதால், அது எந்த நாட்டுக்கும் ஆதார வளமாகவும் பெரிய இலாபம் தரத்தக்க சொத்துப் போன்றும் இருக்கிறது.

பெட்ரோல் முதலிய எரிபொருள்கள் நாட்டிற்குப் பெரிய இலாபம் தரும் சிறந்த வளங்களில் ஒன்றாக இன்று கருதப்பட்டாலும் அது மண்ணிலிருந்து கிடைக்கும் வரையில் தான் எந்த நாடும் அதன் மூலம் பொருளீட்ட

முடியும். மண்ணில் வற்றுத ஊற்றாகவோ திரும்பத் திரும்பக் கிடைத்துக் கொண்டேயிருக்கக் கூடியதாகவோ பெட்ரோல் இல்லை. அதனால் சுழற்சி முறையில் மீண்டும் மீண்டும் பொருள்களை உற்பத்தி செய்து கொள்ள உதவும் ஆதார வளமாக உள்ள விவசாயத்திற்கு அது ஒரு நாளும் இணையாக முடியாது. அப்படிப்பட்ட விவசாயத் தொழிலில் எல்லோரும்—சிறப்பாக இளைஞர்கள்—பெரிதும் ஆர்வம் காட்ட வேண்டும்.

வேளாண்மைக் கல்வி கற்க நிறைய இளைஞர்கள் முன்வர வேண்டும். ஒவ்வொரு விவசாயியும், விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு தொழிலாளியும் வேளாண்மைப் பல்கலைக் கழகங்களைத் தங்கள் நல்வாழ்வுக்கு உதவும் கலைக் கோயில்களாக மதிக்க வேண்டும். இதனை நடைமுறையில் நிகழச் செய்வதற்கு விவசாயப் பட்டதாரிகள் கடினமாக உழைக்க வேண்டும்.

தகுதி என்பது கேட்டுப் பெறும் ஒன்றல்ல என்பதையும் பரந்த அறிவினாலும், கடினமான உழைப்பாலும் தேடிப் பெற வேண்டிய ஒன்றே அது என்பதையும் ஒவ்வொரு விவசாய மாணவரும் உணர்ந்து நடக்க வேண்டும்.

—டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன்,
இந்திய வேளாண்மைக் கழகத் தலைவர்,
—[ஹரிங்கட்டா விதான் சந்திரா வேளாண்மைப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா உரையில்].

தமிழ்நாடு அரசின் 1976-77 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம்

1976ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள், 19ஆம் நாளன்று மத்திய நிதி அமைச்சர் அவர்களால் மக்கள் சபையில் வைக்கப்பட்ட விவர அறிக்கை.

தலைவர் அவர்களே,

தமிழ்நாடு அரசின் 1976–77ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை இம்மன்றத்தின் முன் சமர்ப்பிக்கின்றேன்.

தமிழ்நாட்டில் 1976ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31ஆம் நாள் அன்று, குடியரசுத் தலைவர் ஆட்சி எந்தச் சூழ்நிலையில் கொண்டுவரப்பட்டது என்பதை



இம்மன்றத்தினர் அறிவர். அதன் பின் நமக்குக் கிட்டிய குறுகிய கால வாய்ப்பில், தமிழ்நாட்டின் தேவைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய வளர்ச்சிப் பணிகள் பற்றியும் ஆழ்ந்து ஆய்ந்துள்ளோம். முதலாவது, இரண்டாவது, மூன்றுவது திட்ட காலங்களிலே அனைத்திந்திய அளவில் தமிழ்நாடு முன்னணியில் நின்றதெனினும், கடந்த சில ஆண்டுகளாக, வளர்ச்சிப் பணிகளின் செலவுகளை எடுத்துக்கொண்டாலும் சரி, திட்டமிடுவதில் எந்தெந்தத் துறைகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது என்பதை எடுத்துக்கொண்டாலும் சரி, தமிழ்நாடு பின்தங்கிவிட்டது. இந்த நிலைமையில், தேசிய வளர்ச்சியில் தமிழ்நாடு மீண்டும் தனது உரிய பங்கைப் பெறும் வகையில், 1976–77 ஆம் ஆண்டுத் திட்ட நிதி ஒதுக்கீட்டைக் கணிசமான அளவுக்கு உயர்த்த வேண்டியது நமது தலையாய பணியாகும். அவ்வாறு திட்ட நிதி அளவினை உயர்த்தும் போது, வேளாண்மை, பாசனம், மின்சக்தி, தொழில்கள், போக்குவரத்து முதலிய அடிப்படைத் துறைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பது அவசியம்; அதே நேரத்தில் சமூக நலப் பணிகளுக்கும் உரிய அளவில் நிதி ஒதுக்குவது தேவை; திட்ட நிதி ஒதுக்கீட்டினை உயர்த்தும் இந்த முயற்சி, மாநிலத்தின் நிதி ஆதாரங்களைப் பாதுகாத்து, நிதி வசதிகளைத் திரட்டுவதன் அடிப்படையிலேயே அமையவேண்டும். இந்த வரவு-செலவுத் திட்ட வாயிலாக நாம் அடைய முற்பட்டுள்ள முக்கியமான குறிக்கோள்கள் இவையே ஆகும்.

1976-77 ஆம் ஆண்டுத் திட்டம்

முன்பிருந்த மாநில அரசுடன் நடந்த பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில், தமிழ்நாட்டின் 1976–77 ஆம் ஆண்டுத் திட்டத்துக்கு 177 கோடி ரூபாய் அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. நிதி வசதிகளைக் கவனமுடனும் தக்க கட்டுப்பாட்டுடனும் பயன்படுத்துவதன் மூலம் இந்த ஒதுக்கீட்டினை 201 கோடி ரூபாயாக உயர்த்த இயலும்; அது அவசியமானது என்றும் தற்போது கருதியுள்ளோம். திட்டத்தின் அளவில் செய்யப்படும் இந்த 24 கோடி ரூபாய் உயர்வு, வேளாண்மை, பாசனம் (6·77 கோடி ரூபாய்), மின்சக்தி (5 கோடி ரூபாய்), தொழில்கள் (1·05 கோடி ரூபாய்), குடிநீர் வழங்கல் (2·14 கோடி ரூபாய்), குடிசைப் பகுதி மாற்றுதல் (1·14 கோடி ரூபாய்), அரிசனங்கள், பின்தங்கிய வகுப்பினர் நலன் (1·44 கோடி ரூபாய்) ஆகிய துறைகளுக்கு பெரும்பாலும் பயன்படுத்தப்படும். அடுத்த ஆண்டுக்கான 201 கோடி ரூபாய் திட்டம், நடப்பாண்டுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட 143 கோடி ரூபாயுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கணிசமான அளவில், அதாவது 40 சதவீதம் உயர்ந்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தத் திட்டத்தில் 111 கோடி ரூபாய், அதாவது, மொத்த ஒதுக்கீட்டில் 56 சதவீதம், இருபதம்சத் திட்டத்துடன் தொடர்புள்ள பணிகளுக்காகச் செலவிடப்படும். நடப்பு ஆண்டில் மின்சக்தித் துறைக்கு 41 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்க, வரும் ஆண்டில் இத்தொகையை 70·18 கோடி ரூபாயாக உயர்த்தி, பல ஆண்டுகளுக்குப் பிறகு மின்சக்தித் துறைக்கு மீண்டும் முதலிடம் அளித்துள்ளோம்.

வேளாண்மை உற்பத்தி

நல்ல பருவநிலை மீண்டும் ஏற்பட்டதால் தமிழ்நாட்டில் வேளாண்மை உற்பத்தி பெருமளவில் உயர்ந்துள்ளது. நடப்பாண்டில் உணவுதானிய உற்பத்தி 80·6 இலட்சம் டன் அளவில் இருக்குமென்றும், 1976–77 ஆம் ஆண்டில் 83 இலட்சம் டன்னுக உயருமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இரசாயன உரம் போதிய அளவு கையிருப்பில் உள்ளது. விதைப்

பண்ணைகளை வலுப்படுத்தவும், தக்க தரிசு நிலங்களை மாநிலப் பண்ணை நிறுவனத்தின் மூலம் விளை நிலமாக்கவும் முதலீடுகள் செய்யப்படும். வேளாண்மையுடன் தொடர்புள்ள கால்நடை வளர்ப்பு, மீனளம், காடுகள் ஆகிய துறைகளுக்கும் ஆண்டுத் திட்டத்தில் உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

பாசனம்

1976–77ஆம் ஆண்டில், 12·64 கோடி ரூபாய்ச் செலவில், மருதாநதி, குடகனுறு, வட்டமலைக்கரை ஓடை, பாலாறு-பொருந்தலாறு ஆகிய நான்கு பாசனத் திட்டங்கள் நிறைவேற்றி முடிக்கப்படும். இதன் மூலம் 17,230 ஏக்கர் பரப்பளவு புதிதாகப் பாசனம் பெறுவதோடு, 13,100 ஏக்கரில் பாசன வசதிகள் பெருகி உறுதிப் படுத்தப்படும். வைகைக் கால்வாயைப் புதுமைப்படுத்தும் வேலை கணிசமான அளவு நிறைவெய்தும். பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்திற்காக உலக வங்கியிடம் உதவி கேட்டுள்ளோம். தமிழ்நாட்டில் மேற்பரப்பு நீர்வளம் பெரும்பாலும் பயன்படுத்தப் பட்டுவிட்டது. நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதிலும் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் வரையறைகள் ஏற்பட்டுள்ளன. பாசனத்திற்கு நீரைப் பயன்படுத்துவதில் திறனுக்கும் சிக்கனத்திற்கும் முக்கியத்துவம் அளித்து, மாநிலத்தின் நீர்வளம் அனைத்தையும் தக்க முறையில் ஒருங்கிணைத்துப் பயன்படுத்துவதற்காக ஆய்ந்து, திட்டமிட்டு, செயல்பட வேண்டியது அவசியம். இதனைக் கருத்தில் கொண்டு, பழைய பாசன அமைப்புகளைச் சீர்படுத்துவதற்காக வரும் ஆண்டுத் திட்டத்தில் 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளாக, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், தருமபுரி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் 24 பகுதிகளை, பாசன ஆணைக் குழு (Irrigation Commission) குறிப்பிட்டுக் காட்டியுள்ளது. இந்தப் பகுதிகளில் புன்செய்ப் பயிர் விளைச்சலை அதிகரிக்க ஆராய்ச்சிகளும் அவற்றைத் தொடர்ந்து விரிவாக்கப் பணிகள், வளர்ச்சிப் பணிகள் ஆகியவையும் விரைவாக மேற்கொள்ளப்படும். தமிழ்நாட்டில் வறட்சியால் பீடிக்கப்படும் மாவட்டங்களுக்கு நிலையான நிவாரணம் அளிக்கும் வகையில் பாசனத் திட்டங்களை உருவாக்கி, நிறைவேற்ற, இயன்ற முயற்சிகள் அனைத்தும் மேற்கொள்ளப்படும்.

மின் சக்தி

எண்ணூர் அனல் மின் நிலையத்தில் 110 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஐந்தாவது இயந்திரம் செயல்படத் தொடங்கியுள்ளது. இத்துடன் தமிழ்நாட்டின் மின் உற்பத்தித் திறன் 2,364 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது. ஆண்டொன்றுக்கு 69 மில்லியன் கிலோவாட்மணி மின்சாரம் வழங்கக் கூடிய நடுவட்டம் திட்டம் விரைவில் முடிக்கப்படும். பாரத கனரக மின்சார நிறுவனத்தின் உதவியுடன் எண்ணூர் அனல் மின்

நிலையத்தைச் சீர்திருத்தும் பணி நிறைவேற்றப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில், குறிப்பாக அனல் மின் நிலையங்களிலிருந்து, மின் உற்பத்தியைப் பெருக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும். தென்மேற்குப் பருவ மழை நல்ல முறையில் அமைந்தால், கேரளத்திலிருந்து கிடைக்கும் மின்சக்தியின் உதவியுடன் ஆண்டு முழுவதும் மின்சார வெட்டினைத் தவிர்க்க முடியுமென்று நம்புகிறேம்.

தூத்துக்குடி மின் திட்டத்தின் முதல் நிலைக்கு, வரும் ஆண்டுத் திட்டத்தில், 34·5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் 1979–80ஆம் ஆண்டில் 420 மெகாவாட் மின் சக்தி கூடுதலாகக் கிடைக்கும். தமிழ்நாட்டின் மின் சக்தி வளர்ச்சிக்கு நாம் மிகச் சிறப்பிடம் அளித்திருப்பதைக் கருத்திற்கொண்டு, இத் திட்டத்திற்காக மத்திய அரசு, திட்ட முன் உதவியாக 27 கோடி ரூபாய் வழங்க முன்வந்துள்ளது. பாண்டியாறு-புன்னப்புழா புனல் மின் திட்டத்திற்கு (100 மெகாவாட்) 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழில் துறை

கூட்டுத் துறைத் திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றி வரும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (TIDCO) ஆண்டுத் திட்டத்தில் 4·21 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அரியலூரில் 16·5 கோடி ரூபாய் செலவில் பொதுத் துறையில் சிமிட்டி ஆலை ஒன்றைப் புதிதாக அமைக்கும் பணியையும் இந்த நிறுவனம் மேற்கொண்டுள்ளது. திருச்சிராப்பள்ளியில் பற்றவைப்பில்லாத குழாய்த் தொழிற்சாலையை (Seamless Tube Project) நிறுவ மத்திய அரசு அண்மையில் முடிவு எடுத்துள்ளது. அரக் கோணத்திலுள்ள தொடர் வார்ப்பாலையில் (Continuous Casting Plant) அதற்கு வேண்டிய இரும்புப் பாளங்களை உற்பத்தி செய்து வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

ஏனைய திட்டங்கள்

வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ள ஏனைய முக்கியத் திட்டங்களைச் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

பள்ளி, கல்லூரி, தொழில்நுட்பக் கல்வித் துறைகளில் தரத்தை மேம்படுத்துவதற்கும், மாணவர்கள் எண்ணிக்கையை உயர்த்துவதற்கும் தொடர்ந்து சிறப்பிடம் அளிக்கப்படும். வருகின்ற நிதியாண்டில் தமிழ்நாட்டில் உள்ள 375 ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும், வழக்கில் இருக்கும் முறைக்கு அப்பாற்பட்ட புதிய முறைக் கல்வி (Non-formal education) நிலையங்களைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளோம்.

மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்தவும், அரசினர் மருத்துவ மனைகளில் அளிக்கப்படும் வசதிகளின் தரத்தை



உயர்த்தவும், கூடுதலாக மருத்துவ அதிகாரிகள், செவிலியர், மருந்தாக்குவோர் ஆகியோரை நியமிக்கவும், இந்திய முறை மருத்துவத்தை ஊக்குவிக்கவும், சுகாதாரம்-மருத்துவத் துறையின் கீழ் போதிய ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. குடும்ப நலத் திட்டத்திற்கென 6·3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் செயல்முறைகளை ஆய்ந்து, விரிவு படுத்தவும், விரைவு படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தொழுநோய் பெருமளவில் பரவியுள்ள செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் தொழுநோயைத் தடுத்தல், தொடக்க நிலையிலேயே கண்டறிதல், கட்டுப் படுத்துதல் ஆகியவற்றை முக்கிய நோக்கங்களாகக் கொண்டு, பள்ளிச் சிறுர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யும் புதிய திட்டம் ஒன்று தொடங்கப்படும்.

பதிவுபெற்ற தொழிற்சாலைகள் அனைத்திற்கும் பொருந்தும் வகையிலும், வணிக நிறுவனங்கள், உணவகங்கள், சிற்றுண்டிச் சாலைகள், கடைகள், திரை அரங்குகள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் ஆகியவற்றிற்குப் பொருந்தும் வகையிலும், தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம் விரிவுபடுத்தப்படும். இது வரை இத் திட்டத்தின்கீழ் வராத மூன்று இலட்சம் தொழிலாளர் குடும்பங்கள் இதன் மூலம் நன்மை பெறுவர்.

வருகின்ற ஆண்டுத் திட்டத்தில் அரிசனங்கள், பின்தங்கிய வகுப்பினர் நலனுக்கென 17·45 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இருபதம்சத் திட்டத்தின் ஒரு முக்கிய இனம், அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதாகும். இதற்காக நடப்பாண்டில் 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது; இது, வரும் ஆண்டில், 50 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும். தமிழ் நாட்டிலுள்ள பழங்குடி மக்களின் வாழ்க்கை நிலைகளை மேம்படுத்தவும், அவர்களைத் துன்புறுத்தும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், இதுவரை ஒருங்கிணைந்த நிலையில் வழிவகை செய்யப்படவில்லை. இவர்களின் நலனுக்கென திட்டங்கள் வகுத்துச் செயற்படுத்த, பழங்குடி மக்கள் முன்னேற்ற மன்றம் (Tribal Development Authority) ஒன்றைப் போதுமான நிதி வசதிகளுடனும் உரிமைகளுடனும் ஏற்படுத்துவதென முடிவு செய்துள்ளோம்.

மொத்தம் 3·6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டைக் கொண்டு, குடிசைப் பகுதி மாற்று திட்டம் செயற்படுத்தப்படும். சென்னை மாநகரில் பக்கிங்ஹாம் கால்வாய் நெடுக உள்ள குடிசைப் பகுதிகளை படிப்படியாக அகற்றும் திட்டத்திற்காக, ஆண்டுத் திட்டத்தில் 60 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், குடிசைப் பகுதிகளின் சுற்றுப்புறச் சுகாதார மேம்பாட்டுப் பணிகளுக்காக 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

சாலை அமைப்பு-பராமரிப்புப் பணிகளுக்கென மொத்தம் 30.21 கோடி ரூபாய் வழங்கியுள்ளோம். மத்தியச் சாலை நிதித் திட்டத்தின்கீழ் எடுத்துக்

கொள்ளப்பட்ட எட்டுப் பாலங்கள், 1976–77 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்படும். சென்னை மாநகரிலும் அதை அடுத்துள்ள பகுதிகளிலும் சாலைகள், பாலங்கள் சீரமைக்கவும், முக்கியமான நடை பாதைக் கடவுகளில் சுரங்கப் பாதைகள் அமைக்கவும் மத்திய அரசு நிதி உதவியுடன் சிறப்புத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டைப் பாதித்த கொடிய வறட்சியின் காரணமாக, சென்ற கோடைப் பருவத்தின்போது சென்னை மாநகரில் கடுமையான நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். ஏழாண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்ட வீராணம் குடிநீர்த் திட்டம் நிறைவேறுவதில் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன. இத் திட்டத்தின் பல்வேறு அம்சங்கள் தற்போது பரிசீலனையில் இருந்து வருகின்றன. இதன் அடிப்படையில், சென்னை மாநகரின் குடிநீர் நிலைமையில் விரைவில் முன்னேற்றம் ஏற்பட, தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அண்மையில் பிரதமர் சென்னை வந்தபோது கிருஷ்ணா நதியிலிருந்து சென்னை மாநகரின் குடிநீர்த் தேவைக்காக 1,500 கோடி கன அடி நீரை வழங்க ஆந்திரப் பிரதேசம், மராட்டியம், கருநாடகம் ஆகிய மாநிலங்கள் முன் வந்துள்ளன என்று அறிவித்தது, வரவேற்கத்தக்க புதிய திருப்பமாகும். இதற்கான கிருஷ்ணா-பெண்ணாறு திட்டத்தின் முன்னோடி ஆய்வுகளை மேற்கொள்ளு வதற்கென, வரும் ஆண்டில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம்.

நிதி நிலைமை

இனி, வரவினங்கள், செலவினங்கள் பற்றி ஆராய்வோம். 1975–76 ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கில் 30·12 கோடி ரூபாய் பற்றாக்குறை இருக்கு மென்றும், எல்லாக் கணக்குகளையும் சேர்த்து மொத்த மாகப் பார்க்கும்போது 20·57 கோடி ரூபாய் பற்றாக் குறை ஏற்படுமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. திருத் திய மதிப்பீடுகளின்படி, வருவாய்க் கணக்கில் பற்றாக் குறை 7·76 கோடி ரூபாயாகவும், மொத்தத்தில் பற்றாக்குறை 6·26 கோடி ரூபாயாகவும் இருக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது நிதி நிலைமையில் ஏற்பட்டுள்ள இந்த சாதகமான மாறுதலுக்கு முக்கிய காரணம் சொத்து, வருமான விவரங்களைத் தாமாக அறிவிக்கும் திட்டத்தின்கீழ் (Voluntary Disclosure Scheme) மாநில அரசுக்குக் கிடைத்துள்ள வரவே ஆகும்.

1976–77 ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கின் கீழ், வரவுகள் 575·63 கோடி ரூபாயாகவும் செலவுகள் 587·95 கோடி ரூபாயாகவும், ஆகவே பற்றாக்குறை 12·32 கோடி ரூபாயாகவும் இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது. 1975–76 ஆம் ஆண்டில் 41·76 கோடி ரூபாயாக இருந்த மூலதனச் செலவுகள், 1976–77 ஆம் ஆண்டில் 60·40 கோடி ரூபாயாக உயர்த்தப்படும். வருவாய்க் கணக்கு, கடன் கணக்கு, மூலதனக் கணக்கு ஆகியவற்றை ஒருங்கு சேர்த்து முழுமையாகப் பார்க்கும் போது 9·98 கோடி ரூபாய் பற்றாக்குறை இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

கூடுதல் நிதி திரட்டும் முயற்சிகள்

வளர்ச்சிப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடுகளை உயர்த்தியாக வேண்டிய அவசியம் ஓர் புறம்; தமிழ் நாட்டின் நிதி ஆதாரங்கள் குன்றியுள்ளது மறுபுறம்; இதுவே இன்று நாம் காணும் நிலை. திட்டத்திற்கு அப்பாற்பட்ட இனங்களில், தேவையற்ற தவிர்க்கக் கூடிய செலவுகளைக் குறைப்பதற்கு எல்லா நடவடிக்கை களையும் எடுத்து வருகின்றோம். குடியரசுத் தலைவர் ஆட்சி, அரசின் வருவாய் நிர்வாகத்தில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் உருவாக்கியுள்ளது. எனவே வரி கள், அரசின் பிற வரவுகள் ஆகியவற்றை வசூலிப்பதில் தக்க முன்னேற்றத்தை நாம் எதிர்பார்க்கலாம். இவற்றின் விளைவாக, செலவில் சிக்கனம், வருவாய்களில் உயர்வு ஏற்படுமென்றாலும், கூடுதல் நிதி வசதிகளை ஓரளவுக்குத் திரட்டுவது தவிர்க்க முடியாததாக உள்ளது.

இந்தப் பின்னணியில், பின்வரும் நிதி திரட்டும் முயற்சிகளை மேற்கொள்ள முடிவு செய்துள்ளோம் :

(i) தமிழ்நாட்டில் பயணிகள் போக்குவரத்துக் கட்டணங்களை உயர்த்தும் செயல் திட்டத்தை முந்தைய அரசு அறிவித்திருந்தது. இந்த உயர்வின் மூலம் பேருந்து உடைமையாளர்களுக்கு கிடைக்கும் அதிகப்படி வருமானத்தில் ஒரு பகுதி அரசுக்குக் கிட்டும் வகையில் மோட்டார் வண்டிகள் வரி உயர்த்தப்படும். வெளியூர் பேருந்துகளில் காலாண்டுக்கு இருக்கை ஒன்றிற்கு 180 ரூபாய் என்று இருக்கும் வரி, 225 ரூபாயாக உயர்த்தப்படும் ; விரைவுப் பேருந்துகளில் காலாண் டுக்கு இருக்கை ஒன்றிற்கு 200 ரூபாயாக இருக்கும் வரி, 240 ரூபாயாக உயர்த்தப்படும்.



(ii) வரி தவிர்த்தலையும், வரி அமைப்பில் முரண்பாடுகளையும் சீர்படுத்தும் வகையில் தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி அமைப்பில் சில திருத்தங்கள் தேவைப்படுகின்றன. பத்து இலட்ச ரூபாய் என்ற மட்டத்துக்கு மேல் விற்பனை உள்ளவர்கள் மட்டுமே கூடுதல் விற்பனை வரி செலுத்த வேண்டுமென்பது தற்போது உள்ள நிலைமை. மத்தியப் பிரதேச மாநிலத்தில் இதற்கான எல்லை 50,000 ரூபாய் அளவில் தான் உள்ளது. சில மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, நமது மாநிலத்தில் விற்பனை அளவை நாம் பெரிய அளவில் உயர்வாக அமைத்திருப்பது தெளிவாகும். எனவே, வரிக்குட்பட்ட விற்பனை அளவு மூன்று இலட்ச ரூபாயிலிருந்து ஐந்து இலட்ச ரூபாய் வரை இருக்கும் போது கூடுதல் விற்பனை வரி 0·4 சத **விதமாகவும்**, ஐந்து இலட்ச ரூபாயிலிருந்து ஏழு இலட்ச ரூபாய் வரை இருக்கும்போது கூடுதல் விற்பனை வரி 0·5 சத விதமாகவும், ஏழு இலட்ச ரூபாயிலிருந்து பத்து இலட்ச ரூபாய் வரை இருக்கும்போது கூடுதல் விற்பனை வரி 0·6 சத விதமாகவும், பத்து இலட்ச ரூபாய்க்கு மேல் இருக்கும் போது கூடுதல் விற்பனை வரி 0·7 சத விதமாகவும் மாற்றி அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த கூடுதல் விற்பனை வரி, பண்டம் வாங்கும் பொது மக்களைப் பாதிக்காது. இது வணிகர்களே ஏற்றுக் கொள்ள வேண்டிய வரியாகும்.

(iii) 1963 ஆம் ஆண்டுக்குப் பிறகு பாசனக் கட்டணங்கள் தமிழ்நாட்டில் மாற்றப்படவில்லை. மாநிலத்திலுள்ள பாசனத் திட்டங்களைப் பரிபாலிப்பதில் வரவை விட செலவு கூடுதலாக ஏற்பட்டு அதன் மூலம் ஆண்டுக்குப் பத்துக் கோடி ரூபாய் இழப்பு இருந்து வருகின்றது. இரண்டு வரிகளின் மூலம் இந்த இழப்பில் ஒரு பகுதியை ஈடு செய்யத் தீர்மானித்துள்ளோம். முதலாவதாக, முதல் வகைப் பாசன ஆதாரங்களின்கீழ் வரும் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 12 ரூபாய் என்ற வீதத்திலும், இரண்டாம் வகைப் பாசன ஆதாரங்களின்கீழ் வரும் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 10 ரூபாய் என்ற வீதத்திலும் கூடுதல் தண்ணீர்த் தீர்வை விதிக்க முடிவு செய்துள்ளோம். இந்த இரு வகைப் பாசன ஆதாரங்கள், ஆண்டில் எட்டு முதல் பன்னிரண்டு மாதங்கள் வரை போதிய அளவு பாசனம் அளிப்பவை. மானாவாரிக்குளங்கள் போன்றவை அடங்கிய மூன்றும், நான்காம், ஐந்தாம் வகைப் பாசன ஆதாரங்களின்கீழ் வரும் விவசாயிகளுக்கு வரி உயர்வு எதுவும் ஏற்படாது. இரண்டாவதாக, அடுத்துள்ள மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், மராட்டியம் போன்றவற்றைப் பின்பற்றி, பணப் பயிர்கள் மீது தனித் தீர்வை விதிக்க முடிவு செய்துள்ளோம். கரும்பு, திராட்சை, வாழை, தென்னை, வெற்றிலை, மஞ்சள் ஆகியவற்றிற்கு ஏக்கர் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு 25 ரூபாய் என்ற வீதத்திலும், புகையிலை, மிளகாய், ஆகியவற்றிற்கும், பாசன வசதியுடன் பயிரிடப்படும் பருத்தி, நிலக்கடலை ஆகியவற்றிற்கும் ஏக்கர் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு 15 ரூபாய் என்ற வீதத்திலும் இந்தத் தீர்வை விதிக்கப்படும். ஆதாயம் தருகின்ற பணப் பயிர்களிலிருந்து பயன் பெறும் விவசாயிகளது நிகர வருமானத்தில் ஒரு சிறு பகுதியாகவே இந்தத் தனித் தீர்வை இருக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மேற்கூறிய நிதி திரட்டும் முயற்சிகள் சமுதாயத்தில் அடித்தளத்தில் உள்ள மக்களையோ, சாதாரணப் பொது மக்களையோ பாதிக்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக்கொள்வார்கள் என நம்புகிறேன். வேளாண்மைத்துறையும், பிற துறைகளும் தத்தம் சக்திக்கேற்றவாறு வரிப் பொறுப்பை ஏற்கும் வகையில் தமிழ்நாட்டின் வரி விதிப்பு அமைப்பில் மாற்றம் செய்வதன் மூலமாகவே வளர்ச்சிப் பணிகளை விரைவு படுத்தவும் விரிவு படுத்தவும் இயலும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் காணப்படும் புதிய வளர்ச்சி வேகம், வரும் ஆண்டுகளிலும் தொடர இயலும் வகையில் நிதி வாயில்களை மேம்படுத்துவதன் அவசியத்தையும் கருத்திற்கொண்டு, முன் கூறிய வரி விதிப்பு யோசனைகளை உருவாக்கியுள்ளோம். வரி விதிப்புகளை இந்தப் பின்னணியில் இந்த அவை ஆய்வு செய்ய வேண்டும் எனக் கோருகிறேன்.

எழுதுகோல் (Pencils), குறிப்பேடுகள் (Note books) இவற்றின் மீது தற்போது விதிக்கப்படும் 4 சத வீத பல முனை விற்பனை வரி, இருபதம்சத் திட்டத்தையொட்டி, நீக்கப்படும். வாணிபம் பிற இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்கும் பொருட்டும், இடர்ப்பாட்டில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு உதவும் வகையிலும் வேறு சில சலுகைகள் அளிக்கவும் முடிவு செய்துள்ளோம். மாநிலத்துக்கு வெளியே விற்கப்படும் பருத்தி நூல் மீதான வரி 3 சத வீதத்திலிருந்து 2 சத வீதமாகக் குறைக்கப்படும். உலர் மின் கலங்கள் (dry cells) மீதான வரி 15 சத வீதத்திலிருந்து 9 சத வீதமாகக் குறைக்கப்படும். பயணிகள் மோட்டார் வண்டிகள் (Passenger Cars) மீதான வரி 15 சத வீதத்திலிருந்து 12 சத வீதமாகக் குறைக்கப்படும். மாநிலத்திலிருந்து பிற மாநிலங்களுக்கு விற்கப்படும் பயணிகள் மோட்டார் வண்டிகள், சிறிய டீசல் வண்டிகளுக்கு (light diesel vehicles) மத்திய விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

மோட்டார் வண்டிகள் வரி, கூடுதல் விற்பனை வரி இவற்றில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள், 1976 ஏப்ரல் முதல் நாளிலிருந்து செயலுக்கு வரும். கூடுதல் தண்ணீர்த் தீர்வையும் பணப் பயிர்கள் மீதான தீர்வையும் வரும் நில வரி ஆண்டிலிருந்து, அதாவது 1976 ஜூலை முதல் நாளிலிருந்து செயலுக்கு வரும். வரிச் சலுகைகள் உடனடியாகச் செயல்படத் தொடங்கும்.

கூடுதல் வரி விதிப்பு முயற்சிகள், ஆண்டு ஒன்றில் 10·5 கோடி ரூபாய் வருவாய் தரும் என்று எதிர்பார்க்கிறோம். வரிச் சலுகைகள் விளைவாக ஆண்டு ஒன்றில் 1·5 கோடி ரூபாய் வருவாய் குறையும். இவை அனைத்தின் விளைவாக நிகரமாக முழு ஆண்டில் 9·0 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிடைக்கும். இதன்படி வருவாய்க் கணக்கில் பற்றுக்குறை 3·32 கோடி ரூபாயாகக் குறைந்து, மொத்தத்தில் பற்றுக்குறை 0·98 கோடி ரூபாயாக நிற்கும். இந்தச் சிறிய பற்றுக்குறை, சிக்கன முயற்சிகளின் பலனாகவும், வரி வசூலிப்பதில் ஏற்படும் முன்னேற்றத்தின் விளைவாகவும், நீங்கிவிடும் என்று நம்புகிறோம்.

பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ்நாட்டின் வரவு-செலவுத் திட்டத்தை மீண்டும் நான் சமர்ப்பிக்கும் இவ்வேளையில், தமிழ்நாட்டின் ஆண்டுத் திட்டம் 200 கோடி ரூபாய் வரம்பைத் தாண்டியிருப்பது கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பின்தங்கி நின்றிருந்த தமிழ்நாடு, நமது நாட்டின் வளர்ச்சிக் குறிக்கோள்கள் அடங்கிய இருபதம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் மீண்டும் முன்னணிக்குக் கொண்டு வரப்படும் என்பது எனது அசையாத நம்பிக்கை. உழைப்பும் அறிவும் பொருந்திய மக்களே, தமிழ்நாட்டின் தலையாய சொத்து என்பதைப் பெருமிதத்தோடு நானே எடுத்துக் கூறுவது தவறில்லை எனக் கருதுகின்றேன். அத்தகைய தமிழ்நாட்டு மக்கள், தேசீய வாழ்வுடன் தமிழ்நாடு இணைந்துள்ள இந்தத் தருணத்தில், எதிர்நோக்கியுள்ள பொருளாதாரப் பணிகளிலும், சமுதாய மேம்பாட்டு முயற்சிகளிலும் தங்களை ஆர்வமுடன் ஈடுபடுத்திக்கொள்வார்கள் என்பதில் எனக்கு ஒரு சிறிதும் ஐயமில்லை.

1976–77 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாட்டின் வரவு-செலவுத் திட்டத்திற்கு அவை தனது ஒப்புதலை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது உரையை முடிக்கின்றேன்.

சிறு துளி பெரு வெள்ளம்

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் முதலீடு செய்யுங்கள்

டெபாஸிட்டுகளுக்கு எங்கள் வட்டி விகிதங்கள் :

1. சீசன் டெபாஸிட்டுகள்- ரூ 1000/-மும் அதற்கு மேலும் — வருடத்திற்கு
   15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை 3.25%
   46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை 3.75%
2. தவணை டெபாஸிட்டுகள்- ரூ 100/-ம் அதற்கு மேலும்

காலம்	வருடத்திற்கு
91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக	5.75%
6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக	6.25%
9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக	7.25%
1 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்கு குறைவாக	8.25%
3 வருடங்களும் அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்கள் வரை	9.25%
5 வருடங்களுக்கு மேல்	10.25%

3. சேவிங்ஸ் கணக்கு 5.75%
4. நடப்பு (current) கணக்கு வட்டி கிடையாது

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்,
379, நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் ரோடு, சென்னை-600 001
தந்தி : 'URBANK' போன் : 20367 (3 லைன்கள்)
டெலக்ஸ் :MS 7225

கிளைகள் : அண்ணா நகர், அண்ணா சாலை (காமதேனு). அண்ணா சாலை (அண்ணா சிலை), அசோக் நகர், பெஸண்ட் நகர், எழும்பூர், காந்தி நகர், கிரீன்வேஸ் ரோடு, ஜவஹர் நகர், கெல்லீஸ், தங்கசாலை, மைலாப்பூர், மைலாப்பூர் குளம், நுங்கம்பாக்கம், புரசைவாக்கம், ராயப்பேட்டை, ராஜா அண்ணாமலைபுரம், சாந்தோம், சாஸ்திரி நகர், ஷெனாய் நகர், தியாகராய நகர் & திருவல்லிக்கேணி.

'இலக்கியச் செல்வத்தை இசையினில் வடித்தவர்'

—ஆர். வி. சுப்ரமணியன்
(ஆளுநரின் ஆலோசகர்)

"பழம் பெரும் நாடு, நமது நாடு. மாபெரும் இலக்கியம், கலை, கலாச்சாரம், பாரம்பரியம் கொண்ட பூமி இது. நமது நாட்டின் வரலாறு, நமது சிறந்த ஆண்கள், பெண்களின் வரலாறு கும். அவர்களே நம் நாட்டின் வரலாற்றையும் வடிவமைத்து உருவாக்கினார்கள். பல ஆண்டுகளில் நமது கலையும் கலாச்சாரமும் எவ்வாறு வளர்ந்துள்ளன என்று அறிந்து கொள்வதற்கு, அக்காலங்களில் வாழ்ந்த மாபெரும் மனிதர்களைப் பற்றி நமது மக்கள் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இந்த விஷயத்தில், வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களிலும் சிறந்து விளங்கிய நமது மாபெரும் ஆண்களையும் பெண்களையும் முக்கியமான நிகழ்ச்சிகளில் நினைவுத் தபால் தலைகள் வெளியிடுவதன் மூலம் தபால்-தந்தி இலாகா சிறப்பித்து வருவது உண்மையில் மகிழ்ச்சி தருகிறது. இன்று அத்தகைய ஒரு விழாவில், மாபெரும் இசை மேதை முத்துஸ்வாமி தீட்சிதர் நினைவைச் சிறப்பிக்கும் வகையில் நினைவுத் தபால்தலை வெளியிடப்படும் இந்த விழாவில் கலந்து கொள்ளும் பேறு எனக்குக் கிடைத்ததற்கு மகிழ்ச்சியடைகிறேன்.

''மூன்று இசை மேதைகளாகிய தியாகராஜர், சியாமா சாஸ்திரி, முத்துஸ்வாமி தீட்சிதர் ஆகியோரை உலகுக்கு அளித்ததற்காகத் தமிழ்நாடு பெருமைப்பட முடியும். அவர்கள் தமிழ்நாட்டின் இசை மகுடத்தின் மூன்று மணிகள். இசையில் ஆழ்ந்த ஞானமும் பற்றும் கொண்ட குடும்பம் ஒன்றில் தீட்சிதர் தோன்றினார். தமிழ்நாட்டில் கலாச்சார மறுமலர்ச்சி தோன்றியிருந்த காலத்தில் அவர் பிறந்தார். 1775-ல் பிறந்த முத்துஸ்வாமி தீட்சிதர், கல்விகளில் மிகச் சிறந்து விளங்கினார். அவரின் இளமைக் காலத்திலேயே, அவர் ஓர் இசை அறிஞர் என்பது தெளிவாயிற்று. தந்தையின் உதவியுடன் அவரது இசைப் பயிற்சி துவக்கப்பட்டது. முத்துஸ்வாமி தீட்சிதரின் பெருமை, அவரது அணிநலம் வாய்ந்த சமஸ்கிருத சாகித்தியத்திலும், ராக ஆலாபனையின் உருக்கமான ஓட்டத்திலுமே அடங்கியிருக்கிறது. தீட்சிதரின் மாபெரும் கீர்த்தனைகளில் அடங்கியுள்ள அழகு எவரையும் கொள்ளை கொண்டு விடும். அவரது கீர்த்தனைகளில் உள்ள நயம், அழகு, பக்தி ஆகியவை, கேட்பவர்களை இறையுணர்வில் ஆழ்த்தும்.



முத்துஸ்வாமி தீட்சிதரின் நினைவுத் தபால் தலைகள் கொண்ட ஆல்பத்தை அவரது கொள்ளுப்பேரன் திரு. பாலுசாமி தீட்சிதர் பெறுகிறார்.

''தீட்சிதர் இசையின் பல்வேறு துறைகளையும் நன்கு பயின்றவர் என்ற உண்மைக்கு, அவரது கீர்த்தனைகளே சான்றாகத் திகழ்கின்றன. வீணையில் அவரது நிபுணத்துவம் மிக மேம்பட்டது. மாபெரும் தஞ்சை நால்வருக்கு தீட்சிதர் தமது கீர்த்தனைகளைக் கற்பித்தார். அந்நால்வரின் மூலம், அவரின் கீர்த்தனைகள் இறவாத்தன்மை எய்தின. தீட்சிதரின் கீர்த்தனைகளில் பல அவர் பயணம் செய்த பல்வேறு இடங்களில் வீற்றிருந்த கடவுளைப் பற்றியே இருந்த போதிலும், இன்னொரு கலைஞருக்குத் தனிப்பட்ட பரிசாக, நடனத்துக்கான இசையையும் அவர் உருவாக்கினார். அவரது கீர்த்தனைகள் அழியாத, இலக்கிய, அறிவுத் திறன் கொண்டவை.

''முத்துஸ்வாமி தீட்சிதரின் கீர்த்தனைகளில் மொத்தம் முப்பது கீர்த்தனைகளைச் சாதாரண ராகத்திலும், அதைச் சார்ந்த ராகங்களிலும் தெரிந்தெடுத்து வெளியிடுவதற்கு புது டில்லி, சங்கீத நாடக அகாடெமி முயற்சிகள் மேற்கொண்டிருப்பதற்காக மகிழ்ச்சியடைகிறேன்.

''இந்தத் தபால்தலைகள், இசைத் துறையிலும் மற்ற கலாச்சார நடவடிக்கைகளிலும் நாம் மேற்கொள்ளும் எல்லா ஈடுபாடுகளிலும் தீட்சிதரின் இசைப் படைப்புக்களுடைய முத்திரையைப் பதிக்கட்டும்! முத்துஸ்வாமி தீட்சிதர் நினைவுத் தபால் தலையை வெளியிடுவதில் நான் இப்பொழுது பெருமகிழ்ச்சி அடைகிறேன்.''

(18-3-'76 அன்று முத்துஸ்வாமி தீட்சிதரின் அஞ்சல் தலை வெளியீட்டு விழாவில் பேசிய உரை)

செய்தியே! சித்திரமே!

புரதச்சத்து மிகுந்த பயறு வகைகளை 10 இலட்சம் ஏக்கரில் பயிரிடுவதற்குத் தமிழ் நாடு அரசு திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது.
பின்தங்கிய நிலையில் உள்ள தமிழ் நாட்டை மீண்டும் முன்னேற்ற வேண்டுமென்பதற்காக, 1976-77-ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு ரூபாய் 201 கோடி ஒதுக்க இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
1976-77
திட்ட உதவி
ரூ. 201 கோடி
சென்னை நகருக்குக் கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டத்தின் முன்னோடி ஆய்வுகளுக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.


புத்தகக் கடை
மாணவர்களுக்கு பென்சில் நோட்டு இங்கே கிடைக்கும்
விற்பனை வரி
இருபது அம்சத் திட்டத்தையொட்டி, பென்சில், நோட்டுப் புத்தகங்கள் ஆகியவற்றின்மீது தற்போது விதிக்கப்படும் 4 சதவித. பலமுனை விற்பனைவரி நீக்கப்படும்.
தமிழ்நாடு மின்வாரியத்தில் பொது மக்கள் தொடர்புத் திட்டம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.
கடின உழைப்புக்கு ஈடு இணை ஏதுமில்லை

கிராம வளர்ச்சியில் பத்தாண்டுச் சாதனை—1

வேளாண்மை உற்பத்தியில் வரலாறு காணாத வளர்ச்சி

வேளாண்மை உற்பத்தியில் உலகத்திலேயே உன்னதமான வளர்ச்சி, சென்ற பத்து ஆண்டுக் காலத்தில் இந்தியாவில் ஏற்பட்டிருக்கிறது.

இந்தப் பத்து ஆண்டுக்காலத்தின் முற்பாதியில் கோதுமை உற்பத்தி இரட்டிப்பாகி இருக்கிறது. இந்த உற்பத்திப் பெருக்கத்திற்கு, உலகத்தில் வேறெந்த நாட்டையும் ஈடாகச் சொல்ல முடியாது.

1960-லிருந்து 1970 வரையிலான பத்தாண்டுக் காலத்தின் முற்பாதியில் ஆண்டொன்றுக்குச் சராசரியாக 110 இலட்சம் டன் ஆக இருந்த கோதுமை உற்பத்தி 1971-72-இல் 260 இலட்ச டன்னுக்கும் அதிகமாக இருந்தது.

மொத்த உணவு தானிய உற்பத்தி அளவு 1964-'65-இல் 894 இலட்சம் டன்னுக இருந்தது. அது 1970-'71-இல் 1,080 இலட்சம் டன்னுகப் பெருகி உள்ளது. 1975-'76-இல் 1,140 இலட்சம் டன்னை எட்டும் போக்கில் அமைந்திருக்கிறது.

நீண்டகாலக் கண்ணேட்டத்தில் இதைவிட முக்கியமான அம்சமாக இருப்பது என்னவென்ருல், சுலப ஆண்டுகளுக்கும் சிரம ஆண்டுகளுக்கும் இடையே உள்ள உற்பத்தி ஏற்றத் தாழ்வுகள் மிக கணிசமாகக் குறைக்கப்பட்டு விட்டன என்பதாகும். உதாரணமாக மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திலும், 1968-69-ஆம் ஆண்டோடு முடிவடைந்த மூன்று ஆண்டுத் திட்டங்களிலும் உணவு தானிய உற்பத்தி 720 இலட்சம் டன்னும் 940 இலட்சம் டன்னுக்கும் இடைப்பட்டு ஏறி இறங்கி வந்தது. ஆனல் பிந்தைய ஆண்டுகளில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் அந்த உற்பத்தி ஏற்றத்தாழ்வு 950 இலட்சம் டன்னுக்கும், 1080 இலட்சம் டன்னுக்கும் இடைப்பட்டுத்தான் இருந்தது. அதற்கும் பிந்தைய ஆண்டுகளில் உற்பத்தி விகித ஏற்றத்தாழ்வுகள் மேலும் குறைக்கப்பட்டதால், 1972-'73, 1974-'75-ஆம் ஆண்டுகளில்—முன் எப்போதும் இருந்திராத அளவிற்கு வறட்சி நிலை இருந்த போதிலும்கூட—நாட்டின் உற்பத்தி அளவானது 1,000 இலட்சம் டன்னுக்குக் குறையவில்லை.

நாட்டின் உணவு உற்பத்தி நன்ருக உருவாக்கப்பட்டுள்ளது. இதனுல் சாதாரணப் பருவ மழை உள்ள ஓர் ஆண்டில் உற்பத்தி அளவு, நாட்டின் உள்நாட்டு தேவைகள் அவ்வளவையும் சமாளிக்கக்கூடியதாய் இருக்கிறது. இது 1975-'76-இல் கிடைத்த உற்பத்தி மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

பணப் பயிர்கள்

இதே போல் உணவு தானியங்கள் அல்லாத மற்றப்பயிர்களிலும் வியந்து பாராட்டக்கூடிய பலன்கள் ஏற்பட்டுள்ளன.

பஞ்சு இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் இருந்த இந்தியா, இப்போது ஏற்றுமதி இறக்குமதி இரண்டையும் சேர்த்தால் நிகர அளவில் பஞ்சு ஏற்றுமதி செய்யும் ஒரு நாடாக மாறியிருக்கிறது. 1965-'66-ல் 40 இலட்சம் பொதி பஞ்சு உற்பத்தி செய்யப்பட்டன. 1974-'75-ல் அந்த உற்பத்தி 66.9 இலட்சம் பொதிகளாக உயர்ந்து விட்டிருக்கிறது.



சணல் உற்பத்தி அளவு இதேபோல் 45 இலட்சம் பொதிகளாக இருந்தது, 1973-'74-ல் 65.6 இலட்சம் பொதிகளாக அதிகரித்து உள்ளது.

கரும்பு உற்பத்தியை வெல்லம் உருவத்தில் கணக்குப் பார்த்தால், 1973-'74-இல் இதுவரை எப்போதும் எட்டியிராத உச்ச அளவான 144 இலட்சம் டன்னை எட்டிவிட்டது. இந்த உச்ச சாதனை 1974-75-ஆம் ஆண்டிலும் அதே நிலையில் உள்ளது.

புதிய அலுவல் முறை

இந்தச் சாதனைகள் சாத்தியமானதற்கு இந்தப் பத்தாண்டு கால ஆரம்பத்தில் புதிய அலுவல் முறை ஒன்று கடைப்பிடிக்கப் பட்டது தான். இந்தப் புதிய அலுவல் முறை விஞ்ஞானத்தின் தொழில்நுட்பத்தையும் மேலும் மேலும் அதிக அளவில் உபயோகபடுத்தி வரவேண்டும் என்று வற்புறுத்தியது.

நல்ல உயர்ந்த ரக விதைகளை கிடைக்கும்படி செய்வது, நிலத்தையும் நீரையும் மேலும் சிறந்த முறையில் பயன்படுத்துவது, பல போகப் பயிர் செய்வது, இரசாயன உரங்கள் போதுமான அளவிற்குக்கிடைக்கும்படி செய்வது, பயிர்ப் பாதுகாப்புக்கான விரிந்த பரந்த ஏற்பாடுகள், கடன் வசதி, விற்பனைப்பெருக்க வழி, ஆராய்ச்சி ஏற்பாடுகள் ஆகியவைகளுக்கான கட்டடமைப்புகளை உருவாக்கி வருவது ஆகியவையே புதிய அலுவல் முறையின் சிறப்பு அம்சங்களாகும்.

இவைகளும், இந்தியாவில் உள்ள எண்ணற்ற விவசாயப் பெருமக்களின் தொழிற்திறமை, புதிய புதிய ஆராய்ச்சிகளைக் கண்டறிந்து கையாளும் மனப்பான்மை, கடின உழைப்பு ஆகியவைகளும் சேர்ந்து இந்தியாவை உணவு தானியங்களில் மட்டும் இன்றி இன்னும் வேறு பல பயிர்கள் உற்பத்தியிலும் தன்னிறைவுப் பாதையில் முன்னேறும்படி செய்திருக்கின்றன. இவ்வாறு பெருவாரியான விவசாய மக்களை இப்பெரும் முயற்சியில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பது இந்தப் புதிய நடவடிக்கையின் மையக்கருத்தாகும்.

தமிழ்நாட்டிற்கு ரூபாய் 2 கோடி வரிச் சலுகை

தமிழ்நாட்டிற்கான 1976-'77-ஆம் ஆண்டின் பட்ஜெட் 24—3—76 அன்று நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. அப்பொழுது, ஓராண்டில் ரூ. 2 கோடி அளவிற்கு வருவாயை இழக்கக்கூடிய வரிச் சலுகைகளை இந்திய நிதியமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் அறிவித்தார். இந்த வகையில் அளிக்கப் பெற்றுள்ள வரிச் சலுகைகளின் விவரம்:

1. வெளியூர் பயணப் பேருந்துகளின் வரி குறைக்கப்படும். காலாண்டிற்கு இருக்கை ஒன்றுக்கு ரூ. 225 என உத்தேசிக்கப்பட்டிருந்த தீர்வை, இப்பொழுது காலாண்டிற்கு இருக்கை ஒன்றுக்கு ரூ. 215 என ஆக்கப்படுகிறது.

2. திராட்சை, கரும்பு, வெற்றிலை, மஞ்சள் போன்ற வணிகப் பயிர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த தீர்வை ஏக்கருக்கு ரூபாய் 25 ஆகும். அது தற்பொழுது ஏக்கருக்கு ரூபாய் 20 ஆக குறைக்கப்படுகிறது.

3. புகையிலை, மிளகாய், பாசன வசதியுள்ள நிலங்களில் விளைந்த பருத்தி, வேர்க்கடலை போன்ற பணப் பயிர்களுக்கு, முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த 'செஸ்' தீர்வை ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 15 ஆகும். ஆனல் அதுவும் தற்பொழுது குறைக்கப்பெற்று, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 12.50 ஆகிறது.

இந்தச் சலுகைகளின்மூலம் ஆண்டொன்றுக்கு 2 கோடி ரூபாய் அளவிற்கு வருவாயை இழக்க வேண்டியிருக்கும் என்றும், இந்த வரிச் சலுகைகளை அனைவரும் வரவேற்பார்கள் என்றும், தமிழ்நாட்டிலுள்ள பத்திரிகைகள், பல்வேறு சங்கங்கள், பொதுமக்கள் ஆகியோர் தெரிவித்த கருத்துக்கள் அனைத்தையும் மிகவும் உன்னிப்பாகப் பரிசீலித்து இந்த வரிச் சலுகைகளை வழங்க முடிவு செய்யப்பட்டது என்றும் நாடாளுமன்றத்தில் நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

1

2

படமும் செய்தியும்

1, 2. தமிழக ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு பி. கே. தவே அவர்கள் 13-3-76 அன்று நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தையும், விருத்தாசலத்தில் உள்ள பீங்கான் தொழிற்சாலையையும் பார்வையிட்டார்.

3, 4. தமிழக ஆளுநர் திரு கே. கே. ஷா அவர்கள் மார்ச்சு 15, 16 தேதிகளில் திருநெல்வேலி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது பொது மக்களின் குறைகளைக் கேட்டறிந்து ஆவன செய்தார்.



3

4

5

6

5, 6. மகளிர் சேவை மன்ற விழாவில் (16—3—'76) தமிழக ஆளுநர் அவர்களின் துணைவியார் திருமதி மதுபென் ஷா அவர்கள் கலந்துகொண்டார்.

7. விரைவில் திறப்புவிழா நடைபெறவிருக்கும் வள்ளுவர் கோட்டத்தை ஆளுநர் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்கள் பார்வையிட்டார். தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. வி. கார்த்திகேயன் அவர்களும் உள்துறைச் செயலாளர் திரு. கே. சுப்ரமணியம் அவர்களும் உடன் உள்ளனர்.

8. இந்திய அரசு தொழில், நுகர்பொருள் விநியோகத் துறையின் மாநிலங்கள் அமைச்சர் திரு எ. சி. ஜார்ஜ் அவர்கள் 19-3-76 அன்று தண்டையார்பேட்டையில், யுனைடெட் இந்தியா ரோலர் மாவு மில் நிறுவனத்தின் 'சி' மில்லைத் திறந்து வைத்தார்.

7



8



தமிழ்நாட்டில் கிராமத்தொழில் முன்னேற்றத்திற்கு மத்திய உதவி!

எஸ். முத்தையன் - கிராமத்திட்ட இணை இயக்குநர்

நமது நாட்டில் தொழில்கள் பரவலாக அமைய வேண்டும். அதன் பயன்கள் இந்தியாவின் உள்பகுதிகளில் உள்ள கிராம மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று இந்திய அரசாங்கம் 1962-ஆம் வருடத்தில் இந்தியா முழுமையிலும் உள்ள சில பிற்பட்ட பகுதிகளில் 49 கிராம முன்னேடித் திட்டங்களை அமைத்தது; இவற்றில் தமிழ்நாட்டிற்கென்று மூன்று திட்டங்களை ஒதுக்கியது. இந்த மூன்று திட்டங்களும் தமிழ்நாட்டில் செங்கற்பட்டு, சேலம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தொழில் துறையிலும் மற்றத் துறைகளிலும் மிகவும் பிற்பட்ட பகுதிகளான ஸ்ரீபெரும்புதூர், ஓமலூர், நாங்குநேரி வட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டன. இத்திட்டங்களின் குறிக்கோள், பொதுவாக பிற்பட்ட பகுதிகளின் மக்களுடைய முன்னேற்றமும், குறிப்பாக இத்திட்டப் பகுதிகளில் உள்ள பல்வேறு தொழிலாளர்களுக்கு நவீன முறையில் பயிற்சி அளித்தும் தொழில் துவங்கக் கடன் உதவி, குறைந்த வட்டி விகிதத்தில் அளித்தும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், மாதிரித் தொழிற்சாலைகளை அமைத்து, இப்பகுதிகளில் பல்வேறு இதர தொழில்களை அமைக்க ஊக்குவித்தல், பொதுவசதித் தொழில் நிலையங்களை அமைத்து இப்பகுதிகளில் உள்ள விவசாயிகளும், மற்றத் தொழிலாளர்களும், தங்களுக்கு வேண்டிய கருவிகள், தளவாடச் சாமான்கள் செய்து கொள்ளவும், பழுது பார்த்துக் கொள்ளவும், மற்றும் முன் மாதிரித் திட்டங்களை அமைத்தல் முதலியன ஆகும்.

இத்திட்டப் பகுதிகளில் தனிப்பட்டவர்களுக்குப் புதிய தொழில்களைத் துவங்கவும், ஏற்கெனவே உள்ள தொழில்களை வளர்க்கவும் மத்திய அரசாங்கத்தின் கடன் வசதிகள், குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்படுகின்றன. இந்தக் கடன் உதவி, தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்படுகிறது. இதற்கு மேல் தேவையான கடன் வசதிகள் தேசிய மயமாக்கப்பட்ட பாங்குகளின் மூலம் வழங்க உதவப்படுகிறது. நமது இந்திய அரசாங்கம் இத்திட்டத்தை நமது நாட்டில் பட்டணங்களையும் பெரிய நகரங்களையும் தள்ளி, உட்பகுதிகளில் உள்ள கிராம மக்களின் முன்னேற்றம் குறித்து அமைத்துள்ளது. எனவே இத்திட்டம் மக்கள் தொகை 15,000-க்கு மேற்படாமல் உள்ள கிராமங்களில் மட்டும் அமலாக்கப்படுகிறது. இது, இத்திட்டத்தின் ஒரு சிறப்பு அம்சமாகும்.

தொழிற் பயிற்சி நிலையங்கள்

இந்தக் கிராமத் தொழில்கள் திட்டத்தின் கீழ், மேலே சொல்லப்பட்ட மூன்று திட்டப்பகுதிகளிலும் மத்திய அரசாங்கத்தின் மானிய உதவியுடனும், கடன் உதவியுடனும் பல்வேறு தொழிற் பயிற்சி நிலையங்களும் பொது வசதித் தொழிற் பட்டறைகளும் உற்பத்தித் தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டன. தொழிற் பயிற்சி நிலையங்களின் மூலம் இந்தத் திட்டப்பகுதிகளில் உள்ள பல்வேறு தொழிலாள இளைஞர்களைத் தேர்ந்தெடுத்துத் தமிழ் நாட்டில் மற்ற முன்னேற்றமடைந்த பகுதிகளில் உள்ள பல்வேறு தொழில் நிலையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. குறிப்பாக ரேடியோ பழுதுபார்த்தல், அச்சுத் தொழில் செய்தல், மரவேலை செய்தல், மோட்டார் பம்புசெட் பழுது பார்த்தல், நவீன முறையில் திருகு ஆணிகள் செய்தல், தோல் பொருள்கள் செய்தல், உல்லன் காலுறைகள் செய்தல் முதலியவற்றில் தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சிக் காலத்தில் மாணவர்களுக்கு இந்திய அரசாங்கத்தின் மானியத்தின் மூலம் உதவித் தொகைகள் அளிக்கப்பட்டன.

இவ்வாறு இந்த மூன்று திட்டப் பகுதிகளிலும் ஏறக்குறைய 1,500 நபர்களுக்குப் பல்வேறு தொழில்களில் மத்திய அரசின் உதவித் தொகையோடு பயிற்சி அளிக்கப்பட்டது. பொது வசதித் தொழில் நிலையங்கள் மூலமும், நிறைய மக்கள் பயன் பெற்றனர். செங்கற்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் மிகவும் பிற்பட்ட பகுதியாகிய ஈக்காடு கிராமம், சுங்குவார் சத்திரம் கிராமம் ஆகியவைகளில் இரண்டு பொது வசதித் தொழில் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. சேலம் மாவட்டத்தில் ஓமலூர் வட்டத்தில் தாரமங்கலம், தீவட்டிப்பட்டி, மேச்சேரி, ஜலகண்டாபுரம் ஆகிய கிராமங்களில் நான்கு பொது வசதித் தொழில் நிலையங்கள் அமைக்கப்பட்டன. திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி வட்டத்தில் கண்ணநல்லூர், கோயிலம்மாள்புரம், மூலக்கரைப்பட்டி, களக்காடு, தேவி நல்லூர், மீனவன் குளம், ஈத்தமொழி, திசயன்விளை, தளபதி சமுத்திரம், பருத்திப்பாடு ஆகிய கிராமங்களில் பத்துப் பொது வசதித் தொழில் நிலையங்கள் அமைக்கப்பட்டன. இவை யாவும் மத்திய அரசின் முழு மானிய உதவியுடன் அமைக்கப்பட்டன. கிராமங்களில் எதிர்பார்க்கும் அளவுக்கு இந்த நிலையங்களுக்கு வேண்டிய வேலைகள் கிடைக்காது என்றாலும் கிராம மக்களின் முன்னேற்றம் கருதி மத்திய அரசாங்கம் இவைகளை அமைக்க உதவியது. சராசரியாக இந்தப் பொது வசதித் தொழில் நிலையங்களில் ஏறக்குறைய 500 லிருந்து 600 நபர்கள் வரை ஒவ்வொரு நிலையத்திலும் மலிவான அல்லது குறைவான விலையில் பொருள்கள் உற்பத்தி செய்தோ அல்லது பழுது பார்த்தோ பயன் பெற்றனர்.



மத்திய அரசு உதவியுடன் தொழிற்சாலைகள்

'தொழிற்சாலைகளைப் பரவலாகக் கிராமப்புறங்களிலும் அமைக்க வேண்டும்; கிராம மக்களும் அதனால் பயன்பெற வேண்டும்' என்ற மத்திய அரசின் கொள்கையை நிறைவேற்றும் வகையில் ஸ்ரீபெரும்புதூர் கிராம முன்னேடித் திட்டத்தின் கீழ், செம்பரம்பாக்கத்திலும், திருப்பாச்சிரிலும், நெல்லை மாவட்டத்தில் வள்ளியூரிலும், பொது நோக்குத் தொழிற்சாலைகள் துவக்கப்பட்டன. இத்தொழிற்சாலைகளில் விவசாயக் கருவிகள், கட்டடங்கள் கட்டுவதற்கான இரும்புத் தளவாடச் சாமான்கள், மருத்துவ மனைகளுக்கு வேண்டிய உபகரணங்கள் ஆகியவை நேர்த்தியான முறையில் செய்யப்படுகின்றன. ஊத்துக்கோட்டை என்னும் கிராமத்தில் காகித உறைகளும், பாலிதீன் பைகள் செய்யும் உற்பத்திக்கூடமும், மப்பேடு என்னும் ஊரில் தோல் பொருள்கள், காலணிகள் செய்யும் உற்பத்தி நிலையமும் துவக்கப்பட்டன.

சேலம் மாவட்டத்திலுள்ள ஓமலூர் கிராம முன்னேடித் திட்டத்தின் கீழ் ஓமலூர் பாலிதீன் பைகள் செய்யும் தொழிற்சாலை ஒன்றும் தாரமங்கலத்தில் தோல்பொருள்கள் செய்யும் உற்பத்தி நிலையம் ஒன்றும் துவக்கப்பட்டன.

திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி கிராம முன்னேடித் திட்டத்தின் கீழ் வடக்கு விஜய நாராயணம் என்னும் ஊரில் சாக்குத் துண்டுகள் செய்யும் உற்பத்தி நிலையம் துவக்கப்பட்டது.

மேற்கண்ட தொழிற்சாலைகளில் உற்பத்தியோடு சம்பந்தப்பட்ட துறைகளில் கிராம மாணவர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டன. பயிற்சிக் காலத்தில் மத்திய அரசின் மானிய உதவியில் இருந்து பயிற்சியாளர்களுக்கு உதவித் தொகைகளும் வழங்கப்பட்டன.

இந்தக் கிராமத் திட்டப் பகுதிகளில் செம்பரம்பாக்கம், திருப்பாச்சீர், வள்ளியூர் ஆகிய கிராமங்களில் மத்திய அரசாங்கத்தின்

இந்திய அரசின் வருவாயும் – செலவும்....

வரும் ஆண்டில் நிதி அமைச்சர் வசூல் செய்யும் ஒவ்வொரு ரூபாயிலும் 24 பைசா எக்சைசிலிருந்தும், 12 பைசா சுங்க இலாகாவிலிருந்தும், 8 பைசா கம்பெனி வரி மூலமாகவும், 2 பைசா வருமான வரி மூலமும், 2 பைசா மற்ற வரிகள் மூலமும் கிடைக்கும். வரி அல்லாத வருவாய் 15 பைசா. கடன் மீட்பு 12 பைசா. பொதுக்கடன்கள் சிறு சேமிப்பு சேமநல நிதி வகை 9 பைசா, அன்னியக் கடன்கள் 6 பைசா, மற்ற வருமானங்கள் 8 பைசா என்ற அளவில் இருக்கும். 2 பைசா பற்றுக்குறை நிரப்பப்படாமல் இருக்கிறது.

இவ்வாறு வசூலிக்கும் ஒவ்வொரு ரூபாயிலும் அரசு, திட்டத்துறைக்கு 37 பைசாவும், மற்ற வளர்ச்சிச் செலவுகளுக்கு 19 பைசாவும் செலவு செய்யும். பாதுகாப்புக்கு 19 பைசா செலவாகும். வட்டி வகையில் 11 பைசா, மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்குச் சட்டரீதியான நிதிமாற்றமும் மற்றவையும் 6 பைசா, மற்ற செலவுகள் 8 பைசா என்ற அளவில் அமையும்.

உதவியின் கீழ் அமைக்கப்பட்ட மூன்று பொது நோக்குப் பொறியியல் தொழிற்சாலைகள் நல்ல முறையில் நடந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். இந்தத் தொழிற்சாலைகள் இப்பொழுது தமிழக அரசின் நிறுவனமான டான்சியின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

மூலப் பொருள் ஒதுக்கீடு

கிராம முன்னேடித் திட்டப் பகுதிகளில் உள்ள பல்வேறு தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப் பொருள்களை மத்திய அரசாங்கம் அவ்வப்போது ஒதுக்கித் தருகிறது. சோப்பு செய்யத் தேவையான மூலப் பொருள்கள், எவர்சில்வர் தகடுகள், அலுமினியம், ஈயம், மெழுகு முதலிய மூலப்பொருள்களை மத்திய அரசாங்கம் இத்திட்டங்களுக்கு ஒதுக்கித் தருகிறது. மூலப் பொருள்கள் தவிரத் தொழில்கள் துவங்கவும், தொழில்களைப் பெருக்கவும் மத்திய அரசாங்கம் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வசதி அளிக்கிறது. மத்திய அரசாங்கம் அளித்த குறைந்த விகிதக்கடன் வசதியின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள மூன்று கிராம முன்னேடித் திட்டப் பகுதியில் உள்ள பல்வேறு தொழில்களுக்குக் கடன் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

1962-ஆம் வருடத்தில் ஒரு குறிப்பிட்ட பின்தங்கிய பகுதிகளில் மட்டும் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கிராம முன்னேடித் திட்டங்கள் 1971-ஆம் வருடம் முதற்கொண்டு செங்கற்பட்டு, சேலம், திருநெல்வேலி மாவட்டங்கள் முழுமைக்கும் விஸ்தரிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர மத்திய அரசாங்கம் தமிழ்நாட்டிற்கு இரண்டு புதிய கிராம முன்னேடித் திட்டங்களை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு ஒதுக்கியுள்ளது. இந்த இரண்டு புதிய திட்டங்களும் மிகவும் பின்தங்கிய மாவட்டங்களான தருமபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் 1974-75 முதற்கொண்டு செயல்பட்டு வருகின்றன. படிப்படியாக இத்திட்டத்தை இந்தியாவில் உள்ள எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்பது மத்திய அரசின் கொள்கை.

1974-75-ஆம் வருடத்தில் மட்டும் தமிழ்நாட்டில் உள்ள செங்கற்பட்டு, சேலம், தருமபுரி, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய ஐந்து கிராமப்புறத் தொழில் திட்டப் பகுதிகளில் ஏறக்குறைய 253 தொழிற்சாலைகளுக்கு ரூ. 9,79,000/- கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இதுவரை 135 நபர்களுக்கு ரூ. 6,50,000/- கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இரண்டு மாதங்களில் சுமார் ரூ. 6,00,000 மேலும் கடன் வசதி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் கடன் உதவி, தொழிற்சாலைகளுக்கு ஆரம்பக் கால நிதியாகக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உதவித்தொகையுடன் சிறு தொழிற்சாலைகள் தங்களுக்கு மேலும் வேண்டிய உதவி நிதியை ஸ்டேட் பாங்க் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இருந்து பெற்றுக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களின் கீழ் பல தொழிற்சாலைகள் உதவி பெற முடிந்தது. உதாரணமாக செங்கற்பட்டு, சேலம், இராமநாதபுரம், தருமபுரி, திருநெல்வேலி மாவட்டங்களில் ஏறக்குறைய 943 தொழிற்சாலைகளுக்கு ரூபாய் 269 இலட்சம் தேசிய வங்கிகளில் இருந்து அளிக்கப்பட்டுள்ளது. இந்த உதவியின் கீழ் 1975-76 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட உற்பத்திப் பொருள்களின் மதிப்பு ஏறக்குறைய ரூபாய் 13 கோடியாகும். இந்த ஐந்து திட்டப்பகுதிகளிலும் சுமார் 9,000-க்கு மேற்பட்ட நபர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பளிக்க உதவியுள்ளது. இதே முறையில் கடந்த 8 மாத காலங்களில் மேற்படி ஐந்து திட்டப்பகுதிகளில் 500-க்கு மேற்பட்ட தொழில்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மற்றும் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ள சுமார் 3,000 தொழிற்சாலைகளைப் பலப்படுத்துவதற்கும், உற்பத்தியைப் பெருக்குவதற்குமான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் சுமார் 1,400 நபர்களுக்கும் தொழில்களுக்கும் 48 இலட்ச ரூபாய் வங்கிகளில் இருந்து நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் திறம்படச் செயல்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் இத் திட்டத்தைத் தமிழ்நாட்டில் நிருவகிக்கத். தேவையான ஏறக்குறைய ரூ. 10 இலட்சத்தை ஒவ்வொரு வருடமும் மானியமாக மத்திய அரசாங்கம் கொடுத்து வருகிறது.

மத்திய அரசு இத்திட்டத்தின் கீழ் இதுவரை தமிழ்நாட்டிற்கு 80 இலட்சம் ரூபாய் மானியமாகவும், 98 இலட்சம் ரூபாய் கடனாகவும் வழங்கியுள்ளது. மத்திய அரசு கிராமத் தொழில் வளர்ச்சிக்காக வகுத்த திட்டங்கள் நடப்பு ஆண்டிலும் அடுத்த ஆண்டிலும் துடிப்புடன் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளன.

ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதை ஊக்குவிக்க வரிச்சலுகைகள்!

1976-77-ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் யோசனைகளில் மத்திய நிதி அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுப்பதை ஊக்குவிப்பதற்கான வரிச் சலுகைகளை அளிக்க முன் வந்துள்ளார்.

80 சதுர மீட்டர் வரை மனைப்பரப்பு கொண்ட புதிய வீடுகளுக்கு 5 ஆண்டுக்காலத்திற்குச் சொத்து வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

ஆண்டுக்கு 10 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் உள்ள தொழிலாளர்களுக்கான குடியிருப்புக்களைப் பொறுத்த வரையில் அவற்றைக் கட்டிக் கொடுத்த தொழில் நிறுவனங்களுக்கு 20 சதவிகிதம் வரை ஆரம்பத் தேய்மானப்படி அளிக்க அனுமதிக்கப்படும். தற்போது ஆண்டுக்கு 7,500 ரூபாய் வரை வருமானம் உள்ள தொழிலாளர்களுக்கான குடியிருப்புக்களைப் பொறுத்த வரையில் மட்டுமே இந்த ஆரம்பத் தேய்மானப்படி அளிக்கப்படுகிறது.

தோட்டத் தொழிலாளர்களுக்காகவும், தொழிற்சாலை ஊழியர்களுக்காகவும் கட்டிக் கொடுக்கப்பட்ட குடியிருப்புக்களுக்கும் சொத்து வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

கரும்பு சாகுபடியாளர்களுக்கு...

கரும்புச் சாகுபடியாளர்கள் குறுகிய கால கரும்பு ரகங்களைப் பயிரிடுவதற்கு ஊக்க விலைகளை அளிக்கும்படி இந்திய கரும்பு அபிவிருத்திச் சபை சர்க்கரைத் தொழிற்சாலைகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பல்வேறு கரும்பு ஆராய்ச்சி நிலையங்களின் கண்டுபிடிப்புக்களை விரைவில் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் இந்தச் சபை வகுத்துள்ளது. அதனால், நாட்டின் பலபகுதிகளிலும் கரும்பு அபிவிருத்தியில் அந்த ஆராய்ச்சி முடிவுகளைப் பயன்படுத்த முடியும்.

பல மாநிலங்களிலும் கரும்பு அபிவிருத்திக்காக இந்திய அரசாங்கம் அனுமதி வழங்கிய மத்திய அரசு உதவி பெறும் திட்டத்தின் முன்னேற்றத்தைக் கரும்பு அபிவிருத்திச் சபை பரிசீலித்தது. மூன்று அடுக்கு முறை ஒன்றின் மூலம், வர்த்தகச் சாகுபடிக்காக நல்ல விதைகளை உற்பத்தி செய்து விநியோகிப்பது, இத் திட்டத்தின் மிக முக்கிய நோக்கமாகும். பெருமளவிலான செயல் முறைகள், நேரத்தோடு கூடிய பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள், பயிற்சி ஆகியவற்றின் மூலம் சர்க்கரை ஆலைகள் இயங்கும் இடங்களில் தீவிர அபிவிருத்தித் திட்டத்தைத் துவக்கவும் இத்திட்டம் வகை செய்கிறது.

தற்போதைய கரும்பு உற்பத்தியளவு கணிசமாக உயர்த்தப்பட வேண்டும் என்று கரும்பு அபிவிருத்திச் சபையின் கூட்டத்தைத் துவக்கி வைத்த மத்திய விவசாய அமைச்சகக் காரியதரிசி திரு. கே. எஸ். நரங் கூறினர். சர்க்கரை மிக அதிகமான வெளிச்செலாவணியைத் தேடித் தருவதால், அதன் பெருகி வரும் தேவையைச் சமாளிப்பதற்கு, கச்சாப் பொருளின் உற்பத்திச் செலவு குறைக்கப்பட வேண்டும் என்று அவர் கூறினர். கரும்புச் சாகுபடியாளர்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் இடையே சுமுகமான உறவு இருக்க வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.

நாட்டில் 17 கோடி டன் கரும்பை உற்பத்தி செய்து குறியளவை அடைவதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டிய தேவையை சபையின் தலைவர் திரு. ஹர்பன் சிங் வலியுறுத்தினர். பிரதமரின் 20 அம்சத் திட்டம் வலியுறுத்தும் நாட்டின் சமூக—பொருளாதார முன்னேற்றத்துக்கு இது ஒரு படியாகும் என்று அவர் சொன்னர்.

சென்னைப் பெருநகர்ப் புறப்பகுதிக்கு

ரூ. 8 கோடி கடன்வசதி

சென்னைப் பெருநகர்ப் பகுதிகளில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தை நிறைவேற்றுவதற்காகத் தமிழ்நாடு அரசாங்கத்துக்கு 2 கோடி ரூபாய் கடன் வழங்க மத்திய அரசாங்கம் அனுமதி வழங்கி இருக்கிறது. இந்தக் கடனைப் பெற்ற முதலாவது ஆண்டு முடிவிலிருந்து, 25 சம வருடாந்திரத் தவணைகளில் இக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். தமிழ்நாடு அரசாங்கம், ஆண்டு ஒன்றுக்கு $5\frac{1}{2}$ சதவிகித வட்டித்தொகை செலுத்த வேண்டியிருக்கும்.

சென்னைப் பெருநகர்ப் பகுதியின் தேவைகளை மதிப்பிடுவதற்காக, சென்ற டிசம்பரில் சென்னையில் நடைபெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து, இந்தக் கடன் உதவி வழங்கப்படுகிறது. அக்கூட்டத்தில் மதிப்பிடப்பட்ட தேவைகள், 8 கோடி ரூபாய் அளவில் இருந்தது. இதில் குடிநீர் விநியோகத்துக்கும், கழிவு நீர் ஓட்டத்துக்கும் மொத்தம் 6 கோடியே 35 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு மதிப்பிடப்பட்டுள்ளது; இதனையடுத்துக் குடியிருப்புப் பகுதி வளர்ச்சிக்காக ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாயும், சாலைகள் அமைப்பதற்காக 45 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மொத்த மதிப்பீட்டுத் தேவைகளான எட்டுக் கோடி ரூபாயில், மத்திய அரசின் பங்கு 2 கோடியே 65 இலட்சம் ரூபாய். மீதமுள்ள 5 கோடியே 35 இலட்சம் ரூபாயை, தமிழ்நாடு அரசாங்கம் அளிக்கும். தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ள கடன் போக மீதமுள்ள, மத்திய அரசின் பங்கான 65 லட்சம் ரூபாய் 1976 மார்ச்சு 31-ஆம் தேதிக்கு முன்னல் செலவிடப்படக் கூடிய செலவுத் தொகையின் மதிப்பீடு முடிவடைந்து பிறகு கவனிக்கப்படும்.

மறவாதீர்கள்;

உங்கள் மகள் ஒருநாள்

மணமகளாக அமர வேண்டியவள்!

திருமணம் என்றாலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்றால்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கினால் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்றோம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

	மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது	10 ஆண்டு இறுதியில் கிடைப்பது
	ரூ.	ரூ.	ரூ.
ரெக்கரிங் டிபாசிட்	5/-	375/-	...
	10/-	750/-	...
வளரும் மாதச் சேமிப்பு	5/-	...	825/-
	10/-	...	1,650/-

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002

தமிழகத்தின் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசு வழங்கிய உதவி

தமிழ்நாட்டில் வறட்சி நிவாரணப் பணிகளையும், புயல், வெள்ள நிவாரணப் பணிகளையும் மேற்கொள்வதற்காக மத்திய அரசு கணிசமான அளவுக்கு நிதியுதவி வழங்கி வந்திருக்கிறது.

இயற்கை விபரீதங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைப்பதற்காக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், அதாவது 1969—70-லிருந்து 1973—74 வரை, தமிழ்நாடு அரசு மொத்தம் ரூ. 31.11 கோடி செலவழித்தது. அதில் மத்திய அரசிடமிருந்து உதவியாகப் பெற்ற தொகை ரூ. 22.76 கோடி.

1966—67 முதல் 1973—74 வரையான காலத்தில் வறட்சி நிவாரணத்திற்காகவும், புயல் நிவாரணத்திற்காகவும் மத்திய அரசு பின்கண்டவாறு நிதி உதவி செய்துள்ளது:

ஆண்டு		நிதி உதவி (ரூபாய் கோடியில்)
1966—67 வறட்சி மற்றும் புயல் நிவாரண நிதி	...	2.50
1967—68 புயல் நிவாரண நிதி	...	2.50
1968—69 வறட்சி நிவாரண நிதி	...	1.25
1969—70 வறட்சி நிவாரண நிதி	...	13.00
1972—73 வறட்சி, புயல் மற்றும் வெள்ள நிவாரண நிதி	...	4.76
1973—74 புயல் மற்றும் வெள்ள நிவாரண நிதி	...	5.00
மொத்தம்	...	29.01

1974—75-ல் கடுமையான குடிநீர்ப் பற்றுக் குறையினால் சென்னை நகரமும், தமிழ்நாட்டில் மற்றும் பல பகுதிகளும் பாதிக்கப்பட்டிருந்த போது, மத்திய அரசு பல வழிகளில் தமிழ் நாடு அரசுக்கு உடனடி உதவிகள் வழங்கியது. வறட்சி நிவாரணத்துக்கான அபிவிருத்திச் செலவுகளுக்காக மத்திய அரசு 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் முன் உதவித் தொகையாக வழங்கியது.

அதோடு கூட, சென்னை நகரின் தண்ணீர்ப் பிரச்சினைக்கு நீண்ட கால அடிப்படையில் தீர்வு காண்பதற்காக, இந்தியப் புவி இயல் ஆய்வுத் துறை மத்திய தண்ணீர் ஆணைக் குழு ஆகியவை போன்ற மத்திய துறைகள் மூலமாகத் தொழில் நுட்ப உதவிகளையும் தமிழகஅரசுக்கு மத்திய அரசு வழங்கி வந்தது.

வறட்சியினால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களின் துயர் துடைப்பதற்காக வகுக்கப்பட்ட திட்டத்தின் நடைமுறை மூலதனச் செலவுகளுக்காக, கதர்—கிராமத் தொழில்கள் வாரியத்துக்கு மத்திய அரசு கடனாக 2.5 கோடி ரூபாயையும், கூடுதல் உதவித் தொகையாக 65 இலட்சம் ரூபாயையும் வழங்க அனுமதி அளித்தது.

இத்திட்டத்தின்கீழ் 1.13 இலட்சம்பேருக்கு முழு நேர வேலையும், சுமார் 35,000 பேருக்கு நூல் நூற்பதற்கான வசதிகளும் அளிக்க வகை செய்யப்பட்டது. கதர்—கிராமத் தொழில்கள் வாரியம் தனது நிதி வசதிகளைப் பெருக்கிக் கொள்வதற்காக, அரசுடைமை பாங்குகளிலிருந்து கடனுதவியும் பெற்றது.



தொழில் வளர்ச்சியைத் துரிதப் படுத்துவோம்!

தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட்டதிலிருந்து செயல்படுத்தப்பட்டு வரும் அல்லது செயல்படுத்துவதற்குத் தயாராக உள்ள தொழில் அபிவிருத்தித் திட்டங்களை மறுபரிசீலனை செய்வதற்காகத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சித் துறை தொடர்ந்து விவாதங்களை நடத்தி வருகிறது. குறைந்த அளவுக்கு உற்பத்தித் திறனைப் பயன்படுத்துவது, திட்டங்களை செயல்படுத்துவதில் உள்ள கஷ்டங்கள், சிறு மற்றும் நடுத்தரத்தொழில்களுக்கு பாங்கு உதவி, நெசவுத் தொழிலில் உள்ள குறைகளைப் போக்குவது போன்றவை மறுபரிசீலனைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளன. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கைத்தறி நெசவாளர்கள் பயனடைவதை 30 சதவிகிதத்திலிருந்து 60 சதவிகிதத்திற்கு உயர்த்துவதும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. ஏற்றுமதி அடிப்படையிலான தொழில் உற்பத்தி, கைத்தறி நெசவாளர்களுக்கான விற்பனைத் திட்டம், சுமார் 10 ஆயிரம் நெசவாளர்களுக்கான தீவிர அபிவிருத்தித் திட்டம் போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும் ஆராயப்படுகிறது. சிறு தோல் பதனிடுவோர் பலர் தமிழ் நாட்டில் உள்ளதால், ஈ.ஐ. ரக பதனத் தோல் ஏற்றுமதியில் உள்ள தடைகள் பற்றியும் அரசு மறுபரிசீலனை செய்து வருகிறது. கைவினைஞர்களுக்கு கச்சாப் பொருட்கள் வழங்குவதுபற்றியும் ஆராயப்பட்டு வருகிறது.

கைவினைஞர்களுக்குக் குறித்த காலத்தில் போதுமான அளவு கச்சாப் பொருட்கள் கிடைக்க வகை செய்வதற்காகத் தொழில் வர்த்தகத்துறைகளின் மண்டல இயக்குநர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் இனி விரைவில் விண்ணப்ப நமூனுக்களைப் பரிசீலனை செய்வார்கள்.

தமிழ் நாட்டில் மின்சக்தி உற்பத்தியில் மேம்பாடு காண்பதற்காகத் தனி அக்கறை காட்டப்பட்டு வருகிறது. நாள்தோறும் 2.5—2.6 கோடி யூனிட் மின்சக்தி தேவைப்படுகிறது. இதை மாநில மின் வாரியம் தற்போது முழுமையாகச் சமாளித்து வருகிறது.

தொழில் வளர்ச்சிக்கான தலைமை இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த 3 அலுவலர்கள் கொண்ட குழு ஒன்று, மாநிலத்தில் தொழில்துறை முயற்சிகள் பற்றி பொது மதிப்பீடு செய்யவும், விரைவில் திட்டங்களை செயல்படுத்தித் தேவைப்படும் நிதி உதவி அளவு பற்றித் தெரிந்து கொள்வதற்காகவும் மாநில அரசு, வர்த்தகத் தொழில்துறை ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தியது.

உற்பத்தித் திறனை அதிகபட்ச அளவுக்குப் பயன்படுத்தி, தேவைப்பட்ட துறைகளில் உற்பத்தித் திறனை விரைவில் அதிகரித்துக் கொள்ளவும், இறக்குமதி ஏற்றுமதி தொழில் லைசென்சு நெறிமுறை பற்றி ஆராயவும், தொழில்நுட்பத் தகவல் அமைப்பு, புள்ளி விவர பாங்கு ஆகியவற்றை ஏற்படுத்தி மாநில அரசை வலுப்படுத்துவதில் உள்ள பிரச்னைகளை ஆராயவும், மின்சக்தி தேவை, மின்வெட்டு ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் தொழில்களுக்கு முன்னுரிமை அளிப்பது, தொழில்கள் துவங்குவதற்கான முன் அனுமதிப் பத்திரங்கள் வழங்குவது மற்றும் குறித்த நேரத்தில் தொழில் திட்டங்களைச் செயல்படுத்துவதில் உதவுவதைச் சிறந்த முறையில் கண்காணிக்க மத்திய—மாநில அரசு தொடர்பு முறைபற்றியும், சிறு தொழிற்சாலைகள் நடுத்தரத் தொழிற்சாலைகள் பெரிய தொழிற்சாலைகளுக்கிடையே ஒருங்கிணைப்பை மேலும் ஏற்படுத்துவது போன்றவைகளைத் தமிழ் நாடு மாநில அரசின் ஒத்துழைப்போடு ஆராயச் செயற் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

''மக்கட் தொகையை வைத்தோ, நிலப் பரப்பை வைத்தோ ஒரு நாட்டின் தரத்தை எடை போடுவதில்லை. அந்த நாட்டின் இலட்சியங்களும், கொள்கைகளும், ஆக்க முயற்சிகளும் எவ்வளவு உயர்ந்தவையாயிருக்கின்றன என்பதுதான் முக்கியம்.''

—இந்திரா காந்தி

நிழல்



பட்டுக்கோட்டை குமாரவேல்

9

போனை எடுத்துப் பேசிய புண்ணியகோடி மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தார். காரணம் அவருக்குத் தேவையான தகவலை, சி.ஐ.டி. சிவானந்தம் போனில் தெரிவித்தார்.

சம்பந்தி கருணாகரனின் வீட்டிற்கு வந்திருக்கும் சுந்தரபாண்டியனும், கருணாகரனும் பேசிய பேச்சில் சில தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் அந்தப் பேச்சை டேப் ரிகார்டரில் பதிவு செய்திருப்பதாகவும் சிவானந்தம் சொன்னார்.

சிவானந்தத்தை உடனே வரவழைத்தார்; அந்த டேப் ரிகார்டரைக் கொண்டு வரச்செய்து இயக்கினார். டேப்ரிகார்டர் பேசத் தொடங்கியது. கருணாகரனின் குரலும், சுந்தரபாண்டியன் குரலும் ஒலித்தன.

''சுந்தரபாண்டியன்! சதா நீங்கள் கண்ணீர் விடுவதால் இறந்துபோன உங்கள் மகன் திரும்பி வந்துவிடுவானா? பிறப்பைப் போலவே இறப்பும்! நடந்ததை மறந்துவிடுங்கள்.''

''என் மகனை நானே கொன்றதை எண்ணும்போது நான் வருந்தாமல் இருக்க முடியுமா கருணாகரன்!''

''என்ன? உங்கள் மகனை நீங்களே கொன்றீர்களா! எனக்கு விளங்கவில்லையே உங்கள் பேச்சு!''

''அதாவது நான் செய்த தீமைகள்-அவனைக் கொன்று விட்டன''.

''அப்படித் தாங்கள் நினைத்து வருந்தும் அளவுக்கு யாருக்குத் தீமை செய்தீர்கள்? யாருக்குச் செய்த தீமை உங்கள் மகனின் உயிரைக் குடித்துவிட்டது என்று எண்ணுகிறீர்கள்?''

''நான் கள்ளக் கடத்தல் செய்துவந்தபோது எனக்கு உதவி செய்து வந்த நாகசாமியின் மகன் மனோகரனை''.

"மனோகரனைக் கொலை செய்யக் காரணம்?"

"வைர வியாபாரி ஒருவனை வஞ்சகமாக அழைத்து வந்து அவனைக் குடிபோதையில் மயக்கி அவனிடமுள்ள வைரங்களை அபகரிக்க எண்ணினேன். ஆனால், குடிவெறி அவன் உயிரையே குடித்துவிட்டது. முதலில் பயந்தேன். அவன் வைத்திருந்த வைரக் கற்களை என் கைகளால் எடுத்துப் பார்த்த பிறகு, யாருக்கும் தெரியாமல் அவனை எங்காவது புதைத்துவிடத் துடித்தேன். திண்டாடினேன். மனப் பயம் என் உள்ளத்தை ஆட்கொண்டுவிட்டதால் என் முகம் பேயறைந்த முகமாகிவிட்டது. உடல் நடுக்கத்தோடு உள்ளத் துடிப்போடு நின்ற என் முன்னால் நாகசாமியின் மகன் மனோகரன் வந்து நின்றான்.

"அந்த வைர வியாபாரி குடிபோதையால் சவமாகிவிட்டான் என்று தெரியாத மனோகரன், நான் விஷமிட்டுக் கொன்றுவிட்டதாக நினைத்து விட்டான். அவன் நினைத்ததை என்னிடமே கேட்டுவிட்டான். "என்ன முதலாளி அவரை அநியாயமா விஷமிட்டுக் கொன்னுட்டீங்களே" என்று என்னையே கேட்டான்.

"உடனே பயந்தவனைப் போல நடித்தேன். அணைத்துப் பேசி அவன் உதவியை நாடினேன். சவமாகக் கிடந்த வைர வியாபாரியை என் வீட்டுக் கொல்லையிலேயே புதைத்துவிட மனோகரனையே குழி வெட்டச் சொன்னேன். அவன் என் வார்த்தைகளை நம்பினான். புதைகுழியும் தோண்டினான். இருவருமாகச் சேர்ந்து அவன் தோண்டிய சவக்குழிக்குள் அந்த வைரவியாபாரியின் உடலைக் குனிந்து வைத்தோம். குழிக்குள் வைத்த வியாபாரியின் உடல் மீது மண்வெட்டியால் மண்ணைத் தள்ளிக் கொண்டிருந்தான் மனோகரன்."

"என் முன்னால் என்னைக் குற்றவாளி என்று சொன்ன முதல் மனிதனான மனோகரன் என்றைக்காவது ஒருநாள் என்னைக் காட்டிக் கொடுத்துவிடுவான் என்று என் மனம் தீர்மானித்தது. அடுத்த வினாடியே என் மடியிலிருந்த பிச்சுவாவினால் மண்ணைக் தள்ளிக் கொண்டிருந்த மனோகரன் முதுகில் குத்தினேன். பிச்சுவாவில் தோய்ந்திருந்த விஷம் அவன் உயிரை உடனே குடித்துவிட்டது. அவன் வெட்டிய சவக்குழிக்குள் சவமாக விழுந்தான். அவன் தோண்டிய மண்ணாலேயே அவன் சடலத்தையும் மூடிவிட்டேன். இருவர் சடலங்களையும் புதைத்த இடம் தெரியாமல் இருக்க அந்த இடத்தில் இரண்டு தென்னங் கன்றுகளைப் பெயர்த்தெடுத்து நட்டு வைத்தேன். இன்று அது பெரிய மரமாகி நிற்கிறது."

"இவ்வளவு ரகசியமாக திறமையாகச் செய்த காரியம் மனோகரனின் தந்தைக்கு எப்படித் தெரிந்தது?"

"கன்றைப் பிரிந்த தாய்ப்பசுவின் துடிப்பு அவன் தாயிடமிருந்தது. அவளின் பாசத் துடிப்பு நான்தான் குற்றவாளி என்று காட்டிக் கொடுத்துவிட்டது. என் பங்களாவிற்குச் சென்ற மனோகரன், வீடு திரும்பவில்லை என்று எனது கள்ளத்தோணியை ஓட்டும் அவள் கணவன் நாகசாமியிடம் சொன்னாள். காலைச் சுற்றின பாம்புபோல என்னைச் சுற்றிக் கொண்டிருந்தான் நாகசாமி. அந்தப் பாம்பு என்றாவது ஒருநாள் கடிக்காமல் விடாது என்று எண்ணி அவனை என் கையாட்களை விட்டு அடித்துக் காட்டுவிலங்குகளுக்கு இரையாக்கும்படி சொன்னேன். அன்று இரவு அடித்துக்காட்டில் போட்டுவிட்டோம் என்றார்கள். பொழுது விடிந்து நான் போய்ப்பார்த்த பொழுது அவனது எலும்புகூடக் கிடைக்கவில்லை. அப்படி அடிபட்ட நாகசாமி, அடிபட்ட நாகமென எங்கோ மறைந்து விட்டான். என்றைக்காவது ஒரு நாள் அந்த நாகசாமி படமெடுத்த நாகமாக என்னைக் கொத்திக் கொல்வான் என்ற பயம் என் இதயத்துடிப்பை அடிக்கடி அதிகப் படுத்திக் கொண்டே இருக்கிறது. நான் அவன் மகனைக் கொன்றேன். அதனால் அவன்தான் என் மகனைக் கொன்று பழிதீர்த்துக் கொண்டிருப்பானோ என்று நினைக்கிறேன்."

சுந்தரபாண்டியனின் மனப் போராட்டத்தையும் வாழ்க்கைச் சுமைகளையும் பதிவு செய்யப்பட்ட டேப்பிலிருந்து கேட்டார் இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி.

தன்னைப் பழிக்குப் பழி தீர்த்துக் கொண்டிருப்பான் என்று சுந்தரபாண்டியன் நம்பும் நாகசாமி உயிரோடு இருக்கிறானா? எங்கிருக்கிறான்? எப்படி வாழ்கிறான்? எப்படி வந்து பழிதீர்த்துக் கொண்டான்? புண்ணியகோடியின் சிந்தனைக் குதிரை மீண்டும் புலன் விசாரணை செய்யப்புறப்பட்டு விட்டது.

நாகசாமி எங்கோ மாயமானாக வேறொரு நிழலாக வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும் என்று பட்டது. கையிலிருந்த சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தார். மறு வினாடி, தன் மேஜை டிராயரைத் திறந்தார்.

உள்ளே இருந்த மரகதம், மாரிசாமி, மேகநாதன் ஆகியோரின் புகைப்படங்களை எல்லாம் எடுத்துக் கண்ணோட்டம் விட்டார். மரகதத்தின் புகைப் படத்திற்கும், அவர் பங்களா வேலையாள் மாரிசாமியின் புகைப் படத்திற்குமுள்ள ஒற்றுமைகளைப் பார்த்த புண்ணியகோடி தன் பையிலிருந்த பேனாவை எடுத்து மாரிசாமியின் உருவத்தைப் பெண்ணுருவமாக்கிப் பார்த்தார். ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைந்த புண்ணியகோடி சப்-இன்ஸ்பெக்டர் ரவியை அழைத்து அந்தப் படத்தைக் காட்டினார்.

ச்ப்-இன்ஸ்பெக்டர் ரவிக்கு ஒரே குழப்பம். மேகநாதன் பங்களாவில் நடக்கும் கொலைகளை மாரிசாமி மரகதமாகிக் கொலை செய்திருக்க வேண்டும். அல்லது மேகநாதனும், அவன் தாய் மங்களமும் கொடுத்த வாக்கு மூலப்படி மரகதம் கொலை செய்வதைக் கலையாக நினைத்து இத்தனை கொலைகளையும் செய்து வந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். கொலைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்க பலத்த கண்காணிப்புடன் அதே பங்களாவில் ஒரு புது மணத்தம்பதிகளுக்கு வரவேற்பும் முதலிரவும் நடந்தது. அன்றைய தினம் எந்தக் குற்றமும் நடக்கவில்லை. எந்தக் கொலை முயற்சியும், நடக்கவில்லை. புண்ணியகோடிக்கும் ரவிக்கும் மீண்டும் குழப்பமாக இருந்தது. அதனால் மறுநாள் சந்தித்துப் பேசுவதாக முடிவு செய்து பிரிந்தனர்;

அயல்நாடுகளுக்கு ஆயத்த ஆட்டுத்தோல்!

இந்தியாவிலிருந்து சோவியத் நாடு ஆண்டுதோறும் 8 கோடி ரூபாய் மதிப்புள்ள ஆட்டுத் தோலை இறக்குமதி செய்கிறது. இந்தியாவிலிருந்து அதிகப்படியான ஆட்டுத் தோலை இறக்குமதி செய்யும் நாடு சோவியத் நாடுதான்.

வட ஆர்க்காடு மாவட்டம் ஆம்பூர் அருகே சோலூரில், ஆட்டுத் தோலைப் பதப்படுத்தி ஆயத்த நிலையில் தருகிற தனியார் தோல் நிறுவனத் தொடக்க விழா ஒன்றில் கலந்து கொண்ட சோவியத் நாட்டுத் தோல் நிறுவன அமைப்பைச் சேர்ந்த 'விக்டர் மிச்சிலோவிச் இவானோவ்' இத்தகவலைக் கூறினார்.

சோலூரில் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள இப்புதிய நிறுவனத்திற்குத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ரூ. 30 இலட்சம் முதலீடு செய்துள்ளது. கடந்த இரண்டாண்டுகளில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 60 புதிய தொழில்களுக்கு முதலீடு வழங்கியுள்ளது.

* * *

மாரிசாமி யார்? அவன் சொந்த ஊர் எது? அவன் உற்றார் உறவினர் யார்? மனைவி மக்கள் எங்கே? மீண்டும் புண்ணியகோடி புலன் விசாரணையில் இறங்கினார்.

தான் யூகித்து வைத்ததை சப்-இன்ஸ்பெக்டர் ரவியிடம் சொல்லத் தொடங்கினார் புண்ணியகோடி.

மரகதத்தின் மீது மேகநாதனும், அவர் தாய் மங்களமும் பழி சுமத்தி அவளுக்கு தண்டனை வாங்கிக் கொடுத்து அவளை ஒழித்துக் கட்டத் திட்டமிடுகிறார்கள். காரணம் மரகதத்திற்கு அவள் தந்தை எழுதி வைத்திருக்கும் உயில்தான். மரகதத்தைப் பகடைக்காயாக்கி இருவரும் இஷ்டம்போல ஆட்டிப் படைத்து அனுபவிக்க நினைத்தார்கள். ஆனால் அது நடக்கவில்லை. தன் நிலை உணர்ந்த மரகதம் அவள் தந்தைக்கு உதவியாக இருந்த மாரிசாமியோடு எச்சரிக்கையாக இருந்துவிட்டாள்.

மாரிசாமிக்கு வயதாகி விட்டாலும் பலமுள்ள முரடன்; உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்கும் நல்ல பண்புள்ளவன். தந்தையாக, தாயாக, ஆசானாக, தோழனாக, நன்றியுள்ள வேலைக்காரனாக இருந்து மரகதத்தைக் காத்து வருபவன். மரகதத்தைக் கொன்றுவிட்டால் அத்தனை சொத்துக்களும் தனதாகிவிடும், மறுமணம் செய்து மகிழ்ச்சியாக வாழலாம் என்று எத்தனையோ தடவைகளில் மரகதத்தைக் கணவன் மேகநாதனும், அவன் தாய் அதாவது மரகதத்தின் அத்தை மங்களமும் விஷமிட்டுக் கொன்றுவிட முயற்சித்தார்கள். எதிரிகளை உண்டாக்கினர்.

நன்றியுள்ள நாயாக அந்த பங்களாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் மாரிசாமியின் மனம் அவர்களைப் பார்த்துக் குமுறிக் கொந்தளித்தது. பொங்கி எழும் கடல் அலையும், மரங்களை அடித்து வரும் வெள்ளமும் ஊரையே அழித்து விடுவது போல, மங்களமும் மேகநாதனும் போடும் திட்டங்கள் மரகதத்தின் வாழ்வை மட்டுமல்ல, உயிரையே குடித்து விடும் என்று நினைத்துத் தவித்தான். மரகதத்தின் நிழலாக நின்று அவள் உயிரை, உடைமைகளை, உரிமைகளைக் காத்தான் மாரிசாமி. அவன் தவிப்பையும் அவனது மனக்குமுறலையும், அவனது முகமாற்றத்தையும் கண்ட மரகதம் காரணம் கேட்டாள்.

குற்றவாளிகளைக் காட்டிக் கொடுக்கும் துப்பறியும் நாய் போல அந்த பங்களாவில் மங்களமும் மேகநாதனும் போடும் திட்டங்களையும், நடத்தும் கூத்துக்களையும், அடிக்கும் கொள்ளைகளையும் மரகதத்திற்குக் கையும் களவுமாகக் காட்டிக் கொடுத்தான். மரகதம் குமுறும் எரிமலையாகி விட்டாள். தொட்டால் சுடும் நீறு பூத்த நெருப்பானாள்.

கணவனுக்கு அடங்கிய மனைவியாக, குடும்பக் கட்டுப்பாட்டிற்குள் வாழும் பண்புள்ள பெண்ணாக வாழ நினைத்த மரகதத்தை அவர்கள் இருவருடைய செயல் சர்வாதிகாரியாக்கி விட்டது. கல்மனம் கொண்டு அவர்கள் இருவரையும் உண்டு உறங்கும் ஜடமாக ஆக்கிவிட்டாள்.

உல்லாசப் பறவையாக வாழ முடியாத மேகநாதனும், அதிகாரமும் அட்டகாசமும் செய்ய முடியாமல் கட்டுப் பெட்டியாகி விட்ட மங்களமும் சந்தர்ப்பவாதிகளாக நம்மிடம் வந்து மரகதத்தைப் பற்றிக் குற்றம் சொல்கிறார்கள் என்று புண்ணியகோடி விளக்கமாகச் சொன்னார்.

மேகநாதன் குடும்பத்தைப் பற்றி இன்ஸ்பெக்டர் புண்ணியகோடிக்கு இவ்வளவு தெரியும் என்று ரவி எதிர்பார்க்கவில்லை.

"ஆவி, உலகம், பேய், பிசாசு இரத்தக் காட்டேரி என்று சொல்வதெல்லாம் உலக வாழ்வில் உண்மைதானா" என்று புண்ணியகோடியிடம் கேட்டார் ரவி.

"எல்லாம் பொய்! பாமரர்களையும், உழைப்பாளிகளையும் ஏமாற்ற உயர்ந்தவர்களும், சோம்பேறிகளும் செய்து வைத்த சதி."

"மேகநாதனின் பங்களாவில் நடந்த கொலைகளை யார் செய்தார்கள்? விநாயகத்தைக் கொலை செய்தது யார்!" சப்-இன்ஸ்பெக்டர் ரவி கேட்டார்.

"நாளை என் முடிவைத் தங்களுக்குப் போனில் சொல்லுகிறேன். அதன்படி முடிவு செய்யுங்கள்" என்றார் இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி. சப்-இன்ஸ்பெக்டர் ரவியும் விடைபெற்றுக் கொண்டார்.

மறு நாள் பொழுது விடிந்ததும் டெலிபோன் ஒலித்தது. ரவி ரிசீவரைக் கையில் எடுத்தார்.

"இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி பேசுகிறேன். மரகதத்தை உடனே கைது செய்துவரப் புறப்படுங்கள். நானும் அங்கு வந்து கொண்டிருக்கிறேன்."

"உத்தரவு. இப்பொழுதே புறப்படுகிறேன்." ரிசீவரைக் கீழே வைத்த ரவி, ஜீப்பில் சில காவலர்களுடன் புறப்பட்டார்.

கோவையில் இருந்து புறப்பட்ட போலீஸ் ஜீப் ஊட்டியிலுள்ள மரகதத்தம்மாளின் வீட்டில் போய் நின்றது.

ஜீப்பிலிருந்து இறங்கிய ரவி மரகதம் பங்களாவின் கதவில் இருந்த விசைப் பொத்தானை அழுத்தினார்.

மரகதம் கதவைத் திறந்தாள்.

"விநாயகத்தைக் கொலை செய்த குற்றத்திற்காக குற்ற இலாகா உங்களைக் கைது செய்ய உத்தரவிட்டிருக்கிறது. நான் உங்களைக் கைது செய்கிறேன்" என்று சொல்லி முடிப்பதற்குள் மரகதத்தின் நிழலாக அவளைப் போன்ற மறு உருவம் அவள் பின்னால் வந்து நின்றது.

சப்-இன்ஸ்பெக்டர் ரவி திகைத்தார்.

ரவியின் திகைப்பைப் பார்த்து மரகதம் பின்னால் திரும்பினாள். திகைத்தாள், திடுக்கிட்டாள். தன் உருவத்தைக் கண்ணாடியில் பார்ப்பது போலத் தன் எதிரே நின்ற உருவத்தைப் பார்த்தாள். மரகதத்திற்கு உலகமே சுற்றுவது போலத் தெரிந்தது. எதிரே நின்ற உருவத்தைப் பார்த்த

கண்கள் அப்படியே மூடிக் கொண்டன. மயங்கி விழுந்தாள் மரகதம்.

"சப்-இன்ஸ்பெக்டர் ரவியின் மூளை குழம்பியது. தெளிவடைய முடியாமல் திகைக்கும்போது இன்ஸ்பெக்டர் புண்ணியகோடியின் 'ஜீப்' மரகதத்தின் பங்களாவின் முன்னால் வந்து நின்றது.

"நான்தான் மரகதம்! என்னைக் கைது செய்யுங்கள்" என்றது மரகதத்தின் மறு உருவம்.

யார் உண்மையான மரகதம்? மயங்கி விழுந்தவளா அல்லது எதிரே நிற்பவளா? ஏன்ா, ரவி திகைத்து நின்று, இன்ஸ்பெக்டர் புண்ணிய கோடியைப் பார்த்தார்.

மயங்கி விழுந்து கிடந்த மரகதத்தின் முகத்தில் தண்ணீர் தெளிக்கச்சொல்லிவிட்டு அவளைப் போன்று நிழலுருவாக நிற்கும் மரகதத்தைக் கைது செய்யச் சொன்னார் புண்ணியகோடி.

"யார் நீ?" என்று துப்பாக்கியை அவள் முன் நீட்டினார் புண்ணியகோடி.

மரகதத்தின் நிழலாக மாயமாய் மரகதமாய் நின்ற உருவம் தன் வேஷத்தைக் கலைத்தது.

இன்ஸ்பெக்டர் புண்ணியகோடியும், சப்-இன்ஸ்பெக்டர் ரவியும் திகைத்தார்கள். அவர்கள் எதிரே நின்றது மரகதத்தின் வேலையாள் மாரிசாமி.

"மாரிசாமி, நீயா!"

"நான் மாரிசாமி அல்ல. என் உண்மைப் பெயர் நாகசாமி. வேதாரண்யம் சுந்தர பாண்டியன் மகன் விநாயகத்தை நான்தான் கொலை செய்தேன். என் ஒரே மகன் மனோகரனின் உயிரைக் குடித்த சுந்தர பாண்டியனுடைய மகன் விநாயகத்தின் உயிரைக் குடித்துப் பழிக்குப் பழி தீர்த்துக் கொண்டேன்."

"நீதான் உண்மையான நாகசாமி என்பதற்கு என்ன ஆதாரம்?"

"இதோ! என் பெயர்" என்று, இடது கையை நீட்டினான் நாகசாமி. நாகசாமி என்ற பெயர் பச்சை குத்தப்பட்டிருந்தது."

"நாகசாமியான நீதான் மாரிசாமியாக மரகதம் வீட்டில் இருக்கிறாய் என்று சுந்தர பாண்டியனுக்கும், மேகநாதனின் நண்பர் கருணாகரனுக்கும் தெரியுமா?"

"தெரியாது"

"என் மகன் மனோகரன் எங்கே? நீதான் அவனைக் கொன்று விட்டாய் என்று நான் சுந்தர பாண்டியன் வீட்டில் சென்று கூச்சலிட்டுக் குற்றம் சாட்டிக் கூட்டத்தைக் கூட்டினேன். அன்று இரவே என்னை அவர் தன் வேலையாட்களிடம் சொல்லி அடித்துக் கொன்று விடச் சொன்னார்.

"காணாமல் போன என் மகன் மனோகரனைக் காட்டுவதாக வேதாரண்யம் காட்டிற்குள் அழைத்துப் போனார்கள். பெற்ற பிள்ளையின் பாசத்தால் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றேன். காட்டுக்குள் இருக்கும் காளிகோவிலுக்குள் என் மகன் இருக்கிறான் என்று உள்ளே நுழைந்தேன். காளிக்கு என்னையே பலியிடப் போவதாக என்னைச் சுற்றிக் கொண்டார்கள். தப்பி ஓடினேன். துரத்தித் துரத்தி அடித்தார்கள். வெட்டினார்கள். ஈட்டிகளால் குத்தினார்கள். ரத்த வெள்ளத்தில் மிதந்த நான் மூர்ச்சையானேன். — என் உடலிலிருந்து உயிர் பிரிந்து விட்டதாக நினைத்துக் காட்டு மிருகங்களுக்கு இரையாகட்டும் என்று போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள்.

தமிழ்நாட்டில் 16 புதிய கம்பெனிகள்!

தமிழ்நாட்டில் பிப்ரவரி மாதத்தில் 10 கோடி ரூபாய் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத் தொகை கொண்ட அரசுக் கம்பெனி ஒன்றும், 73 இலட்சம் ரூபாய் மொத்த அங்கீகரிக்கப்பட்ட மூலதனத் தொகை கொண்ட 15 தனியார் கம்பெனிகளும் பதிவு செய்யப்பட்டன.

பிப்ரவரி மாதத்தில் தவறிழைத்த கம்பெனிகள், கம்பெனி அதிகாரிகளுக்கு எதிராக 130 வழக்குகள் தொடுக்கப்பட்டன. வழக்குகளில் சம்பந்தப்பட்ட கம்பெனிகள், கம்பெனி அதிகாரிகளுக்கு மொத்தம் 12,975 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டு 82 வழக்குகள் முடிவு செய்யப்பட்டன.

"பொழுது விடிந்தது. என் உடம்பிலிருந்து பிரிந்துவிட இருந்த உயிரும் பிழைத்தது. பகல் முழுவதும் மறைந்து இருந்து, இரவு வந்ததும் இரயில் ஏறிக் கோவைக்கு வந்துவிட்டேன்.

"சிகிச்சைக்காக மருத்துவமனைக்குச் சென்றபோது மரகதத்தின் தந்தை மருதநாயகத்தைச் சந்தித்தேன். என் நிலை கண்டு கலங்கினார். இந்த நிலைக்கான காரணம் கேட்டார். என்னை மறைத்துக் கொள்ள நடந்ததை மனத்திற்குள் ஆழப்புதைத்துவிட்டு 'நான் யாருமற்ற அனாதை; டிக்கெட் பரிசோதகரிடம் இருந்து தப்பிக்க, ஓடும் இரயிலிலிருந்து அடுத்த பெட்டிக்குத் தாவினேன்; தவறி விழுந்து விட்டேன்' என்று சொன்னேன். என் பெயரையே மாரிசாமி என மாற்றியும் சொன்னேன்.

"அவர் நல்லவர். என் சொல்லை நம்பினார். என் தந்தையாக, தாயாக, நண்பனாக அவர் வீட்டிற்கு அழைத்துப்போய் சிகிச்சையளித்தார். உடல் நலமான நான் அங்கேயே தங்கிவிட்டேன். அப்போது மரகதம் சிறு குழந்தை தாயில்லாத பிள்ளை. மனைவி இறந்த அதிர்ச்சியால் மரகதத்தின் தந்தையும் இறந்துவிட்டார். மங்களத்தம்மாள் தாயாக நடிக்க வந்தாள். நான் மரகதத்தை உயிராக நினைத்து அவள் நிழலாகத் துணையிருந்தேன்."

"நீ கோவைக்கு வந்த பிறகு சுந்தரபாண்டியனைச் சந்திக்கவே இல்லையா?"

"நான் அவரைக் கோவையில் சந்தித்த பிறகு தான் விநாயகத்தைக் கொன்று பழிக்குப் பழி தீர்த்துக் கொள்ளத் திட்டமிட்டேன். சுந்தரபாண்டியனின் நண்பர் கருணாகரன், கோவைத் தொழிலதிபர் என்று தெரிந்த நான், குறுகிய காலத்தில் பணம் சேர்க்கத் துடித்துக் கொண்டிருந்த மேகநாதனைப் பயன்படுத்தினேன். கருணாகரனை நண்பனாக்கிக் கொள்ளச் சொன்னேன். இருவரும் நண்பர்களானார்கள்.



"சுந்தரபாண்டியனும், கருணாகரனும் சம்பந்தியாகப் போகும் செய்தி, பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலிருந்தது எனக்கு.

"திருமண ஊர்வலத்தில் சுந்தரபாண்டியன் மகன் விநாயகத்தைக் கொல்ல வெடிவைத்தேன். தப்பித்துக் கொண்டான் விநாயகம். அதன்பிறகுதான் முதலிரவன்று நான் ஆசைதீர விநாயகத்தைக் கொன்று பழிக்குப் பழி தீர்த்துக் கொண்டேன்" என்று ஆவேசமாகச் சொன்னான் நாகசாமி.

"அப்படியென்றால் இதற்கு முன் இங்கு நடந்த கொலைகளும், விநாயகம் கொலை நடந்த பிறகு செய்த கொலை முயற்சிகளும்.....

"நான் செய்ததல்ல....கொலை செய்தவர் யார், எதற்காகக் கொலை செய்கிறார்கள் என்று நான் ஒருநாள்கூடக் கவலைப் பட்டதில்லை.

"அப்படியென்றால் நீ மேகநாதனின் மனைவி மரகதம்போல் வேஷமிடக் காரணம்?" இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி கேட்டார்.

"சுந்தரபாண்டியன் மகன் விநாயகத்தை நானே கொலை செய்ய வேண்டும். என் மகனைப் போல அவன் மகனும் இமைப் பொழுதில் உயிர் விட வேண்டும் என்று எண்ணினேன். துப்பறியும் கதைகள் பலபடித்துத் திட்டமிட்டேன். பட்டப் படிப்பு படித்த மரகதத்தம்மாளும் பத்திரிகைகளில் வரும் திடுக்கிடும் கொலை, கொள்ளைகளைப் பற்றிப் படித்துச்சொல்வார்கள். ஆண்கள் பெண்ணுருவில் செய்து வரும் கொலைகளைப் பற்றி நானே படித்தேன். மரகதத்தம்மாளின் ஆடைகளை நானே உடுத்திக் கொண்டு கண்ணாடி முன் ஒரு நாள் நின்றேன். மரகதத்தம்மாளே என் எதிரே நின்றார்கள். திகைத்தேன். திட்டமிட்டேன். விநாயகத்தின் முதலிரவன்று இதே உடையில் சென்று, கொன்று வெற்றி கண்டேன்."

"நீ இரண்டாவதாகச் செய்த கொலை முயற்சிக்குக் காரணம்?" இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி கேட்டார்.

"மது, மங்கை, கொலை, கொள்ளை இவைகளில் பழக்கமாகிவிட்ட மனித மனம், சந்தர்ப்பங்கள் சுலபமாகக் கிடைக்கும் போது சும்மா இருக்குமா? தீமைகளை நினைத்து நினைத்துத் திட்டமிட்டு வந்த நான் தீயவனாகவே மாறிவிட்டேன். இதே உடையில் விநாயகத்தைக் கொன்று வெற்றி கண்ட என் கைகள் அடுத்து வந்த திருமணத் தம்பதிகளைக் கொல்லத் துடித்தன. திட்டமிட்டேன். ஆனால் அந்தத் திருமணக் கோஷ்டி சப்-இன்ஸ்பெக்டர் ரவி திட்டமிட்டுத் தயாரித்தது என்று எனக்குத் தெரியாது. எச்சரிக்கையாக இருந்து சப்-இன்ஸ்பெக்டர் என்னைப் பிடித்துவிடப் போராடினார். அவருடன் போராடித் தப்பித்து விட்டேன். மரகதத்தம்மாளை விட்டு ஏன் அந்த ஊரை விட்டே ஓடிவிடத் திட்டமிட்டேன்.

வேலைவாய்ப்புக் குறித்துத் தகவல் அளிக்கும் வார ஏடு!

நாட்டில் வேலைவாய்ப்பு பற்றிய எல்லாத் தகவல்களையும் எடுத்துக் கூறும் விதத்தில் மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் விளம்பரக்காட்சிப் பிரச்சாரப் பிரிவு ஏப்ரல் 3-ஆம் தேதி முதல், வார மலர் ஒன்றை ஆங்கிலத்திலும் இந்தியிலும் வெளியிடும்.

மத்திய அரசு, அரசுத் துறை நிறுவனங்கள், சுய சேவைக்கார்ப்பொரேஷன்கள் போன்றவற்றில் உள்ள காலிப்பதவி இடங்கள் பற்றிய எல்லாத் தகவல்களையும் இந்த ஏட்டிலும் காணலாம்.

மத்திய அரசு ஊழியர் தேர்வுக் கமிஷன், மத்திய வேலை தேடி தரும் அலுவலகம் ஆகியவை தெரிவிக்கும் எல்லாக் காலி இடங்கள் பற்றிய தகவல்களையும இந்த வார ஏட்டில் பார்க்கலாம்.

"மரகதத்தம்மாளின் உடையில் என்னைப் பார்த்து விட்ட சப் இன்ஸ்பெக்டர் மரகதம்தான் குற்றவாளி, கொலைகாரி என்று உங்களிடம் வலியுறுத்தி வந்தார். பழி ஒருபுறம் பாவம் ஒருபுறம் நேரிட்டுவிடக் கூடாதே என்று நீங்கள் அவர்களைக் கைது செய்ய வரும் நாளை எதிர்பார்த்து அவர்கள் நிழலாக இருந்தேன். இத்தனை நாட்கள் எதிர்பார்த்து என் கடமையை முடித்துவிட்டேன்.

"நான் இத்தனை ஆண்டுகள் பொறுத்திருந்த காரியமும் முடிந்துவிட்டது. என் ஆன்மா இனிமேல் நிம்மதியடையும். என்னைக் கைது செய்யுங்கள்" என்று கைகளை நீட்டினான் நாகசாமி."

சப்-இன்ஸ்பெக்டர் ரவி நாகசாமியின் கையில் விலங்கைப் பூட்டினார்.

"தன் மகன் மனோகரனை சுந்தரபாண்டியன் கொன்று விட்டார் என்ற காரணத்திற்காகக் கொலை செய்யப்பட்ட மனோகரனின் தந்தை நாகசாமி பல வருடங்கள் காத்திருந்து சுந்தரபாண்டியன் மகன் விநாயகத்தைக் கொன்று பழி தீர்த்துக் கொண்டான். மேகநாதன் வீட்டில் மாரிசாமியாக வாழ்ந்து வந்த நாகசாமியை இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி கைது செய்தார்" என்று வந்த பத்திரிகைச் செய்தியைப் படித்தார் கருணாகரன்.

"அடப்பாவி மேகநாதன் வீட்டில் இருந்த மாரிசாமிதான் நாகசாமியா?" என்று கருணாகரன் அதிர்ச்சியடைந்தார்.

"பாவி அவனல்ல கருணாகரன். நான்தான். நான் செய்த குற்றங்கள் என் நிழலாகத் தொடர்ந்து என் மகன் விநாயகத்தின் உயிரைக் குடித்துவிட்டது" என்றார் சுந்தரபாண்டியன்.

"உண்மைதான் தீ வீட்டை மட்டும் எரித்துவிடும்; தீமை அதைச் செய்தவனையும் அழித்துவிடும்! தீயை யார் வேண்டுமானாலும் அழிக்கலாம். தீமையை அவனே அழித்துக் கொள்ள வேண்டும்" என்று கருணாகரன் சொல்லி முடிப்பதற்குள், இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி காவலர்களுடன் ஜீப்பில் வந்து இறங்கினார். அவரை வரவேற்கக் கருணாகரன் எழுந்து நின்றார்.

"மிஸ்டர் சுந்தரபாண்டியன் உங்களைக் கைது செய்ய வந்திருக்கிறேன். நாகசாமியின் மகன் மனோகரனைக் கொன்றது நீங்கள்தான் என்று மிஸ்டர் கருணாகரனிடமே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். இதோ தங்கள் பேச்சுப் பதிவு செய்யப்பட்ட டேப்" என்று கைவிலங்கோடு அருகில் வந்தார் இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி.

புண்ணியகோடியை வரவேற்க எழுந்த சுந்தரபாண்டியன் கருணாகரனைப் பார்த்தபடி சவமாக நாற்காலியில் விழுந்துவிட்டார். ஆமாம், அவர் செய்த தீமை அவர் நிழலாகத் தொடர்ந்து அவர் உயிரையும் குடித்துவிட்டது.

—முற்றும்—



உன்னையே நீ உணர உதவிடும் உயிர்வேதியல்!

"உயிர் வேதியல் என்றால் என்ன ?''

இந்த வினாவுக்குரிய விடையையும், விளக்கத்தையும் சென்னைப் பல்கலைக்கழக மண்டபத்தில் நடந்த 'உயிர்வேதியல் கண்காட்சி' யில் (Biochemistry Exhibition) பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது.

''வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி, ஊனாகி, உயிராகிப் பரந்த உலகத்தில் வாழும் இனங்களின் உயிர்காக்கும் அறிவியல் தானுமாகிச் சிறந்தது உயிர் வேதியலே!''

என்னும் வாசகத்தைப் படித்துவிட்டு மேலும் செல்கிறோம்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் உயிர்வேதியல் துறையில் எம். எஸ்சி, பட்ட மேற்படிப்புப் பயிலும் மாணவ, மாணவியரின் கைவண்ணமே கண்காட்சி முழுவதும் பளிச்சிடுவதைப் பார்க்கிறோம்.

மனித இனத்திற்கு உயிர் வேதியலாரின் பணி என்ன என்பதை விளக்கிடும் வகையில் அமைந்துள்ள இந்த அரிய கண்காட்சி உயிர் வேதியல் உயிரினங்களில் நடைபெறும் பல்வேறு வேதியல் வினைகளை எடுத்துக்காட்டி உயிரினங்கள் உருவாவது எப்படி? வளருவது எப்படி? இனப் பெருக்கமாவது எப்படி? நடத்தையில் ஏற்படும் மாறுதல்கள் என்ன? என்பன போன்றவற்றை விளக்கி நம்மையெல்லாம் வியக்க வைக்கின்றது.

மார்ச் 9-ஆம் தேதி மாலை தொடங்கி இரு நாட்கள் நடந்த இக் கண்காட்சியில் எட்டு வகையான பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவும் மனித உடல் பற்றிய ஒரு கதை சொல்லும் வண்ணம் அமைந்திருந்தது. ஆடவர், மகளிர், பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர் கண்காட்சிக்கு வந்து அறிவியல் விருந்து பெற்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அவர்களோடு முதற் பிரிவுக்குச் செல்கிறோம். அங்கே நாம் அறிந்து கொள்வதென்ன?

ஆயிரத்தில் ஒரு குழந்தை பிறவியிலேயே குறைவுடன்தான் பிறக்கின்றது. இந்த குறை-தாய்ப் பாலிலுள்ள ஏனைய சத்துக்களைச் செரிக்க இயலாத்தன்மையாகவும் இருக்கலாம்.

உதாரணமாக, பாலில் இருவித சர்க்கரை இருக்கின்றது. ஒன்று 'குளுகோஸ்' மற்றது 'கேளக்டோஸ்'. 'கேளக்டோஸ்' சர்க்கரைப் பொருள் 'குளுகோஸாக' மாறுகிறது. இந்த மாற்றுத்தன்மையில் ஒரு குறை ஏற்படலாம். இதனால் பாலிலுள்ள 'கேளக்டோஸ்' சர்க்கரைப் பொருள் இரத்தத்தின் வழியாக மூளைக்குச் சென்று, அங்கு தங்கி திடத்தன்மையை அடைகின்றது. இதனால் குழந்தையின் மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்டு பைத்தியம்போல் ஆகிவிடுகின்றது; சிலசமயங்களில் கண்களில் தேங்கி பார்வையைப் பாதிக்கலாம்; அல்லது ஈரலில் தேங்கி அதையும் பாதிக்கலாம். இதுபோன்ற குழந்தைகள் பைத்தியமாகி, குருடாகி கடைசியில் இறக்கவும் நேரிடலாம். இந்த அவல நிலையைத் தடுக்க இயலுமா? இயலும்!

குழந்தை பிறந்த 15 நாட்களில் இக்குறையை சிறுநீர்ப் பரிசோதனையின் மூலம் கண்டறிந்தால், 'கேளக்டோஸ்' நீக்கப்பட்ட உணவுகளைக் கொடுத்து குழந்தைகளுக்கு நல்வாழ்வு கொடுக்கலாம்.

'பிறந்த குழந்தையின் ஜாதகத்தைக் கணிப்பதைவிட அதன் உடல் நிலையைப் பரிசோதிப்பது தான் நம்முடைய முதல் வேலையாக இருக்க வேண்டும்!' என்கிறார் ஒரு உயிர்வேதியல் பேராசிரியர் சிரித்துக் கொண்டே.

நோய்நொடிக்கு முதல் காரணமே சரியான உணவு இல்லாததுதான். இதை இரண்டாவது பிரிவில் பார்த்துத் தெரிந்து கொள்கிறோம்.

பெரும்பான்மையான குழந்தைகள் குறைபாடின்றி பிறக்கின்றன. ஆனால், ஏழ்மையும் அறியாமையும் அவர்களைச் சரியாக வாழ விடுவதில்லை. காரணம் சத்துணவுப் பற்றாக்குறை! முக்கியமாகப் புரதப் பற்றாக்குறை, நம் நாட்டில் ஐந்து விழுக்காடு குழந்தைகளைப் பாதிக்கின்றது. 'க்வாஸுயோக்கர்' என்று சொல்லப்படுகின்ற ஒரு மந்த நிலையையும், சரியான வளர்ச்சியற்ற உடலையும் உண்டாக்குகின்றது. சத்துணவுகளிலே ஒரு எளிய சத்துணவு ஒன்று உள்ளது. அதுதான் எங்கும் கிடைக்கும் பொட்டுக் கடலை!

ஒரு சில கொழுப்புப் பொருள்களை நாம் நல்ல உணவாகக் கொள்ள முடியாது. ஏன்? அவைகள் சரும நோயினை உண்டாக்குவதேன்? இதனை விளக்கும் குறிப்புகளும், படங்களும் காட்சியில் உள்ளன.

'வைட்டமின்' சத்துக்கள் எந்தெந்தப் பொருள்களில் உள்ளன? அவை குறைவதால் ஏற்படும் குறைபாடுகள் என்ன? என்பன போன்ற விவரங்களையும் நாம் தெரிந்து கொள்கிறோம்.

நியாசின் என்ற வைட்டமினும் அதனை உண்டாக்கும் டிரிப்டோபேன் என்ற அமினோ அமிலமும் எவ்வாறு மூளையைப் பாதிக்கின்றன; இன்னும் பல தொல்லைகளை எவ்வாறு உண்டாக்குகின்றன என்பதையும் சென்னைப் பல்கலைக் கழக உயிர்வேதியல் துறையில் 1950-1962 வரை நடைபெற்ற ஆராய்ச்சி சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றது.

தாதுப் பொருள்களான கால்சியம், பாஸ்பரஸ், சோடியம், அயச்சத்து - முதலானவைகளால் என்ன நன்மை என்பதையும், அவை குறைவதால் என்ன தீமை என்பதையும் காட்சியிலுள்ள படங்கள் விளக்குகின்றன.

வெள்ளைப் பூண்டு சாப்பிட்டால் இரத்த அழுத்த நோய்க்கு நல்லது என்று சிலர் சாப்பிடுவதைப் பார்த்திருக்கிறோம். இதேபோல் பீட்ரூட் (அது சிவப்பாயிருப்பதால்) இரத்த வளத்துக்கு நல்லது என்று அதை அதிகமாகச் சாப்பிடுவார்கள். இதெல்லாம் மூடநம்பிக்கை என்கிறது ஒரு அறிவிப்புப் பலகை.

மனித உடலின் வளர்ச்சிக்கும் வளத்துக்கும் அடிப்படை காரணமாய் இருப்பது சத்துணவேயாகும். பால், முட்டை, மீன், இறைச்சி இந்த நான்கு வகை உணவில் எல்லாவித வைட்டமின்களும் நிறைந்துள்ளன. எனவே, இவற்றை உட்கொள்வது மிகவும் நல்லது என்ற செய்தியையும் நாம் இங்கே தெரிந்து கொள்கிறோம்.

இன்று எங்கணும் மருத்துவமனைகள் உள்ளன. மருத்துவ வசதிகளுக்கும் குறைவில்லை. இவ்வாறு வாய்ப்பும் வசதியும் உள்ள இந்நாளில் நாம் மருத்துவப் பரிசோதனை செய்து கொண்டால் என்ன?

சிறுநீர், மலம், சளி, இரத்தம் முதலானவற்றைப் பரிசோதிப்பதன் மூலம் நம் உடலில் உள்ள குறைபாடுகளைத் தெரிந்து கொள்ளவும்-பிறகு அதனைச் சரி செய்து கொள்ளவும்-சுருக்கமாகச் சொன்னால் மரணத்திலிருந்து விடுபடவும் முடியும் அல்லவா?

நீரிழிவு நோய்

இது மனிதனை சீரழிவுக்குக் கொண்டுபோகும் நோய்களிலே ஒன்று. இந்தச் சீரழிவிலே இருந்து விடுபட சோதனை முறைகளால் சிறுநீரிலுள்ள சர்க்கரையைச் சுலபத்தில் கண்டறியலாம்.

இதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தை இங்கே குறிப்பிடலாம். 1898-ஆம் ஆண்டு பாரீஸ் நகரம் முற்றுகையிடப்பட்ட போது, நகருக்கு உணவு விநியோகம் தடைப்பட்டது. இதனால் அளவான உணவே அனைவருக்கும் கிடைத்தது. அதுபோது டாக்டர் பச்சார்ட் என்பவர் அனைவரின் சிறுநீரையும் சோதித்தார். என்ன விந்தை! நீரிழிவு நோயுள்ள சிலரின் சிறுநீரில்கூட, சர்க்கரைக் காணப்படவில்லை! இதற்குப் பிறகே 'உணவைக் கட்டுப்படுத்தினால் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தலாம்' என்பதனை உலகிற்கு முதல் முதலில் அறிவித்தார் டாக்டர் பச்சார்ட்.

இரத்தத்தில் சர்க்கரையின் அளவை நிர்ணயிப்பது இன்சுலின் என்ற கணைய நீராகும். கணையம் பாதிக்கப்பட்டால் இன்சுலின் அளவு குறைந்து நீரிழிவு நோய் ஏற்படுகின்றது; இதனால் மற்ற நோய்களும் நீரிழிவு நோயினரை எளிதில் ஆட்கொள்ளும். உணவை கட்டுப்படுத்துதல், இன்சுலினைச் செலுத்துதல் ஏனைய நிவாரண முறைகளினால் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தலாம்.

உடலுக்குத் தேவையான அளவுதான் உணவு உட்கொள்ள வேண்டும். சாதாரண வீட்டு வேலையைச் செய்பவர்களைவிட அதிக உடலுழைப்பைச் செய்கின்ற உதாரணமாக-கல்லுடைப்பவர்கள் கட்டாயமாக அதிகம் சாப்பிட வேண்டும். எனவே, நமது உணவு நமக்குத் தேவையான சக்தியைக் கொடுப்பதாக இருக்கவும் அதிக உணவையோ அல்லது அதிக சக்தியைத்தரும உணவையோ அதிக அளவில் சாப்பிட்டால் உடல் பருமனாவதற்கு ஏதுவாகிறது. பருமனான உடம்பு பலவிதத் தொல்லைகளைக் கொடுக்கும். குறிப்பாக, வயதான காலத்தில் இரத்தத்தில் அதிகக் கொழுப்புகள் கலக்கும். இதனால் தமனிகளின் சுவர்கள் தடித்து உட்பரப்பு குறுகும். ஆகவே, இரத்த அழுத்தம் ஏற்படும். பின் தமனிகள் சிதைவடைந்து, இரத்த உறைவினால் ஏற்படும் தடங்கல் காரணமாக இரத்தச் சுவர்கள் வெடித்து அழிவிற்குக் காரணமாகின்றது.

கொழுப்பு அதிகரிக்கின்ற நிலையிலும், வயது அதிகரிக்கின்ற நிலையிலும் ஏற்படுகின்ற தமனி சிதைவினைச் சோதனைப் பிராணிகள் மூலம் கண்டறிகின்ற ஆராய்ச்சியில் உயிர்வேதியல் துறை ஈடுபட்டுள்ளது.

கண்காட்சியின் ஒவ்வொரு பகுதியும் நம்மைக் கவர்ந்திழுக்கின்றனவே அதற்குக் காரணம் என்ன? எல்லாம் நம்மைப் பற்றி என்பதாலா?

நான்காவது பிரிவை நோக்கி நம் கால்கள் நடக்கின்றன. அங்கே நாம் காண்பது-கல்லீரல்!

கல்லீரலில்தான் பல முக்கியமான உயிர்வேதியல் மாற்றங்கள் நடைபெறுகின்றன. பல புரதங்கள் அங்குத் தயாராகின்றன. உடலுக்குத் தேவையற்ற பொருட்களையும், உபயோகமான சுரப்பிகளையும் வெளியேற்ற இது வழிசெய்கின்றது; சிவப்பணுக்களின் வாழ்வு முடியும்போது உண்டாகும் 'பிலுருபின்' என்ற பொருளைப் பித்த நீருடன் கலந்து வெளியேற்றுகிறது.

கல்லீரல் கெட்டுவிட்டால்

வேதியல் சம்பந்தமாக விளக்கப்படுகிறது.

இரத்தப் பரிசோதனை இங்கே நடந்தது.



இன்னின்ன விளைவுகள் ஏற்படும் என்ற எச்சரிக்கையையும் காண்கிறோம். அதாவது:

1. இரத்தத்திலுள்ள புரதம் (ஆம்புமின்) குறையும்.

2. இரத்தத்தில் பிலுருபின் அதிகரிக்கும்.

3. கொழுப்பு செரிப்பதில் கோளாறு ஏற்படும்.

4. மஞ்சக்காமாலை நோய் வரும்.

உயிர்வேதியல் பரிசோதனையின் மூலம் கல்லீரல் நோயையும், காமாலையையும் கண்டறியலாம்.

மஞ்சள் காமாலை நோய் பலரை மரண வாயிலுக்கே கொண்டு போகின்றது. இந்தப் பயங்கர நோயின் காரணங்கள் என்ன?

1. அதிக சிவப்பணு அழிவது.

2. கல்லீரல் கெடல்.

3. பித்த நீர்க்குழாய் அடைபடுதல்.

மேற்கண்ட அடிப்படையில் காமாலையை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். உயிர் வேதியல் சோதனையின் மூலம் அது எந்த வகையைச் சார்ந்தது என்று கண்டறிந்து, அதற்கேற்ற வகையில் சிகிச்சையும் பெறலாம்.

உங்கள் இரத்தம் எந்தப் பிரிவைச் சேர்ந்தது?

இதை ஒருசில நிமிடங்களில் நாம் தெரிந்து கொள்ளலாம். நம் கைவிரலிலிருந்து ஒரு துளி இரத்தத்தை எடுத்து, பரிசோதித்து அது எந்தப் பிரிவைச் சேர்ந்தது என்பதை உடனே எழுதித் தருகின்றார்கள். வெளியில் இந்தச் சோதனைக்கு 15 ரூபாய் ஆகும்; ஆனால், இங்கோ அது இலவசம்!

நம் கண்கள் படங்களையும் குறிப்புகளையும் பார்த்துக் கொண்டே இருக்கின்றன. இடையிடையே உயிர்வேதியல் துறை மாணவர்களின் விளக்கங்களையும் நம் காதுகள் கேட்கின்றன; கால்கள் அடுத்தப் பிரிவுக்கு மெல்ல நகர்கின்றன.

சிறுநீரக நோய்பற்றி விளக்குகிறது இப்பிரிவு.

சிறுநீரக நோயால் இரத்தமும் சிறுநீரும் மாறுபடும். சிறுநீரில் புரதத்தை அளக்கும் சிறிய சோதனையின் மூலம் 90 சதவிகிதம் நோயைக் கண்டறியலாம். சிறுநீரில் காணப்படும் படிகங்களைக் கொண்டே அதனைச் சார்ந்த உள்நோயைக் கண்டறியலாம். இந்நோயைப் பற்றி ஹிப்போக்ரைட்ஸ் காலம் முதல் தெரிந்திருந்தாலும் இப்படிகங்களின் தோற்றம் பற்றிய உண்மை 1970-ஆம் ஆண்டில்தான் தெரிய வந்தது. இந்நோயாளிகளின் இரத்தத்தையும், சிறுநீரகக் கற்களையும் அரசு சிறுநீரகப் பிரிவுடன் சேர்த்து சோதனை செய்ததில், இந்நோயாளிகள் வைட்டமின் பி-6 இல்லாமல் இருந்தனர் எனத் தெரியவந்துள்ளது. இதுவும் சிறுநீரகக் கற்கள் தோன்ற ஒரு காரணமாகும்.

கிருமிகள் உடலைத்தாக்கி நோயை உண்டாக்க முனையும் போது வெள்ளணுக்கள் தம்முடைய எதிர்ப்புச் சக்தியினால் அவைகளை எதிர்த்து அழிக்கின்றன. அதே நேரத்தில் உடலில் உண்டாகும் ஒருவித சிறப்புப் புரதங்கள் இவ்வகையான கிருமிகளுடன் சேர்ந்து அவைகளைச் சக்தியிழக்கச் செய்கின்றன என்பதை ஆறாவது பிரிவில் பார்க்கிறோம்.

மாற்றும் முறை கையாளும் போது சிலவித குணங்களைக் கவனிக்க வேண்டியது அவசியம். உதாரணமாக இரத்தம் செலுத்தும் போதும், கொடுக்கப் போவோரின் இரத்தமும் ஏற்போரின் இரத்தமும் ஒத்த தன்மையாக இருக்க வேண்டும். இதனை இரத்த அணி, ஆர். எச். குணம் இவைகளின் மூலம் நிர்ணயிக்கலாம். இவைகள் மாறுபட்டால் இரத்த மாற்றம் உயிரிழப்பிற்கே வழி செய்துவிடும்—என்பதை எடுத்துக்காட்டுகிறது ஏழாவது பிரிவு. உயிரணு, ஜீன், மூலக்கூறு உயிரியல் முதலானவற்றை எட்டாவது பிரிவில் நாம் பார்த்துத் தெரிந்து கொள்கிறோம்.

இக்கண்காட்சியில் பலவகை விந்தைக் கருவிகளும் வைக்கப்பட்டுள்ளன. இரத்தத்தில் எவ்வளவு சர்க்கரை உள்ளது என்பதைத் துல்லியமாக அறிந்திட ஒரு கருவி இங்கே இயக்கிக் காட்டப்படுகின்றது. ஈரல் நோய் சம்பந்தமான நோயைக் கண்டறியவும், இரத்த ஓட்டம், இதயம் முதலானவற்றின் இயக்கம் பற்றி அறியவும், அடிப்படை வளர்சிதை மாற்றம் பற்றி அறிந்திடவும் பல்வேறு வகையான கருவிகள் காட்சியில் நம்மை விந்தைக்குள்ளாக்குகின்றன. இரத்தம் எந்தப் பிரிவைச் சேர்ந்தது என்பதைக் கண்டறிய ஒரு பரிசோதனைக்கூடமும் இங்கு சுறுசுறுப்பாக இயங்கி வந்தது.

உணவுப் பொருட்களைச் சேமித்து வைக்கும்போது காளான் பூத்துவிடுகின்றது. இந்தக் காளான்கள் நஞ்சுப் பொருட்களை உண்டாக்கி உணவு பொருள்களோடு சேர்த்து விடுகின்றன. இந்த நஞ்சுப் பொருள்கள் மனித இனத்திற்குப் பல்வேறு தொல்லைகளைக் கொடுக்கின்றன. இவைகளைப் பற்றியெல்லாம் உயிர்வேதியல் துறை வெகு விரிவாக ஆராய்ந்து வருகின்றது.



சிறுநீர், இரத்தம் பரிசோதிக்கும் நவீன கருவி.

1971-ஆம் ஆண்டிலும் இதே போன்ற கண்காட்சி ஒன்று சென்னையில் நடந்தது.

சென்னைப் பல்கலைக்கழக உயிர் வேதியல் துறை மாணவ, மாணவியர் திறனை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ள இந்த அரிய அறிவியல் கண்காட்சியைப் பாராட்டாதார் எவருமிலர்.

சென்னை தவிர தில்லி, பம்பாய், கேரளா, பெங்களூர் ஆகிய பல்கலைக் கழகங்களிலும் எம்.எஸ்சி., உயிர்வேதியல் கற்பிக்கப்படுகின்றது என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

'உன்னையே நீ அறிவாய்!' என்றான் அறிவுலக மேதை சாக்ரடீஸ், இளைஞர்களைப் பார்த்து. இந்த வாசகம் ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் பொருந்தும். ஆம். உன்னையே நீ அறிந்திட—உணர்ந்திட உதவிய ஓர் ஒப்பற்ற கண்காட்சிதான் இந்த உயிர் வேதியல் கண்காட்சி என்றால் அது மிகையல்ல!

—பி. வி. கிரி

அடிப்படை வளர்சிதை மாற்றத்தை' அளக்கும் கருவி.



மாணவர் அரங்கம்

பொன்னுக்கு மெருகு தருவோம்!



அரசுப் பணியாளர் தேர்வின்போதோ அல்லது புதிதாக ஏதாவதொரு நிறுவனத்தில் வேலைக்குச் சேருவதற்கு முன்போ பொதுவாக உங்களிடம் கேட்கப்படும் கேள்விகள் பொது அறிவைப் பற்றியதாகவே இருக்கும்.

மாணவ. மணிகள் பள்ளிப் படிப்போடு, பொது அறிவுத் தகவல்களையும் தெரிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டுதல் வேண்டும். அப்போதுதான் பொது அறிவுச் சோதனையின்போது நாம் சாதனை புரிந்திட முடியும்.

பொன்னுக்கு மெருகு தருவது போன்றதுதான், பள்ளிப் படிப்போடு பொது அறிவுத் தகவல்களையும் தெரிந்து கொள்வது.

அன்றாடம் நீங்கள் பத்திரிகைப் படிக்கின்றீர்கள்; பலர் சொல்லப் பல செய்திகளையும் கேட்டிருக்கிறீர்கள். அப்படியானால், கீழே காணும் வினாக்களுக்கு உங்களால் விடை கூற முடிகிறதா பாருங்கள். அப்படி எல்லாவற்றுக்கும் விடை கூறி விட்டீர்களானால், உங்களுக்கு 'அபார நினைவாற்றல்' இருக்கிறது என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

வினாக்கள்

1. ஐ. நா. சபையில் கடைசியாகச் சேர்ந்த நாடு எது? அது எத்தனையாவது நாடு?

2. இந்தியாவின் 22வது மாநிலம் எது?

3. இதுவரை 'பாரத ரத்னா' விருது பெற்றவர்கள் எத்தனை பேர்? அண்மையில் இவ்விருது யாருக்குக் கிடைத்தது?

4. பத்திரிகைகளுக்குச் செய்திகள் அனுப்பும் தற்போதைய செய்தி நிறுவனத்தின் பெயர் என்ன?

5. சென்னையில் 'ஓலைச்சுவடிகள்' உள்ள நூலகம் எங்கே இருக்கின்றது?

6. இந்தியாவின் முதல் ஜனாதிபதி, முதல் வைஸ்ராய் யார்?

7. இந்தியாவின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, முதன் முதலில் எப்போது தொடங்கப்பட்டது?

8. முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் எப்போது தொடங்கியது?

9. 'சத்தியமூர்த்தி சாகர்' என்று எதற்குப் பெயர்?

10. இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தைப் பிரதமர் அவர்கள் எப்போது அறிவித்தார்கள்?

11. சாந்தி நிகேதனிலுள்ள விஸ்வபாரதி பல்கலைக் கழகத்தின் மிக உயர்ந்த விருது எது? இவ்விருது அன்னை தெரசாவுக்கும் அண்மையில் வழங்கப்பட்டது.

12. இந்தியாவில் மொத்தம் எத்தனை கிராமங்கள் உள்ளன?

விடை 47 ஆம் பக்கம் பார்க்க.

பெரும் பரிசு பெறவும்

லட்சம் ரூபாய் உங்களுக்கே கிடைக்கலாம்

குறைந்தபட்சம் 200 ரூபாயுடன் தபாலாபீஸ் சேமிப்பு பாங்க் கணக்கு ஒன்றை 1976 ஏப்ரல் 10ந் தேதிக்குள் துவக்கவும். நீங்கள் பரிசுக்காக காத்திருக்கும்போது கணக்கிலுள்ள தொகைக்கு வருமான வரி விலக்குடன் 5 சதவிகித வருட வட்டியும் கிடைத்து வருகிறது. இக்கணக்கில் பணம் போடலாம், எடுக்கவும் செய்யலாம். ஆனால், 1976 செப்டம்பர் 30ந் தேதி வரை இருப்பில் 200 ரூபாய்க்குக் குறையாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும். அப்படிச் செய்தால் 1977 ஜனவரி குலுக்கலில் நீங்களும் சேரலாம். தபாலாபீஸுக்கு ஒரு கணக்கு வீதம் வெவ்வேறு தபாலாபீஸ்களிலும் பல கணக்குகள் வைத்திருக்கலாம். மைனர் குழந்தைகள் உட்பட குடும்பத்திலுள்ள ஒவ்வொருவர் பெயரிலும் கணக்குகள் இருக்கலாம்.

11,116 பரிசுகள் மதிப்பு ரூ. 20.25 லட்சம்

ஆண்டிற்கு இரண்டு குலுக்கல்கள்

பரிசுகள்

ஒரு முதல் பரிசு ரூ. 1,00,000	பத்து 3வது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 20,000	ஆயிரம் 5வது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 500
ஐந்து 2வது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 50,000	நூறு 4வது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5,000	பத்தாயிரம் 6வது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 50

முக்கியம்

1977 ஜனவரி குலுக்கலில் பரிசு கிடைக்கவில்லையென்றாலும் உங்கள் கணக்கில் எப்போதும் 200 ரூபாயோ அதற்கு கூடுதலாகவோ இருப்பு இருந்தால் அடுத்து வரும் குலுக்கல்களில் பரிசு பெறும் வாய்ப்பு உங்களுக்குண்டு.

முந்துங்கள் ! இன்றே கணக்கைத் துவக்கவும்.

தேசிய சேமிப்பு நிறுவனம்

த. பெ. எண். 96, நாக்புர்.

davp 75/590

உலகம் அழைக்குது ஓடிவா!

கவிஞர் எஸ். டி. சுந்தரம்

எழுந்து விரைவில் வெளியில்வா
ஏழிசைக் கடலில் குளிக்கலாம்!
விழுந்து கிடந்தது போதாதா?
உலகம் அழைக்குது ஓடிவா!

வேலைசெய் யாமல் தூங்கவோ
விடுதலைச் செல்வம் வாங்கினோம்?
ஆலையின் சங்குகள் ஏங்கவோ
ஆயிரம் தொழில்கள் துவங்கினோம்?

சோலையில் குயில்கள் தூங்கினால்
சுகசங் கீதம் கேட்குமா?
காலையில் சூரியன் தூங்கினால்
காரியம் உலகில் நடக்குமா?

பூவும் செடிகொடி வயல்களும்
புதுப்புது நாட்டியம் ஆடுகையில்
மாவலி மனிதன் சக்திகளை
மறந்து தூங்குதல் முறையாமோ?

கடலும் காற்றும் தூங்கினால்
ககனம் கர்ஜனை செய்யுமா?
சுடரும் மனிதன் தூங்கினால்
சோறும் துணியும் கிடைக்குமா?

எல்லாத் தொல்லையும் நீங்கவே
இருபது அம்ச வேலையால்
வல்லமை பெருகுது தோழனே
வளமுடன் தேசமும் வாழவே!

சேவல் கோழிகள் கூவியபிறகும்
செயலின்றி இருப்பது நியாயமா?
சிவந்த வானம் வெளுத்தபிறகும்
சோம்பி இருப்பதும் நீதியா?



[நன்றி: சென்னை வானொலி நிலையம்]

தமிழ்நாட்டின் மீன்வள மேம்பாட்டுக்கு மத்திய அரசுத்திட்டங்கள்



ஜெய்—

இந்திய அரசாங்கம் துவக்கியுள்ள மத்திய அரசுத் திட்டங்களும், மத்திய அரசு உதவி பெறும் திட்டங்களும் தமிழ்நாட்டின் மீன் வளத் துறையில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னையில், நாட்டின் மிகப் பெரிய மீன்பிடி துறைமுகத்தைக் கட்டுதல், மாநில மீன்வளத் துறைக் கார்ப்பொரேஷனுக்கு உதவுதல் போன்ற பெரும் திட்டங்கள் மட்டுமல்லாமல், உள்ளமைப்பை அபிவிருத்தி செய்தல், பயிற்சி வசதிகளை விரிவாக்குதல் உட்பட மீனவர்களுக்கு உதவுதல் ஆகியவையும் இத் திட்டங்களில் அடங்கும்.

இத்திட்டங்களின்படி, தூத்துக்குடியில் ஒரு நடுத்தர மீன்பிடி துறைமுகம் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதற்காக, மத்திய அரசாங்கம் இரண்டு கோடியே எட்டு இலட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்கியுள்ளது

சுமார் 6 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில், முழுவதும் மத்திய அரசாங்கத்தின் நிதியுதவி கொண்ட ஓர் ஆழ்கடல் மீன்பிடி துறைமுகம் சென்னையில் இப்போது கட்டப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் இது முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கோடிக்கரை, மல்லிப்பட்டணம் ஆகிய இடங்களில் மொத்தம் 25 இலட்சம் ரூபாய் செலவில் இரண்டு மீன்பிடி துறைமுகங்கள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதியிலுள்ள மீன்பிடி கிராமங்களில், இயக்க உள்ளமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக இரண்டு இடங்கள் ஏற்கெனவே குறிக்கப்பட்டுள்ளன.

மாநில மீன்வளத்துறைக் கார்ப்பொரேஷனுக்கு நிதியுதவி அளிக்கும் ஒரு திட்டமும் மத்திய அரசாங்கத்திடம் உள்ளது. இத்துடன் இக்கார்ப்பொரேஷன் உபயோகப்படுத்துவதற்காக, மெக்ஸிகோவிலிருந்து வரும் பெரிய, மீன் பிடி கப்பல்களின் இறக்குமதியையும் மத்திய அரசாங்கம் ஒருங்கிணைத்து வருகிறது.

மீன் வளத்துறைக்கு விரிவான பயிற்சி, கருவி, விளம்பரச் சாதனங்கள் ஆகியவற்றை இந்திய அரசாங்கம் அளித்து வருகிறது. மீன்வளர்ப்பு மேம்பாட்டுக்கான இத்திட்டத்தை, தமிழ்நாடு பயன்படுத்திக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தஞ்சை மாவட்டத்தில் மீன் பண்ணை அபிவிருத்தி நிலையம் ஒன்றை நிறுவுவதற்கான ஆரம்பச் செலவைச் சமாளிப்பதற்கு மானியம் மற்றும் கடன் மூலமான உதவிக்கு மற்றொரு மத்திய அரசுத் திட்டம் வகை செய்கிறது.

இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம், தமிழ்நாட்டில் ஏராளமான ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டங்களைத் துவக்கியுள்ளது. நீர்த்தேக்கங்களில் மீன் வள அபிவிருத்திக்கான திட்டங்கள், கலப்பு மீன் வளர்ப்பு, உப்பு நீர் மீன் வளர்ப்பு, உபயோகமில்லாத மீனின் உபயோகம் ஆகியவை அவற்றில் அடங்கும்.

நாட்டின் மீன்வள அபிவிருத்திக்காக அமைக்கப்பட்ட 12 இடங்களில், இரண்டு இடங்கள் தமிழ்நாட்டில் உள்ளன; ஒன்று சென்னையிலும், மற்றொன்று தூத்துக்குடியிலும் இருக்கிறது. இப்பகுதிகளின் மீன்வளத்தைக் கவனிப்பதற்காகவும், இந்நோக்கத்திற்குத் தகுந்த சரியான கப்பல், தளவாடங்களை உருவாக்குவதற்காகவும், பரிசோதனை மீன் பிடிப்பு மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றில் இந்தத் தளங்கள் ஈடுபட்டுள்ளன.

மத்திய கடல் மீன் ஆராய்ச்சிக் கழகத்தின் ஓர் உப நிலையமும், மத்திய உள்நாட்டு மீன் ஆராய்ச்சிக் கழகத்தின் ஒரு பிரிவும் சென்னையில் உள்ளன. கடல் மீன் ஆராய்ச்சி உப நிலையம், மற்றப் பணிகளோடு நத்தை சிப்பி முதலியவை வளர்ப்பு சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியிலும் ஈடுபட்டுள்ளது. மத்திய உள்நாட்டு மீன்வள ஆராய்ச்சிப் பிரிவு, இறால் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளது. தூத்துக்குடிக்கு அருகில் அமைந்துள்ள மத்திய கடல் மீன் ஆராய்ச்சிக் கழகத்தின் உப நிலையம் ஒன்றும் சென்னையில் இயங்கி வருகிறது. இந்நிலையம், மாலுமிகள், பொறியியல் வல்லுனர்கள், இயந்திர நிபுணர்கள் முதலிய கடல் மீன் வளத் துறைப்பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கிறது.

தமிழ்நாட்டில் நடமாடும் கண்காட்சி

இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம். பத்தாண்டுச் சாதனை ஆகியவற்றை தெளிவாக விளக்கக் கூடிய நடமாடும் கண்காட்சியொன்று தமிழ்நாடு முழுவதும் நடத்தப்படவிருக்கிறது. ஏப்ரல் மாதம் 12-ஆம் தேதி வரை இக்கண்காட்சி வடஆர்க்காடு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் நடைபெறும்.

இக்கண்காட்சியை பொது மக்கள் நாள்தோறும் பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை பார்க்கலாம். இரவில் விளக்கப் படங்களும் திரையிடப்படும்.

மத்திய செய்தி ஒலிபரப்பு அமைச்சகத்தின் விளம்பரக் காட்சிப் பிரச்சார அலுவலகத்தின் மண்டலக் கண்காட்சி நிலையம் இக்கண்காட்சியை நடத்துகிறது.

மகளிர் அரங்கம்

சர்வதேச மகளிர் ஆண்டுச் சாதனை

—திருமதி சரோஜினி வரதப்பன்
(தலைவர்: மத்திய சமூக நலக் குழு)

இந்தியாவில் சர்வதேச மகளிர் ஆண்டுக் கொண்டாட்டம், புதுடில்லியில் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி, சர்வதேச மகளிர் ஆண்டுக்கான தேசிய முழுக் கூட்டத்தில் சமீபத்தில் நிகழ்த்திய உரையுடன் அதிகாரப்பூர்வமாக முடிவடைந்தது. இப்படி ஓர் ஆண்டின் முடிவைக் குறிப்பிடும் வகையில் நடத்தப்பட்ட ஒரு நிகழ்ச்சி தேசத்தின் மேம்பாட்டு வேலைகளில் பெண்களை ஈடுபட்டு உழைக்கும்படிச் செய்வதிலும் அது விஷயத்தில் கவனம் ஈர்க்கப் படும்படிச் செய்வதிலும் ஒரு பத்தாண்டுக் கால முயற்சிக்கு வழி திறந்து விட்டிருக்கிறது என்று சொல்லலாம்.

பெண்களின் மதிப்பை ஒரே நாளில் திடீரென முழு மாறுதலும் நடந்து விடமுடியாது என்பதும், பெண்குலம் விடுக்கும் அழைப்பை ஏற்றுச் சமூகத்தில் ஒரேயடியாக மாறுதல் ஏற்பட்டு விடமுடியாது என்பதும் உண்மைதான். ஆயினும் இந்தியாவில் மட்டும் இன்றி உலகம் முழுவதிலும் கொண்டாடப்பட்ட சர்வதேச மகளிர் ஆண்டானது நமது பிரதமர் கூறியது போல், பெண்களும் மனித குலத்தின் உள்ளடங்கிய பகுதியே என்பதிலும், பெண்களும், ஆண்களும் சேர்ந்தது தான் மக்கள் குலம் என்பதிலும் உலகக்கவனம் ஆழ்ந்து பதியும்படியாவது செய்திருக்கிறது. எந்த ஒரு சமூகத்திலும் அமைதியில்லையானால், முன்னேற்றம் இல்லை. அதோடு சமத்துவம் இல்லாவிட்டால் அமைதியும் கிடையாது.

எனவே, பெண்கள் தங்கள் பங்கைச் சரிவர ஏற்று நடத்த வேண்டுமானால் அவர்களுக்குச் சமத்துவம் இன்றியமையாதது என்பது இதன் உட்கருத்து. சர்வதேச மகளிர் ஆண்டில் இந்தியாவின் சாதனை என்ன என்பதையும் எதிர்காலத்துக்கான திட்டங்கள் என்ன என்பதையும், ஐக்கிய நாடுகள் நிறுவனம் அரசாங்க நிறுவனங்களுக்கும், அரசுச் சார்பற்ற நிறுவனங்களுக்கும், மொத்தத்தில் சர்வதேச சமூகம் முழுவதற்கும் வேண்டுகோள் விடுத்துப் பெண்களின் உரிமைகளை உத்திரவாத ரீதியில் செயல் முறையில் அவர்களுக்கு அளிக்கவும் அவர்களின் நிலைமையில் மேன்மையை ஏற்படுத்தவும் வழி செய்வதற்காக, வேற்றுமை காட்டுகிற சட்ட திட்ட ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ளும்படிக்கேட்டுக் கொண்டிருந்ததைக் கவனத்தில் வைத்துப் பரிசீலிக்க வேண்டும்.

உலக ரீதியில் செயல் திட்டம்

மேலும் இவைகளை 1975-ல் மெக்சிகோ நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் உலக மாநாட்டில் செய்யப்பட்ட உலகச் செயல் திட்டத்தின் அடிப்படையிலும் கவனிக்க வேண்டும்; அம்மாநாடு ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே சமத்துவம் நிலவும்படி செய்வதற்கான சட்ட திட்டங்களை இயற்றும்படி அரசாங்கங்களைக் கேட்டுக் கொண்டது. பெண்களின் அந்தஸ்து சம்பந்தமாய் உள்ள தங்கள் சட்டங்களை, சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் நியாயமான கோட்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் அரசாங்கங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அத் திட்டம் கூறுகிறது.

பெண்களின் பிரச்சினைகள் என்னென்ன என்பதைக் கண்டறியவும், எதிர்காலத்தில் இதற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று யோசனை கூறவும் இந்தியப் பெண்களுக்கு மத்திய மட்டத்திலும் மாநில மட்டத்திலும் உள்ள மூன்று முக்கியமான நிறுவனங்கள் உதவி புரிந்து இருக்கின்றன. நமது பிரதமரே தலைவராக அமைந்துள்ள சர்வதேச மகளிர் ஆண்டுக்கான தேசியக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. மாநிலங்களிலும் இதே போன்ற குழுக்கள் நிறுவப்பட்டன. இக் குழுக்கள் இந்தியாவில் சர்வதேச மகளிர் ஆண்டுக்கான அலுவல்களை அரசுத் தரப்பில் கவனித்து வந்தன.

அரசாங்கச் சார்பற்ற நிறுவனத்தில், சுயேச்சையான பெண்கள் சேவை நிறுவனங்கள் 41-ம் சேர்ந்து சர்வதேச மகளிர் ஆண்டுக்கான இந்தியக் குழுவாக அமைந்தது. இது, பொதுவான ஒரு திட்டத்தின்கீழ் நாடெங்கிலும் பணியாற்றியது.

இக்குழு, கட்டம் கட்டமாக நிறைவேற்றுகிற பன்னிரண்டு மாதகால நடவடிக்கைத் திட்டம் ஒன்றினுக்கு ஏற்பாடு செய்தது. அப்போது பெண்களைப் பாதிக்கும் அடிப்படை விஷயங்களில் கவனம் திரும்பும்படி செய்யப்பட்டது. அப்படிக் கவனம் பதியும்படி செய்யப்பட்ட முக்கியமான விஷயங்கள் வருமாறு:

பெண்களைப் பாதிக்கும் சமூகச் சட்டங்கள், வேலை செய்யும் பெண்களின் பிரச்சினைகள், கிராமங்களில் பணிபுரியும் பெண்கள்.

இந்த விஷயங்களில் ஒரு திரண்ட அபிப்பிராயம் உருவாகுமாறு செய்வதற்கு இரண்டு நடைமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டன. பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் உள்ள படித்த பெண்கள் இந்த வருடத்திய கோட்பாட்டுப் பொருள் பற்றி எழுதும் கட்டுரைப் போட்டிகளில் கலந்து கொள்ளும்படி அரசாங்கத்தால் அழைக்கப்பட்டார்கள். முறைப்படி பார்த்

தால் எழுத்தறிவு இல்லாதவர்கள் என்று சொல்லும்படியாகவும், ஆனால் உண்மையில் விஷயங்களைத் தெளிவாக எடுத்துப் பேசக் கூடிய ஆற்றல் உள்ளவர்கள் ஆகவும் இருக்கும் கிராமப் பெண்கள், கருத்தரங்குகள், உரைக்கோவைகள் என்று நடத்தப்பட்ட கூட்டங்களில் கலந்து தங்கள் கருத்துரைகளைக் கூறும் வாய்ப்புப் பெற்றார்கள்.

மத்திய சமூகநல வாரியம் நாட்டின் தொலை தூரப் பகுதிகளில் உள்ள கிராமங்களிலும் பணிபுரிந்து வருவதால், அந்த வாரியம் கருத்தரங்குகள், உரைக்கோவைகள் என்ற வகைகளில் எத்தனையோ இடங்களில் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து, கிராமப் பெண்கள் அங்கே ஒருங்கு திரண்டு வரும்படி செய்து, சர்வதேச மகளிர் ஆண்டானது அவர்களின் வாழ்க்கைச் சூழ்நிலைகளைப் பொறுத்த மட்டில் எப்படிச் செயல்பட்டு வருகிறது என்று தங்கள் தங்கள் கருத்துக்களைக் கலந்து பேசி வெளியிடும்படிச் செய்யப்பட்டது. மேலும் அது பல்வேறு மாநிலங்களில் பெண்களுக்கான சங்கங்களையும் தலைமைப் பெயர்ச்சி முகாம்களை நடத்துவதில் வேறுபல நிறுவனங்களுடனும் கூட்டுச் சேர்ந்து பாடுபட்டது.

சாதாரணமாக, கருத்தரங்குகள், உரைக்கோவைகள் என்றால் வெறும் பேச்சு மேடைகள் என்று பட்டம் கட்டப்படுகின்றன. ஆனால், இக்கூட்டங்களில் கிராமங்களையும் பின்னடைந்த பகுதிகளையும் சேர்ந்த பெண்கள், எத்தனையோ விதவிதமான விஷயங்கள் பற்றி மனம் திறந்து கருத்துத் தெளிவுடன் உள்ளார்ந்த நம்பிக்கையுடன் பேச முன் வருகிறார்கள் என்பது ஒரே வியப்பை ஊட்டுவதாக இருக்கிறது. சில இடங்களில் அவர்கள் செய்த பரிந்துரைகள் நன்கு கற்றறிந்த பெண்களையே திகைக்க வைக்கும் வகையில் பிரச்சினைகளை அவர்கள் வெகு தெளிவாக உணர்ந்திருந்தார்கள் என்பதை எடுத்துக் காட்டின.

ஒருமித்த முயற்சி

இந்தக் கருத்தரங்குகளில் அவர்கள் செய்த பரிந்துரைகள் சமூகநலக் கொள்கைகள் முதல், அடிப்படை சௌகரிய வசதிகளை ஏற்படுத்தித் தரும் முறை வரையில் எத்தனை எத்தனையோ விஷயங்கள் குறித்தவையாக இருந்தன. இந்தப் பரிந்துரைகளின்படி மாதர்கள், குழந்தைகள் சம்பந்தமாய் நடத்தப்படுகிற

எல்லாத் திட்டங்களும் ஒரே துறையின் கீழ்க் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் அந்தத் துறைகளின் அலுவல்களில் பெண்களும் பங்கு கொள்ளும்படிச் செய்ய வேண்டும் என்றும் மத்திய, மாநில அரசுகள் வற்புறுத்தப்பட்டுள்ளன. ஊராட்சி நிறுவனங்கள் தங்கள் பொது வருமானத்திலிருந்து மாதர்கள், குழந்தைகள் சம்பந்தமான திட்டங்களுக்குக் கட்டாயமாய் நிதி ஒதுக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டுள்ளன.

நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்படியும் நகர்ப்புறச் சொத்து உச்சவரம்புச் சட்டத்தின்படியும் அரசு கைவசப்படுத்தியிருக்கிற உபரியான விவசாய நிலங்களையும் வீட்டுமனை நிலங்களையும் சுயேச்சையான கல்வி நிறுவனங்களுக்கும் சேம நல நிறுவனங்களுக்கும் கிடைக்கும்படி அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. பெண்களுக்கு நிலங்கள் மீது சொத்துடைமை உரிமை இருக்க வேண்டும் என்றும், குடும்பச் சொத்தில் பங்கு இருக்க வேண்டும் என்றும் பெண்கள் கோரியிருக்கிறார்கள்.

பெண்கள் சம்பந்தமான சட்ட திட்டங்களைப் பொறுத்தமட்டில் சர்வ தேச மகளிர் ஆண்டில் அரசுப் பிரகடனம் செய்த ஒரே விதமான வேலைக்கு ஒரேவிதமான சம்பளம் என்கிற அவசரச் சட்டமானது எல்லோராலும் பாராட்டி வரவேற்கப்பட்டிருக்கையில் ஏராளமான பெண்களை வேலைக்கு வைத்திருக்கும் தொழிற்சாலைகளிலே தொழிலாளர் நலச் சட்டங்களுக்கு உட்பட்டிராதவையாக உள்ள விஷயங்களும் அச்சட்டங்களை வளர்ச்சியுறச் செய்ய கண்டிப்பான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் கூக்குரல் கிளம்பியிருக்கிறது.

மாமூல் சட்டங்கள், சொந்தச் சட்டங்கள் முக்கியமாக திருமணம், விவாகரத்து முதலியவை பற்றிய சட்டங்களைத் திருத்த வேண்டும் என்றும், இந்தியாவில் உள்ள எல்லாப் பெண்களுக்கும் ஒரேவிதமான சட்டம் இருக்கும்படிச் செய்ய வேண்டும் என்றும் பெண்களிடையே பொதுவான கோரிக்கை கிளம்பி இருக்கிறது. அவைகளில் சில சட்டங்கள், சில வகுப்புக்களில் பெண்களைக் கீழ்மட்ட நிலையில் ஆழ்த்தி வைத்திருக்கின்றன.

பொருளாதார ரீதியில் சுதந்திரமாக இருப்பது பெண்களின் மதிப்புக்கு நெருங்கிய தொடர்புள்ளதாக இருப்பதால், பெண்களுக்கு அதிகமான வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும் என்றும், பகுதி நேர வேலை வாய்ப்புக்கள் வேண்டும் என்றும், வீட்டுவேலை செய்வதில் உள்ள சிரமங்களைக் குறைக்கக் கூடிய நவீன உபகரணங்கள் நியாயமான விலைகளில் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும் என்றும், குடிசைத் தொழில்களில், சுயமாகச் செய்யும் வேலைகளை மேற்கொள்ள வாய்ப்புக்கள் வேண்டும் என்றும் கோரிக்கை இருந்து வருகிறது.

பெண்களுக்கான தொழில்பேட்டைகள்

இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மத்திய சமூக நல வாரியம் சர்வதேச மகளிர் ஆண்டில் எத்தனையோ திட்டங்களை ஆரம்பித்து வைத்திருக்கிறது. கேரளத்தில் எர்ணாகுளத்தில் முழுக்க முழுக்கப் பெண்களையே வேலையில் ஈடுபடுத்தும் தனிப்பட்ட ஒரு தொழில்பேட்டை நடத்துவதற்காக ஒரு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இத்தொழிற்பேட்டையில் துத்தநாகத்தைக் கொண்டு மின் முலாம் பூசும் தொழில்களும், ஜெம் கிளிப், கம்பிகள், குண்டூசிகள் முதலிய சில்லறைச் சாதனங்களைத் தயாரிக்கும் தொழில்களும் இருக்கும். 10 இலட்ச ரூபாய் அனுமதிக்கப்பட்ட மூலதனத்திலும் தனியார் வரையறையில் உள்ள நிறுவனமாகத் துவங்கப்பட்ட அந்நிறுவனத்திற்கான மூலதனத்தைப் பெண்களே திரட்டி வருகிறார்கள்.

இதேபோன்ற தொழில் பேட்டைகள் ஆந்திர மாநிலத்திலும் பிற மாநிலங்களிலும் ஏற்பட்டு வருகின்றன. ஆந்திர மாநிலத்திலும் மகாராஷ்டிரத்திலும் பெண்களே தொடங்கி நடத்துகிற தொழில்களுக்கு நிதி வசதி தேடித் தருவதற்காக தொழில் நிதி நிறுவனங்களைப் பெண்களே ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

இத்தகைய தொழில் பேட்டைகள் எங்கெங்கு தொடங்கப்பட்டுள்ளனவோ அங்கெல்லாம் அந்தந்த மாநில அரசுகள் அவைகளுக்கு இலவசமாக இட வசதியையும், பிற எல்லா வசதிகளையும் செய்துதர முன்வந்திருக்கின்றன. மேலும், மத்திய சமூக நல வாரியம் தற்போது அமல் நடத்தி வரும் திட்டங்கள் மூலம் பல தரப்படுத்தப்பட்ட பெண்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் கிடைத்து வருகின்றன.

இந்த வாரியம் நடத்தி வரும் தொழில் பயிற்சித் திட்டங்களும் சமூக பொருளாதாரத் திட்டங்களும், இப்போது ஏராளமாக பெண்கள் பின்கண்ட பலவிதமான தொழில்களில் ஈடுபடுவதற்கு வகை செய்துள்ளன. அத்தொழில்கள் ரேடியோ பாகங்களைப் பொருத்தி இணைத்து செட்கள் தயாரிப்பது, டெலிவிஷன் செட் தயாரிப்பது, புகைப்படத் தொழில், மின்முலாம் பூசுவது, உதிரி உறுப்புக்களை இணைத்து முழு இயந்திரங்களை உருவாக்குவது முதலியனவாகும்.

1975-76-ல் மட்டும் சுமார் 60 இலட்சம் ரூபாய் செலவில் 251 தொழில் பயிற்சித் திட்டங்களுக்கு மத்திய சமூக நல வாரியம் அனுமதி அளித்திருக்கிறது. இதன் மூலம் 5,000-க்கும் அதிகமான பெண்களுக்கு நன்மை ஏற்படும். 106 சமூகப் பொருளாதாரத் திட்டங்களும் தனியாக 60 லட்சம் ரூபாய் செலவில் துவங்கப்பட்டு, குறைந்த வருமானமுள்ள தரப்பைச் சேர்ந்த 3,000 பெண்களுக்கு, வேலை கொடுப்பதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டங்களில், ஆடைகள், தயாரிக்கும் தொழில்கள், அச்சகங்கள், கைத்தறி, கைவேலைத் தொழில்கள், பிற சிறு தரப்புத் தொழில்கள் ஆகியவை இருக்கும்.

ஏராளமான பெண்கள் முழு நேரப்பணிகளைச் செய்ய இப்போது முன் வந்திருப்பதால் அவர்கள் தங்கி வசிப்பதற்கு விடுதிகளையும், வேலை நேரங்களில் அவர்களின் குழந்தைகளை வைத்துப் பாதுகாப்பதற்கான சிறுவர் விடுதிகளையும் கட்டுவதற்கு இந்திய அரசினர் முன்பைவிட அதிக அளவுக்கு நிதி ஒதுக்கி இருக்கிறார்கள்.

தலைசிறந்த சாதனை

சர்வதேச மகளிர் ஆண்டில் செய்யப்பட்டுள்ள தலைசிறந்த சாதனையாக மக்களிடையே மிகப் பெரும் அளவில் ஏற்பட்டுள்ள ஒரு விழிப்புணர்ச்சியைக் கூறலாம்: அதாவது சமூகத்தை உள்ளீடாக அரித்து, வலுக்குறையச் செய்கிற பழக்க வழக்கங்கள், சமூகக் கேடுகள் ஆகியவைகளுக்கு எதிர்ப்பாகத் தோன்றியுள்ள மாபெரும் விழிப்புணர்ச்சியைக் கூறலாம். வரதட்சணைப் பழக்கத்திற்கு எதிராக இடிமுழக்கம் போன்ற கண்டனம் கிளம்பியுள்ளது.

பீகார், பஞ்சாப், அரியானா ஆகிய மாநிலங்கள் வரதட்சணை கொடுக்கல் வாங்கல்களைத் தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றமாக் ஆக்கியுள்ளன. அரசாங்க ஊழியர்கள் தங்கள் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் வரதட்சணை கொடுப்பதையோ, வாங்குவதையோ தடைசெய்கிற விதத்தில் அரசாங்க ஊழியர் நடத்தை விதிகளை அரசு திருத்தி இருக்கிறது. இவைகள் மனதிற்கு மிகவும் தெம்பூட்டுகிற அம்சங்கள் ஆகும். திருமணத்தில் வரதட்சணை இருந்தால் அந்தத் திருமணத்தைச் செய்யமாட்டோம் என்று சூளுரையைச் செய்து இளைஞர்கள், முக்கியமாக பெண்கள், பெருவாரியாக இயக்கம் நடத்தத் தொடங்கி இருப்பதுதான்.

இந்த விழிப்புணர்ச்சி இன்னும் கடுமையாக, இறுகிப்போன பல உள்ளீட்டுப் பகுதிகளுக்கும் பரவி வருகிறது. குடும்பநலத் திட்டங்கள், வெடித்துப் பரவும் மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்

பொன்னுக்கு மெருகு தருவோம் !

விடைகள் ....

1. சூரிநாம்—144-வது நாடு.
2. சிக்கிம்.
3. 17 பேர்—தலைவர் கே. காமராஜர் அவர்களுக்கு
4. ‘சமாச்சார்’
5. சென்னைப் பல்கலைக் கழகத்திலுள்ள ஒரு கட்டடத்தில் உள்ளது. இதன் பெயர் : ‘கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்’ (Oriental Manuscript Library).
6. முதல் ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத். முதல் வைஸ்ராய் கானிங் பிரபு.
7. 1881-ஆம் ஆண்டு.
8. 1951-ஆம் ஆண்டு.
9. பூண்டி நீர்த்தேக்கத்திற்கு
10. 1975-ஆம் ஆண்டு ஜூலை முதல் நாள்.
11. ‘தேசிகோத்தம’ விருது.
12. 5,75,936 கிராமங்கள்.

தொகுப்பு : பி. வி. ஜி.

நிதி அமைச்சரின் விஞ்ஞான மனநிலை !

இந்த ஆண்டு மத்திய நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த பட்ஜெட் அறிக்கையோடு முதல் தடவையாக 'ஒருங்கிணைந்த கிராமப்புற அபிவிருத்திக் கொள்கை' என்ற அறிக்கையையும் சமர்ப்பித்தார்.

கிராமப்புறப் பகுதிகளின் வேலை வாய்ப்புக்கும், வளர்ச்சிக்கும் விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்துவது பற்றிய திரு. சி. சுப்பிரமணியத்தின் தத்துவத்தையும் - திட்டத்தையும் இந்த அறிக்கை விவரிக்கிறது.

விவசாயம், விஞ்ஞானம்–தொழில் நுட்பம் ஆகிய அமைச்சர் துறைகளை வகித்த திரு. சி. சுப்பிரமணியம், விவசாயத்தை நவீனப்படுத்துவதில் மிகவும் ஆர்வம் கொண்டவர். மத்திய உணவு, விவசாயத்துறை அமைச்சராக அவர் பதவி வகித்தபோதுதான் "பசுமைப் புரட்சி" துவக்கப்பட்டது.

பாங்காக்கிலுள்ள ஐ. நா ஆசிய அபிவிருத்திக்கழகம் கூட்டிய நிபுணர்களின் கூட்டத்திலும், அண்மையில் சென்னையில் நடைபெற்ற விஞ்ஞான மாநாட்டிலும் திரு. சி. சுப்பிரமணியம் இந்தப் பொருள் பற்றிய ஆய்வறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளார்.

இந்த ஆண்டில் மின்சார நெருக்கடி இருக்காது !

"மின் துறையில் இவ்வாண்டு நெருக்கடி எதையும் நான் எதிர்பார்க்கவில்லை. எனினும் மாநிலத்தில் பெருகிவரும் தேவைகளைச் சமாளிக்க மின்சார உற்பத்தி சீராகப் பேணிக் காக்கப்பட வேண்டும். இதற்காகக் குறுகியகால, நடுத்தர, நீண்டகால, நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்கும். புதிய அனல்மின் நிலையங்களை நிறுவுவதாக இருந்தால் தண்ணீர், நிலக்கரி போன்ற மூலப் பொருட்கள் கிடைக்கும் அடிப்படையில் அமைக்க வேண்டும். மிகப்பெரிய அனல் மின் நிலையங்கள் நிறுவுவதை நான் ஆதரிக்கின்றேன்."

—ஆர். வி. சுப்பிரமணியன்

[16-3-76 அன்று நிருபர்களிடம் ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் கூறியது].

படுத்துவதற்கான ஓர் உத்தியாகவே இதுவரை கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. இப்போது தொடர்ந்து மீண்டும், மீண்டும் ஏற்படுகின்ற பிரசவங்கள் காரணமாய் நலிவுற்றுவிடுகிற தாய்மார்களின் உடல் நலத்தைப் பாதுகாக்கும் ஏற்பாடு என்ற முறையிலும் புதிய முக்கியத்துவம் பெற்றுவருகிறது.

இனி, மூன்று குழந்தைகளுக்கு மேல் பெறும் பெற்றோர் விஷயத்தில் எல்லா விதமான கல்விச் சலுகை வசதிகளையும், சுகாதார, சேவை வசதிகளையும் கிடைக்காமல் செய்துவிட வேண்டும் என்று 2,000 கிராமப் பெண்கள் ஒரு கருத்தரங்கில் கோரியுள்ளனர் என்பது பெண்களிடையே இந்த விழிப்புணர்ச்சி எந்த அளவுக்குப் பரவி இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிற ஓர் அறைகூவல் ஆகும்.

தங்கள் வீட்டு ஆண்பிள்ளைகளின் குடிப்பழக்கத்தைத் தடுக்க வேண்டும் என்றும், மது உபயோகத்தைத் தடுக்க வேண்டும் என்றும், பெண்கள் விடுத்துள்ள கோரிக்கைகளுக்கு நல்ல எதிரொலியாக சர்வதேச மகளிர் ஆண்டில் அரசு மதுவிலக்கை அமல் செய்வதற்காகத் தொடங்கப்பட்ட 12-அம்சத் திட்டம் துணிச்சலானதாகும். இத்திட்டம் எத்தனையோ குடும்பங்களுக்கு வெகுநாட்களாய் நீடித்து இருந்து வருகிற ஒரு பெரும் குறையை நீக்கி, மிகவும் தேவையான ஏற்பாட்டை அளிக்கும்.

இறுதியாகக் கூறுவதானால் சர்வதேச மகளிர் ஆண்டு, பெண்களை அவர்கள் ஆழ்ந்து கிடந்த செயல்முடக்க நிலை, அறியாமை ஆகியவைகளிலிருந்து உலுப்பி, எழுப்பி, எதிர்காலம் பற்றிய ஓர் நன்நம்பிக்கையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. அவர்கள் தங்கள் பங்குப் பணியை ஆற்றத் தயாராக நிற்கிறார்கள். இப்படிப் பொங்கி எழுந்துள்ள இந்த ஊக்க உணர்ச்சி வீணாகி விடாமல் இருக்க வேண்டுமானால், அவர்களின் உற்சாகத்தைச் சரியான வழியில் பாய்ந்து பரவுவதற்குரிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதிர்ஷ்டவசமாக அரசாங்கம் ஏற்கெனவே எதிர்கால அலுவல் திட்டம் ஒன்றைத் தயாரித்து, அதைச் செயல்படுத்துவதற்கான ஒரு நிர்வாக அமைப்பு முறையை உருவாக்கியும் வருகிறது.

கோ-ஆப்டெக்ஸ் மக்கள் விரும்பும் வகைகள்! நியாயமான விலைகள்!

கோ-ஆப்டெக்ஸ் சேலைகள், அழகு மிளிரும் ஆரணங்குகள்!

ஆரணி, கும்பகோணம், காஞ்சிபுரம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம், மதுரை பருத்தி கைத்தறிச் சேலைகள், அச்சிட்ட சுங்கடி சேலைகள் மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்.



கோ-ஆப்டெக்ஸ் படுக்கை விரிப்புகள், மலர்ப் படுக்கைகள்!

நேர்த்தியான நெசவு கைத்தறிப் படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணை உறைகள். உங்களுக்கு சொகுசு அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ் துவாலைகள், தூய்மையான துவாலைகள்!

சாதா, டர்கிஷ் வகைகள், மென்மையான மற்றும் ஈரத்தை உறிஞ்சும் வகைகள். உங்களது சுகாதாரத்துக்கு இன்றியமையாதவை!



கோ-ஆப்டெக்ஸ் லுங்கிகள், வசதியானவை நீடித்துழைப்பவை!

உங்கள் விருப்பத்துக்குகந்த சாதா, கோடிட்ட அல்லது கட்டமிட்ட பல வகைகளில்.

மற்றும் கைத்தறிப் பருத்தி வகைகள், வேட்டிகள், உடுப்புகளுக்கான துணிகள், அலங்காரத் துணிவகைகள்—குடும்பத்தினர் அனைவருக்குமே உகந்த முழுதும் புதிய வகைகள்.

கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறியே வண்ணத்துப்பூச்சி

இந்தியப் பிரதமரின்

20

அம்சத் திட்டம்

உழவர் வாழ்வு
உயர்ந்திட...

மாணவர் வருங்காலம்
வளம்பெற...

வழிகாட்டுகிறது!

துணை நின்று தோள் கொடுப்போம்!
வெற்றிபெற உழைத்திடுவோம்!!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

அரசு – மிகவுயர்ந்த தரமானது

போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீக்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை

யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப் படுகிறது.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

அரசு – வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

தமிழக ஆளுநர் அவர்களின் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்து!

RAJ BHAVAN

GOVERNOR OF TAMILNADU
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்
மகிழ்ச்சியும் மங்களமும்
மிகுந்த தமிழ்ப் புத்தாண்டு
நன்னாளில் எல்லா இன்பமும்
வளமும் பெற்று இனிது வாழ
தமிழ் நாட்டு மக்களுக்கு
எனது இதயம் கனிந்த
நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்
கொள்ளுகிறேன்.

தமிழக ஆளுநர் திரு கே.கே.ஷா அவர்கள் தன் கைப்பட தமிழில் எழுதியுள்ள புத்தாண்டு வாழ்த்து!

ஏழைகளின் இன்னல்களைக் குறைத்திடுவோம்

பிரதமரின் பேருரை

"நமது பொருளாதாரத் திட்டங்கள், ஏழைகளின் இன்னல்களைக் குறைத்து, நாட்டு முன்னேற்றப் பணியில் அவர்களையும் ஈடுபடுத்தும் வகையில் வகுக்கப்பட்டுள்ளன. இத்தகைய திட்டங்களைச் செயல்படுத்த வேண்டியது மாநில அரசுகளின் முழுமையான கடமையாகும். தொழிலாளர் பிரச்சினை, கிராமப் பாங்கு வசதி, கைத்தறித் துறை, பாசன வசதி, மின்சக்தி போன்ற துறைகளில் உள்ள பிரச்சினைகள் பற்றி ஏற்கெனவே விவாதிக்கப்பட்டு, அவற்றிற்கு ஓரளவுக்குத் தீர்வும் காணப்பட்டுள்ளது. ஆண்டுத் திட்டம் பற்றி விவாதங்கள் நடத்தியபோது, பாசன வசதி, மின்சக்தித் துறை பற்றியும் விவாதிக்கப்பட்டுள்ளது. நிலச்சீர்திருத்தம், கிராமச் சீரமைப்புத் திட்டங்கள் பற்றி விவாதிக்கப்பட வேண்டும்.

நிலச்சீர்திருத்தம்

"நிலச் சீர்திருத்தச் சட்டம் புதியது அல்ல. ஆனால் அது நமது பொருளாதாரச் சமூக முன்னேற்றத்திற்கு முக்கியமானதாகக் கருதப்பட்டதால், 20 அம்சத் திட்டத்தில் சேர்க்கப்பட்டது. நிலச்சீர்த்திருத்தச் சட்டங்களைச் செயல்படுத்துவதில் மெத்தனம் காணப்படுகிறது. மாநில அரசுகள் இதைப் போக்க மேற்கொண்ட முயற்சிகள் போதுமானவை அல்ல. உபரி நிலத்தை ஆர்ஜிதம் செய்து, நிலமற்றவர்களுக்கு ஒதுக்கீடு செய்வது, குறித்த கால அட்டவணைக்குள் நடைபெற வேண்டும். பல்வேறு மட்டங்களில் ஏற்படக்கூடிய கால தாமதத்தைத் தவிர்க்கத் தகுந்த நடவடிக்கைகளைத் தக்க நேரத்தில் மேற்கொள்ள வேண்டும்.

சட்டங்களைச் சிக்கலானதாக ஆக்கக்கூடாது !

"சிறிய பிரச்சினைகள் ஒவ்வொன்றிற்கும் தீர்வு காணும் அவசரத்தில்—அரசு, சட்டங்களை மேலும் சிக்கலாக மாற்றி விடலாம். நியாயமாகவும், நேர்மையாகவும் பொது மக்களுக்காகப் பணிபுரியும்போது, சட்டங்களைச் சிக்கலாக்க வேண்டிய அவசியம் இல்லை. அரசு நெறிமுறைகள் மிகவும் எளிதாக இருக்க வேண்டும். ஏற்கெனவே உள்ள விதிமுறைகளை மேலும் எளிதாக்க வேண்டும். சட்டங்களில் சிக்கல்கள் அதிகரிக்க, அதிகரிக்க, பெரும் அளவுக்குக் குறைபாடுகள் ஏற்படுகின்றன.

உபரி நில விநியோகம்

"உபரி நிலத்தை விநியோகிப்பதில் குறியளவுகளை எய்தும் அவசரத்தில், வன நிலம், பொது நிலம் ஆகியவையும், கிராமச் சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான நிலமும் கூட விநியோகிக்கப்படுகின்றன. இந்த அலுவல், நிலச்சீர்திருத்த நடவடிக்கையின் கீழ் வராது. இத்தகைய அலுவல் சில சமயங்களில் நன்மைக்குப் பதிலாகத் தீமையையே ஏற்படுத்திவிடும். நிலச்சீர்திருத்த முறையைச் செயல்படுத்துவதில் உள்ளூர் வருவாய்த் துறை ஊழியர்களுக்கும், பெரிய நிலச்சுவான்தார்களுக்குமிடையே இரகசிய உறவு இருப்பது தெரிய வந்துள்ளது. நிலச்சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அரசு ஊழியர்களாக இல்லாதவர்களைச் சேர்த்துக் கொள்வது நல்லதல்ல.

"நில உடைமை சம்பந்தமான விவரக்குறிப்பேடுகள் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டுள்ளன. குறிப்பாக முன்னாள் மன்னர்கள் வாழ்ந்த மாநிலங்களில் இதைப் பொறுத்தவரையில் காணப்படும் போக்கு, மகிழ்ச்சியளிப்பதாக இல்லை. நில ஆய்வு மூலம் நில உடைமை சம்பந்தமான குறிப்பேடுகளைத் தயாரிப்பது தான் சிறந்தது. ஆனால், இதற்குப் பல ஆண்டுகள் பிடிக்கும். அது வரை காத்திருந்து நிலச்சீர்த் திருத்தச் சட்டங்களைச் செயல்படுத்துவது இயலாத காரியம். ஆகையால் தற்காலிக முறையொன்றைக் கண்டுபிடிக்க வேண்டும். இதுபற்றி முதலமைச்சர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

தற்காலிக ஏற்பாடுகள்

"சில சமயங்களில் சில விஷயங்களை நாம் திருத்தியமைக்க முயற்சிக்கிறோம். கிராமக் கடன் தொல்லையை நீக்க நாம் ஆர்வம் காட்டினோம். ஆனால் சில மாநிலங்களில் வீட்டு வாடகைப் பாக்கி, காண்டிராக்டர்கள் முதலாளிகளுக்கான ஊதிய முன் பணம் போன்றவற்றையும் சேர்த்துக் கொடுக்க வகை செய்யும் விதத்தில் சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. தற்போது முதலாளிகள் இத்தகைய முன் பணத்தைத் தருவது கிடையாது. ஆகையால் தொழிலாளர்களின் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. கிராமக் கடன் தொல்லையை நீக்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்படும் என அறிவித்த போது, நாம் இதைக் கருத்தில் கொள்ளவில்லை. மற்றவைகளைப் பொறுத்தமட்டில், சட்டங்களை உன்னிப்பாக ஆராய வேண்டும். அதிகப் பிரச்சினைகளை உருவாக்காமல் தீர்க்கும் வகையில் இந்த அலுவல் உதவ வேண்டும்.

"சட்டத்தின் கட்டுக்கோப்புக்குள் வரவேண்டிய துறைகளில் கூடபிரச்சினைகள்ஏற்பட்டுள்ளன. ஏனெனில்,தற்காலிக ஏற்பாடுகள் எதையும் நாம் செய்யவில்லை. டில்லிக்கு அருகே செங்கற் சூளையில் பணிபுரிவோர் சம்பந்தமான பிரச்சினை அண்மையில் எனது கவனத்திற்கு வந்தது. இத்தகைய தொழிலாளர்களுக்கு உடனடி நிதி உதவி தேவைப்பட்டபோது, அவர்களுக்கு எங்கு செல்வது என்றே தெரியவில்லை. கிராமப் பாங்குகளின் கிளைகள் செயல்படத் துவங்கச் சிறிது காலம் பிடிக்கும். கூட்டுறவுச் சங்கங்கள், ஊராட்சிகள், மற்ற நிறுவனங்கள் இத்தகையோர்க்கு உதவ முன்வர வேண்டும்.

சூழ்நிலையைத் தவருகப் பயன் படுத்தக்கூடாது!

"இத்தகையோர்க்கு உதவ மற்ற வழிகளும் இருக்கலாம். தற்போது உள்ள ஏஜென்சிகளுக்குக் கடன் உதவி அளிப்பதற்கான உரிமங்களை வழங்கலாம். ஆனால் சூழ்நிலையைத் தவருகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்பதற்கான தீவிர உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும். இது பற்றி முதலமைச்சர்கள் பரிசீலனை செய்ய வேண்டும்.

பழைய அடகு வட்டிக்காரர்களிடம் மீண்டும் பழங்குடியினரும், மற்றவர்களும் சிக்கிக் கொள்ள வேண்டும் என்று நாம் விரும்பவில்லை. நிரந்தரமாக அவர்களுடைய இன்னல்களைப் போக்க நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு, தற்காலிக அடிப்படையில் அவர்களுக்கு உதவுவதற்கான வழியைக் கண்டு பிடிக்க வேண்டும்.

நகர்ப்புற நில உச்சவரம்பு

"நகர்மிகவும் முக்கியமானதாகும். அதை ஏற்றுக் கொண்டு செயல்படுத்தாத மாநிலங்கள் இதில் விரைந்து செயல்பட வேண்டும். நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தைச் செயலாக்கும்போது உள்ளூர் அரசு ஊழியர்கள் தங்களுக்குச் சாதகமாகச் செயல்படுவதைத் தவிர்க்கும் விதத்தில், நெறிமுறைகளை வகுக்க வேண்டும். இந்த வகையிலும் முதலமைச்சர்கள் அக்கறை காட்ட வேண்டும்.

"நகர்ப்புற நிலத்தை ஒதுக்கீடு செய்யும்போது தகுந்த நகரத் திட்ட அமைப்பு முறையையும், சாலை வசதியையும் திறந்தவெளி மைதான வசதிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். இந்த அலுவல், சிறு வீட்டு மனைகளில் கட்டடம் கட்டுவதற்குமுன் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் புதிய குடிசைப் பகுதிகள் ஏற்படாது.

உள்ளூர் தொழில்களுக்குப் புத்துணர்ச்சி

"கிராமப்புறப் பொருளாதாரத்தை மீண்டும் சிறக்கச் செய்வதில் திறமைமிக்கவர்களை அதிகமாக ஈடுபடுத்த வேண்டும் என்ற கருத்தை எல்லாரும் ஏற்றுக் கொள்வார்கள். கடன்வசதி, விவசாயத்திற்கான அடிப்படைப் பொருள்களை வழங்குவது, போன்ற துணை நடவடிக்கைகள் மூலம் நிலச்சீர்திருத்த அலுவலை பலப்படுத்த வேண்டும். விஞ்ஞான, தொழில் நுட்ப முறைகளைக் கடைப் பிடித்து உள்ளூர் தொழில்களுக்குப் புத்துணர்ச்சி அளிக்க வேண்டும். மேலும் கல்வியையும் கிராமங்களில் பரப்ப வேண்டும். மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதும் மற்றொரு பிரச்சினையாகும்.

"கிராமப்புறச் சீரமைப்புப்பணியில் ஈடுபடும்போது சுற்றுப்புறச் சுகாதாரத் திட்டப் பணியையும் இணைக்க வேண்டும். இத்திட்டங்கள் யாவும் ஒருங்கிணைந்த திட்டங்களாகக் கருதப்பட வேண்டும்.

"மாநில அரசுகள் இதுவரை மேற்கொண்ட முன்னேற்றப் பணிகளுக்காக, அவற்றைப் பாராட்டக்- கடமைப்பட்டுள்ளேன். ஆனால், மெத்தனமாக நடைபெறக் கூடாது என்பதையும், விரைந்து நாம் பல பணிகளை மேலும் செய்ய வேண்டியிருக்கிறது என்பதையும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்.

—(புதுடில்லியில் 5-3-'76 அன்று நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் மாநாட்டைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை).

ஆளுநர் அறிவிப்பு

"மற்றவர்களுக்கு உதவக்கூடிய வகையில் தமிழ்நாட்டில் உணவு தானிய விளைச்சல் பிரமாதமாக இருக்கிறது" என்று தமிழ்நாடு ஆளுநர் திரு கே. கே. ஷா அவர்கள் அறிவித்தார்.

செய்தியாளர்கள் சந்திப்பின்போது இவ்வாறு அறிவித்த ஆளுநர் அவர்கள் மேலும் கூறியதாவது:

சீரணி கலைக்கப்பட்டது

சீரணிப் படையைக் கலைத்துவிட அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

உள்ளூர் தலைமைப் பயிற்சியையும், கிராமப்புறத் தொண்டினையும் முக்கிய நோக்கமாகக் கொண்டுதான் சீரணி தொடங்கப்பட்டது. கடந்த எட்டாண்டுகளில் சிறுசிறு வேலைகளை இப்படை செய்து முடித்திருக்கிறது.

சீரணிப் படை மேற்கொண்ட கட்டிட வேலைகளுக்குப் பாதித் தொகையை அரசாங்கமே உதவித் தொகையாக வழங்கியிருக்கிறது. மற்ற வேலைகளுக்கு மூன்றில் ஒரு பங்கு உதவித் தொகையைத்தான் அரசு வழங்கி வந்திருக்கிறது.

ஆண்டொன்றுக்கு ரூ. 14 இலட்சம் செலவு

இப்படையின் வேலைகள் அரசாங்கத்தின் தணிக்கைக்கு உட்பட்டவை.

இது அரசியல் சார்பில்லாமல் இருக்க வேண்டும் என்று ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் உண்மையில் அது அப்படிச் செயல்படவில்லை. சீரணியில் ஆட்கள் சேர்க்கப்படுவதில் அரசியல் பாரபட்சம் இருந்திருக்கிறது. அமைப்பும் சரியாக இல்லை. இவர்கள் செய்துவந்த வேலைகளும் மிகச் சிறந்தவை என்று கூற முடியாது.

இவர்களுக்காக அரசாங்கம் ஆண்டுதோறும் 14 இலட்சம் ரூபாய் செலவிட்டு வந்திருக்கிறது.

கணக்கில் ஒழுங்கில்லை

தியாகம், மற்றும் தன்னிச்சையாக வேலை செய்வதில் உள்ள ஆர்வத்தைத் தற்சமயம் இப்படையினர் இழந்து வருவதாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இது தவிர, கிராமப்புறங்களில் சீரணிப் படையினர் செய்த வேலைகளுக்கு ஒழுங்கான கணக்குகளும் கிடையாது.

எனவே, ஏப்ரல் முதல் நாளில் இருந்து சீரணிப்படையைக் கலைத்துவிடுவதென்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை அந்தந்தக் குறிப்பிட்ட மாவட்டங்களில் வேறு பயனுள்ள காரியங்களுக்குச் செலவிடப்படும்.

இளைஞர் அணி நிறுத்தப்படும்

இளைஞர் அணியில் மேற்கொண்டு இனி யாரையும் சேர்ப்பது இல்லை என்றும், இதுவரை சேர்க்கப்பட்டவர்களுக்கான நான்காண்டுப் பணி முடிந்ததும் அதனையும் நிறுத்திவிடுவது என்றும் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

1971-ல் இளைஞர் அணி தொடங்கப்பட்டது. நவீன விவசாய முறைகள் பற்றி பிரச்சாரம் செய்யவும், கால்நடை மருத்துவத்தில் உதவி செய்யவும் வேளாண்மைக் கருவிகளைச் செப்பனிடவுமான நோக்கங்களோடுதான் இந்த அணி ஆரம்பிக்கப்பட்டது.

இவர்களுக்கு ஆறுவார காலம் பயிற்சி தரப்பட்டு வந்தது. இந்தப் பயிற்சியும் அவர்களுக்குப் போதாது. அவர்கள் ஆற்றி வந்த பணியும் திருப்திகரமாக இல்லை. இந்தப் பணிக்கு ஆள் எடுப்பது 1975 மார்ச் மாதத்தோடு நிறுத்தப்பட்டுவிட்டது.

ஏற்கெனவே, முதன் முதலில் இந்த அணியில் சேர்ந்தவர்கள் நான்காண்டுகள் பணியாற்றியிருப்பதால், அதற்குப் பிறகு சேர்ந்தவர்களையும் நான்காண்டு காலப் பணி வரை அரசாங்கம் வைத்திருக்கும்.

சலுகை

இளைஞர் அணியினர் அரசுப் பணிகளிலும் கிராமசேவகர்களாக சேரவும் சலுகை தரப்படும். அதற்கான தகுதிகள் அவர்களுக்கு இருக்க வேண்டும். ஆனால், வயதில் நான்காண்டுகள் சலுகை காட்டப்படும்.

இந்த அணியில் உள்ள பெண்கள் நர்சுகளாகவும், மருத்துவப் பெண்களாகவும் வேலையில் சேர முன்னுரிமை தரப்படும்.

மாதச் சம்பளம்

தற்சமயம் 469 ஆண்களும், 80 பெண்களும் இளைஞர் அணியில் நான்காண்டுப் பணியை முடித்தவர்களாக இருக்கிறார்கள். இந்த அணியினருக்கு மாதம் ரூ. 175 வீதம் கொடுக்கப்பட்டு வருகிறது.

—இதைத் தொடர்ந்து செய்தியாளர்கள் கேட்ட பல்வேறு வினாக்களுக்கும் ஆளுநர் அவர்கள் விளக்கமளித்தார். அந்த விளக்கங்களின் விவரம் வருமாறு:

இந்த ஆண்டில் புதிய கல்லூரிகளோ, பள்ளிகளோ தொடங்கப்பட மாட்டாது.

அரசாங்கப் போக்குவரத்துக் கழகங்களில் பெயர்களை மாற்றும் உத்தேசம் எதுவும் இதுவரை இல்லை.

அரிசி நடமாட்டக் கட்டுப்பாடு

மாவட்டங்களுக்கு இடையே அரிசி, நெல் நடமாட்டக் கட்டுப்பாடு தளர்த்தப்படுமா என்று கேட்கப்படுகிறது.

அரிசி கொண்டு போவதற்கு மாவட்டத்திற்கு உள்ளே இருந்த கட்டுப்பாடு முன்பே நீக்கப்பட்டது. அது எந்த அளவுக்குப் பயனுள்ளதாக இருக்கிறது என்பதைக் கவனித்து வருகிறோம்.

இது வெற்றி பெற்றால் மாவட்டங்களுக்கு இடையே உள்ள தடையை நீக்குவது பற்றியும் அரசு யோசிக்கும்.

மத்திய 'குவியலுக்கு'த் தமிழ்நாட்டிலிருந்து ஒன்றரை லட்சம் டன் அரிசி அனுப்பப்படும்.

உணவுப் பொருள் வழங்குவதில் முறைகேடுகளைத் தடுத்திட புதிய அமைப்பு!

தமிழ்நாடு அரசின் நிறுவனமான நுகர்ப் பொருள் வாணிபக் கழகச் சில்லறை அங்காடிகளிலோ அல்லது அரசுச் சார்புடைய இதர உணவுப் பங்கீட்டுக் கடைகளிலோ உணவுப் பொருள் வழங்குவதில் முறைகேடுகள் ஏற்படுவதைத் தடுத்திட, தமிழ்நாடு அரசு தனி அமைப்பு ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து செயல்பட்டு வரும் இந்த அமைப்பு, உணவுப் பங்கீட்டுக் கடைகள் சம்பந்தப்பட்ட புகார்களை உடனுக்குடன் விசாரித்து தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும்.

உணவுப் பங்கீட்டுக் கடைகளில் வழங்கப்படுகின்ற பொருட்கள் தரக்குறைவாக இருந்தாலோ அல்லது வழங்குவதில் ஏதேனும் முறைகேடுகள் நடந்தாலோ உடனடியாக சென்னை தியாகராய நகர், விஜயராகவாச்சாரி சாலை 2-ஆம் எண்ணிலுள்ள "புகார் பிரிவு" அலுவலகத்திற்குத் தொலைபேசி மூலமோ, நேரிடையாகவோ அல்லது அஞ்சல் மூலமோ தெரிவிக்கலாம். பெறப்பெற்ற புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்திட, இதற்கென நியமிக்கப் பெற்றுள்ள அலுவலர்கள் புகார்களுக்குரிய கடைகளுக்குச் சென்று சோதனை நடத்தி தகுந்த நடவடிக்கைகளை எடுப்பார்கள். புகார்கள் பற்றி தெரிவிக்க செயல்படுகின்ற தொலைபேசி எண் 441441.

அட்டைப்பட விளக்கம்

எங்கெங்கு காணினும் உயர் விளைச்சல் ரகங்களே! இதன் பயனாய்த் தமிழ்நாட்டில் 1975–76-ஆம் ஆண்டின் மொத்த உணவு தானிய உற்பத்தி 78 இலட்சம் டன்னாகவும், அதில் அரிசி உற்பத்தி மட்டும் 61 இலட்சம் டன்னாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகையச் செழிப்பான நிலை இதுவரை இல்லை என்பதையும், இந்நிலை 1976–77-ஆம் ஆண்டில் மேலும் உயரும் என்பதையும் அட்டைப் படம் சொல்லாமல் சொல்லுகிறது.

ஆலோசகர் கருத்துரைகள்

"நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் ஒன்றை வெட்டுவதன் மூலமாக நெய்வேலி அனல் மின்சார நிலையத்தை விரிவுபடுத்துவது பொருளாதார ரீதியாக அவசியமா என்பதைக் கண்டறிய ஆய்வு நடக்கிறது."

"நெய்வேலி அனல் மின்சார நிலையத்தில் மின்சார உற்பத்திக்கு ஆகின்ற செலவை, தெற்கு மண்டலத்தில் உள்ள இதர மாநிலங்களில் மின்சாரத்தை உற்பத்திச் செய்வதற்கும், அதனைத் தமிழ் நாட்டுக்குக் கொண்டு வருவதற்கும் ஆகின்ற செலவுடன் ஒப்பிடப்படும். பிற மாநிலங்களில் மின்சாரத்தை உற்பத்திச் செய்து, அதனைத் தமிழ் நாட்டுக்குக் கொண்டு வருவதற்கு ஆகக்கூடிய செலவை விட, நெய்வேலி அனல் மின்சாரத்தின் உற்பத்திச் செலவு குறைவானது என்று தெரிய வருமானுல் நெய்வேலி அனல் மின்சார நிலையம், இரண்டாவது சுரங்கம் ஒன்றை வெட்டுவதன் மூலம் விரிவுபடுத்தப்படும். எனவே நெய்வேலி அனல் மின்சார நிலையத்தை மேற்கொண்டு விரிவுபடுத்துவது, பொருளாதார உண்மைகளைப் பொறுத்ததாக இருக்கும்."

"தற்போது நெய்வேலி அனல் மின்சார நிலையம் 600 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்திச் செய்யக் கூடிய திறன் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. நிறுவப்பட்ட இந்த உற்பத்தித் திறனில் சாத்தியமான அதிகபட்ச உற்பத்தியை எட்டிட, சுரங்கத்தை வலிமைப்படுத்தவும், விரிவு படுத்தவும் மத்திய அரசு ஏற்கனவே முடிவு செய்துள்ளது".

"புதிதாக இரண்டாவது சுரங்கம் ஒன்றை வெட்டுவதன் சாத்தியம் பற்றி பல்வேறு ஆய்வுகள் தொடங்கப்பட்டுள்ளன.

"தமிழ் நாட்டில் தொழில்களின் மின்சாரம் சம்பந்தப்பட்ட எல்லாத் தேவைகளையும் அரசு பூர்த்தி செய்யும். தொழில் துறையிலோ விவசாயத் துறையிலோ, உற்பத்திக்கு மின்சாரப் பற்ருக் குறையால் தடை ஏற்படாது".

"மின்சாரத்தைச் சிக்கனமாய் பயன்படுத்தவும், விரயத்தைத் தடுக்கவும், அவசியமற்ற உபயோகத்தைக் குறைக்கவும் நடவ்டிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்."

(26-3-76 — அன்று தென்னிந்திய தொழில், வர்த்தகச் சபைக் கூட்டத்தில் ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்ரமணியன் அவர்கள் கூறியது.)



கைத்தறிக்குப் புத்துயிர் அளிக்கப்படும் :

"கைத்தறித் துறையைப் பொறுத்த வரையில், தமிழ் நாடு மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தில் கைத்தறித் துறைக்காக நல்ல பல முன்னேற்றத் திட்டங்கள் இடம் பெற்றுள்ளன.

"நீண்ட நெடுங்காலமாக, அரசாங்கத்தில் உள்ள அனைத்துத் துறைகளும், தங்கள் தேவைகளுக்குக் கைத்தறி துணிகளையே வாங்க வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டு வந்தது. இதனை அரசு ஏற்றுக் கொண்டு பயனுள்ள வகையில் செயல்படுத்தி வருகிறது.

"தமிழ் நாடு அரசுக்குச் சொந்தமான எல்லாப் போக்குவரத்துக் கழகங்களும், தங்கள் ஊழியர்களுக்குச் சீருடை கொடுப்பதற்காகக் கைத்தறித் துணிகளை வாங்க இருக்கின்றன. மற்ற துறைகளும் இதனைப் பின்பற்றும் என்று நம்புகிறேன்.

"கைத்தறித் துணிகளை வாங்குவோருக்கு, விலையில் தள்ளுபடி அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு தள்ளுபடி தருவது, தற்போதைக்கு நிறுத்தப்படமாட்டாது. ஆனால் இப்படி தள்ளுபடி கொடுப்பதை நீண்ட காலத்திற்கு நீடிக்காமல், நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை, உயர்த்துவதற்குரிய வழி வகைகளை ஆராய வேண்டும்.

"நமது கைத்தறித் துணிகளுக்கு அமெரிக்காவில் நல்ல வரவேற்பு இருக்கிறது. இன்று இருக்கும் நாகரீகம் அடுத்த சில மாதங்களில் மாறிவிடக் கூடும். இதனைக் கருத்தில் கொண்டு வெளிநாட்டுச் சந்தைகளில் அவ்வப்போது மாறும் நாகரீகங்களுக்கு ஏற்ப நமது கைத்தறித் துணிகள் தயாரிக்கப்பட வேண்டும்.



கைத்தறித் துறையை வலுப்படுத்தி அதற்குப் புத்துயிர் அளிப்பதற்கான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த இந்திய அரசு ரூபாய் 300 கோடி செலவிடும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாகத் தமிழ் நாட்டில் மேலும் 1,50,000 கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டு வரப்படுவர்.

கரூரில் 1,000 நெசவாளர்களை உள்ளடக்கிய ஏற்றுமதி நோக்கம் கொண்ட கைத்தறித் துணிகள் உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. காஞ்சிபுரத்திலும் ஈரோட்டிலும் மேற்கொள்ளப்படும் தீவிர கைத்தறி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் மேலும் 10,000 நெசவாளர்கள் கொண்டு வரப்படுவர். இத் திட்டங்கள் அனைத்துக்கும் அடுத்த 2 முதல் 3 ஆண்டுகளில் சுமார் ரூபாய் 6 கோடி செலவிடப்படும்.

[அனைத்து இந்திய கைத்தறிப் பொருட் காட்சியை 4-4-76 அன்று சென்னையில் ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்ரமணியன் அவர்கள் துவக்கி வைத்த போது கூறியது].

பாடப் புத்தகங்களை ஆராய நால்வர் குழு!



கடந்த ஒன்பதாண்டுகளில், அரசினுல் அனுமதிக்கப்பட்ட பாடப் புத்தகங்களில் உள்ள ஆட்சேபகரமான பகுதிகளைக் கண்டறிந்து அரசுக்குத் தெரிவிக்க 20-3-76 அன்று நால்வர் குழு ஒன்றைத் தமிழக அரசு நியமித்துள்ளது.

அக்குழுவிலுள்ளோர் பற்றிய விவரம் வருமாறு :

திரு. பி. ஆலாலசுந்தரம் செட்டியார்
(தாம்பரம் கிறித்துவக் கல்லூரி ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசியர்)

திரு. எஸ். பாலகிருஷ்ண ஜோஷி
(இந்து தியாலஜிகள் உயர் நிலைப்பள்ளி முன்னுள் தலைமை ஆசிரியர்)

திரு. டி. பி. பாரதி
(பின்தங்கியோர் நலத் துறை இயக்குநராக இருந்து ஓய்வு பெற்றவர்)

திரு. சையத் யாகூப்
(பள்ளிக் கல்வி இயக்குநராக இருந்து ஓய்வு பெற்றவர்)

இந்த நால்வர் குழுவினர் மேற்கொள்ளும் இப்பணிக்காக தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், பள்ளிக் கல்வி இயக்குநரகம், அரசுத் தேர்வு இயக்குநரகம் ஆகியவை தேவையான உதவிகளைச் செய்யும்.

குறிப்பிட்ட காலத்திற்குள் பாடநூல்களில் உள்ள முரண்பாடான பகுதிகள் பற்றி அரசுக்கு அறிக்கை அளிக்குமாறு இக்குழுவினர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.



வாழ்வு சிறக்க வளம்பெற சேமியுங்கள்

எங்களிடம் போடப்படும் வைப்புத் தொகை (Fixed Deposits) என்றைக்கும் பாதுகாப்பாய் இருக்கும். காரணம் எங்களது நிறுவனம் தமிழக அரசுக்குச் சொந்தமானது.
எங்களிடம் போடப்படும் வைப்புத் தொகை உங்களுக்கு நிறைய வட்டியை ஈட்டித் தருகிறது. அதனுல் உங்களின் வருவாய் விரைவில் கூடுகிறது.

	ஓர் ஆண்டிலிருந்து இரண்டு ஆண்டுக்குள்	இரண்டு ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள்	மூன்று ஆண்டிலிருந்து நாங்கு ஆண்டுகளுக்குள்	நான்கு ஆண்டும் அதற்கு மேலும்
வைப்புத்தொகைக்கு அளிக்கப்படும் வட்டிவிகிதம்	11½%	12%	12½%	13%

விபரங்களுக்கு தயவு செய்து அணுகவும்:-
தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்
(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)
5, கிரீம்ஸ் ரோடு, ஆயிரம்விளக்கு, சென்னை-600 006

சுகவனேஸ்வர், ஐ.ஏ.எஸ்.
நிர்வாக இயக்குநர்.



தமிழ்நாட்டில் வனத் துறை மேம்பாடு!

1976-ஆம் ஆண்டு மார்ச் 21-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 'உலக வனவள நாளாக' கொண்டாடப்பட்டதை யொட்டி இந்தச் சிறப்புக் கட்டுரை வெளியிடப்படுகின்றது.

வனங்கள், மனித நல்வாழ்வுக்கு இன்றியமையாத இயற்கைச் சொத்தாகும். மரம், விறகு, கோந்து, மெழுகு, அத்தியாவசிய எண்ணெய் மற்றும் பல உபயோகப் பொருட்களை வனங்கள் தருகின்றன. காகிதம், காகிதஅட்டை,செயற்கைப்பட்டு, தீப்பெட்டி, தோல், மரம் அறுக்கும் ஆலைகள் போன்ற ஏராளமான தொழிற்சாலைகள், தங்களின் கச்சாப் பொருட்களுக்குக் காடுகளையே சார்ந்துள்ளன. மண் வளப் பாதுகாப்புக்கும் மழைநீர் சீராக ஓடுவதற்கும் வனங்கள் உதவுகின்றன; அதன் மூலம் வெள்ளப் பாதிப்பு ஏற்படுவதைக் குறைக்கின்றன. சுற்றுப்புற அசுத்தத்தின் தீமைகளைக் கட்டுப்படுத்தும் முக்கியப் பணியையும் அவை ஆற்றுகின்றன.

மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழ்நாட்டின் வன வளம் குறைவானதே. தற்போது இந்த மாநிலத்தில் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதி, பாதுகாக்கப்பட்ட நில பகுதிகளின் மொத்த நிலப்பரப்பு 20,925 சதுர கிலோ மீட்டராகும். மொத்த நிலப் பரப்பில் இது 16.1 சதவிகிதமாகும். ஆனுல் தேசிய வனத் துறைக் கொள்கை, வனத்தின் பரப்புக்கு 33 சதவிகித அளவு குறியளவு நிர்ணயித்துள்ளது. இந்த மாநிலத்தின் பெரும்பகுதி 700 மில்லி மீட்டருக்கும் குறைவான ஆண்டு மழையுடன் பாதி வறட்சியான வானிலையைக் கொண்டிருப்பதால் இங்கு இயற்கை வனங்கள் மிகக் குறைவான உற்பத்தித் திறனைக் கொண்டுள்ளன. எனவே, வனங்களின் உற்பத்தியை மேம்படுத்தி அதன் மூலமான வருவாயை அதிகபட்சம் உயர்த்துவதே வனத்துறை மேம்பாட்டின் முக்கிய நோக்கங்களில் ஒன்ருகும்.

ஐந்தாண்டு திட்டங்களினுல் வனத் துறை வளர்ச்சி :

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வனத்துறைக்கு முழுமையான கவனம் செலுத்த இயலவில்லை என்றுலும், அடுத்தடுத்த ஐந்தாண்டுத் திட்டங்களில் வனத் துறை வளர்ச்சியின் வேகம் உறுதியாக முன்னேறியுள்ளது. நான்காவது திட்ட இறுதி வரையில், பல்வேறு திட்டங்களின்படி மொத்தம் 1,442.74 இலட்சம் ரூபாய் இத்துறைக்குச் செலவிடப்பட்டுள்ளது.

பல்வேறு வன வளத் திட்டங்கள், தேக்கு, தீப்பெட்டி தயாரிப்பதற்கான மரம், முந்திரி, ரப்பர் போன்ற தொழில்துறைப் பொருட்களுக்கான தோட்டங்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. காகிதம், செயற்கைப்பட்டு, மரத்தை அடிப்படையாகக் கொண்ட மற்ற தொழிற்சாலைகளின் தேவைகளைச் சமாளிப்பதற்கு யூகலிப்டஸ், தோல் பதனிடுவதற்குத் தேவையான வாட்டில் மரம், மூங்கில் போன்ற விரைவாக வளரும் தோட்டங்களைப் பயிரிடுவதற்குச் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. வன விரிவாக்கம் பண்ணைக்காடு ஆகிய திட்டங்களின் கீழ், ஏராளமான கிராமப்புற தரிசு நிலங்களும் ஆற்றங்கரைப் பகுதிகளும், ஏரி-கடற்கரைப் பகுதிகளும் வனமயமாக்கப்பட்டுள்ளன.

நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களின் படுகைப் பகுதிகளில் ஒருங்கிணைந்த முறையில் மண் வளப் பாதுகாப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீர்த்தேக்கங்களில் வண்டல் மண் படிவதையும், மண் அரிப்பையும் இது குறைக்கிறது.

மற்ற முக்கியத் திட்டங்கள் பின்வருமாறு :

கட்டட வேலைக்கான மரம் (டிம்பர்): தற்போது தமிழ் நாட்டின் ஆண்டுத் தேவை சுமார் 3 இலட்சம் டன் மரமாகும். ஆனுல் 70 ஆயிரம் டன்தான் ஓராண்டில் உற்பத்தியாகிறது. இம்மாநிலத்தின் மரத்தேவையில் பெரும் பகுதி, மற்ற மாநிலங்களிலிருந்து தருவிக்கப்படுகிறது. ஐந்தாண்டு திட்டங்களில் கட்டட வேலைக்கான மரங்களை, குறிப்பாகத் தேக்கு மரத்தை வளர்ப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அதற்கு அனுகூலமான மழையும் மண்வளமும் கோயமுத்தூர், நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ளன.

விறகு: தமிழ் நாட்டுக்கு ஆண்டு ஒன்றுக்குத் தேவையான விறகு (மரக்கரி உட்பட) 90 இலட்சம் டன் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கு ஆண்டுக்கு 30 லட்சம் டன் விறகே உற்பத்தியாகிறது. மீதித் தேவைப்படும் விறகு, அண்டை மாநிலங்களான கேரளாவிலிருந்தும் ஆந்திரப் பிரதேசத்திலிருந்தும் வாங்கப்படுகிறது.

வனத்துறை, விறகுத் தேவையைச் சமாளிப்பதற்காகக் கடற்கரைப் பகுதிகளிலும் ஆற்றங்கரைகளிலும் சவுக்கு மரங்களைப் பயிரிடுகிறது. யூகலிப்டஸ் உள்ளூர் பல ரக மரங்கள் ஆகியவையும் பெருமளவில் வளர்க்கப்படுகின்றன.

காகிதக்கூழ் மரத் தோட்டங்கள்; காகிதம், செயற்கைப் பட்டுத்தொழிற்சாலைகள், முக்கிய மரக்கூழ் தொழிற்சாலைகளாகும். அத்தொழிற்சாலைகளுக்கு ஆண்டுக்கு 2 இலட்சம் டன் மரக்கூழ் தேவைப்படுகிறது. அவற்றில் பெரும்பகுதியை வனத்துறை வினியோகிக்கிறது. இதற்கு, மூங்கில், யூகலிப்ட்ஸ், வாட்டில் ஆகிய மரங்கள் முக்கியமாக உபயோகப்படுகின்றன.

வாட்டில் (தோல்பதனிடுவதற்குத் தேவையான மரம்): தமிழ்நாட்டின் முக்கியத் தொழில்களில் தோல் பதனிடுதலும் ஒன்ருகும். வாட்டில் மரத்தூள், வாட்டில் மரப்பட்டை ஆகியவை இதற்குப் பயன்படுகின்றன.

நீலகிரி, கொடைக்கானல் மலைப்பகுதிகளில் கரிய வாட்டில் மரங்கள் மொத்தம் சுமார் 24,400 எக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டுள்ளன. பெருமளவு இறக்குமதியை நம்பியிராமலேயே தோல் தொழிற்சாலைகளின் தேவைகளைச் சமாளிக்கும் பொருட்டு, வாட்டில் மரப் பட்டைகளின் உற்பத்தி தீவிரமாக்கப்பட்டுள்ளது.

செயற்கைப் பட்டு நூலிழைத் தொழிற்சாலைக்கும் வாட்டில் மரம் உபயோகப்படுகிறது.

முந்திரி: உலகத்தின் 90 சதவிகித முந்திரிப் பருப்புத் தேவையை இந்தியாவே விநியோகித்தாலும் அது கச்சாப் பொருட்களின் இறக்குமதியைப் பெருமளவு நம்பியுள்ளது. 1973-74-ல் 67 கோடி ரூபாய் மதிப்புக்கு முந்திரிப் பருப்பு ஏற்றுமதி செய்யப்பட்டிருந்த போதும், 38 கோடி ரூபாய் மதிப்புக்கு சுமார் 2 இலட்சம் டன் கச்சா முந்திரிக் கொட்டைகளை இந்தியா இறக்குமதி செய்தது. ஆகையால், முந்திரிக் கொட்டைகளின் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது அவசியத் தேவையாகும்.

தமிழ்நாடு வனத்துறை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வனப் பகுதிகளில் பெருமளவு முந்திரி சாகுபடியை மேற்கொண்டது. அது முதல் முந்திரித் தோட்டங்களின் நிலப் பரப்பு பெருகி, 1974-75-ல் மொத்தம் 36,200 எக்டேர் நிலப் பரப்பில் முந்திரி சாகுபடி செய்யப்பட்டது. முக்கியமாக செங்கல்பட்டு, தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், ராமனுதபுரம் மாவட்டங்களில் முந்திரித் தோட்டங்கள் வளர்க்கப்பட்டுள்ளன.

ரப்பர், தேயிலை: அண்மைக் காலங்களில், ரப்பர், தேயிலை போன்ற தோட்டப் பயிர்களின் சாகுபடியையும் வனத்துறை மேற்கொண்டுள்ளது. ரப்பர் மரம் வளர்ப்பதற்குப் போதுமான சூழ்நிலைகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளன. வனத்துறை, 1960-61-ல் இந்த மாவட்டத்தில் ரப்பர் பயிரிடத் துவங்கியது; இதுவரையில் சுமார் 3,500 எக்டேர் நிலப்பரப்பில் ரப்பர் தோட்டம் பயிரிடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்காவிலிருந்து குடியேறியவர்களின் புனர்வாழ்விற்காக, 81.49 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 800 எக்டேர் நிலப்பரப்பில் ரப்பர் பயிரிடும் திட்டம் ஒன்றை வனத்துறை துவக்கியுள்ளது. இத்திட்டத்தில் சுமார் 330, இலங்கை அகதிக் குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

நீலகிரியில் தேயிலைத் தோட்ட திட்டம், வனத்துறை நிறைவேற்றியுள்ள மற்ருெரு திட்டமாகும். சுமார் 6 கோடி ரூபாய் செலவில் 1,500 எக்டேர் நிலப் பரப்பில் தேயிலைத் தோட்டச் சாகுபடிக்கு இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்திஞல், ஸ்ரீலங்காவிலிருந்து குடியேறிய 1,750 அகதிக் குடும்பங்களுக்குப் புனர்வாழ்வு கிடைக்கும். இதுவரையில் 742 எக்டேர் நிலத்தில் தேயிலைத் தோட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது; 444 குடும்பங்களுக்கு வாழ்வு அளிக்கப்பட்டது.

வனத்துறை, பண்ணை வன விரிவாக்ககம்: இந்த மாநிலத்தில் வனப் பகுதிகளின் குறைவான நிலப்பரப்பைக் கருதி, வன எல்லைக்கு வெளியே உள்ள புறம்போக்கு நிலங்கள், ஏரிப் படுகைகள், கால்வாய் மற்றும் ஆற்றங்கரை ஆகிய ஏராளமான பகுதிகளை வனமயமாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. 1956-லிருந்து 1966 வரையில் வனத்துறை நடத்திய ஆய்வின்படி, சுமார் 5.98 இலட்சம் எக்டேர் நிலம், வனமயமாக்கக் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பண்ணை வனத்துறைத் திட்டம் 1960-61-ல் துவக்கப்பட்டது. 1974-75 வரையில் 47,300 எக்டேர் நிலத்தில் இது செயல்படுத்தப்பட்டுள்ளது. இதைத் தவிர ஆறு மற்றும் கால்வாய்க் கரைகளில் சுமார் 9,500 எக்டேர் நிலத்திலும் இத்திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது. உள்ளூர் மக்களின் மரம், விறகு, பசுந்தழை உரம் ஆகிய தேவைகளைச் சமாளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.



வன வளத் திட்ட விரிவாக்க வேகத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் சில மாவட்டங்களில் தனிப்பட்ட பிரிவுகள் துவக்கப் பட்டுள்ளன. தனியார் நிலங்களில் மர வளர்ப்பையும் இந்தப் பிரிவுகள் ஊக்கப்படுத்துகின்றன. இளம் செடிகளை மலிவான விலைக்குத் தருவதோடு, தேவையான தொழில்நுட்ப உதவியையும் அவை அளிக்கின்றன.

நீர்ப்பாசன மற்றும் நீர்மின் திட்டங்களின் படுகைப்பகுதிகளில், மண் அரிப்பைக் குறைத்து நீர்த்தேக்கங்களில் வண்டல் படிவதைக் குறைக்கும் கருத்துடன் மண் வளப் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாதுகாப்புச் சட்டங்களைக் கடுமையாக அமல்படுத்துவதன் மூலம் வன விலங்குப் பாதுகாப்பும், சுற்றுப்புற சூழ்நிலையின் சரியான நிர்வாகப் பராமரிப்பும் மற்ருெரு முக்கிய அபிவிருத்தி நடவடிக்கையாகும். இந்த மாநிலத்தில் அனேக வன விலங்கு பாதுகாப்பிடங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

ஒவ்வொரு திட்ட காலத்தின் போதும் வனத்துறை வளர்ச்சியின் வேகம் அதிகரித்து வருகிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வனத்துறைக்கு 8 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் தொலைபேசித் தொடர்பு வசதிகள்

தமிழ் நாட்டின் எல்லா வட்ட தலைநகரங்களுக்கும் தொலைபேசி வசதி அளிக்கப்பட்டுள்ளது. அதைப்போலவே, மாவட்டத் தலைநகரங்கள், துணை மாவட்டத் தலைமை இடங்கள், துணை வட்டத்தலைமை இடங்கள், 20 ஆயிரம் அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட இடங்கள் ஆகியவை அனைத்திலும் இந்த வசதி பின்கண்டவாறு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

	தொலைபேசி வசதி	
	மொத்தம்	அளிக்கப் பட்டவை
மாவட்டத் தலைநகர்கள்	16	16
துணை மாவட்டத் தலைமை இடங்கள்	51	51
வட்டத் தலைநகரங்கள்	122	122
துணை வட்டத் தலைமையிடங்கள்	9	9
20,000 அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட இடங்கள்	32	32

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 121 இடங்களுக்குத்தொலைபேசி வசதியை அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றில் 115 இடங்களுக்கு ஏற்கனவே தொலைபேசி வசதி வழங்கப்பட்டுள்ளது.

மொத்தம் 374 வட்டாரத் (பிளாக்) தலைமை இடங்களில் 305 இடங்களுக்குத் தொலைபேசி வசதி அளிக்கப்பட்டுள்ளது.

ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகையும், தொலைபேசி தொடர்பகத்திற்கு 12.5 கிலோமீட்டர் தூரத்துக்கு உட்பட்டும் உள்ள மொத்தம் 378 இடங்களில் 169 இடங்களுக்குத்தொலைபேசி வசதி இப்பொழுது உள்ளது.

ஸ்ரீரங்கம் தொலைபேசி டிரங்க் தொடர்பகம், ஆரணி, ராணிப்பேட்டை ஆகிய இடங்களில் தற்போது உள்ள தொடர்பக விரிவாக்கம், துறையூர், திருப்பத்தூர் ஆகிய இடங்களில் தற்போதுள்ள தொடர்பக விரிவாக்கம் ஆகியவை விரைவில் அளிக்கப்பட திட்டமிடப்பட்டுள்ள தொலைத் தொடர்பு வசதிகளாகும்.

கூடிய விரைவில் கோயமுத்தூரில் 2,000 வழித் திறன் கொண்ட டிரங்க் தானியங்கித் தொடர்பகம் அமைப்பு ஒன்று செயல்படத் துவங்கும். திருப்பூர், ஈரோடு, சேலம் போன்ற அருகாமையிலுள்ள ஊர்களின் சந்தாதாரர்களுக்கான நேரடி டிரங்க் தொலைபேசித் தொடர்பு (எஸ். டி. டி.) வசதியை அது அளிக்கும். தெற்கு மண்டல 'டிரங்க்' தொலைத்தொடர்புகளை அது விரைவில் பைசல் செய்யும்.

வெற்றியை நோக்கி....!



எல்லாரும்
இன்புற்றிருக்கச்
செயல்படுத்தும்
திட்டங்கள்
வெற்றி பெற்றிட
வலுமிக்க
அடித்தளம் அமைய

உதவுவதே
அளவான குடும்பம்.

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!

— குடும்பநலத்துறை,
தமிழ்நாடு அரசு.

தமிழரசு

369

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் புதிய முறைகள்

(1) முல்லை, மல்லிகை மகசூல் பெருக்கும் முறைகள்

தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் தோட்டவியல் பிரிவில் முல்லை மகசூல், தரம், நறுமண எண்ணெய் ஆகியவற்றை அதிகரிக்க நவீன சாகுபடி நுணுக்கங்களைக் கண்டறிதல் பற்றி நடத்திய ஆராய்ச்சியில், கீழ்க் கண்டவைகள் கண்டறியப்பட்டன.

மூன்று ஆண்டு நடத்தப் பெற்ற ஆராய்ச்சியின் முடிவுகளிலிருந்து முல்லைச் செடிகளை ஜனவரி இறுதி வாரத்திலும், அடுத்து பிப்ரவரி முதல் வாரத்திலும் கவாத்துச் செய்வது மிகச் சிறந்ததெனக் கண்டுபிடிக்கப்பட்டது.

ஜனவரி இறுதி வாரத்தில் வெட்டப்பட்ட செடிகள் சராசரி 15.4 கிலோ மகசூலும், பிப்ரவரி முதல் வாரத்தில் வெட்டப்பட்ட செடிகள் 14.9 கிலோ மகசூலும் கொடுத்துள்ளன. மற்றக்காலங்களில் வெட்டப்பட்ட செடிகளின் சராசரி மகசூல் 5.7 கிலோவிலிருந்து 10.5 கிலோ வரைதான் இருந்தது.

1973-74-ஆம் ஆண்டுகளில் டிசம்பர் இறுதி வாரத்தில் வெட்டப்பட்ட ஜாதி மல்லிகைச் செடிகள் அதிக மகசூல் கொடுத்துள்ளன.

முல்லைச் செடிகளில் 75. செ.மீ -90 செ.மீ. உயரத்தில் வெட்டப்பட்ட செடிகள் அதைவிடக் குறைந்த உயரத்தில் வெட்டப்பட்ட செடிகளைவிட அதிக மகசூல் கொடுத்துள்ளன.

'எத்ரல்' மருந்து மூலம் இலைகளைக் களைவதால் சிறிதளவு மகசூல் கூடினாலும் கவாத்து முறையே குறிப்பிடத்தக்கதாகும்.

ஆண்டுதோறும் செடிக்கு 6 கிராம் வீதம் தழைச்சத்தினை இலை வழியாக முல்லைச் செடிகளுக்கு இடுவது மிகவும் உயர்ந்த சராசரி மகசூலான 15.6 கிலோ கொடுத்தது. ஆனால் ஜாதி மல்லிகை, குண்டு மல்லிகைகளுக்கு இலைகளில் உரம் தெளிப்பது எந்த விதப் பயனையும் தரவில்லை.

ஜாதி மல்லிகைச் செடிகள் ஆண்டிற்கு இருமுறை உரமிடுவதை விட இரண்டு மாதங்கட்கு ஒரு முறையாக ஆண்டில் 6 முறை தொழு உரம், தழை-மணி-சாம்பல் சத்தினை இடுவதால் அதிக மகசூல் கொடுத்துள்ளன. இவ்

வாறு இடப்பட்ட செடிகளின் சராசரி விளைச்சல் 7.26 கிலோ வாகும். ஆனால் இருமுறை உரமிட்ட செடிகளின் சராசரி மகசூல் 5.96 கிலோ மட்டும்தான்.

இந்த உயர்விளைச்சல் 22 சதவீதம் ஆகிறது. ஒரு ஆண்டில் 6 முறை உரமிடுவதன் மூலம் ஏக்கருக்குச் சுமார் ரூபாய் 3,000 மதிப்புப்பெறும் 600 கிலோ மலர்களை அதிகம் பெறலாம். ஆனால் இதன் மூலம் அதிகமாகும் செலவு ரூபாய் 240 மட்டுமே.

(2) காய்கறி, பயறு வகைகளில் அதிக மகசூல் பெறும் முறைகள்

பறங்கி, புடலை ஆகியவற்றில் காய்ப் பூக்கள் தனியாக உள்ளன. அவற்றில் வெளிவரும் பெண் பூக்களை அதிகப்படுத்தவும், பயறு வகைகளில் பூ உதிர்தலைத் தடுக்கவும் 'எத்ரல்' என்ற இரசாயனம் உதவுகிறது என தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்மேற்கொண்ட ஆராய்ச்சியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. 'எத்ரல்' தெளித்ததில் பெண் பூக்கள் அதிகரித்து பறங்கியில் 39 சதவீதம் அதிக மகசூலும், புடலையில் 15.38 சதவீதம் அதிக மகசூலும், பயறு வகைகளில் 15.57 சதம் அதிக மகசூலும் கொடுத்தது.



சாதாரணமாகப் பறங்கியும், புடலையும் அதிகமாக ஆண் பூக்கள்தான் விடும். பெண் பூக்கள் தோன்றுவதை அதிகரிப்பதன் மூலம் மகசூலைப் பெருக்க முடியும். பெண் பூக்களை அதிகரிக்க, 'எத்ரல்' மருந்து முதல் இலை விட்டவுடன் பூ மொட்டு விடும் வரை தெளிக்கப்பட்டது. 'எத்ரல்' மருந்து 100 பி.பி.எம். (100 p. p. m.) என்ற அளவில் தெளித்ததில் பறங்கியில் 39 சதவிகிதம் அதிக மகசூல் கண்டது. புடலையில் 'எத்ரல்' மருந்து 50 பி.பி.எம். என்ற அளவில் தெளித்ததில் பெண் பூக்கள் அதிகரித்து 15-38 சதம் அதிக மகசூல் கண்டது.

துவரைக்கு 100 பி.பி.எம். என்ற அளவிலும், உளுந்து பயிருக்கு 250 பி.பி.எம். என்ற அளவிலும் தெளித்ததில் பூ உதிர்தல் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டு மகசூல் அதிகரித்தது. துவரை எக்டேருக்கு 1,902 கிலோவும், பச்சைப் பயறு 795 கிலோவும், உளுந்து 813 கிலோவும் முதல் பருவத்தில் மகசூல் கொடுத்தன. இவை மருந்து தெளிக்காத பயிரைவிட முறையே 17 சதம், 19 சதம், 57 சதம் அதிகம் எனக் கண்டுபிடிக்கப்பட்டது. கோடைப்பருவத்தில் விதைக்கப்பட்ட துவரை, 'எத்ரல்' தெளித்ததில் எக்டேருக்கு 2,303 கிலோ கொடுத்தது. இது மருந்து தெளிக்காத பயிரை விட 32 சதம் அதிகம். பச்சைப் பயறு எக்டேருக்கு 1,033 கிலோ கொடுத்தது. உளுந்து பயிரிலும் இதே போன்று 25 சதவீதம் அதிக மகசூல் கண்டது. எக்டேருக்கு 1,190 கிலோ கிடைத்தது.

ஆதலால் பூசணி புடலை, பயறு வகைகளைப் பயிர் செய்யும் விவசாயிகள் பெண் பூக்களை அதிகரிக்கவும், பூ உதிர்தலைத் தடுக்கவும், 'எத்ரல்' மருந்தை தெளித்து இலாபத்தை அதிகரித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(3) நெல் விளைவிற்குத் துணைபுரியும் 'அசடோபாக்டர்' நுண்ணுயிர்

'அசடோபாக்டர்' எனும் நுண்ணுயிர்களை மண்ணில் இடுவதால் காற்றிலுள்ள தழைச்சத்தை (நைட்ரஜன்) அவைகள் நிலத்தில் நிலைப்படுத்துகின்றன.

இந்த நிலைப்படுத்தப்பட்ட தழைச்சத்து, நெற்பயிருக்குப் பயனளித்து விளைவுக்குத் துணை புரிகின்றன. இரசாயன உரங்களில் தழைச்சத்துத் தரும் உரங்களைப் போன்று தூர்க்கட்டுவதும், வளர்வதும் இந்த முறையில் கிடைக்கும் தழைச்சத்திலும் கிடைக்கிறது.

'அசடோபாக்டர்' போடுவதால், பயிருக்கு இரசாயன உரங்களால் கிடைக்கும் மொத்தத் தழைச்சத்தில் கால்பங்கு கிடைக்கிறது. இந்நுண்ணுயிருக்குச் செலவழிக்கும் தொகை ஏக்கருக்கு ரூபாய் 20 ஆகும். இதனால் 120 ரூபாய்க்குள்ள இரசாயன உரம் மிச்சமாகிறது என்பது கண்டறியப்படுகிறது. இந்த நுண்ணுயிரால் இரசாயன உரங்களின் செலவில் ஒரு கணிசமான பகுதி மிச்சப்படுகின்றது. ஆனால் இரசாயன உரங்களை அறவே விலக்கிவிட்டு, இந்த 'அசடோபாக்டர்' மட்டிலும் போடுவது நல்லது என்று கருதிவிடக்கூடாது.

பவானி நெல் ரகத்தில் 'அசடோபாக்டர்' உபயோகிப்பதால் எந்த அளவிற்கு இரசாயன தழைச்சத்து உர அளவைக் குறைக்க முடியும் என்பதை அறிய, தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் நன்செய் நிலத்தில் பல பரிசோதனைகளை மேற்கொண்டது.

'அசடோபாக்டர்' பின்கண்டவாறு மூன்று விதமாக உபயோகப் படுத்தப்பட்டது.

(1) மண்ணில் இடுதல்.
(2) நாற்றுகளின் வேர்களை நனைத்து நடுதல்.
(3) இலைகளின் மேல் தெளித்தல்.

இவ்வாறு 'அசடோபாக்டர்' இடுவதால் 50 சதவீத தழைச்சத்து அளவிலேயே பயிர்களின் உயரமும், தூர்களின் எண்ணிக்கையும் அதிகமாகக் காணப்பட்டன. சிபாரிசு செய்யப்படும் தழைச்சத்து (50 கிலோ/ஏக்கர்) அளவில் அதிக மகசூல் காணப்பட்டது. இருந்த போதிலும் 50 சதவீதத்தழைச்சத்தும், அசடோபாக்டரும் சேர்ந்து நாற்றுகளை நனைத்து நடுதல், மண்ணில் இடுதல் ஆகிய முறைகளின் மூலம் ஏறத்தாழ சிபாரிசு செய்யப்படும் தழைச்சத்து அளிக்கும் அளவிற்கு மகசூல் தந்தன. அசடோபாக்டரை 50 சதவீதம் தழைச்சத்து அளவில் விதைகளுடன் கலந்தும், நாற்றுகளின் வேர்களை நனைத்து நட்டும், மண்ணில் இட்டாலும் தானிய மகசூலும், வைக்கோல் மகசூலும் முழு அளவுத் தழைச்சத்து உபயோகித்த பொழுது கிடைத்த மகசூலுக்குச் சமமாக இருந்தது. சிபாரிசு செய்யப்படும் முழு அளவு தழைச்சத்து அளவுடன் அசடோபாக்டரை மேற் குறிப்பிட்டுள்ள மூன்று விதமாகவும் உபயோகித்ததில் தானிய மகசூல் 13.3 சதம் அதிகமாகவும், வைக்கோல் 13.9 சதவீதம் அதிகமாகவும் கிடைத்தன. எனவே, 'அசடோபாக்டர்' நுண்ணுயிர்கள் நெல் விளைவிற்குத் துணை புரிகின்றன.

(4) உவரைத் தாங்கும் பயிர்கள்

சில நிலங்கள் உவர் நிலங்களாக இருக்கும் அல்லது சில பாசனக் கிணறுகள் உவர் நீரைக் கொண்டதாக இருக்கும். இவைகளில் உவர் நீரைத் தாங்கும் பயிர்களைச் சாகுபடி செய்தால் தான், விவசாயிகளுக்கு இலாபம் கிடைக்கும். ஆதலால் உவரைத் தாங்கும் பயிர்கள் குறித்து ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் மக்காச் சோளம், ராகி, வரகு, குதிரை வாலி, பனிவரகு போன்ற பயிர்களில் ஒவ்வொன்றிலும் இரண்டு ரகங்கள் எடுத்து ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டன. மேற் கூறிய பயிர்களில் சாமைப் பயிர் உவரை தாங்கக் கூடியதாய் இல்லாமல் எக்டேருக்கு 374 கிலோதான் கொடுத்தது.

மக்காச்சோளத்தில் 'தக்காண மக்காச்சோளம்' எக்டேருக்கு 4,596 கிலோ மகசூல் கொடுத்தது. 'கோ. 10 ராகி' எக்டேருக்கு 3,214 கிலோ மகசூல் கொடுத்தது. 'பிசி. 49 குதிரை வாலி' எக்டேருக்கு 1,489 கிலோவும், 'சி. 196 பனி வரகு' எக்டேருக்கு 1,207 கிலோவும் மகசூலும் கொடுத்தன. 'கோ. 4 தினை' எக்டேருக்கு 749 கிலோ மகசூல் கொடுத்தது. இந்த ரகங்கள் உவர் நீரைத் தாங்கி மேற்கூறிய மகசூலைக் கொடுத்தது.



சமைப்புத் திறன், சுவைபற்றி ஆராய்ச்சி செய்ததில் நல்லநீரில் சாகுபடி செய்தத் தானியங்களுக்கும், உவர் நீரில் சாகுபடி செய்த தானியங்களுக்கும் வித்தியாசமே இல்லை. ஆனால் நல்ல நீரில் அறுவடை செய்த பயிரில் செய்த உணவுப் பதார்த்தங்களை விட, சற்று சீக்கிரம் கெட ஆரம்பித்தது. மற்றபடிக்கு வித்தியாசம் ஏதும் இல்லை.

(5) மண் பரிசோதனையால் விவசாயிகளுக்கு நன்மையா ?

விவசாயிகளுடைய நிலத்தின் மண்வளத்தைப் பரிசோதித்து போதிய உரச் சிபாரிசு செய்வது கடந்த பல ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் நடைபெற்று வருகிறது. மண் பரிசோதனை நிலையங்கள் தமிழ்நாடு முழுவதும் தற்போது இயங்கி வருகின்றன. இவ்வாராய்ச்சி நிலையங்கள் அவைகளின் எல்லையிலுள்ள விவசாயிகளின் மண்ணைப் பரிசோதித்து எந்த உரத்தை, எந்த அளவில், எவ்வாறு இட வேண்டும் என்று சிபாரிசு செய்கின்றன. அவ்வாறு கூறப்படும் உரச் சிபாரிசுகளை விவசாயிகள் கையாளுகிறார்களா என அறிய, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி நடத்தப்பட்டது. இவ்வாராய்ச்சியின் மூலம், மண் வளப் பரிசோதனை விவசாயிகளுக்கு மகசூலை அதிகரித்து இலாபத்தைக் கொடுக்கும் வழிமுறையாக அமைந்துள்ளது எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆராய்ச்சி, கோவை மாவட்ட விவசாயிகளிடையே நடத்தப்பட்டது. மண்ணைப் பரிசோதனைக்கு அனுப்பி, சிபாரிசுகளைப் பெற்ற விவசாயிகளில், 34 சதவீதத்தினர் மட்டுமே சிபாரிசு செய்த முறைகளைக் கையாண்டுள்ளார்கள் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மண் பரிசோதனை முடிவுகளைக் கையாளுவதற்கான காரணங்கள் முறையே,

(1) களர் நிலத்தைசீர்திருத்த,

(2) அதிக லாபம் பெற,

(3) விஞ்ஞான செய்முறைகளைக் கையாள,

(4) மகசூல் குறைவாய் உள்ளதால் எனக் கூறியுள்ளார்கள்.

மண்பரிசோதனை நிலையங்களின் சிபாரிசுகளைக் கையாண்ட விவசாயிகளின் அனுபவங்கள், கீழ் வருமாறு:



1. நெல்லில் 5 சதம் முதல் 200 சதம் அதிக மகசூல் கண்டது. சாதாரண மகசூலைவிட 14 சதம் அதிக மகசூல் சராசரியாகக் கண்டது.

2. பருத்தியில் 7 சதம் முதல் 33 சதம் வரை அதிக மகசூல். இது சாதாரண மகசூலைவிட 14.5 சதம் சராசரியாக அதிகம்.

3. கம்புப் பயிரில் 20-30 சதம் வரை அதிக மகசூல்.

4. ராகியில் 13 சதம் முதல் 25 சதம் வரை அதிக மகசூல்.

இதை நாங்கள் கூறுவதாக எண்ண வேண்டாம். இவை விவசாயிகளின் ஒருமித்த கருத்துக்களேயாகும். ஆகையால் விவசாயிகளே, சாகுபடி செய்யப் போகும் பயிர்களுக்குத் தேவையான உரச் சிபாரிசுகளை கையாண்டு அதிக மகசூல் பெற தங்கள் நிலத்தைப் பரிசோதித்து ஆராய்ச்சியாளர் கூறும் சிபாரிசுகளைக் கையாளுங்கள். களர் காரணமாய் மகசூல் குறைவதாயிருந்தாலும், மண்ணைப் பரிசோதித்துக் களர் நிலத்தைச் சீர்திருத்தி வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளுங்கள். மண் பரிசோதனைக்குக் கட்டணம் இருப்பதாக நினைக்காதீர்கள்! இது இலவசமாக செய்யப்படும். மண் பரிசோதனை நிலையத்தை அணுகுங்கள்.

எனவே, மண்ணிற்குத் தேவையான உணவு கொடுத்துப் பயிர்களின் மகசூலைப் பெருக்கி, உங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளுங்கள் என்று தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்: தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர் - 3.

மறவாதீர்கள்;

உங்கள் மகள் ஒருநாள்

மணமகளாக அமர வேண்டியவள்!

திருமணம் என்றாலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்றால்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கினால் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்றோம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

	மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது	10 ஆண்டு இறுதியில் கிடைப்பது
	ரூ.	ரூ.	ரூ.
ரெக்கரிங் டிபாசிட்	5/-	375/-	...
	10/-	750/-	...
வளரும் மாதச் சேமிப்பு	5/-	...	825/-
	10/-	...	1,650/-

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002

இன்றைய உலகிற்கு வள்ளுவம்

பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

தமிழ்ப் பண்பாட்டுப் பூங்காவில் பூத்த நறுமலர் திருக்குறள். அதில் தமிழருடைய அறிவு மணமும், அன்பு வண்ணமும் குழைந்தும் இழைந்தும் ஒளிர்வதைக் காணலாம். பண்டை உலகில் மனிதனை மனிதனாக வாழுமாறு அறிவுறுத்திய அறநூல் திருக்குறள்! இன்றைய உலகில் வளமாக வாழ்வதோடு நலமாக வாழவும், சீராக வாழ்வதோடு சிறப்பாக வாழவும் வழிகாட்டும் வாழ்வியல் நூல் திருக்குறள்! மனிதனைப் பாடும் நூல் அது! மனிதனை மாண்புடன் வாழுமாறு தூண்டும் நூல் அது! சுருங்கச் சொல்லுவதானால் அனைத்துலக மனிதனை உருவாக்க உதவும் நூல் அது! இதனால்தான், இத்திருநூலினை இயற்றிய திருவள்ளுவரை '**மன்பதைப் பாவலன்**' என்று அறிஞர்போற்றுகின்றனர்.

திருவள்ளுவர், மனித இயல்புகளையும், நடத்தைகளையும் கூர்ந்து ஆராய்ந்த சான்றோராவார். அவர் வாழ்க்கையை நிலையாகவும் முழுமையாகவும் கண்டுணர்ந்தவர். அவருடைய நோக்கு, எதனையும் ஊடுருவிப் பாயும் செம்பொருள் கண்ட மெய்யுணர்வாளரின் நோக்காகும். அவருடைய ஒளிபடைத்த கண்ணும், உறுதிகொண்ட நெஞ்சும், களிபடைத்த மொழியும் கற்பவர் உள்ளத்தைச் சுண்டி இழுக்கும் பேராற்றல் வாய்ந்தன.

கனவுலகக் கற்பனையாளரா?

அவர் ஒரு கனவுலகக் கற்பனையாளர் அல்லர்; செயல்முறைச் சிந்தனையாளர் ஆவார். இந்த உலகில் நல்லொழுக்கத்தோடு வாழ்வதற்குத் தேவையான சூழலினையும், வாழ்க்கை நிலையினையும் அவர் உணர்ந்து போற்றுகின்றார். மனித மனத்தின் இயல்புகளையும், செயற்பாட்டையும் அவர் நன்கு ஆராய்ந்துள்ளார். அதன் விளைவாக அறவாழ்க்கைக்கு அடிப்படைத் தேவை தூய்மையான மனம் என்னும் முடிவிற்கு வந்துள்ளார். அதனை,

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற. (திருக். 34)

எனும் குறட்பாவின் மூலம் இனிது விளக்கியுள்ளார். இக்குறட்பாவில் ஒழுக்க நெறிக்கு உளவியல் சார்பான வழியை அவர் வகுத்துத் தந்துள்ளார். இவ்வழி, மக்களுக்கு வாழ்க்கையின் பல்வேறு சூழல்களிலும் நிலைகளிலும் பேருதவியாக இருக்கும் என்பது உறுதி.

மனிதன் ஒழுக்கத்தோடு வாழ வேண்டுமானால், அவன் பசியால் வாடும் அவல நிலை இருக்கக் கூடாது. 'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' அல்லவா? இதனால்தான் தம் நூலில் இரண்டாவது அதிகாரமாக 'வான் சிறப்பினை'த் திருவள்ளுவர் அமைத்துள்ளார். மழையின்றேல் உணவுப் பொருள்கள் விளைவது ஏது? உணவின்றி உயிர்கள் வாழ இயலுமோ? 'மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டி(உணவு) கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' அன்றோ? உலகியலில் ஈடுபட்டோருக்கும், துறவிகளுக்கும் முதல் தேவையாக உள்ளது உணவுப் பொருள்களாகும். உணவுப் பொருள்களை மழையின் உதவியால் மண்ணுலகம் பெறுகிறது. மழை பெய்யவில்லையானால், பசும்புல்லும் தோன்றாது; இந்தப் பெரிய உலகத்தில் தானமும், தவமும் நடைபெறா; எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல், உலக வாழ்க்கை நடைபெறாது. அதைப் போன்றே மழை இல்லையானால், ஒழுக்கமும் நிலைபெறாமல் போகும். எனவே, மக்களின் நல்வாழ்விற்கும், ஒழுக்கத்திற்கும் இன்றியமையாத அடிப்படைப் பொருளாதாரத் தேவையாக மழையினைத் திருவள்ளுவர் போற்றுகின்றார்.

அவருடைய நடைமுறை வாழ்விற்குரிய செயல்முறை நோக்கிற்கு, இன்னொரு சான்று காட்டலாம். ஒரு நாகரிகம் அழிந்து ஒழியாமல் நிலைத்து நிற்கத் தேவைப்படுவன உண்மைப் பண்பும், கொல்லாமை சூழும் நெறியுமாகும். ஆனால், மேற்போக்காக நோக்குகின்ற பொழுது இவ்விரு இயல்புகளும் நடைமுறைக்கு ஒவ்வாத மிக உயர்ந்த இலட்சியங்களாகத் தோன்றும். இவற்றைக் கடைப்பிடிக்கின்ற பொழுது உண்டாகக்கூடிய இன்னல்களையும் இடையூறுகளையும், திருவள்ளுவர் நன்குணர்ந்துள்ளார்.

'வாய்மை எனப்படுவது யாது?' எனும் வினாவினை எழுப்பி, அதற்கு அவரே 'யாதொன்றும் தீமை இலாத சொலல்' (திருக். 291) எனும் விடையினையும் தருகின்றார்; மற்றும் 'பொய்ம்மையும் வாய்மையிடத்து, புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்' (திருக். 292) என்னும் கருத்தையும்

தெரிவிக்கின்றார். 'குற்றமே இல்லாத நன்மையைத் தருமானால் பொய்யான சொற்களையும், வாய்மையானவையாகக் கருதலாம்' எனும் கருத்து வள்ளுவரின் பரந்த உள்ளத்தையும், ஆழ்ந்த மனிதநல நாட்டத்தையும் அறிவிக்கிறது. இதனால், உண்மை பேசுவது என்பது வெறும் அறிவாராய்ச்சிக்குரிய பண்பு அன்று என்பதையும், நடைமுறை உலகின் உயிர்த்துடிப்புமிக்க முடிந்த பயன் என்பதையும் அவர் தெளிவுறுத்துகிறார்.

இன்றைய உலகிற்குத் தேவை!

வியக்கத்தக்க வகையில் அனைத்துலக நோக்கும், உள்ளத்தைக் கவரத்தக்க வகையில் புத்துலகச் சிந்தனைப் போக்கும் கொண்டதாகத் திருக்குறள் விளங்குகிறது. வள்ளுவர் உலகிற்கு வழங்கும் நற்செய்திகள் தகைசால் வீறமைதியும், எளிமைமிகு பெருமிதப் பண்பும் வாய்ந்தனவாகும். பண்டைக் காலத்தை விட, இன்றைய உலகிற்கு அவை மிகவும் இன்றியமையாதனவாக உள்ளன. நலமிக்க வளமான இன்பம் நிறைந்த வாழ்க்கைக்கு, அவர் ஒரு 'நடுவழியினைக் காட்டுகின்றார். அவ்வழி பண்டைத் தமிழ்ச் சான்றோர் வாழ்ந்து காட்டிய செவ்வழி; நல்வழி, அறவழி. அதுதான் அன்பு வழிப்பட்ட அறநெறியாகும்.

அன்போடு இயைந்த வழக்கென்ப,
ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு
(திருக். 73)

அன்பின் வழியது உயர்நிலை
அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு
(திருக். 80)

என்னும் குறட்பாக்கள் 'அன்பு நெறியே மனித குலத்தை வாழ்விக்கும்' எனும் கருத்தினை உலகிற்கு உணர்த்துகின்றன.

தனக்குத் துன்பமானவை என்று உணர்ந்தவற்றைப் பிறருக்குச் செய்யலாகாது' (திருக். 316) எனும் கருத்தினை வள்ளுவர் அறிவுறுத்துந் திறன் ஆழ்ந்து சிந்தித்தற்குரியது. 'தன்னுயிருக்குத் துன்பமானவை இவை என்று உணர்ந்தவன், மற்ற உயிர்களுக்கு அத்துன்பங்களைச் செய்தல் என்ன காரணத்தால்?' (திருக். 318) எனும் வினாவினை எழுப்பி, அதற்கு நம்மையே விடை காணுமாறு விட்டுவிடுகின்றார்.

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும்' (திருக். 322) நெறியே உலகம் போற்றத்தக்க சிறந்த நெறி என்பது அவருடைய கருத்து. பிறருக்குப் பயன்பட வாழும் வாழ்க்கையே பல்லாற்றானும் சிறந்த வாழ்க்கை என்பதை 'ஒப்புரவறிதல்' எனும் அதிகாரத்தில் அவர் தெளிவுறுத்தியுள்ளார். இக்கருத்துகள், இன்றைய உலகின் சிறப்புமிக்க சிந்தனையாளர்களின் உள்ளத்தை எல்லாம் கொள்ளை கொண்டுள்ளன. இவை யாவும் வாழ்க்கையைப் பற்றிய சமுதாய சிந்தனையையும், அன்பின் வழிப்பட்ட செயல்களையும், பிறர் துன்பத்திற்கு இரங்கி ஏங்குவதோடு அமையாது செயல்வழிப்பட்ட தொண்டு நெறியையும் வலியுறுத்துகின்றன. இவ்வகையில் இன்றைய மனிதன் தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் மனநலத்தோடு, உடல் நலமும் பெற்று வையத்தில் வாழ்வாங்கு வாழ இயலும் என்பது வள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறியாகும்.

புத்துலகச் சிற்பி

புதியதோர் உலகு செய்வோம்-கெட்ட
போரிடும் உலகினை வேரோடு
சாய்ப்போம்!

என்பது பாவேந்தர் பாரதிதாசனின் முழக்கமாகும். இதே முழக்கத்தைத் திருக்குறளில் மெல்லிய குரலில் நாம் கேட்கின்றோம். திருவள்ளுவர் புதியதோர் உலகைப் படைக்க இயலும் என்னும் நம்பிக்கையோடு-மகிழ்வு நலக்கோட்பாட்டோடு தம் கருத்துக்களை எடுத்துரைக்கின்றார். 'மனித இனம் வீழ்ச்சியுற்றுவிட்டது' என்றோ, 'உலகம் விரைவில் அழிந்துவிடும்' என்றோ அவர் நினைக்கவில்லை. அவருடைய மெய்யுணர்வுக் கோட்பாடு 'உலக மறுப்பின்மையை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்திய மண்ணில் இத்தகைய கொள்கை திருவள்ளுவரால் உருவாக்கப்பட்டுள்ளதைக் கண்டு, டாக்டர் ஆல்பர்ட்



சுவைட்சர் வியப்பும் விம்மிதமும் அடைந்துள்ளார். அறநெறியில் நிலையாக நின்று ஒழுகுவதன் மூலம், மனிதன் மண்ணகத்தில் 'இறைவனுடைய பெரின்ப விண்ணகத்தைக் ' கொண்டுவர இயலும் என்னும் நம்பிக்கையுடன் திருவள்ளுவர் அறத்தின் ஆற்றல்மிகு மாட்சியை அறிவுறுத்துகிறார். இம் மெய்யுணர்வு மிகு கவிஞர் உலகிற்கு வழங்கும் நற்செய்தியின் சாரம் 'என்றுமே நம்பிக்கை மிக்க நல்வாழ்வு யாவருக்கும் காத்துக் கிடக்கிறது' என்பதேயாகும்.

திருவள்ளுவரின் முப்பாலில் குடும்பவாழ்க்கையின் பீடும்,பெருமையும் ஒருவகைப் புதிய வடிவையும், வனப்பையும் பெற்றுள்ளதைக் காணுகின்றோம். இல்வாழ்க்கை நிலையினை அவர் மிகச் சிறந்த வாழ்க்கைப் பேறாகக் கருதுகிறார்; 'அறன் எனப்பட்டதே இல்லவாழ்க்கை' எனப் போற்றுகிறார்.

அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.
(திருக். 45)

அறத்தாற்றின் இல்வாழ்க்கை
யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவது எவன்?
(திருக். 46)

என்னும் குறட்பாக்கள் 'இல்லறமே நல்லறம்' என்பதை எடுத்துரைக்கின்றன. அனைத்துலகச் சகோதரத்துவத்தை வளர்ப்பதற்கு இல்லறமே, சிறந்த பயிற்சிப் பள்ளியாக வள்ளுவரால் போற்றப்படுகிறது. எனவே, எண்ணற்ற மாக்களில் 'எத்துணையும் பேதமுறாது எவ்வுயிலும் வுயிரும் தம்முயிர்போல் வாழும், அன்பு நெறியை, அருள் நெறியை, அருளறவாழ்வை அவர் வற்புறுத்துகிறார். அன்பும் மன்னிக்கும் பண்புமே மனித இனத்தின் பிணிதீர்க்கும் மருந்தாகும் என்பதைப் பல இடங்களில் அவர் தெளிவுறுத்தியுள்ளார்.

பொறுத்தல் இறப்பினை என்றும்
அதனை
மறத்தல் அதனினும் நன்று
(திருக். 152)

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்;
பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.
(திருக். 156)

இன்னாசெய் தாரை ஒறுத்தல்
அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்
(திருக். 314)

இன்னாசெய் தார்க்கும் இனியவே
செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு
(திருக். 987)

இக்குறட்பாக்களில் பிறர் செய்த தீமைகளைப் பொறுத்துக் கொள்வதோடு மன்னித்து, மறந்துவிடுமாறு அறிவுறுத்துகிறார் வள்ளுவர். அத்துடன் மன அமைதியோடு உள்ளச் சமநிலையை இழக்காமல் வாழவும் அவர் வழிகாட்டுகின்றார். இங்கு மிக அடக்கமானமுறையில் அகிம்சைக் கொள்கையை அவர் போதிக்கின்றார். இன்னா செய்தாருக்கு இனியவை செய்வதன் மூலம் சமுதாயத்தில், பகைமையையும், பூசலையும் களைந்து இன்ப அன்பு வாழ்க்கையை அமைக்குமாறு அவர் மனித இனத்தைத் தூண்டுகிறார்.

தனிமனிதனைப் பற்றியும், சமுதாயத்தைப் பற்றியும் வள்ளுவர் கொண்டுள்ள கருத்துகள் கவர்ச்சிமிக்கன. ஒவ்வொரு மனிதனும் நேர்மையாகவும் பெருமிதத்துடனும் வாழ்வதற்கேற்ற தொழில்களைச் செய்வதற்குரிய வாய்ப்புகளை அளிக்கும் சமுதாயத்தை உருவாக்க அவர் வழி வகுத்துக் காட்டுகிறார். குடிமக்கள் தொழில் செய்வதற்கும், நேர்மையாக வாழ்வதற்கும் பேரளவில் வாய்ப்பினை நல்குவதே நாகரிகமுற்ற சமுதாயத்தின் தலையாய கடமையாக அவர் கருதுகிறார். ஆனால், பிச்சை எடுத்துத்தான் வாழ்க்கை நடத்த வேண்டும் என்னும் அவலநிலை ஒரு மனிதனுக்கு உண்டாகுமானால், அவனைப் படைத்த- அவன் வாழும் உலகைப்படைத்த 'கடவுள் அழிந்தொழிவானாக!' என வள்ளுவர், கடவுளையே சபிக்கின்றார்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்
பரந்து
கெடுக உலகியற்றி யான்
(திருக். 1062)

திருவள்ளுவருக்கு உண்டான இந்த அறச் சீற்றம், மனித இனத்தின் நல்வாழ்வில் அவர் கொண்டுள்ள அக்கறையையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துகிறது. பிச்சை எடுப்பதை அவர் வன்மையாகக் கண்டிக்கிறார். சமுதாயத்தின் சீர்கேட்டால் பிச்சை எடுத்து வாழும் நெருக்கடி நிலைக்கு ஆளானவர்களைக் கண்டு அவர் உள்ளம் நைந்துருகிறார். அவர்களை மிகவும் உருக்கத்தோடு ''பிச்சை கேட்பதானால், உள்ளதை ஒளித்து, 'இல்லை' எனக் கூறுவோரிடம் சென்று அருள் கூர்ந்து பிச்சை எடுக்காதீர்!'' (திருக். 1067) என்று வேண்டுகிறார்.



கடுமையாக உழைத்து, அதன் மூலம் வாழ்வதற்கு வழி தேடுமாறு மனிதரை அவர் நயமாகத் தூண்டுகிறார். இந்நிலையில் 'ஊழ் வினைப்பயனால் ஒரு செயல் முடியாமல் போகுமாயினும், முயற்சி தன் உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியையாவது கொடுக்கும்' (திருக். 619) என்றும், 'சோர்வு இல்லாமல் முயற்சியில் குறைவு நேராதவாறு முயல்கின்றவர் தம் செயலுக்கு இடையூறாக வரும் ஊழையும் ஒரு காலத்தில் தோல்வியுறச் செய்வர்' (திருக். 620) என்றும் அறிவுறுத்துவதன் மூலம் உழைத்து வாழுமாறு அவர் வழிகாட்டுகிறார். இவற்றால் மனித முயற்சியிலேயே வாழ்க்கையின் வெற்றிக்குரிய மறைபொருள் புதைந்து கிடப்பது புலனாகின்றது.

திருவள்ளுவர் முடியாட்சி சிறப்புற்று விளங்கிய காலத்தில் வாழ்ந்தவராவர். அவர் முடியுடை வேந்தர்களுக்கு அறிவுறுத்தியுள்ள அறிவுரைகள் இன்றைய குடியாட்சிக் காலத்திற்கும் பொருந்தி வருவனவாக உள்ளன. குடிமக்களின் நலனையே கருதி ஆட்சிசெய்யும் மன்னனை, மக்கள் தெய்வமாகப் போற்றுவர் என்பது வள்ளுவரின் வாய்மொழி. இன்றும் அத்தகைய தலைவர்களை மக்கள், 'மனிதருள் மாணிக்கம்' எனப் போற்றுவது கண்கூடு.

நாடாளும் தலைவன் காட்சிக்கு எளியனாகவும், கடுஞ்சொல் அற்றவனாகவும் வாழ வேண்டும் (திருக். 386) என்னும் கருத்து, எக்காலத்திற்கும் எத்தகைய அரசிற்கும் பொருந்துவது அன்றோ?

கடிந்து அறிவுரை கூறும் பெரியோர்களின் துணை இல்லாத அரசன், தன்னை அழிக்க வல்ல பகைவர் எவரும் இல்லாவிட்டாலும் தானே கெட்டு அழிவான் என்னும் அறிவுரை (திருக். 448) நாடாளும் தலைவர்களுக்குச் செய்யப்படும் எச்சரிக்கை யாகும்.

இந்தியாவின் 'கல்வி வரலாற்றில்', நாம் முதன் முதலாகத் திருக்குறளில்தான், சாதி சமய மொழி வேறுபாடற்ற நிலையில் குடிமக்கள் அனைவரும் கல்வி கற்பதற்குத் தேவையான வசதிகளை அரசு செய்துதர வேண்டும் என்னும் புத்ததுலகக் கொள்கையினைக் காண முடிகிறது. கல்வியை ஜனநாயக முறைப்படுத்தும் செயலுக்காக வள்ளுவர் பரிவுடன் போராடியுள்ளார். 'அடிப்படைக் கல்வி அனைவருக்கும் பொதுவானது. அது அறிவியலையும் கலைகளையும் கற்பிப்ப

தாகும்' என்பதைத் திருவள்ளுவர் தெளிவுறுத்துந் திறன் அனைத்துலகக் கல்வியாளர்களின் கருத்தைக் கவருவதாகும். 'கல்வியறிவு பெற்ற மனிதனே கண் பார்வை யுடையவன்; கல்வியறிவு இல்லாதார் கண்கள் இருந்தும் குருடரேயாவர்' (திருக். 392) எனும் வள்ளுவர் கருத்து, கல்வியின் முக்கியத்துவத்தையும் அது அனைவருக்கும்-மனிதராகப் பிறந்த எல்லோருக்கும் பொதுவானது என்பதையும் வலியுறுத்துகிறது.

ஒரு தந்தையின் கடமைகளைச் சுட்டுகின்ற பொழுது வள்ளுவர், ''கற்றவர் அவையில் தன் மகன் முந்தி இருக்கும்படியாக அவனைக் கல்வியில் சிறந்து விளங்கச் செய்ய வேண்டும்' (திருக். 67) எனத் தெரிவித்துள்ளமை எக்காலத்திற்கும் தேவைப்படும் அறிவுரையாகும். கல்வி அறிவுடையோன் நல்ல பண்பாடு உடையவனாக விளங்குவான். அதனால் அவன் வீடும் நாடும் நலம் பெறும் என்பது திருவள்ளுவருடைய உள்ளக்கிடக்கையாகும்.

நாம் விளம்பர யுகத்தில் வாழ்கின்றோம். எதற்கெடுத்தாலும் விளம்பரமும் பிரசாரமும் செய்வதே இக்காலத்தின் கோலமாகும். பாமர மனிதனைத் தனியே சிந்திக்க விடும் வழக்கம் இன்று அடியோடு மறைந்துவிட்டது. இத்தகைய சிறப்பும் புகழும் உடைய பொறுப்புமிகு பெரிய மனிதர் இதைக் கூறுகின்றார். எனவே, நாம் அதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும்! சிந்திக்கக் கூடாது!' என்பதே. இன்றைய சுலோகமாகும். ஆனால், திருவள்ளுவர் 'அபாய அறிவிப்பு' செய்கின்றார். 'சிந்தனை செய் மனிதா!' சிந்தனை செய்! எதையும் எண்ணிப்பார்க்காமல் ஏற்றுக் கொள்ளாதே!' என வள்ளுவர் அறிவுறுத்துகின்றார்.

எப்பொருள் யார்யார்வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு
(திருக். 423)

என்னும் குறள், சாக்ரட்டீசின் உண்மை நாடும் வேட்கை மேற்கு நாடுகளுக்கு மட்டும் உரிய சொத்து அன்று; இந்திய நாட்டிற்குப் பொன்றாப் புகழினைத் தேடித் தரும் பண்பு என்பதை நமக்கு உணர்த்துகிறது.

பாலுணர்வில் எழும் காதல் உணர்வு, சமுதாயக் கட்டுக் கோப்பிற்குரிய அன்பிற்கு அடிப்படையாகும்; இந்த உலகியல் அன்பு, ஆன்மிக அன்பாகிய அருளுணர்விற்கு அடிப்படையாகும் என்பது திருவள்ளுவரின் கொள்கையாகும். இம்மூவகை அன்பும் மனித வாழ்க்கையினை மாட்சியுறச் செய்கின்றன. இம்மூவகை அன்பின் ஆற்றலால் இயங்குவனவே அறம், பொருள், இன்பம் என்னும் மனித வாழ்க்கையின் மூவகைப் பயன்மதிப்புகளாகும். காதல் இன்பமே மனிதன் அனுபவிக்கக் கூடிய இன்பங்களுள் தலையாயதும் சிறந்ததுமாகும் என்பதற்கு வள்ளுவர் காட்டும் காரணம் புதுமையானது; இன்பம் பயப்பதுமாகும். ஒரே சமயத்தில் ஒருமனிதன் கண்டும், கேட்டும், உண்டும், முகர்ந்தும் உற்றும் அறிகின்ற ஐந்து புலன்களாலாகிய இன்பங்களைத் தன் காதலியிடமே பெற இயலும் என்பது வள்ளுவரின் துணிவாகும்.

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும்
ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள.
(திருக். 1101)

இம்முதுமொழியை இந்த விண்வெளி யுகத்தில் கூட யாரும் மறுக்க இயலாது எனலாம்.

இத்தகைய சிறப்புமிகு மனித இன நல நாட்டத்திற்குரிய இயல்புகள் திருக்குறளை அணி செய்கின்றன. மற்றும் வற்றாது வளங்கொழிக்கும் வாழ்க்கைத் தத்துவத்தையும், அனைத்துலகத்திற்கும் பயன்படத்தக்க நற்செய்திகளையும் கலையழகும் கற்பனை வளமும் பொருந்திய நடையில் நவில்தொறும் நூல்நயம் பயக்கும் வகையில் திருவள்ளுவர் தம் நூலில் தெளிவுறுத்தியுள்ளார். இவ்விழுமிய நூலினை,

''தமிழிலக்கியத்துள் தலைசிறந்த
இலக்கியப் படைப்பு;
மனித இனத்தின் சிந்தனையில்
முகிழ்த்த சிறப்பும்
தூய்மையும் வாய்ந்த இலக்கியப்
பெட்டகம்''

என்று ஏரியல் (Ariel) போற்றுவது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை!

தமிழ்மொழியில் எழுந்த முதல் விமரிசன நூல்

நூல்களுக்கு மதிப்புரை எழுதுகின்ற வழக்கம் தினசரிப் பத்திரிகைகளிலும் வார ஏடுகளிலும் இடம்பெறுவதைப் பார்க்கிறோம்; இந்த விமரிசனக்கலை மற்ற நாடுகளில் எப்போது துவக்கம் ஆகியது என்பது நமக்குத் தெரியவில்லை. ஆனால் தமிழகத்தில் கி. பி. 3-ஆம் நூற்றாண்டிலேயே தோன்றியிருக்கிறது என்பது அறிஞர்களால் உறுதி செய்யப்பெற்ற செய்தியாகும்.

முதல் ''விமரிசனக்கலை'' தோற்றம் ஆவதற்கு வழிவகுத்த பெருமை திருவள்ளுவரின் திருக்குறளுக்கு உண்டு! திருக்குறளைப் பயின்ற புலவர்கள், அதன் பெருமையையும், சிறப்பையும் வெண்பாவில் எழுதி மகிழ்ந்திருக்கின்றனர். ஐம்பது புலவர்கள் திருக்குறளுக்கு வழங்கிய பாராட்டு வெண்பாக்கள் 'திருவள்ளுவ மாலை' என்னும் நூலாகத் தொகுக்கப் பெற்றிருக்கிறது. அதுமட்டுமல்ல, 'தமிழ்ப்புலவர்கள் கருத்து வேறுபாடு கொண்டிருப்பார்கள்' என்று பொதுவாகக் கூறப்படும் குற்றச்சாட்டு. இந்தத் திருவள்ளுவ மாலையின் மூலம் அடிபடுகிறது. உலகப் பொதுமறையாம் திருக்குறளைப் படைத்தளித்த வள்ளுவரைப் பாராட்டிய புலவர்களில் பலர் வள்ளுவரின் சம காலத்தவர் என்றும், சில புலவர்கள், வள்ளுவருக்குப் பிற்காலத்தவர் என்றும், 'திருவள்ளுவ மாலை' என்னும் விமரிசன நூல் தொகுக்கப்பெற்றது கி. பி. 9-ஆம் நூற்றாண்டு என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். நூலாகத் தொகுக்கப் பெற்றது 9 ஆம் நூற்றாண்டு என்றாலும் விமரிசன வெண்பாக்கள் கி. பி. 3-ஆம் நூற்றாண்டிலேயே தோன்றிவிட்டன என்பதும் அறிஞர் தம் ஆராய்ச்சி முடிவு. இவ்வாறு பார்த்தால், கி. பி. 3-ஆம் நூற்றாண்டிலேயே விமரிசனக் கலையை உருவாக்கிய பெருமை தமிழ் மொழிக்கு உண்டு!

'திருவள்ளுவ மாலை'யில் இடம் பெற்றுள்ள புலவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் கபிலர், பரணர், நக்கீரர், சீத்தலைச் சாத்தனார், கல்லாடர், மாமூலனார், மாங்குடி மருதன், கீரந்தையார், கவிசாகரப் பெருந்தேவனார், குலபதி நாயனார், ஔவையார், அரிசில் கிழார், வெள்ளி வீதியார், நப்பாலத்தனார் ஆகியோர் ஆவார்கள்.

திருஞான சம்பந்தர் மீது நம்பியாண்டார் நம்பி பாடிய பாடல்கள், நம்மாழ்வார் மீது கம்பர் இயற்றியதாகக் கருதப் பெறும் 'சடகோபரந்தாதி', சைவ சமய குரவர் நால்வர் மீது சிவப்பிரகாச சுவாமிகள் செய்த, 'நால்வர் நான்மணி மாலை' போன்ற பிரபந்தங்கள் யாவும் சமய நூல்களாகவே அமைந்திருக்கின்றன. ஆனால், திருவள்ளுவரின் சிறப்பைப் பாராட்டி இயற்றப் பெற்ற திருவள்ளுவ மாலையின் பாடல்கள் திருக்குறளின் சொற்சுவை, பொருட்சுவை முதலிய இலக்கிய நயங்களையே பாராட்டிப் பாடுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இது திருவள்ளுவ மாலைக்கு உள்ள தனிச்சிறப்பு ஆகும்.

—எஸ். எஸ்.

24 மொழிகளில் இலக்கியத் திருக்குறள்

உலகத்தில் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ள பெருமை திருக்குறளுக்கு உண்டு. அதனால்தான் 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதியார் பாராட்டிக் கூறியிருக்கிறார். உலகின் பாராட்டுப் பெறும் அளவுக்கு, உலகில் 24 மொழிகளில் குறள் பெயர்க்கப்பட்டுள்ளது. அந்த மொழிகள் எவை என்று பார்ப்போம்.

இந்திய மொழிகள் :

வங்காளம்
குசராத்தி
இந்தி
கன்னடம்
மராத்தி
சமஸ்கிருதம்
தெலுங்கு
மலையாளம்
உருது

ஆசிய மொழிகள் :

பர்மா
சீனம்
மலாயா
சிங்களம்
பிஜி

ஐரோப்பிய மொழிகள் :

ஆங்கிலம்
டச்சு
செக்
ஃபின்னிஸ்
ஃபிரெஞ்சு
ஜெர்மன்
லத்தீன்
போலிஷ்
ரஷியா
ஸ்வீடன்

டான்சியின் எழில் படைப்புகள்!

காலத்தை வெல்லும் டான்சியின் தயாரிப்புகள் மர மற்றும் எஃகு சாதனங்கள் டான்சியின் மேன்மையான படைபபுகள். நாளைய வடிவமைப்புகளில்

இன்றே வழங்கப்படும் இச்சாதனங்கள் நீடித்து உழைப்பவை. நாற்காலிகள், மேசைகள், பீரோக்கள், கட்டில்கள் முதலிய பற்பல எழில்மிகு தயாரிப்புகளை வழங்குவது டான்சி.



டான்சி

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்,
26, ஒயிட்ஸ் ரோடு,
சென்னை-600 014



திருக்குறளுக்கு பிறநாட்டார் வழங்கிய பாராட்டு மொழிகள்

உலகத்தின் தனிப்பெரும் திறமையாளர்களில் திருவள்ளுவரும் ஒருவர் என்பதில் ஐயமில்லை. மதிப்பிலே திருவள்ளுவரின் திருக்குறள் ஏனைய தமிழ் இலக்கியங்கள் யாவற்றையும் மிஞ்சி நிற்கிறது. ஒரு நாட்டிலுள்ள எல்லா மக்களின் உணர்ச்சியையும் ஊடுருவி, எந்நாளும் மாயாது நின்று நிலவும் ஆற்றல் மிக்க ஒரு சில பெரு நூல்களிலே அதுவும் ஒன்று. குறட்பாக்கள் மிகச் சிறந்த ஒழுக்கத்தைத் திட்டமிட்டுக் கூறும் உரைகளாக விளங்குகின்றன.

—ஜி. யு. போப்.

திருக்குறளுக்குப் பல மொழி பெயர்ப்புகள் வந்துள்ளன. எனினும் எந்த மொழி பெயர்ப்பும் திருக்குறளின் கவர்ச்சித் தன்மையை ஒரு சிறிதும் எடுத்துக் காட்ட முடியாது. உண்மையில் அது நன்கு பின்னப்பட்ட 'வெள்ளி வலை'யினுள் எழிலுற வைக்கப்பட்டிருக்கும் 'தங்க ஆப்பிள்' ஆகும்.

—டாக்டர் கிரௌல்.

திருக்குறளை ஆக்கியருளிய திருவள்ளுவரின் பிறப்புப் பற்றி எத்தகைய செய்திகள் புனைந்துரைக்கப் பெறினும், அவர் தமிழ்ப்பெரும் புலவர்களில் தெய்வத் தன்மை வாய்ந்த மன்னராக ஒப்புக் கொள்ளப்பெற்றிருக்கிறார்.

—கால்டுவெல்.

தமிழ் நூல்களில் தலை சிறந்து விளங்குவது திருக்குறளே. உயர்வுடனும் தூய்மையுடனும் உள்ளக் கருத்துக்களை எடுத்து விளக்கிய நூல்களில் அதுவும் ஒன்றாகும். திருக்குறள் ஆசிரியர், வகுப்புக்களையும் மக்கட் பிரிவுகளையும் நம்பிக்கைகளையும் பொருட்படுத்தாமல் மக்கள் குழுக்களுக்கே உரியவகையில் எழுதிச் செல்கிறார்; ஆன்ற நல்லொழுக்கத்தையும் கலப்பற்ற நீதியையுமே வகுத்துச் செல்லுகிறார். எத்தகைய குறைவும் இல்லாத நிறைவாற்றல் படைத்தவராகத் திகழ்கின்றார்.

—ஏரியல்.

கருத்திலும் நடையிலும் ஒப்புயர்வற்று விளங்கும் நூல்களில் தலையாயது திருக்குறள். மக்கள் யாவருக்கும் ஒருங்கே அமைந்துள்ள உண்மைகளை மட்டுமே தமது நூலில் திருவள்ளுவர் எடுத்துக் கூறியுள்ளார். இதனால் மத நூலிலும் ஏனைய சாத்திரங்களிலும் காணப்படும் பல சுவையற்ற பழக்க வழக்கங்கள் இடம்பெறாமல் நீக்கப்பட்டு, நூல் நடை பொதுவில் ஒரு மேம்பாட்டையடைந்து பொலிகிறது.

—ட்ரூ பாதிரியார்.



படமும் செய்தியும்

கர்ரும்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் பூதான் இயக்கத்தில் சார்பில் 30-3-76-ல் நடைபெற்ற விழாவில் திரு. பி. கே. தவே அவர்கள் பட்டா வழங்கினுர்.

சோவியத் ரஷ்யாவின் நீதித்துறை அமைச்சர் திரு. டெரிபிலோவ் அவர்கள் 31-3-76 அன்று தமிழ்நாடு ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்களைச் சந்தித்து உரையாடினுர்.



திருச்சியில் உள்ள துணைத் தொழிற் பேட்டையை, திரு. ஆர். வி. சுப்ரமணியன் அவர்கள் 30-3-76 அன்று பார்வையிட்டார்.

திரு. பி. கே. தவே அவர்கள் 30-3-76 அன்று, மதுரையில் நடைபெற்ற கருத்துக் காட்சியைப் பார்வையிட்டார்.



ஸ்டேட் பாங்கு துவக்கியுள்ள 'தனக் குத்தானே வேலைவாய்ப்பு அமைத்துக் கொள்ளும் கடன்' திட்டத்தின்கீழ், ஊனமுற்ற ஒருவருக்கு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மானியம் வழங்கினுர்.

ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்ரமணியன் அவர்கள் 27—3—76 அன்று, சென்னை 'தாஜ் கொரமாண்டல் ஹோட்டலில்' பால்வள நிறுவனம் மூலமாக "இலட்சக்கணக்கானோர்க்குப் பால்" (Milk for millions) என்ற கருத்தரங்கைத் துவக்கி வைத்தார்.

ஐக்கிய அரபு எமைரேட்டைச் சார்ந்த மின்சாரம் மற்றும் நீர்த்துறை அமைச்சர் திரு. சையத் இப்ராகிம் டார்னிஷ் அவர்கள் 2—4—76-ல் சென்னைக்கு வருகை தந்தார்.



அரசுப்பணியில் இருக்கும்போது இறந்துவிட்ட அரசு ஊழியர் ஒருவரின் துணைவியாருக்கு, குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், திரு. ஆர். வி. சுப்ரமணியன் அவர்கள் ரூபாய் 10,000 வழங்கினுர்.



ஆளுநர் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்கள் 29—3—76 அன்று, மதுரை பால்வள நிறுவனத்தைப் பார்வையிட்டார்.

'உலக ஊனமுற்றோர் நாள்' 3-4-76-ல் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. அவ்விழாவில், ஊன முற்றவர்களின் நல்வாழ்விற்குச் சிறப்பாகப் பணியாற்றியவர்களுக் குத் தமிழக ஆளுநர் திரு. கே.கே. ஷா அவர்கள் கேடயம் வழங்கிப் பாராட் டினார்.

திருமங்கலத்தில் நடைபெற்ற அரசி னர் இலவசக் கண்சிகிச்சை முகாமில், கண்சிகிச்சைச் செய்துகொண்டவர் களுக்கு 30-3-76 அன்று திரு. பி. கே. தவே அவர்கள் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கினார்.

சோவியத் ரஷ்யாவின் நீதித்துறை அமைச்சர் திரு. டெரிபிலோவ் அவர்கள் கிண்டியில் உள்ள பாம்புப் பண்ணையை 31-3-76 அன்று பார்வை யிட்டபோது, ஒரு பாம்பை எடுத்து கழுத்தில் மாலையாக அணிந்து கொண்டார்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள திரு. வி. கார்த்திகேயன் அவர்கள், முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. பி. சபாநாயகம் அவர்களிடமிருந்து 11-3-76-ல் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார்.





வள்ளுவர் என்னும் வள்ளல்

திருக்குறள் இன்று உலகப் பொது மறையாகத் திகழ்கிறது. இருபத்து நான்கு மொழிகளில் அது மொழி பெயர்க்கப் பெற்றுள்ளது. தமிழில் உள்ள காப்பியங்கள் பல, ஓர் இனத்துக்காக அல்லது ஒரு சமயத்துக்காக எழுந்துள்ளன. ஆனால் திருக்குறள் ஒன்றுதான் ஒரு தமிழன் உலகத்துக்காக எழுதிய ஒப்பற்ற நூலாக விளங்குகிறது. அது மட்டுமல்ல, இன்ன சமயத்துக்காக எழுதப் பெற்றது என்று அதனை எவராலும் அறுதியிட்டுக் கூற இயலவில்லை. அனைத்துலகும் ஏற்றுக் கொள்கின்ற வகையில் திருக்குறளை வழங்கியுள்ளார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

வள்ளுவரின் பெருமை குறித்து அண்மைக் காலக் கவிஞர்—விடுதலை வேள்வியில் ஈடுபட்ட கவிஞர்—சுப்பிரமணிய பாரதியார்,

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்று உவகையுடன் குறிப்பிடுகிறார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றுள்ள ஜி.யு. போப் அவர்களின் வெளியிடப்பெறாத கையெழுத்துப் பிரதியில் (Unpublished manuscript of G.V. POPE) கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"ஏசு கிறிஸ்து அன்பு நெறியை உலகுக்குக் கூறினார். 'ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்டு'' என்று வேண்டினார். ஆனால், திருவள்ளுவரோ ஏசு கூறிய அன்பு நெறியினும் மேம்பட்ட அன்பு நெறியைப் போதிக்கிறார்.

இன்னஞ் செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்

என்று கூறியதன் வாயிலாகப் பகைவர்கள் நாண அவர்க்கு நன்மை செய்யத் தூண்டுகிறார். ஏசுவையும் திருவள்ளுவரையும் ஒப்பிடுங்கால் திருவள்ளுவர் ஏசுவை விட ஓர் அங்குலம் உயரமானவராகவே காணப் பெறுகிறார். (While Comparing Jesus with Thiruvalluvar, the later is one inch highter than the former).

இவ்வாறு பலராலும் பாராட்டப் பெறும் வகையில் நீதி நூலை வழங்கிய வள்ளுவர் ஒரு வள்ளலாகத் திகழ்கிறார். அவருக்குப் பின்னர் வந்த புலவர் பெருமக்கள் தமது நூல்களில் வள்ளுவரின் கருத்துக்களை எடுத்துக் கொள்ள வகை செய்ததன் வாயிலாகத் திருவள்ளுவர் வள்ளலாக விளங்குகிறார். ஒரு சில புலவர்கள், வள்ளுவரின் கருத்தை மட்டுமல்ல, சொற்றொடர்களை அப்படியே தமது நூல்களில் எடுத்தாண்டுள்ளனர்.

சிலப்பதிகார நூலாசிரியரிலிருந்து, அண்மைக் கால கவி பாரதி வரை, வள்ளுவரின் குறளைத் தமது நூல்களில் எடுத்தாண்டுள்ளனர்; அவ்வாறு எடுத்தாளப்பட்ட வரிகளை இங்கே நோக்குவோம்.

ஐம்பெருங் காப்பியங்களில் முதன்மையானதாக இடம் பெற்றுள்ளது சிலப்பதிகாரம் ; சேரன் செங்குட்டுவ மன்னனின் இளவல் இளங்கோவடிகளால் யாக்கப் பெற்ற இனிய தமிழ்க் காப்பியம் ; அந்தக் காப்பியத்தில் திருக்குறளின் கருத்துக்களும், சொற்றொடர்களும் எடுத்தாளப்பட்டிருக்கின்றன. தமக்கு முன்னோராகிய வள்ளுவரின் பொன்னுரையை அன்புடனும் ஆர்வத்துடனும் எடுத்தாண்டிருக்கிறார் இளங்கோவடிகள்.

குழந்தைச் செல்வத்தின் பெருமை குறித்துப் பேச வந்த திருவள்ளுவர் மக்கட்பேறு என்னும் அதிகாரத்தில் குறிப்பிடுகிறார்:

குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்

இந்த அருங்கருத்து இளங்கோவடிகளின் அகத்தைத் தொட்டிருக்கிறது. எனவே, தாம் துறவியாக இருந்த போதிலும் கூட, கண்ணகியின் மழலைப் பேச்சைப் பெருமைப்படுத்திக் கூறுகிறார். கண்ணகி தன் கையிலே ஒரு கிள்ளையை வைத்து, அதற்கு மொழிப் பயிற்சி நடத்துகிறாள்; கண்ணகியின் மழலையைக் கேட்ட கிளி, தனக்கு அது போன்று பேச வரவில்லையே என்று ஏங்கியதாகக் குறிப்பிடுகிறார் இளங்கோ; அவரது வரிகளில் வள்ளுவர்



குறளின் எதிரொலி தோன்றுகிறது ; அதனைப் பார்ப்போம் :

குழலும் யாழும் அமுதும் குழைத்தநின்
மழலைக் கிளவிக்குவருந்தின வாகியும்

சிலப்பதிகார ஆசிரியரை அடுத்து, மணிமேகலை ஆசிரியரான சீத்தலைச் சாத்தனாரும் திருவள்ளுவரின் திருக்குறளில் ஆழ்ந்திருக்கிறார் என்பதை, அவர்தம் காவியம் இனிதுற விளக்குகிறது.

திருவள்ளுவர், 'பிறவியை ஒழிக்க வேண்டும்' என்றும், 'அதற்கு இறைவனடி நாடுதல் வேண்டும்' என்னும் கொள்கை கொண்டவர். அதனால் தமது குறளில்

பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார்
இறைவனடி சேரா தவர்.

எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கருத்தை, சீத்தலைச் சாத்தனார் தமது மணிமேகலையில், அறவண அடிகள் வாயிலாக உணர்த்துகிறார்.

பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பேரின்பம்
பற்றின் வருவது முன்னது--பின்னது
அற்றோர் உறுவது அறிக....

சிலப்பதிகார ஆசிரியர், மணிமேகலை ஆசிரியர் ஆகியோரைப் போன்றே 'சீவக சிந்தாமணி' ஆசிரியர் 'திருத்தக்க தேவ'ரும், தேவர் திருக்குறளைத் தமது நூலில் எடுத்தாண்டிருக்கிறார். குறளில் தோய்ந்து எழுந்தவர் சிந்தாமணி ஆசிரியர் என்பதை நம்மால் உணர முடிகிறது. இளங்கோவடிகளும், சாத்தனாரும் ஆசிரியப் பாவில் எழுதினால், திருத்தக்க தேவர் குறளின் கருத்துக்களை விருத்தத்தில் வடித்துத் தந்திருக்கிறார்.

ஒரு தந்தைக்கு மகன் ஆற்றவேண்டிய கடமையை எடுத்துரைக்க வந்த திருவள்ளுவர் குறிப்பிடுகிறார் :

மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனுஞ் சொல்

இதே கருத்தை விருத்தத்தில் எடுத்துரைக்கிறார் திருத்தக்க தேவர்.

கட்டியங்காரன் என்பான் கவர்ந்து சென்ற ஆநிரைகளை சீவகன் மீட்டு வருகிறான். அப்போது, சீவகன் திறம் குறித்து மக்கள் வாழ்த்துவதாக அமைந்த பாடலைப் பார்ப்போம்.

செம்மலைப் பயந்த நற்றாய்
செய்தவம் உடையார் என்பார்
எம்மலைத் தவம்செய் தாள்கொல்
எய்துவம் யாமும் என்பார்...

அடுத்து வள்ளுவரின் குறளைக் கவிச் சக்கரவர்த்தி கம்பர் எவ்வாறு தமது நூலில் எடுத்தாண்டுள்ளார் என்று பார்ப்போம். கல்வியிற் பெரியவர் கம்பர்—எனப் புகழ் பெற்ற கம்பருக்கு, வள்ளுவர், கவிதை வரிகளைக் கடனாகத் தந்திருக்கிறார்.

தலைவனும், தலைவியும் ஒருவரை ஒருவர் சந்திக்க நேர்ந்தால் அவர்கள் தமக்குள் பேசிக் கொள்ளமாட்டார்கள் என்றும், அவர்களது கண்களே பேசிக் கொள்ளும் என்றும் குறிப்பிட வந்த வள்ளுவர் கூறுகிறார்.

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின்
வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல—என்று.

கம்பர் தமது இராம காதையில் இந்தச் சொற்றொடரை அப்படியே எடுத்தாண்டுள்ளார்.

இராமனும் சீதையும் ஒருவரை யொருவர் சந்தித்த முதற் காட்சியில் அவர்கள் இருவரது மெய்ப்பாட்டுணர்வுகளையும் தெரிவிக்க நினைத்த கம்பர் குறிப்பிடுகிறார் :

எண்ணரு நலத்தினாள் இனையன் நின்றுழி
கண்ணொடு கண்ணிணை கவ்வி ஒன்றையொன்(று)
உண்ணவு நிலைபெறா துணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்

திருக்குறள் பதினெண்கீழ்க் கணக்குநூல்களுள் ஒன்று. இதனைப் பின்பற்றி எழுந்த நாலடியார் என்னும் நீதி நூல், பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் மற்றொன்றாகும். நாலடியாரில் திருக்குறளின் கருத்துகள் மிகுந்து காணப்படுகின்றன.

கல்வியின் சிறப்பை எடுத்துரைக்க வந்த வள்ளுவர் குறிப்பிடுகிறார் :

கேடில் விழுச்செல்வம் கல்வி, ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

இதனை நாலடியார் வேறு வகையில் எதிரொலிக்கிறது. அதனைப் பார்ப்போம் :

குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல ; நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே அழகு

திருமலை மன்னரின் வேண்டுகோளை ஏற்று, திருக்குறள் போல் அரியதொரு நூலாம் 'நீதிநெறி விளக்க'த்தை உருவாக்கிய குமரகுருபரர் அந்நூலில், கல்வியின் பெருமையை எவ்வாறு கழலுகிறார் என்று பார்ப்போம்.

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கரை நல்லிசையும் நாட்டும் - முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியினுங் கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை

கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தில் இறைவனின் திருக்கல்யாண குணங்களையும், அவனடி தொழுவதால் ஏற்படும் நன்மைகளையும் எடுத்துரைக்க வந்த வள்ளுவர் குறிப்பிட்டார் :

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல

இதே கருத்துக்களையும் சொற்றொடர்களையும் மிக மகிழ்ந்து பயன்படுத்தியிருக்கிறார் கச்சியப்ப சிவாச்சாரியார் தமது ''கந்த புராணம்'' என்னும் நூலில், அதனைப் பார்ப்போம் :

ஊரி லான்குணம் குறியிலான்
செயலிலான் உரைக்கும்
பேரி லான்ஒரு முன்இலான்
பின்இலான் பிறிதோர்
சாரி லான்வரல் போக்கிலான்
மேல்இலான் தனக்கு
நேரிலான் உயிர்க் கடவுளாய்
என்னுளே நின்றான்.

மக்கட் பேற்றின் பெருமையைக் குறிப்பிட வந்த வள்ளுவர், அதனை மிகச் சிறப்பாகத் தெரிவித்தார்.

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற

மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்ட லின்பம் செவிக்கு

இதே கருத்தை வில்லிப்புத்தூரார் தமது 'வில்லி பாரதத்தில்' பாண்டு மன்னனின் வாயிலாக நயம்பட எடுத்துரைத்தார்.



கல்லா மழலைக் கனியூறல் கலந்துகொஞ்சம்
சொல்லால் உருக்கி அழுதோடித் தொடர்ந்துபற்றி
மல்லார் புயத்தில் விளையாடு மகிழ்ச்சிமைந்தர்
இல்லா தவர்க்கு மனைவாழ்வின் இனிமைஎன்னும்?

திருவள்ளுவரின் மேற்சொன்ன கருத்தைப் புகழேந்திப் புலவர் தமது 'நலவெண்பா'வில் எடுத்தாண்டிருக்கிறார். அதனைப் பார்ப்போம் :

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும்மற்று
என்னுடைய ரேனும் உடையரோ—இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையீங் கில்லா தவர்.

இதே கருத்தைப் 'புறநானூற்றில்' உள்ள 'பாண்டியன் அறிவுடை நம்பியின்' பாடலிலும் காணலாம் : அது வருமாறு :

படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டும் கல்வியும் சூழ்ந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத்தாம் வாழு நாளே

வள்ளுவரின் கருத்தை, தாயுமானவர் 'உலக வழக்கில்' மிக எளிமையான சொற்களால் கூறி விடுகிறார்: அதனைப் பார்ப்போம் :

பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம்; பிள்ளை
பெருமலடி அறிவாளோ ?

புலவர்களைச் 'சொல்லேருழவர்' என்று சிறப்பித்துச் சொல்கிறார் வள்ளுவர். புலவர் தம் பெருமையையும் அவரிடம் மாற்றார் பகை கொள்ளக் கூடாது என்பதையும் வள்ளுவர் எடுத்துக் காட்டும் செய்யுள் வருமாறு :

வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை

இந்தச் சொல்லேருழவர் பகை என்ற சொற்றொடர் 'தமிழ் விடு தூது' என்னும் நூலாசிரியரான மதுரைச் சொக்கநாதரின் உள்ளத்தில் இடம்பெற்று விட்டது. எனவே தமது நூலில் அதனை எடுத்தாள்கிறார். தமிழின் பெருமை குறித்துக் கூற வந்த இடத்தில் அவர் குறிப்பிடுகிறார்'.

நல்லேரி னுற்செய்த நாற்கரணத் தேர்பூட்டிச்
சொல்லே ருழவர் தொகுத்தீண்டி

'இனியவை கூறல்' என்னும் அதிகாரத்தில், இன்சொல்லின் பெருமையைக் கூற வந்த திருவள்ளுவர் குறிப்பிடுகிறார் :

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது

இதே கருத்தை, 'சிவப்பிரகாசர்' தமது 'நன்னெறி' என்னும் நூலில் வேறு வகையில் எடுத்துரைக்கிறார் :

இன்சொலா லன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே—பொன்செய்
அதிர்வளையாய்! பொங்கா தழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல்.

ஒரு மனிதனுக்குப் பெருமையும் சிறுமையும் எதனால் வருகின்றன என்பதைத் 'தெரிந்து தெளிதல்' என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்

ஒரே வரியில் இந்தக் கருத்தை, அதிவீரராம பாண்டியர் தமது 'நறுந்தொகையின்' வாயிலாக எடுத்துரைக்கிறார்.

பெருமையும் சிறுமையும் தாள்தர வருமே

இருபதாம் நூற்றாண்டுப் புலவரும், விடுதலை வேள்வியில் ஈடுபட்ட மாபெரும் கவிஞருமாகிய சுப்பிரமணிய பாரதியார் வள்ளுவர் குறளை நன்கு பயின்றிருக்கிறார் என்பதை, அவர்தம் குறள் மேற்கோள்களால் எளிதில் உணர முடிகிறது.

'இரவச்சம்' என்னும் பகுதியில், புரட்சிகரமான கருத்தைக் கீழ்க் கண்டவாறு தெரிவிக்கிறார் திருவள்ளுவர்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டில் பரந்து
கெடுக உலகியற்றி யான்

'ஒருவன் பிச்சையெடுத்து உயிர்வாழ நேர்ந்தால், இந்த உலகத்தை உருவாக்கிய இறைவன் உடனே அறிந்தொழுக' என்று வியங்கோள் வினைமுற்றில் கூறுகிறார் :

இதே கருத்தை இருபதாம் நூற்றாண்டுப் புலவர் பாரதியார், வள்ளுவரை விட வேகமாகச் சொல்கிறார்.

இனி ஒரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனிஒருவனுக் குணவில்லை—எனில்
சகத்தினை அழித்திடுவோம். —என்கிறார்.

வள்ளுவர் இரக்கும் சூழ்நிலையை ஒருவனுக்கு உருவாக்கிய இறைவன் தானே ஒழிக என்று சொன்னால், பாரதியோ அவனை ஒழிப்போம் என்று கூறுகிறார்.

இவ்வாறு, திருவள்ளுவரின் குறள், வழிவழியாக, பின்னர் வந்த புலவர்களால் எடுத்தாளப்பட்டு, கற்போர்க்கு இன்பத்தை வழங்கிவருவது கண்கூடு.

—புலவர் சண்முகசுந்தரம்

இணையற்ற இருபது அம்சம்

திருமதி பாப்பா

சமதர்மச் சமுதாயம் சமைத்திடவே தீட்டும்
சத்தான இருபதம்சம் சாற்றுகிறேன் கேளீர்!
சுமையான விலைவாசி குறைத்திடுதல் ஒன்று;
சுவையுணவுப் பொருள்விளையும் நிலம்பகிர்தலி ரண்டு;
தமக்கில்லம் இல்லையெனில் வீடுதரல் மூன்று;
தயவில்லாக் கொத்தடிமை முறைநீக்கல் நான்கு;
பகைக்கும் கடன்சுமையைத் தணித்துவிடல் ஐந்து
வயலகத்துத் தொழிலாளர் நிலைஉயர்த்தல் ஆறு.

குடியுயர நிலத்தடிநீர் பெருக்குதல்தான் ஏழு
கொண்டஅனல் மின்நிலையம் கட்டிடுதல் எட்டு
கடிதினிலே கைத்தறியைக் காப்பதொன்ப தாகும்
கடமையுடன் மலிவுத்துணித் தரங்கூட்டல் பத்தாம்!
உடமையெனத் திகழ்கின்ற நகரமனைக் கெல்லாம்
உச்சவரம் பெனக்கொணர்தல் பதினொன்றே யாகும்!
நெடிதுநாள் வரிஏய்க்கும் நீசர்தம் மேலே
நிகழ்த்துகின்ற நடவடிக்கை பன்னிரண்டே யாகும்!

பெருங்கடத்தல் தனைத்தடுத்தல் பதின்மூன்றே யாகும்
பெருமைமிகு இறக்குமதித் தொழிலினிலே ஊழல்
பெருகாது நீக்கிவிடல் பதினான்கே! நாட்டில்
பாட்டாளி நிருவாகப் பங்குபெறும் நேர்த்தி
சிறப்பான பதினைந்தாம்; தேசமட்டம் தன்னில்
சாலைப்போக்கு வரத்தனுமதி பதினாறே யாகும்!
வருமான வரிவரம்பெண் ணாயிரமென் றிங்கே
வகையாகத் திட்டமிடல் பதினேழாம்! சொல்வோம்.

வருங்காலச் சிற்பிகளாம் மாணவர்கள் எல்லாம்
வடிவான விடுதிகளில் பயில்கின்ற போது
பெறுகின்ற பொருள்விலைக்குக் கட்டுப்பா டென்னல்
பதினெட்டாம்; அவர்பயிலப் புத்தகங்கள் தம்மைக்
குறுவிலையில் வழங்கிடுதல் பத்தொன்ப தாகும்!
குவலயத்தில் அவர்வாழ்வு முன்னேற்றம் காண
உருவாக்கும் தொழிற்பயிற்சி இருபதென்போம்; நாட்டின்
உயிர்மூச்சே இருபதம்சம் எனச்சொல்வோம்! உய்வோம்!



தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட்,

நெ. எக்ஸ். 406.

14, சித்தர்டன் சாலை, வேப்பேரி, சென்னை600 007

தொலைபேசி : 30877, 30878 — தந்தி : ''ஹவுஸ்பாங்க்''

செயலாளர் : 33000 — தபால் பெட்டி : 486

தலைவர் : **திரு. பழனிவேல்ராஜன்,** பி.எஸ்.ஸி., பி.எல்.,

உப–தலைவர் : **திரு. பி. கஸ்தூரி பிள்ளை**

பொருளாளர் : **திரு. எஸ். பழனிசாமி,** எம். ஏ.,

அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம்	..	ரூ.	5 கோடி
செலுத்தப்பட்ட பங்கு மூலதனம்	..	ரூ.	3,09,02,125/-
பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை	..	ரூ.	25,66,31,157/-

இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்குப் புதிய வீடு கட்ட 15 வருட நீண்ட காலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன.

அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்சக் கடன் அளவு

புதிய வீடுகள் கட்டுவதற்கு	..	ரூ. 30,000/-
புதிய வீடுகள் கட்டுவதற்கு (கிராமிய கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம்)	..	ரூ. 10,000/-

பூ. க. பத்மநாபன், பி.ஏ., எச்.டி.சி.,
இணைப்பதிவாளர்—செயலாளர்.

சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை) எண் 151.
சேலம்-1.

தபால் பை எண். 171 — தொலைபேசி எண் : 2402

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி சேந்தமங்கலம், கொங்கணாபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளி பாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, பெத்தநாய்க்கன் பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

சொந்த நிதி ரூ. 327 லட்சம். — நடைமுறை மூலதனம் 1711 லட்சம்.

வட்டிவிகித அட்டவணை

கால் டெபாசிட்டுகள் :	ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்)	3¼%
	ரூ. 10,000/-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்)	3½%
சிசன் டெபாசிட்டுகள் :	ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும்	
	15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும்	3%
	46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும்	3½%

பிக்செட் டெபாசிட்டுகள் : ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு :

1. 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் 6%
2. 6 மாதத்திற்கும் அதற்குமேல் 9 மாதத்திற்குள் 6½%
3. 9 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் 7½%
4. 12 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் 8½%
5. 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் 9½%
6. 61 மாதத்திற்கும் அதற்குமேலும் 10½%

நடப்புக் கணக்கு ½% — சேமிப்புக் கணக்கு 6%

ரூ. 5000/-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க.

கி. பாலசுந்தரம், பி.ஏ., துணைப் பதிவாளர், நிர்வாக அதிகாரி. — **பி. காசி,** பி.எஸ்.சி., எச்.டி.வி., காரியதரிசி. — **எஸ். ஆறுமுகம்,** தலைவர்.

''இன்றியமையா உணவுப் பண்டங்களின் விலைகளைக் குறைத்திட வேகமான முயற்சிகள், நடவடிக்கைகள்; உற்பத்தி உயர்வு; பண்டக் கொள்முதல் பணியினை விரைந்து செயலாற்றுதல்; இன்றியமையாப் பொருட்களின் வழங்கு முறைகளைச் சீராக்குதல்''

''மாணவர் விடுதிகளுக்கு, இன்றியமையாத உணவுப் பொருட்களைக் கட்டுப்பாடு விலையில் வழங்குதல்''

—இவை நமது பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் அறிவித்துள்ள இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்திலுள்ள 1-வது, 18-வது திட்டங்களிலுள்ள வாசகங்களாகும்.

இவ்விரு திட்டங்களையும் தீவிரமாகச் செயல்படுத்த ''தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்'' (Tamil Nadu Civil Supplies Corporation Limited) முனைப்பான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதன் சீரிய பணிகள், விரைவான நடவடிக்கைகள் தமிழக மக்களுக்கும், மாணவர்களுக்கும் நன்மை அளிப்பனவாக அமைந்துள்ளன.

நுகர்பொருள் வாணிபக் கழகம்!

ஏழை எளியோர் நடுத்தர மக்கள், வாழ்க்கையில் சற்று வசதியை இழந்தவர்கள் ஆகியோரின் நலன்களைப் பாதுகாத்திடவும், அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களைக் குறைந்த விலையிலும், சீரான முறையிலும் விநியோகம் செய்திடவும் தோற்றுவிக்கப் பெற்ற தொரு நிறுவனம்தான், தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்.

வாணிப முறைகளைச் சீரமைக்க வேண்டும்; அதிலும் வெளிச் சந்தை வாணிபத்தைச் செம்மையான வகையில் செயல்படுத்திட வேண்டும்; நேரங்களுக்குத் தகுந்த வகையில் அரிசி, நெல் விலைகளை நிலைப்படுத்திட வேண்டும்; தரமான பொருட்களையே வழங்கிட வேண்டும் என்கின்ற எண்ணங்களின் அடிப்படையிலே 1972-ஆம் ஆண்டில் இக்கழகம் துவக்கப் பெற்றது. ஆனாலும், இதனுடைய பணிகள், செயல்முறைகள், நடவடிக்கைகள் தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சி அமலுக்கு வந்த பின்னர் விரைவுபடுத்தப்பட்டன - தீவிரமாக்கப்பட்டன என்பதை இங்கே நாம் குறிப்பிட வேண்டும்.

நோக்கம்

இக்கழகம் கொண்டுள்ள குறிக்கோள்களில் முதன்மையானது கொள்முதலும் விநியோகமுமாகும். நெல், அரிசி, கோதுமை, ரவை, மைதா, உணவுதானியங்கள், பயறு வகைகள், மிளகாய் வற்றல், எண்ணெய் வகைகள், வனஸ்பதி, குழந்தை உணவு மற்றும் சத்துணவுப் பொருட்கள், நுகர்வோர்களுக்குத் தேவையான ஏனைய பொருட்கள் போன்றவைகளைக் கொள்முதல் செய்வதன் மூலம் பெற்று, அவைகளைக் குறைந்த விலையிலும், சீரான முறையிலும் வழங்கி வருவதைப் பெரும்பணியாகக் கொண்டுள்ளது.

கொள்முதல்

நெல்லும், அரிசியும்

மக்களின் அன்றாட வாழ்வில் உணவு முக்கியமான இடத்தைப் பெறுகிறது. எனவே மக்களுக்குத் தேவையான உணவுப்பொருள்



களை வழங்குவதைக் கடமையாகக் கொண்டுள்ள அரசு, முக்கியமான உணவுப் பொருட்களைக் கொள்முதல் செய்து அவைகளைச் சீராக விநியோகம் செய்வதில் காட்டிவரும் தீவிரத்தை அனைவரும் அறிவர்.

நெல்கொள்முதலில் தமிழ்நாடு அரசினுடைய மொத்த ஏஜெண்டாக நுகர்பொருள் வாணிபக் கழகம் செயல்பட்டு வருகிறது. லெவி மற்றும் வெளிச் சந்தையில் வாங்குவதன் மூலம் நெல் கொள்முதலைச் சீராகச் செய்து வருகிறது. சிற்சில பகுதிகளில் உள்ளூர் கொள்முதலில் கூட்டுறவுச் சங்கங்களும், இந்திய உணவுக்கழகமும் (FCI) இக்கழகத்தினுடைய ஏஜெண்டுகளாகச் செயல்படுகின்றன. அரசின் சார்பில் மேற்கொள்ளப்படுகின்ற கொள்முதலால் உண்மையில் ஏற்படுகின்ற பலன்கள் உற்பத்தியாளர்களுக்கே செல்கின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்காகவே, ஏராளமான 'நேரிடையாக வாங்கும் மையங்கள்' இயங்குகின்றன. பொதுவாக, மொத்தக் கொள்முதலும் இக்கழகத்தினுடைய கணக்கிலே மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

கொள்முதல் செய்யப்படுகின்ற நெல் நன்கு பதப்படுத்தப் பெற்று, தரம் மிகுந்த அரிசியாக அரைக்கப்படுகின்றது. இந்தப் பணிகளில் இக்கழகத்திற்குச் சொந்தமான 13 நவீன ஆலைகள் ஈடுபட்டுள்ளன. இவைகள் மட்டுமின்றி ஏராளமான தனியார் நிறுவனங்களைச் சார்ந்த அரிசி ஆலைகளும் இப்பணிகளைச் சீரான முறையில் மேற்கொண்டு வருகின்றன. இக்கழகம் தமிழகம் முழுமைக்கும் ஏறத்தாழ 853 அரிசி அரைவை ஏஜெண்டுகளை நியமித்துள்ளது. கூட்டுறவுத் துறையினரிடமிருந்து இக்கழகத்தால் மேற்கொள்ளப் பெற்ற இந்த 13 நவீன அரிசி ஆலைகள் சிலபல காரணங்களால் முழு அளவிற்குச் செயல்பட முடியவில்லை. இவைகளை முழு அளவிற்குச் செயல்படுத்திடவும், திறமையாக இயக்கிடவும், தரமான அரிசியைத் தயாரித்திடவும் தேவையான எல்லாவித நடவடிக்கைகளையும் இக்கழகம் தற்பொழுது மேற்கொண்டுள்ளது. இவைகள் அனைத்தும் சீராக இயங்குவதற்கென இக்கழகம் மூன்று 'மெக்கானிக்கல்' என்ஜினியர்களை நியமித்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சாதனை

இக்கழகம் இதுவரை அதிக அளவில் அரிசிக் கொள்முதல் பணியினை மேற்கொண்டு வந்துள்ளது. 1973-ஆம் ஆண்டில் 27,709 டன்கள் சம்பா அரிசியும் 18,213 டன்கள் குறுவை அரிசியும், 1974-ஆம் ஆண்டில் 1,33,522 டன்கள் சம்பாவும், 1,39,707 டன்கள் குறுவையும், 1975-ஆம் ஆண்டில் 2,44,098 டன்கள் சம்பாவும், 3,55,159 டன்கள் குறுவை அரிசியும் கொள்முதல் செய்யப்பட்டன. ஆனால் 1976-ஆம் ஆண்டில் இன்று வரை மிகக் குறுகிய காலத்தில் 3,76,403 டன்கள் சம்பா அரிசி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது பாராட்டத்தக்கதாகும். இதில் தனியார் ஏஜெண்டுகள், நெல் அரைவைக்கென மற்ற மாவட்டங்களுக்கு நெல் கொண்டு செல்வதை அறவே அகற்றியுள்ளது இக்கழகத்தினுடைய குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

கோதுமை, மைதா, ரவை மற்றும் சர்க்கரை

மாநிலம் முழுமைக்கும் தமிழ்நாடு அரசால் நியமனம் செய்யப்பெற்றுள்ள ஒரு நிறுவனமாக இக்கழகம் செயல்படுகிறது. கோதுமை, கோதுமைத் தயாரிப்புப் பொருட்கள் (ரவை, மைதா) சர்க்கரை போன்றவைகளைக் கொள்முதல் செய்து, அவைகளைச் சிறப்பான முறையில் பாதுகாத்து, சீரான வகையில் விநியோகிக்கும் பணிகளையும் மேற்கொண்டுள்ளது.

கொள்முதல் செய்யத் துவங்கிய காலத்திலிருந்து இன்று வரையில் இதன் பணிகள் வேகமாகவே நடைபெற்று வருகின்றன. 1972-ஆம் ஆண்டில் 2,983 மெட்ரிக் டன் கோதுமை, 1973-ஆம் ஆண்டில் 7,074 மெட்ரிக் டன் கோதுமையும், 52,610 மெட்ரிக் டன் கோதுமை தயாரிப்புப் பொருட்கள், 1,02,568 மெட்ரிக் டன் சர்க்கரையும், 1974-ஆம் ஆண்டில் 36,324 மெட்ரிக் டன் கோதுமை, 79,015 மெட்ரிக் டன் கோதுமைத்தயாரிப்புப் பொருட்கள், 1,19,692 மெட்ரிக் டன் சர்க்கரையும், 1975-ஆம் ஆண்டில் 4,96,000 மெட்ரிக் டன் கோதுமை, 1,29,000 மெட்ரிக் டன் கோதுமைத் தயாரிப்புப் பொருட்கள், 1,38,314 மெட்ரிக் டன் சர்க்கரையும் கைக்கொள்ளப்பட்டன. இந்த ஆண்டில் இன்றைய நாள் வரையில் 500 மெட்ரிக்டன் கோதுமை, 54,000 மெட்ரிக் டன் கோதுமைத் தயாரிப்புப் பொருட்கள், 40,664 மெட்ரிக் டன் சர்க்கரையும் கைக்கொள்ளப் பெற்றுள்ளன.



நெல், அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற இன்றியமையா உணவுப் பொருட்களோடு பயறு வகைகள், மிளகாய் வற்றல், எண்ணெய் வகைகள், குழந்தை உணவு, சத்துணவு, சோப்புகள் போன்ற அவசியமான பொருட்களையும் கொள்முதல் செய்து நுகர்வோரின் தேவையைப் பூர்த்தி செய்கிறது.

பயறும் மிளகாயும்

நம்முடைய மாநிலம் பயறு வகைகளைப் பொறுத்த மட்டில் எப்பொழுதும் பற்றாக்குறையிலே காணப்படுகிறது. இத்தகு பற்றாக்குறையினைச் சமாளிப்பதற்கென ஆந்திரப் பிரதேசம், மகாராட்டிரம், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் போன்ற உபரி விளைச்சல் மாநிலங்களிலிருந்து பயறு வகைகளை இறக்குமதி செய்து வருகின்றது. கடந்த மூன்று ஆண்டுகளாக மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து அதிக அளவில் பயறு வகைகளைக் கொள்முதல் செய்துள்ளது.

அறுவடைக் காலத்தில் உற்பத்தியாளர்களிடமிருந்து பயறு வகைகளைக் கொள்முதல் செய்து அவைகளைப் பருப்பு வகைகளாக மாற்றிட, தகுந்த நடைமுறைகளையும் கடைப்பிடித்து வருகின்றது. பருப்புகள் தரம் மிகுந்ததாகவும், பூச்சிகளால் கெடாதவாறும் நன்கு பாதுகாக்கப் பெற்று, பொதுமக்களுக்கு தகுந்த விலையில் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

நியாயமான விலையில் மிளகாய் வற்றலை வழங்கிடும் பணியினையும் மேற்கொண்டுள்ளதால் 1974 ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உற்பத்தியாளர்களிடமிருந்து நேரிடையாகவே கொள்முதல் செய்தது. நுகர்பொருள் வாணிபக் கழகச் சில்லறை அங்காடிகள் அனைத்திலும் கிடைத்திடச் செய்யும் விதத்தில் இருப்பையும் சீராகப் பாதுகாத்து வருகின்றது.

பொது மக்களுக்கு வழங்கிட...

உணவுப் பொருள்கள் கொள்முதலில் சாதனை கண்டுவிட்டால் மட்டும் போதுமா? அவைகளைப் பொதுமக்களுக்கு வழங்குவதிலும் சாதனையைக் காட்டிட வேண்டுமல்லவா? எனவே தான் கொள்முதல் செய்யப்படுகின்ற உணவுப்பொருட்கள் நன்கு பாதுகாத்துத் தரம் மிகுந்த, சுத்தமான பொருட்களாகவும், ஏழை-எளியோர், நடுத்தர மக்களின் வாங்கும் சக்திக்கேற்ற வகையில் குறைந்த விலையிலும் விநியோகம் செய்வதற்கான எல்லாவித நடவடிக்கைகளையும் இக்கழகம் மேற்கொண்டு வருகின்றது.

இக்கழகத்தின் செயல்முறைகள், நடவடிக்கைகள் மொத்த வியாபாரத்திற்காக மட்டும் வரையறுக்கப் பெறவில்லை. சில்லறை வாணிபத்தை எத்தகைய முறையில் செயல்படுத்திட வேண்டும் என்பதை எடுத்துக் காட்டும் வகையில் மாநிலத்தில் முக்கியமான இடங்களில் 'சில்லறை அங்காடி' களை நிறுவியுள்ளது. இந்த வகையில் தமிழகத்தில் நிறுவப்பெற்றுள்ள சில்லறை அங்காடிகளின் எண்ணிக்கை 589 ஆகும். இதனால் ஏறத்தாழ 10,07,000 கார்டுதாரர்கள் பயன் பெறுகின்றனர்.

இத்தகு முறையில் சில்லறை அங்காடிகளை நிறுவியதன் மூலம் தனியார் சில்லறை அங்காடிகளை முற்றிலும் நீக்கியுள்ளது குறிப்பிடத் தகுந்ததொரு சாதனையாகும். இந்த வகையில் சென்னை நகரில் 200 புதிய அங்காடிகள் மிகக் குறுகிய காலத்தில் நிறுவப்பெற்றுள்ளன. தற்பொழுது சென்னை நகரிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் செயல்பட்டு வரும் சில்லறை அங்காடிகளின் எண்ணிக்கை 294 ஆகும். இந்த வகையில் சுமார் 5,17,000 கார்டுதாரர்கள் பயன்பெற்று வருகின்றனர். நெரிசலைத் தவிர்ப்பதற்கும், நுகர்வோர்களுக்குத் தேவைமிகுந்த வசதிகளை நல்குவதற்கும் ஏற்ற வகையில் ஓர் அங்காடிக்கு 1,500 முதல் 2,000 கார்டுகள் வரை சேர்க்கப் பெற்றுள்ளன.

விநியோகம் செய்யப்படுகின்ற பொருட்கள் தரம் மிகுந்ததாகவும், சுத்தமானதாகவும் இருக்க வேண்டும். விநியோகத்தில் சீரான முறையினைக் கையாள வேண்டும் என்கின்ற குறிக்கோளின் அடிப்படையில் இக்கழகத்தினுடைய 'விநியோகப் பிரிவு' பெரும்பங்கு ஏற்று சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றது.

தாராளமாய்க் கிடைக்கும் தரமான பொருட்கள்!

வழங்கப்படுகின்ற பொருட்கள் தரம் மிகுந்தனவா என்பதை உறுதிப்படுத்திடுவதற்கென தரக்கட்டுப்பாடு நிர்ணயமும் செய்யப்பட்டு வருகின்றது. கொள்முதல், பதப்படுத்தல், சேமித்துக் காத்தல், விநியோகம் செய்தல் என்பன போன்ற வேறுபட்ட பகுதிகளில் தரக்கட்டுப்பாட்டினைத் திறன் வாய்ந்ததொன்றாகவும் ஆக்கி வருகின்றது. இத்தகு இடங்களில் தேர்ச்சி பெற்ற தரக்கட்டுப்பாட்டு வல்லுநர்கள் நியமனம் செய்யப் பெற்றுள்ளனர்.

சேமிப்பில் புதிய முறை..



இந்த ஆண்டு, நமக்கெல்லாம் நல்வாழ்வினை அளிக்கின்ற ஓர் ஆண்டாகும். ஆம்! இந்த ஆண்டில்தான் நாம் மிகு விளைச்சலைப் பெற்றுள்ளோம். மிகு விளைச்சலைப் பெற்ற தன் விளைவு...? உணவு தானியங்களை-குறிப்பாக அரிசியைச் சேமித்து வைப்பதே பெரும் பிரச்சினையாகிவிட்டது. எனவே, இப்பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு காணுகின்ற வகையில் 'தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்'' புதியதொரு முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது. இப்புதிய முறை ''கேப் ஸ்டோரேஜ்'' (Cover and Plinth Storage) என அழைக்கப்படுகிறது.

இந்த முறையில், திறந்த வெளியிலேயே உணவு தானியங்களைப் பாதுகாப்பாகச் சேமித்து வைக்க முடியும். இத்தகு சிறப்பு வாய்ந்த இந்த முறை முதன்முதலாக சென்னை மாநகரிலுள்ள தங்கச்சாலை உணவுக் கிடங்கின் திறந்த வெளியில் உருவாக்கப் பெற்றுள்ளது.

முதலில் திறந்த வெளியில் குறிப்பிட்ட பரப்பில் பிளாட்பாரங்கள் எழுப்பப்படுகின்றன. பிளாட்பாரத்தின் அடிப்பாகம் மரச் சட்டங்களால் சீராகப் பொருத்தப்படுகின்றன. கீழ் அடுக்குகளில் உணவு தானியங்கள் சிந்துவதையும், சிதறுவதையும் தவிர்க்கும் பொருட்டு அவைகளின் மீது பாலிதீன் தாள்கள் விரிக்கப்படுகின்றன. இப்பாலிதீன் தாள்களின் முனைப்பகுதிகள் நன்கு மடிக்கப்பட்டு பின்னர் அவைகள் சுமார் இரண்டு மூட்டைகளின் உயரத்திற்கு மூடப்படுகின்றன.

அரிசி மூட்டைகள் நன்கு வரிசையாகக் குறிப்பிட்ட எண்ணிக்கைகளின் அளவிற்கு அடுக்கப்பெற்ற பின்பு, அடுக்குகள் முழுவதும் பாலிதீன் உறைகளால் மூடப்பட்டுவிடுகின்றன. பின்னர் அடிப்பாகம் முழுதும் நன்கு முத்திரையிடப்படுகின்றன.

இந்த முறையினைக் கையாளுவதின் மூலம் சரக்குகள் மழை, வெய்யில் போன்றவைகளினின்று காக்கப்படுகின்றன. சரக்குகளில் பூச்சி சேராதவாறு, உணவுக் கிடங்குகளில் எவ்வாறு தடுக்கப்படுகின்றனவோ அத்தகைய முறைகளில் இங்கும் தடுக்க வாய்ப்புண்டு. பராமரிப்பு மற்றும் இதரச் செலவுகளும் இந்த முறையைக் கையாளுவதன் மூலம் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது இங்கே 9 குவியல்கள் அமைக்கப்பெற்றுள்ளன. ஒவ்வொரு குவியலும் ஏறத்தாழ 1,800 மூட்டைகளைக் கொண்டவை. இந்த வகையில் இங்குச் சேமித்து வைக்கப்பட்டுள்ள அரிசியின் அளவு ஏறத்தாழ 1,000 டன்களாகும்.

தங்கச்சாலை, உணவுக் கிடங்கில் உருவாக்கப் பெற்றுள்ள இந்த 'கேப் ஸ்டோரேஜ்' முறையினை அண்மையில் தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா. அவர்கள் பார்வையிட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

அறிவியல் முறைகளின் அடிப்படையிலே தரக்கட்டுப்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கொள்முதல் செய்யப்படுகின்ற உணவு தானியங்கள் சேமிப்புக் கிடங்குகளிலும், விநியோகம் செய்கின்ற இடங்களிலும், பதப்படுத்திடும் நிலைகளிலும் தரம் மிகுந்ததாகவேகாணப் படுகின்றன என்பதைத் தரக் கட்டுப்பாட்டு வல்லுநர்கள் உறுதி செய்கின்றனர்.

பொருட்களின் தரக் கட்டுப்பாட்டை நிர்ணயிப்பதற்கெனத் தமிழகத்தில் 11 ''மண்டல பகுப்பாய்வுக் கூடங்கள்'' செயல்பட்டு வருகின்றன. சென்னை நகரில் மைய ஆய்வுக்கூடம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றது. இது முழுமையாக நவீன சாதனங்களைக் கொண்டு இயங்குகின்றது. தகுதி வாய்ந்த-பயிற்சி பெற்ற தொழில் நுட்பதாரர்களால் இங்குத் தரக்கட்டுப்பாடு நிர்ணயம் செய்யப்படுகின்றது. இதற்குத் தொழில் நுட்ப அலுவலர் ஒருவரும் துணைபுரிகின்றார்.

உணவுப் பொருட்கள் கொள்முதல் செய்யப்படுகின்ற இடங்களிலிருந்தும், அவைகளைச் சேமித்து வைக்கும் கிடங்குகளிலிருந்தும் மாதிரிகள் இந்த ஆய்வுக்கூடத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன. சரியான-திறன் வாய்ந்த கட்டுப்பாடு நிர்ணயம் செய்யப்பட்ட பின்னர் தான் உணவுப் பொருட்கள் சில்லறை அங்காடிகளுக்கு அனுப்பப்பட்டு, விநியோகம் செய்யப்படுகின்றன. இங்கு நெல், அரிசி, உணவுதானியங்கள், கோதுமை, கோதுமைத் தயாரிப்புப் பொருட்கள், ஆகியவைகளின் தரக்கட்டுப்பாடுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எண்ணெய் வித்துக்கள், எண்ணெய் வகைகளின் தரக்கட்டுப்பாடுகளையும் நிர்ணயம் செய்வதற்கான வசதிகளும் இங்குண்டு.

நுகர்வோர் நலனுக்காக!

தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சி அமலுக்கு வந்த பின்னர் இன்றியமையாப் பொருட்களின் விலை குறைப்பு, சீரான விநியோகம் போன்றவைகளில் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்று வருகின்றன. சென்னை நகரில் வாழ்கின்றவர்களின் தேவையை நுகர்பொருள் வாணிபக் கழகச் சில்லறை அங்காடிகள் தீர்த்து வருகின்றன. இக்கழகத்தின் விநியோகப் பிரிவு (Distribution Section) இப்பணிகளைச் சிரமேற் கொண்டு பாராட்டத் தகுந்த அளவில் பணியாற்றி வருகின்றது.

நுகர்வோரின் நலன்களைப் பாதுகாத்திட வேண்டும்; அவர்

களுக்குத் தேவையான உணவு மற்றும் இன்றியமையாப் பொருட்களின் விநியோகம் சீராகச் செயல்பட வேண்டும் என்பவைகளைக் கருத்தில் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இதில் அன்றாடம் 'விநியோக அலுவலர்கள்' (Distribution Officers) சில்லறை அங்காடிகளைப் பார்வையிட்டு விநியோகப் பொருட்களின் இருப்பு போதிய அளவில் உள்ளனவா? பொருட்கள் சுத்தமாக வழங்கப் படுகின்றனவா? பொது மக்கள் சிரமமின்றி உணவுப் பொருட்களைப் பெறுகின்றனரா? என்பன போன்றவைகளைக் கண்டறிந்து அதற்குரிய நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்து வருகின்றனர்.

அண்மையில் தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்கள் சில சில்லறை அங்காடிகளைப் பார்வையிட்டு சரக்குகள் சுத்தமாகவும், தரம் மிகுந்ததாகவும் இருப்பதையும், அவைகள் சிறந்த முறையில் விநியோகம் செய்யப் படுவதையும் கண்டறிந்து பாராட்டியுள்ளார்கள். பாராட்டுதலுக்குரிய செயலில் செயல்பட்டு வரும் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பணிகளை எல்லாரும் பாராட்டத்தான் வேண்டும்.

'இல்லை' என்ற சொல்லே இல்லை!

கார்டுதாரர்கள் கேட்கின்ற நேரத்தில் 'சரக்குகள் இல்லை' என்ற சொல்லுக்கே இடமின்றி



அங்காடிகள் சுத்தமாகவும் சிறப்பாகவும் வைத்திருப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்கின்றனர். தினந்தோறும் அரிசி, கோதுமை, உணவு தானியங்கள், பருப்பு வகைகள் நன்கு சுத்தம் செய்யப் பெற்று பின்னர் கார்டுதாரர்களுக்கு வழங்கப்படுகின்றன.

சென்னை நகர மக்களின் ஓராண்டிற்கு மேல் தேவையான அரிசி இருப்புக்கள் சுமார் 35 உணவுக்கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. இவைகளில் சுமார் 1 இலட்சம் டன் அரிசி சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

அவைகள் விநியோகம் செய்யப் படுகின்றன. இதற்கெனப் 'புகார்ப் பிரிவு' ஒன்றும் சிறப்பாகச் செயல்பட்டு தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. இந்த வகையில் நுகர்பொருள் வழங்குவதில் இருந்து வந்த சிக்கல்களில் பல ஜனாதிபதி ஆட்சி அமலுக்குப் பின்னர் வெகுவாகத் தீர்க்கப் பட்டு வருகின்றன.

அரிசிகளின் 'விலைகளும் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. 16-3-76 முதல் சன்னரக அரிசி கிலோவுக்குப் 10 காசுகளும், மோட்டா ரக அரிசி கிலோவுக்கு 30 காசுகளும், ஆந்திரா அரிசி கிலோவுக்கு 25 காசுகளும் குறைக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன. மொத்தக் கொள்முதலையும் அரசுச் சார்பான இக்கழகமே மேற்கொண்டுள்ளதால் வெளிச் சந்தையில் தானாகவே எல்லாப் பொருட்களின் விலைகளும் குறைகின்றன-குறைக்கப்பட்டு வருகின்றன.

உணவுப் பொருட்களைக் கார்டுதாரர்களுக்கு மட்டும் விநியோகிக்கவில்லை. மருத்துவமனை, கல்வி நிலையங்கள், மாணவர் விடுதிகள் போன்ற பல்வேறு பொது நிலையங்களுக்கும் வழங்கும் பணியினை மேற்கொண்டுள்ளது. இன்றியமையாப் பொருட்களைத் தேவையான அளவிற்கு இவைகளுக்கு வழங்குகின்றது. தவிர, சிற்றுண்டிச் சாலை, தனியார் உணவு விடுதிகளுக்கும் தேவையான உணவுப் பொருட்களை வழங்கி உணவுப் பண்டங்கள் குறைந்த விலையில் விற்பனை செய்வதற்குத் தகுந்த ஏற்பாடுகளையும் செய்து வருகின்றது.

மாணவர் விடுதிகளுக்கென இன்றியமையா உணவுப் பண்டங்களை இக்கழகம் வழங்கி வருவதன் மூலம் ஏறத்தாழ 35,782 மாணவர்களைக் கொண்ட 574 அரிசன மாணவர் விடுதிகளும், 16,322 மாணவர்களைக் கொண்ட 23 பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகளும் பயன்பெற்று வருகின்றன.

பற்றுக்குறை பறந்தோட....!

கூட்டுறவுத் துறையின் மேற்பார்வையில் இயங்கி வருகின்ற சில்லறைக் கடைகளில் நுகர்வோரின் தேவைக்கான சரக்குகள் எளிதில் கிடைத்திட வழி செய்துள்ளது. இதற்கென வட ஆர்க்காடு மாவட்டத்தில் சில்லறைக் கடைக்காரர்களுக்குச் சர்க்கரையை நேரிடையாக வழங்கும் பொறுப்பினை இக்கழகம் மேற்கொண்டுள்ளது. மாவட்டங்களிலுள்ளவர்களுக்கு 'மண்டல மேலாளர்' நிருவாகத்தின்கீழ் செயல்படும் அலுவலகங்கள் வாயிலாக விநியோகம் நடைபெறுகின்றன.

தொடர்ந்து வருகின்ற பருவ மழை 1974-75—ஆம் ஆண்டில் பொய்த்து விட்டதால் உணவுப் பொருட்களைப் பெறுவதில் மோசமான சூழ்நிலை தமிழகத்திற்கு உருவாகியது. மாநிலத்தில் என்றுமே காணப்படாத வறட்சியும் மேலோங்கியிருந்தது. உணவு உற்பத்தியில் எதிர்பார்த்த அள

வில் 2 மில்லியன் டன்கள் பற்றாக் குறை ஏற்பட்டு விட்டன. இந்திய அரசிடமிருந்து அரிசி, கோதுமை போன்ற உணவுப் பொருட்களின் ஒதுக்கீட்டை அதிகப்படுத்த வேண்டுமெனத் தமிழக அரசு கேட்டுக் கொண்டதுடன், வட மாநிலங்களில் உபரியாக விளைந் துள்ள இடங்களிலிருந்து கொள் முதல் செய்வதற்கென நுகர் பொருள் வாணிபக் கழகத்தைத் தனது ஏஜெண்டாக நியமித்தது.

அரசினுடைய வேண்டுகோளின் பேரில் இக்கழகம் ஏறத்தாழ 67,856 மெட்ரிக் டன் அளவுள்ள உணவு தானியங்களை உபரியாக உற்பத்தியாகியுள்ள வட மாநிலங் களிலிருந்து இறக்குமதி செய்து பற்றுக்குறையினைத் தீர்த்திட வழி வகுத்தது. தகுந்த நேரத் தில் தேவையான நடவடிக்கை களை எடுத்து வெளிச்சந்தை யிலும் உணவு தானியங்களின் விலையைக் கட்டுப்படுத்தியது குறிப்பிடத்தக்கது. கட்டுப் படுத்தப்பட்ட விலைகள் வறட்சிப் பகுதிகளில் வாழும் மக்களின் வாங்கும் சக்திக்குட்பட்டே இருந்தன.

வெளிநாடுகளிலிருந்து 'கேர்' நிறுவனம் போன்றவைகளின் மூலம் பெறப் பெற்ற உணவுப் பொருட்களை வறட்சியால் வாடும் மக்களுக்கு வழங்கும் பணியில் துணை புரிந்ததும் குறிப்பிடத் தக்கதே.

இத்தகு பணிகளையும் நட வடிக்கைகளையும் சிறப்பான முறையில் செயலாற்றி வரும் இக்கழகம் நிருவாக இயக்குநர் மேற்பார்வையில் இயங்கி வரு கின்றது. இக்கழகத்தின் பல் வேறு துறைகளில் ஏறத்தாழ 7,500 பேர்கள் பணியாற்றி வருகின்றனர்.

நாட்டுக்கு நன்மை தேடுவது !

வாணிப முறைகளுக்கும், மற்ற பராமரிப்புச் செலவுகளுக்குமென இக்கழகம் ரிசர்வ் பாங்கிட மிருந்து கடனுதவியும் பெற்று வருகின்றது. இன்றைய நாளில் இந்தியாவிலேயே பாங்கி முறை களில் அதிக அளவில் கடனுதவி பெறுகின்ற நிறுவனங்களில் நான் காவது இடத்தைப் பெற்றுள்ளது.

1972-73-ஆம் ஆண்டில் சிறிய அளவில் உருவாக்கப் பெற்ற இக் கழகம் இப்பொழுது மாபெரும் வளர்ச்சியை அடைந்துள்ளது என்றால் மிகையாகாது.

ஆண்டுக்காண்டு விற்பனையில் பெரும் வளர்ச்சியையும் கண்டு வருகின்றது. 1972-73-ஆம் ஆண்டில் 11.82 கோடி ரூபாயும், 1973-74-ஆம் ஆண்டில் 49.72 கோடி ரூபாயும், 1974-75-ஆம் ஆண்டில் 98.38 கோடி ரூபாயும், 1975-76-ஆம் ஆண்டில் 188.47 கோடி ரூபாயும் என்ற அளவில் விற்பனை வளர்ச்சியைப் பெற்றுள் ளது. 1975-76-ஆம் பட்ஜெட் ஆண்டில் ரூ. 215.90 கோடி ரூபாய் விற்பனையை எட்டுமென மதிப்பிடப்பட்டுள்ளது. தற் பொழுதுள்ள விற்பனையானது மாநிலங்களிலுள்ள பொதுத் துறை நிறுவனங்கள் பெறுகின்ற சராசரி விற்பனையைக் காட்டிலும் அதிகமானது என்பதும் குறிப் பிடத்தகுந்த ஒன்றுதான்.

மொத்தத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், 7 மணி நேரம்தான் பணியாற்று வது போலத் தோன்றினாலும், உண்மையில் நாள் முழுவதும் பணியாற்றுகிறது — நாட்டுக்கு நன்மை தேடித்தரும் நமது நண்ப னாகவும் விளங்குகிறது. பிரதமர் அறிவித்துள்ள இருபது அம்சத் திட்டத்தை முனைந்து செயல் படுத்தும் பொறுப்பைத் தனது கடமையாகக் கொண்டிருக்கிறது! அனைவரும் பாராட்டும் வண்ணம் கடமை ஆற்றுகிறது என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

—ஆயிரராமன்

தொழில் தொடங்குவோருக்கு ஒரு தோழன்!

சென்னை கிண்டி இரயில் நிலை யத்துக்கு எதிரில், கிண்டித் தொழிற்பேட்டையின் முகப்பில் காட்சியளிக்கிறது 'தொழில் நுட்பத் தகவலகம்' (Technical Information Section)

தொழில் வணிகத் துறையின் சார்பில் (Industries and Commerce) செவ்வனே இயங்கிவரும் இத் தொழில் நுட்பத் தகவலகம் தொழில் தொடங்க முனைவோர் களுக்கும், தொழிலதிபர்களுக்கும் தேவையான தகவல்களை வழங்கி வருகின்றது. இது 1958-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் சிறப்பாகச் செயலாற்றி வரு கின்றது.

தொழில் தொடங்குவோருக்கு உற்ற தோழன்!

'புதிதாக ஒரு தொழில் தொடங்க வேண்டும், அதற்கு என்ன செய்ய வேண்டும்?' என்று மூளையைக் குழப்பிக் கொள்வோ ருக்குத் தெளிவை உண்டாக்கித் தேவையான தகவல்களை வழங்கு வதே இதன் தலையாய பணி யாகும்.

சிறு தொழில் அமைக்கும் முறை, தொழில் வணிகத் துறை யில் பதிவு செய்யும் முறை, தொழில் நடத்துவதற்கான தொழிற்பேட்டை விவரங்கள், தவணைக் கொள்முதல் முறையில் இயந்திரங்களை வாங்குதல், வங்கி கள் மூலம் உதவி பெறுதல், மூலப் பொருள்களின் இருப்பு போன்ற பல்வேறு தகவல்களை அளித்துத் தொழில் தொடங்குவோருக்கு உற்ற தோழனாக இருந்து வரு கின்றது.

இத்தொழில் நுட்பத் தகவ லகத்தில் பல பிரிவுகள் செயல் பட்டு வருகின்றன. அவை : 1. நூலகப் பிரிவு, 2. மொழி பெயர்ப்புப் பிரிவு, 3. ஆவணக் காப்பகப் பிரிவு, 4. வெளியீட்டுப் பிரிவு, 5. திரைப்படப் பிரிவு, 6. பொருட்காட்சிப் பிரிவு.

நூலகமென்னும் அறிவாலயம்!

அறிவு வளர்ச்சிக்கு வழிகோ லும் சாதனங்களில் நூலகமும் ஒன்று என்பதை நாமறிவோம்.

பல்வேறு துறைகள் பற்றிய நூல்கள், பல்சுவை இதழ்கள் நிறைந்த நூலகம், மனிதனை நல் வழிப்படுத்தும் அறிவாலய மன்றோ?

சென்னை நகரில் நூலகங் களுக்குக் குறைவில்லை. அவை ஒவ்வொன்றும் ஒரு வகையில் சிறப்புப் பெற்றிருப்பதை நாம் பார்க்கிறோம்.

இந்தத் தொழில் நுட்பத் தகவ லகத்தில் இணைக்கப்பட்டுள்ள தொழில் நுட்ப நூலகமானது, தொழில் தொடங்க முனைவோ ருக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்கி வருகின்றது. பொறியி யல் மற்றும் தொழில் நுட்பவியல் போன்ற பல பிரிவுகளைச் சார்ந்த ஏராளமான நூல்கள் இங்கே இருக்கின்றன. தற்போது இந் நூலகத்தில் ரூ. 1.46 இலட்சம் மதிப்புள்ள 4,000 நூல்கள் இருக் கின்றன.

தொழிலதிபர்களுக்கும், தொழில் முனைவோர்களுக்கும் உதவி புரிவதற்கெனத் தொழில் சம்பந்தப்பட்ட 135 (வெளிநாடு மற்றும் உள்நாடு) இதழ்களுக்கு இந்நூலகம் சந்தா செலுத்தி வரு கின்றது.

இந்த இதழ்களின் பழைய நூல்கள் ஆண்டுத் தொகுதிகளாக பிணைக்கப்பட்டு உடனடித் தேவைக்கு வைக்கப்பட்டுள்ளன. சிறு தொழில் தொடங்குவோ ருக்கு வேண்டிய திட்டத் தொகுப் புகள் முதலியன பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இதுவரை யில் 1,961 தொகுதிகள் பிணைத்து வைக்கப்பட்டுள்ளன. இவை மட்டுமா? இந்நூலகத்தில் நன்கு தேர்ந்தெடுக்கப் பெற்ற ஆராய்ச்சி நூல்கள், திட்ட அறிக்கைகள், சிறு தொழில் திட்ட தொகுப்பு கள், இயந்திர அமைப்பு நூல்கள் முதலியனவும் பார்வைக்கு வைக் கப்பட்டுள்ளன.



நூலகத்தின் ஒரு பகுதி

இந்த நூலகம் இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் (Indian Standard Institution) நிரந்தர உறுப்பினராக இருந்து வருகின்றது. இதனால் தர நிர்ணய நிறுவனத்தாரால் வெளியிடப்படுகின்ற அனைத்து தர நிர்ணய குறியீடுகளும் இலவசமாகக் கிடைக்கப் பெறுகிறது. இதுவரையில் 7,142 குறியீடுகள் கிடைக்கப் பெற்று வாசகர்களின் உடனடிப் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்த நூலகத்திற்கு நாள் தோறும் சுமார் 100 பேர் வருகின்றனர். நூல்கள் உள்ள பிரிவிலும், இதழ்கள் உள்ள பிரிவிலும் உட்கார்ந்து தொழில் நுணுக்கக் குறிப்புகளை ஆழ்ந்து படிப்போரையும், விரைந்து குறிப்புகளை எழுதிக் கொள்வோரையும் நாம் பார்க்கலாம்.

இந்த அரிய நூலகம் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையும், சனிக்கிழமை காலை 9 மணியிலிருந்து பகல் 1 மணி வரையும் திறந்திருக்கும். ஞாயிறு விடுமுறை.

நூலகத்திலுள்ள பத்திரிகைகள் பிரிவு

மொழி பெயர்ப்புப் பிரிவின் மேலான பணிகள்

தொழில் நுட்பத் தகவலகத்தின் மொழி பெயர்ப்புப் பிரிவு, தொழில் வணிகத் துறை சம்பந்தமான தகவல்களை மொழி பெயர்த்து சிறு சிறு வெளியீடுகளாக வெளியிடத் துணை புரிகின்றது. தொழில் தொடங்குவோர் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் இப்பிரிவினர் தொழில் நுணுக்கங்களை எழுதித் தருகின்றனர்.

ஆவணக் காப்பகத்தின் ஆக்கப் பணிகள்

தொழில் நுணுக்கக் குறிப்புகளைச் சேகரித்துப் பாதுகாப்பது இதன் பணியாகும். மேலை நாடுகளிலிருந்து தருவிக்கப்படும் தொழில் நுட்ப இதழ்கள், நூல்கள் முதலானவற்றிலுள்ள அரிய குறிப்புகளை எடுத்துப் பாதுகாத்து வருகின்றது இப்பிரிவு. இதனால் தொழில் தொடங்குவோர் எப்பொழுது வேண்டுமானாலும் அந்த குறிப்புகளைப் படித்துப் பயன் பெற முடிகிறது.

வெளியீட்டுப் பிரிவின் விரைவான பணி!

சிறு தொழில் மற்றும் பெருந் தொழில்கள் சம்பந்தமான வெளியீடுகளை வழங்குவது இப்பிரிவின் பணியாகும்.

சிறு தொழிலதிபர்களுக்குரிய கையேடு, தமிழகத்தின் கனிவளங்கள், தகவல் குறிப்புகள் முதலானவை இப்பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. 'தமிழ் நாட்டில் மின்னணுத் தொழில்கள்', 'தமிழ் நாட்டில் மின்சாரத் தொழில்கள்' 'தமிழ் நாட்டில் இரசாயனத் தொழில்கள்' மற்றும் ''சிறு தொழில்களுக்கு உதவி'' ஆகிய தொகுப்புகள், தொழில் வணிகத் துறையின் மாநில நிருவாக அறிக்கைகள் ஆகியவையும் வெளியிடப்பெற்றுள்ளன.

தொழில் வளர்ச்சிக்குத் தேவையான முழுத் தகவல்கள் அடங்கிய வெளியீடுகளை வெளியிடுவதில் இப்பிரிவு விரைந்து பணியாற்றி வருகின்றது.

சிந்தை மகிழ்விக்கும் திரைப்படங்கள்

தொழில் சம்பந்தமான தகவல்களைப் புத்தகங்களிலிருந்து படித்துத் தெரிந்துகொள்கிறோம். அதற்கு இங்குள்ள நூலகம் பெருமளவில் பயன்படுகிறது.

புத்தகங்கள், பத்திரிகைகள் தவிர தொழில் நுணுக்கங்களை நேரில் கண்டு தெரிந்து கொள்வதற்கும்கூட இங்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது.

தொழில் நுட்பத் தகவலகக் கட்டடத்திலேயே அழகிய ஒரு 'மினி' திரையரங்கு உள்ளது. அதில் வெளிநாட்டுத் தூதரகங்களிலிருந்து பெறப்படுகின்ற தொழில் நுட்பம் சம்பந்தமான திரைப் படங்கள் தொழிலாளர்களுக்குக் காட்டப்படுகின்றன. வாரம் இருமுறை காட்டப்படும் இத் திரைப்படங்களைத் தொழிலாளர்கள் திரண்டு வந்து கண்டு களிக்கின்றனர்.

எத்தனை எத்தனைப் பொருள்கள் இங்கே!

கிண்டித் தொழிற்பேட்டையில் பல்வேறு பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்கூடங்கள் பெருமளவில் உள்ளன. இத்தொழிற் கூடங்களில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

தொழிலாளர்களின் கை வண்ணத்தால் உருவாகும் கண்கவர் பொருள்களை நாம் கண்டு மகிழ வேண்டாமா?

கிண்டித் தொழிற்பேட்டையிலேயே ஒரு பொருட்காட்சி இருக்கிறது. இது நிரந்தரப் பொருட்காட்சி! விடுமுறை நாட்கள் தவிர எப்பொழுது வேண்டுமானாலும் இப்பொருட்காட்சிக்குச் சென்று தமிழ்நாட்டுத் தொழிலாளர்களின் கைவண்ணத்தைக் காணலாம்.

1957-ல் அமைக்கப்பெற்ற இந்தப் பொருட்காட்சியில் இரும்பு, கண்ணாடி, தோல், மரம், துணி, காகிதம் முதலியவற்றால் ஆன சிறிய பெரிய பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலுள்ள பல மாநிலத்தவரால் பார்த்துப் பாராட்டப் பெற்றது இப்பொருட்காட்சி!

சிறு தொழில் சிறந்திட, பெருந் தொழில் பெருகிட ஊக்கமும் ஆக்கமும் அளித்து வரும் தொழில் வணிகத் துறையின் 'தொழில் நுட்பத் தகவலகம்' உண்மையில் நமக்கெல்லாம் ஒரு தோழனே!

— பி. வி. கிரி

சிறுதானியத் தயார் நிலைக் கலவைகள்

மகளிர் பகுதி

சோளம், ராகி, கம்பு, தினை போன்ற சிறு தானியங்கள் தமிழ் நாட்டில் விளைகின்றன. இவை உடம்புக்கு சக்தி அளிப்பதோடன்றி, புரதம், உப்புச் சத்து, உயிர் சத்துள்ளவையாகவும் இருக்கின்றன. இத்தகைய ஊட்டங்களிருப்பினும், இச்சிறுதானியங்கள் சிறுபான்மையான மக்களால் மட்டும் உட்கொள்ளப்படுகின்றன. சிறு தானியங்கள் சத்துள்ளவையாய் இருப்பதால், மக்கள் தம் அன்றாட உணவில் இவற்றைச் சேர்த்துக் கொள்ளுதல் அவசியம். மேலும், இதனால் அரிசி, கோதுமை, போன்ற தானியங்களில் தட்டுப்பாடும் குறையும். இக்காரணங்களினால் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உணவு நுண்ணியல் துறை, சிறுதானியங்களைக் கொண்டு, பலவிதமான, சுலபமான, சத்துள்ள, சுவை மிக்க உணவுப் பண்டங்களின் செய்முறைகளை முறைப்படுத்தியுள்ளது. மேலும் பெண்களால் உணவுப் பண்டங்களை எளிதாகச் செய்யக்கூடிய வகையில், தினை, வெள்ளை ராகி, மக்காச் சோளம் ஆகியவற்றிலிருந்து தயார் நிலைக் கலவைகளைச் செய்து சனவரி மாதம் நாலாம் தேதி உழவர் நாள் விழாவில் வெளியிடப்பட்டுள்ளது. இந்தத் தயார் நிலைக் கலவைகளுடன் குறிப்பிட்ட அளவு நீர் மட்டும் கலந்து உணவுப் பண்டங்கள் செய்துவிடமுடியும். இவ்வகைத் தயார் நிலைக் கலவைகள் 250 கிராம், 500 கிராம் என்ற அளவில் கிடைக்கின்றன.

250 கிராம் தினை முறுக்குக் கலவையில் சுமார் 965 கலோரி சக்தியும், 26 கிராம் புரதமும், 28 மில்லி கிராம் இரும்புச்சத்தும் உள்ளன.

மக்காச் சோளப் பணியாரக் கலவை, சுமார் 17.5 கிராம் புரதமும், 900 கலோரி சக்தியும், அளிக்கும்.

வெள்ளை ராகி 'தோசைக் கலவை'யில் புரதம், உப்பு, உயிர்ச் சத்துக்கள் ஆகியவை நிறைந்துள்ளன. இதில் சுமார் 760 கலோரி சக்தியும், 38 கிராம் புரதமும், 720 மில்லி கிராம் சுண்ணாம்புச்சத்தும், 17 மில்லி கிராம் இரும்புச் சத்தும், 1.0 மில்லி கிராம் உயிர் சத்து .பி. 1-ம், 3 மில்லி கிராம் மியாசினும் உள்ளன.

250 கிராம் அளவுள்ள தினை முறுக்கு தயார் நிலைக் கலவை ஒரு ரூபாய், வெள்ளை ராகி தோசைக் கலவை 85 பைசா, மக்காச் சோள பணியாரக்கலவை 65 பைசா என தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக விதை விற்பனை நிலையத்தில் விற்கப்படுகின்றன.



செய்தியும் சித்திரமும்
''என் நிலத்தை விட்டு வெளியேறு; சொந்தச் சாகுபடி செய்யப் போகிறேன்; இதோ பார் உன்னை வெளியேற்றுவதற்கு உத்தரவு''
''நிறுத்து''
வாய்மையே வெல்லும்
சட்டம்
''நிலச்சுவான்தாரர்கள், எந்தச் சந்தர்ப்பத்திலும் சொந்தச் சாகுபடிக்கென்று நிலத்தை, பயிரிடும் சாகுபடியாளர்களிடமிருந்து திரும்பப் பெறமுடியாது'' என்று பயிரிடும் சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டத்தில் ஒரு திருத்தம் செய்து தமிழ்நாடு அரசு அவசரச் சட்டம் பிறப்பித்துள்ளது.
''என்ன மச்சான் எனக்கும் 5 ரூபாய் கூலி கொடுத்துள்ளார் நம்ம பண்ணையார்?''
''ஆணுக்குச் சமமாகப் பெண்ணுக்கும் கூலி கொடுக்கணும் என்று இப்போ சட்டம் வந்துள்ளது புள்ளே! அதனால் தான்!''
ஆண், பெண் என்ற பாகுபாடின்றி அனைத்து வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் 1976, மார்ச்சு 2-ம் தேதி முதல் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.
ரூ. 27 கோடி
தூத்துக்குடி அனல் மின் நிலையத் திட்டத்திற்காக (420 மெகாவாட்) மத்திய அரசு திட்ட முன் உதவியாக 27 கோடி ரூபாய் வழங்க முன் வந்துள்ளது.

1976-77-ஆம் ஆண்டில் 12.64 கோடி ரூபாய்ச் செலவில் மருதா நதி, குடகனாறு, வட்டமலைக்கரை ஓடை, பாலாறு—பொருந்தலாறு ஆகிய 4 பாசனத் திட்டங்கள் நிறைவேற்றி முடிக்கப்படும். இத்திட்டங்களின் மூலம் 17,230 ஏக்கர் நிலம் புதிதாகப் பாசன வசதி பெறும்.
''ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை ஜாதியில்!''
''இனிமேல் நாங்கள் அடிமைகள் அல்ல!''
நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்தில் கொத்தடிமைகளாக அவதியுற்று வந்த பனியர் என்ற பழங்குடியினர் அடிமைத்தளையில் இருந்து விடுவிக்கப் பட்டுள்ளனர்.
பேச்சைக் குறைப்பீர்!
பெருக்குவீர் உழைப்பை!

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்தோம்!

—கவிஞர் எஸ்.டி. சுந்தரம்

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்துவான்புகழ் கொண்ட பெருமைதன்னை
தெள்ளுதமிழ்க் கவி தேனெனப் பாடினன் தேர்ந்திவ்வுலகம் வியந்திடவே
அள்ளிப் பருகிடும் ஆற்றுநீரைப் போல வள்ளுவர் நீதியை வாய்மைதன்னை
உள்ளத்திலே எண்ணி உயிரெனப் போற்றிடில் உயர்ந்திடலாம் இன்ப
வாழ்க்கையிலே.

'அ' என்ற உயிரொலிபோல் அசைகின்ற மெய்ப்பொருள்போல்
அகிலமெல்லாம் அசைவிக்கும் ஆதிபரம் பொருள்ஒன்றை
அய்யன் பொதுமறையில் அன்பான சக்திதனை
மெய்யாகச் சொல்லியதை மேதினியில் உணர்ந்தோமா?

ஒன்றான மெய்ப்பொருளை உணராமல் உலகத்தில்
நன்றான பொதுமறையை நாடாமல் நலிவாமல்
அன்றுடம்சண்டையிலே ஆயிரமாம் பொய்மையிலே
திண்டாடும் மானிடர்க்குத் திருக்குறளே காப்பாகும்.

வான்மழையே அமுதாகும் வயல்வரப்பு நிறைவாகும்
கூன்மனத்தை விட்டுவிட்டு கூடுவதே தொழிலாகும்
நான்என்னும் உயிர்யாவும் நலமோங்கி நிலைபெருக
வான்மறையின் வள்ளுவரின் வாய்மைதனைக் கேட்டோமா?

தீமைமிகு சோம்பலிலும் தேவையில்லா வேலையிலும்
ஆமையெனத் தூங்கியபின் அநியாயம் ஆனபின்னர்
ஊமைகண்ட கனவாக உண்மைதனைச் சொல்லாமல்
ஏமாந்த உலகுக்கு இம்மறையே மருந்தாகும்!

கண்டதெல்லாம் கற்காதே கற்கும்நூல் தேர்ந்து எடு
கண்ட கண்ட ஏடுகளை கண்ணவியப் படிக்காதே



கண்போன்ற பெருநூலை கருத்தாகப் படித்தவற்றில்
கண்டுள்ள நீதிகளை கடைப்பிடிக்கச் சொல்லுகிறார்!

இன்றுவரை அவர் செயலை ஏற்றோமா வாழ்க்கையிலே
அன்பான அறவாழ்வே அழகான வீடென்றார்
துன்பச் சுமைக்கெல்லாம் தூயவழி காட்டுகிறார்!
பண்போடு அவர் போட்ட பாதையிலே நடந்தோமா?

படித்தறிவு பெறுவதுவும் பதவிகளைப் பெறுவதுவும் (ஊரை)
அடித்துலையில் போடுகின்ற அறிவெல்லாம் அறிவல்ல
துடித்ததொரு தூயபொருள் தொல்லருளைக் காண்பதற்கே
படித்த பெரும் அறிவெல்லாம் பயனுக வேண்டுமென்றார்.

எடுத்த எடுப்பினிலே இன்பம் வர வேண்டுமென
கெடுத்தபழ மந்திரத்தால் கிடைக்காது இடையின்றி
தொடுத்த முயற்சியிலே தொடர்ந்துவரும் இன்பமென
அடுத்தடுத்துச் சொன்னாரே அவர்குரலைக் கேட்டோமா?

கள்ளைக் குடிக்காதே கவலையிலே மடியாதே—
தள்ளாடித் தெருவினிலே தடமாறிப் போகாதே—
உள்ளத்தை ஒளிக்காதே உயிர்மானம் இழக்காதே—
தள்ளிவிடு குடியென்றார் தமிழ்மறையைக் கேட்டோமா?

நல்ல பெரியவர்கள் நாலுபேர் உன்னைஒரு
நல்லவன்தான் எனச்சொல்லும் நல்லநிலை வேண்டுமெனில்
பொல்லாக் குடியதனைப் போக்கிவிடு மானிடனே!
இல்லாவிடில் உலகில் இறந்தவனைப் போலாவாய்!

என்றுபல சொன்னாரே இதயத்தை விரிவாக்க
குன்றின் விளக்காக குன்றாத ஒளியானார்
அன்றுமுதல் இன்றுவரை அவர்சொன்ன திருக்குறளை
ஒன்றேனும் செய்தோமா உத்தமர்கள் ஆனோமா?

சொல்லுகிறோம் நீதிகளை சொன்னபடி நடப்பதில்லை
தில்லுமல்லு செய்கின்றோம் திருக்குறளின் விற்பனையில்
மெல்லுகிறோம் வெறும்வாயை மேலான உண்மைகளை
நெல்லுமிபோல் நீக்குவதால் நெல் முளைப்பதில்லையிங்கே!

* * * * *

ஆலமாமரத்தினது அகன்றதொரு தன்மையினை
ஆலஞ்சிறுவிதையில் அடக்குவித்த விந்தையென
ஞாலத்தின் நியதிகளை நயமான நீதிகளை
சின்னஞ் சிறுகுறளில் சேமித்தார் வள்ளுவனார்.

சாலமோன் சாக்ரடீஸ் சாணக்கியர் சுக்கிரனார்
சான்றோர்க்கும் உயர்வாகச் சாற்றுகிறார் பொதுமறையை
காலமெலாம் நிலைபெருகும் கருத்தின்பப் பாற்கடலை
கண்ணான குறள்வழியை கண்டுவகை பெற்றிடலாம்.

எல்லாக் காலத்தும் எத்தகைய நாட்டார்க்கும்
இல்லாத ஏழைக்கும் இருக்கின்ற மேதைக்கும்
எல்லா மதத்தார்க்கும் எண்ணில்லா இனத்தார்க்கும்
எல்லா மொழிபேசும் எண்ணரிய ஊரார்க்கும்

வில்லாண்ட வேந்தர்க்கும் விளையாடும் பாலர்க்கும்
மல்லாண்ட வீரர்க்கும் மல்லிகைப்பூ மாதர்க்கும்
கல்லாத மாக்கட்கும் கற்றறிந்த மந்திரிக்கும்
காலமெலாம் பயன்விளைக்கும் கருவூலம் உலகமறை!

* * * * *

உள்ளம் உனதில்லம் உலகம் ஊர்எல்லாம்
கள்ளம் கவடின்றி கனிவாய் வாழ்ந்துயர
தெள்ளிய சிந்தனையின் தேனும் திருக்குறளை
அள்ளித் தந்தவர்காண் ஆசான் வள்ளுவனார்.

பிள்ளைப் பருவமதில் பெரியவர் உருவமதில்
பள்ளிப் பயிற்சியதில் பல்கலைக் கழகமதில்
வள்ளுவர் குறள்கேட்டு வழியில் நடந்தார்க்கு
உலகம் வசமாகும் உள்ளம் உயர்வாகும்

நல்லது செய்வதுவே நாகரிகம் என்பார்
கொல்லும் கொடுமைகளும் கோணல் குறும்புகளும்
வெல்லும் வழியாவும் வெற்றிப் பொருள்யாவும்
மெல்லச் சொல்லுகிறார் மேதகு வள்ளுவனார்.

சில்லரை ஆயிடினும் செல்லும் காசதுபோல்
சின்னஞ் சிறுபொருளும் செம்மை நலம்பெறவே
எல்லை வகுத்தார் நாம் எளிதாய் வாழ்ந்திடவே
தொல்லை தீர்த்தருளும் தோழர் வள்ளுவனார்.

மல்லிகைத் தோட்டமதில் மணமதை நுகராமல்
முள்ளின் முடைநாற்றம் முகரா தீர்எனவே
வள்ளுவர் தெள்ளமுதில் வழங்கும் வான்தமிழன்
வெள்ளக் கருணையிலே வேட்கை தீர்ந்தோமா?

நெல்லிக் கனிதந்தார் நெறிஞ்சியைத் தின்னுகிறோம்
நெல்லாம் பயிர்தந்தார் நிதம்மண் தின்னுகிறோம்
எல்லாப் பொருள்தந்தும் ஏழைப் பதரானோம்
நல்லவர் வள்ளுவனார் நட்பை அறிந்தோமா

கற்பனைப் பாட்டல்ல காணு மருந்தல்ல
கற்பகச் சோலையிலே கனிரச விருந்திதுகாண்!
கற்றிட மனமுயரும் கருதிட அறிவுயரும்
மற்றதன் படிநடந்தால் மாண்புறு வாழ்வுயரும்!

சின்னஞ் சிறுவடிவம் சீரகச் சம்பாபோல்
அன்னப் பறவைபோல் அறிவின் திறம்பெருகும்
மின்னல் சிறுகீற்றல் மேதினி இருள்தீர்க்கும்
கன்னல் தமிழ்அறிவின் கனமழை குறள்அமுதம்!

இன்னும் வாழ்க்கையிலே இன்குறள் ஏற்காமல்
சொன்னதைச் சொல்லுகிறோம் சொற்பொழி வாற்றுகிறோம்!
என்னே பேதமைநாம் ஏமாந்திருக்கின்றோம்!
கண்கள் இருந்தும்நாம் காணக் குருடர்களா?

குருடனும் உணருகிறான் குணநலம் பெறுகின்றான்
திருடனும் திருந்துகிறான் தீமையும் குறைகிறது
அறிவுடன் பேசுகிறோம் ஆனால் செய்வதில்லை
நெறியில் தவறுகிறோம் நீளிருளில் வீழுகிறோம்!

உரைகள் எழுதுகிறோம் ஓங்கிக் கதறுகிறோம்
விரைவில் விற்கின்றோம் விளம்பரம் பெறுகின்றோம்
திருக்குறள் பணத்தாலே திமைகள் செய்திடுவோம்
செருக்கினைப் பெருக்குகிறோம் செந்தமிழ்ப் பயனிதுவா?

உருக்கும் உள்ளமதை உணர்வின் ஒளியேற்றும்
கருக்கும் காரிருளை கலகம் தீர்த்தருளும்
பெருக்கும் புதுவாழ்வை பேரருட் சூரியனும்
சிறக்கும் குறள்வழியே சென்றால் சீர்பெறுவோம்!



விக்கலும் தும்மலும் தோன்றுவது ஏன்?

மாணவர் அரங்கம்

"பொருள்கள் மூன்று வகைப் படும் : அவை திடப்பொருள், திரவப் பொருள், வாயுப்பொருள் எனப்படும் திடப் பொருளுக்கு உதாரணம்—தங்கம், வெள்ளி ; திரவப் பொருளுக்கு உதாரணம் —நீர் ; வாயுப் பொருளுக்கு உதாரணம்—நீரக வாயு, உயிர் வாயு ஆகியவை''.

இவ்வாறு விஞ்ஞான ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந் தார். அந்த வகுப்பறையிலிருந்த 38 பையன்களும் ஆசிரியரின் விளக்கத்தைக் கேட்டுக் கொண் டிருந்தார்கள். ஆனால் ராமுவும், சோமுவும் பாடத்தைக் கவனிக் காமல் ஏதோ பேசிக் கொண் டிருந்தார்கள். அவர்களைக் கவ னித்து விட்ட விஞ்ஞான ஆசிரி யருக்குக் கோபம் வந்துவிட்டது.

''ராமு! சோமு! பாடத்தைக் கவனிக்காமல் நீங்கள் இருவரும் என்ன செய்து கொண்டிருக்கிறீர் கள்?'' என்று கடுமையான குரலில் கேட்டார் ஆசிரியர்.

ராமு பதில் சொல்ல முயன் ருன்; முடியவில்லை. அதற்குள் 'விக்கல்' அவனைப் பேச விடாது தடுத்துவிட்டது. உடனே சோமு பதில் சொன்ஞன் :

''ஐயா! ராமுவுக்கு விக்கல் ஏற்பட்டது ; கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான்! 'விக்கல் ஏன் ஏற்படுகிறது?' என்று என்னிடம் கேட்டான்! உடனே, எங்கள் வீட்டில்,எங்கள் பாட்டி என்னி டம் சொல்லிய காரணத்தை நான் ராமுவுக்குச் சொல்லிக் கொண்டிருந்தேன்; அப்போது தான் தாங்கள் அழைத்தீர்கள்! எழுந்து விட்டோம்''.

''சரி, விக்கல் எதனுல் ஏற்படு கிறது என்று உன் பாட்டி தெரி வித்தார்களா?''

''ஐயா, நமக்கு வேண்டிய உற வினர்களாவது, நண்பர்களாவது நம்மை நினைத்தால் விக்கல் ஏற் படும் என்று என் பாட்டி சொன் ஞர்கள்!''

''சோமு! இந்த விஞ்ஞான யுகத்தில் வாழ்கின்ற நீ—அதிலும் விஞ்ஞானத்தை விருப்பப் பாட மாகப் பயிலும் நீ—பாட்டி சொல் லும் பழங் கதைகளை நம்பலாமா? பிறர் நம்மை நினைப்பதால் விக்கல் ஏற்படுவதில்லை! அவ்வாறு சொல்வது அறியாமை.''

''அப்படி யென்ருல் விக்கல் ஏற்படுவதற்குரிய காரணம் என்ன ஐயா?''

''மாணவர்களே!. தற்பொழுது உங்களுக்கு நடத்த வேண்டிய பாடத்தை நிறுத்தி விட்டு, விக் கல் ஏற்படுவதற்குரிய கார ணத்தை விளக்குவது நல்லது எனக் கருதுகிறேன்!''

''மிகவும் நன்றி ஐயா! அருள் கூர்ந்து விளக்கம் செய்யுங்கள்'' —சோமு கூறிஞன். ராமு தானும் அதனை ஆமோதிப்பதைத் தனது 'விக்கல்' குரல் மூலம் தெளிவு படுத்திஞன்!

ராமுவையும், சோமுவையும் இருக்கையில் அமருமாறு சொல்லி விட்டு, விஞ்ஞான ஆசிரியர் 'விக்கலை'ப் பற்றி விளக்கவுரை நிகழ்த்திஞர்.

''மாணவர்களே! 'நல்லார் ஒருவர் பொருட்டு இந்த உலகத் துக்கே மழை கிடைக்கிறது.'' என்று ஒரு தமிழ் செய்யுள் தெரி விக்கின்றதல்லவா? அது போல, இன்று ராமு ஒருவனுக்கு ஏற் பட்ட சந்தேகத்தால், உங்கள் அனைவருக்கும் விளக்கவுரை கிடைக்கப் போகிறது! எனவே அனைவரும் கவனமாகக் கேளுங் கள். . . .

''மனித உடல், பலவகையில் விந்தையான அமைப்புக் கொண் டது. சதை, எலும்பு, நரம்பு, இரத்தம் ஆகிய பல்வேறு பகுதி யால் ஆகியது உடல். நுரை யீரல், இருதயம், சிறுநீரகம், கல் லீரல் போன்ற நுட்பமான உள் ளுறுப்புக்கள் கொண்டது நமது உடல்; நாடித் துடிப்பு, மூச்சு, இரத்த ஓட்டம், போன்ற பல் வேறு இயக்கங்களுக்குக் கட்டுப் பட்டது நமது உடல் ; நமது தொண்டை, காற்றுக் குழாய், உணவுக் குழாய் என்னும் இரு அமைப்புக்கள் கொண்டது ; ஒரு வழிக் கதவு என்று சொல்லப் படும் 'வால்வு' உணவுக் குழாயை யும், காற்றுக் குழாயையும் வேறு படுத்துகின்றது.

''இரு நுரையீரல்களுக்கு இடையில் காற்று உருவாகும் பகுதி உண்டு, இதற்கு 'உதர விதானம்' என்று பெயர். இந்த உதர விதானம் சில நேரங்களில் திடீரெனச் சுருங்குகிறது ; அவ்வாறு சுருங்கும்போது, ''உள் சுவாசம்'' ஏற்படுகிறது ; குரல் வளை திடீரென்று மூடிக் கொள்ள நேருகிறது ; அதனுல் உள்சுவாசம் நீடிக்காமல் தடுக்கப்படுகிறது. இந்தச் சூழ்நிலையினுல், 'விக்கல்' ஒலி உண்டாகிறது. சில விஞடி களில் இந்தச் சீர்கேடு இயற்கை யான முறையிலேயே மாற்றப் பட்டு விடுகிறது. இதற்கு மருத் துவச் சிகிச்சை செய்ய வேண்டிய அவசியமும் ஏற்படுவதில்லை.''

ஆசிரியர் விளக்கம் செய்தார்! அப்போது குமரேசன் என்னும் மாணவன் எழுந்தான்.

''ஐயா! பிறர் நம்மை நினைப்ப தால்தான் 'தும்மல்' ஏற்படு கிறது, புரையேறுகிறது என்றும் சிலர் சொல்கிருர்களே. அந்தக் கூற்று பொய்யா—மெய்யா என் பதையும் தெரிவிக்க வேண்டு கிறேன்!''

''குமரேசா! விக்கல் ஏற்படுவ தற்கு, சோமுவின் பாட்டி சொல் லியதைப் போலவே இதுவும் தவருன கருத்தே ஆகும்! விளக்க மாகச் சொல்கிறேன்!''

''நாம் சுவாசம் செய்யும்போது சில நேரங்களில் ஆழ்ந்த உட் சுவாசமும், வெளிச்சுவாசமும் ஒரே நேரத்தில் ஏற்படுகிறது. ஆனுல் அப்போது குரல்வளை மூடியபடியே இருக்கிறது. உள்ளே உருவான காற்று வெளியே வருவ தற்குத் துடிக்கிறது ; குரல்வளை முடியபடி இருப்பதால் அக்காற்று வாய், மூக்கு ஆகியவற்றின் வழி யாக வெளியே வருகிறது. அப் போது ஒலி ஏற்படுகிறது ; நீரும் வெளிக் கொணரப்படுகிறது ; இதுதான் தும்மல் ஆகும்''.

''உணவுக் குழாய், மூச்சுக் குழாய் என இரு வகைக் குழாய் நமது கழுத்தின் உள்ளே இருப்ப தாக முன்பே குறிப்பிட்டேன். இரண்டும் வாயின் உட்பகுதியி லிருந்துதான் தொடங்குகின்றன. நாம் உண்ணும் உணவு மூச்சுக் குழாய்க்குள் சென்று விடாதபடி குரல்வளை தடுக்கிறது. சில நேரத் தில் நாம் அவசர அவசரமாகவும், பல்வேறு சிந்தனைகளுடனும், பதட்டத்துடனும் — பேசிக் கொண்டும் — உணவுஉண்ணும் போது உணவுக் குழாய்க்குள் செல்லவேண்டிய உணவில் ஒருசில துணுக்குகள் மூச்சுக் குழாய்க்குள் சென்று விடுவதுண்டு ; மூச்சுக் குழாய் அந்த உணவுத் துணுக்கு களை ஏற்றுக் கொள்வதில்லை ; அங்குள்ள காற்று, அந்த உணவுத் துணுக்குகளை வெளியேற்றுகின் றது. அந்த நிகழ்ச்சிதான் புரை யேறுதல் எனப்படுகிறது!''

விஞ்ஞான ஆசிரியர் சொல்லி முடித்தார் : வகுப்பு முடிவுறுவ தற்கான மணியும் அடிக்கப்பட் டது.

''மாணவர்களே! பொருள் களின் மூன்று வகை நிலையைக் குறித்து நாளை சொல்கிறேன் ; இன்று இந்தப் பொது அறிவுப் பாடத்துடன் வகுப்பு முடிகிறது'' என்ருர் ஆசிரியர்.

''பொது அறிவு மட்டுமல்ல ஐயா! புது அறிவும் ஆகும்!'' என்று சொல்லிய வண்ணம் மாண வர்கள் விடைபெற்று சென்றனர்.

—எஸ்.எஸ்

இருபது அம்சத்திட்டத்தில் மாணவர்கள் பங்கு

தேசிய சேவைத் திட்டத் தின் '76-77-ஆம் ஆண்டுக் கான பணிகளில் கிராமச் சீரமைப்புத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் படும். 20 அம்சப் பொருளாதாரத் திட்டத் தில் முக்கியமான அம் சங்களைச் செயல்படுத்துவதில் மாணவர்களும் பங்குகொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதற்காகவே இவ்வாறு தீர்மானிக்கப்பட் டுள்ளது. நகர்புறங்களில் உள்ள சமுதாயத்தில் நலிந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்ட தாக. தேசிய சேவை அணித் தொண்டர்களின் பணிகள் அமைந்திருக்கும். மத்திய கல்வி அமைச்சகத்தின் தீர் மானத்தையொட்டி. வரும் விடுமுறைக் காலங்களில் நடைபெற விருக்கும் சிறப்பு மாணவர் முகாம் திட்டங் களின் மையக் கருத்து ''கிராமச் சீரமைப்பில் இளைஞர்'' என்ற தலைப்பில் அமைந்ததாக இருக்கும்.

இந்த மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த சேவை அணித் தொண் டர்கள், நிலச்சீர்த்திருத் தங்கள், தாமாகவே கல்வி கற்க முன்வருபவர்களுக்கு கல்வி கற்பிப்பது, சிறந்த சுற்றுப்புற சூழ்நிலைக்குத் திட்டமிடுவது, பொருளாதார முன்னேற்றம், குடும்பநலத் திட்டம், குழந்தை வளர்ப்பு, மரம் வளர்ப்பு போன்ற பணி களில் ஈடுபடுவார்கள். மேலும் அவர்கள், நிலச்சீர்த்திருத்தம் சம்பந்தமாக நிலத்தை 'சர்வே' செய்து மதிப்பீடு செய்வது, இதுவரைக் கொத் தடிமை முறையில் இருந்து தற்போது விடுபட்டுள்ள தொ ழிலாளர்களுக்கு நிவாரணம் அளிப்பது. ஏழைகளுக்குச் சட்ட உதவி அளிப்பது, கல்வி கற்பிக்கும் திட்டங்களை துவக் குவது, சுற்றுப்புறச் சுகாதா ரத்தைப் பேணுவது, கூட்டு றவுச் சங்கங்கள் திறம்பட இயங்க உதவுவது போன்ற பணிகளில் ஈடுபடுவார்கள்.

மத்திய கல்வித்துணை அமைச்சர் திரு டி. பி. யாதவ் அவர்கள் 31-3-76—ல் மாநிலங்கள் அவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் பதிலளிக்கையில் இத் தகவல்களைத் தெரிவித் தார்.

* *

பேரரசர் அக்பர் சென்னை வந்தார்!

பேரரசர் அக்பர் கடந்த 29—3—76 அன்று சென்னை வந்தார்! அவரைக் காண ஆயிரக் கணக்கானவர்கள் ஆர்வத்துடன் கூடியிருந்தனர்! அவர் இனிமேல் தொடர்ந்து வாரம் ஒரு முறை சென்னைவழியாக ஆஸ்திரிரேலியா நாட்டுக்குப் போய் வருவார்!

இச் செய்தி ஆச்சரியமாக இருக்கிறதா?

ஏர் இந்தியா நிறுவனத்தைச் சார்ந்த ''பேரரசர் அக்பர்'' என்னும் பிரமாண்டமான விமானம் சென்னைக்கு, முதன் முதலாக வந்ததைத்தான் மேலே குறிப்பிட்டுள்ளோம்.

'போயிங்—746' என்னும் வகையைச் சார்ந்த இந்த 'ஜம்போ ஜெட்' விமானம் பம்பாயிலிருந்து புறப்பட்டுச் சென்னை வழியாக ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னி வரை சென்று திரும்பும்.

இந்திய வரலாற்றில் பேரரசர் அக்பர் அவர்களுக்குப் பெருமை மிகுந்ததோர் இடம் உண்டு. இந்துக்களுக்கும், இசுலாமியர்களுக்கும் இணைப்புப் பாலமாக விளங்கிய பண்பாட்டுத் திலகம் ஆவார் அவர். கலைச் செல்வங்களைப் பேணிப் போற்றுகின்ற காவலராகவும் அவர் திகழ்ந்தார். அவருடைய தலைநகரான படேபூர் சிக்ரியில் காணப்படும் பல வகையான கலைக் கூடங்களும், சிற்பச் சின்னங்களும் சிதிலம் அடைந்து தென்பட்டாலும், அக்பரின் அளவில்லாத கலையார்வத்தை அவை இன்றைக்கும் பறைசாற்றுகின்றன.

'பேரரசர் அக்பர்' பெயரையே புதிய விமானத்துக்கு 'ஏர்-இந்தியா' சூட்டியிருப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

ஏனெனில், அக்பரின் கலையார்வத்தை நினைவுறுத்துகின்ற வகையில் விமானத்தின் உட்புறத்தில் கவர்ச்சி மிக்க எழிலோவியங்கள் பல, விழிகளுக்கு விருந்து படைக்கின்றன; பண்டைக் கால இந்திய வாழ்க்கை முறையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன அந்தக் காட்சிகள். வயலிலே உழுகின்றவர்கள்—விளைந்த தானியங்களை மாட்டு வண்டிகளில் மூட்டைகளில் ஏற்றிச் சந்தைகளைநோக்கி விற்பனைக்குக் கொண்டு செல்கின்றவர்கள்—மாலைப் பொழுதின் மங்கிய ஒளியில் ஆடிப் பாடுகின்ற ஆடவர்கள், ஆரணங்குகள் — முதலான கிராமப்புறச் சூழ்நிலைகளையெல்லாம் உணர்ச்சி பொங்க சித்திரிக்கின்றன அந்த ஓவியங்கள்.

குறிப்பாக மேல் தளத்தில் உள்ள 'மகாராஜா லவுஞ்ச்' எனப்படும் ஓய்வுக் கூடம் உள்ளத்தை ஈர்க்கும் வகையில் ஓர் அரண்மனைக் கலைக் கூடமாகவே அமைந்து, பயணிகளைக் கவர்கிறது. நன்முக அழகுபடுத்தப்பட்டுள்ள அதன் இடையே பொருத்தப்பட்டுள்ள கண்ணாடித் திரைகளில் தீட்டப் பெற்றுள்ள மரங்கள் மற்றும் பறவைகளின் தங்கச் சித்திரங்கள் சிந்தையைக் கவர்கின்றன.

ஓவியக் காட்சிகள்! மட்டுமன்றி திரைப்படம் பார்க்கவும் உள்ளே வசதி செய்யப்பட்டுள்ளது.

கண்ணுக்கு விருந்து தருவதோடு நில்லாமல், காதுக்கும் அதனைப் பரிமாறுகின்ற வகையில் பயணிகளின் இருக்கைக்கு அருகே இசைக் கருவி யொன்றையும் அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் புதுமையான கருவியைக் காதிலே பொருத்திக் கொண்டால் மேனாட்டு இசை, கருநாடக இசை, இந்துஸ்தானி இசை, எல்லாவற்றையுமே கேட்டு இன்பத்தில், மிதக்கலாம்.

விமானத்தின் உட்புறம் ஒரு கலைப் பேழையாக விளங்குவதற்கு ஏற்பவே, வெளிப் புறத் தோற்றமும் கம்பீரமாகக் காணப்படுகிறது.

இதனுடைய மொத்த நீளம் 232 அடி (70.51 மீட்டர்கள்), உயரம் : 63 அடி (19.33 மீட்டர்கள்) ; இறக்கையின் நீளம்: 195 அடி (59.64 மீட்டர்கள்).

விமானத்தின் மொத்த எடை 3 இலட்சத்து 53 ஆயிரம் பவுண்டுகள். ஒரு மணிக்கு 580 மைல் (930 கிலோ மீட்டர்கள்) வரை பறக்கக் கூடிய இது, ஒரே மூச்சில் 4,800 மைல்கள் (7,730 கிலோ மீட்டர்கள்) வரை செல்லுமாம். வானத்தில் அதிக உயரமாக 45,000 அடி வரை இது பறக்க வல்லதாகும்.

பழைய போயிங்—747 விமானத்தில் 32 முதல் வகுப்புப் பயணிகளும், 321 சிக்கன வகுப்புப் பயணிகளும் செல்வதற்கு வசதி செய்யப்பட்டிருந்தது. இந்தப் புதிய விமானமோ 24 முதல் வகுப்புப் பயணிகளையும், 329 சிக்கன வகுப்புப் பயணிகளையும் ஏற்றிச் செல்லக் கூடியது. இதன் மூலம், சிக்கன வகுப்புகளை நிறைய பேர் பயன்படுத்திக் கொண்டு பயணம் புரிய வேண்டும் என்கிற பெருநோக்கு புலனாகிறது.

இவ்வாறு பல்வேறு வசதிகள் படைத்துள்ள புதிய விமானத்தின் விலை 35 கோடி ரூபாய் ஆகும்.

சென்னை வழியாகச் செல்லும் இந்த விமானத்தில் ஏறித் தமிழக மக்கள் சிங்கப்பூர், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு உல்லாசமாகச் சென்று வரலாம்.

கலைச் செல்வரான 'பேரரசர் அக்பர்' (Emperor Akbar) அவர்களின் பெயரினைப் பூண்ட இப்புதிய விமானம், விண்ணிலே நீந்திப் பறக்கும் வேகம் மிகுந்த ஊர்தி மட்டும் அன்று; இந்தியாவின் பெருமையை உயர்த்தும் கண்ணுக்கினிய கலைப் பெட்டகமும் ஆகும்!

—அ. வேதாசலம்.



அழகு மிளிரும் ஆரணங்குகள்!

ஆரணி, கும்பகோணம், காஞ்சிபுரம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம், மதுரை பருத்தி கைத்தறிச் சேலைகள், அச்சிட்ட சுங்கடி சேலைகள் மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்.



படுக்கை விரிப்புகள், மலர்ப் படுக்கைகள்!

நேர்த்தியான நெசவு கைத்தறிப் படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணை உறைகள், உங்களுக்கு சொகுசு அளிப்பவை!

லுங்கிகள், வசதியானவை நீடித்துழைப்பவை!

உங்கள் விருப்பத்துக்குகந்த சாதா, கோடிட்ட அல்லது கட்டமிட்ட பல வகைகளில்.



துவாலைகள், தூய்மையான துவாலைகள்!

சாதா, டர்கிஷ் வகைகள், மென்மையான மற்றும் ஈரத்தை உறிஞ்சும் வகைகள். உங்களது சுகாதாரத்துக்கு இன்றியமையாதவை!

மற்றும் கைத்தறிப் பருத்தி வகைகள், வேட்டிகள், உடுப்புகளுக்கான துணிகள், அலங்காரத் துணிவகைகள்—குடும்பத்தினர் அனைவருக்குமே உகந்த முழுதும் புதிய வகைகள்.



கைத்தறியே வண்ணத்துப்பூச்சி

 பதிவு எண். M. 8676

சாதனை மிகு பத்தாண்டு



நாடு பீடுநடை போடுகிறது

சுய சார்பை நோக்கி

கட்டுப்பாட்டுடன் கூடிய சமூக

வாழ்வை நோக்கி

ஒருமைப்பாட்டை நோக்கி.

DIPR.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

தமிழரசு

55
30/8
R.R. no. 125/55



COMMISSIONER OF TAMIL NADU
ARCHIVES & HISTORICAL RESEARCH
1976
EGMORE, MADRAS

காந்தியடிகளும் திருக்குறளும்

காந்தியடிகளிடம் ஓர் அன்பர் திருக்குறள் குறித்துக் கீழ்க் கண்ட வினாவைக் கேட்டார்.

"குறளை நீங்கள் அறிவீர்கள். அந்தத் தமிழ் இலக்கியத்தின் ஆசிரியர்,

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்னும் குறளின் மூலம் பிறப்பால் சாதியில்லை என்று கூறியிருப்பதை நீங்கள் அறிவீர்களா?"

வினாத் தொடுத்த அன்பருக்குக் காந்தியடிகள் தமது 'யங் இந்தியா' பத்திரிகையின் வாயிலாக மறுமொழி அளித்தார். அது இது:

"மிகைபடக் கூறும் தற்போதைய நிலைக்கு விடையாகவே அவர் அவ்விதம் கூறியுள்ளார். எந்த வர்ணமாவது உயர்வுக்கு உரிமை கொண்டாடிய போது, அவர் அதை எதிர்த்துத் தமது குரலை எழுப்ப வேண்டியிருந்தது. பிறப்பினால் வர்ணம் என்ற கொள்கையின் வேரை அது அறுத்து விடவில்லை. அது சமத்துவமின்மைக் கொள்கையின் வேரை அறுக்க வேண்டுமென்ற சீர்திருத்தவாதியின் முயற்சியேயாகும்."

அண்ணல் அளித்த மறுமொழி, அவர் திருக்குறளை நுணுகிப் பயின்றிருக்கிறார் என்பதை எடுத்துரைக்கிறதல்லவா?

ஆதாரம்: மகாத்மா காந்தி நூல்கள்-7.

தமிழரசு
மலர்-6 • 1-5-1976 • இதழ்-21

வள்ளுவர் காட்டிய வழி நடப்போம்!

''உலகப் பொது நோக்குக் கொண்ட மனிதனுக்கு அறவுரைப் பாடலை அருளிய அமரகவியான திருவள்ளுவரின் நினைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், வரலாற்றுச் சிறப்புமிக்க இச்சென்னை மாநகரில் எழுப்பப்பட்டுள்ள எழில் தவழும் இந்த வள்ளுவர் கோட்டத்தைத் திறந்து வைக்கும் பேற்றினை எனக்கு வழங்கியதற்காக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்களுக்கும் தமிழக மக்களுக்கும் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். எக்காலத்திற்கும், எல்லா மாந்தர்க்கும் ஏற்ற வகையில் நடைமுறைக்குப் பொருந்தும் அறக் கருவூலமாக ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக திருவள்ளுவரின் ஒரே படைப்பான திருக்குறள் போற்றப்பட்டுள்ளது. வள்ளுவர் வழங்கிய வாய்மொழி அவர் காலத்திற்கு எவ்வளவு ஏற்றதாக இருந்ததோ, அதே அளவிலும் நிலையிலும் இன்றைய சூழ்நிலைக்கும் ஏற்புடையதாக இலங்குகிறது. அறிவும் ஆராய்ச்சியும் வழிகாட்டிகளாய் அமைந்து, மனிதனின் மனப்பான்மை விரிந்து, பெருகி, முற்போக்கு அடைந்துவரும் இன்றைய உலகப் போக்குக்கு இசைவாகவும், இயைந்ததாகவும், திருக்குறளின் கருத்து வளம் மேன்மேலும் கவர்ச்சியும் வளர்ச்சியும் பெற்று விளங்குகிறது.

எக்காலத்திற்கும் எந்நாட்டவர்க்கும் ஏற்றது!

''எடுப்பான வடிவழகும் ஒலிநயமும் அமைந்து இனிக்கின்ற குறட்பாக்கள், எக்காலத்திற்கும் எந்நாட்டவர்க்கும் பொருத்தமாகவும், இன்றைய சூழலுக்கு ஏற்றதாகவும் விளங்குவதோடு, தமிழக மக்களால் பரவலாகப் பயிலப் பெற்று, பெரிதும் போற்றப் பெறுகின்றன. இந்நிலையில் திருக்குறளின் மாட்சியினை நான் உங்களுக்கு எடுத்துரைக்க வேண்டுமென்பதில்லை.

''உயர் பேரறிவில் உதித்த ஒளிமணிகளின் அறக்களஞ்சியமாகத் திகழும் திருக்குறள் போலப் பிறிதொரு நூலை உலக அரங்கில் காண இயலாது'' என அறிஞர் 'ஆல்பர்டு சுவைட்சர்' சூட்டிய புகழுரையைவிடச் சிறந்த பாராட்டாக வேறொன்றை உரைக்க இயலாது.

இந்தியப் பண்பாட்டை உருவாக்குவதில் தமிழர்களின் தொண்டு!

''ஆங்கிலத்தில் திருக்குறளின் மொழி பெயர்ப்பை நான் படித்தபோது, பொதுமையான இந்தியப் பண்பாடு என்ற உன்னத கலாச்சார அடித்தளத்தை உருவாக்குவதற்கு, தொன்றுதொட்டே தமிழர்கள் நிலையான தொண்டாற்றி வந்துள்ளதைக் கண்டு, நான் வியந்து மகிழ்ந்தேன். அறிவும் விஞ்ஞானமும் மனிதனின் எண்ணங்களை ஆட்கொண்டு வழி காட்டி வருகின்ற இன்றைய அணுயுகத்தில் பொதுவான அற மேம்பாட்டையும் பொருளாதார உயர்வினையும் குறிக்கோளாகவும், அறிவு அன்பு அருள் ஆகியவற்றை அடிப்படையாகவும் கொண்ட ஒரு சமுதாய வாழ்க்கை நெறியையும், நடைமுறைச் செயலாக்கத்தையும் இணைத்து உணர்த்துகின்ற திருக்குறள், காலத்திற்கேற்ற எழுச்சியையும், ஏற்றத்தையும் ஊட்டி வருகின்றது. நமது தாய்நாட்டின் தலைநகரமான டெல்லியில் சென்ற ஆண்டு திருவள்ளுவரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைக்கும் நல்வாய்ப்பினை நான் பெற்றபோதும் இந்த அறநெறிக் கவிஞர் அறிவுறுத்தியுள்ள இப்பொதுமை நோக்கினையே அங்கும் நான் வலியுறுத்தியுள்ளேன். இந்தியாவின் பல்வேறு கலாச்சாரத் தொகுதிகள் வளர்ந்து வளமடையும் நேரத்தில், பாரத நாட்டின் பொதுமைப் பண்பாட்டையும், சமுதாயக் கலாச்சார மலர்ச்சியையும், உணர்வில் ஊன்றிய ஒருமைப் பாட்டினையும் உறுதிப்படுத்த ஒன்று கூடி விரைவாகச் செயல்படுத்துவதன் அவசியத்தை நான் அந்த உரையிலே வலியுறுத்தினேன்.

சமுதாயம் சிறப்புப் பெற......

''வள்ளுவரின் தனித்த தத்துவச்சிந்தனைக்கு மனிதன்தான் மையம். தனி மனிதன் வாழ்வில் வளம் பெற்று நிறைவு அடைவதற்கும்; உலகம் முழுவதுமே உயர்ந்த இன்ப நிலையை எய்துவதற்கும், உறுதுணையாகும் சமூக நெறிக் கோட்பாடுகளாக, ''அறம், பொருள், இன்பம் என்ற முப்பெரும் கோட்பாடுகளைத் தம் நூலில் வள்ளுவர் வலியுறுத்தியுள்ளார். தனி மனிதனுக்கு அறிவும் அறநெறியும் புகட்டுவதில் தொடங்கி, அறத்தில் சிறக்கும் அத்தனி மனிதரால் உருவாகும் சமுதாயம், சீரும் சிறப்பும் பெற்று ஒளிர அவர் வழி வகுத்தார்.

பொன்னான நடுநிலைப் பாதை.

**"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"**

என்ற குறட்பாவின் மூலம் தனி மனிதனின் மனத்தூய்மையை வலியுறுத்திய திருவள்ளுவர், அறநெறிக் கவிஞர்களில் தலையாய இடம் பெற்று, ஈடில்லாத் தீர்க்க தரிசியாகத் திகழ்கிறார். இலட்சிய உணர்வு என்ற எட்டாத வானத்தைத் தொட்டுப் பிடிக்கமுயலும் அறக் கவிஞர்கள் சிலர். உலகியல் நடைமுறையை அனுசரித்து உலகோடு ஒத்துப்போகும் உசித நெறியை உணர்த்தும் அறக் கவிஞர்கள் சிலர். ஆனால், திருவள்ளுவரோ இவை இரண்டுக்கும் இடையே பொன்னான நடுநிலைப் புதுப் பாதையை வகுத்துள்ளார். இம்மா முனிவர் செய்துள்ள அற்புதச் செய்யுள் நெசவிலே உலக நெறி பாவாகவும், இலட்சிய நெறி ஊடாகவும் பின்னப்பட்டுள்ளன.

அரசு அமைப்பிற்கு இலக்கணம் வகுத்தவர்

''புதிய மனிதனைப் பற்றி இன்று தத்துவ அறிஞர்கள் பேசுகின்றார்கள். இன்று அவர்கள் எடுத்துரைக்கும் கோட்பாடு, திருக்குறளின் அறத்துப்பால் அதிகாரங்களில் எதிரொலிக்கக் காணலாம். ஈராயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும் அவர் கண்ட கோட்பாட்டின் சிறப்பினை விஞ்சுவது அரிதாக உள்ளது. பொதுமை நோக்கில் ஊன்றிய வள்ளுவர் நீதிக்கும் நேர்மைக்கும் நிலைக் களனாய் நிலவும் அரசு அமைப்பிற்கும் இலக்கணம் வகுத்துள்ளார். அரசியல் மெய் அறிஞர்கள் பலர் அறிவுறுத்தியுள்ளது போல், நவயுக மனிதன், நீதி நிலவும் சமுதாய அமைப்பு, என்ற இரண்டு கோட்பாடுகளும் இணைந்து கைகோத்துச் செல்பவை. குடிமக்களின் கடமைகள், நேர்மையை அடிப்படையாகக் கொண்ட அரசின் நெறிகள், இரண்டும் ஒன்றுக்கொன்று ஊட்டம் ஊட்டி, உறவு கொண்டு வளர்வது பற்றி இன்று பேசப்படுகிறது. நேர்மையான சமுதாய அமைப்புப் பற்றி வள்ளுவர் ஆக்கியுள்ள பொதுப்பால் அதிகாரங்களில், ஆட்சியாளரின் கடமைகள், அமைச்சர்க்கும் அதிகாரிகளுக்கும் தேவையான பண்பு நெறிகள், ஓர் இலட்சிய அரசின் எல்லைக்கோடுகள் ஆகியவற்றைத் தெளிய எடுத்துக் காட்டியுள்ளார்.

குடியரசுத் தலைவர் உரை

இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமது அவர்கள், தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் தலைமையில் 15-4-'76 அன்று மாலை சென்னையில் வள்ளுவர் கோட்டத்தைத் திறந்து வைத்தார்.



சமதர்மம் என்பது புதியதொரு கோட்பாடல்ல!

''சமதர்மச் சமுதாய அமைப்பின் மூலமாக வறுமை, பிணி, அறியாமை ஆகியவற்றைப் போக்க நாம் உறுதியான போராட்டத்தில் முனைந்துள்ளோம். சமதர்மம் என்பது புதியதொரு கோட்பாடல்ல. 1964-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் சென்னை சட்டமன்றத்தில் திருவள்ளுவரின் திரு உருவப் படத்தைத் திறந்து டாக்டர் ஜாகிர் உசேன் நிகழ்த்திய உரையை உங்களுக்கு நான் நினைவு படுத்த விரும்புகிறேன்.

''நாட்டின் செல்வத்தை உற்பத்தி செய்தல் (இயற்றல்)
வசதிகளைத் திரட்டிச் சேமித்தல் (ஈட்டல்)
நேரிய முறையில் செல்வப் பகிர்வும் 'பங்கீடும் செய்தல் (வகுத்தல்)

ஆகிய மூன்றும் ஆட்சியாளர்களின் கடமைகள் என்று, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே-ஆழ்ந்த சிந்தனை செறிந்த அற்புத குறட்பா நடையிலே - எடுத்துக் காட்டியுள்ளார், திருவள்ளுவர். தமிழ் நாட்டின் தலையாய இந்த ஞானியைவிடச் சிறந்த சமதர்மவாதி வேறு எவரும் இருக்க முடியாது'' என்று டாக்டர் ஜாகிர் உசேன் உளம் நெகிழ உரையாற்றினர்.

சமவாய்ப்பு அளிக்கும் பொருளாதார அமைப்பு!

''வறுமையை ஒழிப்பதே சமதர்மத்தின் அடிப்படைக் குறிக்கோள். வள்ளுவரின் விரிந்த நோக்கும், கூரிய பார்வையும் இன்றைய சமுதாய அமைப்பின் சீர்கேட்டினைக் கூடத் தெளிவாகச் சுட்டிக் காட்ட உதவுகின்றன. வறுமை என்பது ஆண்டவனால் ஆக்கப்பட்டதல்ல; மனிதனால் உருவாக்கப்பட்டதுதான், என்பது வள்ளுவர் வலியுறுத்தியுள்ள உண்மை. சமுதாயத்தின் பொருளாதார வளங்களும் வசதிகளும் ஒருசிலரின் ஏகபோகத்தில் சிக்கவிடாமல் பலரும் பரவலாகப் பகிர்ந்து கொள்ளவும், ஒவ்வொரு குடிமகனும் சமவாய்ப்புப் பெறவும், வகைசெய்யும் வண்ணம் பொருளாதார அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று அவர் உணர்த்தினர்.

வள்ளுவரின் இலட்சியக் கனவுகளை நனவாக்குவோம்!

''ஞானிகள், அறிஞர்கள் ஆகியோரின் நினைவைப் பசுமையாகப் போற்றிப் பாராட்ட நினைவாலயங்களும், சின்னங்களும் எழுப்புவது பாரதநாடு பின்பற்றிவரும் பாரம்பரியமாகும். அவர்கள் பொன்னான நினைவைப் போற்றவும், அவர்கள் உணர்த்திய உண்மைகளையும் உபதேசங்களையும் நினைவுபடுத்தி, நெஞ்சில் நிலை நிறுத்திடவும், மக்கள் அவற்றைக் கடைப்பிடிக்க வகை செய்யவும்தான், இந்த நினைவுச் சின்னங்கள் நிறுவப்படுகின்றன. இச்சின்னங்களின் சிறப்பு, கட்டடங்களின் கம்பீரத்திலும் கவர்ச்சியிலும் அடங்கியதல்ல; அவற்றின் அடிப்படையாக உள்ள இலட்சிய அறிவுரைகளில் அடங்கியது ஆகும். திருக்குறளின் உயர்ந்த எண்ணங்களையும் கோட்பாடுகளையும் கவர்ச்சிமிக்க வெறும் கோஷங்களாகக் கருதிவிடாமல், அவற்றைச் செயல்படுத்தி அந்த இலட்சியக் கனவுகளை நனவாக்க முயலவேண்டும். திருவள்ளுவரின் அறநெறிக் கோட்பாடு



...ாக் கடைப்பிடித்து, அவருடைய அழியாத ...டைப்பு நமக்குவிடுக்கும் அழைப்பினை ஏற்று, ...க்கத்தில் உறுதியும் நோக்கில் தெளிவும் ...ாண்டு, அயராத உழைப்புக்கு நம்மை அர்ப் ...ணம் செய்வதே அவருக்கு நாம் செலுத்தக் ...டிய சிறந்த அஞ்சலியாகும்.

...ள்ளுவர் கோட்டம் ஒரு கலங்கரை விளக்கம்!

''இச்சொற்களால் திருவள்ளுவர்க்கு ...ன் அஞ்சலியைச் செலுத்தி, வள்ளுவர் கோட் ...த்தைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சியடை ...றேன். அறிவுப் பணிகளுக்கும் கலாச்சாரப் ...ணிகளுக்கும் கேந்திரமாகவும் இந்த நிலையம் ...ர்ந்து, வளர்ந்து, உயிர்த் துடிப்புடன் செய ...ற்றும் என்று நம்புகிறேன்.

''ஓங்கி நிற்கும் இந்த நினைவுச் சின்னம், ...ந்த தலைமுறையினருக்கு மட்டுமல்லாமல், ...னி வரும் தலைமுறையினருக்கும் கலங்கரை ...ாக்கமாக விளங்கும் என்பதில் எனக்கு ஐய ...ல்லை. இந்த அரிய வாய்ப்பினை எனக்கு ...ழங்கிச் சிறப்பித்ததற்குத் தமிழக மக்களுக்கு ...ன் மீண்டும் என்னுடைய நன்றியைக் ...ணிக்கை ஆக்குகிறேன்.

''வணக்கம், ஜெய்ஹிந்த்.''

[1976-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15-ஆம் நாள் மாலை 6-30 மணிக்கு, சென்னை, நுங்கம்பாக்கம் ஏரிக்கரைப் பகுதியில் அமைந்துள்ள வள்ளுவர் கோட்டத்தினைத் திறந்து வைத்து இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமது அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையினைத் தமிழ்நாடு அரசின் உணவுத் துறைச் செயலாளர் திரு. க. திரவியம், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தமிழாக்கம் செய்தார்.]

உணர்வுகளைத் தூண்டும் ஒப்பற்ற திருக்குறள்

ஆளுநர் உரை

''மனித இனத்தின் மிக உயர்ந்த விருப்பங்களை விளக்கும் உருவமாகவும், சமுதாயத்தின் பல்வேறு பகுதியினருக்கும் இடையே ஒருங்கிணைந்த ஒற்றுமையை ஏற்படுத்தும் தூதுவனாகவும் விளங்கிய திருவள்ளுவரின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள இந்த நினைவுச் சின்னத்தைத் திறந்து வைத்திட நமது பெருமதிப்பிற்குரிய குடியரசுத்தலைவர் அவர்கள் நம்மிடையே இருப்பதால், நாம் அதிர்ஷ்டக்காரர்களாவோம். திருவள்ளுவரின் கருத்து, காலத்தின் கோலத்தால் விளையும் கொடுமைகளை வென்றுள்ளது; அறிவியல் வளர்ந்து, மாபெரும் உண்மைகளைப் புலப்படுத்தி வந்த போதிலும், அதனாலும் அழியாமல் நிலைத்து நிற்கிறது.

''குடியரசுத் தலைவர் அவர்களே! தாங்கள் பல்வேறு கலாச்சாரங்களையும் இந்தியாவின் அடிப்படை ஒற்றுமையையும் வளர்க்கும் பண்பாளராக விளங்குவதோடு மட்டுமல்லாமல், பெரும் நாட்டுப் பற்றுள்ளவராகவும், தேசிய வீரராகவும், நமது நாகரிகம், கலாச்சாரம் ஆகியவற்றின் பிரதிநிதியாகவும் விளங்குவதால், உங்களிடம் நாட்டின் பெருமதிப்பிற்குரிய தலைவரின் சிறப்புகள் அமைந்திருப்பதைக்காண்கிறோம். திருவள்ளுவரின் கருத்துக்கள் உலகம் முழுவதற்கும் ஏற்றவை ஆகும். அவை எல்லாக் காலத்திற்கும் ஏற்றதாகவும் விளங்குகின்றன. எனவே, கால வெள்ளத்தால் அழியாத தமிழ் வேதத்தினை அருளிய — சாகாவரம் பெற்ற —திருவள்ளுவரின் புகழ், பெருமை ஆகியவற்றின் சின்னமாக விளங்கும் இந்நினைவாலயத்தைத் தாங்கள் திறந்து வைத்து நாட்டுக்கு வழங்குவது மிகுந்த பொருத்தமுடையதாகும். தங்கள் ஆட்சியின் கீழ் உள்ள இம்மாநிலத்திற்குத் தாங்கள் வருகை தந்தது இதுவே முதல் தடவை என்பதால், தங்கள் வருகை இத்திறப்பு விழாவிற்குச் சிறப்பு அளித்துள்ளது.

''தமிழ் மிகவும் தொன்மை வாய்ந்த மொழியாகும்; பல்லாயிரம்ஆண்டுக்கு முற்பட்டதாகும். சிறந்த பல்வேறு இலக்கியங்களைக் கொண்டதாகும். திருக்குறள், தமிழ் மொழியின் ஒளி விடும் அணிகலன்களில் ஒன்றாக விளங்குகிறது. திருவள்ளுவரைப் பாராட்டும்போது, அமரகவி சுப்பிரமணிய பாரதியார், ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு'' என்று மிகவும் பொருத்தமாகப் பாராட்டியுள்ளார். இந்தியாவின் பழங்கால அறிவு நுட்பம், திருக்குறள் போன்ற நூல்களிலேயே உண்மையாக விளங்குகிறது......

''திருவள்ளுவர் சமுதாயத்திற்கு நீதி அடிப்படையை வழங்கி, மனித இனத்தின் மதிப்பினை நிலை நிறுத்துகிறார். திருவள்ளுவர், மக்களை விரும்புகிறவர்—சாதாரணச் சுவையையே நாடுபவர், அடக்கத்தைப் பிரதிபலிப்பவர், தீவிரக் கொள்கையுடையவர், அளவிட முடியாத அறிவுக் கூர்மையுள்ளவர், தெளிவான நீதிக் கருத்துக்களைக் கொண்டவர், விருப்பு வெறுப்பற்ற மனம் உடையவர் என்பதெல்லாம் திருக்குறளிலிருந்து தெரியவருகிறது. திருக்குறள் அவருடைய உலகளந்த அறிவு நுட்பத்தையும், மனிதன் மற்றும் பொருள்களில் அவர் கொண்டு

இருந்த தெள்ளிய நோக்கையும் தெளிவுபடுத்துகின்றது.

''திருக்குறள்—அல்லது நாம் பரவலாகக் குறிப்பிடுவது போல் குறள் — வெறும் தத்துவங்களின் கண்டுபிடிப்பல்ல. அது, வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளையும் பற்றி மதி நுட்பத்துடன் ஆய்ந்த கருத்துக்களடங்கிய அறிவுக் களஞ்சியமாகும். அது, மனித வாழ்வின் மிகச் சிக்கலான பிரச்சினைகளைப் பற்றிய சிறந்த கருத்துக்களை, குறைந்த வார்த்தைகளுடனும், சிறந்த கவி நயத்துடனும் விளக்குகிறது. முழுமையானதாகவும், பயனுடையதாகவும், சிறந்ததாகவும், குறிக்கோளுடன் கூடியதாகவும், அன்பு நிறைந்ததாகவும், அனைவருக்கும் தொண்டு செய்யக்கூடிய வகையிலும், வாழ்வாங்கு வாழ்வது எப்படி என்பதைத் திருவள்ளுவர் நமக்குத் தெரிவிக்கிறார். அவர் கூறிய தெய்வத்தையே, நமது தேசத்தின் தந்தையான மகாத்மா காந்தியடிகளும் வணங்கினார்; வாய்மை, அகிம்சை ஆகியவற்றையே தெய்வமாக அவர் வலியுறுத்தினார்.

''ஜனநாயகம் ஆரோக்கியமான முறையில் வளர இப்பொழுது தேவைப்படுவது கட்டுப்பாட்டு உணர்ச்சியே ஆகும். கட்டுப்பாடு இல்லாவிட்டால் அல்லது தற்புலனடக்கம் இல்லாவிட்டால், ஜனநாயகத்தை ஒரு வாழ்க்கை முறையாக அமைக்க முடியாது. இந்த உலகத்தில் காணப்படும் எல்லாத் தகராறுகளும், தற்புலனடக்கம் இன்மையால் ஏற்பட்டவையேயாகும். கட்டுப்பாட்டிற்கும், ஒற்றுமைக்கும் தற்புலனடக்கமே மிகவும் இன்றியமையாதது ஆகும்.

''திருவள்ளுவர் எவ்வளவு மதி நுட்பத்துடன் அடக்கத்தின் அவசியத்தை வலியுறுத்துகிறார் என்று கவனியுங்கள்.

''அடக்கம் அமரருள்
உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்''

நாம் தற்புலனடக்கத்தையும் மேற்கொள்ள வேண்டும் என்பதை அவர்,

''காக்க பொருளா
அடக்கத்தை; ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு''

''நிலையில் திரியாது
அடங்கியான் தோற்றம்
மலையிலும் மாணப் பெரிது''

என்னும் குறள்களின் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

தன்னலமற்ற சேவையே வாழ்க்கையைச் சிறந்ததாக ஆக்குகிறது. இதை விளக்க,

''கைம்மாறு வேண்டா
கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றும் கொல்லோ உலகு?''

என்ற குறளில் சிறந்த உவமையைக் காட்டுகிறார்!

நமது கடமையைச் செய்யும் போது,

''எண்ணித் துணிக
கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.''

என்று திருவள்ளுவர் கூறிய எச்சரிக்கையை நாம் மனத்தில் கொள்வது நல்லது.

''நன்றாற்றல் உள்ளும்
தவறுண்டு; அவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை''.

என்ற குறளில் அவருக்குள்ள நடைமுறை அறிவின் ஆழம் தெளிவாகிறது.

''திருக்குறளில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் பொருள் பொதிந்ததாகும். எண்ண உணர்வுகளை என்றென்றும் தூண்டக்கூடிய நிலையான ஆதாரமாகவும் திருக்குறள் விளங்குகிறது.

''சொந்த அல்லது பொது வாழ்வு சம்பந்தப்பட்ட எந்த ஒரு சிக்கலான பிரச்சினைக்கும் தீர்வு காண விரும்பியபோது மகாத்மா காந்தியடிகள் பகவத் கீதையை நாடினார். அதுபோல அன்றாட வாழ்க்கையில் தோன்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் திருக்குறளை நீங்கள் நாடலாம்.

''தற்பொழுது கட்டி முடிக்கப்பட்டுள்ள இக்கோட்டத்தின் இடைத்தள மாடத்தின் தாழ்வாரங்களில் 1,330 அருங்குறள்களும் மூன்று வெவ்வேறு வண்ணக் கருங்கற்களிலான பலகைகளில் பொறித்து வைக்கப்பட்டுள்ளன. தற்செயலாக வரும் பார்வையாளருக்கும், திருவள்ளுவர் கூறிய புகழ்மிக்க செய்திகளை அக்குறள்கள் அறிவிக்கும்; அத்துடன் சிறந்த முறையில் வாழவும், சமுதாய வாழ்வில் நல்லிணக்கத்தோடு வாழவும் அவர்களைத் தூண்டும். திருக்குறளை வெறும் ஸ்லோகங்களாக ஆக்கிவிடாமல், அன்றாட வாழ்க்கையின் நடைமுறை வழிகாட்டி என்ற நிலைக்குப் பயன்படுத்துவது நம் அனைவருடைய கடமையுமாகும்.

''இந்த ஒப்பற்ற நூல், திருவள்ளுவர் புகழ்ந்து கூறிய அரும் பெரும் தூய கருத்துக்களையும், அரும் பெரும் நோக்கங்களின் அடிப்படையில் இந்தியா நிற்கிறது என்பதையும் இந்தியா மற்றும் உலக மக்கள் அனைவரின் உள்ளத்திலும் நிலைநிறுத்தும் என்று நம்புகின்றேன்.

''அன்பு, வாய்மை, அகிம்சை ஆகியவை தழைத்து ஓங்க, இந்த நினைவாலயத்தை நாட்டுக்கு வழங்கும்படிக் குடியரசுத் தலைவர்களைக் கேட்டுக் கொள்வது என்னுடைய கடமையாகும்.

''வணக்கம். ஜெய் ஹிந்த்.''

(வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவில் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் ஆற்றிய தலைமை உரையின் சில, பகுதிகளின் தமிழாக்கம்).

வள்ளுவர் கோட்டம் திறப்பு விழா....

உலகுக்கே பொதுவாக உள்ளதொரு மாமறையை-திருக்குறளை-அளித்த திருவள்ளுவரின் நினைவாக 75 இலட்சம் ரூபாய்ச் செலவில் கட்டப்பட்ட, காலத்தால் அழியாத கருங்கல் கோட்டத்தை, 15-4-1976 அன்று மாலை நடைபெற்ற எழில்மிக்க விழாவில் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் திறந்து வைத்து உரையாற்றினார்.

''அகரமுதல எழுத்தெல்லாம்'' என்ற குறளுடன் தொடங்கி, திரு. சீர்காழி எஸ். கோவிந்தராஜன் அவர்கள் பாடினார்.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் நன்றி கூறினார்.

நாட்டு வாழ்த்துடன் வள்ளுவர் கோட்டத் திறப்பு விழா இனிது முடிந்தது.

நாட்டின் முன்னேற்றத்தில் மகளிர் பங்கு

''தமிழ்நாடு மகளிர் சுயசேவை இயக்கத்தின் நான்காவது ஆண்டு நிறைவு விழாக் கூட்டத்தில் கலந்து கொள்வதிலும், நான்காவது ஆண்டறிக்கை அடங்கிய விழா மலரை வெளியிடுவதிலும் மகிழ்ச்சியடைகிறேன். நமது பிரதம மந்திரியின் தலைமையில் துவக்கப்பட்ட உங்கள் நிறுவனம் சமூகச் சேவையின் பல்வேறு துறைகளிலும் உபயோகமான பணிகளுடன் நான்கு ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளது. பல மாவட்டங்களில் உங்கள் நிறுவனத்தின் மாவட்டக் கிளைகளை நீங்கள் அமைத்து வருவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாநிலம் முழுவதிலும் விரைவில் அத்தகைய கிளைகளை நிறுவி விடுவீர்கள் என்று நம்புகிறேன்.

''தேசிய முயற்சிக்கான பல்வேறு துறைகளிலும் துரிதமான முன்னேற்றத்துக்கு நம் நாடு இன்று தயாராக உள்ளது. நமது நாட்டின் சீரான முன்னேற்றச் சகாப்தத்தை உருவாக்குவதில் பெண்களாகிய நாம் நமது பங்கைச் செலுத்த வேண்டும். கடினமான, அர்ப்பணித்த உழைப்பைத் தவிர, செழிப்பான நிலையை அடைவதற்கு எந்தக் குறுக்கு வழியும் கிடையாது. காலம் முக்கியமானது; காலத்தை இழப்பதற்கு நம்க்கு நேரமில்லை. கல்வியறிவும், செல்வமும் பெற்ற பெண்கள், தங்களைவிடக் குறைவான அந்தஸ்து கொண்ட சகோதரிகளுக்குச் சேவை புரிய முன்வர வேண்டும். நமது சமுதாயத்தின் நலிவடைந்த பிரிவினர்களின் சமூக, பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் தன்னாலியன்ற அளவு செயல்பட்டு வருவது உண்மை.

''நமது நாட்டை எதிர் கொண்ட பிரச்சினைகள் பல; அவை பல வகைப்பட்டவை. சமூகநலத் துறையில் மிகச் சிறப்பாகப் பணியாற்றுவதற்கு சுயசேவை நிறுவனங்களுக்குப் பெரும் வாய்ப்பு உள்ளது. பணம் அல்லது வேறு வகையிலான உதவி ஆகியவற்றைக் காட்டிலும், சமத்துவமான மதசார்பற்ற சமுதாயத்தின் வளர்ச்சிக்கு ஏதுவாக உள்ள ஒரு சூழ்நிலையை உருவாக்குவதே மிக முக்கியமான தேவையாகும். இந் நோக்கத்திற்காக, நமது பெண்களின் எண்ணம், செயல் ஆகியவற்றில் ஒரு மாற்றத்தை நாம் கொண்டு வர வேண்டும்.

''இளம் வயதில் திருமணம், ஜாதி வேறுபாடு, வரதட்சிணை, தீண்டாமை, இனவெறி போன்ற பல சமூகத் தீமைகளுடன் நாம் போராட வேண்டும். இத் தீமைகளை ஒழிப்பதற்கு நாம் சட்டமியற்றலாம்; ஆனால் சட்டத்தினால் மட்டுமே இத்தகைய கொடிய பழக்கங்களைச் சமுதாயத்திலிருந்து விடுவிக்க நம்மால் இயலாது. இத்தீமைகளை ஒழிப்பதற்கு முடிவற்ற போராட்டத்தில் நாம் ஈடுபட வேண்டும்.

''நம்முடைய இப்பரந்த பூமியில் பெண்களின் தேவைகளைக் கவனிக்கும் வேலைக்கு, உங்களுடைய நிறுவனத்தைப் போன்ற சுயசேவை நிறுவனங்களின் மகத்தான முயற்சி வேண்டியுள்ளது. இப்பெரும் முயற்சியை மேற்கொள்வதற்குப் போதுமான செல்வ வளம் நம்மிடம் இல்லாமலிருக்கலாம்; ஆனால் நமது சுயநலமில்லாத பணியும், ஊக்கமுமே அவற்றுக்கு ஈடாகும். மனித குலத்துக்குப் பயனளிக்கும் அர்ப்பணித்த சேவையே, நாம் வாழும் சுற்றுப்புறத்தை மேம்படுத்துவதற்கு உதவும் உபயோகமான சில பணிகளைச் செய்யும் திருப்தியை அளிக்கிறது.

''நமது நாட்டின் மக்கள் தொகையில் பாதிப்பேர் பின்தங்கிய நிலையிலும் அறியாமை, மூடநம்பிக்கை, மற்ற சமூகத் தீமைகள் ஆகியவற்றுக்குப் பலியாகியும் இருந்தால், நமது நாடு எந்தவித முன்னேற்றத்தையும் அடைய முடியாது என்பதை நாம் உணர வேண்டும். உங்கள் நிறுவனம் ஒரு நல்ல துவக்கத்தைச் செய்துள்ளது; ஆனால் இன்னும் பெரும்பணி ஆற்ற வேண்டியுள்ளது. இந்தியாவின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் சமூகச் சேவைச் செய்தியைப் பரப்பும் ஊக்கமிக்க - அர்ப்பணித்த-சமூக ஊழியர்களைப் பெறுவதே இப்பொழுதுள்ள முதலாவது முக்கியத் தேவையாகும்.

''உங்கள் நிறுவனத்தின் முன்னேற்றத்தை நான் கூர்ந்து கவனித்து வருவேன். உங்கள் அனைவரையும் சந்திப்பதற்கான வாய்ப்பை அளித்ததற்காக மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

''ஜெய் ஹிந்த்.''

— இவ்வாறு இந்தியக் குடியரசுத் தலைவரின் துணைவியார் திருமதி பேகம் அபிதா அகமது அவர்கள் 16-4-76 அன்று சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்நாடு மகளிர் சுயசேவை இயக்கத்தின் நான்காவது ஆண்டு விழாக் கூட்டத்தில் கூறினார்.

மகளிர் அரங்கம்

நெஞ்சில் குறளிருந்தால் நிம்மதிக்குப் பஞ்சமில்லை!

— திருமதி சௌந்தரா கைலாசம்





கட்டுக் கடங்காத கடவுளினை நடுமனத்தில்
இட்டுத் தொழுது எனதுரையைத் துவக்குகின்றேன்.
வெள்ளமெனத் திரண்டிருக்கும் எல்லோரும் வந்திடுக!
உள்ளமெலாம் பூரித்தேன்! உவகைமலர் சொரிகின்றேன்!
அரைத்தெடுத்த சந்தனத்தின் அருமை மணமெடுத்து
நிறைத்ததொரு கிண்ணமெனும் நெஞ்சமுடன் நிற்கின்றேன்!

* *

பனிமலரில் தேனெடுத்து பைந்தமிழின் சொல்தொடுத்துக்
கனிவுடனே வரவேற்கக் கைகூப்பி நிற்கின்றேன்!

* *

குறள்தந்த வள்ளுவரைத் தன்மகவாய்ப் பெற்றதனுல்
தனியான புகழுண்டு தமிழ்த்தாய்க்குத் தரணியிலே!
காலத்தை நீந்திக் கடந்து கரையேறி
ஞாலத்தில் ஒளிர்கிறது, ஞானக் குறளமுதம்!
மனிதமனக் கோணல்களை மாற்றிச் சுகமருளும்
தனிப்பெருமை வாய்ந்த தமிழ்மருந்தே குறளாகும்!
எதுவரைக்கும் கெடாமல் இருக்குமெனச் சொல்வதெலாம்
பொதுமறைக்குக் கிடையாது! புத்தமுதாய்த் தித்திக்கும்!
என்றைக்கும் யாருக்கும் ஏற்ற மருந்ததுவே!
வாழத் தெரியாமல் வாழ்ந்திந்த உலகத்தில்
நீளத் துயர்ப்பட்டு நித்திரையும் கெட்டலையும்
மக்களுக்கு வாழ்வாங்கு வாழ வழிகாட்டத்
தக்கதொரு நூலாகத் தமிழில் குறள்கொடுத்தார்!
நெறிகெட்டு வாழ்வதனுல் நெஞ்சு முறிபட்டுக்
கறைபட்டுப் போகாமல் காக்கக் குறள்கொடுத்தார்!
புதிரிந்த வாழ்க்கையெனப் புரியாது தடுமாறிக்
கதறுகையில் விடைதந்தார்; கையில் குறள்கொடுத்தார்!
வழுக்கும் நிலமான வாழ்க்கையிலே கால்சிறிதும்
சறுக்காமல் காப்பாற்றத் தக்கதொரு கோல்கொடுத்தார்!
குருட்டுக் கிழமனிதன் கோலை எறிந்துவிட்டு
இருட்டில் தடுமாறி ஏங்கி யழுகின்றுன்!
நெஞ்சத்துக் கோணல் நிமிர்கிறதோ' தீங்குறளை
வஞ்சித்துப் பொய்மனம்தான் வாழப் படிக்கிறதோ!
நெஞ்சில் குறளிருந்தால் நிம்மதிக்குப் பஞ்சமில்லை!
'கல்' என்றும் 'தேர்' என்றும் காண்பவர்க்குச் சொல்வதுபோல
கல்லிலொரு பெருந்தேரைக் கலைவாணர் படைத்துள்ளார்!

மண்ணில் இதையமைத்த மகிமையினை எண்ணுகையில்
கண்ணிரண்டும் போதாவே கண்டிங்கே மகிழ்வதற்கே.
வார்த்தையிலை இதனழகை வருணிக்க; இதுபோலப்
பார்த்ததில்லை என்றுலும் பாராட்டுக் கேதுஎல்லை?
ஈரடியில் பாரதத்தை எழுப்பியநல் வள்ளுவரின்
தேரதனைப் பாரதத்துத் திருத்தலைவர் திறக்கின்றுர்!

பேருக்குத் தலைவரெனப் பிழைப்பவரா? மக்கள்மன
ஊருக்குத் தலைவரென உயர்ந்துள்ள ஒருமனிதர்!
புறப்பட்டு வந்தவெள்ளைப் புயலை எதிர்த்ததனுல்
சிறைப்பட்டு வெளிவந்த சிங்க மறவரிவர்!
அரியணையில் கொலுவிருக்கும் ஐந்தாம் தலைவரினை
எதுவரினும் எதிரேற்கும் ஈடில்லாப் பெருமகனை
தமிழகத்தின் சார்பினிலே தலைவணங்கி வரவேற்பேன்!

(வள்ளுவர் கோட்டத் திறப்பு விழா வரவேற்புக் கவிதையின் சில பகுதிகள்)

சோமங்கலம் அழைக்கிறது!

டி. கே. ஏ. திவான் முகமது, ஐ.ஏ.எஸ்.
செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர்

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" எனும் தீர்க்க தரிசியின் கவிதைக்கு வடிவமைப்பு கொடுக்க,

"மக்கள் நகரங்களை விடுத்து, கிராமங்களில் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். பெரிய மாளிகைகளை விடுத்து குடிசைகளில் வசிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இந்தியா மட்டுமின்றி, இந்தியா மூலம் உலகமே உண்மையான விடுதலை பெற்றதாக நான் திருப்தியடைவேன்" என்று உணர்த்திய பாரதத் தந்தை மகாத்மா காந்தியடிகளின் "வாழும் நெறிமுறை"களுக்குச் செயல் வடிவம் தந்திட,

"வள்ளுவர் உரைத்த, 'சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்', பாரத மக்கள் அனைவரையும் ஒரே நோக்கோடு பார்த்து அனைவர்க்கும் நியாயம் கிட்ட, பாரதப் பிரதமரால் உருவாக்கப்பட்டுள்ள 20 அம்சத் திட்டம் எனும் ஒரு மாபெரும் திட்டத்தின் குறிக்கோள்களைச் சிறிய அளவில் ஒரு மாதிரித் திட்டமாக நடத்திக் காட்டிட,

சோமங்கலம் பகுதியில் "ஊரகச் சீரமைப்புத் திட்டம்" தமிழ் நாடு ஆளுநர் அவர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

திட்டப் பகுதியைப் பற்றி—

சென்னை நகரிலிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தின், குன்றத்தூர் வட்டாரத்தில், குன்றத்தூரிலிருந்து 6 கிலோ மீட்டர் தூரத்தில் சோமங்கலம் உள்ளது. சோமங்கலம் கிராமத்தில் ஒரு ஆரம்பப் பள்ளியும், ஒரு உயர்நிலைப் பள்ளியும், ஒரு வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கமும் உள்ளது.

சோமங்கலத்தை மையமாகக் கொண்டு, அதைச் சுற்றியுள்ள மற்றும் 9 கிராமங்களைச் சேர்த்து இத்திட்டப் பகுதி உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பகுதியில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 6,000 பேரைச் சேர்த்து மொத்தம் 11,026 மக்கள் வாழ்கிறுர்கள். இப்பகுதியில் மொத்தமாக 6,300 ஏக்கர் சாகுபடி செய்யக் கூடிய நிலம் உள்ளது.

திட்டத்தின் நோக்கம்

இப்பகுதியை உறைவிடமாகக் கொண்டுள்ள ஒவ்வொரு குடும்பத்தினரின் பிரச்சனைகளையும் ஆய்ந்து, இரண்டு ஆண்டு முதல் மூன்றுண்டுகளுக்குள் இத்திட்டப் பகுதியில் நவீன முறையில் விவசாயத்தை மேம்படுத்தி, அதன் மூலம் இங்குள்ள மக்களின் பொருளாதாரத்தை உயர்த்தி, அவர்கள் நலம் பெற, வளம் காண, கல்வி பெற வழி வகைகள் செய்து தருவதும், திட்டத்தின் சீரிய பயன்கள் இப்பகுதியிலுள்ள ஒவ்வொருவரையும் சென்றடையச் செய்வதும் திட்டத்தின் நோக்கமாகும்.

இலக்கு

இச்சீரமைப்புத் திட்டம், 10 அம்சங்களாக மலர்ந்து இப்பகுதியில் செயற்பட்டு வருகிறது.

1. 2,597 ஏக்கர் நன்செய் நிலம், மற்றும் 2,032 ஏக்கர் நன்செய்—புன்செய் கலப்பு மற்றும் புன்செய் நிலங்களை 'அமோக விளைச்சல்' திட்டத்தின் கீழ் கொண்டுவந்து விவசாயத்தை வளப்படுத்துதல்.
2. 4,000 ஏக்கர் நன்செய் நிலத்துக்குப் பாசன வசதிகளை அளித்து வரும் 19 நீர்நிலைகளை வளப்படுத்துதல்.
3. கிணறுகளையும், பம்பு செட்டுகளையும் நிறுவி, நீர்ப் பாசனத்தை அதிகரித்து இப்பகுதியில் உள்ள மொத்த சாகுபடி நிலத்தையும் இரண்டாவது, மூன்றுவது போகம் பயிரிடத் தகுதியுள்ளவையாக மாற்றுதல்.
4. விவசாயிகளுக்கு வாடகைக்கு 'ட்ராக்டர்' மற்றும் விவசாயக் கருவிகளைக் கொடுத்து விவசாயப் பொறியியல் பணி வசதிகளைச் செய்து தருதல்.
5. வேளாண்மை விளைபொருட்களைச் சேமித்தல் மற்றும் அவற்றின் விற்பனைக்கு வழி வகை செய்தல்.
6. கலப்பினக் கால்நடைகள் மற்றும், செயற்கை முறை கருத்தரிப்பு ஆகியவற்றின் மூலம் இப்பகுதியில் கால்நடை இன அபிவிருத்தி செய்தல்.

7. பால் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுதல்.

8. குழந்தைகள் நலத்தை மேம்படுத்த ''பால்வாடி''களை ஏற்படுத்துதல்.

9. பண்ணை நிர்வாகம், அதைச் சார்ந்த நடவடிக்கைகள், மற்றும் கால்நடைப் பராமரிப்பு, பாற்பண்ணை நிறுவுதல் ஆகியவற்றில் பயிற்சி தருதல்.

10. திட்டப் பகுதியில் உறைபவர் அனைவர்க்கும் சுகாதார வசதிகள் செய்து தருதல்.

திட்டம் செயலாகும் முறை

திட்டத்தின் குறிக்கோள்களை அடைய ஏற்கனவே இயங்கிவரும் கூட்டுறவு மத்திய வங்கி, நிலவள வங்கிகள் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் ஆகியவற்றின் பணிகளைப் பயன்படுத்தததிட்டமிடப்பட்டுள்ளது. மற்றும் சிறு விவசாயிகள் மேம்பாட்டுக் கழகம், விவசாய பொறியியல் பணி நிலையம் மற்றும் பால் வள நிறுவனம் ஆகியவற்றின் பணிகள் இத்திட்டப் பகுதியில் விரிவுபடுத்தப்படும். ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் நடைபெற்றுவரும் 'பால்வாடிகள்' முதியோர் கல்வி முதலியவையும் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

திட்டப் பகுதியில் வளர்ச்சிப் பணிகளை நடைமுறைப்படுத்த விவசாயத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, கூட்டுறவுத் துறை, பால்வள நிறுவனம், தொழில் துறை ஆகிய அரசுத் துறைகள் கூட்டாகச் செயற்படும். தங்கள் துறைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள திட்ட ஒதுக்கீடுகளை, முடிந்த அளவு இப்பகுதியின் வளர்ச்சி நடவடிக்கைகளுக்காக இத்துறைகள் பயன்படுத்திக் கொள்ளும்.

'ராம ராஜ்யம்' காண்போம்!

இது ஒரு முன்னோடித் திட்டமாகும். இப்பகுதியில் இத்திட்டத்தின் நடவடிக்கைகள் கூர்ந்து கவனிக்கப்படும். தேவைப்படும்போது தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

15—2—1976 அன்று பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இப்பகுதிக்கு வருகை தந்து இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

இத்திட்டத்தை இப்பகுதியில் பரீட்சார்த்தமாகச் செயற்படுத்துவதின் மூலம் பெறப் போகும் புதிய அனுபவங்கள், மாநிலத்தின் மற்றப் பகுதிகளில் இம்மாதிரித் திட்டங்களைச் செயல்படுத்தும்போது பெரிதும் பயன்படும்.

''கிராமங்களில் புனர் நிர்மாணப்பணியில் ஈடுபடுவோம்—கிராமங்கள் தன்னிறைவில் 'ராம ராஜ்யம்' காண்போம்'' என்ற அண்ணலின் சொல்லை நிறைவேற்ற சோமங்கலம் அழைக்கிறது.

ஏழைக்கு உதவும் கரம்

திருச்சிராப்பள்ளிக்கு அருகே கீழவாளடி கிராமத்தில் பச்சைமுத்து என்பவர், தெரு ஓரத்தில் ஒரு சிறிய பெட்டிக் கடை வைத்திருக்கிறார். சிகரெட், பீடி, வெற்றிலை, மிட்டாய்கள் போன்ற சிறு சிறு பொருட்களை அவர் விற்பனை செய்கிறார். ஓராண்டுக்கு முன்பு அவருடைய நிகர இலாபம் நாள் ஒன்றுக்கு இரண்டு ரூபாயாகத்தான் இருந்தது. அவருக்கு, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் ஒன்றான இந்தியன் பாங்கின் உள்ளூர் கிளை தன்னுடைய ஏழைக்கு உதவும் கரத்தை நீட்டியது; சென்ற ஆண்டு 300 ரூபாய் கடன் கொடுத்து உதவியது. அக்கடன் தொகையைக்கொண்டு தேவையான பொருட்களை வாங்கி விற்பனை செய்து வருகிறார். இப்பொழுது அவருக்கு, நாள் ஒன்றுக்கு நான்கு ரூபாய் நிகர இலாபம் கிடைக்கிறது. நாள்தோறும் 15 ரூபாயிலிருந்து 25 ரூபாய் வரையில் அவருக்கு வியாபாரம் நடக்கிறது. பச்சைமுத்துப்பிள்ளை, தாம் வாங்கியிருந்த கடனில் மூன்றில் ஒரு பங்கைத் திருப்பிச் செலுத்திவிட்டார். அவரது வியாபாரம் மேலும் பெருகும் என்று அவர் நம்பிக்கை கொண்டிருக்கிறார்.

தொழில் புரட்சிக்கு எழுச்சி தரும் 'இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ்'

சென்னை மாநகரின் தெற்கு எல்லைக்கும் தூயதாமஸ் மலைக் குன்றுக்கும் (St. Thoms mount) இடைப்பட்ட கிண்டிப் பகுதியில் ஜி.எஸ்.டி. நெடுஞ்சாலையை விட்டுச் சற்றுத் தள்ளி மேற்குப் புறமாக நம் பார்வையைக் கொஞ்சம் திருப்பினாலே போதும்.

''Hindustan Teleprinters (இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ்) என்னும் ஆங்கில எழுத்துக்கள் நம் கண்களைக் கவர்ந்து இழுக்கும்.

அவற்றை நெற்றித்திலகமாகப் பூண்டது போலத்தான் நேர்த்தியாகக் காட்சியளிக்கிறது-மைய அரசின் இந்த மாபெரும் நிறுவனம்.

விடுதலை பெற்ற பிறகும் எல்லாவற்றிற்கும் வெளிநாடுகளையே எதிர்பார்த்து ஏங்கக் கூடாது என்னும் விழுமிய நோக்கத்துடன் மைய அரசு நிறுவனங்கள் (Central Government Undertakings) எத்தனை எத்தனையோ நாள்தோறும் எழுந்த வண்ணம் இருக்கின்றன. அவற்றுள் ஒன்றே இந்த 'இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ்' நிறுவனம்.

நம்முடைய இந்தியப் பேரரசு கடந்த கால்நூற்றாண்டுக் காலமாகவே எத்தகைய ஆர்வத்தோடும், ஆற்றலோடும் ஓர் 'அமைதியான தொழிற்புரட்சிக்கு' வழி வகுத்து வந்திருக்கிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம் விளங்குகிறது.

இந்த நிறுவனத்தின் தோற்றம் வளர்ச்சி, சாதனைகள், தனிச் சிறப்புகள், வெளிநாடுகளிலும் விரிந்து பரவும் இதன் ஒளிமிகுந்த செல்வாக்குகள்- ஆகியவைகளைப் பற்றி அறிந்து கொள்வதற்காக மேலாளர் திரு. ஏ. எம். யூசுப் அவர்களிடம் பேட்டி காணப்பட்டது. அவரிடம் கேட்ட வினாக்களும் அவ்வினாக்களுக்கு அவர் கூறிய விடைகளும் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

வினா: இந்த 'இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ்' நிறுவனம் முதன் முதலில் எப்போது-எங்கே தொடங்கப் பெற்றது என்று சொல்ல முடியுமா?

விடை: 1960-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சென்னையில் தான் ஏற்படுத்தப் பெற்றது.

வினா: இந்தியாவில் தொழில் வளர்ச்சிக்குரிய எத்தனையோ பெரிய பெரிய நகரங்கள் எல்லாம் இருக்கும்பொழுது இந்நிறுவனம் சென்னையில் அமைந்ததற்குச் தனிச் சிறப்பான காரணம் ஏதேனும் உண்டா?

விடை: நாட்டின் மற்றப் பகுதிகளைப் போலவே, சென்னையும் தொழில் வளர்ச்சியில் முன்னுக்கு வர வேண்டும் என்பது நம் இந்தியப் பேரரசின் எண்ணமாகும். அத்துடன், தமிழ் நாட்டைச் சார்ந்த டாக்டர் சுப்பராயன் அவர்கள் அப்போது மத்திய அரசில் அஞ்சல்-தந்தித் துறை உள்ளடங்கிய தகவல் துறை அமைச்சராக இருந்தார். இப்படியொரு மைய அரசு நிறுவனத்தை இங்கே அமைக்க வேண்டும் என்பதில் அவர் தணியாத ஆர்வம் காட்டினார். இதற்கு தேவையான பரந்த நிலப்பரப்பு எங்கே கிடைக்கும் என்று சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில் மாநில அரசின் சார்பில் இலவசமாகவே நிலம் வழங்குவதற்கு முன்வந்தார்-அப்போது தமிழக முதல்வராக இருந்த திரு கு. காமராஜ் அவர்கள். அவருடைய ஒத்துழைப்பு, டாக்டர் சுப்பராயன் அவர்களின் இடையறாத முயற்சி-இவையே இந்த நிறுவனம் சென்னையில் ஏற்படுவதற்குப் பெருந்துணை புரிந்தன.

வினா: முதலில் வெளிநாட்டு நிறுவனங்களின் தொழில்நுட்பத் துணையோடுதான் இது அமைக்கப் பெற்றது இல்லையா?

விடை: ஆமாம்; இத்தாலி நாட்டு-மெசர்ஸ் ஒளிவெட்டி (M/s Olivetti of Italy) என்னும் டெலிபிரிண்டர்கள்' உற்பத்தி நிறுவனத்தின் தொழில் நுட்ப ஒத்துழைப்போடுதான்இது தொடங்கப் பெற்றது. ஆனால் நம்முடைய இந்திய அரசு தான் இதற்கு முழு முதலீடும் செய்து வருகிறது.

வினா: இதனுடைய அனுமதிக்கப்பட்ட முதலீட்டுத் தொகை எவ்வளவு?

விடை: மூன்று கோடி ரூபாய்.

வினா: இதற்கென்று கிளைகள் இருக்கின்றனவா? எங்கெங்கே?

விடை: இந்தத் தொழிற் சாலைக்குக் கிளைகள் என்று சொல் லத்தக்க அளவில் எவையும் இல்லை. எனினும், இங்கிருந்து 'டெலிபிரிண்டர்' கருவிகளை வாங்கியுள்ள சிலர் அவற்றைத் தாங்களே பழுது பார்த்துக் கொள்ள வசதியில்லாமல் அவதிப் படக்கூடும். அவர்களுக்கு உதவு கின்ற நோக்குடன்-சென்னை, டெல்லி, கல்கத்தா, பம்பாய் ஆகிய பெரிய நகரங்களில் பழுது பார்க்கும் நிலையங்களை (Service Centres) நடத்தி வருகிறோம். இந்தியா முழுவதிலும் அதாவது காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரையில் எங்கே 'டெலிபிரிண் டர்' கருவிகள் பழுதுபட்டாலும் அந்தந்த இடங்களுக்கு அருகில் உள்ள நிலையங்களிலிருந்து தொழில்நுட்பப் பயிற்சியாளர் களைப் பழுது பார்ப்பதற்காக அனுப்புவதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

வினா: இந்தத் தொழிற்சாலை முதன் முதலாக எப்போது செயல் படத் தொடங்கியது?

விடை: 1961-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இறக்குமதி செய்யப்பட்ட கருவிகளைக் கொண்டு 'டெலிபிரிண்டரை' முழுமையான வடிவத்தில் உரு வாக்கும் பணியினை இது முதன் முதலில் தொடங்கியது.

வினா: இந்தத் தொழிற்சாலை எந்த நோக்கத்துடன் ஏற்படுத் தப்பெற்றது என்று கூறமுடியுமா?

விடை: அந்த நாளில் இந்தியா வின் தந்தித் துறை வளர்ச்சி வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி 'எலெக்ட்ரிக் டைப்ரைட்டரைப்' பெற்றுக்கொள்கிருர்:



ஆகும் கருவிகளையே முழுக்க முழுக்க நம்பிக் கொண்டிருக்க வேண்டிய நிலைமை இருந்தது. இதனுல், அதிக விரைவாகத் தந்தி மூலம் தகவல் அனுப்பு வதில் நம்முடைய வளர்ச்சிக்கான முயற்சிகள் ஆமைவேகத்திலேயே ஊர்ந்தவண்ணம் இருந்தன. அந் தகைய தாமதப் போக்கைத் தவிர்த்து நம்முடைய வளர்ச் சியை மென்மேலும் முடுக்கிவிடு வதற்கு, நமக்குத் தேவையான கருவிகளை நாமே உற்பத்தி செய்து கொள்வதே உகந்த வழி என்று மைய அரசு எண்ணியது. அந்த உயரிய நோக்கத்துடன் தான் இந்த நிறுவனமும் உரு வாக்கப் பெற்றது.

வினா: 'டெலிபிரிண்டர்' என் பதைப் பொதுமக்களுக்குப் புரி யும்படியாக எவ்வாறு கூறலாம்?

விடை: சாமுவேல் மோர்ஸ் என்பவரின் கண்டுபிடிப்பை ஒட்டியே தந்தி அடிக்கும் முறை நம் நாட்டில் மேற்கொள்ளப் பட்டு வந்தது. அதன்படி, ஆங் கில எழுத்துக்களைப் புரிந்து கொள்ளும் வகையில் சில குறி யீட்டு ஒலிகளை மின்சக்தி கொண்ட ஒரு கட்டையில் விரல் களால் தட்டி எழுப்புவார்கள். ஒரு முனையில் தட்டி எழுப்பப் படும் அந்தக் குறியீட்டு ஒலிகளை (சிக்னல்களை) மறுமுனையில் உள்ள கட்டையின் அசைவுகளால் காது மூலம் கேட்டு அந்தக் குறியீட்டு ஒலிகள் இன்ன எழுத்துக்களைத் தான் குறிக்கும் என்பதை அதிலே பயிற்சி பெற்றவர்கள் புரிந்து கொண்டு எழுதிக் கொள்வார்கள். இதற்கு மனித மூளை மிகவும் நுணுக்கமாக வேலை செய்ய வேண்டியுள்ளது. அந்த வேலையை இன்று அச்சு யந் திரமே செய்கிறது. தட்டெழுத் துப் பொறியில் அதாவது 'டைப் ரைட்டரில்' எழுத்துக்களைத் தட்டி பதிய வைப்பது போலவே தந்தி யடிக்க வேண்டிய எழுத்துக் களின் ஒலிக்குறிகளை ஓர் அச்சுப் பொறியில் தட்டினுல் அந்த ஒலிக்குறிகளுக்குரிய எழுத்துக் களை மறுமுனையில் உள்ள ஓர் யந்திரம் அச்சடித்து வாங்கி விடு கிறது. இவ்வாறு, தந்தியடிக்க வேண்டிய செய்தியை மிக விரைவாக அச்சடித்துக் கொடுக் கின்ற 'மின்சார மெக்கானிகல் கருவியே' (Electro Mechanical Instrument) 'டெலிபிரிண்டர் ஆகும். சுருங்கச் சொன்னுல் மோர்ஸ் தந்தியின், வளர்ச்சி பெற்ற, அச்சுப்பொறியே 'டெலி பிரிண்டர்' ஆகும்.

வினா: 'டெலிபிரிண்டர்' வேலை செய்யும் விதம்- அதன் வகைகள் ஆகியவற்றைப் பற்றி விளக்கம் தரமுடியுமா?

விடை: முன்பு சொன்னதைப் போலத் தட்டெழுத்துப் பொறி யில் உள்ளவாறே 'டெலிபிரிண் டர்' அச்சுப் பொறியிலும் எழுத்துக் குமிழ்கள் (Keys) இருக்கின்றன. அவற்றை அழுத் தும் பொழுது அந்தந்த எழுத்து களுக்குரிய குறி-ஒலிகள் 'டெலி பிரிண்டரில்' செருகப்பட்டுள்ள துளையிடத்தக்க நாடாவில் பதி வாகின்றன. அவ்வாறு துளை யிடப்பட்ட நாடா (Perforated Tapes) பின்னர் செய்தி யனுப்பும் யந்திரம் ஒன்றில் செருகப்படுகிறது. மின்விசை மூலம் அங்கிருந்து விரைவான முறையில் சேர வேண்டிய முனை யில் ஒலிக்குறிகள் போய்ச் சேரு கின்றன. அவற்றையெல்லாம் தந்தி வாங்கும் இடத்தில் உள்ள இன்னோர் யந்திரம் அச்சு வடிவில் பதிவு செய்து கொண்டு விடு கின்றது. இந்த முறையை 'அச்சு தந்தி மூலம் நடக்கும் உரை யாடல்' (Conversation by Telegraph Printing) என்று கூடச் சொல்லலாம்.

''டெலிபிரிண்டர்' வேலை செய் வதில் நான்கு வகைகள் இருக் கின்றன. ஒன்று ஒருமுனையும், மறுமுனையும் மட்டுமே பேசக் கூடியதாகும். 'Point to Point Service' என இது அழைக்கப்படு கிறது. தொழிற்சாலையிலிருந்து நேரடியாக அலுவலகத்துக்குச் செய்தி அனுப்புவது ஓர் எடுத்துக் காட்டாகும். இரண்டாவது 'ஸ்விட்ச் போர்டு' மூலம் இணைப்பை ஏற்படுத்திச் செய்தி அனுப்புவதாகும்.

மூன்ருவது 'டெலக்ஸ் (Telex) முறையாகும்; 'டெலிபிரிண்டர் எக்சேஞ்சின் சுருக்கமான செய்தி வடிவமே 'டெலக்ஸ்' என்ப தாகும். தொலைபேசிக்கு எவ் வாறு இணைப்பகம் (Exchange) உண்டோ அவ்வாறே, 'டெலக்ஸ்' செய்தி அனுப்பும் முறைக்கும் டெலி பிரிண்டர் இணைப்பகம் (Teleprinter Exchange) உண்டு.

நான்காவதாக வெளிநாட்டுச் செய்திகளைக் கடல் கடந்து வாங் கவும் அனுப்பவும் கையாளப் படும் 'டெலக்ஸ்' செய்தி முறை யாகும்.

பொதுவாகத் தந்தி மூலம் செய்தி அனுப்புவதற்கு இரண்டு வடிவங்கள் உண்டு. ஒன்று தாள், மற்றது நாடா. இந்த நாடா வழித் தந்திச் செய்திக்கே 'டெலி பிரிண்டர்' கருவி வேலை செய் கிறது. இதிலும் செய்தி அனுப்பு தல்-செய்தி வாங்குதல் ஆகிய இருவேறு பணிகளும் மேற் கொள்ளப்படுகின்றன. 'அனுப்பி வாங்குதல் முறை' (Sent Receive Model) என இது அழைக்கப்படு கின்றது. 'சமாச்சார்' செய்தி நிறுவனம் செய்திகளை ''டெலி பிரிண்டர்' மூலம் அனுப்புகின் றது; 'இந்து', 'டைம்ஸ் ஆப் இந்தியா' முதலான நாளேடுகள் 'டெலி பிரிண்டர்' மூலம் செய்தி களை வாங்கிக் கொள்கின்றன.

வினா: இப்படி 'டெலிபிரிண்டர்' மூலம் செய்திகள் அனுப்புவதால் வேகத்தில் ஏதேனும் மாறுதல் இருக்கிறதா?

விடை: ஓ! தாராளமாக! மிக மிகக் குறுகிய காலத்தில் விரைவாகச் செய்தி எட்டிவிட வேண்டும் என்பதுதானே, 'டெலிபிரிண்டர்' கருவியைப் பயன்படுத்துவதன் நோக்கம்! சாதாரணமாக ஒரு நிமிடத்தில் 600 எழுத்துக்கள் வரை இந்த அச்சுத் தந்தி மூலம் செய்தி செல்கிறது. இதையே ஒரு நிமிடத்தில் 1,000 எழுத்துக்களை அச்சாகிச் செல்லுமாறும் மாற்றியமைக்கலாம். நிமிடத்திற்கு 600 எழுத்துக்கள் வேகத்தை 50-பாட்ஸ் (50-Bauds) என்றும், நிமிடத்திற்கு 1,000 எழுத்துக்கள் வேகத்தை 75-பாட்ஸ் (75-Bauds) என்றும் கூறுவது உண்டு. அகில உலக வேகமாக 50-பாட்ஸ் வேகந்தான் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் விமானப் போக்குவரத்து, கடல் கடந்த நாடுகளுக்கான செய்திப் போக்குவரத்து போன்ற சில தனிப்பட்ட துறைகளில் 75-பாட்ஸ் வேகம் பயன்படுத்தப்படுகிறது. பொதுவாக 50-பாட்ஸ் வேகமே போதுமானதாகும். ஒன்றைமட்டும் உள்ளத்தில் நன்ருகப் பதிவைத்துக் கொள்ள வேண்டும். செய்தியை அனுப்புவதற்கு எந்த வேக அளவு எடுத்துக் கொள்ளப்படுகிறதோ அதே வேக அளவுதான் செய்தியை வாங்குவதற்கும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

வினா: என்னென்ன மொழிகளின் வரி வடிவங்களில் 'டெலிபிரிண்டர்' மூலம் செய்திகள் அனுப்புவதற்குரிய வசதிகள் இப்போது இருக்கின்றன?

விடை: ஆங்கிலம் முதலான ஐரோப்பிய மொழிகளின் வரிவடிவமான இலத்தீன் வரிவடிவமே (Latin Script) தொடக்கத்திலிருந்து பயன்படுத்தப்பெற்று வருகிறது. இந்தி மொழிக்குரிய தேவநாகரி வரிவடிவமும் இப்போது பயன்படுத்தப்படுகிறது. அதனைத் தொடர்ந்து அராபிக் வரிவடிவமும், பெர்சியன் வரிவடிவமும் பயன்படுத்தப் பெற்று வருகின்றன.

வினா: தமிழ் வரிவடிவம் மூலம் 'டெலிபிரிண்டரில்' செய்தி அனுப்ப இயலுமா?

விடை: இப்போது அந்த வசதி இல்லை.

வினா: அதற்கு என்ன காரணம் என்று கூற முடியுமா?

விடை: தமிழ் வரிவடிவம் ஆனாலும் தேவநாகரி அல்லாத வேறு வரிவடிவம் ஆனாலும் புதிதாக அந்தந்த வரிவடிவங்களுக்கேற்ப 'டெலிபிரிண்டர்' கருவிகளை உருவாக்கும்பொழுது அவற்றுக்கான உற்பத்திச் செலவு மிகுதியாக ஆகக்கூடும். அத்தகைய செலவுகளை ஈடுகட்டத்தக்க அளவுக்குத் தமிழ் 'டெலிபிரிண்டர்'களுக்குக் கோரிக்கைகள் (Demands) வரவில்லை. அப்படி நாம் புதிதாக ஒரு வரிவடிவத்திற்கென்று 'டெலிபிரிண்டரை' உருவாக்கும் போது குறைந்தது 200-300 கருவிகளையாவது சேர்ந்தாற்போல் உற்பத்தி செய்ய வேண்டும். அதற்கு ஏறத்தாழ 35 முதல் 40 இலட்சம் ரூபாய் வரை செலவு செய்யநேரலாம். அதற்கு ஏற்றபடி 'டெலிபிரிண்டர்கள்' விற்பனை ஆகிவிடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், தமிழிலும் 'டெலிபிரிண்டர்கள்' கொண்டு வருவதில் தொல்லை ஏதும் இல்லை. சில ஆண்டுகளுக்கு முன்பு கருநாடக மொழியில் 'டெலிபிரிண்டர்கள்' தேவை என்கிற கோரிக்கை எழுப்பப்பட்டது. இப்போது நான் சொன்ன காரணங்களால் தான் அந்தக் கோரிக்கையையும் நிறைவேற்ற முடியாமல் போய் விட்டது.

வினா: இங்கே 'டெலிபிரிண்டர் மட்டுந்தான் உற்பத்தி ஆகின்றதா? அதனோடு இணைந்து வேறு சில கருவிகளும் உருவாக்கப்படுகின்றனவா?

விடை: 'டெலிபிரிண்டர்கள்' மட்டுமின்றி மின்சாரத் தட்டெழுத்துப் பொறிகள் (Electric & Typewriters) அஞ்சல் தலைகள், உறைகள், அட்டைகள் ஆகியவற்றின் மதிப்பை நீக்குவதற்காக அஞ்சல் நிலையங்களில் பயன்படுத்தப் பெறும் முத்திரை குத்தும் கருவிகள் (Stamp Cacelling Machines) தொலைபேசி இணைப்பகத்தில் பயனாகும் மின்னாற்றல் யந்திரங்கள், 'கம்ப்யூட்டருக்குத்' தேவையான கருவிகள் ஆகியவையும் இங்கே செய்யப்படுகின்றன. இவற்றுள் 'எலெக்ட்ரிக் டைப்ரைட்டர்கள்' முதன் முதலில் இந்தியாவில் மட்டுமே, இங்குள்ள வல்லுநர்களின் தொழில் நுட்பத் திறமையால் மட்டுமே உருவாக்கப்பட்டு வருகின்றன.

வினா: இவ்வளவு சிறப்புக்குரிய இந்தியாவில் மட்டுமே செய்யப்படுகின்ற இந்த 'எலெக்ட்ரிக் டைப்ரைட்டர்' முதன் முதலில் எப்போது உற்பத்தி ஆயிற்று என்று கூறமுடியுமா?

விடை: 1975 மே-மாதத்தில் அது கொண்டு வரப்பட்டது. முதல் 'எலெக்ட்ரிக் டைப்ரைட்டரை' அந்த ஆண்டு மே மாதம் ஒன்பதாம் நாள் நம்முடைய இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களிடமே அளித்தோம்.

வினா: மிகவும் பெருமிதப்படக் கூடிய நிகழ்ச்சிதான் அது. பொதுவாக, இந்த 'இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ்' நிறுவனத்தில் உற்பத்தியாகும் கருவிகளினால் என்னென்ன தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன என்று கூற முடியுமா?

விடை: அஞ்சல்-தந்தித் துறைக்குத் தேவையான அச்சுத் தந்தி



மற்றும் ''டெலக்ஸ்'' கருவிகள் அத்தனையும் எங்கள் நிறுவனத்தின் மூலமே வழங்கப்படுகின்றன. பாதுகாப்புத் துறைகளுக்குத் தேவையான 'டெலிபிரிண்டர்' கருவிகளையும் நாங்களே வழங்குகிறோம். விமானப் போக்குவரத்துத் துறை, காவல் துறை, இரயில்வே துறை, ஓவர்சீஸ் கம்யூனிகேஷன்ஸ் துறை, பருவநிலை ஆராய்ச்சித் துறை முதலான அரசுத்துறைகள் பலவற்றுக்கும் இங்கு உற்பத்தியாகும் 'டெலிபிரிண்டர்' பயன்படுகின்றது. தனியார்களின் வணிக நிலையங்களும், தொழிற்சாலைகளும் இங்கிருந்துதான் அவற்றைப் பெறுகின்றன. 'நியூஸ் ஏஜன்சீஸ்' என அழைக்கப் பெறும் செய்தி நிறுவனங்கள், செய்தி ஏடுகள் ஆகியவையும் இங்கு உருவாகும் கருவிகளையே வாங்கிக் கொள்கின்றன.

வினா: இங்கிருந்து வெளிநாடுகளுக்கும் 'டெலிபிரிண்டர்' கருவிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா?

விடை: நிறைய ஏற்றுமதி ஆகின்றன. வெளிநாடுகளில் குவையத் நாடு (KUWAIT) நம்முடைய டெலிபிரிண்டர்களை' ஏராளமாக வாங்கிக் கொள்கிறது. உலகில் அந்த நாட்டின் தூதுவர் அலுவலகங்கள் எங்கெங்கே உள்ளனவோ அங்கெல்லாம்கூட 'இந்துஸ்தான் டெலிபிரிண்டர்களே' பயன்படுத்தப்படுகின்றன. எண்ணெய் வளம் மிகுந்த அந்த நாட்டுக்கு மட்டுமின்றி இங்கிலாந்து, பெல்ஜியம், கொரியா, சிங்கப்பூர், தாய்லாந்து, லெபனான், ஜோர்டான், மொரீஷியஸ், ஈராக் முதலிய நாடுகளுக்கும் நமது 'டெலிபிரிண்டர்'கள் ஏற்றுமதி ஆகின்றன. அண்மையில்கூட எங்கள் நிறுவனத்தின் நிருவாகக் குழுத் தலைவரும் மேலாண்மை இயக்குநருமான திரு. ஜி.யு. மேனன் அவர்கள் ஆப்கானிஸ்தானம் சென்று அந்நாட்டிற்குத் தேவையான 'டெலிபிரிண்டர்' கருவிகளை வழங்குவதற்கு அந்நாட்டு அரசுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டு திரும்பியுள்ளார். இன்னொரு குறிப்பிடத்தக்க தகவல் ஒன்றையும் நான் கூற விரும்புகிறேன். 1968-69-இல் தான், ஏற்றுமதிச் சந்தையில் (EXPORT MARKET) இந்த நிறுவனம் அடியெடுத்து வைத்தது, ஸ்ரீலங்கா, நாட்டின் தலைநகரான கொழும்புவில் உள்ள 'கட்டுநாயகே' (KATUNAYAKE) அகில உலக விமான நிலையங்களுள் ஒன்றாகும். அங்கே 'டெலிபிரிண்டர்-தகவல்

ஏற்பாட்டை' அமைத்துக் கொடுத்து அதற்குத் தேவையானக் கருவிகள் அனைத்தையும் 2.38 இலட்சம் ரூபாய் மதிப்பளவுக்கு வழங்கிய பெருமை முழுக்க முழுக்க இந்த 'இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ்' நிறுவனத்தையே சாரும். இதுவரை வெளிநாடுகளுக்கு ஏறத்தாழ அறுபது இலட்சம் ரூபாய் அளவுக்குக் கருவிகளை இங்கிருந்து நாம் ஏற்றுமதி செய்திருக்கிறோம்.

வினா: உள்நாட்டில் இதன் விற்பனை நிலவரம் பற்றிக் கூற முடியுமா?

விடை: நான் முன்பே குறிப்பிட்டதைப் போல அரசின் பல்வேறு துறைகளும், தனியார் துறைகளும் இங்குத் தயாராகும் 'டெலிபிரிண்டர்களையும்' அவற்றோடு இணைந்த 'டெலக்ஸ்' முதலான கருவிகளையும் பெருமளவில் பயன்படுத்துகின்றன. நாளுக்கு நாள் கருவிகளின் உற்பத்தி வேகத்தைப் போலவே, விற்பனை வேகமும் வளர்ந்த வண்ணம் இருக்கிறது. கடந்த 1974-75-ஆம் ஆண்டில் மட்டும் இதன் நிகர இலாபம் 59.45 இலட்சம் ரூபாய் ஆகும். இதில் வருமான வரியாக மட்டும் 30 இலட்சம் ரூபாய் செலுத்தியிருக்கிறோம். ஏன், இந்த நிறுவனம் தொடங்கியதிலிருந்து இன்றுவரை வருமான வரியாக மட்டும், 566.96 இலட்சம் ரூபாய் கட்டப்பட்டிருக்கிறது!

வினா: இதுகாறும் இங்கே உற்பத்தியாகியுள்ள கருவிகள் மொத்தமாக எத்தனை இருக்கலாம்?

விடை: 50,000 (ஐம்பதாயிரம்) யூனிட்டுகளுக்கு மேல் இருக்கலாம்.

வினா: எத்தனை பேர் இங்கே வேலை செய்கிறார்கள்?

விடை: ஊழியர்கள் 1,500 பேர், அதிகாரிகள் 99 பேர்.

வினா: இதனுடைய நிருவாக அமைப்பு முறை எப்படி உள்ளது?

விடை: மைய அரசு நிறுவனமான இதன் நிருவாகத்தை இயக்குநர்கள் குழு ஒன்று (BOARD OF DIRECTORS) கவனித்துக் கொள்கிறது.

வினா: நம்முடைய இந்தியத் தலைமையமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்களின் 20-அம்சத் திட்டத்தின் ஏற்றத்துக்கு இந்த நிறுவனம் எந்த வகையில் துணைநிற்கிறது என்பதைக் கூற முடியுமா?

விடை: நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டும் என்பது 20-அம்சத் திட்டத்தின் இன்றியமையாத இலட்சியங்களில் ஒன்றாகும்; அது இனிது நிறைவேறும் வகையில் உற்பத்தியைப் பெருக்குவதில் முனைந்து ஈடுபட்டுள்ளது இந்த 'இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனம். ஏராளமான டெலிபிரிண்டர் கருவிகளை உற்பத்தி செய்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குக் கணிசமான அளவில் தன் பங்கினை இது செலுத்துகிறது. அந்நியச் செலாவணி ஆக்கம் பெறவும் இது துணை நிற்கிறது. அஞ்சல்-தந்திப் போக்குவரத்துத் துறையும் பாதுகாப்பு முதலான பிற அரசுத் துறைகளும் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் வகையிலும் இது உதவி புரிகிறது. அத்துடன் விலைவாசியைக் குறைக்க வேண்டும் என்ற 20-அம்சத் திட்டத்தின் முதல் முழக்கத்திற்கு ஏற்ப 'டெலிபிரிண்டர்' விலையையும் கணிசமாகக் குறைத்திருக்கிறோம். மற்றப் பொருள்களின் விலைகள் எல்லாம் மிகவும் உயர்ந்திருந்த போதே ஒரு 'டெலிபிரிண்டர் யூனிட்டின்' விலை ரூ. 7,000 ஆக இருந்ததை 20 சதவிகிதம் குறைத்துக் கொடுக்கவும் துணிந்தோம். இன்னும் எத்தனை எத்தனையோ புதுமைகளையெல்லாம் இந்த நிறுவனத்தின் கருவிகளில் இணைப்பதற்கு முயற்சிகள் பல எடுத்து வருகிறோம். இப்போது கூட 'ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவு' (RESEARCH AND DEVELOPMENT SECTION) ஒன்று இயங்குவதற்காகச் சில அடுக்குகள் கொண்ட மாடிக் கட்டடம் ஒன்றை எழுப்பி வருகிறோம்.

—அ. வேதாசலம்

"நிருவாகத்தில் தொழிலாளர்கள் பங்கு கொள்வது, நிருவாகத்திலுள்ள பிரச்சினைகளைத் தொழிற்சாலை மட்டத்தில் எளிதில் அறிந்து கொள்ள உதவும், அதன் மூலம், கொள்கை முடிவுகள் விரைந்து எடுக்கப்படுவதுடன் அவற்றைத் தொழிலாளர்களின் ஊக்கமிக்க ஒத்துழைப்புடனும், விருப்பத்துடனும் விரைவாக நிறைவேற்றவும் இயலுகிறது.

"பொதுவாகத் தொழிற்சாலையிலும், குறிப்பாக உற்பத்தி மட்டத்திலும் ஆலை மட்டத்திலும் தொழிலாளர்கள் பங்கு பெறுவது, ஒரு குறிப்பிடத்தக்க, தரமான மாற்றத்தைக் கொண்டு வரும்; அதைத்தான் நாம் இப்போது உற்பத்தி முறை நிருவாகம் என்கிறோம். தொழிலாள வர்க்கத்தினருக்கும், நிருவாகத்தினர்களுக்கும் நமது ஜனநாயகக் கொள்கையை அர்த்தமுள்ளதாகவும், உபயோகமானதாகவும் செய்வதற்கு அது ஒன்றே வழியாகும்.

"நிருவாகத்தில் தொழிலாளர்களின் பங்கு பெறுவது, உற்பத்தி முறையில் அவர்கள் பங்கு கொள்வதற்கான முதல்படியாகும். ஏற்கெனவே கணிசமாகக் கவனத்தை ஈர்த்துள்ள இரண்டாவது படி, தொழிற்சாலை அல்லது நிறுவனத்தின் சொந்த உரிமையில் தொழிலாளர்களின் பங்காகும். தொழிலாளர்களுக்கும், நிருவாகத்துக்கும் இடையே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, ஒத்துப் போகும் நல்லெண்ணம் இருக்குமேயானால், எந்தத் தொழில் நுட்பப் பிரச்சினைகளையும் வென்று விடலாம்.

"இந்தப் புரட்சிகரமான ஜனநாயகக் கொள்கையின் சமுதாய, வரலாற்று முக்கியத்துவத்தை நமது தொழிலாள நண்பர்களும், நிருவாக நண்பர்களும் உணர்ந்து, அதை நடைமுறையில் வெற்றிகரமாகச் செயல்படுத்தத் தங்களின் முழு மனதுடன் கூடிய ஒத்துழைப்பைத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்."

(சென்னை நிருவாகக் கழகமும், இந்திய ஊழியர் நிருவாகக் கழகமும் கூட்டாக ஏற்பாடு செய்திருந்த "தொழிற்சாலை மட்டத்திலும் உற்பத்தித் திட்டத்திலும் தொழிலாளர்களின் பங்கு" என்ற கருத்தரங்கை 22—3—1976 அன்று துவக்கிவைத்து ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் ஆற்றிய உரை....)



தமிழ்நாட்டில் 166 தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு நிருவாகத்தில் பங்கு அளிக்கப் பட்டுள்ளது.

பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின் ஓர் அம்சமான தொழிலாளர்களுக்கு நிருவாகத்தில் பங்கு கொடுக்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் 500 தொழிலாளர்களுக்கு மேல் உள்ள தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு நிருவாகத்தில் பங்கு அளிக்கும் முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 166 நிறுவனங்களில் 468 பகுதிவாரி கவுன்சில்களும், 166 கூட்டுக் கவுன்சில்களும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

கோவை மாவட்டத்தில் 45 பஞ்சாலைகளில் இக்கவுன்சில்கள் அமைக்கப்பட்டுள்ளன. தொழிற்சாலை நிருவாகத்தில் தொழிலாளர்கள் முழுப்பொறுப்பு ஏற்கும் முறையின் முதல் படியாகவே இத்திட்டம் அமல்படுத்தப்படுகிறது.

நிருவாகத்தில் தொழிலாளர்கள் இன்னும் சிறந்த முறையில் பங்கு கொள்வதற்காக டி.வி.எஸ். குரூப் கம்பெனிகளில் பட்டறை கவுன்சில்களும், கூட்டுக் கவுன்சில்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

பிரதமரின் பொருளாதாரத் திட்டத்துக்கு ஏற்ப டி. வி. எஸ். குரூப்பில் ஒவ்வொரு தொழிலாளியும் உற்பத்தியைப் பெருக்குவதற்கான நடைமுறைகள் வகுக்கப் பட்டிருக்கின்றன.

டி.வி.எஸ். குரூப் கம்பெனிகளில் வேலைவாய்ப்புக் கூடுதலாக்கப்பட்டிருக்கிறது. பயிற்சியாளருக்கு, குறிப்பாகப் பிற்பட்ட நிலையில் உள்ளவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் இருக்கிறது. நாட்டில் செயலாகிவரும் பல்வேறு திட்டங்கள் குறித்துத் தொழிலாளர் கல்வித் திட்டம் அளிக்கப்படுகிறது. குடும்பக் கட்டுப்பாட்டில் சிறந்த விருதை இந்த நிறுவனம் பெறத் தொழிலாளர்கள் ஒத்துழைத்திருக்கிறார்கள். கான்டீனில் சாப்பாட்டுக் கட்டணம் குறைக்கப் பட்டுள்ளது. இலாப நோக்கு இல்லாமல், டி. வி. எஸ். குரூப் கூட்டுறவுக் கடைகளில் பண்டங்கள் விநியோகிக்கப் படுகின்றன.

வள்ளுவர் கோட்டம் காணவாரீர்!



உலகப் பொது மறையாம் திருக்குறள் தந்த தெய்வப் புலவர் திருவள்ளுவருக்குத் தகுந்த நினைவுச் சின்னம் சென்னையில் அமைக்கவும் "அனைத்துலகத் திருக்குறள் ஆராய்ச்சி நிலையம்" உருவாக்கவும், தமிழ்நாடு அரசு முடிவெடுத்தது.

நினைவகம் அமைத்திட ஆய்வும் இடத்தேர்வும்:

சென்னை மயிலாப்பூரில் ஏற்கெனவே திருவள்ளுவருக்கெனப் பண்டைச் சிறு கோயில் ஒன்று உள்ளது. இக்கோயிலின் அருகிலேயே நினைவகம் அமைத்திடும் சாத்தியக் கூறு பரிசீலிக்கப்பட்டது. மயிலாப்பூர் திருவள்ளுவர் கோயில், நெருக்கமாக வீடுகள் அமைந்த பகுதியில் உள்ளது. பெருமளவில் சென்னைக்கு வரும் உல்லாசப் பயணிகளைக் கவரத் தக்க வகையில் இந்த நினைவகம் அமைத்திடப் போதுமான இடம் இங்கு இல்லை. எனவே "நுங்கம்பாக்கம் ஏரிக்கரைப் பகுதி" என வழங்கும் இடத்தில், 5 ஏக்கர் பரப்பளவில் வள்ளுவர் கோட்டம் அமைப்பதென இறுதியாக முடிவெடுக்கப்பட்டது.

அடித்தளம் அமைத்தலில் உறுதிப்பாடும் சிக்கன முறைமையும் :

நினைவுச் சின்னம் அமைக்குமிடத்தில் மண்ணின் தன்மையை ஆராய நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் இரண்டு இடங்களில் பூமியில் 18 முதல் 20 மீட்டர் ஆழம் துளைகள் போட்டு விரிவான சோதனை மேற்கொண்டது.

நினைவகக் கட்டிடம் மிக உயரமாகவும் மேல் தளம் அதிக பளுவுள்ளதாகவும் அமைக்க வேண்டி, அடித்தளம் மிக மிக உறுதி வாய்ந்ததாக இருத்தல் அவசியமெனக் கருதப்பட்டது. மண்ணின், எடை தாங்குமளவு, மிகக் குறைந்து காணப்பட்டதால் "இந்தியத்தொழில் நுட்பக் கல்விக் கழகத்தில்" (I. I. T.) நடத்திய கருத்தரங்கின் முடிவுக்கேற்ப, பூமியில் துளையிட்டு 'நிலத்தடித் தூண் அடித்தளம்' (Pile-foundation) அமைப்பதே சிறந்த முறையெனக் கருதி, மேற்கொள்ளப்பட்டது. இம்முறையில், ஒவ்வொரு தூணும் 80 டன் எடை தாங்கும் வண்ணம் 45 செ.மீ. விட்டமும், 15 மீட்டர் நீளமும் கொண்ட ஆழ்துளைகள் நிலத்தில் இட்டு, இரும்புக் கம்பி கொண்ட காங்கிரீட் தூண்களைத் துளையிலேயே வார்த்து அடித்தளம் அமைக்கப்பட்டது. தரைத் தளம் போன்ற பளுத் தாக்கல் குறைவான இடங்களில் கூட 25 செ.மீ. விட்டமும், 3.5 மீட்டர் நீளமும் கொண்ட, அடி விரிந்த ஆழம் குறைந்த நிலத்தடித் தூண்கள் வார்க்கப்பட்டன. இதற்குப் பின், முழுப்பளுவையும் இம்முறையில் அமைக்கப்பட்ட அடித்தளம் தாங்குமா எனச் சோதிக்கப்பட்டு மேற்கட்டுமானப் பணி தொடங்கப்பட்டது.

வடிவமைப்பின் சிறப்பியல்புகள் :

நினைவாலயத்தின் முக்கிய பகுதிகள் பின்வருமாறு :

(1) தோரண நுழை வாயில்.

(2) அரங்க மண்டபம்.

(அ) கூடமும் அரங்கும்.

(ஆ) குறள் மணி மாடம்.

(இ) மாடித் தோட்டம்.

(ஈ) ஆராய்ச்சி நிலையம்.

(3) வள்ளுவர் சிலை கொண்ட கருங்கல் தேர்.

(1) தோரண நுழை வாயில் :

சுற்றிலும் மதில் சுவர் கொண்ட கோட்டத்திற்கு மூன்று பக்கங்களில் நுழை வாயில்கள் உள்ளன. முக்கிய வாயில் கோடம்பாக்கம் நெடுஞ்சாலைப் புறத்தே அமைந்து, காங்கிரீட்டினாலான நான்கு தூண்கள் நல்கும் மூன்று வழி வாயிலும், மேல்தளம் செல்லப் படிக்கட்டுகளும், சுதை வேலை விமானமும்கொண்டு கம்பீரமாகத் தோற்றமளிக்கிறது. நுழை வாயிலிலிருந்து படிக்கட்டு மூலம் இறங்கிப் பசும் புல் தரைத் தோட்ட மூலம் நடந்து அரங்க மண்டப முகப்பை அடையலாம்.

(2) அரங்க மண்டபம் :

இது 220 அடி X 100 அடி (67 மீ X 30.5 மீ.) அளவுள்ள ஒரு கூடமும், அரங்க மேடையும், இரு மருங்கிலும் 20 அடி (6.10 மீ) அகலமுள்ள சுற்றுத் தாழ்வாரமும் கொண்டது. தாழ்வாரத்தில் சுதை வேலை அழகு செய்யும் பிராகாரத் தூண்கள் எழுப்பி, மையப் பகுதியில் தூண்களின்றிப் பிணைக்கப்பட்ட உத்தரங்கள் மேல் 8 அடி சதுரமும் 5 அடி உயரமும் கொண்ட பல பெட்டிகள் கவிழ்த்தது போல் மேல் தளம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வரங்க மண்டபம் நவீன தொழில் நுட்ப உத்திகளைக் கையாண்டு சிக்கன முறையில் எழில் மிளிர அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 4,000 பேர் கூடிக் கேட்கும் வசதியுள்ள இவ்வரங்கம் சென்னையில் மட்டுமின்றித் தென் ஆசியாவிலேயே சிறப்பு மிக்கதோர் கூடமாகத் திகழும். அரங்க மேடையை வள்ளுவரின் உருவப்படத்துடன் கடைச் சங்க காலத்திற்கு முற்பட்ட இரு பெரும் புலவர்களான அதங்கோட்டாசான், தொல்காப்பியர் உருவப் படங்களும் அலங்கரிக்கின்றன. இந்திய தொழில் நுட்பக் கல்விக் கழகத்தில் உள்ள கம்ப்யூட்டர்கள் என்னும் ''கணிப்பான்கள்'' மூலம் இக்கட்டிட அமைப்பின் வலுவின் கணக்கீடுகள் சரிபார்க்கப்பட்டன. தாழ்வாரங்களுக்கு மேல் அமைக்கப்பட்டுள்ளதோர் இடைத் தள மாடத்தில் (Attic Floor) அறம் பொருள் இன்பம் என்னும மூன்று பால்களாகப் பகுக்கப்பட்டு உள்ள 1,330 அருங்குறள்களும் மூன்று வெவ்வேறு வண்ணக் கற்களாலான 133 கருங்கற் பலகைகளில் பொறிக்கப்பெற்று 67 தூண்களில் திறந்த புத்தக வடிவில் பொருத்தி வைக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இத்தூண்களின் மறுபக்கங்களில் திருக்குறள் மொழி பெயர்ப்புப் பலகைகள், வேண்டிய மொழிகளில் பொருத்தி வைக்க இயலும்.

அரங்க மண்டப முகப்பில் அழகு மிளிர ''மகா நாசி'' எனச் சிற்பிகள் அழைக்கும் வளைவுக் குகை மூலம் அரங்கக் கூடத்தை அடையலாம். மண்டபத்தின் மேல் தளத்தில் 60 அடி X 60 அடி சதுர இரண்டு நீர்த் தொட்டிகளும் நடைபாதைகளும் கொண்ட மாடித் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. மகா நாசி வளைவின் இருமருங்கிலும் குறள் மணி மாட இடைத் தளத்திற்கும் மாடிப் பூங்கா மேல் தளத்திற்கும் செல்லப் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. குறள் மணி மாடப் படிக்கட்டுகளின் மருங்குகளில் பறவை இறக்கைகள் போன்ற அலங்கார வேலைப்பாடுடைய கைப்பிடிச் சுவர் எழுப்பப்பட்டுள்ளது.



கருங்கல் தேரில் அமைந்துள்ள குறள் விளக்கச் சிற்பங்களில் ஒன்று

அரங்க மண்டபத்தின் அடியில், தேர் முகப்புக்கெதிரில், திருக்குறள் ஆராய்ச்சி நிலையம் 10 அடி X 35 அடி என்ற அளவில் அமைக்கப்பட்டுள்ளது. இதில், உலகின் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட திருக்குறள் சுவடிகளும் உரை நூல்களும் ஆராய்ச்சிக்காகச் சேகரித்து வைக்க வகை செய்யலாம்.

கருங்கல் தேர் :

வள்ளுவர் கோட்டத்தின் சிறப்பு அம்சமே 101 அடி உயரமும் 30 அடி அகலமும் எட்டுப் பட்டைத் தளமும் கொண்டு திருவாரூர்த் தேரினை மாதிரியாகக் கொண்டமைந்த கருங்கல் தேராகும். காங்கிரீட் தூண்களும் குறுக்கு நெடுக்கு உத்தரங்களாலான கட்டுக் கோப்பும் உடைய இத் தேர், வேலைப்பாடுடைய கருங்கற்களால் சுற்றிலும்மூடப்பட்டுள்ளது. தேரின் நடுவில் கருங்கல்லாலான கர்ப்பக் கிரஹம் போன்ற அமைப்பில் 6' 3" உயர வள்ளுவரின் உருவச் சிலை, வீற்றிருந்த திருக்கோலத்தில் வைக்கப்பட்டுள்ளது. தேரின் கூடு 45 அடி அகலத்திற்குக் காங்கிரீட்டால் செய்யப்பெற்றும் சுதை வேலையால் அழகுபடுத்தப்பட்டுள்ளது. தேரின் விமானத்தின் மேல் 5 அடி உயரத்திற்கு வழவழப்பாக்கித் தேய்த்துப் பளபளக்கும் கரும்பச்சைக் கல்லாலான கலசம் வைக்கப்பட்டுள்ளது. கருவறைத் தூண்களில் சிம்மங்கள், குதிரைகள் போன்ற சிற்ப வேலைப்பாட்டுக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. தேரின் அடித்தளம் மூன்று நிலைகளாக அமைக்கப்பட்டுத் திருக்குறளின் ஒவ்வொரு அதிகாரத்திலிருந்தும் ஒரு குறளின் கருத்தினை ஓவியமாக விளக்கும் புடைப்புச் சிற்ப (Relief) வேலைப்பாடுடைய 133 கருங்கற் பலகைகள் பதிக்கப்பட்டுள்ளன. உத்தமத் தேரின் இலக்கணப்படி 11 அடி விட்டமும், 15 டன் எடையும் கொண்டு ஒரே கல்லாலான பெருஞ் சக்கரங்கள் நான்கும் 5 அடி விட்டம் கொண்ட சிறு சக்கரங்கள் நான்கும் பூட்டப்பட்டுள்ளன. முன்புறத்தில் தேரை நடாத்திச் செல்வது போல் ஒரே கருங்கல்லாலான கல் யானை வடிவங்கள் செதுக்கி வைக்கப்பட்டுள்ளன. தேரைச் சுற்றிப் பிம்பம் பிரதிபலிக்குமாறு வழவழப்பான கறுவண்ணக் கற்கள் பதித்து வானத்தில் மேகங்கள் அசையும் போது தேர் நகருவது போன்ற பிரமையை அளிக்கும்.

எட்டு டன் எடையுள்ள வள்ளுவர் சிலை 2.25 அடி உயரங் கருங்கல் பீடத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ளது. கருவறையில் உள்ளும் புறமும் பளபளப்பான கற்கள் பதிக்கப்பட்டு வெளியில் தேர்த்தள ஓரத்தில் கருங்கற் கைப்பிடிச் சுவர் பொருத்தப்பட்டுள்ளது. கருவறையின் சித்திர வேலைப்பாடமைந்த மணிக் கதவம் மரத்தாலமைக்கப்பட்டுள்ளது. அரங்க மண்டப மேல் தளத்திலிருந்து தேருக்குச் செல்ல ஓர் இடைகழியும் அன்னங்களின் அமைபிலான படிக்கட்டும் அமைக்கப்பட்டுள்ளன. மாடித் தளத்தில் உள்ள இரு பெரு நீர்த் தொட்டிகளிலும் இடைகழியிலுள்ள சிறிய நீர்த் தொட்டியிலும் முறையே தேரின் முழு வடிவமும் வள்ளுவர் சிலையின் உருவமும் பிரதிபலிக்கின்றன.

கருங்கல் வேலைகளுக்காகத் தேர்ந்த கற்கள் தமிழ்நாட்டிலேயே சிற்ப வேலைச் சிறப்பு நயத்திற்கேற்ற கற்கள் நல்கும் திருவண்ணாமலைக் கற் சுரங்கத்திலிருந்தும் கறுப்பு வைரமென மின்னும் தேரின் கலசம் ''வைரத் குன்று'' என்னுமிடத்திலிருந்தும் அகழ்ந்து எடுக்கப்பட்டுக் கொண்டு வரப்பட்டன. வெடி வைத்து வெந்த கற்கள் சிற்ப வேலைக்கு ஆகா என்பதால் அனைத்துக் கற்களும் உளி

கொண்டே வெட்டி எடுத்து, ஒப்பந்தக்காரர் பொறுப்பிலன்றி அரசுத் துறையின் பொறுப்பிலேயே கொண்டு வரப்பட்டன. சிறிதும் பெரிதுமாய் வெட்டி எடுக்கப்பட்ட கற்களின் எண்ணிக்கை மொத்தம் 3,000. இவற்றில் சில கற்கள் 40 டன் வரை எடை கொண்டவை.

வள்ளுவர் சிலை, குறளோவியப் பலகைகள் மற்ற கருங்கல் சிற்ப வேலைகள், சுதை வேலைகள் திரு. கணபதி ஸ்தபதி, திரு எஸ். கே. ஆச்சார் ஸ்தபதி, திரு ஜானகி ரமண ஸ்தபதி ஆகியோர் யோசனைப்படி தமிழகத்தின் தலை சிறந்த சுமார் 1,000 சிற்பக் கலைஞர்களின் கைவண்ணமாக, சிற்ப சாஸ்திர முறைப்படி அரசுத் துறையினரின் நேரிடையான பொறுப்பில் மேற்கொள்ளப்பட்டன. இது மட்டுமின்றி தொழில் நுட்பக் கலைஞரல்லாத ஏனைக் கட்டுமானத் தொழிலாளர் ஐந்நூற்றுவர்க்கு இத்திட்டம் வேலை வாய்ப்பளித்தது.

கட்டிட நிலத்தடித் தூண் அடித்தள வேலை ''சிம்ப்ளெக்ஸ்'' நிறுவனத்தாரால் செய்து தரப்பட்டது. காங்கிரீட் கட்டுமான வேலைகள் E. C. C. I. நிறுவனம் என்ற ஒப்பந்தக்காரர்களால் செய்து முடிக்கப்பட்டன. .ஒலி, ஒளி அமைப்புகள் பிலிப்ஸ் நிறுவனத்தாராலும், சாந்தி மின்சார நிறுவனத்தாராலும் தோட்ட அமைப்பு திரு இந்திரா சென் எனும் தோட்டக் கலை நிபுணராலும் மேற்கொள்ளப்பட்டன. டான்ஸி அரசு நிறுவனத்தார், நிலைகள், அமரும் பலகைகள் போன்ற மர வேலைகளை மேற்கொண்டனர். மதில் சுவர் வேலைகளை திரு பரமேசுவர ராவ், ஒப்பந்தக்காரர் செய்து முடித்தார்.

தமிழகத்தில் பண்டைச் சிற்பக் கலைச் சிறப்புகளும் இன்றைய நவீன கட்டுமான உத்திகளும் ஒருங்கிணைந்த இம்மாபெரும் கலைப் படைப்பு வெளிநாட்டு, உள் நாட்டு உல்லாசப் பயணிகளைப் பெருமளவில் ஈர்க்கும் வண்ணம் நமது நாட்டில் தலைசிறந்த காட்சியிடங்களில் ஒன்ருக விளங்குமென்பதில் ஐயமில்லை.

வள்ளுவர் கோட்டம் சுற்றுலா பயணிகளின் உள்ளங்கவரும் நல்லிடமாக விளங்குவதுடன், இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல் இந்த தலைமுறையினருக்கு மட்டுமல்லாமல், இனிவரும் தலைமுறையினருக்கும் கலங்கரை விளக்கமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, வள்ளுவர் கோட்டம் காண வாரீர்! வாரீர்! என்று அழைக்கின்ருேம்.



தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் "சிறுமலர்கள் சேமிப்பு திட்டம்." மாணவர்களும், சிறு வியாபாரிகளும் எளிதாக சேமிக்க, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் ஒரு புதிய திட்டம்.

உங்கள் சக்திக்கு ஏற்ப, சிரமமின்றி சேமிப்பது நலம். எங்கள் "சிறு மலர்கள் சேமிப்பு திட்டம்" அதற்கு உதவுகிறது. உண்டியல் சேமிப்பு திட்டத்தின் மூலம் மாணவர்களும், சிறு வியாபாரிகளும் தங்கள் சேமிப்பை எங்கள் தலைமை அலுவலகம் அல்லது சென்னையில் உள்ள 23 கிளைகளில் சேமிப்பு கணக்கில் முதலீடு செய்யலாம்.

ரூ. 5/- செலுத்தி புதிய சேமிப்பு கணக்கு ஆரம்பிக்கும் ஒவ்வொரு நபருக்கும் அழகான ஒரு உண்டியல் வழங்கப்படும்.

TNSC BANK

உண்டியலில் அவ்வப்பொழுது சேரும் சில்லறை காசுகளை சேர்த்து மாதம் ஒரு முறையாகிலும் அல்லது உண்டியல் நிறைந்தவுடனும் எங்கள் வங்கியில் செலுத்தி உங்கள் சேமிப்பு கணக்கில் வரவுவைத்துக் கொள்ளலாம்.

உங்கள் சேமிப்பு கணக்கில் உள்ள முதலீட்டின் பேரில் 5.75% வட்டி வழங்கப்படுகிறது. மேலும் உங்கள் சேமிப்பு கணக்கில் உள்ள பணத்தை லாபகரமாக முதலீடு செய்ய வழிவகைகளை எங்கள் கிளை மேனேஜர் தெரிவிப்பார். இத் திட்டத்தின் மூலம் சிறுக சேர்த்து உங்கள் எதிர்கால தேவைக்கு முதலீடு செய்யுங்கள்.

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

379, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலை, சென்னை-600001.

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி உங்கள் சேமிப்பை அதிகரிக்கவும், நாட்டின் விவசாய மற்றும் பொருளாதார வளர்ச்சிகளுக்கும் உதவுகிறது.

திசை பல கண்ட திருக்குறள்

ஜெய்....

* திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் ஜி.யு. போப்.

* திருக்குறளை இலத்தீனில் மொழி பெயர்த்தவர் இதாலி நாட்டுக்காரரான வீரமாமுனிவர்.

* ஜெர்மானிய மொழியில் மொழி பெயர்த்தவர் கிரௌல் ஆவார்.

* பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்தவர் எரியல் ஆவார்.

* திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த தமிழ்நாட்டவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் திரு.வ. வே. சு. அய்யர், திரு. ராஜாஜி, திரு. சுத்தானந்த பாரதியார், திரு. கே. எம். பாலசுப்ரமணியம் ஆவர்.

* பழங்காலத்தில் திருக்குறளுக்கு உரை எழுதியவர்கள் பத்துப்பேர் ஆவர். அவர்கள் தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், பரிப்பெருமாள், திருமலையர், மல்லர், கலிப்பெருமாள், காளிங்கர் ஆகியோர்.

* அண்மைக் காலத்தில் உரை எழுதியவர்களில், டாக்டர் மு. வரதராசன், நாமக்கல் கவிஞர், புலவர் குழந்தை, மயிலை சிவமுத்து, கா. சுப்ரமணிய பிள்ளை, டாக்டர் வ.சு.ப. மாணிக்கம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்.

* 1948-ஆம் ஆண்டில், தமிழக உயர்நிலைப் பள்ளிகளில் நீதி வகுப்பில் (Moral Period) நூறு திருக்குறள் கட்டாயமாகக் கற்றுத்தரப்படும் திட்டம் செயலுக்கு வந்தது.

* கி. பி. 1969-ஆம் ஆண்டினைத் தமிழகம் வள்ளுவர் ஈராயிரம் ஆண்டாகக் கொண்டாடியது.

* மதுரை மாவட்டத்தைச் சார்ந்த கோம்பை என்னும் ஊரில் அமைக்கப்பெற்றிருந்த ஒரு தமிழ் மன்றம், வீடுகளிலும்-கடைகளிலும் இடம் பெறும் வகையில் திருக்குறள் அச்சிடப் பெற்ற அட்டைகளைப்பல்லாண்டுகளுக்கு முன்பு வெளியிட்டுப் பொதுமக்களுக்கு அன்பளிப்பாக வழங்கி வந்தது.

* முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் 'திருவள்ளுவர்' என்றொரு திரைப்படம் தமிழகத்தில் வெளிவந்திருக்கிறது. சிறுகளத்தூர் சாமா என்பவர் அந்தப் படத்தில் திருவள்ளுவராக நடித்துள்ளார்.

* ஒவ்வொரு சமயத்தவரும் வள்ளுவர் தங்கள் சமயத்தவர் என்று கூறுவதுடன் திருக்குறளிலிருந்தே தமது கொள்கைகளுக்குச் சான்றுதரும் வகையில் அரும் நூலைப் படைத்த பெருமை திருவள்ளுவருக்கு உண்டு.

* தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருக்குறள் நாட்குறிப்பை 1932-ஆம் ஆண்டிலிருந்து, தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. அந்த நாட்குறிப்பில் ஒவ்வொரு தேதிக்கும் ஒவ்வொரு குறள் அச்சிடப் பெற்றிருக்கிறது.

* டாக்டர் மு. வரதராசன் அவர்களால் எழுதப் பெற்று சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தவரால் வெளியிடப் பெற்றுவரும் திருக்குறள் தெளிவுரை, பொதுமக்கள் அனைவரையும் எளிதில் கவர்ந்துள்ளது. இது முதன் முதலாக 1949-ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்றது என்பதுடன் இதுவரை 100 பதிப்புகளுக்கு மேலும் ஏறக்குறைய 9 இலட்சம் பிரதிகளுக்கு மேலும் வெளியிடப் பெற்றுள்ளது என்பது சிறப்புச் செய்தியாகும்.

காஞ்சியில் சோழர்கால நாணயங்கள்

காஞ்சிபுரத்தில், சென்னைப் பல்கலைக் கழக தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் பூமியைத் தோண்டி ஆராய்ச்சி செய்தபோது, சோழர் காலத்துத் தங்கக் காசுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

கடந்த இரண்டுமாத காலமாக ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது: சின்னக் காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் கோவில் கீழ்க்கோபுரம் அருகில் இரண்டு குழிகள் தோண்டப் பட்டன.

அப்போது அந்தக் குழிகளில் தங்கக் காசு, செப்புக் காசுகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இவை சோழர் காலத்து நாணயங்கள் என்று தெரிகிறது. மேலும், கண்ணாடி வளையல், மணிகள், ரோமானியர் காலப் பானை ஓடுகள் ஆகியவையும் கிடைத்தன.

பெரிய காஞ்சிபுரம் சுப்பராய முதலியார் பள்ளிக்கூட விளையாட்டுத்திடல் அருகே இரண்டு குழிகள் தோண்டப்பட்டன.

16 அடி ஆழம் தோண்டியபோது அங்கே புத்த ஸ்தூபி இருந்ததற்கான தடயங்கள் கிடைத்தன. சுட்ட சுண்ணாம்பால் செய்யப்பட்ட பொம்மைகளும் அங்கு இருந்தன. தற்போது அங்கு மேலும் தீவிரப் பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

படமும் செய்தியும்



திருவண்ணாமலையில் அண்ணாமலையார் திருக்கோயில் கும்பாபிஷேகம் 4-4-1976-ல் நடைபெற்றது.



காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகம் 5-4-1976 அன்று நடைபெற்றது. கோபுரக் கலசத்தின்மீது புனித நீர் ஊற்றித் தவத்திரு சங்கராச்சாரியார் கும்பாபிஷேகம் செய்து வைத்தார்.



மகளிர் சுயசேவை இயக்கத்தின் உணவுப் பாதுகாப்புக் குழுவின் சார்பில் 7-4-1976 அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழாவில், கீழ்ப்பாக்கம் பாலவிகார் குழந்தைகளுக்கு திருமதி மதுபென் ஷா அவர்கள் உணவும், உடையும் வழங்கினார்.



சென்னை உயர்நீதி மன்றத்தில் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள திரு. பி. எஸ். கைலாசம் அவர்கள் 8-4-1976 அன்று ராஜ்பவனில் ஆளுநர் அவர்களால், பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

போட்ஸ்வானா குடியரசின் தலைவர் சர் செரிட்சீ காமா அவர்கள் 9-4-1976 அன்று சென்னைக்கு வருகை தந்தார். அவருக்குத் தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள், நினைவுச் சின்னம் வழங்கினார்.



எண்ணூர் அனல் மின்நிலையத்தின் 5-வது யூனிட், 10-4-'76 அன்று மத்திய மின்சார அமைச்சர் திரு. கே. சி. பந்த் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

நேபாள நாட்டுப் பிரதமர் டாக்டர் துளசி கிரி அவர்கள் 11-4-'76 அன்று சென்னைக்கு வருகை தந்தார். அவரை, தமிழக ஆளுநர் அவர்களும், ஆளுநர் ஆலோசகர்களும் வரவேற்றனர்.



தமிழகத்திற்கு 15-4-76-ல் வருகை தந்த இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமத் அவர்களைத் தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் வரவேற்றார்.



இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமது அவர்களும், அவரது துணைவியார் திருமதி பேகம் அபிதா அகமது அவர்களும் தமிழகத்திற்கு வருகை தந்ததையொட்டி 15-4-'76-ல் ராஜ்பவனில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தவிருந்தில், தமிழக ஆளுநர் அவர்கள், இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கினார்.



வள்ளுவர் கோட்டத்தில் அமைந்துள்ள உள்ளங்கவரும் தேர்.

மகளிர் சுயசேவை இயக்கத்தின் 4-வது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்ற வந்த திருமதி பேகம் அபிதா அகமது அவர்களுக்கு, அம்புலன்ஸ் குழு தலைவர் திருமதி இந்திரா மேத்தா அவர்கள் மாலை அணிவித்தார்.



இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் 18-4-'76ல் நாகூர் தர்காவிற்கு வருகை தந்தபோது, தர்காவின் சார்பில் நினைவுச் சின்னம் வழங்கப்பெற்றது.



தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தினால் மாமல்லபுரத்தில் கட்டப்பட்டுள்ள கடற்கரைச் சுற்றுலா மாளிகையில் அமைந்துள்ள ஓர் ஊஞ்சலில் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் அமர்ந்து மகிழ்ந்தார்.



சென்னை குதிரைப் பந்தயத் திடலில் 18-4-'76ல் நடைபெற்ற பந்தயத்தில் வெற்றிபெற்ற குதிரைகளின் உரிமையாளர்கள் திரு. எஸ். ரெங்கராஜன் அவர்களுக்கும், திரு. வி. பி. ராஜேந்திர பிரசாத் அவர்களுக்கும், இந்தியக் குடியரசுத் தலைவர் பரிசு வழங்கினார்.

இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களும், அவரது துணைவியாரும் 18-4-'76ல் தமிழக சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு விடை பெற்றனர்.



கன்னிமரா ஹோட்டலில் 21-4-'76-ல் நடைபெற்ற அனைத்து இந்திய உற்பத்தியாளர் நிறுவனத்தின் ஆண்டு விழாவை, தமிழக ஆளுநர் அவர்கள் துவக்கி வைத்தார்.



அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 22-4-'76 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் இந்திய அரசின் வெளிஉறவுத் துறை அமைச்சர் திரு. ஒய். பி. சவான் அவர்கள் பட்டமளிப்பு விழா உரையாற்றினார்.

மதுராந்தகத்தில் 22-4-'76 அன்று நடைபெற்ற விழாவில் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கு ஸ்டேட் பாங்கின் கடன் உதவித் தொகையை, வெளி உறவுத்துறை அமைச்சர் திரு. ஒய். பி. சவான் வழங்கினார்.





ஓர் இலட்சியக் கிராமம் உருவாகிறது!

அந்த விவசாயத் தோழனின் முகத்திலே பூரிப்பும் பெருமையும் இழைந்தோடுகிறது.

உலகின் முதன்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் அந்த ஏழை எளிய இளைஞன், முன்பு தாம் அடைந்த இன்னல்களை ஒரு கணம் எண்ணிப் பார்க்கிறான்.

கொள்ளை இலாபம் அடிக்கும் முதலாளியிடம் கெஞ்சிக் கூத்தாடி அதிக வட்டிக்குப் பணத்தைக் கடனாக வாங்கிய நாட்களும், அதனால் விளைந்த தொல்லைகளும் அவன் கண் முன்னே சில வினாடிகள் தோன்றி மறைகின்றன.

அதற்கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்கும் நாளாக அந்நாளை அவன் கருதியதில் வியப்பென்ன இருக்க முடியும்?

ஆம்! ஐ. ஓ. பி. அவன் அல்லலைத் தீர்த்து வைத்தது.

மார்ச் திங்கள் 27-ஆம் நாள் சோமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த கல்லாடிப் பேட்டையில் நடந்தது 'கிராம ஏற்பு நாள்' விழா!

இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் ஏற்பாடு செய்திருந்த இந்த விழாவில், 100 அரிசன விவசாயிகளுக்கு ரூ. 200-லிருந்து ரூ. 500 வரை கடன் வழங்கப்பட்டது.

வங்கியின் மூலம் வேலைவாய்ப்பு!

செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு டி. கே. ஏ. திவான் முகம்மது ஐ.ஏ.எஸ்., அவர்கள் விவசாயிகளுக்குக் கடன் வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''இந்த விழாவில் பல கோரிக்கைகளைச் சொன்னார்கள். இப்பகுதி மக்கள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்டவர்கள், நிலமற்ற ஏழைகள், குத்தகை உடன்பாட்டில் விவசாயம் செய்பவர்கள். இவர்களுக்கு விவசாய மேம்பாட்டிற்காக இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் கடன் வழங்க முன்வந்திருப்பதை மிகவும் பாராட்டுகிறேன்.

''இப்பகுதி இளைஞர்கள், பள்ளி இறுதி வகுப்புப் படித்து வேலையின்றி இருப்பதாகவும், அவர்களுக்கு வேலைவாய்ப்புத் தரும்படியும் கேட்டுக் கொண்டார்கள். உங்கள் வங்கியில் (ஐ. ஓ. பி.) இவர்களுக்கு வேலை வாய்ப்புத் தரலாம். உங்கள் வங்கியில் பணிபுரியும் கடைநிலை ஊழியர்களுக்குத் தேவையான சீருடைகளைக் கூட இப்பகுதியிலுள்ள பெண்கள் மூலம் தைத்துக் கொள்ள ஏற்பாடு செய்யலாம். அலுவலகப் பணிகளுக்காகத் தேவைப்படும் காகித உறைகளைக்கூட இப்பகுதி மக்களைக் கொண்டே தயார் செய்து கொள்ளலாம். இவ்வாறு செய்வதன் மூலம் இங்கு வாழ்கின்ற ஏழை எளிய மக்களுக்கு நாம் வேலைவாய்ப்புத் தரலாம்.''

ஐந்து அம்சத் திட்டம்:

சென்னையிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில், செங்கற்பட்டு மாவட்டம் குன்றத்தூர் அருகிலுள்ள சோமங்கலம் முதலான பத்துக் கிராமங்கள் ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டு வருவதை நாம் அறிவோம்.

இத்திட்டத்தின்கீழ் இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் சோமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கல்லாடிப் பேட்டை, பூந்தண்டலம், நந்தம்பாக்கம் ஆகிய கிராமங்களில் 'கிராம ஏற்பு நாள்' விழாவினைக் கொண்டாடியது.

மேற்கண்ட கிராமங்களில் உள்ள ஏழை அரிசனவிவசாயிகள், ஏழை எளியவர்களின் வாழ்க்கை தரம் உயர்ந்திடும் வகையில் பல உதவிகள் இவ்வங்கியினால் வழங்கப்பட்டு வருகின்றன. கறவை மாடுகள் வாங்கவும், சிறிய கடைகள் வைக்கவும், நெசவுத் தொழிலில் ஈடுபடவும் தக்க உதவிகள் செய்யப்பட்டுள்ளன.

சிறு விவசாயிகள் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதற்கான பல திட்டங்கள் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அவற்றுள் இவ்வங்கி முன்னோடியாக இருந்து வருகின்றது. இருபது அம்சத் திட்டம் நிறைவேற இவ்வங்கி ஐந்து அம்சத் திட்டம் ஒன்றைத் தீட்டிச் செயலாற்றி வருகின்றது அவை:

1. சிறு விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் வழங்குதல்.

2. உபதொழில் மேற்கொள்ளப் பண உதவி அளித்தல்.

3. பின்தங்கி இருப்போருக்கு மிகக் குறைந்த வட்டியில் கடன்.

4. குடிசைத் தொழிலாளர்கள் சிறு வியாபாரிகளுக்குத் தாராளக் கடனுதவி.

5. தங்க நகைகளின் பேரில் கிராம மக்களுக்குக் கடன் வழங்கி, கொழுத்த வட்டி வசூலிக்கும் லேவாதேவி நபர்களிடமிருந்து விடுவித்தல்.



பாங்கின் உதவிகள் :

இருபது அம்சத் திட்டத்தை ஒட்டிய இந்த ஊரகச் சீரமைப்பு திட்டம் தமிழக ஆளுநர் அவர்களின் ஒருங்கிணைந்த திட்டங்களில் ஒன்றுகும். முதலில் இதன் பயனைப் பெரும் பேறு பெற்றது இந்த சோமங்கலம் மற்றும் சுற்றுப்புற கிராமங்கள். இத்திட்டத்தைச் செயல்முறைக்குக் கொண்டு வர பணிபுரியும் பல்வேறு அமைப்புக்களில் மேற்கண்ட வங்கிக்குப் பெரும் பங்குண்டு.

கல்லாடிப்பேட்டை கிராமத்துக்கும் இவ் வங்கிக்கும் 1973-லிருந்தே நெருங்கிய தொடர்பு இருந்து வருவதை நாம் பார்க்கிறோம். கல்லாடிப் பேட்டை அரிசன கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கம் 1973-லிருந்து குன்றத்தூர் கிளை மூலமாகக் கடனுதவி பெற்று நல்ல முறையிலே நடைபெற்று வருகிறது. முதலில் வாங்கிய கடன் ரூபாய் 42,000-த்தை முறையாகத் திருப்பிச் செலுத்திய உடன், கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் மறுபடியும் கல்லாடிப் பேட்டை 'கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கம் 45,000 ரூபாய் கடனைப் பெற்று இன்றளவும் மிகச் சீரிய முறையில் செயல்பட்டு வருகின்றது.

தலைமுறை தலைமுறையாக இக்கிராம மக்கள் வாய்மொழி குத்தகைதாரர்களாக நிலங்களைப் பயிரிட்டு வருகின்றனர்; சாகுபடிச் செலவுக்குப் பண வசதியின்றி நிலச் சுவான்தாரர்களை, மிராசுதாரர்களை அணுகி அநியாய வட்டிக்குக் கடன் வாங்கி அவதிப்படுகின்றனர். அதன் விளைவாகச் சொந்த நிலம் இல்லாமல் குத்தகை உடன்பாடு மற்றும் எத்தகைய எழுத்துப் பத்திரமும் இல்லாமல் வாய்மொழி குத்தகை செய்யும் நூறு அரிசன உழவர்களுக்கு ரூ. 30,000 வரை நெல் சாகுபடி செய்ய கடன் வழங்கப்பட்டுள்ளது. கடன் தொகையில் பெரும் பகுதியினை உரமாகவும், பூச்சி மருந்தாகவும் வழங்கப்பட்டுள்ளது. இக்கடன் பெற்ற அரிசன குத்தகைதாரர்களுக்குச் 'சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டம்' மூலம் மானியம் வழங்கவும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

பத்துக் கிராமங்கள் பாங்காய் வளர்ந்திட தேசிய உடைமையாக்கப்பட்ட பாங்குகள் உதவி வருகின்றன. சோமங்கலம், வரதராஜபுரம், எருமியூர், நடுவீரப்பட்டு, நந்தம்பாக்கம் ஆகிய கிராமங்களை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வளர்ப்புக் கிராமங்களாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. விவசாயம், பால் பண்ணை, கோழிப் பண்ணை, தெளிப்பான் வாங்குதல் மாட்டு வண்டி வாங்குதல், போன்றவற்றுக்கான இந்த பாங்கு சுமார் 2.5 இலட்சம் ரூபாய் கடன் வழங்கியிருக்கிறது.

நந்தம்பாக்கத்தில் இந்தியன் பாங்கு உதவியுடன் பால் வழங்கு நிலையமொன்றை அமைத்திருக்கிறார்கள்.

இருபது அம்சம் இனிதே நிறைவேறிட

குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஒரு சின்னஞ்சிறு கிராமம், சோமங்கலம். சுமார் ஆயிரம்பேர் இங்கு வசிக்கிறார்கள், இங்கு ஒரு துவக்கப்பள்ளியும், ஒரு உயர்நிலைப் பள்ளியும், ஒரு விவசாயக் கூட்டுறவுச் சங்கமும் உள்ளன.

அமரம்பேடு, பூந்தண்டலம், நல்லூர், புதுச்சேரி, நடுவீரப்பட்டு, எருமியூர், வரதராஜபுரம், நந்தம்பாக்கம், சிறுகளத்தூர் ஆகிய கிராமங்களும் ஊரகச் சீரமைப்புத் திட்டத்தின்படி தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பத்துக் கிராமங்களிலுமாகப் பதினோராயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வசிக்கிறார்கள். இவர்களில் சுமார் 6,000 பேர் அரிசனங்கள். ஊரகச் சீரமைப்புத் திட்டத்தின் பலனாக பிரதமரின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம் இனிதே நிறைவேறிட இங்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்படி வீட்டுக்கு வீடு சென்று தேவைகளைக் கண்டறிந்து வேண்டியதைச் செய்யவும், பாசன வசதி அதிகரிக்கவும் தீவிரப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2,597 ஏக்கரா நன்செய் நிலத்திலும், 2,032 ஏக்கரா புஞ்செய் நிலத்திலும் உயர் விளைச்சல் ரகப் பயிர்கள் சாகுபடி செய்யப்படும், ஒரு விவசாயப் பொறியியல் பணி நிலையம் இங்கு அமைக்கப்படும். டிராக்டர் போன்றவற்றை இந்த நிலையம் சாகுபடியாளர்களுக்கு வாடகைக்கு விடும்.

ஆளுநரின் அழைப்பு

கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தவும், சோமங்கலத்தில் பல சீரமைப்புத் திட்டங்களுக்கு நிதியளித்து மேற்பார்வையிடவும் சமூகப் பணி நிலையங்களை அதிக அளவில் பயன்படுத்த மாநில அரசு திட்டம் வகுத்திருக்கிறது என்று தமிழ்நாடு ஆளுநர் கே. கே. ஷா. அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

" பல்வேறு தொழில்களில் பயிற்சியளிக்க அல்லது வேலை யளிக்க எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் வேலைவாய்ப்பு நிலையங்கள் அமைக்க சமூகப் பணி நிலையங்கள் முன்வர வேண்டும். இது குறிப்பாகப் பெண்களுக்குப் பயன்பட வேண்டும்.

"சோமங்கலத்திலுள்ள 2,200 குடும்பங்களில் 1,000 குடும்பங்களுக்கு நிலங்கள் உள்ளன. அவற்றில் 400 குடும்பங்கள்தான் இரு போகம் பயிரிடுகின்றன. ரூ. 170 இலட்சம் செலவில் 1,100 கிணறுகளையும் ரூ. 6 இலட்சம் செலவில் 60 குழாய்க் கிணறுகளையும் அளிக்க அரசு தீர்மானித்திருக்கிறது. இம்முயற்சிகளின் மூலம் 600 பண்ணைகளில் இரண்டு அல்லது மூன்று போகம் சாகுபடி செய்ய முடியும். உபயோகிப்போரிடமிருந்து நீர் கட்டணம் வசூலிக்கப்படும். திட்டம் தவறுன வழியில் பயன்படாதிருக்க சமூகப் பணிநிலையங்கள் பார்வையிட வேண்டும்.

"கூட்டுறவுப் பால் பண்ணைகளைத் துவக்க 200 குடும்பங்களுக்கு மாநில அரசு கடன் வழங்கும். சோமங்கலத்தில் தேவைப்படும் உதிரி பாகத் தொழிற்சாலை ஒன்றும் அமைக்கப்படும்; இந்த முயற்சிகளால் சோமங்கலம், விரைவில் இந்தியாவில் ஒரு சிறந்த எடுத்துக்காட்டான கிராமமாக விளங்கும்" என்றார் ஆளுநர் கே. கே. ஷா அவர்கள்.

மக்கள் பணியில் ஈடுபட சமூகப் பணி நிலையங்கள் முன்வர வேண்டும் என்ற ஆளுநரின் வேண்டுகோளை ஏற்று, ஜெயண்ட்ஸ் சர்வதேச நிறுவனத்தின் சென்னைக் கிளை, சோமங்கலம் கிராம ஊரக வளர்ச்சித் திட்டத்தில் மிக்க ஆர்வமுடன் பங்கு கொண்டிருக்கிறது.

நல்வாழ்வுக்கான நலப் பணிகள் !

சோமங்கலம் முதலான கிராம மக்கள் நல்வாழ்வு வாழ்ந்திடவும் அவர்களுக்கு மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கிராமங்களில் வசிக்கும் 12 ஆயிரம் பேர்களுக்கு மருத்துவ வசதி அளிக்க அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

இருபது அம்சத் திட்டப் பணிகள் தீவிரப்படுத்துவதன் விளைவாக விவசாயப்பணிமனைகள் இப்பகுதிகளில் தொடங்கப்பட்டுள்ளன. அதன் மூலம் பூச்சி மருந்தும், உரமும் வழங்கப்பட்டு வருகின்றது.

தற்போது 50 ஏக்கர் நிலத்திலுள்ள பாறைகளை உடைக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்காகக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது.

சோமங்கலத்திலும், நல்லூரிலும் இரண்டு துளைக் கிணறுகள் தோண்டும் பணி நடந்து கொண்டிருக்கிறது. சோமங்கலத்தில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும், பனை வெல்லக் கிராமக் கைத் தொழில் ஒன்றும் விரைவில் ஏற்படுத்துவதற்கான தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட கிராமங்களில் நில உடைமையாளர்களுக்குத் தனிப்பட்டாக்களை வழங்குவதும், வருவாய்ப் பதிவேடு இன்று வரையிலுமான விவரங்கள் அடங்கியதாகச் செய்யும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வருவாய்ப் பதிவேடு பற்றிய விசாரணையை நடத்த நில அளவைப் (சர்வே) பணியாளர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

441

விசாரணையிலும், நில அளவையிலும் இந்தக் குழுவினருடன் ஒத்துழைக்குமாறு, நிலஉடைமையாளர்கள் அனைவரையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இவ்வாறு காந்தியடிகளின் இலட்சியக் கனவை நனவாக்கும் நன்முயற்சியில்-நலிவைப் போக்கிப் புதுப்பொலிவையும் வலிவையும் உண்டாக்கும் நற்பணியில்—இருபதம்சம் என்னும் இந்தியத் தேர். உலா வருகின்றது. அதன் சுவடு முதன் முதலில் பெறுகின்ற பெரும் பேறு சோமங்கலத்துக்குக் கிடைத்திருக்கிறது என்பதை நாம் பெருமிதத்தோடு குறிப்பிட வேண்டும்.

— பி. வி. கிரி

புத்துயிர் பெற்ற தமிழக கிராமம்!

ஈரோடுப் பகுதியிலுள்ள ஒரு சின்னஞ்சிறு கிராமம் 20 ஆண்டுகளுக்குப் பிறகு உயிர் பெற்றெழுந்துள்ளது. சுமார் 200 குடும்பங்கள் வசிக்கும் அந்த கிராமத்துக்கு வினோபாஜீயின் பெயரிடப்பட்டுள்ளது. அங்குள்ள நிலத்தில் பெரும் பகுதி, அவருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டதாகும்.

ஈரோடு சிக்கையா நாயக்கர் கல்லூரியையும் வேறு ஐந்து நிறுவனங்களையும் சேர்ந்த தேசிய சேவை அணித் தொண்டர்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக அரும்பாடுபட்டு, மிகவும் மோசமாக இருந்த கல்சாரி நிலத்தை சாகுபடி நிலமாக மாற்றியுள்ளனர்.

மழைநீரைத் தடுத்து சேமிப்பதற்காக அவர்கள் அந்த கிராமத்தில் ஒன்பது அடி உயரமுள்ள அணை ஒன்றைக்கட்டியிருக்கிறார்கள். இதன் பலனாக, கிணறுகளிலும் நீர் ஊறத் தொடங்கியுள்ளது. இதன் மூலம் 55 ஏக்கருக்குப் பாசன வசதி கிடைத்துள்ளது.

இந்தியாவிலுள்ள உணவுப் பங்கீட்டுக் கடைகள்

இந்தியா முழுவதிலும் 1975-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் இறுதிவரை ஏறத்தாழ 2,24,805 உணவுப் பங்கீட்டுக்கடைகள் இருந்தன.

தற்பொழுது அவைகளின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது. தற்பொழுது மொத்தம் 2,33,282 உணவுப் பங்கீட்டுக் கடைகள் உள்ளன. அதிகமாகியுள்ள புதிய கடைகள் பெரும்பாலும் நகர்ப்புறங்களில் அமைந்துள்ளன.

காதி கிராப்ட்



உடல் மணக்க 'குறிஞ்சி' சோப். உடை வெளுக்க 'கோபுரம்' சலவை சோப். தித்திக்கும் தூய தேன். 'அக்மார்க்' செக்கெண்ணெய். தோல் காலணிகள், கைப்பைகள். வீட்டை அலங்கரிக்க கலைப் பொருட்கள். தினசரி உபயோகத்திற்கு பிரம்பு, மூங்கில், மற்றும் பனைப் பொருட்கள். வேலைப்பாடு மிக்க மட்பாண்டங்கள்.

அழைப்பு விடுக்க கைக் காகிதங்கள். மலிவு தீப்பெட்டிகள். கதர் பருத்தி, கதர் சில்க் துணிவகைகள். இவற்றை வாங்கி மகிழ்வீர்.

கிராமக் கைவினைஞர்கள் நல்வாழ்வு பெற அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை வாங்குவீர்

தரமானது ... மலிவானது ... இவை வாங்கிட தமிழகமெங்கும் 180 காதி கிராப்ட்கள்.

காதி கிராப்ட்
தமிழ்நாடு கதர், கிராமத் தொழில் வாரியம், 'குறளகம்', எஸ்ப்ளனேடு, சென்னை-600 001.

KK/381

மண்ணும் மனிதனும்



"பெற்ற தாயும் பிறந்த பொன் னாடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே!"

என்றார் பாரதியார். ஆம். நம்மை ஈன்றெடுத்த அன்னையும், நாம் பிறந்த நமது தாய் நாடும் உயர்ந்த வானினும் மிகச் சிறந்தன என்பது கவிஞர் கருத்து. அதனால்தான் அவர், இறும்பூதெய்திப் பாடுகின்றார். இந்தத் தாய் நாட்டிற்கு—அன்னை நிலத்திற்கு அத்துணைச் சிறப்பு!

விண்ணுக்குப் பறப்பது போல் கதைகள் பேசுகிறோம். ஏன்? விண்ணுக்கே பறக்கவும் செய்கிறோம். என்றாலும் நாம் விண்ணிலா கால் கொண்டிருக்கிறோம்? நாம் எங்கே சென்றாலும், எங்கே பறந்தாலும் திரும்பவும் இங்கு—இந்த மண்ணுக்கே வந்தாக வேண்டும் — இந்த மண்ணில் வந்துதான் இளைப்பாற வேண்டும்!

இவ்வளவு சிறந்த—இத்துணை மிக்குயர்ந்த நில மகளை—மண் மாதாவை நமது வள்ளுவப் பெருந்தகை பல்வேறு இடங்களில் நமக்கு எடுத்துக் காட்டிப் பயனுள்ள நீதி நெறிகளையும் உணர்த்துகிறார். அவற்றுள் சிலவற்றை நாம் இங்கே காணலாம்.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

என்பது திருக்குறள். இக்குறட்பா 'பொறையுடைமை' என்னும் தலைப்பின் கீழ் வருவது.

"நிலம் தன்னைத் தோண்டுவோரை விழாமல் தாங்கிக் கொள்கிறது!

"அதுபோலத் தம்மை அவமதிப்போர் துன்புறு வண்ணம் அவர்கள் செய்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்வதே தலையாயது' என்பது இக்குறட்பாவின் கருத்து. நிலம் தன்னைத் தோண்டுவோரை விழாமல் தாங்கிக் கொள்கிறது. அப்படி விழாமல் தாங்கிக் கொள்வது மட்டுமா? இல்லை. தன்னை வெட்டி கொத்தித் துன்புறுத்துகிறவனை வாழ்விக்கவும் செய்கிறது.

இதில், பிறர் செய்யும்—துன்பத்தை — ஏளனத்தை—இகழ்ச்சியைப் பொறுத்துக் கொள்வது மட்டும் போதாது — அவற்றைப் பொறுத்துக் கொண்டு அவர்களுக்கு நன்மையைச் செய்—'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்' என்பது எத்துணை உயர்ந்த பண்பு!

அடுத்து, சினத்தின் தீமையை வலியுறுத்த வந்த வள்ளுவப் பெருந்தகை 'வெகுளாமை'' என்னும் அதிகாரத்தின் கீழ்,

"சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று"

என்கிறார்.

"தன் வலிமையைக் காட்டுவதற்குச் சினத்தைக் கருவியாகக் கொண்டவன் நிச்சயமாகத் துன்பமடைவான். அவன் துன்பமடைவது, நிலத்தைத் தன் கையினால் ஓங்கி அறைந்தவனுடைய கை துன்புறுவது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாகும்"— என்பது இக்குறட்பாவின் கருத்து.

நிலம் தன்னை அறைந்தவனைத் திருப்பித் தாக்குவதில்லை. எனினும், அதனை அறைந்தவன் துன்புறுகிறான். அதுபோல, நாம் எவரிடம் சினந்து கொள்கின்றோமோ அவர் நம்மை திருப்பித் தாக்காவிட்டாலும் நாம் துன்புறுவோம். நிலத்தை அறைந்தவன் துன்பமடைவது உறுதி. அதைப் போலத் தன் வலிமையைக் காட்டச் சினத்தைக் கருவியாகக் கொண்டவனும் துன்புறுவது உறுதி. நிலத்தை அறைந்தவன் தன் செயலாலேயே வலியை வருவித்துக் கொள்கிறான்—சினத்தைக் கொண்டவனும், தான் கொண்ட சினத்தாலேயே துன்பத்தை வலிய வருவித்துக் கொள்கிறான். நிலத்தை அறைந்தவனும், சினத்தைக் கருவியாகக் கொண்டவனும் துன்பமடைவது உறுதி.

மேலும், நிலத்தை அறைவதால் நிலத்திற்கு எவ்விதத் தீங்கும் ஏற்படுவதில்லை, அறைந்த

வனுக்குத்தான் துன்பம் என்பதனை வள்ளுவர் சொல்லாமற் சொல்லும் திறம் போற்றத்தக்கது.

அடுத்து, நிலத்தையும் நீரையும் காட்டி, மனித இயல்பின் மாற்றத்தை யுணர்த்த முற்படுகிறார்.

''நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு இனத்தியல்ப தாகும் அறிவு''

என்பது குறட்பா. இது 'சிற்றினஞ் சேராமை' என்னும் அதிகாரத் தலைப்பின் கீழ் வருவது.

''நீரானது எந்த நிலத்துடன் சேர்கின்றதோ அந்த நிலத்தின் தன்மையைப் பெற்றுத் தன் இயல்பிலிருந்து முற்றிலும் மாறிவிடும். அதுபோல மக்களுக்கும், அவர்கள் எந்த இனத்தாருடன் சேர்கின்றனரோ, அந்த இனத்தாரின் தன்மைக்கு ஏற்ற அறிவே ஏற்படும்'' என்பது இதன் கருத்து.

நீருக்கு நிறமும், சுவையும் இயல்பாக இல்லை. எனினும், செம்மண் நிலத்தில் விழுந்த நீர், செந்நிறமாகவும், கரிசல் மண் நிலத்தில் விழுந்த நீர் சற்றுக் கருமை நிறமாகவும் மாறி விடும். அது மட்டுமல்ல, அந்த மண்ணின் சுவைக்கும், மணத்திற்கும் ஏற்பத் தான் மாறி விடும். சுக்காம் பாறையில் விழுந்த நீர் அந்தத் தன்மையைப் பெற்று அந்நீரை யுண்பார்க்கு வெப்பத்தையும், நீர்க்கடுப்பையும் உண்டு பண்ணுவதை நாம் அறிவோம். அது போலவே பொதுவாக, மனிதர்கள் யாருடன் சேர்கின்றார்களோ, அவர்களின் இயல்பைப் பெறுவார்கள். நல்லவர்களோடு சேர்ந்தால் நல்லியல்புகள் பெற்றுத் திகழ்வார்கள் — கயவர்களோடு சேர்ந்தால் கயவர்களாக — கயமைத் தன்மை பெற்று விளங்குவர். சிற்றினத்தாரோடு சேர்ந்தாலும், அவ்வினத்தின் இயல்பைப் பெறாமல், தன்னியல்பு குன்றாமல் விளங்குகின்ற சிலர், இதற்கு விதி விலக்காவார்கள். இத்தகையவர்கள் அருகியே காணப்படுவர். நிலத்தையும் நீரையும் நமக்குக் காட்டி, 'மனிதா! சேரக் கூடாதவர்களோடு—சிற்றினத்தாரோடு சேராதே!' என்று நிலத்தையும் நீரையும் காட்டி எச்சரிக்கிறார் திருவள்ளுவர்

அடுத்து, இதே உவமையைக் காட்டி, ''ஊடலுவகை'' என்னும் அதிகாரத்தில் ஓர் அருமையான உண்மையை உணர்த்துகிறார்.

''புலத்தலின் புத்தேள்நா டுண்டோ நிலத்தொடு நீரியைந் தன்னா ரகத்து''

என்பது குறட்பா.

''நிலத்தோடு நீர் கலந்தாற் போல ஒற்றுமையுடைய காதலிக்கு ஊடுதலைவிட இன்பம் தருவது எந்த உலகத்திலும் இல்லை'' என்பது இதன் கருத்து.

காதல் உலகில், அன்புடைய நெஞ்சங்கள் கலத்தலினை—இணைவதனைச் செம்புலப் பெயல் நீருக்கு ஒப்பிட்டுக் காட்டினார். 'செம்புலப் பெயல்நீர்' என்ற சிறந்த உவமையால் பெயர் பெற்ற 'செம்புலப் பெயல் நீரார்' என்னும் புலவர். செம்மண் நிலத்திலே விழுந்த நீர் தன்னியல்பு திரிந்து அம்மண்ணோடு இரண்டறக் கலப்பது போல அன்புடைய காதலர் நெஞ்சங்கள் இணைந்து — பிணைந்த உள்ளங்களிடையே பிணக்குகள் உறுவதில்லை — இன்பம் மேலும் பெருகுவதற்கு அந்தச் சிறு பிணக்கும் கருவியாகிறது.

இக்குறட்பா காதலியின் கூற்றாக அமைந்துள்ளது.

''நிலத்தோடு இயைந்த நீர் அந்த நிலத்தின் இயல்பாகவே கலந்தாற்போன்று அன்பினாற் கலந்து இருக்கின்றோம். என்னோடு இணைந்து கலந்துவிட்ட காதலரும் என்னியல்பாகவே மாறிவிட்டார். எனவே, அத்தகைய காதலரோடு நான் ஊடுவதால் பேரின்பமே பெறுகின்றேன். அப்படி நான் பெறுகின்ற இன்பத்தைப் போல இன்பந் தரும் உலகம் வேறில்லை. ஆம்! தேவருலகமும் அத்தகைய இன்பமுடையதோ! இல்லை.'' என்கிறாள் அவள். நிலத்தொடு இயைந்த நீரையும் காதலரின் அன்புள்ளங்களையும் ஒப்பிட்டுக் காட்டுவது எவ்வளவு சிறப்பாக அமைந்துள்ளன!

* * *

அடுத்து,

ஒருவருக்கு உகந்த இடம் இன்னொருவருக்கு உகந்ததாக இராது என்ற உண்மையை உணர்த்த நிலத்தில் ஓடும் நெடுந்தேரையும், கடலில் ஓடும் கப்பலையும் காட்டுகிறார்.

''கடலோடா கால்வல் நெடுந்தேர்; கடலோடும் நாவாயும் ஓடா நிலத்து''

என்பது 'இடனறிதல்' என்னும் அதிகாரத் தலைப்பின் கீழ் வரும் குறட்பா.

''வலிய உருளைகளையுடைய நெடுந்தேர்கள், நிலத்தில் மட்டுமே ஓடக்கூடியன; பெரிய கப்பல்கள் கடலில் மட்டுமே ஓடக்கூடியன. நிலத்திலே ஓடும் தேர் கடலிலே ஓடாது — கடலில் ஓடும் கப்பல் நிலத்தில் ஓடமாட்டாது'' என்பது குறட்பாவின் கருத்து.

''ஒவ்வொருவருக்கும் உரிய இடமுண்டு. ஒருவர் இடம் பிறிதொருவர்க்கு உகந்ததாக இராது' என்பதை யுணர்த்த நிலத்திலோடும் பெருந் தேரையும், கடலில் ஓடும் பெருங் கப்பலையும் காட்டி, அவ்வவற்றிற்கு உரிய இடத்திலேயே அவையவை செல்லும் என்று கூறியிருப்பது பெரிதும் நயமுடையதாகும்.

அடுத்து, கண் கண்ணோட்டத்திற்குரியது; கண்ணோட்டத்திற்குரிய கண் பெற்றிருக்கும் மனிதன், தாட்சண்யம் காட்டுபவனாக இருக்க வேண்டும் என்ற உண்மையை வலியுறுத்த மண்ணோடு பொருந்தியிருக்கின்ற மரத்தைக் காட்டி, நீ தாட்சண்யம் இல்லாதவனாக இருந்தால் உன் கண்ணுக்கும் மண்ணோடு பொருந்திய மரத்தின் கணுவுக்கும் வேறுபாடில்லை. இரண்டும் ஒன்றுதான் என்கிறார் திருவள்ளுவர்.

''மண்ணோடு இயைந்த மரத்தனையர் கண்ணோடு இயைந்துகண் ஓடா தவர்.

என்பது குறட்பா. இது ''கண்ணோட்டம்'' என்னும் அதிகாரத் தலைப்பின் கீழ் வருவது :

''கண்ணோட்டத்திற்குரிய கண்ணைப் பெற்றிருந்தும் அதற்குரிய தாட்சண்யம் அல்லது கண்ணோட்டம் இல்லாதவர் மண்ணோடு பொருந்தியிருக்கிற மரத்திற்குச் சமம்'' என்பது குறட்பாவின் கருத்து.

அருள் புரிவதற்கு—அன்பு காட்டுதற்கு வாயிலாக இருப்பன கண்கள். கண்களுக்கு அணிகலம் அன்பு காட்டுவதும்—அருள் புரிவதுமேயாகும். இப்பண்புகள் இவ்வியல்புகள் இல்லையானால் அவை, மண்ணோடு பொருந்தியிருக்கிற மரத்தின் கணுக்கள் போன்றனவேயாகும்! மரத்தின் கணுக்கள் தோற்றத்தால் கண்கள் போன்று விளங்கும். எனினும் அவற்றிற்குப் பார்வையில்லை—அருள்புரியும் இயல்பில்லை—அன்பு காட்டும் பண்பில்லை . கணுக்களைத் தன்னகத்தே கொண்டு மண்ணகத்தே பொருந்தியிருக்கின்ற மரமும், அருள்புரியும் இயல்பில்லாத, அன்பு காட்டும் பண்பில்லாத கண்களையுடைய மனிதனும் ஒன்றுதான் ! இரண்டிற்கும் வேறுபாடு இல்லை. மண்ணோடு பொருந்தியிருக்கிற மரம் மண்ணிலுள்ள ஈரத்தையும், பிற சத்துக்களையும் உறிஞ்சி வளர்கிறது. கண்ணோட்டமில்லாத கண்களைப் பெற்று நடமாடுகிற மனிதன், மனித சமுதாயத்தின் உழைப்பையும் பயனையும் அபகரித்து யாருக்கும் பயனில்லாமல் வாழ்கின்றான்.

* * *

அடுத்து, மனித வாழ்வுக்குக் கல்வி எத்துணை இன்றியமையாதது — எத்துணைச் சிறப்புடையது என்பதனை விளக்கப் புகுந்த திருவள்ளுவர், கல்லாதாரை—கல்வியறிவில்லாதாரை விளையாத—பயன் தராத களர் நிலத்திற்கு ஒப்பிட்டுள்ளார்.

களர் நிலம், பார்வைக்கு நிலம் போலத் தோற்றமளிக்குமே தவிர, நிலம் தரும் பயனைத் தராது ; அது மட்டுமல்ல—விளைநிலத்தை மக்கள் உழுது, பண்படுத்தி, வித்தி, நீர்ப் பாய்ச்சிப் பேணிப் பாதுகாப்பர் ; களர் நிலத்தை மக்கள் அவ்வாறு பேணிப் பாதுகாக்க மாட்டார் — எனவே, களர் நிலம் பேணப்படாமல் சீர்கேடுமேயல்லால் சீர்படாது. இவ்வகையால், களர் நிலம் தனக்கும் பயன்படாமல் — பிறர்க்கும் பயன்படாமல் கெட்டழிந்து போகும். அதுபோலவே, கல்லாதவர், மனிதர் போலத் தோற்றமளிப்பாரே தவிர மனிதராக மாட்டார் ; அவர், தமக்கும் பயன்படார் — பிறர்க்கும் பயன்படார். எனவே, மற்றவர்கள் அவரை மதிக்க மாட்டார். கல்லாதவர், விளைவில்லாக் களர் நிலத்தோடொப்பர் என்பதனை,

''உளரென்னும் மாத்திரையர் அல்லார் பயவாக் களரனையர் கல்லா தவர்''

என்னும் குறட்பாவால் தெளிவுறுத்துகிறார் வள்ளுவப் பெருந்தகை.

அடுத்து, நிலத்தை இல்லாளாகவும், நிலத்துக்குரியவனைக் கணவனாகவும் கற்பனை செய்திருப்பது வியந்து பாராட்டத் தக்கதாகும்.

''நிலத்திற்கு உரியவன் உரியகாலங்களில் அவ்வப்போது சென்று நிலத்தைப் பார்வையிட வேண்டும்; அவ்வாறில்லையானால், அவனுடைய அன்புடன் கூடிய பராமரிப்பில்லாத அவன் மனைவியைப் போல அந்த நிலமும் வெறுத்து அவனோடு பிணங்கிவிடும்.'' என்பது குறட்பாவின் கருத்து.

கணவன், மனைவியிடத்து அன்புடையவனாக இருத்தல் வேண்டும். அவளை அன்போடு—ஆதரவோடு பராமரித்து ஆவன செய்ய வேண்டும். இல்லையானால், அவன் அவளுடைய அன்பையோ, அவளிடமிருந்து இன்பத்தையோ—உரிய பயனையோ எப்படிப் பெறமுடியும்? அவளும் அவனோடு பிணங்கி, உரிய பயனைக் கொடுக்காமல் நலங்குன்றிப் போவாள்! அது போலவே, நிலத்திற்கு உரியவன் உரிய காலங்களில் எல்லாம் சென்று நிலத்தைப் பார்வையிட்டுக் கவனித்து ஆவன செய்ய வேண்டும். இல்லையானால், அவனோடு பிணங்கி உரிய விளைவையும், பயனையும் தராமல் வளங்குன்றிப் போகும்! நிலத்தைக் கவனித்து உரிய செயல்களைச் செய்யாத நிலச் சொந்தக்காரனும், மனைவியை அன்பொடு கவனித்துப் பராமரிக்காத கணவனும் பெறத் தக்க பயனைப் பெறாமல் போவார்கள். கணவனின் அன்போடு கூடிய பராமரிப்பில்லாத மனைவியும், நில உரிமையாளனின் கவனிப்பில்லாத நிலமகளும், உரிய பயனைக் கொடுக்காமல் நலங்குன்றி, வளங்கெட்டுப்போவர். இக்கருத்தினை,

''செல்வான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து இல்லாளின் ஊடி விடும்''

என்னும் குறட்பா நயமுற விளக்குகிறது.

இனி, 'மண்ணுக்குப் பாரமாக இருக்கிறார்கள்' என்று சிலரை வள்ளுவர் சுட்டிக் காட்டுகிறார். அப்படிப்பட்ட சிலரின் உடம்பை—பிண்டத்தைச்—சுமக்கும் நிலம் விளைச்சல் குன்றிக் கெடும் என்றும் கூறுகிறார்.

''வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா யாக்கை பொறுத்த நிலம்''

என்பது குறட்பா.

இது 'புகழ் என்னும் அதிகாரத் தலைப்பின்கீழ் வருவது.

''புகழில்லாத உடம்பைச் சுமந்த நிலமானது, குற்றமற்ற—வளப்பத்தையுடைய விளைச்சல் இல்லாமல், குன்றிக் கெடும்'' என்பது குறட்பாவின் கருத்து.

மனிதன் புகழோடு வாழ வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து. 'வசையொழிய



வாழ்பவரே வாழ்பவர் எனப்படுவர் ; இசையொழிய வாழ்பவர் வாழாதவர்—இறந்தவர்' என்று பேசுகின்றார். மனிதன் இசையோடு—புகழோடு வாழ வேண்டும் என்று கருதுகிற வள்ளுவர்—புகழில்லாத உடம்பைச் சுமந்த நிலம் விளைச்சல் குன்றிக் கெடும் என்கிறார். புகழ் இல்லாதவர்கள் என்று கூடக் கூறாமல், 'புகழில்லாத உடம்பு' என்று கூறுவது, புகழில்லாத வாழ்வு வாழ்கின்றவர்கள் மீது அவருக்குள்ள அளவு கடந்த சினத்தைக் காட்டுகிறது. 'மனிதா நீ பூமிக்குப் பாரமாக இராதே ; புகழோடு வாழ்க!' என்று அவர் வலியுறுத்துகின்றார். புகழ் இல்லாத வாழ்வுடையவனை இருந்தால் உன்னைச் சுமக்கும் இந்த நிலம் வளம் குன்றிப் போகும்—விளைச்சல் இல்லாமல் போகும் என்று எச்சரிக்கின்றார்.

* * *

அடுத்து, சான்றோர் தம் நிலையிலிருந்து வழுவக் கூடாது என்பதை வலியுறுத்த,

**"சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை"**

என்கிறார்.

''பல நற்குணங்களாலும் நிறைந்த சான்றோர் தம் தன்மையிலிருந்து குன்றுவரானால் இந்தப் பெரிய உலகமானது தன்னுடைய பாரத்தைத் தாங்க முடியாத தாகிவிடும்'' என்பது குறட்பாவின் கருத்து.

சான்றோர் தம் சான்றாண்மையிலிருந்து ஒரு சிறிதும் தவறக்கூடாது. இந்த உலகம் பெரியதுதான்! எனினும், அவர் தம் தன்மையிலிருந்து குன்றினால், இந்த உலகம் அவர்தம் பாரத்தையே தாங்க முடியாமல் அழிந்துவிடும். சான்றோர் தம் தன்மையிலிருந்து தவறினால், இந்த உலகம் அழிவதற்கு அவர்களே காரண மானவர்கள் என்னும் கருத்தை உள்ளடக்கியுள்ளது.

இறுதியாக,

**"இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்"**

என்னும் குறட்பாவைப் பார்ப்போம்.

இக்குறட்பா 'உழவு' என்னும் அதிகாரத் தலைப்பின் கீழ் வருவது. ''எம்மிடம் சிறிதும் பொருள் இல்லை என்று வயலைக் கவனிக்காமல் சோம்பலாக இருப்பவனைக் கண்டால் நிலம் என்னும் நல்லாள் அவனுடைய அறிவின்மையை எண்ணி ஏளனமாகத் தன்னுள் சிரிப்பாள்'' என்பது இக்குறட்பாவின் கருத்து.

நிலம் இருக்கிறது. அது பரந்து விரிந்து கிடக்கிறது. எத்தனை எத்தனையோ செல்வங்களைத் தன்னுள்ளே கொண்டு கிடக்கிறது. ''ஏ! மனிதா! இதோ பார்! எண்ணற்ற செல்வங்களை என்னுள்ளே கொண்டு நான் இருக்கிறேன். நீ, 'என்னிடம் எதுவுமில்லையே, நான் என்ன செய்வேன்' என்று கூறிச் சோம்பிக் கிடக்கிறாயே! இது எவ்வளவு அறிவீனம். பயிரிடு! பாடுபடு! உனக்கு வேண்டியதையெல்லாம் நான் தருகிறேன்' என்று கூறுவது போல, சோம்பேறியைப் பார்த்துச் சொல்கிறதா? இல்லை. சோம்பேறியைப் பார்த்து, ஏளனமாகச் சிரிக்கிறது! வள்ளுவர் கூறுவது போல நிலமெனும் நல்லாள் நகுகின்றாள்!

எனவேதான் வள்ளுவர் கூறுகின்றார் :

''என்னிடம் என்ன இருக்கிறது? நான் என்ன செய்ய முடியும்?'' என்று வாளாவிருக்கும் சோம்பேறியே! உழுகிற காலத்தில் ஊர் சுற்றித் திரிந்து விட்டு அறுவடைக் காலத்தில் அரிவாளைத் தூக்கிக் கொண்டு வந்தால் என்ன பயன்? நீ சோம்பேறியாயிராதே! உன் சோம்பலை விடு! எண்ணற்ற செல்வங்களைத் தன்னுள்ளே கொண்டு, தன்னை அணுகுவோரை வாழ வைக்கும் திறன் படைத்த நிலம் இருக்கிறது! நீ நிலத்தில் இறங்கிப் பாடுபடு! நீ உனக்கு வேண்டிய அனைத்தும் பெறுவாய் ! வறுமையிலிருந்து விடுதலை பெறுவாய்!''

மண் மாண்புடையது; மனித குலத்திற்கு வாழ்வூட்டுவது; பல்வகை வளமும் மல்கிச் சிறந்தது; பரந்த இம் மண்ணகத்தை வாழ வைப்பது ; வாழும் மனித சமுதாயத்திற்குப் பல்வேறு படிப்பினைகளைக் கற்றுத் தருவது; மனித குலத்திற்கு இறுதிப் புகலிடம் வழங்குவது. ''வாழிய வள்ளுவர்! வாழ்க இம்மண்ணகம்'' என்று நாமும் திருவள்ளுவரை வியந்து பாராட்டி, வள்ளுவர் கருத்துக்களை உள்ளத்தே கொண்டு வையத்தே வாழ்வாங்கு வாழ்ந்து சிறப்போமாக!

—சாமி பழனியப்பன்.

கிராம வளர்ச்சியில் பத்தாண்டுச் சாதனை—2

இந்தியக் கிராமங்களுக்கு மின் வசதி!

இந்தியக் கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கும் பணியில் மாபெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மின்வசதி பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 4 மடங்காக அதிகரித்துள்ளது. 1966-ல் மொத்தம் 45 ஆயிரம்கிராமங்கள் தான் மின்வசதி பெற்றிருந்தன. ஆனால் தற்போது அவற்றின் எண்ணிக்கை 1 இலட்சத்து 70 ஆயிரமாக அதிகரித்துள்ளது. பத்தாண்டுகளுக்கு முன் 5 இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மட்டுமே மின்விசை கிடைத்து வந்தது. ஆனால் தற்போது 27 இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் விசை வழங்கப்பட்டு வருகிறது. **5-வது திட்டக் கால இறுதிக்குள் 2.50 இலட்சம் கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கப்படும் 40 இலட்சம் பம்பு செட்டுகள் மின்விசை பெறும்.**

இந்தியாவின் கிராமப் பொருளாதாரம் சிறக்க மின் வசதி சிறப்பான பங்காற்றி வருகிறது. கிராமப்புறங்களின் முதுகெலும்பு விவசாயத்துறை; அது ஒரு தொழில் துறையாகும். ஏனெனில் உற்பத்தி அதிகரிப்புக்கு மின் சக்தி தேவைப்படுகிறது. நாட்டில் சுமார் 3.5 கோடி எக்டேர் நிலப் பரப்புக்குப் பாசன வசதி அளிக்கத் தேவைப்படும் நிலத்தடி நீர் உள்ளது. இது வரை இதில் பாதி அளவு நீரைத் தான் நாம் பயன்படுத்தி இருக்கிறோம். விவசாயத் துறைக்கு நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதில் எதிர்காலத்தில் ஏராளமான வாய்ப்புகள் இருக்கும். இரண்டாவதாக, கிராமப்புறங்களில் சிறு தொழில் நடத்தவும் மின்வசதி தேவைப்படுகிறது.

நாட்டில் உள்ள மின்வசதி பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை, மொத்த கிராமங்களில் 30 சதவிகிதமாகும். சில மாநிலங்களில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் மற்ற மாநிலங்களில் இது 30 சதவிகிதத்திற்கும் குறைவாகும். சில பகுதிகளில் அது கிட்டத்தட்ட 10 சதவிகிதமாக உள்ளது. இந்த ஏற்றத்தாழ்வைப் போக்க ஐந்தாவது திட்டத்தில் மின்வசதி திட்டத்தில் புதிய நோக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற மின்வசதிக்காக குறைந்தபட்சத் தேவைத்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. இத் திட்டத்தின்படி மின்வசதி பெறுவதில் பின்தங்கிய மாநிலங்களையும் முன்னுக்குக் கொண்டு வந்து மொத்தத்தில் குறைந்த பட்சம் 30 முதல் 40 சதவிகிதக் கிராமங்கள் மின் வசதி பெற நிதி ஒதுக்கப்படும்.

அரிஜனக் குடியிருப்புப் பகுதிகளில், மின்வசதி அளிப்பதிலும் குறை உள்ளது. கிராமங்களுக்கு மின்வசதி அளிப்பதில் பெரும் அளவுக்கு நிதி உதவி வழங்கி வரும் கிராம மின்வசதிக் கார்ப்பொரேஷன், ஏற்கெனவே மின் வசதி பெற்ற கிராமங்களுக்கு அருகாமையில் உள்ள அரிசனக் குடியிருப்புப் பகுதிகளுக்கு தெரு விளக்குப் போடுவதற்காக மாநில மின்வாரியங்களுக்குச் சலுகை அடிப்படையில் கடனுதவி வழங்கும் திட்டமொன்றை வகுத்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் 4,126 அரிஜனக் குடியிருப்பு பகுதிகள் பயனடைந்துள்ளன என்பது அண்மைக்கால அறிக்கைகளிலிருந்து தெரிய வருகிறது.

கடந்த பத்தாண்டுகளில்கிராம மின்வசதி திட்டத்திற்காக ஒதுக்கப்படும் நிதி அளவு கணிசமாக அதிகரித்துள்ளது. ஐந்தாவது திட்டத்தில் இத்திட்டத்திற்காக கிட்டத்தட்ட ரூ. 1,100 கோடி ஒதுக்கப்பட்டது. 4-வது திட்ட காலத்தில் ரூ. 445 கோடி நிதி தான் ஒதுக்கப்பட்டது.

கிராமப்புறங்களுக்கு மின் வசதி அளிக்கும் பணியைத்

துரிதப்படுத்துவதற்காக, 1969-ஆம் ஆண்டில் கிராம மின்வசதிக் கார்ப்பொரேஷன் ஏற்படுத்தப்பட்டது. கிராம மின்வசதிக் கூட்டுறவுகளை ஊக்குவிப்பதற்காகவும், கிராம மின்வசதி திட்டங்களுக்கு நிதி உதவி அளிப்பதற்காகவும், இந்தக் கார்ப்பொரேஷன் அமைக்கப்பட்டது. மின்வசதி திட்டங்கள் தகுந்த முறையில் வகுக்கப்பட்டு, அத்திட்டங்கள் மற்ற அபிவிருத்தி திட்டங்களுடன் சிறந்த முறையில் ஒருங்கிணைக்கப்படுவதற்கு வகை செய்வதுஇக்கார்ப்பொரேஷனின் முக்கியப் பொறுப்பாகும். விவசாய உற்பத்தி, தொழில் உற்பத்தி அதிகரிக்கவும் இது உதவுகிறது.

கிராம மின்வசதிக் கார்ப்பொரேஷன், நான்காவது திட்ட காலத்தில் மொத்த திட்ட ஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பகுதியை மட்டுமே கிராம மின்வசதிக்காக ஒதுக்கியது. ஆனால் ஐந்தாவது திட்ட காலத்தில், மொத்த திட்ட ஒதுக்கீட்டில் கிராம மின்வசதி திட்டங்களுக்கு மூன்றில் இரண்டு பாகத்தை இக்கார்ப்பொரேஷன் ஒதுக்கியுள்ளது.

இதுவரை இக்கார்ப்பொரேஷன் 21 மாநிலங்களில் ஒரு இலட்சம் கிராமங்களுக்கு மின்வசதி வழங்குவதற்காக 1,216 திட்டங்களுக்கு ரூ. 547 கோடி கடனுதவி வழங்க அங்கீகாரம் அளித்துள்ளது. இத்திட்டங்கள் யாவும் முடிவடைந்தவுடன், 7.50 இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் விசை கிடைக்கும். விவசாய அடிப்படையில் அமைந்த 1.20 இலட்சம் தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும்.

கிராமங்களுக்கு மின்வசதி அளிப்பதற்குப் பெருமளவுக்கு மூலதன நிதி தேவை. இதை மீண்டும் பெற, சிறிது காலம் பிடிக்கும். மூலதனமிடுவதில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது, திறமையுடன் திட்டங்களைச் செயல்படுத்துவது ஆகியவை முக்கியமாகும். இத் திட்டங்களுக்கானப் பொருள்களின் தரத்தை நிர்ணயிப்பது; கட்டுமானப் பணிகளைச் செய்வது ஆகியவற்றிற்காகும் செலவில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். தேவைப்படும் பொருள்களிலும், திட்டக் கட்டுமான பணியிலும் தரங்களை இக்கார்ப்பொரேஷன் நிர்ணயிள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் கிராமப்புற மின் விநியோக கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தியது, அன்றாட மின்விநியோக அலுவலை நிர்வகிப்பதில் பண்டம் நுகர்வோரைச் சிறந்த முறையில் பங்கு கொள்ளச் செய்வதற்கு வழி வகுத்துள்ளது. இந்த நோக்கத்துடன் மத்திய அரசு 1969-இல் 5 முன்னோடி கிராம மின்வசதிக் கூட்டுறவுகளை ஏற்படுத்தும் பணியைத் துவக்கியது. இந்த பணிகளுக்கு இக்கார்ப்பொரேஷன் நிதி உதவி அளித்தது. இந்த முன்னோடி திட்டத்தையடுத்து மேலும் மூன்று கூட்டுறவுகள் அமைக்கப்பட்டன. மேலும் இரண்டு ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றின் திட்ட அறிக்கைகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. அடுத்த சில ஆண்டுகளில்,மேலும் அதிக எண்ணிக்கையில் கூட்டுறவுகள் ஏற்படுத்தப்படும்.

கிராம வளர்ச்சிக்கான அடிப்படை வசதிகளில் மின்வசதியும் ஒன்றாகும். கிராமங்களில் அதிக அளவுக்கு மின்சாரம் பயன்படுத்தப்பட்டால், விவசாய உற்பத்தியும், தொழில் உற்பத்தியும் உயரும். கிராமங்களில் வேலை வாய்ப்பும் அதிகரிக்கும். வேலை வாய்ப்புக்காக கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு செல்வோரின் எண்ணிக்கையும் குறையும். எனவே, கிராமங்களுக்கு மின்வசதி அளிப்பதில் இந்திய அரசு முனைப்பான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

பெரம்பூர் இணைப்புப் பெட்டித் தொழிற்சாலையின் சாதனை !

பெரம்பூர் இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை, ரயில் பெட்டி உற்பத்தியில் 1975-76-ஆம் ஆண்டின் குறியளவைத் தாண்டியுள்ளது.

1975-76-இல் 477 ரயில் பெட்டி மேற்கூடுகளைத் தயாரிக்க வேண்டுமென்ற குறியளவு, ஒரு மாதத்திற்கு முன்னதாக-பிப்ரவரி மாதத்திலேயே-அடையப்பட்டு விட்டது.

இத்தொழிற்சாலை பிப்ரவரி வரை 472 ரயில் பெட்டிகளில் மின் விளக்குகள், விசிறிகள், இருக்கைகள் ஆகியவற்றை பொருத்தியுள்ளது. முழு ஆண்டில் 477 ரயில் பெட்டிகளில் இத்தகையச் சாதனங்களைப் பொருத்த வேண்டுமென்பது குறியளவு.

பிப்ரவரியில், ரயில் பெட்டிக்கான 55 மேற்கூடுகளை இத்தொழிற்சாலை தயாரித்துள்ளது. குறியளவு 39 மேற்கூடுகள் தான். இந்த மாதத்தில் தயாரிக்கப்பட்ட மேற்கூடுகளில் 6, டான்சானியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்காக அமைந்தவையாகும். இத்தொழிற்சாலை 17 ரயில் பெட்டிகளை அந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய வேண்டும். இதுவரை 10 மேற்கூடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. பிப்ரவரியில் இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை 38 ரயில் பெட்டிகளைத் தயாரித்துள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் பழுப்பு நிலக்கரியும் பெட்ரோலும்!



"**தஞ்சை** மாவட்டத்தில் மாயவரம் அருகே திருமங்கலம் என்னுமிடத்தில் பழுப்பு நிலக்கரி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

"எண்ணெய், எரிவாயுக் கமிஷன் இதைக் கண்டு பிடித்துள்ளது. இக்கண்டு பிடிப்பு மூலம் பாண்டிச்சேரியிலுள்ள பாகூரிலிருந்து தெற்கே கடலோரமாக பழுப்பு நிலக்கரிப் படிவங்கள் அமைந்திருக்கலாம் என்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

"தமிழ் நாட்டில் ஏற்கெனவே நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கப்பட்டு வருகிறது. நெய்வேலிப் பகுதியிலும் பழுப்பு நிலக்கரி பற்றிய ஆராய்வுகள் தீவிரமாக்கப்பட வேண்டும். ஏனெனில் அங்கு மேலும் அதிக அளவில் பழுப்பு நிலக்கரியும், நிலத்தடி நீரும் இருப்பதாக பூர்வாங்க ஆராய்வுகள் காட்டுகின்றன. நெய்வேலியில் சுமார் 259 சதுர கிலோமீட்டர் பகுதியில் சுமார் 200 கோடி டன் பழுப்பு நிலக்கரிப் படிவுகள் இருப்பதாக முந்தைய மதிப்பீடுகள் காட்டின. ஆனால் அங்கு 480 சதுர கிலோ மீட்டரில் சுமார் 330 கோடி டன் பழுப்பு நிலக்கரி உள்ளதாக இப்போதைய மதிப்பீடுகள் காட்டுகின்றன.

"காவிரி டெல்டாப் பகுதிக்குக் கிழக்கே கடலுக்கடியில் பெட்ரோலிய எண்ணெய் ஊற்றுக்கள் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன.

பெட்ரோல் கிடைக்குமா ?

"தமிழ் நாட்டில் நிலத்துக்கடியில் மிகத் தொன்மையான பாறைகளில் பெட்ரோலிய எண்ணெய் ஊற்றுக்கள் உள்ளதா என்று ஆராய அவசியம் உள்ளது என்று தமிழ்நாட்டில் 'ஓ.என்.ஜி.சி. நடத்திய ஆய்வுகள் காட்டுகின்றன. மேற்கு ஆஸ்திரேலியாவில் இதே வகையான பாறைகளில் எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்பதால் இப்பகுதியும் மிக முக்கியமானது என்று நிலஇயல் பௌதீக நிபுணர்கள் கருதுகின்றனர்.

"காவிரி வடிநிலப் பெரும் பகுதியில் — மேற்கு தஞ்சாவூர் பகுதியில்—புதுப்பட்டிக்கு அருகாமையில் எண்ணெய் கிடைக்கும் வாய்ப்புள்ள 2 பகுதிகளும், இராமநாதபுரம் பகுதியில் உச்சிப்புளி அருகில் எண்ணெய் கிடைக்கும் வாய்ப்புள்ள ஒரு பகுதியும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

"பரங்கிப்பேட்டையிலிருந்து கடலூர் வரை கடலுக்கு அடியில் எண்ணெய் ஊற்றுக்கள் இருக்கலாம் என்று ஆய்வுகள் காட்டுகின்றன. "அஸ்மாரா" எண்ணெய் கம்பெனிகள் 'பாக் ஜலசந்தி'யில் கடலடி எண்ணெய் ஊற்றுக்கள் பற்றி ஆய்வு நடத்தும் போது மேலும் தகவல்கள் தெரிய வரலாம்.

"காவிரி, படுகைப் பகுதியில் எண்ணெய் வர்த்தக ரீதியில் கிடைக்கவில்லை என்றாலும், எண்ணெய் கிடைக்கும் வாய்ப்புள்ள இடங்களை ஆராய எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மன்னார்குடிக்குக் கிழக்கே கடலடிப் பகுதிகள் எண்ணெய் ஆராய்ச்சிக்கு உகந்தவை. இங்கே, எண்ணெய் ஊற்றுக்கள் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. மன்னார்குடி—திருத்துறைப்பூண்டி இடையிலும், மன்னார்குடி—மாயூரம் இடையிலும் எண்ணெய் ஆராய்ச்சிக்கான சோதனைக் கிணறுகள் தோண்டப்படும்.

உருக்குத் தயாரிப்புக்கு உதவும் சுண்ணாம்புக்கல் :

"திருச்சி அருகே அரியலூரில் சுண்ணாம்புக் கல் படிவுகள் கண்டு பிடிக்கப்பட்டு உள்ளன. இங்கு 2 கோடியே 80 இலட்சம் டன் சுண்ணாம்புக் கல் இருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இங்குக் கிடைக்கும் சுண்ணாம்புக் கல் ஊதுலை, உருக்குத் தயாரிப்பு ஆகியவற்றுக்கான தரம் கொண்டது.

"தமிழ் நாட்டின் நிலத்தடிப்படிவுகளில் சுண்ணாம்புக் கல், பல்வேறு களிமண், பழுப்பு நிலக்கரி ஆகியவை இருப்பதுடன் மிக அரிதான பெட்ரோலியம், யுரேனியம், பொட்டாஷ், பாஸ்பரைட்ஸ் ஆகியவை இருப்பதற்கான வாய்ப்புகளும் உள்ளன. முதலில் நினைக்கப்பட்டதை விட இப்படிமானங்களின் கனம் அதிகமாகவும், நில இயல் பௌதீக ரீதியில் இவை சிக்கலாகவும் உள்ளன. எனவே, நிலத்தடிப் படிவுகள் பற்றி பெரிய அளவில் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.



நெய்வேலி நில நீர் :

''நெய்வேலியில் மேலும் அதிக அளவில் நில நீர் கிடைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளது என்பது மட்டுமல்லாமல் திருவான்மியூர் கோவளம் பகுதியிலும், ஆளியாறு—கோத்தலையாறு பகுதியிலும் நில நீர் வளங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பருவ மழை தவறினுல் தமிழ் நாட்டில் தண்ணீர் கிடைப்பது அரிதாகிவிடுகிறது என்பதால் இப் பகுதிகளில் நில நீர் வளங்களைப் பயன்படுத்துவது அவசியமாகும்.''

''18-வது வட அட்சரேகைக்குத் தெற்கே கரையோரக் கனிவளப் படிவுகள்'' என்னும் பொருள் பற்றி எண்ணெய் எரி வாயுக் கமிஷனும் (ஓ.என்.ஜி.சி.), இந்திய நில இயல் ஆய்வு அமைப்பும் (ஜி.எஸ். ஐ) சென்னையில் நடத்திய 2 நாள் கருத்தரங்கின் முடிவில் இந்தியநில இயல் பௌதீக ஆய்வு துணை தலைமை இயக்குநர் டாக்டர் எம்.பி.என். மூர்த்தி அவர்கள் மேற்கூறியவாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம்

''நெய்வேலியில் தற்போது பழுப்பு நிலக்கரி உற்பத்தி 30 இலட்சம் டன்னுகை உள்ளது. 1979—80-ஆம் ஆண்டில் இந்த உற்பத்தி 65 இலட்சம் டன்னுகை அதிகரிக்கக்கூடும்.

சுரங்கத்தை நவீனப்படுத்துவதற்கும், விரிவுபடுத்துவதற்குமான கருவிகளுக்கு ஏற்கெனவே வழங்குத்ல் ஆணை கொடுக்கப்பட்டுள்ளது. விரிவுபடுத்தும் பணி 1979-ஆம் ஆண்டில் பூர்த்தியாகும்.

நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் நிதி நிலையானது 1972—73-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது தற்போது நன்முக உள்ளது.

1972—73-ஆம் ஆண்டில் ட்டம் ரூ. 12 கோடியாக இருந்தது. 1975 76-ல் இது ரூ. 3 கோடியாகக் குறைந்தது. இந்த நட்டம் மேலும் குறையக்கூடும்.

1976—77-ஆம் ஆண்டில் பழுப்பு நிலக்கரி உற்பத்தி 34 இலட்சம் டன்னுகை அதிகரிக்கப்படும். தற்போது தமிழ்நாடு கிரிட்டுக்கு நெய்வேலியில் இருந்து 200 கோடி யூனிட் மின்சாரம் கிடைக்கிறது. இது 1976—77-ல் 220 கோடி யூனிட்டாக உயரும் என்ருர்.

இரண்டாவது சுரங்கத்தை வெட்டுவதற்குப் பொருளாதார ரீதியில் கட்டு படியாகக் கூடியதாக இருக்குமா என்பதற்கான அறிக்கை மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது சுரங்கத்தை வெட்டுவதற்குத் திருத்தப்பட்ட மதிப்பீடு செலவு ரூபாய் 408 கோடி. மின்சார நிலையத்துக்கு ரூபாய் 260 கோடி. முதலில் இரண்டாவது சுரங்கத்துக்கு மதிப்பிடப்பட்டது ரூ. 168 கோடி. மின் நிலையத்துக்கு ரூ. 260 கோடி.

நெய்வேலியில் மிகப் பெரிய அனல் மின் நிலையத்தை அமைப்பதற்கு,செலவு குறைவாகவே இருக்கும். தமிழ் நாட்டின் மின்சார தேவைகளை இப்பெரிய அனல் மின் நிலையத்தை கொண்டே சமாளிக்க முடியும்.''

இவ்வாறு நெய்வேலி லிக்னைட் (பழுப்பு நிலக்கரி) கார்ப்பரேஷன் தலைவர் திரு. எஸ். யக்ஞேஸ்வரன் அவர்கள் 31—3—'76 அன்று பத்திரிகைச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.





மாமல்லபுரத்தில் மற்றுமோர் சுற்றுலா மாளிகை

மாமல்லபுரம் கடற்கரைக் கோவிலிலிருந்து சுமார் ஒரு மைல் வடக்கில், தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தினுல் கட்டப்பட்டுள்ள 'நவீனக் குடில்களை'க் குடியரசுத் தலைவர் திரு பக்ருதீன் அலி அகமது அவர்கள் 18—4—'76 அன்று காலை திறந்து வைத்தார்.

அப்பொழுது அவர் பேசுகையில் சுற்றுலாத் துறையின் வசதி வாய்ப்புக்கள், மத்திய தர, ஏழை மக்களுக்குக் கிடைக்கும் வகையில் அத்துறையை மாற்றியமைக்க மத்திய,மாநில அரசுகள் முன் வர வேண்டும். இவ்விஷயத்தில் மத்திய, மாநில அரசுகள் ஒரு கூட்டு முயற்சியில் ஈடுபட்டால் கூட நல்லது'' என்று குடியரசுத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், தமிழ்நாடு சுற்றுலா வாரியம், வெளிநாட்டுப் பயணிகளைக் கவர்வதற்காக இதுவரை மேற்கொண்டுள்ள பல்வேறு முயற்சிகளைப் பாராட்டினுர்.

''உலகிலேயே இரண்டாவது இடத்தை வகிக்கும், மிக நீண்ட கடற்கரையை உடைய தமிழ்நாட்டில், வெளிநாட்டுப் பயணிகளைக் கவரக் கூடிய விதத்தில் இன்னும் பல வசதிகளைச் செய்ய வேண்டும்'' என்று அவர் கூறினுர்.

''ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள பல நாடுகள், தங்கள் வருமானத்திற்குப் பெரும்பாலும் சுற்றுலாத் துறையையே நம்பியுள்ளன. இயற்கை வசதிகள் கூட அந்த நாடுகளுக்கு அதிகம் கிடையாது. ஆனுல் இந்தியாவில் இயற்கை அள்ளிக் கொடுத்துள்ள வளங்கள் ஏராளம். ஏன் இவற்றை நாம் முழுமையாகப்பயன்படுத்தி, கொள்ளக் கூடாது'' என்று குடியரசுத் தலைவர் அவர்கள் கேட்டார்.

''கலை நிகழ்ச்சிகள் என்று கூறிக் கொண்டு, வெறும் கிராமிய நடனங்களை மட்டும் நடத்தக் கூடாது என்றும், பல்வேறு விளையாட்டு அரங்கங்களை நிறுவ வேண்டும்'' என்றும் அவர் கூறினுர்.

சுமார் ரூபாய் 40 இலட்சம் செலவில் இதே பகுதியில் கட்டப்படவிருக்கும் நவீன ஹோட்டலுக்குக் குடியரசுத் தலைவர் அவர்களால் கடைக்கால் இடப்பட்டது.

ஆரம்பத்தில் ஆளுநரின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்ரமணியன் அவர்கள் அனைவரையும் வரவேற்ருர்.

சென்னை நகரிலிருந்து மாமல்லபுரம் வரையுள்ள கடற்கரைப் பகுதியை அழகு படுத்தும் முயற்சியில், மாநில அரசு ஈடுபட்டு வருகிறது என்று அவர் சொன்னுர்.

விழாவிற்குத் தலைமை வகித்து உரையாற்றிய தமிழ்நாடு ஆளுநர் திரு கே.கே. ஷா அவர்கள் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காகத் தமிழக அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளை விவரித்தார். சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஆலோசனையின் பேரில் உதகமண்டலம், கொடைக்கானல், ஏர்க்காடு போன்ற கோடை வாசஸ்தலங்கள் மேலும் அழகு படுத்தப்பட்டு வருவதாக அவர் கூறினுர்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி வாரியத்தின் தலைவர் திரு. சி. ராமச்சந்திரன் நன்றி கூறினுர்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி வாரியத்தின் சார்பில், குடியரசுத் தலைவருக்கும், ஆளுநரின் துணைவியாருக்கும் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தினுல் ''ஜப்பான் விசிறி'' போன்ற வடிவத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 20 நவீனக் குடில்களும் மாமல்லபுரத்தின் அழகைக் காணவரும் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கும் என்பதில் ஐயமில்லை.



அம்பத்தூரில் புதிய பால்பண்ணை

"தமிழ் புத்தாண்டு பூத்துள்ள பருவம் இது. மங்கலமான இக்கட்டத்தில் அம்பத்தூரில் இப்புதிய பால் பண்ணையை இன்று தொடங்கி வைப்பது மிகவும் பொருத்தமானதாகும். இந்நன்ளில் தமிழக மக்களுக்கு என் மனமார்ந்த நல் வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பால் வெள்ளத் திட்டம்

"சென்னைப் பெருநகரின் பால் தேவைகளை நிறைவு செய்வதில், இப்புதிய பால் பண்ணை மூலம் பெரும் முன்னேற்றம் ஏற்படுமென்று நம்பலாம். நமது நாட்டில் ஆங்காங்கு நிறுவப்படும் பால் பண்ணைகள் தனித்து இயங்குபவை அல்ல; ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தை யொட்டி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளே ஆகும். சிற்றூர்களைச் சார்ந்த 20 இலட்சம் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பாலைச் சேகரித்தல்; நமது முக்கிய நகரங்களுக்கு அன்ருடம் 27.5 இலட்சம் லிட்டர் பாலைக் கொண்டு வந்து விநியோகம் செய்தல்; குழந்தை உணவு, வெண்ணெய் போன்ற ஊட்டப் பொருள்களை உற்பத்தி செய்வதற்காக மேலும் 25 இலட்சம் லிட்டர் பாலைப் பதப்படுத்துதல்; ஆகியவை 'பால் வெள்ள'த் (Operation Flood) திட்டத்தின் அம்சங்களாகும்.

"தேசியப் பால் பண்ணை மேம்பாட்டு வாரியத்தில் பணியாற்றுகின்ற டாக்டர் குரியனும், அவருடைய சகாக்களும் ஆற்றி வரும் சிறந்த பணிக்கு நான் என் ஆழ்ந்த பாராட்டுதலைத் தெரிவிக்க விரும்புகிறேன். 'பால் வெள்ளம்' என்ற இந்த மகத்தான திட்டத்திற்குத் தொடர்ந்து நல்லாதரவை நல்கி வரும் இந்தியப் பால் பண்ணை மேம்பாட்டுக் கழகத்திற்கும், தமிழ்நாடு உலக உணவுத் திட்ட நிறுவனம், 'யுனிசெப்' நிறுவனம், உணவு வேளாண்மை நிறுவனம் போன்ற உலக நிறுவனங்களுக்கும் நமது நன்றி உரியதாகும்.

"அமுல்" பால் பண்ணைத் திட்டம்

"நகர மக்களுக்குத் தரமான பாலை நியாயமான விலையில் விற்பனை செய்வது நடைமுறையில் சாத்தியமே என்பதை நமது முக்கிய நகரங்களிலுள்ள நவீன பால் பண்ணைகள் நிரூபித்துள்ளன. இத்துறையில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாகவே, பம்பாய் பெருநகரப் பால் பண்ணைத் திட்டம் முன்னேடியாகச் செயல்பட்டு வருகிறது. கிராமங்களில் பால் உற்பத்திக்கும், நகரங்களில் பால் தேவைக்கும் ஓர் இணைப்பை ஏற்படுத்துவதில் 'அமுல்' பால் உற்பத்தித் திட்டம் நல்ல முன்மாதிரியாக இயங்குகிறது. இதை பின்பற்றி பிறஇடங்களிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதுடில்லியிலும் ஒரு நவீன பால் பண்ணையை நாம் அமைத்துள்ளோம். தரமாக்கப்பட்ட பால் பதமாக்கப்பட்ட பால், குளிர்பதனம் செய்யப்பட்ட பால், ஆகியவற்றை உற்பத்தி செய்ய இப்பண்ணையில் வசதிகள் உள்ளன. மொத்தமாகப் பாலை விற்பனை செய்யும் ஏற்பாட்டு முறையும், கொண்டு வரப்பட்டுள்ளது.

இருபது ஆண்டு கால முயற்சி

"இன்றியமையாத இந்த பால் வளப் பெருக்கத் தொழிலில் நமது தேவைகளுக்கேற்ப, நாம் மேம்பாடு காணக் கொண்டுள்ள ஆர்வத்துக்கும், உறுதிக்கும் இச்சாதனைகள் சான்ருக அமைகின்றன. கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக நாம் மேற்கொண்டு வருகின்ற இத்தகைய முனைப்பான முயற்சிகளின் பயனாக ஆராய்ச்சி, கல்விப் பயிற்சி ஆகிய துறைகளுக்குத் தேவையான அமைப்பை நாம் இப்போது உருவாக்கியுள்ளோம். வருங்காலத்தின் அறைகூவல்களை ஏற்க, நமது தேசியப் பால்பண்ணை ஆராய்ச்சி நிறுவனமும், இந்தியக் கால்நடை ஆராய்ச்சி நிறுவனமும், இத்துறைக்குத் தேவையான அறிவியல் அறிஞரையும், ஆசிரியர்களையும், தொழில் வல்லுநர்களையும் உருவாக்கித் தருகின்றன. இதுதவிர, விலங்கியல் விஞ்ஞானம், பால் பண்ணைத் தொழில் நுட்பம் போன்ற துறைகளில் நமது நாட்டின் தேவைகளை நிறைவு செய்திட மாநில அளவில் வேளாண்மைப் பல்கலைக் கழகங்களும் ஆராய்ச்சி நிறுவனங்களும் பரவலாக நிறுவப்பட்டுள்ளன.

"கிராமங்களில் பால் உற்பத்தி செய்யும் எளிய உழவர் பெருமக்களும் இப்பால் பண்ணைத் திட்டங்களில் பங்கு கொள்ளச் செய்து, முன்னேற்றத்தில் அவர்களும் முதலீடு செய்ய வழி வகுப்பதே, இத்திட்டங்களின் வெற்றிக்கு இன்றியமையாத தேவை என்பது அனைத்து நாடுகளும ஏற்றுள்ள கருத்து. நம் நாட்டு அனுபவமும் இந்த உண்மையையே உணர்த்தியுள்ளது.

பால் உற்பத்தியாளரின் வருவாயை இரட்டிப்பாக்க......

"பால் வெள்ளத் திட்டத்தின் கீழ் 'ஆனந்த்' அமைப்பு முறையில் 18 புதிய கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இந்தக் கூட்டுறவுச் சங்கம் ஒவ்வொன்றும் சமூகப் பொருளாதார மாற்றத்தை உருவாக்கும் கருவியாகும். இத்தகைய பால் பண்ணைக் கூட்டுறவுச் சங்கம், நாட்டுப்புறத்தில் உள்ள சிறிய எளிய பால் உற்பத்தியாளரின் வருவாயை இரட்டிப்பாக்குவதுடன், நவீன விஞ்ஞான வசதிகளையும், பயன்களையும் நமது நாட்டுப்புற மக்கள் பெறுவதற்கான வாய்ப்பையும் வழங்குகின்றது. பெரும்பாலும், 'ஆனந்த்' முறைக் கூட்டுறவு சங்கம் ஒரு கிராமத்தில் தொடங்கும்போதுதான், விஞ்ஞானத்துறையின் பிரதிநிதி ஒருவரை முதன் முறையாக அக்கிராமம் காணமுடிகிறது. கிராம மக்களுக்குத் தொண்டாற்ற வரும் கூட்டுறவுச் சங்கக் கால்நடை மருத்துவர் தான், இந்த முதல் பிரதிநிதியாக விளங்குகிருர்.

பயன்தரும் பால் கூட்டுறவுச் சங்கங்கள்

"முக்கியமான பால் உற்பத்தித் தளங்கள் அனைத்திலும் இந்தக் கூட்டுறவு அமைப்பு முறை இப்பொழுது பரவி வருகிறது. தமிழ்நாட்டில் மட்டும் கோவை, சென்னை, மதுரை, உதகை, வேலூர் ஆகிய மாநகரங்களில், பால் கூட்டுறவுச் சங்கங்கள் 'ஆனந்த்' அடிப்படையில் உருவாகியுள்ளன. ஈரோடு பகுதியில் ஏற்கெனவே 5,000-க்கும் மேற்பட்ட சிறு உழவர்களும், நிலமற்ற உழவுத் தொழிலாளர்களும் தாங்கள் உற்பத்தி செய்யும் பாலைத் தங்கள் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்று ஆதாயம் அடைகிருர்கள். இக்கூட்டுறவுச் சங்கங்கள், உழவரின் ஆவினங்களை உயர்தரக் காளைகளுடன் இனப் பெருக்கம் செய்யவும், எருமை இனங்களை வளப்படுத்தவும், சீர்முறை நிரூபண மாதிரிப் பாற்பண்ணைகள் அமைக்கவும் அவர்களுக்கு உதவி செய்கின்றன. மேலும் பால் வெள்ளத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு 'ஆனந்த்' அமைப்பு முறை கூட்டுறவுச் சங்கத்திற்கும் கால்நடைத் தீவனத் தயாரிப்பு ஆலை ஒன்று தனியாக நிறுவப்படும். இத்தகைய மூன்று ஆலைகள் நிறுவப்பட்டுவிட்டன. மேலும் 8 ஆலைகள் நிறுவப்பட்டு வருகின்றன.



புதிய பால்பண்ணையைக் குடியரசுத் தலைவர் திறந்து வைக்கிறார்.

பாமர மக்களின் வருவாயை உயர்த்திடுவோம்!

"பால் வெள்ளத் திட்டங்களை நிறைவேற்றுவதில், தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு இணையாக விரைவில் முன்னேறும் என்பதற்கு இன்று தொடங்கப்படுகிற இப்புதிய பால் பண்ணை ஓர் அறிகுறியாகும் என்று நம்புகிறேன். இன்று தமிழ்நாட்டில் புதியதோர் எழுச்சி ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் "பால்வெள்ளம்" போன்ற ஆக்கத் திட்டங்களை மேலும் ஊக்கத்துடனும், உறுதியுடனும், செயற்படுத்த முடியும்; பால் உற்பத்தி அளவை உயர்த்தும் வகையிலும், நகரப் பாமர மக்கள் நாட்டுப்புறப் பாமர மக்கள் ஆகிய இரு சாராரின் உண்மை வருவாய் நிலையை உயர்த்தும் வகையிலும் செயல்படுத்த முடியும்.

பால் வளம் பெருக்கிப் பயன் மிகு பெறுவோம்!

இக்கருத்தைப்பெருமிதத்தோடு நினைவில் இருத்திக் கொள்ளும்படிக் இங்கு கூடியுள்ள அனைவரையும், பால்பண்ணை நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டுப் பால் பண்ணை இயக்கத்திற்கு வளர்ச்சிப் பொறுப்பேற்றுள்ள தலைவர்கள், இம்மாநிலத்தின் பால்பண்ணை உற்பத்தியாளர்கள், பாலைப் பயன்படுத்தும் பொதுமக்கள் ஆகியோரின் சேவைக்கு மீண்டும் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் நன்ளாக இந்நாள் அமைய வேண்டுமென்று நான் விரும்புகிறேன். பால்வளப் பெருக்கப் பணியினை ஓர் அறைகூவலாக மட்டுமல்ல, ஒரு நல் வாய்ப்பாகவும் நாம் கருதுவோமாக. நகர்ப்புறங்களில் பாலைப் பயன்படுத்துவோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இது ஒரு நல் வாய்ப்பாகும். நாட்டுப்புறங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் நவீன, விஞ்ஞான முறைகளை மேற்கொள்ளவும், சமுதாய நீதியின் நடைமுறைப் பலன்களை அவர்கள் பெறவும், இது ஓர் அரிய வாய்ப்பாகும்.

"புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இந்த அம்பத்தூர் பால் பண்ணையைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். சென்னை மாநகரில் பாலைப் பயன்படுத்தும் பொது மக்களின் நலனுக்காகவும், தமிழ்நாட்டிலுள்ள கிராமபால் உற்பத்தியாளர் அனைவரின் நலனுக்காகவும் தொண்டாற்ற இப்பண்ணை தன்னை அர்ப்பணித்துக் கொள்ளட்டும். இப்பண்ணை, தொண்டுக்குத் தன்னைக் காணிக்கையாக்கும் என்ற நம்பிக்கையில் பெருமகிழ்ச்சியுடன் இப்பால் பண்ணையைத் தொடங்கி வைக்கின்றேன்."

வணக்கம்.
ஜெய்ஹிந்த்.

[சென்னைக்கு அருகில் உள்ள அம்பத்தூரில் தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் இரண்டாவது பால் பண்ணையை 16-4-1976 அன்று

இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமது அவர்கள் திறந்து வைத்து ஆற்றிய ஆங்கில உரையினைத் தமிழ்நாடு அரசின் உணவுத் துறை செயலாளர் திரு. க. திரவியம் ஐ. ஏ. எஸ். அவர்கள் தமிழாக்கம் செய்தார்.]

அம்பத்தூரில் ரூபாய் 2.55 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ள புதிய பால் பதனிடும் நிலையத்தை இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமது அவர்கள் 16—4—76 அன்று காலை துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு பால் வள நிறுவனத்தின் சார்பில், மாதவரம் பால் பண்ணையோடு இது இரண்டாவதாக அமைக்கப்பட்ட நிலையமாகும்.

இந்த நிலையம் நாள்தோறும் 2 இலட்சம் லிட்டர் பாலைப் பதனிடும் திறன் கொண்டது. மாதவரத்தில் உள்ள நிலையம் இப்போது நாள்தோறும் 1.60 இலட்சம் லிட்டர் பாலை பதனிட்டு வழங்கி வருகிறது.

அம்பத்தூர் பால் பண்ணைத் துவக்க விழாவிற்குத் தலைமை வகித்த தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் பேசுகையில், இப் புதிய பால் நிலையம், மொத்தமான அளவில் பதனிட்டு விற்பனைக்கு அனுப்பும் விதத்தில் இங்கு இயந்திர முறை உருவாக்கப்பட்டிருக்கின்றன என்றும், மொத்த இயந்திரத்தில் 60 சதவிகிதக் கருவிகள் நம் நாட்டிலேயே தயாரிக்கப்பட்டவை என்றும், 40 சதவிகித பாகங்கள்தான் வெளி நாட்டிலிருந்து (ஸ்வீடன்) இறக்குமதி செய்யப்பட்டவை என்றும் தெரிவித்தார்.

நிலமில்லா ஏழைகளும், வேளாண்மைத் தொழிலாளர்களும் அதிக வருவாய்ப் பெறுவதற்கு மாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு ஆகிய துறைகளை இலாபகரமாக்க வேண்டும் என்பதே அரசின் நோக்கம் என்றும் அவர் சொன்னார்.

கிராமப் பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கம் அளிப்பதன்மூலம் கால்நடை வளர்ப்பில் பலர் ஈடுபட்டு, அதன் மூலம் வேலைவாய்ப்பும், வருவாய்ப் பெருக்கமும் ஏற்பட்டு, அவர்களுடைய வாழ்க்கைத்தரமும் உயர வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும் ஆளுநர் அவர்கள் கூறினார்.

ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் குடியரசுத் தலைவர் அவர்களையும், ஆளுநர் அவர்களையும், மற்றவர்களையும் வரவேற்றார். வரவேற்புரை ஆற்றுகையில் அவர், பால் உற்பத்தியாளர் — வாடிக்கையாளர் ஆகிய இரு சாராருக்கும் நியாயமான விலையில் பால் விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறினார்.

ஆரம்பத்தில் குடியரசுத் தலைவருக்கு இந்த பால் பண்ணையின் மூத்த தொழிலாளர்கள் மாலையிட்டு வரவேற்றனர்.

இந்த நிலையத்தின் சார்பில் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு தஞ்சாவூர் பஞ்சலோகத் தட்டை தமிழக ஆளுநர் திரு கே. கே. ஷா அவர்கள் பரிசளித்தார்.

நிருவாக இயக்குநர் திரு. எல். எம். மெனிஸிஸ் அவர்கள் நன்றி கூறினார்.

புதிதாகத் துவக்கப்பட்டுள்ள அம்பத்தூர் பால் பண்ணை கிராமப்புறங்களின் வருவாயைப் பெருக்கவும், சென்னை நகர மக்களின் பால் தேவையை ஈடு செய்யவும் உதவிடும் என்பது திண்ணம்.



அம்பத்தூரில் அமைக்கப் பெற்றுள்ள புதிய பால் பண்ணையின் வெளித் தோற்றம்.

''பால் வெள்ளம்'' என்ற உலக உணவுத் திட்டத்தின் கீழ் இந்தியா முழுவதற்கும் 1970—77-க்கு மொத்தம் அளிக்கப்பட்ட 100 கோடி ரூபாயில், 8.87 கோடி ரூபாய் தமிழ் நாட்டிற்கு ஒதுக்கப்பட்டது. இந்த நிதியைக் கொண்டு தமிழ் நாட்டில் பால் வளம் பெருக்கப்பட்டு, இந்த இரண்டாவது நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது.

''மக்களை ஒருங்கிணைக்கவே மொழிகள் பயன்பட வேண்டும்''.

தமிழ், சமஸ்கிருதம், மற்ற இந்திய மொழிகளை ஆராய்வதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ள இந்த ஆராய்ச்சிக் கழகத்தின் புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இரண்டு ஆண்டுகளுக்கும் குறைவான காலத்துக்கு முன்பு, மதிப்புமிக்க முன்னாள் ராஷ்டிரபதி திரு வி. வி. கிரி இந்தக் கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டினார். இக்கழகத்தின் நிர்வாகத் தலைவர் திரு கே. கே. ஷாவையும் மற்ற உறுப்பினர்களையும், அவர்கள் இக்கழகத்தின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் ஆவலுடன் நிறைவேற்றுதற்காகப் பாராட்டுகிறேன். இந்திய மொழிகளை ஒப்பிட்டுப் பார்க்கும் ஆராய்ச்சியை மேற்கொள்ள அவர்கள் தீர்மானித்திருப்பதையும், அம்மொழிகளின் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றைத் தீவிரமாக ஆராய்வதையும் வரவேற்கிறேன்.

'மக்களின் வாழ்க்கையில், மொழிகள் சக்திவாய்ந்த அம்சங்களாக உள்ளன. எனவே, அந்த மொழிகள், மக்களை ஒருங்கிணைக்கும் வழியாகப் பயன்படுத்தப்பட வேண்டுமேயன்றி, அவர்களைப் பிரிக்கக்கூடாது. வெறும் பாரபட்ச உணர்வு அல்லது தப்பெண்ணம் காரணமாகவே ஒருவரின் சொந்தமொழியில் அவருக்குள்ள பற்றுதல், சில நேரங்களில் குறுகிய, மொழிவெறிப் போக்காகக்கூட உருமாறிவிடுகிறது. மொழிகள், மொழி வரலாறு பற்றிய அறிவியல்பூர்வ ஆராய்ச்சி, சகிப்புத் தன்மையை வளர்க்கும் என்று நான் நம்புகிறேன்; ஒருவர் தமது சொந்த மொழியைப் பற்றி மட்டுமல்லாமல் மற்ற மொழிகளையும் அதைப் போலவே அறிந்து கொள்ள இதனுல் இயலும்.

''அருமையான இலக்கியப் பாரம்பரியம் கொண்ட குறிப்பிடத்தக்க மொழிகள் சிலவற்றில் தங்களது கழகம் ஆய்வு மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. தமிழ்மொழி, அதன் தொன்மையான நீண்டகால செழுமைக்காக உலக மொழிகளுக்கிடையே முழுமையான தனிச் சிறப்புக்கொண்டிருக்கிறது. தமிழ்மொழி, பழைமையானதும் நவீனமானதும் ஆகும். மகத்தான பண்டையச் சிறப்புக்களுடன்கூட அது என்றும் புதியதாகவும், இளமையானதாகவும் ஊக்கமிக்கதாகவும் தொடர்ந்து விளங்குகிறது. தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தின் ஆழமும் அளவும், அதன் பரந்த மனப்பான்மை, பொது நோக்குத் தன்மை ஆகியவற்றைப் போலவே உள்ளன.

''பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே மாபெரும் சங்க காலத் தமிழ்க் கவிஞர் ஒருவர் **''யாதும் ஊரே; யாவரும் கேளிர்''** என்று அறிவித்தார். உலக மனப்பான்மை கொண்ட இதே செய்தியை, ஞானியும் கவியுமாகிய வள்ளுவர் உறுதிப்படுத்தினார். அவர் **''ஒத்த தறிவான் உயிர் வாழ்வான்''** என்று கூறுகிறார். நவீன காலத்துக்கு வருவோமானால், நவீன தமிழ் மறுமலர்ச்சித் தந்தையாகிய மகாகவி சுப்பிரமணிய பாரதி **''செப்பு மொழி பதினெட்டுடையாள்; எனின் சிந்தனை ஒன்றுடையாள்''** என்று பாரதத் தாயைப் போற்றுகிறார். மற்றவர்களின் மொழியில் புலமை பெற்ற ஒரு மொழிக் குழுவின் கவிதை ஓவியம் ஒன்றை அவர் வரைந்துள்ளார். நம்முடைய இப்பெரும் நிலத்தில் மக்கள் அனைவரும் அமைதியுடனும ஒற்றுமையுடனும் வாழ்கிறார்கள். இந்த மாபெரும் கவிஞர்கள்—தீர்க்கதரிசிகளின் கனவுகளை நிறைவேற்ற வேண்டியது நமது கடமையாகும்.

''நீங்கள் ஆழ்ந்து ஆராயும் இன்னொரு மொழி சமஸ்கிருதம் என்று அறிந்து மகிழ்கிறேன். நமது சிந்தனையிலும் கலாசாரத்திலும் முழுமையாக ஊடுருவும் சக்தி கொண்டது இந்த மொழி. பல்லாண்டுக் காலமாக இந்தியாவை இணைக்கும் ஒரு மாபெரும் சக்தியாக அது விளங்கியுள்ளது. கேரளத்திலிருந்து காஷ்மீர் வரையில் நாடு முழுவதிலுமுள்ள கல்வித்துறை நிபுணர்களும், தத்துவ மேதைகளும், கவிஞர்களும் சமஸ்கிருத மொழியின் வளர்ச்சிக்கும் இலக்கியத்துக்கும் பங்காற்றியுள்ளனர். வட இந்திய மொழிகள் சமஸ்கிருத மொழியிலிருந்து தோன்றியவையாகும். தென்னிந்திய மொழிகளில் பல சமஸ்கிருத மொழியால் வளமடைந்தன.

''பல்வேறு மொழி, கலாச்சார மண்டல, மதக் குழுவினருக்கிடையே நல்லெண்ணப் பாலம் கட்டி, தேச ஒற்றுமையைப் பலப்படுத்துவதே தற்போதைய தேவையாகும், தமிழ், சமஸ்கிருதம், மற்ற மொழிகளின் ஆராய்ச்சி, அந்த மொழிகளுக்கிடையே நல்லெண்ண உணர்வை மேம்படுத்தி, எல்லா மொழிகளின் செழிப்புக்கும் வகை செய்யும் என்று நான் நம்புகிறேன்

வாழும் உயிர்களைப் போலவே நமது மொழிகளும் அவற்றின் சுற்றுப்புறச் சூழ்நிலைகளிலிருந்தே உயிர் வாழ்கின்றன. அவை ஒன்றுக்கொன்று தாராளமாகக் கடன் வாங்கியுள்ளன. அவ்வாறு அவை தம்மின் தற்போதைய மாபெரும் நிலைக்கு வளர்ந்துள்ளன. நமது இந்திய மொழிகளின் தீவிர வளர்ச்சி, அண்மைக் காலத்தில் அடைந்துள்ள குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றாகும். கேரள மாநில மொழிகள் கழகம் பிரசுரித்த 444-ஆவது புத்தகத்தைத் திருவனந்தபுரத்தில் வெளியிடும் பேறு நேற்றுஎனக்குக் கிட்டியது. பல்வேறு விஞ்ஞானப் பாடப் புத்தகங்களை அவர்கள் வெளியிட்டுள்ளதையும் மேலும் அத்தகைய புத்தகங்கள் பலவற்றை வெளியிட அவர்கள் திட்டமிட்டிருப்பதையும் அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். மொழிகள் பற்றிய தோல்விகரமான கருத்து வேறுபாடுகள் பலவற்றையும் புதைத்துவிட்டு, நமது மொழிகள் அனைத்தையும் வளப்படுத்தும் ஆக்கப்பணியில் நாம் முனைந்து ஈடுபடும் நேரம் வந்துவிட்டது. நவீன விஞ்ஞானச் சிந்தனைகளை அறிவிக்கும் தகுதி வாய்ந்த சாதனமாக மொழிகள் ஆக்கப்படவேண்டும்.

''நமது மொழிகள் பற்றிய நம் கொள்கை தெளிவானது. தாய்மொழிக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அதுவே கல்வி போதனைக்குரிய மொழியாகும். எல்லா மண்டல மொழிகளும் அந்தந்தப் பகுதிகளின் சட்டமன்றம் மற்றும் நீதிமன்ற மொழியாக ஆக்கப்படும். நம் நாட்டைப் போன்ற பல மொழிகள் கொண்ட பரந்த ஒரு நாட்டில் தேச ஒற்றுமையை வளர்ப்பதற்கு ஒரு பொதுவான இணைப்பு மொழியை அபிவிருத்தி செய்ய வேண்டியது அவசியமாகும். வட இந்தியாவில் பெரும் எண்ணிக்கை மக்களால் பேசப்பட்டு, நாட்டின் இதர பெரும்பகுதி மக்கள் புரிந்து கொள்ளும் இந்தி அல்லது இந்துஸ்தானி மொழி ஒரு பொது மொழியாக விளங்க மிகவும் பொருத்தமானது என்பதில் அபூர்வ தீர்க்க தரிசனம் கொண்ட மகாத்மா காந்தி திருப்தியடைந்தார். அவர் 1920 ஆம் ஆண்டுவாக்கில் தட்சிண பாரத் இந்திப் பிரச்சார சபையைத் தோற்றுவித்தார். கடந்த அரை நூற்றாண்டுக் காலத்துக்கும் மேலாக அந்த சபை நல்ல பணி ஆற்றிவருவதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். இந்திமொழியைப் பரப்பும் பணிக்கு ஆழ்ந்த பரஸ்பர நல்லெண்ண உணர்வும் எல்லையற்ற பொறுமையும் தேவையாகும்.

உலகின் முதலாவது அனைத்துலக மொழியாக ஆங்கிலம் விரைந்து முன்னேறி வருகிறது. அதுவே நவீன விஞ்ஞான—தொழில்நுட்பத் துறைக்கான மொழியாகவும் உள்ளது. நமது அறிஞர் சமுதாயம், ஆங்கில மொழியில் நல்ல புலமை கொண்டிருக்கிறது. எனவே அந்த மொழியை நாம் கைவிட இயலாது. எனினும், நமது ஆங்கில அறிவை நமது சொந்த மொழிகளின் அபிவிருத்திக்காக நாம் உபயோகிக்க வேண்டும். அவற்றின் வளர்ச்சிக்கு நாம் அணை போடக்கூடாது.

குடியரசுத் தலைவர் கருத்துரை

''கவிஞர் ரவீந்திர்நாத் தாகூர், பல்வேறு இந்திய மொழிகளையும் ஒரு மலரின் இதழ்களுக்கு ஒப்பிட்டார். இதழ்கள் தனித்தனியாக இன்னமும் இருந்தபோதிலும், மலரின் ஒருங்கிணைந்த பகுதியாக அவை உள்ளன; மலரின் அழகுக்கு அவை ஒன்றுகூடி அழகூட்டுகின்றன.

''நாட்டின் அறிவியல் தலைநகரம் என்று மதிக்கப்படும், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சென்னை மாநரில் துவக்கப்பட்டுள்ள இந்த மொழி ஆராய்ச்சிக் கழகம், நமது மொழிகளுக்கிடையே நல்லெண்ணத்தையும் ஒற்றுமையையும் மேம்படுத்தும் தேச நிர்மாண முயற்சியை மேற்கொண்டுள்ளது. உங்கள் பணியால் நீங்கள் நமது மொழிகளின் சிறப்புத் தன்மைகளை நெடுந்தொலைவு பரவலாகப் பரப்புவீர்கள் என்று நான் நம்புகிறேன். இம்முயற்சியில் தாங்கள் முழு வெற்றி காண எனது வாழ்த்துக்கள்.''

''ஜெய்ஹிந்த்.''

சென்னை எழும்பூரில் தமிழ், சமஸ்கிருதம் மற்றும் இதர இந்திய மொழிகளுக்கான ஆராய்ச்சி நிலையத்திற்காகக் கட்டப்பட்டுள்ள கட்டடத்தை 15-4-'76 அன்று மாலை 4-30 மணிக்குத் திறந்து வைத்து இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமது அவர்கள், ஆற்றிய உரை.

விழாவிற்குத் தலைமை வகித்த தமிழ்நாடு ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் பேசுகையில் தமிழ் மொழிக்கும், சமஸ்கிருத மொழிக்கும் உச்சரிப்பு — அர்த்தங்கள் ஆகிய பல அம்சங்களில் ஏராளமான ஒற்றுமை இருப்பதை தமிழ் கற்றுக் கொண்டிருக்கும்போது கண்டுபிடித்ததாகக் கூறினார்.

நமது மொழிகளின் தொன்மை, கலாச்சாரம் பற்றி வெளிநாட்டினர் கூறி வரும் தவறான எண்ணங்களை நீக்கவும், உண்மையைக் கண்டுபிடிக்கவும், குழப்பங்களை நீக்கவும் பண்டிதர்களும், உண்மையை விரும்புபவர்களும் பாடுபட வேண்டும் என்று ஆளுநர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இந்த நிறுவனத்திற்கு திரு. எம். ஏ. முத்தையா செட்டியார் ரூபாய் 3 இலட்சம் நன்கொடை வழங்கியுள்ளதாகவும், ஆண்டுதோறும் ரூபாய் 20,000 வருவாய் கிடைக்கும்படியாக ஒரு அறக்கட்டளையை நிறுவ முன் வந்துள்ளதாகவும் ஆளுநர் அவர்கள் தன் உரையில் தெரிவித்தார்.

இந்திய விடுதலைப் போராட்ட வீரர் டாக்டர் என். சந்திரகாந்த் அவர்கள் இந்தி மொழியில் எழுதிய தமிழ் பக்தி நூலை ஆளுநர் அவர்கள், குடியரசுத் தலைவர் அவர்களிடம் அளித்தார்.

குடியரசுத் தலைவர் அவர்களுக்கும் அவரது மனைவி திருமதி பீகம் பக்ருதீன் அலி அகமதுக்கும் கீதா உபதேச உருவச் சிலையும், புல்லாங்குழல் ஊதும் கிருஷ்ணன் உருவச் சிலையும் அன்பளிப்பாக அளிக்கப்பட்டன.

இந்த நிறுவன தலைவர் திரு. பி.வி. ராஜமன்னார் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், எந்த விதமான பாரபட்சமோ வேறுபாடுகளோ இன்றி இந்த நிறுவனம் உண்மையான ஆராய்ச்சிக்காகப் பாடுபடும் என்றார்.

திரு வைத்திய சுப்பிரமணியம் அவர்கள் வாழ்த்துச் செய்திகளை வாசித்தார். திரு முத்தையா செட்டியார் அவர்கள் நன்றியுரையுடன் விழா முடிந்தது.

அட்டைப்பட விளக்கம்

தமிழ்நாடு ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் திருநெல்வேலி மாவட்டச் சுற்றுப் பயணத்தின்போது வேளாண்மைத் தொழிலாளர்களின் குறைகளைக் கேட்டறிகிறார்.



முஸ்லிம் பெருமக்களுக்கு குடியரசுத் தலைவரின் வேண்டுகோள்!

''காலமாற்றம், தேவைகளுக்கு ஏற்ப நவீன கண்ணோட்டத்துடன் இஸ்லாமியக் கோட்பாடுகளை முஸ்லீம்கள் கடைப்பிடிக்க வேண்டும்'' என்று இந்தியக் குடி**யரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமது** அவர்கள் கூறினார்.

சென்னை, தேனும்பேட்டையில் உள்ள எஸ். ஐ. ஈ. டி. மகளிர் கல்லூரியில் 25 இலட்சம் ரூபாய் செலவில் ஓராண்டுக் காலத்திற்குள் கட்டப்படவிருக்கும் புதிய பல அடுக்கு மாடிக் கட்டிடத்திற்கு 16—4—'76 அன்று காலை நடைபெற்ற கால்கோள் விழாவில் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் பேசுகையில் முஸ்லிம் சமுதாய மக்களுக்குப் பின்கண்ட அறிவுரைகளை வழங்கினார். ''வெளிப்படையாகப் பேசிப் பழக்கப்பட்டவன்'' என்று கூறித் தமது பேச்சை அவர் துவக்கினார்.

''முஸ்லிம்கள் இணக்கமில்லாத பிடிவாத குணத்தவர்கள் ; மாறுதலை விரும்பாமல் தேக்க நிலையில் இருப்பவர்கள் என்ற வகையில் இருக்கவோ, செயல்படவோ கூடாது. அப்படி அவர்கள் இருந்தால் அவர்கள் இஸ்லாமிய நெறிக்குச் சேவை செய்தவர்களாக ஆக மாட்டார்கள்; இந்தியாவுக்கும் சேவை செய்தவர்கள் ஆகமாட்டார்கள்.

''கல்வி அறிவு பெறுவது, ஒரு வர்க்கம்—ஒரு இனத்திற்கு மட்டும் உரியதல்ல. ஆண்—பெண் என்ற இன வேறுபாடு அல்லது பாகுபாடின்றி, அனைவருக்கும் கல்வி அறிவு கிட்ட வேண்டும் என்பதுதான் இஸ்லாமியக் கோட்பாடு. பண்டித நேரு அவர்கள் அடிக்கல் நாட்டிய இந்தக் கல்லூரி இன்று இவ்வளவு மகத்தானதாக வளர்ந்துள்ளது. இன்று நேரு அவர்கள் உயிருடனிருந்திருந்தால் மிக்க மகிழ்ச்சி அடைந்திருப்பார்.

''முஸ்லிம் சட்டத்தைத் திருத்த உத்தேசமில்லை என்று பல முறை நானும், பிரதம மந்திரியும் தெளிவு படுத்திக் கூறிய பிறகும், இந்தச் சந்தேகம் ஏன் எப்படி பஷீர் அகமதுக்கு வந்தது என்று எனக்குப் புரியவில்லை. ஜாதிக் கட்சிகள், ஒரு சில அரசியல் வாதிகளின் பிரச்சாரம் இவரையும் பிடித்துக் கொண்டு விட்டதோ என்று ஐயுறுகிறேன்.

கல்விக் கூட விழாவில் இது போன்ற தேவையில்லாத, சர்ச்சைக்கிடமான சங்கடமான பிரச்சினை கிளப்பப்பட்டது குறித்துக் குடியரசுத் தலைவர் மனக்குறை தெரிவித்து, 'பிரச்சினை கிளப்பப்பட்ட காரணத்தால் இதற்குத் தான் பதிலளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது'. என்று குறிப்பிட்டார்.

''நாம் முஸ்லீம் என்றோ — சிறுபான்மையினர் என்றோ முஸ்லிம்கள் எண்ணக் கூடாது. இந்து மக்களானாலும் சரி, முஸ்லிம்களானாலும், வேறு எந்த மதத்தினரானாலும் அவர்கள் அனைவரும் இந்திய நாட்டுக் குடி மக்கள் என்று உணர்ந்து கடமை ஆற்ற வேண்டும். அரசியல், பொருளாதார விவகாரங்களில் இந்து-முஸ்லிம், மெஜாரிட்டி-மைனாரிட்டி என்ற பாகுபாடுகளுக்கு இடம் கிடையாது''

இதே போல வாரிசுச் சட்டம் பற்றியும், குடியரசுத் தலைவர் குறிப்பிட்டார் : ''இது முஸ்லிம்களுக்குப் பொருந்தும். கட்டாயம் இல்லை; பின்பற்றித்தான் ஆக வேண்டும் என்ற நிர்பந்தமில்லாத போது தேவையில்லாத சந்தேகங்கள் கிளப்பப்படுவானேன்? இந்து-முஸ்லிம் பிரச்சினைகள் இழுக்கப்படுவானேன்'' என்று குடியரசுத் தலைவர் கேட்டார்.

இந்திய நாட்டு வளர்ச்சியில் பங்கு கொண்டு உழைக்கும்படி முஸ்லிம்களை அவர் கேட்டுக் கொண்டார். மொழி அல்லது இனத்தின் பெயரால் ஏற்படும் எந்த நாடும் சுவர்க்க பூமி அல்ல என்பதைக் கடந்த கால நிகழ்ச்சிகள் நிரூபித்துக் காட்டுவதாகச் சொன்னார். இந்தியாவில் வாழும் நாம் அனைவரும் இந்தியர்கள் என்றும், ஏழ்மை, அறியாமை ஆகியவற்றை ஒழிப்பதில் ஒன்றுபட்டுச் செயல்படுவோம் என்றும் குடியரசுத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்.



தெரிந்து கொள்வோம்!

மாணவர் அரங்கம்

விலங்குகள், பறவைகள், மற்றும் சிற்றுயிர்ப் பிறவிகள் ஆகியவற்றில் சிலவற்றை நாம் பார்த்திருக்கிறோம். பலவற்றைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம்; சிற்சிலவற்றின் சிறப்பியல்புகள் நமக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை. அத்தகைய சிறப்பியல்புகள் இங்கே தொகுத்துத் தரப் பட்டுள்ளன.

மாணவர்களுக்குப் பயன் தரும் பொது அறிவுச் செய்திகள் இவை! படித்துப் பயன்பெறுக!

*பிறக்கும் போது ஒரே ஒரு பவுண்டு எடையுள்ள கரடிக் குட்டி, ஒரு வயதை அடையும் போது ஏறக்குறைய 100 பவுண்டு எடைபெற்று விடுகிறது.

*யானையின் துதிக்கையில் எலும்பே கிடையாது; முழுதும் தசைதான். அது, துதிக்கை நுனியில் உள்ள கூர்மை மிகுந்த பகுதியைக் கொண்டு, கீழே விழுந்த ஊசியைக் கூட எடுத்துவிடும். யானையால் நூறாண்டுகள் உயிர் வாழ முடியும்.

*ஆந்தையால் தனது விழிகளை அங்கும் இங்கும் அசைக்க முடியாது.

*முள்ளம்பன்றி, ஒன்றை ஒன்று குத்திக் கொள்ளாது சண்டையிட்டுப் பழகிக் கொள்ளும் திறமை பெற்றுள்ளது.

*ஒட்டகத்தின் முதுகு பார்ப்பதற்கு வளைந்திருப்பது போலத் தோன்றினாலும் அதனுடைய முதுகெலும்பு நேராகத்தான் உள்ளது. சதைதான் கோணலாக உள்ளது. நாலுகால் கொண்ட விலங்கினத்தில் ஒட்டகத்திற்கு மட்டும்தான் நீந்தத் தெரியாது. உப்பு நீரைக் குடிப்பதில் ஒட்டகத்திற்கு விருப்பம் அதிகம்.

*தனக்குப் பின் புறம் உள்ள பொருள்களை, கழுத்தைத் திருப்பாமல் பார்க்கும் திறமை ஒட்டைச் சிவிங்கிக்கு உண்டு.

*ஒரு குட்டித் திமிங்கிலம் ஒரே ஒரு ஆண்டில் தன் தாயின் வடிவத்துக்கு இணையாக வளர்ந்து விடுகிறது.

*பூனை தனது தலையைச் சொறிந்து கொள்வதற்குத் தனது பின்னங்கால்களைத்தான் பயன்படுத்துகிறது.

*பொதுவாக விலங்குகள் வாயைத் திறந்தால் கீழ்த் தாடைகள்தாம் கீழ்நோக்கி அசையும்; ஆனால் முதலை வாயைத் திறந்தால் மேல் தாடை மேல் நோக்கி உயரும். அது மட்டுமல்ல; முதலை கண்களைத் திறந்து வைத்துக் கொண்டு தூங்கும்.

*புலி, தான் அடித்துக் கொன்ற மிருகத்தை மட்டுமே உண்ணும். ஏற்கெனவே செத்துப்போன விலங்குகளையோ பிறவற்றால் கொல்லப்பட்டவற்றையோ அது சாப்பிடாது.

*ராகூன் என்னும் விலங்கு, தான் சாப்பிடும் பொருளைத் தண்ணீரில் கழுவிச் சுத்தம் செய்த பின்னர் தான் சாப்பிடும்.

*கங்காருவின் வால், தரையில் படாமல் தூக்கி வைக்கப்பட்டு இருந்தால், அதனால் தாவிக் குதிக்க முடியாது.

*ஆமை வருடத்துக்குக்கு ஒரு முறை தனது ஓட்டின் மேல் பகுதியைக் கழற்றி விடுகிறது ; புதுப் பகுதி அதன் ஓட்டில் தோன்றுகிறது.

*பறவையின் கண்கள் நீளமாக இரா. அவை வட்டவடிவமாகவே இருக்கும். பறவைகள் உணவுடன் சேர்த்துக் கற்களை விழுங்குவதும் உண்டு. கற்கள், அவற்றின் வயிற்றில் பற்களைப் போலப் பயன்பட்டு, உணவை மாவாக அரைக்க உதவுகின்றன.

*மரங்கொத்திப் பறவையின் அலகும் மண்டை ஓடும் ஒரே எலும்பால் ஆனவை. அதனால் தான் அது எத்தகைய மரத்தையும் தனது அலகினால் கொத்தித் துளை போட்டு விடுகிறது.

*புறாக்கள் தூங்குவதில்லை : உடல் நலக் குறைவான புறாக்கள்தாம் தூங்குகின்றன.

*'கிவி' என்னும் பறவைக்கு இறக்கைகள் கிடையா.

*வாத்துக்கள் நீரில் நீந்திக் கொண்டே தூங்கும் ஆற்றல் பெற்றுள்ளன.

*நீல நிறத்தைக் கண்டால் ஈக்களுக்குப் பிடிக்காது; அவற்றிடம் அவை அணுகுவதில்லை. ஈ, ஒரு வினாடியில் 330 முறை தனது இறக்கையை மடக்கி, நீட்டி, அடித்துக் கொள்கிறது.

*கொசுக்கள் நீல ஒளியைக் கண்டால் நெருங்கும்; சிவப்பு ஒளியைக் கண்டால் விலகிச் செல்லும்.

*ஜாவாவில் உள்ள ஒருவகைத் தவளைகள் பறக்கும் ஆற்றல் பெற்றவை; அவற்றின் கால்கள் பறக்கும் காலத்தில் இறக்கைகள் போலப் பயன்படுகின்றன.

*சுவர்க் கோழி வாயால் சத்தம் இடுவதில்லை ; தனது பின் கால்களை உரசுவதன் வாயிலாக 'கிறீச்' என்னும் ஒலியை எழுப்புகிறது.

*ஒரு சிப்பியில் முத்து வளர்வதற்கு ஏறக்குறைய 15 ஆண்டுகளுக்கு மேலாகும்.

*வெட்டுக் கிளிகளின் இரத்தம் வெண்மையாக இருக்கும்.

*நண்டுக்கு அதன் வயிற்றில் தான் பற்கள் அமைந்திருக்கின்றன.

*மண் புழுக்களில் ஆண், பெண் என்று தனித் தனி இனம் கிடையாது.

*பூச்சி இனத்தில் 'தட்டாம் பூச்சி' ஒன்றிற்குத்தான் ஒரே இடத்தில் நின்று பறக்கும் ஆற்றல் உண்டு.

தொகுப்பு:

—எஸ். சண்முகசுந்தரம்

கோ-ஆப்டெக்ஸ் மக்கள் விரும்பும் வகைகள்!
நியாயமான விலைகள்!

கோ-ஆப்டெக்ஸ் சேலைகள்,
அழகு மிளிரும் ஆரணங்குகள்!

ஆரணி, கும்பகோணம், காஞ்சிபுரம் அசல் பட்டுச் சேலைகள், கோயமுத்தூர், சேலம், மதுரை பருத்தி கைத்தறிச் சேலைகள், அச்சிட்ட சுங்கடி சேலைகள் மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்.



கோ-ஆப்டெக்ஸ் படுக்கை விரிப்புகள்,
மலர்ப் படுக்கைகள்!

நேர்த்தியான நெசவு கைத்தறிப் படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணை உறைகள், உங்களுக்கு சொகுசு அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ் துவாலைகள்,
தூய்மையான துவாலைகள்!

சாதா, டர்கிஷ் வகைகள், மென்மையான மற்றும் ஈரத்தை உறிஞ்சும் வகைகள். உங்களது சுகாதாரத்துக்கு இன்றியமையாதவை!



கோ-ஆப்டெக்ஸ் லுங்கிகள்,
வசதியானவை
நீடித்துழைப்பவை!

உங்கள் விருப்பத்துக்குகந்த சாதா, கோடிட்ட அல்லது கட்டமிட்ட பல வகைகளில்.

மற்றும் கைத்தறிப் பருத்தி வகைகள், வேட்டிகள், உடுப்புகளுக்கான துணிகள், அலங்காரத் துணிவகைகள்—குடும்பத்தினர் அனைவருக்குமே உகந்த முழுதும் புதிய வகைகள்.

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறியே வண்ணத்துப்பூச்சி

தமிழரசு

பதிவு எண். M. 8678

இந்தியப் பிரதமரின்

20

அம்சத் திட்டம்

உழவர் வாழ்வு
உயர்ந்திட...

மாணவர் வருங்காலம்
வளம்பெற...

வழிகாட்டுகிறது!

துணை நின்று தோள் கொடுப்போம்!
வெற்றிபெற உழைத்திடுவோம்!!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



அரசு-மிகவுயர்ந்த தரமானது

போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனுல் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட். குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலையால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

ARASU CEMENT TIDCO

தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)

ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

அரசு -வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16



தேசிய ஒருமைப்பாட்டை நிலை நாட்ட சபதம் ஏற்போம்!

நமது இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமது அவர்களின் 71-வது பிறந்த நாள் தேசிய ஒருமைப்பாடு நாளாக நாடெங்கிலும் கொண்டாடப் பெற்றது.

13-5-1976 அன்று மாலை 6 மணிக்கு சென்னையில் கலைவாணர் அரங்கத்தில் ஆளுநர் திரு. கே.கே. ஷா அவர்களின் தலைமையில் நடைபெற்ற தேசீய ஒருமைப்பாட்டு நாள் விழா மிகச் சிறப்பாக அமைந்தது. தேசீய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் விழாவாக—தேசீய ஒருமைப் பாட்டின் சிறப்பை எடுத்துரைக்கும் விழாவாக—குடியரசுத் தலைவரின் பிறந்த நாள் விழா நடைபெற்றது.

தலைமை வகித்த ஆளுநர் அவர்கள் உரையாற்றும்போது, 'தேசீய ஒருமைப்பாடு, ஒற்றுமை ஆகிய இலட்சியங்களுக்காகவும், அண்டை நாடுகளுடன் உறவு முறை வகையிலும், குடியரசுத் தலைவர் திரு பக்ருதீன் அலி அகமது அவர்கள் சிறந்த பணி புரிந்திருக்கிருர்கள். அவர் எப்போதும் நாட்டின் நலத்தையே தலையாயதாகக் கருதி வருபவர். ஒருமைப்பாட்டு உணர்வு அவரது நரம்பில் ஓடுகிறது'' என்று குறிப்பிட்டார்.

இந்த விழாவில், முன்னுள் துணை மேயர் திரு. அல்லாப் பிச்சை, டாக்டர் எஸ். விஜய லெட்சுமி, திரு சித்ரா நாராயண சாமி, சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா ஆகியோர் ஒருமைப்பாடுச் சிறப்பையும், குடியரசுத் தலைவரின் பெருமையையும் குறித்து உரையாற்றினர். தலைமைச் செயலர் திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் நன்றியுரை கூறும்போது, ''தேசிய ஒருமைப் பாட்டை நாம் நிலை நாட்டுவோம் என்று சபதம் ஏற்போமாக!''—என்று குறிப்பிட்டார்.

பின்னர், இசை நிகழ்ச்சிகள், நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவையாவும் தேசீய ஒருமைப்பாட்டின் சிறப்பைப் பொது மக்களுக்கு எடுத்துரைத்தன; விழாவுக்கு வந்திருந்தோர் அனைவரின் உள்ளத்திலும் இந்த ஒருமைப்பாட்டு நாள், தக்க வகையில் இடம் பெற்றதோடு தணியாத நாட்டுப் பற்றையும் உருவாக்கியது என்றல், மிகையாகாது!

தமிழரசு

மலர்-6 16-5-'76 இதழ்-22

ஆளுநர் மேற்கொண்ட பாதயாத்திரை

தமிழ்நாடு ஆளுநர் திரு கே. கே. ஷா அவர்கள் செங்கற்பட்டு மாவட்டத்தில் 11-5-'76 அன்று கிராமம் கிராமமாக 7 மைல் தூரம் நடந்து சென்று மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார். இந்தப் பாத யாத்திரையில் ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு. பி. கே. தவே பங்கேற்றார்.

செங்கற்பட்டு மாவட்டம், சோமங்கலம் கிராமப்புறச் சீரமைப்புத் திட்டத்தில் உள்ள சிறுகளத்தூர், காலடிப்பேட்டை, அழகேச நகர், நந்தம்பாக்கம் காலனி, பூந்தண்டலம் ஆகிய கிராமங்களில் இந்தப் பாத யாத்திரை நடைபெற்றது.

ஆளுநர் அவர்களையும் ஆலோசகர் அவர்களையும் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு திவான் முகமது அவர்களும் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் திரு நடராசன் அவர்களும் வரவேற்று அழைத்துச் சென்றனர்.

ஆளுநர் திரு கே. கே ஷா அவர்களுக்கும், ஆலோசகர் திரு பி. கே. தவே அவர்களுக்கும் செல்லுமிடமெல்லாம் சிறப்புமிகு வரவேற்பு அளிக்கப்பட்டது. தாரை, தப்பட்டைகள் முழங்க மக்கள் மகிழ்ந்து வரவேற்றார்கள்.

தாய்மார்கள் ஆரத்தி எடுத்து அகமகிழ்ந்தார்கள்.

முதன் முதலில் சிறுகளத்தூர் கிராமத்திற்குச் சென்ற ஆளுநர் அவர்களும், ஆலோசகர் அவர்களும் அங்கே கிராம மக்கள் அமைத்திருந்த கால்நடைக் கண்காட்சியைப் பார்வையிட்டனர். ''கால்நடைகள் இன்னும் தரமானதாக வளர மக்கள் பெரிதும் உதவ வேண்டும்'' என ஆளுநர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

பின்னர், பாலர் பள்ளியைப் பார்வையிட்ட ஆளுநர் அவர்கள், அங்கே தமக்கு அணிவிக்கப்பட்ட மாலைகளைப் பள்ளிச் சிறுவர்களுக்கு அணிவித்து வாழ்த்தினார்.

அமராவதி கோயிலுக்குச் சென்று தெய்வதரிசனம் செய்த ஆளுநர் அவர்கள், பிறகு கோயிலின் பின்னால் புதிதாக அமைக்கப்பட்டிருந்த நீர் அடிகுழாயைத் திறந்து வைத்தார். குடத்தோடு நின்றிருந்த பெண்களைத் தண்ணீர் பிடிக்கச் சொல்லி ஆளுநர் அவர்களே கைப்பம்பின் கைப்பிடியை அடித்தபோது தாய்மார்கள் பெரும் மகிழ்வுற்று வாழ்த்தினர்.

சிறுகளத்தூரில் புதிதாக 11 ஆயிரம் வோல்ட் சக்தியுள்ளதாக அமைக்கப்பட்டிருந்த 'டிரான்ஸ்பார்ம'ரை ஆளுநர் திரு. கே. கே. ஷா. அவர்கள் திறந்து வைத்தார்.

இதன்பிறகு அவர் மக்கள் அளித்த ஏராளமான மனுக்களைப் பெற்றுக் கொண்டதோடு, வேளாண்மை குறித்தும், கடன் தொல்லை குறைப்பது குறித்தும் பொதுமக்கள் சொன்ன குறைகளையெல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டார்.

தனது பிழைப்புக்கு வழி செய்யுமாறு கண்ணீரும் கம்பலையுமாகக் கூறிய ஒரு கிழவிக்கு ஆறுதல் தெரிவித்த ஆளுநர் அவர்கள் ஆடுமாடுகள் வாங்கக் கடனுதவி அளிப்பதாகக் கூறினார்.

சிறு தொழிலுக்கு அரசு உதவி

ஆங்கே கூடியிருந்த மக்களிடையே பேசுகையில் ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டதாவது.

இருபது அம்சத் திட்டத்தின் கீழ் கிராமங்களின் வறுமையை ஒழிக்க வளர்ச்சித் திட்டம் இங்கே தொடங்கப்பட்டுள்ளது. 3 ஏக்கருக்கு மேல் உள்ளவர்கள் முப்போகம் பயிர் செய்ய வசதி செய்யப்பட்டு வருகிறது.

அதற்குக் குறைவாக நிலம் உடையவர்கள். கூட்டுறவு முறையில் பயிர் செய்யலாம்.

விவசாயத் தொழிலோடு, ஆடு மாடு, கோழி ஆகியவைகளையும் வளர்த்து வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளலாம்.

விவசாயத் தொழிலாளிகள் துணைத் தொழில்கள் மூலம் வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம். சிறு தொழிலுக்கு அரசு உதவி செய்கிறது. 20 அம்சத் திட்டத்தின் நோக்கம், ஒவ்வொரு குடும்பத்தின் வருமானத்தையும் ரூ. 400 ஆக உயர்த்துவதேயாகும்.

—இவ்வாறு பேசிய ஆளுநர் அவர்கள் ''கோழி, கறவை மாடுகள், மின்விசை, கைத்தறி விசைகள் யார் யாருக்கு வேண்டுமோ மனுக்களைத் தாருங்கள்'' என்று கேட்டதும் அவற்றிற்காக ஏராளமானோர் மனுக்களைக் கொடுத்தனர்.

இதற்குப் பிறகு அழகேச நகர், நந்தம்பாக்கம் காலனியைச் சுற்றிப்பார்த்த ஆளுநர் அவர்கள் மக்களைச் சந்தித்துக் குறைகளைக் கேட்டறிந்தார். ஆர்வத்தோடும் உருக்கத்தோடும் மக்கள் தெரிவித்த குறைகள் அனைத்தையும் கவனமாகக் கேட்ட ஆளுநர் அவர்கள், குறைகளையெல்லாம் உடனுக்குடன் குறித்துக்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று உடன் வந்திருந்த அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

சுயமுயற்சி அவசியம்

பள்ளியிறுதி வகுப்புத் தேர்வில் தவறிய மாணவர் ஒருவர் 'இந்தப் பகுதியில் சிறு தொழிற்சாலைகள் தொடங்கினால் அதன் மூலம் என்னைப் போன்றவர்கள் பிழைப்பு நடத்தமுடியும்' என்றார்.



நீர் அடிகுழாயை ஆளுநர் திறந்து வைக்கிறார்

உடனே ஆளுநர் அவர்கள் தெரிவித்த பதில் விவரம் வருமாறு:

''எஸ். எஸ். எல். சி. வரை படித்த நீ ஏன் சுயமுயற்சி மூலம் முன்னேறக்கூடாது? ஒவ்வொரு இடத்திலும் தொழிற்சாலைகளை ஏற்படுத்தினால் மட்டும் போதுமா? எல்லாவற்றையும் அரசே செய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பதைவிட சுயமுயற்சியும் அவசியம். உன்னைப் போன்ற ஒவ்வொருவரும் சொந்த முயற்சியுடன் முன்னேற வேண்டும். படித்தவர்கள் எந்தத் தொழிலைச் செய்யவும் முன்வரவேண்டும். இங்கே வியர்வை சொட்டச் சொட்ட நிற்கிற விவசாயிகள் போல உழைக்க ஒவ்வொருவரும் முன்வரவேண்டும்.''

—இவ்வாறு ஆளுநர் அவர்கள் கூறினார்.

பின்னர் பூநதண்டலம் கிராமத்திற்குச் சென்ற ஆளுநர் அவர்கள் அப்பகுதி வாழ்மக்களின் குறைகளையும் கேட்டறிந்தார்.

அங்கே நெசவாளப் பெருமக்கள் அளித்த பரிசுகளில் ஒன்றான ஒரு சேலையை ஆளுநர் அவர்கள் அக்கூட்டத்திலிருந்த வயது முதிர்ந்த ஓர் மூதாட்டிக்கு அன்புடன் அளித்தார்.

குடை வேண்டாம்!

காலை 7.35-க்குத் தொடங்கிய இந்தப் பாத யாத்திரை 10.30 மணிவரை நடைபெற்றது. இடைப்பட்ட நேரத்தில் 7 மைல்கள் ஆளுநர் அவர்கள் நடந்தே சென்றார்.

அப்போது வெயில் காரணமாகப் பெரிய நிழற்குடையொன்று பிடிக்கப்பட்டதை ஆளுநர் அவர்கள் வேண்டாமென மறுத்துவிட்டார்.

கிராமவாசிகளின் தமிழ்ப் பேச்சை ஆளுநர் அவர்கள் புரிந்து கொண்டதோடு, முடிந்தவரை ஆளுநரும் அவர்களோடு தமிழிலேயே பேசினார்.

குடும்ப வருமானம் பெருக்கும் குறிக்கோள்

பாத யாத்திரை முடிந்ததும் தம்மைச் சந்தித்த செய்தியாளர்களிடம் தமிழக ஆளுநர் அவர்கள் தெரிவித்ததாவது :

பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தைக் கிராம மக்கள் நன்கு தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு குடும்பத்தின் வருமானத்தையும் ரூ. 400 ஆக உயர்த்துவதே அரசின் குறிக்கோளாகும்.

இப்பகுதி மக்கள், முன்னேறுவதற்கு மிக்க ஆவல் உடையவர்களாக இருக்கிறார்கள். பெருமுயற்சியோடு உழைத்து வருகிறார்கள்.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி இப்பகுதி மக்களுக்கு நல்ல உதவி செய்து வருகிறது. இதுபோலத் தேசிய மயமாக்கப்பட்ட எல்லா வங்கிகளும் நல்ல முறையில் உதவி செய்ய வேண்டும்.

இவ்வாறு ஆளுநர் அவர்கள் கூறினார்.

சிறுகளத்தூரில் புதிய 'டிரான்ஸ்பார்மரை' ஆளுநர் திறந்து வைக்கிறார்.



தமிழகத்தின் 4 புதிய மசோதாக்கள்

தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட்டதால், தமிழகத்திற்குரிய சட்டங்களை இயற்றுவதற்கு 60 பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் முதலாவது கூட்டம் கடந்த 1-5-1976 அன்று சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள இராஜாஜி அரங்கில் மத்திய உள் துறை அமைச்சர் திரு. கே. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் 48 பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். தமிழ் நாட்டிற்குரிய பின் கண்ட 4 மசோதாக்கள் (Bills) அக்கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டன.

1. 1976-ஆம் ஆண்டின் தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) மசோதா.

2. 1976-ஆம் ஆண்டில் தமிழ் நாடு சமய, அறநிலையக் கட்டளைகள் (திருத்தமும், சிறப்பு ஏற்பாடுகளும்) மசோதா.

3. 1976-ஆம் ஆண்டின் தமிழ் நாடு உள்ளாட்சி அதிகாரங்கள் (திருத்த) மசோதா.

4. 1976-ஆம் ஆண்டின் சென்னை மாநகராட்சி, தமிழ் நாடு நகராட்சி மன்றங்கள், ஊராட்சிஒன்றியங்கள் (திருத்த) மசோதா.

அக்கூட்டத்தில் மேற்கூறிய நான்கு மசோதாக்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அவற்றில் தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) மசோதா, தமிழ் நாடு இந்து சமய, அறநிலையக் கட்டளைகள் (திருத்தமும் சிறப்பு ஏற்பாடுகளும்) மசோதா, இரண்டும் முக்கியமானவை.

கூட்டுறவுச் சங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட இயக்குநர்கள் குழுவின் பதவிக் காலத்தை முடிவுக்குக் கொண்டு வரவும், மொத்தத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாமல் கூட்டுறவுச் சங்கங்களை நிர்வகிக்க தனி அலுவலர்களை நியமிக்கவும் கூட்டுறவுச் சங்கங்கள் திருத்த மசோதா வகை செய்கிறது.

ஆண்டுதோறும் 20 ஆயிரம் ரூபாய்க்குக் குறையாத வருவாய் உள்ள எல்லா கோவில்களுக்கும் பரம்பரை அறங்காவலர்கள் அல்லாத மற்ற அறங்காவலர்கள் நியமிக்கும் அதிகாரத்தை தமிழக அரசிடமே ஒப்படைக்க அறநிலையச் சட்டத்திருத்த மசோதா வகை செய்கிறது.

இவ்விரு மசோதா மீதும் விரிவாக விவாதம் நடைபெற்றது. அதன் பின், பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்விரு மசோதாக்களையும் ஏற்றுக் கொண்டனர்.

தொழில் வரி வசூலிக்கும் முறை, ஸ்டாம்பு தீர்வை மீது சர்சார்ஜ் விதித்தல் ஆகிய இரு மசோதாக்கள் அதிக விவாதம் இன்றி ஏற்றுக்கொள்ளப்பட்டன.

கூட்டுறவு மற்றும் அறநிலையத் திருத்த மசோதாக்களை வரவேற்று பொதுவாக இவை தேவையான மசோதாக்கள் தான் என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

சரியான, திறமையான, புகார்களுக்கு ஆட்படாதவர்களையே கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்களாக நியமிக்க வேண்டும் என்றும் அவர்கள் யோசனை கூறினர்கள்.

அறநிலையத் துறை ஆலோசனை குழுக்களில் 50சதவிகிதம் மடாதிபதிகள், பரம்பரை தர்மகர்த்தாக்கள், இதர அறங்காவலர்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற மசோதாவில் இருந்த பிரிவை ரத்து செய்ய வேண்டும் என்று பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் வற்புறுத்தியதன் பேரில் அந்த யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டு, 50 சதவிகித இட ஒதுக்கீடு திட்டம் கைவிடப்பட்டது.

இந்த 4 மசோதாக்களும் குடியரசுத் தலைவர் அங்கீகாரத்திற்குப் பின் சட்டமாக (Acts) விரைவில் வெளிவரும்.

—ஆர். மாணிக்கம்



வறட்சியை வெல்வோம்!

"வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் துயர் துடைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காகத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தமிழகத்தின் வறட்சித் துயர்துடைப்புப் பணிகளுக்காக மத்திய அரசு தற்போதைக்கு 7.5 கோடி போய் நிதி உதவி செய்ய இசைவு அளித்துள்ளது. தமிழ்நாடு அரசு தனது சொந்த நிதியிலிருந்து 10.5 கோடி ரூபாயை வறட்சித் துயர் துடைப்புப் பணிகளுக்காகச் செலவிடும்" என்று தமிழக ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் செய்தியாளர்களிடையே தெரிவித்தார்.

மத்திய அரசு நிதி அமைச்சர் அவர்களுடனும், மத்திய அரசு அலுவலர்களுடனும் தமிழக வறட்சித் துயர்துடைப்புப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து 5-5-76, 6-5-76 ஆகிய இரு நாட்களில் புதுடில்லியில் ஆலோசனை நடத்திவிட்டு, சென்னை திரும்பிய ஆளுநர் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் 8-5-'76 அன்று செய்தியாளர்கள் கூட்டத்தில் பின்கண்ட விவரங்களைத் தெரிவித்தார்.

"மத்திய நிதி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் தமிழ்நாடு ஆளுநர் ஆலோசகர்களுடனும், மற்றும் உயர் அலுவலர்களுடனும் மே 5, 6 ஆகிய இரு நாட்களில் தமிழக வறட்சி நிலை குறித்து—குறிப்பாக குடிதண்ணீர்ப் பிரச்சினை பற்றி—விரிவான ஆலோசனைகள் நடத்தினர்,

"1976-ம் ஆண்டு ஜூன் மாத இறுதிக்குள் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 2,400 ஆழ்குழாய்க்கிணறுகளைத் (Deep Bore Tube Wells) தோண்டும் முனைப்புத் திட்டம் ஒன்றினைத் தமிழ்நாடு அரசு ஏற்கனவே அறிவித்துள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மொத்தத்தில் 6,300 குழாய்க்கிணறுகள் (Tube Wells) அமைக்கப்பட வேண்டுமென்று இப்பொழுது முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப்பணி செப்டம்பர் 1976 இறுதிக்குள் முடிவடையும்.

"அரிசன குடியிருப்புக்களில் குடிதண்ணீர் வசதிக்கு வகை செய்வது மிக முக்கியத்துவம் வாய்ந்த பணி என்று மத்திய நிதி அமைச்சர் வலியுறுத்தினர். ஒருமைப்பாட்டினை வளர்ப்பதற்காகவும் தேவையற்ற செலவினங்களைத் தவிர்ப்பதற்காகவும், கிராம மக்கள் அனைவரது உபயோகத்திற்குமான பொதுவான கிணறுகள், கிராமங்களில் அமைக்கப்பட வேண்டும். ஆழ்குழாய்க்கிணறுகள் அமைக்கும் இந்த மிகப் பெரிய பணிக்குத் தேவையான துளைக்கருவிகள் (Rigs) கிடைப்பதற்கு வகை செய்யப்பட வேண்டும். மத்திய அரசு மற்ற மாநிலங்களிலிருந்து தேவையான துளைக்கருவிகள் (Rigs) கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளை அவசர முறையில் அனுப்பும். இத்துடன் தேவைக்கு ஏற்ப, கூடுதலான துளைக் கருவிகளை (Rigs) மாநில அரசு மேலும் வாங்கும்.

"மாநில அரசு நகர்ப்புற இடங்களுக்குக் குடிதண்ணீர்ப் பற்றுக்குறையைத் தீர்க்கத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இந்தப் பணிகள் மிக உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டுமென்றும், இவற்றை நிறைவேற்றுவதில் மிகத் திறமையுடன் செயலாற்ற வேண்டும் என்றும் மத்திய நிதி அமைச்சர் கூறினர்.

"மாநில அரசு இப்பணிகளின் பலன்களை உன்னிப்பாகக் கவனித்து, தேவை ஏற்பட்டால் மாற்றுத் திட்டங்களை நடைமுறைப் படுத்தவும் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்றும் மத்திய நிதி அமைச்சர் கூறினர்.

"இந்தக் குடிநீர் வசதித் திட்டங்களைத் தவிர, வேலை வாய்ப்பு வசதிகளைத் தரக்கூடிய நடுத்தர-சிறுபாசனத் திட்டங்கள்; மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள், காடு வளர்ப்புத் திட்டங்கள் மூலம், திட்ட முதலீட்டை உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. வேறு வேலை-வாய்ப்புப்பணிகளுக்கு வகை இல்லாத போது, சாலைச் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். வறட்சித் துயர்துடைப்புப் பணிகளில், சமுதாயத்துக்கு நிரந்தரமான சொத்துக்களை உருவாக்குவதே முக்கியமாகக் கொள்ளப்படும். நடைமுறைத் திட்டப் பணிகள் தேவைக்கேற்ப துரிதப்படுத்தப்படுவதுடன், இப்போதிலிருந்து ஜுலை '76-க்குள் 12 கோடி ரூபாய்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான கூடுதல் நிதியை மத்திய அரசு வழங்கும். பாதிக்கப்பட்ட பகுதிகளில் போதிய வேலை வாய்ப்பு வசதிகளை உருவாக்க இது உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது.

"தமிழ்நாட்டின் வறட்சித் துயர்துடைப்புத் திட்டத்துக்கு, முன்தொகையாக 7.5 கோடி ரூபாயை ஒதுக்குவதென மத்திய அரசு முடிவு செய்துள்ளது. 1976 ஜூன் மாதத்தில் எழக்கூடிய தேவைகளுக்கேற்ப இந்த ஒதுக்கீட்டுத் தொகை பற்றி மறுபரிசீலனை செய்யப்படும். தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், நிலையான-குறிப்பிடத்தக்க பயன்தரக்கூடிய துயர்துடைப்புப் பணிகளுக்குத் தேவைப்படும் நிதியை, போதிய அளவுக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும்" என்று ஆளுநர் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது.

வாரத்திற்கு 200 துளைக்கிணறுகள்!

"வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் வசதிக்கு முக்கியத்துவமும், முதலிடமும் கொடுத்து, வாரத்திற்கு இருநூறு கிணறுகள் வீதம் தோண்டுவதற்கு முனைப்புத் திட்டம் தயாரித்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதுவரையில், அதாவது ஏப்ரல் மாதத்திலிருந்து இன்று வரை மொத்தம் 734 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. ஆழ்துளைக் கிணறுகள் தோண்டுவதற்குத் தேவையான துளைபோடும் கருவிகளை மகாராஷ்டிரம், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம் போன்ற அண்டை மாநிலங்களிலிருந்து தருவித்துத் தரவும், தேவையானுல் மத்திய தொகுப்பை உருவாக்கி அதிலிருந்து பெற்றுத் தரவும் மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. குடிநீர் வடிகால் வாரியத்திடம் 36 துளைபோடும் கருவிகள் உள்ளன. இவை தவிர, தனியார் நிறுவனங்களிலிருந்து பெறப்பட்டுள்ள 26 துளை போடும் கருவிகளையும் சேர்த்து மொத்தம் 62 கருவிகள் தற்போது உள்ளன.

முந்தைய திட்டப்படி மொத்தம் 2,400 ஆழ் துளைக் கிணறுகள் 1976 ஜூன் மாத இறுதிக்குள் தோண்ட உத்தேசிக்கப்பட்டிருந்தது. இந்த எண்ணிக்கை உயர்த்தப்பட்டு செப்டம்பர் மாத இறுதிக்குள் 6,300 கிணறுகள் வெட்டப்படும்.

"வறட்சிப் பகுதிகளில் குடிநீர்த் திட்டத்திற்கே முதலிடம். சாலை அமைப்பு போன்ற பணிகள் மிக அத்தியாவசியத் தேவை இருந்தால் மட்டுமே மேற்கொள்ளப்படும். இம்முறை, வறட்சி நிவாரணத் துயர் துடைப்புப் பணிகள் நிலையான-நிரந்தரப் பலன் கொடுக்கும் திட்டங்களாக நிறைவேற்றப்படும்; மண்வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு, பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்குவது போன்றவைகளும் குறிப்பிடப்பட்ட—தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் நிறைவேற்றப்படும். கிணறு தோண்டும் வேலையில் பல காரணங்களால் பலனளிக்காத நிலை குறித்து ஆராய, பணிக்குழுக்கள் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில் வறட்சிப் பகுதிகளில் துயர் துடைப்புப் பணிகளை முழுமையாக நிறைவேற்ற நிதி இடர்ப்பாடு குறுக்கே நிற்காது. துயர் துடைப்பு முக்கியமே தவிர, பணமில்லை என்று காரணம் காட்டி துயர் துடைப்புப் பணிகள் நிறுத்தப்படா.

தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த 3,500-க்கு மேற்பட்ட கிராமங்களில் வசிக்கும் சுமார் 11 இலட்சம் பேர் வறட்சி நிலையால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அவர்களின் நலன் கருதி செப்டம்பர் மாத இறுதி வரை மூன்று கோடி மனித உழைப்பு நாட்களுக்கு வேலை தரப்படும். மதுரை இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களிலும் சிறு பாசனத் திட்டங்கள் முனைப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன." என்றார்.

"துயர் துடைப்புப் பணிகள் நிறைவேற்றி முடிக்கப்படும் நிலை, அதனைத் தொடர்ந்து உள்ள நிலை, தேவை ஆகியவைகளைக் கண்டறிய, தேவைப்பட்டால் மற்றொரு மத்தியக்குழு தமிழகம் வரும்" என்றும் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் சொன்னர்.

அட்டைப்பட விளக்கம்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இருபது அம்சப் பொருளாதாரத் திட்ட விளம்பர விழா, 1976, மே 21, 22, 23, 24 ஆகிய நாட்களில் நடைபெறவிருப்பதையொட்டி, திருச்சி மலைக் கோட்டையின் வண்ணப் படம் இவ்விதழின் அட்டையை அழகு செய்கிறது.

வண்ணப்படம்: திரு. ராஜூ

(நன்றி: சுற்றுலாத்துறை, சென்னை-9.)

இந்தியா—ஸ்ரீலங்கா கடல் எல்லை நிர்ணயம்! தமிழ்நாட்டு மீனவர்களுக்கு அறிவிப்பு!

இந்திய நாட்டு மீனவர்கள் ஸ்ரீலங்காவின் கடல் எல்லைக்குள் சென்று மீன் பிடிப்பதையும், ஸ்ரீலங்கா மீனவர்கள் நம் நாட்டுக் கடல் எல்லைக்குள் புகுந்து மீன் பிடிப்பதையும் தடுக்கும் நோக்கத்துடன் இந்தியாவிற்கும் ஸ்ரீலங்காவிற்கும் இடையே 1974-ஜூன் திங்களில் ஒன்றும், 1976 மார்ச்சுத் திங்களில் ஒன்றும் ஆக இரண்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

1. கச்சத் தீவு:

ஆதம் பாலத்திலிருந்து பாக் ஜலசந்தி வரையில் இந்தியாவிற்கும் ஸ்ரீலங்காவிற்கும் இடையிலான கடல் எல்லை, நிலப்பட நெடுங்கோடுகள், கிடைக்கோடுகளால் வரையறுக்கப்பட்டு, கீழே கொடுக்கப்பட்டுள்ள முறைமையின்படி கீழ்க்காணும் நிலைகளுக்கு இடையே வளையக்கோடுகளாக அமையும்.

நிலை	1 :	10°05'	வடக்கு	80°03'	கிழக்கு
நிலை	2 :	09°57'	வடக்கு	79°35'	கிழக்கு
நிலை	3 :	09°40.15'	வடக்கு	79°22.60'	கிழக்கு
நிலை	4 :	09°21.80'	வடக்கு	79°30.70'	கிழக்கு
நிலை	5 :	09°13'	வடக்கு	79°32'	கிழக்கு
நிலை	6 :	09°06'	வடக்கு	79°32'	கிழக்கு

மேலே கண்ட இந்த வரையறைக்குட்பட்டு இந்திய நாட்டு மீனவர்களும், புனிதப் பயணம் செய்வோரும் (Pilgrims) இதற்கு முன்னர் சென்று வந்தது போலவே இனியும் கச்சத்தீவுக்குச் சென்று வரலாம். அதற்காக அவர்கள் பயண ஆவணங்களும், இசைவு ஆணைகளும் ஸ்ரீலங்கா அரசிடமிருந்து பெற வேண்டியதில்லை. மீனவர்கள் அங்குச் சென்று வலைகளை வேண்டுமானுல் உலர்த்தலாமே ஒழிய, அத்தீவைச் சுற்றி ஸ்ரீலங்கா கடற்பரப்பில் மீன் பிடிக்கக்கூடாது.

2. மன்னர் வளைகுடா :

மன்னர் வளைகுடாவில் இந்தியாவிற்கும் ஸ்ரீலங்காவிற்கும் இடையிலான கடல் எல்லை, நிலப்பட நெடுங்கோடுகள், கிடைக்கோடுகளால் வரையறுக்கப்பட்டு, கீழே கொடுக்கப்பட்டுள்ள முறைமையின்படி கீழ்க்காணும் நிலைகளுக்கு இடையே வளையக் கோடுகளாக அமையும்.

நிலை	1 m :	09°	06'.0	வடக்கு	79°32.0'	கிழக்கு
நிலை	2 m :	09°	00'.0	வடக்கு	79°31'.3	கிழக்கு
நிலை	3 m :	08°	53'.8	வடக்கு	79°29'.3	கிழக்கு
நிலை	4 m :	08°	40'.0	வடக்கு	79°18'.2	கிழக்கு
நிலை	5 m :	08°	37'.2	வடக்கு	79°13'.0	கிழக்கு
நிலை	6 m :	08°	31'.2	வடக்கு	79°04'.7	கிழக்கு
நிலை	7 m :	08°	22'.2	வடக்கு	78°55'.4	கிழக்கு
நிலை	8 m :	08°	12'.2	வடக்கு	78°53'.7	கிழக்கு
நிலை	9 m :	07°	35'.3	வடக்கு	78°45'.7	கிழக்கு
நிலை	10 m :	07°	21'.3	வடக்கு	78°38'.8	கிழக்கு
நிலை	11 m :	06°	30'.8	வடக்கு	78°12'.2	கிழக்கு
நிலை	12 m :	05°	53'.9	வடக்கு	77°50'.7	கிழக்கு
நிலை	13 m :	05°	00.0	வடக்கு	77 10'.6	கிழக்கு

3. பாக் ஜலசந்தி :

வங்காள விரிகுடாவில் இந்தியாவிற்கும் ஸ்ரீலங்காவிற்கும் இடையிலான பாக் ஜலசந்தியில் கடல் எல்லை, நிலப்பட நெடுங்கோடுகள், கிடைக்கோடுகளால் வரையறுக்கப்பட்டு, கீழே கொடுக்கப்பட்டுள்ள முறைமையின்படி கீழ்க்காணும் நிலைகளுக்கு இடையே வளையக்கோடுகளாக அமையும்.

நிலை	1b :	10°	05'.0	வடக்கு	80°	03'.0	கிழக்கு
நிலை	1ba :	10°	05'.8	வடக்கு	80°	05'.0	கிழக்கு
நிலை	1bb :	10°	08'.4	வடக்கு	80°	09'.5	கிழக்கு
நிலை	2b :	10°	33'.0	வடக்கு	80	46'.0	கிழக்கு
நிலை	3b :	10°	41'7	வடக்கு	81°	02'.5	கிழக்கு
நிலை	4b :	11°	02'.7	வடக்கு	81°	56'.0	கிழக்கு
நிலை	5b :	11°	16'.0	வடக்கு	82°	24'.4	கிழக்கு
நிலை	6b :	11°	26'.6	வடக்கு	83°	22'.0	கிழக்கு

மேலே குறிப்பிட்ட ஒப்பந்தங்களின்படி இந்தியாவிற்கும் ஸ்ரீலங்காவிற்கும் இடையில் கச்சத்தீவு, பாக் ஜலசந்தி, மன்னர் வளைகுடா ஆகிய மூன்று பகுதிகளுக்கும் கடல் எல்லைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் சென்று மீன் பிடிக்கும் மீனவர்கள் மேலே குறிப்பிட்டுள்ள நமது நாட்டு எல்லைகளை மனத்தில் கொண்டு இந்திய எல்லைக்குள்ளேயே மீன் பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்திய எல்லைகளை மீறிச் சென்று ஸ்ரீலங்கா கடல் எல்லைக்குள் மீன் பிடித்த மீனவர்கள் மீது, ஸ்ரீலங்கா அரசு நடவடிக்கை எடுத்துள்ளதால், இந்திய மீனவர்கள் நமது கடல் எல்லையைத் தாண்டி ஸ்ரீலங்காவின் கடல் எல்லைக்குள் சென்று மீன் பிடிக்க வேண்டாம் என்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகின்றனர்.

அஞ்சலக வங்கியின் மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

ரூ. 20½ இலட்சத்திற்கு
11,116 பரிசுகள்

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று	...	ரூ.	1,00,000
5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும்	...	ரூ.	50,000
10 மூன்றாம் பரிசுகள் ஒவ்வொன்றும்	...	ரூ.	20,000
100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும்	...	ரூ.	5,000
1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும்	...	ரூ.	500
10,000 ஆறாம் பரிசுகள் ஒவ்வொன்றும்	...	ரூ.	50

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/–க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

இயக்குநர்.

தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.



மின்சக்தி பெருகிட என்னூரில் 5வது யூனிட்

தமிழகத்தின் மின்சாரத் தேவை நாள்தோறும் வளர்ந்து கொண்டு வருகிறது எனினும் மின் உற்பத்தியை அதிகரித்துத் தேவையைச் சமாளிக்கத் தமிழ்நாடு அரசு, தக்க வகையில் முயற்சியெடுத்துப் பணியாற்றி வருவது குறிப்பிடத் தக்கது. வரலாற்றுப் புகழ்மிக்க இந்தச் சாதனையில் நினைவு கூர்ந்து பாராட்டத்தக்கதொரு மைல்கல்லாக விளங்குகிறது எண்ணூர் அனல் மின் நிலையம்.

பொதுவாக, நீர்மின்சார உற்பத்திக்காகும் செலவு மிகக் குறைவானதே எனினும், வற்றாத ஜீவநதிகள் ஏதுமின்றிப் பருவமழையையே நம்பியிருக்கும் ஒருநாட்டில், நீர்மின்சார உற்பத்தி குறைந்தால் எத்துணை விபரீதங்கள் - பயங்கரங்கள் - இழப்புகள் ஏற்படக்கூடும் என்பவற்றை நாம் அனுபவத்தில் கண்டு வருகிறோம். இந்த நிலையை மாற்றி, மின் உற்பத்தியை நிரந்தரமாக்கி நிலைப்படுத்தும் எண்ணத்தின் அடிப்படையில்தான், தமிழ்நாடு மின்சார வாரியம், எண்ணூரில் பெரிய அளவில் ஓர் அனல்மின் நிலையத்தை அமைத்திடத் திட்டமிட்டது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மிகப் பெரிய திட்டமான எண்ணூர் அனல்மின் நிலையம், சுமார் 88 கோடி ரூபாய் முதலீட்டில், 5 டர்போ ஜெனரேட்டர்களுடன் உருவாக்கப்பட்டது. 1965-1976 ஆண்டுகளுக்கிடையே கட்டப்பட்ட இந்த அனல்மின் நிலயத்தின் மொத்த உற்பத்தித் திறன் 450 மெகாவாட் ஆகும். அதாவது, எண்ணூரில் கடந்த 10-4-76-ல் திறந்து வைக்கப் பெற்ற 5-வது மின் இயந்திரத்தின் உற்பத்தி 110 மெகாவாட். இதன் மூலம் தமிழ்நாடு மின் கிரிடின் மொத்தத் திறன் 2,254 மெகாவாட்டிலிருந்து 2,364 மெகாவாட் ஆக உயர்ந்திருக்கிறது.

எண்ணூர் அனல் மின்நிலையம் இரண்டு கட்டங்களாகச் செயற்படுத்தப்பட்டது. 60 மெகாவாட் திறன் கொண்ட 2 யூனிட்டுகளும் 110 மெகாவாட் திறன்கொண்ட 2 யூனிட்டுகளும் அமைப்பது முதற்கட்டம்; 110 மெகாவாட் திறன் கொண்ட மற்றொரு யூனிட் அமைப்பது இரண்டாவது கட்டம். இவ்விரு கட்டப்பணிகளுக்கும் முறையே 63 கோடியே 50 இலட்சம் ரூபாயும், 23 கோடியே 50 இலட்சம் ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது.

1964 செப்டம்பரில் திட்டக் குழுவின் ஒப்புதல் பெற்று, 1965 இல் ஆரம்பிக்கப்பட்ட முதல் யூனிட் 1970-ல் துவக்கி வைக்கப்பட்டது. அதன்பின் ஆண்டு தோறும் ஒரு யூனிட் துவக்கி வைக்கப்பட்டது. 4-வது யூனிட் 1973-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. பின்னர், 110 மெகாவாட் திறன் கொண்ட 5-வது யூனிட் அமைக்கும் இரண்டாவது கட்டப் பணி, 1973 ஏப்ரலில் மத்திய அரசின் அனுமதி கிடைத்ததும் ஆரம்பிக்கப்பட்டது. இந்த யூனிட்டுக்கு ஐதராபாத்தின் 'பெல்' (BHEL) நிறுவனம், திருச்சி 'பெல்' நிறுவனம், கோட்டாவிலுள்ள இன்ஸ்ட்ருமென்டேஷன் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் கருவிகளை வழங்கியுள்ளன. 6.6 கிலோவாட் ஸ்விட்ச் கியர், குளிர வைக்கும் தண்ணீர் பம்புகள், சில 'இன்ஸ்ட்ருமென்டேஷன்' கருவிகள் தவிர மற்றக் கருவிகள் அனைத்தும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டவை. 'பெல்' மற்றும் 'இன்ஸ்ட்ருமென்டேஷன் லிமிடெட்' நிறுவனங்களின் வழிகாட்டுதலின் பேரில் தமிழ்நாடு மின்சார வாரியம் இந்த யூனிட்டை நிர்மாணித்தது என்பது குறிப்பிடத்தக்கது. இங்குப் பயன்படுத்தப்பட்ட 'டர்போ ஜெனரேட்டர்' ஹைதராபாத் 'பெல்' நிறுவனம் தயாரித்த 9-வது 'டர்போ ஜெனரேட்ட'ராகும். ஆனால் செயல்படுத்தப்படுவதில் ஐந்தாவதாகும். இதற்குப் பொருந்தக் கூடிய கொதிகலன் திருச்சி 'பெல்' நிறுவனம் தயாரித்த, 11-வது கொதிகலனாகும்; ஆனால் செயல் படுத்துப்படுவதில் 5-வது ஆகும்.

இந்த ஐந்தாவது யூனிட்டை நிறுவுவது, இயக்குவது ஆகியவை

தொடர்பான பணிகளை 'பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்'டின் ஒத்துழைப்புடன் தமிழ்நாடு மின்சார வாரியப் பொறியியல் வல்லுநர்களே செய்துள்ளனர் என்பதும், இந்த நிலையத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள இயந்திரங்கள் பல, உள்நாட்டு நிறுவனங்களிடமிருந்தே பெறப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

தொடக்கத்தில், அதாவது 1965-ல் எண்ணூரில் பனங்காடாக விளங்கிய இந்தப் பகுதி இப்போது, தமிழகத்தைத் தொழில்மயமாக்கவும், பசுமைப் புரட்சியின் உச்சக்கட்டத்தை அடையவும், உபயோகப்படும் மின்சாரத்தை வாரி வழங்கும் பூமியாகவே காணப்படுவதோடு, மழையையே முழுக்க முழுக்க நம்பியிருக்க வேண்டிய நிலைமைக்கும் ஓரளவு விடிவு ஏற்பட்டுள்ளது.

இந்த ஐந்தாவது யூனிட்டை 10-4-76-ல் தமிழ்நாடுஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் தலைமையில், மத்திய எரிபொருள் அமைச்சர் திரு. கே. சி. பந்த் அவர்கள் துவக்கி வைத்தார். துவக்க விழா உரையில் கூறியதாவது:

''1973-ல் அனுமதி வழங்கப்பட்ட இந்த விஸ்தரிப்புத் திட்டம் 1975 மார்ச் மாதத்திற்குள் பூர்த்தி செய்யப்பட முதலில் திட்டமிடப் பட்டிருந்தது. எனினும் நீண்ட காலமாக இத்திட்டத்திற்குப் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்று தோன்றுகிறது. 1974-ஆம் ஆண்டு இறுதியில் மத்திய மின் துறை நிர்வாகம் இத் திட்ட வளர்ச்சியைக் கண்காணிக்கத் துவங்கியபோது பல பகுதிகள் முடிக்கப்படாமல் பாக்கியிருந்தன. இத்திட்டத்திற்கான பல சாதனங்கள் விநியோகிக்கப்படவில்லை. கட்டட வேலை, காலதாமதமாக நடந்தது. சில மாதிரி அமைப்புகள்கூடப் பூர்த்தி செய்யப்படாமல் இருந்தன. இதையெல்லாம் எண்ணும்போது 1975 டிசம்பர் 23-ந் தேதி இப்பிரிவு ஒழுங்குபடுத்தப்பட்டது மிகவும் பாராட்டிற்குரியது.

''மின்சக்தி அபிவிருத்தியில் தமிழ்நாடு ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. முந்தைய ஆண்டுகளில் மின் சக்தி அபிவிருத்தியின் முன்னோடியாக அது விளங்கியது. கிராமங்களுக்கு மின்சக்தியை விஸ்தரித்த பெருமையும் அதற்கு உண்டு.

ஆளுநர் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியம் அவர்கள் விழா மலரை வெளியிட்டு, மத்திய எரிபொருள் அமைச்சர் திரு கே. ஸி. பந்த் அவர்களிடம் வழங்கினார்.

''கடந்த சில ஆண்டுகளில் இந்த மாநிலம் மின் சக்தி விநியோக நிலைமையில் மிகவும் பின் தங்கியிருந்தது துரதிருஷ்டவசமானதாகும். மின்சக்தி விநியோகத்தில் கடுமையான கட்டுப்பாடு ஏற்பட்டது. எண்ணூர் அனல் மின் சக்தி நிலையத்தின் திறனளவு உபயோகம் 30 சதவிகிதத்தும் குறைவாகவே இருந்தது. திறமையற்ற நிர்வாகம், ஊக்கமின்மை, தவறான ஊழியர் நலக் கொள்கைகள் ஆகியவற்றிலிருந்து அத்தகைய நிலை ஏற்பட்டது.

''இப்பொழுது நிலைமையில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1976 மார்ச்சில் எண்ணூர் நிலையத்தின் செயல்முறையில் குறிப்பிடத்தக்க மேம்பாடு ஏற்பட்டுள்ளது. அப்பொழுது அந்நிலையத்தின் திறனளவு உபயோகம் 60 சதவிகிதத்துக்கும் மேலாக அதிகரித்து விட்டது. 1976-ஆம் ஆண்டின் நல்ல பருவநிலை, மின்சக்தி விநியோகத்தைக் கணிசமாக மேம்படுத்த உதவியது. அண்டை மாநிலமாகிய கேரளத்தின் உதவியோடு அடுத்த பருவக் காலம்வரையில் மின்சக்தி விநியோக நிலைமை திருப்திகரமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு மின்வாரியம் இப் பலன்களை ஒன்று திரட்டி அதிகமான மின் சக்தி வளங்களை அபிவிருத்தி செய்வதற்கு மேலும் தீவிர முயற்சிகளை மேற்கொள்ளும் என்று நம்புகிறேன்.

''வேலை ஓய்வு நேரத்தைக் குறைப்பது, செயல்பாட்டை மேம்படுத்துவதற்கான வழிகளில் ஒன்றாகும். வேலை ஓய்வு நேரத்தைக் குறைந்தபட்சமாகக் குறைப்பதற்கு மின்சக்தி நிலையங்களை நிர்ப்பந்திப்பதுடன் கூட, முறையான பழுது பார்ப்பு மற்றும் பராமரிப்பதற்கான வேலை ஓய்வு நேரத்தைக் குறைப்பதற்கு உரிய வழிமுறைகளைப் பற்றி யோசனை கூறும் குழு ஒன்றையும் நிறுவியுள்ளோம். பெரும் மின் நிலையங்களின் பராமரிப்பை நவீனப்படுத்துவது பற்றிய இக்குழுவின் அறிக்கை நிர்வாகம், மனித சக்திச் சாதனங்கள், கருவிகள், இயந்திரங்கள் முதலிய அம்சங்கள் அனைத்திலும் முறையான பராமரிப்பைத் திட்டமிடுவதற்கு உரிய வழிமுறைகளை மிக விரிவாக அளித்துள்ளது. இந்த அறிக்கையின் நகல்கள் மாநில மின்வாரியங்கள் எல்லாவற்றிற்கும் அனுப்பப்பட்டுள்ளன. இந்த அறிக்கையில் அடங்கியுள்ள வழிமுறைகளைச் செயல்படுத்துவதற்குத் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், அதனால் ஏற்படும் பலன்களை மத்திய மின் துறை நிர்வாகத்துக்கு அறிவிக்கப்பட்டாலும் நான் மகிழ்ச்சியடைவேன். அத்தகைய பின் விளைவு அறிக்கைகளின் அடிப்படையில் இந்த வழிமுறைகளைத் திருத்தி அமைத்து அவற்றை மேம்படுத்த முடியும்.

''அனல் மின்நிலையங்களின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதில் ஓர் அம்சமாக, மத்திய மின் துறை நிர்வாகம் தவிர்க்க முடியாத இழப்புக்கள் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிக்கத் துவங்கியுள்ளது. அவற்றை ஆராய்ந்து முக்கிய காரணங்களைக் கண்டு பிடிப்பதன் மூலம் நிரந்தரச் சீரமைப்பு முறைகளை உருவாக்குவதற்குப் போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.



என்னூர் அனல் மின் நிலைய 5 வது யூனிட்டை மத்திய எரிபொருள் அமைச்சர் திரு கே. ஸி. பந்த் அவர்கள் 10-4-76 அன்று துவக்கி வைத்தார்

வளரும் நாடுகளின் மின் நிலையங்களோடு ஒப்பிடுகையில் இந்திய மின் நிலையங்களில் ஏற்படும் கட்டாய இழப்புக்களினால் உண்டாகும் மொத்த இழப்பு நேரம், மிக அதிகமானதாக இன்னமும் உள்ளது. இத்துறையில் கணிசமான மேம்பாட்டுக்கு வாய்ப்பு உள்ளது.

''சரியான ஊழியர் நலக் கொள்கையையும் பயிற்சித் திட்டத்தையும் ஏற்றுக் கொள்வது மின் நிலையங்களின் மேம்பட்ட நிர்வாகத்துக்கு ஒரு முக்கிய அம்சமாகும். வளர்ச்சியடைந்த பொருளாதாரத்தில் அனுபவ மிக்க மின்சக்தித் தட்டுப்பாடு எப்போதும் இருக்கிறது; ஆகையால் கிடைக்கக்கூடிய வளங்களை மிகச் சிறப்பான முறையில் உபயோகிக்க வேண்டியது இன்றியமையாதது. ஒரு வேலை திறமையாகவும் விரைவாகவும் செய்யப்பட வேண்டுமானால் தகுந்த அனுபவம் உள்ள ஆட்களைத் தெரிந்தெடுத்து வேலைக்கு அமர்த்த வேண்டும். ஊழியர்கள் அடையும் அனுபவம் பெரும் பொறுப்புக்களை நிர்வகிக்கும் திறமையை அவர்களிடம் மலரச் செய்யும் வகையில் வேலைப் பிரிவுகள் உருவாக்கப்பட வேண்டும்.

''வேலையைத் துரிதமாக முடிப்பதற்குப் போதுமான அதிகாரங்களை வழங்குவது மற்றொரு மிக முக்கிய அம்சமாகும். ஒரு வேலையைச் செய்து முடிப்பதற்கான பொறுப்புள்ள நபருக்கு, அப்பணியைக் கண்காணிக்கத் தேவையான அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டியது அவசியம். தாமதங்கள் தவிர்க்கப்பட வேண்டுமானால், தீர்மான முடிவுகள் எடுப்பதை மத்திய அதிகாரத்திலிருந்து பிரித்துப் பகிர்ந்து கொடுக்க வேண்டும். பெரிய திட்டங்கள் காலவரம்பு கொண்ட திட்டங்களின்படி செயல்படுத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் நாட்டின் அபூர்வமான மூலதன வளங்கள் நன்கு உபயோகப்படுத்தப்படாமல் போய் விடும். அடிமட்டங்களில் பெரும் அதிகாரங்களைப் பிரித்து அளித்தல் அந்த அதிகாரங்களை ஓரிடத்தில் குவிப்பதற்கல்ல; அதிகாரங்கள் துஷ்பிரயோகப்படுத்தப்படுவதை தடுப்பதற்கு நேர்மையான, தகுதியான ஆட்களை வேலைகளில் அமர்த்துவதை உறுதி செய்ய வேண்டும்.

''தூத்துக்குடி அனல்மின் நிலையம், தமிழ்நாட்டின் பொறுப்பிலுள்ள மிக முக்கிய மின்நிலையமாக இருக்கிறது. அது தனது மின் உற்பத்தித் திறனளவை 600 மெகாவாட் அளவுக்குப் பெருக்கும். இருப்பினும் இத்திட்டத்தின் வளர்ச்சி திருப்திகரமாக இல்லை. 1973 செப்டம்பர் மாதத்திலேயே இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தபோதிலும் அதன் முதல் பிரிவு - 5வது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டிலேதான் உற்பத்தியைத் துவக்கும் என்று இப்போது எதிர்பார்க்கப்படுகிறது; இதற்குக்கூட இப்போதிலிருந்தே வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைக் கணிசமாக முடுக்க வேண்டும். தமிழ்நாடு மின்சார வாரியம் மிக ஆர்வத்துடன் இதனை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டால் அது மகிழ்ச்சியளிக்கும்.''

ஆளுநர் அவர்களின் தலைமையுரை

தமிழ்நாடு ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் தம் தலைமையுரையில், ''புதிதாகத் துவக்கி வைக்கப்பட்டுள்ள இந்தப் பிரிவின் உற்பத்தித் திறனளவைச் சேர்த்தால் எண்ணூர் அனல் மின் நிலையத்தின் மொத்த உற்பத்தித் திறனளவு 450 மெகாவாட் ஆகிறது; இந்தப் பிரிவின் அமைப்புக்காக முழுக்க முழுக்க உள்நாட்டுச் சாதனங்களையே உபயோகித்துள்ளது அதிக திருப்தி தரும் ஒன்றாகும். தமிழ்நாடு மின்சார வாரியம், 'பாரத் ஹெவி எலக்ட்ரிகல்' நிறுவனத்தின் உதவியுடன் எவ்விதமான

அயல்நாட்டுத் தொழில் நுணுக்க உதவியுமின்றி இந்தச் சாதனையைப் புரிந்துள்ளது பெருமை தரத்தக்க செயலாகும்'' என்றும்,

''மின் அபிவிருத்தியில் மிகவும் முன்னணியில் இருந்த தமிழகம் கடந்த சில ஆண்டுகளில் குறிப்பாக மின் உற்பத்தியில் பின்னல் தள்ளப்பட்டது என்றும், மின் உற்பத்தியில் போதுமான கவனம் செலுத்தப்படாமையே அதற்குக் காரணம்'' என்றும்,

''தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் முதல் பிரிவு 1978 டிசம்பர் மாதத்தில் துவக்கப்படும் என்று எதிர்பார்ப்பதாகவும், அந்த அனல் மின் திட்டத்தின் அமைப்புக்கான பொறுப்பினை ஏற்றுள்ளவர்கள் அதற்கான வேலைகளை முடுக்கிவிட்டுக் குறித்த காலத்தில் மின் உற்பத்தி நடைபெற உதவ வேண்டும்'' என்றும்

''நடப்பு ஆண்டில் ரூ. 5 கோடி அனுமதியுடன் பாண்டியாறு புன்னம்புழா திட்ட வேலைகளும் துவக்கப்படும்'' என்றும் குறிப்பிட்டார்.

மலர் வெளியீடு

தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள், மின் வாரிய ஊழியர்களுக்குக் கட்டப் படவிருக்கும் 208 வீடுகள் கொண்ட குடியிருப்புக்கு அடிக்கல் நாட்டி, விழாச் சிறப்பு மலரையும் வெளியிட்டு உரையாற்றுகையில்,

''மின்வாரியம் போன்ற அமைப்புகளில் பணியாற்றுகிற அரசு ஊழியர்கள் மரியாதையுடனும் அன்புடனும் நடந்து கொள்ள வேண்டும்; அரசாங்கத்தின் சிறப்பு, தலைமைச் செயலகத்தில் உள்ளவர்களால் மட்டுமே உயருவதில்லை. எழுத்தர்கள், மின்துறை லைன்மேன்கள் போன்ற ஊழியர்களாலும் அரசின் சிறப்பு அதிகரிக்கிறது.'' என்று குறிப்பிட்டார்.

தொடக்கத்தில் மின்வாரியத் தலைவர் திரு. எம். எம். இராஜேந்திரன், ஐ.ஏ.எஸ். அனைவரையும் வரவேற்றார்.

பசுமைப்புரட்சிக்கும், தொழில் புரட்சிக்கும் இன்றியமையாது தேவைப்படும் மின்சக்தியை உற்பத்தி செய்து, நாடு வளம் பெற, எண்ணூர் அனல் மின் நிலையம் உதவிடும் என்பதில் ஐயமில்லை.

— சாமி. பழனியப்பன்

புதை பொருள்கள் தரும் வரலாற்றுத் தகவல்கள்



இந்தியாவின் ஆரியக் கலாச்சாரத்தோடு சம்பந்தப்பட்ட கிழக்கிந்தியக் கலாச்சாரப் பண்பாடுகளுக்கும் ஹரப்பா கலாச்சாரத்தின் கடைசிக் கட்டப்பண்பாடுகளுக்கும் தொடர்பு இருப்பது ஹரியானாவில் குருஷேத்திர மாவட்டத்தில் பாகவனபுராவில் புதைபொருள் ஆராய்ச்சியின் போது தெரிய வந்தது. சரஸ்வதி ஆற்றின் கரையருகே அமைந்த இப்பகுதியில் நடப்புப்பருவக் காலத்தில் புதைபொருள் ஆராய்ச்சி செய்யப்பட்டது.

குருஷேத்திரத்தில் வாழ்ந்த மக்களின் கலாச்சாரம் பற்றித் தெரிந்து கொண்டு, சரித்திரத்தை மீண்டும் உருவாக்க, இந்தப் புதைபொருள்கள் பெரிதும் உதவும். இப்பகுதியில் இவ்விரு நாகரிகங்களும் இருந்துள்ளன என்பது, அவர்கள் பயன்படுத்திய வண்ண ஓவியம் கொண்ட மண்பாண்டங்களிலிருந்தும் சிற்பங்களிலிருந்தும் தெரிய வருகிறது. இவ்விரு நாகரிகக்காலத்தின் போது இரும்பு பயன்படுத்தப் படவில்லை.

ஹரப்பா நாகரிக காலத்தின் கடைசிப் பகுதியில் வாழ்ந்த மக்கள் தாம் சரஸ்வதி நதியின் வண்டல் மண் பகுதிகளில் முதன் முறையாகக் குடியேறியிருக்கின்றனர். வெள்ளத்தடுப்புக்காக அவர்கள் 2 மணல் மேடுகளை எழுப்பியிருப்பது தெரிய வருகிறது. இவ்வாறு இருந்தபோதிலும் இருமுறை அப்பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. வண்ண ஓவியம் கொண்ட பழுப்பு மண் பாண்டங்களைப் பயன்படுத்துவோர் வாழ்ந்த காலத்தில் தான் இரண்டாவது முறையாக வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

அத்தகையோரின் கல்லறைகள், வீடு கட்டும் முறை போன்ற முக்கிய விஷயங்கள் பற்றி அண்மைக்கால ஆய்வு தெரிவிக்கிறது. அந்த மக்கள், அரைவட்ட வடிவமான குடிசைகளில் வசித்து வந்திருக்கின்றனர். அந்த நாகரிகத்தின் அடுத்த கட்டத்தில் அவர்கள் மண் சுவர்கள் எழுப்பி வீடு கட்டிக் கொண்டுள்ளனர். இந்தப் புதை பொருள் ஆராய்ச்சியின் போது, 13 அறைகளும், முற்றமும் கொண்ட பெரிய வீடு ஒன்று இருந்ததற்கான சான்று கிடைத்துள்ளது. 1.60 மீட்டர் நீளம் X 1.60 மீட்டர் அகலம் கொண்ட அறை முதல் 3.35 மீட்டர் நீளம் X 4.20 மீட்டர் அகலம் கொண்ட அறைவரை, பலவகையான அறைகள் இருந்திருக்கின்றன. அந்த வீட்டிலிருந்து விலங்கின் எலும்புகள், மண்பாண்டங்கள், செப்புப் பொருட்கள், வண்ணம் தீட்டப்பட்ட பாண்டங்கள், மண் உருண்டைகளால் ஆன மணிகள் ஆகியவை எடுக்கப்பட்டுள்ளன. மூன்ருவது கட்டக் கட்டட அமைப்பில் 3 விதச் செங்கற்களால் ஆன கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

மக்கள் வசிக்கும் பகுதியிலேயே இரண்டு கல்லறைகள் உள்ளன. இவ்விரண்டிலும் உள்ள எலும்புக் கூடுகள் வடக்கு-தெற்கு நோக்கி இருக்கின்றன.

வறட்சி நிவாரணத்தில் மத்தியப் பேரரசின் உதவி!

—திரு. ஆர். பத்மநாபன்,
(செயலர், வருவாய் வாரியம்)

சென்ற 1974-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் வட கிழக்குப் பருவக் காற்றினுல் பெய்ய வேண்டிய மழை மிக மிகக் குறைவாகப் போயிற்று. சாதாரணமாக வட கிழக்குப் பருவக் காற்றினுல் சராசரி 461.20 மி.மீ. அளவுக்குத் தமிழ்நாட்டில் மழை பெய்ய வேண்டும். ஆனுல் 1974-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் டிசம்பர் முடிய 198 மி.மீ. அளவுக்குத் தான் பெய்தது. அதுவும் பெய்ய வேண்டிய காலத்திலும் பரவலாகப்பெய்யாததனுலும்நீர்ப்பாசன ஏரிகள், குளங்கள் முதலியவற்றில் போதுமான தண்ணீர் நிரம்பவில்லை. வானிலை ஆராய்ச்சித் துறையினரும், 'இவ்வளவு குறைவாகவும் காலம் தவறியும் சென்ற நூறு ஆண்டுகளில் அதாவது 1876 முதல் தமிழ்நாட்டில் எப்பொழுதும் வட கிழக்குப் பருவக் காற்று மழை தவறியதில்லை', என்று சொல்லியிருக்கிறுர்கள். இம்மாதிரிப் பருவத்தே மழை பெய்யாததன் காரணமாக, ஆற்றுப் பாசன வசதியுள்ள இடங்களும், டெல்டாப் பிரதேசங்களும் தவிரத் தமிழ்நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் 1974-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் வறட்சி நிலைமை ஏற்படலாயிற்று. மார்கழி, தை மாதங்களிலேயே தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலே குடி தண்ணீர் கிடைப்பதும் அரிதாகப் போனது சென்ற ஆண்டில்தான். தவிர, தென் மேற்குப் பருவக் காற்றினுல் பெய்த மழையை நம்பி எப்படியும் ஓரளவு மழை பெய்யக்கூடும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் ஏழை, எளிய, விவசாய மக்கள் தங்களிடமிருந்த தானியங்களை விதையாக இட்டு ஓரளவு மகசூலை எதிர்பார்த்தனர். ஆனுல் வானம் பொய்த்ததால் இந்தப் பயிர்கள் விளையவில்லை.

அதன் பயனுக, எதிர்பார்த்த பயிர் நட்டத்துடன் கையிலிருந்த பொருளும் செலவாகி அவர்கள் அன்றுட வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களை வாங்கவும், வசதியற்ற நிலைமையில் இருந்தனர். இம்மாதிரி வறட்சியால் ஏற்பட்ட இடுக்கண்களைக் களைய ஒரு மும்முனைத் திட்டம் செயலாக்கப் பட்டது.

அதன்படி, முதலாவதாகப் பொதுமக்களுக்கு ஆங்காங்கே உள்ள கிணறுகளை ஆழப்படுத்தியும் புதிய கிணறுகளை வெட்டியும், குடிதண்ணீர் வசதி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அத்துடன்கூட எல்லா இடங்களிலும் போதுமான அளவு உணவு தானியங்களை ஆங்காங்கு வைத்து நியாயமான விலைக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டியதாயிற்று.

பயிர் நட்டமடைந்து தவிக்கும் விவசாயிகளுக்குத் தாங்கள் செலுத்த வேண்டிய நிலவரி, அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன்கள் முதலானவற்றிலிருந்து நிவாரணம் அளிக்க வேண்டியதாயிற்று.



மூன்றுவதாக, வறட்சியினுல் பாதிக்கப்பட்டவர்கள், அன்றுட வாழ்க்கைப் பொருட்களை வாங்குவதற்கு வசதியாக அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டதால் ஆங்காங்கு வேலை வாய்ப்பு அதிகம் உள்ள மராமத்து வேலைகள், சாலைகள் அமைத்தல் முதலான பல்வேறு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. வருவாய் வாரிய உறுப்பினர்களும், மாவட்ட ஆட்சியாளர்களும் பல்வேறு மாவட்டங்களிலே உள்ள நிலையை அவ்வப்போது ஆராய்ந்து இந்த மும்முனைத் திட்டப்படி அவசியமான இடங்களில் வேலை வாய்ப்புத் தரவும், குடி தண்ணீர் வசதி தரவும் செயல்பட்டனர்.

தமிழ்நாட்டில் உள்ள 17,069 கிராமங்களில் 12,022 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டவை என்று அறிவிக்கப்பட்டது. முன் சொன்ன திட்டங்களின் அடிப்படையிலே ஆங்காங்கு, மேற்கொள்ளப்பட்ட புணிகளில் 1975-ஆம் ஆண்டு ஜனவரி முதல், மார்ச் வரையிலே குடிதண்ணீர் வசதி செய்வதற்காக 352 இலட்ச ரூபாயும்; குளம் ஏரி முதலானவற்றை மராமத்துச் செய்யும் வகையில் 377 இலட்ச ரூபாயும்; சாலைகள் அமைப்பதில் 148 இலட்ச ரூபாயும்; மண் வளத் திட்டத்துக்காக 2 இலட்ச ரூபாயும்; ஆக 880 இலட்சம் அதாவது 8.8 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. ஆயினும் 1975-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு அப்பாலும் வறட்சி நிலை தொடர்ந்து நீடித்ததால் மேற்சொன்ன வேலைகளை இன்னும் தொடர்ந்து செய்ய வேண்டிய நிலை உருவாயிற்று. ஆக 1975-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல், நவம்பர் முடியக் குடி தண்ணீர் வசதிக்காக 709 இலட்ச ரூபாயும், ஏரி குளங்கள் மராமத்து சம்பந்தமாக 633 இலட்ச ரூபாயும், சாலைகள் மண் வளம் வேலைகளிலே 232 இலட்ச ரூபாயும் ஆக 1,572 இலட்சம் அதாவது 15.72 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. இதன் பயனுகக் குடிநீர் வசதிக்காக 36,028 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டும் புதிதாக வெட்டப்பட்டும் உள்ளன. 17,300 பாசன வசதிகளுக்கு மராமத்து மேற்கொள்ளப்பட்டன. தவிர 6,500 புதிய சாலைகளும் அமைக்கப்பட்டன. ஆக, சென்ற ஆண்டு ஏற்பட்ட வறட்சி நிலையைச் சமாளிக்கச் சுமார் 25 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதில் மத்தியப் பேரரசின் உதவி மட்டும் ரூபாய் 7.5 கோடியாகும். முன் சொன்னவை தவிர சாதாரணமாக ஐந்தாண்டுத் திட்ட அடிப்படையில் மேற்கொள்ளும் வேலைகள் குறிப்பாகவும், சிறப்பாகவும் வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களில் மேற்கொள்ளப்பட்டன. ஆங்காங்கு உள்ள மக்கள் வேலையின்றி அவதியுற்ற காரணத்தால் அவர்களுக்கு வேலைவாய்ப்புத் தரும் நோக்கத்தால் இம்மாதிரி செயல்படுத்தப்பட்டது. இந்த வகையில் 1975-ஆம் ஆண்டு ஜனவரி முதல், மார்ச் மாதம் வரையில் சுமார் 10 கோடி ரூபாய் மதிப்புள்ள வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. திட்ட அடிப்படையில் இந்தச் செலவில் ஒரு பகுதி மத்திய அரசின் உதவியுடன் கூடியதாகும்.

வறட்சி நிலைமை ஏற்பட்டவுடன் 1975-ஆம் ஆண்டு ஆரம்பத்திலே தமிழ்நாட்டில் ஒரு பயங்கரச் சூழ்நிலையே உருவாயிற்று. இந்தச் சூழ்நிலையை நேரிடையாகக் கவனித்து ஆவன செய்ய வேண்டி, சென்ற ஆண்டு ஜனவரி மாத இறுதியில் மத்தியப் பேரரசின் விவசாயத் துறை ராஜாங்க அமைச்சர் மாண்புமிகு ஏ.பி. ஷிண்டே அவர்கள் தலைமையில் ஒரு குழு தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டது. தவிர மேதகு ஆளுநர் அவர்களும் வறட்சி நிவாரண ஆணையாளர் அவர்களும் ஆங்காங்குச் சென்று வேலைகளைப் பார்வையிட்டனர். நிவாரணம் அளிக்க வேண்டிய அளவு பற்றி விவாதிக்க, சென்ற ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் தேதியன்று, மத்தியப் பேரரசின் நிதியமைச்சர் மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சென்னை வந்து விவாதித்து, அதன் பயனுக 'நிவாரண வேலைகள் மேற்கொள்ள வேண்டிய அவசியத்தைக் கருதி மத்திய அரசின் உதவியாக ரூபாய் 7.5 கோடி வறட்சி நிவாரண வேலைகளுக்கு அளிக்கப்படும்' என அறிவித்தது, குறிப்பிடத்தக்கதாகும். காலத்தால் செய்த இந்த உதவி வறட்சி நிலைமையைச் சமாளிக்க மிகவும் உதவியாய் இருந்தது என்று சொல்லத் தேவையில்லை. இது தவிர, வறட்சியால் பாதிக்கப்படாத பொதுமக்களும் மேதகு ஆளுநர் உள்பட மற்ற அதிகாரிகளும் வறட்சி நிவாரண நிதிக்காகச் சுமார் மூன்று கோடி ரூபாய் வரை நன்கொடையாக அளித்தனர்.

பண உதவி செய்ததோடு மட்டுமல்லாமல் வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களிலுள்ள மக்களுக்கு நியாய விலையிலே உணவுப் பண்டங்கள் கிடைக்க வேண்டி, சென்ற ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதங்களிலே மத்தியப் பேரரசு தமிழ்நாட்டுக்கு மத்திய கையிருப்பிலிருந்து கோதுமையும் அரிசியும், தட்டின்றி அனுப்பி வைத்தனர். அதன் பயனுகத் தான் ஆங்காங்கு உணவுப் பொருள்களைத் தட்டில்லாமல் கொண்டு சென்று மக்களின், குறிப்பாக, ஏழை விவசாய மக்களின்-அவசியத் தேவையை ஒருவாறு நிறைவேற்றி அவர்களைப் பசி, பட்டினியினின்று காப்பாற்ற முடிந்தது.

வறட்சியினுல் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள சமயத்தில் மத்தியப் பேரரசு தமிழ்நாட்டுக்கென 6 இலட்சம் டன்கள் கோதுமையும், 1.8 இலட்சம் டன்கள் அரிசியையும் கொடுத்து உதவியது காலத்தில் செய்த உதவியாகும்.

தவிரவும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆங்காங்குள்ள கிணறுகளை ஆழப்படுத்தவும், புதிய கிணறுகளைத் தோண்டவும் மிக அவசியமாகத் தேவைப்பட்டவை ஆழ் கிணறு தோண்டுவதற்கு வேண்டிய சாதனங்கள் ஆகும். அதற்காகத் துளை போடும் கருவிகள், இயந்திரங்கள் முதலானவற்றை இதர மாநிலங்களிலிருந்து இங்கே அனுப்பி வைக்கவும், தவிர ஐக்கிய நாட்டுக் குழந்தைகள் நல நிறுவனத்தார் தமிழ்நாடு குடிநீர் வாரியத்துக்கு வேண்டிய துளை போடும் கருவிகள், வாகன வசதிகள் முதலியவற்றைச் செய்து கொடுப்பதற்கும், துணை புரிந்தனர். அம்மாதிரி அவர்கள் மூலமாக இதர மாநிலங்களிலிருந்து கிடைத்த சாதனங்களைப் பயன்படுத்திக் குடிநீர் வாரியம் 3,635 புதுக் கிணறுகளைக் குறைந்த காலத்தில் உருவாக்கியுள்ளது. அப்போதுள்ள நிலையில் தீவிரமாகக் குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் மக்கள் பெருமளவு அவதிக்கு உள்ளாக நேரிட்டிருக்கும். வறட்சியின் கொடுமையிலிருந்து நிவாரணம் அளிப்பதற்குத் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட பல்வேறு பணிகளிலும் முன் சொன்ன மாதிரி, மத்தியப் பேரரசு பங்கேற்றுக் காலத்தால் செய்த பண உதவியும், இதர உதவிகளும், குறிப்பாக மத்திய அமைச்சர்கள் ஆங்காங்கு வந்து நிவாரண வேலைகளை மேற்பார்வையிட்டு மக்களுக்கு ஆறுதல் அளித்ததும் மறக்கற்பாலதன்று.

சென்ற அக்டோபர், நவம்பர் மாதங்களில் தமிழ்நாட்டில் ஓரளவு பரவலாக மழை பெய்திருந்தாலும் இன்னும் நெல்லை, இராமநாதபுரம் மாவட்டங்களில் சில இடங்களில் இவ்வாண்டும் தொடர்ந்து வறட்சி நிலை ஏற்பட்டுள்ளது. அவற்றைச் சமாளிக்கத் தமிழ்நாடு அரசும், மத்தியப் பேரரசும் வேலை வாய்ப்புத் திட்டங்களை மேற்கொண்டும், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கப் புதுக் கிணறுகளைத் தோண்டவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிலவரி, கடன் சுமை முதலானவற்றிலிருந்து நிவாரணம் அளிக்கவும் அவசியமான திட்டங்களை மேற்கொண்டுள்ளன.

(நன்றி: சென்னை வானொலி நிலையம்)

வளமான
வாழ்விற்கு....

நாடு நலம் பெற
வீடு வளம் பெற

அரிய பெரிய திட்டங்கள்
அரசு நிதம் தீட்டுகிறது.

திட்டங்களின் இனிய பலன்
எட்டிடவே எல்லோர்க்கும்

அளவான குடும்பம்
அமைவதுதான் சிறப்பாகும்!

பிறந்ததைக் காப்போம்!
பிறப்பதைத் தவிர்ப்போம்!!

குடும்ப நலத் துறை
தமிழ்நாடு அரசு.



அன்றாட வாழ்க்கையில் கைவினைப் பொருள்

சிற்பக்கலை, ஓவியக் கலை, நாடகக் கலை, நாட்டியக்கலை, கட்டடக் கலை போன்ற எண்ணற்ற அருங்கலைகளின் உறைவிடமாக இந்திய நாடு இலங்கி வருகிறது.

இந்தியாவின் பழைமை வாய்ந்த கலாச்சாரப் பாரம்பரியத்தின் சிறப்புக்குச் சிறப்பு சேர்க்கும் வண்ணம் கலைகளையும், கைவினைத் தொழிலையும் சென்ற பன்னிரெண்டு ஆண்டுகளாகக் காத்து வளர்த்து வருகிறது 'இந்தியக் கைவினைப் பொருட் சங்கம்''. (The Crafts Council of India.)

எல்லா வழிகளிலும் கைவினைத் தொழில் மறுமலர்ச்சி அடையச் செய்வதும், கைவினைப் பொருள் படைப்புக் கலையை அழியாமல் காப்பதும், நலிவுற்ற கைவினைஞர்க்கு உதவிபுரிவதுமே இச் சங்கத்தினுடைய குறிக்கோள்களாகும்.

1964-ஆம் ஆண்டு 45 நாடுகளைச் சேர்ந்த சுமார் 1,000 கைவினைஞர்களைக் கொண்டு துவக்கப்பட்ட இச்சங்கம், உலகக் கைவினைப் பொருட்சங்கத்தின் அங்கீகாரம் பெற்றதாகும். அரசுச் சார்பற்ற நிறுவனமான இவ்வமைப்பு 'யுனெஸ்கோ'வுடன் தொடர்பு கொண்டதாகும். தற்போது பம்பாய், டெல்லி மற்றும் சில இடங்களில் இதன் மண்டல நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

அனைத்துக் கலைகள் மற்றும் கைவினைத் தொழில் பற்றி அறிந்து கொள்ளவும், ஆராய்ச்சி மேற்கொள்ளவும் உதவக்கூடிய முழு விவரங்களும் அடங்கிய ஒரு மாதிரி வடிவ வங்கி (Design Bank) சங்கத்தின் தலைமை யிடத்தில் அமைக்கப்படவிருக்கிறது.

மறைந்து கொண்டிருக்கும் பழைமை வாய்ந்த கைத்தொழிலைப் பற்றிய சிறப்புப் பயிற்சி வகுப்புக்கள், முதுநிலை கைத்தொழில் பயிற்சி வல்லுநரால் நடத்தப்பட இருக்கின்றன.

ஏற்கெனவே பூம்புகார் மாதிரி வடிவ அமைப்பு மேம்பாட்டு நிலையத்தின் (Poomphuhar Design Development Centre) உதவியுடன் 'கலம்கரி' வேலைகளில் (Kalamkari work) பயிற்சி வகுப்புகள் துவக்கப்பட்டுவிட்டன. மேலும் சமூகத்தின் ஏழ்மை நிலையிலுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய குடிசைத் தொழில்களான பனைஓலைத் தொழில், பொம்மை செய்தல் போன்றவற்றையும் இச்சங்கம் நடைமுறைப் படுத்த இருக்கின்றது.

மேலும் உலகக் கைவினைத் தொழில் கழகத்துடன் தொடர்பு கொண்டிருப்பதனால் இந்தியக் கைவினைப் பொருட்சங்கம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் உலகமெங்கும் இத்துறையின் முன்னேற்றங்களையும் செயல் முறைகளையும் வெளிப்படுத்தவும் பரப்பவும் ஏதுவாயிருக்கிறது.

இந்தியக் கைவினைப் பொருட் சங்கத்தின் தலைமையகம் டெல்லியிலிருந்து சென்னைக்கு மாற்றப் படுவதையொட்டி, 'அன்றாட வாழ்க்கையில் கைவினைப்பொருள்' என்றதொரு கைவினைப் பொருட் கண்காட்சி 27-4-'76 முதல் 1-5-'76 வரை சென்னையில் மாக்ஸ் முல்லர் பவனில் நடைபெற்றது.

மாநிலம் முழுவதிலிருந்தும் கைவினைக் கலைஞர்கள் கலந்து கொண்டு தாங்கள் உருவாக்கிய பொருட்களை காட்சிக்கும், விற்பனைக்கும் வைத்திருந்தனர். நவீன கலப்பு உலோகப் பொருட்கள், ஆலய ஆபரணங்கள், தோல் கைவினைப் பொருட்கள், காகித வேலைப்பாடமைந்த பொருட்கள், சிற்பங்கள் மற்றும் சித்திர வேலைப்பாடு கொண்ட திரைச்சீலைகள் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

இந்தியக் கைவினைத் தொழிற் சங்கமும் மாக்ஸ்முல்லர் பவனும் கூட்டாக நடத்திய பொருட் காட்சியினைத் துவக்கி வைத்து ஆளுநரின் ஆலோசகர் திரு. பி.கே தவே அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

''சுவீடன் நாட்டில் ஒரு கைவினைஞருக்கு மாதச் சம்பளத்தோடு மட்டுமின்றி, புதிய பொருட்களை அவர் படைப்பதற்கு வசதியாக இடவசதி, கச்சாப் பொருள், பணவசதி முதலியனவும் ஏற்பாடு செய்து தரப்பட்டது. அதைப் பயன்படுத்தி, அவர் அருமையான கைவினைப் பொருட்களை உருவாக்கினார். விருத்தாச்சலத்தில் உள்ள பீங்கான் தொழிற்சாலையின் கைவினைஞர்களுக்கும் இதுபோன்ற வாய்ப்புக்களை உருவாக்கித் தந்தால், அவர்களும் பல அரிய கைவினைப் பொருட்களை உருவாக்கக் கூடும். குழந்தைகளுக்கும் இத்தகைய படைப்புக் கலையில் ஆர்வத்தைத் தூண்டுவதற்கான வசதிகளையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்தித் தர வேண்டும். புதிய பொருட்களை வடிவமைத்து தயாரிப்பதற்குரிய நிதியுதவியையும், கச்சாப் பொருட்களையும் கைவினைஞர்களுக்கு மத்திய அரசு அளித்து உதவ வேண்டும்.''

''அன்றாட வாழ்க்கையில் கைவினைப் பொருள்'' என்ற பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருந்தவை ஆடம்பரப் பொருளாக மட்டுமின்றி அன்றாட வாழ்க்கைக்குத் தேவையானவைகளாகத் திகழ்ந்ததுடன் கைவினைஞர்களின் திறமையைப் பறைசாற்றும் பொருள்களாகவும் விளங்கின என்றால் மிகையல்ல!

—இராவணன்









"நான்தான் எண்ணெய்ப் பொறி. எண்ணெய்ப் பொறி' என்ற என்னுடைய இயற்பெயரைச் சொன்னால் அநேகமாக உங்களுக்குத் தெரியாது! 'ஆயில் என்ஜின்' என்கிற ஆங்கிலப் பெயரைச் சொன்னால்தான் உங்களுக்குப் புரியும். இப்படித்தான், எனது எஜமான்ர் வீட்டில் அவரது மகன் ஒரு சின்னப் பையன் தனது தந்தையை ஒரு முறை "அப்பா, ரேடியோவுக்கு இங்கிலீஷ் பேர் என்னப்பா?" என்று கேட்டான். அந்த அளவுக்கு "ரேடியோ" என்ற பெயர் தமிழில் வழங்கப் பட்டுவிட்டது. அது சரி, என் குறைகளை உங்களிடம் கூற வந்து விட்டு, என் பெயர்ப் பெருமையைக் கூறிக் கொண்டிருக்கிறேன்.

"இன்றைய சூழ்நிலையில் நான் இந் நாட்டு மக்களுக்காக எவ்வளவு உழைக்கிறேன் தெரியுமா? வேளாண்மைத் துறையில் பம்பு செட்டுகளை நான்தான் இயக்குகிறேன். தொழிற்சாலைகளில் இயந்திரங்களை நான் தான் இயக்குகிறேன். ஆனால் இவையெல்லாம் எப்போது? மின்சாரப் பற்றுக்குறை வரும் காலங்களிலும், வறட்சிக் காலங்களிலும் மட்டும்தான்! மின்சாரப் பற்றுக்குறை வரும் காலங்களில் அந்த மின்சாரத்தையே உற்பத்தி செய்யும் ஜெனரேட்டர்களை இயக்குவதற்கும் என்னைத்தான் பயன்படுத்துவார்கள். ஆனால், மின்சாரப் பற்றுக்குறை அல்லது வறட்சி நீங்கி, நிலைமை சீரடைந்து விட்டாலோ! என்னையும், என்.சேவையையும் மக்கள் மறந்து விடுவார்கள். மீண்டும் மின்சாரப் பற்றுக்குறை அல்லது வறட்சி வரும் போதுதான் என்னைத் தேடுவார்கள். அப்படி அவர்களுக்கு நான் சேவை செய்கின்ற காலத்திலாவது என்னை நன்கு பேணிக் காப்பார்களா? என்றால் அதுவும் இல்லை. விவசாயிகளுக்கு முக்கியமான பயிர் செய்யும் காலத்தில் மின்வெட்டு அமுலுக்கு வந்துவிடும். எல்லோரும் ஒரே மூச்சாக என்னைத் தேடுவார்கள்! நாடுவார்கள். நான் அப்படியே பெருமையால் பூரித்துப் போய் மேனுமினுக்கி மின்சார மோட்டாரைப் பார்த்து லேசாகச் சிரிப்பேன். ஆனால், நான் அவர்களுக்கு சேவை செய்திடும் நேரத்தில் அவர்கள் என்னைப்படுத்தும் பாடு! அப்பப்பா, நினைத்தாலே நெஞ்சு பதறுகிறது!

"என்னோடு இணைக்கப்பட்டிருக்கும் பம்பு செட் வேலை செய்யவில்லையென்றாலும், என் மீது தான் குறை சொல்வார்கள்! நான் கறுப்பாகப் புகை விடுகிறேனாம்! அங்கங்கே எண்ணெய் ஒழுகிக் கொண்டு பார்ப்பதற்கே அசிங்கமாக இருக்கிறேனாம்! இதற்கெல்லாம் காரணம் யார்? என் முதலாளி என்னைச் சரியாகப் பராமரிக்காதது தானே! என் முதலாளி அவர் வீட்டிலே வளரும் நாய்க்குட்டியைக் கூட அழகாகக் குளிப்பாட்டி, வேளைக்குச் சாப்பாடு போட்டு சுத்தமாக வைத்துக் கொள்கிறார். ஆனால், ஆயிரக் கணக்கில் பணம் செலவு செய்து வாங்கிய என்னையோ! ஆயில் என்ஜின் தானே! என்று உதாசீனப்படுத்துகிறார்! ஆனால், நான் இத்தனை அவமதிப்புகளையும், உதாசீனங்களையும் தாங்கிக் கொண்டு வேலை செய்வேன். அது தான் என் தப்பு! "ஆயில் என்ஜினை எப்படி வைத்துக் கொண்டாலும் அது வேலை செய்யும்" என்கிற எண்ணம் அவர்களுக்கு.

"தவறிப் போய் எப்போதாவது, நான் ரிப்பேர் ஆகி விட்டால் போதும்; என்னைக் கொண்டு போய் உள்ளூர் கிராமப் பட்டறையில் தள்ளி விடுவார்கள். என்னைச் சரி பார்க்கும் டாக்டர் இருக்கிறாரே! அதுதான் மெக்கானிக்! அவர் மழைக்குக் கூடப் பள்ளிக்கூடத்தில் ஒதுங்கியிருக்க மாட்டார்! அவர், என் பாகங்களில் தேய்ந்து போனவற்றிற்குப் புதிதாக எதையும் மாற்றவும் மாட்டார்! பட்டறைக்குப் போன உடன் என்னை மண்ணெண்ணெயில் குளிப்பாட்டுவார்! என்னை அக்கு வேறு, ஆணி வேறாகப் பிரித்துப் போடுவார்! தேய்ந்து போன பாகத்தை வெல்டிங் செய்து தட்டி நீட்டி, எப்படியோ தற்காலிக மருத்துவம் செய்து ஓடவிடுவார்! என் முதலாளியும் ஏமாந்துபோய் 50 அல்லது 100 ரூபாய் கொடுத்து என்னை எடுத்துக் கொண்டு போய் வயலில் வேலை செய்ய வைப்பார்! நான் பதினைந்தே நாளில் மீண்டும் 'ரிப்பேராகி விடுவேன்! அவர் உடனே சலித்துக் கொள்வார். "சே! இந்த வறட்சி எப்போது தான் போகுமோ? இந்த ஆயில் என்ஜினை வைத்துக் கொண்டு மாரடிக்க வேண்டியிருக்கிறது" என்று தலையிலடித்துக் கொண்டே என்னை மீண்டும் அந்தப் பட்டறை டாக்டரிடம் அழைத்துப் போவார். மீண்டும் அதே மண்ணெண்ணைக் குளியல், தட்டல், நீட்டல், வெல்டிங், தண்டச் செலவு!

"இதைத் தவிர்ப்பது எப்படி? இந்த விவசாயிகளுக்கு என் அருமைகளைப் புரிய வைப்பது எப்படி! எனக்கும் வாயிருந்திருந்தால் கதறிக் கதறிக் கூறியிருப்பேன்! என்

மனக் குறையையும் இந்த அரசு கவனித்தது! வேளாண்மைத் துறையின் இயக்குநர் அவர்கள் மூலம் மாவட்டங்களில் உள்ள கோட்டப் பொறியாளர்களுக்கு ஒரு ஆணை பிறப்பித்தது. உடனே கோட்டப் பொறியாளர்கள் ''ஆயில் என்ஜினையும், பம்பு செட்டுகளையும் பராமரிப்பது எப்படி?'' என்று ஒரு பயிற்சி முகாமை ஏற்பாடு செய்தார்கள். எனக்கோ, விடிவு காலமே வந்து விட்டது என்று பூரித்து நின்றேன். பயிற்சி முகாமும், கலந்து கொண்டவர்களுக்கு மிகவும் உதவியுள்ளதாக, வெற்றிகரமாக நடந்து முடிந்தது. ஆனால், அந்த முகாமில் கலந்து கொள்ளாதவர்களுக்கு எப்படித் தெரிவிப்பது! அதற்காகத்தான் என் கதையை உங்களுக்குச் சொல்கிறேன், இதைப் படிப்பவர்கள், அடுத்தவர்களுக்குச் சொல்வார்கள் என்ற நம்பிக்கையில் சொல்கிறேன். சரி, இனி என்னைப் பராமரிப்பது எப்படி என்பதையும் கூறுகிறேன்! அதையும் கேளுங்கள்.

''முதலில், என்னை இயக்க ஆரம்பிக்கு முன்பு நீங்கள் முக்கியமாகச் செய்ய வேண்டியவை :

1. முதலில் என்னைக் குளிர வைக்கும் முறை சரியாக இருக்கிறதா? என்பதைக் கவனித்து, தேவைப்பட்டால் சுத்தத் தண்ணீரை நிரப்பவும்.

2. உயவு எண்ணெய் (லூப்ரிகேட்டிங் ஆயில்) இட வேண்டிய இடங்களில் இடவும்.

3. டீசல்எண்ணெய்,உயவு எண்ணெய் மட்டங்களைச் சரி பார்த்துத் தேவையான அளவு நிரப்பவும்.

4. 'டீ கம்பரஷன் லிவரைத்' தூக்கி விட்டு, 'ஸ்டார்ட்டிங் ஹேண்டில்' உதவியால் என்ஜின் சக்கரத்தை 12 முதல் 24 முறை சுற்றவும். இவ்வாறு செய்வதால் எல்லா பாகங்களுக்கும் உயவு எண்ணெய் பெற உதவும். இப்பொழுது நான் இயங்கத் தயார் நிலை அடைந்து விடுகிறேன். இப்போது 'டீ கம்ப்ரஷன் லீவரைத்' தூக்கி 'ஸ்டார்ட்டிங் ஹேண்டில்' உதவியால் சுற்றி, நல்ல வேகமடைந்தவுடன், 'டீ கம்ப்ரஷன் லீவரை' இறக்கி விட்டால், நான் இயங்க ஆரம்பித்து விடுவேன்.

முதல் முறை இயங்காவிட்டால் இதே போல் இரண்டு அல்லது மூன்று முறை செய்தால், இயங்க ஆரம்பித்து விடுவேன். நான் இயங்க ஆரம்பித்ததும், முதலில் கறுப்புப் புகையினையும், பின்னர் வண்ணமில்லாத அல்லது லேசான ஊதா நிறப் புகையினையும் வெளித் தள்ளுவேன்.

சுத்தமான, கலப்படமற்ற அதிவேக டீசல் எண்ணெய்யை (ஹைஸ்பீடு டீசல் ஆயில்) உபயோகப்படுத்தினால் நான் நீண்ட காலம் பழுதின்றி உழைப்பேன்.

5. எண்ணெய் டேங்குகளை மாதம் ஒரு முறையாவது முழுமையாகச் சுத்தம் செய்ய வேண்டும். தினசரி என் இயக்கம் முடிந்ததும், டேங்கில் எண்ணெய் ஊற்றி நிரப்பி விடல் அவசியம். அவ்வாறு செய்யாவிட்டால், இரவு நேரங்களில் குளிரினால் ஏற்படும் நீர்த்துளிகள் டேங்கிற்குள் உறைய நேரிடும்.

6. என்னுடைய சீரான இயக்கத்திற்கு இன்னொரு முக்கியமான பாகத்தையும் நீங்கள் நன்கு கவனிக்க வேண்டும். அதுதான் 'ப்யூயல் ஃபில்டர்கள்'. எண்ணெய்யில் சேரும் அழுக்குகளை உறிஞ்சி எண்ணெயைச் சுத்தம் செய்து அனுப்புவதால், நாளடைவில் அதில் அழுக்குச் சேர்ந்து உறிஞ்சும் தன்மையை அது இழந்து விடுகிறது. ஆகவே ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அதனை மாற்றுதல் அவசியம். அதாவது 500 மணி நேரம் நான் வேலை செய்த பிறகோ அல்லது 2 மாதங்களுக்கு ஒரு முறையோ அதனை மாற்றுதல் அவசியம்.

7. ஆயில் என்ஜினுக்கான உய்வு எண்ணெய் (என்ஜின் ஆயில்) தயாரிப்பாளர்களால் பரிந்துரைக்கப்பட்ட தரத்தினை பயன்படுத்தினால், நான் நீடித்து உழைப்பேன். உய்வு எண்ணெய் மாற்றும்போது உய்வு எண்ணெய் வடிகட்டியையும் (என்ஜின் ஆயில் ஃபில்டர்) சுத்தம் செய்தல் அவசியம்.

என்ஜின் ஆயில் மாற்றுமுன் என்ஜினின் உயவு எண்ணெய் வழிகளை சுத்தம் செய்வது அவசியம். ஆகவே, 'பிளஷிங் ஆயிலை', 'டிப் ஸ்டிக்கின்' மேல் கோடு அளவிற்கு ஊற்றி என்ஜினை 10 நிமிடம் ஓடவிட்டு நிறுத்தினால் எல்லா வழிகளும் சுத்தமாகி விடும். பிறகு இந்த எண்ணெயை வெளியில் எடுத்து விட்டு புதிய உயவு எண்ணெயை 'டிப்ஸ்டிக் மேல்' கோடு அளவிற்கு ஊற்றி நிரப்ப வேண்டும்.

8. ஏர் க்ளீனரை வாரம் ஒரு முறையாவது சுத்தம் செய்வது அவசியம். 'பேப்பர் எலிமெண்டை' 800 வேலை மணிகளுக்கு ஒரு முறை மாற்ற வேண்டும்.



பழுதுகளும் சரி பார்த்தலும் :

9. பழுதான பிறகு ஒன்றைச் சரி செய்வதை விட, பழுது வராமல் தவிர்க்க முயற்சிப்பது பயனுடையதாகும். ஆகவே, கீழ்க்கண்டவை பற்றி அறிந்து கொண்டால் என்ஜின்களுக்கு வரும் பெரும் பழுதுகளைத் தவிர்க்க ஏதுவாகும் :

பழுதுகள் (1)	காரணங்கள் (2)	சரி செய்தல் (3)
1. இயங்க ஆரம்பிப்பதில்கஷ்டம்.	(அ) டாங்கில் டீசல் இல்லாமை	(அ) டாங்கில் டீசல் நிரப்பவும்.
	(ஆ) எண்ணெய் வழிகளில் காற்றுக் கசிவு	(ஆ) காற்றுக் கசிவினை நீக்குதல்.
	(இ) எண்ணெய்க் குழாய்கள் கழன்று நிற்பது (லூஸாக இருப்பது) அல்லது முறிந்த எண்ணெய்க் குழாய்கள்	(இ) எண்ணெய்க் குழாய்களை முடுக்கவும். முறிந்ததை புதுப்பிக்கவும்.
	(ஈ) நாசில் சரியான அழுத்தத்தில் எண்ணெய் தெளிக்காதிருக்கலாம்.	(ஈ) நாசில் சரியான அழுத்தத்தில் (சப்தத்துடன்) தெளிக்க சரி செய்யவும்.
2. என்ஜின் இயங்க ஆரம்பித்து, விட்டு விட்டு எரி பொருளை எரிப்பது அல்லது விரைவில் நின்று விடுவது	(அ) என்ஜினுக்கு எரியெண்ணெய் சரியாகச் செல்லாமை	(அ) எல்லா எண்ணெய் வழிகளையும் நன்கு முடுக்கி விட்டு, காற்றுக் கசிவினை நீக்கி விடவும்.
	(ஆ) எரியெண்ணெயில் நீர் கலந்திருத்தல்	(ஆ) எண்ணெய் டாங்கைச் சுத்தம் செய்து புதிய எண்ணெய் ஊற்றவும்.
	(இ) எண்ணெய் வடிகட்டி கனத்து, மாற்ற வேண்டி இருத்தல்.	(இ) ஃபில்டர் எலிமெண்டை மாற்றவும்.
	(ஈ) நாசில் சரியாக வேலை செய்யாமை.	(ஈ) நாசில்களை சரிபார்த்தல்.
3. அழுக்கடைந்த புகையை வெளித்தள்ளுவதோடு, சக்தி குறைவாயிருத்தல்.	(அ) என்ஜினுக்கு எண்ணெய் சரிவரச்செல்லாமை.	(அ) 2-ல் கண்டவாறு செய்யவும்
	(ஆ) பொருந்தாத எண்ணெய்.	(ஆ) எண்ணெயை வடித்து புதிய தகுதியான எண்ணெயைநிரப்பவும்.
	(இ) ஏர் க்ளீனர் அழுக்கடைந்து இருத்தல்.	(இ) ஏர் க்ளீனர் எலிமெண்டைச் சுத்தம் செய்தல் அல்லது மாற்றுதல்.
	(ஈ) எக்ஸாஸ்ட் சைலன்ஸரில் அழுக்கடைந்திருத்தல்.	(ஈ) எக்ஸால்ட் சைலன்ஸரைச் சுத்தம் செய்யவும்.
4. என்ஜின் அதிக சூடேறுதல்	(அ) அதிக பளு கொடுப்பது.	(அ) சரியான பளு மட்டும் கொடுத்து அதிகப் பளுவினைத் தவிர்த்தல்.
	(ஆ) குளிர்விக்கும் தண்ணீர் இல்லாதிருத்தல்.	(ஆ) தண்ணீரைப் புதுப்பித்து, தொடர்ந்து உட்செல்லவகை செய்யவும்.
	(இ) உயவு எண்ணெய் இல்லாது இருத்தல்	(இ) என்ஜின் அடிப்பாகத்தில் உள்ள உயவு எண்ணெயில் அளவைச் சரிபார்த்துத் தேவைப்படின் நிரப்பவும்



10. ஆயில் என்ஜினின் முறையான பராமரிப்புப் பணிகள் :

(1) நாள்தோறும்

அ. என்ஜின் ஆயில் மட்டத்தைச் சரி பார்த்துத் தேவைப்படின் குறிப்பிட்ட அளவிற்கு நிரப்பவும்.

ஆ. எரியெண்ணெய் டாங்கை நிரப்பவும். வேலை முடிந்ததும் நிரப்பி வைத்தல் வேண்டும்.

இ. வேலை முடிந்ததும் என்ஜினின் புறப் பகுதியைச் சுத்தம் செய்து வைக்கவும்.

(2) 50 வேலை மணிகளுக்குப் பிறகு (வாரம் ஒரு முறை) :

ஏர் க்ளீனரைக் கழற்றி எல்லாப் பகுதிகளையும் சுத்தம் செய்து பூட்டவும்.

(3) 100 வேலை மணிகளுக்குப் பிறகு (அரை மாதத்திற்கு ஒரு முறை) :

அ. எல்லா போல்ட், நட்டுகளையும் முடுக்கி டைட் செய்யவும்.

ஆ. எரி எண்ணெய் டாங்கிலுள்ள காற்றுத் துவாரம் சுத்தமாயுள்ளதா எனக் கவனிக்கவும்.

(4) 250 வேலை மணிகளுக்குப் பிறகு :

அ. என்ஜின் ஆயிலை வடித்து, பிளஷிங் எண்ணெயால் சுத்தம் செய்து புதிய எண்ணெய்யினை அளவிற்கு ஊற்றவும்.

ஆ. எரி எண்ணெய் டாங்கினை முழுவதும் சுத்தம் செய்யவும்.

இ. எரி எண்ணெய் வடிகட்டி கிண்ணத்தைச் சுத்தம் செய்யவும்.

ஈ. எக்ஸாஸ்ட் சைலன்ஸரைக் கழற்றி, தட்டி, அதனுள் உள்ள புகை அழுக்குகளை அகற்றவும்.

(5) 500 வேலை மணிகளுக்குப் பிறகு :

அ. ஃப்யூயல் ஃபில்டரிலுள்ள பேப்பர் எலிமெண்டை மாற்றுதல் வேண்டும்.

ஆ. என்ஜின் ஆயில் ஃபில்டரை மாற்றவும்.

(6) 800 வேலை மணிகளுக்குப் பிறகு:

ஏர் க்ளீனர் பேப்பர் எலிமெண்டை மாற்றவும்.

(7) 1,000 வேலை மணிகளுக்குப் பிறகு:

என்ஜின் பூராவையும் பிரித்துச் சரி பார்க்க வேண்டும்.

11. என்ஜினை நீண்ட நாட்களுக்கு வேலையின்றி வைத்திருக்க நேரின் கீழ்க்கண்ட முறைகளைப் பின்பற்றவும் :

1. என்ஜினை இயக்கி, மித வெப்பம் அடைந்த பிறகு நிறுத்தவும்.

2. எரி எண்ணெயை டாங்கு, ஃபில்டர் எண்ணெய்க் குழாய் ஆகியவைகளிலிருந்து எண்ணெயை வடித்துத் தயாரிப்பாளர் பரிந்துரைத்த பாதுகாப்புஎண்ணெய்யை நிரப்பவும்.

3. என்ஜின் ஆயிலை வடிகட்டி விடவும். ஃபில்டரைச் சுத்தம் செய்யவும். தயாரிப்பாளர் பரிந்துரைப்படி பாதுகாப்புஎண்ணெயை நிரப்பவும்.

4. சிலிண்டர் ஃபிளாஸ்க்கிலுள்ள நீர்க் குழாய் மூடியைத் திறந்து, தண்ணீர் முழுவதையும்வெளியேற்றிவிடவும்.

5. எக்ஸாஸ்ட் சைலன்ஸரைச் சுத்தம் செய்து, பாதுகாப்பு எண்ணெயை உள்ளே தெளிக்கவும்.

6. நாசிலைக் கழற்றி 1/4 லிட்டர் பாதுகாப்பு எண்ணெயை சிலிண்டருக்குள் தெளித்து நாசிலைப் பொருத்தவும்.

7. என்ஜினின் புறப்பகுதியைச் சுத்தம் செய்து, மழை, தூசியின்றி தடுக்கத் தகுந்த உறையிட்டு வைக்கவும்.

''ஆக, மேலே சொன்ன முறைப்படி என்னைப் பராமரித்து வந்தால், என்னைப் பராமரிப்பதில் ஆகும் செலவு மிகவும் குறையும். நானும் முழு நலத்தோடு உங்களுக்கு உழைப்பேன். இந்தக் கட்டுரையைப் படிப்பவர்கள் தயவுசெய்து அடுத்தவர்களுக்கும் என் கதையைக் கூறுங்கள். மின்சார மோட்டரை விட, பராமரிப்புச் செலவு எனக்கு சற்று அதிகமானாலும், மின் வெட்டு வருகின்ற காலங்களிலும், வறட்சிக் காலங்களிலும் நான் தான் விவசாயிகளுக்கு உற்ற துணையாயிருந்து பயிர் வளம் பெருக்குவேன்.

''நாளுக்கு நாள் எண்ணிக்கையில் நான் வளர்ந்து வருவதனால் என்னை நன்றாகப் பராமரிப்பதிலும் கொஞ்சம் கவனம் செலுத்துங்களேன். இனியாவது எனக்கு ஒரு நல்ல காலம் பிறக்கும் என்று நம்பி வாழ்கிறேன்.''

''வணக்கம்.''

—அ. சொக்கலிங்கம்
உதவி வேளாண்மைப் பொறியாளர்,
வேளாண்மை இயக்கம்,
சென்னை-5.

பயிர் விளைச்சல் போட்டியில் பரிசு பெற்றவர்கள்

தமிழ் நாட்டில் 1974—75ஆம் ஆண்டில் சோளம், கேழ்வரகு ஆகிய பயிர்களில் நடத்தப்பெற்ற விளைச்சல் போட்டியில் பின்கண்டவர்கள் பரிசு பெற்றுள்ளனர் :

சோளத்தில் முதற் பரிசு பெற்றவர்

திரு. என்.வி. கிருஷ்ணன்,
த/பெ. வெங்கம கவுண்டர்,
நாயக்கன் பாளையம் அஞ்சல்,
கோயம்புத்தூர்—20.

இவர் ஏக்கருக்கு 3,175.809 கிலோ கிராம் சோளம் விளைவித்துள்ளார். இவருக்கு மாநில முதற் பரிசாக ரூபாய் 2,000 வழங்கப்படும்.

சோளத்தில் 2-வது பரிசு பெற்றவர்

திரு. ஆர். கருப்பக் கவுண்டர்,
த/பெ. ராமசாமி கவுண்டர்,
தொண்டாமுத்தூர் (அஞ்சல்),
கோயம்புத்தூர் மாவட்டம்.

இவர் ஏக்கருக்கு 2,994.595 கிலோ கிராம் சோளம் விளைவித்துள்ளார். இவருக்கு இரண்டாவது பரிசாக ரூபாய் 1,000 வழங்கப்படும்.

சோளத்தில் 3-வது பரிசு பெற்றவர்

திரு. வி. மருதாச்சலம்,
த/பெ. வெங்கிடாச்சலதேவர்,
சின்னைய்யா தேவர் தோட்டம்,
மில் ரோடு,
சௌரி பாளையம்,
கோயம்புத்தூர்.

ஏக்கருக்கு 2,751.168 கிலோ சோளம் விளைவித்துள்ள இவர் 500 ரூபாய் பரிசு பெறுவார்.

கேழ்வரகில் முதல் பரிசு பெற்றவர்

திரு. கே. ராமசந்திர நாயுடு,
த/பெ. குப்புசாமி நாயுடு,
'கிரிஸ்டல்', திருச்சி ரோடு,
சிங்காநல்லூர் அஞ்சல்,
கோயம்புத்தூர்.

ஏக்கருக்கு 2,555.484 கிலோ கிராம் கேழ்வரகு விளைவித்துள்ள இவருக்கு மாநில முதற் பரிசாக ரூபாய் 2,000 வழங்கப்படும்.

மேற்கூறிய 4 உழவர் பெருமக்களுக்கும் ''தமிழரசு'' சார்பில் பாராட்டுதலையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

படமும் செய்தியும்



தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 24-4-'76 அன்று மதுரையில் பூதான இயக்கக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

பூதான இயக்கத்திற்கு நிலம் வழங்கியவர்களுக்கு ஆளுநர் அவர்கள் பொன்னாடை போர்த்தினார்.



மதுரை மாவட்டத்தில் உள்ள கம்பிலியபட்டியில், 24-4-'76-ல் ஆளுநர் அவர்கள் பூதான நிலப்பட்டாக்களை ஏழை விவசாயிகளுக்கு வழங்கினார்.

வறட்சி நிவாரணப் பணியின்கீழ் கிணறு வெட்டும் பணியைத் தமிழக ஆளுநர் அவர்கள் 24-4-'76 அன்று துவக்கி வைத்தார்.



வீரபாண்டிய கட்டபொம்மன் பரம்பரையினருக்காக, பாஞ்சாலங்குறிச்சியில் ரூபாய் 11 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள 202 வீடுகளை ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் 21-4-'76-ல் திறந்து வைத்தார்.



இந்தியப் புவியியல் ஆய்வுத்துறையின் கருத்தரங்கை சென்னை எழும்பூரில் உள்ள அரசினர் அரும்பொருட்காட்சியகத்தில் 28-4-'76-ல் ஆளுநர் அவர்கள் துவக்கி வைத்தார். அக்கருத்தரங்கையொட்டி தென்னார்க்காடு மாவட்டம், திருவக்கரை என்ற ஊருக்கு அருகில் உள்ள தேசிய பூங்காவிலிருந்து கொண்டு வரப் பட்டிருந்த 2 கோடி ஆண்டு வயதுடைய கல்மரத்தை (fossil tree) ஆளுநர் அவர்கள் பார்வையிட்டார்.

புள்ளி விவரத்துறையில் கடைநிலை ஊழியராகப் பணியாற்றிய, மறைந்த திரு. வி.டி என். சாரங்கபாணி என்பவரின் துணைவியார் திருமதி. சந்திராசாரங்கபாணி அவர்களுக்கு அரசு ஊழியர் குடும்ப நன்மைத் திட்டத்தின் கீழ் 10,000 ரூபாயை ஆளுநர் அவர்கள் 28-4-'76-ல் வழங்கினார்





தமிழகத்திற்கு 1-5-'76 அன்று வருகை தந்த மத்திய அரசின் உள்துறை அமைச்சர் திரு. கே. பிரம்மானந்த ரெட்டி அவர்களை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் ஆளுநர் அவர்கள் வரவேற்றார்.

ஜவகர்லால் நேரு இளைஞர் மன்றத்தினரால், மைலாப்பூர் பி. எஸ். உயர்நிலைப்பள்ளி மைதானத்தில் "நமது இந்தியா" என்ற பொருட்காட்சியை மத்திய செய்தி, ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. வி. சி. சுக்லா அவர்கள் 6-5-'76-ல் திறந்துவைத்துப் பார்வையிட்டார்.

ஆளுநர் அவர்கள் 3-5-'76, 4-5-'76 ஆகிய 2 நாட்களில் சேலம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தார். எலச்சிப்பாளையம் என்ற ஊரில் ஒரு நரிக்குறவப் பெண் கொடுத்த மனுவையும் பெற்றுக் கொண்டார். அப்போது, தங்கள் குறைகளைத் தீர்த்து வைக்கும்படிக் கூறிப் பொதுமக்கள் கொடுத்த மனுக்களை ஆளுநர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

சேலம் மாவட்டம் செல்லம்பட்டி என்ற கிராமத்தில் 3-5-'76-ல் முதியோர் ஓய்வு ஊதியத்தொகையை ஆளுநர் அவர்கள் வழங்கினார்.



தென்னிந்திய சினிமா வர்த்தக சபையினரால் 6-5-'76-ல் நடத்தப்பெற்ற வரவேற்பு விழாவில் மத்திய செய்தி, ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. வி. சி. சுக்லா அவர்கள் உரையாற்றினார்.

இந்திய வேளாண்மைக் கல்வி நிறுவனத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏழாவது அனைத்துலக வேளாண்மைக் கடனுதவி ஆய்வுத் திட்டத்தை ஆளுநர் அவர்கள் 28-4-'76-ல் துவக்கி வைத்தார்.



"தேசிய ஒருமைப்பாடு மற்றும் கல்வி கற்பிப்பதில் மேம்பாடு செய்வது" என்பது பற்றிய, சென்னை தொழில்நுட்ப ஆசிரியர்கள் பயிற்சி நிலையத்தில், ஆசிரியர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட மறுபயிற்சியை மத்திய துணைக் கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு. டி. பி. யாதவ் அவர்கள் 4-5-'76-ல் துவக்கி வைத்தார்.

மாணவர் அரங்கம்

மணி போல் விளங்கிட...



மாணவ, மாணவியர் மணிபோல் விளங்கிட அவர்கள் பல துறை நூல்களையும் படித்தல் வேண்டும். இதற்கு உறுதுணையாக இருப்பது நூலகம் ஆகும். ஓய்வு நேரங்களில் வீணே பொழுதைக் கழிக்காமல், பயனுள்ள வகையில் பொழுதை இனிதே கழித்திட மாணவர்கள் நூலகங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

'படிப்பதற்கு நேரமில்லையே!' என்று பத்திரிகை படிக்கும் பழக்கத்தை விட்டுவிடக் கூடாது. நாள்தோறும் இதற்கு ஒரு நேரத்தை ஒதுக்கியே ஆக வேண்டும்.

பள்ளிப் படிப்போடு பொது அறிவுத் தகவல்களையும் தெரிந்து கொண்டால்தான், நாம் முழு மனிதனாக விளங்கலாம்.

உங்கள் பொது அறிவைச் சோதிக்க சில வினாக்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுக்குச் சரியான விடை தெரிகிறதா பாருங்கள்!



1. உலக வானிலை தினம் எந்த ஆண்டு முதல் கொண்டாடப்படுகிறது?
2. 'சர்வ தேச நீதி மன்றம்' எங்கே இருக்கிறது?
3. 'இன்டர்போல்' என்றால் என்ன?
4. இந்தியாவின் முதல் செயற்கைக் கோள் எது?
5. இந்திய நாணயத்தின் பெயர் ரூபாய் என்று நமக்குத் தெரியும். அதைப் போல கீழ்க்காணும் நாடுகளின் நாணயத்தின் பெயர் என்ன?
   அ. பர்மா.
   ஆ. டென்மார்க்.
   இ. ஜப்பான்,
   ஈ. துருக்கி.
6. நம் நாட்டுக் கொடியில் மூவண்ணம் உள்ளது. ஆனால் வண்ணத்தோடு சிலுவை உள்ள கொடிகள் எந்தெந்த நாட்டில் உள்ளன?
7. இந்திய தேசிய காங்கிரசின் முதல் தலைவர் யார்?
8. முதன் முதலில் அணுகுண்டு எங்கே, எப்போது வீசப்பட்டது?
9. சென்னை உயர்நீதி மன்றத்தின் வயது என்ன?
10. சென்னையிலுள்ள இராஜாஜி ஹால் முதலில் எதற்காக ஏற்படுத்தப்பட்டது?
11. தமிழ் நாட்டில் எத்தனைப் பத்திரிகைகள் வெளிவருகின்றன?
12. சென்னையில் பெண்களே நடத்தும் அஞ்சல் நிலையம் எங்கே இருக்கிறது?
13. சென்னையில் புதிய கலங்கரை விளக்கம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது, அது எந்த இடத்தில்?
14. "உனக்காக நீ அல்ல; மக்களுக்காக நீ ஆவாய்"—இந்த வாசகம் எங்கே இருக்கிறது?
15. சென்னையில் உறுப்பினர் கட்டணம் ஏதுமில்லாமல், இலவசமாக நூல்களை வழங்கும் நூலகம் எது?

விடைகள் 48-ஆம் பக்கம் பார்க்க!



இராமநாதபுர மாவட்டத்தில் மேம்பாட்டுப் பணிகள்

வான்முகில் தன் கொடைக் கரத்தை இவ்வாண்டும் குறைத்துக் கொண்டதால் இராமநாதபுர மாவட்டம் வறட்சியின் பிடியில் சிக்கியுள்ளது. மாவட்டத்தின் பல பகுதிகளில் கண்டுள்ள வறட்சி நிலையைச் சமாளிக்கும் வகையில் குடிநீர்த் திட்டங்கள், சமுதாயக் கிணறுகள்; கிராமப்புறச் சாலைகள் மற்றும் வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டங்கள் பலவற்றை அரசு விரைந்து செயல்படுத்தி வருகிறது. மார்ச் மாதத்துடன் முடிந்த நிதியாண்டில் 12 இலட்சம் ரூபாய் செலவில் 114 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுக் குடிநீர் வசதி செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் 33 இலட்சம் ரூபாய் செலவில் 410 ஆழ்குழாய்க் கிணறுகளை அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது இம்மாவட்ட மக்களுக்கு மனநிறைவைத் தருகிறது. மேலும் இம்மாவட்டத்தின் ஆறு நகராட்சிகளுக்குக் குடிநீர்த் திட்டங்களுக்காக 3 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் மானியமாகவும் மற்றும் 3 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் கடனாகவும் அரசு வழங்கியுள்ளது.

ஆறு புதிய சமுதாயக்கிணறுகள் மற்றும் 65 சமுதாயக் கிணறுகளை ஆழப்படுத்தவும் அரசு 3 லட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது. கிராமப்புறச் சாலை அமைப்புத் திட்டத்தின்கீழ் 93 வேலைகளுக்காகப் பத்து லட்ச ரூபாய் அனுமதியாகி வேலைகள் நடந்து வருகின்றன. வேலைவாய்ப்புத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு கோடியே 77 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு 66,000 கிராமப்புற மக்கள் பயனடைந்துள்ளனர்.

கூட்டுறவுத் துறையின் மூலமாகப் பயிர்க்கடன் திட்டத்தின்படி, சென்ற ஆண்டில் 37,269 புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டிருப்பதுடன், 9 கோடியே 27 லட்சத்து 29 ஆயிரம் ரூபாய்க்கான கடன் பட்டுவாடா விண்ணப்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கறவை மாடுகள் வாங்கும் திட்டத்தின்கீழ் இரண்டு லட்சத்து 41 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் புதிதாக ஐந்து தீப்பெட்டித் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கிராமப்புறங்களில் இயந்திரச் செக்குகள் வைப்பதற்கும் மற்றும் பனைநார் துடைப்பான்கள் செய்வதற்கான கடன்வசதிகளைத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் செயல்படுத்துகின்றன. பதனீர் இறக்கும் தொழிலாளர்களுக்கு 175 ரூபாய் வீதம் அளிக்கும் திட்டம், இம்மாவட்ட மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

ராபி பருவக்காலத்தில் 2,769 ஏக்கர் நிலத்தில் நெல், சோளம் முதலிய பயிர்கள் விளைவிக்கப்பட்டுள்ளன. வரும் காரிப் பருவத்தில் மானாவரி புஞ்செய் நிலங்களில் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் சுமார் 20 ஆயிரம் ஏக்கரில் உற்பத்தி பெருக்கும் திட்டமுள்ளது.

101 உயர்நிலைப் பள்ளிகளில் துவக்கப்பட்ட, பள்ளி மாணவர்கள் வங்கித் திட்டத்தில் 13,507 மாணவர்கள் 79 ஆயிரத்து 777 ரூபாய் சேமித்துள்ளனர். சிறுசேமிப்பு வசூலிலும், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழும் மாவட்டத்திலேயே சிறப்பாகப் பணியாற்றிய பெருமை சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சாருகிறது.

1975-ஆம் ஆண்டில் தீண்டாமை ஒழிப்பில் சிறந்து விளங்கிய அருப்புக்கோட்டை வட்டம் கோவிலாங்குளம் கிராமம், முதல் பரிசான ஆயிரம் ரூபாய்க்குத் தகுதி பெற்றது. முதுகுளத்தூர் வட்டம் கரையான் புளிங்குடி கிராமம் இரண்டாவது பரிசைப் பெற்றது. மேலும் இம்மாவட்டத்தில் பதினொரு அரிசனக் குடியிருப்புகள் 75-ஆம் ஆண்டில் நன்கு பராமரிக்கப்பட்ட குடியிருப்புகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொன்றுக்கும் 500 ரூபாய் பெறுமான வானொலிப் பெட்டி வழங்கப்பட்டது.

பிரதமரின் இருபது அம்சத் திட்டம், மற்றும் சட்டம் ஒழுங்கு பற்றிச் சென்ற மாத இறுதியில் தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு. தவே, இம்மாவட்ட ஆட்சியாளர் மற்றும் அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்தார். இருபது அம்சத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 70 ஆயிரம் வீடற்ற குடும்பங்களுக்கு மனைப் பட்டா வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்கள் இருப்பு, விலை விவரம் மற்றும் கணக்குகள் பராமரித்தல் சட்ட விதிகளின் கீழ் 203 வியாபாரிகள் மீது வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

அரசு கடன் நிவாரண அவசரத் திட்டத்தின்கீழ், வரம்புக்கு மீறி அதிக வட்டி வசூலித்த எட்டு நபர்கள் மீது நடவடிக்கை தொடரப்பட்டதன் மூலம் வட்டிக்குக் கடன் கொடுப்போரிடையே ஒழுங்குக் கட்டுப்பாடு வளர்க்கப்பட்டுள்ளது.

நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் உபரியாக உள்ள 360 ஏக்கர் நிலத்தை, வரும் ஜூன் மாதத்துக்குள் ஒப்படை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மத்திய களத்துறைப் பிரிவின் கீழ் 45-க்கும் மேற்பட்ட கலைஞர்களைக் கொண்டு, சிவகங்கை, சிவகாசி நகரங்களில் நடத்தப்பட்ட இசை நிகழ்ச்சிகளும், நாடகங்களும் இருபது அம்சத் திட்டத்தை, திரளான மக்களிடையே விளக்குவதாக அமைந்திருந்தன.

நாடு கொண்டாடும் நல்ல விழா பூதான இயக்க வெள்ளி விழா!

நிலமற்ற ஏழை எளிய மக்களுக்கு நிலம் நிறையப் பெற்ற நிலக்கிழார் மனமுவந்து தம் நிலத்தினை, தானாக ஈந்து மகிழ்வதே பூதான இயக்கம்.

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றார் தாயுமானவர்.

'அறத்தால் வருவதே இன்பம்' என்கிறது தமிழ் மறை.

இவ்வுண்மைக்கு உயரிய எடுத்துக் காட்டாக விளங்குவது தான் பூதான இயக்கம்.

எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற சமதர்மச் சமுதாய நெறி முறையை அன்பு வழியில் வலியுறுத்திடும் இயக்கமாக விளங்குகிறது பூதான இயக்கம்.

அண்ணல் காந்தியடிகளின் முதன்மையான சீடர் என்றும், இன்று நம்மிடையே வாழ்வோரின் காந்தியத்தின் முன்னோடியாக விளங்குபவர் என்றும் போற்றப்படும் ஆச்சார்யா வினோபா பாவே அவர்கள் பூதான இயக்கத்தைத் தோற்றுவித்தார்கள்.

காஞ்சிபுரத்தில் 1956-ஆம் ஆண்டு மே திங்களில் அனைத்து இந்திய பூதானம் சர்வோதய ஊழியர்களின் மாநாடு வினோபா பாவே முன்னிலையில் நடைபெற்றது. இம் மாநாட்டில் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்களும் பங்கேற்றது நினைவு கூரத்தக்கது.

பூதான இயக்கம் உழுதுண்டு வாழ்வோரிடையே ஓர் எழுச்சியை உருவாக்கியது. இராமனாதபுரம் மாவட்டத்தில், பூதான இயக்கத்திற்கு 4,575 ஏக்கர் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து ஏனைய மாவட்டங்களிலும் இவ்வியக்கத்திற்கு நிலம் வழங்கப்பட்டது.

தமிழ் நாட்டில் பூதான இயக்கத்திற்கு வழங்கப்படும் நிலங்களை வரைமுறைப் படுத்துவதற்காக 1958-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு 'பூதானச் சட்டம்' ஒன்றை இயற்றியது. இதனை ஒட்டி 'பூதான வாரியம்' உருவாக்கப்பட்டது. நிலம் பெறுவதிலும் வழங்குவதிலும் பின்பற்ற வேண்டிய வழி முறைகள் நிர்ணயிக்கப்பட்டன. இவ்வாரியத்தின் தலைமையகம் மதுரையில் செயல்படத் தொடங்கியது.

பூதான இயக்கத்தின் மூலமாக கிடைத்த நிலங்களை மட்டும் பகிர்ந்து விவசாயிகளுக்குக் கொடுத்தால் மட்டும் போதுமா? அவர்கள் வேளாண்மை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டாமா? எனவே, உழவர்களுக்கு நிதி உதவிட தமிழ் நாட்டில் 32 கிராம தான-பூதான இயக்கக் கூட்டுறவுச்சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவைகளில் 3,497 உறுப்பினர்கள் உண்டு. ஏறத்தாழ 2,416.15 ஏக்கர் நிலம் இச் சங்கங்களின் பாதுகாப்பில் உள்ளது. இந்நிலத்தில் 595 ஏக்கர் பரப்புகளில் நன்செய் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. 341 கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. இது வரை இச் சங்கம் ரூ. 7,12,186 வழங்கியுள்ளது. இத்தொகையில் ரூ. 2,18,178 மானியம் வழங்கப்பட்டு உணவு உற்பத்தி பெருக்கப்பட்டது.

விழாக்கூட்டத்தில் ஒரு பகுதி



பூதான இயக்க வெள்ளிவிழாப் பொருட்காட்சியில்

சர்வ சேவா சங்கங்கள் :

20 ஏக்கர் பூதான நிலங்கள் ஒரே இடத்தில் கிடைத்தால் அவைகளை பராமரித்திட அமைக்கப்பட்ட அமைப்பே சர்வ சேவா சங்கங்கள். தமிழ் நாட்டில் இப்பொழுது ஒன்பது சர்வ சேவா சங்கங்கள் உள்ளன. பூதான நிலங்களிலிருந்து அதிக மகசூலைப் பெறுவதற்கு வேண்டிய பணிகளை ஆற்றும் சர்வ சேவா சங்கங்களை வெளி நாட்டினரும் பாராட்டியுள்ளனர். அறநோக்கோடு செயல்படும் பல வெளிநாட்டுச் சங்கங்கள் இவைகளுக்கு நிதி உதவி வழங்கியுள்ளன.

20 அம்சத் திட்டமும் பூதான இயக்கமும் :

இன்று நம் நாட்டில் புதிய பொருளாதார வளர்ச்சிக்கான பணிகள் முனைப்புடன் செயல்படுத்தப்படுகின்றன. வளர்ச்சிக்கு வழிகாட்டியாக விளங்கும் இருபது அம்சத் திட்டத்தின் இரண்டாவது திட்டம், ''நில உச்ச வரம்புச் சட்டம் முனைப்பாக அமல்படுத்தப்படும். உபரி நிலங்களை ஏழைகளுக்கு விரைவாக வழங்கப்படும். நில உடைமை பற்றிய சான்றுகள் தயாரிக்கப்படும்'' என்பதாகும்.

இக்கருத்து பூதான இயக்கத்தின் அடிப்படைக் கருத்துடன் இசைந்ததாக அமைந்துள்ளது.

பாடுபடும் பாட்டாளி பயனை அனுபவிக்க வேண்டும் என்பதை அற வழியில் வலியுறுத்தி பாடுபட்டு வரும் பூதான இயக்கம் சமதர்மச் சமுதாய அமைப்பை உருவாக்கிட அயராது பாடுபடும் அரசின் இலட்சிய வெற்றிக்கும் ஒரு பாதையாக விளங்குகிறது.

காந்தியத்தில் நம்பிக்கை உள்ள அனைவரும் இதனை உணர்ந்துள்ளனர்.

எனவே, புதிய பொருளாதார நிலையை உருவாக்கும் 20 அம்சத் திட்டத்தை சிறப்புடன் நிறைவேற்றி வரும் இந்நாளில் பூதான இயக்க வெள்ளி விழாவை எல்லாரும் மகிழ்ந்து கொண்டாடுவதில் வியப்பேதுமில்லை!

எனவே, தமிழ் நாட்டில் பூதான இயக்க வெள்ளி விழா மிகுந்த ஆர்வத்துடன் கொண்டாடப்பட்டது.

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த சாணார்பட்டி வட்டாரத்திலுள்ள ஏறத்தாழ எல்லா கிராமங்களும் கிராமதான கிராமங்களாகும். கிராம தானம் என்பது கிராமத்திலுள்ள பெரும்பான்மை நிலம், பூ தானம் தரப்பட்ட நிலமாக உள்ளதாகும். இப்படி முழுவதும் கிராமதானமாக அமைந்துவிட்ட சாணார்பட்டியில் தமிழ் நாடு பூதான இயக்கம் வெள்ளி விழா கொண்டாடியது பொருத்தமல்லவா?

கடந்த 29-3-1976 அன்று சாணார்பட்டியில் நடைபெற்ற பூதான வெள்ளி விழாவில் ஆளுநரின் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்களும், ஊரக உள்ளாட்சித் துறைச் செயலாளர் திரு. டி. வி. வெங்கட்ராமன் அவர்களும் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து பூதான இயக்க வெள்ளி விழா மதுரையில் 24-4-1976 அன்று ஆளுநர் தலைமையில் கொண்டாடப்பட்டது. அன்று மாலை ஆளுநர் அவர்கள் சாணார்பட்டி வட்டாரத்தில் பாத யாத்திரையை மேற்கொண்டார்கள்.

சென்னையில் வெள்ளி விழா :

சென்னை காந்தி மண்டபத்தில் வழிபாட்டுக் கூட்டமும் பூதான இயக்க வெள்ளி விழாக் கொண்டாட்டமும் 30-4-76 வெள்ளிக்கிழமையன்று கொண்டாடப்பட்டது. விழாவை ஒட்டி கண்காட்சி ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளான யுனைடெட் கமர்சியல் பாங்க், சென்ட்ரல் பாங்க், இந்தியன் ஓவர்சீஸ் பாங்க், இந்தியன் பாங்க், ஸ்டேட் பாங்க் போன்ற வங்கிகளும், தமிழ்நாடு வேளாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, கிராம—கைத்தொழில் வாரியம், கிராமோத்ய பவன் ஆகியவைகளும் இப்பொருட்காட்சியில் பங்கேற்றன. இவை கிராம மக்களின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உதவி வருவதைத் தெளிவாக விளக்கிக் காட்டின.

இந்தக் கண்காட்சி வெற்றிகரமாக அமைய ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. டி. வி. வாசுதேவன் அவர்கள் பெரு முயற்சி எடுத்துக்கொண்டார்.

வெள்ளி விழாக் கொண்டாட்டம் திரு. கே. வீரமணி குழுவினரின் துதிப் பாடல்களுடன் தொடங்கியது.

ஆளுநர் உரை

விழாவுக்குத் தலைமையேற்ற ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது :

''காந்தியடிகள் பிறந்த நாள் விழாக் கொண்டாட்டங்களின் போது சில ஆண்டுகளாக கவனித்துக் கொண்டு வருகிறேன், தமிழ் நாடு காந்தீயக் கொள்கைகளின் குரலாக விளங்குவதை, எனவே, இங்கு காந்தீயக் கருத்துக்களை செயல்படுத்துவதில் ஆர்வம் மிகுதியாகக் காணப்படுகின்றது.

பூதானம், சுட்டுப்பாட்டை உருவாக்குவதுடன், ஜனநாயக சோசலிசத்தை உருவாக்கும் கருவியாக விளங்குகிறது. நமது

பிரதமர் அறிவித்துள்ள இருபது அம்சத் திட்டமும், பூதான இயக்கத்தின் அடிப்படைக் கருத்தும் ஒத்ததாக அமைந்துள்ளது. சாமானிய மனிதனின் வாழ்வில் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவவேண்டும் என்றார் காந்தியடிகள். அதனையே வினோபாஜி பூதான இயக்கத்தின் மூலம் எடுத்துரைத்து வருகிறார். பூதானம் சமுதாய ஜனநாயகத்தை விளக்கி வருகிறது.

ஒவ்வொரு மனிதனும் தனது அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொள்ளசர்வோதயமும் ஜனநாயக சோசலிசமும் உதவுகின்றன.

சர்வோதயம் தனக்குத்தானே கட்டுப்பாட்டை உருவாக்கிக் கொள்ளச் செய்கிறது.

இருபது அம்சத் திட்டத்தின் மூலமும், அவசரநிலையின் மூலமும் பொருளாதாரத்திலும் அரசியலிலும் கட்டுப்பாட்டை உருவாக்கி வருகிறோம். காந்தியடிகள் எப்பொழுதுமே கடமைகளை நிறைவேற்றுவதை வலியுறுத்தினார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

நாம் இப்பொழுது ஊரகச் சீரமைப்புத் திட்டங்களைப் பற்றி பேசி வருகின்றோம். திட்டமிடுதல் கிராம நிலையிலிருந்து செயல்படுத்தப்பட்டால்தான் பொருளாதார வளர்ச்சியைக் காண முடியும்.

பிரதமரின் இருபது அம்சத் திட்டம் அறிவிக்கப்பட்ட பின்னர் அதனைச்சக்திவாய்ந்த கருவியாகப் பயன்படுத்தி வறுமையை விரட்டிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். ஊரகச் சீரமைப்புக்கு முன்னோடியாக சோமங்கலத்தில் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்.

புறக்கணிக்கப்பட்டவர்களாய் இருந்த கிராம மக்கள் வளர்ச்சி அடைந்திட, வேலை வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள வழி வகுத்துள்ளோம். கிராமத்திலுள்ள ஒவ்வொரு குடும்பமும் மாதம் ரூ. 400 வருமானம் பெற வேண்டும். ஊரகச் சீரமைப்பு இதனை உருவாக்கிட வேண்டும். இப்பணிகளுக்கு 20 அம்சத் திட்டம் நமக்கு உறுதுணையாக அமைந்து உள்ளது.

வினோபாஜி அவர்கள் கிராம மக்களின் நல்வாழ்வை எண்ணியே பூதான இயக்கத்தைத் தொடங்கினார்கள். அந்த அருமையான இயக்கத்தின் பணிகளையே நாம்தொடருகின்றோம்—தொண்டாற்றுகின்றோம்.

ஆளுநர் உரைக்குப் பின்னர் திருமதி சௌந்தரம் ராமச்சந்திரன் அவர்கள் காந்திய சகாப்தத்தில் உருவான கிராம மறுமலர்ச்சியின் வெற்றியே நம்மை வாழ வைக்கும் என்று எடுத்துரைத்தார்.

திரு. டி.எஸ். அவினாசிலிங்கம் அவர்கள் விரோதிகளிடமும் வெறுப்புக் கொள்ளாமல் பலாத்காரத்தில் பல நாடுகள் நம்பிக்கை கொண்டிருக்கும் பொழுதும், சட்டபூர்வமாக அல்லாமல் மனப்பூர்வமாகப் பூதான இயக்கம் பெற்று வரும் வெற்றியை எடுத்துரைத்தார்கள்.

திரு. டாக்டர் பா. நடராஜன் அவர்கள் கிராம ஜனநாயகம் மலர்ந்திட பூதான இயக்கம் அடிப்படையாக விளங்குவதை விவரித்தார். அதுவே நாட்டின் உண்மையான ஜனநாயகத்துக்குப் பாதுகாப்பாக அமையும் என்றார்.

திரு. டாக்டர் ஹண்டே பூதான இயக்கத்தை தமிழ் நாட்டில் மேலும் சிறப்பாக நிறைவேற்ற வேண்டும் என்றார்.

சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா பேசுகையில், 1976-ஆம் ஆண்டு பூதான இயக்கத்திற்கு வெள்ளி விழா ஆண்டு ஆகும். பொருளாதார விஞ்ஞானம் கண்டுபிடிக்கப்பட்டு 200 ஆண்டுகளாகிறது. 1776-ஆம் ஆண்டில் ஆடம்ஸ்மித் பொருளாதார விஞ்ஞானத்தை அறிமுகப்படுத்தினார்.

பொருளாதார மறுமலர்ச்சித் துறைகளில் பூதான இயக்கமும் ஒன்றாகத் திகழ்கிறது.

சட்டப் பூர்வமாக நிலச் சீர்திருத்தத்தால் நம் நாட்டில் வழங்கப்பட்ட நிலமும், பூதான இயக்க மூலமாக வழங்கப்பட்ட நிலமும் ஏறத்தாழ ஒத்த அளவில் இருப்பதை அறிகின்றோம். எனவே பூதான இயக்கம் அரும் பணி ஆற்றியிருப்பது விளங்கும்'' என்றார்.

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவைத் துணைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள், ''பூதான இயக்கம் பருவத்தே பெய்த மழையாகும். இந்தியா என்பது கிராமத்தை அடிப்படையாகக் கொண்டது. எனவே, அக்கிராம மறுமலர்ச்சியை உருவாக்க வேண்டும். அப்பணியைச் செய்ய 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டுள்ளோம். கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்றைச் செய்து வெற்றி பெற்ற நம் நாட்டில் பூதான இயக்கம் வெற்றி பெறுவது உறுதி'' என்றார்.

இவ்விழாவிற்கு ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்களும், மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டு சிறப்பித்து வைத்தனர்.

தமிழக ஆளுநர், ஆளுநரின் ஆலோசகர்கள் திரு. பி. கே. தவே, திரு. ஆர். வி. சுப்ரமணியம், தலைமைச் செயலாளர் திரு. கார்த்திகேயன், உள்ளாட்சித் துறைச் செயலாளர் திரு. டி. வி. வெங்கட்ராமன், ஆளுநரின் தனிச் செயலாளர் ஏ. இராமசாமி ஆகிய அனைவரது ஒத்துழைப்புடன் இவ்விழா வெற்றியுடன் நிறைவேறியது.

விழா முடிவில் திரு. கே. ஜே. ஜேசுதாஸ் துதிப் பாடல்கள் பாடினார்.

சென்னையில் நடைபெற்ற பூதான இயக்க வெள்ளி விழா நிகழ்ச்சிகள், நாடு கொண்டாடும் நல்ல விழா இது என்பதை அறிவுறுத்தின. மேலும் இவ்விழா நிகழ்ச்சிகள் ஊரகச் சீரமைப்பை உருவாக்க பூதான இயக்கமும் நமக்குப் பெருந்துணை என்பதையும் எல்லாருக்கும் உணர்த்தின.

→ மாமூலன்



கொத்தடிமை விலங்கிலிருந்து விடுதலை!

அந்நியராட்சியிலிருந்து விடுதலை பெற்ற நம் நாட்டில், பணமுதலைகளிடம் கொத்தடிமைகளாக இருந்து வரும் ஏழைமக்களுக்கு விடுதலை கிடைக்காத கொடுமையான சூழ்நிலை இருந்து வந்தது.

ஆண்டாண்டுக் காலமாய் மனிதனை மனிதன் அடிமைப் படுத்தி வந்த காட்டுமிராண்டிச் செயலுக்கு நமது பிரதமர் அவர்களின் இருபது அம்சத் திட்டத்தால் முடிவு ஏற்பட்டிருக்கிறது.

அதன் பயனாய்க் கொத்தடிமைக் கூண்டில் அடைபட்டுக் கிடந்த ஏழை எளிய மக்கள், இன்று பூரண சுதந்தரத்துடன் வெளியே நடமாடத் தொடங்கியிருக்கின்றனர்.

'பெற்றோரை இனிக் காண்போமா?' என்று ஏங்கித்தவித்த கண்களுக்கு முன்னே இருந்த திரை கிழிக்கப்பட்டு விட்டது.

இருண்ட உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த அந்த ஏழை மனத்தில் இன்று ஒளிமயமான எதிர்காலம் தோன்றியிருக்கிறது.

இவைகளெல்லாம் 'இருபது அம்சம்' என்கின்ற ஒளிவிளக்குகளிலே ஒன்றான ''தொழிலாளர்களை அடிமைபோல் நடத்தும் பிணைப்பு முறை சட்ட விரோதமாக்கப்படும்'' என்பதால் அன்றோ?

இதன் விளைவாக இந்தியா வெங்கும் அடிமை முறையை ஒழித்திட இன்று தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அடிமை ஊழியம் ஒன்றா? இரண்டா? அதில்தான் எத்தனை வகை!

உதாரணத்துக்கு ஒன்று.

ஆயிரமோ இரண்டாயிரமோ வாங்கியிருந்தால்கூடப் பரவாயில்லை. ஆனால் அவள் வாங்கியதோ 65 கிலோ நெல்தான்!

அதற்காக இருபது வயது இளம் பெண் அடிமைக்குப் பலியானாள்.

ஓராண்டுக்காலம் அடிமை ஊழியம் செய்தாள் அந்த ஆரணங்கு. அக்கால கட்டத்தில் அவள்பட்ட தொல்லைகளுக்கு எல்லையில்லை.

அவளுக்கு-அந்த அடிமைக்குத் தற்போது விடிவுகாலம் பிறந்துள்ளது. அவள் கொத்தடிமை என்னும் கூண்டிலிருந்து மீட்கப்பட்டுப் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டாள். இது நடந்தது புவனேசுவரத்தில்!

இதைவிடக் கொடுமை நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்தில் நீண்டகாலமாக நிலவி வந்துள்ளது.

ஆம்! ''விஷு'' பண்டிகையின் போது (மலையாளப் புத்தாண்டு விழா) வழங்கப்படும் ஒரு ஜோடி வேட்டி, 10 சேர் நெல், 10 ரூபாய் பணத்திற்காக ஓராண்டுக் காலம் அடிமையாக உழைக்க வேண்டும் என்ற கொத்தடிமை முறை கூடலூர் வட்டத்தில் 'பனியர்' என்ற இனத்தவரிடம் இருந்து வந்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் :

கூடலூர் வட்டத்தில் மொத்தம் 242 குடும்பத்தைச் சார்ந்த 481 பனியாக்கள் அடிமைகளாக இருந்தார்கள். கடந்த அக்டோபர் மாதம் கொத்தடிமை முறை ஒழிப்பு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. என்றாலும் இன்னும் பனியாக்கள் அடிமை விலங்கிலிருந்து விடுபடவில்லை. அடிமை முறைக்கு ஆளாகியிருப்பவர்கள் யார், யார் என்பதைக் கண்டுபிடிப்பதில் உள்ள சிரமமே இதற்குக் காரணம்.

பனியாக்கள் என்னும் இந்த ஏழை எளிய கூலிகள் நாகரிகம் பரவாத ஆதிவாசி வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தங்களுடைய பழங்காலப் பழக்க வழக்கங்களைக் கைவிடத் தயாராயில்லை. ஆகையால் படிப்படியாகவும் மெதுவாகவும்தான் அவர்களை விடுவிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

நீலகிரி மாவட்ட கூடலூர் வட்டத்தில் ''பனியர்'' என்ற கூலிகளைப் புனரமைப்புச் செய்து அவர்களைக் கொத்தடிமையிலிருந்து விடுவிக்க மூன்று அம்சத் திட்டம் அமல்படுத்தப்படவிருக்கிறது.

இதுவரை 207 பனியாக்கள் வேறு இடங்களில் வேலைகளை ஏற்கச் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள். தேயிலைத் தோட்டங்கள், இந்தியா-ஜெர்மனி கூட்டுத் திட்டங்கள், பொதுப் பணித் திட்டங்கள் போன்ற அரசுத் துறைகளில் அவர்களுக்கு வேலைவாய்ப்புத் தேடித் தரப்படும்.

அன்று — "என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்"

கூடலூர் வட்டத்தில் உள்ள பெரும்பகுதி ஜென்மிகளுக்குச் சொந்தமானது. ஆனால் 1969-ல் ஜென்மிமுறை ஒழிக்கப்பட்டபின் ''செட்டிகளும்'', ''சேட்டான்களும்'' (கேரளத்தைச் சேர்ந்த சிரியன் கிறித்தவர்கள்) குத்தகைதாரர்களாகவும், நிலச்சுவான்தாரர்களாகவும் ஆகியிருக்கிறார்கள்.

ஜென்மிகள் இப்போது நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்ந்திருப்பதால் நில விநியோகம் சம்பந்தமாக அரசு உடனடியாக எதுவும் செய்வதற்கில்லை. நீதிமன்ற உத்தரவைப் பெற்ற பின்புதான் நிலத்தை மீட்டுப் பனியாக்களுக்கும் மற்றும் நிலமில்லாத ஏழைகளுக்கும் அவைகளைப் பகிர்ந்து அளிக்க முடியும். வழக்குகளில் விரைவில் தீர்ப்புப் பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அநேகமாக 800 எக்டேர்கள் (அதாவது சுமார் 2,000 ஏக்கர்) நிலமாவது அவர்களுக்கு விநியோகிக்க கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதை வைத்துப் பனியாக்களுக்கு ஒரு கூட்டுப் பண்ணையை ஆரம்பிக்கலாம் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

ஏற்கெனவே மாவட்ட ஆதிவாசிகள் சங்கத்தின் ஆதரவில் பனியாக்களின் கூட்டுறவுப் பண்ணை ஒன்று நடக்கிறது. பனியாக்களிடம் உள்ள கஷ்டம் என்னவென்றால், அவர்கள் தங்கள் சொந்த நிலத்தில் பாடுபட்டாலும் சரி, வேறு யாருக்காவது உழைத்தாலும் சரி, உடனடியாகத் தங்களுக்கு அன்றாடம் கூலி கிடைத்துவிட வேண்டும் என்று விரும்புவதுதான்!

அவர்களுடைய அறியாமை, மூடநம்பிக்கை, வளர்ச்சியின்மை ஆகியவற்றைப் பார்க்கும்போது மாநிலத்தில் உள்ள மற்ற முற்போக்கான விவசாயிகளுக்குச் சமமாக அவர்கள் வர இன்னும் நீண்ட காலமாகும். என்றாலும் படிப்படியாக அவர்கள் திருத்தப்படுவார்கள். திருந்திய வாழ்க்கையில் அவர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

தொழிலாளர் நல அமைச்சர் அளித்த தகவல் :

கூடலூரில் கொத்தடிமை முறை இருப்பதாகச் செய்தி வந்துள்ளது தொடர்பாக அங்கு சென்று விசாரிக்க மத்திய அரசு பிரதிநிதி ஒருவரை அனுப்ப உத்தேசித்துள்ளது. இவ்வாறு தொழிலாளர் நல அமைச்சர் கே. ரகுநாத ரெட்டி அவர்கள் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கொத்தடிமை ஊழியமுறையை ஒழிக்க சட்டமியற்றப்பட்டுள்ள போதிலும், அம்முறை நீடித்திருப்பதாக உறுப்பினர்கள் புகார் கூறினர். இது குறித்து விரைவாக நடவடிக்கை எடுக்க அவர்கள் வலியுறுத்தினர்.

தமிழ்நாட்டில் கூடலூரில் மாநில அரசு வீடுவீடாகச் சென்று ஆய்வு நடத்தியதில் மொத்தம் 5,667 பனியா மக்களில் 481 பேர் அடிமைகளாக இருப்பது தெரியவந்தது. இந்த அடிமைத் தொழிலாளர்கள் அவர்களது எஜமானர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டனர். இவர்கள் அப்பகுதியில் விவசாய வேலைகளில் ஈடுபட்டுள்ளதாலும், வேலையில்லாப் பிரச்சினை இல்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில்

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் அடிமையாக வேலை செய்யும் ஆண்களையும் பெண்களையும் மீட்க உதவி கலெக்டர் அண்மையில் நேரில் சென்றிருந்தார்.

கள்ளக்குறிச்சி பக்கம் குரும்பகவுண்டர் ஜாகீரில் வஞ்சிக்குழி, புதுப்பாலப்பட்டு, பழைய பாலப்பட்டு, பாச்சேரி, தும்பை மேட்டாம் பட்டி ஆகிய மலைக் கிராமங்கள் உள்ளன.

இங்கு வாழும் ஆண்களும், பெண்களும் நீண்டகாலமாக அடிமைகளாகச் சிலரிடம் வேலை செய்து வருகிறார்கள்.

இதுபற்றி விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க விருத்தாசலம் கோட்டாட்சித் தலைவர் திரு. செங்கல்வராயன், பயிற்சி உதவி கலெக்டர் திரு. இராமசாமி, சங்கராபுரம் யூனியன் தலைவர் திரு. துரைமுத்துசாமி, ஆகியோர் சென்றார்கள்.

மலைவாசி ஆண்களையும் பெண்களையும் சந்தித்து அவர்கள் விசாரணை நடத்தினார்கள்.

அப்போது மலைவாசிகள் அவர்களிடம் தாம் பட்ட தொல்லைகளை விளக்கிக் கூறினார்கள்:

''எங்கள் சந்ததியினர் ஜாகீர் அளிக்கும் கொடுமைகளை அனுபவித்து, எந்த வசதியும் இன்றி அடிமைகளாக வாழ்கிறோம். எந்தவித ஆதாரமும் இல்லாமல் பல தலைமுறையாய் வரி என்ற பெயரில் ஆடு, கோழி, பணம், பட்டிவரி, இளைஞர் வரி, திருமண வரி, விதவை வரி, குற்ற வரி செலுத்தி வருகிறோம். ஏன்— எதற்கு? என்று கேட்க இயலாமல் அவர்களுக்குப் பல்லக்கு சுமக்கிறோம்......''

ஆதரவு இல்லாத முதியவர்களுக்கு உதவித் தொகை வழங்க ஆவன செய்யும்படி தாசில்தாருக்குக் கோட்டாட்சித் தலைவர் உத்தரவிட்டுள்ளார்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் மேலும் 14 பேர்கள் கொத்தடிமை முறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

உளுந்தூர்ப்பேட்டை வட்டத்தில் குணளவாடி என்னும் கிராமத்தில் 14 பேர் கொத்தடிமைத் தொழிலாளர்களாக இருந்தது தெரியவந்தது. இவர்களில் இருவர் 10 வயது, 11 வயது சிறுவர்கள்.

இந்தப் பதினான்கு பேர்களும், தாம் வாங்கிய கடனைவிடக் கூடுதல் தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களில் கையெழுத்திட்டிருந்தனர். கடன் தொகை மீதான வட்டிக்கு வேலைபார்க்குமாறு இவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர்.

இவர்கள் அடிமை ஊழியம் செய்தபோது, நாள் ஒன்றுக்கு இரண்டு தடவை கேழ்வரகு உணவு தரப்பட்டது. இந்த அப்பாவிகள் வேறு எங்கும் வேலை செய்யவும் அனுமதிக்கப்படவில்லையாம்!

தென்னார்க்காடு, புதுக்கோட்டை ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் கொத்தடிமை முறை எந்த அளவிற்குப் பரவியுள்ளது என்பது குறித்துச் சென்னை சமூகப் பணிப் பயிற்சிப் பள்ளி ஆராயப் போகிறது. இந்த இரண்டு மாவட்டங்களிலும், கொத்தடிமை முறை பற்றி ஆராயும் பொறுப்பைத் தமிழ்நாடு அரசு சென்னை சமூகப் பயிற்சிப் பள்ளியிடம் ஒப்படைத்துள்ளது.

கொத்தடிமைத் தளையை அறுத்து, நல்வாழ்வுக்கு வழி செய்ய அணுகும் அதிகாரிகளிடம் தங்களது உண்மையான நிலவரத்தைச் சொல்லக் கொத்தடிமைத் தொழிலாளர் அஞ்சுகின்றனர்; வெட்கப்படுகின்றனர். எனவே, நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் அரசிற்குச் சங்கடம் ஏற்படுகிறது. தென்னார்க்காடு மாவட்டத்தில் அடிமை முறையை அறவே ஒழித்துக்கட்ட தீவிர செயல் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது.

விசாரணை அறிக்கைகளுக்காகக் காத்திராமல், மாவட்ட ஆட்சித் தலைவர்களே அடிமை முறையை ஒழித்துக் கட்டும் வகையில் அதிகாரம் அளிப்பது குறித்தும் அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. இப்படிச் செய்வதால் கொடிய கொத்தடிமை முறை மிக விரைவிலேயே ஒழிக்கப்பட்டுவிடும்.

கடலூர், திருக்கோயிலூர் வட்டத்தில் மேலநந்தல் என்னும் கிராமத்தில் கொத்தடிமைத் தொழிலாளர் 50 பேர்களுக்கு விடுதலை கிடைத்துள்ளது. இவர்களில் 18 பேர் சிறுவர்கள்.

தென்னார்க்காட்டில் அடூர் கொளப்பாக்கம் கிராமத்தில் 35 வயதுப் பெண் உட்பட மேலும் 10 கொத்தடிமைகள் அண்மையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகச் செய்தி கிடைத்துள்ளது. இதைச் சேர்த்து இம்மாவட்டத்தில் இதுவரை 74 கொத்தடிமைகள் விடுதலை பெற்றுள்ளனர்.

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே!
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று"
—இன்று!

இதர மாவட்டத்தில்

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏறத்தாழ 700 தொழிலாளர்கள் கொத்தடிமைகளாகப் பயன்படுத்தப்படுவதாகத் தெரிய வருகிறது. மதுரை, தருமபுரி மாவட்டங்களிலும் கொத்தடிமை முறை உள்ளது என்று தெரிய வருகிறது. எனவே, புதுக்கோட்டை, மதுரை, தருமபுரி மாவட்டங்களில் கொத்தடிமை முறையை ஒழிக்கும் சட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அடிமை ஊழியம் ஒழிந்து, சமுதாயத்தில் அனைவரும் சமம் என்கின்ற புதிய சூழ்நிலை இன்று உருவாகி வருகின்றது என்றால் அதற்கு முக்கிய காரணம் இருபது அம்சத் திட்டமே அன்றோ?

— பி.வி.ஜி.

அங்கோலாவுக்கு உதவி

இந்திய அரசு 1,550 கிலோ கிராம் எடையுள்ள மருந்துப் பொருட்களை அங்கோலா நாட்டு அரசுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது. இந்த மருந்துப் பொருட்களை 'ஏர்-இந்தியா' தனது பம்பாய்—கெய்ரோ விமானப் போக்குவரத்துச் சேவையின் போது கட்டணமின்றி இலவசமாக எடுத்துச் செல்லும்படி அந்நிறுவனத்துக்கு இந்திய அரசு அறிவித்துள்ளது.



பீடுநடை போடும் பீங்கான் தொழில்

பீங்கான் தொழில் ஒரு நாட்டின் தொழில் வளத்திற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும், நாகரிக வாழ்வுக்கும் பயன்படக்கூடிய ஓர் அடிப்படைத் தொழிலாகும். பெரும்பாலான தொழில்கள், குறிப்பாக மின் ஆற்றலால் இயங்குகின்ற தொழில்கள் பீங்கான் பொருட்களை நம்பியே நடைபெற்று வருகின்றன. இரும்பு-உருக்குத் தொழில்கள் பீங்கான் பொருட்களைப் பெருமளவில் எதிர்பார்க்கின்றன. எனவேதான் இத்தொழிலை விரிவுபடுத்திடவும், ஆக்கம் மிகுந்ததாகச் செயல்படுத்திடவும், பல்வேறு முறைகளில் பயன்படுத்திடவும் வேண்டியது இன்றியமையாததாகிறது. இதனை நன்கு உணர்ந்தே தமிழ்நாடு அரசு இதில் அதிக அக்கறையும் ஆர்வமும் கொண்டு தென்ஆர்க்காடு மாவட்டம் விருத்தாச்சலத்தில் பீங்கான் தொழிற்சாலைகளை உருவாக்கி அவைகளைச் சீரிய முறையில் செயல்படுத்தி வருகின்றது.

பீங்கான் தொழில் தமிழகத்தில் தரமாக வளர்ச்சி பெற்று வருவதற்குக் காரணம் இத்தொழிலுக்குத் தேவையான அனைத்து மூலப் பொருட்களும் இங்கே பெருமளவில் கிடைப்பது தான். இத்தொழிலில் முக்கியப் பங்கேற்று வரும் சைனு களிமண், மாக்கல் பாண்டக் களிமண் (Stone - ware Clay) குவார்ட்ஸ் (Quartz), பெல்ஸ்ஃபார் (Feldspar), ஜிப்சம் போன்றவைகள் இயற்கையிலே தமிழ்நாட்டில் கிடைத்து வருகின்றன. மேலும், பீங்கான் பொருட்களின் தேவையும் நமது மாநிலத்திலும், பிற மாநிலத்திலும் அதிக அளவில் இருந்து வருகின்றது. எனவேதான், இத்தொழிலின் வளர்ச்சிக்குத் தேவை மிகுந்த பல்வேறு செயல்திட்டங்களைத் திட்டிடத் தமிழ்நாடு அரசால் 1955-ஆம் ஆண்டில் முடிவெடுக்கப்பட்டது.

இவைகளின் அடிப்படையில் 'பீங்கான் தொழில் வளர்ச்சி மையம்' ஒன்றினைப் பொதுத் துறையின் கீழ் அமைத்திட உத்தேசித்தது. இந்த வளர்ச்சி மையம் வாணிபம் சம்பந்தப்பட்ட தொழிற்கூடங்கள், பயிற்சிக் கூடங்கள், சோதனை மற்றும் கற்பிக்கும் நிலையங்கள் (Testing and Teaching Institutes), நடைமுறை சார்ந்த தொழிற் பேட்டைகள் (Functional Industrial Estate), பொது வசதிப் பணிமையம் (Common Facility Service Centre) என்பன போன்ற பல்வேறு தொழில் அமைப்புகளைத் தன்னகத்தே கொண்டு இயங்கிடவும் வழிகோலியது. இத்தகு வளர்ச்சி மையத்தினை விருத்தாசலத்தில் துவக்குவதென முடிவு எடுத்து அனைத்துப் பணிகளையும் மேற்கொண்டது.

'தமிழகத்திலே விருத்தாச்சலம் இத்தொழிலுக்கெனத் தெரிந்தெடுக்கப்பட்டதற்குக் காரணம் பீங்கான் பொருள் தயாரிப்புகளுக்குத் தேவையான தரம் மிகுந்த சைனு களிமண் நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து கிடைப்பதுதான். தவிர குவார்ட்ஸ், பெல்ஸ்ஃபார் போன்றவைகள் மிக அருகாமையில் அதாவது திருச்சி, சேலம் மாவட்டங்களைச் சார்ந்த சில இடங்களிலிருந்து கிடைக்கின்றன. திருச்சி மாவட்டம் தேரணிபாளையத்தில் கழிவு நீர்க் குழாய்கள் தயாரிப்பதற்குத் தேவையான மாக்கல் பாண்டக் களிமண்ணும், தென்

ஆர்க்காடு மாவட்டம் பண்ணுருட்டியில் சுடுசெங்கல்லுக்குரிய களிமண்ணும் (Fire-clay) தகுந்த அளவிலும், உயர்ந்த தரத்திலும் கிடைக்கின்றன. இவைகள் குழாய்கள், பீங்கான் ஓடுகள், செங்கற்கள் தயாரிப்புகளுக்கு ஏற்றதாகவும் அமைந்துள்ளன.

1955-ஆம் ஆண்டில் துவங்கப்பட வேண்டுமெனக் கருதிய இந்த வளரும் தொழில் மையம் படிப்படியான நிலைகளிலே நிறைவேற்றப்பட்டு வந்தது. சுகாதார வசதியுடன் கூடிய கழிவுச் சாதனப் பொருட்கள், மித மின் ஆற்றல் வாய்ந்த இன்சுலேட்டர்கள், பீங்கான் குழாய்கள், பீங்கான் கலை, கைவண்ணப் பொருட்கள் போன்றவைகளைத் தயாரித்திடுவதற்கெனத் தமிழ்நாடு அரசின் தொழில் வணிகத் துறை வாணிபத் தொழிற்கூடங்களை இங்கே துவக்கியது. இவைகள் மட்டுமல்லாமல் பயிற்சி நிலையங்கள், பணி மையங்கள், நடைமுறை சார்ந்த தொழிற்பேட்டைகள் போன்றவைகளையும் இங்கேயே துவக்கியது.

சிறுதொழில்களின் வளர்ச்சி மேம்படுத்தப்பட வேண்டும், சிறு தொழில்களுக்குத் தகுந்த பாதுகாப்பினை அளித்திட வேண்டும் என்கின்ற வகையில் அரசு 1965-ஆம் ஆண்டில் 'தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்' ஒன்றினைத் தோற்றுவித்தது. இந்நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டதும் தொழில் வணிகத் துறை இயக்குநரகத்தின் நிருவாகத்தில் இயங்கி வந்த தொழிற்கூடங்கள் அனைத்தும் இதனுடைய நிருவாகத்திற்கு மாற்றப்பட்டன. பொதுத்துறையின் கீழ் இயங்கி வந்த இந்தத் தொழிற்கூடங்களின் நடவடிக்கைகள் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்திற்கும், தொழில் வணிகத்துறை இயக்குநரகத்திற்கும் இடையே பகிர்ந்தளிக்கப்பட்டு வந்தன. இத்தகு நடவடிக்கைகளால் இயற்கையிலே தொழில்நுட்பம், நிருவாகம் போன்றவைகளில் பல்வேறு பிரச்சினைகள் எழுந்தன. எனவே, இந்த அமைப்புகள் அனைத்தும் ஒரே நிருவாகத்தின்கீழ் இயங்கிடவும், பீங்கான் தொழில் வளர்ச்சிக்குத் தேவைமிகுந்த-வேகமான நடவடிக்கைகளை மேற்கொண்டிடவும் அரசு தனித்தனி அமைப்புக்களையெல்லாம் ஒன்று சேர்த்துத் தனியானதொரு நிறுவனத்தை உருவாக்கிட முடிவெடுத்தது. இந்த வகையில் உருவான நிறுவனம்தான் 'தமிழ்நாடு பீங்கான் தொழிற்சாலைகள் நிறுவனம்' (Tamil Nadu Ceramics Limited).

இரண்டு கோடி ரூபாய் அளவிலான அதிகாரபூர்வமான மூலதனத்தைக் கொண்ட இந்நிறுவனம் 14-12-1973-ல் துவக்கப்பட்டது. இந்த மூலதனத்தில் ரூபாய் 1,000 வீதம் ஏறத்தாழ 20,000 பங்குகள் அடங்கியுள்ளன. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்திடமிருந்து விருத்தாச்சலத்திலுள்ள பீங்கான் தொழிற்சாலை, பீங்கான் குழாய்த்தொழிற்சாலை ஆகியவைகளையும், தொழில் வணிகத்துறை இயக்குநரகத்திடமிருந்து விருத்தாச்சலம், பெரம்பூர் ஆகிய இடங்களிலுள்ள பீங்கான் கலை, கைவண்ணப் பொருட்கள் தொழிற்கூடங்கள், திருமழிசையிலுள்ள இரு இயந்திரச் செங்கல் தொழிற்கூடங்கள், ஓமலூரிலுள்ள பீங்கான் தொழிற்கூடம், விருத்தாச்சலத்திலுள்ள பொது வசதிப் பணிமையம், நடைமுறை சார்ந்த தொழிற்பேட்டை ஆகியவைகளையும் இந்நிறுவனம் 15-7-1974 முதல் மேற்கொண்டது.

விருத்தாச்சலத்தில் ஒருங்கிணைந்த பீங்கான் கூட்டுத் தொகுதித் தொழிற்சாலையினை அமைத்திட மேற்கொண்ட முயற்சி வெற்றிகரமான முறையில் செயல்படுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு மேல் இந்நிறுவனம் கையாண்ட பொறுமையின் காரணமாகவும், அயராத உழைப்பின் பயனுலும் இத்தகைய வெற்றியினைக் காணமுடிந்தது எனலாம்.



இவ்விரு பெரிய வாணிபத் துறை சார்ந்த அமைப்புகள் முழு அளவில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டபொழுது பீங்கான் தொழிலின் வளர்ச்சியும் கருத்தில் கொள்ளப்பட்டது. பீங்கான் தொழிலில் சீரான வளர்ச்சியைக் காண்பதற்குக் கைத்திறன் மட்டும் போதாது. கலை நுணுக்க அறிவும் தேவை. பீங்கான் தொழிலின் செய்பொருட்கள் பெரும்பாலும் அழகுப் பொருட்களாகவும், கைவண்ணம் மிகுந்ததாகவும் காட்சியளிக்கின்றன.

எனவே இத்தொழில் சிறக்க-காலத்தால் அழிவுறுமல் நிற்க, திறன் வாய்ந்த-தேர்ச்சிமிக்க கலை நுணுக்க-தொழில் நுட்ப வல்லுநர்களின் தேவை மிகுந்த அளவில் எழுகின்றது என்பதும் உணரப்பட்டது. எனவேதான் விருத்தாச்சலத்தில் "பீங்கான் தொழில் நுட்பப் பயிற்சிநிலையம்" ஒன்று உருவாக்கப்பட்டது.

இப்பயிற்சி நிலையம் தொழில் நுட்பத்தில் 4 ஆண்டுகள் பயிற்சியளித்து, பயிற்சியாளர்களைத் திறமைமிக்க-தகுதி வாய்ந்த-தேர்ச்சி பெற்ற தொழில் நுட்ப தாரர்களாக உருவாக்குகின்றது. ஒவ்வொரு ஆண்டும் இவ்வகையில் 25 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 50 உதவித்தொகையாக வழங்கப்படுகிறது. பயிற்சி நிலையத்திலுள்ள பீங்கான் தொழில் ஆய்வுக்கூடத்தைத் திறமையுடன் செயல்படுத்திடத் தேவையான நவீன சாதனங்களும் வழங்கப்பட்டுள்ளன. பயிற்சி அளிப்பதோடு மட்டுமல்லாமல், மூலப் பொருட்கள், முற்றுப் பெற்ற தயாரிப்புப் பொருட்கள் போன்றவைகளும் இங்குப் பரிசோதனை செய்யப்படுகின்றன. இவை தவிர ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பிரிவு ஏராளமான

புதிய தயாரிப்புகளைத் தரம்மிக்கதாகவும் ஆக்குகின்றது. இவைகளின் வாயிலாக புதிதாகத் தொழில் துவங்க முன்வருபவர்கள், பீங்கான் தொழிலில் உயர்ந்த தன்மையில் சிறிய, நடுத்தர அல்லது குடிசைத்தொழில் போன்ற தொழிற்கூடங்களைத் துவக்க எல்லாவித உதவிகளைப் பெறுவதற்கான வாய்ப்புகளும் தரப்படுகின்றனர். இதுவரை 8 அணியினர் பயிற்சி முடித்து அங்கேயே பணிபுரிகின்ற வாய்ப்பினையும் பெற்றுள்ளனர். தற்பொழுது இந்நிலையம் தொழில் வணிகத்துறை இயக்குநரகத்தின் நிருவாகத்தில் இயங்கி வருகிறது.

தனியார்துறையில் தனிப்பட்ட தொழில் உரிமைதாரர்கள் பீங்கான் தொழிலில் ஈடுபட இயற்கையான சில இடர்ப்பாடுகள் உள்ளன. தொழிற்கூடங்களை அமைத்திட ஏராளமான பணம் தேவைப்படுகின்றது. அதேநேரத்தில் இத்தொழிலுக்குத் தேவையான இயந்திரங்களுக்கும் பெருந்தொகையினை முதலீடு செய்ய வேண்டியுள்ளது. சிலருக்குத் தொழில் நுணுக்க அறிவுப் பற்றுக்குறையும் இருக்கின்றது. இவைகள் அனைத்தும் அவர்கள் தொழில் துவங்கத் தடைகளாக அமைகின்றன.

இத்தகு குறைபாடுகளையெல்லாம் களைந்து தனியார்கள் சிரமமின்றித் தொழில்களைத் துவங்கிடவும், சீரானதொழில் வளர்ச்சியினை அடைந்திடவும் வழிகோலும் வகையில் ''பொது வசதிப் பணி மையம்'' (Common Facility Service Centre) ஒன்று செயல்பட்டு வருகின்றது. இது தேவை மிகுந்தநவீன இயந்திரங்களையும், அனைத்து வசதிகளையும் பெற்று இயங்கி வருகின்றது.

விருத்தாச்சலத்தில் அமைக்கப் பெற்றுள்ள பீங்கான் தொழில் கூட்டமைப்பு, ஏராளமான வணிபம் சார்ந்த தொழிற்கூடங்களையும், பயிற்சி நிலையம், ஆராய்ச்சி ஆய்வுக்கூடம், பொது வசதிப் பணி மையம், நடைமுறை சார்ந்த தொழிற்பேட்டை போன்றவைகளையும் தன்னகத்தே கொண்டு ஒப்பற்ற ஒன்றுக விளங்குகின்றது. மேலும் சிறப்பு மிக்க பீங்கான் பொருட்கள் பற்றிய ஆராய்ச்சிப் பணிகள் பயனுள்ள முறையில் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றன என்பதையும், அவைகள் சிறு தொழில் உரிமைதாரர்களுக்கு எந்தவகையில் உதவுகின்றன என்பதையும், மிகப் பரந்த அளவில் வேலை வாய்ப்புகளை நல்கி



வருவதையும், அதிக அளவில் பீங்கான் பொருட்களைத் தயாரித்து, குறைந்த விலையில் வழங்கி வருவதையும் நாடு முழுமைக்கும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

1976-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் கல்கத்தாவில் நடைபெற்ற அனைத்திந்தியப் பீங்கான் தொழிற்சாலைகள் சங்கத்தின் 40-ஆம் ஆண்டு நிறைவு விழாவில் அதன் தலைவர் உரை நிகழ்த்துகையில், தமிழ்நாடு அரசு பீங்கான் தொழிலில் ஒருங்கிணைந்த தொழில் அமைப்பினை விருத்தாச்சலத்தில் உருவாக்கி, அதனை எல்லாரும் பாராட்டும் வண்ணம் வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகின்றது என்றும், மற்ற மாநிலங்களும் இந்த முறைகளை மேற்கொண்டு பீங்கான் தொழிலில் வளர்ச்சி காணவேண்டும் என்கின்ற கருத்தினையும் தெரிவித்தார். மேலும் இவ்விழாவில் பங்கேற்ற மேற்கு வங்காளத்தின் முதல்வரும் தன்னுடைய மாநிலத்திலும் பீங்கான் தொழில் வளர்ச்சிக்கென இதுபோன்ற நிறுவனத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிவித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

திறமைமிக்க தொழில்நுட்பதாரர்களைக் கொண்டு செயல்படுவதால் இங்கு இத்தொழில் வளர்ச்சிபெற்று விளங்குகின்றது. இத்தகு வளர்ச்சியினையும், முன்னேற்றத்தையும் கண்டுள்ள இந்நிறுவனத்தின்கீழ் விருத்தாச்சலத்தில் இயங்கி வருகின்ற தொழிற்கூடங்களைப் பற்றியும் அறிந்து கொள்வது அவசியமாகும்.

பீங்கான் பொருட்கள் தயாரிப்புத் தொழிற்கூடம் (Tacel Ceramics Unit) :

பொருட்களின் தயாரிப்பையும், விற்பனையையும் பெருமளவில் பெருக்கிட வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு இப்பெரிய வாணிபத் தொழிற்கூடம் தமிழ்நாடு பீங்கான் தொழிற்சாலை நிறுவனத்தால் 1974-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. இங்குள்ள ஆய்வகத்தின் மிக நெருங்கிய ஒத்துழைப்புடன் இது செயல்பட்டு வருவதால் புது வகை மாதிரி உருவங்களையும், வண்ணங்களையும் தரமான முறையில் உருவாக்கி பீங்கான் பொருட்களைத் தயாரிக்கின்றது. பீங்கான் தட்டுகள், கோப்பைகள், ஜாடி, கழிவுச்சாதனப் பொருட்கள், சுகாதார வசதிக்கேற்ற சாதனங்கள், மின்சாதனப்பொருட்கள், மருத்துவத் துறைக்குத் தேவையான பொருட்கள் ஆகியவற்றை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது.

இத்தொழிற்கூடத்தின் உற்பத்தியும், விற்பனையும் படிப்படியே உயர்ந்து வருகின்றது. 1973-74-ஆம் ஆண்டு உற்பத்தியின் மதிப்பு ரூ. 16.05 இலட்சம். 1974-75-ஆம் ஆண்டின் உற்பத்தி 71 சதவிகிதமாக உயர்ந்து ரூ. 27.41 இலட்சத்தை எட்டியது. ஆனால் 1975-76-ஆம் ஆண்டில் முந்தைய ஆண்டினைவிட 26 சதவிகித உயர்வைக் கண்டு ரூ. 34.72 இலட்சத்தை அடைந்தது. அதே நேரத்தில் விற்பனையிலும் 1973-74-ல் ரூ. 14.35 இலட்சத்தையும், 1974-75-ல் ரூ. 25.81 இலட்சத்தையும் பெற்றிருந்தது. இது 79 சதவிகித உயர்வு ஆகும். வெளிச்சந்தையின் வாணிபம் மோசமான நிலையில் இருந்த போதிலும் 1975-76-ஆம் ஆண்டில் ரூ. 25.62 இலட்சம் மதிப்பில் விற்பனையை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

இங்குத் தயாராகும் பொருட்கள் தரம் மிகுந்ததாகவும், கலைவண்ணம் கொண்டதாகவும் விளங்குவதால் உயர்ந்த வாடிக்கையாளர்களைப் பெருமளவில் கவருகின்றன. ஐந்து நட்சத்திர ஹோட்டல்களுக்கு, குறிப்பாக 'தாஜ் கோரமண்டல்' போன்றவைகளுக்கும், ஏர் இந்தியாவைச் சார்ந்த ஹோட்டல்கள், கப்பல் போக்குவரத்துக் கழக உணவு விடுதிகள், இராணுவச் சிற்றுண்டிச் சாலைகள் போன்றவைகளுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. முதல்தடவையாக இங்கே தயாராகும் பீங்கான் பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாவது குறிப்பிடத்தக்கது. இந்தத் தொழிற்கூடத்தின் வாயிலாக 400 பேர்களுக்கு மேல் நேரடி வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

பீங்கான் குழாய்த் தொழிற்சாலை (Tacel Stone-Ware Pipe Unit) :

இந்தியாவிலே மிகப் பெரிய நவீன குழாய்த் தொழிற்சாலைகளில் ஒன்றுகும். இங்கே கிடைக்கும் மாக்கல் பாண்டக் களிமண்ணைக் கொண்டுஇக்குழாய்கள் தயாரிக்கப்படுகின்றன. 4 அங்குலம் முதல் 15 அங்குலம் விட்டம் வரையிலான குழாய்கள் தயாரிக்கப்படுகின்றன. உலையில் வைத்துத் தயாரிக்கப்படும் பொழுது இறுதியில் சாதாரண உப்பு தூவப்படுகின்றது. இதனுல் இந்தக் குழாய்கள் உருக்குப் போன்ற பளபளப்பான வண்ணத்தைப் பெறுகின்றன. இந்த வண்ணம் எந்தக் காலத்திலும் மறையாமல் இருப்பது இத்தொழிற்கூடத்தின் தனிச்சிறப்பாகும். தரத்திற்குத் தகுந்த பெயரினையும் பெற்றுள்ளது. தமிழகத்தில் இத்தொழிற்சாலை மட்டுமே தன்னுடைய தயாரிப்புக்குழாய்களில் 'இந்தியத் தரக் கட்டுப்பாடு' (I.S.I.) முத்திரையைப் பொறித்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழாய்கள் சுகாதாரத் துறையில்-கழிவு நீர்கள் அகற்றப்படும் பணியிலும் மற்றும் பல்வேறு வகைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு பீங்கான் தொழில் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது தொழிற்சாலையாகும். தற்பொழுது பீங்கான் தொழிற்சாலையை விட நன்கு செயல்பட்டு வருகின்றது. திங்கள் ஒன்றுக்குச் சுமார் 1,000 டன்கள் வரையிலான குழாய்கள் தயாராகின்றன.

1973-74-ஆம் ஆண்டு உற்பத்தியின் மதிப்பு ரூ. 11.05 இலட்சமாகும். 1974-75-ல் உற்பத்தியின் மதிப்பு ரூ. 21.21 இலட்சம். ஏறத்தாழ 91 சதவிகித உயர்வைக் காட்டிப் பெரும் சாதனையை ஏற்படுத்தியது. 1975-76-ஆம் ஆண்டில் உற்பத்தியான குழாய்களின் மதிப்பு ரூ. 28.45 இலட்சம். இது சென்ற ஆண்டைவிட 34 சதவிகித உயர்வு ஆகும்.

இங்குத் தயாராகும் குழாய்களுக்குப் பெருமளவில் வரவேற்பு இருந்து வருகிறது. மைசூர், கேரளம், ஆந்திரம் போன்ற மாநிலங்களுக்கும் இந்தக் குழாய்கள் அனுப்பப்படுகின்றன. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதிலும் ஈடுபட்டு வருகிறது. இலங்கைக்கு மட்டும் ரூ. 1.5 இலட்சத்திற்கும் மேல் மதிப்புள்ள குழாய்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. தவிர மத்தியக் கிழக்கு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பீங்கான் கலைப்பொருள் தொழிற்சாலை (Tacel Art Pottery) :

இத்தொழிற்சாலையில் ஏறத்தாழ 15 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகின்றது. கலைகைத்தொழில் கல்லூரியில் பயின்று தேர்வு பெற்ற ஓவியர்கள் இத்தொழிற்சாலையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் உருவமாதிரிகளை அமைப்பவர்களாகவும், பயிற்சியளிப்பவர்களாகவும் செயல்படுகின்றனர். இதைத் தவிர புது வகை மாதிரிகள், கலைப்பொருட்களை உருவாக்குவதற்குத் தகுந்த ஊக்கத்தினையும், பீங்கான் பொருட்களைச் சீரிய முறையில் உபயோகிக்கத் தகுந்த உற்சாகத்தையும் இவர்கள் பெறுகின்றனர். இதுவரை பீங்கான்பொருட்களைப் பயன்படுத்தி, இவர்கள் ஏறத்தாழ 1,000-க்கும் மேற்பட்ட மாதிரி கலைப்பொருட்களை உருவாக்கியுள்ளனர்.



இங்குத் தயாராகும் குழாய்களுக்கு அதிக அளவில் தேவை எழுவதால் விற்பனையிலும் முன்னேற்றங்கண்டு வருகிறது. 1973-74-ஆம் ஆண்டில் ரூ. 11.13 இலட்சத்திற்குத்தான் விற்பனையானது. பீங்கான் தொழில் நிறுவனம் மேற்கொண்ட பின்னர் 1974-75-ல் இதன் விற்பனை 97 சதவிகிதமாக உயர்ந்து ரூ. 21.94 இலட்சத்தை எட்டியது. 1975-76-ஆம் ஆண்டில் முந்தைய ஆண்டைவிட 34 சதவிகிதம் உயர்ந்து ரூ. 28.57 இலட்சத்தை அடைந்தது. இத்தொழிற்சாலையின் மூலம் 200க்கும் மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு வசதியும் கிடைத்துள்ளது.

தமிழ்நாடு பீங்கான் தொழில் நிறுவனம் மேற்கொண்டதும் இங்கே பொருட்களின் உற்பத்தி கணிசமான அளவிற்குப் பெருக வழி செய்யப்பட்டது. பெரியதொரு வாணிப நிறுவனமாக இயங்கிடுவதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டது. பீங்கான் தொழில் நிறுவனம் மேற்கொள்ளப்பட்டதிலிருந்து தொடர்ச்சியான உற்பத்தியையும், விற்பனையையும் ஏற்படுத்தி வருகின்றது. இந்நிறுவனம் மேற்கொண்டதன் விளைவாக 174 சதவிகித உற்பத்தி உயர்வை அடைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இங்குத் தயாராகும் கலை கைவண்ணப் பொருட்களின் விற்பனை

யில் தடை ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை. தற்பொழுது முதல் தடவையாக வெளிநாடுகளுக்கு இங்குள்ள பொருட்கள் ஏற்றுமதியாகின்றன. இந்தத் தொழிலகமும் 100-க்கு மேற்பட்டவர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு அளித்துள்ளது.

நடைமுறை சார்ந்த தொழிற் பேட்டைகள்

விருத்தாச்சலத்திலுள்ள நடைமுறை தொழில் சார்ந்த தொழிற் பேட்டையில் தற்பொழுது 31 சிறுதொழிற்கூடங்கள் இயங்கி வருகின்றன. இவைகளில் பெரும்பாலானவை தொழில் நுட்ப தாரர்களுக்கென ஒதுக்கப்பெற்றவையாகும். பீங்கான் தொழில் நிறுவனம் இந்தத் தொழிற்கூடங்களுக்குப் பொருள் உற்பத்திக்குத் தேவையான-கணிசமான உதவிகளை வழங்கி வருகின்றது. இந்தத் தொழிற்கூடங்களுக்குத் தேவையான மூலப்பொருட்கள் பக்குவம் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன. இவைகளுக்குப் பொது வசதிப் பணிமையத்தின் வாயிலாக எல்லாவித உதவிகளும் அளிக்கப்படுகின்றன. பொது வசதிப் பணி மையத்தில் 100 பேர்களுக்கு மேல் நேரடி வேலை வாய்ப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. பீங்கான் தொழில் ஆய்வுக்கூடத்தின் ஒத்துழைப்புடன் சிறுதொழிற்கூடங்கள் பல்வகைப்படுத்தப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்து வருகின்றன.

தமிழ்நாடு பீங்கான் தொழில் நிறுவனம் விருத்தாச்சலத்திலுள்ள தொழிற்கூடங்களையெல்லாம் மேற்கொண்ட பின்னர் உற்பத்திப் பொருட்களின் அளவு 125 சதவிகிதமாகவும், பொருட்களின் விற்பனை அளவு 110 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளது. 1975-76-ஆம் ஆண்டில் உற்பத்தியின் மதிப்பு ஏறத்தாழ ரூ. 80 இலட்சமாகும். தொழிற்பேட்டையிலுள்ள மற்ற தொழிற்கூடங்களின் உற்பத்தியையும் கணக்கில் கொண்டால் இவைகளின் மதிப்பு ரூபாய் 120 இலட்சத்தையும் தாண்டிவிடும். இந்நிறுவனத்தாலும், பிற தொழிற்கூடங்களாலும் நேரடி வேலைவாய்ப்புப் பெற்றவர்களின் எண்ணிக்கை 1,200-க்கு அதிகமாகும். இத்தகு வளர்ச்சியின் காரணமாக மந்தமான நிலையிலிருந்த விருத்தாச்சலம் வட்டம் நகராட்சியாக மாறுகின்ற அளவிற்கு வளம் பெற்று ஒரு சகாப்தத்தையே ஏற்படுத்தியுள்ளது.

இங்குத் தயாராகும் கலை-கை வண்ணப் பொருட்களுக்கு அதிக அளவில் தேவை எழுவதால் பீங்கான் கலைப்பொருட்கள் தொழிற்சாலையினை விரிவுபடுத்தவும் திட்டமிட்டுள்ளது. விருத்தாச்சலம் தவிர்த்துச் செங்கற்பட்டு மாவட்டத்தில் பீங்கான் குழாய்த் தொழிற்சாலை ஒன்றினை நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் முடிந்துவிட்டன.

தொழிலாளர்களுக்குத் தகுந்த வசதியினையும் இந்நிறுவனம் வழங்கி வருகின்றது. பாராட்டுதலுக்கும், முன்னேற்றத்திற்கும் தகுந்த தொழிலாளர் கொள்கைகளைக் கையாண்டு வருகின்றது. தொழிலாளர்கள் உற்பத்தியில் பங்கு பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளனர். தொழிலாளர்களுடைய முழு ஒத்துழைப்பும் கிடைத்து வருவதால் மிகக் குறுகிய காலத்தில் வியத்தகு சாதனையைப் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தகுந்தது.

வெளிநாடுகளின் ஒத்துழைப்புடன் இத்தொழில் செயல்பட்டால் நிச்சயமாக உலகச்சந்தையிலே ஓர் உயர்ந்த இடத்தை இது வகிக்கும் என்று நிச்சயமாக நம்பலாம்.

—ஆயிரராமன்

சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை) எண் 151.
சேலம்-1.

தொலைபேசி எண் : 2402

தபால் பை எண். 171

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, நாமக்கல், திருச்செங்கோடு, சேந்தமங்கலம், கொங்கணாபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, பெத்தநாய்க்கன் பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

சொந்த நிதி ரூ. 327 லட்சம். நடைமுறை மூலதனம் 1711 லட்சம்.

வட்டிவிகித அட்டவணை

கால் டெபாசிட்டுகள் :	ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்)	3¼%
	ரூ. 10,000/-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்)	3½%
சிசன் டெபாசிட்டுகள் :	ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும்	
	15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும்	3%
	46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும்	3½%

பிக்செட் டெபாசிட்டுகள் : ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு :

1. 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் 6%
2. 6 மாதத்திற்கும் அதற்குமேல் 9 மாதத்திற்குள் 6½%
3. 9 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் 7½%
4. 12 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் 8½%
5. 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் 9½%
6. 61 மாதத்திற்கும் அதற்குமேலும் 10½%

நடப்புக் கணக்கு ½% சேமிப்புக் கணக்கு 6%

ரூ. 5000/-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க.

இ. பாலசுந்தரம், பி.ஏ., துணைப் பதிவாளர், நிர்வாக அதிகாரி.

பி. காசி, பி.எஸ்.சி., எச்.டி.வி., காரியதரிசி.

எஸ். ஆறுமுகம், தலைவர்.



நெருப்பும் பொறுப்பும்

—ஐ. இரத்தினசாமி,
இயக்குநர்,
தமிழ்நாடு தீயணைப்புத்துறை,
சென்னை.

அரசு அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும். நெருப்பு என்று கொல்லும் என்று இயம்புதலரிது. அன்று கொன்றால் அகோரம்; அன்று விட்டு நின்று கொன்றால் சித்திரவதை. தொன்று தொட்டு வந்த தொண்டனும், "தீ", ஓர் நன்றி கெட்ட நாசகாரி. அடக்கி ஆண்டால் ஆத்ம நண்பன், இடம் கொடுத்தால் அடம் செய்யும் அற்பன். ஆக்கலும் அழித்தலும் ஆண்டவன் ஆணை.

அவனுக்கிணை நெருப்பென்றால் அர்த்தமுண்டு. பலவற்றை உருவாக்கும் ஆற்றலும், அவற்றோடு ஆண்டவனளித்த உயிர்களை அழிக்கும் திறனும் கொண்டது "தீ". பல தெய்வங்களில் ஒன்றாக வழிபட்டு வந்த, 'அக்கினி', என்று மறுபெயர் கொண்ட, தீயின் தீய செயல்களை விதிப்பயன் என்றும், அவைகளைத் தடுப்பது மனித சக்திக்குஅப்பாற்பட்டது என்றும் கூறும் நண்பர்களுக்கு, "விதியை மதி வெல்லும்" என்னும் விதி விலக்கும் உள்ளது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். விடு பெற்ற சத்தியவானின் உயிரை மீளப் பெற்ற சாவித்திரியின் மதியும், மறைகளால் இறை என்று கூறப்பட்ட, 'விதியை வென்ற மனிதனின் மதியும் இக்கூற்றுக்குச் சான்றாகும். பரலோகவாசிகளை மதியால் வென்ற பல கதைகள் உண்டு. பிறந்தால் இறக்கத்தான் வேண்டும்என்னும் விதியின் நியதியை எதிர்த்து மருத்துவ மனைகள் நடத்தித்தான் வருகின்றோம். ஆதலால், செய்வினைக்குப் பலன் உண்டென்பது உண்மையானால், நாம் செய்யும் எந்த முயற்சிக்கும் பலனுண்டு. விதியை மதியால் வெல்லலாம் என்னும் நோக்கத்தோடு தீயின் வெகுளிக்குக் குழிதோண்ட முயற்சித்தோமானால் முயற்சியில் வெற்றியும், பலனும் கிடைப்பது நிச்சயம்.

தீ வெகுளியின் வெறியாட்டம் நெஞ்சைப் பிளக்கும் நிகழ்ச்சிகள்கொண்டது. அவைகள் பலவாயினும், ஒன்றை உதாரணம் கூற விரும்புகிறேன்.

இரண்டாம் உலகப் போர் முடியும் கட்டம். 1395 டன் எடையுள்ள வெடி மருந்துகளையும், யுத்த தளவாடங்களையும், 9,000 கந்தக மூட்டைகளையும், 8,700 பருத்தி மூட்டைகளையும், பல எண்ணெய் பீப்பாய்களையும், மரச்சாமான்களையும், மீன் உரங்களையும், இன்னும் பல அபாயகரமான பொருள்களையும் தாங்கிய நிலையில், எஸ். எஸ். போர்ட் ஸ்டிகின் என்ற கப்பல், 1944, ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம்12-ஆம் தேதி, ஓர் பெரும் சோக நாடகத்திற்கு மேடையாகப் பம்பாய்த் துறைமுகத்தை வந்தடைந்தது. ஏப்ரல் மாதம் 14-ஆம் தேதி சுமார் 09.00 மணிக்கு வெடி மருந்துகளையும், யுத்த தளவாடங்களையும் இறக்கும் பணியில் துறைமுகத் தொழிலாளர்கள் ஈடுபட்டு, சுமார் 12.30 மணிக்கு மதிய உணவிற்காகச் சென்றுவிட்டனர். கப்பலுக்குள் தீ மூண்ட சந்தேக அறிகுறியைச் சுமார் 12.35 மணிக்கு தூரத்திலிருந்தவர்களால் புகை மூலம் அறிய முடிந்தது. சுமார் 13.30 மணிக்கு வேலைக்குத் திரும்பிய துறைமுகத் தொழிலாளர் சுமார் 13.45 மணிக்குக் கப்பல் தீ விபத்தில் சிக்கியிருப்பதைக் கண்டு சந்தேகத்தை உறுதிப்படுத்தினர்.

எங்கு பார்த்தாலும் பரபரப்பு. எல்லாத் திசைகளிலும் அபாயக் குரல். எத்தனையோ தீயணைக்கும் இயந்திரங்கள் இயங்க ஆரம்பித்தன. திறமையும், அனுபவமும் நிறையப் பெற்ற தீயணைக்கும் கடமை வீரர்கள் தீவிரமாகத் தீயோடு போராடினர். தங்களது கடைசி நிமிடம் காதில் ஒலித்தும் அவர்கள் கடமையினின்றும் விலகவில்லை. சிறிது சிறிதாகக் காலம் கடந்தது. நாடகத்தின் கடைசிப் பாகத்தை நடிக்கக் காலம் வந்துவிட்டான். காதைப் பிளக்கும் ஓர் வெடிச் சத்தம், காற்றில் வாரி எறியப்பட்டோரை காணவில்லை. காணப்பட்டோர் கருகிக் கிடந்தனர். கடலில் மூழ்கியோர் மீளவில்லை. பல துறைகளைச் சேர்ந்த 231 பேர்களின் உடல்களையும் எண்ணுவதற்கு இயலாது போன ஏனையோர் சடலங்களையும் உணவாக உண்டு, காயமுற்ற எண்ணற்றவர்களின் இரத்தத்தை நீராகக் கொண்டு தீயரக்கன் வெறியாட்டம் கொண்டான். மூன்று கப்பல்களை நாசமாக்கினான். 12 கப்பல்களை முடமாக்கினான். 300 ஏக்கர் துறைமுகப் பரப்பை வெட்ட வெளியாக்கினான். பம்பாய் நகரமே ஆடியது. எங்குபார்த்தாலும் அதிர்ச்சியும் ஆட்டமும். சொத்து சேத விவரத்தை இன்னும் சரியாகக் கணக்கிட முடியவில்லை. உத்தேசமாக பல கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தமது இரு நண்பர்களோடு நடந்து கொண்டிருந்த திரு. ஸ்டிபன்ஸ் வெடிப்பின் வேகத்தால் தம் இரு நண்பர்களும் எங்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள் என்பதை இன்னும் தெரிந்து கொள்ள முடியவில்லை. வண்டியில் ஓடிக் கொண்டிருந்த குதிரை, ஒரு காலை இழந்து, மூன்று கால்களில்தாவிக்கொண்டு சென்றது. உயிர் தப்பி ஓடிக் கொண்டிருந்த ஒரு தாய், தான் தாங்கிச் சென்ற தன் குழந்தைக்குத் தலையில்லை என்பதை அறியாது ஓடிக்கொண்டிருந்தாளாம்.

இந்த கண்களை எரிக்கும் காட்சிகள் காதுகளைப் பிளக்கும் செய்திகள், உள்ளத்தை உருக்கும் நிகழ்ச்சிகள் எல்லாம் யாரோ ஒருவரின் பொறுப்பற்ற செயலினால் ஏற்பட்ட விளைவுகளேயாகும். பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டால் நெருப்பின் கோரச் செயல்கள் எப்படிப்பட்டவைகளாக இருக்கும் என்பதை எடுத்து உணர்த்தவும் நாம் எல்லாரும் எவ்வாறு நெருப்புடன் பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கையை விடுக்கவும் இக்கோரச் செயல் எடுத்துக் காட்டப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் தீ விபத்துக்களைத் தடுப்பதில் நம் எல்லாருடைய பொறுப்பு என்ன என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

வெள்ளம் வருமுன் அணை போடுவதே விவேகம். பெருந் தீ விபத்துக்கள் நேர்ந்தபின் ஓலமிடுவதைவிட அவ்விபத்துக்கள் வராமலே அதற்கான காரணங்களைத் தவிர்க்க வேண்டும். கவனக் குறைவும், பொறுப்பற்ற செயல்களுமே பல தீ விபத்துக்களுக்குக் காரணங்களாயிருக்கின்றன. நாம் எல்லாரும் பொறுப்புடன் நடந்து கொண்டால், நெருப்பின் பிடியிலிருந்து தப்பலாம். புள்ளி விவரப்படி பார்த்தால் வீடுகளில் ஏற்படும் தீ விபத்துக்களே அதிகமாகியிருக்கின்றன. அதற்கான காரணங்களை நோக்கும்போது அவைகள் இலகுவாக தவிர்க்கக் கூடியவைகளாக இருக்கின்றன. உதாரணமாக, வீடுகளில் கவனக் குறைவாக அடுப்புகள்கொளுத்துவதும், அடுப்புச் சாம்பலை அணைக்காமல் எறிவதும், மின்சாரக் கருவிகளை விருப்பம் போல் கவனக்குறைவாக உபயோகப்படுத்துவதுமான சாதாரண காரணங்களே வீடுகளில் ஏற்படும் தீ விபத்துக்களுக்கு முக்கிய காரணங்களாக இருக்கின்றன. இக்காரணங்களைத் தவிர்ப்பது முக்கியமாக தாய், தங்கையரின் பொறுப்பு.

ஆதலால், தாய், தங்கையர்கள் நெருப்பைப் பொறுப்புடன் கையாள வேண்டும். சமைக்கும்

பொழுது அளவோடு அடுப்பு எரிக்க வேண்டும். காற்றழுத்த மண்ணெண்ணெய் அடுப்பை உபயோகப்படுத்தும்பொழுது முழு கவனத்தோடு உபயோகப்படுத்த வேண்டும். பம்பாய் நகரில் மட்டும் ஆண்டிற்குச் சுமார் 500 பேர் இக்காற்றழுத்த அடுப்பின் விபத்தினால் இறப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. சூடான எண்ணெய்யில் குளிர்ந்த பதார்த்தங்களை இடும் பொழுதும், மெழுகுவர்த்தி, திறந்த மண்ணெண்ணெய் விளக்கு போன்றவைகளை உபயோகப்படுத்தும்பொழுதும் மிகக் கவனத்தோடு இருக்க வேண்டும். மின்சாரத்தினால் இயங்கும் கருவிகளை அளவோடும் கவனத்தோடும், உபயோகப்படுத்த வேண்டும். வீடுகளை எப்பொழுதும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். ஆபத்து விளைவிக்கும் பொருள்களை அனாவசியமாக வீடுகளில் சேகரித்து வைக்கக்கூடாது. அவசியம் ஏற்பட்டால் அவைகளை ஆபத்து நேரிடாத வகையில் பாதுகாப்பான இடங்களில் வைக்க வேண்டும். வீட்டின் சுற்றுப்புறங்களில் குப்பை, கூளங்களைப் போட்டுக் கொண்டு திறந்த வெளியில் தீ உண்டு பண்ணக்கூடாது. குழந்தைகளின் தொட்டில்களுக்கு அடியிலோ, தங்களது அருகிலோ விளக்குகளை வைத்துவிட்டுத் தூங்கக்கூடாது. அடுப்புப் பற்ற வைக்கும் பொழுது மண்ணெண்ணெய், ஸ்பிரிட் போன்ற உயர் சக்தி வாய்ந்த எரி பொருள்களைக் கவனக்குறைவாக உபயோகிப்பதையும், வேலை முடிந்ததும் அடுப்புச் சாம்பலை சரியாக அணைக்காமல் மற்ற எரிபொருள்களோடு போடுவதையும் தவிர்க்க வேண்டும். அனாவசியமாக மின்சார இணைப்பில் தலையிடக்கூடாது. அவசியம் ஏற்பட்டால், அதில் அனுபவம் வாய்ந்தவர்களை நாட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக குழந்தைகளை கண்காணிப்போடு வைத்துக் கொள்ள வேண்டும்.

தீப்பெட்டி, பெட்ரோல், மண்ணெண்ணெய், திறந்த விளக்குகள் போன்ற அபாயம் விளைவிக்கும் பொருள்களை அவர்கள் அணுகும்படி வைக்கக்கூடாது. தாழ்ந்த கூரைகளின் அடியில் அமைக்கப்பட்ட அடுப்புகளிலோ, அல்லது வேறு எந்த அடுப்பிலோ குழந்தைகளை அடுப்பு எரிக்கும்படிச் செய்வது பெருந் தவறு. அவர்கள் அறியாமை பேராபத்தை விளைவிக்கும். வேடிக்கைக்காகக் குழந்தைகள் விருப்பம்போல் பட்டாசுகளை வெடிக்கவும், வாண வேடிக்கை செய்யவும் அனுமதிக்கக்கூடாது. சில சமயங்களில் விளையாட்டு வினையாக மாறி சுபநாள் துக்க நாளாகிவிடும். அவர்கள் செய்யும் எந்தக் காரியத்திலும் நமது கவனம் இருக்க வேண்டும். தாய் பொறுப்பின் பெரும் பகுதி தந்தையையும் சாரும். குடும்பத் தலைவனான தந்தை மேற்கூறியவை சரிவரப் பின்பற்றப்படுகின்றனவா என்பதை மேற்பார்வை செய்வதுடன், தானும் தன் வாழ்க்கைத் துணைவிக்குத் துணையாய் நின்று வீடுகளில் ஏற்படும் தீ விபத்துக்களைத் தடுக்க வேண்டும்.

புகை பிடிக்கும் பொழுது எறியும் தீக்குச்சிக் கொள்ளியும், புகை பிடித்தபின் எறியும் அணைக்காத துண்டுகளும், பல பெருந் தீ விபத்துக்களுக்குக் காரணங்களாக இருக்கின்றன. நகர்ப்புறங்களில் 15.3 சதவிகிதமும், கிராமப் புறங்களில் 12.9 சதவிகிதமும், ஆக மொத்தம் 28.2 சதவிகித தீ விபத்துக்கள் இக்காரணங்களால் ஏற்படுகின்றன.

புகை பிடிக்கும் அன்பர்கள் வேலை செய்யும் பொழுதும், படிக்கும் பொழுதும், படுக்கும் பொழுதும் புகை பிடிக்கும் பழக்கத்தை கையாள்கிறார்கள். வேலை செய்யும் பொழுது கவனக் குறைவாகவோ படுக்கும்பொழுது தூக்கத்திலோ தங்களது கைகளில் உள்ள எரியும் சிகரெட் துண்டுகளை அப்படியே அருகில் வீசிவிடுகிறார்கள். அதேபோல், ஓடும் ரயிலிலும், மோட்டார் வாகனங்களிலும் செல்பவர்கள் சிகரெட் துண்டுகளை அணைக்காமல் வீசி விடுகிறார்கள். இவ்வாறு எறியப்பட்ட துண்டுகளிலுள்ள அணையாத நெருப்பு பல பெருந் தீ விபத்துக்களை விளைவிக்கின்றது.



வீடுகளிலும், அலுவலகங்களிலும் புகை பிடிக்கும் அன்பர்கள் சாம்பல் தட்டுகளில் துண்டுகளை நன்றாக அணைத்துப்போட வேண்டும். வெளிப் புறங்களில் புகை பிடிக்கும் அன்பர்கள் துண்டுகளை நன்றாக அணைத்து எரிபொருட்கள் இல்லாத இடத்தில் போட வேண்டும்.

தீ விபத்துக்களினால் தொழிற்சாலைகளிலும், நூற்பு ஆலைகளிலும் ஏற்படும் நட்டங்கள் உடல் சிலிர்க்க வைப்பனவாகும். இதற்கெல்லாம் காரணங்கள் நமக்குத் தெரியாவிட்டாலும் சிலரின் கவனக் குறைவும், பொறுப்பற்ற செயல்களுமே இப் பெருந் தீ விபத்திற்குக் காரணங்களாக இருக்க வேண்டும். இக்காரணங்கள் பலவாக இருக்கலாம். அவற்றைத் தடுப்பது சம்பந்தப்பட்ட எல்லாருடைய பொறுப்பும் ஆகும். பொதுவாக மற்ற துறைகளில் உள்ளவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளோடு, தொழிலதிபர் — தொழிலாளர் நல்லுறவும் நல்வாழ்க்கையில் அக்கறையும் பல தீ விபத்துக்களைத் தடுப்பதற்குத் தேவை.

தொழிலதிபர்கள் தொழில் நலத்தையும், சொந்த நலத்தையும் முக்கியமாக நாட்டின் பொருளாதார நலத்தையும் கருதி தீ விபத்துக்களைத் தடுப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். தொழிலாளர் நலத்தில் அக்கறையும் அவர்களிடத்தில் ஆதரவும்காட்டி நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டால், வேலை நிறுத்தங்களையும், தீ விபத்துக்களை ஏற்படுத்தும் சதித் திட்டங்களையும் தவிர்க்கலாம். இதே போல், தொழில் நலமே நமது நலம் என்று தொழிலாளர் உணர வேண்டும். தங்களதுவேண்டாத செய்கைகளால் தொழில் கெட்டால், அவர்களது சொந்த நலமே கெடும். வேலையில்லாத் திண்டாட்டம் வீட்டிற்கு நட்டம்.

பள்ளிகளும், கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் இத்துறையில் இயற்ற வேண்டிய பணி அடிப்படையானது. தொழில் கூடங்களையும், நூல் துணிஆலையை நாளை இயக்கும் பொறுப்பு இளைஞர்களுடையது. தீயைப் பற்றியும், தீ அணைப்பைப் பற்றியும் அடிப்படைக் கொள்கைகளை இளைஞர்களுக்குப் பாடப் பகுதியாக ரஷ்யா, ஜப்பான் நாடுகளைப் போல் போதிக்கப்பட்டால், நாட்டின் நாளைய நட்டம் நீங்கி நலம் பெருகும்.

தொழில் கூடம், ஆலைகள், வீடுகள் கட்டும் பொறுப்பிலுள்ளவர்கள் ஆரம்பத்திலேயே தீப்பற்றும் பொருள்களைக் கொண்டு கட்டுவதுடன் தவிர்க்க முடியாத காரணங்களால் தீ விபத்துக்கள் ஏற்படும் பொழுது ஆட் சேதம், பொருட்சேதங்களை குறைப்பதற்கான வழி முறைகளை அமைத்துத் தரும்படி வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள். ஓரிடத்தில் ஏற்பட்ட தீ மற்ற இடத்திற்குப் பரவாமலும் தீ விபத்து ஏற்பட்டால் பாதுகாப்பான இடத்துக்குச் செல்லத் தப்பிக்கும் வழிகளை அமைத்தும் கட்டடங்கள் அமைப்பது நலம்.

நகராட்சி, மாநகராட்சி மன்றங்கள், தங்கள் ஆட்சியிலுள்ள மக்களுக்குத் தீ விபத்துக்களிலிருந்து பாதுகாப்பளிப்பது ஓர் முக்கிய கடமை எனக் கருதி, தீயணைப்புப் படைகளுக்கு உதவியாக நின்று நீர் நிலைகளைப் பாதுகாத்து உதவ வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

தாய் தந்தையர்களுக்கும், தவறுதலாகப் புகை பிடிப்போருக்கும், நல்லுரை சொல்லி, வீடுகளிலும், வெளியிலும் தீ விபத்துகளைத் தடுக்கும் முறைகளை உபதேசிக்குமாறு பொது நல சேவை தொண்டர்கள் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

இம்முயற்சிகளுக்கு அப்பாற்பட்ட தீ விபத்துக்கள் ஏற்பட்டால் கடமையுணர்ச்சியும், வீரமும் கொண்ட நமது தீயணைக்கும் படையினர் விரைந்து சென்று சேவை புரிவார்கள் என்று பொது மக்களுக்கு உறுதி கூறிக் கொள்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, பொது மக்களாகிய உங்களுடைய ஒத்துழைப்பை தீயணைக்கும் படையினருக்கு அளிக்குமாறு, வேண்டிக்கொண்டு,

'அடக்கி ஆளாவிடில்—தீ
மடக்கி அழித்துவிடும்'

என்று கூறி முடிக்கிறேன்.

வெங்காய ஏற்றுமதி

தேசிய விவசாயக் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு நிறுவனத்தின் மூலம் வெங்காய ஏற்றுமதி செய்யும் கொள்கையைத் தொடர்ந்து 1976-77-லும் கடைப்பிடிக்க அரசு தீர்மானித்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரியில் வெங்காயம் அதிக அளவுக்கு உற்பத்தி ஆனதால், அங்காடிகளில் விற்பனைப் போக்கைக் கருத்தில் கொண்டு, வெங்காய ஏற்றுமதிக்கான தடை நீக்கப்பட்டது. இதனால் 1975-76-இல் மொத்தம் ரூ. 13 கோடி மதிப்புக்கு, ஒரு லட்சத்து 10 ஆயிரம் டன் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டது. தேசிய விவசாயக் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு நிறுவனம், சோவியத் யூனியன், யுகோஸ்லாவியா ஆகிய நாடுகளில் புதிய அங்காடிகளுக்கும் வெங்காயம் ஏற்றுமதி செய்ய வகை செய்துள்ளது.

வெங்காய ஏற்றுமதியில் இந்நிறுவனம் சம்பந்தப்பட்டதன் மூலம் அனைத்து நாட்டு அங்காடிகளில், வெங்காய விற்பனையில் சிறந்த முன்னேற்றம் காணப்படுகிறது.

இருபது அம்சத் திட்ட விளம்பர விழா

இந்தியா ஒரு பெரிய நாடு மட்டுமல்ல; மக்கள் தொகையை விரைவாகப் பெருக்கிடும் நாடாகவும் உள்ளது. இந்தியாவில் வாழும் பெரும்பாலானவர்கள் கல்வியறிவில்லாத பாமர மக்களாக உள்ளனர்! 1971-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணிப்பின்படி, இந்தியாவில் 29.46 சதம் அளவினரே படித்துள்ளனர், என்பது தெரிய வருகிறது. கல்வியறிவில்லாத மக்கள் பெரும்பான்மையினராக இருப்பதனாலேயே, மக்களாட்சியின் அடிப்படையான தனி மனிதன், தன் கடமையை உணர்ந்து, சரிவரச் செய்ய முடியாத நிலையில் இருக்கிறான்.

இத்தகைய நிலை இனியும் தொடர்ந்து இருக்கக் கூடாதென்பதற்காகவே நமது பிரதமர் **திருமதி இந்திரா காந்தி அவர்கள்** கடந்த 1-7-1975 அன்று 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தை இந்திய நாட்டிற்கு வழங்கினார். சமதர்மச் சமுதாயம் அமைய வழிகோலும் இத்திட்டம் ஏழை, எளிய, பாமர, பாட்டாளி, தொழிலாளி, சாமான்ய மக்களின் வாழ்வை வளப்படுத்தி வருகிறது;

அரிசன மக்கள் சமூக, பொருளாதார, அரசியல் முன்னேற்றம் பெற உதவுகிறது.

மாணவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கி வருகிறது;

இந்திய மக்கள் அனைவரின் வாழ்விலும் கட்டுப்பாடு உணர்ச்சியையும், பொறுப்பு உணர்ச்சியையும் ஏற்படுத்தி வருகிறது;

இந்திய நாட்டின் இருகண்களென விளங்கும் வேளாண்மை, தொழில் ஆகியவற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு உற்பத்தியை உயர்த்தி வருகிறது;

இந்தியாவில் பலத்தையும், சுயச் சார்பையும் உறுதிப்படுத்தி வருகிறது.

எனவே, இந்தியாவின் செழிப்புக்கு வித்திட்ட 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் அனைவருக்கும் பெரும் பங்கு உள்ளது.

நமது கடமை என்ன?

கல்வியறிவில்லாதவர்களாகவும், கிராமப்புறங்களில் வாழ்வோராகவும் உள்ள மக்கள் அனைவரும் தம் தம் கடமைகளைச் செவ்வனே செய்திட வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டியது அரசின் பொறுப்பாக உள்ளது. ஆனால், கல்வியறிவு இல்லாத மக்களுக்குக் கடமைகளை உடனடியாகக் கல்வி மூலம் கற்பிக்க முடியுமா? முடியாது! ஆகவே, குறுகிய காலத்தில் ஏராளமான பேர்களுக்குக் கடமைகளை உணர்த்த வலிமைமிக்க பல்வேறு விளம்பர சாதனங்கள் (Multi media) தேவைப்படுகின்றன.

கல்வி அறிவு இல்லாத பெரும்பான்மை கிராமப்புற ஏழை, எளிய, பாமர, சாமான்ய மக்களின் வாழ்வை வளப்படுத்துவதற்கு, கண்காட்சிகள், கருத்தரங்குகள், கதாகாலட்சேபங்கள், செய்முறைகள், நாடகங்கள், சுவரொட்டிகள், சிலைடுகள், நாளேடுகள், துண்டு அறிக்கைகள், வானொலி, திரைப்படங்கள், டெலிவிஷன் போன்ற பல்வேறு விளம்பர சாதனங்கள் உதவுகின்றன.

மக்களுக்கும் அரசுத் துறைகளுக்கும் இடையே நெருக்கமான தொடர்பு இருந்தால்தான், பொதுமக்களின் நல்வாழ்விற்காக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பொது மக்கள் உணர்ந்து கொள்ளவும், பொது மக்களின் தேவைகளை உணர்ந்து அத்தேவைகள் அவர்களுக்கு எளிதில் கிடைத்திடுவதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுத்திடவும் இயலும். இதை மனத்திற்கொண்டே தற்பொழுது புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய 3 மாவட்டங்களில் பல்வேறு சாதனங்கள் வாயிலாக விளம்பர முனைப்பு இயக்கம் (Multi media Campaign) நடத்தப்படவிருக்கிறது.

நாளேடுகளும், வானொலியும் பரவமுடியாத சின்னஞ்சிறு கிராமங்களிலும்-குறிப்பாக பின் தங்கிய கிராமங்களிலும்-இந்திய அரசின் செய்தி விளம்பரத்துறையும், தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறையும், சிலைடுகள், திரைப்படங்கள் மூலம் புதுமைக் கருத்துகளைப் புகுத்தி வருகின்றன. அந்த வகையிலேதான் மிகவும் பின் தங்கிய மாவட்டமான புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்வேறு விளம்பர சாதனங்களைப் பயன்படுத்திப் பொதுமக்களிடையே 20 அம்சத் திட்டத்தையும், பயன்தரும் அறிவுரைகளையும் புகுத்துவதற்காகவே 'விளம்பர முனைப்பு இயக்கம்' மே 16, 17, 18, 19 ஆகிய நாட்களில் நடைபெறவிருக்கிறது.

அடுத்து, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மே 21, 22, 23, 24 ஆகிய நாட்களிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் மே 26, 27, 28, 29 ஆகிய நாட்களிலும் நடைபெறவிருக்கிறது.

மைய, மாநில அரசுகளின் பல்வேறு துறையினரும் ஒருங்கிணைந்து முதன்முதலாக நீலகிரி மாவட்டத்தில் உதகையில் நடத்திய 'விளம்பர முனைப்பு இயக்கம்' உண்மையிலேயே பாமர மக்களுக்குப் பயன்தரும் விழாவாக அமைந்திருந்தது. எனவே, இரண்டாவதாகத் தருமபுரி மாவட்டத்திலும் இவ்வியக்கம் நடத்தப்பட்டது. அதனால் தருமபுரி மாவட்ட மக்களும் அரும் பயன் பெற்றனர்.

எனவேதான், தற்பொழுது புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய 3 மாவட்டங்களிலும் இவ்வியக்கம் நடத்தப்படவிருக்கிறது. இம்முனைப்பு இயக்கத்தினைப் பயன்படுத்தி புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய மாவட்ட மக்கள் தம்வாழ்வில் எல்லா வகையிலும் முன்னேறுவதற்குரிய வழிவகைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான், மேற்கூறிய 3 மாவட்ட மக்களும், தங்கள் வீட்டிற்கும், நாட்டிற்கும் செய்ய வேண்டிய கடமைகளைச் செவ்வனே செய்திட முடியும். அவ்வாறு கடமையைச் செய்தால் தான் மக்களாட்சியின் பயன், மக்கள் அனைவருக்கும் கிடைக்கும்! ஏழை எளிய மக்கள் மக்களாட்சியில் எதிர்பார்த்த இனிய வாழ்வு மலரும்!

—**ஆர். மாணிக்கம்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் 20 அம்சத் திட்டச் சாதனைகள்

— *ஆர். வீராசாமி*

மிகவும் பின்தங்கிய பகுதியாக உள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில் 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் கீழ் பின்கண்ட முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

- *அவசியப் பொருட்களின் விலைவாசியைக் குறைக்கத் தொடர்ந்து நடவடிக்கை; உற்பத்தி, கொள்முதல், விநியோகச் சீரமைப்புத் திட்டம்*

கடந்த 1—2—'76-க்குப் பிறகு அரிசி, பயறு, பருப்பு, எண்ணெய் போன்ற இன்றியமையாப் பண்டங்களின் விலைகள்கணிசமாகக் குறைந்துள்ளன. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள எல்லா உணவு விடுதிகளிலும் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. ஜனதா சாப்பாடு ஒரு ரூபாய்க்கு மாவட்டம் முழுவதிலும்விற்கப்படுகிறது. உணவுப் பொருள் வழங்கு துறை அதிகாரிகளும், காவல் துறை (உணவு) அதிகாரிகளும் மாவட்டத்திலுள்ள உணவு விடுதிகளை அடிக்கடி நேரில் சென்று பார்வையிட்டு வருகின்றனர். மாவட்டம் முழுவதும் புதிய குடும்ப அட்டைகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்களின் 175 கடைகள் மூலமாக இன்றியமையாப் பண்டங்கள் வழங்கப்படுகின்றன.

- *உபரி நிலங்கள் ஏழைகளுக்கு விரைவாக வழங்கப்படும்.*

ஜனாதிபதி ஆட்சி அமுலுக்குப் பின் இம்மாவட்டத்தில் 1,870 நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 2,669.66 ஏக்கர் உபரி நிலம் பட்டா செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

- *நிலமற்ற ஏழை மக்களுக்கு வீட்டு மனைகள் விரைவாக வழங்கப்படும்.*

1—1—76-க்குப் பின் இம்மாவட்டத்தில் 5,284 நிலமற்ற ஏழை மக்களுக்கு 114.49 ஏக்கர் வீட்டு மனைப் பட்டா செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

- *தொழிலாளர்களை அடிமை போல் நடத்துவது, பிணைப்புமுறை சட்டவிரோதமாக அறிவிக்கப்படும்*

ஆவுடையார் கோவிலிலும் குளத்தூர் தாலுகாவிலும் கொத்தடிமை முறை இருப்பது தெரிய வந்துள்ளது. அவர்களுக்கான மறுவாழ்வுத் திட்டங்கள் உருவாகி வருகின்றன.

- *கிராமப்புற மக்களின் கடன்சுமை, நீக்கப்படும்.*

மாவட்டத்திலுள்ள 48 வட்டிக் கடைகளில் திடீர் சோதனைகள் நடத்தப்பட்டன. அதிக வட்டி வசூலித்ததற்காகவும் கணக்குகள் சரியில்லாத காரணத்தினாலும் அக்கடைகளின் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- *விவசாயத் தொழிலாளர்களின் குறைந்த பட்சம் ஊதியம் பற்றி மறு ஆய்வு செய்யப்படும்.*

விவசாயத் தொழிலாளர்களுக்கான தமிழ்நாட்டின் குறைந்த பட்ச ஊதியச் சட்டம் மாவட்டத்தின் கிராமப் புறங்களில் நன்கு விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. வட்டாட்சியர்கள் சட்டத்திற்குக் குறைவான ஊதியம் எங்கேனும் வழங்கப்பட்டால், கடும் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளார்கள்.

- *புதிதாக பாசன வசதி செய்து தரப் படும்.*

இம்மாவட்டத்தில் 1990 ஏரிகளும், குளங்களும் மராமத்து செய்யப்பட்டுள்ளன. இதன் மூலமாக மாவட்டத்தில் 2,240 ஏக்கர் புதியதாகப் பாசன வசதி பெருகி வருகிறது.

75 குழாய்க் கிணறுகள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 1,500 எக்டேர் நிலப்பரப்பு பாசன வசதி பெறும்.

- *மின்சாரத் திட்டங்கள் முடுக்கி விடப்படும்.*

இவ்வாண்டில் 32 கிராமங்களும் அரிசன காலனிகளும் மின் வசதி பெற்றன. 389 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இம்மாதத்தில் மேலும் 171 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படும். இம்மாவட்டத்திலுள்ள 31,370 கிணறுகளில் 7,344 கிணறுகளுக்கு இதுவரை மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

- *கைத்தறித் தொழில் வளர்ச்சிக்குப் புதிய திட்டம் வகுக்கப்படும்.*

இம் மாவட்டத்தில் 1,299 நெசவாளர்கள் உள்ளனர். பொன்னமராவதியிலும், கடியாபட்டியிலும் புதியதாக 2 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்த ஆவன செய்யப்படுகின்றது. திருவப்பூர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் புதுப்பிக்கப்பட உள்ளது. மாவட்டத்திலுள்ள அனைத்து நெசவாளர்களையும் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்த்து பயன்

பெற ஆவன செய்யப்படுகின்றது. நெசவாளர் குறைகளை நீக்குவதற்காக நெசவாளர் ஆலோசனைக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

• *சாதாரண மக்கள் அணியும் துணிகளின் தரம் அதிகரிக்கப்பட்டுத் தாராளமாகக் கிடைக்க வழி செய்யப்படும்.*

இம்மாவட்டத்தில் தரமான மலிவு விலைத் துணி வகைகள் மாதமொன்றுக்கு 73 பேல்கள் விதம் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலம் விற்கப்பட்டு வருகிறது. மேலும் தேவையான அளவு தமிழ்நாடு அரசிடம் பெற்று விற்பனை செய்யப்படும்.

• *வரி ஏய்ப்பு, பதுக்கல், கடத்தல் போன்ற பொருளாதாரக் குற்றங்கள் செய்வோருக்குக் கடும் தண்டனை விதிக்கப்படும்.*

கடந்த வருவாய் ஆண்டில் மட்டும் புதுக்கோட்டை நகராட்சியில் ரூபாய் 1,50,000 வரி ஏய்ப்பில் கண்டு பிடிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட சட்டத்தின் கீழ் 3 பேர்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர். வணிக வரித் துறையினர் வியாபார இல்லங்களைச் சோதனையிட்டு வரி ஏய்ப்புச் செய்த 39 பேர் மீது வழக்குகள் தொடரப்பட்டு கடும் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. சினிமா அரங்குகள் இரண்டு, வரி ஏய்ப்புச் செய்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளன; 23 லாரி உரிமையாளர்கள் வரி ஏய்ப்புச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

• *சாலைப் போக்குவரத்து, தேசிய மட்டத்தில் அனுமதி வழங்கும் திட்டம் வரும்.*

இம்மாவட்டத்தில் விண்ணப்பம் செய்த இரண்டு லாரி உரிமையாளர்களுக்கும் தேசிய பர்மிட் இரண்டு நபர்களுக்கு வழங்கப்பட்டு உள்ளது.

• *விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு அவசியமான பொருள்கள் கட்டுப்படுத்தப்பட்ட விலையில் வழங்கப்படும்.*

புதுக்கோட்டை மாவட்டத்தில் 6 கல்லூரி விடுதிகள், 13 பிற்பட்டோர் மாணவர் விடுதிகள், 17 தாழ்த்தப்பட்டோர் மாணவர் விடுதிகள் உள்ளன. இவை அனைத்திற்கும் இன்றியமையாப் பண்டங்கள் நியாய விலையில் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதனால் புதுக்கோட்டை நகரிலுள்ள கல்லூரி விடுதியில் ஒரு நாள் உணவின் விலையில் 38 பைசா குறைந்துள்ளது.

• *மாணவர்களுக்கு நோட்டு, புத்தகங்கள் மற்றும் இதர பொருள்கள் கட்டுப்படுத்தப்பட்ட விலைக்கு வழங்கப்படும்.*

இம்மாவட்டத்தில் 300 மாணவர்களுக்கு மேல் படிக்கும் 39 உயர் நிலைப் பள்ளிகளில் (300 மாணவர்களுக்கு மேற்பட்ட) மாணவர்

கூட்டுறவுப் பண்டகசாலை, வரும் கல்வியாண்டில் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பள்ளி மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்கள், எழுது பொருள்கள் நியாய விலையில் கிடைக்கும்.

• *எல்லா மக்களுக்கும், குறிப்பாக எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பு, பயிற்சி வாய்ப்பை அதிகரிக்க உதவித் தொகையுடன் கூடிய பயிற்சித் திட்டம் வகுக்கப்படும்.*

இம்மாவட்டத்தில் 18 தொழில்களில் பயிற்சி வாய்ப்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு, 45 பேர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும் அதிகப்படி மாணவர்களுக்குப் பயிற்சி வாய்ப்பளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பிரதமர் திட்டத்தை அமல் நடத்தும் ஜேஸிஸ் இளைஞர் கழகம்

பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் இருபது அம்சத் திட்டத்தின் கீழ் தமிழகத்திலேயே முதன் முதலாகவும், முன்மாதிரியாகவும், புதுக்கோட்டை ஜேஸீஸ் இளைஞர் கழகம், புதுகோட்டைக்கு அருகே உள்ள புல்வயல் என்னும் கிராமத்தை வளர்ப்பு கிராமமாக ஏற்றுக்கொண்டு சமுதாய நற்பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது.

முதற்கட்டமாகப் புல்வயல் கிராமத்தில் இலவச மருத்துவமனை ஒன்றைக் கிராம மக்களுக்காக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பால்ராஜ் தலைமையில், மாவட்டத் தலைமை மருத்துவ அதிகாரி திரு. வர்கீஸ் துவக்கி வைத்தார். இருபது அம்சத் திட்டத்தின் நோக்கங்கள் குறித்தும், மக்கள் பெருமளவு ஆதரவு தந்து திட்டங்களை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்றும், பொது மக்களை அவர் கேட்டுக் கொண்டார்.

அறந்தாங்கி அரசினர் உயர்நிலைப் பள்ளி மைதானத்தில் இந்திய அரசுச் செய்தி விளம்பரத் துறையினர், பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தை விளக்கும் 'இனியொரு விதி செய்வோம்' என்னும் நாடகத்தை மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் நடத்தினார்கள்.

ஒளிமயமான நல்வாழ்வு



சி. ராமச்சந்திரன் ஐ.ஏ.எஸ்.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருச்சிராப்பள்ளி.

பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் 1975ம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதலாம் நாள் இப்பாரதத்தில் வாழும் ஏழை, எளிய மக்களின் நல்வாழ்விற்காக மிக உயர்ந்த பொருளாதாரத் திட்டமாம் 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தை இந்நாட்டிற்கு வழங்கினார்கள். இப்புதிய பொருளாதாரத் திட்டம் கடந்த ஓராண்டில் மிக வேகமாக நிறைவேற்றப்பட்டு பாரத மக்களின் வெகுவான பாராட்டுக்களையும், வரவேற்பினையும் பெற்றுத் திகழ்கின்றது என்றால் மிகையாகாது. இம்மகத்தான திட்டம் திருச்சி மாவட்டத்தில் மிகவும் சீரோடும், சிறப்போடும், விரிவாகவும், விரைவாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டு சாதனைகளை உருவாக்கி வருகிறது.

திருச்சி மாவட்ட அளவில் 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பல்வேறு துறை அலுவலர்களைக் கொண்ட 'செயல் குழு' அமைக்கப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொன்னணியாறு பாசன வசதியைப் பெருக்குவதற்கு ஒரு துணைக்குழுவையும், உணவுப் பொருட்களைப் பதுக்கல், கலப்படம், விலையேற்றம், ஆகியவற்றைத் தடுத்தல் ஏழை எளிய தாழ்த்தப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நிலப் பட்டா, வீட்டுமனைப் பட்டா வழங்குதல் ஆகியவற்றிற்கு ஒரு துணைக்குழுவும், வேலைப் பயிற்சி வாய்ப்பிற்கு ஒரு துணைக்குழுவும் இம் மாவட்டத்திலே அமைக்கப்பட்டு மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பண்டங்கள் எளிதில் கிடைப்பதற்கு ஏற்ற வகையில் எல்லா ஏற்பாடுகளும் விரைவாகவும் செய்யப்பட்டு வருகின்றன. கடந்த ஜனவரித் திங்களில் இருந்த அரிசியின் விலையை விட தற்போது 50 சதவீதம் விலை குறைந்துள்ளது. எண்ணெய் வகைகள் ஏறத்தாழ 25-லிருந்து 40 சதவீதம் விலைகள் குறைந்துள்ளன.

உணவுப் பங்கீட்டு முறையைச் சரி செய்வதற்கு உணவுப் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு ஏறத்தாழ 18,000 டன்கள் கையிருப்பு வைக்கப்பட்டிருக்கிறது. உணவுப்பொருட்களை பங்கீட்டு முறையில் வழங்குவதற்கு ஏற்ற முறையில் ஏறத்தாழ 8,32,722 குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. குடும்பக் கார்டுகள் சரியான முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறதா என்பதை கண்காணிக்கப்பட்டு வருகிறது. உணவுப் பொருள்களில் கலப்படம் செய்யப்படுகிறதா, ஒழுங்காக விற்பனை செய்யப்படுகிறதா, விலைப்பட்டியல் வைக்கப்பட்டிருக்கிறதா, எடைக்கற்கள் சரியாக இருக்கின்றனவா? ஓட்டல்களில் உணவுப் பொருட்கள் குறைந்த விலையில் விற்கப்படுகிறதா? என்பதைக் கண்காணித்து, தவறுகள் இருப்பின் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

விவசாயத்திற்குத் தேவையான நீர்ப்பாசன வசதியைப் பெருக்குவதற்கு ஏற்ற வகையில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுக்கழகத்தின் சார்பில் புதிய கிணறுகள் தோண்டவும், பழைய கிணற்றை ஆழப்படுத்தவும், ஆயில் பம்பு செட் வழங்குவதற்கும், மின்சார பம்பு செட்டுகள் வழங்கவும் விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொன்னணியாறு திட்டத்தில் பாசன வசதி பெறும் ஆயக்கட்டுக்கள் 336 எக்டேர்களுக்குப் பதிலாக 741 எக்டேர்கள் பாசன வசதி வழங்குவதற்காக நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்பட்டு வருகின்றன. ரூபாய் 77 இலட்சம் செலவில் 9 வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்த வேலைகள் முடிவுறுமானால் 942 எக்டேர்கள் நிலம் பாசன வசதி பெறும். மேலும் 33 திட்டங்கள் ரூபாய் 2,512 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இவை நிறைவேற்றப்படுமேயானால் 5,887 எக்டேர்கள் நிலம் பயிர் சாகுபடிக்குக் கொண்டு வரலாம்.

மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமும் நிலவள வங்கிகள் மூலமும் விவசாயிகளுக்கு விரைவிலேயே கடன்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு 720 இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 890 இலட்சம் ரூபாய் கடன் வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மாவட்டம் முழுவதும் வங்கி அளவில் 34 சங்கங்களைத் தேர்ந்தெடுத்து நகைக் கடன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் இதுகாறும் 16 சங்கங்களுக்கு ரூபாய் 16.60 இலட்சம் ரூபாய் கடன் வசதி அனுமதிக்கப்பட்டுக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஏழை, எளிய விவசாயிகளுக்கு கடந்த ஓராண்டில் 6543.45 ஏக்கர் நிலம், 4471 பேருக்கு பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. 3480 பேருக்கு வீட்டு மனைப்பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டோருக்கு வீட்டு மனை, புதை குழிக்கு நடைபாதை ஆகியவற்றிற்காக ரூபாய் 2,55,000 செலவிடப்பட்டிருக்கிறது.

'உழந்தும் உழவே தலை' என்றான் வள்ளுவன். உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட கூலி ஒழுங்காக வழங்கப்பட்டு வருகிறதா என்பது குறித்துக் கண்காணித்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திருச்சி மாவட்டத்தில் 69 குக்கிராமங்களுக்கும், 31 தாழ்த்தப்பட்டோர் காலனிகளுக்கும், மின்சாரம் வழங்கப்பட வேண்டியிருக்கிறது. இவற்றில் 16 குக்கிராமங்களுக்கும், 20 தாழ்த்தப்பட்டோர் காலனிகளுக்கும் மின்சாரம் வழங்குகின்ற வேலை முடிவுறும் தறுவாயில் இருக்கிறது. இவ்வாண்டில் 5,000 கிணறுகளுக்கு மின்வசதி செய்து தரப்பட இருக்கிறது.

திருச்சி மாவட்டத்தில் உறையூர், ஜெயங்கொண்டம், நடுவீரப்பட்டு, கரூர் ஆகிய இடங்களில் நெசவாளப் பெருங்குடி மக்கள் மிகுதியாக இருக்கிறார்கள். ஏறத்தாழ 32,185 தறிகள் இம்மாவட்டத்தில் உள்ளன. நெசவாளப் பெருமக்களுக்குக் கடன் வசதியை பெருக்கவும் அவர்கள் உற்பத்தி செய்யும் துணிகளின் விற்பனையைப் பெருக்கவும், அவர்களது சங்கங்களையும் அச்சங்கங்களில் அதிகப்படியான உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுக்க அந்தத் துறையின் சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

ஏற்றுமதி அடிப்படையான கைத்தறித் துணிகள் உற்பத்தி மற்றும் விற்பனைத் திட்டம் ஒன்றை ரூபாய் 40 லட்சம் மதிப்பில் கரூரில் அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இத்திட்டத்தின் மூலம் 1,000 கைத்தறிகள் பயனடையும்.

விற்பனை வரிகள் முறைப்படுத்தப்பட்டு வரி ஏய்ப்போரின் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. திரைப்பட அரங்குகளிலும், சோதனையிடப்பட்டு வரி ஏய்ப்போரின் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்களும், நோட்டுகளும், எழுது பொருட்களும், மலிவு விலையில் வழங்க ஏற்பாடாகி வருகிறது. 300-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிலும் உயர்நிலைப்பள்ளிகளில் ஒரு கூட்டுறவுச் சங்கம், மாணவர் வங்கி ஆகியவை தோற்றுவிக்கப்பட்டு வருகிறது. 300-க்கும் குறைவாக உள்ள உயர்நிலைப்பள்ளிகளில் பண்டகச்சாலைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

பெரம்பலூர் வட்டத்தில் மலையாளப்பட்டி என்ற கிராமத்தில் கொத்தடிமை விடுதலை கேட்டு 48 உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தார்கள். இவர்களில் 8 பேர் தாமே விடுதலையாகி கிராமத்திலிருந்து சென்று விட்டார்கள். பாக்கி 40 பேர்கள் சம்பந்தமாக விசாரணை செய்ததில் இருவர் தவிர 38 பேர்கள் கொத்தடிமை வேலை செய்து வந்ததாகத் தெரிகிறது. அவர்கள் அனைவரும் கொத்தடிமை வேலையிலிருந்து விடுவிக்கப்பட்டு விட்டார்கள். இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்

திருச்சி மாவட்டத்திலுள்ள பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மாணவர் விடுதிகளுக்கு அரிசி, மற்றும் உணவுப் பொருட்கள் கூட்டுறவுத் துறையின் மூலம் மலிவு விலையில் வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டத்திலுள்ள 23 பிற்பட்டோர் மாணவ விடுதியில் 1440 மாணவர்கள் தங்கிப் படிக்கின்றனர். இவர்களுக்கு ஒரு மாதத்திற்குத் தேவையான உணவுப் பொருட்கள் 18 டன்களாகும். 62 தாழ்த்தப்பட்டோர் மாணவ விடுதிகள் உள்ளன. இதில் 5062 மாணவர்கள் தங்கிப் படிக்கின்றனர். இவர்களுக்கு ஒரு மாதத்திற்கு 71 டன்கள் உணவுப் பொருட்கள் தேவைப்படுகிறது. இவைகளெல்லாம் கூட்டுறவுச் சிறப்பங்காடிகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்திலுள்ள டால்மியா சிமெண்ட் ஆலையில் 22 பேருக்கும், கோத்தாரி சர்க்கரை ஆலையில் 9 பேருக்கும், பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸில் 1799 பேருக்கும் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

திட்டங்களை நிறைவேற்றுவதில் திருச்சி மாவட்டம் முன்னோடியாகத் திகழும் என்பது உறுதி. இப்புதிய பயணம் அனைவருக்கும் ஒளிமயமான நல்வாழ்வை உருவாக்கும்.

விடைகள்

1. உலக வானிலை தினம்: 1961 மார்ச் 23.
2. 'சர்வதேச நீதிமன்றம்' ஐ.நா. சபையில் உள்ளது. நெதர்லாந்தைச் சேர்ந்த ஹேக் நகரில் இது கூடுகிறது.
3. அனைத்து நாட்டுக் காவல் படைக்கு 'இன்டர்போல்' என்று பெயர். இதன் தலைமை நிலையம் பாரிசில் இருக்கிறது.
4. 'ஆர்யபட்டா'
5. அ. கியாட் ஆ. கிரோன் இ. யென் ஈ. லிரு.
6. டென்மார்க், பின்லாந்து, கிரீஸ், நார்வே, சுவிட்சர்லாந்து, பிரிட்டன்.
7. பானர்ஜி
8. ஜப்பானிலுள்ள நாகசாகி, ஹிரோஷிமாவில்; 1945ல்
9. 124 (உயர்நீதிமன்றம் துவக்கம் 1852)
10. விருந்துபசாரம் செய்வதற்காக ராபர்ட் கிளைவ் காலத்தில் (1789-1803) இது ஏற்படுத்தப்பட்டது.
11. 1970-ல் எடுத்த கணக்கின்படி 1,138 பத்திரிகைகள் உள்ளன.
12. சென்னைப் பல்கலைக்கழகத்தில்
13. சென்னை வானொலி நிலையத்துக்கு எதிரில்.
14. சென்னை எழும்பூரிலுள்ள காவல் துறை ஆணையாளர் அலுவலகத்தில்.
15. அமெரிக்க நூலகம்.

தொகுப்பு: பி. வி. கிரி

 பதிவு எண். M. 8676

சாதனை மிகு பத்தாண்டு



நாடு நடைபோடுகிறது

சுய சார்பை நோக்கி
கட்டுப்பாடுடன் கூடிய சமூக
வாழ்வை நோக்கி
ஒருமைப்பாட்டை நோக்கி.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

தமிழரசு

1-6-1976 50 காசு

10 JUN 1976
Rn. No. 185/76
55 373

நேரு நினைவு அஞ்சலி

ஆசியாவின் ஜோதியாக விளங்கிய பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் 12-வது மறைந்த நாளையொட்டி, 27-5-1976 அன்று, நாடு அவருக்கு அஞ்சலி செலுத்தியது.

நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், மறைந்த நேரு அவர்களின் சமாதியில் மலர்களை வைத்து வணங்கினர்.

தமிழரசு

மலர் - 6 1 - 6 - '76 இதழ் - 23.

கல்வி, வாழ்நாள் முழுதும் தொடரும் செயல்முறையாகும்!

"ஒரு தேசத்தின் வருங்காலம், அதன் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும்தான் உருவாகிறது. அவற்றின் மூலமாக இளம் தலைமுறையினர் நாட்டின் பாரம்பரியத்துடன் இணைந்து, புதிய அறிவைப் பெறுகிறார்கள். வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் தேவையான பல்வேறு திறமைகளைக் கல்வி, நாட்டுக்கு அளிக்கிறது.

"வகுப்பறைகளோடோ, அல்லது பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் செலவிட்ட ஆண்டுகளுடனோ கல்வி நின்று விடுவதில்லை. கல்வி, வாழ்நாள் முழுதும் தொடரும் செயல்முறையாகும்; அது, சமுதாயம் முழுவதிலும் பரவவேண்டும். அறிவு, மிக விரைந்து வளருகிறது. நாம் அதனுடன் சேர்ந்து வளராவிட்டால் தகுதியற்றவர்களாக ஆகிவிடுவோம். வானொலி, டெலிவிஷன், திரைப்படங்கள் ஆகியவற்றின் மூலமாக இன்று எழுத்தறிவில்லாதவர்கள்கூட உலகத்தைப் பற்றி அறிந்து கொள்ள இயலுகிறது. நவீன விவசாயத் துறையும், தொழில் துறையும் புதிய முறைகளை ஏற்றுக் கொள்வதற்கு முதியோர்களுக்குப் போதிக்கின்றன.

"கல்வியை, கல்லூரிப் பட்டத்தோடு ஒப்பிடக்கூடாது. மக்களில் ஒரு சிறிய பகுதியினர் மட்டுமே கல்லூரிக்குச் செல்ல முடியும். நமது பள்ளிகளில் 10 கோடிக் குழந்தைகள் படிக்கிறார்கள். ஆனால் கல்லூரிகளில் 30 இலட்சம் மாணவர்களே உள்ளனர். பள்ளிக்கூட நிலை, கல்லூரிக்குத் தயாராவது மட்டுமல்ல; ஆனால் பொறுப்பும் திறமையும் உள்ள குடிமக்களைத் தயாரிக்கும் வழிமுறையாகும் அது. உடல் மற்றும் அறிவுத் திறமைகளும், கவனமான சிந்தனைக்குப் பிறகே முடிவெடுக்கும் பழக்கமும் இளம் வயதிலேயே ஊன்றப்படவேண்டும்.

"நமது நாட்டின், குறிப்பாக கிராமப் பகுதிகளின் சூழ்நிலைகளுக்கும் தேவைகளுக்கும் சம்பந்தப்பட்டதாக நமது கல்விமுறை இல்லை என்பது அதற்கு எதிரான புகார்களில் ஒன்றாகும். ஆசிரியர்களிடமிருந்தும், புத்தகங்களிலிருந்தும் சில தகவல்களை மாணவர்களுக்குப் போதிப்பது, அலுவல் அனுபவத்துக்கு வழியாகும் என்பது மட்டுமே கல்வியைப் பற்றிய எண்ணமாகும். அதன்பயனாக, இந்தியாவின் நிலைமைக்கு ஏற்பக் குழந்தைகள் நன்கு உருவாக முடியும் என்றும், அதிகமான ஆக்கப் பணித் திறன் கொண்டிருப்பார்கள் என்றும் நாம் நம்பினோம்.

"பள்ளிக்கூடங்களுக்கு அதிகமான பெண் குழந்தைகள் செல்கிறார்கள். ஆனால் இப்பொழுது கூட, அவர்களை இளம் வயதிலேயே பள்ளிக்கூடங்களிலிருந்து நிறுத்திவிட கிராமப்புறப் பெற்றோர்கள் நினைக்கிறார்கள். நல்ல ஆரோக்கியத்துக்கும், மூடநம்பிக்கை, காலத்துக்கு ஒவ்வாத பழக்கங்கள் ஆகியவற்றை எதிர்த்துப் போராடுவதற்கும் பெண் கல்வி அத்தியாவசியமானது.

"நமது மரபுப்படி, ஆசிரியர்கள் எப்பொழுதும் பெரிதும் மதிக்கப்படுகிறார்கள். ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள், அறியாமை இருளை அகற்றும் ஒளி விளக்குகளாவர். அபிவிருத்தியின் புதிய கட்டத்தில் நாடு நுழைந்திருக்கும் இச்சமயத்தில், ஜனநாயகத்துக்கு ஒரு புதிய பொறுப்பு ஏற்பட்டிருக்கும் இத்தருணத்தில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் இன்னும் மாபெரும் பங்காற்ற வேண்டும்".

—நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் அஸ்ஸாம் மாநில முதல்வருக்கு அனுப்பியுள்ள செய்தி ஒன்றில் கண்டுள்ள தகவல்கள்.

தமிழகக் கல்வி வளர்ச்சிக்காக மத்திய அரசு அளிக்கும் உதவி

சி. ஜி. ரங்கபாஷ்யம், ஐ ஏ.எஸ்.,
செயலாளர்,
கல்வித்துறை,

ஐந்தாண்டுத் திட்டம் ஒவ்வொன்றும் அதன் முந்தின திட்டத்தைவிடச் சிறப்பு வாய்ந்த முன்னேற்றத்தைக் குறிப்பதாகவே அமைந்திருக்கிறது. மற்றத் துறைகளைப் போலவே கல்வித் துறைக்கும் இது பொருந்தும். உண்மையிலேயே, தேசியவளர்ச்சி அரங்கில் கல்விக்கு உயர்ந்த முன்னுரிமையே வழங்கப்பட்டு வந்திருக்கிறது.

பல்வேறு திட்டங்களின் மூலமாக மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் உதவியினால் தரத்திலும் சரி, அளவிலும் சரி தமிழகத்தின் கல்வியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

குழந்தைகளின் வயதுத் தொகுதிகளான 6—11, 11—14, 14—17 ஆகிய நிலைகளுக்கு ஏற்ப அவர்களைக் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்த்தல், அதற்காகக் கூடுதலாக ஆசிரியர்களை அமர்த்திக் கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம், அளவைப் பொறுத்த (Quantitative) கல்வி வசதிகளின் விரிவாக்கத்திற்கு ஐந்தாண்டுத் திட்டங்களின் ஆண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடு உதவி வந்திருக்கிறது.

இந்த மாநிலத்தின் கல்விக்காக ஆண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ரூபாய் 9 கோடி முதல் ரூபாய் 10கோடி நிதியிலிருந்து இதற்காக ஒரு மிகப் பெரிய தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கல்வித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதியில் ஒரு மிகப் பெரிய சதவிகிதத்தைப் பயன்படுத்தி வரும் முக்கியத்துவம் உள்ள ஒரு துறையாக பள்ளிக் கல்வியே இன்றும் இருந்து வருகிறது; அவ்வாறு இருப்பது சரியானதும் கூட.

நமது அரசியலமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்ட இலக்கான, மனித குலம் முழுமைக்குமான தொடக்கக் கல்வி மிக உயர்ந்த கவனத்தை ஈர்த்து வருகிறது. வழக்கமான கல்வித் திட்டத்துடனேயே முடங்கிக் கிடப்பதன் மூலம் இந்த இலட்சியத்தைச் சாதிக்க இயலாது என்பது இப்போது பெருமளவு உணரப்பட்டு வருகிறது. சம்பிரதாயமற்ற (Non-formal) -வரன் முறைக்கு உட்படாத-கல்விக்கான துணிச்சல் மிக்க பேராவல் திட்டம் ஒன்றே, மனிதகுலம் முழுமைக்குமான கல்விக் குறிக்கோளை எய்துவதற்குரிய ஒரே வழியாக அமையும் என்று தோன்றுகிறது.

பல்வேறு வயதுப் பிரிவுகளுக்கு ஏற்ப சம்பிரதாயமற்ற புதுமைக் கல்வி செயற்படுத்துவதற்கான திட்டங்களுடன் மாநிலங்களுக்கு ஊக்கம் அளிக்க மத்திய அரசு முன் வந்திருக்கிறது. மற்ற மாநிலங்களில் உள்ளதைப் போன்றே நம்முடைய மாநிலத்தில் அளிக்கப்படும் உழவர் கல்வியும், இலக்கியத் திட்டங்களும் புதுமைக் கல்வியின் கூறுகளே ஆகும். இந்தத் திட்டங்கள் இந்திய அரசிடமிருந்து கிடைக்கும் நிதியுதவியைக் கொண்டு மத்திய அரசுத் திட்டங்களாகவே நிறைவேற்றப் படுகின்றன. இதுகாறும் தமிழ் நாட்டில் ஏழு மாவட்டங்களில் இது செயல் முறைக்கு வந்திருக்கிறது. இதற்காக, மொத்தம் ரூ. 8,12,205 வரை மத்திய அரசு செலவிட்டிருக்கிறது. 1975—'76-இல் செங்கற்பட்டு மாவட்டத்தில் இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக மேற்கொண்டு ரூ. 74,000 தொகையை இந்திய அரசு அனுமதித்திருக்கிறது. இவ்வாறாக எட்டு மாவட்டங்களில் இத்திட்டம் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வியைத் தொடர முடியாமல் வெளியேறிய 15—25 வயதுப் பிரிவினர்களுக்கு சம்பிரதாயமற்ற-வரன் முறைக்கு உட்படாத - கல்வியைப் புகட்டுவதற்காக ஒரு மாவட்டத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சம் தொகையை இந்திய அரசு வழங்கியுள்ளது. இதே அடிப்படையில் மாநில அரசும் மற்றொரு மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்து உள்ளது.

தமிழ்நாட்டில் மத்திய அரசின் நிதி உதவியுடன் இத்திட்டத்தைச் செயலாக்க, திருச்சிராப்பள்ளி மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது; அவ்வாறே மாநில அரசின் நிதியுதவியுடன் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த கோயம்புத்தூர் மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

பயனுள்ள, நாட்டு—நிருமாணத்திட்ட நடவடிக்கைகளை நோக்கி இளைஞர்களை ஒருமுனைப் படுத்தி இட்டுச் செல்லும் எண்ணத்தோடு மாநிலங்களில் 'நேரு இளைஞர் கேந்திரங்களை' இந்திய அரசு நிறுவியிருக்கிறது. 1973 டிசம்பரில் இந்தத் திட்டம் தமிழ் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. திருச்சிராப்பள்ளி, கடலூர், வேலூர், சேலம், மதுரை ஆகிய இடங்களில் 'நேரு இளைஞர் கேந்திரங்கள்' அமைக்கப்பட்டு உள்ளன.

இந்தக் கேந்திரங்களுக்கான முழுச் செலவையும் மத்திய அரசே ஏற்றுக் கொள்கிறது. இவற்றை ஒருங்கிணைத்து நடத்துகின்ற பொறுப்பு மாநில அரசுகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

பள்ளிக் கல்விக்கு அப்பாற்பட்ட எல்லாத் தரப்பு இளைஞர்களிடையேயும் விஞ்ஞான மனப்பான்மையின் வளர்ச்சியை உருவாக்குதல், கலை நிகழ்ச்சிகளில் ஈடுபடச் செய்து படைப்பாற்றல் நடவடிக்கைகளுக்கான வசதிகளை வழங்குதல்—கூட்டுறவு முறையிலான ஓட்டப் பந்தயங்களுக்கு ஏற்பாடு செய்தல்—சமுதாயப் பணியில் இளைஞர்கள் பங்கு கொண்டு ஓய்வு நேரத்தினை உருப்படியாகப் பயன்படுத்துவதற்கு உரிய வாய்ப்புகளை வழங்குதல்—ஆகியவையே இந்தக் கேந்திரங்களின் தலையாய நோக்கங்கள் ஆகும்.

தமிழ் நாட்டில் இன்னும் ஐந்து 'நேரு இளைஞர் கேந்திரங்களை' ஏற்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

கல்லூரி மாணவர்களுக்கான 'தேசிய மாணவர் படை'க்கும் (National Cadet Corps) 'தேசிய.

தொண்டுத் திட்டங்களுக்கும்' பெரும் அளவு மத்திய நிதி உதவி கிடைக்கிறது. 'தேசிய மாணவர் படைக்கு' மாநில அரசு ஓர் ஆண்டில் ஒரு கோடி ரூபாய் செலவிட்டால், மத்திய அரசோ அதைப் போல இரண்டு மடங்கு தொகையைச் செலவிடுகிறது.

கோயம்புத்தூர் மாவட்டம், அமராவதி நகரில் இந்திய அரசின் உதவியுடன் 'சைனிக் பள்ளி' ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அங்கே பணியாற்றுகின்ற அலுவலர்கள், கல்லூரி முதல்வர், தலைமையாசிரியர், பதிவாளர் முதலான அத்தனை பேருக்கும் ஆகின்ற ஊதியம் மற்றும் படிகளுக்குரிய முழுச் செலவுத் தொகையையும் இந்திய அரசே ஏற்றுக் கொள்கிறது.

பல்வேறு கல்லூரிகளில் அறிமுகப்படுத்தப்பட்ட 'தேசிய சேவைத் திட்டம்' மிகுந்த செல்வாக்குப் பெற்று வருகிறது. தற்போது 16,560 மாணவர்கள் இந்தத் திட்டத்தில் பங்கு கொண்டிருக்கிறார்கள். மேலும் 8,000 மாணவர்கள் விரைவிலேயே இத்திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். 'தேசியச் சேவைத் திட்டத்திற்கு' ஆகும் செலவில் கணிசமான பங்கினை மத்திய அரசே ஏற்றுக் கொள்கிறது.

மாணவர்களில் தனித் தன்மையை, தோற்றப் பொலிவை வளப்படுத்துதல், தாங்கள் வாழும் சமுதாயச் சுற்றுப்புறச் சூழ்நிலைகளைப் பற்றி மாணவர்கள் நன்கு தெரிந்து கொள்ளச் செய்தல், சமுதாய நலனில் தங்களுக்கும் பொறுப்பு உள்ளது என்ற உணர்வினை மாணவர்களிடையே வளர்த்தல் ஆகியவையேஇத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். தேசியச் சேவைத் திட்டத் தொண்டர்கள் பிணிக்கும் அழுக்குக்கும் எதிராக இளைஞர்கள் (Youth against dirt and disease), 'பஞ்சத்திற்கு எதிராக இளைஞர்கள்' (Youth against Famine) ஆகிய சிறப்பு இயக்கங்களில் பாராட்டத்தக்க பணியாற்றி இருக்கிறார்கள்.

பழங்குடி மக்களிலும், தாழ்த்தப்பட்ட மக்களிலும் உள்ள திறமையான மாணவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்தோடு, அவர்கள் பொறியியல் துறையிலும் சரி, மற்றத் துறைகளிலும் சரி, உயர் கல்வி மேற்கொள்வதற்காகப் படிப்பு உதவித் தொகை அளிக்கவும் இந்திய அரசு ஒரு திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த வாய்ப்புகளை அலுவல்களில் ஈடுபட்டுள்ள பழங்குடி இனத்தவரும், தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் கூடப் பயன்படுத்திக் கொள்வதற்கும் ஊக்குவிக்கப்படுகிறது.

மண்டல மொழிகளில், கல்லூரி நிலை வரைக்கும் மத்திய அரசின் நிதி உதவியைக் கொண்டே நூல்களை வெளியிடுவது மற்றொரு முக்கியத் திட்டமாகும். இதற்கு ஒரு கோடி ரூபாய் உச்ச வரம்பிற்குள் நூறு சதவிகிதம் நிதி உதவியை மத்திய அரசே கொடுத்து விடுகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ், இதுகாறும் 700 தலைப்புகளில் நூல்களை வெளியிட்டிருக்கிறது, தமிழக அரசு. அதற்காக ரூ. 64 இலட்சம் அளவுக்கு மத்திய உதவியை அது பெற்றிருக்கிறது. ஆயினும் மாணவர்களுக்கு மாபெரும் நன்மை அளிக்கும் வகையில் மத்திய அரசு மேற்கொண்ட இன்னொரு முக்கியமான நடவடிக்கை — மலிவான விலைகளில் பாடநூல்களையும், நோட்டுப் புத்தகங்களையும் உற்பத்தி செய்வதற்காகச் சலுகை விலைகளில் காகிதங்களை ஒதுக்கீடு செய்தது ஆகும். 1974—75-ஆம் ஆண்டு தொடக்கம் முதல் ரூபாய் 4 கோடி மதிப்புள்ள 16,246 டன் காகிதங்களை நமது மாநிலத்திற்கு இந்திய அரசு தந்துள்ளது. அதன் விளைவாகப் பாட நூல்கள், நோட்டுப் புத்தகங்கள் ஆகியவற்றின் விலைகள் கணிசமாக இறங்கியிருக்கின்றன.

மாணவர்களுக்குக் குறைந்த விலைகளில் புத்தகங்களையும், நோட்டுப் புத்தகங்களையும் வழங்குதல், விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்குத் தேவையான இன்றியமையாப் பண்டங்களை அளித்தல்—பல்கலைக் கழக நிதிக் குழுவின் உதவி பெறுகின்ற வாய்ப்புள்ள கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் புத்தக வங்கிகள் (Book Banks) வளர்ச்சிக்கு ஆக்கமளித்தல்—ஆகியவை நமது பிரதமர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள இருபது அம்சத் திட்டத்தின் முக்கியமான கூறுகள் ஆகும்.

தொழில் நுணுக்கக் கல்விக்காகவும் மாநில அரசுக்குக் கணிசமான நிதி உதவியை இந்திய அரசு தந்து வருகிறது. திருச்சிராப்பள்ளி, மண்டலப் பொறியியல் கல்லூரி—மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து நடத்தும் ஒரு கூட்டு முயற்சியாகும். அதற்காகும் செலவில் ஐம்பதுசதவிகிதத்தை மத்திய அரசே ஏற்றுக் கொள்கிறது. 1974—75-இல் இந்த மண்டலப் பொறியியல் கல்லூரிக் கென்று மத்திய அரசு ரூபாய் 12 இலட்சம் மானியமாக வழங்கியது. இந்தக் கல்லூரியில் பட்டப் படிப்புக்கு மேற்பட்ட முதுநிலைக் கல்விக்கு (Post-Graduate Course) ஆகிய செலவையும், தொடரா (Non-recurring) செலவு முழுவதையும் மத்திய அரசே ஏற்றுக் கொள்கிறது.

சமையற்கலை தொழில் நுட்பக் கல்லூரி (Institute of Catering Technology) என்னும் நிறுவனத்தைப் பொறுத்தமட்டில் தொடராச் செலவு முழுவதையும், தொடரும் செலவில் 50 சதவிகிதத்தையும் மத்திய அரசே ஏற்கின்றது.

'இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னலஜி' மற்றும் 'டெக்னிகல் டீச்சர்ஸ் ட்ரெயினிங் இன்ஸ்டிடியூட் (Indian Institute of Technology and Technical Teachers Training Institute) ஆகிய நிறுவனங்கள் மத்திய அரசின் முழு நிதியைக் கொண்டே நடைபெறுகின்றன.

பொறியியல் கல்லூரிகளில் பட்டப் படிப்புக்கு மேலே முதுநிலைக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மத்திய அரசு தாராளமானமுறையில் பயிற்சி உதவித் தொகை (Stipend) வழங்குகிறது.

மதுரை மாவட்ட, காந்தி கிராமத்தில் உள்ள கிராமியக் கல்வி நிலையமும் (Rural Institute) கோயம்புத்தூர் மாவட்டம், பெரிய நாயக்கன் பாளையத்தில் உள்ள கிராமப் புறக் கல்விநிலையமும் இந்திய அரசிடமிருந்து கணிசமான உதவியைப் பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவற்றையன்றி, சமஸ்கிருதக் கல்வியை வளர்க்கும் பொருட்டு தாங்களே முன் வந்து பணியாற்றும் சமஸ்கிருத அமைப்புகள், குரு குலங்கள், பாடசாலைகள் ஆகியவற்றுக்கும் தாராளமான நிதியுதவியை இந்திய அரசு அளித்த வண்ணம் இருக்கிறது.

தலைசிறந்த கலைத் துறை வல்லுநர்கள், இலக்கிய வித்தகர்கள் ஆகியோருக்கு மானியத் தொகைகளையும் இந்திய அரசு தந்தவண்ணம் இருக்கிறது. இந்தத் திட்டங்களின் மூலம், மிகுந்த ஏழ்மையான நிலையில் உள்ள—மாத வருவாய் ரூ. 150-க்கு மேற்படாத புகழ் மிக்க கலைத் துறை வல்லுநர்களுக்கும், இலக்கிய வித்தகர்களுக்கும் மாதந்தோறும் ரூ. 50 முதல் ரூ. 150 வரை ஓய்வூதியமாக மானியம்வழங்கப்படுகிறது. அதே போன்று வறுமை வாய்ப்பட்ட தலைசிறந்த சமஸ்கிருத அறிஞர்களுக்கும் ஆண்டுக்கு ரூ. 1,800 வரை மானியம் கொடுக்கப்படுகிறது.

இதிலிருந்து, தமிழ்நாட்டின் கல்வி, கலாசார வளர்ச்சிக்கு, மத்திய அரசிடமிருந்து தாராளமாக நிதியுதவி கிடைக்கிறது என்பது தெளிவாகிறது.

இந்தியக் கல்வி முறையில் ஏற்பட்டுள்ள சாதனைகள்!

இந்தியக் கல்வி முறை, உலகக் கல்வித்துறையில், இரண்டாவது இடம் வகிக்கிறது. நாட்டில் உள்ள சுமார் 8 இலட்சம் கல்வி நிறுவனங்கள், சுமார் 10 கோடிப் பேருக்குக் கல்வி புகட்டும் பணியில் ஈடுபட்டுள்ளன. இந்தியக் கல்வி முறை, கடந்த பத்தாண்டுகளில் படிப்படியாக மேம்பாடு அடைந்து வந்திருக்கிறது. தற்போது நாட்டில் ஒவ்வொரு நூறு பேருக்கும் 16 பேர், பள்ளி மாணவர்களாகவோ, கல்லூரி மாணவர்களாகவோ இருக்கிறார்கள்.

இந்தியக் கல்வி முறை, வாழ்க்கைத் தத்துவத்தைப் பொருள் படைத்ததாக ஆக்கியிருக்கிறது; தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு வழி வகுத்திருக்கிறது; பலதரப்பட்ட மாபெரும் நிருவாக அமைப்பை நடத்திச் செல்ல உதவியிருக்கிறது; எல்லாவற்றுக்கும் மேலாக, பயிற்றுவிக்கப்பட்ட உயர்தர மனித சக்தியைப் பெருமளவில் உருவாக்கியிருக்கிறது. இந்த வகையில் பாரதம், உலகில் மூன்றாவது இடத்தை வகிக்கிறது.

கல்விக்கு இடையூறு விளைவிக்கும் குறைபாடுகளைக் கண்டு பிடிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் பயனாகவே, இந்தச் சாதனை சாத்தியமாயிற்று. கல்வி ஆணைக்குழு 1964-ஆம் ஆண்டு மேற்கொண்ட இந்தப்பணி, 1966-ஆம் ஆண்டு முடிவடைந்தது. இதனையடுத்து, தேசிய கல்விக் கொள்கை குறித்து அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானம், கல்வித்துறையின் எதிர்கால வளர்ச்சிக்கு வலுவான அடிப்படையை அமைத்துக் கொடுத்தது.

நாட்டில், ஆதார, இடைநிலை, இரண்டாம் நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 1966-ஆம் ஆண்டில் 4 இலட்சத்து 94 ஆயிரத்து 339 ஆக இருந்தது, தற்போது 6 இலட்சத்து 50 ஆயிரமாக பெருகியிருக்கிறது. கல்லூரிகளின் எண்ணிக்கை 2,550-லிருந்து 4,440-ஆகவும், பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை 64-லிருந்து 101-ஆகவும் அதிகரித்தது. இவைதவிர, 9 நிறுவனங்கள் பல்கலைக் கழக அந்தஸ்தில் உள்ளவை. 9 நிறுவனங்கள் தேசிய முக்கியத்துவம் பெற்றவை. ஆதாரப்பள்ளியிலிருந்து, பல்கலைக்கழகம்வரை, கல்வி நிறுவனங்களில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை 5 கோடியே 71 இலட்சத்திலிருந்து, 10 கோடியாக உயர்ந்தது. ஆக, நமது நாட்டின் மாணவர்கள் தொகை, சில நாடுகளின் மொத்த மக்கள் தொகையையும்விட அதிகமாகும்.

உயர்கல்வி நிலையில், மாணவர்களின் தொகை, மும்மடங்கு பெருகியது. மாணவர்கள் தாங்கள் பயில்வதற்குத் தெரிந்தெடுக்கும் பாடங்களும் மாறின. அறிவியல் பாடங்களைவிட வாணிபம், மற்றும் சட்டபாடங்களைத் தெரிந்தெடுக்கும் மாணவர்கள் அதிகமாக இருந்தனர். வாணிபப் பாடங்களைத் தெரிந்தெடுக்கும் மாணவர்களின் தொகை, 1970-71-ஆம் ஆண்டில் 2.5 இலட்சமாக இருந்தது. தற்போது 4.5 இலட்சமாகவும்; சட்ட வகுப்புக்களைத் தெரிந்தெடுக்கும் மாணவர்களின் தொகை 70 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சமாகவும் உயர்ந்தது, ஆனால், அறிவியல் பாட மாணவர்களின் எண்ணிக்கை 1971-72-ஆம் ஆண்டில் 5 இலட்சமாக இருந்தது, தற்போது 4 இலட்சத்து 70 ஆயிரமாகக் குறைந்திருக்கிறது.

இவ்வாறு கல்வி பயிலும் மாணவர்களின் தொகை பெருகியிருக்கும் நிலையில், தேசீய பொருளாதாரம் சீராக இல்லாதிருப்பினும் கல்வியின் தரத்தை மேம்படுத்துவது மிகவும் அவசியமாகியிருக்கிறது.

1975-76-ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி கல்வித்துறைக்கு ஒரு கோடியே 46 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. நடப்பு நிதியாண்டில் (1976-77) கல்வித் துறைக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு, ஒரு கோடியே 69 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பது, கல்வித்துறையின் வளர்ச்சிக்கான நல்ல அறிகுறியாகும்.

பங்களா தேசத்திலிருந்து அகதிகள் இந்தியா வந்து குவிந்தது, பாகிஸ்தானுடன் போர், கிளர்ச்சிகளும் போராட்டங்களும் மிகுந்த அரசியல் நிலவரம் மோசமான பருவநிலைகள் போன்றவை காரணமாக, கடந்த 4 ஆண்டுகளும் சிரமங்களும் கடுமை

யான பிரயாணங்களும் மிகுந்த காலமாக இருந்தது, விவசாயம், பாசனம், மின்சாரம், தொழில் முதலிய இன்றியமையாத் துறைகளின் வளர்ச்சியில் பெரிதும் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் மிகுந்திருந்தது. இத்தனை இடையூறுகளுக்கும் இடையே கல்வித்துறையை தீவிரமாக சீர்திருத்தியமைப்பதிலும் கவனம் செலுத்தப்பட்டது. கல்வி ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும், தேசிய கல்விக்கொள்கை குறித்த அரசாங்கத் தீர்மானத்தையும் செயல்படுத்துவது, இச்சீர்திருத்தப் பணியின் அடிப்படை நடவடிக்கைகளாக அமைந்தன. மத்திய கல்வி ஆலோசனை வாரியம் நடத்திய விவாதங்களில் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்பட வேண்டிய விரிவானதொரு திட்டம் உருவாகியது.

(1) கல்வி நிறுவனங்களின் மூலம் அல்லாத கல்வித் திட்டங்களை பெருமளவில் அபிவிருத்தி செய்வது; (2) ஆரம்பக் கல்வியில் தேக்கத்தையும், விரயத்தையும் நீக்கி, எல்லாவற்றுக்கும் ஏற்றதாக்குவது; (3) 10 ஆண்டு, இரண்டாண்டு, மூன்றாண்டுக் காலம் கொண்ட புதிய கல்வி முறையைப் பின்பற்றுவது; (4) ஒன்று முதல் 10 வரையுள்ள வகுப்புக்களில், வேலை அனுபவம் அளிப்பது; (5) உயர் செகண்டரி நிலையில், பாடங்களைப் பல்வகைப் படுத்தி மாணவர்களுக்கு தொழில் தகுதி உண்டாக்குவது; (6) உயர் கல்வி நிலையில், மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதைக் கட்டுப்படுத்துவது; (7) நன்கு திட்டமிடப்பட்ட கல்வி உபகாரச் சம்பளத் திட்டத்தின்மூலம், மாணவர்களின் திறமையை வளர்ப்பது; (8) எல்லாத்துறைகளிலும் ஆராய்ச்சியைப்பெருக்குவது; (9) கல்வியின் எல்லா நிலைகளிலும், கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது ஆகியவற்றுக்கு இந்த விரிவான திட்டம் வகை செய்கிறது.

ஆரம்பக் கல்வி

நாட்டில் 6 முதல் 11 வயது வரை உள்ள குழந்தைகளில் 95 சதவிகிதத்தினருக்கு தற்போது அவர்களுடைய இல்லங்களுக்கு வெகு அருகிலேயே (சுமார் 1.5 கிலோமீட்டர் தூரத்திற்குள்) பள்ளிகள் அமைந்திருப்பது, ஆரம்பக் கல்வித் துறையில் நிகழ்த்தப்பட்டுள்ள மாபெரும் சாதனையாகும். மூன்றாவது கல்வி ஆய்வின் அடிப்படையில், ஒவ்வொரு குழந்தைக்கும் ஆரம்பக் கல்வியும் இடைநிலைக் கல்வியும் வீட்டிற்கு மிக அருகில் கிடைக்கும் விதத்தில் ஆரம்பப் பள்ளிகளையும் இடைநிலைப் பள்ளிகளையும் திறக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. பள்ளிப் பிராயமுள்ள குழந்தைகளில், (சில மாநிலங்களில் 5 வயது; மற்ற மாநிலங்களில் 6 வயது) மூன்றில் இரண்டு பங்கிற்கும் மேற்பட்டவர்கள், பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். பெரும்பாலும், தாழ்த்தப்பட்ட பிரிவினரைச் சேர்ந்த குழந்தைகளே, பள்ளிகளுக்குச் செல்லாமல் இருக்கிறார்கள்.

குழந்தைகளின் கல்வி பயிலும் காலம் விரயமாவது, பெரும் பிரச்சினையாக இருக்கிறது. முதல் வகுப்பில் சேர்க்கப்படும் ஒவ்வொரு 100 குழந்தைகளிலும் 38 பேரே ஐந்தாவது வகுப்பையும், சுமார் 25 பேரே எட்டாவது வகுப்பையும் அடைகிறார்கள். பெரும்பாலும் 9 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள்தான், வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்திற்குள்ளாகி, பள்ளிகளிலிருந்து விலகுகிறார்கள். இவ்வாறு பள்ளிகளில் குழந்தைகள் சேர்க்கப்படாமலிருக்கும் பிரச்சினையையும் குழந்தைகளின் படிப்பு இடையிலேயே நிறுத்தப்படும் பிரச்சினையையும் சமாளிக்கும் பொருட்டு குழந்தைகளைப் பெருமளவில் பள்ளிகளில் சேர்ப்பதற்கும், பகுதி நேர போதனைக்கு வகை செய்யும் பெரும் திட்டமொன்றுக்கும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. மாநில அரசுகளும் இந்த வகையில் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

பள்ளிகளில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக 1971-72-ஆம் ஆண்டிலிருந்து 1973-74-ஆம் ஆண்டுவரை மத்திய அரசு ஆதரவுத்திட்டமொன்று கொண்டு வரப்பட்டது. 80 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்துவது, 80 ஆயிரத்துக்கு மேற்பட்ட வகுப்பறைகளைக் கட்டுவது, 500-க்கு மேற்பட்ட மேற்பார்வை அதிகாரிகளை வேலைக்கு அமர்த்துவது, 1200-க்கு மேற்பட்ட பள்ளிகளில் வேலை அனுபவ முறையைக் கொண்டு வருவது, ஏழைக் குழந்தைகளுக்கும், தேவையுள்ள குழந்தைகளுக்கும் மதிய உணவு, இலவச பாடப்புத்தகங்கள், எழுதுகோல் மற்றும் நோட்டுப் புத்தகங்களை அளிப்பதற்கான ஊக்க நடவடிக்கைகளை மேற்கொள்வது ஆகியவற்றுக்காக மத்திய அரசு உதவியாக 64 கோடி ரூபாய் அளிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் பயனாக, முதல் வகுப்பிலிருந்து 5-ஆம் வகுப்புவரை சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை, 1966-ஆம் ஆண்டுவரை ஐந்து கோடியே 4 இலட்சமாக இருந்தது. 1974-75-ஆம் ஆண்டில் 6 கோடியே 83 இலட்சமாக அதிகரித்தது. இதே காலத்தில், ஆறாவது முதல் எட்டாவது வகுப்பு வரை சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையும் ஒரு கோடியே 5 இலட்சத்திலிருந்து ஒரு கோடியே 62 இலட்சமாக அதிகரித்தது.

இரண்டாம் நிலைக் கல்வி (செகண்டரி கல்வி)

பள்ளி மற்றும் கல்லூரிப் படிப்பின் காலம் 10 ஆண்டு, இரண்டாண்டு, மூன்றாண்டு கால படிப்பைக் கொண்ட புதிய முறையாக தற்போது சீர்திருத்தப்பட்டு வருகிறது. இப்புதிய முறையின் பயன்களாவன:

(1) இப்புதிய முறை, பல்கலைக் கழகங்களுக்கு, உயர் திறன் படைத்த மாணவர்களை உருவாக்கிக் கொடுக்கும்; இதன் பயனாக, பல்கலைக்கழக ஆனர்ஸ் வகுப்புக்களின் தரம், சர்வதேசத் தரத்திற்கு உயரும்.

(2) உயர் செகண்டரி முறையில், மாணவர்கள் வேலையை நாடும் வயது 13 அல்லது 14 ஆக இருப்பது, 15 அல்லது 16 ஆக ஒத்திபோட உதவும்,

(3) முழு அளவில் பயிலத்தக்க தொழில் வகுப்புக்களை நடத்த உதவும்; இதனால் உயர் கல்வியின் பளு குறையும். இத்தகைய வகுப்புக்களின் பொருட்டு பல்கலை கழகங்களுக்குச் செல்லும் மாணவர்கள் இனி தொழில் வகுப்புக்களில் சேர முடியும்.

(4) இரண்டாம்நிலைக் (செகண்டரி) கல்வியில், 10 ஆண்டுகளுக்கு பொதுக் கல்வி கற்பதன் மூலம் மாணவர்களுக்கு அறிவியலிலும், வேலை அனுபவத்திலும் சமூகக் கல்வியிலும் போதிய அடிப்படை அறிவு கிடைக்கும்.

(5) நாடு முழுவதிலும் விரிவாகவும் ஒரே சீராகவும் கல்வி முறை அமைவதால், ஒரு கல்வி நிறுவனத்திலிருந்து இன்னொரு கல்வி நிறுவனம் சென்று சிரமமில்லாமல் கல்வி பயிலவும், கல்வி ஒருமைப்பாடு வளரவும், கல்வித்தரம் உயரவும் வழியேற்படுகிறது.

ஐந்தாவது திட்டகாலத்தில், இந்தியா முழுவதிலும், இப்புதிய கல்விமுறையைக் கொண்டு வர வேண்டும் என்று 'ஏபிசீ' பரிந்துரைக்கிறது. ஆந்திரப் பிரதேசம், கேரளம், கர்நாடகம், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 12 ஆண்டு பள்ளிக் கல்விமுறை கொண்டு வரப்பட்டிருக்கிறது. அஸ்ஸாம், ஜம்மு-கஷ்மீர், மேற்கு வங்காளம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்கள், திருத்தியமைக்கப்பட்ட இரண்டாம் நிலைக் (செகண்டரி) கல்வி முறையைக் கொண்டு வந்துள்ளன. உயர் செகண்டரி நிலையில் இரண்டாண்டு வகுப்பை ஏற்படுத்த, அம்மாநிலங்கள் திட்டமிட்டு வருகின்றன. பீஹார், குஜராத், மத்தியப் பிரதேசம், நாகாலாந்து, தமிழ்நாடு, இமாசலப் பிரதேசம், மணிப்பூர், திரிபுரா, இராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் புதிய கல்விமுறையை ஏற்றுக் கொண்டு, அது சம்பந்தப்பட்ட விவரங்களைத் தயாரித்து வருகின்றன. தில்லி நிர்வாகமும் மத்திய இரண்டாம் நிலைக் (செகண்டரி) கல்வி வாரியமும் புதிய கல்விமுறையை சென்ற ஆண்டு மே மாதத்தில் கொண்டு வந்தன.

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு புதிய கல்விமுறை யோசனையை ஏற்றுக் கொண்டு, அதைச் செயல்படுத்துவதற்கு வசதியாக, எல்லாப் புகுமுக வகுப்புக்களையும், இடைநிலை (இண்டர்மீடியட்) வகுப்புக்களையும் பள்ளிகளுக்கு மாற்றுமாறும், மூன்றாண்டு ஹானர்ஸ்வகுப்புக்கள் சம்பந்தமான திட்டங்கள் குறித்து யோசனைகள் தெரிவிக்குமாறும், பல்கலைக்கழகங்களுக்கு ஆலோசனை கூறியிருக்கிறது. உயர் செகண்டரி நிலையில், பல்வகைப் படுத்துவதும், தொழில் வகுப்புக்களை நடத்துவதும் புதிய கல்வி முறை சம்பந்தப்பட்ட முக்கிய திட்டமாகும். இரண்டாம் நிலை (செகண்டரி) கல்வியும், பெருமளவிற்கு விரிவடைந்திருக்கிறது. 9-வது, 10-வது, 11-வது வகுப்புக்களில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை 50 இலட்சமாக இருந்தது, 1974-75-ஆம் ஆண்டில், 80 இல்ட்சமாக உயர்ந்தது.

தரத்திற்கு உரம்

அதே சமயத்தில், பள்ளிக் கல்வியின் தரத்தை உயர்த்தவும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்களின் சேவைப் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு, 1973-ம் ஆண்டு டில்லி பள்ளிக் கல்விச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தை பல மாநில அரசுகள் ஒரு மாதிரிச் சட்டமாக ஏற்றுக் கொண்டுள்ளன.

அட்டைப்பட விளக்கம்

" இன்னறுங்கனிச் சோலைகள் வைத்தல்
இனியநீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னர் உள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் "

என்று அமரகவி பாரதியார் கூறியதற்கு ஏற்பத் தமிழ் நாடு அரசு, ஏழை எளிய கிராமக் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்தி வருகிறது என்பதை இவ்விதழ் அட்டைப்படம் விளக்குகிறது.

---

410 துவக்கப் பள்ளிக் கட்டடங்களுக்கு

ரூ. 54 இலட்சம்

1976—77 கல்வியாண்டில் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு முழுதும் 410 துவக்கப் பள்ளிக் கட்டடங்களை அமைப்பதற்கு ரூ. 54 இலட்சம், தமிழ்நாடு அரசு செலவு செய்ய முடிவெடுத்துள்ளது.

மாவட்ட வாரியாக ஒதுக்கீடு விவரம் :

மாவட்டம்	ரூபாய் [இலட்சத்தில்]	கட்டடம்
வடஆர்க்காடு	4.84	37
தென் ஆர்க்காடு	7.49	61
செங்கற்பட்டு	4.81	36
கோயம்புத்தூர்	3.75	27
தர்மபுரி	7.50	53
மதுரை	3.85	28
நீலகிரி	2.36	15
இராமநாதபுரம்	6.51	51
சேலம்	3.05	22
தஞ்சாவூர்	2.97	29
திருச்சி	3.55	26
திருநெல்வேலி	2.74	20
புதுக்கோட்டை	0.58	5
	54.00	410

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தின் உதவியுடன் இப்பிரிவு அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. நாட்டில் பின் தங்கிய பகுதிகளில் உள்ள சுமார் 2,400 கிராமங்களில் டெலிவிஷன் கல்வி ஒலிபரப்புக்களுக்காக விண்வெளி செயற்கைக்கோள் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

பள்ளிக்கூடக் கட்டத்தில், தேர்வு சீர்திருத்தத் திட்டமொன்றும். நிறைவேற்றப்பட்டு வருகிறது. மாணவர்களின் உண்மைத் திறனை மதிப்பிடுவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மாவட்ட அளவில் கல்வி அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கும் பெரிய திட்டமொன்றை, தேசிய கல்வியை திட்டமிடுவோர் மற்றும் நிர்வகிப்போருக்கான தேசிய ஊழியர் கல்லூரி மேற்கொண்டிருக்கிறது.

வேலை அனுபவம்

வேலை அனுபவத்தை, பாடத்திட்டத்தின் முக்கிய பகுதியாகச் சேர்க்க முயற்சி செய்யப்பட்டு வருகிறது. இதன் பயனாக, சமூகத்திற்குப் பயனுள்ள ஆக்கபூர்வமான பணிகளில், மாணவர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள், இயன்ற விடங்களில் எல்லாம் அவ்விடங்களைச் சார்ந்த கைத்தொழில்களில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

வேலை அனுபவம், பாடத்திட்டச் சீர்திருத்தத்தின் மூலாதாரப் பகுதியாகும். பள்ளிக்கூடக் கட்டத்தில், பாடத் திட்டம் முழுவதையும் நவீன முறையில் மாற்றியமைக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதன் பயனாக ஆங்காங்குள்ள சுற்றுப்புறச் சூழ்நிலைக்கும், அபிவிருத்தித் திட்டங்களுக்கும் நெருங்கியதாகக் கல்வி அமையும்.

உயர் கல்வி

உயர் கல்வியானது, ஒருபுறம் தேசிய வளர்ச்சிக்கும், மறுபுறம் பள்ளி மேம்பாட்டிற்கும் அடிப்படையாக விளங்குகிறது. ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்ட இரண்டு முக்கிய திட்டங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

'முழுநேர கல்வி போதனை நிறுவனங்களில் மட்டும், மாணவர்கள் சேர்ப்பிக்கப்படுவதை முறைப்படுத்த முயற்சிக்கப்பட்டிருக்கிறது. புதிய கல்வி நிறுவனங்களை சரியான இடத்தில் அமைப்பது, புதிய கல்லூரிகளையும், பல்கலைக்கழகங்களையும் ஏற்படுத்துவதில் கட்டுப்பாடு, கல்வி நிறுவனங்களை இணைப்பதில் கடும் நிபந்தனைகளை செயல்படுத்துவது ஆகிய விரிவான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இவற்றின் பயன்கள், ஊக்கமளிப்பவையாக உள்ளன. புகுமுக வகுப்பு, இடைநிலை வகுப்புக்கள் நீங்கலாக, உயர்கல்வி வகுப்புக்களில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. 1969-70-ம் ஆண்டில் 17 இலட்சத்து 90 ஆயிரமாக இருந்தது, 1973-74-ம் ஆண்டில் 22 இலட்சத்து 30 ஆயிரமாக உயர்ந்தது. புகுமுக வகுப்பு, இடைநிலை வகுப்புக்கள் ஆகியவற்றையும் சேர்த்தால் அதேகாலத்தில் மாணவர்களின் எண்ணிக்கை 28 இலட்சத்திலிருந்து 41 இலட்சமாக அதிகரித்திருக்கிறது. ஆனால், இதே காலத்தில் அதிகரிப்பு விகிதம் 1969-70 ஆம் ஆண்டில் 14.5 சதவிகிதமாகவும், 1970-71-ல் 9.5 சதவிகிதமாகவும், 1971-72-ல் 5.7 சதவிகிதமாகவும், 1972-73-ல் 5 சதவிகிதமாகவும், 1973-74-ல் 3 சதவிகிதமாகவும் படிப்படியாக குறைந்து வந்தது. எனினும், பட்டமேற்படிப்பு கட்டத்தில் மாணவர்கள் சேரும் எண்ணிக்கை, ஆண்டொன்றுக்கு 11 சதவிகிதம் வீதம் அதிகரித்து வந்தது. இது வரவேற்கத்தக்கதே. ஏனெனில், பட்ட மேற்படிப்புத் துறையின் திட்டமிட்ட விரிவினை ஆணைக்குழுவின் முக்கிய பரிந்துரைகளில் ஒன்றாகும்.

மாணவர்கள். சேர்ப்பிக்கப்படுவதை முறைப்படுத்துவதன் மூலம், எளிய மக்கள் அல்லது பின்தங்கிய பகுதிகள் பாதிக்கப்படாமல் இருப்பதில் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்கு அளிக்கப்படும் படிப்பு உதவித் தொகைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டிருப்பதன் காரணமாக, அம்மக்கள் உயர் கல்வி கற்கும் வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். பகுதி நேரக் கல்வி பயில்வது, சுயமாக கல்வி கற்பது, தபால் முறை கல்வி பயில்வது போன்று கல்வி நிறுவனங்களின் வாயிலாக அல்லாமல் உயர் கல்விகற்பதற்கு முழு ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது. 11 பல்கலைக்கழகங்கள், தபால்முறை கல்விக்கு ஏற்பாடு செய்துள்ளன. தபால் முறைக் கல்வி வகுப்புக்களில், சுமார் 50,000 மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள். ஒவ்வொருமண்டலத்திலும் ஒரு பல்கலைக்கழகத்திலாவது பல்வேறு பாடங்களில் தபால்முறை கல்விக்கு வசதி செய்யவேண்டுமென்பது திட்டமாகும். நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள மாணவர்களுக்கும் தபால்முறை கல்வியை கற்பிக்கக்கூடிய தேசிய மக்கள் பல்கலைக்கழகமொன்றை அமைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

தனிப்பட்ட மாணவர்களும் பல்கலைக்கழகத் தேர்வுகளை எழுத அனுமதிக்கப்பட்டு வருகிறார்கள். ஏற்கெனவே, சுமார் 50 பல்கலைக்கழகங்கள், ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களில் பல்கலைக்கழகத் தேர்வுகளுக்கு தனிப்பட்ட மாணவர்களை அனுமதித்துள்ளன. தற்போது சுமார் 1,50,000 மாணவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். இந்த வாய்ப்பை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(நன்றி: பத்திரிகைத் தகவல் அலுவலகம், சென்னை.)

கல்வி அறிவு பெற்றோர்!

1961-ல் தமிழகத்தில் கல்வியறிவு பெற்றோர் 100-க்கு 31.4 ஆக இருந்தனர். 1971-ல் இது 39.4 ஆக உயர்ந்துள்ளது.

அனைத்திந்தியாவிலும் கல்வியறிவு பெற்றோர் எண்ணிக்கையில் தமிழகம் இரண்டாவது இடத்தை வகித்து வருகிறது. மராட்டியம் மூன்றாவது இடத்தை வகித்து வருகிறது.

1961-ல் 29.8 ஆக இருந்த மராட்டிய சதவிகிதம் 1971 இல் 39.2 ஆகக் கூடியுள்ளது.

இமாசலப் பிரதேசம் இந்தக்கால அளவில் நல்ல வளர்ச்சியை அடைந்துள்ளது. முதலிடம் கேரளத்திற்குப் போகிறது.

கல்வியறிவு பெற்றோரின் அனைத்திந்திய சராசரி 29.4 சதவிகிதமாகும். இந்தச் சராசரியைத் தாண்டியுள்ள மாநிலங்கள் கேரளம், மேற்கு வங்கம், தமிழ்நாடு, திரிபுரா, பஞ்சாப், கர்நாடகம், மராட்டியம், மேகாலயம், மணிப்புரி, இமாசலப் பிரதேசம், குஜராத் ஆகியனவாகும்.

நில நீர் எடுத்து நீர் வளம் பெருக்குவோம்!

—சா. பஞ்சநதம்
தலைமைப் பொறியாளர்,
நிலநீர்ப் பிரிவு,
பொதுப் பணித்துறை,

மனித வாழ்க்கைக்கு நீர் இன்றியமையாதது. இது குறித்தே வள்ளுவரும் நீரின்றி அமையாது உலகு என்கிறார். 'மாரி வறங்கூறில் மன்னுயிரில்லை என்கிறது மணிமேகலை. நீரின் அவசியம் நம் மக்களுக்கு அதிலும் குறிப்பாக சென்னை வாழ் மக்களுக்கு நன்கு தெரியும்.

சென்ற ஆண்டு இதே கோடைக் காலத்தில் சென்னை மாநகரம் தண்ணீர் இன்றித் தத்தளித்ததை நாம் அறிவோம். சென்னை நகரத்தையே காலி செய்து மக்களை வெளியேற்ற வேண்டிவருமே என்கிற நிலைமை. ஏற்பட்டது. இன்று நாளொன்றுக்கு 45 மில்லியன் காலன் வழங்கி வருகின்ற சென்னை மாநகராட்சி அன்று இரண்டு நாளைக்கு ஒரு முறை அதுவும் 30 மிலியன் காலனே வழங்கி வர முடிந்தது. மேலும் நிலைமையைச் சமாளிக்க நகரமெங்கும் தண்ணீர்த்தொட்டிகள் அமைத்து லாரிகள் மூலம் நீர் வழங்க வேண்டியும் வந்தது. இந்த ஏற்பாட்டினால்தான் அன்று சென்னை நகரம் தண்ணீர்த்தட்டுப்பாட்டினைச் சமாளிக்க முடிந்தது. இவ்விரண்டு ஏற்பாட்டிற்கும் மூல காரணமாய், தண்ணீரை வழங்கி சென்னை நகரை வறட்சி என்ற கோர அரக்கனின் பிடியினின்று மீட்க உதவியது நிலநீர்த் துறையின் குறிப்பிடத் தக்க சாதனைகளின் ஒன்றாகும். சென்னை நகரில் அன்று இரண்டு நாட்களுக்கு ஒருமுறை வழங்கப் பெற்ற 30 மில்லியன் காலன் தண்ணீரை தாமரைப்பாக்கம், பஞ்செட்டிப் பகுதிகளிலிருந்து நாளொன்றுக்கு 15 மில்லியன் காலன். என்ற அளவில் சென்னை மாநகராட்சிக்கு இத்துறை வழங்கியது. தவிரவும் மாநகராட்சி லாரிகளுக்கு வேண்டியநீர் வழங்க, கீழ்ப்பாக்கம் நீர் வழங்கு அமைப்பிற்கு அருகில் ஆழ் குழாய்க் கிணறுகள் அமைத்து அவற்றின் மூலம் நாளொன்றுக்கு ஒரு மில்லியன் காலன் தண்ணீர் எடுக்க வழிவகை செய்து கொடுத்ததும் நிலநீர்த்துறையே. இவை தவிர மாநகரின் பல பகுதிகளில் ஆழ் குழாய்க் கிணறுகள் மாநகராட்சிக்கு அமைத்துத் தந்து தண்ணீர் தட்டுப்பாட்டைத் தவிர்க்கவும் இத்துறை உதவியிருக்கிறது. குடிநீர் வடிகால் வாரியத்தினால் திருவான்மியூர் பகுதியிலிருந்து தரப்பட்ட நாளொன்றுக்கு ஒரு மில்லியன் காலன் நிலநீரும், தண்ணீர்த்தட்டுப்பாட்டைத் தவிர்க்க ஓரளவுக்கு உதவியது. 1969-ம் ஆண்டு இதுபோன்ற வறட்சி நிலைமை ஏற்பட்ட போதும் இத்துறை ஏறத்தாழ இரண்டு மாதத்திற்குக் காணக்கூடிய நிலநீரை வழங்கி நிலைமையைச் சமாளிக்க உதவியுள்ளது.



சென்னை மாநகரில் மட்டுமின்றி தமிழ்நாட்டின் ஏனைய மாவட்டங்களிலும் இத்துறை வறட்சி நிவாரணப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பலவகையிலும் உதவிகளைச் செய்திருக்கிறது. இன்றும் செய்து வருகிறது. நிலநீர் ஆய்வின் போது இத்துறையினால் அமைக்கப் பெற்ற குழாய்க் கிணறுகள் தமிழகக் குடிநீர் வாரியத்திடம் குடிநீருக்குப் பயன்படுத்திக் கொள்வதற்காக ஒப்படைக்கப் பெற்றன. இதனால் பல கிராமங்கள் தண்ணீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க முடிந்தது. மேலும் மாவட்ட ஆட்சியாளர்களின் வேண்டுகோளிற்கிணங்க மாவட்டங்களில் உள்ள துளையிடும் பொறிகள் வறட்சி நிவாரப்பணியில் குழாய்க் கிணறுகள் அமைப்பதில், ஈடுபடுத்தப்பெற்றன. சென்ற 3 மாதங்களில் மட்டும் இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் 24 கிராமங்களில் இத்துறையினரால் குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பெற்றுள்ளன.

நீரின் அவசியத்தை நன்கு உணர்ந்த நம் மதிப்பிற்குரிய பாரதப் பிரதமர் அவர்கள் நீர்ப் பாசனப் பெருக்கத்திற்கு வழி காணும் வகையில் தனது 20 அம்சத் திட்டத்தில் 7-வது அம்சமாக புதிதாக 50 லட்சம் எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி செய்து தரவும், நிலநீரை மேலும் எடுத்துப் பயன்படுத்தவும் நாடு தழுவிய திட்டம் வகுத்துத் தந்துள்ளார்கள். நிலநீரை வெளிக்கொணர்ந்து பயன்படுத்துவது பல்வகை உற்பத்திப் பெருக்கத்திற்கும் அதன் வழி அத்தியாவசியப் பொருள்களின் விலை இறக்கத்திற்கும் உறுதுணையாய் இருக்குமென்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஆற்று நீரை எவ்வளவு பயன்படுத்த முடியுமோ அவ்வளவு பயன்படுத்தி வருகிறோம். இருந்தும் இன்னும் நமது தண்ணீர்த் தேவை தீரவில்லை. இந்நிலையில் நிச்சயமான ஆதாரமாக இருக்கக்கூடிய நீர்நிலை ஒன்று அவசியம் தேவைப்படுகிறது. ''நீரருகே சேர்ந்த நிலமுமாய்'' என்கிறாள் ஔவை மூதாட்டி. நிலத்தருகே கிடைக்கும் நீர் நிலநீர் அன்றோ! இதுகுறித்தே வள்ளுவரும் ''இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும் வல்லரணும் நாட்டிற்கு உருபு'' என்கிறார். இருபுனல் என்று அவர் குறிப்பிடுவது தரைமேல் நீரையும் நிலநீரையுமே ஆகும். பொதுவாக நீர்த்தேக்கங்கள் முழுவதிலும் தேக்க முடிந்த நீரைக் காட்டிலும் மிகப் பெரிய நீர்த்தேக்கம் தரைக்கடியில் உள்ளது.

நிலநீரை அதிக அளவில் பயன்படுத்த விழையும் முன்னர் தமிழ்நாட்டில் நிலநீர் எந்த அளவில் கிடைக்கும், எந்த அளவிற்குத் தற்போது பயன்படுத்தப் பெற்று வருகிறது என்று தெரிந்து கொள்வது அவசியமாகும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மொத்தப் பரப்பில் 73 சதவீதம் மலையும் மலைசார்ந்த கற்பாறைப் பகுதிகளுமாகும். எஞ்சிய 27 சதவீதம் மணலும் களியும் மாறி மாறி அமையப்பெற்ற படிவப்பாறை அமைப்புகளாகும். கற்பாறை போன்ற கடினப்பாறை அமைப்புகளில் சிதைவுகள், வெடிப்புகள் மற்றும் இடுக்குகள் மூலமே நிலநீர் பெற வாய்ப்புள்ளது. அப்படிப்பெறும் நீரின் அளவும் குறைவானதே. இந்த வெடிப்புகள் ஆழம் செல்லச்செல்லக் குறைந்து காணப்படுமாகையால் அதிக ஆழம் சென்றால் அதிக நீர் கிடைக்கும் என்று எண்ணுவது தவறாகும். படிவப்பாறைப் பகுதிகளில் மணற்படிவம் நிறைந்த இடங்களில் நிலநீர் மிகுதியாகக்கிடைக்க வாய்ப்பிருக்கிறது. படிவப்பாறை அமைப்புகளிலும் அதிக ஆழம் செல்லச் செல்லப் படிவங்கள் அழுந்தி இருக்கமாக இருக்குமாதலால் ஒரு சில குறிப்பிட்ட இடங்களைத் தவிர மற்றைய பகுதிகளில் பொதுவாக அதிக ஆழத்தில் அதிகம் நீர் கிடைக்கும் என்று நம்புவதும் சரியன்று. மேலும் அதிக ஆழமான குழாய்க் கிணறுகள் அமைக்கச் செலவும் அதிகமாவதோடு ஜலநீரின் தரமும் குறைய வாய்ப்பிருக்கிறது. பெய்யும் மழை அளவு, நிலத்தில் நீரின் வடி திறன், நிலத்தினுள் நீர் உட்புகுந் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் தமிழ்நாட்டின் நிலநீர்வளம் ஏறத்தாழ 120 இலட்சம் ஏக்கர் அடிகள் என்று கணக்கிடப் பெற்றிருக்கிறது. ஒரு ஏக்கர் அடி என்பது ஒரு ஏக்கர் பரப்பில் ஒரு அடி உயரத்திற்கு நிற்கும் அளவைக் குறிப்பதாகும். இது இந்தியாவின் மொத்த நிலநீர் வளத்தில் இருபதில் ஒரு பங்காகும். இதில் 90 இலட்சம்ஏக்கர் அடிகள் நீரை நாம் 12 இலட்சம் கிணறுகள், மூலம் பயன்படுத்தி வருகிறோம். 12 இலட்சம் கிணறுகளில் 7.5 இலட்சம் கிணறுகள் மின்னிணைப்புப் பெற்றுள்ளன. மின்னிணைப்புச் செய்வதில் தமிழ்நாடே இன்னும் இந்தியாவில் முதலிடம் வகித்து வருகிறது. எஞ்சியுள்ள 30 இலட்சம் ஏக்கர் அடி நீர் எந்தெந்தப் பகுதிகளில் எந்த அளவிற்கு இருக்கிறது, அதனை எந்த வகையில் பயன்படுத்தலாம் என்று கண்டறிவது இத்துறையில் தலையாய பணியாகும். நிலநீரைப் பயன்படுத்துவதில் நாம் பலவகையில் செயல்பட வேண்டியுள்ளது. ஒன்று, நிலநீர் இன்னும் கிடைக்கக்கூடிய பகுதிகளில் வாய்ப்பான இடங்களைத் தேர்ந்தெடுத்து நிலநீரை எடுத்து நீர்ப்பாசனம் மற்றும் பல்வகைத் தேவைகட்குப் பயன்படுத்துவது, இரண்டாவது, நிலநீர் அதிகமாக எடுக்கப்பெற்று நீர் மட்டம் இறங்கி வருகிற கோவை போன்ற பகுதிகளில் நிலநீர் இறைப்பினைக் கட்டுப்படுத்தி மேலும் நீர் மட்டம் இறங்காதிருப்பதற்குரிய நடவடிக்கை எடுப்பது. இந்தப் பகுதிகளில் நிலநீர் நிரப்பலுக்கு வழி இருக்கிறதா என்று காண்பது. கடற்கரை ஒட்டிய பகுதிகளிலும் நிலநீர் அதிகமாக எடுக்கப்பெற்றுக் கடல்நீர் உட்புக வாய்ப்பிருப்பதால் அப்பகுதிகளிலும் ஆய்வு செய்து கடல்நீர் நுழைவினைக் கண்காணித்து ஆவன செய்வது.

மேற்கண்ட முறையான விஞ்ஞான ரீதியிலான ஆய்வின் மூலம் கிடைக்கும் நீரின் அள்வு, தரம், தொடர்ந்து எத்துணை காலம் நிலநீர் கிடைக்கும் என்பன போன்றவற்றை அறிய நிலநீர்த்துறை இதுவரை ஆற்றியுள்ள செயல்கள் பின்வருமாறு, சென்னை அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் நிலநீர் வளம் எவ்வளவு என்று வரையறுத்து அந்த நீரை சென்னை அதன் சுற்றுப்புறமுள்ள தொழில்களுக்கு, பங்கிட்டுக் கொடுத்து வருகிறது. சென்னை அதன் சுற்றுப்புறப் பகுதியில் குறிப்பிடத்தக்க நிலநீர் அமைப்புகள், தாமரைப்பாக்கம், பஞ்செட்டி, மீஞ்சூர் பகுதிகளில் உள்ளன. பஞ்செட்டி மீஞ்சூர் பகுதிகளில் நாளொன்றுக்கு 16.5 மில்லியன் காலன்களும், தாமரைப்பாக்கம் பகுதியில் நாளொன்றுக்கு 11 மில்லியன் காலன்களும் நிலநீர் கிடைக்கிறது. இவற்றிலிருந்து தண்ணீர் பெறுகிற தொழிலகங்களில் குறிப்பிடத்தக்கவை சென்னை எண்ணெய் சுத்திகரிப்புச் சாலை (Madras Reflneries Limited) தென்னக ரெயில்வே, இரயில்வே இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை, எண்ணூர் அனல் மின் திட்டம், நாக்பால் பெட்ரோ கெமிகல்ஸ், இந்திய எண்ணெய்க் கழகம், சென்னை உர உப்புத் தொழிற்சாலை (Madras Fertilizers Ltd.), தென்னிந்திய கார்பானிக் நிறுவனம், சென்னை பால்வள நிறுவனம் ஆகியவையாகும்.

நீர் ஊற்றின் திறன் கணிக்கப்படுகிறது.



பாலாறு வடி நிலத்தைச் சார்ந்த பொய்கை நல்லூர் பகுதியிலிருந்து நாளொன்றுக்கு ஒரு மில்லியன் காலன் ஜலநீர் கல்பாக்கம் சென்னை அணு மின் நிலையத்திற்கு வழங்கப்பெற்று வருகிறது. தேவையை அனுசரித்து நாளொன்றுக்கு 6.2 மில்லியன் காலன் வரை இந்தப் பகுதியில் நிலநீர் எடுக்க வாய்ப்பிருக்கிறது. இந்த இரு திட்டங்களினால் தமிழக அரசுக்கு ஆண்டுதோறும் ரூ. 42 லட்சம் வருவாய் கிடைத்து வருகிறது.

நெய்வேலியை ஒட்டிய பண்ருட்டி பகுதியில் நாளொன்று 45 மில்லியன் காலன் நிலநீர் எடுக்க வாய்ப்பிருக்கிறது. காவிரி வடி நிலப் பகுதியில் தஞ்சை மாவட்டத்தில் நாளொன்றுக்கு 1200 மில்லியன் காலன் நிலநீர் கிடைக்க வாய்ப்பிருக்கிறது என்றும் கணக்கிடப்பெற்றுள்ளது.

நிலநீர் ஆய்விற்கு உதவும் வகையில் மேற்கண்ட பகுதிகள் விமான மூலம் புகைப்படம் எடுக்கப்பெற்றுள்ளன. இப்புகைப் படங்களின் மூலம் தஞ்சை மாவட்டத்தின் கடற்கரைப் படிவங்களைக் காணவும், இப்படிவங்கள் அமைந்த திருத்துறைப் பூண்டி, முத்துப்பேட்டை, வேதாரண்யம் போன்ற பகுதிகளை உப்புநீர்ப்பகுதிகளாக ஒதுக்கவும் முடிந்தது. காவிரிப் பகுதியில் அமைக்கப்படக்கூடிய கிணறுகளின் எண்ணிக்கைகளும், ஒரு கிணற்றிற்கும் மற்றதிற்கும் இடையே இருக்க வேண்டிய தூரங்களும் வரையறுத்துக் கொடுக்கப் பெற்றுள்ளன. தஞ்சை மாவட்ட நீர்ப்படத் தொகுப்பும் (Water Atlas) தயாரிக்கப் பெற்றிருக்கிறது. இதுபோன்ற நீர்ப்படத் தொகுப்புகள் மற்ற மாவட்டங்களுக்கும் தயாரிக்கப் பெற்று வருகின்றன.

தஞ்சை மாவட்டம் கீழ்வேளூர் என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள தானியங்கிக் குழாய்க் கிணறு.

நிலநீர்த்துறையின் ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு அனைத்து நாடுகள் வளர்ச்சிச் சங்கம் (I.D.A.) வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம் (A.R.C.) ஆகிய இரண்டு நிறுவனங்களின் நிதி உதவியுடன் 44 கோடி ரூபாய் அளவிற்குச் சிறுபாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பெற்று வருகின்றன.

கிராம மின் வசதிக் கழகத்தில் உதவிபெறும் 40,000-க்கு மேற்பட்ட நீரேற்றுப் பொறிகளுக்கு சம்பந்தப்பட்டுள்ள மின் வாரியத்தைச் சேர்ந்த 65 திட்டங்களின் மூலம் சான்றிதழ்கள் அளிக்கப் பெற்றுள்ளன.

மேலும் நிலநீர் வளம் குறித்து ஏனைய அரசுத் துறையினரிடமிருந்தும் அரசு சார்ந்த நிறுவனங்களிடமிருந்தும் வருகிற வேண்டுகோள்கள் ஆய்வு செய்யப்பெற்று, பரிந்துரைகள் வழங்கப்பெற்று வருகின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை அகதிகளுக்கான நிலக்குடியேற்றத் திட்டங்கள், இறைவைப் பாசனக் கூட்டுறவுத் திட்டங்கள், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டங்களாகும். நமது பாரதப் பிரதமரால் தொடங்கி வைக்கப்பட்ட கிராம மறுமலர்ச்சித் திட்டத்திற்காகச் செங்கல்பட்டு மாவட்டத்தில் சோமங்கலம் பகுதி கிராமங்களுக்கும், மதுரை மாவட்டத்திலுள்ள ஐயம்பாளையம் கிராமங்களுக்கும் கிணறுகள் அமைத்துப் பாசன வசதியைப் பெருக்கிட இத்துறை அனுமதி வழங்கியுள்ளது.

கிணற்றுகளிடையே குறிப்பிட்ட இடைவெளி இல்லையேல், ஒரு கிணறு இறைக்கப் பெறும்போது மற்ற கிணறுகளிலும் நீர் மட்டம் இறங்குகிறது. இதனால் பல ஏழை விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். இதனைத் தவிர்க்க ஆய்வுசெய்து, பெறுகிற பகுதிகள் அனைத்திலும் கிணறுகளுக்கு இடையே இருக்க வேண்டிய இடைவெளியை இத்துறை வரையறுத்துக் கொடுத்திருக்கிறது.

இத்துறையில் ஆய்விற்கு ஐ. நா. வைச் சேர்ந்த உணவு—வேளாண்மைத்துறையைச் சார்ந்த அயல் நாட்டு நிபுணர்கள், நிலநீரியல், நீரியல், புகைப்படப் புவியியல் ஆகிய துறைகளில் ஆலோசகர்களாய் இருந்து உதவியிருக்கிறார்கள். இவர்கள் உதவியுடன் செயல்படுத்தப் பெற்ற ஆய்வில், பொன்னியாறு நீர்வடி பகுதி ஆய்வு குறிப்பிடத்தக்கதாகும். தற்பொழுதும் அயல் நாட்டு புகைப்படப் புவியியல் வல்லுநர் ஒருவர் இத்துறையின் ஆய்வில் உதவி வருகிறார். அவர் சிறப்பாக எடுத்துக் கொண்டு ஆய்வு செய்து வருகிற பகுதி பாலாறு வடிநிலப் பகுதியாகும். புகைப்படப் புவியியல் ஆராய்ச்சியில் தற்பொழுது செயற்கோள் நிழற் படங்களையும் (Satellite Imageries). அவற்றின் உதவியால் தயாரிக்கப் பெற்ற கம்ப்யூட்டர் மின் நாடாக்களையும் உபயோகப்படுத்தி வருகிறோம். இவை நிலநீர் ஆய்விற்கு அனுகூலமான பாறை அமைப்புகளை அதிலும் குறிப்பாக மண்ணில்

புதைந்துள்ள பழைய ஆற்றோட்டங்கள், நிலவெடிப்பு ஏற்றத் தாழ்வுகள் முதலியவற்றைக் கண்டு பிடிக்கவும், நில உபயோகம் முதலியவற்றை அறியவும் பெரிதும் உதவி வருகின்றன.

செயற்கோள் நிழற் படங்களின் உதவியால் பாலாற்றில் இரண்டு பழைய போக்குகள் கண்டு பிடிக்கப் பெற்றிருக்கின்றன. அவற்றில் ஒன்று பெரும் புலிப்பாக்கத்திலிருந்து திருவள்ளூர் வழியாக, புலிக்காட்டு ஏரி வரை செல்கிறது. இந்தப் போக்கில்தான் சென்னையில் தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்கும் தாமரைப்பாக்கம், பஞ்செட்டி, மீஞ்சூர் நிலநீர் நிலைகள் அமைந்துள்ளன. மற்றொரு பழைய பாலாற்றின் போக்கு செய்யாற்றிலிருந்து கழிவெளி வரை செல்கிறது.

இப்பகுதியில் நிலநீர் வளம் ஆய்வு செய்யப்பெற்று வருகிறது.

தமிழ்நாட்டில் நிலநீர் ஆய்விற்காக, பெருந்திட்டம் ஒன்று 11.77 கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப் பெற்று பாரத அரசால் கொள்கையளவில் ஒப்புக் கொள்ளப்பெற்றிருக்கிறது.

நாட்டின் எந்த வளத்தினையும் பயன்படுத்துவதற்கு முன் அந்த வளத்தின் அளவு, அதனைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பலன்கள் ஆகியவற்றை அறிதல் அவசியமாகும். ஆகவேதான் இத்துறை தமிழ்நாட்டின் நிலநீர் வளத்தினைக் கணிப்பதுடன் ஆற்றுநீர், ஏரி நீர் ஆகியவற்றுடன் நிலநீரினை ஒருங்கிணைத்துச் சிக்கனமாகவும் பயன்தரத் தக்க வகையிலும் பயன்படுத்தும் வழி முறைகளையும் ஆய்வு செய்து வருகிறது. இத்தகைய முதன்மையான பணி, நமது அரசின் 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தில் சேர்க்கப் பெற்று மேலும் விரிவடைய விருப்பது மகிழ்ச்சிக்குரியதொன்றாகும்.

நிலநீர் எடுத்து நாட்டின் நீர்ப் பசி போக்கும் சீரிய பணியில் நம்மை ஈடுபடுத்திக் கொண்டு நாட்டின் பொருளாதாரவளர்ச்சியில் நம் பங்கினைச் செய்ய உறுதி கொள்வோம். வாழிய நம் நாடு, வெல்க நம் முயற்சி.

(நன்றி: சென்னை வானொலி நிலையம்)



ஆர்யபட்டாவின் முதலாவது புத்தகத் தொகுதி

இந்தியாவின் முதலாவது செயற்கைக் கோளாகிய ஆர்யபட்டா, வானவெளியில் ஓராண்டுக்காலத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளதைக் குறிக்கும் வகையில், மத்திய தகவல், ஒலிபரப்புத் துறை அமைச்சகத்தைச் சேர்ந்த புத்தக வெளியீட்டுப் பிரிவு ''விண்வெளியில் இந்தியா'' என்னும் புத்தகம் ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்தப் புத்தகத்தை மத்திய தகவல், ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு வித்தியா சரண் சுக்லா குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமதிடம் வழங்கினார்.

புத்தகத்தைப் பெற்றுக் கொண்டு குடியரசுத் தலைவர் பேசுகையில், இந்தப் புத்தகத் தொகுதி இந்தியாவில் வட்டார மொழிகளில் மொழி பெயர்க்கப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார். ''கடந்த இருபது ஆண்டுக் காலத்தில் விண்வெளித் தொழில் நுட்பம், பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது; மிக உயர்ந்த அறிவியல் விஞ்ஞானமாக அது வளர்ந்துவிட்டது'' என்று அவர் சொன்னார். எளிமையான, தெளிவான நடையில் விண்வெளி விஞ்ஞானத்தின் பல்வேறு அம்சங்களையும் விவரித்துள்ளதற்காக திரு. மோகன் சுந்தரராஜனைக் குடியரசுத் தலைவர் பாராட்டினார். இதனால் சாதாரண மனிதர் கூட, விண்வெளித் தொழில் நுட்பத்தில் இந்தியா அடைந்துள்ள முன்னேற்றத்தை எளிதில் புரிந்து கொள்ள முடியும்'' என்றார் அவர்.

விஞ்ஞானத் துறை எழுத்தாளரும் மத்திய தகவல் சேவையின் உறுப்பினரும் ஆன திரு. மோகன் சுந்தரராஜனால் எழுதப்பட்ட இந்தப் புத்தகம் ஜவஹர்லால் நேருவின் நினைவுக்குக் காணிக்கையாக்கப்பட்டுள்ளது. அபிவிருத்திக்கான வானவெளித் தொழில் நுட்பத்தின் புதிய கருத்துக்களில் சிறப்பான திறமை பெறுவதில் நாட்டின் இளைஞர், பெண்கள் ஆகியோரின் தன்னிறைவு உணர்வை இப்புத்தகம் விரிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

இந்திய வானவெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் டாக்டர் எஸ். தாவண் 'பாராட்டத்தகுந்த முயற்சி' என்று இப்புத்தகத்தில் எழுதிய தமது முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். 'இந்தியாவின் வானவெளி நடவடிக்கைகளுக்கு இப்புத்தகத் தொகுதி ஒரு வழி காட்டியாக இருக்கும்' என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். அவரது நம்பிக்கை பலன் நல்கும் என்பதில் ஐயமில்லை.

நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய நுட்பங்கள்!

பரிந்துரைக்கப்படும் இரசாயன உர அளவு, பயிர்ப் பாதுகாப்பு முறைகள் மற்றும் உழவியல் முறைகள் ஆகியவற்றை மேற்கொள்வதின் மூலமாக, ஏக்கர் மகசூலை அதிகப்படுத்துவதற்குரிய வாய்ப்பினை, அண்மையில் புகுத்தப்பட்ட குட்டையான உருவ அமைப்பு கொண்ட உயர் விளைச்சல் தரும் நெல் இரகங்கள் ஏற்படுத்தியுள்ளன. 'ஐ. ஆர். 8', 'ஐ. ஆர். 20', 'காஞ்சி', 'பூசா-33' முதலிய குட்டையான உருவ அமைப்பு கொண்ட உயர் விளைச்சல் தரக்கூடிய புதிய இரகங்களைப் பயிரிடும்போது கீழ்க்கண்ட சில நுட்பங்களை மனதில் கொள்ள வேண்டும்.

(1) இந்த இரகங்களில் 'தூர்' அல்லது 'சிம்பு' அல்லது 'குருத்து' அல்லது 'கிளைப்பு' விடும் முளைகள், அடியில் உள்ள கணுக்களிலேயே செறிந்துள்ளன. ஆகவே, நாற்றுகள் ஆழமாக நடப்பட்டால், தூர் விடக்கூடிய முளைகள் மண்ணில் அமிழ்ந்து விடும். அதனால் தூர் கிளைப்புக் குறைந்து விடும்! எனவே, மேற்கூறிய புதிய இரகங்களை 1.5 முதல் 2 சென்டி மீட்டர் ஆழத்திற்கு மேல் அதிக ஆழத்தில் நடக் கூடாது!

(2) தூர் கிளைப்பதற்கு முன்பு, குறைந்த அளவாக ஒரு சென்டி மீட்டர் ஆழம் தண்ணீராவது வயலில் நிற்க வேண்டும். இல்லாவிட்டால், நாற்றின் அடிக் கணுக்களில் உள்ள தூர் முளைகள் காய்ந்து பயனற்றவைகளாக ஆகிவிடும்!

(3) நடவு செய்த 10 நாட்களுக்குள் பயிர்கள் நன்கு வேரூன்றி பச்சைக் கட்டி விடுவதுடன், தூர் கிளைப்புத் துவங்கிவிடும். அச் சமயத்தில் பயிர்களைச் சுற்றியுள்ள மண்ணைக் கிளறி விடுதல், அதிகமான தூர் கிளைப்பைத் தூண்டிவிடும்!

(4) மிக அதிகமான அளவுக்குத் தூர் கிளைத்தால், அறுவடையின் பொழுது, மணிகளில் பால் பிடித்தல், கதிர் வெளிவருதல், நன்கு முற்றிவிடுதல் போன்றவை, பல்வேறு நிலைகளில் இருக்கும். இது, இறுதியாக ஏக்கரின் மொத்த மகசூலைக் குறைக்கும்! எனவே, அளவுக்கு அதிகமாகத் தூர் கிளைப்பதும் விரும்பத் தக்கதல்ல! அதிகப்படியான தூர்கள் உருவாவதைப் பயிர்களுக்கு மண் அணைப்பதன் மூலம் தடுத்திடலாம்!

போதிய அளவு நாற்றுகள்

நெல் சாகுபடியில் அடுத்து மனதில் கொள்ள வேண்டிய முக்கியமான நுட்பம், போதிய எண்ணிக்கை நாற்றுகளை ஒரு குறிப்பிட்ட பரப்பளவில் அதாவது ஒரு சதுர மீட்டரில் நடுவதாகும். வரிசை நடவு செய்வதின் மூலம், ஒரு சதுர மீட்டர் பரப்பளவிற்குத் தேவையான நாற்றுகளை நட இயலும்.

ஒரு குறிப்பிட்ட பரப்பளவிற்குத் தேவையான நாற்றுகளின் எண்ணிக்கையை முடிவு செய்வது எப்படி?

தூர் கிளைப்பதை மண்ணைக் கிளறி விடுவது அல்லது மண் அணைத்தல் மூலமாக கட்டுப்படுத்தலாம். இதன் மூலம் ஒரு குறிப்பிட்ட பரப்பளவில் போதிய எண்ணிக்கையுள்ள தூர்கள் இருக்கச் செய்யலாம். எனவே, ஒரு சதுர மீட்டர் பரப்பளவில் நடவு செய்ய வேண்டிய நாற்றுகளின் எண்ணிக்கையை அறிந்து கொள்ள வேண்டியது உழவர் பெருமக்களின் தலையாய கடமையாகும்.

குறுகிய காலக் குறுவை நெல் ரகங்களை நடுவதற்கு வரிசைக்கு வரிசை 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) இடைவெளியும், வரிசையில் தூருக்கு தூர் 10 சென்டி மீட்டர் (4 அங்குலம்) இடைவெளியும் விட வேண்டும். ஆகவே ஒரு சதுர மீட்டரில் (100 சென்டி மீட்டர் × 100 சென்டி மீட்டர்) —அதாவது 10,000 சதுர சென்டி மீட்டர் பரப்

பளவில்— மேற்கூறிய இடைவெளியில் (15 செ.மி. × 10 செ.மீ.) நடவு செய்தால், 67 இடங்களில் (10,000/150) நடவு செய்ய வேண்டும். ஒவ்வொரு இடத்திலும் 3 நாற்றுக்கள் வீதம் வைத்து நட்டால், ஒரு சதுர மீட்டர் பரப்பளவிற்கு 201 நாற்றுகள் (67 × 3) நடவேண்டும். இந்த அளவில் நாற்று நட எவ்வளவு விதைகளை நாற்றுவிட வேண்டும் என்பதையும் அறிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

எவ்வளவு விதை விதைக்க வேண்டும்?

100 நெல் விதைகளின் எடை 2.8 கிராம் என்று எடுத்துக்கொண்டால், 201 நாற்றுகள் தயாரிப்பதற்குத் தேவையான விதைகளின் எடை 201/100 × 2.8 =5.6 கிராம் ஆகும். எனவே, ஒரு சதுர மீட்டர் பரப்பளவில் நடுவதற்கு 5.6 கிராம் விதையை நாற்றுவிட வேண்டும். இதே அடிப்படையில் ஒரு ஏக்கர் (4,000 சதுர மீட்டர்) நடுவதற்கு 4,000 × 5.6 =22,400 கிராம் அல்லது 22.4 கிலோ விதையை நாற்றுவிட வேண்டும்.

ஆனால் பின்கண்ட காரணங்களினால் விதையின் அளவை மேலும் சற்று அதிகப்படுத்த வேண்டும்.

1. நாற்றங்கால் தயாரிப்பது சரியாக அமையாதிருக்கலாம்.

2. விதைகளின் முளைப்புத் திறன் குறைவாக இருக்கலாம்.

3. எல்லா விதைகளும் ஒரே மாதிரியாக நல்ல நாற்றுகளைக் கொடுக்காதிருக்கலாம்.

4. நாற்றுகளைப் பறிக்கும் பொழுது, வேர்கள் அறுந்துவிடுவதால், சில நாற்றுகள் சேதமாகலாம்.

ஆகவே ஒரு ஏக்கர் நடுவதற்கு 22.4 கிலோ விதையை நாற்று விடுவதற்குப் பதிலாக, 25 கிலோ விதையை நாற்றுவிடுதல் சிறந்தது.

ஒரு சதுர மீட்டருக்கு 67 தூர்கள் வீதம் நெருக்கி நட்டால், நெல்மகசூல் பெருகிடும்

போதிய அளவு தூர்கள்!

நடவு செய்த பின் தோன்றும் தூர்களும் (Tillers) போதிய அளவில் இருக்க வேண்டும். முன்பே கூறியவாறு மண்ணைக் கிளறி விடுதல் அல்லது மண் அணைத்தல் மூலமாகப் போதிய அளவு தூர்கள் தோன்றிடச் செய்யலாம்.

கதிர்கள், மணிகள் எண்ணிக்கை!

ஒரு சதுர மீட்டர் பரப்பளவில் 400 கதிர்கள் இருந்தால், அவைகள் ஒவ்வொன்றிலும் சராசரியாக 100 நெல் மணிகள் இருந்தால், ஐ.ஆர். 8 நெல் இரகத்திலிருந்து ஒரு ஏக்கரில் 4 டன்னிற்கும் அதிகமான மகசூல் எதிர்பார்க்கலாம்! ஏக்கருக்கு 4 டன்னிற்கும் மேற்பட்ட மகசூல் என்பதை உயர் விளைச்சல் என்று கருதிடலாம்!

குறுகிய கால நெல் இரகங்களுக்கு 15 செ.மீ. × 10 செ.மீ. இடைவெளி விட்டு நடவு செய்தால், ஒரு சதுர மீட்டர் பரப்பளவில் 67 இடங்களில் நடவு செய்ய வேண்டும் என்று முன்பே குறிப்பிட்டோம். எனவே, ஒரு சதுர மீட்டர் பரப்பளவில் 400 கதிர்கள் தோன்றிட, ஒவ்வொரு நெல் குத்துகளிலும் ஏறத்தாழ 6 கதிர்கள் தோன்றிடச் செய்ய வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு நெல் குத்திலும் 6 கதிர்கள் தோன்றிட வேண்டுமானால், 6 நல்ல தூர்கள் இருக்க வேண்டும்.

உயர் விளைச்சலுக்கான காரணங்கள்

நெல் சாகுபடியில் உயர் விளைச்சல் பெறுவதற்கு பின்கண்டவை காரணங்களாக உள்ளன :

1. நடப்பட்ட நாற்றுகளின் எண்ணிக்கை.

2. ஒவ்வொரு பயிரிலிருந்தும்தோன்றும் தூர்களின் எண்ணிக்கை.

3. ஒவ்வொரு பயிரிலிருந்தும் தோன்றும் பல்பிரிவுப் பூங்கொத்துக்களின் (Panicle) எண்ணிக்கை.

4. ஒவ்வொரு பூங்கொத்திலிருந்தும் தோன்றும் பூக்களின் (நெல் பூ) எண்ணிக்கை.

5. மணிகளாக முதிர்ச்சி அடையும் பூக்களின் எண்ணிக்கை.

மேற்கூறியவைகளை விரும்பும் நிலையில் அமைத்துக் கொள்ள, பின்கூறிய நிருவாக முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

உயர் விளைச்சலுக்கு உதவும் நிருவாக முறைகள்.

1. நடவு செய்த 20 நாட்களுக்குப் பிறகும், தூர் கிளைப்பது குறைவாக இருப்பின், தழைச்சத்து உரமிடுவதன் மூலமோ அல்லது பயிர்களைச் சுற்றிலும் மண்ணைக் கிளறி விடுவதன் மூலமோ, தூர் கிளைப்பதைத் தூண்டி விடலாம்.

2. ஒரு பயிரில் 10 தூர்கள் (சிம்பு அல்லது போத்து) இருந்தால், பயிர்களுக்கு இலேசாக மண் அணைப்பதன் மூலம், மேலும் தூர் கிளைப்பதைத் தடுத்துவிடலாம்.

3. தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்துவதன் மூலம் பயிர்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தலாம்.

4. விதைத்த பிறகு 70-வது நாளில் அல்லது நடவு செய்த பிறகு 45-வது நாளில் நெற் பயிரின் தண்டினைப் பிளந்துப் பரிசோதனைச் செய்து பார்த்தால், பூங்கொத்துத் தோன்றியிருப்பது தெரிய வரும்! இதுவே தழைச்சத்து உரத்தினை மேலுரமாக இடுவதற்கு ஏற்ற காலமாகும்.

இதுவரை ஏக்கர் நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பல வழி முறைகள் கூறப்பட்டிருப்பினும், எல்லா நிலைமைகளிலும் ஏக்கருக்குச் சராசரியாக 4 டன் மகசூல் பெறலாம் என்று உழவர் பெருமக்கள் முடிவு செய்துவிடக் கூடாது. கீழ்க்கண்ட நிலைமைகளில் உயர் விளைச்சல் பெற இயலாது என்பதை மனதிற் கொள்ள வேண்டும் :

உயர் விளைச்சலைக் குறைப்பவை.

1. மிகவும் மணற் பாங்கான மண், கெட்டியான அமில மண், வடிகால் வசதி குறைந்த மண் ஆகியவைகளில் உயர்ந்த மகசூல் பெறுவது எளிது அல்ல!

2. பயிரின் எந்த வளர்ச்சிப் பருவத்திலும் வெப்பம் 20 டிகிரி சென்டிகிரேடுக்குக் குறையாமலும், 38 டிகிரி சென்டிகிரேடுக்கு மிகாமலும் உள்ள பகுதிகளில் உயர் விளைச்சல் பெறுவதென்பது இயலாது!

3. மிகுந்த கோடை, குளிர் அல்லது வறட்சி நிலவும் பகுதிகளிலும் உயர் விளைச்சல் பெற முடியாது!

4. நெற்பயிருக்கு 2 சென்டிமீட்டர் உயரத்திற்கு நிலையாகத் தண்ணீர் நிற்க வேண்டும். நெல் சாகுபடியில் வெற்றி பெற வயலில் மிகுதியாகத் தண்ணீர் தேங்கி நிற்கச் செய்வதையும் அல்லது தண்ணீர் பற்றுக்குறையின் காரணமாக வயலைக் காய விடுவதும் தவிர்க்கப்பட வேண்டும்!

5. வடிகால் வசதி குறைந்த நிலங்களிலும், தண்ணீர் பாய்ச்சுவதைக் கட்டுப்படுத்த முடியாத நிலங்களிலும், உயர் விளைச்சல் பெடுறுவதற்கு வாய்ப்பு இல்லை!

6. குறைந்த அளவு உரம் அல்லது பூச்சி மருந்துகளை இடுவது உயர் விளைச்சலைக் கொடுக்காது!

7. நுண்ணூட்டங்கள் பற்றுக்குறை உள்ள நிலங்களில், அவைகளின் பற்றுக்குறையைத் தீர்க்க முயன்றாலன்றி, உற்பத்தியைப் பெருக்க மேற்கொள்ளும் மற்றெந்த முயற்சியும் வெற்றி பெறாது!

எனவே, நிலத்தின் தகுதி, இதர சுற்றுப்புறச் சூழ்நிலை ஆகியவைகளுக்கு ஏற்பவே, நாம் உயர் விளைச்சல் பெற முயற்சி செய்ய வேண்டும்.

நெல்லிற்கு உரமிடுவதில் சில முக்கிய கண்டு பிடிப்புகள்!

இரசாயன உரங்களின் விலை மிகவும் அதிகமாக உள்ள இந்நாளிலே பிலிப்பைன்ஸ் நாட்டிலே அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கில் கண்டறியப்பட்ட கீழ்க்கண்ட உண்மைகளை தமிழக உழவர் பெருமக்கள் அனைவரும் மனதில் கொள்வது பயனுடையதாகும்.

1. குறைந்த வளமுள்ள மண்ணில், அங்கக உரங்கள் (தொழு உரம் போன்றவை) மண்ணின் தரத்தை உயர்த்துவதுடன், மண் வளத்தை உயர்த்தி அதிக மகசூல் கிடைக்கச் செய்கிறது.

மேலுரத்தை ஒரே தடவையாக இடாமல் 2 அல்லது 3 தடவையாகப் பிரித்துப் போட்டால் மிகுந்திடும் மகசூல்!

2. தழைச்சத்தைப் பொருத்த மட்டில், தழை எரு, தொழு எரு, கலவை எரு (கம்போஸ்ட்) போன்ற அங்கக உரங்கள் நெல் மகசூலை அதிகப்படுத்துகின்றன.

3. வெப்ப நாடுகளில் பயறு வகைப் பயிர்களிலிருந்து பெறப்படும் தழைச்சத்து, செயற்கை இரசாயன உரங்களிலிருந்து பெறப்படும் தழைச்சத்திற்குச் சமமானதாகும்.

4. தழைச்சத்து உரங்களின் ஆதாரமான இரசாயன உரங்கள், அங்கக உரங்களை விட இது வரை வெகு எளிதில் கிடைத்து வந்ததால், பொதுவாக உழவர்கள் அங்கக உரங்களைத் தழைச்சத்தின் ஆதாரமாக விரும்பி ஏற்றுக்கொள்வதில்லை.

5. அங்கக உரங்கள் மண்ணில் நன்கு சிதைவு பெறுவிட்டால் (மக்கா விட்டால்) நெற் பயிர் நன்றாக வளராது.

6. இயற்கையாகக் கிடைக்கும் உரங்களைக் கொண்டே உயர்ந்த மகசூல் பெறமுடியும் என்ற உண்மையைப் பல ஆராய்ச்சி நிலையங்களில் உழவர்கள் உணர்ந்துள்ளனர்.

உரச் சேதம் குறைத்திடுவோம்!

உயர் விளைச்சல் தரும் நெல் இரகங்களுக்கு இடப்படும் தழைச் சத்தின் சேதத்தைக் குறைத்திடுவதற்காக மேற்கொள்ளப் பெற்ற சில உழவியல் பரிசோதனைகளுக்குப் பிறகு, கீழ்க்கண்ட பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன :

1. மண்ணின் வளத்திற்கும், நீர்ப்பாசன வசதிக்கும் ஏற்ப, தழைச்சத்து உரங்களை இரண்டு அல்லது மூன்று பாகங்களாகப் பிரித்து மேலுரமாக இடலாம்.

2. ஒவ்வொரு முறை மேலுரமிடும் பொழுதும், ஏக்கருக்கு 10 முதல் 12 கிலோ தழைச்சத்துக்கு அதிகமாகாமல் இடவேண்டும்.

3. மண்ணில் தழைச்சத்து குறைவாக இருப்பின், அடியுரத்தை அதிகப்படுத்த வேண்டும்.

4. மண்ணில் தழைச்சத்து மிகுதியான அளவில் காணப்பட்டால், மொத்தத்தில் இட வேண்டிய தழைச் சத்தினைக் குறைத்து, சிறு அளவு தழைச்சத்து உரங்களை மட்டும் இடலாம்.

5. குறைந்த அளவில் தூர் கிளைக்கும் இரகங்களுக்கு, அதிக அளவு தழைச்சத்தினை அடியுரமாக இடவேண்டும்.

6. குறுகிய கால இரகங்களுக்கு, அதிகஅளவு தழைச்சத்து உரங்களை அடியுரமாக இடுவதுடன், மேலுரமிடுவதும் அவசியமாகும்.

7. நீண்ட கால இரகங்களுக்குத் தழைச் சத்து உரத்தினை 3 முதல் 4 முறையாகப் பகிர்ந்து அளிக்கலாம்.

8. நடவு காலம், குளிர் காலத்துடன் சேர்ந்து வருமானால், தழைச்சத்தின் அளவினை அதிகப்படுத்தலாம்.



இதுவரைக் கூறிய நுட்பங்களை மனதிற் கொண்டு, அதன்படி செய்தால் குறுவைச் சாகுபடி செய்யும் உழவர் பெருமக்கள் தங்கள் குறுவை உற்பத்தியைப் பெருக்கிப் பெரும் பயன் அடையலாம் என்பது உறுதி!

மானாவாரி மகசூல் பெருக்கிட பத்துக் கட்டளைகள்!

1. புன்செய் நிலங்களில் சம உயர வரப்பு (Contour bund) அமைக்க வேண்டும்

2. மண்ணில் ஈரத்தைப் பாதுகாக்க, புன்செய் நிலங்களை நாட்டுக் கலப்பை அல்லது இலேசான இரும்புக் கலப்பையால் 2 அல்லது 3 முறை உழவேண்டும்.

3. கடைசி உழவு, சம உயர வரப்பு அமைந்துள்ளவாக்கில் (Contour) செய்யப்பட வேண்டும்.

4. புன்செய் நிலங்களில் வரப்பு அமைக்கவும், குறுக்கு வரப்பு அமைக்கவும், பார் கலப்பையைப் (Bund former) பயன்படுத்த வேண்டும்.

5. புன்செய் நிலத்தில் சமநிலைக் கோட்டு வாக்கில் அதாவது சம உயர வரப்பு அமைந்துள்ள வாக்கில் விதைக்க வேண்டும்.

6. புன்செய் நிலத்தில் தனி ஒரு பயிரைப் பயிரிடாமல், தகுந்த கலப்புப் பயிர்களைப் (Mixed crops) பயிரிட வேண்டும்.

7. புன்செய் நிலங்களில் வரிசை வரிசையாகவே விதைக்க வேண்டும். வரிசையாக விதைப்பதற்கு 'கொரு' (Gorru) எனப்படும் கருவி, விதைக் கலப்பை (Seed drill) ஆகியவைகளைப் பயன் படுத்தவேண்டும்.

8. புன்செய் நிலங்களில் களையெடுக்க 'தந்துலு' (Dantulu) எனப்படும் கருவி அல்லது 'புன்செய் நிலக் களையெடுக்கும் கருவி'யைப் (Dryland weeder) பயன்படுத்த வேண்டும்.

9. புன்செய் நிலப் பயிர்களுக்குப் பரிந்துரைக்கப்படும் அளவில் தொழு எரு, இரசாயன உரம் ஆகியவைகளை இட வேண்டும்.

10. புன்செய்ப் பயிர்களுக்கும் பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலே கூறப்பட்டுள்ள 10 கட்டளைகளையும் மேற்கொண்டு, மானாவாரி சாகுபடியை மேற்கொண்டால், மானாவாரி மகசூல் பெருகுவது திண்ணம்!

நாட்டு மாடுகளின் பால்திறனைப் பெருக்கிடுவீர்!



—டாக்டர் ஐ. எம். ராட்ரிக்ஸ்
ஆராய்ச்சி அலுவலர்,
கால்நடை மருத்துவக் கல்லூரி,
சென்னை-7.

நமது பசுக்களின் பால்திறனை பெருக்க மாடுகளின் தரமுயர்த்தும் பணி, நமது அரசின் கவனத்தை சில காலமாக பெரிதும் ஈர்த்துள்ளது. தூய பால் மற்றும் பால் பண்டங்கள் நமது உணவில் அத்தியாவசியமானதால் அவற்றின் உற்பத்தியை பெருக்குவது இன்றியமையாததாகின்றது.

குணங்களின் பாரம்பரியம்

எல்லா உயிர்களும் அந்தந்த இனத்திற்குரிய குணங்களைக் கொண்டுள்ளன. அவைகள் தம் குணங்களில் பாதியை தமது சந்ததிக்கு அளிக்கின்றன. பால் பசுக்களை வைத்திருப்போர் அவைகளின் 1. அன்றாட பாலின் அளவு 2. கறவைக் காலம், அக்காலத்தில் கிடைக்கும் மொத்தப் பாலின் அளவு, 3. கொழுப்புச் சதவிகிதம், 4. முதல் கன்று ஈனும் வயது, 5. இனப் பெருக்கத் திறமை, 6 நோய் எதிர்ப்புச் சக்தி, 7. மாறுபட்ட சூழ்நிலைகளில் அனுசரிப்பு ஆகியவற்றைக் கவனிக்க வேண்டும்.

பசுக்களைத் தேர்ந்தெடுத்தல்

பண்டைக் காலத்தில் பசுக்கள் தங்கள் கன்றுகளுக்குத் தேவையான அளவுதான் பால் தந்து வந்தன. பல்லாண்டுகளாகக் கால்நடை ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் விளைவாக தற்போதைய பசுக்கள் 15 முதல் 20 லிட்டர் வரை பால் தருகின்றன.. பால் திறன் பெற்றுள்ள மாடுகளை தேர்ந்தெடுத்ததாலும், குறைவானபால் திறனுள்ள மாடுகளை ஒதுக்கியதாலும் இது சாத்தியமாயிற்று.

தமிழ் நாட்டில்பெரும்பாலான மாடுகள் 0.5 லிட்டர் முதல் 1 லிட்டர் வரையிலான குறைந்த அளவு பால் தருவனவாகவே உள்ளன. ஆனால் அமெரிக்கா, இங்கிலாந்து, டென்மார்க் போன்ற நாடுகளில் மாடுகள் அவர்கள் தேவைக்காக உருவாக்கப்பட்டவை போல் உள்ளன. அதிக அளவு பால் தர 'பிரீசியன்' அதிக வெண்ணையுடன் கூடிய பாலுக்கு 'ஜெர்சி', பாலுடன் இறைச்சிக்கு 'பிரவுன் சுவிஸ்', பொன் நிற பால், வெண்ணைக்கு 'கோல்டன் கரன்சி' போன்றவை உதாரணங்களாகும்.

சாதாரண தமிழக விவசாயி, ஒரு மாடு தனக்கு வேண்டிய பாலையும்,நிலத்திற்குச்சாணத்தையும், தன் விவசாய வேலையையும் செய்தால் திருப்தி அடைந்து விடுகின்றார். அதனால் இந்தியாவிலுள்ள 95 சதவிகித மாடுகள் ஒரு ஈற்றுக்கு 1,000 லிட்டர் பாலும், 5 சதவிகிதம் மாடுகள் அதற்குக்கீழேயும் தருகின்றன.

பால் உற்பத்தித் திறனிலும் மற்ற குணங்களிலும்காணப்படும் பரந்த வேறுபாடுகள், அவற்றை முன்னேற்ற நமக்கு வாய்ப்பினை அளிக்கின்றன.

சில குறிப்பிடும்படியானபொருளாதார ரீதியான குணங்களில் நம் நாட்டு மாடுகளும் வெளிநாட்டு மாடுகளும் பின்கண்டவாறு வேறுபடுகின்றன.

குணங்கள்	இந்திய மாடுகள்	வெளிநாட்டு மாடுகள்
தினசரி பாலின் அளவு	½ - 1 லிட்டர்	15 லிட்டர்
கறவைக் கால மொத்தப் பாலின் அளவு	200 லிட்டர்	4,000 லிட்டர்
சராசரி கறவைக் காலம்	180 - 210 நாட்கள்	305 நாட்கள்
முதல் கன்று ஈனும் வயது	40 - 45 மாதங்கள்	24 - 30 மாதங்கள்
நோய் எதிர்ப்புச் சக்தி	நன்று	மோசம்
வெப்பம் தாங்கும் இயல்பு	நன்று	மோசம்



குணங்களில் காணப்படும் பரந்த வேறுபாடுகளால் மிக உயர்ந்த மாடுகளை தேர்ந்தெடுத்தல் சாத்தியமாகிறது. எக்குணங்களுக்காக தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை முதலில் முடிவு செய்து கொள்ள வேண்டும். மேலே குறிப்பிட்ட குணங்கள் முதல் நான்கு வெளிநாட்டு மாடுகளிலும், கடைசி இரண்டு, நமது மாடுகளிலும் உள்ளன. இக்குணங்களை தக்க இனப்பெருக்க முறைகளால் ஒருங்கிணைத்து ஒரு புதிய இனத்தையே உருவாக்க முடியும்.

இனப் பெருக்கக் கொள்கை

ஓர் உயர் இனக் காளையை மீண்டும் மீண்டும் அதன் சந்ததியுடனே இனப் பெருக்கம் செய்யும்போது, சந்ததி அக்காளையின் பாரம்பரியம் முழுதும் பெற்று விடுகின்றன. முதல் வம்சத்தில் 50 சதவிகிதமும், இரண்டாவது வம்சத்தில் 75 சதவிகிதமுமாக இது உயர்ந்துகொண்டே செல்கின்றன. இவ் வம்சங்களின் உற்பத்தித் திறனிலிருந்து எந்த அளவு வெளிநாட்டுப் பாரம்பரியம் நம் சூழ்நிலைக்கு ஒத்து வரக்கூடியது என நிர்ணயிக்கலாம். பல தரமுயர்த்தும் சோதனைகள் 50 சதவிகிதம் முதல் 75 சதவிகிதம் வரையிலான அயல் நாட்டுப் பாரம்பரியம் (Exotie blood level) நல்ல பயனைத் தருகின்றன என்பதை உறுதிப்படுத்தியுள்ளன. 62.5 சதவிகிதம் அளவு பரிந்துரைக்கப்படுகின்றது.

நாட்டினத்தை உயர்த்தும் முறைகள்

விவசாயிகள் எந்த அளவிற்கு இத்திட்டத்தினை அறிந்து, ஆர்வத்துடன் உதவுகின்றனர்கள் என்பதில் தான் இதன் வெற்றி அடங்கியுள்ளது. இதன் முதல் படியாக ஆவின அபிவிருத்திச் சங்கங்கள் துவக்கப்பட வேண்டும்.

ஆவின அபிவிருத்திச் சங்கம்

சமூகத்தில் நல்ல வளமான பசுக்களை வைத்திருப்போர் தன் ஆவினங்களின் தரத்தைப் பெருக்கும் முயற்சியுடன் இச்சங்கங்களின் கீழ் ஒன்றாக இணைதல் வேண்டும். பசுக்கள் அனைத்தும் ஆவினப் பதிவேட்டில் பதியப்பட வேண்டும். இப்பதிவேடுகள் கால்நடைத் துறையினரிடம் இருக்கும். இதனால் கால்நடைத் துறை அலுவலர்கள் பசுக்களின் இனப்பெருக்கத் திறமை, நலம், பால் உற்பத்தியைப் பதிவு செய்தல் போன்ற பணிகளைக்கவனிக்கவும், தொடர் பணிகளை ஆற்றவும் உதவும். இப்பசுக்களின் கன்று

உதவும். இப்பசுக்களின் கன்றுகளின் உற்பத்தித் திறனிலிருந்து காளைகளின் பால் தரத்தை அறியவும் முடிகின்றது.

தரமற்ற காளைகளைக் காயடித்தல்

பசுக்களை, தங்கள் சுற்றுப்புற நாட்டுக் காளையுடன்இனப்பெருக்கம் செய்வது நமது கிராமங்களில் சாதாரணமான ஒன்று. இக்காளைகள் தமது சந்ததியின் பால் திறனை குறைப்பதோடல்லாமல் முன்னேற்றத்திற்கு மிகவும் இடைஞ்சலாக உள்ளன. தரமற்ற காளைகளை காயடித்து வேலை மாடுகளாக உபயோகிப்பதன் மூலம் இது சாத்தியமாகின்றது.

செயற்கை முறைக் கருத்தரிப்பின் மூலமாக வெளிநாட்டுக் காளைகளின் விந்துவை பூரணமாக உபயோகித்தல்.

தமிழக அரசு நாட்டினத்தைத் தரமுயர்த்தும் பொருட்டு தேவையான 'ஜெர்சி' 'பிரிசியன்' 'பிரவுன் சுவிஸ்' போன்றவைகளை இறக்குமதி செய்துள்ளது. இலவச செயற்கை முறைக் கருத்தரிப்பு நிலையங்களை நிறுவியுள்ளது. தற்போது விந்துவை உறை பதம் செய்து சேமிப்பதன் மூலம்நீண்ட நாள் கழித்தும், முழுமையாகவும் உபயோகிக்க முடிகின்றது. இம்முறையினால் எய்தும் பெரும்பாலான கன்றுகள் ஒரே ஆண்டில் பருவம் அடைந்து இரு ஆண்டுகளில் கன்றை ஈன்று பால் தருகின்றன. செயற்கை முறை கருத்தரிப்பு நல்ல தரமான சந்ததியை அளிப்பதுடன், பால் உறவு நோய்கள் பரவாமலும் தடுக்கின்றது.

இனப்பெருக்க முறைகள்

இத் திட்டம் 10 முதல் 15 ஆண்டுகளில், மூன்று படிகளாக செயல் படுத்தப்படும்.

முதல் படியாக

நாட்டு மாடுகள் வெளிநாட்டு காளைகளுடன் இனப்பெருக்கம் செய்யப்படும். இவ்விரண்டுக்கும் பிறக்கும் கன்று 50 சதவிகித நாட்டு இனக் குணத்தையும், 50 சதவிகித வெளிநாட்டு இனத்தையும் கொண்டிருக்கும். அதாவது கன்று, தாய்க்கும் தந்தைக்கும் இடைப்பட்ட குணம் கொண்டு இருக்கும்.

இரண்டாம் படி

முதல் வம்ச கிடாரிகள் மீண்டும் வெளிநாட்டுக் காளைகளுடன் இனப் பெருக்கம் செய்யப்படும். இதன் கன்றுகள் 75 சதவிகிதம் வெளி நாட்டினக் குணங்களையும் 25 சதவிகிதம் நாட்டினக் குணங்களையும் பெற்றிருக்கும்.

மூன்றும் படி

மீண்டும் இரண்டாம் வம்சக் கிடாரிகளின் தரத்தை உயர்த்துவதற்குப் பதிலாக இக் கிடாரிகள் முதல் வம்சக் காளைகளுடன் சேர்க்கப்படும். இவற்றிற்குப் பிறக்கிற கன்றுகள் 62.5 சதவிகிதம் வெளிநாட்டினக் குணங்களையும், 37.5 சதம் நாட்டினக் குணங்களையும் பெற்றிருக்கும். (முதல் வம்ச மாடுகளுக்கும், இரண்டாம் வம்ச மாடுகளுக்கும் இடைப்பட்ட குணத்தை உடையது).

இதன் பின்னர், மூன்றும் வம்ச கிடாரிகளையும், காளைகளையும் அவைகளுக்குள்ளேயே இனப் பெருக்கம் செய்யப்படுகின்றது.

50 சதவிகிதத்திற்கும் 75 சதவிகிதத்திற்கும் இடைப்பட்ட வெளிநாட்டினக் குணங்களைக் கொண்ட பசுக்கள் இரு இனத்திலும் காணப்படும் நல்ல குணங்களைப் பெற்றிருக்கின்றன. அவை ஒரு கறவைக் காலத்திற்கு 2,500 முதல் 4,000 லிட்டர் பால் தருவனவாக உள்ளன. இது சாதாரண நாட்டினத்தின் உற்பத்தியைப் போல் 15 முதல் 20 மடங்கு ஆகும்.

இது போன்று, 10 இலட்சம் மாடுகள் 25,000 இலட்சம் லிட்டர் முதல் 40,000 இலட்சம் லிட்டர் பாலை உற்பத்திச் செய்து நம் நாட்டு மக்களின் அன்றாடத் தேவை முழுவதையும் பூர்த்தி செய்யும்.

கலப்பினப் பசுவும், அதனுடைய தரம் உயர்த்தப்பட்ட கன்றும் (75 சதம் ஜெர்சி 25 சதம் நாட்டினம்)



வெளிநாட்டு இனக் காளைகளைப் பயன்படுத்தி பால் உற்பத்தியைப் பெருக்கும் முறைகள்



இம்முறை வெற்றிகரமாக செயலாக்கப்பட்டால் 15 அல்லது 20 ஆண்டுகளில் தமிழகமும் பால் உற்பத்தியில் உயர்ந்து நிற்பதோடல்லாமல், வருங்கால சந்ததியினரும் நவீன மாடு வளர்ப்பு முறைகளை மேற்கொண்டமைக்காக நம்மைப் போற்றுவர்!

குறைந்த செலவில் ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளைத் தயாரிக்கும் முறை

உடல் வளர்ச்சிபெற—உணவு அவசியமாகத் தேவைப்படுகிறது. எனவே உண்ணும் உணவு நாவுக்குச் சுவை தருவதோடு மட்டுமன்றி, உடலுக்கு வலுவையும் தரும் வகையில் சத்துணவாக அமைய வேண்டும். அத்தகைய சத்துணவு விலை அதிகமானதாகவும் இருக்கக்கூடாது;

நாட்டில் உள்ள மக்கள் எல்லாரும் செல்வ வளத்திலே மிகுந்தவர்களல்ல. அதனால், அடித்தளத்து மக்களும் அடைகின்ற அளவுக்குக் குறைந்த விலையில் உணவு அமைந்தால்தான் நலம் பயக்கும்.

மகளிர் நலத்துறை, இந்த உண்மையை உணர்ந்து தனது அமைப்புகளிலும், மாதர் சங்கங்களிலும் குறைந்த விலையில் சத்துணவுப் பொருளை மிகுந்த அளவில் தயாரித்து வருகிறார்கள். மூர்த்தி சிறிது என்றாலும் கீர்த்தி பெரிது என்பது போல, பார்வைக்கு மிக எளிமையாகக் காணப்பட்டாலும், பயன் தருவதில் இவை மிகச் சிறந்தவையாகும்.

சத்துணவுகள், குறிப்பாகக் குழந்தைகளுக்கு மிகவும் தேவைப்படுகின்றன.

இவை எளிதில் ஏற்றுக் கொள்ளத் தக்கனவாகவும் எளிதில் செரிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

குழந்தைகளின் வளர்ச்சித் தேவைக்குரிய புரதப் பொருள்களும், தாதுப் பொருள்களும், வைடமின் உயிர்ச் சத்துக்களும் நிறைந்த உணவாக இருக்கவேண்டும்.

இல்லத்தில் எளிதில் உருவாக்கக் கூடியனவாகவும் உடனடித் தேவைக்குப் பயன்படும் வகையில் சேமித்து வைப்பதற்கு உகந்ததாகவும் இருத்தல் வேண்டும்.

ஏற்கெனவே வழக்கத்தில் உள்ள உணவு முறையுடன் ஒத்துப்போகுமாறு இருக்க வேண்டும்.

ஏழைகள் எளிதில் வாங்கும் வகையில் அவை விலை குறைவாகவும் இருக்க வேண்டும்.

அத்தகைய சத்துணவு வகைகளில் ஒரு சிலவற்றை இங்கே பார்ப்போம்.

கோதுமை, தமிழ்நாடு மக்களுக்கு அதிகம் பழக்கம் இல்லாதது. ஆனால், மருத்துவர்கள் 'கோதுமை' ஆகாரம்' தான் சாப்பிட வேண்டும் என்று கட்டளையிட்டவுடன் அதனை மீறுவதற்கு பயம் வந்துவிடுகிறது; எனவே, மருத்துவர் கட்டளையிடுவதற்கு முன், நாமும் அடிக்கடி கோதுமை ஆகாரத்தைச் சாப்பிட்டு வந்தால் நமக்குத்தான் நல்லது. இங்கே கோதுமை ஆகாரம் ஒன்றை கவனிப்போம்.

கோதுமைக் கஞ்சி:

காலைச் சிற்றுண்டிக்குக் கோதுமைக் கஞ்சி சாப்பிடுவது மிகவும் நன்மை தரக் கூடியதாகும்•அதன் செய்முறையைப் பார்ப்போம்:—

தேவைப்படும் பொருட்கள்

கோதுமை மாவு—85கிராம்
வெல்லம்—42 கிராம்.
உப்பு ஒரு சிட்டிகை.

செய்முறை :

வெல்லத்தை ஓர் ஆழாக்கு நீரில் போட்டுக் குழைத்துக் கொள்ள வேண்டும்; வறுத்த கோதுமை மாவை அதில் கொட்டி நன்றாகக் கலக்க வேண்டும். இரண்டு ஆழாக்கு தண்ணீரைக் கொதிக்க வைத்து அத்துடன் சிறிது உப்புச் சேர்த்துப் பிறகு, கோதுமைக் கூழைக் கலக்க வேண்டும். அந்தக் கலவையை நன்றாகக் கொதிக்க வைக்க வேண்டும். பிறகு, அதனை இறக்கி வைத்து, சிறிது ஆறவைத்து, அதன்பின் அருந்தினால் அமுதமாக இருக்கும்.

மகளிர் அரங்கம்

ஏறக்குறைய 300 கலோரிகளும் 10 கிராம் புரதச் சத்தும் கொண்ட கோதுமைக் கஞ்சி தயாரிக்க 8 காசுகள் தான் ஆகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பொட்டுக் கடலைக் கஞ்சி:

இடைவேளைச் சிற்றுண்டியாக பொட்டுக் கடலைக் கஞ்சியை உண்ணலாம்.

தேவைப்படும் பொருட்கள்

பொட்டுக்கடலை—60 கிராம்
வெல்லம்—10 கிராம்.
பசுவின்பால்—50 கிராம்
வாழைப்பழம்—25 கிராம்.

செய்முறை:

முதலில் வெல்லத்தைப் பாகாக்கிக் கொள்ள வேண்டும். பொட்டுக் கடலையை மாவாக்கி வைத்துக் கொண்டு, அதனை வெல்லப் பாகுடன் சேர்க்க வேண்டும். அவ்வாறு சேர்க்கும் போது மாவு உருண்டையாகவோ கட்டியாகவோ மாறுதபடி கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். பின்னர் வாழைப்பழத்தை அந்தக் கலவையுடன் கலக்க வேண்டும். சிறிது நேரம் கழித்துக் கலவையை அடுப்பிலிருந்து கீழ இறக்கி வைக்க வேண்டும். சிறிது ஆறிய பின் அதனை உண்ண வேண்டும். சுவையாக இருக்கும்.

சுமார் 12 காசுகள் செலவில் 319 கலோரிகளும் 15.1 கிராம் புரதச் சத்தும் கொண்ட பொட்டுக் கடலைக் கஞ்சி கிடைத்துவிடுகிறது.

கோதுமை—பருப்பு லட்டு

மாலை நேரத்தில் உணவு விடுதிக்குச் செல்பவர்கள் இனிப்புப் பொருளை வாங்கி உண்பது வாடிக்கை. மாலையில் அலுவலகத்திலிருந்து வீட்டிற்குத் திரும்பும் தங்கள் கணவன்மார்களுக்கு இனிப்புணவு வழங்கி அவர்களை வரவேற்கிறார்கள், சில



குடும்ப விளக்குகள். எப்படிப் பார்த்தாலும் மாலை நேரத்தில் இனிப்புப் பொருளை மனித மனம், இல்லை இல்லை வாய், நாடுகிறது. அத்தகைய இனிப்புப் பிரியர்களுக்கு கோதுமை—பருப்பு லட்டு மிகவும் உகந்தது. இல்லத்தரசிகள் இதனை மிகவும் குறைந்த செலவில் தயாரிக்கலாம். தயாரிப்பு விவரம்.

தேவைப்படும் பொருட்கள் :

கோதுமை மாவு—20 கிராம்
வறுத்த கடலை மாவு—15 கிராம்
கடலைப் பிண்ணாக்குத்தூள் —10 கிராம்.
வெல்லம்—25 கிராம்.

செய்முறை:

முதலில் கோதுமை மாவை வறுத்துக் கொள்ள வேண்டும். வேர்க்கடலையை வறுத்துத் தோலை நீக்கி அரை குறையாகப் பொடி செய்து கொள்ள வேண்டும். வெல்லத்தைப் பாகாகக் காய்ச்சிக் கொள்ள வேண்டும். கோதுமை மாவு, பிண்ணாக்குத் தூள், வறுத்த கடலை மாவு, வேர்க்கடலைப் பொடி ஆகியவற்றை வெல்லப் பாகில் கலக்க வேண்டும். பக்குவம் வந்தவுடன் அடுப்பை விட்டுக் கீழே இறக்கி வைக்க வேண்டும்; சில விநாடிகளுக்குப் பிறகு அதனை உருண்டை பிடிக்க வேண்டும்; இதுதான் கோதுமை—பருப்பு லட்டு. உண்ண உண்ணத் திகட்டாதது; சத்து நிறைந்தது.

பத்துக் காசு விலை மதிப்பில் 390 கலோரிகளும் 100 கிராமுக்கு 19 கிராம் புரதச் சத்தும் கொண்ட லட்டு கிடைக்கிறது. குறைந்த விலையில் நிறைந்த சத்துணவு கிடைத்துவிடுகிறது.

குறிப்பு : ஒருவருக்குத் தயாரிப்பதற்குத் தேவைப்படும் அளவுகளே இங்கு கொடுக்கப்பட்டுள்ளன. எத்தனை பேருக்குத் தயாரிக்க வேண்டுமோ, அதற்கேற்றவாறு இங்கு கொடுக்கப்பட்டுள்ள அளவுகளைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

—எஸ். எஸ்.

மகளிர் நலம் ஓங்கிட புதிய திட்டங்கள்

பொருளாதாரத்தில் பின் தங்கிய பெண்களின் நல்வாழ்வுக்காக மத்திய சமூக நலத்துறை வாரியம் புதிய திட்டங்களைத் துவக்கியுள்ளது. பால்பண்ணை, கோழிப்பண்ணை, சிறுதொழில் துறை, கைத்தறித் தொழில், கைவினைத் தொழில் ஆகியவை இத்திட்டங்களில் அடங்கும். தேவையான பெண்களுக்கு அதிகமான எண்ணிக்கையில் வேலை வாய்ப்பு அளிப்பதற்காகப் பெரும் தொழிற்சாலைகள் சிலவற்றுக்குப் புதிய துணை நிறுவனங்களை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. பெரிய அளவு நடவடிக்கைகளில் இது ஒன்றாகும். அத்தகைய துணைப் பிரிவு ஒன்று போபாலில், இந்திய தொலைபேசித் தொழிற்சாலையின் ஒத்துழைப்புடன் அண்மையில் நிறுவப்பட்டுள்ளது. இதே போன்ற பிரிவு ஒன்று டில்லியிலும் நிறுவப்பட உள்ளது. இலாபகரமான வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்கும்பொருட்டு பெண்களுக்குத் தொழிற் பயிற்சி அளிப்பதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பல்வேறு உற்பத்திப் பிரிவுகளுக்கு, அவற்றின் பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும் பொருட்டுச் சிறப்பான ஆலோசனைகளைக் கூறுவதற்குத் தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற பெண்களை இந்த வாரியம் வேலைக்கு அமர்த்துகிறது. அத்தகைய சுயசேவை நிறுவன அமைப்பாளர்களுக்குச் சில பல்கலைக்கழகங்களில் நிர்வாகப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

1975-'76-ஆம் ஆண்டில் இந்த வாரியம் நாடெங்கிலும் பரவி' யுள்ள 6,034 சுய சேவை நிறு' வனங்களுக்கும் மொத்தம் 3.33 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கியுள்ளது. இதில், பல்வேறு சமூக, பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 326 நல்வாழ்வு நிறுவனங்களுக்கு 50 இலட்ச ரூபாய் மானிய உதவியாக அளிக்கப்பட்டது. இத் திட்டங்களினால் 4,500-க்கும் மேற்பட்ட பெண்கள் பயனடைந்தனர். அவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் கிராமப்பகுதிகளைச் சேர்ந்தவர்கள். வயது முதிர்ந்த பெண்களுக்குக் குறுகிய காலக் கல்வி வகுப்புக்களை நடத்துவது வாரியத்தின் இன்னொரு முக்கிய திட்டமாகும். இத்திட்டத்தின் படி, இந்த வாரியம் 251 பல்வேறு பாட வகுப்புகளுக்கு 46 இலட்ச ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது. குறிப்பாக, கிராமப் பகுதிகளில், பல்வேறு திட்டங்களை நிர்வகிப்பதற்குப் பெண் ஊழியர்களுக்குக் குறைந்த பட்சக் கல்வித் தகுதியை அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

பெண்களுக்கு நடைமுறைக் கல்வி அளிப்பதை ஊக்குவிக்க மத்திய அரசின் சமூக நலத்துறை 50 இலட்ச ரூபாய் நிதி கேட்க உத்தேசித்துள்ளது. இத்தொகையில் 49 இலட்ச ரூபாய் பல்வேறு மாநிலங்களிலும், மீதி, மத்திய நிருவாகப் பகுதிகளிலும் செலவிடப்படும். பெண்களுக்கு நடைமுறைக் கல்வி அளிக்கும் திட்டத்தை மாநில அரசுகள், 2,800 நிலையங்களின் மூலம் செயல்படுத்தும்.

15-லிருந்து 45 வயதுவரை உள்ள பெண்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைவார்கள். சுகாதாரம், சுத்தம், சத்துணவு, வீட்டு நிர்வாகம், குழந்தைப் பராமரிப்பு, தொழிற்கல்வி போன்ற இனங்கள் பற்றி இத்தகையோர்க்குக் கற்றுத் தரப்படும்.

கோவை மாவட்டத்தில் மண்வளப்பாதுகாப்பு

—கே. எம். நாச்சப்பன்,
கோட்ட வேளாண்மைப் பொறியாளர்,
கோயம்புத்தூர்-2.

மண் அரிப்பு என்றால் என்ன?

விவசாய நிலங்களில், குறிப்பாக சரிவு நிலங்களில், அதுவும் மானாவாரி விவசாயப் பூமிகளில், ஒவ்வொரு மழையின் போதும், வெள்ளம் பூமியின் மேல் ஓடுவதும் அவ்வாறு ஓடும் நீர் மண்ணை அரித்துக் கொண்டு செந்நீராக ஓடுவதும் நாம் எல்லோரும் அறிந்ததே. சிவந்த செம்மண் பூமியில் ஒவ்வொரு மழையிலும் இவ்வாறு ஓடும் காட்சியைக் காண் வன் கவிஞனாக இருந்தால், ''முப்பத்து முக்கோடி மழைத் துளிகளுக்கும் முப்பத்து முக்கோடி மண் துகள்களுக்கும், மண் பரப்பில் மூண்ட கடும் போரில் மண் மடிந்து செங்குருதி ஆறு ஓடுகிறது'' என்று பரணி பாடுவான். இவ்வாறு பாடினால் இக்காட்சி பெரும்பாலும் கவிஞர்கள் தரும் காட்சி போல், கற்பனைக் காட்சியாகாது; இது உண்மையில் நடைபெறும் காட்சியே; சிறிதளவும் மிகையான காட்சியன்று!

மண் அரிப்பு எப்படி ஏற்படுகிறது?

ஏனெனில், செந்நீர் ஓடுவது இவ்வாறு மழைத் துளியடி தாங்காமல் மண் வடிவதால்தான். அதாவது மண்ணானது மழைத் துளிகளினடியினால், தன் இயல் பிழக்கிறது; அதனுடைய மணல், வண்டல், களி என்று கூறப்படும் முக்கியமான மூன்று அங்கங்களும் மழைத் துளியடியினால் வெட்டுண்டு சிதறி அடிக்கப்படுகின்றன. உருண்டோடும் வெள்ளத்தில் வெட்டுண்ட களியும், வண்டலும் கடத்தப்படுகின்றன; இப்படி நீரில் கடத்தப்படும் களியின் காட்சியே செங்குருதியாகும். எஞ்சிக் கிடக்கும் மணல் மண் ஆகாது. அது மடிந்த மண்தான். அதற்குத் தாவரங்களை வளர்க்கும் உயிர் இல்லை. உபயோகமற்றது. அது, மண்ணின் எலும்புக் கூடு தான்.

மண் அரிப்பினால் ஏற்படும் சேதம்:

இவ்வெலும்புக்கூடுகளும்மிகுதியான மழை வெள்ளம் ஏற்படும் பொழுது, அடித்துச் செல்லப்படுகிறது. வளமான பூமிகளின் மீது வெள்ளம் கரைகளை உடைத்துப் புகும்பொழுது மணல் என்னும் எலும்புக் கூடுகளை நிரப்பி அப் பூமிகளையும் பாழாக்கிறது; குளம் குட்டைகளை அடைந்து அவைகளையும் தூர்க்கிறது; பயனற்றதாக்கி விடுகிறது; பெரும் சேதம் விளைகிறது.

மண்வளப் பாதுகாப்பு:

இச்சேதம் குறைக்கப்பட வேண்டும் — இல்லை — நிறுத்தப்பட வேண்டும், விவசாய பூமிகளில் மண், மடியக் கூடாது; அதனுடைய உயிரான வளம் பாதுகாக்கப்பட வேண்டும்: வளம் உயர வேண்டும். இது எப்படி? இதற்கு ஒரு திட்டம் உண்டு.

இதுவே அரசின் மண்வளப் பாதுகாப்புத் திட்டம். மானாவாரிப் பூமிகளில் சரிவுப் பூமிகளில் போடப்படும் சம உயர வரப்புகளே இத்திட்டத்தின் ஆரம்பம். இவ்வரப்புகள், நிலச் சரிவுகளில் தரத்திற்கு (Slope) ஏற்பக் குறிப்பிட்ட இடைவெளிக்கு ஒன்றாக நிலத்தின் சரிவிற்குக் குறுக்கே போடப்படுகிறது. இதனால் மழை வெள்ளத்தின் ஓட்டம் தடுக்கப்படுகிறது. மழை நீர் ஆங்காங்கே நிறுத்தப்படுகிறது. நீர் நிலத்தை விட்டு உடனடியாக ஓடாமல் பூமியினுள் இறங்க அதிக வாய்ப்பு ஏற்படுகிறது. தேவைக்கு மிகுதியாகத் தேங்கும் நீர் சேதம் விளைவிக்காமல் வெளியேற, கலிங்குகள் கட்டப்படுகின்றன. இச்சம உயர வரப்புகளினால், பாதுகாக்கப்பட்ட பூமிகளின் சரிவில் மேல் இருந்து கீழ் முகமாக இல்லாமல், குறுக்கே சம உயரக் கோட்டுப் பாணியிலேயே உழுது பயிரிட்டு, மற்ற முறைகளையும் கையாண்டால், ஒவ்வொரு படைச்சாலும் மழை நீரை ஏந்திப் பிடித்துப் பயிர் போர்வையினுடைய உதவியால், மண் சிதறடிக்கப்படுவதை நிறுத்துகிறது. மழைத் துளிகளுக்கும் மண் துகள்களுக்கும் போர் ஏற்பட வாய்ப்பில்லை. அமைதி நிலவுகிறது. ஏந்தித் தாங்கிப் பிடிக்கப்பட்ட நீர் சுமுகமாக மண்ணினுள் இறங்குகிறது. பூமியின் நீர் மட்டத்தை அடைகிறது. நீர் மட்டம் உயருகிறது. கிணறுகளின் ஊற்றம் அதிகமாகிறது. இதுவே சுபிட்சத்தின் ஆரம்பம் என்று கூறினால் மிகையாகாது.

மாந்தோப்பின் மகசூல் பெருகிட சமநிலைக் கோட்டு வரப்பு உதவிடும்!

மண்வளப் பாதுகாப்பும் நில உரிமையாளர்களின் பொறுப்பும்:

ஆறினால் இது தொடர்ந்து முடிவுன்றி இயங்க, இப்படி அரசு இடும் சம உயரவரப்புகள்பேணப்பட வேண்டும். அதன் மீது ஆமணக்குப் பயிரிடலாம். கொழுக்கட்டை போன்ற புல் வளர்க்கலாம். பசுந்தாள் உரச் செடிகள் (ஐப்போமியா போன்றவைகள்)வளர்க்கலாம். அவ்வப்போது ஏற்படும் அரிப்புகளையும், உடைப்புகளையும் மூடவேண்டும். இவ்வாறு செய்தால் அது நீடித்து நிற்க வாய்ப்பேற்படுகிறது. அதுவன்றி அவ்வரப்புகளை வெட்டியெறியக் கூடாது. வரப்பையே கொஞ்சம் கொஞ்சமாக உழுது, ஒரு சில ஆண்டுகளிலேயே அது இருந்த இடம் தெரியாமல் மறையச் செய்தால், மண்ணிற்கும் மழைக்கும் மீண்டும் போர் ஏற்படும். அமைதி குலையும், மண் மடியும்.

ஆக இதைத் தவிர்க்க வேண்டும். அரசு இடும் வரப்புகளின் உயரம் குறையாமல் பேணப்பட வேண்டும். வரப்பு உயர வேண்டும்.



அதிக நீரை வெளியேற்ற உதவும் கலிங்கு!



தடுப்பு அணைகள் மண்ணரிப்பைத் தடுத்திடும்!

இத்திட்டத்திற்கு ஆகும் செலவை, முதலில் வேளாண் குடிமக்கள் (நில உரிமையாளர்கள்) ஏற்று, அல்லலுற வேண்டியதில்லை. ஏனெனில், இத்திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவினை முதலில் அரசாங்கமே ஏற்றுக் கொள்கிறது. அதிலும் மொத்தச் செலவில் 25 சதவிகிதம் பங்கை அரசாங்கம் மானியமாக அளிக்கிறது. மீதி 75 சதவிகிதப் பங்கை வேளாண் குடிமக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்தப் பங்கும், கடனாகப் பத்து ஆண்டுச் சம தவணைகளில், நில வரியுடன் வசூலிக்கப்படுவதால், ஏழை விவசாயிகளுக்கு அதிகத் தொல்லைகள் இல்லை என்று கூறலாம்.

கோவை மாவட்டத்தில், மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் ஆரம்பம் முதல் அதாவது 1951-52 முதல் இது வரை 2,48,983 ஏக்கரில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் நடைபெற்றுள்ளன. அதனால் கோவை மாவட்ட உழவர் பெருமக்களுக்குப் பெரும் பயன் கிடைத்துள்ளது.

படமும் செய்தியும்

தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் சென்னை நகரங்களின் பல் வேறு பகுதிகளை 9-5-'76 அன்று பார்வையிட்டார்.



அரசினர் கல்லூரிகளின் முதல்வர் களுக்குரிய 3 நாள் பயிற்சி முகாமை மாநிலக் கல்லூரியில் ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்ரமணியன் அவர்கள் 11.5.'76-ல் துவக்கி வைத்தார்.

இராமேஸ்வரம், மண்டபம் ஆகிய பகுதிகளைப் பார்வையிட்ட பிறகு இந்திய அரசின் வெளிவிவகாரத் துறைக் கூட்டுச் செயலாளர் திரு. சகாபுதீன் அவர்கள், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில் 19.5.'76-ல் பத்திரிகைச் செய்தி யாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவித்தார்.



ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள், பள்ளிப் பட்டு என்ற இடத்தில் உள்ள சேவா சமாஜ மாணவர் இல்லத்தில், 'நை சீமாட்டி' சிறப்புப் பள்ளியின் வெள்ளி விழாவை 10.5.'76 அன்று துவக்கி வைத்தார்



சன்னை நகருக்கு 24.5.'76-ல் வருகை ந்த ருமேனியா சோசலிஸ்ட் குடி ரசின் முதலமைச்சர் திரு. மனியா னேஸ்கு அவர்களை மீனம்பாக்கம் மான நிலையத்தில் தமிழக ஆளுநர் வர்கள் வரவேற்றார்.

தமிழகத்திற்கு வருகை தந்த இலங்கை அமைச்சர் திரு. கே பி. ரத்னயகா அவர்களுக்காக தாஜ் 'கோர மண்டல்' ஒட்டலில் 23.5.'76-ல் நடை பெற்ற அரசாங்க விருந்தில் ஆளுநர் ஆலோசகர் நினைவுச் சின்னம் வழங் கினார்.



தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் 20.5.'76-ல் அமரம்பேடு, நல்லூர், சோமங்கலம் ஆகிய கிராமங்களில் பாதயாத்திரை மேற் கொண்டார்.

இந்திய அரசின் சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் திரு. ராஜ்பகதூர் அவர்கள் 24.5.'76-ல் ஓட்டல் சோழாவில் நடைபெற்ற இந்தியாவில் ஓட்டல் நிருவாகம் என்ற பயிற்சி வகுப்பைத் துவக்கி வைத்தார்.

சென்னை நகருக்கு 22.5.'76-ல் வருகை தந்த மலேசியா பிரதம அமைச்சர் அவர்களை தமிழ்நாடு அரசின் சார்பில், தலைமைச் செயலாளர் திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் வரவேற்றார்.

541



தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனமும், இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் நிறுவனமும் சேர்ந்து இயந்திரக் கருவிகள் தயாரிக்கும் ஒரு திட்டத்திற்கான தொழில் நுட்பக் கூட்டுறவு ஒப்பந்தம் 24.5.'76-ல் தலைமைச் செயலகத்தில் கையெழுத்தாகியது. இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் நிறுவனத் தலைவர் டாக்டர் எஸ். எம். பட்டில் அவர்களும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத் தலைவர் திரு. டி. என். சேஷன். அவர்களும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகின்றனர்.

புது டில்லியில் இருந்து வெளிவரும் 'தேசீய ஒருமைப்பாடு' (**National Solidarity**) என்ற வார இதழ் நடத்திய கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற திரு. வெங்கட்டராவ், திரு. எஸ். அப்துல்காதர் ஆகியவர்களுக்கு ஜவகர்லால் நேரு தேசீய ஒருமைப்பாடு பரிசுகளை 23.5.'76-ல் தமிழக ஆளுநர் அவர்கள் வழங்கினார்.

சென்னையில் நடைபெற்ற 'நமது இந்தியா' இளைஞர் விழா மற்றும் பொருட்காட்சியின் நிறைவு விழாவில் (23.5.'76) இந்திய அரசின் விநியோகம் மற்றும் மறுவாழ்வு அமைச்சர் திரு. ராம் நிவாஸ் மிர்தா அவர்களும், இந்திய அரசின் துணை நிதி அமைச்சர் திருமதி சுசீலா ரோட்கி அவர்களும் கலந்து கொண்டனர். அவ்விழாவில், தமிழ்நாடு அரசின் செய்தி—மக்கள் தொடர்புத் துறை அரங்கிற்குச் சிறப்புப் பரிசு வழங்கப்பட்டது.



தாழையூத்து தழைக்கும்! பண்டாரக்குளம் செழிக்கும்!

கடந்த ஏப்ரல் மாதம் 21-ஆம் தேதி புதன்கிழமை அன்று, தாழையூத்து கிராமம் திருவிழாக் கோலம் பூண்டிருந்தது! தாழையூத்துக்குப் பக்கத்தில் உள்ள பண்டாரக்குளம் என்ற கிராமத்து மக்கள் மகிழ்ச்சியுடன் தாழையூத்துக் கிராமத்தில்திரண்டிருந்தனர்! அதற்குக் காரணம், கிராம ஏற்புத் திட்டத்தின் (Village Adoption Scheme) கீழ், தாழையூத்துக் கிராமத்தை இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனமும், பண்டாரக்குளம் கிராமத்தைச் சங்கர்நகர் இண்டஸ்ட்ரியல் கெமிக்கல் நிறுவனமும் ஏற்றுக்கொள்வதை யொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழாவே யாகும்.

கிராமங்களை முன்னேற்றும் பணியில் தொழில்நிறுவனங்களும் பங்கு கொள்ள வேண்டும் என்று நமது இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம் தாழையூத்து கிராமத்தை ஏற்றுக்கொண்டு, அக்கிராமத்தை எல்லா வகையிலும் முன்னேற்றிட திட்டமிட்டது. அது போலவே, சங்கர் நகர் இண்டஸ்ட்ரியல் கெமிக்கல் நிறுவனம் பண்டாரக்குளம் என்ற கிராமத்தை ஏற்றுக் கொண்டு அக்கிராமத்தை முன்னேற்றிட திட்டமிட்டது.

வரவேற்புரையின்போது இந்தியா சிமெண்ட்ஸ் நிர்வாக இயக்குநர் திரு கே. எஸ். நாராயணன் அவர்கள் குறிப்பிட்டதாவது :

"கிராமங்களை அதிகமாகக் கொண்டது நமது தேசம். நமது தேசத்தின் மக்கட் தொகையில் முக்கால் பங்குகிராமங்களில்தான் இருக்கின்றது. நமது தேசத்தின் பொருளாதார வளர்ச்சி, கிராமங்களின் முன்னேற்றத்தில்தான் இருக்கிறது என்பது எல்லோரும் ஒப்புக்கொண்ட ஒரு உண்மையாகும். நமது கிராமங்களில் பெரும்பாலானவை அடிப்படைத் தேவைகள் கூட இல்லாமல் மிகவும் பின்தங்கிய நிலையில்இருக்கின்றன. நமது கிராமங்களில் புதியதோர் எழுச்சியை உண்டாக்க வேண்டியதன் அவசியத்தை நமது மதிப்பிற்குரிய பிரதமரின் 20 அம்சத் திட்டம் வலியுறுத்துகிறது. இந்த நோக்கத்துடன் தான் தொழிலகங்கள் தங்களைச் சார்ந்திருக்கும் தொழிலாளர் நலனுக்காக—அவைகள் ஏற்கனவே மேற்கொண்டிருக்கும் பல்வேறு நலத் திட்டங்களோடு—அருகில் இருக்கும் கிராமம் ஒன்றையும் தங்களது பொறுப்பில் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இக்கருத்துக்கு தமிழகத்தில் உடனடியாக ஆதரவு அளித்த தொழிலகங்களில் சங்கர்நகர், இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனமும், இண்டஸ்ட்ரியல் கெமிக்கல்ஸ் நிறுவனமும் முக்கியமானவை. இந்தியா சிமெண்ட்ஸ், தாழையூத்துக் கிராமத்தையும், இண்டஸ்ட்ரியல் கெமிக்கல்ஸ், பண்டாரக்குளம் கிராமத்தையும் இத்திட்டத்தின் கீழ் தங்கள் பொறுப்பில் ஏற்றுக் கொள்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

"பல்வேறு துறைகளிலும் இக்கிராமங்களின் வளர்ச்சிக்கான திட்டங்களை நிறைவேற்றத் தொடங்குவதே எங்களுடைய உடனடியான வேலையாக இருக்கும். தேசிய மயமாக்கப்பட்ட சிறந்த பாங்குகளான பஞ்சாப் நேஷனல் பாங்கும், இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கும் இத்திட்டங்களுக்குத் தேவையான கடன் வசதிகளை எங்களுக்குத் தருவதாக ஒப்புக்கொண்டிருக்கின்றன.

"சங்கர் நகரிலுள்ள இந்த இரு தொழிலகங்களின் பொறுப்பில் உள்ளவர்களுடைய நிர்வாகத் திறனையும் அனுபவத்தையும் பயன்படுத்தி, இக்கிராம மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதே இக்கிராம ஏற்புத் திட்டத்தின் முக்கிய நோக்கமாக அமையும். இப்பகுதியிலுள்ள பெரும்பான்மையான மக்களுக்கு இவ்விரு தொழில் நிறுவனங்களும் ஏராளமான வேலை வாய்ப்புக்களைத் தந்திருந்தாலும், தங்களுடைய பரம்பரைத் தொழிலையே நம்பி வாழ வேண்டிய நிலையில் உள்ளவர்கள் பலர் இன்னும் இருக்கிறார்கள். இவர்கள் விவசாயம் தவிர, பூந்தோட்டம் அமைத்தல், பாய் பின்னுதல், பால் பண்ணை நடத்துதல் போன்ற பரம்பரைத் தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். இம்மக்களின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி அவர்கள் தங்கள் தொழிலில் அதிகமான இலாபம் பெற, பஞ்சாப் நேஷனல் பாங்கு, இந்தியன் ஓவர்சீஸ் பாங்கு ஆகிய இரு பாங்குகளுடன் இணைந்து செயலாற்ற நாங்கள் திட்டமிட்டுள்ளோம். உதாரணமாக இக்கிராமங்களில் வாழும் பண்டாரங்களை கொடும் வட்டி வாங்குவோரிடமிருந்து மீட்டு, அவர்களது பூந்தோட்டங்களை உறுதியான பொருளாதார அடிப்படையில் அமைக்கத் தேவையான உதவிகளைச் செய்வோம்.

"அதே போல் பாய்பின்னுதலை முக்கியத் தொழிலாகக் கொண்டிருக்கும் முஸ்லிம் குடும்பத்தினருக்குப் பாங்குகளின் கடன் உதவியைப் பெற்றுத் தருவதுடன் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை இலாபத்துடன் வியாபாரம் செய்வதற்கான வழிவகைகளைச் சொல்லிக் கொடுத்து அவர்களது வருவாயைப் பெருக்கத் திட்டமிட்டுள்ளோம். காய்கறித் தோட்டம் பயிரிடுதல், கால்நடைகளை நல்ல முறையில் வளர்த்தல், கோழிப் பண்ணை, மாட்டுப் பண்ணைகள் அமைத்தல் ஆகிய துறைகளிலும் தேவையான உதவி அளிக்கத் திட்டமிட்டிருக்கிறோம். இப்பொழுது கூட சில குடும்பங்கள் மங்களூரிலுள்ள ஒரு பிரபல பீடிக் கம்பெனியின் உதவியுடன் பீடி சுற்றும் தொழிலில் ஈடுபட்டுத் தங்களுடைய வருமானத்தைப் பெருக்கி வருகின்றன. தீப்பெட்டி செய்தல், அம்பர் சர்க்கா மூலம் நூல் உற்பத்தி செய்தல் போன்ற பயனுள்ள தொழில்களுக்கும் வாய்ப்பளிக்க எண்ணியுள்ளோம். உள்ளூரில் கிடைக்கும் வசதிகளைப் பயன்படுத்தி சுயமுயற்சியில் ஈடுபடுகிறவர்களுக்குத் தேவையான உதவி செய்து தரப்படும்.

"குடும்ப நலத் திட்டம், மதுவிலக்குத் திட்டம் ஆகியவற்றிலும் தனிக் கவனம் செலுத்தப்படும். கருத்தடை அறுவைச் சிகிச்சை முகாம்கள் நடத்தி, இப்பகுதி மக்களைக் குடும்ப நலத்திட்டத்தில் தீவிரமாக ஈடுபடுத்த எண்ணியுள்ளோம். மதுவிலக்குத் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தத் தேவையான பிரசாரமும், கண்காணிப்பும் செய்யப்படும். கிராமியக் கலைகளை வளர்க்கவும், கிராம வானொலி மன்றங்களை அமைக்கவும் வகை செய்யப்படும்."

"திருநெல்வேலி பஞ்சாப் நேஷனல் பாங்க் நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் தாழையூத்துக் கிராமத்தின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு கொள்ள இருக்கிறது.

பஞ்சாப் நேஷனல் பாங்கின் மண்டல நிர்வாகி திரு டி. பி. நய்யார் அவர்கள் பேசுகையில், தங்கள் பாங்கு, இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்திற்கு இந்த தாழையூத்துக் கிராமத்தை ஏற்று நடத்தும் பொதுப் பணியில் ஒத்துழைப்பதிலும், பங்கு கொள்வதிலும் பெரும் மகிழ்ச்சி அடைகிறது என்றும், இந்தக் கிராம மக்களின் முன்னேற்றத்திற்கு எடுக்கப்படும் எல்லாவித பணிகளுக்கும் தேவையான நிதி உதவிகள் செய்வதற்கு எப்போதும் தயாராக உள்ளது என்றும் கூறினார்.

நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ். நாராயணன் அவர்கள் பேசும்போது, தான் முதன் முதலில் திரு கே. எஸ். ராமன் அவர்களிடமும், திரு கே. எஸ். காசிவிஸ்வநாதன் அவர்களிடமும், இந்தக் கிராம ஏற்புத் திட்டம் பற்றியும், கிராமத்தில் வாழும் பொதுமக்களின் வாழ்வு வளம்பெறச்செய்ய வேண்டிய செயல்கள் பற்றியும் பேச்சுக்கள் நடத்தும்போது நிர்வாகத்தின் சார்பில், அவர்கள் இருவரும் அதற்கு உடனடியாக அங்கேயே சம்மதம் தெரிவித்ததை மிக்க மகிழ்ச்சியுடன் கூறினார். மேலும் அவர்கள் இருவரும் தாழையூத்து, பண்டாரக்குளம் ஆகிய இரு கிராமங்களுக்கும், அங்கு வாழும் பொது மக்கள் நலனுக்காகக் குடிநீர் வசதி, சாலைகள் போடுதல், சுகாதாரம், கல்வி ஆகியவற்றை மேற்கொள்ள உடனடியாக ஏற்பாடுகள் செய்வதாகவும் வாக்குறுதி வழங்கினார்கள். அதை உடனடியாக நடைமுறையில் கொண்டு வரும் வகையில், குடிநீர் பிரச்னையைத் தீர்த்ததற்காக அவர்களுக்கு நன்றியும் கூறினார். மேலும் அவர்பேசும்பொழுது, மிகக் குறுகிய காலத்திற்குள் இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம், தாழையூத்தில் மலிவு விலை பண்டக சாலை, பீடி சுற்றும் நிலையம், நூல் நிலையம் ஆகிய மூன்று இடங்களையும் கட்டி முடித்ததற்காகப் பாராட்டினார். பஞ்சாப் நேஷனல் பாங்கிற்குத் தனது நன்றியினை குறிப்பிடும் போது, அப் பாங்கு அங்குள்ள கிராம மக்களுக்கு அன்று மாலையிலேயே 12 பசுக்கள், 6 தையல் மெஷின்கள் வாங்குவதற்கு கடனுதவி தந்தமையையும் குறிப்பிட்டார்கள். மேலும் இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம், இந்த மாவட்டத்தில் உள்ள மற்றைய தாரங்கதாரா கெமிக்கல்ஸ், ஸ்பிக் நிறுவனம் ஆகிய நிறுவனங்களுக்கு ஒரு வழிகாட்டியாக கிராம ஏற்புத் திட்டத்தில் திகழ்கிறது என்பதையும் குறிப்பிட்டார்.

அவ்விழாவில் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்ரமணியன் அவர்கள் பேசும்போது, இந்தியா சிமெண்ட்ஸ், இண்டஸ்ட்ரியல் கெமிக்கல்ஸ் நிறுவனங்கள் முறையே தாழையூத்து, பண்டாரக்குளம் ஆகிய கிராமங்களை ஏற்று நடத்துவதில், கிராமப் பொருளாதார மறுமலர்ச்சிக்கும், பொது மக்கள் வாழ்விற்கு நிறுவனங்கள் செய்ய வேண்டிய கடமைக்கும் ஒரு முன்னோடியாகத் திகழ்கின்றன என்று கூறினார்.

"இந்தியா சிமெண்ட்ஸ் நிருவாக இயக்குநர் திரு கே. எஸ். நாராயணன் அவர்கள் சென்னை வந்து, கிராம ஏற்புத் திட்டத்தின் கீழ் ஒரு கிராமத்தை ஏற்றுக் கொள்ளவும், மேலும் பத்து குழாய்க் கிணறுகள் ஏற்படுத்தித் தரவும் சம்மதித்தற்காக நான் பெருமகிழ்ச்சி யடைகிறேன்" என்று கூறினார். மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"நமது பெரு மதிப்பிற்குரிய பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் இருபது அம்சத் திட்டத்தை எழுத்தில் மட்டுமல்லாமல், செயல்முறையிலும் நடத்த யாவரும் ஒத்துழைக்க வேண்டும். பல்வேறு திட்டங்களில் ஒன்றான, குடிநீர்ப்

பிரச்சினையைத் தீர்க்கும் விஷயத்தில், அரசின் திட்டமான, 2,400 குழாய்க் கிணறுகளில் 600 குழாய்க் கிணறுகள் நெல்லை மாவட்டத்தில் வருகின்ற ஜூன் முடிவதற்குள் ஏற்படுத்தப்படும்.

"கிராமப் பொருளாதார வளர்ச்சித் திட்டம், மக்கள் தொகை கட்டுப்படுத்தப்படாவிடில் பயன் பெறாமல் வீணாகி விடும். குடும்பக் கட்டுப்பாடு திட்டம் தீவிரப்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். நிச்சயமாக குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு இந்தியா சிமெண்ட்ஸ், இண்டஸ்ட்ரியல் கெமிக்கல்ஸ் இரு நிறுவனங்களும், அவர்களால் எவ்வளவு முடியுமோ அந்த உதவியைச் செய்து தரும் என்று உறுதியாக நம்புகிறேன்" என்றும் குறிப்பிட்டார். முடிவில், அவர், தாம் இந்தக் கூட்டத்தில் பங்கு கொண்டதைப் பெருமகிழ்ச்சியாகக் கருதுவதாகவும் தனது எண்ணங்களை இங்கு வந்திருக்கும் அனைவர்களிடமும் பங்கு கொள்வதிலும் பெருமகிழ்ச்சி அடைவதாகவும் கூறினார். இங்குக் காணும் உங்களுடைய உற்சாகமும், பொதுமக்கள், தொழிலதிபர்கள், வியாபாரிகள், கிராம மக்கள் ஆகிய எல்லோருடைய கூட்டுறவினாலும் நமது பெருமதிப்பிற்குரிய பாரதப் பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றி நமது மக்களின் வாழ்வு வளம் பெற வழி நடப்போம் என்று கூறித் தனது நீண்ட பேச்சுரையைப் பலத்த கையொலிகளுக்கு இடையில் முடித்துக்கொண்டார்.

தாழையூத்து ஊராட்சித் தலைவர் திரு உ. கிருஷ்ணன் அவர்கள் பேசும்பொழுது, கிராமத்தின் முன்னேற்றத்திற்காக இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம் செய்து வருகின்ற நற்பணிகளுக்கும், குடிநீர்ப் பிரச்சினையை உடனடியாகத் தீர்த்துத் தந்தமைக்கும் தங்களது கிராமத்தின் சார்பில் நன்றி தெரிவித்தார்.

கிராம ஏற்புத் திட்டத்தின் கீழ் இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனமும், இண்டஸ்ட்ரியல் கெமிக்கல்ஸ் நிறுவனமும் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்களால், தாழையூத்து தழைக்கும், பண்டாரக்குளம் செழிக்கும் என்பது திண்ணம்.

கேளுங்கள் கொடுக்கப்படும்

வினா: 16-2-76, 1-3-76 தேதிய 'தமிழரசு' இதழ்கள் வெளிவந்த பிறகுதான், இருபது அம்சப் பொருளாதாரத் திட்டங்கள் என்னென்ன என்பது தமிழக மக்களுக்கே தெரியவந்துள்ளது என்பதைப் பெருமையுடன் கூறிக் கொள்வதுடன், அதற்காக எங்கள் மன்றத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இனியாவது ஏழை எளியவர்களுக்கு உதவும் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் சாதனைகளை விளக்கமாகத் 'தமிழரசு' இதழில் வெளியிடுவீர்களா?

—நா. ராமசாமி,
ஜவஹர் மன்றம்,
மைலாப்பூர்,
சென்னை-4.

விடை: உங்கள் பாராட்டுக்கு நன்றி. இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் சாதனைகளைப் பற்றிய கட்டுரைகள் 'தமிழரசு' இதழில் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன. இனியும் தொடர்ந்து இடம் பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வினா: சிறப்பாக உழவர்களுக்கும், மாணவர்களுக்கும், தொழில் முனைவோருக்கும் நல்வழி காட்டி வந்த 'கேளுங்கள் கொடுக்கப்படும்' பகுதியை ஏன் நிறுத்திவிட்டீர்கள்?

—ஆர். முத்துசாமி,
மேலூர்,
மதுரை மாவட்டம்.

விடை: இந்த இதழ் முதல் ''கேளுங்கள் கொடுக்கப்படும்'' பகுதி தொடர்ந்து வெளிவரும் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அதே நேரத்தில் அரசியல் தொடர்பான, சட்ட நுணுக்கம் வாய்ந்த கேள்விகளைக் கேட்க வேண்டாம் என்றும் அன்புடன் வேண்டுகின்றோம்.

வினா: தமிழக ஆளுநர் திரு கே. கே. ஷா அவர்கள், ''இனி மேல் கல்லூரிகளில் சேர்ப்பதற்கு தகுதிக்கே முக்கியத்துவம் அளிக்கப்படும்'' என்று கூறியதாகச் சில நாளேடுகளில், சில நாட்களுக்கு முன் செய்தி வெளியாகியுள்ளது. அப்படியானால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உள்ள இட ஒதுக்கீடு முறை ரத்து செய்யப்பட்டு விட்டதா?

—ச. நடராசன்,
இளைஞர் மன்றம்,
ராயப்பேட்டை.

விடை: தாழ்த்தப்பட்டவர்களுக்கு உள்ள இட ஒதுக்கீடு ரத்து செய்யப்படவில்லை. தமிழக ஆளுநர் திரு கே. கே. ஷா அவர்கள் கூறியதை சில நாளேடுகள் முழுமையாக வெளியிடாததால் தான், தங்களைப் போன்றே பலருக்கு இந்த ஐயம் ஏற்பட்டுள்ளது. தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்கே கல்லூரிகளில் இடமளிக்கப்படும்; சிபாரிசுகளுக்கே இடமில்லை; தாழ்த்தப்பட்ட அல்லது பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களுக்குள்ள சலுகை நீடிக்கும்'' என்றே ஆளுநர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு உள்ள 18 சதவீத இட ஒதுக்கீடு முறையும், பிற்படுத்தப்பட்டவர்களுக்குள்ள 31 சதவீத இட ஒதுக்கீடு முறையும் தொடர்ந்து நீடிக்கும் என்பதில் ஐயம் வேண்டாம்.

வினா: நிலக்கடலைச் சாகுபடியில் வெண்காரம் இடுவதன் நன்மை என்ன? ஏக்கருக்கு எத்தனை கிலோ இட வேண்டும்?

—ப. ஆதிமூலம்,
பெரம்பலூர்,
திருச்சி மாவட்டம்.

விடை: நிலக்கடலையில் அதிக மகசூலைப் பெற ''போராக்ஸ்'' எனப்படும் வெண்காரம் இட வேண்டும். இவ்வாறு இடுவதால், நிலக்கடலைச் செடியில் அதிபூக்கள் தோன்றி, அதிகக் காய்கள் உண்டாகின்றன; விதைப் பருப்புகள் நன்கு பெருத்து முழு வளர்ச்சி அடைகின்றன. இதனால் நிலக்கடலை மகசூலை அதிகமாகிறது. மேலும் நிலத்தில் உள்ள சத்தினை எடுத்துக் கொள்ளும் தன்மையை அதிகரிக்கவும் 'போராக்ஸ்' உதவுகிறது.

''போராக்ஸ்'' எனப்படும் வெண்காரத்தை 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏக்கருக்கு 3 கிலோ வீதம் அடியுரமாக இடவேண்டும்

வினா: சொர்ணவாரி பட்டம் என்பது எந்தக் காலத்தைக் குறிக்கும்?

—வி. தங்கவேல்,
செம்பனூர் கோவில்,
தஞ்சை மாவட்டம்.

விடை: சொர்ணவாரி பட்டம் என்பது சித்திரை வைகாசியில் தொடங்கி புரட்டாசியில் முடிவடையும் காலத்தைக் குறிக்கும்.

வினா: 'கே. எம். 1', 'கே. எம். 2' ஆகிய கம்பு ரகங்களைப் புன்செய் நிலத்தில் பயிரிட ஏற்ற பட்டம் எது? ஒரு ஏக்கருக்கு எவ்வளவு விதையை விதைக்கவேண்டும்?

—த. குப்புசாமி,
கீழராஜ வீதி,
புதுக்கோட்டை

விடை: தென்மேற்குப் பருவ மழை பெய்தவுடன் ஆடி, ஆவணி மாதங்களில் 'கே. எம். 1', 'கே. எம். 2' ஆகிய கம்பு ரகங்களைச் செம்மண் நிலத்தில் புன்செய்ப் பயிராக விதைக்கலாம்.



வடகிழக்குப் பருவ மழை பெய்தவுடன் கரிசல் நிலத்தில் புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் புன்செய்ப் பயிராகவும் இவ்விரு ரகங்களையும் பயிரிடலாம்.

ஒரு ஏக்கருக்கு 2 கிலோ விதையை விதைப்பது சிறந்தது.

வினா: கேழ்வரகு கதிரில் அரை அங்குல அளவுக்கு மணி பிடிக்காமல் உள்ளது. இது எதனால்?

—மா. சுப்பிரமணியம்,
குடியாத்தம்,
வட ஆர்க்காடு மாவட்டம்.

விடை: தங்கள் கேழ்வரகுப் பயிரில் குலைநோய் தாக்கி இருக்கும் என்று நம்புகின்றோம். இருப்பினும், நேரில் பார்க்காமல் உறுதியாகச் சொல்வது அரிது. எனவே, மணி பிடிக்காமல் உள்ள கதிரைக் கொண்டுபோய் உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் அவர்களிடம் காட்டி, அதற்கான காரணங்களைத் தெளிவாகத் தெரிந்து கொள்வதே சிறந்தது.

வினா: 'அமராவதி' என்ற பெயரில் ஒருநெல் வெளியிடப்பட்டுள்ளதாகக் கேள்விப் பட்டேன். அது உண்மையா? உண்மையெனில் அதன் வயது, மகசூல் திறன் ஆகியவற்றையும், அது எப்பருவத்திற்கு ஏற்றது என்பதையும் கூறுக.

—மா. நஞ்சையா,
கோபிச்செட்டிப்பாளையம்,
கோவை மாவட்டம்.

விடை: உண்மைதான். தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் 1975-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 'கோ-39' என்ற ரகத்திற்கே 'அமராவதி' என்ற கவர்ச்சியான பெயரும் உண்டு. இந்த ரக நெல் 85 முதல் 90 நாட்களில் அறுவடைக்கு வந்துவிடும். இது எக்டேருக்கு 5 டன் வரை மகசூல் கொடுக்க வல்லது.



'அமராவதி' என்ற நெல் ரகத்தைக் கோவை மாவட்டத்தில் ஜூன் முதல் செப்டம்பர் வரையுள்ள பருவத்தில் பயிரிடும் படி பரிந்துரைக்கப்படுகிறது.

வினா: பெரியாறு பாசனப் பகுதியில் எனக்கு நிலம் உள்ளது. அப்பகுதியில் வருகிற ஜூன், ஜூலை மாதங்களில் எந்தெந்த நெல் ரகங்களைப் பயிரிடலாம்?

—நா. பக்கிரிசாமி,
பெரியகடை வீதி,
திருநெல்வேலி.

விடை: பெரியாறு பாசனப் பகுதியில் ஜூன் மாதத்தில் 'வைகை' என்ற நெல் ரகத்தையும், ஜூலை மாதத்தில் 'கோ. 36' என்ற நெல் ரகத்தையும் பயிரிடலாம்.

'வைகை' நெல்லுக்கு ஜூன் கடைசி வாரமும், 'கோ. 36' நெல்லுக்கு ஜூலை முதல் வாரமும் விதைப்பதற்கு ஏற்ற காலமாகும் என்பது ஆராய்ச்சியின் மூலம் தெரியவந்துள்ளது.

வினா: எனக்கு முள்ளங்கி என்றால் பிரியம். எங்கள் வீட்டுத் தோட்டத்தில் அடுத்த மாதம் முள்ளங்கி பயிரிட விரும்புகின்றேன். அதிக மகசூல் தரும் முள்ளங்கி ரகம் எது? அதன் விதைகளை எங்கிருந்து பெறலாம்?

—ஆர். மல்லிகா,
ஆவணிமூல வீதி,
மதுரை.

விடை: பெரிய குளத்திலுள்ள தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற சோதனைகளில் இருந்து, மதுரை முதலிய தென் மாவட்டங்களில் 'பூசா ராஸ்மி' என்ற முள்ளங்கி ரகமே அதிக மகசூல் தரவல்லது என்பது தெளிவாகியுள்ளது. இந்த ரகம், எக்டேருக்கு உயர்ந்த அளவாக 38,117 கிலோ கிழங்கும், சராசரியாக எக்டேருக்கு 29,630 கிலோ கிழங்கும் கொடுக்கக்கூடியது. ஜூன் முதல் ஆகஸ்ட் வரையுள்ள பருவ காலத்தில் இந்த ரக முள்ளங்கியே மிக அதிக மகசூல் தரக் கூடியது என்பது ஆராய்ச்சியின் மூலம் தெளிவாகியுள்ளது. இந்த ரக முள்ளங்கியின் விதைகளை, பெரியகுளம் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து பெறலாம்.

வினா: உயர்விளைச்சல் தரும் கம்பு ரகங்களை இறைவைப்பாசனத்தில் நேரடியாக விதைப்பது நல்லதா? அல்லது நாற்று விட்டு



நடுவது நலலதா? இது பற்றிய விளக்கம் தருக.

—வி. ராமசாமி,
கடைவீதி,
குடியாத்தம்,
வட ஆர்க்காடு மாவட்டம்.

விடை: உயர்விளைச்சல் தரும் கம்பு ரகங்களை இறைவையாகப் பயிரிடும்போது நாற்றுவிட்டு நடுவதே சிறந்தது என்பது தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற ஆராய்ச்சியிலிருந்து தெளிவாகத் தெரிந்துள்ளது. நாற்றுவிட்டு நடப்பட்ட கம்பு சராசரியாக எக்டேருக்கு 288 கிலோ அதிக மகசூல் கொடுக்கிறது. 3 வார வயதில் நாற்றைப் பிடுங்கி நடவேண்டும். அப்பொழுதுதான் அதிக மகசூல் பெறமுடியும். எனவே, உயர்விளைச்சல் தரும் கம்பு ரகங்களை நாற்றுவிட்டு நடுவதே சிறந்தது.

—R. மாணிக்கம்

இப்படித்தான் எழுந்தது பூதான இயக்கம்!

'சுதந்திரம் கிடைத்துவிட்டது' என்றாலும் எங்களைப் பொறுத்த அளவில் துன்பம் தொடர் கதையாகிவிட்டது''—

-ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த தெலிங்கானாப் பகுதியில் நாள் கொண்டா மாவட்டத்தில் உள்ள பொச்சம் பள்ளி கிராமத்தைச் சேர்ந்த, நிலமற்ற, தாழ்த்தப்பட்ட மக்களில் சிலர், ஆச்சார்ய விநோபா பாவே அவர்களிடம் பரிதாப உணர்வு ததும்பும் வகையில் மேற்கண்டவாறு முறையிட்டனர்.

அவர்களது முறையீட்டைக் கேட்ட விநோபா அவர்கள்,

''எண்பது ஏக்கர் நிலம் வேண்டும்''—பதில் கூறினார்கள் தாழ்த்தப்பட்ட ஏழை மக்கள்.

''நான் முயற்சி செய்கிறேன்!'- விநோபா பாவே குறிப்பிட்டார்.

அன்று மத்தியானம், அந்தக் கிராமத்தில் வாழ்ந்த பிரமுகர்களை எல்லாம் அழைத்து, தாழ்த்தப்பட்ட மக்களின் கோரிக்கையை அவர்கள் முன் எடுத்து வைத்தார் விநோபா.

பிரமுகர்களில் ஒருவர் இராமச்சந்திர ரெட்டி என்பவர் எழுந்தார்; மன மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்;

''நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?'' என்றார்.

''எங்களுக்கு நீங்கள் சிறிது நிலம் தேடித்தரக் கூடாதா?''— நிலமற்ற ஏழை மக்களில் ஒருவர் கேட்டார்.

''எவ்வளவு நிலம் தேவை?'' என்று கேட்டார் விநோபா பாவே.

இந்த வினா அவர்களது காதுகளில் விழுந்தவுடன் அவர்கள் திகைத்துப் போயினர். ஒருவரையொருவர் சில கணத்திற்கு பார்த்துக் கொண்டார்கள். ஒரு முடிவுக்கு வந்தார்கள்; மறுமொழி கூறத் துவங்கினார்கள்.

''பாபா! நான் நூறு ஏக்கர் நிலம் தருவதற்குச் சித்தமாயிருக்கிறேன்!''

அவரது அறிவிப்பு அங்கே கூடியிருந்த அனைவரையும் வியப்புக்கு ஆளாக்கியது—விநோபா அவர்களையும் சேர்த்துத்தான்.

''நீங்கள் உங்களது வார்த்தையைக் காப்பாற்ற முயற்சி செய்வீர்களா? அல்லது உணர்ச்சியின் உந்துதலின் காரணமாக இவ்வாறு கூறுகிறீர்களா?''— விநோபா தெளிவாகக் கேட்டார்.

''இல்லை! நான் மனப்பூர்வமாகத்தான் கூறுகிறேன்! கூறியதை நிறைவேற்றுவேன்!''— பிரமுகர் பதில் கூறினார்.

'அப்படியென்றால், இன்று மாலையில் நடைபெறவிருக்கும் பிரார்த்தனைக் கூட்டத்தில் கூடுகின்ற ஏராளமான பொதுமக்களின் முன்னே இதனைச் சொல்

வீர்களா? அதன்பின் எழுத்து மூலமாக நிறைவேற்றுவீர்களா?''—விஞேபா.

'-கண்டிப்பாக அவ்வாறே செய்வேன்!''—பிரமுகர்.

அந்தப் பிரமுகர், விஞேபா பாவே அவர்களிடம் சொல்லிய வண்ணமே செய்து முடித்தார்.

இவ்வாறு 25 ஆண்டுகளுக்கு முன்னர், 1951 ஆம் ஆண்டு ஏப்ரல் 18-ஆம் நாளில் பூதான இயக்கம் இந்தியாவில் தோன்றியது. இந்தத் தேதிக்கு மற்ரெரு சிறப்பும் உண்டு ; 34 ஆண்டுகளுக்கு முன்ஞல் அதாவது 1917 ஆம் ஆண்டில் இதே ஏப்ரல் 18-ல் தான் அண்ணல் காந்தியடிகள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, பீகாரில் உள்ள சம்பரானில் சத்தியாக்கிரகம் என்னும் அறப்போரைத் துவக்கிஞர்.

1951-லிருந்து 1964 முடிய ஏறக்குறைய 13.5 ஆண்டுகள் விஞேபா பாவே அவர்கள் இந்தப் பரந்த இந்திய நாட்டின் நீளமான சாலேகளேயும், அகலமான பாதைகளேயும் கடந்து, தமது பூதானக் கொள்கைகளே, வீட்டுக்கு வீடு, கிராமத்துக்குக் கிராமம், மாநிலத்துக்கு மாநிலம் எடுத்துச் சொன்ஞர்.

ஏறக்குறைய 40 ஆயிரம் மைல்களேயும் 6 ஆயிரம் கிராமங்களேயும் அவரது திருப்பாதங்கள் சந்தித்துள்ளன. கேரளக் கடற்கரையோரங்களில் உள்ள பகுதிகள், காஷ்மீரின் உயர்ந்த பள்ளத்தாக்குகள், அஸ்ஸாமின் இருண்ட காட்டுப் பகுதிகள் இங்கெல்லாம் அவர் பாத யாத்திரை செய்திருக்கிருர். ஏறக்குறைய 20 ஆயிரம் கூட்டங்களில் உரையாற்றியிருக்கிருர் ; 2 கோடி மக்கள் முன் உரையாற்றியிருக்கிருர்.

எங்கெங்கு சென்ருலும் அவர், மக்களிடம் வழக்கமாக என்ன கேட்பார் தெரியுமா?

''உங்கள் குடும்பத்தில் ஐந்து சகோதரர்கள் இருக்கிருர்கள். நிலமற்ற ஏழைகளின் பிரதிநிதியாகப் பணியாற்றும் நான் ஆருவது நபர்! எனக்குரிய பங்கைத் தருவீர்களா?''

—விஞேபா அவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு மனப்பூர்வமாக நிலங்களே வழங்கி வந்தனர் சில செல்வந்தர்கள். ஏழைகள், ஓரளவு வசதி படைத்தவர்கள், செல்வர்கள், மிகு செல்வர்கள் எனப் பல்வேறு தரத்தினர் நன்கொடையாளர். பட்டியலில் இடம் பெற்றிருந்தனர்.

பீகார் மாநிலத்தைச் சேர்ந்த பூர்னியா மாவட்டத்தில் குருசேலா என்னும் பகுதியைச் சேர்ந்த தர்பாங்காவின் மன்னர், விஞேபா அவர்களேச் சந்தித்து, ஒரு இலட்சத்து 18 ஆயிரம் ஏக்கர் நிலத்தை நன்கொடையாக வழங்குவதாகக் குறிப்பிட்டார். அதே நேரத்தில், உத்தரப் பிரதேசத்தைச் சார்ந்த கோரக்பூரில் உள்ள ஒரு முதியவள், தனது பேரனேயும் அழைத்துக் கொண்டு, விஞேபா பாவே அவர்களின் முகாமை நாடிச் சென்று, அவரைச் சந்தித்து, தனது ஒரே உடைமையாக இருந்த அரை ஏக்கர் நிலத்தை நன்கொடையாக அளித்தாள்.

தெலிங்காஞவில் இருந்து தொடங்கி, பின்னர் மத்திய இந்தியாவையும், உத்தரப் பிரதேசத்தையும் பூர்த்தி செய்த விஞேபா அவர்கள் பீகாரைச் சோதனேக்களமாகவும் உதாரணப் பகுதியாகவும் ஆக்க முடிவு செய்தார். 1952-லிருந்து 1954 முடிய ஏறக்குறைய 27 மாதங்கள் அவர் அங்கே செலவிட்டார். முன்னுதாரணம் காட்ட முடியாத அளவுக்கு-முன் எப்போதும் இருந்திராத அளவுக்கு ஆர்வம் அங்கே பெருக்கெடுத்தது. பீகாரின் 2,80,421 நில உடைமையாளர்களிடமிருந்து 22,32,471 ஏக்கர் நிலங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

1955 டிசம்பரில் பண்டித நேரு அவர்கள், விஞேபா பாவே அவர்களின் தொண்டினேக் குறித்து கேரளத்தின் வட பகுதியில் கூறிய பாராட்டு மொழிகள் நினேவு கூரத்தக்கன.

''நில உடைமையாளர்களேயும் ஜமீந்தார்களேயும் நாம் இல்லாமற் செய்து விட்டோம்; ஆஞலும் நிலப் பிரச்சினேகள் இன்னும் முடிவடைந்ததாகத் தெரிய



வில்லே. ஆச்சார்ய விஞேபா பாவே அவர்கள் பூதான இயக்கத்தை வலியுறுத்திக் கொண்டு அதன் உதவியால் இந்தியா முழுதும் ஏறக்குறைய பல இலட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களேத் தேடி வைத்திருக்கிருர் என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள் ! உண்மையிலேயே மற்றெந்த நாட்டிலும் நடைபெற முடியாத அருஞ் சாதனே இது! இதுதான் சமூகப் பிரச்சினேகளே எளிதில் சமாளிக்கக் கூடிய இந்திய வழிமுறையாகும். எனவே, நாம் கட்டாயமாகப் பூதான இயக்கத்தை ஆதரிக்க வேண்டும்; அதுமட்டும் போதாது. இந்த பூதானப் பணியை-நிலப் புரட்சியை நிறைவேற்றிடச் சட்ட மூலமான சாத்தியக் கூறுகளே நாம் உருவாக்க வேண்டும்''—இவ்வாறு நேரு அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த கால் நூற்ருண்டாக, ஏறக்குறைய 42 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பூதான இயக்கத்துக்கு அளிக்கப்பட்டுள்ளன. இதில் சரிபாதி அளவு விவசாயத்துக்குப் பயன்படாதது என்பதையும், சில நிலங்கள் இன்னும் தகராறுக்கு உரியன என்பதையும் நாம் அவசியம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இதுவரை 12 இலட்சம் ஏக்கர் வரை விநியோகம் செய்யப்பட்டுள்ளன. நாட்டின் மொத்தப் பயிர்ச் சாகுபடி நிலங்களில் இது 0.4 சதவீதம் ஆகும்.

பல்வேறு மாநிலங்களில் நிலச் சீர்திருத்தச் சட்டம் ஏற்பட்டுள்ளது. அதன் சாதனேகள் அவ்வளவு அதிகமில்லே என்ருலும், அதற்காக அதிகாரிகளும், சட்ட மன்றங்களும் புரிந்த தொண்டுகளே நாம் எளிதாக எண்ணிவிட முடியாது!

பல்வேறு மாநிலங்களில் நிலச் சீர்திருத்தம் நிறைவேற்றப்பட்ட வழி முறைகள் குறித்து, மைய அரசின் வேளாண்மை அமைச்சரகம் அண்மையில் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. நில உச்ச வரம்புச் சட்டத்தின் வாயிலாக ஏறக்குறைய 6.5 இலட்ச ஏக்கர் நிலம் தான் இதுவரை கிடைத்திருக்கிறது என்றும், அதில் 1.36 இலட்சம் ஏக்கர் நிலம்தான் நிலமற்றவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சட்டங்களின் மூலம் கிடைத்துள்ள நிலப்பகுதிகளே விட, பூதான இயக்கத்தின் பொன்ஞன சேவையிஞல் கிடைத்த நிலப் பகுதிகள் அதிகம் என்பதைக் குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும்.

தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில், 1952-ஆம் ஆண்டு அக்டோபர் 2-ஆம் நாளன்று திரு சங்கர்ராவ் தேவ் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது பூதான யாத்திரை. இதுதான், தமிழ்நாட்டில் பூதானத்திற்காக நடைபெற்ற முதல் பாத யாத்திரை ஆகும். இந்த யாத்திரை பயனளித்தது. பூதானம், சம்பத் தானம், கிராமதானம் ஆகியவை நிறையக் கிடைத்தன என்ருலும், 1956-ஆம் ஆண்டு மே மாதத்தில் நடைபெற்ற பாத யாத்திரையைக் குறிப்பாகக் கூறவேண்டும். ஆச்சார்ய விஞேபா பாவே அவர்களால் மேற்கொள்ளப்பட்ட அந்தப்பாதயாத்திரை 13-5-1956 முதல் 18-4-1957 முடிய பதிஞேரு மாதங்கள் நடைபெற்றதோடு, 250 கிராம தானங்களேயும் பெற்றது, சாதனேயின் மகுடமாகத் திகழ்ந்தது.

தமிழ்நாட்டில் மொத்தம் 48 ஆயிரம் ஏக்கர் பூதானம் கிடைத்ததாக, துவக்கத்தில் அறிவிக்கப்பட்டது என்ருலும், அவற்றில் 15,789 பேரால் அளிக்கப்பட்ட 23,472 ஏக்கர் நிலம்தான் பூதானமாக உறுதி செய்யப்பட்டது. ஏனென்ருல், ஜமீன் ஒழிப்புச் சட்டம் அமலுக்கு வந்ததால் சிலரது தானங்கள் செல்லத்தக்கவையாக இல்லே. மேலும் நிர்வாகச் சீர்திருத்தத்தின் காரணமாக சில தான நிலங்கள் வனப் பகுதியில் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

23,472 ஏக்கர் பூதானத்தில் 22,410 ஏக்கர் 15,084 பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 31-12-1975 முடிய, விநியோகம் செய்யப்பட்ட நிலங்களின் விவரங்கள் கீழே தொகுக்கப் பெற்றுள்ளன.

மீதமுள்ள 705 எண்ணிக்கையுள்ள 1062 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள், நிலமற்ற ஏழைகளுக்கு விரைவில் வழங்கப்படவிருக்கின்றன.

இவ்வாறு பூதான இயக்கம் அகில உலக வரலாற்றில் தனி இடம் பெறுகிறது. குறிப்பாக இந்திய வரலாற்றில் ஈடற்ற பெருமை கொண்டு மிளிர்கிறது.

— எஸ். சண்முகசுந்தரம்

தமிழ்நாட்டில் பூதான விநியோக விவரங்கள்

விநியோகத்திற்குக் கிடைத்த மொத்தப்பரப்பு	—23,472 ஏக்கர்
இதுவரை விநியோகம் ஆகிய பரப்பு	—22,410 ஏக்கர்
பூதானம் பெற்றவர்கள்	—15,084 பேர்

மாவட்ட வாரியாக

			பூதானம் பெற்றவர்கள் எண்ணிக்கை	பரப்பளவு (ஏக்கர்)
செங்கற்பட்டு	...	...	1274	1693
தென்ஆர்க்காடு	...	...	1463	1530
வட ஆர்க்காடு	...	...	366	395
தஞ்சாவூர்	...	...	1101	874
திருச்சிராப்பள்ளி	...	...	1327	2254
சேலம், தருமபுரி	...	...	1308	1902
இராமநாதபுரம்	...	...	1320	2368
திருநெல்வேலி	...	...	1376	2677
கோயமுத்தூர்	...	...	2800	5627
மதுரை	...	...	2574	3010
கன்னியாகுமரி	...	...	175	80
			15,084	22,410



வெய்யிலின் வெம்மை
வியர்வையின் வேதனை
இவற்றிலிருந்து பாதுகாக்க
குளுமையான கதர் அணியுங்கள்.

கதர் ஆடைகள் கோடையின்
கொடுமையைக் குறைக்கும்.

தமிழ் நாட்டில் தயாராகும் கதர் பருத்தி
ஆடைகளுக்கு இப்போது தள்ளுபடியோ
20 சதவீதம்.
எல்லா காதி கிராப்ட்களிலும் கிடைக்கும்.

கதர் கிராமத் தொழில் வாரியம்,
குறளகம், சென்னை-600 001

காலணிகள்

கிராமியக் கைத் தொழில்
வினைஞர் தயாரித்தவை.
கோடை காலத்திற்கேற்ற
தினுசுகள், நயமான விலைகளில்—
தரமானவை — உறுதியானவை.
உழைப்பில் உயர்ந்தவை.
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு
பொருளும் கிராமத் தொழிலாளரின்
வருமானத்தைப் பெருக்கும்.
எல்லா காதி கிராப்ட்களிலும்
இப்போது கிடைக்கின்றன.

கதர் கிராமத் தொழில் வாரியம்,
குறளகம், சென்னை-600 001

கல்வி வளர்ச்சியில் இந்தியா

தற்பொழுது இந்தியாவில் மொத்தம் 114 பல்கலைக் கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தியாவில், கலைக் கல்வி, தொழிற் கல்வி ஆகியவைகளைக் கற்றுத் தருகின்ற கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 4,000 ஆகும். இவைகளில் மொத்தம் 34,00,000 மாணவ, மாணவியர்கள் கற்கின்றனர்.

இந்தியாவில் 430 க்கும் மேற்பட்ட தொழில் நுட்பப் பள்ளிகள் உள்ளன. இவைகள் ஆண்டுதோறும் ஏறத்தாழ 30,000 தொழில் நுட்பப் பட்டதாரிகளை உருவாக்குகின்றன.

தவிர இந்தியாவில் 4,50,000 துவக்கப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இவைகளில் சுமார் 6 கோடியே 40 இலட்சம் குழந்தைகள் பயிலுகின்றனர். நடுநிலைப் பள்ளிகள் ஏறத்தாழ 1 இலட்சம் மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.

தற்பொழுதுள்ள உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 41,00,663 ஆகும். இவைகளில் பயிலுகின்ற மாணவ, மாணவியரின் எண்ணிக்கை 82,30,000 ஆகும்.

கல்விக்கென 1947 ஆம் ஆண்டில் அரசால் செலவழிக்கப்பெற்ற தொகை ரூபாய் 57 கோடி. கல்வி வளர்ச்சியின் காரணமாகவும், கல்வியின் முன்னேற்றத்திற்காக அரசு எடுத்துக்கொண்ட ஆர்வத்தின் காரணமாகவும் தற்பொழுது இந்தியாவின் கல்விச் செலவு ரூ. 1,900 கோடியாக உயர்ந்துள்ளது குறிப்பிடத் தக்கது.

புதிய மின் வசதித் திட்டங்கள்



கிராமப் புற மின் வசதிக் கார்ப்பொரேஷன் அனுமதி வழங்கியுள்ள இரண்டு புதிய திட்டங்களின்படி, தமிழ் நாட்டில் மேலும் 85 கிராமங்களுக்கு மின் வசதி விரைவில் விரிவாக்கப்படும்.

இராமனுதபுரம் மாவட்டத்தில் கல்லல், சாக்கோட்டை வட்டங்களிலுள்ள பின்தங்கிய பகுதிகளின் சமூக, பொருளாதார நிலைமைகளை மேம்படுத்த உதவும் வகையில் இத்திட்டங்களில் ஒன்று குறிப்பாக வகுக்கப்பட்டுள்ளது.

இது, இம்மாவட்டத்தில் கிராமப் புற மின்வசதிக் கார்ப்பொரேஷனின் உதவியால் அமைக்கப்படும் 6வது திட்டமாகும்.

ஐந்தாண்டுக் காலத்தில் இத்திட்டம் முடிக்கப்பட்ட பிறகு 60 கிராமங்களில் உள்ள 450 பம்பு செட்டுகளுக்கும் 100 சிறிய தொழிற்சாலைகளுக்கும் மின்சக்தி அளிக்கும். இதைத் தவிர இத் திட்டப் பகுதியில் 1,300 வீடுகள், கடைகள் ஆகியவற்றுக்கான மின் இணைப்புகளும் 800 தெரு விளக்குகளும் ஏற்படுத்தப் படும்.

இன்னொரு திட்டம், சேலம் மாவட்டத்தில் மோகனூர் வட்டத்தில் அமைக்கப் படும். இது, இம்மாவட்டத்தில் கிராமப்புற மின்வசதிக் கார்ப்பொரேஷன்னின் உதவியுடன் அமைக்கப்படும் இரண்டாவது திட்டமாகும். ஐந்தாண்டுக் காலத்தில் இத் திட்டம் பூர்த்தியடைந்ததும் 25 கிராமங்களில் உள்ள 400 பம்பு செட்டுகளுக்கும் 24 சிறிய தொழிற்சாலைகளுக்கும் மின்சக்தி அளிக்கும். இத்துடன் 1,623 வீடுகள், கடைகள் ஆகியவற்றுக்கான மின் இணைப்புக்களையும் 100 தெரு விளக்குகளையும் ஏற்படுத்துவதற்கும் இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

கிராமப் புற மின்வசதிக் கார்ப்பொரேஷன், தமிழ் நாடு மாநிலத்தில் 2,703 கிராமங்களுக்கு மின்வசதியை விரிவாக்கும் 64 திட்டங்களுக்காக ஏறக்குறைய 20 கோடியே 31 லட்சம் ரூபாய் கடன் உதவி செய்ய இது வரையில் அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகு 53 ஆயிரத்து 600 பம்பு செட்டுகளுக்கும், 1,800 சிறிய தொழிற்சாலைகளுக்கும் மின்வசதி அளிக்கும். மேலும் இத்திட்டப் பகுதிகளில் உள்ள வீடுகள், கடைகள் ஆகியவற்றின் உபயோகத்துக்காக ஒரு லட்சத்து 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மின்இணைப்புக்களையும் 22 ஆயிரத்து 300 தெரு விளக்குகளையும் ஏற்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

குன்றென மகசூல் குவிக்க குறுவைப் பட்டமே சிறந்தது!

ஒரு நெற்பயிர் தரும் மகசூலின் அளவு, அப்பயிரின் கடைசி 45 நாட்களில் கிடைக்கும் சூரிய ஒளியின் அளவைப் பொருத்தே அமைகிறது. ஏனெனில், அந்தக் கடைசி 45 நாட்களில் நடைபெறும் ஒளிச்சேர்க்கையே, கதிரில் உருவாகும் தானிய மணிகளை நிரப்பத் தேவைப் படும் மாவுப் பொருட்களை உற்பத்திச் செய்து தருகிறது. ஆகவே, அந்த 45 நாட்களில் வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தால் பயிருக்குப் போதிய அளவு சூரிய ஒளி கிடைப்பதில்லை. இதன் காரணமாக ஒளிச்சேர்க்கை குறைந்து, மகசூல் பாதிக்கப்படுகிறது!

இந்த காரணத்தினால்தான், தெளிந்த வானமும், நிறைந்த சூரிய ஒளியுடனும் கூடிய குறுவை மற்றும் கோடைப் பட்டங்களில் சாகுபடி செய்யப்படும் நெற்பயிரின் மகசூல், மப்பும் மந்தாரமுமான வானமும், குறைந்த சூரிய ஒளியுடனும் கூடிய தாளடி போன்ற பருவ (மழை) காலப்பட்டங்களில் கிடைக்கும் மகசூலைவிட அதிகமாக இருக்கின்றது.

மேலும் பருவ (மழை) கால நெற்பயிர் (பின் சம்பா அல்லது தாளடி) சாகுபடி செய்ய, கடுமையான மழை பெய்து கொண்டிருக்கும்போதே நடவு செய்யப்படுகிறது. இளம் நாற்றுகள் வேர்ப் பிடித்து, தூர்கள் கட்டும் பருவத்தில், அதிக அளவு மழை நீர் வயலில் தேங்கி நிற்பதால், பயிரின் ஆரம்ப கால வளர்ச்சியும், தூர்ப்பிடிப்பும் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. ஆனால் குறுவை மற்றும் கோடைப் பட்டங்களில் பாசன நீரைக் கட்டுப்படுத்த வாய்ப்புகள் இருப்பதால் பயிரின் ஆரம்ப கால வளர்ச்சியும், தூர்ப்பிடிப்பும் துரிதமாகவும், துடிப்பாகவும் நடைபெறுகின்றன! இதனால் மகசூல் கணிசமாகக் கூடுகிறது. ஆகவே, நெற்சாகுபடியில் அமோக மகசூல் பெற குறுவை மற்றும் கோடைப் பட்டங்களே மிகவும் சிறந்தவை!



நெல்லிற்கு ஏற்ற நல்ல மண்!



மணற்பாங்கான நிலத்தைவிட, களிமண் பாங்கான நிலங்களில் நெற் பயிர் அதிக மகசூல் தருகிறது! நிறைந்த மகசூல் பெற மண்ணில் 40 முதல் 60 சதவீதம் வரை களிமண் துகள்கள் இருப்பது நல்லது. களிமண் துகள்களுக்கு நீரை நன்கு பிடித்து வைத்துக்கொள்ளும் ஆற்றல் அதிகம் இருப்பதால், களிமண் பாங்கான நிலத்தில் பாசன நீர் விரைவில் வடிந்து வெளியேறுவது தடைபடுகிறது. எப்போதும் சிறிதளவு நீர் நிலத்தில் தேங்கி நிற்பதையே நெற்பயிர் பெரிதும் விரும்புகிறது.

மண்ணிலுள்ள களித்துகள்கள் 2:1 என்ற ரகத்தைச் சேர்ந்த ''மான்ட் மொரிலினைட்'' போன்ற களித்துகள்களாக இருப்பது இன்னும் சிறந்தது. மேலும் மண்ணின் அயனி மாற்றும் ஆற்றல் 100 கிராம் மண்ணில் 22 மி. ஈ. என்ற அளவுக்குக் குறையாமல் இருப்பது நல்லது.

சாகுபடி செய்யப்படும் மேல் மண்ணின் கண்டம் 18 முதல் 22 சென்டி மீட்டர் ஆழமுடைய தாக இருக்க வேண்டும். மண் கண்டம் அதிகமாக ஆக நெற்பயிர் தரும் மகசூலின் அளவும் அதிகரிக்கின்றது.

நெற்பயிர் அமிலத் தன்மையுடைய மண்ணையே பெரிதும் விரும்புவதால், கார அமில நிலை 5·5 முதல் 6·5 வரை இருப்பது நல்லது. இத்தகைய மண் வயணங்களுடைய வயலில், நெற்பயிர் நல்ல மகசூல் தருகிறது.

இதற்கு மாறாக, எளிதில் நீர் வடிந்துவிடக் கூடிய மணற்பாங்கானதும், குறைந்த அளவு மண் கண்டமுடையதும், மிகவும் வளம் குறைந்ததுமான நிலங்கள் நெற் சாகுபடிக்கேற்றதல்ல! நீண்ட காலம் நீர் தேங்கி நிற்கும் வடிகால் வசதியற்ற நிலங்களும் ஏற்றதல்ல! இத்தகைய நிலங்களில் நெற்பயிர் மிகக் குறைந்த மகசூலே தருகின்றன!

உயர்ந்த மகசூலுக்குச் சிறந்த ரகங்கள்!

குறுவைப் பட்டத்தில் உயர்ந்த மகசூல் பெற வேண்டுமானால், உயர் விளைச்சல் தரும் குட்டையான நெல் இரகங்களையே பயிரிட வேண்டும். ஏனெனில், நாட்டு இரகங்களைவிட, உயர் விளைச்சல் தரும் இரகங்களின் உற்பத்தித் திறன் மிகவும் அதிகம்! உயர் விளைச்சல் தரும் புதிய இரகங்களில் மிகக் கூடுதலான உற்பத்தித் திறனுடன் கூடிய சிறந்த இரகங்களைத் தேர்ந்தெடுத்துச் சாகுபடி செய்வதே சாலச் சிறந்தது. இத்தகைய இரகங்களைச் சாகுபடி செய்தால்தான், நிலத்தில் இயற்கையாகவே அமைந்துள்ள நிலவளத்தை மிகச் சிறப்பான முறையில் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

130 நாட்கள் வயதுடைய உயர் விளைச்சல் தரும் நெல் இரகங்களே அதிக உற்பத்தித் திறனுடையவைகளாக விளங்குகின்றன! ஆகவே, கூடுமானவரையில் குறுவைப் பட்டத்தில் 130 நாட்கள் வயதுடைய 'ஜெயா', 'சோனா' (ஐ.இ:டி. 1991) போன்ற உயர் விளைச்சல் தரும் நெல் இரகங்களைக் குறுவைப் பட்டத்தில் பயிரிடுவதே மிகவும் இலாபகரமானதாக இருக்கும். நீர்பாசன வசதி இல்லாததாலோ அல்லது வேறு காரணமாகவோ, 130 நாட்கள் வயதுடைய உயர் விளைச்சல் தரும் நெல் இரகங்களைப் பயிரிட இயலாதபோது, 130 நாட்களைவிடக் குறைந்த அல்லது அதிகமான வயதும், உயர்ந்த உற்பத்தித் திறனும் கொண்ட கீழ்க்கண்ட இரகங்களில் ஏதேனும் ஒன்றைத் தமிழ்நாட்டில் பயிரிடலாம்.

குறுவைக்கு ஏற்ற சிறந்த இரகங்கள்!

வரிசை எண் (1)	இரகத்தின் பெயர் (2)	பெற்றோர் (3)	வயது (நாட்கள்) (4)	ஏக்கர் விளைச்சல் திறன் (கிலோ) (5)
1.	ஐ.ஆர்.8	பீட்டா×டி.ஜீ.வோ. ஜென்.	130 முதல் 140	3,200
2.	பவானி	பீட்டா×பீபி-176	130 முதல் 135	3,200
3.	ஐ. ஆர். 20	ஐ. ஆர். 262 × டீ. கே. எம். 6	125 முதல் 130	3,200
4.	ஜெயா	டீ. என். 1 × டீ. 141	125 முதல் 130	3,200
5.	சோனா	டீ. என். 1×ஜிஇபி. 24	125 முதல் 130	3,000
6.	ரத்னா	ஐ. ஆர். 8 ×டீ. கே. எம். 6	115 முதல் 125	2,400
7.	வைகை	டீ.என். 1 × கோ. 29	115 முதல் 120	2,500
8.	காஞ்சி	டீ. என். 1×கோ. 29	110 முதல் 115	2,800
9.	பெண்ணை	டீ. என். 1×ஏ. எஸ். டி. 1	110 முதல் 115	2,800
10.	கரிகாலன்	டீ. என். 1× ஆடுதுறை. 27	110	2,000
11.	கோ. 29	கோ. 13× கோ. 4	110	2,500
12.	காவேரி	டீ. என். 1× டீ. கே. எம். 6	105 முதல் 110	2,400
13.	திருவேணி	அன்னபூர்ணா×பிடீபி. 15	105 முதல் 110	2,500
14.	அன்னபூர்ணா	பிடீபி. 10× டீ. என். 1	100 முதல் 110	2,400
15.	கோ. 33	ஐ. ஆர். 8× ஏ.டி.டீ. 27	108	2,500
16.	ஆடுதுறை-27	நோரின் 8× ஜிஇபி. 24	105	2,500
17.	ஆடுதுறை 31	ஐ. ஆர். 8 X கல்ச்சர் 340	105	2,500
18.	கண்ணகி.	ஐ. ஆர். 8 X டீ. கே. எம். 6	103	2,200
19.	பூசா — 33	சபர்மதி X ரத்னா	105	2,500
20.	ஐ. ஈ. டி. 1722	ஐ. ஆர். 8 X தாடுக்கன்	104	2,200

நீர்ப்பாசன வசதிக்கேற்ப மேற்கூறிய இரகங்களில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் பயிரிட்டால் குறுவைப் பட்டத்தில் பெரும் மகசூல் பெற்றுப் பயன்பெறலாம்.



TNSCB: 112

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின்
"சிறுமலர்கள் சேமிப்பு திட்டம்."
மாணவர்களும், சிறு வியாபாரிகளும் எளிதாக சேமிக்க, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் ஒரு புதிய திட்டம்.

உங்கள் சக்திக்கு ஏற்ப, சிரமமின்றி சேமிப்பது நலம். எங்கள் "சிறு மலர்கள் சேமிப்பு திட்டம்" அதற்கு உதவுகிறது. உண்டியல் சேமிப்பு திட்டத்தின் மூலம் மாணவர்களும், சிறு வியாபாரிகளும் தங்கள் சேமிப்பை எங்கள் தலைமை அலுவலகம் அல்லது சென்னையில் உள்ள 23 கிளைகளில் சேமிப்பு கணக்கில் முதலீடு செய்யலாம்.

ரூ. 5/- செலுத்தி புதிய சேமிப்பு கணக்கு ஆரம்பிக்கும் ஒவ்வொரு நபருக்கும் அழகான ஒரு உண்டியல் வழங்கப்படும்.

TNSC BANK

உண்டியலில் அவ்வப்பொழுது சேரும் சில்லறை காசுகளை சேர்த்து மாதம் ஒரு முறையாகிலும் அல்லது உண்டியல் நிறைந்தவுடனும் எங்கள் வங்கியில் செலுத்தி உங்கள் சேமிப்பு கணக்கில் வரவுவைத்துக் கொள்ளலாம்.

உங்கள் சேமிப்பு கணக்கில் உள்ள முதலீட்டின் பேரில் 5.75% வட்டி வழங்கப்படுகிறது. மேலும் உங்கள் சேமிப்பு கணக்கில் உள்ள பணத்தை லாபகரமாக முதலீடு செய்ய வழிவகைகளை எங்கள் கிளை மேனேஜர் தெரிவிப்பார். இத் திட்டத்தின் மூலம் சிறுக சேர்த்து உங்கள் எதிர்கால தேவைக்கு முதலீடு செய்யுங்கள்.

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

379, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலை, சென்னை-600001.

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி உங்கள் சேமிப்பை அதிகரிக்கவும், நாட்டின் விவசாய மற்றும் பொருளாதார வளர்ச்சிகளுக்கும் உதவுகிறது.

தமிழ்நாட்டில் கல்லூரிக் கல்வியின் வளர்ச்சி!

—திருமதி ஸ்டெல்லா செளந்தரராஜ்
கூட்டு இயக்குநர்,
கல்லூரிக் கல்வித் துறை.

சிறந்த கல்வியை—கிடைக்கின்ற நிதி ஆதாரங்களுக்கு உட்பட்டு—அளித்திட வேண்டும் என்பதே தமிழ்நாடு அரசு மற்றும் தமிழகக் கல்வித் துறையின் இலட்சியமாக உள்ளது.

தமிழ்நாட்டின் கல்விக்காக 1976—77-ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூபாய் 127.18கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் கல்லூரிக் கல்விக்காக மட்டும் இந்த ஆண்டில் ரூபாய் 11.61 கோடி செலவிடப்படும்.

கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக அல்லது கட்டட அமைப்பை விரிவுபடுத்துவதற்காகப் பல்கலைக் கழக மானியக் குழுவால் வழங்கப்படும் உதவிகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் இயன்ற இடங்களில் கல்லூரிகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

கல்லூரிகளை அதிகமாகத் திறப்பது, பாடத் துறைகளை அதிகமாகத் துவக்குவது, இருக்கின்ற கல்லூரிகளின் வசதிகளைப் பெருமளவில் பெருக்குவது ஆகியவற்றின் காரணமாகக் கல்லூரிக் கல்விக்காகும் செலவு ஆண்டுக்கு ஆண்டு தொடர்ந்து அதிகமாகி வருகிறது.

கல்லூரிக் கல்வி இயக்ககம் 1965-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. இந்த இயக்ககத்தினுடைய கட்டுப்பாட்டின் கீழ் எல்லா கலை, விஞ்ஞான, பயிற்சி, உடற்கல்வி, சமூகக் கல்வி, கிராமப்புறக் கல்வி, இசைக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. தமிழ்நாட்டில் தற்பொழுது இந்த இயக்ககத்தினுடைய கட்டுப்பாட்டின் கீழ் 237 கல்லூரிகள் இயங்குகின்றன. இக்கல்லூரிகளில் 1,41,310 ஆண்களும், 61,023 பெண்களும் பயிலுகின்றனர். இவர்களுக்குப் பயிற்றுவிக்கும் பணியை 8,307 ஆண்களும், 3,328 பெண்களும் செய்து வருகின்றனர்.

வேலை அடிப்படையான கல்வி:

உயர்நிலைப் பள்ளிக்கூடப் படிப்பை முடித்த ஒவ்வொருவருக்கும் எளிதில் கிட்டும் வகையில் கல்லூரிக் கல்வி அமைய வேண்டும். மாணவர்கள், தங்களுடைய எதிர்கால வாழ்வை வளமாக அமைத்துக் கொள்வதற்கு உதவும் வகையில் கல்லூரிக் கல்விக்குப் பிறகு பெறும் பட்டம் அமைந்திட வேண்டும். எனவே தான், புத்தகத் தொழில், சுற்றுலா, மக்கள் தொடர்பு, ஒருங்கிணைந்த செயலர் பணி போன்ற வேலை அடிப்படையான பாடத் திட்டங்கள் பல்வேறு கல்லூரிகளில் துவக்கப்பட்டுள்ளன.

'பி.காம்' பட்டதாரிகளுக்குப் பெருமளவில் தேவை உள்ளதால், இப்படிப்புத் திட்டம் நகரம் மற்றும் கிராமப் புறத்தில் உள்ள பல்வேறு கல்லூரிகளில் வழங்கப்படுகிறது.

இடங்கள்:

உயர்நிலைப் பள்ளிப் படிப்பில் தேர்ச்சி பெற்று வெளிவரும் மாணவர்களுக்குப் போதுமான இடங்கள் அரசினர் மற்றும் தனியார் கல்லூரிகளில் உள்ளன. துரதிருஷ்ட வசமாக மாணவர்கள், தேர்ந்தெடுத்த நகரக் கல்லூரிகள் மற்றும் கிராமப் புறக் கல்லூரிகளில் மட்டுமே சேருவதற்குத் துடிக்கின்றனர். இதனால் கிராமப் புறங்களில் அமைந்துள்ள பல கல்லூரிகளில் உள்ள இடங்கள் நிறைவு பெறுமலே கிடக்கின்றன.

இலவசக் கல்வி:

கல்வி பெறுவதற்கான வாய்ப்பு அனைவருக்கும் சமமாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காக தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெற்றோர்களின் ஆண்டு வருவாய் அல்லது இனம் ஆகியவற்றைக் கருதாமல், தமிழ் நாட்டைச் சார்ந்தவராக இருப்பின், புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. இதனால் உயர்நிலைப் பள்ளி நிலைக்கு மேற்பட்ட நிலையில் கல்வி கற்க விரும்பும் ஒவ்வொரு தமிழ் நாட்டுப் பையனும், பெண்ணும் மேற்படிப்பைத் தொடர முடிகிறது.

தர மேம்பாடு:

கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக முயற்சிகள் தீவிரப்படுத்தப்படுகின்றன. நாட்டின் இதர பகுதிகளில் இருந்து வரும் பட்டதாரிகள் பெற்றுள்ள பொதுவான கல்வி அடிப்படைக்கும், தொழில் திறமைக்கும் இணையாக இருக்கும் பொருட்டு பல்வேறு பாடமுறைகளில் பல்கலைக் கழக பாடத் திட்டங்கள் உயர்த்தப்பட்டுள்ளன.

நமது கல்லூரி ஆசிரியர்களுக்குப் பருவந்தோறும் நினைவூட்டு மறு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன; புதிய பாடத் திட்டங்களில் நன்கு தெளிவு பெற கருத்தரங்குகளும் நடத்தப் பெறுகின்றன. பல்கலைக் கழக மானியக் குழுவினால் ஏற்படுத்தப்படும் கோடைக் கால நிலையங்களில் பங்கு பெறவும் ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

கல்லூரிகளில் அளிக்கப்படும் போதனையின் தரத்தை நிர்ணயிக்க, ஆசிரியர்களின் தெளிந்த அறிவும், திறமையும் பெருமளவில் உதவிடும். பல்வேறு பாடத் துறையைச் சார்ந்த பணியாளர்கள் பருவந்தோறும் ஒன்று கூடவும், தொடர்புடைய பாடத்தின் ஆசிரியர்களின் அறிவை இன்றைய நிலைக்கு உயர்த்தவும், புதிய போதனை நுட்பங்களையும், மதிப்பீடு செய்வதற்கான சிறந்த முறைகளையும் தோற்றுவிக்க பல்வேறு மையங்களில் கல்வி வட்டங்கள் (Study circle) ஏற்படுத்தப்

பட்டுள்ளன. அவைகள், போதனைகள் மற்றும் ஆசிரியர்களின் தரத்தை அவர்களேமேம்படுத்திக் கொள்வதற்கு வழி வகுக்கும் கருத்துக்களை சுமுகமாகப் பரிமாறிக் கொள்ளவும் உதவுகின்றன.

மாணவர் சமுதாயத்தின் நன்மைக்கான புதுமைத் திட்டங்களை தீட்டிச் செயல்படுத்துவதில் கல்லூரி முதல்வர்களை ஊக்குவிப்பதற்காக, கல்லூரி முதல்வர்களுக்கு பரிசுகளும்—புத்தகங்கள் வடிவில்—வழங்கப்படுகின்றன.

'ஐ. ஏ. எஸ்' மற்றும் இதர பணிகள் போன்ற போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ள விரும்பும் சிறந்த மாணவர்களுக்கு உதவும்வகையில், இந்தத் தேர்வுகள் பற்றிய பயனுள்ள விவரங்கள் அடங்கிய சிறு நூல் தயாரிக்கப்பட்டு, பல்வேறு கல்லூரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

உதவிபெறும் நிறுவனங்கள்

அரசு உதவியுடன் கல்வியை மேம்படுத்துவதில் தனியார் நிருவாகங்கள் மிக முக்கியமான அங்கம் வகித்துள்ளன. தனியார் கல்லூரிகளுக்கு உதவி மானியம் வழங்கும் விதிமுறை தளர்த்தப்பட்டது. 1975-76-ஆம் ஆண்டில் மட்டும் தனியார் கல்லூரிகளுக்கு ரூபாய் 393.07 இலட்சம் உதவி மானியமாகச் செலவிடப்பட்டுள்ளது. அரசினர் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், உதவிபெறும் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் ஒரே மாதிரியான சம்பள விகிதமும், இதர படிகளும் வழங்கப்படுகின்றன. உதவிபெறும் கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்களுக்குத் தளர்த்தப்பட்ட ஓய்வூதியத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

கூடுதல் வசதிகள்

வேலை பார்க்கின்றவர்களுக்கு மாலை நேரக் கல்லூரிகள் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளன். முதுநிலைப் பட்டம் பெறும் நிலைவரையான பாடங்களைப் பயில அவை உதவுகின்றன. இத்துடன் கூட, மதுரைப் பல்கலைக் கழகம், அஞ்சல்-வழிக்-கல்வியையும் அளித்து வருகிறது.

ஊக்குவிப்புகள்

மாணவர்களின் அறிவை வளர்க்கவும், அவர்களுக்குத் தெளிவு ஏற்படுத்தவும் தாய்மொழிமூலம் கல்வி கற்பிப்பதே மிகச் சிறந்த வழியாகும் என்று கல்வி வல்லுநர்கள் கருதுவதால், கல்லூரி மாணவர்கள் தமிழ் மொழி வாயிலாகக் கல்வி கற்பதற்கு புகுமுக வகுப்பு மற்றும் பட்ட வகுப்புகளில் ஊக்குவிப்பு உதவித் தொகை—புத்தக வடிவில்—அளிக்கப்படுகிறது.

உயர்ந்த தரமுடைய புத்தகங்களை எழுதிட கல்லூரி ஆசிரியர்களுக்கு—அரசுப்பணியில் இருந்தாலும் சரி அல்லது தனியார் நிருவாகத்தில் இருந்தாலும் சரி-ஊக்குவிப்பு மற்றும் ஊதியம் பற்றிய தளர்த்தப்பட்ட கொள்கையின்படி ஊக்கம் அளிக்கப்படுகிறது.

பல்கலைக் கழகத் தேர்வுகளில் சிறப்பான தேர்வு முடிவுகளை ஏற்படுத்திய கல்வி நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கான, சென்னை மற்றும் மதுரைப் பல்கலைக் கழகப் பகுதிகளில் சுழற் கோப்பைகள் வழங்கப்படுகின்றன.

இந்திய அரசின் படிப்பு உதவித் தொகையும் தமிழ்நாடு அரசு படிப்பு உதவித்தொகையும் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பல்வேறு பாடத்துறை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

மாணவர்களுக்குரிய வசதிகளை மேம்படுத்துவதற்கு மேற்கொண்ட முயற்சிகள், மாணவர்களின் கல்வித் தரத்தையும் கட்டுப்பாடான நடத்தையையும் உயர்த்துவதற்குப் பெருமளவில் உதவியுள்ளன. இவ்வகையில், இதுவரைஎவ்வளவோ, செய்திருந்தாலும், மாணவர் சமுதாயமும் மற்றும் கல்லூரிக் கல்வியும் மேலும் மேம்பாடு அடைவதற்கான வழிவகைகளைக் காண்பதில் கல்லூரிக் கல்வி இயக்ககம் தொடர்ந்து கண்காணிப்புடன் செயலாற்றி வருகிறது.

கல்லூரிக்கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் கல்லூரிகள்

விவரம்		அரசினர் கல்லூரிகள்		தனியார் கல்லூரிகள்		மொத்தம்		கூடுதல் மொத்தம்
		ஆண்களுக்கு	பெண்களுக்கு	ஆண்களுக்கு	பெண்களுக்கு	ஆண்களுக்கு	பெண்களுக்கு	
1		2	3	4	5	6	7	8
கலைக்கல்லூரிகள்	...	38	13	99	39	137	52	189
பயிற்சிக் கல்லூரிகள்	...	5	2	8	8	13	10	23
கீழ்த்திசைக் கல்லூரிகள்	...	—	—	16	—	16	—	16
உடற்பயிற்சிக் கல்லூரிகள்	...	—	—	3	—	3	—	3
சமூகக்கல்விக் கல்லூரிகள்	...	—	—	2	—	2	—	2
கிராமியக் கல்விக் கல்லூரிகள்	...	—	—	2	—	2	—	2
இசைக்கல்லூரிகள்	...	1	—	—	—	1	—	1
ஆயுர்வேதக் கல்லூரிகள்	...	—	—	1	—	1	—	1
மொத்தம்	...							237

தரமான பள்ளிக் கல்வி தழைப்பதற்குரிய வழிகள்

—டாக்டர் எச். எஸ். எஸ். லாரென்ஸ்,
பள்ளிக் கல்வி இயக்குநர்,

தரமான பள்ளி என்பது சிறப்பு மிக்க உணர்வுகளைக் கொண்டதாக விளங்க வேண்டும். அதனுடைய செயல்திட்டத்தில் அந்தச் சிறப்பு மிக்ககவர்ச்சியான ஒரு முனைப்புள்ள கருத்துச் செறிவு அமைந்திருக்கும்.

சில புதிய வழி முறைகளை முயற்சி செய்து பார்த்தல், சில புதிய சோதனைகளை சுடர் வீசச் செய்தல், ஒன்றிரண்டு புதிய முனைகளை உருவாக்கிக் கொண்டு முன்னேக்கிச் செல்லல், தன்னிடம் பயிலும் ஒவ்வொரு சிறுவரைக் குறித்தும் தனக்குரிய ஆழ்ந்த பொறுப்பான அக்கறையை உதறி விடாமலே, சில உயரிய இலக்குகளை நோக்கித் தன் செயலாற்றலைத் திருப்பி விடல்—ஆகியவை ஒரு பள்ளித் திட்டப்படி மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் ஆகும்.

நம்முடைய வாழ்க்கை நெறியில் ஐயப்பாடற்ற அக்கறையை வெளிப்படுத்தி, பண்டைய மரபுகளை உணர்த்தி, இந்த நாட்டில் உணர்வைப் பேணிக் காத்து, பிடிவாதம் பிடிக்காமல் இசைந்து கொடுக்கின்ற தெளிவு படைத்த ஒரு நிருவாகத்தை நிலைநிறுத்தி இயங்குவதே ஒரு தரமான பள்ளி ஆகும்.

தரமுள்ள தலைமையாசிரியர்கள் :

பள்ளிகளின் தர வளர்ச்சியை உருவாக்குவதற்கு தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் தரத்தை நாம் வளர்த்தாக வேண்டும். ஒரு பள்ளியின் நல்ல நிலைமைக்கு மிகப் பெரிய தனிச் சக்தியாக விளங்குவது அதன் தலைமையாசிரியருடைய தரமேயாகும். அவர் என்ன செய்கிறார் என்பதை விட, அவர் எப்படித் தரமாக நடக்கிறார் என்பதே முக்கியம். ஆசிரியர்களும், தலைமையாசிரியர்களும் பள்ளிக்கூடத்தை ஆக்கவும் செய்யலாம்; அழிக்கவும் செய்யலாம்.

முறையான கண்காணிப்பு, வழிகாட்டுதல் ஆகியவற்றின் மூலம் பள்ளிகளின் தரத்தை உயர்த்த முடியும். மாணவர்களிடம் நேரடியான தனிப்பட்ட கவனம் செலுத்திஒழுங்கானமேற்பார்வையிட்டு, அறிவுறுத்தி பாடங்களைக் கற்பிக்கின்ற—கற்கின்ற முறைகளிலும், பாட நூல்களையும், —வழிகாட்டி நூல்களையும் பயன்படுத்துகின்ற வகைகளிலும், பள்ளித் தேர்வு முடிவுகளிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கொண்டு வர வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

கற்பித்தல்தான் பள்ளிக்கூடத்தின் பணி என்று தெளிவுறுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். பயனுள்ள அமைப்புகள், திட்டங்கள், ஆசிரியர் மாநாடுகள், பயிற்சி வகுப்புகள், போதனை முறைகளைச் செயற்படுத்திக் காட்டுதல், கண்காட்சிகள், அடிக்கடி நடக்கும் சுற்றுலாக்கள், தகுந்த நிதி ஒதுக்கீடுகள் முதலானவை மூலம் பள்ளிகள் தங்களுடைய தரமான வளர்ச்சியை நோக்கிப் பீடு நடை போடலாம். பள்ளியின் நடைமுறைகளில் சில புதிய பரிசோதனைகளைப் புகுத்தவும் நாம் ஊக்கமூட்ட வேண்டும். ஒரு தரமுள்ள பள்ளியின் வளர்ச்சியை முன்னிட்டு, தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் ஆகியோரிடம் பொதிந்து கிடக்கும் நேர்த்தியான சிறப்பியல்புகள், திறமைகள், ஆற்றல்கள் ஆகிய அனைத்தையும் வெளிப்படுத்துவதற்கும் நாம் வழி வகை காண வேண்டும்.

கல்வி கற்பதையும், கற்பிப்பதையும் வளர்ப்பதுதான் கண்காணிப்பு என்பதாகும். அது, மாணவர்களோடு உழைக்கின்ற ஆசிரியர்களுடன் சேர்ந்து உழைப்பதன் மூலமே நடைபெற வேண்டியது. ஆசிரியர்கள் தங்கள் வகுப்புகளுக்கு உரியவற்றைத் திட்டமிட்டுத் தயாரிக்கிறார்களா என்று கவனிக்க வேண்டும்.

மாணவர்கள் தரம் வளர :

மாணவர்களின் ஒட்டு மொத்தமான வளர்ச்சிக்காக மட்டுமன்றி, பள்ளிகளில் அவர்களுடைய தரத்திற்காகவும் நாம் பணியாற்ற வேண்டும், கட்டுப்பாடு, நன்னடத்தை, கலாச்சாரம் கொண்ட சிறந்த குடிமக்களாக அவர்கள் பயிற்சியும் பக்குவமும் பெறுகின்ற வகையில், பள்ளி மாணவர்களுக்கு எல்லாக் கோணங்களிலுமான படிப்பு அனுபவங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

நேர ஒழுங்கு, துப்புரவு, பணிவு, தலைமை ஆற்றல், நல்லொழுக்கம் ஆகியவற்றில் பள்ளி மாணவர்களுக்குப் பயிற்சி தர வேண்டும்.

மாணவர்களிடமுள்ள தனித் திறமைகளை, தன்னேரில்லாத சிறப்புக்களை இனங் கண்டு தெளிந்து அவற்றை வளர்க்க வேண்டும்; அவர்களுடைய பலங்களை, பலவீனங்களை, உணர்வுகளை விருப்பங்களை மதித்துப் பொருட்படுத்த வேண்டும் என்பதே இதற்குப் பொருள். மாணவர்களுடைய தனித் தன்மையை வளர்க்கும் பொழுதே, மற்றவர்களுடைய உணர்வுகளையும், தனித் தன்மைகளையும் மதிக்கின்றவர்களாக, பொறுப்புள்ளவர்களாக மாணவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும். அறிவில், ஆற்றலில், கூர்மையில், அவர்கள் ஓங்கி வளர தோழமையோடு துணை புரிய வேண்டும். அவர்களுடைய தனி வளர்ச்சிக்குரிய தக்க சூழ்நிலையை நாம் உருவாக்கித் தர வேண்டும்.

கண்காணிப்பு உள்ள படிப்பு, அந்தந்தக் கால வெளியில் செய்யப்படும் மதிப்பீடு, அவர்களுடைய செயல் திறன்கள் பற்றிய கணிப்பு, படைப்பாற்றலை வெளிப்படுத்துவதற்குரிய வாய்ப்புகள், கூட்டணியாகப் பணியாற்றுவதில் அவர்களுக்குள்ள பங்கு, குடிமகன் தகுதிக்கேற்ற பயிற்சி ஆகியவை மாணவர்களின் மனத்துக்கிசைந்த வளர்ச்சிக்குப் பெருமளவு துணை புரியும்.

பொதுமக்கள் ஒத்துழைப்பு :

பள்ளிகளின் தரத்தை உயர்த்துவதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பையும் நாம் பெற்றாக வேண்டும்.

அரசு மட்டுமே, பள்ளிக்கூடத்திற்கான எல்லா முன்னேற்றங்களையும் கொண்டு வந்துவிட முடியாது. பள்ளிகளுக்கு வசதிகளை வழங்குவதன் மூலம் ஒரு பெரும் பங்கினைச் சமுதாயம் மேற்கொள்ள முடியும். அந்த வசதிகளே, தரமான கல்வி வளர்ச்சிக்கு இயல்பான துணையும் ஆகும். தங்களுடைய பிள்ளைகளுடைய கல்வித் தரத்தை உயர்த்துவதில் பெற்றோர்களுக்கும் பெரும் பங்கு இருக்கிறது என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

அஞ்சலக வங்கியின்

மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜுலையிலும்** நடைபெறும்

ரூ. 20½ இலட்சத்திற்கு

11,116 பரிசுகள்

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று	...	ரூ.	1,00,000
5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும்	...	ரூ.	50,000
10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும்	...	ரூ.	20,000
100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும்	...	ரூ.	5,000
1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும்	...	ரூ.	500
10,000 ஆறும் பரிசுகள் ஒவ்வொன்றும்	...	ரூ.	50

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறுதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

இயக்குநர்,

தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,

சென்னை-600 002.

20-அம்சத் திட்டமும் மாணவர்களும்!

இன்றைய மாணவர்களே, வருங்காலத்தில் நமது இந்தியாவை வளம் கொழிக்கும் நாடாகவும், வலிமை மிக்க நாடாகவும் ஆக்கவிருக்கும் அறிஞர்களாகவும் அரசியல் மேதைகளாகவும், பொருளாதார நிபுணர்களாகவும், விஞ்ஞான வித்தகர்களாகவும், நாடு காக்கும் வல்லவர்களாகவும், நல்ல குடிமக்களாகவும்விளங்கப் போகிறார்கள். எனவே, இன்றைய மாணவர்களின்குறைகளைத் தீர்த்து அவர்களை அறிவிற் சிறந்தவர்களாகவும், ஆக்கப்பணியில் ஈடுபடும் ஆர்வம் உடையவர்களாகவும் ஆக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடனேயே நமது பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இருபது அம்சங்களில், 2 அம்சங்களை, மாணவர்களின் நலனுக்காக ஒதுக்கியுள்ளார்.

தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட்டபின் இருபது அம்சத் திட்டத்தின் 18-வது அம்சம், 19-வது அம்சம் ஆகியவைகளை விரைந்து செயல்படுத்தி வருவதினுல் மாணவர்களிடையே அமைதி நிலவுகிறது; அதன் பயனுய் அவர்கள் கல்வியில்கண்ணும் கருத்துமாக இருந்து, தேர்வில் வெற்றி பெற முடிந்துள்ளது. இருபது அம்சத் திட்டத்தின் கீழ் தமிழக மாணவர்கள் பின்கண்டவாறு பெரும் பயன் பெற்றுள்ளார்கள்.

18-வது அம்சம்

மாணவர் விடுதிகளுக்கு நியாய விலையில் இன்றியமையாப் பொருள்கள் வழங்கப்படும் :

தமிழ் நாட்டைச் சார்ந்த ஏராளமான கல்லூரி மாணவர்களும், பள்ளிக்கூட மாணவர்களும் 18-வது அம்சத்தின் கீழ் பெரும் பயன் பெற்று வருகின்றனர் என்றுல் மிகையாகாது!

கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர் விடுதிகளுக்கும், அரிசன நலத் துறையின் மாணவர் விடுதிகளுக்கும், பின் தங்கியோர் நலத் துறையின் விடுதிகளுக்கும் தேவைபடும் அரிசி, கோதுமை, ரவா, மைதா, சர்க்கரை போன்றவை நியாயமான — கட்டுப்படுத்தப்பட்ட விலையில்—வழங்கப்படுகின்றன.

எல்லா மாணவர் விடுதிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் கூட்டுறவு பண்டகசாலை அமைத்துத் தேவையான பொருள்களைச் சிக்கனமான விலையில் மாணவர்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களையும், கல்லூரிகளையும் சார்ந்த 246 மாணவர் விடுதிகளில் 204 விடுதிகள், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களால் பயனடைகின்றன. கோடை விடுமுறை முடிந்து கல்லூரிகளும், பள்ளிகளும் திறக்கப்பட்டவுடன் மற்ற விடுதிகளிலும், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் திறக்கப்படும்.

தமிழ் நாடு நுகர் பொருள் துறையால் வழங்கப்படும் உணவு தானியங்கள் மற்றும் இதர நுகர் பொருள்களினுல் பயன் அடையும் மாணவர்களின் எண்ணிக்கை 36,523 லிருந்து 37,522க்கு உயர்ந்துள்ளது. கோடை விடுமுறை முடிந்து கல்லூரிகள் திறக்கப்பட்டதும் மேலும் அதிகமான மாணவர்கள் இத்திட்டத்தினுல் பயன் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ் நாட்டில் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக 574 விடுதிகளும், பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக 231 விடுதிகளும் உள்ளன. அவைகளில் முறையே 35,782 மாணவர்களும், 16,332 மாணவர்களும் உள்ளனர். அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக பெரும்பாலான மாணவர் விடுதிகளில், மாதாந்திரச் சாப்பாட்டுச் செலவு ரூபாய் 10 முதல் 25 வரை குறைந்துள்ளன.

19-வது அம்சம்

மாணவர்களுக்கு மலிவு விலையில் பாடப்புத்தகங்கள், பயிற்சிப்புத்தகங்கள், எழுதுபொருள்கள் முதலியவற்றை வழங்குதல் :

இந்திய அரசு சலுகை விலையில் காகிதம் வழங்கியதால், பாட நூல்களின் விலை குறைந்துள்ளது. இந்திய அரசு, தொடர்ந்து சலுகை விலையில் காகிதங்களை வழங்கி வருவதால், இதே நிலை தொடர்ந்து நீடிக்கும். தமிழ் நாடு பாட நூல் நிறுவனத்தின் மூலமாகப் பாடநூல்களை அச்சிட்டு மலிவு விலையில் வழங்குவதற்கு மன நிறைவு அளிக்கும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. பல்கலைக் கழகப் பாடநூல்களின் விலை, 320 பக்கத்திற்கான ஒரு பாட நூலுக்கு 75 பைசா வீதம் குறைந்துள்ளது. தமிழ் நாட்டில் உள்ள மொத்தம் 189 கல்லூரிகளில், 109 கல்லூரிகளில் புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மற்றக் கல்லூரிகளிலும் கோடை விடுமுறை முடிந்தவுடன் புத்தக வங்கிகளை விரைவாக அமைக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

உயர்நிலைப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் ஆகியவற்றிலும் புத்தக வங்கிகளை அமைக்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

எல்லாப் பள்ளிகளிலும் புத்தக வங்கிகளை அமைப்பதற்காக, 8-வது வகுப்பு வரையான மாணவர்களுக்கு என வரையறுக்கப்பட்டுள்ள, 5 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள புத்தகங்களை வழங்கும்படி, தமிழ் நாடு பாட நூல் நிறுவனத்திற்கு ஆணையிடப்பட்டு உள்ளது.

1976 ஏப்ரல் மாதத்தில் 1,098 உயர்நிலைப் பள்ளிகளிலும், 3,521 ஆரம்பப் பள்ளிகளிலும் நடுநிலைப் பள்ளிகளிலும் புத்தக வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தேசிய ஒருமைப் பாட்டு உணர்ச்சியை அழிக்கக் கூடிய அல்லது அரசியல் கருத்துக்களைப் புகுத்தக் கூடிய தகவல்கள் பாட நூல்களில் இடம் பெற்றுள்ளதா என்பதைக் கண்டறிந்து அவைகளை அகற்றிவிடுவதற்காக நால்வர் குழு ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது. நோட்டுப் புத்தகங்களின் விலையும் குறைந்துள்ளது. நோட்டுப் புத்தகங்களுக்கும், பென்சில்களுக்கும் விற்பனை வரியிலிருந்து விதி விலக்கு அளித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

மாணவர்களின் நலன் கருதி தமிழ் நாடு அரசு, பயிற்சிப் புத்தகங்களின் (நோட்டுபுத்தகம்) அளவு, விலைஆகியவற்றை முறைப்படுத்தி ஆணை பிறப்பித்துள்ளது. இதனுல் மாணவர்களுக்கு மலிவு விலையில் பயிற்சிப் புத்தகங்கள் கிடைப்பதுடன், மாணவர்களின் பெற்றோர்களுக்கும் செலவு குறைந்துள்ளது என்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.



பயிற்சிப் புத்தகங்களின் விலைகள் குறைக்கப்பட்டன!

இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் பயனாய், மாணவர்களுக்குப் பயிற்சிப் புத்தகங்கள் நியாயமான விலையில் கிடைத்து வருகின்றன. பயிற்சிப் புத்தகங்களின் உற்பத்தியிலும், விற்பனையிலும் ஒரே மாதிரியான நிலைமையை ஏற்படுத்துவதற்காக, சலுகை விலையில் இந்திய அரசினால் வழங்கப்படும் தாள்களிலிருந்து தயாரிக்கப்படும் பயிற்சிப் புத்தகங்களின் அளவுகளையும், விலைகளையும் இந்திய அரசு நிர்ணயித்துள்ளது. தற்பொழுது நிர்ணயிக்கப்பட்டுள்ள வரைமுறை மற்றும் விலையையே, சலுகை விலையில் வழங்கப்படும் தாள்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பல்வேறு வகையான பயிற்சிப் புத்தகங்களுக்கும் பின்பற்றப்பட வேண்டும் என்றும் இந்திய அரசு யோசனை தெரிவித்துள்ளது. இந்த யோசனைக்கு ஏற்ப, கீழே குறிப்பிட்டுள்ள அளவுகளையும், விலைகளையுமே பயிற்சிப் புத்தகங்களை உற்பத்தி செய்பவர்கள் அனைவரும் ஒரே மாதிரியாகப் பின்பற்ற வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

அளவுகள்

1. ஸ்டாண்டர்டு அளவு பயிற்சிப் புத்தகங்கள்—19.3X15.5 செ.மீ.

2. கல்லூரி பயிற்சிப் புத்தகம் (முழு அளவு பயிற்சிப் புத்தகங்கள்)—31X19.3 செ.மீ.

3. செய்முறைப் பயிற்சிப் புத்தகங்கள்—25 X 20 செமீ.

மேல் அட்டைக்குப் பயன்படுத்தப்படும் தாள்களின் எடை பின்கண்டவாறு இருக்க வேண்டும் :

	ஒரு சதுர மீட்டருக்கு
1. பைண்ட் செய்யப்படாத பயிற்சிப் புத்தகங்களுக்குப் பயன்படுத்த வேண்டிய வெண்மையான அச்சுத் தாளின் எடை ...	... 60 கி.
2. பாதியளவு பைண்ட் செய்யப்பட்ட கல்லூரிக்கான முழு அளவுப் பயிற்சிப் புத்தகங்களுக்குப் பயன்படுத்த வேண்டிய தாளின் எடை	... 90 கி.
3. செய்முறைப் பயிற்சிப் புத்தகங்களுக்குப் பயன்படுத்த வேண்டிய தாளின் எடை ...	... 120 கி
4. 150 பக்கங்கள் வரை கொண்ட பைண்ட் செய்யப்பட்ட பயிற்சிப் புத்தகங்களுக்குப் பயன் படுத்த வேண்டிய அட்டையின் (Straw board) எடை ...	... 8 அவு.
5. 150 பக்கங்களும் அதற்கு மேற்பட்ட பக்கங்களும் கொண்ட பைண்ட் செய்யப்பட்ட பயிற்சிப் புத்தகங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய அட்டையின் எடை	10 அவு.
6. 80 மற்றும் 116 பக்கங்கள் கொண்ட பைண்ட் செய்த செய்முறைப் பயிற்சிப் புத்தகங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய அட்டையின் எடை ...	14 அவு.

(குறிப்பு: கி=கிராம்; அவு=அவுன்ஸ்.)

விற்பனை விலை

பயிற்சிப் புத்தகங்களின் விலை பின்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது :

	ரூ. பை.
1. 48 பக்கப் பயிற்சிப் புத்தகம்	0.25
2. 80 பக்கப் பயிற்சிப் புத்தகம்	0.40
3. (1) 96 பக்க, பைண்ட் செய்யாத பயிற்சிப் புத்தகம்	0.50
(2) 96 பக்க, பைண்ட் செய்யப்பட்ட பயிற்சிப் புத்தகம்	0.65
4. 120 பக்க, பாதியளவு பைண்ட் செய்த மொத்த அட்டைப் பயிற்சிப் புத்தகம்	0.65
5. 144 பக்க, பைண்ட் செய்த பயிற்சிப் புத்தகம்	0.80
6. 192 பக்க, பைண்ட் செய்த பயிற்சிப் புத்தகம்	1.15
7. 240 பக்க, பைண்ட் செய்த பயிற்சிப் புத்தகம்	1.30
8. 72 பக்க, கல்லூரி பயிற்சிப் புத்தகம் (முழு அளவு, மெலிந்த அட்டைப் பயிற்சிப் புத்தகம்)	0.75
9. 80 பக்க, கல்லூரிப் பயிற்சிப் புத்தகம் (முழு அளவு, மொத்த அட்டைப் பயிற்சிப் புத்தகம்)	0.85
10. 56 பக்க, செய்முறைப் பயிற்சிப் புத்தகம் (மொத்த அட்டை)	0.65
11. 80 பக்க, பைண்ட் செய்த செய்முறைப் பயிற்சிப் புத்தகம்	1.30
12. 116 பக்க பைண்ட் செய்த செய்முறைப் பயிற்சிப் புத்தகம்	1.50

''பயிற்சிப் புத்தகங்களைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட தாள்கள் இந்திய அரசினால் சலுகை விலையில் வழங்கப்பட்டதாகும்.'' என்ற வாக்கியம் பயிற்சிப் புத்தகங்களின் மேலே இடம் பெற்றிருக்க வேண்டும். பயிற்சிப் புத்தகத்தின் மேலட்டையில் பக்க எண்களும், விலையும் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்க வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்படும் பக்க எண்களில், பாதியளவு பைண்ட் செய்த மற்றும் முழு அளவு பைண்ட் செய்த பயிற்சிப் புத்தகங்களின் உட்பக்க அட்டையில் ஒட்டப்பட்டுள்ள 4 பக்கங்களும் சேர்ந்ததாகும் ; ஆனால் பைண்ட் செய்யப்படாத பயிற்சி நோட்டுகளின் மேலட்டை சேராததாகும். இருப்பில் உள்ள பழைய பயிற்சிப் புத்தகங்களைத் தற்பொழுது நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுக்கே புதுப்பித்து, புதிய விலையில் விற்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட விலையை விட அதிக விலைக்குப் பயிற்சிப் புத்தகங்களை யாரும் விற்க கூடாது என்றும் தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

பதப்படுத்திய இந்திய உணவுப் பொருட்களுக்கு வெளிநாடு தரும் வரவேற்பு

பதப்படுத்தப்பட்ட பல்வேறு உணவுப் பொருட்களை இந்தியா ஏற்றுமதி செய்து வருகிறது. பதம் செய்த பழச்சாறு, காய்கறி வகைகள், பழவகைகள், ஊறுகாய், சட்னி வகைகள், பதம் செய்த இறைச்சி, பிஸ்கட், திடீர் காப்பி, திடீர் தேனீர், வெங்காயம் போன்றவை பல வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 1975-'76-ஆம் ஆண்டின் முதல் 3 மாதங்களில் மட்டும் 28.20 கோடி ரூபாய்க்குப் பதம் செய்த உணவுப் பொருட்களை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது.

நடப்பு ஆண்டில் அதாவது 1975-'76ல் கொய்யாப்பழ 'ஜாம்' தான் அதிக அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. மொத்த ஏற்றுமதி மதிப்பில் இதன் மதிப்பு 26 சதவிகிதம் ஆகும்.



தொழிற் கல்லூரி மாணவர்களுக்கும் புத்தக வங்கிகள்.

இருபது அம்சத் திட்டத்தின் ஒரு பகுதியான புத்தக வங்கிகள் திட்டத்தின் மூலம் தொழிலியல் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களும் இப்பொழுது பயன் பெறுவார்கள்.

இதுவரையில் கலை, விஞ்ஞானம், வர்த்தகக் கல்விக்கான சுமார் 2,000 கல்லூரிகளில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. பல்கலைக்கழக மானியக் கமிஷனின் தீர்மானத்தையொட்டி நாட்டின் தொழிலியல் கல்லூரிகள் அனைத்துக்கும் இத்திட்டம் இப்பொழுது விரிவாக்கப்பட்டு வருகிறது.

திட்டத்தின்படி, நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த மாணவர்களின் கல்வியில் அவர்களுக்கு உதவுவதற்காக இந்தப் புத்தக வங்கிகள் புத்தகங்களைக் கடனாகக் கொடுக்கும், கடந்த பத்து மாத காலத்தில், மேலும் சுமார் 1,000 கல்லூரிகளில் இத்தகைய வங்கிகள் திறக்கப்பட்டுள்ளன,

புத்தக வங்கிகளைத் திறப்பதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகையில் 75 சதவிகிதத்தைப் பல்கலைக்கழக மானியக் கமிஷன் உதவித் தொகையாக அளிக்கும். புத்தக வங்கிகளைத் திறப்பதற்கான தொகை, அக்கல்லூரியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படும். ஒரு கல்லூரிக்கு ஒரு புத்தக வங்கி என்னும் விகிதத்தில் புத்தக வங்கிகள் திறக்க அனுமதி வழங்கப்படுகிறது.

வேளாண்மைத் தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதியம் உயர்த்தப்பட்டது!

சமுதாயத்தில் வேளாண்மைத் தொழிலாளர்களே நலிந்தவர்களாக உள்ளனர். அவர்களின் குறைந்த பட்ச ஊதியத்தை உயர்த்தி, அவர்களை நிம்மதியாக வாழ வைத்தால்தான், உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். இந்த நல்ல நோக்கத்தின் அடிப்படையில்—ஆண் பெண் என்ற வேறுபாடின்றி, சமமான வேலைக்குச் சமமான ஊதியம் கொடுக்க வகை செய்யும் இந்திய அரசின் 1975-ஆம் ஆண்டு சம ஊதிய அவசரச் சட்டத்திற்கு ஏற்ப—தமிழ்நாடு அரசு 2—3—1976 முதல் வேளாண்மைத் தொழிலாளர்களுக்குரிய குறைந்த பட்ச ஊதியத்தைப் பின்கண்டவாறு உயர்த்தியுள்ளது :

தொழிலாளர் வகை	நாளொன்றுக்கு வழங்க வேண்டிய குறைந்த பட்சக் கூலி — பெரியவர்களுக்கு	நாளொன்றுக்கு வழங்க வேண்டிய குறைந்த பட்சக் கூலி — சிறியவர்களுக்கு
	ரூ. பை.	ரூ. பை.
1. சொந்தக் கலப்பையையும், எருதுகளையும் பயன்படுத்தி உழவு செய்யும் தொழிலாளர்களுக்கு	9.00	...
2. நிலச் சொந்தக்காரரின் கலப்பையையும் எருதுகளையும் பயன்படுத்தி உழவு செய்யும் தொழிலாளர்களுக்கு	5.00	...
3. விதைத்தல், நாற்றுப் பறித்தல் ஆகிய பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு ...	5.00	2.00
4. நாற்று நடுதல், களையெடுத்தல் ஆகிய பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு ...	3.50	2.10
5. அறுவடை செய்தல், கதிர் அடித்தல் ஆகிய பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு	5.00	3.00
6. வரப்புக் கழித்தல், தென்னை, பாக்குபோன்ற உயரமான மரங்களில் இருந்து காய் பறித்தல், எரு சுமத்தல் போன்ற பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு ...	5.00	3.00
7. பால் பண்ணைத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு :		
1. பால் கறத்தல்	5.00	3.00
2. கால்நடைகளைப் பராமரித்தல் ...	3.50	2.10
3. இதர பணிகளுக்கு :		
(அ) திறமை தேவைப்படும் பணிகளுக்கு	5.00	...
(ஆ) திறமை தேவைப்படாத பணிகளுக்கு	3.50	...
8. தேனி வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு	5.00	3.00
9. கோழிப் பண்ணைத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு	5.00	3.00
10. பண்ணை உற்பத்திப் பொருள்களை விற்பனை அங்காடிகளுக்கு அல்லது கிடங்குகளுக்குக் கொண்டு செல்லும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு	5.00	3.00

உழவு வேலையில் ஈடுபடுகின்றவர்கள் 5 மணி நேரம் வேலை செய்ய வேண்டும். இதர பணிகளில் ஈடுபடுகின்றவர்கள் 7 மணி நேரம் வேலை செய்ய வேண்டும். மேற்கூறிய குறைந்த பட்ச ஊதியம் வேளாண்மைத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கிறதா என்பதை வருவாய்த் துறையினர் கண்காணிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கோ-ஆப்டெக்ஸ் மக்கள் விரும்பும் வகைகள்!
நியாயமான விலைகள்!

கோ-ஆப்டெக்ஸ் சேலைகள்,
அழகு மிளிரும் ஆரணங்குகள்!
ஆரணி, கும்பகோணம், காஞ்சிபுரம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம், மதுரை பருத்தி கைத்தறிச் சேலைகள், அச்சிட்ட சுங்கடி சேலைகள் மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்.



கோ-ஆப்டெக்ஸ்
படுக்கை விரிப்புகள்,
மலர்ப் படுக்கைகள்!
நேர்த்தியான நெசவு கைத்தறிப் படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணை உறைகள். உங்களுக்கு சொகுசு அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
துவாலைகள்,
தூய்மையான
துவாலைகள்!
சாதா, டர்கிஷ் வகைகள், மென்மையான மற்றும் ஈரத்தை உறிஞ்சும் வகைகள். உங்களது சுகாதாரத்துக்கு இன்றியமையாதவை!



கோ-ஆப்டெக்ஸ்
லுங்கிகள்,
வசதியானவை
நீடித்துழைப்பவை!
உங்கள் விருப்பத்துக்குகந்த சாதா, கோடிட்ட அல்லது கட்டமிட்ட பல வகைகளில்.

மற்றும் கைத்தறிப் பருத்தி வகைகள், வேட்டிகள், உடுப்புகளுக்கான துணிகள், அலங்காரத் துணிவகைகள்—குடும்பத்தினர் அனைவருக்குமே உகந்த முழுதும் புதிய வகைகள்.

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறியே வண்ணத்துப்பூச்சி

 பதிவு எண். M. 8676

இந்தியப் பிரதமரின்

20

அம்சத் திட்டம்

உழவர் வாழ்வு
உயர்ந்திட ...

மாணவர் வருங்காலம்
வளம்பெற ...

வழிகாட்டுகிறது !

இணைந்து தோள் கொடுப்போம்!
வெற்றிபெற உழைத்திடுவோம்!!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், [illegible]



3 JUL 1976

அரசு—மிகவுயர்ந்த தரமானது

போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனுல் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட். குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை

யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

அரசு—வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16



3-JUL 1976

திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள்
16-6-1976 அன்று
தமிழ்நாட்டு ஆளுநராகப் பதவி ஏற்றார்.

மலர்-6

தமிழரசு

இதழ்-24

16-6-'76



ஆளுநர் பதவிஏற்பு விழா

(நிகழ்ச்சி வர்ணனை)

இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால், தமிழ்நாட்டு ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள திரு மோஹன்லால் சுகாதியா அவர்களும் திருமதி சுகாதியா அவர்களும் கிண்டி இராஜ பவனத்திலிருந்து 1976-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 16-ஆம் நாள் காலை 10-45-க்குப் புறப்பட்டார்கள். திறந்த மகிழ்வுந்து வண்டியில் இராஜபவனத்திலிருந்து வந்த அவர்களை வானூர்திப் படை வீரர்களும் விசைமிதி வண்டிக் காவல் வீரர்களும், சுற்றிலும், காவல் மரியாதையோடு அழைத்து வந்தார்கள். இராஜாஜி மண்டபத்திற்கு அவர்கள் காலை 11-12 மணிக்கு வந்து சேர்ந்தனர். இராஜ பவனத்திலிருந்து இராஜாஜி மண்டபம் வரை காவலர் வரிசை கண்காணித்தது. விழா ஊர்வலம், அஞ்சலகத் தலைவர் அலுவலகத்திலிருந்து இராஜாஜி மண்டபம் வரை அமைந்திருந்தது. வழிகாட்டி வீரர்களாகக் குதிரைப் படைக் காவலர், அஞ்சலகத் தலைவர் அலுவலகத்திலிருந்து ஊர்வலத்தை முன் நடத்திச் சென்றனர். பதவி ஏற்கவிருந்த ஆளுநருக்கு ஆயுதம் தாங்கிய காவல் வீரர்கள் படைக்கல அணிவகுப்பு மரியாதை அளித்தனர்.

வானூர்திப் படை வீரர்கள் ஐம்பதின்மர் இராஜாஜி மண்டபத்தின் முன்னர். அணிவகுப்பு மரியாதை நிகழ்த்தினர். இராஜாஜி மண்டபத்தை அடைந்ததும், பதவி ஏற்கவிருந்த ஆளுநரும், திருமதி சுகாதியா அவர்களும் மகிழ்வுந்திலிருந்து இறங்கும்போது ஆலோசகர்களாலும், தலைமைச் செயலாளராலும் வரவேற்கப் பெற்றனர். பதவி ஏற்கும் ஆளுநருக்கு முப்படைத் தலைவர்களையும், காவல் துறை தலைவரையும் தலைமைச் செயலாளர் அறிமுகப்படுத்தினார்.

அணிவகுப்பு மரியாதை வீரர்குழுத் தளபதி அழைத்து வர, பதவி ஏற்கவிருக்கும் ஆளுநர், அணிவகுப்பு மரியாதையை ஏற்றார். அணிவகுப்பு மரியாதை நிறைவுற்றவுடனே ஆளுநரும், திருமதி சுகாதியா அவர்களும், மெய்க்காவலர், தலைமைச் செயலாளர், ஆலோசகர்கள் ஆகியோர் முன் செல்ல, மண்டபத்தில் நுழை வாயிற்படி ஏறினார். அவர்களைத் தொடர்ந்து, ஆளுநரின் தனிச் செயலர் பின் சென்றார். படிகள் கடந்து நுழைவாயிலில், உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியை, பதவி ஏற்கவிருக்கும் ஆளுநருக்கும், திருமதி சுகாதியா அவர்களுக்கும், தலைமைச் செயலாளர் அறிமுகம் செய்து வைத்தார். பின்னர் ஆளுநரும், திருமதி சுகாதியா அவர்களும் முதலில் மேடைக்குச் சென்று இருக்கைகளில் அமர வழிவிட்டனர். அதன் பின்னர், கீழ்க் குறித்தோர் மேடைக்குச் சென்று தத்தம் இருக்கைகளில் அமர்ந்தனர்.

சட்டப் பேரவைத் தலைவர்,
தலைமை நீதிபதி,
ஆலோசகர்கள்,
சட்ட மேலவைத் துணைத் தலைவர்,
தலைமைச் செயலாளர்,

ஆளுநரின் தனிச் செயலரும், மெய்க் காவலர்களும், பொதுத் துறைத் துணைச் செயலரும் பின் வரிசை இருக்கைகளில் அமர்ந்திருந்தனர். கீழே ஆறுவது பத்தியில் குறித்த முறையில் தலைமை நீதிபதி ஆளுநருக்குப் பதவி ஏற்பு உறுதிமொழியைச் செய்து வைத்து, பதவி ஏற்கும் ஆளுநர் அவர்தம் இருக்கையில் அமரும் வரையிலும், அனைவரும் நின்ற வண்ணம் இருந்தனர்.

தலைமைச் செயலாளர், பதவி ஏற்கும் ஆளுநரிடமிருந்து பதவி ஏற்பு உரிமை ஆணையைப் பெற்றுக் கொண்டு அதனை எடுத்துரைக்கும் இசைவைப் பெற்றார். இசைவு பெற்றதும், தலைமைச் செயலாளர், படிப்பதற்கான சாய்வு மேசையை அணுகிச் சென்று, பதவி ஏற்புரிமை ஆணையை அவைமுன் படித்தார். இதன்பின்னர், பதவி ஏற்கும் ஆளுநரும், தலைமை நீதிபதியும், மேடையிலுள்ள சாய்வு மேசையின் அருகே சென்றனர். அம்மேசையின் மீது பதவி ஏற்பு உறுதிமொழியின் படிகள் இரண்டு வைக்கப்பட்டிருந்தன. பிறகு, தலைமை நீதிபதி, ஆளுநருக்குப் பதவி ஏற்பு உறுதிமொழி செய்து வைத்தார். இந் நிகழ்ச்சி நிறைவுற்றவுடனேயே:—

இராஜாஜி மண்டபத்திலும், கிண்டி இராஜபவனத்திலும் ஒரேநேரத்தில் தேசியக் கொடி ஏற்றிவைக்கப்பட்டது. (இராஜாஜி மண்டபத்திலிருந்து வான்தந்தி வழியாகச் செய்தி உடனடியாக அனுப்பப்பெற்றது.)

காவலர் இசைக்கருவிக்குழு தேசியப் பாடலை முழங்கியது.

தேசியப் பாடலின் இறுதிவரிகள் நிறைவுற்றவுடனேயே ஆளுநர் தமது இருக்கையில் அமர்ந்தார். அதன்பின்னர் அழைப்பாளர் அனைவரும் அமர்ந்தனர்.

பின்னர் ,பதவி ஏற்பு உறுதிமொழி ஆவணத்திலும், கீழ்க்குறித்த பிற ஏடுகளிலும் ஆளுநர் தம் கையொப்பம் இட்டார். (காலை 11-25):

இதன் பின்னர், ஆளுநரும், திருமதி சுகாதியா அவர்களும் மேசைக்கு முன் சென்று தத்தம் இருக்கைகளில் அமர்ந்தனர். பின்னர் சிறப்பு விருந்தினரும், அலுவலர்களும் கீழ்க் கண்ட முறையில் ஆளுநருக்கும், திருமதி

தமிழ்நாடு ஆளுநராகப் பதவி ஏற்க வந்த திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள், அஞ்சலகத் தலைவர் அலுவலகத்திலிருந்து இராஜாஜி மண்டபம் வரை குதிரைப்படை வீரர்கள் முன்னும் பின்னும் அணிவகுத்து வர, ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்.





விமானப் படை வீரர்கள் அளித்த அணிவகுப்பு மரியாதையை திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

சுகாதியா அவர்களுக்கும் அறிமுகப்படுத்தப் பெற்றனர்.

சட்டப்பேரவைத் தலைவர், சட்ட மேலவைத் துணைத் தலைவர் ஆகியோரைத் தலைமைச் செயலாளர் அறிமுகப்படுத்தினர்.

உயர்நீதிமன்ற நீதிபதிகளைத் தலைமை நீதிபதி அறிமுகப்படுத்தினர்.

அதன் பின்னர், தலைமைச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர்களையும், சட்டமேலவை உறுப்பினர்களையும், வருவாய் வாரிய உறுப்பினர்களையும், அரசுச் செயலாளர்களையும், சென்னை நகரிலுள்ள வெளி நாட்டு உதவித் தூதர்களையும், மற்றும், ஏனைய பெருமக்களையும் அறிமுகப்படுத்தினர்.

ஆளுநரும் குழுவினரும், இராஜாஜி மண்டப வெளிவாயில்வரை, விசை மிதிவண்டிக் காவலரும், குதிரை வீரர்களும் புடைசூழ, அரசு மரியாதையோடு மகிழ்வுந்தில் அழைத்துச் செல்லப்பெற்றனர். இராஜாஜி மண்டப வெளிவாயிலிலிருந்து ஆளுநரும், அவரது குழுவினரும் ஆதம்ஸ் சாலை, கடற்கரைச்சாலை வழியாக இராஜபவனத்திற்கு மகிழ்வுந்தில் சென்றார்கள். இராஜாஜி மண்டப வெளி வாயிலிலிருந்து செல்லும் ஆளுநரது மகிழ்வுந்தின் முன்னர், விசைமிதிவண்டியில் காவல் அலுவலர் ஒருவர் செல்ல, வழித்துணைக் காவலர் பின் தொடர்ந்தார்.

இவ்வாறு ஆளுநர் அவர்களின் பதவி ஏற்பு விழா இனிதே முடிந்தது.

ரயில் நிலையத்தில், திரு மோகன்லால் சுகாதியா அவர்களுக்கு, அரசு அலுவலர்களை, தலைமைச் செயலர் அறிமுகம் செய்து வைக்கிறார்.



"உங்கள் ஒத்துழைப்பு ஊக்கம் தரும்!"

நண்பர்களே,

என் உளமார்ந்த நல்வாழ்த்துக்களையும் பெருமகிழ்ச்சியினையும் தமிழக மக்களுக்கு வழங்கவும் அவர்களின் ஒத்துழைப்பை விரும்பிப் பெறவுமே இன்று இந்த வானொலி உரையை ஆற்றுகிறேன். கடந்த காலத்தில் தமிழகத்தின் சில பகுதிகளைச் சுற்றிப்பார்க்கும் நல்வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந்நாட்டு மக்களின் அறிவாற்றலும், விருந்தோம்பும் பண்பும், பெருந்தன்மையான போக்கும் எப்போதுமே என்னைக் கவர்ந்துள்ளன. தமிழக மக்களிடையே பணியாற்றும் ஒரு நல்வாய்ப்பு இப்பொழுது எனக்குக் கிடைத்துள்ளதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். என்னுடைய பணிகளை நிறைவேற்றுவதில் உங்கள் ஒத்துழைப்பு எனக்கு ஊக்கம் தரும் என்றும் உறுதியாக நம்புகிறேன்.

நமது பாரதப் பிரதமர் அறிவித்துள்ள 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தை நல்ல முறையில் நடைமுறைக்குக் கொண்டு வருவதே நம்முன் நிற்கும் முதன்மையான—தலையாய கடமையாகும். போதிய வளர்ச்சியின்றிக் கிடக்கும் சில துறைகளுக்கு முதன்மை கொடுத்து, தனி அக்கறை செலுத்துவது இந்தத் திட்டத்தின் நோக்கம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அதனால், முன்னேறத் துடிக்கும் மக்களின் பேரார்வத்திற்குப் பொருந்திய வகையில் சமுதாயப் பொது நீதியுடன் இணைந்த வளர்ச்சியை நோக்கி நாம் பீடுநடை போட வேண்டும் என்பதே நமது இலட்சியமாகும். பொதுவாகப் பின்தங்கிய வகுப்பினரின் பொருளாதார முன்னேற்றமும், நல்வாழ்வும் இத்திட்டத்தின் வழியாக. ஏற்றம் பெற வேண்டும் என்னும்போதே தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்தில் இத்திட்டம் சிறப்பான நாட்டத்தைச் செலுத்துகிறது. இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தை நிறைவேற்றுவதில் நிருவாக இயந்திரத்தை விரைவாக முழுஅளவில் முடுக்குவதே எனது பெருமுயற்சியாக அமையும்.

மேதகு தமிழ்நாடு ஆளுநர் மோகன்லால் சுகாதியா அவர்கள் 16.6.'76 அன்று இரவு 8 மணிக்குச் சென்னை வானொலியில் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.

தமிழகத்தின் வருவாயில் நூற்றுக்கு நாற்பத்தாறு விழுக்காடு வேளாண்மையிலிருந்தே கிடைப்பதை நாம் அறிவோம். நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேளாண்மை வளர்ச்சியுடன் பின்னிப் பிணைந்து கிடக்கிறது. எனவே, பாசன நீரைத் தக்க வகையில் பயன்படுத்த அதிக அக்கறை மேற்கொள்வதும், நிலத்தடி நீரை முழு அளவுக்கு வெளிக் கொணர்வதும், மேம்படுத்தப் பட்ட பயிரிடு முறைகளை வேளாண்மையில் செயலுக்குக் கொண்டு வருவதும், அவைகளின் விளைவாக விளைச்சலைப் பெருக்குவதுமே நமது உடனடித் தேவையாகும். பாசன வசதியுள்ள நிலங்களில் மட்டுமல்லாது, பாசன வசதியற்ற நிலங்களிலும் பெரும் விளைச்சலைக் காண்பதில் நாம் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். 1975- அக்டோபர்-டிசம்பர் காலத்தில் வடகிழக்குப் பருவக் காற்றினால் நமது மாநிலத்தில் சில பகுதிகளில் வழக்கம் போல் நல்ல மழை பெய்திருந்தும் திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களிலும், கோவை, மதுரை, சேலம், தருமபுரி மாவட்டங்களில் சில பகுதிகளிலும் போதுமான மழை பெய்யவில்லை. இந்த இடங்களில் எல்லாம் குடிதண்ணீர் கிடைக்காத கடும் வறட்சி நிலை உருவாயிற்று. இங்கெல்லாம் வறட்சியை நீக்குவதற்கான ஆக்கப்பணிகளை அரசு ஏற்கனவே மேற்கொண்டுள்ளது. வறட்சிப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு இயலுமான எல்லா விதமான உதவிகளையும் செய்ய வேண்டும் என்பதே நமது முயற்சியாகும்.

கிராமப் புறப் பகுதிகளில் வாழும் எளிய மக்களுக்கு நிலச் சீர்திருத்தத் திட்டங்கள் உயிர்நாடியாக அமைகின்றன. மிகக் குறுகிய காலத்துக்குள் நிலச் சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்படுவதில் அரசு தனி அக்கறை செலுத்தும்.

நம் சென்னை மாநகரம் இடப்பரப்பாலும் மக்கள் தொகையாலும் நாளுக்குநாள் அகன்று பெருகி வருவதால், அனைவருக்கும் குடிதண்ணீர் வழங்கும் 'பிரச்சினை அரசின் கவனத்தை எப்போதும் ஈர்த்து வந்துள்ளது. 1974 அக்டோபர் டிசம்பர் காலத்தில் வடகிழக்குப் பருவமழை பொய்த்ததால் சென்னை மாநகருக்கு ஏற்பட்ட குடிநீர்ப் பற்றுக்குறையும் அதனால் விளைந்த இன்னல்களும் நமது நெஞ்சில் இருந்து இன்னும் நீங்கவில்லை.' ஆந்திர மாநிலமும், மகாராஷ்டிரமும், கருநாடக அரசும், கிருஷ்ணா ஆற்றிலிருந்து 1,500 கோடி கன அடி தண்ணீர் வழங்க முன்வந்திருப்பதால் நிலையான அடிப்படையில் நமது தலைநகரத்தில் குடிநீர்ப் பற்றுக்குறை தீரும் என நம்பலாம். இவ்வகையில் உடனடித் தீர்வு காணும் முறையில் நமது அரசு இவ்வகையில் விரைந்து செயல்படும் என்பதை நான் இந்த நேரத்தில் உறுதியாகச் சொல்லிக் கொள்ள .விரும்புகிறேன்.

நமது நாடு விடுதலை அடைந்த பின்னர், பல்வேறு துறைகளில் நாம் பெற்ற முழுமையான வளர்ச்சியை, கட்டுக்கடங்காத மக்கட் தொகைப் பெருக்கின் காரணமாக நம்மால் உணர முடியாது போனதை நாமே நன்கறிவோம். குடும்ப நலத் திட்டத்தின் வெற்றியோடுதான் நமது நாட்டின் எதிர்காலம் இணைந்துள்ளது. உணர்ச்சி வயப்படாமல், அறிவு வழியில் ஆர அமர ஆராய்ந்து முடிவெடுப்பதில் தமிழகத்து மக்கள் வல்லவர்கள். எனவே, தமிழ்நாட்டில் உள்ள தொண்டு நிறுவனங்களும், மக்களும் தங்கள் ஒத்துழைப்பைத் தருவதன் மூலம் குடும்ப நலத் திட்டத்தினை நன்கு நிறைவேற்றி வெற்றி காண்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. வருங்காலத்தில் குடும்ப நலத் திட்டம் குறித்து அரசு தனிக் கவனம் செலுத்தும். தமிழக மக்கள் தொன்மையும், வளமும் வாய்ந்த இலக்கியப் பெருமை கொண்ட தமது தாய்மொழியின் பால் பெரும் பற்றுக் கொண்டவர்கள் என்பதை நான் அறிவேன். அதே நேரத்தில் புதிய தொழில் நுட்ப யுகத்தின் தேவைகளுக்கு ஈடு கொடுக்கும் ஆற்றலும் தமிழுக்கு உண்டு என்பதையும் நான் உணர்வேன். எல்லாச் செயல்களிலும் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதற்கு அரசு தொடர்ந்து ஊக்கமளித்து வரும்.

அரசு கொள்கைகளை மட்டும் வெளியிடுவதோ பல்வேறு திட்டங்களுக்குப் பண ஒதுக்கீடு செய்வதோ மட்டும் போதிய பயன் அளித்து விடாது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அரசாங்கக் கொள்கைகளைத் தொடக்க நிலையிலிருந்தே திறம்படச் செயற்படுத்துவதும், ஒதுக்கிய நிதிவசதிகளைத் தக்க வகையில் செலவிடுவதுமே மிகப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். எனவே, பல்வேறு திட்டங்கள், பணிமுறைகள் அடிப்படையிலிருந்தே உரிய முறையில் செயலுக்கு வருகின்றனவா என்பதை அவ்வப்போது ஆராய்வதோடு, எங்கெங்கு தொய்வுகள் விழுகின்றனவோ அங்கெல்லாம் அவற்றைக் கண்டு பிடித்துச் சரி செய்யவும் நாம் முயல்வோம்.

நிர்வாகப் பொறுப்பில் இருப்போர்களுக்கு நான் ஒன்று சொல்லிக் கொள்வேன். எதையும் முடிவெடுக்காமல் இருப்பதைவிட ஏதாவது ஒரு முடிவுக்கு வருவதையே நான் விரும்புகின்றவன். விரைந்து முடிவெடுக்கும் போது ஒரு சில தவறுகள் விளைந்தாலும், அத்தவறுகள் நல்லெண்ணத்தோடு பிறக்குமானால், அவற்றை நாம் பொருட்படுத்தத் தேவையில்லை.

பாரதத்தின் வாழ்விலும் வளர்ச்சியிலும் தமிழ்நாடு சிறப்பிடம் பெற்றுள்ளது. கடின உழைப்பினாலும், கட்டுப்பாட்டுஉணர்வினாலும் தமிழகத்து மக்கள் தமது மாநில வளர்ச்சிக்குத் தொண்டாற்றுவது இன்றியமையாததாகும். தமது மாநிலத்துக்கு தொண்டாற்றும் வகையிலேயே பாரதத்தின் தேசிய வளர்ச்சிக்கு தொடர்ந்து தங்கள் பங்கை அவர்கள் செலுத்தியவர்களாகிறார்கள். வளர்ச்சிப் பணிகளில் நாம் முனைப்போடு ஈடுபட வேண்டுமானால் அமைதி நிறைந்த சூழ்நிலை நமக்குப் பெரிதும் வேண்டும். வளர்ச்சிப் பணிகளில் அரசும் மக்களும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு செயலாற்றுவதற்கு மக்கள் தொடர்ந்து அமைதி நிலையைக் காத்திட வேண்டுமென்று தமிழக மக்களை அன்போடு வேண்டிக் கொள்கிறேன். தமிழ்நாட்டு மக்களுக்கு என் உளமார்ந்த நல் வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியையும் மீண்டும் கூறி அமைகிறேன்.

ஜெய்ஹிந்த்!



தமிழ்நாட்டின் ஆளுநராக இருந்து பணியாற்றி, பதவி ஒய்வுபெற்ற திரு. கே. கே. ஷா அவர்களுக்குத் தமிழ் நாடு அரசின் சார்பில் 15.6.'76 அன்று மாலை 5.30 மணிக்கு, சென்னை இராஜாஜி மண்டபத்தின் பின்புறத்திலுள்ள அரங்கில் வழியனுப்பு விழா நடைபெற்றது. அவ்விழாவில் தமிழ் நாடு அரசின் சார்பில் திரு. கே. கே. ஷா அவர்களுக்கு ஆளுநர் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்கள் நினைவுச் சின்னம் வழங்கினார்.



தமிழ்நாடு ஆளுநராக நியமிக்கப்பட்டு, 16.6.'76 அன்று காலை 6–30 மணிக்குச் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் வந்து சேர்ந்த, திரு. மோஹன்லால் சுகாதியா அவர்களை, ஆளுநர் ஆலோசகர்களும், தலைமைச் செயலாளரும் மற்றும் அலுவலர்களும் வரவேற்றனர்.

கடந்த ஐந்து ஆண்டுக் காலமாக தமிழ்நாடு ஆளுநராகப் பதவி வகித்த திரு. கே. கே. ஷா அவர்கள், தமது பதவிக்காலம் முடிந்து 15.6.'76 அன்று இரவு 7.20 மணிக்குத் தமிழக மக்களிடமிருந்து விடைபெற்றார்.



உலக சுற்றுப்புறச் சூழ்நிலை நாள்!

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5-ஆம் தேதி உலகச் சுற்றுப்புறச் சூழ்நிலை நாளாக உலகம் முழுவதிலும் அனுசரிக்கப்படுகிறது. இந்த நாளில்தான் ஐ. நா. பொதுச்சபையின் உறுப்பு நாடுகள் முதலாவது தடவையாக 1972-ஜூன் மாதத்தில் 'ஸ்டாக்ஹோம்' நகரில், உலகத்தின் சுற்றுப்புறச் சூழ்நிலைக்கான காரணங்கள்மீது ஒற்றுமையுடன் தங்களின் கவனத்தைச் செலுத்தத்துவங்கின. உயிர் வாழ்வதற்கு மிகவும் இன்றியமையாத இந் நோக்கம் குறித்து, மிகுந்த கவலையை வெளிப் படுத்திய நாடு இந்தியா மட்டுமே! இந்த மாநாட்டில் இந்தியப் பிரதமர் **திருமதி இந்திரா காந்தி** அவர்கள் கலந்து கொண்டார்.

இந்த ஆண்டு உலகச் சுற்றுப்புறச் சூழ் நிலை நாளின் சிறப்புக் கருத்து, **''தண்ணீர்-வாழ்வுக்கு இன்றியமையாத வளம்''** என்பதாகும். தண்ணீர், மனித நடவடிக்கைகள் அனைத்துடனும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதால், இக்கருத்து சிறப்பு முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. தண்ணீரின் வளமும், தரமும் மனிதனின் சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படுத்துவதற்கு அவனுடைய திறனுடன் விடுவிக்க முடியாதபடி இணைந்துள்ளது. 1977-ல் **''தண்ணீரும் பாலைநிலமாதலும்''** என்பது பற்றிய மாநாடு ஒன்றை நடத்துவதற்கு ஐ. நா. திட்டமிட்டுள்ளது.

சுற்றுப்புறச் சூழ்நிலைப் பிரச்சினைகள் பற்றிய இந்தியாவின் கவலை பல ஆண்டுகளாக வளர்ந்து வந்துள்ளது.

''மனிதன் ஏழ்மையில் இருக்கும்போது, சத்தற்ற உணவினாலும், நோயினாலும், பயமுறுத்தப்படுகிறான். பலவீனனாக இருக்கையில் போருக்கு அஞ்சுகிறான்; செல்வந்தனாக இருக்கையிலோ தனது சொந்த செல்வச் செழிப்பால் கொண்டுவரப்பட்ட அசுத்தத்தினால் அச்சுறுத்தப்படுகிறான்'' என்று பிரதம மந்திரி திருமதி **இந்திரா காந்தி** அவர்கள் 1972 ஜூன் 14-ஆம் தேதி ஸ்டாக்ஹோம் நகரில் நடைபெற்ற மனிதச் சுற்றுப்புறச் சூழல் பற்றிய ஐ. நா. மாநாட்டுக் கூட்டத்தில் முழக்கமிட்டார்.

வளரும் நாடுகளில் உள்ள சுற்றுப்புறச் சூழ்நிலைப் பிரச்சினைகள், போதிய அளவுக்கு மேம்பாடு அடையாத சூழ்நிலைகளினாலேயே ஏற்படுகின்றன என்ற உண்மையை ஐ. நா. மனிதச் சுற்றுப்புறச் சூழல் மாநாடு வலியுறுத்தியுள்ளது. குடிநீர் வசதி, வீட்டுச் சுகாதார வசதி, எரிபொருள், போக்குவரத்து, தொலைத் தொடர்புத்துறை, மருத்துவப் பாதுகாப்பு முதலியவை மிகக் குறைவாகக் கிடைப்பதனால், முக்கியமாக சுற்றுப்புறச் சூழல் பிரச்சினைகள் தோன்றுகின்றன. இப்பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு மேம்பாடு ஓர் அத்தியாவசிய முன் தேவை என்பது தெளிவு. தொழில்நுட்ப உபயோகம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான வழக்கமான முறை, இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கல்லாமல், இத்தகைய சமூக சுற்றுப்புறச் சூழல் பிரச்சினைகளை எப்பொழுதும் தீவிரப்படுத்துவதற்கு வகை செய்வதாக உணரப்படுகிறது.

இந்தியாவில், புது டில்லியிலுள்ள விஞ்ஞான தொழில்நுட்பத் துறையின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் ஒருங்கிணைப்புக்கான தேசியக் குழு, மக்களுக்கு எவ்வகையில் சுத்தமான, ஆரோக்கியமான, சுற்றுப்புறச் சூழ்நிலையை அளிக்க முடியும் என்று தொழில் துறைக்கும், அரசாங்கத்துக்கும் ஆலோசனை கூறுகிறது.

மக்கள் தொகைக் கட்டுப்பாடு, பொதுவான சுற்றுப்புறச் சூழல் மேம்பாட்டுக்கு மிக முக்கியமானதாகும் என்று இக்குழு கருதுகிறது. காற்று, தண்ணீர், நிலம் ஆகியவற்றின் அசுத்தத்தைத் தடுப்பதற்காக—குறிப்பாக நகர்ப்புறப் பகுதிகளில் அதிகமான மனித குடியேற்ற மேம்பாட்டினை நிறுத்துவதற்கு—ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் இக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஏற்றுமதியில் இந்தியா!



தோல் பொருட்கள்

இந்தியா 200 கோடி ரூபாய்க்கு தோல், மற்றும் தோல் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. இவற்றில் பெரும்பாலானவை ஓரளவு பதம் செய்த தோல் வகைகளாகும். முற்றிலும் செய்து முடிக்கப்பட்ட தோல் மற்றும் தோல் பொருட்களை ஏற்றுமதி செய்தால் நாட்டிற்குச் சுமார் 600 கோடி ரூபாய்க்கு வெளிச் செலாவணி கிடைக்கும்.

ஓரளவு பதம் செய்த தோல் வகைகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் அதிக அளவுக்கு இலாபம் சம்பாதிக்கும் பொருட்டு, அண்மை மாதங்களில் இந்திய அரசு இத்தகைய பொருட்களுக்கான ஏற்றுமதித் தீர்வையை 5 சதவிகிதம் உயர்த்தியது. இந்தப் புதிய ஏற்றுமதித் தீர்வை உயர்வு மே மாதம் முதல் தேதியிலிருந்து அமல் செய்யப்பட்டு வருகிறது.

முற்றிலும் செய்து முடிக்கப்பட்ட தோல் பொருட்களை உற்பத்தி செய்யும் விதத்தில் தோல் தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதற்காக, மத்திய அரசு இத்தகைய தோல் ஏற்றுமதிக்கு, மானியம் அளிப்பதை 5 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதத்திற்கு உயர்த்தத் தீர்மானித்தது. இந்த ஊக்குவிப்பு முறையும் மே மாதம் முதல் தேதியிலிருந்து அமல் செய்யப்பட்டுள்ளது.

பட்டுப் பொருள்கள்

நாட்டின் பட்டுத் தொழில் துறை, 1975-76-ஆம் ஆண்டுக்காக நிர்ணயிக்கப்பட்ட ஏற்றுமதிக் குறியளவை, அந்த ஆண்டின் முதல் 11 மாத காலத்திற்குள்ளாகவே அடைந்து விட்டது. 1975 ஏப்ரல் முதல் 1976 பிப்ரவரி வரையிலான காலத்தின் ஏற்றுமதி மதிப்பு 14 கோடியே 70 இலட்சம் ரூபாய். (ஆனால் நிர்ணயிக்கப்பட்ட குறியளவு 14 கோடியே 50 இலட்சம் ரூபாயாகும்) 1974-75 ஆம் ஆண்டின் இதே காலத்திய ஏற்றுமதி வருமானம் 11 கோடியே 20 இலட்சம் ரூபாய். ஆகையால் இந்த ஆண்டு ஏற்றுமதி வருமானம் பாராட்டத்தக்க வகையில் பெருகியுள்ளது.

மதிப்பு, அளவு ஆகிய இரண்டு வகைகளிலும் ஏற்றுமதி அதிகரித்துள்ளது. ஏற்றுமதிப் பொருட்களின் மதிப்பு 31 சத-விகிதமும், அளவு 9 சதவிகிதமும் அதிகமாகப் பெருகியுள்ளது.

இந்தியப் பட்டுப் பொருட்களை இங்கிலாந்து மிக அதிகமாக இறக்குமதி செய்தது. பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா, இத்தாலி சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளும் ஊக்கமூட்டும் வகையில் இப்பொருட்களை இறக்குமதி செய்தன. அங்கெல்லாம் பட்டுத் துண்டுகளுக்கும் ஆடைப் பொருட்களுக்கும் அதிக வரவேற்பு உள்ளது.

காபிக்கொட்டை

1975-76-ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் இந்தியா ரூ. 53.90 கோடி மதிப்புள்ள 49,345 டன் காப்பிக் கொட்டையை ஏற்றுமதி செய்தது. அந்த ஆண்டில் இந்தியாவில் சுமார் 90,000 டன் காப்பிக் கொட்டை உற்பத்தி செய்யப்பட்டது என மதிப்பிடப்பட்டுள்ளது.

1976-77-இல் 77 கோடி ரூபாய் மதிப்புள்ள 55,000 டன் காப்பிக்கொட்டை ஏற்றுமதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காப்பி வாரியம்தான் காப்பிக் கொட்டை ஏற்றுமதி அலுவலைக் கவனித்து வருகிறது.

அமெரிக்கா, ஈராக், கிழக்கு ஐரோப்பிய நாடுகள், போலந்து, ருமேனியா, செக்கோஸ்லோவாகியா, ஹங்கேரி ஆகிய நாடுகளுக்கு இந்தியக் காப்பிக் கொட்டை ஏற்றுமதி செய்யப்படுகிறது.

வாழைப்பழம்

இந்தியாவிலிருந்து வாழைப் பழ ஏற்றுமதி, மூன்றாண்டுக்கால இடைவெளிக்குப் பின்னர், தற்போது மீண்டும் தொடங்கப்பட்டிருக்கிறது. மத்திய கிழக்கு, நாடுகளுக்கும், அரபுநாடுகளுக்கும் இந்திய வாழைப்பழங்கள் செல்கின்றன.

தமிழ் நாடு, குஜராத், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களிலிருந்து வாழைப் பழங்கள் வெளி நாடுகளுக்குச் செல்கின்றன. குவைத், துபாய், ஈரான் ஆகிய நாடுகளுக்கு 500 டன் வீதம் வாழைப் பழங்கள் அண்மையில் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றின் மதிப்பு ரூ. 15 லட்சம் ஆகும்.

பட்டாசு

தமிழ் நாட்டில் தயாரிக்கப்படும் பட்டாசுகளுக்குத் தற்போது அமெரிக்க நாட்டில் நல்ல வரவேற்பு இருக்கின்றது. முன்பு சீனா, தைவான் ஆகிய நாடுகளிலிருந்து பட்டாசு அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகி வந்தது. தற்போது அமெரிக்க நாடு, இந்தியாவிலிருந்து பட்டாசுகளை இறக்குமதி செய்கின்றது. ரூ. 40 இலட்சம் மதிப்புள்ள பட்டாசுகளை இந்தியாவிலிருந்து வாங்குவதற்கு அமெரிக்கா முடிவு செய்திருக்கிறது.

மல்லிகைப் பூ

'மதுரை மல்லி' என்று சொல்லப்படும் மல்லிகைப் பூ ரகம் தமிழ் நாட்டிலிருந்து, சிங்கப்பூருக்கு ஏற்றுமதியாகிறது. வெள்ளிக்கிழமை தோறும் 'மதுரை மல்லி' சிங்கப்பூரை நோக்கிப் பறக்கிறது. சிங்கப்பூரில் இதற்கு மிகுந்த வரவேற்பு இருப்பதால், மல்லிகையின் ஏற்றுமதி விரைவில் அதிகமாகலாம் என்றும், அதன் மூலம் ஒரு கணிசமான தொகை அந்நியச் செலாவணியாகக் கிடைக்கும் என்றும் தெரிகிறது.

கிராமப்புறங்களில் வீடு கட்ட அரசின் புதிய திட்டம்!

தமிழகத்தின் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள கிராமங்கள், வரைமுறையற்ற வகையில் வளர்வதைத் தடுத்து, ஒரு ஒழுங்குக்கு உட்பட்ட முறையில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காகவும், 'உதவிபெறுதல்—சுயஉதவி' அடிப்படையில் கிராம மக்கள் தங்களுடைய வாழ்க்கை நிலைமையை உயர்த்திக் கொள்வதை ஊக்குவிப்பதற்காகவும் தமிழ்நாடு அரசு கிராமிய வீட்டுவசதித் திட்டத்தை 1958—59 முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 3 சென்ட் நிலமுள்ள கிராம மக்களுக்கு, கட்டப்படவிருக்கும் வீட்டின் மதிப்பீட்டுச் செலவில் 80 சதத் தொகை—உயர்ந்த பட்சமாக ரூபாய் 5,000—என்ற அளவிலும் கடன் வழங்கப்பட்டு வந்தது. இத்திட்டம், நெடுஞ்சாலை கிராமப் பணித் துறையில், ஒரு மேற்பார்வைப் பொறியாளரின் தலைமையில் தனியாக இயங்கி வந்த 'ஊரக வீட்டு வசதி மையம்' என்ற பிரிவினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்திற்கு ஊக்கம் அளிக்கவும், நிதி நிறுவனங்களிலிருந்து போதுமான நிதியுதவி பெறுவதற்காகவும் 1.4.76 முதல் கிராமப் புற வீட்டு வசதித் திட்டத்தை ஊரக வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் செயல்படுத்துவதென அரசுமுடிவு செய்துள்ளது.

புதிய ஊரக வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்பு அம்சங்களாவன.

1. புதிய ஊரக வீட்டு வசதி சங்கங்கள் ஒரு வட்டத்தில் குறிப்பிட்ட அதிகார எல்லைக்குள் அமைக்கப்படும். இத்தகைய புதிய சங்கங்களை அமைப்பதில், தற்போதுள்ள இணைக்கப்பட்ட ஊரக வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை குறைவாக உள்ள பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

2. 1976 — 77-ல் பத்து ஊரக வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் பத்து வட்டங்களில் வட்டத்திற்கு ஒன்று வீதம் அமைக்கப்படும். இந்தச் சங்கங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்படும். உண்மையிலேயே சொந்த வீடு கட்டுவதில் ஆர்வமுடையவர்களே இதில் உறுப்பினராகச் சேர்க்கப்படுவார்கள். சங்கம் நன்கு செயல்படுவதற்காக, ஒவ்வொரு சங்கத்திலும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 100 ஆக இருக்கும்.

3. ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் பங்குத் தொகை செலுத்துவதற்காக வட்டியில்லா கடனுகை ரூ. 400 அளிக்கப்படும்.

புவியியல் ஆய்வுக்குப் புதிய பயிற்சிக் கழகம்

இந்தியப் புவியியல் ஆய்வுத் துறை இந்த ஆண்டில் தனக்குச் சொந்தமான பயிற்சிக் கழகம் ஒன்றை நிறுவ இருக்கிறது. இந்தத்துறையில் 125-வது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக இந்தப் பயிற்சிக்கழகம் நிறுவப்படும். இந்தியப் புவியியல் ஆய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அநேக பணிகளை மேற்கொள்வதற்கு இப்பொழுது ஏராளமான ஒழுங்குமுறைகள் தேவைப்படுவதால், இந்தப் பயிற்சிக்கழகத்தில் வசதி அவசியமாகும். இந்தியப் புவியியல் ஆய்வுத் துறை கனிப்பொருள் கண்டுபிடிப்புக் கார்ப்பொரேஷன் சுரங்கம் மற்றும் புவியியல் துறைக்கான மாநில இயக்குநர் அகங்கள், சுரங்கத் துறையுடன் சம்பந்தப்பட்டுள்ள அரசுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் பணி புரியும் அதிகாரிகளுக்கு முக்கியமாக சேவைக் காலப் பயிற்சி வசதிகளை இந்தக் கழகம் அளிக்கும்.

பல்வேறு பல்கலைக் கழகங்களிலிருந்து வரும் பட்டதாரிகளுக்குச் சம்பந்தப்பட்ட துறைகளில் பயிற்சி அளிப்பதற்கும், நாட்டின் கனிவளத்தைக் கண்டுபிடித்து நிரூபிக்கும் ஆய்வுகளை மேற்கொள்வதற்குத் தேவையான திறமையுடன் அவர்களை உருவாக்குவதற்கும் இந்தப் பயிற்சிக் கழகம் உதவும்.

உறுப்பினர், தனது பங்குத் தொகையாக ரூ. 100 செலுத்திட வேண்டும். இதன் அடிப்படையில் ஒவ்வொரு உறுப்பினரும் சங்கத்திலிருந்து ரூ. 5,000 கடனுகப் பெற முடியும். ஆரம்பச் சங்கங்கள் ரூ. 8,000 செலுத்திய பின்பு தலைமைச் சங்கத்துடன் இணைக்கப்படும்.

4. சங்கத்தில் பணிகள் உறுதிப்படுத்தும் வரை முதுநிலை கூட்டுறவு ஆய்வாளர் ஒருவர் சங்கத்தின் சிறப்பு அலுவலராக இருப்பார். அதன் பிறகு அரசு, இயக்குநர்கள் குழுவை அமைக்கும்.

5. முதல் இரண்டு ஆண்டுகளுக்குச் சங்கத்தின் சிறப்பு அலுவலராகப் பணி புரியும் முதுநிலைக் கூட்டுறவு ஆய்வாளரின் பணி இலவசமாகக் கிடைக்கும். மூன்றும் ஆண்டில் முதுநிலைக் கூட்டுறவு ஆய்வாளரின் செலவுத் தொகையில் 20 சதத்தைச் சங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அது போல் 4, 5 ஆண்டுகளில் முறையே 50 சதம், 75 சதம் செலவுத் தொகையினை ஏற்றுக் கொள்ள வேண்டும். 6-வது ஆண்டுக்குப் பிறகு, முதுநிலை ஆய்வாளரின் முழுச் செலவையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

6. கடன் அளிக்கப்படும் முறை, வட்டி விகிதம், கடன் வசூல் செய்யும் முறைகள் மற்றும் அன்ருடம் அனுசரிக்க வேண்டிய அலுவலக முறைகள் ஆகிய அனைத்தும் ஏற்கனவே செயல்பட்டு வரும் ஊரக வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கத்தினைப் போல் பின்பற்றப்படும்.

7. தற்சமயம் ஊரக வீட்டு வசதி பிரிவு மேற்பார்வை பொறியாளரின் அதிகாரத்திற்குக் கீழ் பணி புரிந்து வரும் தொழில் நுணுக்க அலுவலாளர்கள், இனி கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர் (வீட்டு வசதி) அதிகாரத்திற்குக் கீழ் பணி புரிவார்கள்.

8. தமிழ் நாடு வீட்டு வசதி கூட்டுறவு சங்கம் தனது நிதியிலிருந்து 25 சதத்தை அமைக்கப்பட்டிருக்கும் ஊரக வீட்டு வசதி கூட்டுறவு சங்கத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

இரட்டிப்பு இலாபம் பெற இரட்டை வாழை பயிரிடுவீர்!

முக்கனிகளில் ஒன்ருன 'வாழை' அனைவராலும் விரும்பப்படுவதும் ஏழை எளியோர்க்கும் எளிதில் கிடைக்கக் கூடிய பழ வகையுமாகும். உலகம் முழுவதும் வெப்ப மண்டல பிரதேசங்களில் வாழை அதிக அளவில் பயிர் செய்யப்படுகின்றது. மேற்கத்திய நாடுகளான ஈகுவேடார், ஹோண்டுராஸ், பனமா, கொலம்பியா, கோஸ்டாரிகா, ஜமெய்கா, கானரித்தீவுகள் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் வாழை தனிப் பயிராகப் பயிர் செய்யப்பட்டு ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இந்தியாவில், வாழை மாவிற்கு அடுத்தபடியாக அதிகப்பரப்பில் பயிர் செய்யப்படுகிறது (1.86 இலட்சம் எக்டர்). எனினும் வாழை உற்பத்தியளவு நமது தேவைக்கே ஏறத்தாழ சரிப்பட்டு வருகிறது. வாழை உற்பத்தியை நாம் கணிசமான அளவில் அதிகரித்தோமானல், நாமும் மற்றமேற்கத்திய நாடுகளைப் போல அதிக அளவில் ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை மிகுதியாகப் பெறலாம். வாழை உற்பத்தியைப் பெருக்கிஏற்றுமதி மூலம் அந்நியச் செலாவணியை ஈட்டப்பெரும் வாய்ப்புகள் நமக்கு உள்ளன.

நம் நாட்டில் தமிழ்நாடு, கேரளா, மகாராஷ்டிரா, அஸ்ஸாம், கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வாழை அதிகமாகப் பயிராகிறது. தற்பொழுது 'கேவண்டிஷ்' வகைகளுள் ஒன்ருன குள்ள வாழையே (பச்சை வாழை) அதிக அளவில் பயிர் செய்யப்பட்டு வருகின்றது. குள்ள வாழையில் அநேகமாக ஒரு முறைதான் பலன் எடுக்க முடியும். மறு பயிர் விடப்படுவதில்லை. மறுவாழை இலாபகரமாக இருக்காது என்பதுதான் இதற்குக் காரணம். குள்ள வாழையிலிருந்து தோன்றிய 'ரொபஸ்டா' என்ற எட்டி வாழை குள்ள வாழையைக் காட்டிலும் அதிகப் பலன் தரவல்லது. மேலும் ஒரு குறிப்பிடத்தக்க தன்மை ரொபஸ்டா வாழைக்கு உண்டு. அதாவது ரொபஸ்டாவில் மறுபயிர், மிகுந்த பலனைக் கொடுக்கவல்லது என்பதே அதன் சிறப்பாகும். விரைவில் இரு முறை பலன் கொடுத்து வருவாய் பெருக்குகிறது. 'ரொபஸ்டா' வாழையிலிருந்து மேலும் அதிக அளவில் பலன் கிடைப்பதற்குரிய வழிமுறைகள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் (கோயமுத்தூர்) ஆராயப்பட்டு வருகின்றன. 'ரொபஸ்டா' வாழையில் இரட்டை வாழைச் சாகுபடி முறையினுல் மிகுந்த பலன் பெறலாம் என ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

பொதுவாக ரொபஸ்டா வாழை 1.8 X 1.8 மீட்டர் (6 அடி X 6 அடி) அல்லது 2.4 X1.8 மீட்டர் (8 அடிX6 அடி) என்ற இடைவெளியில் பயிர் செய்யப்படுகின்றது. இரட்டை வாழை சாகுபடி முறையில் 2.4 X 1.8 மீட்டர் இடைவெளியில் இரண்டு கன்றுகள் வீதம் நட வேண்டும். ஒரு கன்றிற்கும் மற்ருெரு கன்றிற்கும் இடையே 30 செ. மீ. (ஒரு அடி) இடைவெளி விட்டு இரு குழிகளில் இரு கன்றுகள் நட வேண்டும். ஒரு கன்று நடவு முறையில் ஒரு எக்டேருக்கு 2,240 கன்றுகள் நடலாம். ஆனுல் இரட்டை வாழை நடவு முறையில் எக்டேருக்கு 4,480 கன்றுகள் நடலாம். ஏனைய சாகுபடி முறைகளும், உரமிடும் முறையும் இரு சாகுபடி முறைகளுக்கும் பொதுவானதே. ஆனுல் இரட்டை வாழை நடவு முறையில் அதிக கன்றுகள் நடுவதினுல், உரத் தேவை இரு மடங்காக அதிகரிக்கிறது.

குலைகளின் தரம்

ஒவ்வொரு குலையிலும் உற்பத்தியாகும் சீப்புகளின் எண்ணிக்



ணிக்கையைக் கொண்டு அந்தக் குலைகளின் தரம் நிர்ணயிக்கப்படுகின்றது. இரட்டை வாழை சாகுபடியில் ஒரே அளவு நிலப்பரப்பில் இரு மடங்கு வாழை பயிர் செய்யப்பட்ட போதிலும் இம்முறையில் உண்டாகும் குலைகளின் தரம் பாதிக்கப்படுவதில்லை. மாறாக குலைகளில் உள்ள சீப்புகளின் எண்ணிக்கை கணிசமான அளவில் பெருகியிருக்கிறது. இதனால் குலைகளின் தரமும் 82.37 சதவீதம் உயர்ந்திருக்கிறது.



மகசூல்

ஒரு வாழை நடவில் ஒரு குலை 21.42 கிலோ எடையிருந்தால், இரட்டை வாழை நடவில் ஒரு குலை 18.98 கிலோ எடைதான் இருக்கிறது. ஒரே இடத்தில் (4.32 சதுர மீட்டர்) இரு வாழைகள் பயிரிடப்படுவதினால் குலைகளின் எடை குறைகிறது. ஆனால் 4.32 சதுர மீட்டர் பரப்பில் உண்டாகும் இரு வாழைக் குலைகளும் சேர்ந்து 37.96 கிலோ எடை இருக்கிறது. இரட்டை வாழை நடவில் ஒரு எக்டேரில் 87.0 டன் மகசூல் கிடைக்கிறது. ஆனால் ஒரு வாழை நடவில் ஒரு எக்டேருக்கு 50.0 டன் மகசூல் தான் கிடைக்கிறது. இரட்டை வாழை நடவினால் 74.00 சதவீதம் அதிக பலன் கிடைக்கிறது. மேலே கூறியபடி இரட்டை வாழையில் ஒரு குறிப்பிட்ட பரப்பளவில் அதிக எண்ணிக்கை வாழை பயிரிடப்படுவதினால் வாழைக்கு வாழை போட்டி போட்டுக் கொண்டு நிலத்திலிருந்து ஊட்டச் சத்துக்களை கிரகிக்கின்றன. மேலும் வாழை இலைகளுக்குத் தேவையான சூரிய ஒளிக்கும் போட்டி. இதனாலேயே வாழையின் குலை ஈன்று பலன் தரும் காலம் சிறிது அதிகரிக்கிறது. இவ்வாறு இரட்டை வாழையில் ஒரு வாழை நடவைக் காட்டிலும், பயிர்க்காலம் 26.33 நாட்கள் அதிகரிக்கின்றது. பயிர்க்காலம் சிறிது அதிகரித்தாலும் இரட்டை வாழை தரும் மொத்தப் பலன் பாதிக்கப்படுவதில்லை. அதிக பலன் கிடைப்பதினால் பயிர்க்காலம் சிறிது அதிகரிப்பது ஒரு பொருட்டாகத் தோன்றுவதில்லை.

அதிக லாபம்

இரட்டை வாழை நடவு முறையினால் வாழைக் கன்றுகளின் எண்ணிக்கை அதிகரிப்பதாலும், உரத்தின் அளவு அதிகரிப்பதாலும் ஒரு எக்டேரில் பயிர் செய்ய ஆகும் செலவும் அதிகமாகிறது! ஒரு வாழை நடவு முறையில் ஒரு எக்டேரில் 50 டன் வாழைக்காய் உற்பத்தியாவதினால் கிடைக்கும் மொத்த வருமானம் ரூ. 28,820. ஆனால் அதே ஒரு எக்டேரில் இரட்டை வாழை நடவு முறையினால் 87 டன் வாழைக்காயும் ரூ. 51,080 வருமானமும் கிடைக்கின்றன.

இரட்டை வாழை நடவு முறையினால் 80.40 சதவீதம் அதிக அளவில் இலாபம் பெறலாம் என்பது உறுதியாகிறது. ஒரு எக்டேரில் இந்த முறையினால் குறுகிய காலத்தில் (442 நாட்களுக்குள்) ரூ. 37,740 நிகர இலாபம் பெறலாம் என்பதே குறிப்பிடத்தக்கதாகும். இரட்டை வாழை சாகுபடி முறை, வாழை உற்பத்தியாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பது உறுதி.

இரட்டை வாழை நடவு முறையினால் ஒரு எக்டேரில் கிடைக்கும் நிகர இலாபம்

விவரம்		ஒரு வாழை நடவு முறை	இரட்டை வாழை முறை
இடைவெளி (மீட்டர்)		2.4 X 1.8	2.4 X 1.8
கன்றுகளின் எண்ணிக்கை		2,240	4,480
ஒரு குலையிலுள்ள சீப்புகள்		8	8
ஒரு குலையிலுள்ள பழங்கள்		135	135
ஒரு குலையின் எடை (கிலோ)		21.42	18.98
மகசூல் (டன்)		50	87
உற்பத்தி செய்யச் செலவு	(ரூபாய்)	7,900	13,340
மொத்த வருவாய்	(ரூபாய்)	28,820	51,080
நிகரலாபம்	(ரூபாய்)	20,920	37,740
அதிக லாபம்	(சதவீதம்)	...	80.40

தகவல் : திருவாளர்கள்
இரா. செ. அழகிய மணவாளன்,
ர. பாலகிருஷ்ணன்,
தோட்டக்கலைத் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயமுத்தூர்-641003.

தூர் கிளைப்பதைத் தூண்டும் முறைகள்

'பயிர்களின் எண்ணிக்கையே பாதி மகசூல்!' என்பதற்கிணங்க, ஒரு நெற்பயிர் தரும் மொத்த மகசூலின் அளவு, அது விடும் மொத்தத் தூர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே அமைவதாலும், தூர்களின் எண்ணிக்கையில் ஏற்படும் இழப்பை, பின்னால் ஈடுகட்டுவதற்கான வழிமுறைகள் இல்லாத காரணத்தினாலும், நெற்பயிரில் தூர்கள் பிடிப்பது சிறப்பாக இருக்க வழி செய்யும் வகையில், பின்வரும் சாகுபடி முறைகளைக் கவனமாகக் கடைப்பிடிக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

1. இளம் நாற்றுக்களை நடுவது.
2. நாற்றுக்களை நெருக்கமாக நடுவது.

3. மூன்று முதல் ஐந்து சென்டி மீட்டர் ஆழத்தில் நாற்றுக்களை மேலோட்டமாக நடுவது.

4. தூர்கட்டும் பருவத்தில், குறைந்த அளவு நீரைப்பாய்ச்சி அது மெல்லிய ஆடைபோல் மேற்பரப்பில் சீராகப் பரவி நிற்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இத்தகைய பாசனம், தூர்ப் பிடிப்பைத் துரிதப் படுத்துகிறது.

5. நல்ல முறையில் தூர்கள் கிளைக்க உதவும் வகையில், மணிச்சத்து மற்றும் துத்தநாகச் சத்துக்களைப் போதிய அளவு அடியுரமாக இடுவது.

6. தழைச்சத்து உரங்களைத் தக்க காலத்தில் இடுவது.

இந்தச் சாகுபடி முறைகள் அனைத்தும் நெற்பயிரின் ஆரம்ப கால வளர்ச்சியைத் துடிப்பாக்கி, தூர்க்கட்டுதலை அதிகப்படுத்தப் பெரிதும் உதவுகின்றன. குறிப்பாக, பாதகமான பருவ நிலைகளிலும், குறைந்த அளவு உரங்களை உபயோகிக்க வேண்டிய சூழ்நிலைகளிலும் இந்தச் சாகுபடி முறைகள் சிறந்த பலன்களைத் தருகின்றன.

4 முதல் 6 இலைகளுடன் (ஐந்திலை நாற்றுகள் மிகவும் சிறந்தவைகள்) கூடிய, 25 முதல் 30 நாட்கள் வயதுடைய நாற்றுகள் நடவு வயலில் எளிதில் வேரூன்றி, விரைவில் பச்சை பிடிக்கும் ஆற்றல் நிறைந்தவை. ஆகவே, இத்தகைய இளம் நாற்றுகளை நடுவது நல்லது!

தூர்களாக வெளிவரும் பருக்கள், நாற்றின் அடிப்பாகத்தில் உள்ள கணுக்களில் அமைந்திருப்பதால், நாற்றுகளை 3 முதல் 5 சென்டி மீட்டர் ஆழத்தில் 'மேலோட்டமாக' நடுவது நல்லது. இதற்குமாறாக வழக்கம் போல் ஆழமாக அழுத்தி நடவு செய்தால், தூர் விடும் பருக்கள், சேற்றில் ஆழமாக அழுந்திவிடுமாதலால், தூர்கள் வெளிவருவது தடைபடும். இதனால் தூர்களின் எண்ணிக்கை பெரிதும் பாதிக்கப்படும்.

நாற்றுகளை 10 × 15 சென்டி மீட்டர் இடைவெளியில் நெருக்கமாக நடுவது நல்லது. இதனால் நடப்படும் செடிகளின் எண்ணிக்கை அதிகமாகிறது. ஆகவே வெளிவரும் தூர்களின் எண்ணிக்கையும் அதிகமாகிறது.

தூர்களின் எண்ணிக்கை அதிகமானால், மகசூலும் அதிகமாகும்!

வளங்குறைந்த வயல்களில் சாகுபடி செய்யும்போதும், குறைந்த அளவு உரங்களை உபயோகித்துச் சாகுபடி செய்ய வேண்டிய நிலைகளிலும், இந்த 10×15 சென்டி மீட்டர் இடைவெளி பெரிதும் விரும்பத்தக்கது. இதனால்தான் 'நெருக்க நட்டு நெல்லைப்பார்' என்கின்றோம். மேலும் 10×15 சென்டி மீட்டர் இடைவெளியில் நெருக்கமாக நடவு செய்கின்றபோது அதிகமான அளவு செடிகளின் வேர்கள், வயல் முழுவதும் சீராகப் பரவி, மண்ணிலுள்ள பயிர்ச் சத்துக்களை நல்லமுறையில், முழு அளவில் பயன்படுத்திக் கொள்கின்றன. இதன் காரணமாக நிலத்தில் இடப்படுகின்ற உரங்களின் சேதாரம் கணிசமாகக் குறைகிறது. மேலும் நிலத்திலுள்ள இயற்கை வளம் சிறப்பான முறையில் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே இளம் நாற்றுகளை நெருக்கமாகவும், மேலோட்டமாகவும் நட்டு, தழைச்சத்து உரங்களைத் தக்க காலத்தில் இடுவதே நிறையத் தூர்கள் கிளைப்பதற்குரிய வழியாகும்.

ஆடுதுறை-31 பூசா-33 ஐ.ஈ.டி-1722

குறுவைப் பட்டத்திற்கு ஏற்ற குறுகிய கால நெல் ரகங்கள்!

குன்றென மகசூல் குவித்திட குறுவைப்பட்டமே சிறந்தது என்பது கடந்தகால அனுபவத்திலிருந்து தெரியவருகிறது. காலம் நமக்குக் கற்றுத் தந்த அனுபவத்தின் அடிப்படையில், குறுவை பட்டத்தில் அதிக மகசூல் தரக் கூடிய, குறுகியகால வயதுடைய ரகங்களைத் தேர்ந்தெடுத்துப் பயிரிடுவது உழவர் பெருமக்களின் கடமையாகும். ஏனெனில், அதிக மகசூல் தரும் குறுகிய கால ரகங்களைப் பயிரிடுவதால் அதிகத் தண்ணீர் தேவையில்லாமலும், பூச்சி-பூஞ்சாளங்களின் தாக்குதல் அதிகமில்லாமலும் சாகுபடி செய்ய இயலும்; அதே நேரத்தில் இரண்டாவது போக சாகுபடியைக் காலதாமதமின்றி துவக்கவும் முடியும். இந்த அடிப்படையில் சிந்தித்துப் பார்க்கும் பொழுது 'ஆடுதுறை-31', 'பூசா-33', 'ஐ. ஈ. டி. 1722' ஆகிய குறுகியகால வயதுடைய உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்களே குறுவைப் பட்டத்திற்கு மிகவும் ஏற்றவை என்பது தெளிவாகிறது எனவே, இம்மூன்று ரகங்களின் சிறப்புக் குணங்களையும், சாகுபடி முறைகளையும் 'தமிழரசு' இதழ் சார்பாக தமிழக உழவர் பெருமக்களுக்குக் காணிக்கையாகப் படைத்துள்ளோம்.

சிறப்புக் குணங்கள்

ஆடுதுறை—31

அதிசயநெல் 'ஐ. ஆர். 8'-யும், 'வளர்ப்பு 340' என்ற ரகத்தையும் கருஒட்டுச் சேர்ந்து ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப்பட்டதே 'ஆடுதுறை-31'. இது ஏக்கருக்குச் சராசரியாக 2.5 டன் மகசூல் கொடுக்கவல்லது. இந்த ரகம் திருநெல்வேலி மாவட்டத்தில் குறைந்த அளவு உரத்திலேயே, ஏக்கருக்கு 3,840 கிலோ-அதாவது மாவுக்கு ஏறத்தாழ 46 காலம்-மகசூல் கொடுத்துள்ளது. இந்த ரகம் 100 முதல் 105 நாட்களில் அறுவடைக்கு வந்துவிடும். இந்த ரகத்தின் அரிசி குட்டைப் பருமன் ரகத்தைச் சேர்ந்தது; வெண்மையானது. இந்த ரகத்தை அறைக்கும் போது அரிசி அதிகமாக இடிவதில்லை.

பூசா-33

புதுடில்லியில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் மேம்படுத்தப்பட்ட 'சபர்மதி' என்ற நெல் ரகத்தையும், 'ரத்னா' என்ற நெல் ரகத்தையும் கரு ஒட்டுச் சேர்த்து உருவாக்கப் பட்டதே 'பூசா-33'. 100 முதல் 105 நாட்களில் அறுவடைக்கு வந்து, ஏக்கருக்குச் சராசரியாக 2.5 டன் மகசூல் அளிக்கவல்லது. இந்த ரகத்தின் அரிசி மணமுடையது; வெண்மையானது; நீண்ட சன்னமானது.

ஐ. ஈ. டி. 1722

'ஐ. ஆர். 8' நெல் ரகத்தையும், 'தாடுக்கன்' என்ற நெல் ரகத்தையும் கரு ஒட்டுச் சேர்த்து புதுடில்லியில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப்பட்ட இந்த ரகம் 100 முதல் 104 நாட்களில் அறுவடைக்கு வந்துவிடும். இது சராசரியாக ஏக்கருக்கு 2,200 கிலோ மகசூல் தரவல்லது. இந்த ரகத்தின் அரிசி நீண்ட சன்ன ரகத்தைச் சேர்ந்தது; வெண்மையானது.

இதர குணங்கள்

விவரம்	ஆடுதுறை—31	பூசா-33	ஐ.ஈ.டி. 1722
பயிர் உயரம்	100 செ.மீ.	95 செ.மீ.	நடுத்தர உயரம்
1,000 மணியின் எடை	22.6 கிராம்	24.05 கிராம்	24.9 கிராம்
அறைவைத் திறன்	72.5 சதம்	69.5 சதம்	69.5 சதம்
புரதச் சத்து	10.1 சதம்	8.2 சதம்	7.8 சதம்

மேற்கூறிய 3 குறுகிய கால ரகங்களையும் பயிரிட்டு அதிக மகசூல் பெற்றிட பின்கண்ட சாகுபடி முறைகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கின்றோம்.

சாகுபடி முறைகள்

விதைக்கும் காலம்	...	ஜூன்-ஜூலை
விதை அளவு	...	ஏக்கருக்கு 25 கிலோ
நாற்றங்கால்	...	ஏக்கருக்கு 12 சென்ட் பரப்பு.
நாற்றங்காலுக்கு உரம்	...	நாற்றங்காலில், 1 சென்ட் பரப்புக்கு 2 கிலோ 'டை-அமோனியம் பாஸ்பேட்' வீதம் இடவேண்டும்.
விதையுடன் மருந்து	...	1 கிலோவுக்கு 2 கிராம் 'அக்ரசான்' மருந்து வீதம் கலக்கவும்.
விதைப்பு	...	முளைவிட்ட விதைகளை சென்டிற்கு 2 கிலோ வீதம் விதைப்பது சிறந்தது.
நாற்றங்காலில் பயிர்ப் பாதுகாப்பு		நாற்று பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பாக 'பாரத்தியான்' அல்லது 'என்டிரின்' தெளிக்கவும்.
நாற்றின் வயது	...	20 முதல் 25 நாட்கள்
நடவு வயல்	...	நன்ருக உழுது சேருக்கி, சமப்படுத்தவும்.
அடியுரம்	...	ஏக்கருக்குத் தொழு எரு—12 வண்டி தழைச்சத்து—15 கிலோ மணிச்சத்து—15 கிலோ சாம்பல்சத்து—15 கிலோ
நடவு இடைவெளி	...	15 X 10 சென்டி மீட்டர் (6 X 4 அங்குலம்)
மேலுரம்	...	15 கிலோ தழைச்சத்தை இரண்டாகப் பிரித்து, விதைத்த 40-வது நாளிலும் விதைத்த 55-வது நாளிலும் இடவும்.
களை எடுத்தல்	...	விதைத்த 45-ஆம் நாள் களை எடுக்கவும்.
பயிர்ப்பாதுகாப்பு	...	பூச்சிகள், பூஞ்சாளங்களின் தாக்குதலைத் தடுக்க வேளாண்மைத்துறையினர் பரிந்துரைக்கும் மருந்துகளை முன்கூட்டியே தெளிக்கவும். புகையான் தாக்குதல் காணப்படின் ஏக்கருக்கு 20 கிலோ 'பி.எச்.சி.' 10 சதம் மருந்து தூவவும்.

அறநிலைய ஊழல் புகார் விசாரணைக் குழு

அறநிலையங்களில் ஏற்பட்டுள்ள முறைகேடுகள், நிலங்களை விற்பதிலும், குத்தகைக்கு விட்டதிலும், வேலைகளைக் காண்டிராக்டுகளுக்கு விட்டதிலும் ஏற்பட்டுள்ள ஒழுங்கீனங்கள், ஆலய நிதிகளைப் பெருமளவில் பிற காரியங்களுக்குப் பயன்படுத்தியது ஆகியவை சம்பந்தப்பட்ட புகார்களை விசாரிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவின் தலைவராக வருவாய் வாரிய கூடுதல் செயலாளரான திரு. ஆர். பத்மநாபன், ஐ.ஏ.எஸ். அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிருர்.

இந்தக் குழுவில், சென்னை பொதுக் கணக்குத் தணிக்கை அலுவலகத்தைச் சார்ந்த முதுநிலைத்தணிக்கை அலுவலர் திரு. பி. கே. இராமசாமி அவர்களும், புதுக்கோட்டை பொதுப் பணித்துறை நிருவாகப் பொறியாளர் திரு. ஜி. விசுவநாதன் அவர்களும் உறுப்பினர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

பொறுப்பேற்கும் தேதியிலிருந்து 4 மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இந்தக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

வேண்டுகோள்

இந்திய மக்கள் அனைவருக்கும் இனிய வாழ்வு மலர நமது பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தைக் கொண்டு வந்து செயல்படுத்தி வருகிருர். அத்திட்டத்தின்படி முதல் அம்சத்தின் ஒரு கூருக, உணவு உற்பத்தியைப் பெருக்க தமிழக வேளாண்மைத்துறை விரைந்து செயலாற்றி, உழவர் பெருமக்களுக்குத் தேவையான விதை, இரசாயன உரம், பூச்சிப் பூஞ்சாள மருந்துகள், கருவிகள் போன்றவற்றை வழங்கி வருகிறது. அதுபோல் தமிழ்நாடு கூட்டுறவுத் துறையும், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும் உழவர் பெருமக்களுக்குத் தேவையான பயிர்க் கடன் வழங்கி வருகின்றன. இந்த நல்ல வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு மேற்கூறிய வழியில் பயிரிட்டு, குறுவைப் பட்டத்தில் குன்றென மகசூல் பெருக்கி, உங்கள் வீட்டிற்கும், நாட்டிற்கும் நற்பணியாற்றுமாறு தமிழக உழவர் பெருமக்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

—ஆர். மாணிக்கம்.

நமது சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாப்போம்!

—டி. துரைராஜ்,
தனி அலுவலர்,
சுற்றுப்புறச் சுகாதாரம்,
தமிழ்நாடு அரசு.

மனித வாழ்வினில் குறிப்பிடத்தக்க விளைவினை உண்டாக்கக்கூடிய பௌதிக-இரசாயன-உயிரியல்-சமுதாய இயல் தொடர்பானவை அனைத்தும் சுற்றுப்புறச் சூழ்நிலைக்குத் துணை புரிவன எனலாம். இந்தச் சுற்றுப்புறச் சூழ்நிலை, உயிரினங்களுக்கும், உயிருள்ள-உயிரற்ற சுற்றுப்புறப் பகுதிகளுக்கும் இடையே ஒரு சிக்கல் மிகு பிணைப்பினை ஏற்படுத்தத் தக்க ஒன்ருகும். இந்தப் பிணைப்பு, மிகவும் சிக்கல் வாய்ந்த சூழ்நிலையிலும், சுற்றுப்புறச் சூழ்நிலையைச் சமநிலைப்படுத்த உதவுகிறது. தொழில்களைப் பெருக்கியும், நாட்டுப்புறத்தை நகரமாக்கியும், காடுகளை அழித்தும் தனது முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் மனிதனின் செயல் முறைகள், இயற்கையாக அமைந்த சூழ்நிலையை மாற்றி விடுகின்றன; கெடுத்து விடவும் செய்கின்றன.

இயற்கை வளத்தை அளவுக்கு மீறிப் பயன்படுத்துவதும், தொழில் நுட்ப வளர்ச்சியைச் சிந்திக்காமல் பயன்படுத்துவதும், மனித வாழ்விற்கும், திட்டங்கள் முறையாக நிறைவேறுவதற்கும் சுற்றுப்புறம் எவ்வளவு இன்றியமையாதது என்பதை உணராததுமே இச் சுற்றுப்புறச் சூழ்நிலை கெடுவதற்குக் காரணமாகும். சூழ்நிலை என்பது ஒன்ருேடொன்று பின்னிப் பிணைந்து பல்வேறு கூறுகளைக் கொண்டது என்ருலும், சூழ்நிலை மாற்றத்தை அசுத்தமாக்குதல், நகர்ப்புறமாக்குதல், காடுகளை அழித்தல் என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

அசுத்தமாக்குதல்

நீர், நிலம், காற்று ஆகியவை அசுத்தமாக்கப் பெற்றுக் கெடுக்கப்படுவதுதான் சுற்றுப்புறச் சீரழிவிற்கு முக்கிய காரணம். அதை உடனடியாகக் கவனிக்க வேண்டும்.

தண்ணீர்க் கலப்பு

தொழிற்சாலைகளாலும், நகர்ப்புறப் பகுதிகளாலும், விவசாய சம்பந்தப்பட்ட காரியங்களாலும் தண்ணீர் கெடுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவுப் பொருட்களை அண்மையிலுள்ள ஒரு நீரோட்டத்துடன் முன்யோசனையின்றிக் கலக்கவிடுவதுதான், நமது மாநிலத்தில் பெரும்பாலும் தண்ணீர் கெடுவதற்குக் காரணமாக இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் 7 வடிசாலைகள், 430 தோல் பதனிடும் சாலைகள், 12 காகித ஆலைகள், 60 நெசவாலைகள், 21 சர்க்கரை ஆலைகள், 10 இரசாயன உரத் தொழிற்சாலைகள், 390 இரசாயனத் தொழிற்சாலைகள், 350 சவ்வரிசி தயாரிப்பு ஆலைகள் ஆகியவை இருக்கின்றன. இந்த ஆலைகள் அனைத்தும், கழிவுப் பொருட்களை அண்மையிலுள்ள நீரோட்டத்தில் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ கலந்து விட்டு விடுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள பாலாறு, காவேரி, பவானி, வைகை, தாமிரபரணி போன்றவைகளில் பெரும்பாலானவை தொழிற்சாலைகளின் கழிவுப்பொருட்கள் கலந்த நீரையே தாங்கி வருகின்றன. இதனுல் ஆற்று நீர், குளத்து நீர் மட்டுமல்ல, நிலத்துக்கு அடியில் ஓடும் நீருங்கூட, கெடுக்கப்படுகிறது.

தமிழ்நாட்டின் நகரங்களில், ஒரு சில நகரங்களில்தான் கழிவுப் பொருளை வெளியேற்ற சாக்கடை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளும் சரியாகக் கவனிக்கப்படுவதில்லை. கழிவுப் பொருட்கள் சரியாக வெளியேற்றப்படாததால், அவை நல்ல தண்ணீர் செல்லுமிடங்களிலும் நுழைந்து, நல்ல நீரையும் கெடுத்துவிடுகின்றன.

தொடர்....

விவசாயத்தாலும் தண்ணீர் கெடுகிறது. உணவு உற்பத்தியைப் பெருக்கிடும் ஆர்வ மிகுதியால், விவசாயிகள் இரசாயன உரங்களையும், பூச்சி மருந்துகளையும் அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். வீரியமுள்ள உரத்தையும், பூச்சி மருந்தையும் வயலில் அதிகமாகப் பயன்படுத்தி விட்டு வருகிற விவசாயி அந்த மருந்தை, பக்கத்தில் உள்ள நீரோட்டத்தில் கலந்து விடுகிறார். இரசாயன உரங்களிலுள்ள அதிகமான 'நைட்ரஜன்', 'பாஸ்பரஸ்' ஆகியவை மனிதனின் உடல் நலத்தை மிகவும் பாதிக்கின்றன. உலகிலேயே ஓர் இந்தியனின் உடலில், அதிக அளவு 'டி. டி. டி.' இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு அதிக அளவு 'டி. டி. டி.' பயன்படுத்தப்படுவது ஜப்பானில் தான். (ஜப்பான் ஏக்கருக்கு 10,900 கிராம்; அமெரிக்கா 1,870 கிராம்; இந்தியா 180 கிராம்). ஆனால் இந்தியாவில் தான், மனிதவின் உடலில் 'டி. டி. டி.' அதிகமாக உள்ளது.



காற்றுக் கலப்படம்

பாஸ்பேட்டும், அம்மோனியாவும் கலந்து உரம் தயாரிக்கும் உரத் தொழிற்சாலைகள், பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலைகள், இரசாயனத் தொழிற்சாலைகள், அனல் மின் நிலையங்கள், சிமிண்ட் ஆலைகள் ஆகியவைதான் காற்றைக் கெடுப்பதில் முதலிடம் வகிக்கின்றன. இந்த ஆலைகளிலிருந்து வெளியாகும் 'சல்பர் ஆக்ஸைட்', 'ஹைட்ரஜன்' சல்பைட்,' கார்பன் மாேனாக்ஸைட்', 'நைட்ரஜன் ஆக்ஸைட்', 'அம்மோனியா' போன்றவைச் சுற்றுப்புறத்தைக் கெடுக்கின்றன. காற்று எந்த அளவுக்குக் கெடுக்கப்பட்டுள்ளது என்பதை ஆராய்ந்ததில், சென்னையிலும், மதுரையிலும் மிகவும் அதிக அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவந்துள்ளது. இது பற்றி மிகவும் அக்கறை காட்ட வேண்டும்.

தொழிற்சாலைகளுக்கு அடுத்தபடியாகக் காற்றைக் கெடுப்பது போக்குவரத்து வாகனங்கள்: அதிலும் சரியாகப் பாதுகாக்கப்படாமல் பழுதடைந்த வாகனங்கள் அதிகமாகக் காற்றைக் கெடுக்கின்றன. 'நைட்ரஜன் ஆக்ஸைட்', 'கார்பன் மானாக்ஸைட்', 'சல்பர் ஆக்ஸைட்' ஆகியவற்றையெல்லாம் இவ்வாகனங்கள் புகையாக வெளியேற்றிக் காற்றில் கலக்கச் செய்கின்றன.

மண்ணைக் கெடுத்தல்

கழிவுப் பொருட்களை நகராட்சியும், தொழிற்சாலையும் கண்ட இடங்களில் கொட்

டிக் குவித்து விடுவதால் மண்ணும் கெடுகிறது. குப்பைக் கழிவுகளைச் சேர்ப்பதும் அகற்றுவதும் நகராட்சிகளுக்குப் பெரும் சிக்கலாக இருக்கிறது. சென்னை நகரத்தில் மட்டும் நாள் ஒன்றுக்கு 1,250 டன் குப்பை குவிகிறது. தாறுமாறாகக் குப்பைகளைக் குவிப்பதால், ஈ, கொசு, எலிகள் ஆகியவை பெருகுகின்றன. நகரமே நாற்றமெடுக்கும்; காணவும் சகிக்காது! தொழிற்சாலைகளின் குப்பையில் சில இரசாயன நச்சுப் பொருட்களும் கலந்திருக்கும். மழைக்காலத்தில் அவை கரைந்து ஆற்று நீரையோ, குழாயடி நீரையோ கூடக்கெடுத்து விடக் கூடும்.



இரைச்சல்

ஒலிகள் பெருகி, இரைச்சல் மிகுதியால் வரும் கேடுகளும் மிக அதிகம். சிலரது காதுகளைக் கெடுத்துச் செவிடாக்கி விடுகிறது. மூளை நரம்பு நோய்களையும், இரத்த அழுத்த நோய்களையும், இருதய நோய்களையும் பேரிரைச்சல் பெரிதும் உருவாக்கி விடுகின்றது. பேருந்துகள், லாரிகள், ரயில் எஞ்சின்கள், தற்கால விமானங்கள் போன்றவை ஒலியை எழுப்பி, இரைச்சலை ஏற்படுத்துகின்றன. இவை தவிர, நமது நகரங்களில் இரவு பின்நேரத்திலும், அதிகாலையிலும் ஒலி பெருக்கிகளின் இரைச்சல் அதிகமாக உள்ளது. அண்மையில் நடைபெற்ற ஒரு மதிப்பீட்டின்படி, சென்னை மாநகர் இந்த இரைச்சலுக்கு உள்ளாகி அதிகமாக அல்லற்படுகிறது என்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

நகரங்களின் வளர்ச்சியும், மக்கள் தொகைப் பெருக்கமும்

தமிழ்நாட்டில் 1906 ஆம் ஆண்டில் 205 இலட்சமாக இருந்த மக்கள் தொகை, 1971-இல் 410 இலட்சம் என இரு மடங்காகப் பெருகியுள்ளது! மக்கள் தொகைப் பெருக்கம், நகர்ப்புற நிலங்களைச் சரியாகப் பயன்படுத்தாதது, தவறான நகரமைப்புத் திட்டம், குறிப்பிட்ட ஒரு சில இடங்களில் மட்டுமே தொழிற்சாலைகளை அமைப்பது ஆகியவைதான் நகரங்கள் தோன்றுவதற்குக் காரணம். சென்னை நகரத்தில் ஏற்கனவே இருக்கிற மக்களின் தொகை பெருகுவதுடன், வேலை தேடி வந்து குவியும் மக்களும் நகரையே முற்றுகையிடுகின்றார்கள். இதனால் குடிசைகள் பெருகுகின்றன! தண்ணீர், போக்குவரத்து, சாக்கடை வசதி, உணவுப் பண்டம் வழங்குதல் போன்ற மக்களின் தேவைகளை நிறைவேற்ற எடுக்கும் முயற்சிகளை முழுமையாகச் செயல்படுத்த முடியவில்லை. சென்னை நகரின் மக்கள் தொகையில் 30 சதவிகிதம் குடிசைகளில் தான் வாழ்வதாகக் கணக்கிடப்படுகிறது. நகரங்கள் பெருகுவதால் மக்கள் தொகை நெருக்கடி, சுகாதாரக் கேடு, குடிசைகள் பெருக்கம், தண்ணீர், சாக்கடை வசதி, போக்குவரத்து வசதிகளை மேலும் அதிகரிக்க வேண்டிய அவசியம் ஆகிய சிக்கல்கள் பெருகி விடுகின்றன.

நீரும் காற்றும் கெடுவது, நகர வளர்ச்சி, மக்கட் தொகை பெருக்கம் ஆகியவற்றுடன் காடுகளை அழித்தல், அதனையொட்டிச் சில அரிய விலங்குகளும், பறவைகளும் மறைந்து படுதல் போன்ற சுற்றுப்புறப் பிரச்சினைகளும் உள்ளன. காடுகளை அழிப்பதால் மழை பெய்வது குறையும்; சில வகை நல்ல மண்ணும், மண் சரிவுகளும் அரிப்புக்குள்ளாகி அழிந்து விடும்; இயற்கையான தட்பவெப்ப நிலையும் பாதிக்கப்படும். சில விலங்கினங்களும், பறவையினங்களும் அழிந்துபடுவதால், உயிரினங்களின் வளர்ச்சியில் உள்ள சமநிலை பாதிக்கப்படும். கடந்த 300 ஆண்டுகளில் 350 வகை உயிரினங்கள் அழிந்துள்ளன என்று கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது, ஓர் ஆண்டுக்கு ஓர் உயிரினம் மறைந்து கொண்டே வந்திருக்கிறது எனலாம்!

நமது பொறுப்பு

நமது சுற்றுப்புறச் சூழ்நிலை பற்றி உலகம் கொண்டுள்ள அக்கறையை நினைவூட்டும் வகையில் ஆண்டுதோறும் ஜூன் திங்கள் 5-ஆம் நாள், 'அனைத்துலகச் சுற்றுப்புறச் சூழ்நிலைநாள்' கொண்டாடப்படுகிறது. எழில் மங்கி வரும் சுற்றுப்புறத்தை எழிலூட்டி வண்ணந் தீட்டவும், வருகின்ற அழிவைத் தடுத்து நிறுத்தவும் அரசு, உள்ளாட்சிகள், தொழில் நிறுவனங்கள் எல்லாவற்றுக்கும் மேலாகப் பொதுமக்கள் ஆகிய அனைவருடைய ஒத்துழைப்பும் தேவை.



நமது சுற்றுப்புறச் சுகாதாரத்தைக் காக்க, பல்வேறு சட்டங்கள் தேவை. மத்திய அரசு, 1972-ஆம் ஆண்டில் வனப் பாதுகாப்புச் சட்டத்தையும், 1974-ஆம் ஆண்டில் தண்ணீர்ப் பாதுகாப்புச் (தண்ணீர்க் கலப்படத் தடுப்பு) சட்டத்தையும் இயற்றியது. காற்றைக் கெடுக்காமல் இருக்கவும் ஒரு தடுப்புச் சட்டம் பரிசீலனையில் இருக்கிறது. நீர், நிலம், காற்று ஆகிய எல்லாவற்றையும் உள்ளடக்கி அவற்றை அசுத்தத்திலிருந்து பாதுகாக்கச்

சட்டம் இயற்றுவது பற்றித் தமிழ்நாடு அரசு பரிசீலித்து வருகிறது. ஏற்கனவே பல மாநிலங்கள் நகர்ப்புற வளர்ச்சியை முறைப்படுத்த நகர வளர்ச்சித் திட்டத்திற்கான சட்டங்கள் இயற்றியுள்ளன. சில பூச்சி மருந்துகளைப் பயன்படுத்துவதையும் மத்திய அரசு முறைப்படுத்தியுள்ளது. மக்கள் தொகை வளர்ச்சி பற்றியும் தனது திட்டங்களை மத்திய அரசு அறிவித்துள்ளது. சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாப்பதன் இன்றியமையாமையை உணர்ந்து, சுற்றுப்புறத்தைக் காப்பதற்குத் தக்க நடைமுறைகளையும் ஆலோசனைகளையும் வகுத்து வழங்கிட 'தமிழ்நாடு சுற்றுப்புறச் சூழ்நிலைக் காப்புக் கழகம்' ஒன்றைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது.

சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாப்பதில் அரசு மட்டுமல்லாமல் உள்ளாட்சிகளும் பெரும் பங்கு கொள்ள வேண்டும். பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும், சாக்கடை வசதிகளை அமைக்கவும் உள்ளாட்சிகள் தக்க வழிவகைகளைக் காண வேண்டும். குப்பைகளைச் சேர்த்து அப்புறப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தியாக வேண்டும். கழிவுப் பொருட்களைக் கொண்டு 'கம்போஸ்ட் எரு' தயாரிப்பதில் விஞ்ஞான முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். தெருக்களையும், பொது இடங்களையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

நீரையும், காற்றையும் கெடுப்பதில் முதலிடம் வகிக்கின்ற தொழில் நிறுவனங்கள், தமது சமுதாயக் கடமையை உணர்ந்து கழிவுப் பொருட்களை முறையாக அப்புறப்படுத்த முன் வர வேண்டும். கழிவுப் பொருட்களை வெளியேற்றவும், ஒதுக்கவும் சரியான இடத்தினை அமைத்திடுதல், சில சமயங்களில் மூலப் பொருட்களையும், தொழில் முறைகளையும் மாற்றிக் கொள்ளுதல், ஆலைகளுக்குள்ளேயே சுகாதாரத்தைப் பாதுகாத்தல் ஆகியவற்றின் மூலம் அக்கேடுகளைத் தொழில் நிறுவனங்களே களையலாம். கழிவுப் பொருட்களை வெளியேற்றுவது பற்றி, தொழிலுக்குரிய திட்டத்தின் ஆரம்பத்திலேயே சிந்தித்து, தொழிலின் ஓர் இன்றியமையாப் பகுதியாக இதனையும் கருதிச் செயல்பட வேண்டும். இதற்காகும் செலவினால் இலாபம் இல்லையே என்று ஒதுக்கிவிடாமல் இதை முதன்மையாகக் கருத வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, சுற்றுப்புறத்தைக் காக்க வேண்டிய பெரும் பொறுப்பு பொதுமக்களிடையே உள்ளது. நமது சுற்றுப்புறத்தைக் காப்பாற்ற வேண்டியதன் அவசியத்தினை நாம் முழுக்க உணர்ந்து கொள்ள வேண்டும். தவறினால், அதன் பின்னர் ஏற்படும் கேடுகளையும் மனத்தில் கொள்ள வேண்டும். நமது சுற்றுப்புறத்தையும், பொது இடங்களையும் தூய்மையாக வைத்துக் கொள்ளுவோமென்றும், சுற்றுப்புறத்தைக் கெடுக்கும் எந்தச் செயலையும் செய்யமாட்டோம் என்றும் நாம் ஒவ்வொருவரும் உறுதி கொள்வோமாக!





பப்பாளியில் பலவகைப் பதார்த்தங்கள்

மகளிர் அரங்கம்



நம் நாட்டு மக்களின் அன்றாட உணவில் பழங்கள் போதுமான அளவில் இல்லை என்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் சுமார் 20 மில்லியன் டன் காய்கறிகளும் பழங்களும் விளைகின்றன. இவைகளை நாம் அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் இதன் மூலம் தான் நம் உடலுக்கு வேண்டிய தாது உப்புக்களும், வைட்டமின் சத்துக்களும் கிடைக்கின்றன. ஒரு நாளைக்கு சுமார் 75—100 கிராம் வரை பழங்களை சாப்பிடுவது நல்லது. நம்மில் பலர் பழங்களை உணவில் சேர்த்துக் கொள்ளாமல் இருப்பதன் காரணம் (1) அதன் முக்கியத்துவம் தெரியாமல் இருப்பதும் (2) அவைகளை சேர்த்துக்கொள்ளும் அளவிற்கு நம் பொருளாதாரம் இல்லாமல் இருப்பதும் ஆகும். இந்நிலையில் விலை குறைந்த அதிக ஊட்டச் சத்துள்ள பப்பாளி நம் மக்கள் அனைவருக்கும் ஒரு வரப்பிரசாதமாக உள்ளது. இதைப் பயிர் செய்வதும் மிக எளிது. மேலும் பயிர் செய்த முதல் ஆண்டிலேயே பலனும் கிடைக்கிறது. பப்பாளியில் முக்கியமானவைகள் 'கோ.1' 'கோ.2' 'சோமலா', 'பெரடீனியா', 'செலக்ஷன்-7', 'பிலிப்பைன்ஸ்' 'கூர்க்ஹனி டியூ' (Coorge Honey Dew) 'தாய்லண்டு' போன்றவைகள் ஆகும். இவைகளில் 'கோ.1' 'கோ.2', 'சோமலா', வகைகளில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பப்பாளியில் ஒவ்வொரு 100 கிராமிலும் 1110 வைட்டமின் 'ஏ' அலகும் (International unit) 57 மில்லி கிராம் வைட்டமின் 'சி' யும் சுண்ணாம்பு, இரும்பு போன்ற தாது உப்புச் சத்துக்களும் இருக்கின்றன.

ஊட்டச் சத்து மிகுந்த பப்பாளிப் பழத்தில் மருந்துக் குணங்களும் வியக்கத்தக்க அளவில் உள்ளன. ஜீரண மண்டலத்தில் ஏற்படும் பல்வேறு வியாதிகளுக்கும் பப்பாளி, மருந்தாகப் பயன்படுகிறது. மேலும் பப்பைன் (papain) எனப்படும் பப்பாளிப் பாலிலிருந்து எடுக்கப்படும் 'என்சைம் பௌடர்' மருத்துவத்துறையிலும் அழகுச் சாதனங்கள் தயாரிப்புத் துறையிலும் வெகுவாகப் பயன்படுகிறது.

பப்பாளிப் பழத்தை நம் அன்றாட உணவுடன் எவ்வாறு எல்லாம் சேர்த்துக் கொள்ளலாம் என்பதைச் சற்று நோக்குவோம். நன்கு முதிர்ந்த பப்பாளிக் காயைக் காய்கறியாக நம்மில் சிலரும், பழுத்த பழத்தைப் பெரும்பாலோரும் உபயோகிக்கின்றனர்.

நன்கு முதிர்ந்த பச்சைக் காயைக் கொண்டு பச்சடி, ஊறுகாய் போன்றவற்றைத் தயார் செய்யலாம்.

பப்பாளிப் பச்சடி

பப்பாளிக் காய்	1
பச்சைப் பயறு	50 கிராம்
பச்சை மிளகாய் (பொடியாக வெட்டியது)	5
உப்பு, கடுகு, எண்ணெய், கறிவேப்பிலை, இஞ்சி	தேவையான அளவு
தயிர்	1 கப்.

நன்கு முதிர்ந்த பப்பாளிக் காயை, கழுவி விட்டுத் தோலையும் கொட்டைகளையும் நீக்கி தேங்காய் துருவியால் துருவிக் கொள்ளவும். பச்சைப்பயறுகளைப் போதுமான அளவு தண்ணீர்விட்டு வேக வைக்கவும். வெந்தவுடன் இறக்கிக் குளிர வைக்க வேண்டும். துருவிய பப்பாளியை கொதிக்கும் தண்ணீரில் 5 நிமிடம் வேக வைக்க வேண்டும். (blanching) வேக வைத்த பச்சைப் பயறுடன் வேக வைத்த பப்பாளி, தயிர், தேவையான உப்பு, பச்சை மிளகாய், கறிவேப்பிலை, இஞ்சி ஆகியவற்றை சேர்த்துக் கொண்டு, தாளிக்கவும். இதை

படமும் செய்தியும்



கோவைப் பேருந்து நிலையத்தில் 26-5-'76 அன்று ஆளுநர் ஆலோசகர் திரு பி. கே. தவே அவர்கள் அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியினரால் நடத்தப்பெறும் ஜனதா உணவகத்தை, அவினாசிலிங்கம் கல்வி நிலையங்களின் நிறுவனர் திரு. தி. சு. அவினாசிலிங்கம் அவர்கள் தலைமையில் தொடங்கி வைத்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ். நரசிம்மன் விற்பனையைத் தொடங்கி வைத்தார். இந்தியாவிலேயே, ஒரு கல்லூரியினரால், அதன் ஆசிரியைகளாலும், மாணவிகளாலும் நடத்தப்படுகிற முதல் ஜனதா உணவகம் இது என்பது குறிப்பிடத்தக்கது.



சோழவரத்தில் உள்ள விமான தளத்தில், இரவும் பகலும் இடையருது உணவு தானியங்களைச் சேமித்து வைக்கும் பணியைத் தமிழ் நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் 4-6-'76-ல் துவக்கி வைத்தார்.



↑ சென்னைத் துறைமுகத்தில் கப்பல்களில் இருந்து இரசாயன உரங்களை இறக்கி, மூட்டைகளாகச் செய்யும் பணியை 4-6-'76-ல் மத்திய கப்பல் மற்றும்போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு ஜி. எஸ். தில்லான் அவர்கள் தலைமையில், மத்திய அரசின் ராஜாங்க வேளாண்மை அமைச்சர் திரு. அன்னா சாகிப் பி. ஷிண்டே அவர்கள் துவக்கி வைத்தார்.

↓ தமிழ்நாடு கிராம சேவகர்கள் சங்கத்தின் சார்பாக 20 அம்சப் பொருளாதாரத் திட்டக் கருத்தரங்கு, காந்தி கிராமத்தில் நடைபெற்றது. 4-6-'76-ல் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் அக்கருத்தரங்கின் நிறைவு விழா உரையாற்றினார்.



சென்னை எடப்பாளையத்தில் 6-6-'76-ல் வரதட்சிணை எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. தமிழ்நாடு ஆளுநர் திரு கே. கே. ஷா அவர்கள் அம்மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். அம்மாநாட்டில் நடிகர் திலகம் திரு. சிவாஜி கணேசன் அவர்களும் கலந்து கொண்டார். அம்மாநாட்டில் பல இளைஞர்கள் ''வரதட்சிணை வாங்க மாட்டோம்'' என்று உறுதி கூறினார்கள். →

சென்னை எழும்பூரில் உள்ள குழந்தைகள் நல்வாழ்வு மற்றும் மருத்துவமனையில் 4-6-'76 அன்று "சமுதாயத்தில் குழந்தைகள் நல்வாழ்வை ஊக்குவிப்பதற்காக, குழந்தைகள் மருத்துவமனைக் கல்வி திட்டத்தை" தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் துவக்கி வைத்தார். ↑

←

எழும்பூரில் உள்ள போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்தில் 'கில்டு ஆஃப் ஸர்வீஸ்' சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள 'ஜனதா காண்டீனை' 7-6-'76-ல் சென்னை நகர காவல் துறை ஆணையாளர் திரு கே. செந்தாமரை அவர்கள், திறந்து வைத்தார்.

வட ஆர்க்காடு மாவட்ட 20 அம்சத் திட்ட விளக்க விழாவினை 9-6-'76 அன்று வேலூரில் சென்னை வானொலி நிலைய இயக்குநர் திரு எம். எஸ். கோபால் அவர்கள் துவக்கி வைத்தார். அவ்விழாவிற்கு வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மு. பரமசிவம் அவர்கள் தலைமை வகித்தார். அவ்விழாவினையொட்டி அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், சென்னை வானொலி நிலைய இயக்குநர் அவர்களும் பார்வையிட்டனர். →

மத்திய அரசு உதவியுடன் தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலை வளர்ச்சி

இ. சி. சந்திர சேகரன்,
தலைமைப் பொறியாளர்,
தேசிய நெடுஞ்சாலைத்துறை,
தமிழ்நாடு.

ஒரு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கும், சமுதாய ஒருமைப் பாட்டிற்கும், அந்த நாட்டில் உள்ள சாலை அமைப்பே அடித்தளமாக அமைகிறது. பண்டங்களின் நெடுந்தொலைப் போக்குவரத்து, ரெயில்கள் மூலமாகவும், ஆகாய மார்க்கமாகவும், கடல் வழியிலும் கணிசமான அளவு நடைபெற்றாலும், நல்லதோர் சாலை அமைப்பின்றி அது நிறைவு பெற இயலாது. இதனைக் கருத்தில் கொண்டு, நமது பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் உருவாக்கிய 20 அம்சங்கள் கொண்ட இணைந்ததோர் பொருளாதாரத் திட்டத்திலே, தடை ஏதுமின்றி பல மாநிலங்களில் இயங்கும் வண்ணம் "தேசிய சாலைப் போக்குவரத்துக்கு உரிமம் வழங்குதல்" (National Permit System) இன்றியமையாததோர் இடம் பெற்றுள்ளது. புதுமை சால் வளர்ச்சித் திட்டத்தின் இந்தப் போக்குவரத்து அம்சம் பொலிவுடன் நிறைவேற, தேசிய நெடுஞ்சாலை அமைப்பு எவ்வாறு தகுதி பெற்று வருகிறது என்பதைக் காண்போம்.

தேசிய நெடுஞ்சாலை என்றால் என்ன ?

இந்திய சாலைகள் காங்கிரஸ் (Indian Road Congress) நமது நாட்டின் சாலைகளை, அவற்றின் முக்கியத்துவமும், தரமும் கருதி, ஐவகையாய்ப் பிரித்துள்ளது. அவற்றில் முதலாவதாக விளங்கும் தேசிய நெடுஞ்சாலைகள், மத்தியத் தலைநகரிலிருந்து மாநிலங்களின் தலைநகர்களை அடையும் வண்ணமும், முக்கியத் துறைமுகங்களை மற்றப் பெருநகர்களுடன் சேர்க்கும் வண்ணமும், நாட்டின் குறுக்கிலும் நெடுகிலும் சென்று, அண்டை நாடுகளின் எல்லை வரையில் பரந்துள்ளவையாகும்.

நம் நாட்டில் மொத்தமுள்ள சாலைகளில் 7 சதவிகித அளவே தேசிய நெடுஞ்சாலைகளாக அமைந்திருப்பினும், மொத்த சாலைப்போக்குவரத்தில் 35 முதல் 40 சதவிகிதம் வரை இவற்றின் மூலமே நடைபெறுகிறது.

ஆகவே பண்டங்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்துக்கு மட்டுமன்றி, தேசப் பாதுகாப்பிற்கும், உள் நாட்டில் அமைதி காக்கவும் பயன்படும் தேசிய நெடுஞ்சாலைகளை, "நாட்டின் உயிர்நாடிகள்" என்றே கூறலாம்.

1947-ஆம் ஆண்டிலிருந்து, தேசிய நெடுஞ்சாலைகளைப் பராமரிக்கவும், அவற்றின் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும், இந்திய அரசு பொறுப்பேற்று 1956-ஆம் ஆண்டில் அதற்குச் சட்ட உருவம் அளித்தது. இருப்பினும், மாநில அரசுகளே அச்சாலைகளை பராமரிக்கவும், வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும், சில செயல்முறைப் பொறுப்புகளைப் பகிர்ந்து அளித்துள்ளது. அதன்படி தமிழ்நாட்டில் மாநில நெடுஞ்சாலைத் துறையே இப்பொறுப்பை ஏற்றுள்ளது.

தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகள் :

தமிழ்நாட்டின் தேசிய நெடுஞ்சாலைகள், தலைநகராம் சென்னையை மூன்று அண்டை மாநிலங்களுடன் இணைப்பதோடு, தஞ்சை தவிர்த்த மற்ற எல்லா மாவட்டத் தலைநகரங்களோடும், இராமேஸ்வரம் போன்ற பெருங்கோயில் தலங்களோடும், தொடர்பு கொள்ளவும் வழி வகுக்கின்றன. மேலும், 'கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம், காவிரி

வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்' என்று சுதந்தர இந்தியாவிற்காக மகா கவி பாரதி திட்டமிட்ட வாணிப மறுமலர்ச்சியை உருவாக்கும் வகையில், வடக்கையும் தெற்கையும் வளமுறப் பிணைக்கும் வாரணாசி—கன்னியாகுமரிச் சாலையும், தமிழ்நாட்டில் ஒரு மத்திய ரேகை போல் ஊடுருவிச் செல்கிறது. இவற்றோடு, அண்மையில் தூத்துக்குடித் துறைமுகத் தொழில் நகரை திருநெல்வேலியொடு இணைக்கும் சாலையும் தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்தப்பட்டுள்ளது.

இவ்வாறாக, நமது பாரத தேசத்தில் மொத்தமுள்ள 28,870 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலை அமைப்பில் 1,852 கி.மீ. நீளமுள்ள பகுதி தமிழ்நாட்டில் செல்கிறது.

சுதந்திர இந்தியாவில் திட்டமிட்ட வளர்ச்சி :

1951-ஆம் ஆண்டு, நாட்டின் ஐந்தாண்டு வளர்ச்சித் திட்டங்களைத் துவக்கும் வரையில், தேசிய நெடுஞ்சாலையில் ஒரு சில மேம்பாட்டுப் பணிகள் மிக அவசியமான இடங்களில் மட்டும் ஆங்காங்கே செயல்படுத்தப்பட்டன. அது வரை மொத்த சாலைப் போக்குவரத்தில், மாட்டு வண்டிகளின் பங்கு அதிகமாகவும் மோட்டார் வண்டிகளின் பங்கு குறைவாகவும் இருந்தது. அதற்கு முன் பெரும்பாலும் கருங்கல் கப்பித் தளம் கொண்டிருந்த சாலைகள் (Water Bound Roads) வேக வாகனங்களின் தேவைக்கேற்ப, முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் தார்ச் சாலைகளாக (Black Tapped Roads) மாற்றி அமைக்கப்பட்டன. மற்றும், நம் சாலைப் போக்கில் பல இடங்களில் குறுக்கிடும் ஆறுகளைக் கடக்க என இருந்த தரைப் பாலங்களும், தளமில்லா வண்டிப் பாதைகளும், எல்லாக் காலத்துக்கும் ஏற்ற வகையில் மேம்பாலங்களாக மாற்றிக்கட்டப்பட்டன. அவற்றில் பூதலூர் காவிரிஆற்றுப் பாலமும், ராணிப்பேட்டை பாலாற்றுப் பாலமும், விழுப்புரம் பெண்ணையாற்றுப் பாலமும் முக்கியமானவை.

மேலும், செங்கற்பட்டு அருகில் பாலாற்றில் முன் வலுவேற்றப்பட்ட கம்பி கொண்ட சிமிட்டிக் கலவை முறை என்னும் (Prestressed Concrete) ஒரு புதுமையான தொழில் நுட்ப உத்தியை, நமது நாட்டிலேயே முதன் முதலாக சாலைப் பால அமைப்பில் கையாண்டது நமது பொறியாளர்களின் சாதனையாகும்.

திட்டமிட்ட வளர்ச்சியின் காரணமாக, நாட்டின் தொழில் வளமும், விவசாயப் பொருள் உற்பத்தியும், வாணிபமும் பெருகின. சாலை வாகனங்கள் எண்ணிக்கையிலும், எடையிலும், உருவிலும், பல மடங்கு விரிவடைந்தன. இந்நிலையில் 1959-ஆம் ஆண்டு பம்பாயில், நமது நாட்டின் திறமைசாலிப் பொறிஞர்கள் ஒன்று கூடி, சாலை மேம்பாட்டு வளர்ச்சி இன்றியமையாமையை உணர்ந்து, தொலைநோக்குடன் 1960-ஆம் ஆண்டு முதல் செயலாற்ற ஓர் 20 ஆண்டு ''அனைத்துச் சாலை வளர்ச்சித் திட்டத்தை'' உருவாக்கினார்கள். இது ''பம்பாய்த் திட்டம்'' எனப் பிறகு வழங்கியது.

இத்திட்டத்திற்கேற்ப, தமிழ்நாட்டில் 1969-ஆம் ஆண்டு வரையிலான மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில், தேசிய நெடுஞ்சாலைகளின் மேம்பாட்டிற்காகவும் புதிய பாலங்கள் அமைக்கவும், பராமரிப்பிற்காகவும், மொத்தம் சுமார் 14 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. நான்காவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் தேசிய மேம்பாட்டுப் பராமரிப்புப் பணிகள் கணிசமான அளவு விரிவாக்கப்பட்டு ரூ. 22 கோடி அளவில் செயல்படுத்தப்பட்டன. அவ்வாறே, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலிரண்டு ஆண்டுகளில், ஆண்டொன்றுக்கு ஐந்து கோடி ரூபாய்க்கு மேற்பட்ட அளவில் செலவழிக்கப்பட்டுள்ளது.



மேம்பாட்டு இனங்களும், பயனும் :

முன் கூறிய கணிசமான செலவு தொகை, பயனுறு வகையில் நாட்டின் முன் வரிசைத் தேவைக்கே சென்றுள்ளதா என்பதைச் சற்று நோக்குவோம். நமது தேசிய நெடுஞ்சாலைகளில், நாம் மேற்கொண்டுள்ள பணிகளை பாலங்களை மாற்றி அமைத்தல், சாலைத் தடத்தை அகலமாக்குதல், சாலைத்தளத்தை வலுவாக்குதல், செங்குத்தான ஏற்ற இறக்கங்களைச் சரியாக்குதல், குறுகலான வளைவுகளை நேராக்குதல், நெரிசல் மிகுந்த நகர்களோடு செல்லும் பாதைகளுக்கு நகர்ப் புறத்தே மாற்றுப் பாதைகள் (By Pass Roads) அமைத்தல், இருப்புப் பாதை கடவுகளில் மேம்பாலம் அமைத்தல், என இனம் வகுக்கலாம். இவையனைத்தும், வளர்ந்து வரும் சாலை வேக வாகனங்கள் மணிக்கு 100 கிலோ மீட்டர் அளவில் தங்கு தடையின்றி, எரிபொருள் சிக்கனம் கையாண்டு விபத்துக்களின்றி, ஆள் சேதம், பொருட் சேதம், நேரத்தில் சேதம் தவிர்த்துச் செயல்படவும், தொழிற்சாலைகளுக்கான பிரம்மாண்டமான பளு மிக்க இயந்திரங்களைக் கொண்டு செல்லவும், மிக இன்றியமையாத தேவைகளாதலால், இவற்றின் முதலீட்டைப் போல் பன்மடங்குப் பயனை நாட்டின் பொருளாதாரத்திற்குத் திருப்பித்தர வல்லவையாகும்.

பாலம் அமைப்பில் பொறியியல் திறமை :

தேசிய நெடுஞ்சாலை வளர்ச்சிப் பணிகளாக, மொத்தம் 530 பாலங்கள் மற்றும் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டன. இவற்றில் 14 பெரும் பாலங்கள் உள்ளிட்ட 290 பணிகள் இதுகாறும் முடிக்கப்பட்டுள்ளன. மற்றைய பணிகள் யாவும் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. அவற்றில் பவானி அருகில் கட்டப்படும் காவிரியாற்றுப் பாலமும், திருச்சி அருகே கொள்ளிடத்தின் மேலுள்ள பழைய வலுவிழந்த இரும்பு உத்திரப் பாலத்திற்குப் பதிலாக, விரைவில் கட்டப்பட விருக்கும் நவீன முறைப் பாலமும் முக்கியமானவையாகும்.

தேசிய ஒற்றுமை வளர்க்கும் இராமேஸ்வரம் கடல் பாலம் :

மற்றுமோர் நினைவில் கொள்ளத்தக்க முக்கிய இனம், அனைத்திந்திய முக்கியத்துவம் வாய்ந்த ஆலயத்தினைக் கொண்ட இராமேஸ்வரம் தீவினை தமிழகத்தின் முக்கிய நிலப்பரப்புடன் இணைத்திடும் வண்ணம் பாம்பன் நீர்ச் சந்தியின் குறுக்காக அமைக்கப்படும் பாங்குறு சாலைப் பாலம் ஆகும். ''சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம், சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்' என அன்று மகாகவி பாரதி கற்பனைப் பாலம் அமைத்தார். 1973-ம் ஆண்டு, பெருமதிப்பிற்குரிய நமது பாரதப் பிரதமர் அவர்கள் உண்மையான பாலம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டினார்கள். இப்பாலம் அமைப்பதற்கான உத்தேச மதிப்பீடு 7 கோடி ரூபாய் ஆகும். இப்பாலம் தான் இந்தியத் துணைக் கண்டத்திலேயே, கடலின் நடுவே அமைக்கப்படும் முதற் பாலம் ஆகும். இப்பாலம் அமைக்கும் பணி பாரதப் பொறிஞர்களின் திறமைக்குச் சான்றாக அமைந்துள்ளது. 1978-ஆம் ஆண்டின் இறுதியில், இந்தப் பாலம் கட்டி முடிக்கப்பட்ட பின், நம் நாட்டின் தேசிய ஒற்றுமைக்கு மட்டுமன்றி அண்டை நாடாம் இலங்கையுடன் உறவை வளப்படுத்தவும் நிச்சயம் இது உதவும்.

சாலை மேம்பாடு :

சாலைப் பணிகளைப் பொறுத்தமட்டில், பல தரப்பட்ட 1,113 கிலோ மீட்டர் நீளச் சாலையில் மேம்பாட்டுப் பணிகள் பல மேற்கொள்ளப்பட்டு. 490 கிலோ மீட்டர் தூரத்திற்கு இது வரை முடிவடைந்துள்ளன.

மாற்றுப் பாதைகள் :

மக்கள் நெருக்கம் அதிகம் கொண்ட சிறு நகர்கள், பெரிய நகர்கள் இவைகளில் நேரடிப் போக்குவரத்து வாகனங்கள் நுழைந்து வெளி வருவதில் உள்ள இடையூறுகளைத் தவிர்க்கும் வகையில், நகர்ப்புறத்தே மாற்றுச் சாலையின் அமைக்க வேண்டியது அவசியமாகும். இப்படி அமைக்கப்பட்டவற்றில் காவிரிப் பாலம் உள்ளிட்ட திருச்சி மாற்றுப் பாதையும், வைகைப் பாலம் இணைந்த மதுரை மாற்றுப் பாதையும் முக்கியமானவை.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 156 இலட்ச ரூபாய் மதிப்பில் மாற்றுச் சாலை அமைக்கும் பணி பெருமளவில்



மேற்கொள்ளப்பட்டு, பல்வேறு சாலைகளில் 13 ஊர்களில் முடிவடைந்துள்ளது. மற்றும் ஆறு ஊர்களில் பணி நடைபெற்று வருகிறது.

சாலை — ரயில் குறுக்கீட்டில் மேம்பாலம் :

போக்குவரத்து நேரத்தை மிச்சப்படுத்தி, எரி பொருள் செலவில் சிக்கனம் செய்ய, தற்போதுள்ள இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் (Level Crossing) பதிலாக மேம்பாலம் அமைக்கும் பணி அவசியமான தொன்றாகும். இவ்வகையில் சென்னை—திருச்சி தேசிய நெடுஞ்சாலையில், தாம்பரம் அருகில் அமைக்கப்பட்ட ரயில் மேம்பாலமும், செங்கல்பட்டு—பரனூர் அருகில் கட்டி முடித்து நம் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களால் 1974-ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட மேம்பாலமும் முக்கியமானவையாகும். மேலும், நான்கு ரயில் மேம்பாலங்கள் இதே நெடுஞ்சாலையில் தொழுப்பேடு, முண்டியம்பாக்கம் மற்றும் கந்தம்பாக்கம், திருச்சியை அடுத்த பிச்சாண்டார் கோயில் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. இப்பணிகளின் உத்தேச மதிப்பீடு 1 கோடியே 22 இலட்ச ரூபாய் ஆகும்.

சாலை அமைப்பு இயந்திரங்கள் :

பெருஞ் செலவில் மேற்கொள்ளப்படும் தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் நெடிது நாள் நிலைத்து நின்று பயன் நல்க இவற்றின் தரம் காத்தல் மிகவும் அவசியம். இவ்வகையில் தேவையான, புதுமையான, இயந்திரக் கருவிகளை வாங்குமளவிற்கு நமது மாநிலத்திற்கு உதவ முன் வந்த மத்திய அரசு, ரூபாய் 1 கோடி வரை

ஒதுக்கியது. இதன் மூலம் கொதி கலவை கருவியும் (Hot Mix Plant) தளம் உருவாக்கும் கருவியும் (Paver Finisher) மற்றும் சாலை உருளைகள் (Road Roller) போன்ற கருவிகளும் வாங்கப்பட்டன.

மேலும் மத்திய அரசு, சுமார் 1 கோடி ரூபாய் மதிப்புக்கு வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பளு தூக்கிகள் (Mobile Cranes) மேடு திருத்தும் கருவிகள் (Bull Dozers) போன்ற பல நவீன இயந்திரக் கருவிகளை நமது மாநிலத்திற்கு அளித்திட இசைந்துள்ளது.

மத்திய அரசு உதவும் மற்றைய சாலைத் திட்டங்கள் :

தேசிய நெடுஞ்சாலைப் பணிகளன்னியில், பொருளாதார மற்றும் பல மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின் (Economic & Inter State Importance Scheme) கீழ் தமிழ் நாட்டிற்கு பாரத அரசு 2 கோடியே 61 இலட்சம் ரூபாய் அளித்து 'சேது ரஸ்தா' எனப்படும் கிழக்கடற்கரைச்சாலையில், 40 பாலங்களை அமைத்து கடலடுத்த நம் மாநில நெய்தல் பகுதியினைப் பல்வகையிலும் வளப்படுத்த உதவியுள்ளது.

மற்றும், "மத்திய சாலை நிதி" யிலிருந்து தமிழ் நாடு இது வரை சுமார் 12 கோடி ரூபாய் பெற்று பள்ளிப் பாளையம் காவிரிப்பாலம் திருவையாறு கொள்ளிடப்பாலம் போன்ற பல பாலங்கள் அமைத்துள்ளது. மேலும், சிறப்பான பணி ஆற்றி வரும் கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் (Highways Research Station) 18 இலட்ச ரூபாய் மதிப்பில் இந்நிதியிலிருந்து தான் அமைக்கப்பட்டது.

மதுரை மாவட்டத்தில் 2 கோடி மதிப்பீட்டில் தற்போது நடைபெற்று வரும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த கோடையையும்—பழனியையும் கூட்டுவிக்கும் மலைச் சாலையும், மற்றுமிரு வணிகப் பயிர் வளம் பெருக்கும் மலைச் சாலைகளும் இந்நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டது ஒரு சிறப்பு அம்சம்.

இப்பணிகள் அனைத்தும் விரைவில் முடிவடைந்து நமது பொருளாதாரத்தை மேம்படுத்திக் "காட்டுவழிகளிலே, மலைக்காட்சியிலே, புனல் வீழ்ச்சியிலே" செல்வத் திருமகள் வாசம் செய்கிறாள் என்ற பாரதி வாக்கியத்தை நிச்சயம் மெய்ப்பிக்கும் என நம்புவோமாக!

சுற்றுலாப் பகுதியாக இராமேஸ்வரம் மேம்படுத்தப்படும்!



இராமேஸ்வரம் கடற்கரைப் பகுதிகளை ஓய்வு நேரச் சுற்றுலா இடமாக மேம்படுத்துவது பற்றிய யோசனைகளைத் தமிழ்நாடு அரசு பரிசீலித்து வருகிறது. அக்கடற்கரைப் பகுதி முழுமையாக மேம்படுத்தப்பட்டால், உலகிலுள்ள மிகப் பெரிய சுற்றுலாப் பகுதிகளில் ஒன்றாக அது விளங்கும். ஸ்ரீலங்கா மிகவும் அருகாமையில் இருப்பதால், இந்த இடத்திற்குச் சுற்றுலா வருவோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.

இராமநாதஸ்வாமி கோவில் இருப்பதால், இந்தியாவிலுள்ள முக்கியமான யாத்திரைத் தலங்களில் ஒன்றாக இராமேஸ்வரம் கருதப்படுகிறது. இராமாயணக் காவியத்தோடும் இந்த இடம் சம்பந்தப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் தீவில் தென்னைமரத் தோப்புகள் நிறைய உள்ளன. பவழப் பாறைகளும் இருக்கின்றன. இத்தீவுக்கு அருகில் உள்ள பல்வேறு தீவுகளையும் சுற்றுலாப் பகுதிகளாக மேம்படுத்த கடலில் நீச்சல், படகு ஓட்டுவது போன்ற நடவடிக்கைகளிலும் சுற்றுலா செல்வோர் ஈடுபடும் விதத்தில் அப்பகுதியை மேம்பாடு செய்யலாம்.

மாமல்லபுரம் அனைத்து நாட்டுச் சுற்றுலாப் பகுதியாக ஆக்கப்படும்!

அனைத்து நாட்டுச் சுற்றுலாப் பகுதியாக மாமல்லபுரத்தை மேம்படுத்தும் திட்டம் ஒன்றும் தமிழ்நாடு அரசின் பரிசீலனையில் உள்ளது: 1972-ஆம் ஆண்டில் மாமல்லபுரத்திற்குச் சென்ற ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இத்திட்டம் அமைந்துள்ளது. இத்திட்டத்தின்படி புராதனச் சின்னங்கள் உள்ள இப்பகுதி, அழகுபடுத்தப்படும். சென்னைக்கும் மாமல்லபுரத்துக்குமிடையே உள்ள கடற்கரையோரப் பகுதியும், பக்கிங்ஹாம் கால்வாயின் கிழக்குப் பகுதியும், தேசியப் பூங்காப் பகுதியாகப் பாதுகாக்கப்பட்டு கிராம வளர்ச்சி அலுவல்கள், மீன்பிடி தொழில் ஆகியவை ஊக்குவிக்கப்படும். ஆகையால் இப்பகுதிகளில் புதிதாகக் கட்டிடங்கள் கட்டுவதற்கோ அல்லது ஏற்கெனவே உள்ள கட்டிடங்களை மேம்படுத்துவதற்கோ மாநில அரசு தடைவிதித்துள்ளது.



பசுக்களைப் பராமரிக்கும் முறைகள்

—டாக்டர் பி. எஸ். கிருஷ்ணமூர்த்தி
ரீடர், பால் இயல்துறை,
கால்நடை மருத்துவக் கல்லூரி,
சென்னை.

பால் பண்ணைகள் இலாபகரமாக இயங்குவதற்குப் பால் மாடுகள் அதிகப் பால் கறப்பவையாக இருத்தல் அவசியம். மேலும் பால் மாடுகள் குறித்த காலத்திற்குள் பருவத்திற்கு வர வேண்டும். கன்றுகள் பிறப்பதற்கான இடைவெளி 12 மாதத்திற்கு மேல் போகக் கூடாது. ஆகவே, பசுக்களைச் சினைப் பருவத்தில் காளைகளுடன் உடனடியாகச் சேர்க்க வேண்டும். சாதரணமாகப் பசுக்கள், சினைக்கு 21 நாட்களுக்கு ஒரு முறை ஒழுங்காக வரும். பசுக்கள் சினைக்கு விடும் பருவங்களை ஒழுங்காக முறைப்படுத்தினால், ஆண்டு முழுவதும் ஒழுங்கான முறையில், தடையில்லாமல், பால் உற்பத்தி செய்ய முடியும். வெய்யிற் காலங்களில், பால் உற்பத்தி மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. அதே சமயத்தில் பாலுக்கு மிகவும் கிராக்கியும் இருக்கிறது. பசுக்கள் சினைக்கு விடும் பருவத்தை ஒழுங்காக முறைப்படுத்தினால், வெயிற் காலங்களிலும் பால் உற்பத்தியைத் தடையில்லாமல் அதிகப்படுத்த முடியும்.

எனவே, முக்கியமாகப் பசுக்களை குறித்த காலத்தில் சினைக்கு விடுவதும் பால் உற்பத்தி சம்மந்தமான பதிவேடுகளை ஒழுங்காக வைப்பதும் இன்றியமையாதது ஆகும்.

பசுக்களைத் தக்க சினைப் பருவத்தில் காளைகளுடன் சேர்க்க வேண்டும்

கன்று போட்ட 75—90 நாட்களுக்குள் பசுக்களை காளைகளுடன் சேர்க்க வேண்டும். அப்பொழுது தான் ஆண்டிற்கு ஒரு முறை கன்று போடும். பால் பண்ணையில் 1/3க்கு மேல் பால் வற்றிய பசுக்கள் இருப்பது சிக்கனமானது அல்ல. பசுக்கள் கன்று போட்டபின், இரண்டாவது முறையாகச் சினைக்கு வரும் பருவத்தில் காளைகளுடன் சேர்த்தல் நல்லது.

இளம் கிடாரிக் கன்றுகளைச் சினைக்கு விடும் வயது 18 மாதத்திற்குக் குறைவாக இல்லாமலும், அதே சமயத்தில் அதன் எடை 200 கிலோ கிராமுக்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும். வயதை விட எடையே முக்கியம். உதாரணமாக, கால்நடை கல்லூரியில் வளர்ந்த ஜெர்சி சிந்தி கலப்பின மாடு எண். 20, அதன் வயது 10 மாதமாக இருக்கும் பொழுதே சினைக்குவிடப்பட்டது. ஆனால் அதன் எடை 200 கிலோவாக இருந்தது. அது கன்று போடும்போது அதன் வயது $1\frac{1}{2}$ வருடம் தான். மேற்படி பசு, முதல் கன்று ஈன்ற பின் 1,921 கிலோ கிராம் பால் உற்பத்தி (375 நாட்கள் பால் கறந்தது) செய்தது. இரண்டாவது கன்று ஈன்ற பின் அதன் பால் உற்பத்தி 2,189 கிலோ கிராம் (338 நாட்கள் பால் கறந்தது) என உயர்ந்தது ; மூன்றாவது கன்று ஈன்ற பின் அதன் பால் உற்பத்தி 1,928 கிலோ கிராம் (254 நாட்கள் பால் கறந்தது) அளவில் இருந்தது. இந்த உதாரணம் பசுவின் வயதை விட எடையே முக்கியம் என்பதைக் காட்டுகிறது.

தகுந்த பருவத்தில் சினைக்கு விட வேண்டும்

பசுக்கள் சினைக்கு வரும்போது, அமைதியில்லாமல் தொழுவத்தை சுற்றிச் சுற்றி வரும். அடிக்கடிக் கத்தும். மேலும் வேறொரு மாட்டின் மீது அடிக்கடி ஏறும். அல்லது வேறு மாடுகள் தன்மீது ஏறும்போது ஓடாமல் அங்கேயே நிற்கும். அறை சற்று வீக்கமாகக் காணப்படும். மேலும் அறையிலிருந்து வெள்ளை வெளிப்படும். அப்போது உடனடியாகப் பசுவைச் சினைக்கு விட வேண்டும்.

செயற்கைக் கருத்தரிக்கும் முறையைப் பயன்படுத்தல் வேண்டும். இம்முறை இளம் கிடாரிகளுக்கு மிகவும் ஏற்றது. ஏன் எனில், பெரிய அதிக எடையுள்ள காளைகளை, சிறிய இளம் கிடாரிகளுடன் சேர்த்தல் இயலாது.

பசுக்கள் சினைக்கு வந்தவுடன், மேற்படி பசுக்களைத் தனியாகப் பிரித்து, தனிக் கொட்டிலில் அடைத்தல் நல்லது. மேலும் சினைக்கு வந்த பசுக்களை அதே நாளில் இரு முறையாவது சினைக்கு விட வேண்டும். பசுக்களைச் சினைக்கு விட்டவுடன், மூன்று மாதத்திற்குள், சினைப் பரிசோதனை செய்ய வேண்டும். மேலும், பசுக்களைச் சினைக்கு விட்ட மூன்றாவது வாரத்தில் மறுபடியும் சினைக்கு வருகிறதா என்று பார்த்தல் வேண்டும்.

பால் பண்ணையிலிருக்கும், குறைந்த பால் கறவையான மாடுகளை உடனடியாகக் கழித்துவிடல் வேண்டும். எந்த ஒரு மாடும் அது சாப்பிடும் தீவனம், ஆள் பராமரிப்பு ஆகியவைகளுக்காக ஆகும் சிலவை விட, குறைவாக மதிப்புள்ள அளவில் பால் கறந்தால், அந்த மாட்டை கழித்து விட வேண்டும். ஆகவே, மேற்படி மாடுகளைச் சரியான முறையில் கண்டுபிடிக்க பால் உற்பத்தி சம்மந்தமான பதிவேடுகளைச் சரிவர எழுதி வருவது மிகவும் அவசியம்.

பசுக்கள் பால் கொடுக்கும் அளவானது, அதன் கன்று அப்பசுவுடன் பால் குடித்த அளவு, அதன்பின் அப் பசுவிடம் கறந்த பால் ஆகிய இவ்விரண்டின் கூட்டுத் தொகையாகும். ஆகவே, வாரத்திற்கு ஒரு தடவையாவது, கன்றுகளுக்குப் பால் விடாமல், முழுக்கக் கறந்து அதை எடை போட வேண்டும். இந்தப் பாலின் எடையை ஏழால் பெருக்கி, அந்த வாரத்தின் மொத்தம் கறந்த பால் அளவையாக ஏற்றுக் கொள்ளவேண்டும். மேலும், அதே நாளில் ஒவ்வொரு மாட்டினுடைய பாலிலும் உள்ள கொழுப்பு அளவையும் கண்டறிதல் வேண்டும்.

இம்மாதிரி ஒவ்வொரு மாட்டுப் பாலின் கொழுப்பு அளவையும் கண்டுபிடித்த பின், மேற்படி மாட்டின் பால் கறந்த அளவையும் எடுத்து, பால் பதிவேடுகளை ஒழுங்கு படுத்தல் வேண்டும். இந்த முறையின் மூலமாக, ஒரே அளவில் பால் கறக்கும் இரு வகைப் பசுக்களை, அதன் பால் கொழுப்புச் சத்து மூலம், அப் பசுக்களின் பால் கொடுக்கும் திறமையை ஒழுங்காக முறைப்படுத்த இயலும்.

குழந்தைக்குத் தேவை சத்தான உணவு
பயிருக்குத் தேவை விஜய்

குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவும் சத்துணவைப்போலவே பயிர்களும் நன்கு வளர்ந்து முழுப் பலனையும் தர தழை, மணி, சாம்பல் சத்துக்கள் அவசியம்.

ஆனால் நெற்பயிருக்கு தழைச்சத்தைத்தரும் யூரியாவை மட்டும் இட்டால போதுமானது எனக் கருதக்கூடும். அவ்வாறு யூரியாமட்டும் இட்டால் பயிர்கள் பூச்சிகளால தாக்கப்படும். வறட்சியைத் தாங்காது. மேலும் நாளடைவில் மண்ணின் தன்மைகெட்டு விளைச்சலும் குறையும்.

தழைச்சத்துடன் மணி, சாம்பல் சத்துக்களை இடுவதுதான் லாபகரமானது என ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன: —

நெல் (ஏக்கருக்கு)

உரம்	சாகுபடி செலவு ரூ.	விளைச்சல் (மூட்டை 75 கிலோ)	வருவாய் (1 மூட்டை 60 ரூ. விகிதம்)
40 கிலோ தழைச்சத்து மட்டும்	1040	18	1080
40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து	1180	23	1380
40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து 20 கிலோ சாம்பல்சத்து	1215	30	1800

இவ்வாறு மூன்று சத்துக்களையும் இடும் போது கூடுதல் செலவு ரூ. 175க்கு அதிக. வருவாய் ரூ. 720 கிடைக்கிறது.

அதிக வருவாய் தரும் தழை, மணி, சாம்பல் சத்துக்களை சமச்சீர் அளவில் கொண்டது விஜய் 17-17-17. இத்துடன் விஜய் யூரியாவையும்.உங்கள் நெற்பயிருக்கு உபயோகித்து அதிகப்பயன் பெறுங்கள்.

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:
ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், திருச்சி 620 017

MFL-1162

மாணவப் பருவத்திலே!

மாணவர் அரங்கம்

மாணவப் பருவம் ஈடு இணையில்லாதது; உயர்வானது; கிடைத்தற்கரிய இந்தப் பருவத்தை மாணவர்கள் தக்க வகையிலே பயன்படுத்தித் தமக்கும், தாய்நாட்டுக்கும் பெருமையைத் தேட வேண்டும்; இதனை உணர்த்துவதற்காக நமது நாட்டுப் பெருமக்கள் சிலர், மாணவப் பருவத்தினராக இருந்தபோது அவர்கள் உருவாக்கிய புகழ்மிகு நிகழ்ச்சிகள் இங்கே தொகுத்துத் தரப் பெற்றுள்ளன; இன்றைய மாணவச் செல்வங்கள் இவற்றைப் படித்து, நமது முன்னோர்களை வழிகாட்டிகளாகக் கொண்டு,பேராற்றலும் பெருமதிப்பும் பெற்றுத் திகழ்ந்திட வேண்டுகிறோம்.

இராஜாராம் மோகன்ராய்

வங்க மாநிலத்தில் ராதா நகர் என்னும் கிராமத்தில் பிறந்த இராஜாராம் மோகன் ராய், மாணவராக இருந்த காலத்திலேயே சிறப்புற்றுத் திகழ்ந்திருந்தார். தமது பதினைந்துவது வயதிற்குள்ளாகவே அவர் வங்காளி, உருது, பாரசீகம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தார். படிக்கத் துவங்கிவிட்டால், சாப்பாட்டைப் பற்றிய எண்ணமே அவருக்குத் தோன்றாது. ஒருநாள் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வால்மீகி இராமாயணத்தைப் படிக்க அமர்ந்தவர், ஏழு காண்டங்களையும் படித்து முடித்த பின்னர் தான் தன் இருப்பிடத்தைவிட்டு எழுந்தார்!

ஈசுவர சந்திர வித்யாசாகரர்

வங்க மாநிலத்தில் மேதினிபூர் மாவட்டத்தைச் சார்ந்த வீரசிம்மம் என்ற கிராமத்தில் தோன்றிய ஈசுவர சந்திரர் கல்வியில் சிறந்து விளங்கினார். தமது பதினைராவது வயதிலேயே இலக்கணத் தேர்வில் வெற்றி பெற்று இலக்கிய வகுப்பில் பயிலத் துவங்கினார். அவ்வகுப்பு மாணவர்களில் முதல்வராகத் திகழ்ந்தார். பதினைறுவது வயதில் அலங்கார சாத்திரத்தில் தேறினார். அதன் பின்னர், வேதாந்தம், தரும சாத்திரம், தத்துவ சாத்திரம் முதலியவற்றில் தேர்ச்சி பெற்றுப் பரிசுகளும் பெற்றார்.

அவரது கல்விச் சிறப்பையும், பெரும் புலமையையும் கண்டு அவருக்கு ''வித்தியாசாகரர்'' (கல்விக் கடல்) என்னும் பட்டத்தை அறிஞர்கள் சூட்டினர். அதன் பின்னர் அவர் ஈசுவர சந்திர வித்தியாசாகரர் என்று வழங்கப் பெற்றார்.

தாதாபாய் நௌரோஜி

இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம் பெற்றுள்ள தாதாபாய் நௌரோஜி,மாணவப் பருவத்தில் கணக்கில் மிகவும் வல்லவராக விளங்கினார்.

ஒரு சமயம்,கணக்கில் தனக்குத் தான் பரிசு கிடைக்கும் என்று அவர் மிகுந்த நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்தபோது, அவருடன் பயின்ற வேறொரு மாணவனுக்குப் பரிசு கிடைத்துவிட்டது. அந்த மாணவன், வாய்ப்பாடுகளை எல்லாம் நன்கு மனப்பாடம் செய்து வந்து, ஒப்புவித்துப் பரிசு பெற்றுவிட்டான். ஆனால் பரிசு வழங்கப்படும் தருணம் வந்தபோது, புத்தகத்தில் இல்லாத வினாக்கள் அவனிடம் கேட்கப்பட்டன. உருப்போட்டது இங்கே பயன்படவில்லை! பாவம்! பதில் சொல்ல முடியாமல் அவன் திணறினான். ஆனால், தாதாபாய் உடனே, அந்த வினாக்களுக்குத் தகுந்த விடையளித்து அனைவரது பாராட்டுக்களையும் பெற்றார்!

வகுப்பில் ஆசிரியர்களின் வினாக்களுக்கு அவர் உடனடியாகப் பதில் அளித்து வந்ததால், ஆசிரியர்களுக்கு அவரிடத்தில் மிகுந்த மதிப்பும், நம்பிக்கையும் ஏற்பட்டன. ''வருங்கால இந்தியாவின் நம்பிக்கை'' என அவரை அழைத்தனர். பிற்காலத்தில் அவர் அதனை மெய்ப்பித்தார்.

முத்துசுவாமி அய்யர்

ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆட்சி செய்த காலத்தில் எல்லா உயர் பதவிகளும் ஆங்கிலேயர்களுக்கே கொடுக்கப்பட்டு வந்தன. அந்தச் சூழ்நிலையில்சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியாகப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றவர் திரு. முத்துசுவாமி அய்யர். திருவள்ளூரைச் சேர்ந்த இவர், குடும்பச் சூழ்நிலையின் காரணமாக, சிறு வயதிலேயே வேலை பார்க்கத் தொடங்கி விட்டார். ஒரு தாசில்தாரின் உதவியால் கல்வியைத் தொடர்ந்தார். தமது அறிவாற்றலாலும், புத்தி கூர்மையினாலும், உழைப்பாலும் ஆசிரியர்களை வியப்பெய்தச் செய்தார். கல்விக் கழகம் (Council of Education) என்ற நிறுவனம் உயர்ந்த ஆங்கிலக் கட்டுரைக்கு வழங்கி வந்த 50 ரூபாய் பரிசை இவர் பெற்றார். ஆங்கிலக் கவிஞர் ஆலிவர் கோல்டு ஸ்மித்தின் கவிதைகளில் உள்ளம் பறிகொடுத்தவர் இவர்.

பால கங்காதர திலகர்

மகாராஷ்டிர மாநிலத்தில் உதித்த பால கங்காதர திலகர் மாணவப் பருவத்தினராக இருந்தபோது, ஆசிரியர்கள் பொறாமைப் படும் அளவுக்குக் கல்வி, கேள்விகளில் சிறந்திருந்தார். ஆசிரியர்கள் வீட்டுக் கணக்குகள் கொடுத்தால், அவர், அங்கேயே வாய்க் கணக்காகவே விடைகளைச் சொல்லி விடுவார். இவ்வாறு

உடனுக்குடன் விடையளித்தது காரணமாகத் திலகருக்கும் ஓர் ஆசிரியருக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டது. ஏனைய ஆசிரியர்கள் அனைவரும் திலகரை ''அறிவாளி'' என்று போற்றிக் கொண்டாடினார்கள். எதையும் பயில்வதில் திலகர் தனி ஆற்றல் பெற்றிருந்தார். எந்த விஷயத்தைக் கற்பதானாலும் அதை அவர் நுணுக்கமாக ஆய்ந்து, முழு மூச்சுடன் பயின்று வந்தார்.

லால் பகதூர் சாஸ்திரி

உத்தரப் பிரதேசத்தில் பிறந்து ஒப்பற்ற புகழ் எய்தி தாஷ்கண்ட் ஒப்பந்த வீரர் என்று பெருமை பெற்ற லால் பகதூர் சாஸ்திரி அவர்கள், மாணவராக இருந்த

காலத்தில் பள்ளி இன்ஸ்பெக்டரின் பாராட்டைப் பெற்றிருக்கிறார்.

சிறு வயதிலேயே அழகாக ஆங்லத்தை உச்சரித்து வந்தவர் லால் பகதூர். அவரது உச்சரிப்பைக் கேட்டு ஆசிரியர்களே வியப்படைந்து வந்தார்கள்.

ஒருமுறை பள்ளியைப் பார்வையிட வந்த பள்ளிக்கூட இன்ஸ்பெக்டரிடம், லால் பகதூரின் ஆங்கில உச்சரிப்புத் திறமையை எடுத்துரைத்தார் ஆசிரியர். உடனே அந்த இன்ஸ்பெக்டர், பாடப் புத்தகத்தை லால் பகதூரிடம் கொடுத்து அதனைப் படிக்கச் சொன்னார். லால் பகதூர் தயக்கமின்றியும், அச்சமின்றியும், புதிய ஆங்கிலப் புத்தகத்தை மடமடவென்றும், அழகான உச்சரிப்புடனும் படிக்கத் தொடங்கினார். அவரது அழகு உச்சரிப்பை வியந்தவாறு கேட்ட பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர் தாம் அமர்ந்து இருந்த நாற்காலியை விட்டு எழுந்து, அவர் அருகில் சென்று, அவரது முதுகில் அன்புடன் தட்டிக் கொடுத்துப் பாராட்டினார்.

இராஜேந்திர பிரசாத்

பீகார் மாநிலத்தில் தோன்றி அதற்குப் பெருமை தேடித் தந்தவர் நமது இந்தியக் குடியரசின் முதல் தலைவரான பாபு இராஜேந்திரப் பிரசாத். இவர் மாணவப் பருவத்தில் படிப்பில் 'புலி'யாக இருந்தார். சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பெரும் திறமை பெற்றிருந்தார். இவரது அறிவுக் கூர்மையைக் கண்டு மகிழ்ந்த ஆசிரியர்கள், ஆண்டுக்கு இரு வகுப்புகளாய் (Double Promotion) உயர்த்தினார்கள். ஆனால், பிரசாத்தின் தந்தையார் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. தமது மகனின் படிப்பு, வளம் குன்றிவிடும் என்று பயந்து, இரு வகுப்புகளாக உயர்த்த வேண்டாம் என்று ஆசிரியர்களைக் கேட்டுக் கொண்டார்.

கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள், தமது மாணவப் பருவத்தில் மணியென விளங்கியிருக்கிறார். நாஞ்சில் மாவட்டத்தில் பிறந்த அவர். அங்கிருந்த திருவாவடுதுறை மடத்தில் தமிழ் கற்று வந்தார். ஒரு நாள் அவரது ஆசிரியர், அவரையும், ஏனைய மாணவர்களையும் அழைத்து ஒரு தேவாரப் பாடலைக் கூறினார்.

அப்பாடலைக் கேட்டு, எந்த மாணவர் பிழையில்லாமல் திரும்பச் சொல்கின்றாரோ அவருக்கு அப்பமும், வடையும் வழங்கப்படும் என்று தெரிவித்தார். பல மாணவர்கள் முயன்றார்கள்; தோற்றார்கள். ஆனால் கவிமணி ஒருவர் தான் பாடலைப் பிழையின்றி ஒப்பித்து அப்பம், வடை பரிசு பெற்றார்; பெற்ற பரிசைத் தானே எடுத்துக் கொள்ளாமல் உடன் பயின்ற மாணவர்கள் அனைவருக்கும் வழங்கினார் கவிமணி.

கணித மேதை இராமானுஜம்

கணித மேதை எனப் புகழ் பெற்ற இராமானுஜம் கும்பகோணத்தில் நகர உயர்நிலைப் பள்ளியில் பயின்று வந்தார். அந்தக் காலத்தில் துவக்கப் பள்ளிப் பிரிவும் உயர்நிலைப் பள்ளியிலேயே இருந்தது. துவக்கப் பள்ளித் தேர்வுஒன்றுஅரசினரால்நடத்தப்பட்டது. அத்தேர்வு, மாவட்ட அளவில் நடத்தப்பட்டது. தஞ்சை மாவட்ட அளவில் அந்த ஆண்டில் தேர்வு எழுதிய மாணவர்களில் முதல்வராகத் தேர்ச்சி பெற்றார் இராமானுஜம். இந்த வெற்றி அவருக்குச் சம்பளச் சலுகையைத் தேடித் தந்தது. அதாவது பாதிக் கட்டணம் செலுத்திக் கல்வி கற்கும் வாய்ப்புப் பெற்றார் இராமானுஜம்.

—எஸ். சண்முகசுந்தரம்.



மலிவான விலையில் தரமான உணவுகளையே விற்க வேண்டும் !

தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவரின் ஆட்சி ஏற்பட்டபின், அன்றாட வாழ்வுக்குத் தேவைப்படும் இன்றியமையாப் பொருள்களின் விலைகள் மளமளவென்று குறையத் தொடங்கின; இவ்வாறு விலை குறைந்த பின்பும், தமிழ்நாட்டில் உள்ள ஓட்டல்களிலும், உணவு வழங்கும் நிறுவனங்களிலும் வழங்கப்பட்டு வந்த பொதுவான உணவு வகைகளின் விலைகள் குறைக்கப்படாமல் விற்பனை செய்யப்பட்டு வந்தன. ஓட்டல்களிலும், உணவு வழங்கும் நிறுவனங்களிலும் வழங்கப்படும் பொதுவான உணவு வகைகளின் விலையைக் குறைக்க ஆவன செய்ய வேண்டுமென்று தமிழ்நாடு அரசுக்குப் பொது மக்கள் பலர் வேண்டுகோள் விடுத்து வந்தனர். இவ்வேண்டுகோளை மிகுந்த கவனத்துடன் பரிசீலனை செய்து, 1971-ஆம் ஆண்டின் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் 114-வது விதியின்படி, ''தமிழ்நாடு உணவு வழங்கும் நிறுவனங்கள் (உணவு வகைகளுக்கு விலை நிர்ணயித்தல் மற்றும் விலை விவர அட்டவணையைப் பார்வைக்கு வைத்தல்) ஆணை, 1976'' என்ற சட்டப்படி தேவைப்படுகிற ஆணையைத் (Statutory order) தமிழ்நாடு அரசு பிறப்பித்தது. இந்த ஆணையின் அட்டவணையில், பொதுவான உணவு வகைகளுக்கு பின்கண்டவாறு குறைந்த பட்ச எடையும், உயர்ந்த பட்ச விலையும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது :

உணவு வகைகளின் எடை மற்றும் விலை பற்றிய அட்டவணை:

உணவு வகையின் பெயர்	குறைந்தபட்ச எடை	உயர்ந்த பட்ச விலை
இட்லி- *	2 இட்லி—100 கிராம்	20 பைசா
சாதா தோசை *	80 கிராம்	30 ,,
பூரி, உருளைக்கிழங்கு மசாலா	2 பூரி—40 கிராம்; உருளைக் கிழங்குமசாலா —80கிராம்	35 ,,
ரவா உப்புமா *	150 கிராம்	35 ,,
அரிசிப் பொங்கல் *	130 கிராம்	35 ,,
மெதுவடை *	30 கிராம்	20 ,,
மைசூர் போண்டா *	2 போண்டா —60 கிராம்	40 ,,
காபி	140 மி.லிட்.	30 ,,
டீ	140 மி.லிட்.	25 ,,
ஜனதா சாப்பாடு	சோறு-500கி. காய்கறி, பொரியல் ஒன்று, சாம்பார், ரசம், மோர், ஊறுகாய்	1 ரூபாய்

(குறிப்பு: * சாம்பார், சட்னியுடன்)

எந்த ஒரு உணவு வழங்கும் நிறுவன உரிமையாளரும், மேற்கண்டுள்ள குறைந்த பட்ச எடைக்கும், உயர்ந்த பட்ச விலைக்கும் மாறாக உணவு வகைகளை விற்கக் கூடாது. இந்த ஆணையின்படி உணவு வகைகளின் விலை விவரப் பட்டியலைப் பொது மக்களின் பார்வைக்கு வைப்பதும் அவசியமாகும்.

இந்த ஆணை தமிழ்நாட்டில் எல்லா மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், நகரியங்களிலும் 13—4—'76 முதல் செயல்பட்டு வருகிறது.

இவ்வாணை ஓட்டல்கள், ரெஸ்டாரெண்ட், சாப்பாட்டு விடுதிகள், கபே, டீ கடை, காப்பிக் கடை, உணவு வழங்கும் நிலையம், கிளப், காண்டீன், ரயில்வே சிற்றுண்டிச்சாலை, மற்றும் பொது மக்களுக்கு உணவு வழங்குகிற எல்லா இதர இடங்களையும் கட்டுப்படுத்தும். ஆனால் நட்சத்திர ஓட்டல்களுக்கும், கூவி விற்பனை செய்பவர், தெருவில் விற்போர் ஆகியோர்களுக்கு இந்த ஆணையிலிருந்து விதிவிலக்கு உண்டு.

எனவே, மேற்கூறிய ஆணைக்கு ஏற்ப உணவு வகைகளை எடை குறைக்காமலும், விலை உயர்த்தாமலும், தரமான நிலையில் வழங்கும்படி தமிழக உணவு வழங்கும் நிறுவன உரிமையாளர் அனைவரையும் வேண்டுகின்றோம்.

அஞ்சலக வங்கியின் மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் ஜனவரியிலும் ஜூலையிலும் நடைபெறும்

ரூ. 20½ இலட்சத்திற்கு
11,116 பரிசுகள்

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று	...	ரூ.	1,00,000
5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும்	...	ரூ.	50,000
10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும்	...	ரூ.	20,000
100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும்	...	ரூ.	5,000
1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும்	...	ரூ.	500
10,000 ஆரும் பரிசுகள் ஒவ்வொன்றும்	...	ரூ.	50

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறுதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

இயக்குநர்.
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.



கைத்தறித் தொழிலின் முன்னேற்றத்தில் கூட்டுறவின் பங்கு....

—எம். எஸ். இராமகிருஷ்ணன்,
தலைமை விற்பனை அலுவலர்,
கோ—ஆப் டெக்ஸ்.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு', 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை', 'ஊர் கூடித் தேர் இழுத்தல்', 'ஒருகையால் ஓசை எழுப்ப முடியுமா?' என்ற பழமொழிகளும், சொற்றொடர்களும், சேர்ந்து வாழ்ந்தால் சேரும் நன்மைகளைப் பற்றியும், இணைந்து, ஒன்றுபட்டு வாழவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்த, இன்றல்ல நேற்றல்ல, கால காலமாய் நம்மிடையே நிலவி வருபவையாகும்.

கூடி வாழவேண்டிய அவசியமும், சேர்ந்து செயல்பட வேண்டிய நிலையும் மற்ற எத்துறைக்குப் பொருந்துமோ இல்லையோ, கைத்தறித்துறைக்கு அதுதான் உயிர்நாடி!

நெல்லிக்கனிகளைப் போல் சிதறிக்கிடக்காமல், தேன்கூட்டைப் போல் ஒட்டி வாழ்வது கூட்டுறவில் பணியாற்றும் நெசவாளிக்கு நல்ல பலனைத் தருகிறது. நூல் வேண்டுமே, சாயம் கிடைக்குமா? நெய்த துணி நல்ல விலைக்குப் போகுமா என்ற கவலை, சிந்தனை கூட்டுறவில் பணியாற்றும் நெசவாளிக்கு நிச்சயமாக இல்லை! காரணம், அந்தக் கூட்டுறவு நெசவாளிக்கு வேண்டிய கச்சாப் பொருள் அனைத்தையும் அவர் சார்ந்திருக்கும் கூட்டுறவுச் சங்கமே அளித்து, அவர் நெய்த துணியை, அந்தச் சங்கமே, தனது தாய்ச் சங்கம் மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்கிறது. இடைத்தரகருக்கு அங்கே வேலையே இல்லை. எனவே, முதல் அடிப்படைக் கவலையே அவரை விட்டு விலகிவிடுகிறது.

கைத்தறித் தொழில் நம்நாட்டில் விவசாயத்திற்கு அடுத்த மிகப் பெரிய குடிசைத் தொழிலாகும். நாட்டின் துணித் தேவையில் மூன்றில் ஒரு பங்கை ஈடு செய்து வரும் சிறப்புக்குரிய தொழிலாகும், இக்கைத்தறித் தொழில்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 5.5 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. அவற்றில் ஒன்றே முக்கால் இலட்சம் தறிகள் கூட்டுறவின் கீழ் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டிலுள்ள 770 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள, ஒன்றே முக்கால் இலட்சம் தறிகளில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளை விற்பதற்குரிய பெரும் பொறுப்பை, ''கோ-ஆப் டெக்ஸ்'' என்று சுருக்கமாக அழைக்கப்படும், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், ஏற்றுச் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

நாட்டின் பொருளாதாரத்தில் கைத்தறிக்குள்ள முக்கிய இடத்தை மனத்தில் கொண்டு மத்திய, மாநில அரசுகள் இத்தொழில் வாழவும், வளரவும், பெருகவும், செழிக்கவும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை வகுத்துக் கூட்டுறவில் செயல்படும் கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு காணத்தக்க வகையில் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன.

நாட்டின் முன்னேற்றத்திற்காக வகுக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களில் கணிசமான தொகையினை ஒதுக்கிக் கைத்தறித் துறை செழிக்க நல்லுதவி செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் செயல்படும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தாய்ச் சங்கமாகத் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் பணியாற்றி வருகிறது. தன்னுடன் இணைந்திருக்கும் தமிழ்நாட்டிலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியில், பெரும் பகுதியை விற்பதற்குரிய பெரும் பணி—தலையாய பணி—இச்சங்கத்தைச் சார்ந்ததாகும். நாடு நெடுகிலும், அமைக்கப்பட்டுள்ள 'கோ-ஆப்டெக்ஸ்' விற்பனை நிலையங்கள் மூலம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. கடும் போட்டிக்கிடையே, கூட்டுறவுச் சங்கங்களில் சார்ந்துள்ள நெசவாளர்களின் நல்வாழ்வு ஒன்றினையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வரும் 'கோ-ஆப்டெக்ஸின் கைத்தறித்துணி விற்பனை, ஆண்டுக்காண்டு பெருகி வந்துள்ளது. 1966-67-இல் ரூபாய் 414 இலட்சமாக இருந்த கைத்தறித் துணி விற்பனை, பல்கிப் பெருகி, 1975-76 மார்ச்சு மாதம் முடிய ரூபாய் 1,502 இலட்சமாக வளர்ந்துள்ளதைக் காணும் போது, கூட்டுறவில் சேர்ந்து பணியாற்றும் கைத்தறியாளர்கள், எந்த அளவிற்குப் பலனடைந்து, வாழ்வும் வளர்ச்சியும் பெற்றிருப்பார்கள் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

நாட்டை அவ்வப்போது பாதிக்கும் சங்கடங்கள், சிரமங்கள் கைத்தறி நெசவாளர்களையும் பாதிக்காமல் விட்டதில்லை.

ஒருபோது நூல் பற்றுக்குறை, ஒரு சமயம் நூல் விலையேற்றம்; ஒரு சமயம், நெய்வதற்கு நேரமில்லை என்று சொல்லத்தக்க வகையில் உள்நாட்டு, வெளிநாட்டு ஆர்டர்கள்;

வேலையே இல்லை என்ற அவல நிலை ஒரு சமயம். இதுவே, கூட்டுறவுக்கு வெளியே இருக்கும் ஒரு நெசவாளிக்கு ஏற்பட்டால் அவனை ஆற்றுவாரோ, தேற்றுவாரோ நிச்சயம் கிடையாது.

ஆனால் கூட்டுறவில் பணியாற்றும் ஒரு கைத்தறி நெசவாளிக்கு இப்படிப்பட்ட ஒரு நிலை - சிரமம் - ஏற்படும்போதெல்லாம் மத்திய அரசு, மாநில அரசு என்னும் இருகரங்கள், நெசவாளியின் கண்ணீரைத் துடைக்கவும், அவனுக்குத் தேவையான உதவியினை வேண்டிய சமயத்தில் செய்து, தக்க வழிகாட்டவும் விரைந்து செயல்படுகின்றன.

அண்மையில் அப்படிப்பட்ட ஒரு நெருக்கடியைச் சமாளிக்க மொத்தம் 3.5 கோடிக்கு மேல் மத்திய, மாநில அரசுகள் உதவி புரிந்தன. இது ஏன்? இதற்குக் காரணம்தான் என்ன? கூட்டுறவின் கீழ் நெசவாளர்கள் இருப்பதால்தானே ? கூட்டுறவில் நெசவாளர்கள் இல்லையென்றால் இந்த உதவி-'உடுக்கை இழந்தவனுக்குக் கிடைக்கும் உதவிபோல்'— கிடைத்திருக்குமா? இங்கே தான் கூடி வாழ வேண்டியதன் அவசியமும், சேர்ந்து செயல்படவேண்டியதன் தேவையும் மிகத் தெளிவாக நமக்கு விளங்குகின்றன.

இழையோடும் தசைநார்கள் உடம்பில் பின்ன
இரவு பகல் பாராது தறியில் நெய்து
எழில் வண்ணத் துணிகள் படைக்கும் நல்லோர்
எரிமலையாய்க் குமுறுவது சரியா ?

இந்தக் கேள்வி எங்கே பிரதிபலித்தது? நம் பாரதப் பெருந்தலைவியாம் பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் நெஞ்சத்தில் இது பிரதிபலித்தது. நாட்டின் பொருளாதாரம் செழிக்கவும், நாட்டு மக்கள் வாட்டம் நீங்கவும், நம் பெரு மதிப்பிற்குரிய பிரதமர் அவர்கள் அறிவித்த 20 அம்சத் திட்டத்தில், கூட்டுறவில் இடம் பெற்ற, கைத்தறிக்குரிய இடத்தை, அவர்கள் தந்தது ஒன்றே, நம் பிரதமர் அவர்கள் எந்த அளவிற்கு இத்தொழிலின்பால் ஆர்வமும், அக்கறையும் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு அரிய எடுத்துக்காட்டாகும்.

1. ஐந்தாவது திட்ட முடிவில், கூட்டுறவுத் துறையில், கைத்தறி நெசவாளர்களின் எண்ணிக்கை, 30 சதவிகிதத்திலிருந்து 60 சதவிகிதத்திற்கு உயர்த்தப்படும்.

2. செயல்முறைக்கேற்ற உபகரணங்களை, நிலையாக விநியோகிக்கவும், கைத்தறிகளில் நவீன முறைகளைப் புகுத்தவும், கைத்தறிகளில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகளின் விற்பனைக்கு, வழிவகை செய்யவும், தீவிர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஈரோடு, காஞ்சிபுரம் பகுதிகளில் 10 ஆயிரம் தறிகள் அமைக்கப்படும்.

3. கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் நூல் கிடைக்க வழி வகை



செய்வதோடு, வங்கி மூலம், தடையின்றி நிதியுதவி கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்படும்.

4. கைத்தறிக்கென்று ஒதுக்கப்பட்ட இரகங்களை, உற்பத்தி செய்வதில் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5. கைத்தறித் துணி ஏற்றுமதிக்கான, உற்பத்தி இரகங்களின் தரத்தையும், அளவையும் உயர்த்துவதற்காக, ஏற்றுமதித் திட்டத்தின் கீழ், கரூர் மற்றும் சில பகுதிகளில் 1,000 தறிகள் வீதம் அமைக்கப்படும்.

இவைதாம் நம் பிரதமர் அவர்கள் அறிவித்துள்ள அரிய திட்டங்களாகும். 1975-76-ஆம் ஆண்டில் கூட்டுறவில் செயல்படும் கைத்தறி நெசவாளர்களுக்காக ''சேமிப்பும்—பாதுகாப்பும்'' என்ற திட்டம் அமல்படுத்தப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. அத்துடன் ''சேமிப்பு நிதி'' என்னும் திட்டமும், ''குருப் இன்ஷ்யூரன்ஸ்'' திட்டமும் செயல்பட்டு வருகின்றன. ஆரம்பக் கட்டமாக, 40 ஆயிரம் கைத்தறி நெசவாளர்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். பிறகு கூட்டுறவுத் துறையில் செயல்படும் அனைத்து நெசவாளர்களும், விரைவில் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுவார்கள்.

இப்படிப் பல்வேறுபட்ட திட்டங்களை, மத்திய, மாநில அரசுகள் கொண்டு வரவேண்டியதன் அவசியம் என்ன ? தேவைதான் என்ன? நாட்டின் துணித்தேவையைக் கணிசமான அளவிற்கு ஈடுகட்டும் நெசவாளர்கள், கூட்டுறவு நெசவாளர்கள், துன்பப்படக் கூடாது, அவர்கள் வாழ்வில் இருள் சூழக் கூடாது, அவர்கள் அல்லல் படக்கூடாது என்ற அடிப்படைதான், இதற்குக் காரணம்.

''பட்டினில் ஆடையும் பஞ்சினில் உடையும் பண்ணி மலைகளென வீதி குவிப்போம்'' என்றார் மகாகவி பாரதியார். அப்படி உற்பத்தியான கைத்தறித் துணிகளை விற்றுக் குவித்துக் கூட்டுறவில் செயல்படும் கைத்தறி நெசவாளர்களுக்கு நல்வாழ்வு நல்கும் பெரும் பொறுப்பு — தலையாய பணி — கோ-ஆப்டெக்ஸுக்கு உரியதாகும். இதற்குக் காரணம் கூட்டுறவில் செயல்படும் கைத்தறி நெசவாளர்களின் தாய்ச் சங்கம் கோ-ஆப் டெக்ஸ் ஆகும்.

எனவே, இதுவரை கூட்டுறவில் வராத நெசவாளர்களை விரைவில் கூட்டுறவுக்குள் கொண்டுவரப் பாடுபடுவோம்; ஒன்றுபட்டு வாழ்வோம்; ஒருகோடி நன்மை பெறுவோம்!

இது கூட்டுறவு நெசவாளர்களுக்கு மட்டுமல்ல, நம்நாட்டு மக்கள் அனைவருக்கும் நன்மையளிப்பதாகும்.



வெய்யிலின் வெம்மை
வியர்வையின் வேதனை
இவற்றிலிருந்து பாதுகாக்க
குளுமையான கதர் அணியுங்கள்.

கதர் ஆடைகள் கோடையின்
கொடுமையைக் குறைக்கும்.

தமிழ் நாட்டில் தயாராகும் கதர் பருத்தி
ஆடைகளுக்கு இப்போது தள்ளுபடியோ
20 சதவீதம்.
எல்லா காதி கிராப்ட்களிலும் கிடைக்கும்.

கதர் கிராமத் தொழில் வாரியம்,
குறளகம், சென்னை-600 001



காலணிகள்

கிராமியக் கைத் தொழில்
வினைஞர் தயாரித்தவை.
கோடை காலத்திற்கேற்ற
தினுசுகள், நயமான விலைகளில்—
தரமானவை — உறுதியானவை.
உழைப்பில் உயர்ந்தவை.
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு
பொருளும் கிராமத் தொழிலாளரின்
வருமானத்தைப் பெருக்கும்.
எல்லா காதி கிராப்ட்களிலும்
இப்போது கிடைக்கின்றன.

கதர் கிராமத் தொழில் வாரியம்,
குறளகம், சென்னை-600 001

'இழிவு கொண்ட மனிதரென்பர் இந்தியாவில் இல்லையே!'

சி. என். கிருஷ்ணபாரதி,
துணை இயக்குநர்,
உள்(செய்தி மக்கள்தொடர்புத்)துறை,
தமிழ்நாடு.

மனிதரை மனிதர் ஆடுமாடுகளைப் போன்று—விலைப் பொருட்களாககூட மதிக்காது—அடிமையாக்கியிருக்கும் கொடுமை நம் நாட்டில் பல பகுதிகளில் நிலவி வந்தது. கொத்தடிமைகள், தாங்கள் பெற்ற கடனுக்கு அடிமையாக வாழவில்லை; கடன் தொகைக்குத் தர வேண்டிய வட்டிக்காக அடிமை வாழ்வு வாழ்ந்தனர். கடன் தொகை குறைவதற்குப் பதில் வளர்ந்து கொண்டே போகும்; அடிமை வாழ்வும் பரம்பரையாகிவிடும்.

விடுதலை பெற்ற இந்தியாவில், இந்த அவல நிலைக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் **பிரதமர் அவர்களின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம்** வழிவகுத்தது.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும், குறிப்பாகத் தமிழ்நாட்டிலும் இந்தக் கொத்தடிமை நிலை இருந்து வந்தது.

எனவே, இத்தகைய கொடுமையான முறையினை-கொத்தடிமைத் தொழில் முறையை—அறவே ஒழித்திடச் சட்டமியற்றிச் செயல்படத் துவங்கியது அரசு.

பிரதமர் அவர்களின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தினை அரசும், அரசு சார்ந்த நிறுவனங்களும் எத்தகைய முறையில் நிறைவேற்றி வருகின்றன-எந்த அளவிற்கு இதனால் மக்கள் நலம் பெறுகின்றனர் என்பன போன்றவைகளை நேரில் கண்டறிவதற்கெனத் தமிழ்நாடு அரசின் செய்தி-மக்கள் தொடர்புத் துறை, பத்திரிகைகளின் செய்தியாளர்களை கோவை-நீலகிரி மாவட்டங்களுக்கு அழைத்துச் சென்றது.

மே திங்கள் 20-ஆம் நாள் முதல் 23-ஆம் நாள் வரை நான்கு நாட்கள், இம் மாவட்டங்களில் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற பல்வேறு திட்டங்களின் செயல் முறைகளையும், அவற்றின் மூலம் பயன்பெறுகின்ற மக்களையும் காணுகின்ற வாய்ப்பு அனைத்துச் செய்தியாளர்களுக்கும் கிட்டியது. இவைகளில் முக்கியமானதாகவும் குறிப்பிடத்தகுந்ததாகவும் கருதபடுகின்ற ஒன்று கொத்தடிமைத் தொழில் முறையாகும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில், சத்தியமங்கலம், பவானி போன்ற வட்டங்களில் இம்முறை இருந்து வந்தது. கடனுகப் பெற்ற தொகையைத் தங்களால் திருப்பித் தர இயலாத நிலைமையாலும், ஏழ்மையான நிலையில் வாழ்ந்து வந்ததாலும், இவர்கள் அடிமைத் தொழில் புரிந்து வந்தனர். இந்த வட்டங்களைச் சார்ந்த வட்டாட்சியாளர்கள், கோபிச் செட்டிப்பாளையம் கோட்டாட்சியாளர் ஆகியோரின் தீவிர முயற்சியால் இத்தொழில் நடத்திய எஜமானர்களும், அவர்கள் தொழிலாளர்களிடம் பெற்றிருந்த கடன் பத்திரங்களும் தெரிய வந்தன. தகுந்த நடவடிக்கைகள் மூலம் கடன் பத்திரங்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டு, அடிமை ஊழியர்கள் விடுதலை செய்யப்பட்டனர். அவர்களுக்கு தகுந்ததொரு வாழ்வினை அமைத்துத் தர முனைப்பான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

சத்தியமங்கலம் வட்டத்தில் தாளவாடி பிர்க்காவில்தான் இம்முறை பரந்த அளவில் காணப்பட்டது. தாளவாடி வட்டாரம் மலைப்பகுதியின் அடிவாரத்திலும் கர்நாடக மாநிலத்தின் எல்லையோரத்திலும் அமைந்துள்ளது. பெரும்பாலும் இப்பகுதிகளில் வாழ்பவர்களுக்குச் சீரான போக்குவரத்து, நவீன சாதனங்கள், கல்வி, தகுந்த பொருளாதாரம் போன்ற வசதிகள் குறைவு. எனவே, இவர்களிடம் அறியாமை எளிதில் குடிபுகுந்து விட்டது! பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையாலும், ஏழ்மையையே சொத்தாகக் கொண்டிருந்த காரணத்தாலும் இவர்கள் எளிதில் இத்தொழிலில் ஈடுபட வாய்ப்பு ஏற்பட்டு விட்டது.

கொத்தடிமைத் தொழிலாளர்களில் பெரும்பாலோர் அரிசன இனத்தவர்கள். தவிர, சோழகர், ஊராலி கவுண்டர் போன்ற பிற இனத்தவர்களும் இத்தொழில் புரிந்து வந்தனர். இங்கு இத்தொழில் புரிபவர்கள் 'ஜீத்' என அழைக்கப்பட்டனர். 'ஜீத்' என்றால் கன்னடத்தில் 'கொத்த—

டி ஐ ஐ ஸியின் சாதனைகள்— ஒரு கண்ணோட்டம்



20 அம்ச திட்டம் அளித்துள்ள புத்துணர்வு எங்களையும் ஊக்கி விட்டது.

அதன் காரணமாக இவ்வாண்டில் மேலும் பல சாதனைகளைப் புரிந்துள்ளோம். சிறிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளுக்கு அதிக அளவில் பொருளுதவி அளித்துள்ளோம். அதன் மூலமாக மேலும் அதிக வேலை வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. பிற்பட்ட பகுதிகளுக்கு முன்னேற வாய்ப்புகளும் உண்டாகியுள்ளன.

1974 மார்ச் முடிய 12 மாதங்களில் அளித்த நிதி உதவி ரூ. 664 லட்சம்தான். ஆனால், 1976 மார்ச்சுடன் முடிந்த 12 மாதங்களில் ரூ. 2,135 லட்சம் உதவி அளித்திருக்கிறோம்.

கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் எங்கள் சாதனையை விளக்கமாகக் கூறிடும்.

(ரூ. லட்சங்களில்)

விவரங்கள்	31-3-74 முடிய	31-3-75 முடிய	31-3-76* முடிய	1974 ல் இருந்து 1976வரை வளர்ச்சியின் சதவிகிதம்
மொத்த நிலை:				
ஒப்புதல் அளிக்கப்பட்ட மனுக்கள்	165	486	613	272
ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை (மொத்தம்)	664	1823	2135	222
விநியோகிக்கப்பட்ட தொகை	403	824	1302	223
வரவேண்டிய தொகை	3141	3767	5026	—
பிற்பட்ட பகுதிகளுக்கு அளிக்கப்பட்ட உதவி:				
ஒப்புதல் அளிக்கப்பட்ட மனுக்கள்	68	184	291	328
ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை (மொத்தம்)	329	912	1174	257
மொத்த ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையில் சதவிகிதம்	50	50	55	—
சிறு தொழில்களுக்கு உதவி:				
ஒப்புதல் அளிக்கப்பட்ட மனுக்கள்	124	393	505	307
ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்த மனுக்களின் சதவிகிதம்	75	81	82	—
ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை (மொத்தம்)	243	668	715	194
மொத்த ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையில் சதவிகிதம்	27	37	34	—
இதர விவரங்கள்:				
ஐடிஏ (IDA) வகை கடனுதவித் தொகை	91	296	374	—
உதவி பெற்றதில் புதிதாக தொழில் புரிவோரின் எண்ணிக்கை	92	319	454	—
உதவி பெற்றதில் தொழில் வினைஞர்கள்	82	275	418	—

* தணிக்கைக்கு உட்பட்டது

ஒப்புதல் அளிக்கப்பட்ட உதவியில் மேலும் சில முக்கிய விவரங்கள்

விவரங்கள் :	அளவு	1973-74	1974-75	1975-76
திட்டங்களின் மொத்த மதிப்பு	ரூ. லட்சங்களில்	1855	4333	3662
டிஐஐஸி அளித்திட்ட உதவி	சதவிகிதம்	36	41	58
தொழிலகங்கள் திரட்டிய இதர தொகைகள்	ரூ. லட்சங்களில்	1191	2510	1526
மொத்தம் எதிர்பார்க்கப்படுகிற உற்பத்தி மதிப்பு	,,	4295	11738	12252
ஏற்படக்கூடிய வேலைவாய்ப்பு	எண்	3900	10930	12700

மேற்கொண்டு விவரங்களுக்கு நிர்வாக இயக்குநரை அணுகுங்கள்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்
''அருள்மனை''
26, ஒயிட்ஸ் ரோடு,
சென்னை-600 014

கிளைகள்:
தஞ்சாவூர், மதுரை,
கோயமுத்தூர்,
சேலம், வேலூர்
மற்றும்
திருநெல்வேலி.

டிஐஐஸி
இதய பூர்வமான
நிதியுதவி அளிக்கும்
நிறுவனம்.

டிமைத் தொழிலாளர்' எனப் பொருள்.

குடும்பத்தின் தலைவர் நிலச்சுவான்தார் ஒருவரிடம் தனது குடும்பத்தின் செலவிற்கோ அல்லது பிற அவசரச் செலவிற்கோ பணத்தைக் கடனாகப் பெற்றால், கடன் தொகையைத் திருப்பித் தருகின்ற வரையில் தனது குடும்பத்திலுள்ள ஆண் நபர் ஒருவரை நிலச்சுவான்தாரின் பண்ணையில் பணியாற்ற அனுப்ப வேண்டும். சில சமயம் பெண்களும் சேர்ந்து வேலைக்கு அனுப்பப்படுவர். இவர்களுக்கு ஆண்டுக்கு இத்தனை மூட்டை கேழ்வரகு என்று கூலி தரப்படும். சிலருக்கு மூன்று வேளை உணவு மட்டும் வழங்கப்படும். கடன்தொகையைத் தந்தவுடன் இவர்கள் விடுதலை செய்யப்படுகின்றனர். திருப்பித் தர இயலாத நிலையில் பத்திரங்கள் புதுப்பிக்கப் பெற்றுத் தொடர்ந்து பணியாற்ற வேண்டிய சூழ்நிலையும் உருவாகிறது. பெரும்பாலான பத்திரங்களில் எழுதியுள்ளபடி, கூலியுடன் ஆண்டுக்கு ரூ. 30 அல்லது ரூ. 40 கடன் தொகைக்காகக் கழிக்கப்பட வேண்டும். ஆனால் தொழிலாளி ஒரு நாளைக்கு வேலைக்கு வரவில்லையென்றால் ஒரு ரூபாய் பிடிக்கப்பட வேண்டும். ஆனால் வராத நாட்களுக்கு 5 ரூபாய் வரை பிடிக்கப்படுகிறது. இந்தக் கணக்கின்படி கடன் தொகை கழிக்கப்படுவதற்குப் பதில், குறிப்பிட்ட தொகை கூட்டப்படும் கொடுமையை காண முடிகிறது.

பிரதமரின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தில் ''கொத்தடிமை முறை எங்கெங்கு காணப்பட்டாலும் அறவே ஒழிக்கப்பட வேண்டும்'' என வலியுறுத்தப்பட்டதால் நாட்டில் பல்வேறு பகுதிகளில் சட்டங்கள் மூலம் கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டனர். தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சி அமலுக்கு வந்த பின்னர்தான் சட்டம் தீவிரமாக்கப் பெற்று அடிமைகள் மீட்கப்பட்டனர். தொடர்ந்து மீட்கப்பட்டு வருகின்றனர்.

கோவை மாவட்டத்தில் மட்டும் மார்ச், ஏப்ரல் ஆகிய இரு திங்களில் ஏறத்தாழ 475 கொத்தடிமைகள் கண்டுபிடிக்கப் பெற்று விடுவிக்கப் பெற்றுள்ளனர். சத்தியமங்கலம் வட்டத்தில் பனகபள்ளி கிராமத்தில், 19 எஜமானர்களிடம் பணியாற்றி வந்த 26 கொத்தடிமைகள் 31.3.1976-ல் மீட்கப்பட்டுள்ளனர். மேலும் தாளவாடி, திகனாரை, காளவாடி கும்டாபுரம் கிராமங்களில் விசாரணையின் மூலம் 35 எஜமானர்களிடம் 52 பேர் அடிமைத் தொழில் புரிந்து வந்தது தெரிய வந்தது. இவர்கள் அனைவரும் 1-4-76 மற்றும் 2-4-76 ஆகிய இரு நாட்களில் விடுவிக்கப்பட்டனர்.

தவிர, சத்திய மங்கலத்திற்கு வடக்கேயுள்ள மலைப்பகுதிகளான குதியாலத்தூர், கூத்தம்பாளையம், குந்திரி போன்ற கிராமங்களில் போக்குவரத்து வசதி சரியில்லாத நிலைமையிலும் ஏப்ரல் திங்களில் 123 தொழிலாளர்கள் மீட்கப்பட்டனர். தாளவாடி பிர்க்காவைச் சார்ந்த மெட்டல்வாடி, மல்லன்குள்ளி, சோத்தன்புரம், சிம்டஹள்ளி போன்ற கிராமங்களில் 65 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தாளவாடியின் ஒரு பகுதியைச் சார்ந்த கிராமங்களாக கீர்மாளம், திங்களூர் ஆகியவை அமைந்திருந்த போதிலும், இவைகள் முற்றிலும் காடுகள் அடர்ந்த பகுதிகளாக விளங்குகின்றன. இங்கே யானை, சிறுத்தை, கரடி, காட்டெருமை போன்ற கொடிய வனவிலங்குகள் வாழ்கின்றன. இத்தகைய இடர்ப்பாடுகள் இருந்த பொழுதும் வட்டாட்சி அலுவலர்களின் விடாமுயற்சியாலும், கடின உழைப்பாலும் 75 கொத்தடிமைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வட்டத்தில் கொத்தடிமைத் தொழில் நடத்தி வந்த எஜமானர்கள் சுமார் 219 பேர்கள் ஆவர். இவர்கள் அனைவரிடமும் இருந்த அடிமை ஒப்பந்தப் பத்திரங்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டு விட்டன. இப்பத்திரங்கள் 1924, 1927, 1939, 1941, 1944 ஆகிய ஆண்டுகளில் எழுதப்பட்டுள்ளன.

இங்கே அடிமை வேலை, பரம்பரை பரம்பரையாக இருந்து வந்திருக்கிறது. 50 ரூபாய், 100 ரூபாய், 500 ரூபாய் கடன்களுக்காகப் பரம்பரையாக வேலை செய்திருக்கின்றனர். தகப்ப

கொத்தடிமை முறையிலிருந்து மீட்கப்பட்ட கூடலூர் 'பனியர் பெண்கள்'.

ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் கொத்தடிமைக் கொடுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர்.

உங்கள் நிலத்தில் உரச் செலவைக் குறைத்து பயிர் விளைச்சலை 15% அல்லது அதற்கும் மேலாக அதிகப்படுத்துவதற்கு உபயோகியுங்கள்

ஏரீஸ் எக்ரோ-ஏஸோ
மற்றும் ஏரீஸ் எக்ரோ-ரைஸோ

நைட்ராஜன் அளிக்கும் கிருமிகள்

எப்படி?
ஏரீஸ் எக்ரோ-ஏஸோ மற்றும் எக்ரோ-ரைஸோ நைட்ரஜன் அளிக்கும் கிருமிகள். பாக்டீரியாக்கள் வளிமண்டலத்திலிருக்கும் நைட்ரஜனை எடுத்து ஆர்கானிக் நைட்ரஜனாக மாற்றி, செடிகள் கிரகித்துக் கொள்ளும்படியாகச் செய்கின்றன. எனவே உங்களுக்கு நைட்ரஜன் அடிப்படையில் அமைந்த ரசாயன உரங்கள் 25%மிச்சமாகின்றன. இந்த மிச்சம் மட்டுமே ஏரீஸ் எக்ரோ-ஏஸோ அல்லது எக்ரோ-ரைஸோவின் விலையை விட அதிகமாக இருக்கிறது.



ஆராய்ச்சித் தயாரிப்புகள்:
நைட்ரஜனை ஏற்று இணைக்கும் பாக்டீரியாக்கள் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் நடத்தப்பட்ட பரந்த ஆராய்ச்சியின் பயனாக விளைந்தவையாகும். ஏரீஸ் எக்ரோ-ஏஸோ மற்றும் எக்ரோ-ரைஸோ, ஏரீஸ் விஞ்ஞானிகள் கடுமையான ஆராய்ச்சிகளின் பயனாக உருவாக்கியுள்ள உன்னதமான தயாரிப்புகளாகும்.

உங்கள் பயிர் விளைச்சல் 15% அல்லது அதற்கும் மேலாக அதிகமாக வழி செய்வது:
• விதைகள் சிறப்பாக முளைவிடுதல் • நாற்றங்கால்களின் விரைவான வளர்ச்சி • மேம்பட்ட செடி வளர்ச்சி • வேர்களின் சிறந்த வளர்ச்சிக்கு மேம்பட்ட மண் அமைப்பு மற்றும் சூழ்நிலைகள் • விளைமண்ணில், வளிமண்டல நைட்ரஜனின் அதிகமான சேர்க்கை • உயிர்ப் பொருட்களின் சிதைவு போன்ற சாதாரண மண் மாற்றச் செயற்பாடுகள் துரிதப்படுதல் • மண் வழியாகப் பரவும் நோய்களுக்கு எதிர்ப்பு • மண்ணில் உள்ளார்ந்த நுண்ம உயிர்ப் பொருட்களின் எண்ணிக்கை அதிகமாதல்.

உபயோகிப்பது சுலபம்:
அ) விதைப் பதனம் ஆ) நாற்றுத்தோய்க்கும் முறை இ) மண் பதனம்.

இந்தப் பயிர்களுக்கு:
பயறினத்தைச் சாராத பயிர்களுக்கு எக்ரோ-ஏஸோ,
தானியங்கள், பருத்தி, கரும்பு, புகையிலை மிளகாய், எள், கடுகு, சூரியகாந்தி, பழங்கள், காய்கறிகள் முதலியன.
பயறினங்களுக்கு மட்டும் எக்ரோ-ரைஸோ,
நிலக்கடலை, சோயாபீன், பட்டாணி மற்றும் அவரையினம், பருப்பு வகைகள், லூஸர்ன், பெர்ஸீம், பிரெஞ்ச் பீன்ஸ் முதலியன.



விசேஷ அம்சங்கள்:
● அதிகமான பாக்டீரியா எண்ணிக்கைகொண்ட (பிரதி கிராமிற்கு 100 முதல் 1000 கோடி) கூடுதலான நியூட்ரியன்டுகள் (சத்துக்கள்)
● சேமிப்பில் நீண்டகாலம் கெடாமலிருப்பதற்கென பிரத்யேகமான பாலிதீன் பாதுகாப்புப் பேக்கிங்
● பிரசித்தமான ஜான்ஸ் நிறுவனத்தின் தீவிரமான கட்டுப்பாடு

இவர்களுடைய ஆராய்ச்சித் தயாரிப்புகள்:
ஏரீஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் பிரை. லிட்.,
த.பெ. எண் 9417, பம்பாய் 400 093.

Grant.18 TM

னுக்குப் பின்னர் மகனும், அடிமை வேலை செய்திருக்கிறார். கணவன், மனைவி, குழந்தைகள், இப்படி குடும்பம் முழுதுமே அடிமை வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

பொட்டுக் கண்ணன் என்பவர் 500 ரூபாய்க் கடனுக்காக 20 வருடம் கொத்தடிமையாக இருந்தார். மொட்டார் என்பவர் 450 ரூபாய் கடனுக்காக 12 ஆண்டுகளும், பந்தன் என்பவர் 200 ரூபாய் கடனுக்காக 5 ஆண்டுகளும், தொல்கப்பி என்பவர் 300 ரூபாய் கடனுக்காக 10 ஆண்டுகளும் அடிமைத் தொழில் புரிந்து வந்துள்ளனர். இவைகள் அனைத்தும் ஒப்பந்தப் பத்திரங்கள் வாயிலாக தெரிய வந்துள்ளன. இவர்கள் அனைவரையும் நேரில் கண்டு அவர்தம் நிலைமைகளையும், அனுபவங்களையும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்கெனத் தாளவாடி செல்ல முனைந்தோம்.

ஜடாமுனி என்ற 13 வயதுச் சிறுவன் தனது குடும்பத்திற்குப் புதுத்துணி வாங்க ரூ. 150-க்குக் கடன்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேல் அடிமையாக இருந்தான். அவனது வேலை,யானைகளை விரட்டுவதாம். உயிருக்குப் பயந்து கொண்டு வாழ்ந்த அவன், விடுதலையடைந்ததைச் சொல்லும் போது அவனுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. இப்படி எத்தனையோ சோகக்கதைகள்!

சத்தியமங்கலத்திலிருந்து தாளவாடி செல்லுகையில் ஏறத்தாழ 5,000 அடி உயரமுள்ள மலையைக் கடந்து செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. அப்பகுதியிலுள்ள கிராமங்களையும், காடுகளையும் நேரில் கண்டபொழுது அடிமைத் தொழிலாளர்களின் நிலைமைகளையும் ஓரளவு மனக்கண்ணால் உணர முடிந்தது.

முதலில் செய்தியாளர்களுடைய குழு தாளவாடியை அடைந்தது. அங்கே அடிமைத் தொழிலினின்று விடுவிக்கப் பெற்ற சிலரைக் காணும் வாய்ப்பு ஏற்பட்டது. அங்கே சித்தநஞ்சன் என்னும் பெயருடைய 12 வயதுச் சிறுவன் கொத்தடிமையினின்று மீட்கப்பட்டுள்ளான். தந்தை சித்தன், கிருஷ்ணமேஸ்திரி என்பவரிடம் கடனாகப் பெற்ற 100 ரூபாய்க்கு, மகன் சித்தநஞ்சன் அடிமைத் தொழிலை ஏறத்தாழ 2.5 ஆண்டுகளாகப் புரிந்து வந்துள்ளான். இவனுக்கு மூன்று நேரம் உணவு மட்டும் வழங்கப்பட்டு வந்துள்ளது. கல்வி பயில வேண்டிய வயதில், அடிமைத் தொழில் புரிந்துள்ளது உண்மையிலே வருந்தத்தக்க ஒன்றுதான். இவன் 3.4.76-ல் விடுவிக்கப்பட்டான்; தற்பொழுது தினக்கூலி 2 ரூபாய் என்ற அளவில் கூலி வேலை செய்து வருகிறான்.

நீலகிரி மாவட்டத்தில் கொத்தடிமைத் தொழில் பரவலாக கூடலூர் வட்டாரத்திலே காணப்படுகிறது. இத்தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவரும் 'பனியர்' என்னும் மலைச்சாதி இனத்தவரானவர்கள். இவர்கள் 'செட்டி' என்று அழைக்கப்படும் நிலச்சுவான்தார்களிடம் அடிமைத் தொழில் புரிந்து வந்தனர். மலைச்சாதி இனத்தைச் சார்ந்தவர்கள் ஆதலால் பெரும்பாலும் இவர்கள் கிராமங்களின் ஒதுக்குப்புறங்களிலே வாழ்ந்து வந்தனர். இவர்களுக்கென்று தனியான தொழில்கள் ஏதும் இல்லை. மேலும் பொருளாதாரத்திலும், சமூகத்திலும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். வாழ்க்கை நடத்துவதிலும் பல்வேறு இன்னல்கள் ஏற்படுகின்றன. எனவே தான் இவர்கள் அடிமைத்தொழில் புரிய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இவர்களும் பரம்பரை பரம்பரையாக அடிமைத்தொழில் புரிந்து வந்தவர்கள்தான்.

கூடலூர் பிர்க்காவில்தான் இவர்கள் அதிக அளவில் உள்ளனர். இந்த வட்டாரத்தில் ஏறத்தாழ 5,667 பனியர்கள் வாழ்கின்றனர். இவர்களில் கொத்தடிமைத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் 481 பேர்கள். இத்தொழிலில் ஆண்களும் பெண்களும் கலந்திருக்கின்றனர். மிகவும் குறுகிய காலத்தில் அதாவது மார்ச்சு, ஏப்ரல் ஆகிய இரண்டு மாதங்களிலே இவர்கள் அனைவரும் அரசால் கண்டுபிடிக்கப் பெற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களையும் நேரில் கண்டறிய வேண்டுமென்பதற்காகச் செய்தியாளர் குழு கூடலூர் நோக்கிச் சென்றது. கூடலூரில் விடுதலை செய்யப்பட்ட சில பனியர்களைக் காணும் வாய்ப்பு ஏற்பட்டது. அவர்களில் பெரும்பாலானவர்கள் பனியர் பெண்கள். மணமாகாத-வயது வந்த பனியர் பெண்களும் இத்தொழிலில் ஈடுபட்டு வந்ததைக் கண்டோம்.

கூடலூர் வட்டாரம் புத்தூர் வயல் கிராமத்தைச் சார்ந்த குஞ்சன் என்னும் 28 வயதுடையவர் 15 ஆண்டுகள் அடிமை ஊழியம் செய்து வந்தார். தன்னுடைய தகப்பன் 'கோப்பன்' வாங்கிய சிறு தொகைக்குக் குஞ்சனும், அவன் மனைவி நஞ்சி என்பவளும் அடிமைத் தொழில் புரிந்து வந்தனர். தற்பொழுது இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மூன்று குழந்தைகள் உள்ளன. இதைவிடக் கொடுமை தந்தை வாங்கிய பணத்திற்காக வயது வந்த மகள்-கரும்பி-இந்தத் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளாள். அவளும் விடுதலை செய்யப்பட்டு, தற்பொழுது ஊராட்சி ஒன்றியப்பள்ளி ஒன்றில் ஆயாவாகப் பணியாற்றி வருகிறாள்.

இதையும் மிஞ்சுகின்ற அளவில் கூடலூர் பிர்க்காவைச் சார்ந்த பாலு என்பவன் செட்டி ஒருவரிடம் 15 ஆண்டுகளாக மாடு மேய்க்கும் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளான். சிறிய வயதில்-அதாவது 7 வயதிலேயே இவன் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறான். இப்பொழுது வயது 22. இந்தப் பதினைந்து ஆண்டுகளில் எந்தவிதமான பொழுது போக்கையும் பெறவில்லை. சினிமா என்பதைப் பார்த்ததே இல்லையென ஏக்கத்துடன் கூறினான்.

இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுவிட்டால்மட்டும் போதாது, அவர்களுக்கும் தகுந்ததொரு வாழ்வினை அமைத்துத் தர வேண்டும். எனவேதான் அரசு பல்

"தமிழரசு" படியுங்கள்!

தமிழ்நாடு அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளவும், நவீன வேளாண்மை முறைகளையும், இதர துறைகளின் பணிகளையும் அறிந்து கொள்ளவும் "தமிழரசு" படிக்கத் தவறாதீர்கள். "தமிழரசு" இதழ் தவறாமல் கிடைக்க உடனே சந்தாதாரராகச் சேரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா — ரூபாய் 12.00
6 மாதச் சந்தா — ரூபாய் 6.00
தனி இதழ் — 50 காசு

சந்தா அனுப்பவேண்டிய முகவரி
பொது நிருவாக மேலாளர்
(Circulation Manager),
"தமிழரசு" அலுவலகம்
அரசினர் தோட்டம்
சென்னை — 600 002.

ESTD: 21-3-52. தபால் மூலம் GOVT REGD: 3072.

இலவசக்கல்விபோதனை

"B குரூப்" வகுப்புகள் ஆரம்பம் :: நாள் : 7—7—1976

உத்திரவாதத்துடன் **1976—77**-ம் வருட கீழ்க்கண்ட தேர்வுகளுக்கு மாதம் இருமுறை தபால் மூலம் பாடங்கள் அனுப்பி பயிற்சி அளிக்கப்படும்.

1. S.V.&Agra., B.A., B.Com., (P.U.C., இண்டர் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்). 2. M.A., M.Com., A.M.I.B.M., M.B.A., (பட்டதாரிகள் அருகதை உடையவர்கள்). 3. M.I.B.M., D.I.B.M., D.I.B.A., G.C.A., போபால் I.A., &I.Com., (S.S.L.C., S.S.C, மெட்ரிக், H.S.A, தேறியவர்களும், P.U.C, தவறியவர்களும் தகுதி உடையவர்கள்). 4. சென்னை-மதுரை: மெட்ரிகுலேஷன் & P.U.C., 5. தமிழ் வித்துவான்—புலவர் தேர்வுகள். 6. தமிழ் B.Litt., (ஆசிரியர்கள் தகுதியுடையவர்கள்). 7. விவசாயம், 8. போஸ்ட் மேன்—போஸ்டல் கிளார்க். 9. கைத்தறி நெசவு, 10. Accountancy. 11. கிராம மணியம்—கர்ணம். 12. சர்விஸ் கமிஷன் (76 அக்டோபர்) தமிழ்&ஆங்கிலம். 13. S.S.L.C., (8-ம் வகுப்பு படித்தவர்கள் தகுதியுடையவர்கள்). 14. ஹோமியோபதி (தமிழ்-ஆங்கிலம்). 15. பேசிக் ஆங்கிலம். 16. பிரிமெட்ரிக். 17. Com., இண்டர் D.Com., B.Com., B.Com. (Hons), M. Com., (S.S.L.C.-P.U.C. தேரியவர்களும்-தவறியவர்களும் தகுதியுடையவர்கள்.

முழு விவரங்களுக்கு 25 பைசா தபால் தலையுடன் விண்ணப்பிக்கவும்.

'தமிழகத்தின் தனிப் பெரும் தபால் கல்வி ஸ்தாபனம்'

Affiliated by I. A. Educations and Com. University — New Delhi.

ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்ட்டியூட்,

ரிஷிவந்தியம், Pin : 606205. தென்னார்க்காடு மாவட்டம். தமிழ்நாடு

கிளைகள் : ஸ்ரீலங்கா, மலேசியா, தென் ஆப்ரிக்கா, மாரிஷியாஸ் & இந்தோனேசியா.

சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை) எண் 151. சேலம்-1.

தபால் பை எண். 171 தொலைபேசி எண்: 2402

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, பெத்தநாய்க்கன் பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

சொந்த நிதி ரூ. 327 லட்சம். நடைமுறை மூலதனம் 1711 லட்சம்.

வட்டிவிகித அட்டவணை

கால் டெபாசிட்டுகள் :	ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்)	$3\frac{1}{4}\%$
	ரூ. 10,000/-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்)	$3\frac{1}{2}\%$
சீசன் டெபாசிட்டுகள்:	ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும்	
	15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும்	3%
	46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும்	$3\frac{1}{2}\%$

பிக்செட் டெபாசிட்டுகள் : ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு :

1.	91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள்	6%
2.	6 மாதத்திற்கும் அதற்குமேல் 9 மாதத்திற்குள்	$6\frac{1}{2}\%$
3.	9 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள்	$7\frac{1}{2}\%$
4.	12 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள்	$8\frac{1}{2}\%$
5.	36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள்	$9\frac{1}{2}\%$
6.	61 மாதத்திற்கும் அதற்குமேலும்	$10\frac{1}{2}\%$

சேமிப்புக் கணக்கு 6%

ரூ. 5000/-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க.

வேறு திட்டங்களை உருவாக்கி வருகின்றது. இவர்களுக்கு உதவி புரிந்திடுவதில் இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கி, ஸ்டேட் வங்கி, போன்றவைகள் முனைந்துள்ளன.

சத்தியமங்கலம் வட்டத்தில் மீட்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு ஸ்டேட் வங்கி ஏராளமான உதவிகளை வழங்க முனைந்து பாடுபட்டு வருகிறது. விடுதலை பெற்றவர்களில் 37 பேர்கள் ரோமன் கத்தோலிக்கப் பண்ணைகளில் பணியாற்றுகின்றனர்.

வேளாண்மைத் தொழிலில் இவர்கள்ஈடுபட்டு வந்துள்ளதால், அத்தொழிலுக்கென ஒவ்வொருவருக்கும் 3 ஏக்கர் நிலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்த வட்டத்தில் ஏறத்தாழ 1,500 ஏக்கர் நிலம் வேளாண்மை செய்வதற்கு ஏற்றதாக அமைந்துள்ளது. இதுவரை சுமார் 122 ஏக்கர் வரைகொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டன. இவர்கள் கேழ்வரகு, பயறு வகைகள் போன்றவைகளைப் பயிரிடுவதற்கென பல்வேறு உதவிகளை ஸ்டேட் வங்கிகளின் வாயிலாகப் பெற உள்ளனர்.

வேளாண்மைத் தொழிலுக்கென ஒரு ஜோடி எருது, இரும்புக் கலப்பை, விதைகள் போன்றவைகள் கடனாக வழங்கப்படும். இதற்கென அனைத்து ஏற்பாடுகளும் முடிந்துவிட்டன. இதுவரைசாம்ராஜ் நகரிலிருந்து 25 இரும்புக் கலப்பைகள் வாங்கப்பட்டுள்ளன. நல்ல ஜாதி எருதுகள் வாங்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். எருதுகளுக்கான கடனை ஐந்து வருடத் தவணைகளிலும், கலப்பையை இரண்டு வருடத் தவணையிலும் செலுத்த வேண்டும்.

ஏக்கருக்கு ரூ. 220 வரை விதைப்பதற்காகக் கடன் வழங்கப்படுகிறது. இதில் விதைகள், உரங்கள் போன்றவைகளும் வழங்கப்படுகின்றன. இதற்கான கடன் தொகையை அறுவடை செய்து முடிந்த ஒரு மாதத்திற்கு பின்னர் திருப்பித் தர வேண்டும்.

தவிர அன்றாட வாழ்வுச் செலவுகளைச் சமாளிப்பதற்காகப் பால் கறவை மாடுகளையும் வழங்க உள்ளனர். கறக்கின்ற பாலில் ஒரு பகுதி கடனுக்கும், மறுபகுதி தங்களுடைய செலவுக்கும் என வகுக்கப்பட்டுள்ளது. பால் விற்பனைக்கெனப் பல்வேறு கருநாடகப் பால்பண்ணை ஏஜெண்டுகள் பொறுப்பேற்றுள்ளனர். இந்தக் கடன் 3 ஆண்டுகளுக்குள் தீர்ந்து விடும்.



சிறுவன் சித்தநஞ்சனின் தாயிடம் செய்தியாளர்கள் பேட்டி காணல்.

இத்தகைய முறையில் தமிழ் நாடு அரசும், இந்திய அரசின்-நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகளும் உதவி புரிந்திடப் பெரிதும் பாடுபடுகின்றன.

விடுதலை பெற்ற பனியர்களின் நல்வாழ்வுக்கெனப் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. பனியர் குழந்தைகளுக்கென பால்வாடிப் பள்ளிகள் சிரசால், மாரடி, அம்பலவயல், கக்குண்டி, முத்திரைக்கொல்லி, கங்குரமூலை ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. இதனால் ஏறத்தாழ 256 பனியர் குழந்தைகள் பயன்பெறுகின்றனர். இவர்கள் அனைவரும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் மேற்பார்வையில் செயல்பட்டு வருகின்றனர். தவிர இவர்களுக்குச் சீருடைகளும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வகையில் 141 ஜோடி சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

தவிர வேளாண்மைத் தொழிலுக்கென கூடலூர் வட்டத்தில் 585.17 ஏக்கர் நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவர்கள் இந்த இடங்களில் குடியமர்ந்து வேளாண்மைத் தொழில் புரிவதற்கென வழிகளும் செய்து தரப் படவிருக்கின்றன.

மீட்கப்பட்டுள்ள 15 அடிமைத் தொழிலாளர்களுக்கு கிராமச் சாலைகள் திட்டத்தில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. மற்றும் 165 அடிமைகள் காடுகள், தேயிலைத் தோட்டம், மற்றும் சாலை வேலைகளில் பணியாற்றுவதற்கான வாய்ப்புகள் பெற்றுள்ளனர். மீதமுள்ள 291 மீட்கப்பெற்ற அடிமை ஊழியர்களுக்கு விரைவில், கிராம சேவக்குகள் மூலம் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுவிடும். அஞ்சல்துறை வாயிலாகஇவர்கள் தகவல் பெற இயலாததால் அரசு ஊழியர்களின் வாயிலாக வேலை வாய்ப்பு போன்ற தகவல்களைப் பெறுகின்றனர்.

இவ்வாறு அடிமைகள் எங்கிருந்தாலும் அவர்களையெல்லாம் விடுவிக்கும் பணியில் அரசு அலுவலர்கள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர். கொடுமைகள் கண்ட கொத்தடிமைகளுக்கு, பிரதமர் அவர்களின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் பயனாக இன்று மறுவாழ்வு கிடைத்திருக்கிறது. இனி,

''ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை சாதியில் இழிவு கொண்ட மனிதரென்பர் இந்தியாவில் இல்லையே!''

என்ற நிலையை நோக்கி நடை போடுவோம்.

நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் பணிகள்

வேளாண்மைத் தொழிலின் வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டு நீலகிரி மாவட்டத்திலும் கூட்டுறவுச் சங்கங்கள் பெருமளவில் கடனுதவிகள் வழங்கி வருகின்றன. 1975—76-ஆம் ஆண்டு வேளாண்மைக்கான கடனுதவித் திட்டம் ரூபாய் 200 இலட்சமாகும். இதில் குறுகிய காலக் கடன் ரூ. 197 இலட்சமும், நடுத்தரக் காலக் கடன் ரூபாய் 3 இலட்சமாகும். ஆனால் திட்டமிடப்பட்டதற்கும் அதிகமாக — அதாவதுரூபாய் 204.02 இலட்சம் வரை பணமாகவும், உழவுச் சாதனங்களாகவும் வழங்கப்பட்டுள்ளன. இவைகளில் சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள், நிலமற்ற குத்தகைதாரர்களுக்கு என குறுகிய காலக் கடனாக ரூபாய் 124.01 இலட்சமும், நடுத்தரக் காலக்கடனாக ரூ. 3.08 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன.

வேளாண்மை வளர்ச்சிக்கு

வேளாண்மைத் தொழில்விரைவாகவும், சிறப்பாகவும் செயல்பட வேண்டுமென்பதற்கென 1976—77-ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு மொத்தக் கடன் தொகை ரூ. 220 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதில் சிறு விவசாயி, மிகச் சிறு விவசாயி மற்றும் நிலமற்ற குத்தகைதாரர்களுக்கு எனக் குறுகிய காலக் கடனாக ரூ. 147 இலட்சமும், நடுத்தரக் காலக் கடனாக ரூ. 5 இலட்சமும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் ஏராளமான வேளாண்மைப் பெருங்குடி மக்கள் பயன் பெற வாய்ப்பு உள்ளது.

இம்மாவட்டத்திலும் நகை மீதான கடன் வழங்கு திட்டமும் செயல்பட்டு வருகின்றது. ஏராளமான அளவில் கடன் உதவி வழங்க வேண்டுமென்பதற்காக கோயம்புத்தூர் மாவட்டத்தைப் போலவே இங்கும் கடன் தொகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. நலிவுற்ற மக்கள், நடுத்தர மக்கள் போன்றவர்களின் நலனில் மிகுந்த அக்கறையும், ஆர்வமும் காட்டப்பட்டு வருகின்றன. 1975—76-ஆம் ஆண்டில் கூட்டுறவு நகர வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகள், வேளாண்மைக் கடன் வங்கி போன்றவைகளின் மூலம் ரூபாய் 70.65 இலட்சம் வரையில் கடன் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. கடன் வழங்கும் இத்திட்டத்தினை 1976—77-ஆம் ஆண்டிற்கு ரூ. 101.50 இலட்சமாக உயர்த்தத் திட்டமுள்ளது.

நியாய விலையில் சீரான விநியோகம்

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கமும் இம்மாவட்டத்தில் முக்கியப் பணிகளை ஏற்று நுகர்வோர்க்கு இன்றியமையாப் பொருட்களைச் சீராகவும், நியாயமான விலையிலும் விநியோகம் செய்கின்றது. இவைகளைச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்திடுவதற்கென இம்மாவட்டத்திலுள்ள 70 கூட்டுறவுச் சங்கங்களால் 120 நியாய விலைக் கடைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1976-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை சுமார் 5.01 கோடி ரூபாய் அளவிற்கு இன்றியமையாப் பொருட்கள் விற்பனையாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. இவையல்லாமல் 118 தனியார் உணவுப் பங்கீட்டுக் கடைகளும் இம்மாவட்டத்தில் செயல்படுகின்றன. இவைகளும் விரைவில் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அட்டைப்பட விளக்கம்

முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் இரண்டு யானைகள்

அரசினுடைய ஆலோசனைகளுக்கிணங்க, இம்மாவட்டத்திலும் தொழில் நிறுவனங்களில்—அதாவது 200 மற்றும் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றும் தொழில் நிறுவனங்களில்— நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. நீலகிரி மாவட்டத்தில் தற்பொழுது 40 தோட்டப் பண்ணைகள் உள்ளன. இவைகளில் 11 பண்ணைகளில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு விட்டன. விரைவில் மற்றப்பண்ணைகளிலும் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாணவர்கள் நல்வாழ்வு பெற்றிட

மாணவர்கள் பயன்பெறுகின்ற முறையில் இங்கும் அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கூட்டுறவு விற்பனை நிலையங்களை அமைத்திடத் திட்டமிடப்பட்டு வருகின்றது. மாணவர்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் சீராகவும், சலுகை விலையிலும் வழங்கப்படும். நீலகிரி மாவட்டத்தில் ஏறத்தாழ 56 உயர்நிலைப் பள்ளிகளும், 3 கல்லூரிகளும் தற்பொழுது இயங்கி வருகின்றன. இவைகளில் ஒரு கல்லூரியில் மட்டும் கூட்டுறவு விற்பனை நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மற்றவைகளில் மிக விரைவில் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாணவர்களுக்குப் பாடநூல்கள், நோட்டுப் புத்தகங்கள் போன்றவைகளை இக்கூட்டுறவுச் சங்கங்கள், வட்ட அளவில் விற்பனையாளர்களை நியமித்து வழங்கி வருகின்றன. தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் குறித்த விலைகளில் பாட நூல்களும், கட்டுப்பாட்டு விலையில் நோட்டுப் புத்தகங்களும் விநியோகம் செய்யப்படுகின்றன.

இவைகள் மட்டுமின்றி தரமான துணிகளைக் கட்டுப்பாட்டு விலையில் விநியோகிக்கும் பணியினையும் மேற்கொண்டுள்ளன. இப்பணியில் நீலகிரி மாவட்ட விநியோகம் மற்றும் விற்பனைச் சங்கம், நீலகிரி கூட்டுறவு விற்பனை நிலையத்தின் 21 கிளைகள் போன்றவைகள் ஈடுபட்டுள்ளன. கிராமப் புறங்களில் 46 சில்லறை விற்பனைக் கூடங்களும், நகர்ப் புறப் பகுதிகளில் 7 விற்பனைக் கூடங்களும் செயல்படுகின்றன.

30-4-76-ஆம் நாள் வரையில் ஏறத்தாழ 2.53 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள துணிகள் கட்டுப்பாட்டு விலையில் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் இரு நிலையங்களுக்கு இவ்வகைக்கென ரூ. 23,700 நிதி உதவி வழங்க அரசு அனுமதித்து உள்ளது.

பிரதமரின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம் சிறந்த முறையில் செயல்பட நீலகிரி மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் பரந்த அளவில் பணியாற்றி வருவதைக் குறிப்பிட வேண்டும்.

—ஆயிரராமன்



வாழ்வு மலர
வளம் பெருக
20 அம்சத்திட்டம்

—ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.